


லெனின்

வாழ்க்கைக் குறிப்புகள்

எழுதியவர் :

நதேஷ்தா. கே. குருப்ஸ்கயா

மொழிபெயர்த்தவர் :

"நம்பி"

புதுமைப் பதிப்பகம் (பிரைவேட்) லிமிடெட்

காரைக்குடி

லெனின்
வாழ்க்கைக் குறிப்புகள்

MEMOIRS OF LENIN

by N. K. Krupskaya

Translated by 'Nambi'

Publishers:
Pudumai Padippaham (Private) Ltd.,
Karaikudi
(S. India)

முதற் பதிப்பு: 1, ஆகஸ்டு, 1956

சாதாப் பதிப்பு: ரூ. 5-0-0
பரிசுப் பதிப்பு: ரூ. 7-8-0

சாந்தி பிரஸ், சென்னை-1

முன்னுரை

வாழ்க்கைக் குறிப்புகளில் எத்தனையோ வகையான வாழ்க்கைக் குறிப்புகள் உண்டு; அரசியல்வாதி, சீர்திருத்த வாதி, கலைஞன், கவிஞன், கல்விமான், எழுத்தாளன், ஆராய்ச்சிக்காரன், விஞ்ஞானி இத்தகையோரின் வாழ்க்கைக் குறிப்புகள் மேலைநாட்டு மொழிகளில் எல்லாம் ஏராளமாக நூல் வடிவில் வெளிவந்து இருக்கின்றன.

நமது அருமைத் தமிழ் மொழியில் வாழ்க்கைக் குறிப்பு இலக்கியங்கள் மிக மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. டாக்டர். உ. வே. சுவாமிநாத அய்யர் அவர்கள், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், நாமக்கல் கவிஞர். ராமலிங்கம்பிள்ளை அவர்கள் ஆகியோர் தங்கள் வாழ்க்கைக் குறிப்புகளைச் சுயசரிதங்களாக எழுதியிருக்கிறார்கள்; மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், தியாகராஜ செட்டியார் அவர்கள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகளை டாக்டர் அய்யர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

காந்தியடிகளின் சுயசரிதமும், பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்களின் சுயசரிதமும் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு உள்ளன.

அரசியல்வாதிகள் சீர்திருத்தவாதிகள், கலாரசிகர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் ஆகியோரைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் தமிழில் இன்னும் விரிவான முறையில் வெளிவரவில்லை; இனிமேல்தான் வெளிவர வேண்டும்.

இந்த நூலின் வரலாற்று நாயகன் விளாதிமிர் இலிச் உலியானேவ் என்ற லெனின் அவர்கள், உலக வரலாற்றிலேயே புதிய ஒரு சகாப்தத்தையும், வாழ்க்கை முறையையும் அரசியல், சமூக, பொருளாதார அமைப்பு முறைகளையும் தோற்றுவித்த கர்மவீரர்; காலம், இடம் இரண்டையும் சரியாகவும் நேர்மையாகவும் நிலைகலங்காமலும் பயன்படுத்தி, ஏழை மக்கள் உய்யும் பொருட்டு, புரட்சிகரமான புதிய ஒரு சர்க்காரை நிர்மாணிக்க அரும்பாடுபட்டு அதில் வெற்றிகண்ட அண்ணல்;

ஞாலம் கருதினும் கைகூடும் ; காலம், கருதி இடத்தால் செயின் என்ற வள்ளுவரின் வாய்மொழியை மெய்ப்பித்துக் காட்டிய ஞானி.

காலம் என்பது லெனின் போன்ற மேதையைத் தோற்று வித்துக் காரியசித்தி பெற்றதா? அல்லது லெனின் போன்ற மேதை காலம் என்பதைச் சரியாகப் பயன்படுத்திக் காரிய சித்தி பெற்றாரா என்பதை ஆராய்ந்து பார்த்தோமானால் அவரிடம் காணப்பட்ட நேர்மையும் நிலைகலங்காமையும்தான் காலம் என்பதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவும், காரிய சித்தி பெறவும் லெனினுக்கு ஊன்றுகோல்களாக அமைந்து உதவி செய்திருக்கின்றன என்பதை நாம் காணலாம்.

இத்தகைய நிலைகலங்காத நேர்மையாளருடன் உடன் வாழ்ந்து அவருடைய இன்ப துன்பங்களில் எல்லாம் பங்குபற்றி நின்ற அவருடைய வாழ்க்கைத் துணைவியார் நதேஷ்தா. கே. குரூப்ஸ்கயா அவர்கள் இந்த வாழ்க்கைக் குறிப்புகளை எழுதி இருக்கிறார்கள். லெனின் எந்தத் தேதியில் பிறந்தார்? எவ்வளவு காலம் வாழ்ந்தார்? உலக வாழ்வை எப்பொழுது நீத்தார்? அவருடன் கூடப்பிறந்தவர்கள் எத்தனை பேர்? அவருடைய தாய் தந்தையர் செய்துவந்த தொழில் என்ன? இவை போன்ற விஷயங்களைப்பற்றி எழுதாமல், லெனினுக்கும் தொழிலாளருக்கும் பொது வாழ்வில் இருந்த தொடர்பு என்ன? அவர் உருவாக்கிய கம்யூனிஸ்டுக் கட்சி எத்தகையது? அது என்னென்ன காரியங்களை இந்த உலக வரலாற்றில் சாதித்து இருக்கிறது? சர்வதேச அரங்கில் அதன் செல்வாக்கு எந்த நிலையில் இருந்து வருகிறது? இவற்றை எல்லாம்பற்றி விரிவாகவும் அழுத்தமாகவும் இந்த நூலில் குரூப்ஸ்கயா அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

லெனின் நிறுவியுள்ள கம்யூனிஸ்டுக் கட்சி, அதன் குறிக்கோள், நடைமுறை ஆகியவை ரஷ்ய நாட்டோடு மட்டும் இன்று நின்றுவிடவில்லை; அவற்றின் செல்வாக்கு உலகிலுள்ள நாகரிகம் வாய்ந்த ஜனநாயக நாடுகள் அனைத்திலும் ஊடுருவிப் பாய்ந்து தன் வேலையைச் செய்துவருகிறது. அரசியல் விழிப்பு ஏற்பட்டுள்ள ஜனநாயக நாடுகள் அனைத்திலும் இன்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிறுவப்பட்டு, வேலை செய்துவருவது உலகம் அறிந்த ஓர் உண்மை.

லெனின் அவர்கள் நிர்மாணித்துள்ள இந்தக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு நாடுகள்தோறும் பரவப் பரவ, அதனை எதிர்க்கும் சக்திகளும் நாடுகள்தோறும் பல்வேறு வடிவங்களில் உருவெடுத்துப் பரவி வருகின்றன. அதன் வடிவத்தில் போலிக் கட்சிகளும் தோன்றிப் பொய் வேடம் தாங்கி, செயல்பட்டு வருகின்றன. கம்யூனிஸ்டுக் கட்சியை அவதூருகப் பேசுவதும், அதை ஐந்தாம் படை என்று பழிப்பதும், தேசத் துரோகக் கட்சி என்று அதை அவமதிப்பதும், அதன் உறுப்பினர்களை மாஸ்கோக் கூலிகள் என்று கூறி எள்ளி நகையாடுவதும் இந்தப் போலிக் கட்சிகளின் தினசரி அலுவல்களாக இருந்து வருகின்றன.

இதுவரை உலகில் தோன்றியுள்ள எந்த அரசியல் கட்சிக்கும் இத்தகைய உறுதியான ஆதரவும் கடுமையான எதிர்ப்பும் இருந்ததில்லை என்று துணிந்து கூறும் அளவுக்கு லெனின் நிர்மாணித்துள்ள கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆதரவும் எதிர்ப்பும் உலகில் ஓங்கி வளர்ந்துள்ளன.

இந்த நிலையில் தமிழர்களாகிய நாம் கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றியும் அதன் குறிக்கோள், நடைமுறை ஆகியவை பற்றியும் அதன் நிர்மாணகர் லெனின் அவர்களைப்பற்றியும் தெரிந்துகொள்வது அவசியம் ஆகும் அல்லவா? அதற்காகவே இந்த நூலைத் தமிழில் ''நம்பி'' மொழிபெயர்த்து இருக்கிருர்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் குறிக்கோளான பொதுஉடைமையையும், அதன் நிர்மாணகர் லெனினையும்பற்றி நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி அடிகள் 1928-ம் ஆண்டு, நவம்பர் மாதம் 15-ம் தேதி வெளிவந்துள்ள யங் இந்தியாவில் ஒரு குறிப்பு எழுதி இருக்கிருர்கள்; அது வருமாறு:

பொது உடைமை

கேள்வி: சமூகப் பொருளாதார அமைப்பான பொதுஉடைமையைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? எந்த அளவுக்கு நம் நாட்டில் அந்த முறையை நாம் பின்பற்றலாம்?

பதில்: பொதுஉடைமை என்ற சொல்லின் பொருளை நான் இன்னும் சரியாக அறிந்துகொள்ளவில்லை. தனி உடைமையைப் போக்குவதே

அதன் குறிக்கோள் என்று தோன்றுகிறது. பற்றின்மை என்று பொருளாதாரத் துறையில் சொல்லப்படும் நீதியை நடைமுறைப் படுத்துவதே யாகும் இது. இந்தக் குறிக்கோளை அனைவரும் ஏற்றுக்கொள்வார்களேயானல், அல்லது அமைதியாக எடுத்துச் சொல்லி, அவர்களின் மனதை இந்த இலட்சியத்தில் நாட்டம் செலுத்தும்படி திருப்பக் கூடுமேயானல், இதற்குச் சமமாகச் சொல்லக் கூடியது வேறு எதுவுமே இருக்க முடியாது நான் அறிந்தவரை பலாத்காரத்தை உபயோகிப்பதைப் பொது உடைமை தடை செய்யவில்லை. அது மட்டும்தானு ? தனி உடைமையைப் பறிமுதல் செய்வதற்கும் அப்படிப் பறிமுதல் செய்த சொத்தைப் பொதுச் சொத்தாக்கி, அரசாங்கத்தை நிர்வகிப்பதற்கும் பொதுஉடைமை, பலாத்காரத்தைத் தாராளமாக உபயோகிக்கிறது. இது உண்மையானல், இப்போது இருக்கும் உருவத்தில் பொது உடைமை என்பது நீண்ட காலம் நிலைத்திருக்காது என்று எண்ணுகிறேன்; பலாத்காரத்தினுல் எதையும் நிலைபேறுடையதாய் செய்துவிட முடியாது என்ற உறுதியான நம்பிக்கை உடையவன் நான்; ஆனுல், ஒரு உண்மையை மட்டும் நம்மால் மறுக்க முடியாது; பொது உடைமை என்ற இலட்சியத்தை எண்ணற்ற ஆண்களும் பெண்களும் உண்மையான தியாகம் செய்து உருவாக்கி இருக்கிருர்கள்; சிறந்த மேதாவிகளான லெனின் போன்றவர்களின் தியாகமும் சேர்ந்து இதை உறுதிப் படுத்தி இருக்கிறது. எனவே இந்த இலட்சியம் வீண் போக மாட்டாது. இவர்களது உண்மையான தியாக வாழ்க்கை எப்பொழுதுமே பிரகாசித்துக்கொண் டிருக்கும்;காலம் செல்லச் செல்ல இந்த இலட்சியத்தைப் புனிதப்படுத்துவதோடு, அவர்கள் செய்துள்ள தியாகமானது, இந்த இலட்சியத்தை அதை விரைவில் அடையவும் உதவியாக இருக்கும்.

எனவே காந்தியடிகளின் கருத்துப்படி பார்த்தால் பொது உடைமை என்பது சிறந்த இலட்சியம் என்பதும், இதற்குச் சமதையாகச் சொல்லக் கூடிய இலட்சியம் வேறு இல்லை என்பதும், இந்த இலட்சியம் கைகூட எண்ணற்ற ஆண்களும் பெண்களும் உண்மையான தியாகம் செய்திருக்கிருர்கள் என்

பதும், லெனின் போன்ற சிறந்த மேதாவிகளின் தியாகமும் சேர்ந்து உறுதிப்படுத்தி இருப்பதால் இந்த இலட்சியம் வீண் போகமாட்டாது என்பதும் தெரிய வருகின்றன. ஆனால் இந்த இலட்சியத்தை அடையப் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது என்று காந்திஜி எச்சரித்து இருக்கிறார்; அப்படி உபயோகித்தால் அது நிலைபேறுடையதாய் இராது என்பதையும் எடுத்துக்காட்டி இருக்கிறார். கம்யூனிஸ்டுகளின் இலட்சியத்தில் காந்திஜி மாறுபடவில்லை என்பதும் அதை அடையும் மார்க்கத்தில் மட்டும்தான் கம்யூனிஸ்டுகளிடமிருந்து காந்திஜி மாறுபடுகிறார் என்பதும் இந்தக் குறிப்பு மூலம் நமக்குத் தெரிய வருகிறது.

*　　*　　*

இனி, இந்த நூலைப் படிக்க வேண்டிய முறைபற்றியும் இதன் மொழிபெயர்ப்பைப்பற்றியும் இரண்டொரு வார்த்தைகள். நாவல்கள், சிறுகதைகள் ஆகியவற்றைப் படிப்பதைப் போன்று இந்த நூலை வேகமாகப் படித்தல் கூடாது; அமைதியான சூழ்நிலையில் விருப்பு வெறுப்பின்றி, மெதுவாகப் படிக்க வேண்டும். இந்த நூலில் சொல்லப்படும் இலட்சியமும் அனுபவங்களும் நமக்குப் புதியனவாய் இருப்பதால் அவற்றைப் புரிந்துகொள்வது முதலில் கொஞ்சம் சிரமமாகத் தோன்றலாம். கருத்தூன்றிப் படிக்கப் படிக்க விஷயம் விளங்கி, பிறகு, தனியான ஓர் ஆர்வமே உண்டாகிவிடும். ஆகவே அமைதியான சூழ்நிலையில் கருத்தூன்றிப் படிக்குமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதைத் தவிர்த்து இன்னொரு இடர்ப்பாடும் இந்த நூலைப் படிக்கும்போது நமக்கு ஏற்படுகிறது. இந்த நூலில் வரும் ரஷ்யப் பெயர்களை நினைவில் இருத்திக்கொள்வது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஒரு பெயரைப் படிக்கும்போது இது அஃறிணையா? அல்லது உயர்திணையா? ஆண்பாலா? அல்லது பெண்பாலா? என்பதையும் நம்மால் எளிதில் புரிந்துகொள்ள முடியவில்லை; தொடர்புக் குறைவால் வந்த இடர்ப்பாடு ஆகும் இது. இதை விளக்குவதற்கு ஓர் உதாரணம் தருகிறேன். குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்ற பெயர் நமக்கு நன்றாகத் தெரிந்த ஒரு பெயர்; எழு

தும்பொழுது குருதேவர் என்று எழுதினாலும் சரி, ராமகிருஷ்ணர் என்று எழுதினாலும் சரி, அல்லது பரமஹம்ஸர் என்று எழுதினாலும் சரி, இந்த மூன்று சுட்டுகளும் ஒருவரையே சுட்டுகின்றபெயர் ஆகும் என்பது நமக்கு எளிதில் புரிந்துவிடுகிறது. இல்லாது போனால் இவை மூன்றும் தனித்தனி நபரைச் சுட்டுவன போலும் என்றஎண்ணம் நமக்கு ஏற்படக்கூடும்

இத்தகைய இடர்ப்பாடுகள் இந்த நூலின் மூலத்தில் பல இடங்களில் ஏற்பட்டன; அவற்றை எல்லாம் கூடியவரை சரிப்படுத்தி இந்த நூலை "நம்பி" மொழிபெயர்த்து இருக்கிறார்.

விளாதிமிர் இலிச் உலியானோவ் என்பது லெனினுடைய இயற் பெயராகும். லெனின் என்பது அவருடைய புனை பெயர்களில் ஒன்றாகும். ஆகவே விளாதிமிர் என்று வந்தாலும், இலிச் என்று வந்தாலும், உலியானோவ் என்று வந்தாலும் லெனின் என்று வந்தாலும் இந்த நான்கு சுட்டுகளும் லெனின் அவர்களையே சுட்டுகின்றன என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, இந்த நூலைப் படிக்குமாறு அன்பர்களை வேண்டுகிறேன்.

இந்த நூலை மொழிபெயர்த்த காலத்தில் தோழர் ஆர். ராமநாதன் அவர்கள் பலவகையிலும் உதவி புரிந்தார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

காரைக்குடி,
ஆகஸ்டு, 1956

அ. லெ. நடராஜன்.

பொருளடக்கம்

இரண்டாம் பாகம்

லெனின்
வாழ்க்கைக் குறிப்புகள்

பீட்டர்ஸ்பர்க்கில்

(1893-1898)

விளாதிமிர் இலிச் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்குக்கு 1893-ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் வந்தார். என்ன காரணத்தாலோ, அவருக்கும் எனக்கும் உடனே பரிச்சயம் ஏற்படவில்லை; வோல்கா நதித் தீரத்திலிருந்து, படித்த மார்க்ஸீயவாதி ஒருவர் வந்திருப்பதாகச் சில தோழர்கள் என்னிடம் சொன்னார்கள். பின்னர், மாறி மாறி ஒவ்வொரு தோழர்களாகப் படித்த, சந்தை நிலவரம்பற்றி என்ற கட்டுரை ஒன்று அடங்கிய நோட் புத்தகம் ஒன்றை என்னிடம் கொண்டுவந்து தந்தார்கள். எங்கள் பீட்டர்ஸ்பர்க் மார்க்ஸீயவாதியான யந்திரநிபுணர் ஹெர்மன் கிராஸினுடைய கருத்துக்களும் வோல்கா நதித் தீரத்திலிருந்து புதிதாக வந்திருப்பவருடைய கருத்துக்களும் அந்த நோட் புத்தகத்தில் இருந்தன. அது இரு பாதியாக மடிக்கப்பட்டிருந்தது. ஒரு பாதி, கோணலுமாணலுமாகக் கோடுகள் கிழித்து அடித்தும், சில விஷயங்கள் புதிதாகச் சேர்க்கப் பெற்றும் இருந்தது. இவை ஹெர்மன் கிராஸினுடைய கருத்துக்கள்; மற்றொரு பாதி, மாற்றம் திருத்தம் எதுவுமே இன்றிக் கவனத்துடன் சுத்தமாக எழுதப்பட்டிருந்தது. அவை புதிதாக வந்துள்ள நண்பருடைய கருத்தும் பதிலும் ஆகும்.

இளம் மார்க்ஸீயவாதிகளாகிய நாங்கள் சந்தை நிலவரம்பற்றிய பிரசினையை மிகவும் அக்கரையோடு விவாதித்துவந்த காலம் அது. பீட்டர்ஸ்பர்க் மார்க்ஸீய வட்டாரங்களிடையே சந்தை நிலவரம்பற்றிக் குறிப்பிடத்தக்க ஒரு வித மனப்போக்கு உருவாகி வந்தது. இந்த மனப்போக்குக்குப் பிரதிநிதிகளாக விளங்கியவர்கள், சமூக அபிவிருத்தி என்பது ஏதோ யந்திரப்போக்காயும் ஒரு திட்டத்திற்கு உட்பட்டு நடைபெறுவதாயும் கருதினார்கள். சமூக வளர்ச்சியை இந்த முறையில் வியாக்கியானம் செய்வது, பொது ஜனங்களின் போக்கை-அதாவது பாட்டாளி மக்களின் போக்கை-முற்றுமே அசட்டை செய்து புறக்கணித்துவிடுகிற ஒரு வியாக்கியானமாக இருந்தது. மார்க்ஸீயத்தில் பொதிந்துள்ள புரட்சிகரமான தர்க்க இயலை எங்கேயோ ஒரு புறத்தில் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அபிவிருத்தியின் ஜீவனற்ற "வளர்ச்சிப் படிகளை" மட்டும் இவர்கள் எடுத்துக்கொண்டார்கள். இந்தக் காலத்தில் இந்த முறையில்—அதாவது ஜீவனற்ற முறையில்—வியாக்கியானம் செய்வதை எந்த மார்க்ஸீயவாதிக்குமே மறுத்து உரைக்கும் ஆற்றல் உண்டு. அப்போது, செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் மார்க்ஸீய வட்டாரங்களில் இந்தப் பிரசினைபற்றிய விஷயமே முக்கியமாக அடிபட்டு வந்தது. படித்து அறிந்துகொள்வதற்கு எங்களுக்குப் போதிய

வசதிகள் இல்லை; மார்க்ஸ் எழுதிய நூல்களில் மூலதனம் என்பதின் முதல் வால்யூமைத் தவிர ஏனைய நூல்களை எங்களில் அநேகர் அறியோம். கம்யூனிஸ்ட்டு அறிக்கை என்ற நூலை நாங்கள் கண்ணுற்றுகூடக் கண்டதில்லை. ஜீவசக்தி வாய்ந்த மார்க்ஸீயத்துக்கு இந்த மனப்போக்கு—அதாவது யந்திரரீதியாக வியாக்கியானம் செய்கிற மனப்போக்கு—முற்றுமே மாறுபட்டது என்பதை இயற்கை உணர்வாலேதான் நாங்கள் அறிந்துகொண்டோம்.

மார்க்ஸீயத்தை வியாக்கியானம் செய்து அறிந்துகொள்ளுதல் என்ற பொதுப் பிரசினையும் சந்தை நிலவரம்பற்றிய பிரசினையும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுக்கிடந்தது. யந்திரரீதியான வாதத்தைப் பிரசாரம் செய்தவர்கள் சந்தை நிலவரம்பற்றிய பிரசினையை, மிகவும் தெளிவற்ற முறையில் வியாக்கியானம் செய்தார்கள்.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் அதன் பிறகு கடந்துவிட்டன. துரதிர்ஷ்டவசமாக, நான் குறிப்பிடும் நோட் புத்தகம் தொலைந்துவிட்டது. ஆகையால், எத்தகைய உணர்ச்சியை எங்களிடையே அந்த நோட் புத்தகம் உண்டாக்கிற்று என்பதை மட்டுமே என்னால் இங்கு கூற இயலும்.

சந்தை நிலவரம்பற்றிய இந்தப் பிரசினையை மார்க்ஸீயவாதியான இந்தப் புதிய நண்பர், உருப்படியான முறையில் பரிசீலனை செய்தார். ஜனங்களின் நன்மை தீமைகளுடன் இது பின்னிக் கிடப்பதாகக் கூறினார். இந்தப் பிரசினையை அவர் கையாண்ட முறை, ஜீவசக்தி நிறைந்த மார்க்ஸீய முறை என்பதை நாங்கள் உணர்ந்தோம். சுற்றுச்சார்பையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக்கொண்டு, அவர் இந்தப் பிரசினையை ஆராய்ந்தார்.

அவருடைய கருத்துக்களை இன்னும் நன்கு தெரிந்துகொள்ள எண்ணி, ஒவ்வொருவரும் இந்தப் புதிய தோழரோடு நெருங்கிப் பழக விரும்பினோம்.

இவரைச் சந்தித்துப் பேச, பீட்டர்ஸ்பர்க் தோழர்கள் சிலர் ஏற்பாடு செய்தார்கள். ஷ்ருவ்டைடுக்கு முன்பு நான் லெனினைச் சந்தித்ததில்லை. அப்போதுதான், லெனினை நான் முதன் முதலாகச் சந்தித்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நானும் கிளாஸன் என்ற இஞ்சினீயரும் ஒரே அரசியல் ஆராய்ச்சி வகுப்பில் அங்கத்தினர்களாக இருந்து வந்தோம். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இவர் பிரபலமான ஒரு மார்க்ஸீயவாதி யாவார். இவருடைய வீட்டில்தான் புதிதாக வந்துள்ள அன்பரோடு சந்தித்துப்பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகாநாடு என்பதை மறைக்கும் பொருட்டு, இந்த ஏற்பாட்டை, நாங்கள் "ஒரு தேநீர் விருந்து"போல நடத்தினோம்.

அந்தக் கூட்டத்திற்கு விளாதிமிர் இலிச் வந்திருந்தார். மேலும் கிளாஸன், ஒய். பி. கோரப்கோ, ஸிரிப்ரோவஸ்கை, எஸ். ஐ. ராடாசென்கோ முதலியவர்களும் பிறரும் வந்திருந்தார்கள். பாட்ரஸ்ஸாவும், ஸ்ட்ரூவும் வருவதாக இருந்தது; ஆனால், என்ன காரணத்தாலோ அவர்கள் கூட்டத்திற்கு வந்து சேரவில்லை. ஒரு நிகழ்ச்சி மட்டும் எனக்கு நினைவு இருக்கிறது. நாம் மேற்கொள்ள வேண்டிய வழிகள் யாவை என்பதுபற்றி விவாதம் நடந்துகொண் டிருந்தது. ஆனால், பொதுவான உடன்பாடு ஒன்றும் ஏற்படவில்லை. எழுத்தறிவின்மையைப் போக்க நிறுவப்பட்டுள்ள கமிட்டியில் கலந்துகொள்வதே இப்போது நாம் செய்ய வேண்

டிய முக்கியமான வேலை என்று யாரோ ஒருவர்—ஷெவ்லியாஜின் என்று நினைக்கிறேன்—கூறினர். இதைக் கேட்டு விளாதிமிர் இலிச் ஏளனமாகச் சிரித்தார். அத்தகைய ஏளனச் சிரிப்பை அவர் மீண்டும் சிரித்து நான் பார்த்ததே இல்லை.

''எழுத்தறிவின்மையைப் போக்கும் கமிட்டியில் கலந்துகொண்டு, தாய் நாட்டை யாராவது பாதுகாக்க விரும்பினுல், அவர்களை நாங்கள் தடுக்கவே மாட்டோம்!'' என்று கூறினர் விளாதிமிர் இலிச்.

ஸார் சர்க்காருடன் நாரோதினிக்குகள்* நடத்திவந்த சிறு சிறு போராட்டங்கள் அப்பொழுதும் நடைபெற்று வந்ததை எங்கள் தலைமுறையைச் சேர்ந்த வாலிபர்கள் அறிவர் என்பதை நான் இங்கே தெரிவிக்க வேண்டுவது அவசியமாகும். ஆரம்பத்தில் மிதவாதிகள் எல்லா விஷயங்களுக்கும் ''அனுசரணையாக'' இருந்ததையும் ''நாரோத்நாயா வாலியா†'' கட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு, —அதாவது அது சின்னபின்னமாகச் சிதைந்துபோன பிறகு—மனம் சோர்ந்து போய், சிறு முணுமுணுப்பைக் கேட்டாலும் அஞ்சி, மிதவாதிகள் நடுங்கியதையும் பின்னர், ''சிறிய விஷயங்களையே முதலில் கவனிக்க வேண்டும்'' என்று பிரசாரம் செய்ய அவர்கள் தலைப்பட்டதையும் நாம் அறிவோம்.

லெனின் ஏன் ஏளனமாகவும் கிண்டலாகவும் பதில் கூறினர் என்பது இதிலிருந்து தெரியவரும். ஒன்றுபட்டு, போராட்டத்தை எப்படி நடத்துவது என்பதை விவாதிக்கும் பொருட்டு அவர் இங்கு வந்திருந்தார். துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து எழுத்தறிவின்மையைப் போக்கப் போராட வேண்டும் என்ற பதில்தான் அவருக்குக் கிடைத்தது!

பின்னர் அவரும் நானும் நெருங்கிப் பழகி வந்த சமயம், தம் மூத்த சகோதரர் கைதியான காலத்தில், மிதவாதிகள் நடந்துகொண்ட விதத்தை லெனின் என்னிடம் விவரமாகக் கூறினர். நண்பர்கள் எல்லோருமே உலியானுவ் குடும்பத்தாரோடு, தொடர்பு வைத்துக்கொள்வதை நிறுத்திக்கொண்டுவிட்டார்களாம். தினந்தோறும் மாலையில் சதுரங்கம் ஆடவருகிற வயதான ஒரு ஆசிரியர்கூட, வீட்டுக்கு வருவதை நிறுத்திக்கொண்டுவிட்டாராம். ஸிம்பிர்ஸிக்குக்கு அந்தக் காலத்தில் ரயில் கிடையாது. குதிரைச் சவாரி செய்து ஸிஸ்ரான் என்ற ஊருக்குச் சென்று, அங்கிருந்து தம் மூத்த புதல்வனைச் சிறைவைத்திருந்த செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்குக்குத் தம் அன்னை செல்ல வேண்டிய திருந்ததாம். வழித்துணை தேடித் தம் அன்னையை அனுப்பிவைக்க லெனின் முயன்றாராம். கைது செய்யப்பட்டவரின் அன்னையுடன் துணை செல்ல ஒருவரும் சம்மதிக்கவில்லையாம்.

---

* நாரோதினிக்குகள்: நாரோத் நாயா வாலியா கட்சி உறுப்பினர்கள்; பயங்கரவாதத்தில் நம்பிக்கையுடையவர்கள்.

† நாரோத்நாயா வாலியா கட்சி: பயங்கரவாதத்தில் நம்பிக்கைகொண்டு, பயங்கரமான முறைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுவந்த புரட்சி மனப்பான்மை கொண்ட கட்சி; 1870-ம் ஆண்டு இறுதிக் காலங்களிலும் 1880-ம் ஆண்டு ஆரம்பக் காலங்களிலும், அதி தீவிரமாகச் செயல் முறைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கட்சி; சமதர்ம - புரட்சிக் கட்சியின் தாய்க் கட்சி என்று இதைச் சொல்லலாம்.

எங்குமே வியாபித்திருந்த இந்தக் கோழைத்தனம், தம் மனதில் ஆழ்ந்த உணர்ச்சியை உண்டுபண்ணிய தென்று லெனின் என்னிடம் கூறினர்.

இளமையில் அவருக்கு ஏற்பட்ட இந்த அனுபவம் தம் மனதில் ஆழமாகப் பதிந்து இருந்தமையால், மிதவாதிகளிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். மிதவாதிகளின் வாய்வீச்சுக்கு எவ்வளவு மதிப்பு உண்டு என்பதையும் இளமையிலிருந்தே லெனின் தெரிந்துகொண்டிருந்தார்.

அதே ஆண்டில், அதாவது 1894-ம் வருடம் இலையுதிர் காலத்தில், தாம் எழுதிய நாரோதியத்தில் உள்ள பொருளாதார அடிப்படையும் அதற்கு மிஸ்டர் ஸ்ட்ருவ் எழுதியுள்ள கண்டனமும் என்னும் கட்டுரையில் லெனின் கூறுகிறார்:

> ''பொது வாழ்க்கை, மிதவாத சமூகம் ஆகிய இரண்டிலுமே இப்போது பூர்ஷ்வாக்களின்* ஆதிக்கம் இருந்து வருகிறது. எனவே, இந்தச் சமூக அமைப்பைவிட்டு விலகி, பூர்ஷ்வாக்களுக்கு முற்றும் நேர்முரணாக உள்ள ஒரு சமூக அமைப்பு முறையோடு நாம் தொடர்பு கொள்ள வேண்டுவது அவசியமாகிறது.'' (லெனின் நூல் தொகுப்பு. பாகம்: 2, பக்கம் 18. ரஷ்யப் பதிப்பு).

மேலும் கூறுகிறார்:

> '' மிதவாதிகளுடன் தங்களுக்கு இருக்கும் தொடர்பைப் பரிபூரணமாக அறுத்துக்கொள்ளவேண்டும் என்றும் பூர்ஷ்வாக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்ட வாழ்க்கை முறையை அனுஷ்டிப்பவர்களோடுதான் நாம் முற்றும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் தொழிலாள-வர்க்க லட்சியவாதிகள் யாராவது கூறினல், முதலாளிகளை ஆதரிப்பவர்கள் என்று அவர்கள்மீது நாரோதினிக்குகளாகிய நீங்கள் பழி சுமத்துகிறீர்கள்.''—அதே புத்தகம் பக்கம் 54.

மிதவாதிகளைப்பற்றி லெனினுக்கு இருந்த அபிப்பிராயம், அவர்கள்மீது அவர் கொண்டிருந்த அவநம்பிக்கை, அவர்களுடைய குட்டுகளை யெல்லாம் அவர் அம்பலப்படுத்தியமை ஆகிய இவையனைத்தும் நாடறிந்தவை. கிளாஸன் வீட்டில் கூட்டம் நடைபெற்ற வருடத்தில், லெனின் எத்தகைய அபிப்பிராயம் உடையவராக இருந்தார் என்பதைக் காட்டவே சில மேற்கோள்களை அவர் எழுதிய நூல்களிலிருந்து நான் மேலே எடுத்துக் காட்டினேன்.

''தேநீர் விருந்தில்'' எத்தகைய முடிவும் ஏற்படவில்லை. லெனின் அதிகம் பேசவில்லை. கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தவர்களை அவர் பரிசீலனை செய்தார். மார்க்ஸீயவாதிகள் எனத் தங்களைக் கூறிக்கொண்டவர்கள் அவர் பார்வைக்குமுன் நிலைகுலைந்தனர்.

நீவா நதிக்கரை வழியாக, ஒக்டாவிலிருந்து நாங்கள் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, தம் சகோதரர் அலெக்ஸாண்டரைப்பற்றி முதன் முதலாக லெனின் என்னிடம் தெரிவித்தார். நாரோத்நாயா வாலியா கட்சியில் தம் சகோதரர் உறுப்பினராய் இருந்து வந்தார் என்றும், 1887-ம் ஆண்டு மூன்றாவது அலெக்ஸாண்டரைக் கொலை செய்ய முயன்றதில் அவரும் பங்கு எடுத்துக்

* பூர்ஷ்வாக்கள்: முதலாளித்துவ மனப்பான்மை கொண்டவர்கள்.

கொண்ட காரணத்தால், வயது முதிரு முன்னரே ஸாரின் கொலையாளிகள் அவரைத் தூக்கிலிட்டு விட்டனர் என்றும் என்னிடம் கூறினர்.

அலெக்ஸாண்டரிடம் லெனினுக்கு அளவுகடந்த பிரியம் உண்டு. நடையுடை பாவனைகளில் அநேகம் இருவருக்கும் பொதுவாய் அமைந்திருந்தன. மனம் ஒன்றிய நிலையில் அவர்கள் சிந்தனை செய்ய விரும்பினமையால், இருவரும் நீண்ட காலம் வரை தனிமையில் வாழ்வதைப் பெரிதும் விரும்பினர். ஒரு சமயம் வீட்டின் ஒரு பகுதியில் இருவரும் சேர்ந்து வசித்தனர். நெருங்கிய பந்துக்கள் இவர்களுக்கு ஆண்களிலும் பெண்களிலும் நிறைய உண்டு. அவர்களில் யாராவது இவர்களைப் பார்க்க வந்தால், "தயவு செய்து நீங்கள் வர வேண்டாம்" என்று சகோதரர்கள் இருவரும் சொல்வது வழக்கமாம். இருவரும் சளைக்காமல் உழைப்பவர்கள்; புரட்சி மனப்பான்மை இருவரிடமும் இருந்தது; இருவருக்கும் இடையே வயதில் அதிக வித்தியாசம் இருந்தபடியால், லெனினிடம் அலெக்ஸாண்டர் யாவற்றையுமே சொல்வதில்லை.

இயற்கை சாஸ்திரத் துறையில் தம் சகோதரருக்கு இருந்த ஈடுபாட்டைப் பற்றி, லெனின் என்னிடம் கூறினர். கடந்த கோடை காலத்தில் வீட்டுக்குத் திரும்பியதும், புழுக்களைப்பற்றி நீண்டதொரு கட்டுரையை அவருடைய சகோதரர் எழுதிக்கொண் டிருந்தாராம். ஓயாது மைக்கிராஸ்கோப்பை வைத்துக் கவனித்த வண்ணமே இருந்தாராம். போதிய அளவு வெளிச்சம் வேண்டும் என்பதற்காக, அதிகாலையிலேயே எழுந்து ஆராயத் தொடங்கிவிடுவாராம். "சரி. என் சகோதரர் எங்கே புரட்சிக்காரர் ஆகப்போகிறுர். புழுக்களின் தன்மையைத் தெரிந்து கொள்ள, புரட்சிக்காரன் தமது நேரத்தை இவ்வளவு அதிகமாகச் செலவிடக் கூடாது" என்று லெனின் கருதியதுண்டாம். தாம் இப்படிக் கருதியது தவறு என்பதை விரைவிலேயே லெனின் தெரிந்துகொண்டாராம்.

தம் சகோதரரின் தலைவிதி லெனின் வாழ்க்கையில் பல அடிப்படையான மாறுதல்களை உண்டாக்கிற்று. இன்னொரு முக்கியமான விஷயம் என்னவெனில், பல விஷயங்களைப்பற்றி, சுயேச்சையாகவே லெனின் சிந்திக்கத் தொடங்கினர். புரட்சிப்போரின் அவசியத்தைப்பற்றித் தாமே திடமான ஒரு முடிவுக்குவந்தார்.

இப்படியன்றி, நிலைமை வேறுவிதமாக இருந்திருக்குமாயின், தம் சகோதரர் தூக்குமேடையில் மடிய நேர்ந்தது லெனினுக்கு எல்லையற்ற வருத்தத்தை மட்டும் உண்டாக்கி இருக்கும்; இல்லையேல் சகோதரருடைய அபிலாஷைகளில் அவருக்கும் பற்றுதல் ஏற்படும்படிசெய்து, அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றும்படி தூண்டியிருக்கும். சகோதரருடைய தலைவிதி, லெனினுடைய அறிவைப் பண்படுத்தி, சிந்தனையில் தெளிவை உண்டாக்கிற்று. சொற்ஜெடர்களுக்கும் வெளிப் பகட்டுக்கும் சிறிதுகூட அடிமைப்படாமல், உண்மையை நேருக்கு நேரே காணும் திறனை லெனின் பெற்றுர். எந்தப் பிரசினையையும் நேரடியாகவும் நேர்மையாகவும் பரிசீலனை செய்யும் திறன் அவருக்கு இதனுல் ஏற்படுவதாயிற்று.

1894ம் வருடம் இலையுதிர் காலத்தின்போது; ஜனங்களின் நண்பர் என்ற தம் புத்தகத்தை எங்கள் வட்டாரத்துக்கு லெனின் படித்துக் காட்டினர். அதை வாங்கிப் படிக்க எல்லோருமே துடியாய்த் துடித்தார்கள். எங்கள் போராட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதை மிகவும் தெளிவாக லெனின் அதில் விளக்கி

யிருந்தார். ஜனங்களின் நண்பர் என்ற அந்தப் புத்தகம் பிரதிகள் செய்யப்பட்டு, சின்ன மஞ்சள் புத்தகம் என்ற பெயரில் உலவியது. ஒவ்வொருவரும் அதை வாங்கிப் படித்தார்கள். அதன் ஆசிரியர் யார் என்பது புத்தகத்தில் இல்லை. அந்தப் புத்தகத்தின் பிரதிகள் நாலா திக்கிலும் பரவின. அந்தக் காலத்திய இளம் மார்க்ஸீயவாதிகளை அது மிகவும் ஆகர்ஷித்தது என்றால் அது மிகையாகாது. 1896-ல் நான் பால்டாவாவில் இருந்தேன். பி. பி. ரம்யான்டிவ் அப்பொழுது தான் சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்தார்; போராட்ட மனப் பான்மை வாய்ந்த சமதர்ம-ஜனநாயகவாதியாக* அப்போது அவர் விளங்கினார். புரட்சிகரமான சமதர்ம-ஜனநாயகத்தை, விரிவாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் கூறும் நூல் என்று ஜனங்களின் நண்பர் என்ற புத்தகத்தை அவர் குறிப் பிட்டார்.

1894-1895-ல் லெனினும் நானும் மிகவும் நெருங்கிப் பழகினோம். நெவ்ஸ்கை கேட்டுக்கு அப்பால், தொழிலாளருக்கு அவர் அரசியல் வகுப்பு நடத்திக்கொண் டிருந்தார். அந்த ஜில்லாவிலுள்ள ஸ்மாலன்ஸ்கை என்னும் இடத்தில் நடந்து வந்த முதியோருக்கான ஞாயிறு மாலைப் பள்ளியில் நான் பல ஆண்டுகள் ஆசிரியையாக இருந்தேன்; எனவே அந்த வட்டாரத்தில் வாழும் தொழிலாள வர்க்கத்தினரின் வாழ்க்கையில் எனக்கு நல்ல பரிச்சயம் இருந்தது. லெனினுடைய அரசியல் வகுப்பில் கலந்துகொண்ட தொழிலாளர்களில் பெரும்பாலோர் ஞாயிறு மாலைப் பள்ளியில் என்னிடம் படித்தவர்களே; பாபுஷ்கின், பாராவ் காவ், கிரிபாக்கின், பாட்ராவ் குடும்பத்தினர்—அர்ஸினியஸ், பிலிப், ஸுகாவ்—முதலியோரும் வேறு பலரும் என்னிடம் படித்தவர்களே. தொழில் வர்க்கப் பொதுஜனங்களின் மனநிலை, தொழில்நிலை, அன்றாட வாழ்க்கைநிலை இவற்றை நன்கு அறிந்துகொள்வதற்கு, அந்தக் காலத்தில் முதியோருக்கான ஞாயிறு மாலைப் பள்ளி மிகச் சிறந்த சாதனமாக விளங்கிற்று, மாலை நேரக் கருவிக்கலை வகுப்புகள், பெண்கள் பள்ளிக்கூடங்கள், ஒபுக்காவ் பள்ளிக்கூடங்கள் இவற்றில் படித்தவர்களைத் தவிர, ஸ்மாலன்ஸ்கைப் பள்ளியில் அறுநூற்றுச் சொச்சம் பேர் படித்தார்கள்.

"பள்ளிக்கூட ஆசிரியைகளிடம்" தொழிலாளர்கள் அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். குரோமாவ் மரக் கிடங்கில் வசித்த, மந்த உணர்ச்சி படைத்த காவற்காரன் இன்பக்களை சொட்டும் முகத்தோடு வந்து, ஆசிரியை இடத்தில் தனக்கு மகன் பிறந்திருப்பதாகக் கூறுவான்; க்ஷயரோகத்தால் பீடித்து வருந்தும் பஞ்சாலைத் தொழிலாளி ஒருத்தி வந்து, துணிச்சல் மிகுந்த தன் காதலனுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கும்படி வேண்டுவாள்; கடவுளைத் தேடுவதில் தம் வாழ்நாள் முழுதையும் செலவு செய்த "மெத்தடிஸ்ட்டு" தொழிலாளி ஒருவன், ருடாகாவ்விடமிருந்து (மற்றொரு மாணவன்) கடவுள் இல்லை என்பதை ஞாயிற்றுக்கிழமை யன்று தெரிந்துகொண்டதாகத் திருப்தியுடன்

* சமதர்ம - ஜனநாயகவாதி: ஜனநாயகம் மட்டும் இருந்தால் போதாது; சமதர்மமும் வேண்டும் என்று கூறும் அரசியல்வாதி; சமதர்மம் இல்லாத ஜனநாயகம் உண்மை ஜனநாயகம் அன்று என்ற கருத்து உடையவர்.

எழுதுவான்; எல்லா விஷயங்களும் இப்போது எளிதாகிவிட்டன. கடவுளுக்கு அடிமையாக இருப்பதைவிட மோசமான நிலை வேறில்லை. ஏனெனில் அந்த அடிமைப் பிடிப்பிலிருந்து விடுவித்துக்கொள்ள நம்மால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் மனிதனுக்கு அடிமையாக இருப்பது இதைவிட மிகவும் சௌகரியமானது; ஏனெனில் அந்த அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராட இங்கே வசதி உண்டு.

புகையிலைத் தொழிலாளி ஒருவர் இருந்தார்; புத்திநிலை கலங்கிப் போகும் அளவுக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் அவர் குடித்துவிடுவார். அவர் உடம்பு முழுதும் ஒரே புகையிலை நாற்றம். அவர் வைத்திருக்கும் நோட் புத்தகத்தை வாங்கிப் பார்ப்பதற்குள், புகையிலை நாற்றத்தால் தலை கிறுகிறு வென்று சுழன்று, மயக்கமே வந்துவிடும். மூன்று வயதுள்ள சிறு குழந்தை ஒன்றைத் தெருவில் தாம் கண்டதாகவும், இப்போது அந்தக் குழந்தை தங்களின் வேலைக் கிடங்கில் வசிப்பதாகவும் அவளைப் போலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அது வேதனை தரும் விஷயம் என்றும் அவர் எழுதி இருந்தார்.

"மைக்கேல்! சென்ற வருடம் ஒருவருக்கு நீங்கள் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுத்தீர்களாம். வேலை செய்துகொண்டிருந்த இடத்திலே தளர்ச்சியுற்று அவன் இறந்துபோனான். சாகும்பொழுது அவனுக்கு உங்கள் ஞாபகம் தான். தனது வணக்கத்தை உங்களுக்குச் செலுத்தும்படி அவன் என்னிடம் கூறினான். நீங்கள் நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்தினான்" என்று கூறிக் கொண்டே, ஒற்றைக் காலால் நடந்து வந்து போர்வீரன் ஒருவன் காட்சியளிப்பான்.

"அங்கே இருக்கிறானே, அந்தக் கறுப்பு ஆசாமி, அவனிடம் ஜாக்கிரதையாகப் பழகுங்கள்; எப்போது பார்த்தாலும் அவன் கோராக்கோவாயாவைச்* சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண் டிருக்கிறான்" என்று ஸாரையும் பாதிரிமார்களையும் தான் தாங்குவதாகப் பெருமைப்பட்டுக்கொண்டே, பஞ்சாலைத் தொழிலாளி ஒருவன் கூறுவான்.

"பாதிரிமார்கள் ஜனங்களை வஞ்சிப்பதைக் காணச் சகிக்கவில்லை யென்றும், விஷயங்களைத் தாமே உணர்ந்துகொள்ளும் வகையில் பாதிரிமார்களைச் செய்ய வேண்டுவது அவசியம் என்றும், பிரியமில்லாதிருந்தும் இதன் பொருட்டாகத் தான், தான் 'சர்ச்சுவார்டன்' வேலை பார்த்து வருவதாகவும், ஆகையால் தான் அந்த உத்தியோகத்தை விட முடியாதென்றும், உணர்ச்சிப்படிகளைத் தாம் நன்கு அறிந்திருப்பதாகவும்" கூறி வயதுமுதிர்ந்த தொழிலாளி ஒருவன் வாதாடுவான்.

ஜனங்களின் போக்கைத் தெரிந்துகொள்வதற்காகவும், வகுப்புகளுக்கு யார் யாரை அழைக்கலாம் என்பதையும், இயக்கத்தில் யார் யாரைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பதையும் அறியும் பொருட்டு, எங்கள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்றார்கள். ஆசிரியைகள் அனைவரையுமே அவர்கள் ஒரே கண்ணோட்டத்தோடு மதிப்பிடவில்லை. எங்கள் வட்டாரத்து

---

* கோராக்கோவாயா: ஸார் சர்க்காரின் துப்பறியும் ரகசிய போலீஸ் ஸ்தாபனம் இருந்த இடம்.

வேலைகளில் ஆசிரியைகளுக்கு இருந்த தேர்ச்சியைக் கொண்டு, வேறுபடுத்தி அறிய முயன்றனர். இந்தப் பள்ளிக்கூட ஆசிரியையும் 'நம்மில் ஒருத்திதான்' என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால், நடைமுறையில் இருந்து வரும் சொற்றொடர்களைப் பிரயோகித்தோ அல்லது வேறு வழிகளிலோ தாம் இன்னார் என்பதை ஆசிரியைகளிடம் அவர்கள் அறிமுகப்படுத்திக்கொள்வார்கள். உதாரணமாக, கைத்தொழில் பற்றிய விவாதம் ஏதாவது நடைபெற்றால், அப்போது தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளும் பொருட்டு, இவ்விதம் கூறுவார்கள்: "பெருந்திட்ட உற்பத்தி முறையோடு குடிசைத் தொழிலாளி ஒருவனால் போட்டி போட முடியவே முடியாது" என்று கூறுவார்கள். அல்லது இடை மறித்து, முக்கியமான ஒரு பெரிய கேள்வியைக் கேட்டு வைப்பார்கள். "பீட்டர்ஸ்பர்க் தொழிலாளிக்கும் ஆர்க்கேஞ்சல் குடியானவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு யாது?" என்ற கேள்வியைக் கேட்டுவைப்பார்கள். பின்பு ஆசிரியையைக் கூர்ந்து கவனித்து, குறிப்பிட்ட ஒரு முறையில் தலையை ஆட்டிக் காண்பிப்பார்கள். "எங்களில் தாங்களும் ஒருத்தி என்பதை நாங்கள் அறிவோம்" என்பதற்கு அறிகுறியாக அந்தத் தலையசைப்பு விளங்கும்.

அதன் பிறகு, ஊரில் நடக்கிற சமாச்சாரங்களை யெல்லாம்பற்றி விவரிப்பார்கள். ஏனெனில் இப்படித் தாங்கள் தெரிவித்த தகவல்களை ஆசிரியைகள் ஸ்தாபனத்துக்கு அறிவித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

இது ஒருவிதமான இரகசியச் சதியாலோசனை. வகுப்பில் துப்பறிபவன் இருப்பான் என்றாலும், பள்ளிக்கூடத்தில் எந்த விஷயங்களையும் பற்றி எங்களால் எளிதாக விவாதிக்க முடிந்தது. "ஸார்" "வேலைநிறுத்தம்" போன்ற பயங்கரமான சொற்றொடர்களை மட்டும் உபயோகியாமல், எந்த முக்கியமான பிரசினைகளைப்பற்றியும் நாங்கள் விவாதித்துவிடுவோம். இவ்விதம் விவாதிப்பது அதிகார பூர்வமாக, தடை செய்யப்பட்டிருந்தது. ஒரு சமயம் எதிர்பாராத விதமாக இன்ஸ்பெக்டர் ஒருவர் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்து பரிசீலனை செய்தார். பாடத்திட்டப்படி நான்கு முறை போதிக்க வேண்டியதற்குப் பதிலாக, பத்து முறை கணிதம் போதிக்கப்பட்டிருப்பதை அவர் கண்டார். அதற்காக, பள்ளிக்கூடத்தையே மூடிவிடும்படி அவர் உத்தரவு போட்டுவிட்டார்!

திறந்த முற்றமுள்ள ஒரு வீட்டில், பழைய நெவ்ஸ்கையில் நான் அந்தச் சமயம் வசித்து வந்தேன். வழக்கமாக, ஞாயிற்றுக்கிழமைதோறும் லெனின் என்னைப் பார்க்க வருவார். அரசியல் வகுப்புக்களுக்குச் சென்று திரும்பும் போதும் என்னை வந்து பார்ப்பார். எங்கள் பேச்சுக்கு ஒரு முடிவே இராது. அப்போது நான் பள்ளிக்கூட வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தேன். சாப்பாடு இல்லாமல் இருந்தாலும் இருப்பேனேயன்றி, நீவாவைச் சுற்றிலுமுள்ள மாக்ஸ்வெல், தார்ண்டன், ஸெமியன்னிகாவ் தொழிற்சாலைகளைப் பற்றியோ அல்லது மாணவர்களைப்பற்றியோ பேசாமல் என்னால் இருக்க முடிவதில்லை. தொழிலாளரின் வாழ்க்கை, அந்தஸ்து ஆகியவை சம்பந்தமாக, சின்னஞ் சிறு விஷயங்களைக்கூடத், தெரிந்துகொள்வதில் லெனின் அதிக கவனம் செலுத்தினார். தொழிலாளரின் பல்வேறு வாழ்க்கை அம்சங்களைத் தனித் தனியே தெரிந்து

கொண்டு, பின்னர் தொழிலாளரின் முழுமையான வாழ்க்கையையும் தெரிந்து கொள்ள அவர் பெரிதும் முயன்ருர். புரட்சிப் பிரசாரத்துடன் தொழிலாளியை அணுக எந்த முறையை மேற்கொண்டால் நல்லது என்பதை அறிய அவர் பெரு முயற்சி செய்தார். அன்று இருந்த அறிஞர்களில் பெரும்பாலோர் தொழிலாளர் களைச் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை. அறிஞர் ஒருவர் தொழிலாளரின் அரசியல் வகுப்புக்கு வருவார். வந்து பிரசங்கம் செய்வது போன்று, எதையாவது ஒன்றைப் படித்துக் காட்டுவார். குடும்பம், தனி நபர் சொத்துரிமை, அரசாங்கம் இவற்றின் உற்பத்தி என்ற ஏங்கல்ஸ் நூலின் மொழிபெயர்ப்பு, கையெழுத்துப் பிரதி வடிவத்தில், எங்கள் அரசியல் வகுப்பில் உலவி வந்தது. மார்க்ஸ் எழுதிய மூலதனம் என்னும் நூலிலிருந்து சில பகுதிகளை லெனின் தொழிலாளருக்குப் படித்துக்காட்டி, விளக்கிச் சொல்வார். இரண்டாவது பகுதியில் தொழிலாள ருடைய வேலை, வேலைநிலைகள் இவற்றை ஆராய்வதில் செலவிடுவார். அவர்க ளுடைய வாழ்க்கையோடு இப்போதுள்ள சமூக அமைப்பு முற்றுமே எப்படிப் பின்னிக்கிடக்கிறது என்பதையும், இந்தச் சமூக அமைப்பை வேறு வடிவில் எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்குரிய மார்க்கங்களையும், அவர் களுக்கு அவர் எடுத்துக்காட்டுவார். இலட்சியத்தோடு அனுஷ்டானத்தையும் பொருத்தி விளக்கிக்காட்டி, எங்களுக்கு லெனின் அரசியல் வகுப்பு நடத்தினுர். இதுதான் அவரிடம் காணும் சிறப்பு. படிப்படியாக எங்கள் அரசியல் வகுப்பி லிருந்த மற்ற உறுப்பினர்களும் இந்த முறையை மேற்கொள்ளத் தொடங்கினர்.

அடுத்த ஆண்டில், கிளர்ச்சிபற்றி என்ற வில்நா துண்டுப்பிரசுரம் ஒன்று வெளிவர ஆரம்பித்த சமயம், துண்டுப்பிரசுரங்களின் மூலம் கிளர்ச்சியை நடத்து வதற்கான சகல ஏற்பாடுகளும் தயாராய் இருந்தன. காரியத்தைத் தொடங்கி வைக்க வேண்டுவதுதான் பாக்கி. தொழிலாளரின் அன்ருடத் தேவைகளை அடிப்படையாகக்கொண்டே, கிளர்ச்சியை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் கட்சியில் முக்கிய இடம் பெற்றது. சில வருடங்களுக்குப் பிறகு, இந்த முறையில் வேலை செய்வது எவ்வளவு பயன்தரும் என்பதை நான் பரி பூர்ணமாகத் தெரிந்துகொண்டேன். பிறந்த நாட்டைவிட்டு, பிரெஞ்சு நாட் டில் நான் அகதியாக வசித்து வந்தபொழுது, பாரிஸில் தபாற்காரர்களின் மிகப் பெரிய வேலைநிறுத்தம் ஒன்று நடந்தது. அதில் தலையிடாமல் பிரான்ஸ் சமதர்மக் கட்சியார் விலகி நின்றுகொண்டனர். இது தொழிற் சங்கங்கள் செய்ய வேண் டிய வேலை என்று பிரெஞ்சு சமதர்மக் கட்சியார் கருதினுர்; அரசியல் போராட் டம் மட்டுமே கட்சி செய்ய வேண்டிய வேலை என்றும் அவர்கள் வாதாடினர்; அரசியல் போராட்டத்துக்கும் பொருளாதாரப் போராட்டங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அவர்கள் ஒருசிறிதும் உணரவேயில்லை; உணரத் தேவையில்லை யென்றும் கருதினர்.

அச்சடித்த துண்டுப்பிரசுரங்கள் மூலம் கிளர்ச்சி செய்வது பெரும் பலனைத் தரும் என்பதைக் கண்ட பீட்டர்ஸ்பர்க் தோழர்கள் பலர், அந்த முறை ஒன்றை மட்டுமே மேற்கொள்வதில் மயங்கிக் கிடந்தனர். தொழிலாளர்க ளிடையே வேலை செய்வதற்குரிய மார்க்கங்களில் இது ஒரு மார்க்கம் ஆகுமே தவிர, இந்த மார்க்கத்தின் மூலமே அனைத்தையும் சாதித்துவிட முடியாது

என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். இத்தகைய எண்ணமுடையவர்களே கடைசியில் "பொருளாதாரவாதி*"களாக மாறினர்.

ஏனைய துறைகளிலும் வேலை செய்ய வேண்டும் என்பதை லெனின் மறந்ததே யில்லை. அபராதங்கள் சம்பந்தமான சட்டம் என்று 1895-ல் லெனின் துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதினர். அந்தக் காலத்திய நடுத்தர வர்க்கத் தொழிலாளர்களை எப்படி எப்படி அணுகுவது என்பதுபற்றி அந்தச் சிறு பிரசுரத்தில் அவர் அற்புதமாக விளக்கி இருக்கிறர். தேவைகளை மட்டும் அடிப்படையாக வைத்து, தொழிலாளர்களைப் படிப்படியாக அரசியல் போராட்டத் துறைக்கு எவ்வாறு இழுக்கலாம் என்பதை அவர் அதில் விவரித்திருக்கிறர். அந்தத் துண்டுப்பிரசுரம் நீளமாயும் கவர்ச்சியற்றதாயும் இருக்கிறதென்று பல அறிஞர்கள் கருதினர். ஆனல், தொழிலாளர்களோ அதை விருப்பத்தோடு படித்தனர். ஏனெனில் அதில் அடங்கியிருந்த விஷயங்கள் அவர்களைப்பற்றியதாக இருந்தது; அதனல் அது அவர்களுக்கு நன்கு புரிந்தது. (நாரோத்நாயா வாலி பிரஸில் அச்சடித்து, தொழிலாளர்களிடையே அந்தத் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது.) தொழிற்சாலைச் சட்டதிட்டங்களைக் கவனமாக லெனின் படிப்பது வழக்கம். இந்தச் சட்டங்களை விளங்கவைப்பதன் மூலம் தொழிலாளருக்கும் சர்க்காருக்கும் இடையில் இருக்கும் தொடர்பை நன்கு விளக்கிவிட முடியும் என்று அவர் கருதினர். புதிய தொழிற்சாலைச் சட்டம், வேலைநிறுத்தம் பற்றி, தொழிற்சாலை நீதிமன்றம் ஆகியவை பற்றி அவர் எழுதியிருக்கும் துண்டுப்பிரசுரங்களை ஆராய்ந்து பார்த்தால், லெனின் செய்துள்ள ஆராய்ச்சியின் சாயலை அவற்றில் நாம் காணலாம்.

தொழிலாளர் வட்டாரங்களில் சுற்றித் திரிவது அப்பொழுது இயலாத காரியம். போலீஸாரின் கண்காணிப்பு வரவர அதிகமாக வந்தது. சதியாலோசனை செய்வதில் எங்கள் கூட்டத்தில் லெனின்தான் மிக்க திறமைசாலி. அவருக்கு வீடுகளின் மூலைமுடுக்குகள், சந்துபொந்துகள் அனைத்தும் தெரியும். போலீஸாரை ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொள்வதில் அவர் நிபுணராக விளங்கினர். புத்தகத்தில் கண்ணுக்குப் புலனுகாத மையினல் எழுதும் முறையையும் புள்ளியிட்டு எழுதும் முறையையும் எங்களுக்கு அவர் கற்றுத் தந்தார்; மறைமுகமாகச் சமிக்ஞை செய்யும் விதத்தையும் எங்களுக்குக் கற்பித்தார்; யார் யாரை என்னென்ன புனைபெயரிட்டு அழைக்க வேண்டும் என்பதிலும் அவர் கவனம் செலுத்தினர். நாரோத்நாயா வாலியா கட்சி வழியில் அவர் பெற்ற சிறந்த அனுபவம் இது என்பதை யாருமே பொதுவாகத் தெரிந்துகொள்ளலாம். பழைய அனுத்மவாதியான மைக்காலாவ் இந்தத் துறையில் மிகவும் கைதேர்ந்து விளங்கினர். புருவ அசைப்பினலேயே அவர் சதியாலோசனைகள் செய்துவிடு

* பொருளாதாரவாதிகள்: பொருளாதார நலனுக்கு மட்டும் தொழிலாளர் போராடினல் போதும் என்ற கருத்து உடையவர்கள்; வேலைநிறுத்தம் போன்ற காரியங்கள் மூலமே காரியசித்தி பெற முடியும் என்ற நம்பிக்கை உடையவர்கள். ஆகையால் அரசியல் போராட்டங்களில் இவர்கள் அக்கறை காட்டுவது கிடையாது.

வாராம்; இதனுல் 'காவற்காரன்' என்ற புனைபெயரால் இவரை எல்லோரும் அழைத்தார்கள். லெனின் இவரைப்பற்றி எப்பொழுதுமே ஏன் வானளாவப் புகழ்ந்து பேசினுர் என்பது இதனுல் புலனுகும்.

வரவரக் கண்காணிப்பு அதிகரித்தது; போலீஸாரின் கண்காணிப்புக்கு உட்படாத ஒருவரை 'அடுத்த வார்ஸாக' நியமித்துவிட வேண்டும் என்றும், தாம் வைத்துக்கொண்டுள்ள 'தொடர்புகளை' அவருக்குத் தாம் மாற்றிக் கொடுத்துவிட விரும்புவதாகவும் லெனின் வற்புறுத்தினுர். பரிசுத்தமானவள் என்று என்னைக் கருதியபடியால்—அதாவது செயலில் ஈடுபட்டுள்ள புரட்சிக்காரி என்று போலீஸார் என்னைக் கருதாமல் இருந்தபடியால்,—என்னையே அடுத்த 'வார்ஸாக' நியமிக்க வேண்டு மென்று தீர்மானித்தார்கள். எங்கள் கூட்டத்தில் ஒருவரான ஸில்வின் என்பவர் அற்றைக் கூலிவேலை செய்து, ஸாராக்காய்செலோ என்னும் இடத்தில் வயிறு வளர்த்துக் கொண்டிருந்தார். ஈஸ்டர் பண்டிகை யன்று "பண்டிகை கொண்டாடுவதற்காக" ஐந்தாறு பேர்கள் அங்கு சென்ருேம். ஒருவரையொருவர் அறியாதவர்கள் போலப் பாசாங்கு செய்துகொண்டு நாங்கள் ரயிலில் பிரயாணம் செய்தோம். எங்தெந்தத் தொடர்புகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதுபற்றி நாள் முழுதும் விவாதித்தோம். பூஜ்யங்களை உபயோகிக்கும் முறையை லெனின் எங்களுக்குக் கற்றுக்கொடுத்தார். புத்தகத் தில் ஒரு பாதியை இதற்காகவே நாங்கள் பயன்படுத்தினேம். அந்தோ! இப்படி முதன்முதல் உபயோகித்த பூஜ்யங்களைப் படிக்கும் முறை பிற்காலத்தில் எனக்கு மறந்துபோயிற்று; எனினும் ஒரு திருப்தி. இதைப் படித்து அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது, 'தொடர்புகளில்' பலர் உபயோக மற்றவர்களாகிவிட்டனர்.

இத்தகைய 'தொடர்புகளை'யெல்லாம் லெனின் கவனமாகச் சேகரித்து வைத்தார். புரட்சி வேலைக்கு ஏதாவது ஒரு வழியில் பயன்படக் கூடியவர்களை எங்கெங்கு காண முடியுமோ அங்கெல்லாம் தேடி அவர்களைக் கண்டுபிடித்தார். முயற்சி எடுத்துக்கொண்டு, எங்கள் கோஷ்டிக்கும் (லெனின், கிரிஹான் நோவஸ்கை) ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூட ஆசிரியைகளுக்கும் இடையில் தொடர்பு ஏற்படும் பொருட்டு, லெனின் கூட்ட மொன்று கூட்டினுர். எப்படி ஏற்பாடு செய்தார்கள் என்பது எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. பின்னர் இவர்களில் ஏறக்குறைய அனைவருமே சமதர்ம-ஜனநாயகவாதிகளாக ஆகிவிட் டார்கள். நீண்ட காலமாக, லிடியா மைக்கலாவ்ஞ நிப்போவிச் என்ற பெண் மணி நாரோத்நாயா வாலியா கட்சியில் உறுப்பினளாக இருந்து வந்தாள். சிறிது காலத்திற்குள் அவள் சமதர்ம-ஜனநாயகவாதியாக மாறிவிட்டாள். நீண்ட காலம் கட்சி ஊழியர்களாக இருந்தவர்களுக்கு அவளை நன்கு தெரியும்; உறுதி யான புரட்சி மனப்பாங்கும் அசாதாரணமான குணவிசேஷங்களும் அவளிடம் உண்டு. தன் விஷயத்திலும் பிறர் விஷயத்திலும் அவள் கடுமையாக நடந்து கொள்வாள். பிறரை அறிந்துகொள்ளும் திறனும், தமது சகபாடிகளோடு அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்துகொள்ளும் தோழமை உணர்ச்சியும் அவளிடம் சிறந்து விளங்கின. லெனினிடமிருந்த புரட்சி மனப்பாங்கைக் கண் டதுமே அதை லிடியா பெரிதும் பாராட்டினுள்.

நாரோத்நாயா வாலியா அச்சுக்கூடத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் பொறுப்பை லிடியா தாமாகவே ஏற்றுக்கொண்டாள். அச்சிடுவதற்கு அவசியமான ஏற்பாடுகளை யெல்லாம் அவளே செய்தாள்; அச்சாபீஸுக்குக் கையெழுத்துப் பிரதிகளை எடுத்துச் சென்றாள்; அச்சடித்த துண்டுப் பிரசுரங்களை வாங்கி வந்து தந்தாள்; அவற்றைக் கூடையில் எடுத்துக்கொண்டு வீடு வீடாகச் சென்று நண்பர்களிடம் கொடுத்தாள். தொழிலாளர்களிடையே அவற்றை வழங்கவும் ஏற்பாடு செய்தாள். அச்சாபீஸில் இருந்த கம்பாஸிட்டர் ஒருவன் துரோகியாக மாறி, சர்க்காருக்குத் தெரிவித்துவிட்டான். அதன்பேரில் அவளைக் கைது செய்ததோடு நில்லாது, அவளுடைய நண்பர்கள் வீட்டிலிருந்த சட்ட விரோதமான துண்டுப்பிரசுரங்கள் பன்னிரண்டு கூடைகளைச் சர்க்கார் பறிமுதல் செய்துவிட்டார்கள். அந்தச் சமயம் நாரோத்நாயா வாலியா பிரஸ் ஏராளமான துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து வழங்கிற்று. தொழில் நாள், மக்கள் எவ்வாறு பலவிதமாக வாழ்கிறார்கள் ஆகிய பிரசுரங்களையும், அபராதம்பற்றி, பசி அரசன் இவை போன்ற லெனின் எழுதிய பல துண்டுப் பிரசுரங்களையும் அந்தப் பிரஸில் அச்சிட்டுத் தந்தார்கள். இந்த அச்சாபீஸில் வேலைபார்த்த இரண்டு தோழர்கள்-ஸாப்போவாலாவ், காட்டன்ஸ்காயா ஆகிய இருவரும்-இப்போது கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். லிடியா இப்போது உயிரோடு இல்லை. 1920-ல் அவள் கிரிமியாவில் தங்கி வசித்து வந்தாள். அவள் சாகுந்தருணத்தில், கிரிமியா "வெள்ளைக் கட்சியின்*" ஆதிக்கத்தில் இருந்தது. மரணப்படுக்கையில் பிதற்றிக்கொண் டிருந்த காலத்தும்கூட, கம்யூனிஸ்டுகளைப் பற்றிய நினைப்பிலேயே தோய்ந்து அவள் இருந்தாளாம். அவள் மிகவும் அருமையோடு விரும்பிய கம்யூனிஸ்டுக் கட்சியின் பெயரை உச்சரித்துக்கொண்டே அவள் உயிர் துறந்தாளாம்.

பள்ளிக்கூட ஆசிரியைகளான பி. எப். குடேலி, எ. ஐ. மெஷ்ரியாக்கோவ் ஆகியோரும் பிறரும் எங்களுடன் ஒத்துழைத்தார்கள்; இவர்கள் இருவரும் இப்போது கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள். நெவ்ஸ்கை கேட் ஜில்லாவில் வசித்த இன்னொரு ஆசிரியையின் பெயர் அலெக்ஸாண்ட்ரா மைக்கலாவ்னா கால்மிகோவ்வா. அவள் மிகவும் நேர்த்தியாகச் சொற்பொழிவு ஆற்றுவாள். சர்க்கார் வரவு செலவு திட்டம்பற்றித் தொழிலாளர்களிடையே சொற்பொழிவு ஆற்றியது என் உள்ளத்தில் இன்னும் அப்படி நினைவு இருக்கிறது. லிட்டேனி எனுமிடத்தில் அவளுக்கு ஒரு புத்தகக்கடை இருந்தது. அலெக்ஸாண்ட்ரா மைக்கலாவ்னாவோடு லெனின் மிகவும் நெருங்கிப் பழகினார். அவளுடைய மாணாக்கர்களில் ஸ்ட்ருவும் ஒருவர். ஸ்ட்ருவினுடைய பழைய பள்ளித் தோழர்களில் ஒருவரான பாட்ரஸ்ஸாவ் எப்பொழுதும் அலெக்ஸாண்ட்ரா மைக்கலாவ்னா வீட்டிலேயே இருந்தார். பிற்காலத்தில், அதாவது இரண்டாவது காங்கிரஸ்வரை, தீப்பொறி பத்திரிகைக்கு அலெக்ஸாண்ட்ரா மைக்கலாவ்னா பொருள் உதவி புரிந்தாள். ஸ்ட்ருவைப் பின்தொடர்ந்து தாமும்

* வெள்ளைக் கட்சியார்: பிற்போக்காளர் கூட்டம்; புரட்சியை எதிர்த்துப் போராடிய எதிர்ப் புரட்சிக்காரர்கள்.

மிதவாதக் கட்சியிலே சேராமல் உறுதியுடன் தீப்பொறி ஸ்தாபனத்தோடு தொடர்பு வைத்துக்கொண்டு அவள் ஒத்துழைத்தாள். "அத்தை" என்பது அவளுடைய புனைபெயர். லெனினும் அவளும் மிகவும் நல்ல முறையில் கலந்து பழகினார்கள். இப்போது அவள் உயிருடன் இல்லை. டெஸ்காயிசெலோ சானிட்டோரியத்தில் அவள் இரண்டு ஆண்டுகள் படுத்த படுக்கையாய்க் கிடந்து இறந்துபோனாள். அண்மையிலிருந்த குழந்தைகள் விடுதியிலிருந்து, சில சமயங் களில் சிறுவர் சிறுமியர் அவளைக் காணச் செல்வார்கள். அப்பொழுது லெனி னைப்பற்றித் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் அவர்களிடம் அவள் கூறுவாள்.

1917-ம் வருடம் லெனின் எழுதின கட்டுரைகளைத் தொகுத்து, ஒரு தனிப் புத்தகமாக வெளியிட வேண்டு மென்று 1924-ம் வருட வசந்த காலத்தில், அலெக்ஸாண்ட்ரா மைக்கலாவ்னா எனக்கு எழுதி இருந்தாள். ஏனெனில் அந்தக் கட்டுரைகளில் லெனினுடைய உணர்ச்சிப் பெருக்கும் உற்சாகமூட்டும் வேண்டு கோள்களும் ஏராளமாக இருந்தன. அவை மக்களிடையே உணர்ச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டி வளர்த்தன. 1922-ம் ஆண்டில் தமது இதயபூர்வமான வாழ்த்துதலைத் தெரிவித்து, அலெக்ஸாண்ட்ரா மைக்கலாவ்னாவுக்கு லெனின் ஒரு கடிதம் எழுதினார். அவரால் மட்டுமே அத்தகைய கடிதத்தை எழுதமுடியும்.

'தொழிலாளர் விடுதலை' வட்டாரத்தினரோடு* அலெக்ஸாண்ட்ரா மைக்க லாவ்னாவுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. ஒரு சமயம்-1893 என்று ஞாபகம்- ஸாஸுலிச் ரஷ்யாவுக்கு வந்தபொழுது, அவர் ரகசியச் சுற்றுப்பிரயாணம் செய் வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் அலெக்ஸாண்ட்ரா மைக்கலாவ்னா செய்து கொடுத்தாள். செய்ததுமன்றி, அவரோடு இடைவிடாது தொடர்பும் வைத்துக்கொண்டாள். அந்தச் சமயத்தில் தொழிலாளர் இயக்கம் வரை ஆரம் பித்தபடியாலும் தொழிலாளர் விடுதலை வட்டாரத்தினர் வெளியிட்ட கட்டுரை, புத்தகங்களின் செல்வாக்கினாலும் பீட்டர்ஸ்பர்க் சமதர்ம-ஜனநாயகவாதிகளின் முயற்சியாலும் பாட்ரஸ்ஸாவ் சிறிது காலம்வரை "இடதுசாரியாக" மாறினார். அதேபோன்று ஸ்ட்ரூவும் "இடதுசாரியாக" மாறினார். பூர்வாங்கமாக அநேக கூட்டங்கள் நடந்தபிறகு ஒன்றுசேர்ந்தே இனி வேலை செய்யலாமென்ற முடிவுக்கு வந்து, நமது பொருளாதார வளர்ச்சியை விளக்கும் தகவல்கள்

---

* தொழிலாளர் விடுதலை வட்டாரத்தினர்: புரட்சி மனப்பான்மை கொண்ட சமதர்ம - ஜனநாயகவாதிகள். இவர்களில் மிகவும் முக்கிய மானவர்கள்: ஜியார்ஜ் வி பிளக்கானவ், வீரா ஸாஸுலிச், பி. பி. ஆக்ஸெல்ராட் முதலியவர்கள். இவர்கள் ஸார் சர்க்காரின் தண்டனை களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக, ஸ்விட்ஜர்லாந்துக்குச் சென்று அங்கே குடியேறிவிட்டார்கள். மார்க்ஸ் கொள்கைகளைப் பரப்புவதற் காக 1883-ம் ஆண்டில் அங்கே ஒரு அரசியல் குழுவை-அதாவது ஒரு வட்டாரத்தை-அவர்கள் நிறுவிக்கொண்டார்கள். தலைமை தாங்கிப் புரட்சியை நடத்தத் தொழிலாளர் வர்க்கத்துக்குத் தகுதி போதாது என்ற நாரோதினிக்குகளின் கூற்றை இவர்கள் வன்மையாக எதிர்த்து வந்தார்கள்.

என்ற பெயரில் கூட்டு வெளியீடாக ஒரு புத்தகம் வெளியிட ஏற்பாடு செய்தார்கள். லெனின், ஸ்டார்க்காவ், ஸ்தீபன் ஐவானேவிச் ராடாசென்கோ ஆகியோர் எங்கள் கோஷ்டிக்குப் பிரதிநிதிகளாக ஆசிரியர் குழுத்தில் இருந்தார்கள். ஸ்ட்ருவ், பாட்ரஸ்ஸாவ், கிளாஸன் ஆகியோர் தங்கள் கோஷ்டிக்குப் பிரதிநிதிகளாக விளங்கினர்கள். இந்தப் புத்தகத்தின் கதி என்னவாயிற்று என்பதை அனைவருமே நன்கு அறிவர். ஸார் சர்க்காரின் தணிக்கையாளர்கள் இதைத் தீக்கிரையாக்கினர். அயல்நாடு செல்லு முன்—அதாவது 1895-ம் ஆண்டு வசந்த காலத்திற்குள்—புத்தகத்தை முடித்துவிட வேண்டும் என்பதற்காக, பாட்ரஸ்ஸாவ் வசித்த ஓசரனே தெருவுக்கு லெனின் அடிக்கடி போய்வந்தார்.

1895-ம் ஆண்டு கோடை காலத்தை லெனின் அயல்நாடுகளில் கழித்தார். ஒரு பகுதியைப் பெர்லினிலும் மற்ருெரு பகுதியை ஸ்விட்ஜர்லாந்திலுமாகக் கழித்தார். பெர்லினில் வசித்த காலத்தில் தொழிலாளர் கூட்டங்களுக்கெல்லாம் அவர் விஜயம் செய்தார். பிளக்கானுவ், ஆக்ஸெல்ராடு, ஸாஸுலிச் ஆகியோரை ஸ்விட்ஜர்லாந்தில் அவர் முதன் முதலாகச் சந்தித்தார். திரும்பியபொழுது மிகுந்த உற்சாகத்துடன் அவர் திரும்பி வந்தார். ஒரு டிரங்கு நிறையச் சட்ட விரோதமான பிரசுரங்களைக் கொண்டுவந்திருந்தார்.

திரும்பி வந்ததுமே அவரைப் போலீஸார் தொடர ஆரம்பித்தார்கள். அவரையும் அவருடைய டிரங்கையும் தொடர்ந்து துரத்திக்கொண்டே வந்தார்கள்; விலாசங்கள் சேகரிக்கும் ஸ்தாபனத்தில் என் உறவினள் ஒருத்தி அப்போது வேலைபார்த்து வந்தாள். லெனின் திரும்பிவந்த சில தினங்களுக்குப் பிறகு, துப்பறிபவன் ஒருவன் வந்து தனது காரியாலயத்தில் தான் வேலை பார்த்துக்கொண்டிருந்த அன்று, இரவில் விலாசங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், "உலியானுவ் என்ற பெயருடைய முக்கியமான அரசாங்கக் குற்றவாளி ஒருவனைக் கண்டுபிடித்துவிட்டோம். அவனுடைய சகோதரன் முன்பு தூக்கிலிடப்பட்டான்; சமீபத்தில்தான் அவன் அயல் நாட்டிலிருந்து திரும்பி வந்திருக்கிருன். இனி அவன் எங்களிடமிருந்து தப்ப முடியாது" என்று தற்பெருமையோடு அந்தத் துப்பறிபவன் தன்னிடம் கூறியதாகவும் அவள் என்னிடம் தெரிவித்தாள். லெனினுக்கு நான் அறிமுகமானவள் என்பதை அறிந்த அவள், இது தகவலை என்னிடம் தெரிவிக்க ஓடோடியும் வந்தாள். உடனே நான் அவரை எச்சரித்தேன். அன்று நாங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வந்தோம். ஆனல், செய்த வேலைகளை அப்படியே நிறுத்தி வைக்க முடியுமா என்ன? எனவே, அதிக சுறுசுறுப்பாக வேலைகளில் ஈடுபட்டோம். வேலை செய்வதை நாங்கள் ஜில்லாவுக்குத் தகுந்தவாறு வகுத்துக் கொண்டோம். துண்டுப் பிரசுரங்கள் எழுதி அவற்றைப் பரப்பினேம். ஸெமியன்னிகாவ் தொழிற்சாலையில் வேலைபார்த்த தொழிலாளரிடையே விநியோகிக்க முதன் முதலாக லெனின் துண்டுப் பிரசுரம் ஒன்று தயாரித்ததாக எனக்கு ஞாபகம். அந்தச் சமயத்தில் எங்களுக்குத் துண்டுப் பிரசுரத்தை அச்சிட வசதி சிறிதும் இல்லை. அச்சடித்தது போன்று சுத்தமாக எழுதி, அந்தத் துண்டுப்பிரசுரத்தைப் பாபுஷ்கின் விநியோகித்தார். மேற்படி துண்டுப்பிரசுரத்தில் நன்கு பிரதிகள் தயார் செய்தோம். அவற்றில் இரண்டைக் காவற்காரன் எடுத்துக்

கொண்டுவிட்டான். மீதமுள்ள இரண்டு பிரசுரங்களை மட்டும் தொழிலாளர்களிடையே விநியோகித்தோம். இதர ஜில்லாக்களிலும் துண்டுப் பிரசுரங்களைப் பரப்பினோம். உதாரணமாக, வாசிலாவஸ்கி ஆஸ்ட்ராவில், லபர்மே புகையிலைத் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் பெண் தொழிலாளர்களிடையே பரப்பத் துண்டுப்பிரசுரம் ஒன்று தயாரித்து அதைப் பரப்பினோம். துண்டுப்பிரசுரங்களைப் பரப்புவதில் ஏ. ஏ. யாக்குப்போவாவும் இசர்ட்டு, பி. நெவ்ஸோரோவாவும் ஒரு விசேஷ முறையை மேற்கொண்டனர். ஒவ்வொருவரும் தனித் தனியாக எடுத்துப் படிக்கும் வகையில் சிறு சிறு குழாய்கள்போன்று துண்டுப் பிரசுரங்களைச் சுருட்டி, அவற்றைத் தங்கள் சட்டைப் பைக்குள் மறைத்து வைத்துக் கொண்டார்கள். சங்கு ஊதியதும் பெண் தொழிலாளிகள் கூட்டம் கூட்டமாகத் தொழிற்சாலையைவிட்டு வெளியே வருவார்கள். அவர்களிடம் விரைந்து சென்று, திகைத்து நிற்கும் பெண் தொழிலாளர்களிடையே இவர்கள் இருவரும் துண்டுப்பிரசுரங்களை வழங்குவார்கள்.

அதோடுகூட, தொழிலாளர் நலன் என்ற பெயருடன் ஜனரஞ்சகமான ஒரு பத்திரிகையையும் வெளியிட நாங்கள் தீர்மானித்தோம். ஒரு அச்சுக்கூடம் சட்டத்திற்குப் புறம்பாக இதை அச்சிட்டுத்தர இசைந்தபடியால்தான் இது சாத்தியமாயிற்று. லெனின் மிகவும் சுறுசுறுப்போடு முயன்று இதற்கு விஷயங்களைச் சேகரித்தார். ஒவ்வொரு வரியையும் தாமே நேரில் கவனித்து அச்சுக்கு அனுப்பினர். மாஸ்கோ கேட்டிற்குப் பக்கத்திலிருந்த பூட்ஸ் தொழிற்சாலை ஒன்றில் தாம் எப்படி விஷயங்கள் சேகரிக்க முடிந்தது என்பதை சாப்ரோஹெட்ஸ் மிக்க உற்சாகத்தோடு ஒரு நாள் எனது அறையில் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார். "தொட்டதற்கெல்லாம் எங்களுக்கு அபராதம் விதித்துவிடுகிறார்கள்; காலைச் சிறிது ஒரு பக்கம் அதிர அசைத்துவிட்டாலே போதும்; அதற்கும் அவர்கள் அபராதம் விதித்துவிடுகிறார்கள்" என்றார்.

"காலைச் சரியாக வைத்துக்கொள்ளத் தெரியாவிட்டால் அபராதம் போடத்தானே செய்வார்கள்!" என்று லெனின் சிரித்துக்கொண்டே பதில் கூறினர். இது சம்பந்தமான விஷயங்களை யெல்லாம் வெகு ஜாக்கிரதையாக லெனின் சேகரித்தார்; அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தார். உதாரணமாக, தார்ண்டன் தொழிற்சாலை சம்பந்தமான விஷயங்களை எப்படிச் சேகரித்தோம் என்பது எனக்கு இன்னும் நினைவிலிருக்கிறது. என்னிடம் படித்த காரிலாக்காவ் என்னும் மாணவன் தார்ண்டன் தொழிற்சாலையில் 'சார்ட்டர்' வேலை பார்த்து வந்தான்; அவனைப் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து கடத்திவிட்டார்கள். அவனைத் தருவித்துச் செய்திகளைச் சேகரிப்பதென்று தீர்மானித்தோம். லெனின் போட்ட திட்டப்படி விஷயங்களைச் சேகரிக்க ஏற்பாடாகி இருந்தது. யாரிடமோ கடன் வாங்கி நேர்த்தியான ஒரு கம்பளிக் கோட்டை அணிந்துகொண்டு காரிலாக்காவ் வந்து சேர்ந்தான். ஒரு நோட் புத்தகம் நிறையச் செய்திகள் சேகரித்துக் குறித்துக் கொண்டு வந்திருந்தான். வாய்மொழி மூலமும் விஷயங்களைத் தெரிவித்தான். அவன் சொன்ன புள்ளிவிவரங்கள் எங்களுக்குப் பெரிதும் உதவின. அதை லெனின் ஊன்றி ஊன்றிப் படித்தார். அதன் பிறகு, நானும் அப்போலி நாரியா அலெக்ஸாண்ட்ரோவ்னா யாக்குப்போவாவும் தொழிற்சாலைப் பெண்களைப்

போன்று தலையில் துண்டைக் கட்டிக்கொண்டு நேரே சென்று தொழிற்சாலை விடுதிகளைப் பார்வையிட்டோம். மணமானவர்கள் வசிக்கும் விடுதிகளுக்கும் மணமாகாதவர்கள் வசிக்கும் விடுதிகளுக்கும் சென்று கண்டு பேசினோம். தொழில் நிலைமைகள் படுமோசமா யிருந்தன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட விஷயங்களை ஆதாரமாகக்கொண்டுதான் லெனின் தமது கடிதங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் தயாரித்தார். தார்ண்டன் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் பெண்களுக்கும் ஆண்களுக்குமாக அவர் எழுதிய துண்டுப்பிரசுரங்களைப் பரிசீலனை செய்து பாருங்கள். அங்குள்ள நிலைமையை அவர் எவ்வளவு தூரம் நுணுக்கமாக ஆராய்ந்திருக்கிறார் என்பது உடனே விளங்கும். அந்தக் காலத்தில் இயக்க வேலையில் ஈடுபட்டிருந்த தோழர்களுக்கு இந்த முறை எவ்வளவோ விஷயங்களைக் கற்றுக் கொடுத்தது. சிறு சிறு விவரங்களையும் நுணுக்கமாக அறிந்துகொள்வது அவசிய மாகும் என்பதை நாங்கள் அறியலானோம். இந்த விவரங்கள் எங்கள் மனதில் எவ்வாறு ஆழமாகப் பதிந்தது தெரியுமா ?

தொழிலாளர் நலன் என்ற எங்கள் பத்திரிகை வெளிவரவே யில்லை. டிசம்பர் மாதம் எட்டாம் தேதியன்று எனது அறையில் நடந்த கூட்ட மொன்றில் முதல் இதழை அச்சிடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தோம். அச்சாபீஸிலிருந்து இரண்டு புரூப்புகள் வந்தன. கடைசி முறையாகத் திருத்துவதற்காக வந்த ஒரு புரூப்பை வானியீவ் எடுத்துச் சென்றார். மற்றொன்று என்னிடம் இருந்தது. திருத்திய புரூப்பை வாங்கி வருவதற்காக மறு நாள் காலையில் நான் வானியீவ் வீட்டுக்குச் சென்றேன். அவர் வெளியே சென்றுவிட்டதாக வேலைக்காரி கூறினாள். லெனினுக்கு செர்பாட்டரீவ் என்றொரு நண்பர் இருந்தார். அவரும் நானும் அந்தச் சமயம் ரயில்வேயில் ஒன்றாக வேலைபார்த்தோம். அவர் தலைமைக் காரியாலயத்தில் வேலை பார்த்தார். ஏதாவது அசம்பாவிதங்கள் நேர்ந்து, லெனினைப்பற்றித் தகவல் எதுவும் தெரியவேண்டியிருந்தால் செர்பாட்டரீவ்விடம் கேட்டுத் தெரிந்துகொள்வ தென்று முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தோம். நாள்தோறும் லெனின் செர்பாட்டரீவ் வீட்டுக்கு உணவு அருந்தச் செல்வார். ஆனால், அன்று செர்பாட்டரீவ் ஆபீஸுக்கு வரவில்லை. எனவே நான் அவர் வீட்டுக்குச் சென்றேன். அன்று லெனின் அங்கு சாப்பிட வரவில்லை. ஆகையால் அவரைக் கைது செய்திருப்பார்கள் என்பது தெளிவாயிற்று. அன்று மாலை எங்கள் கட்சியைச் சேர்ந்தோர் பலரைக் கைது செய்தமையால் லெனினையும் கைது செய்திருப்பார்கள் என்பது ஊர்ஜிதமாயிற்று. தொழிலாளர் நலன் என்ற பத்திரிகையின் பிரதி என்னிடம் இருந்ததைப் பத்திரப்படுத்தி வைக்கும் பொருட்டு அதை எடுத்துக்கொண்டு நீனா அலெக்ஸாண்ட்ரோவ்னா கெர்டு வீட்டுக்கு நான் சென்றேன்.

அவள் என்னோடு பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்தவள். பிற்காலத்தில் ஸ்ட்ருவுக்கு அவள் வாழ்க்கைப்பட்டாள். மற்றும் பலர் தொடர்ந்து கைதியாகாதிருக்கும் பொருட்டுத் தொழிலாளர் நலன் என்ற பத்திரிகையைச் சிறிது காலம் வரை அச்சிடாது நிறுத்தி வைப்பது தென முடிவு செய்தோம்.

பீட்டர்ஸ்பர்க்கில் வாழ்ந்த காலத்தில் லெனின் செய்த காரியங்கள் மிகவும் மகத்தானவை ; அந்தக் காரியங்களைப்பற்றிப் பலர் அறியார் எனினும், சாராம்

சத்தில் அவை வெளிப்படையாகப் பலன் ஒன்றையும் அளிக்காவிடினும், மொத்தமாக அவை மிகவும் முக்கியமானவை என்று கூறலாம். அந்தக் காலத்தில் தாம் செய்த காரியங்களைப்பற்றி லெனினே அவ்விதமாகக் கூறியிருக்கிறார். வீரதீரச் செயல்கள் செய்வதில் அப்பொழுது எங்கள் கவனம் செல்லவில்லை. இருந்தும் பொதுஜனங்களோடு எவ்வாறு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வது, ஒளிவு மறைவின்றி அவர்களோடு எப்படிப் பழகுவது, அவர்களுடைய சிறந்த அபிலாஷைகள் யாவை, நம்மை அறிந்துகொள்ளும் முறையில் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி நமது தலைமையை ஏற்றுப் பின்பற்ற அவர்களை எவ்வாறு பயிற்றுவது என்பனபோன்ற காரியங்களிலேதான் நாங்கள் அதிகக் கவனம் செலுத்தினோம். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வாழ்ந்த இந்தக் காலத்தில்தான் தொழிலாளருக்குத் தலைவனாகும் தகுதியை லெனின் பெற்றார்.

எங்கள் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் கைதான பின்பு, நான் முதன் முதலாகப் பள்ளிக்கூடத்துக்குச் சென்றேன். மெத்தைப் படிக்குக் கீழே யிருந்த ஒரு மூலைக்குத் தனியாக என்னை அழைத்துச் சென்று கைது செய்ததுபற்றி தொழிலாளர்கள் எழுதியுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றைப் பாபுஷ்கின் அப்போது என்னிடம் தந்தார். அதில் அரசியல் விஷயத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை. அந்தத் துண்டுப் பிரசுரத்துக்குப் பிரதிகள் அச்சிட்டுத் தன்னிடம் தரும்படியும், அதைத் தான் வினியோகிக்க விரும்புவதாகவும் பாபுஷ்கின் என்னை வேண்டினார். அன்றுவரை எனக்கு ஸ்தாபனத்துடன் தொடர்பு இருக்கிறதென்பதை நேரடியாக அவரிடம் நான் தெரிவித்தது இல்லை. எனினும், அந்தத் துண்டுப்பிரசுரத்தை நான் எங்கள் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களிடம் கொடுத்தேன். இது சம்பந்தமாக எஸ். ஐ. ராடாசென்கோ வீட்டில் ஒரு கூட்டம் கூட்டினோம் என்பதாக ஞாபகம். எங்கள் வட்டாரத்தில் எஞ்சியிருந்தவர்கள் அனைவரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். லியாக்கோவஸ்கை அந்தத் துண்டுப் பிரசுரத்தைப் படித்தார், படித்துவிட்டு, "இதனுடைய போக்கு அனைத்தும் அரசியல்தன்மை வாய்ந்ததாகயிருக்கிறதே? இதை நாம் அச்சிட முடியுமென நினைக்கிறீர்களா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

தங்களுடைய உற்சாகத்தின் பயனாகத் தாங்களே முயன்று தொழிலாளர்கள் இந்த துண்டுப் பிரசுரத்தை எழுதி முடித்திருக்கிறார்கள். இதில் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் இதைக் கட்டாயம் அச்சடித்துத் தர வேண்டும் என்று நம்மைக் கேட்டுக்கொண் டிருக்கிறார்கள்- எனவே, அச்சடித்துக் கொடுப்பது என்று தீர்மானித்தோம்.

எங்களுக்கும் லெனினுக்கும் இடையில் வெகு விரைவிலேயே தொடர்பு ஏற்பட்டது. அந்தக் காலத்தில் காவற்கைதிகள் விரும்பும் அளவுக்குப் புத்தகங்களை அனுப்பச் சர்க்கார் அனுமதித்தார்கள். புத்தகங்கள் அனுப்பி வைத்தால் அவற்றை மேலெழுந்தவாரியாகச் சிறைச்சாலை அதிகாரிகள் அங்கும் இங்கும் புரட்டிப் பார்ப்பார்கள். இப்படிக் கவனக் குறைவாகப் பார்க்கிற காரணத்தால், எழுத்துகளுக்கு மத்தியில் சிறு சிறு புள்ளிகளிட்டு எழுதியிருப்பவைகளை அவர்களால் பார்க்க முடிவதில்லை. அல்லது பேனாவைப் பாலில் தோய்த்து எழுதி, அதன் விளைவாகத் தாள்களின் நிறமே மாறியிருப்பதையும் அவர்கள் கவனிப்ப

தில்லை. வெகு விரைவிலேயே ரகசியமாகக் கடிதப் போக்குவரத்து நடத்துவதில் நாங்கள் மிகவும் தேர்ச்சி பெற்றோம். தாம் எழுதிய கடிதங்களில் எல்லாம் சிறையில் இருந்த ஏனைய தோழர்களைப்பற்றிய விஷயங்களிலே லெனின் அதிகக் கவனம் செலுத்தினர். இது அவரிடம் காணும் சிறப்பியல்பு. சிறையில் அடைபட்டிருப்பவர்களுக்காக, வெளியில் இருப்பவர்கள் செய்ய வேண்டியவை பற்றி, ஒவ்வொரு கடிதத்திலும் லெனின் குறிப்பிடுவார். இன்னர் இன்னரை இதுவரை ஒருவரும் வந்து சந்திக்கவில்லை. ஆகையால் அவருக்கு "ஒரு இன்பக் காதலியை" அனுப்பிவையுங்கள். இந்தச் சக கைதியின் உறவினர்கள் இங்கு வந்து அவரைப் பேட்டி காணும்போது சிறைப் புத்தகசாலையில் இன்ன புத்தகத்தில் இந்தவிதமான கடிதம் இருக்கிறது. அதை எடுத்துப் போகச் செய்யுங்கள். இன்னருக்குப் பூட்ஸ் அனுப்புங்கள் என்று—இவ்வாறெல்லாம் அவர் கடிதங்களில் குறிப்பிடுவதுண்டு. சிறையில் இருந்த பல தோழர்களுக்கு லெனின் கடிதங்கள் எழுதினர். இந்தக் கடிதங்கள் கைதிகளுக்கு அதிக உற்சாகத்தை ஊட்டின; இந்தக் கடிதங்கள் அனைத்திலும் உணர்ச்சிப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடியது. பெரும்பாலும் கடிதங்களில் வேலைத்திட்டம் பற்றிய விஷயங்களே அடங்கியிருந்தன. கடிதங்களைப் பெற்றவர்கள், சிறையி லிருக்கிறோம் என்பதை மறந்தனர்! அவர்களும் வேலையில் ஈடுபடத் தொடங்கினர். 1896-ல் நான் சிறையில் இருந்தேன். அப்பொழுது எனக்கு வந்த இத்தகைய கடிதங்கள் என்னை எவ்வாறு ஆகர்ஷித்தன என்பது இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. புத்தகங்களை அனுப்புகிற தினத்தன்று—அதாவது சனிக்கிழமையன்று—பாலில் தோய்த்து எழுதிய கடிதங்கள் வெளியிலே இருந்து வரும். புத்தகத்தினுள் கடிதம் இருக்கிறதா இல்லையா என்பதை அதில் போட்டிருக்கும். ரகசியக் குறிகளைக் கொண்டு உடனே தெரிந்துகொண்டுவிடலாம். ஆறு மணிக்குத் தேநீர் தயாரிப்பதற்காக வெந்நீர் கொண்டுவருவார்கள். சிறைக்காவற்காரி குற்றவாளிகளையெல்லாம் மாதாகோவிலுக்கு அழைத்துச் செல்வாள். அவள் அப்பால் சென்றதும் அரசியல் கைதிகளாயிருப்பவர்கள் இந்தக் கடிதங்களை நீண்ட நீண்ட துண்டுகளாகக் கிழித்து வைத்துக்கொள்வார்கள். பிறகு தேநீர் தயாரிக்க ஆரம்பிப்பார்கள். நீண்ட கடிதத் துண்டுகளையெல்லாம் சூடான தேநீருக்குள் போடுவார்கள். போட்டதும் எழுத்துக்கள் கண்ணுக்குப் புலப்பட ஆரம்பிக்கும். சிறைக்குள் இருக்கும்போது மெழுகுவர்த்தி அனலின் உதவிகொண்டு எழுத்துக்களைப் புலப்படச் செய்வது விரும்பத்தக்கதல்ல வென்று கருதி வெந்நீர் மூலமே புலப்படச் செய்யும் முறையை லெனின்தான் கண்டுபிடித்தார். இந்தக் கடிதங்கள் எத்தகைய ஆவேசத்தையும் உள்ளக் கிளர்ச்சியையும் ஊட்டின தெரியுமா? படிப்பதற்கு எத்தகைய ஆர்வத்தை அளித்தன தெரியுமா? லெனின் வெளியில் இருந்த காலத்து அவரை நடுநாயகமாக வைத்தே எங்கள் காரியங்கள் அனைத்தும் நடந்தன. அதேபோன்று சிறைக்குள்ளும் அவரை நடுநாயகமாக வைத்தே எங்களது வெளியுலகத் "தொடர்புகள்" இயங்கி வந்தன.

இதைத் தவிர்த்து சிறையில் இன்னும் பல மகத்தான காரியங்களையும் லெனின் செய்தார். ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி என்னும் நூலை எழுதினர். அதற்குத் தேவையான புள்ளி விவரங்கள், இதர புத்தகங்கள் அனைத்

தையும் சட்டபூர்வமாக எழுதும் கடிதங்கள் மூலம் எழுதித் தருவித்துக்கொண்டார். "ஐயோ! இவ்வளவு விரைவிலேயே நம்மைச் சிறையிலிருந்து விடுவித்து விட்டார்களே! இன்னும் சிறிது காலம் நம்மைச் சிறையிலேயே வைத்திருந்தால், புத்தகத்தை எழுதி முடித்திருக்கலாமே; சைபீரியாவில் புத்தகங்கள் கிடைப்பது அரிதாயிற்றே" என்று ஒரு முறை வேடிக்கையாகக் கூறினர்.

சிறையில் இருந்த காலத்தில் ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி என்ற புத்தகத்தை மட்டும் அவர் எழுதவில்லை. அநேக துண்டுப் பிரசுரங்கள், சட்ட விரோதமான சிறு சிறு புத்தகங்கள் ஆகியவற்றையும் எழுதினர். முதலாவது காங்கிரஸுக்கு வேண்டிய நிகழ்ச்சிநிரலின் நகலையும் தயாரித்தார். முன்னமே நடைபெற்றிருக்கவேண்டிய அந்தக் காங்கிரஸ் என்ன காரணத்தாலோ 1898-ம் ஆண்டுவரை நடைபெறவில்லை. கட்சியில் விவாதிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றித் தம்முடைய கருத்தையும் அவர் வெளியிட்டிருந்தார். பாலில் தோய்த்து எழுதுவதை அதிகாரிகள் தெரிந்துகொள்ளாதிருக்கும் பொருட்டு ரொட்டியை எடுத்து அதிலிருந்து சிறு சிறு "பால் மைக்கூடுகளைச்" செய்து வைத்துக்கொண்டார். வெளியில் காலடி ஓசை ஏதாவது கேட்டால் உடனே "மைக்கூடுகளை" வாய்க்குள் போட்டுக்கொண்டு விழுங்கிவிடுவார். "இன்று நான் ஆறு மைக்கூடுகளை விழுங்கினேன்" என்று தமது கடிதம் ஒன்றில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நிலைமைகளைச் சமாளிக்கும் ஆற்றலை அவர் எவ்வளவுதான் பெற்றிருந்த போதிலும், தமக்குத் தாமே அவர் சட்ட திட்டங்களை அமைத்துக்கொண்ட போதிலும் சிறை வாழ்க்கை என்பது லெனினையும் பாதிக்காமல் இல்லை. ஒரு கடிதத்தில் பின்வரும் யோசனையை எங்களுக்கு அவர் எழுதியிருந்தார். "உடற்பயிற்சி செய்வதற்காக வெளியே அழைத்துச் செல்லும்பொழுது, தாழ்வாரத்திலுள்ள ஜன்னல்களின் மூலமாக வெளியுலகத்தின் காட்சியைத் துளி நேரம் காண முடிகிறது. சப்பர்நாயா வீதி கண்களுக்குத் தெரிகிறது. எனவே, தானும் அப்போலிநாரியா அலெக்ஸாண்ட்ரோவ்னு யாகுப்போவாவும் அந்தக் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து நிற்கவும். அப்படி வந்து நின்றால் உங்களை நான் பார்க்க முடியும்" என்று ஒரு கடிதத்தில் அவர் எழுதியிருந்தார். சில காரணங்களால் அப்போலிநாரியா அங்கு வர முடியவில்லை. நான் பல நாட்கள் குறிப்பிட்ட அந்த இடத்துக்குச் சென்று நீண்ட நேரம் அங்கு நின்றுவிட்டுத் திரும்பினேன். போட்ட திட்டப்படி ஒன்றும் நடைபெறவில்லை. என்ன காரணத்தினல் திட்டம் தடைபட்டுக் குலைந்து போயிற்று என்பது இப்போது எனக்கு நினைவு இல்லை.

லெனின் சிறையில் இருந்த காலத்தில் வெளியே காரியங்கள் விரிவாக நடைபெற்றன. தொழிலாளர் இயக்கம் வளர்ந்தோங்கி வந்தது. மார்டோவ்வும் லியாக்கோவ்ஸ்கையும் பிறரும் கைதியான பின்னர் எங்கள் கூட்டம் மிகவும் சிறிதாயிற்று. புதிய தோழர்கள் பலர் எங்களோடு வேலை செய்தார்களென்பது உண்மைதான். ஆனால், தத்துவத் துறையில் இவர்களுக்குப் போதிய பயிற்சி இல்லாமல் இருந்தது. படிப்பதற்கு அவகாசமே இல்லை. இயக்கத்தை வளர்ப்பதற்கு, சுறுசுறுப்பான உழைப்பும் ஓய்வு ஒழிதலும் இல்லாத பெரு முயற்சியும் தேவையாயின. ஒவ்வொன்றுக்கும் கிளர்ச்சி செய்வது அவசியமா

யிற்று. பிரசாரத்தைப் பற்றி நினைப்பதற்கே அவகாசம் கிடைக்கவில்லை. அச்சடித்த துண்டுப் பிரசுரங்களின் மூலம் நாங்கள் நடத்தின கிளர்ச்சி பெரிதும் வெற்றி அளித்தது. நிலைமைகளைப் பரிபூர்ணமாகப் பரிசிலனை செய்யாமல் அவசர அவசரமாகத் துண்டுப் பிரசுரங்களை எழுதி வெளியிட்டோம். சமதர்ம ஜனநாயகவாதிகள் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக 1896-ம் ஆண்டில் நெசவாளர் வேலைநிறுத்தம் ஒன்று நடைபெற்றது. இதன் வெற்றியால் மதிமயங்கிப் பல தோழர்கள் நிதானம் தவறினர். 'பொருளாதாரவாதம்' கிளைத்து வளர்வதற்கு இதுவே மூல காரணமாயிற்று. காட்டில் ஒரு முறை கூட்டம் நடைபெற்றது. ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் என்று நினைக்கிறேன் அப்போது, துண்டுப் பிரசுரம் ஒன்றை ஸில்வின் இரைந்து படித்துக் காட்டினார். அதில் தொழிலாளர் இயக்கமானது பொருளாதாரப் போராட்டம் என்ற எல்லைக்குள்ளேயே முற்றும் அடங்கி நிற்க வேண்டும் என்ற ஒரு வாக்கியம் ஏதோ ஒரு இடத்தில் காணப்பட்டது. அந்த வாக்கியத்தை இரைந்து படித்த பிறகு ஸில்வின் சிறிது நேரம் அப்படியே தயங்கி நின்றார். பிறகு, "ஏன், நான்கூட இந்த நிலைக்கு வந்துவிட்டேன். இப்படி என்னை எழுதும்படி தூண்டியது யாதாயிருக்கலாம்?" என்று சிரித்துக்கொண்டே கூறினார். மனத்தை உறுத்தும் அந்த வாக்கியத்தை நாங்கள் அதிலிருந்து நீக்கிவிட்டோம். 1896-ம் ஆண்டு கோடையின்போது லக்டின்ஸ்கை அச்சுக்கூடம் முறிந்துவிட்டது. எனவே மேலும் தொடர்ந்து துண்டுப் பிரசுரங்களை அச்சடிப்பதற்கு எங்களால் இயலவில்லை. பத்திரிகை வெளியிடுவது சம்பந்தமாகச் செய்திருந்த ஏற்பாடுகளையும் காலவரையறை இன்றி ஒத்திப் போட்டு விட்டோம்.

1896-ல் வேலைநிறுத்தம் நடந்தபோது 'குரங்குகள்' என்ற புனை பெயரால் அழைக்கப்பட்ட தக்காட்ரீவ் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களும் 'கோழிகள்' என்ற புனைபெயரால் அழைக்கப்பட்ட செர்னிஷீவ் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களும் வந்து எங்களோடு சேர்ந்துகொண்டார்கள். 'டிசம்பர் வாதிகள்*' இன்னும் சிறையிலிருந்தபடி வெளி உலகத் தொடர்பை வைத்துக் கொண்டிருந்த காரணத்தால், வேலைகள் முன்னைப்போலவே பழைய பத்ததியில் நடந்து வந்தன. லெனின் விடுதலை செய்யப்பட்டார். ஆனால், நானே அப்போது சிறைக்குள் அடைபட்டுக் கிடந்தேன். சிறையிலிருந்து விடுதலையானவர்களைப் பலர் சூழ்ந்து நிற்பார்கள் என்றாலும், பல கூட்டங்களில் கலந்துகொள்ளவேண்டியிருக்கும் என்றாலும் வெளியே என்னென்ன நடைபெறுகிறதென்பதை எனக்கு எழுத லெனின் மறந்ததே இல்லை. சிறையிலிருந்து வெளிவந்ததும் லெனின் நன்கு பருத்திருக்கிறார் என்றும் எடையும் கூடியிருக்கிறது என்றும் என் அன்னை தெரிவித்தாள்.

"வெற்றோவா நிகழ்ச்சி"க்குப் பிறகு நான் விடுதலை அடைந்தேன். வெற்றோவா என்ற பெண் கைதி சிறைக்குள் தானே நெருப்பு வைத்துக்

* டிசம்பர்வாதிகள்: 1895-ம் வருடம் டிசம்பர் மாதம் கைதானவர்களுக்குச் சூட்டப்பெற்ற பெயர்.

கொண்டு இறந்துவிட்டாள். எனவே பெண் கைதிகள் அனைவரையுமே சர்க்கார் விடுதலை செய்துவிட்டார்கள். ஆனால், வழக்குகள் முடியும்வரை பீட்டர்ஸ்பர்க்கிலேயே இருக்க வேண்டு மென்று நிபந்தனை போட்டார்கள்; சென்ற இடங்களுக்கு எல்லாம் இரண்டு ஒற்றர்களையும் கூட அனுப்பி வைத்தார்கள். ஸ்தாபனத்தின் நிலைமை மிகவும் மோசமா யிருந்தது. முன்பு பணியாற்றி வந்த உறுப்பினர்களில் எஸ். ஐ. ராடாசென்கோவும் அவருடைய மனைவியும் தான் எஞ்சி நின்றார்கள். ரகசியமாகத் தொடர்ந்து வேலை செய்வதற்கு அவரால் முடியவில்லை. மத்திய ஸ்தலமாக மட்டும் அவருடைய வீடு இருந்து வந்தது. மற்ற உறுப்பினர்கள் தொடர்பும் அதனால் நீடித்திருந்தது.

ஸ்ட்ருவுடனும் நிலையான தொடர்பு இருந்து வந்தது. சிறிது காலத்திற்குப் பிறகு நீனா அலெக்ஸாண்ட்ரோவ்னா கெர்டை அவர் மணந்துகொண்டார். அவள் சமதர்ம-ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவள். அவரும் ஏறக்குறைய, சமதர்ம-ஜனநாயகவாதியாக அப்போது விளங்கினார். ஸ்தாபனங்களிலிருந்து வேலை செய்வதற்கு அவருக்குத் தகுதி போதாது. ரகசிய வேலையில் ஈடுபடுவதற்கும் அவர் லாயக்கற்றவராக இருந்தார். ஆனால், தன்னிடம் வந்து எல்லோரும் ஆலோசனை கேட்க வேண்டு மென்று தற்பெருமை அடித்துக் கொள்வதில் மட்டும் குறைவில்லை. சமதர்ம-ஜனநாயகத் தொழில் கட்சியின் முதலாவது காங்கிரஸுக்கு அவர்தான் யாதாஸ்து தயாரித்தார்; 1897—1898 பனிக்காலத்தின்போது லெனின் சார்பாக, பல தடவை நான் ஸ்ட்ருவைச் சந்தித்தேன். அப்போது புதிய சொல் என்ற பத்திரிகைக்கு அவர் ஆசிரியராக இருந்தார். பல காரணங்களால் எனக்கும் நீனா அலெக்ஸாண்ட்ரோவ்னா கெர்டுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஸ்ட்ருவுனுடைய போக்கையும் நான் கவனித்து வரலானேன். அப்பொழுதெல்லாம் அவர் ஓர் உண்மையான சமதர்ம-ஜனநாயகவாதியாகவே விளங்கினார். மனித வாழ்க்கையோடு ஒட்டிய அறிவு சொற்பமாய் அவரிடம் காணப்பட்டதோடு, அவர் ஒரு "புத்தகப் பூச்சியாகவும்" இருந்தார். இதைக் கண்டு நான் பிரமித்துவிட்டேன். வாழ்க்கை அனுபவத்தை அவர் மிகவும் அசட்டை செய்தார். லெனினுக்கோ வாழ்க்கை அனுபவத்தில்தான் அக்கறை யெல்லாம். அதை அறிந்துகொள்ள லெனின் வெகுவாக முயன்றார். எனக்காக, ஸ்ட்ருவ் மொழிபெயர்ப்பு நூல்கள் சிலவற்றைத் தருவித்தார். செப்பனிட்டு அவற்றைத் திருத்தித் தர முயன்றார். ஆனால் ஈடுபாடு இன்றி அவர் உடனே சோர்வடைந்துவிட்டார். லெனின் மணிக்கணக்கில் உட்கார்ந்து வேலை செய்வார். அவர் வேலையில் ஈடுபடும் முறை முற்றும் அலாதியாகவே இருக்கும். மொழிபெயர்ப்புக் காரியமா யிருந்தாலுங்கூட அதில் முழு மனதுடன் ஈடுபட்டு அவர் வேலை செய்வார். பொழுதுபோக்க எண்ணினால், பெட் என்ற ஆசிரியர் எழுதிய நூல்களைத்தான் ஸ்ட்ருவ் படிப்பார். யாரோ ஒருவர் எழுதியுள்ள ஞாபகக் குறிப்பில் பெட் எழுதிய நூல்களை லெனின் விரும்பிப் படித்தார் என்று எழுதி யிருக்கிறார்கள். இது உண்மை யன்று. பெட் என்பவர் வடிகட்டிய ஜமீன்தார் வர்க்கத்தைச் சேர்ந்தவர். கையில் எடுத்துப் படிப்பதற்கே அவருடைய நூல்கள் அருகதை யற்றவை. ஆனால், ஸ்ட்ருவோ அவருடைய நூல்களை உண்மையாகவே

விரும்பிப் படித்தார். அந்தக் காலங்களில் எல்லாம் ஒருசிறிதும் சந்தேகத்திற்கு இடமின்றி லெனினேடு ஸ்ட்ரூவ் மிகவும் நல்ல முறையில் பழகி வந்தார்.

டுக்கன் - பாரனேவஸ்கியையும் எனக்குத் தெரியும். நானும் அவருடைய மனைவி லிடியா கார்லோனு டேவிடோவாவும் பள்ளிக்கூடத்தில் ஒன்ருக வேலை பார்த்தோம். இவர்கள் வீட்டுக்கு நான் போவது வழக்கம். லிடியா மிகவும் நல்லவள், கெட்டிக்காரி. ஆனுல், மனஉறுதி மட்டும் கொஞ்சம் போதாது. தன் கணவனைவிட அவள் கொஞ்சம் புத்திசாலி. சம்பாஷணையின்போது அவளுடைய கணவன் எங்களைச் சேர்ந்தவரில்லை என்பது துலக்கமாகத் தெரிந்து விடும். காஸ்டோராமாவில் வேலைநிறுத்தம் செய்திருப்பவர்களுக்குப் பொருள் உதவி கோரி நான் அவரிடம் சென்றேன். அவர் சிறிது பணமும் தந்தார். எவ்வளவு தொகை என்று இப்பொழுது எனக்கு நினைவில்லை. இப்படிப் பணம் வசூலிக்கும்போது டுக்கன், "வேலைநிறுத்தங்களை நாம் ஏன் ஆதரிக்க வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. முதலாளிகளோடு போராடுவதற்கு வேலைநிறுத்தம் மட்டுமே போதியதாகாது" என்று அவர் ஒரு பிரசங்கமாரி பொழிய ஆரம்பித்தார். பணத்தை வாங்கிக்கொண்டு அங்கிருந்து வேகமாக வெளியே வந்துவிட்டேன்.

நான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பற்றி லெனினுக்கு ஒரு கடிதம் எழுதினேன். ஸ்தாபனத்தைப்பற்றி எழுதுவதற்கு எதுவுமே இல்லை. காங்கிரஸ் கூடியபொழுது எங்கள் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களில் நான்கு பேர் மட்டுமே வெளியில் இருந்தோம். எஸ். ஐ. ராடாசென்கோ, அவர் மனைவி, லீயூபோவ் நிக்கலோவ்னு சாமர், நான் ஆகிய நால்வருமே எஞ்சி யிருந்தோம். ராடாசென்கோ எங்கள் பிரதிநிதியாகச் சென்ருர். காங்கிரஸிலிருந்து திரும்பியதும் நடைமுறையில் என்ன மேற்கொள்ளலா மென்பது பற்றி அவர் எதுவுமே சொல்லவில்லை. ஸ்ட்ரூவ் எழுதிய யாதாஸ்தை, நாங்கள் எல்லோரும் அறிந்த அந்த யாதாஸ்தை - காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. அதையே அவர் எங்களிடம் திருப்பிப் படித்தார். படித்துவிட்டு, காங்கிரஸுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் எல்லோரையுமே கைதுசெய்துவிட்டார்கள் என்று முணுமுணுத்துக் கொண்டே கூறினர்.

யூபா மாகாணத்திற்கு மூன்று ஆண்டுகள் என்னை நாடுகடத்திவிட்டார்கள். மினஸங் பகுதியிலுள்ள சுஷன்ஸ்கோய்க் கிராமத்திற்கு என்னை மாற்றும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டேன். அந்தக் கிராமத்தில்தான் லெனின் வசித்து வந்தார்; அங்கு என்னை மாற்றும் பொருட்டு அவருடைய "மனைவி" என்று என்னை நான் கூறிக்கொண்டேன்.

நாடு கடத்தப்பட்ட வாழ்க்கை

(1898—1901)

நானும், என் அன்னையும் எங்கள் செலவில் மினஸங்குக்குச் சென்றோம். 1898-ம் வருடம் மே மாதம் முதல் தேதி நாங்கள் கிராஸ்னேயார்ஸ்கை அடைந்தோம். அங்கிருந்து என்னேஸிவரை நாங்கள் கப்பலில் செல்ல வேண்டும். என்ன காரணத்தாலோ கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகவில்லை. கிராஸ்னேயார்ஸ்கையில் நாங்கள் ''நாதோப்ரோ வெட்ஸ்*'' கட்சியைச் சேர்ந்த தியூசிவையும் அவர் மனைவியையும் சந்தித்தோம். அனுபவசாலிகளான அவர்கள் கிராஸ்னேயார்ஸ்கை வழியாகச் சென்றுகொண்டிருந்த சமதர்ம ஜனநாயகவாதிகளை நான் கண்டு பேச ஏற்பாடு செய்தனர். என்மீது தொடரப்பட்ட வழக்கில், உடன் குற்றவாளிகள் ஆக்கப்பெற்ற லெங்க்னிக், ஸில்வின் ஆகிய இருவரும் அந்தக் கோஷ்டியில் இருந்தனர். போட்டோ எடுக்கும்பொருட்டு நாடு கடத்தப்பட்டவர்களை அழைத்துச் சென்ற சிப்பாய்கள் நாங்கள் கொடுத்த ரொட்டியைத் தின்றுகொண்டு ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தனர்.

மினஸங்கில் நான் அர்க்காடி திர்க்காவை சந்தித்தேன். ''மார்ச்சு முதல் தேதி நாடு கடத்தப்பட்டவர்களில்'' அவரும் ஒருவர். அவருடைய சகோதரி என்னோடு பள்ளிக்கூடத்தில் படித்தவள். தம் தமையனுருக்கு வந்தனத்தையும் அன்பையும் தெரிவிக்கும்படி அவள் சொல்லி அனுப்பியிருந்தாள். அவற்றைத் தெரிவிக்கும்பொருட்டு நான் அவரைப் பார்க்கச் சென்றேன். விடாக்கண்டனை: பழைய புரட்சிக்காரரர் பெலிக்ஸ் ஓய் கோன் என்பவரையும் நான் சந்திக்கச் சென்றேன். என் கண்களுக்கு அவர் ஒரு புனித ஆத்மாவாகவே காட்சியளித்தார். அவரை நான் பெரிதும் மதித்தேன்.

லெனின் வசித்துவந்த சுஷன்ஸ்கோய் கிராமத்தை நாங்கள் அடைந்த சமயம், பொழுது சாய்ந்துவிட்டது. லெனின் வெளியே வேட்டைக்குச் சென்றிருந்தார். நாங்கள் மூட்டைகளைக் கீழே இறக்கி வைத்ததும் எங்களை அங்கு இருந்த மரக் குடிசைக்குள் அழைத்துச் சென்றார்கள். சைபீரியாவிலுள்ள மினஸங் பகுதியில் வாழும் விவசாயிகள், தங்கள் பழக்க வழக்கங்களில் மிகவும் சுத்தமாக இருப்பார்கள். கையால் பின்னப்பட்ட பளப்பளப்பான வர்ணப் பாய்கள் அவர்கள் வீட்டின் தரையை அலங்கரிக்கும்; சுவர்கள் வெண்மையாக

---

* நாதோப்ரோவெட்ஸ்: 1870-ம் வருடத்தில் தோன்றின புரட்சி இயக்க அங்கத்தினர்.

இருக்கும்; பிர் மரத்தின் கிளைகளைக் கொண்டு சுவர்கள் யாவும் அழகுபடுத்தப் பட்டிருக்கும். லெனின் வசித்த அறை அவ்வளவு பெரியதன்று; என்றாலும், சுத்தமாக இருந்தது. குடிசையில் மீதியிருந்த பாகத்தை எனக்கும், என் அன்னைக்குமாகத் தந்தார்கள். மரக் குடிசையின் சொந்தக்காரர்களும் அக்கம் பக்கத்தார்களும் எங்களைக் கண்டதும் கும்பலாகக் கூடிக்கொண்டு, எங்களை ஏற இறங்கப் பார்த்தார்கள்; கேள்விகளும் கேட்க ஆரம்பித்தார்கள். வேட்டை முடிந்து லெனினும் கடைசியாக வந்து சேர்ந்தார். தமது அறையில் விளக்கு ஒன்று எரிந்துகொண் டிருப்பதைக் கண்ட அவர் ஆச்சரியப்பட்டுப் போனார். நாடுகடத்தப்பட்ட பீட்டர்ஸ்பர்க் தொழிலாளி ஆஸ்கார் அலெக்ஸாண்ட்ரோவிச் குடித்துவிட்டு வந்து அறையிலிருந்த அவருடைய புத்தகங்களை யெல்லாம் அங்கு மிங்குமாக வீசிவிட்டுப்போனதாக லெனினிடம் வீட்டுக்காரர் தெரிவித்தார். இதைக் கேட்டு லெனின் வேகமாகத் தன் அறையை நோக்கி வந்தார். அப்பொழுது நானும் குடிசையிலிருந்து வெளியே வந்தேன். அன்றிரவு மணிக் கணக்காக நாங்கள் இருவரும் பேசிக்கொண் டிருந்தோம். லெனின் தேகாரோக் கியத்துடனும் சந்துஷ்டியுடனும் காணப்பட்டார்.

நாடுகடத்தப்பட்டவர்களில் இரு தொழிலாளர்கள் மட்டுமே சுஷன்ஸ்கோயில் இருந்தார்கள். ஒருவர் பிரோமின்ஸ்கி; அவர் போலந்தைச் சேர்ந்தவர்; சமதர்ம-ஜனநாயகக் கட்சி உறுப்பினர்; தொப்பி செய்யும் தொழிலாளி; லோட்ஸ் என்பது அவர் சொந்த ஊர். அவர்கூட அவருடைய மனைவியும் ஆறு குழந்தைகளும் வசித்தனர். இன்னொருவர் என்பெர்க்; பீட்டர்ஸ்பர்க் புட்டிலாவ் தொழிற்சாலையில் வேலைசெய்தவர்; சொந்த நாடு பின்லாந்து; இருவரும் உத்தமமான தோழர்கள்.

பிரோமின்ஸ்கி சாந்தமானவர்; நிலைகலங்காதவர்; உறுதிமிக்கவர்; அதிகம் படித்தவரில்லை. விஷயங்களை அதிகமாகத் தெரிந்தவரும் அல்லர். இருந்தும் அவரிடம் வர்க்க உணர்ச்சி பிறிட்டுக்கொண் டிருந்தது. அப்போது மிகவும் மதப் பற்றுக் கொண்டிருந்த தம் மனைவியை அவர் அன்புடன் கேலிசெய்வார். வேட்டையாடுவதில் அவருக்குப் பிரியம் அதிகம். ஞாயிற்றுக்கிழமைகளில் ஒய்வு நாள் உடுப்பு அணிந்துகொள்ளுவார். அன்றையத் தினம் அவர் முகம் புன்னகையால் பிரகாசித்துக்கொண் டிருக்கும். "தொழிலாளி மக்கள்" "மே முதல் தேதி" என்ற போலிஷ் பாஷை புரட்சிப் பாடல்களை அவர் அற்புதமான முறையில் பாடுவார். அவற்றுடன் வேறு சில பாடல்களையும் பாடுவார். குழந்தைகளும் அவருடன் சேர்ந்து பாடும். லெனினும் அவர்களுடன் சேர்ந்து பாடுவார். சைபீரியாவில் இருக்கும்போது லெனின் அதிகமாகப் பாடுவார்; விருப்பத்தோடு பாடுவார். லெனின் கற்றுக்கொடுத்த ரஷ்யப் புரட்சிப் பாடல்களையும் பிரோமின்ஸ்கி பாடுவதுண்டு. வேலை செய்யும் பொருட்டு, போலந்துக்குத் திரும்பிச் செல்லப் பிரோமின்ஸ்கி முடிவு செய்தார். குழந்தைகளுக்குக் கம்பளிக் கோட்டு தைப்பதற்காக அவர் எண்ணற்ற முயல்களைக் கொன்று தோல்களைச் சேகரித்து வைத்திருந்தார். ஆனால் அவரால் போலந்துக்குத் திரும்பிப் போக முடியவில்லை. அவரும் அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கிராஸ்னோயார்ஸ்கையின் எல்லையைத் தாண்டி அப்பால் செல்ல

முடியவில்லை. எனவே அங்கேயே ரயில்வேயில் அவர் வேலைக்கு அமர்ந்தார். இப்பொழுது குழந்தைகள் பெரியவர்களாகிவிட்டார்கள். பிரோமின்ஸ்கி கம்யூனிஸ்டாக மாறிவிட்டார். அவர் மனைவி பான்யாவும் குழந்தைகளும்கூட கம்யூனிஸ்ட்களாக மாறிவிட்டார்கள். ஒரு குழந்தை யுத்தத்தில் இறந்துவிட்டது. இன்னொரு குழந்தை உள்நாட்டுக் கலகம் நடந்தபொழுது மரணத்திலிருந்து ஒருவாறு தப்பிப் பிழைத்து இப்பொழுது சீட்டாவில் வசித்துவருகிறான்; 1923-ம் வருடம் பிரோமின்ஸ்கி போலந்துக்குப் புறப்பட்டார். ஆனால், வழியில் டைபாயிட் நோய் கண்டு இறந்துபோனார்.

இன்னொரு தொழிலாளி இருந்தாரே அவர் வேறு வகையைச் சேர்ந்தவர். இளம் வயதினர். வேலை நிறுத்தத்தில் பங்கு எடுத்துக்கொண்டதற்காகவும், வேலைநிறுத்தம் நடந்தபொழுது கலகத்தைத் தூண்டினதற்காகவும் நாடு கடத்தப்பட்டவர். கூடுமானவரை அவர் எல்லா விஷயங்களையும்பற்றி நிரம்பப் படித்திருந்தார். இருந்தும், சமதர்மத்தைப் பற்றி அவருக்கு மேலெழுந்தவாரியாகத்தான் தெரியும். ஒரு சமயம் வேலோஸ்டிலிருந்து திரும்பி வந்ததும், "புதிதாக ஒரு குமாஸ்தா வந்திருக்கிறார். கொள்கையில் எங்களிடையே உடன்பாடு அதிகம் இருக்கிறது" என்று அவர் கூறினார்.

"உங்கள் இருவருக்கும் எதில் உடன்பாடு?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"நானும் அவரும் புரட்சிக்கு எதிரானவர்கள். இதில்தான் எங்களுக்கு உடன்பாடு" என்று அவர் பதில் கூறினார்.

இதைக் கேட்டு லெனினும் நானும் உரக்கச் சிரித்தோம். மறு நாள் நானும் ஆஸ்காருமாக, கம்யூனிஸ்ட் அறிக்கையைப் படிக்கத் தொடங்கினோம். இந்த நூலை நான் ஜெர்மன் பாஷையிலிருந்து மொழிபெயர்த்திருக்கிறேன். அதைப் படித்து முடித்த பிறகு மூலதனம் என்பதைப் படிக்க ஆரம்பித்தோம். ஒரு நாள் மேற்படி நூலை நாங்கள் படித்துக்கொண்டிருந்தபொழுது பிரோமின்ஸ்கி புகை பிடித்துக்கொண்டே உள்ளே வந்து உட்கார்ந்தார். நாங்கள் இதுவரை படித்ததைப்பற்றி நான் சில கேள்விகள் கேட்டேன். என்ன பதில் சொல்வதென்று ஆஸ்காருக்கு விளங்கவில்லை. ஆனால், தனக்கு இயல்பான அமைதியுடன் புன்னகை புரிந்துகொண்டே பிரோமின்ஸ்கி பதில் கூறினார். இதன் பிறகு ஆஸ்கார் ஒரு வாரம் படிப்பதையே நிறுத்திவிட்டார். எப்படியிருந்தபோதிலும், அவர் நிரம்ப நல்ல மனிதர். நாடு கடத்தப்பட்டவர்கள் சுஷன்ஸ்கோயில் வேறு யாரும் இல்லை. உள்ளூர் ஆசிரியரின் நட்பைப் பெறத் தாம் முயன்றதாகவும், அம் முயற்சியில் தாம் வெற்றி பெறவில்லை என்றும் லெனின் கூறினார். ஆசிரியர், உள்ளூர் பெரிய மனிதர்களை—ஒரு பாதிரியாரையும் இரண்டு கடைக்காரர்களையும்—நேசித்தார். அவர்களோடு சேர்ந்து குடித்துவிட்டு, களியாட்டம் ஆடுவதிலும் சீட்டு விளையாடுவதிலும் அந்த ஆசிரியர் தமது காலத்தைச் செலவழித்தார். சமூகப் பிரசினைகளில் அவருக்குக் கொஞ்சம்கூடச் சிரத்தை கிடையாது. பிரோமின்ஸ்கியின் மூத்த மகன் பெயர் லியோபால்ட். அவனுக்குச் சமதர்மவாதிகளிடம் அனுதாபம் உண்டு. இதனால் அவனுக்கும் ஆசிரியருக்கும் இடையில் அபிப்பிராய வேற்றுமை அடிக்கடி ஏற்படுவதுண்டு.

ஷுராவ்லீவ் என்னும் விவசாயி ஒருவர் லெனினுக்கு நண்பர்; அவரை லெனின் பெரிதும் நேசித்தார். ஷுராவ்லீவுக்கு வயது முப்பது. அவர் காச நோயால் வருந்தினர். முன்னர் அவர் கிராமக் குமாஸ்தாவாக இருந்தவர். இயற்கையிலே அவர் புரட்சிக்காரர் என்றும் அக்கிரமத்தை எதிர்க்கும் இயல்புடையவர் என்றும் லெனின் அவரைக் குறிப்பிடுவ துண்டு. பணக்காரர்களை ஷுராவ்லீவ் தீரத்துடன் எதிர்ப்பார். சின்னஞ் சிறு அநீதியைக்கூட அவர் பொறுக்க மாட்டார். எங்கேயோ அவர் வெகு தூரம் போய்விட்டார். சிறிது காலம் முன்பாக அவர் காச நோய் காரணமாக இறந்து போனர்.

லெனினுக்கு இன்னெரு நண்பர் இருந்தார். அவர் ஒரு ஏழை விவசாயி. இருவரும் அடிக்கடி வேட்டைக்குச் செல்வார்கள். வயதுமுதிர்ந்த அவர், மந்த புத்தி உடையவர். ஸோஸிபாட்ச் என்று அவரை எல்லோரும் அழைப்பார்கள். எனினும் லெனினிடம் அவர் நல்ல முறையில் நடந்துகொண்டார். நூதனமான பொருள்களை யெல்லாம் அவர் லெனினுக்குப் பரிசாகக் கொடுப்பார்; சில சமயம் பறவைகள் கொண்டுவந்து கொடுப்பார்; வேறு சில சமயம் சீடார் விதைகளைக் கொண்டுவந்து கொடுப்பார்.

ஸோஸிபாட்ச், ஷுராவ்லீவ் ஆகியோரை வைத்து, அவர்களின் மூலமாக லெனின் சைபீரியக் கிராமவாசிகளின் நிலைமைகளைத் தெரிந்துகொண்டார். ஒரு பணக்கார விவசாயி வீட்டில் வசித்தபொழுது, அந்த விவசாயியுடன் தான் நடத்திய சம்பாஷணைபற்றி லெனின் என்னிடம் தெரிவித்தார். கூலிக்கு வேலை செய்த விவசாயி ஒருவன், தான் வேலை பார்த்த பணக்கார விவசாயிக்குச் சொந்தமான தோல் ஒன்றைத் திருடிவிட்டான். கையும் களவுமாகப் பிடித்து, அந்த இடத்திலேயே அப்பொழுதே அந்தப் பணக்கார விவசாயி, கூலிக்கு வேலை செய்தவனைக் கொன்றுவிட்டான். சின்னஞ் சிறு முதலாளிகள்கூட எவ்வளவு கொடுமையாகவும் கொடூரமாகவும் நடந்துகொள்ளுகிறர்கள் என்பதையும், கூலி வேலை செய்யும் விவசாயிகளை இவர்கள் எவ்வாறு இரக்கமின்றிச் சுரண்டுகிறர்கள் என்பதையும் லெனின் எங்களுக்கு எடுத்துக் காட்டுவதுண்டு. உண்மையில் அடிமைகளைப் போன்று சைபீரிய விவசாயிகள் வேலை செய்தனர். விடுமுறை நாட்களில் மாத்திரம்தான் அவர்களுக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது.

கிராமங்களின் நிலையைத் தெரிந்துகொள்ள லெனின் வேறு முறைகளையும் கையாண்டார். ஞாயிற்றுக்கிழமைதோறும் அவர் வழக்குகளைத் தீர்த்து வைக்கப் போவார். தங்கச் சுரங்கத்தில் வேலைபார்த்த ஒரு தொழிலாளியை அந்தச் சுரங்க முதலாளி வேலையிலிருந்து நீக்கிவிட்டார். தொழிலாளிக்காக வாதாடி லெனின் அதில் வெற்றி அடைந்தார். அதனல் ஜனங்களிடையே அவருக்கு அதிகச் செல்வாக்கு ஏற்பட்டது. இந்த வழக்கு வெற்றிஅடைந்த செய்தி காட்டுத் தீ போல் விரைவில் குடியானவர்களிடையே பரவிற்று. குடியானவர்கள் ஆண் பெண் இருபாலாரும் வந்து லெனினிடம் தங்கள் துயரங்களை எல்லாம் தெரிவிப்பார்கள். அவர்கள் கூறுவதை லெனின் கவனமாகக் கேட்பார்; எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்வார். பிறகு, கஷ்டம் தீர அவர்களுக்கு வழி காட்டுவார். "என் மைத்துனன் கல்யாணத்தின்போது எல்லோரும் சேர்ந்து கூடிக் குடித்துக் கும்மாளம் அடித்திருக்கிறர்கள். அதற்கு என் மைத்துனன்

என்னை அழைக்கவில்லை. நியாயத்திற்குப் புறம்பான இந்தச் செயலுக்கு ஏதாவது பரிகாரம் உண்டா? இதற்குத் தகுந்த ஆலோசனை நீங்களே கூறுங்கள்'' என்று கேட்பதற்கு ஒரு குடியானவர் இருபது மைல் தூரத்திலிருந்து வந்திருந்தார். ''இப்பொழுது என் மைத்துனனைக் காணச் சென்றால் மதுவகைகள் தந்து என்னை அவர் உபசரிப்பாரா?'' என்று அவர் லெனினைக் கேட்டார்.

'' நீங்கள் இப்போது போனாலும் அவர் நிச்சயமாக உங்களை உபசரிப்பார்'' என்று லெனின் பதில் கூறினர். ''மைத்துனரோடு சமரசமாகப் போய்விடுங்கள்'' என்று கூறி இந்தக் குடியானவரின் மனதைத் திருத்துவதற்கு லெனினுக்கு ஏறக்குறைய ஒரு மணி நேரம் பிடித்தது.

அநேகமாக அவர்கள் சொல்லும் கதைகளைக் கொண்டு விஷயத்தின் தன்மை இன்னதென்று தெரிந்துகொள்ள முடிவதில்லை. எனவே, சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளைக் கொண்டுவரும்படி லெனின் அவர்களிடம் எப்பொழுதுமே கூறுவதுண்டு.

ஒரு நாள் ஏழை விவசாயப் பெண் ஒருத்திக்குச் சொந்தமான பசுவை பணக்கார விவசாயி ஒருவனுடைய காளை குத்திவிட்டது. பெண்ணுக்குப் பத்து ரூபிள் நஷ்டஈடு கொடுக்கும்படி கிராமக் கோர்ட்டார் தீர்ப்பு அளித்தார்கள். இந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்து வழக்கின் நகலைத் தர வேணுமென்று அவள் கோர்ட்டாரைக் கோரினள்.

''எந்த நகல் வேண்டும்? வெள்ளைப் பசுவின் நகலா?'' என்று நீதிபதி குறும்பாகக் கேட்டார்.

இதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த அவள் லெனினிடம் வந்து முறையிட்டாள். குற்றம் சாட்டப் பெற்றவர்கள், தங்கள் வழக்குகளை லெனினிடம் தெரிவிப்போம் என்று எதிரிகளிடம் தெரிவித்தாலே போதும்; பெரும்பாலும் வழக்குப் போட்டவர்கள் சும்மா இருந்துவிடுவார்கள். வோல்கா நதித் தீரத்திலுள்ள நாட்டுப்புறங்களை லெனின் நன்கு அறிவார்; அதைப்போலவே இப்போது சைபீரியாவின் நாட்டுப்புறங்களையும் அவர் நன்கு அறிந்துகொண்டிருந்தார். ''என் தாயார் என்னை விவசாயத்தில் ஈடுபடும்படி, அதை ஒரு தொழிலாக மேற்கொள்ளும்படி, என்னிடம் கூறினர். ஈடுபடும் தறுவாயில் இது சாத்தியமில்லாத ஒரு காரியம் என்பதை நான் உணர்ந்தேன். அப்படி ஈடுபட்டிருந்தால் எனக்கும் விவசாயிகளுக்கும் இடையில் நிலைமை வெகு விபரீதமாய்போய் இருக்கக் கூடும்'' என்று லெனின் ஒரு முறை என்னிடம் சொன்னர்.

நாடு கடத்தப்பட்டவர் என்ற முறையில் நீதிபரிபாலனம் பற்றிய விவகாரங்களில் தலையிட லெனினுக்கு உரிமை கிடையாது. ஆனல், அன்று மினஸங் பகுதியில் நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. நடைமுறையில் கண்காணிப்பு என்பதே கிடையாது.

எங்களைக் கண்காணித்துக்கொண்டிருந்த ''அதிகாரி'' உள்ளூர் பணக்கார விவசாயி. எங்களிடம் இறைச்சி விற்பதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தாரே தவிர, தமது கண்காணிப்பில் இருக்கும் நாடு கடத்தப்பட்டவர்கள் தப்பியோடிவிடுவார்களே என்ற எண்ணம் அவருக்குக் கிஞ்சிற்றும் இல்லை. சுஷன்ஸ்கோயில் சாமான்கள் மிகவும் மலிவான விலைக்குக் கிடைத்தன. உதாரணமாக,

'சம்பளமாகத்' தமக்குச் சர்க்கார் கொடுத்த எட்டு ரூபிள்களுக்குள்ளேயே தமக்கு வேண்டிய சகல வசதிகளையும்—சுத்தமான அறை, உணவு, துவையல் கூலி, தையல் கூலி, அனைத்தையும்—லெனின் செய்துகொண்டார். ஆனால், அங்குள்ளவர்கள் இதைக் கிராக்கியென்று கருதினார்கள்! எங்களது இரு வேளைச் சாப்பாடுகளும் எளிய முறையிலே தயாரிக்கப்பட்டன என்பது உண்மைதான். ஒரு வாரத்துக்கு ஆட்டை அடித்து அந்த மாமிசம் தீரும்வரை அதை லெனினுக்கு சமையல் செய்து போடுவார்கள். அது முடிந்ததும் இன்னொரு வாரத்திற்குப் போதிய மாட்டு இறைச்சி விலைக்கு வாங்குவார்கள். ஆடு மாடுகளுக்கு உணவு தயாரிக்கும் கொட்டத்திற்குக் கொண்டுபோய் இந்த மாட்டு இறைச்சியைச் சிறு சிறு துண்டுகளாக, பண்ணை வேலைக்காரி வெட்டிக்கொண்டு வருவாள். அதைக் கொண்டு லெனினுக்கு 'கட்லெட்' செய்து கொடுப்பார்கள். இதையும் ஒரு வாரம்வரை வைத்துக்கொள்வார்கள். லெனினுக்கும் அவர் வளர்த்த அழகிய ஸெங்கா என்ற நாய்க்கும் தேவையான அளவு பால் கிடைத்தது. சாமான்களைக் கொண்டுவரவும் கொண்டுசெல்லவும் தேடிப்பிடிக்கவும் இன்னும் பல வேலைகளைச் செய்யவும் அந்த நாய்க்கு லெனின் கற்றுக்கொடுத்திருந்தார்.

ஸீயானோவ் குடும்பத்தார், தங்கள் வீட்டில் அடிக்கடி குடியானவர்களுக்கு மதுபான விருந்துகள் நடத்தினார்கள். அதன் காரணமாக எங்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டபடியால் நாங்கள் வேறு இடத்திற்கு எங்கள் ஜாகையை மாற்றிக்கொண்டோம். முற்றம், சமையல் அறை, அடுத்து ஒரு தோட்டம் உள்பட வீட்டில் ஒரு பகுதியை நான்கு ரூபிள் வாடகைக்கு அமர்த்தினோம். நாங்கள் அங்கே குடிசென்று ஒரே குடும்பத்தினரைப் போன்று வசித்தோம். கோடை காலத்தில் எடுபிடி வேலைக்கு ஆள் கிடைப்பது சிரமம். ரஷ்ய முறையில் அமைந்துள்ள அடுப்பை மூட்டுவதற்கு நானும் இன்னொருத்தியும் சேர்ந்து ஒரு போராட்டமே நடத்திவிடுவோம்; முதலில் சூப்பையும் குழம்பையும் நான் அடுப்பில் கொட்டிவிட்டேன். பிறகு, சமையல் வேலைகளைச் செய்வதற்கு நான் பழகிக்கொண்டுவிட்டேன். எங்கள் தோட்டத்தில் பூசனிக்காய், பீட்ரூட், காரட், வெள்ளரிக்காய் முதலிய காய்கறிகள் விளைந்தன. எங்கள் காய்கறித் தோட்டத்தை எண்ணி எண்ணி என் உள்ளம் பூரிப்பதுண்டு. முற்றத்தையும் நாங்கள் தோட்டமாக்கினோம்; காட்டிலிருந்து ஹாப்ஸ் பூண்டுகளைக் கொண்டு வந்து நாங்கள் அங்கே பயிர்செய்தோம்.

அக்டோபர் மாதத்தில் உதவிபுரிய ஒரு சிறுமி அங்கே வந்து சேர்ந்தாள்; அவளுக்கு வயது பதின்மூன்று; பெயர் பாஷா; மெலிந்த உடல்; தோள்பட்டைகள் வெளியே துறுத்திக்கொண்டிருக்கும். விரைவில் வீட்டு வேலைகளைச் செய்ய அவள் கற்றுக்கொண்டுவிட்டாள். நான் அவளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தேன். என் அன்னை அவளுக்கு அடிக்கடி அறிவுறுத்தி வந்த "தேநீரை வீணாக்காதே" என்ற வாசகத்தை, அந்தச் சிறுமி சுவரில் அழகாக எழுதி வைத்திருந்தாள். தினக்குறிப்பும் அவள் எழுதுவதுண்டு. "ஆஸ்கார் அலெக்ஸாண்டரோவிச்சும் பிரோமின்ஸ்கியும் இன்று வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் பாடினார்கள். அவர்களோடு சேர்ந்து நானும் பாடினேன்." இத்தகைய குறிப்புகள் அவளுடைய தினக்குறிப்பில் காணக்கிடந்தன.

பிறகு, சிறு குழந்தை ஒன்று அங்கே காட்சியளித்தது. எங்கள் வீட்டுக்கு எதிரே லெட்டிஷ் நாட்டைச் சேர்ந்த சக்கிலியர் ஒருவர் வசித்தார்; அவருக்குப் பதினான்கு குழந்தைகள். ஆனல், இப்போது ஒரு குழந்தை மட்டுமே உயிருடன் இருக்கிறது. அந்தக் குழந்தையின் பெயர் மின்கா; வயது ஆறு; பளபளப்பான வெளுத்த சிறிய முகம். அவனுடைய தந்தை பெரிய குடிகாரர். மின்காவின் கண்கள் கள்ளங் கபடமற்றவை. கம்பீரமாக அவன் பேசுவான். தினந்தோறும் அவன் எங்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்தான். நாங்கள் எழுந்தமோ இல்லையோ, அந்தச் சமயம் கதவைத் திறக்கும் சத்தம் கேட்கும். பெரிய கம்பளித் தொப்பியையும், கம்பளிச் சட்டையையும் அணிந்துகொண்டு அந்தச் சிறுவன் காட்சியளிப்பான். "நான் இதோ வந்துவிட்டேன்!" என்று மகிழ்ச்சியோடு சொல்லுவான். என் அன்னை அவனைப் பெரிதும் நேசித்தாள் என்பது அவனுக்குத் தெரியும். அவனுடன் விளையாடவோ, அல்லது வேடிக்கையாகப் பேசவோ, லெனின் எப்பொழுதும் தயாராக இருந்தார் என்பதையும் அவன் அறிவான். இந்தச் சமயம் மின்காவின் அன்னை இரைச்சலிட்டுக்கொண்டே ஓடி வருவாள்.

"மின்கா, ஒரு ரூபிள் வைத்திருந்தேனே நீ பார்த்தாயா?"

"ஆம், மேஜைமீது கிடந்ததைப் பார்த்தேன். அதைப் பெட்டிக்குள் எடுத்துப் போட்டிருக்கிறேன்" என்று பதில் சொல்வான் அவன்.

நாங்கள் அங்கிருந்து வந்துவிட்டதும், அந்த வருத்தத்தால் அவன் நோய் வாய்ப்பட்டான். இப்பொழுது அவன் உயிருடன் இல்லை. என்னேஸிப் பகுதியில் ஒரு துண்டு நிலம் வேண்டும் என்று கோரி, அவன் தந்தை எனக்கு ஒரு கடிதம் எழுதினர்; தள்ளாத வயதில் தான் பட்டினி கிடக்க விரும்பவில்லை என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எங்கள் குடும்பம் பெரிதாயிற்று. ஒரு பூனையும் எங்களோடு குடித்தனம் செய்ய வந்துவிட்டது.

ஸ்ட்ரூவ் வாங்கி அனுப்பின வெப் தம்பதிகள் எழுதின புத்தகத்தை, நானும் லெனினும் காலை நேரங்களில் மொழிபெயர்க்கத் தொடங்கினோம். மத்தியான உணவுக்குப் பிறகு, ரஷ்யாவில் முதலாளித்வ வளர்ச்சி என்னும் நூலை ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் திருத்தி எழுதுவதில் செலவிட்டோம். அதன் பிறகு வேறு பல வேலைகளையும் பார்ப்பதுண்டு. பேர்ன்ஸ்டீனுக்கு எதிராக, காட்ஸ்கி எழுதின புத்தகத்தை பாட்ரஸ்ஸாவ் எங்களுக்கு அனுப்பினர் என்று நினைக்கிறேன். இரண்டு வாரங்களுக்குப் பிறகு அதைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று அவர் எழுதி இருந்தார். மற்ற வேலைகளையெல்லாம் அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு, நாங்கள் குறிப்பிட்ட காலத்தில்—அதாவது இரண்டு வாரங்களில்—அதை மொழிபெயர்த்து முடித்தோம். வேலை முடிந்ததும் நாங்கள் உலாவச் சென்றோம். லெனின் வேட்டையாடுவதைப் பெரிதும் விரும்பினர். அவரே சென்று, காலில் அணிந்துகொள்ளத் தோல் உறைகள் வாங்கி வந்தார். அதைப் போட்டுக்கொண்டு சேறு, சகதிகளைப் பொருட்படுத்தாமல் தயக்கமின்றி நடந்துவிடுவார். "சரி, வேட்டையாடப் போவோம்" என்று சமாதானமாகச் சொல்லிக்கொண்டே வேட்டைக்குக் கிளம்பிவிடுவார். நான் அங்கு போன சமயம் வசந்த காலம். சந்தோஷமாகச் சிரித்துக்கொண்டே

"இன்று நான் வாத்துகளைக் கண்டேன். அவை மேலே பறந்து செல்கின்றன" என்று குதித்துக்கொண்டே பிரோமின்ஸ்கி சொல்லுவார். பின்னர், ஆஸ்கார் வருவார். அவரும் வாத்துகளைப் பற்றிப் பிரஸ்தாபிப்பார். இதே விஷயத்தைப் பற்றி, அவர்கள்பாடு மணிக்கணக்கில் பேசிக்கொண் டிருப்பார்கள். இது எனக்கு ஓரே திகைப்பா யிருந்தது. அடுத்த வசந்தத்தில் நானும் வாத்துகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தேன். "அதை யார் கண்டார்கள்? எங்கே கண்டார்கள்? எப்பொழுது கண்டார்கள்?" என்பதை எல்லாம்பற்றிப் பேச ஆரம்பித்தேன். குளிர் காலத்தில் பனிக் கட்டிகள் மறைந்தவுடனே, இயற்கை தமது வசந்த சௌந்தரியத்தை, அப்படியே அள்ளி இறைத்திருந்தது. அதனுடைய சக்தி எங்குமே வியாபகமாக யிருந்தது. சூரியாஸ்தமனம். வசந்த கால வயற் குளங்களில் காட்டு அன்னங்கள் நீந்தி விளையாடின. காட்டுத் தலைவாசலுக்குச் சென்று, பறவைகள் பாடுவதையும், சிற்ருறுகளின் சலசலப்பையும் நாங்கள் கேட்டு மகிழ்வோம். லெனின் காட்டிற்குள் நுழைந்துவிடுவார். ஸெங்கா என்ற நாயைப் பிடித்துக்கொண்டு நான் வெளியே நிற்பேன். பிடித்துக்கொண்டிருக்கும்போதே உணர்ச்சிவயப்பட்டு அது அங்குமிங்கும் தாவிக் குதிக்கும். இயற்கையின் இத்தகைய புதிய பூரிப்பைக் கண்ட எவருக்குமே மனம் உணர்ச்சி வயப்படாமல் இருக்க முடியாது.

லெனின் உற்சாகத்தோடு வேட்டையாடுவார். சில சமயம் அதிலேயே அவர் மூழ்கிவிடுவார். இலையுதிர் காலத்தில் நாங்கள் தூரத்திலுள்ள காட்டையும் தாண்டி அப்பாற் செல்வோம். "ஏதாவது முயல் தென்பட்டால் அதைச் சுட வேண்டாம். எனக்குச் சுடப் பிரிய மில்லை. தூக்கிச் செல்வதற்குப் பை கொண்டுவராதபடியால் அது அசௌகரியமா யிருக்கும்" என்று லெனின் கூறினர். கூறினதுதான் தாமதம். ஒரு முயல் விர்ரென்று குறுக்கே பாய்ந்தது. உடனே, அதை லெனின் சுட்டுத்தள்ளிவிட்டார்.

இலையுதிர் காலத்தின் இறுதியில் என்னேஸி நதியில் சிறு சிறு பனிக்கட்டிகள் மிதந்துசெல்ல ஆரம்பித்தன. அந்தச் சமயத்தில் முயல் வேட்டையின் பொருட்டு நாங்கள் பல தீவுகளுக்குச் சென்றோம். ஏற்கனவே முயல்கள் வெள்ளை நிறமாக மாற ஆரம்பித்துவிட்டன. தீவுகளை விட்டு வெளியேற அவைகளால் முடியவில்லை. ஆடுகளைப் போன்று அவை அங்கு மிங்கும் தாவித் தாவிக் குதித்தன. சில சமயங்களில் எங்கள் வேட்டைக்காரர்கள் படகு நிறைய முயல்களைச் சுட்டுக் குவித்துவிடுவார்கள்.

பிற்காலத்தில் நாங்கள் மாஸ்கோவில் வசித்தபொழுதும், லெனின் வேட்டைக்குச் செல்வதுண்டு. ஆனல், இப்போது அவருக்கு வேட்டையாட வேணுமென்ற உணர்ச்சி வெகுவாகக் குறைந்திருந்தது. ஒரு முறை நரி வேட்டைக்கு நாங்கள் ஏற்பாடு செய்தோம். லெனின் உணர்ச்சி வயப்பட்டு அதில் கலந்து கொண்டார். "மிகச் சிறந்த ஏற்பாடு" என்று அதை அவர் பாராட்டினர். லெனின் இருக்கும் பக்கம் நரி செல்லத்தக்க விதத்தில் நாங்கள் வேடர்களை நிறுத்தி வைத்தோம். அவர் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தார். நரி அவரை ஒரு கணம் பார்த்துவிட்டு மீண்டும் காட்டிற்குள் ஓடிவிட்டது. "நீங்கள் ஏன் நரியைச் சுடவில்லை?" என்று திகைப்படைந்த நாங்கள் அவரைக் கேட்டோம்.

"அந்த நரி பார்ப்பதற்கு ரொம்ப அழகாக இருந்தது. அதனுல்தான் நான் அதைச் சுடவில்லை" என்று பதில் சொன்னுர் லெனின்.

இலையுதிர் காலத்தின் இறுதியில் — அப்பொழுது பனி மழை இன்னும் பெய்ய ஆரம்பிக்க வில்லை — ஆறுகள் உறைய ஆரம்பித்துவிட்டன. நாங்கள் ஆற்றில் வெகு தூரம் பிரயாணம் செய்தோம். ஒவ்வொரு கல்லும், ஒவ்வொரு சிறிய மீனும், மாயாலோகத்தைப் போன்று, பனிக்கட்டிக்குக் கீழே தெரிந்தன. குளிர்காலத்தில் 'தெர்மாமீட்டரி'லுள்ள பாதரசம் உறைந்து போகும். ஆறுகளி லெல்லாம் தண்ணீர் உறைந்து பனிக்கட்டிகளாக ஆகிவிடும். கெட்டியான பனிக்கட்டிகள்மீது மீண்டும் தண்ணீர் ஓடிவந்தால் அதுவும் உறைந்து, சிறிது நேரத்திற்குள் லேசான தகடு போன்று விளங்கும். பனிக்கட்டிகள் கால்பட்டு நொறுங்க, சுமார் இரண்டு மைல் தூரம் யாருமே பனிக்கட்டி மீது சறுக்கி விளையாடலாம். இப்படி விளையாடுவதில் லெனினுக்குப் பிரியம் அதிகம்.

மாலையில் வழக்கம் போல, அவர், ஹெகல், காந்த் ஆகியவர்கள் எழுதியுள்ள தத்துவ நூல்களையும் பிரெஞ்சு இயற்கை ஆராய்ச்சிக்காரர்களின் நூல்களையும் படிப்பார். அல்லது சோர்வுற்றிருந்தால், புஷ்கின், லெர்மான்டாவ், நெக்ரோஸாவ் ஆகியோரின் நூல்களைப் படிப்பார்.

லெனின், பீட்டர்ஸ்பர்க்குக்கு முதன்முதலாக வந்தபொழுது—அன்றுவரை அவரை எனக்கு நேரடியாகத் தெரியாது — பொருள் நிறைந்த புத்தகங்களை மாத்திரம்தான் படிப்பார் என்றும், நாவல்களை அவர் கையால் கூடத் தொடுவதில்லை யென்றும், ஸ்டீபன் இவானேவிச் என்னிடம் சொன்னுர். இதைக்கேட்டு நான் அதிக ஆச்சரியம் அடைந்தேன். ஆனுல், அவரோடு நான் நெருங்கிப் பழகிய பிறகு என்ன காரணத்தாலோ, நாங்கள் இருவரும் இதைப்பற்றிப் பேசவில்லை. சைபீரியாவில் நாங்கள் வசித்தபொழுதுதான் இந்தக் கூற்று கட்டுக்கதை என்பதை நான் தெரிந்துகொண்டேன். துர்கனுவ், லியோ டால்ஸ்டாய், செர்னீஷெவ்ஸ்கி, (இனி நாம் செய்ய வேண்டுவது யாது?) ஆகியோர் நூல்களை லெனின் படித்திருக்கிறுர் என்பது மட்டு மல்ல, இந்த ஆசிரியர்களின் நூல்களை அவர் மீண்டும் மீண்டும் படித்திருக்கிறுர்.

புராதன இலக்கியங்களைப் படிப்பதில் அவருக்கு அலாதியான பிரியம் உண்டு. அவற்றைப்பற்றி, அனேக விஷயங்களை அவர் தெரிந்து வைத்திருந்தார். அவரிடம் இருந்த போட்டோ ஆல்பத்தில் உறவினர்கள், பழைய அரசியல் தியாகிகளின் படங்களும், ஸோலா, ஹெர்ட்ஸேன் ஆகியோரின் படங்களும், செர்னீஷெவ்ஸ்கியின் படங்கள் பலவும் இருந்தன.

வாரத்திற்கு இரு முறை தபால்கள் வரும். கடிதங்கள் மிகுதியாக வர ஆரம்பித்தன. அவர் சகோதரி அன்னு இலிச்சினு எல்லா விஷயங்களைப் பற்றியும் கடிதம் எழுதுவாள். பீட்டர்ஸ்பர்க் தோழர்களும் கடிதங்கள் எழுதுவார்கள். நீனு அலெக்ஸாண்ட்ரோவ்னு ஸ்ட்ரூவ், பல விஷயங்களோடு, தனது புதல்வனைப்பற்றியும் எழுதி இருந்தாள். "இப்பொழுது அவன் தலைநிமிர்ந்து நிற்கிறுன். டார்வின், மார்க்ஸ் ஆகியோரின் படங்களுக்கு முன் நாங்கள் அவனை நாள்தோறும் அழைத்துச் சென்று, டார்வின் மாமாவுக்கும், மார்க்ஸ் மாமாவுக்

கும் வணக்கம் செலுத்து என்போம். அவன் வணக்கம் செலுத்துவது வேடிக்கையாக இருக்கும்" என்று அவள் எழுதி இருந்தாள். அரசியல் கைதிகள் வசித்த துருகான்ஸ்கையில் நாடுகடத்தப்பட்டு வசித்த மார்டோவிடமிருந்தும், வியாட்கா மாகாணத்தில் வாழ்ந்துகொண்டிருந்த ஓர்லோவிடமிருந்தும் பாட்ரஸ்லாவிடமிருந்தும், எங்களுக்குக் கடிதங்கள் வந்தன. சுற்றுவட்டாரத்திலிருந்த கிராமங்களிலிருந்துதான் எங்களுக்குக் கடிதங்கள் அதிகமாக வந்தன.

சுஷன்ஸ்கோயிக்கு ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருந்த மினஸங்கில் வசித்த கிரிஷானேவ்ஸ்கியிடமிருந்தும், ஸ்டார்க்கோவிடமிருந்தும், கடிதங்கள் வந்தன. முப்பது மைல்களுக்கு அப்பால் இருந்த எர்மாகோவ்ஸ்கியில் வசித்த லிபேஷின்ஸ்கி, வானீயீவ், ஸில்வின், ஆஸ்காரின் தோழன் பானின் ஆகியோரும் கடிதங்கள் எழுதினர். எழுபது மைல்களுக்கு அப்பால் இருந்த டெஸ் என்ற ஊரில் லெங்க்னிக், ஷாபோவால், பராம்ஸின், ஆகியோர் வசித்தனர்; குர்னடோவ்ஸ்கி, சர்க்கரை மில் ஒன்றில் வசித்தார். எந்தெந்த விஷயங்களைப் பற்றி எல்லாம் நாங்கள் கடிதங்களில் எழுத முடியுமோ அந்த விஷயங்களைப்பற்றி எல்லாம் நாங்கள் கடிதங்கள் எழுதினோம். ரஷ்யச் செய்திகளைப்பற்றியும் எதிர்காலத் திட்டத்தைப்பற்றியும், புத்தங்களைப்பற்றியும், புதிய போக்கைப்பற்றியும் தத்துவத்தைப்பற்றியும் நாங்கள் கடிதங்கள் எழுதினோம். சதுரங்கத்தைப் பற்றியும்—குறிப்பாக, லிபேஷின்ஸ்கிக்கு—நாங்கள் கடிதம் எழுதினோம். கடிதப் போக்குவரத்தின் மூலமே சதுரங்க விளையாட்டுகள் நடந்தன. சதுரங்கம் விளையாடிக்கொண்டே அது பற்றிய விஷயங்களில் லெனின் அப்படியே மூழ்கி விடுவார். சதுரங்கத்தில் அவர் லயித்திருந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக் காலத்தில் தூக்கத்தில்கூட, "குதிரையை அவர் இங்கே நகர்த்தினால், என் தேரை நான் அங்கே நகர்த்துவேன்" என்று அவர் வாய் புலம்பினார்.

இளமையிலேயே லெனினுக்கும் அலெக்ஸாண்டர் இலிச்சுக்கும், சதுரங்க விளையாட்டில் அதிக விருப்பம் உண்டு. அவர்கள் தந்தையும் சதுரங்கம் விளையாடுவார். "முதலில் தந்தை வெற்றி பெறுவது வழக்கம்" என்று லெனின் என்னிடம் சொன்னார். "பிறகு நானும் என் சகோதரரும் சதுரங்க சம்பந்தமான புத்தகம் ஒன்றைப் படித்துவிட்டுத் தந்தையை வெல்ல ஆரம்பித்தோம். ஒரு நாள் மாடியில் இருந்த எங்கள் அறையிலிருந்து கையில் மெழுகுவர்த்தியுடனும் சதுரங்கப் புத்தகத்துடனும், எங்கள் தந்தை வெளிவருவதை நாங்கள் கண்டோம். பிறகு அவர் அந்தப் புத்தகத்தைப் படித்தார்."

ரஷ்யாவுக்குத் திரும்பினதும் சதுரங்கம் விளையாடுவதை லெனின் நிறுத்தி விட்டார். "நீங்கள் சதுரங்கம் ஆடுவதில் அதிகம் ஈடுபடுகிறீர்கள். அதனால் வேலைகள் தடைப்பட்டுப் போகின்றன" என்று யாரோ ஒருவர் கூறினார். எந்த வேலையையும் லெனின் அரைகுறையாகச் செய்ய மாட்டார்; முழு கவனத்துடனேதான் எதையும் செய்வார். எனவே, ஓய்வுக்காகவோ தேசப்பிரஷ்டராக வசித்த காலத்திலோ விருப்பின்றி ஏதோ சதுரங்கம் விளையாடினார்.

தமது முக்கிய அலுவல்களுக்குக் குறுக்கே நிற்கும் எதையும் ஒதுக்கி தள்ளிவிடுகிற பழக்கம் லெனினுக்குச் சிறு பிராயத்திலிருந்தே கைகூடி இருந்தது. "பள்ளியில் படித்தபொழுது, நான் பனிக்கட்டிமீது சறுக்கி விளையாடச்

செல்வதுண்டு; விளையாடி விளையாடி, மிகவும் களைப்போடுதான் நான் வீட்டுக்குத் திரும்புவது வழக்கம். சென்றதும் அயர்வினால் நான் தூங்கிப்போய் விடுவேன். எனது படிப்புக்கு இது இடையூறாக இருந்தமையால் விளையாடுவதை நான் நிறுத்திவிட்டேன்'' என்று ஒரு நாள் என்னிடம் சொன்னார்.

இன்னொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட்டார். ''ஒரு முறை லத்தின் மொழியை நான் ஈடுபட்டுப் படித்தேன்'' என்று சொன்னார்.

''லத்தினா!'' என்று ஆச்சரியத்தோடு நான் கேட்டேன்.

'ஆம். படிக்க ஆரம்பித்ததும், எனது வேலைக்குத் தடையாக அது குறுக்கே வந்து நின்றது. ஆகையால் பிறகு படிப்பதை நிறுத்தியேவிட்டேன்'' என்றார்.

லெனினுடைய பேச்சின் அமைப்பும் போக்கும் என்பதுபற்றி ஒரு கட்டுரை லெப் பத்திரிகையில் வந்திருந்ததை நான் சமீபத்தில்தான் படித்தேன். ரோமாபுரியைச் சேர்ந்த வன்மையான சொற்பொழிவாளர்களுக்கு ஒப்பிட்டு, லெனினுடைய வாக்கிய அமைப்பை அதில் கூறி யிருந்தது; சொற்பொழிவு செய்யும் முறையிலும் ஒப்புமை இருப்பதாகக் கூறப்பட்டிருந்தது. லத்தின் எழுத்தாளர்கள் எழுதியவற்றை லெனின் ஏன் ஈடுபட்டுப் படித்தார் என்பதன் பொருள் எனக்கு இப்போது விளங்குகிறது.

நாடு கடத்தப்பட்ட தோழர்களோடு கடிதப் போக்குவரத்து நடத்தியதோடு மட்டும் நாங்கள் நிற்கவில்லை. அடிக்கடி சந்திக்க இயலவில்லை யெனினும், சில சமயங்களில் அவர்களைச் சந்தித்தும் நாங்கள் பேசினோம்.

குர்னடோவஸ்கியைப் பார்ப்பதற்காக நாங்கள் ஒரு முறை சென்றோம். இவர் மிகவும் உத்தமமான தோழர்; மார்க்ஸ் இலக்கியங்களைக் கசடறக் கற்றவர். ஆனால், அவருடைய வாழ்க்கை தொடக்கத்திலிருந்தே மிகவும் சிரமமான வாழ்க்கை. தகப்பனாரின் போக்கினால் குழந்தைப் பருவத்தில் அதிகம் சிரமப்பட்டவர். பல முறை நாடு கடத்தப்பட்டவர்; பல முறை சிறைவாசம் செய்தவர். வெளியே ஒரு மாதங்கூடப் பணியாற்றி இருக்க மாட்டார். அதற்குள் அவரைப் பிடித்து நீண்ட காலம் சிறைத் தண்டனை விதித்து, எங்காவது தொலைவில் கொண்டுபோய் வைத்துவிடுவார்கள். உண்மை வாழ்க்கை எத்தகையது என்பதை அவர் அறியார். அவருடைய இயல்பைச் சித்தரித்துக் காட்டும் சிறிய நிகழ்ச்சி ஒன்று என் நினைவில் இருக்கிறது. அவர் வேலை பார்த்து வந்த சர்க்கரை ஆலைக்குப் பக்கமாக நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். இரண்டு சிறுமிகள் ஓரமாக நடந்து வந்துகொண் டிருந்தார்கள். ஒருத்தி பெரியவள்; மற்றொருத்தி மிகவும் சிறியவள். பெரியவள் வெறுங் கூடையைத் தூக்கிக்கொண்டு வந்தாள். சிறியவளோ கூடை நிறைய பீட்ரூட் கிழங்குகளைச் சுமந்துகொண்டு வந்தாள். பெரியவளைப் பார்த்துக் குர்னடோவஸ்கி சொன்னார்: ''உனக்கு வெட்கமாக இல்லையா? அம்மா! சிறிய பெண்ணை அவ்வளவு பாரத்தையும் தூக்கிக்கொண்டு வரச் சொல்கிறாயே, இது வேடிக்கையாக அல்லவோ இருக்கிறது'' என்று அவளைக் கேட்டுவிட்டார்.

இதைக் கேட்டதும் அந்தப் பெண் ஆச்சரியத்தோடு அவரை முறைத்துப் பார்த்தாள். நாங்கள் பின்னர் டெஸ்ஸாவுக்குச் சென்றோம். அங்கு எங்களுக்கு

கிரிஹான்ஸ்நோவஸ்கை தம்பதிகளிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. "டெஸ்ஸில் வசிப்பவர்களிடம் ஜில்லா போலீஸ் தலைமை அதிகாரி மிகவும் கோபத்துடன் இருப்பதாகவும், எதிர்ப்புகள் நடத்துகிறபடியினாலே எங்கு செல்வதற்கும் டெஸ்ஸில் வசிப்பவர்களுக்கு அனுமதி தர மறுக்கிறார் என்றும் டெஸ் நகருக்குப் பக்கத்தில் பூமிசாஸ்திர வளப்பங்கள் நிறைந்த மலைகள் இருக்கின்றன என்றும் அந்த மலையை ஆராய்ச்சி செய்ய ஆசைப்படுவதாகவும் அதற்கு அனுமதி தாருங்கள் என்று கோரியும் போலீஸ் தலைமை அதிகாரிக்கு எழுதுங்கள்" என்று எங்களுக்கு எழுதி யிருந்தார்கள். இந்தக் கடிதம் கிடைத்ததும் போலீஸ் தலைமை அதிகாரிக்கு லெனின் வேடிக்கையாக ஒரு மனு எழுதிப் போட்டுவைத்தார். அதில் டெஸ்ஸுக்குப் போகத் தான் விரும்புவதாகவும் தனக்கும் தன் மனைவிக்கும் பொருளுதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு இருந்தார். மனுக் கிடைத்த உடனே எக்ஸ்பிரஸில் போலீஸ் அதிகாரி எங்களுக்கு அனுமதிச் சீட்டு அனுப்பிவைத்தார். மூன்று ரூபிள் வாடகைக்கு ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டு நாங்கள் டெஸ்ஸுக்குப் போய்ச் சேர்ந்தோம்; குதிரை பலமானது என்றும், சண்டித்தனம் செய்யாது என்றும், தான்யம் சிறிது வைத்தால் போதும் என்றும் வண்டிக்குச் சொந்தக்காரி உறுதி கூறினாள். எனவே, நாங்கள் வண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டோம். குதிரை இடக்குப் பண்ணவிட்டாலும், பாதி வழியில் சோர்வுற்று நின்றுவிட்டது. எப்படியோ சமாளித்துக்கொண்டு டெஸ் போய்ச் சேர்ந்தோம். அங்கு லெங்க்னிக்கோடு காந்த் என்பவரைப்பற்றியும் பராம்ஸின் என்பவரோடு காஸான் அரசியல் வகுப்புகளைப்பற்றியும், லெனின் சம்பாஷித்துக்கொண் டிருந்தார். தனது இனிமையான குரலில் எங்களுக்கு லெங்க்னிக் பல பாடல்கள் பாடினார். பொதுவாக இந்தப் பிரயாணம் எங்களுக்கு உற்சாகத்தை அளித்தது.

எர்மாகோவிஸ்காய் என்ற ஊருக்கு நாங்கள் இரு முறை சென்றோம். "கிரீடோவை*" எதிர்த்துத் தீர்மானம் செய்யும் பொருட்டு ஒரு முறை சென்றோம். வானீயீவ் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டுச் சாகும்தறுவாயில் படுத்த படுக்கையில் இருந்தார். தோழர்கள் எல்லோரும் கூடியிருந்த பெரிய அறைக்கு படுக்கையோடு அவரைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தீர்மானம் அங்கு ஏகமனதாக நிறைவேறியது.

வானீயீவைப் புதைக்கும் சடங்கில் கலந்துகொள்வதற்காக மறு முறை நாங்கள் அங்கு சென்றோம்.

"டிசம்பர்வாதிகளில்" இருவர் ஆரம்பத்திலேயே காரியத்திற்குப் பயன்படாதவர்கள் ஆகிவிட்டனர். சாப்போரோஹெட்ஸ் என்பவருக்குச் சிறையிலேயே பைத்தியம் பிடித்துவிட்டது. சிறைவாசம் காரணமாக நோய்வாய்ப்பட்டு வானீயீவ் இறந்து போனார்; தொழிலாளர் இயக்கம் எங்குமே நன்கு பரவி

---

* கிரீடோ: பொருளாதாரவாதத்தில் மட்டும் நம்பிக்கை கொண்ட சமதர்மவாதிகள்; இவர்கள் சார்பில் ஸ்ரீமதி குஸ்போவா ஒரு அறிக்கை பிரசுரித்தார். இந்த அறிக்கைக்கு லெனினுடைய சகோதரி "கிரீடோ" என்ற பெயரைச் சூட்டினார்.

பிரகாசிக்கு முன்னரே, அந்த இயக்கத்திற்கு என இவர்கள் இருவரும் தங்கள் உயிரை அர்ப்பணம் செய்தவர்கள் ஆவர்.

புது வருஷத்தில் நாங்கள் மினஸங்குக்குச் சென்றோம். நாடுகடத்தப்பட்ட சமதர்ம-ஜனநாயகவாதிகள் அன்று ஒருங்கே குழுமி இருந்தார்கள். நாரோத்நாயா வாலியா கட்சியைச் சேர்ந்தவர்களும் நாடு கடத்தப்பட்டு அங்கு வசித்து வந்தார்கள். இந்தப் பழம் பெருச்சாளிகள் சமதர்ம-ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இளைஞர்களிடம் அவநம்பிக்கையோடு நடந்துகொண்டார்கள். உண்மையான புரட்சிக்காரர்களாக இந்த இளைஞர்களை அவர்கள் கருதவில்லை. சுஷஸன்ஸ்கோய் கிராமத்திற்கு நான் வந்து சேருவதற்குச் சிறிது முன்பு, மினஸங் ஜில்லாவில் ஒரு பொய் வதந்தியை நாடுகடத்தப்பட்டவர்கள் கிளப்பி விட்டார்கள். மினஸங்கில் ரெயிட்ஸின் என்ற சமதர்ம-ஜனநாயகவாதி ஒருவர் நாடு கடத்தப்பட்டு வசித்து வந்தார். இவர் எல்லைப்புறத்தைச் சேர்ந்தவர். தொழிலாளர் விடுதலை வட்டாரத்தினரோடு தொடர்புகொண்டுள்ளவர். அவர் தப்பி ஓடத் தீர்மானித்தார். அதற்குத் தேவையான பணத்தைப் பழம் பெருச்சாளிகள் செலவுக்குக் கொடுத்தார்கள். ஆனால், இன்ன தினத்தில் தப்பியோடுவது என்பது நிச்சயிக்கப்படாமல் இருந்தது. பணத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு ரெயிட்ஸின் மனம் அச்சத்தால் குழம்பியது; எனவே, யாரிடமும் தெரிவிக்காமல் அவர் தப்பி ஓடிவிட்டார். ரெயிட்ஸின் அப்படித் தப்பி ஓடியது தவறு என்றும், இதன் காரணமாக, போலீஸாரின் சோதனை நடந்தாலும் நடக்கக் கூடுமென்றும் கூறி நாரோத்நாயா வாலியா கட்சியைச் சேர்ந்த கிழவர்கள் சமதர்ம-ஜனநாயகவாதிகள்மீது குற்றம் சாட்டினார்கள். தப்பி ஓடியது தெரிந்திருந்தும், சமதர்ம ஜனநாயகவாதிகள் தங்களிடம் தெரிவிக்காமலிருந்தது தவறு என்றும் கூறினார்கள். இந்தப் பொய் வதந்தி வர வரப் பெரிதாகி வளர்ந்து கொண்டே வந்தது. நான் அங்கு போய்ச் சேர்ந்ததும் இதைப்பற்றி லெனின் என்னிடம் பிரஸ்தாபித்தார். "நாடு கடத்தப்பட்டவர்கள் கிளப்பும் பொய் வதந்திக்கு, ஒப்பான கேடு வேறில்லை; பொய் வதந்திகளைக் கூறி கூறி அவர்கள் நம்மை அப்படியே, அசைத்துவிடுகிறார்கள். இந்தக் கிழவர்கள் மிகவும் தொடை நடுங்கிகளாய் இருக்கிறார்கள். நீண்ட காலம் சிறைத் தண்டனைக்கு உட்பட்டவர்களாகையால் எதைக் கண்டாலும் அவர்களுக்கு ஒருவித நடுக்கம் உண்டாகிறது. இந்தப் பொய் வதந்திகளை நம்பி நாம் ஏமாந்துவிடலாகாது. நாம் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. ஆகையால் நமது காலத்தை நாம் வீணை இத்தகைய காரியங்களில் செலவிடுதல் கூடாது" என்று லெனின் என்னை எச்சரித்தார். இந்தக் கிழவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளாமல் விலகி இருந்துவிட வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

தொடர்பை வெட்டிக்கொள்வதற்கு என நடந்த கூட்டம் பற்றி எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. முன்கூட்டியே எவ்விதம் பிரிந்துபோவதென்று தீர்மானம் செய்துவிட்டோம். இரு தரப்பாருக்கும் இடையே வருத்தமின்றி எப்படிப் பிரிந்துபோவது என்ற பிரசினையே இப்பொழுது முன்வந்து நின்றது. பிரிந்துபோவது அவசியமென்று நாங்கள் கருதியபடியாலேதான் இந்தப் பிரிவு ஏற்பட்டது. பொருமையோ, பகைமையோ, எதுவுமின்றி மிக வருத்தத்தோடு

தான் நாங்கள் பிரிந்து சென்ருேம். அதன் பின்னர், நாங்கள் தொடர்பின்றி தனியே வாழ்க்கை நடத்தத் தொடங்கினேம்.

பொதுவாகச் சொன்னுல் நாடுகடத்தப்பட்ட வாழ்க்கை அவ்வளவு மோசமான வாழ்க்கை அன்று. அந்த ஆண்டுகளில் கருத்தூன்றி அனேக விஷயங்களை நாங்கள் சிந்தனை செய்தோம். நாடு கடத்தப்பட்ட ஆண்டுகள் நெருங்க நெருங்க, பிற்கால வேலைதிட்டத்தைப் பற்றியே லெனின் அதிகம் சிந்திக்கலானுர். ரஷ்யாவிலிருந்து எட்டிய செய்திகள் மிகச் சொற்பம். 'பொருளாதாரவாதம்' வளர்ந்து பலம் அடைந்திருந்தது. நடைமுறையில் காரியங்களைக் கவனிப்பதற்கு கட்சி இல்லை. அச்சுக்கூடமும் இல்லை. பண்டு* மூலமாக அச்சிட்டு வெளியிடுவதற்குச் செய்த முயற்சிகள் வீணுயின. ஜீவாதாரமான பிரசினைகளைத் துருவி ஆராயாமல், ஜனங்கள் மனதுக்கு ஏற்பத் துண்டுப் பிரசுரங்களை எழுதி நமது கருத்தைத் தெரிவிப்பது அசாத்தியம் என்று நாங்கள் கருதியபடியால், அதையும் கைவிட்டுவிட்டோம். எங்கள் காரியங்கள் அனைத்தும் மூற்றும் தேங்கிச் சிதறுண்டு கிடந்தன. மீண்டும் மீண்டும் கைது செய்யப்பட்டமையால் தொடர்ந்து வேலை செய்வது சாத்தியமில்லாமல் போயிற்று. கிரீடோவைப் பற்றிப் பேசும் அளவுக்கு மக்கள் தாழ்ந்துவிட்டனர். பொருளாதாரவாதிகளின் பிரசாரத்திற்கு இரையான ஒரு தொழிலாளியின் கடிதத்தை வெளியிடும் அளவுக்கு—அவ்வளவு தாழ்ந்த நிலைக்கு—தொழிலாளர் சிந்தனை என்ற பத்திரிகை இறங்கிவிட்டது. "உங்கள் மார்க்ஸும், எங்கல்ஸும் எங்களுக்குத் தேவையில்லை" என்று கடிதத்தில் அந்தத் தொழிலாளி குறிப்பிட்டு இருந்தார். இத்தகைய தொனியுள்ள கடிதமொன்று தொழிலாளர் சிந்தனை என்ற பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது.

முற்பகுதியில் எதை எதை விட்டுவிட்டு வந்தோம் என்பதை யோசிப்பதும், பிற்பகுதியில் எதை எதை நாம் செய்ய வேண்டும் என்பதை யோசிப்பதும் பிரயாண காலத்தில் இயல்பாக யாருக்கும் ஏற்படுவது உண்டு என்று ஏதோ ஒரு இடத்தில் லியோ டால்ஸ்டாய் எழுதியிருக்கிருர். நாடு கடத்தப்பட்டவர்கள் வாழ்க்கையிலும் இது பொருந்தும். நாடு கடத்தப்பட்ட முற்பகுதியில் கடந்த காலத்தின் விளைவுகளை நாங்கள் பரிசீலனை செய்தோம். பிற்பகுதியில் எதிர்காலத்தைப் பற்றி அதிகமாகச் சிந்தனை செய்தோம். அன்றைய நிலைமையிலிருந்து கட்சியை விடுவிக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், சரியான சமதர்ம ஜனநாயகத் தலைமை கட்சிக்குக் கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் லெனின் இடைவிடாது சிந்தித்துவந்தார். ஸ்தாபன ரீதியாக எப்படித் திட்டம் போடுவது என்பது பற்றி, நாடு கடத்தப்பட்ட வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் லெனின் முடிவு செய்து வைத்திருந்தார். அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி தீப்பொறி பத்திரிகையிலும், இனி என்ன செய்ய வேண்டும்? என்ற துண்டுப் பிரசுரத்திலும், "தோழருக்கு எழுதிய கடிதம்" என்பதிலும் பின்னர் விளக்கி இருக்கிருர்.

---

* பண்டு: ரஷ்யப் போலந்தில் வேலை செய்துகொண்டிருந்த யூத சமதர்ம ஜனநாயகக் கட்சி.

அகில ரஷ்யாவிலும், பரவத்தக்க வகையில் செய்திப் பத்திரிகைகளை நடத்த வேண்டுவது அவசியம் என்றும், பத்திரிகையை அயல் நாடுகளிலே நடத்துவ தென்றும், கூடுமானவரை ரஷ்ய நிகழ்ச்சிகளோடு எவ்வளவு தொடர்பு வைத் துக்கொள்ள முடியுமோ அவ்வளவு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வ தென்றும், பத்திரிகை அனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்வதென்றும் முடிவு செய் தோம். லெனின் இதைப்பற்றிச் சிந்தனை செய்வதிலேயே பல இரவுகள் தூங்கா மலே கழித்தார். அதன் காரணமாகத் துரும்பாய் இளைத்துப் போனார். இரவு நேரங்களில்தான் திட்டம் போட்டு அவர் சிந்தனை செய்வது வழக்கம். சின்னஞ் சிறிய அம்சங்கள்கூட விட்டுப் போகாதபடி சிந்தித்து லெனின் திட்டம் போடு வார். என்னுடனும், கிரிஹான்ஸ்நோவஸ்கையோடும் இதைப்பற்றி விவா தித்தார். மார்டோவ், பாட்ரஸ்ஸாவ் ஆகியோருடன் கடிதப் போக்குவரத்து நடத்தினார். வெளிநாடு செல்வதுபற்றி கடிதம் மூலமே அவர்களோடு கலந்து ஆலோசித்தார். காலம் செல்லச் செல்ல, பொறுமை யிழந்து துடிக்கலானார்; செயலில் இறங்க வேண்டும் என்ற ஆவலும் அதிகரிக்கலாயிற்று. மீண்டும் போலீஸார் சோதனை செய்ய ஆரம்பித்தனர். இது எங்களுக்கு வியப்பை உண் டாக்கிற்று. லெனின் எழுதிய கடிதத்திற்கு ஒருவர் ரசீது வாங்கி வைத்து இருந்தார். அந்தக் கடிதத்தில் பெடோசீவுக்குச் சிலை நாட்டுவது பற்றிய செய்தி அடங்கி யிருந்தது. இதைச் சாக்காக வைத்துக்கொண்டு அதிகார பூர்வமாகப் போலீஸார் சோதனை செய்தனர். கடிதத்தைப் பார்த்ததும் ஆட் சேபகரமான விஷயங்கள் எதுவும் இல்லை என்பதைக் கண்டு அதை அப்படியே விட்டுவிட்டார்கள். பிறகு எங்களுடைய கடிதப் போக்குவரத்துக்களைச் சோதனை போட்டார்கள். அவற்றிலும் அவர்களுக்கு உபயோகமான விஷயங் கள் எதுவும் அகப்படவில்லை. பீட்டர்ஸ்பர்க்கில் நாங்கள் முன்பு அனுஷ்டித்த வழக்கத்தை யொட்டி ரகசியக் கடிதங்களையும், நூல்களையும், சாமான் தட்டு முட்டுகள் போட்டுவைக்கும் அலமாரியின் கீழ்த்தட்டில் தனியாகப் பதுக்கி வைத்திருந்தோம். போலீஸார் நிற்பதற்கு லெனின் பெஞ்சு ஒன்று கொடுத்தார். பெஞ்சின்மீது நின்று சோதனை செய்தால் மேல்தட்டுகளில் இருப்பவைகளைத் தான் சோதனை செய்ய முடியும். மேல் தட்டில் புள்ளிவிவரங்கள் மட்டும் அடங்கிய புத்தகங்கள் பல இருந்தன. அவற்றைப் புரட்டிப் புரட்டிப் பார்த் தும் போலீஸார் சலிப்படைந்துவிட்டார்கள். எனவே, கீழ்த்தட்டில் எனது பாடப் புத்தகங்கள் மட்டுமே இருக்கின்றன என்று நான் கூறியதை நம்பி, திருப்தி யடைந்து அதை அவர்கள் சோதனை செய்யவில்லை. தொந்திரவு எதுவு மின்றிச் சோதனை முடிந்தது. எங்கள் சைபீரிய வாழ்க்கையின் காலத்தை அதி கப்படுத்த அதிகாரிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வார் களோ என நாங்கள் அஞ்சினோம். பிற்காலத்தில் நடந்ததைப்போன்று, அந்தக் காலத்தில் தப்பியோடுகிற நிகழ்ச்சிகள் அதிகம் நடைபெறவில்லை. அதை அனுசரித்து நாங்களும் தப்பி ஓட முயன்றிருந்தால் நிலைமை சிக்கலாகி யிருக்கும். ஏனெனில் வெளிநாடு செல்வதற்கு முன் ரஷ்யாவிலேயே விரிவான முறையில் ஸ்தாபனரீதியான வேலைகளை நாங்கள் செய்யவேண்டி யிருந்தது. எல்லாம் ஒழுங்காக முடிந்தன. எங்கள் தண்டனையை அதிகாரிகள் அதிகப்படுத்தவில்லை.

1900-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் லெனினுடைய தண்டனைக் காலம் முடிவடைந்தது. உடனே நாங்கள் ரஷ்யாவுக்குப் பயணமானோம். இரண்டு ஆண்டுகளுக் கிடையில் மிகவும் அழகுள்ள பெண்ணாக மாறிய பாஷா அன்று இரவு முழுதும் மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்தாள். மின்காவுக்கு இருப்புக் கொள்ள வில்லை. எங்களிடம் மீதமிருந்த பேப்பர், பென்சில் மற்ற சாமான்களை எல்லாம் பாஷா வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போனாள். ஆஸ்கார் அலெக் ஸாண்ட்ரோவிச் வந்து மூலையில் ஒரு குறிச்சியில் உட்கார்ந்துகொண்டார்; கண்கள் கலங்கின. நானும் அவரும் சேர்ந்து மூலதனம் என்ற நூலைப் படித்ததற்கு அறிகுறியாக புத்தக வடிவத்தில் கையால் ஒரு 'புரோச்' செய்து அதில் "கார்ல் மார்க்ஸ்" என்று செதுக்கி அதை எனக்குப் பரிசாக அளித்தார். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களும், வீட்டுக்காரியும் என்ன நடக்கிறது என்பதை உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். இந்தக் கோலாகலத் திற்குக் காரணம் என்ன என்று ஆச்சரியப்பட்டுக்கொண் டிருந்தது எங்களுடைய நாய். தனது மூக்கால் தள்ளிக் கதவுகளைத் திறந்து யாவும் சரியாக இருக் கின்றனவா என்று கவனித்துக்கொண்டே இருந்தது. தட்டுமுட்டு சாமான்களை மூட்டை கட்டுவதில் தாயார் மும்மரமாக ஈடுபட்டிருந்தாள். தூசியின் காரண மாக இடை இடையே இருமிக்கொண்டு மூட்டை முடிச்சுகளை அவள் கட்டினாள். அதற்கு இடையில் தமது புத்தகங்களை யெல்லாம் சேகரித்து லெனின் விரைவாக மூட்டை கட்டி முடித்துவிட்டார்.

மினஸங்குக்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். அங்கு வசித்த ஸ்டார்க்காவை யும், ஓல்கா அலெக்ஸாண்ட்ரோவ்னா ஸில்வினாவையும், அழைத்துச் செல்ல நாங்கள் இசைந்திருந்தோம். நாடு கடத்தப்பட்டுச் சைபீரியாவில் வசித்த எங்கள் சகோதரர்கள் அனைவரும் அங்கு கூடி யிருந்தனர். நாடு கடத்தப்பட்டவர்கள் விடுதலை யடைந்து ரஷ்யாவுக்குத் திரும்பும்பொழுது என்ன மனநிலையில் இருப் பார்களோ, அதே மனநிலைதான் எங்களுக்கும் இருந்தது. 'எங்கே போக வேண்டும்? எப்பொழுது போக வேண்டும்? என்னென்ன செய்ய வேண்டும்?' என்று அவர்கள் சிந்தித்ததைப் போலவே நாங்களும் சிந்தித்தோம். சமீபத்தில் ரஷ்யாவுக்குத் திரும்பவிருக்கும் எல்லோருடனும் எவ்வாறு ஒன்றுபட்டு வேலை செய்வது என்பதைப்பற்றி லெனின் ஏற்கனவே விவாதித்து முடிவு செய்திருந் தார். அங்கேயே தங்க வேண்டியவர்களுடன் எதிர்காலத்தில் எவ்வாறு கடிதப் போக்குவரத்து நடத்துவது என்பதுபற்றியும் விவாதித்தார். ஒவ்வொரு வருடைய மனத்திலும் ரஷ்யாவைப்பற்றிய எண்ணமே குடிகொண்டிருந்தது. ஆனால் வெளியே மட்டும் சாதாரண விஷயங்களையே அதிகம் பேசினோம்.

நாங்கள் வளர்த்த நாயை அங்கே விட்டுவந்தோம். எங்களுடைய நாய் ஜெங்காவுக்கு பராம்ஸின் ரொட்டித் துண்டுகளைக் கொடுத்து ஆசை காட்டினார். நாயோ அதில் விருப்பங்கொள்ளாது தாயாருடைய காலடியில் படுத்துக் கொண்டு எங்கு சென்றாலும் அவளைப் பின்தொடர ஆரம்பித்தது.

எல்க் தோலால் செய்யப்பட்ட கோட்டையும் உறுதியான பூட்ஸ்களையும் அணிந்துகொண்டு நாங்கள் பிரயாணத்தைத் தொடங்கினோம். முன்னூறு வெர்செட்டுகள் குதிரையின்மீது, என்னேஸி நதியோரமாகப் பிரயாணம் செய்

தோம். நிலவொளி நன்கு பிரகாசித்தபடியால் இரவிலும் பிரயாணம் செய்வது சாத்தியமாயிற்று. தங்கின இடங்களி லெல்லாம் லெனின் ஜாக்கிரதையாக எங்களைக் கம்பளியால் போர்த்தினர். நாங்கள் எதையாவது மறந்துவிட்டோமா என்று சுற்றுமுற்றும் பார்த்தார். குளிரினுல் நடுங்கிய ஓல்கா அலெக்ஸாண்ட்ரோவ்னவைக் கேலி செய்துகொண்டே வந்தார். பிரயாணத்தை நாங்கள் மிகமிக அவசரமாகவே செய்தோம். தமக்கு உஷ்ணமாக இருப்பதாகச் சொல்லி எல்க்கு தோல் கோட் இல்லாமலே லெனின் பிரயாணம் செய்தார். அதற்குப் பதிலாகத் தாயாரிடம் இருந்து வாங்கிய 'மப்ளரை'த் தன் கையில் சுற்றிக்கொண்டார். மனம் விரும்பியவாறு அலுவல்களில் ஈடுபடுவது ரஷ்யாவில் சாத்தியமாக இருக்குமாதலால் வழி முழுதும் ரஷ்யாவைப்பற்றியே சிந்தித்துக்கொண்டு வந்தார்.

யூபாவிற்கு நாங்கள் வந்து சேர்ந்ததும் உள்ளூர் அன்பர்கள்—ஏ. டி. ஸ்யூருபா, ஸ்விடர்ஸ்கை, குரோக்மல் முதலியோர்—வந்து எங்களை சந்தித்தனர். "நாங்கள் ஆறு ஓட்டல்களுக்குச் சென்று தங்களைத் தேடினேம். சந்திக்க முடியவில்லை. கடைசியாக எப்படியோ தங்களைச் சந்தித்துவிட்டோம்" என்று மூச்சுத் திணறியபடியே குரோக்மல் கூறினர்.

யூபாவில் லெனின் இரண்டு நாட்கள் தங்கினர். அங்குள்ள அன்பர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் என்னையும் என் அன்னையையும் தோழர்களுடைய பாதுகாப்பில் விட்டுவிட்டுப் பீட்டர்ஸ்பர்குக்கு அருகில் சென்று வசிக்க ஆரம்பித்தார். யூபாவில் தங்கிய இரண்டு நாட்களில் ஒரே ஒரு நிகழ்ச்சி மட்டும் என் நினைவில் இருக்கிறது. பழைய நாரோத்நாயா வாலியா கட்சியைச் சேர்ந்த செட்டுவேர்கோவா என்ற பெண்மணியை நாங்கள் சந்தித்துப் பேசினேம். காஸானில் வசித்த காலத்து லெனினுக்கு அவளை நன்கு தெரியும். அவள் யூபாவில் ஒரு புத்தகக்கடை வைத்திருந்தாள். யூபாவிற்கு வந்த அன்றே அவளைக் கண்டு பேசும் பொருட்டு லெனின் சென்றார். அவளோடு பேசியபோது மிக்க மரியாதையாகவும், அமைதியாகவும் லெனின் பேசினர். இனி என்ன செய்ய வேண்டும்? என்ற புத்தகத்தில் கடைசிப் பகுதியில் இந்தச் சந்திப்பைப் பற்றி லெனின் குறிப்பிட்டிருப்பதை நான் பின்னர் படிக்க நேர்ந்தது. எனவே இந்த நிகழ்ச்சி என் மனதில் நினைவிருக்கிறது.

தொழிலாளர் இயக்கத்தை சேர்ந்த இளம் சமதர்ம-ஜனநாயகத் தலைவர்களைப்பற்றி இனி என்ன செய்ய வேண்டும் என்ற தமது நூலில் குறிப்பிட்டு இருப்பதாவது :

"இவர்களில் அநேகர் நாரோத்நாயா வாலியா கட்சியைச் சேர்ந்தவர்களாகத் தம்மை எண்ணிக் கொண்டு புரட்சிகரமான காரியங்களில் ஈடுபட்டார்கள். இவர்களில் ஏறக்குறைய அனைவருமே இளமையில் பயங்கர இயக்க வீரர்களை ஆர்வத்துடன் வணங்கினர். இந்த வீர பரம்பரை தூண்டும் கவர்ச்சிகரமான எண்ணத்தைத் தடுத்து நிறுத்துவது கடினம். நாரோத்நாயா வாலியா கட்சிக்குச் சேவை செய்யச் சபதம் எடுத்துக் கொண்டிருப்பவர்களுடன் தமக்கு இருக்கும் தனிப்பட்ட தொடர்பையும் இளம் சமதர்ம-ஜனநாயகவாதிகளுக்கு அவர்கள்மீது இருந்த அபாரமான

மரியாதையையும் அகற்றிக்கொண்டு பிரிந்து போவது என்பது எளிதான காரியம் அன்று.''

லெனினுடைய வாழ்க்கையை இந்தச் சிறு பாரா அப்படியே ஒருவாறு பிரதிபலித்துக் காட்டுகிறது.

உண்மையான வேலை தொடங்க இருந்த தருணத்தில் இத்தகைய பிரிவு ஏற்பட்டது மிக மிக வருந்தத்தக்கதாகும். பீட்டர்ஸ்பர்க்குக்கு அருகில் வசிப்பது சாத்தியம் எனத் தெரிந்தவுடன், யூபாவில் வசிக்க வேண்டும் என்ற எண்ணமே லெனினுக்கு உதிக்கவில்லை.

பின்பு ஸ்காப் என்னுமிடத்துக்குப் போய் லெனின் வசித்தார். அவரைத் தொடர்ந்து எல். என். ராடாசென்கோவும் அவருடைய குழந்தைகளும் பாட்ரஸ்ஸாவும் அங்கு சென்று வசிக்கலாயினர். ராடாசென்கோவினுடைய சிறிய புதல்விகள் இருவரும்—ஜென்யூர்க்காவும் லியூடாவும்—தன்னையும் பாட்ரஸ்ஸாவையும் கேலி செய்தார்கள் என்பதை லெனின் சிரித்துக்கொண்டே வருணித்தார். கைகளைப் பின்னே கட்டிக்கொண்டு, கம்பீரமாகவும் ஆழ்ந்த யோசனையோடும் அவர்கள் இருவரும் அங்குமிங்கும் நடப்பார்களாம். ஒரு பெண் ''பெர்ன்ஸ்டீன்'' என்று கூறிக்கொண்டே உலாவுவாளாம். மற்றொருத்தி ''காட்ஸ்கி'' என்று மறுமொழி கூறியவண்ணம் உலாவுவாளாம்.

ஸ்காப்பில் வலைப்பின்னலைப் போன்று ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ளதாகப் பல ஸ்தாபனங்கள் நிறுவுவதில் லெனின் முனைந்து ஈடுபட்டிருந்தார். எதிர்காலத்தில் வெளிநாட்டில் பிரசுரமாக விருக்கும் ரஷ்யப் பத்திரிகைக்கும், உள்ளூர் நடவடிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்த ஸ்தாபனங்களை யெல்லாம் லெனின் மும்முரமாக நிறுவினார். இது சம்பந்தமாக, பாபுஷ்கினையும் மற்றும் பலரையும் அவர் பேட்டி கண்டார்.

கொஞ்சம் கொஞ்சமாக, யூபா என்ற ஊரில் நான் வசிக்கப் பழகிக் கொண்டுவிட்டேன். மொழிபெயர்ப்புக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்தேன்; வகுப்புகளும் நடத்தினேன்.

யூபாவுக்கு நான் வருவதற்குச் சற்று முன்பு நாடு கடத்தப்பட்டவர்களைப் பற்றிய புரளி ஒன்று எங்குமே பரவியிருந்தது. ஒரு முகாமில் குரோக்மல் ஸ்யூருபா, ஸ்விடர்ஸ்கை ஆகியோரும் மற்றொரு முகாமில் பிளாக்ஸீன், சகோதரர்கள், சால்டீகாவ், குவீயாட்கோவஸ்கை ஆகியோரும் வசித்தனர். இந்த இரண்டு முகாமினருக்கும் இடையே நடுவு நிலைமை பூண்டு சாச்சீனுவும் அப்டெக்மானும் வசித்து வந்தார்கள். இந்த இரு முகாமினரோடும் அவர்களுக்குத் தொடர்பு இருந்து வந்தது. முதற் சொன்ன முகாமினருக்கு அண்மையில் நான் வசித்தபடியால் அவர்களுக்கும் எனக்கும் தொடர்பு ஏற்படலாயிற்று. ஏதோ வகையில் முதல் குறிப்பிட்ட முகாமினர் பணிபுரிவதில் சுறு சுறுப்பாகவும் சகோதர வாஞ்சையோடும் ஈடுபட்டு வந்தனர். ரயில்வே தொழிற்சாலையில் வேலை பார்த்துவந்த பன்னிரண்டு சமதர்ம—ஜனநாயகவாதிகளோடு நாங்கள் விரைவில் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டோம். யாக்குடாவ் என்னும் தொழிலாளி அங்கு அற்புதமாக வேலை செய்து வந்தார். கண்டு பேச

வும் துண்டுப் பிரசுரங்களை வாங்கிக்கொண்டு போகவும் சில சமயங்களில் அவர் என்னிடம் வருவது உண்டு. நீண்ட காலம்வரை மார்க்ஸ் கொள்கைகளைத் திரித்துக் கூறுவதிலேயே அவர் ஈடுபட்டிருந்தார். இதைச் செய்த பிறகு மார்க்ஸீயத்தை அவரால் சரியான முறையில் படிக்க முடியவில்லை. "படிக்கப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை" என்று அவர் என்னிடம் வருத்தத்தோடு கூறினர். "தங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேடும் பொருட்டு விவசாயிகள் இடைவிடாது என்னிடம் வருகிறார்கள். எல்லாரிடமும் நான் பேசித் தீர வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் என்னைத் தவருக எண்ணிக்கொள்வார்கள். அதன் காரணமாகவே எனக்கு அவகாசம் கிடைக்காமல் போகிறது" என்று அவர் என்னிடம் கூறினர். தன் மனைவி நாடஷா இயக்க அனுதாபி என்றும் நாடு கடத்தப்பட்டபோதிலும் அதற்காகத் தாங்கள் பயந்துவிடப் போவதில்லை என்றும் தெரிவித்தார். தாம் பட்டினி கிடக்க நேரா தென்றும், அன்பர்கள் அதிகமாய் இருக்கிறபடியால் எந்த இடத்திலும் தமக்கு உணவு கிடைத்துவிடும் என்றும் அவர் கூறினர். ரகசிய வேலை செய்வதில் அவர் கைதேர்ந்த நிபுணர். அழகிய பேச்சு, தற்பெருமை, தளர்ந்த மனப்பான்மை இவற்றை முக்கியமாக அவர் அடியோடு வெறுத்தார். பலமான அஸ்திவாரத்தில்—ஆனால் ஓசையின்றியும் உறுதியாகவும்—எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டும் என்று அவர் கூறுவதுண்டு.

1905-ல் நடந்த புரட்சியின்போது யூபாவில் நிறுவப்பட்ட குடியரசுக்கு யாக்குடாவ் தலைவர் ஆனர். பின்னர் பிற்போக்கு உணர்ச்சி தலைவிரித்துத் தாண்டவமாடிய காலத்தில், யூபா சிறையில் அவரைத் தூக்கிலிட்டுவிட்டார்கள். சிறையின் முற்றத்தில் அவர் இறந்து போனர். சிறை முற்றுமே - ஒவ்வொரு கொட்டடியிலும் அடைபட்டிருந்த சிறைவாசிகள் அனைவருமே - அவருடைய சாவுக்காக வருந்தியதாம்; அவரை வாழ்த்தியதாம். அவருடைய சாவைத் தாங்கள் ஒருபோதும் மறக்க முடியா தென்றும் மன்னிக்கவே மாட்டோ மென்றும் கூறிச் சிறைவாசிகள் சபதம் எடுத்துக்கொண்டார்களாம்.

தொழிலாளர்களோடு கலந்து பழகி நான் அனேக விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். சிறிய தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்த்த இளம் "பிட்டர்" ஒருவர் என்னிடம் வருவது வழக்கம். ஆத்திரத்துடனும், பதட்டத்துடனும் உள்ளூர் தொழிலாளர்களின் நிலைமையை அவர் என்னிடம் விவரமாகக் கூறுவார். பின்னர் சமதர்ம—புரட்சிக் கட்சியில் அவர் சேர்ந்தார் என்றும் சிறையில் புத்தி சுவாதீனத்தை இழந்தார் என்றும் கேள்விப்பட்டேன்.

காச நோய்பிடித்த "புக் பைண்டர்" ஒருவர் இருந்தார். அவர் பெயர் கிரிலாவ். சாமர்த்தியமான இரட்டைப் "பைண்டிங்" முறையை அவர் கண்டு பிடித்தார். அதற்குள் சட்ட விரோதமான கையெழுத்துப் பிரதிகளை அப்படியே திணித்துவிடலாம்; அல்லது கையெழுத்துப் பிரதிகளை ஒன்றுசேர்த்து ஒட்டி அதை அப்படியே அட்டையாக வைத்துக்கொண்டுவிடலாம். உள்ளூர் அச்சுத் தொழிலாளரின் நிலைமையைப்பற்றி எல்லாம் அவர் என்னிடம் கூறினர்.

தீப்பொறி பத்திரிகைக்குச் செய்தி அனுப்புவதற்கு இந்த விவரங்கள் அடிப்படையாகப் பின்னர் உதவின.

யூபாவில் மட்டுமின்றி, அதன் சுற்று வட்டாரங்களிலும் நாங்கள் வேலை செய்தோம். உஸ்து காட்டாவஸ்கை என்ற தொழிற்சாலைக்கு சமதர்ம—ஜன நாயக மனப்பான்மைகொண்ட பெண்மணி ஒருத்தி டாக்டராக இருந்தாள். அங்கே வேலை செய்த தொழிலாளர்களிடையே தீவிரமாக அவள் பிரசாரம் செய்தாள். நல்ல துண்டுப் பிரசுரங்கள் கிடைப்பது துர்லபமாய் இருந்தது என்றாலும், கிடைத்த சட்ட விரோதமான துண்டுப் பிரசுரங்களை யெல்லாம் அவள் தொழிலாளர்களிடையே பரப்பினாள்.

பற்பல தொழிற்சாலைகளோடு தொடர்பு கொண்டுள்ள சமதர்ம—ஜன நாயக மனப்பான்மை படைத்த மாணவர்கள் ஏராளமாக இருந்தார்கள். மார்டோவினுடன் கூடவே துருக்கன்ஸ்க் என்னுமிடத்தில் நாடு கடத்தப்பட்டு வசித்தவரான மாசானுவ் என்னும் தொழிலாளி சட்டத்தை மீறி, திருட்டுத் தனமாக யீக்கேட்ரின்பர்க் என்னுமிடத்தில் வசித்து வந்தார். எங்களுடைய யூபா ஸ்தாபனத்திற்கும் அவருக்கும் இடையில் தொடர்பு இருந்து வந்தது. அந்தத் தொடர்பினால் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

மாகாணத்தின் நடு இடமாக யூபா விளங்கியது. ஸ்டெரிலிட்டாமாக், பிரிஸ்க் போன்ற ஊர்களிலும், மற்ற சுற்றுப்புற ஊர்களிலும் நாடுகடத்தப் பட்டு வசித்தவர்கள் அனுமதிச்சீட்டு வாங்கிக்கொண்டு யூபாவுக்கு அடிக்கடி வந்து போனார்கள்.

இதைத் தவிர்த்து, சைபீரியாவிலிருந்து ரஷ்யாவுக்குச் செல்லுகிற வழியில் யூபா நகரம் இருக்கிறது. சைபீரியாவிலிருந்து தண்டனை முடிந்து திரும்பிய தோழர்களுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்வதற்காக யூபாவில் தங்கினார்கள். மார்டோவும், ஜி. ஐ. ஒக்குலோவாவும் பானினும் வந்திருந்தனர். அஸ்ட்ராக் கானிலிருந்து எல். எம், நிப்போவிச் சாம்ராவிலிருந்து போர்ட்டுக்காலோவாவும் ரும்யான்டிசேவ்வும் திருட்டுத்தனமாக வந்திருந்தனர்.

மார்டோவ் பால்டாவாவுக்குச் சென்றார். அவரோடு நாங்கள் தொடர்பு வைத்துக்கொண்டோம். அவர் மூலம் பிரசுரங்கள் கிடைக்குமென நம்பினோம். நான் யூபாவை விட்டு வெளியேறிய ஒரு வாரத்திற்குப் பின்னரே பிரசுரங்கள் வந்தனவாம். அவற்றை எடுத்து வர கியாட்டாவஸ்கை சென்றார். வரும் வழியில் புத்தகங்களை அடுக்கி வைத்திருந்த பெட்டி உடைந்து போனபடியால், பிடித்து ஐந்து வருட காலம் அவரைச் சைபீரியாவுக்குத் தள்ளிவிட்டார்கள்! உண்மையில் எத்தகைய இயக்க வேலைகளிலும் அவர் ஈடுபட்டிருக்கவில்லை. வந்த பெட்டி சாராய வியாபாரி ஒருவருக்கு விலாச மிட்டிருந்தது; அவருடைய மகளுக்கு இவர் ஆசிரியராய் இருந்தமையால் இதை வாங்கிக்கொண்டு போக அவர் இணங்கினார்.

நாரோத்னாயா வாலியா கட்சியைச் சேர்ந்தவர்களும் யூபாவில் இருந் தார்கள். லியனேவிச்சும் பின்னர் போரோஸ்டிச்சும் அந்தக் கட்சிக்கு அங்கு உறுப்பினராக விளங்கினார்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லு முன், இரண்டாவது தண்டனையிலிருந்து லெனின் ஒருவாறு தப்பினார். மார்ட்டோவுடன் ஸ்காப்பிலிருந்து அவர் பீட்டர்ஸ்பர்குக்கு வந்திருந்தார். போலீஸார் பின்தொடர்ந்து அவர்கள் இருவரையும் கைது

செய்துவிட்டார்கள். அவருடைய உள் கோட் பாக்கெட்டில் "அத்தை"யிட மிருந்து கிடைத்த இரண்டாயிரம் ரூபிள்களும், ரசாயன மையினால் எழுதப் பட்ட வெளிநாட்டுத் "தொடர்புகளின்" விலாசங்களும் இருந்தன. மற்ற சில்லரை விஷயங்களைப்பற்றிய புள்ளி விவரங்களும், சாதாரண மையால் எழுதப்பட்ட காகித மொன்றும் அதில் இருந்தது. போலீஸார் காகிதத்தை அனலில் காட்டி யிருப்பார்களேயானால், திட்டம் போட்டபடி லெனினால் அயல்நாட்டில் ரஷ்யப் பத்திரிகை யொன்றை நடத்தி யிருக்க முடியாது. ஏதோ அதிர்ஷ்டம் இருந்து, அவர் தப்ப முடிந்தது. பத்துத் தினங்களில் அவர் விடுதலை அடைந்தார்.

பின்னர், என்னிடம் விடை பெற்றுக்கொள்ளும் பொருட்டு யூபாவுக்கு வந்தார். இந்த இடைக் காலத்தில் தாம் செய்து முடித்த காரியங்களைப் பற்றியும் தாம் சந்தித்த மனிதர்களைப்பற்றியும் அனேக விஷயங்களை அவர் என்னிடம் சொன்னார். லெனின் வந்திருந்த சமயத்தில் யூபாவில் கூட்டங்கள் பல நடைபெற்றன. அந்தச் சமயத்தில் நிரீஸ்ரவாதி என்று தம்மை எண்ணிக் கொண்டிருந்த லியனேவிச் என்பவர் மிகவும் உள்ளக் கிளர்ச்சியோடு பேசினார். தொழிலாளர் விடுதலை வட்டாரம் என ஒரு கூட்டம் இருப்பது தமக்குத் தெரியாதென்றும், அத்தகைய பெயரையே தாம் கேள்விப்பட்டதில்லை யென்றும் அவர் லெனினிடம் கூறினார். இதைக் கேட்டு லெனின் பெரிதும் கோப மடைந்தார். "ஒரு புரட்சிக்காரனுக்கு இது தெரியாம லிருப்பது தகுதியில்லை என்றும் தாம் சேர்ந்து பணிபுரிய விரும்பும் கட்சியைப்பற்றி மனப்பூர்வமாகத் தமக்குத் தெரியாது என்று கூறுவது தவறு என்றும் தொழிலாளர் விடுதலை வட்டாரத்தினர் எழுதி யிருக்கின்றதைப் படியாதது போலக் கூறுவது தவறு என்றும்" லெனின் கண்டித்தார்.

அதன் பிறகு, யூபாவில் லெனின் ஒரு வாரம் தங்கி யிருந்தார்.

வெளிநாட்டிலிருந்து அவர் அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதி வந்தார். அதே நகரத்தில் வசித்த அன்பர்களுக்கு அனுப்புகிற புத்தகங்கள் மூலம் அவர் எனக்குக் கடிதங்கள் எழுதுவார். அவர் நினைத்திருந்தபடி அவ்வளவு துரிதமாகப் பத்திரிகை வேலைகள் நடைபெறவில்லை. பிளக்கானவுடன் உடன்பாட்டுக்கு வருவது மிகவும் சிரமமாய் இருந்தது. எனவே, அவர் எழுதிய கடிதங்கள் சுருக்கமாக இருந்தன; துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் இருந்தன: "நீ எப்பொழுது இங்கு வரலா மென்பதை உனக்கு எழுதுகிறே னென்றும் பிளக்கானவோடு உடன்பாட்டுக்கு வர முடியாமல் போனதுபற்றிய விவரங் களை உனக்கு எழுதி அனுப்பி இருக்கிறே னென்றும்" அவர் தம் கடிதங்களை முடித்திருந்தார்.

எனது தண்டனைக் காலம் முடியும்வரை என்னால் பொறுத்திருக்க முடிய வில்லை. மேலும் நீண்ட காலமாக லெனினிடமிருந்து கடிதங்கள் எதுவும் வரவில்லை. ஆகையால் அஸ்ட்ராக்கானுக்குச் சென்று "சின்ன மாமாவைக்" கண்டு பேச விரும்பித் தாமதியாது புறப்பட்டுச் சென்றேன்.

லெனினுடைய தாயார் மேரியா அலெக்ஸாண்ட்ரோவ்னாவை நானும் என் அன்னையும் மாஸ்கோ சென்று கண்டு பேசினோம். அவர் மட்டும் அங்கே

தனியாக இருந்தார். மேரியா இலிச்சினு சிறையில் இருந்தாள். அன்னு இலிச்சினு வெளிநாட்டி லிருந்தாள்.

மேரியா அலெக்ஸாண்ட்ரோவ்னுவை நான் பெரிதும் நேசித்தேன். எல்லாக் காரியங்களையும் கவனத்தோடும் அக்கரையோடும், அவர் செய்வார். வெளிநாட்டில் நாங்கள் வசித்தபோது எங்களுக்கு அவர் கடிதங்கள் எழுதுவ துண்டு. எப்பொழுதும் எங்கள் இருவருக்கும் சேர்த்தே அவர் கடிதங்கள் எழுதுவாரே யல்லாமல், லெனினுக்கு மட்டும் தனியாக அவர் ஒருபோதும் கடிதங்கள் எழுதியதில்லை. இது ஒரு சாதாரண விஷயந்தான். இருந்தாலும் சாதாரண விஷயத்திலும் அவர் எவ்வளவு கவனம் செலுத்துகிருர் என்பதைக் காட்டவே இதை இங்கு எழுதினேன். தம் அன்னையிடத்தில், லெனினுக்கு அளவு கடந்த அன்பு உண்டு. "என் தாயார் அளவுகடந்த மனே உறுதி படைந்தவர்; தந்தையார் உயிருடன் இருந்த காலத்தில் என் தமையனுக்கு அது நேர்ந்திருக்குமேயானுல், என்ன என்ன காரியங்களை யெல்லாம் என் தாயார் செய்யத் துணிந்திருப்பார் என்பதை இப்பொழுது கூறுவது கடினம்" என்று லெனின் ஒரு முறை என்னிடம் கூறினர்.

மனேதிடம், அன்பு, பரிவு ஆகிய அரிய குணங்களைத் தம் தாயாரிட மிருந்துதான் லெனின் பெற்று இருக்கிருர் என்று கூறலாம்.

நாங்கள் வெளிநாட்டில் வசித்துவந்த காலத்தில் எங்கள் வாழ்க்கையை எவ்வளவு உண்மையாகச் சித்தரிக்க முடியுமோ, அவ்வளவு தூரம் சித்தரித்து லெனினுடைய அன்னைக்கு நான் கடிதங்கள் எழுதினேன். இந்தக் கடிதங்களின் மூலம் தம் புதல்வருக்கு அருகிலிருக்கிறே மென்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட வேண்டும் என்று கருதியே நான் இவ்வாறு எழுதினேன். நாடுகடத்தப்பட்டு 1897-ல் லெனின் சைபீரியாவில் வாழ்ந்துகொண் டிருந்தபொழுது மேரியா அலெக்ஸாண்ட்ரோவ்னு உலியானேவா இறந்துவிட்டா ளென்ற செய்தி மாஸ்கோ பத்திரிகை ஒன்றில் செய்திக் குறிப்பாக வந்திருந்ததாம்; ஆஸ்கார் அவரைக் காணச் சென்றபொழுது "என்னுடைய தாயார் இறந்துவிட்டாள்" என்று ஆஸ்காரிடம் லெனின் பரிதவித்தாராம்; அப்படியே லெனின் வெளுத்துப் போயிருந்ததைத் தாம் கண்டதாக ஆஸ்கார் கூறினர். ஆனுல் இறந்தது லெனினுடைய தாயாரன்று. அதே பெயருடைய வேருெருவர் இறந்த செய்தி என்பது பின்னர் தெரியவந்தது.

மேரியா அலெக்ஸாண்ட்ரோவ்னு அனுபவித்த துன்பம் கொஞ்சநஞ்ச மல்ல. அவருடைய மூத்த மகன் தூக்கில் மடிந்தார்; மகள் ஒல்கா இறந்து போனுள்; மற்றக் குழந்தைகள் அடிக்கடி கைது செய்யப்பட்டனர். 1895-ல் நோய்வாய்ப்பட்டு லெனின் படுத்த படுக்கையாய் இருந்தபொழுது உடனிருந்து சிகிச்சை செய்ய அவர் விரைந்து சென்ருர்; உணவைத் தாமே தயார் செய்து கொடுத்தார்; மீண்டும் கைது செய்யப்பட்டபொழுது தமது கடமைகளைத் தவருது செய்தார். வெளிச்சம் இல்லாத இடத்தில் மகனைக் காண்பதற்காக மணிக்கணக்காகக் காத்திருந்தார். பேட்டி காணச் செல்லும் நாட்களில் வேண்டிய சாமான்களை எடுத்துச் சென்று மகனுக்குக் கொடுத்தார். வருத்தம் குமுறிக் கொண்டு வந்தபோதிலும் அதை அவர் வெளிக்காட்டிக்கொள்ளாமல் இருந்தார்.

லெனினைக் கவனித்துக்கொள்வதாக அவருக்கு நான் வாக்களித்தேன். ஆனால் அதை என்னால் நிறைவேற்ற முடியவில்லை.

மாஸ்கோவிலிருந்து என் அன்னையை அழைத்துக்கொண்டு நான் பீட்டர்ஸ் பர்குக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு அவளுக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு, பின்னர் எல்லை கடந்து நான் அயல்நாட்டுக்குப் பயணமானேன். முதன் முதலாக வெளிநாட்டுக்குச் செல்லும் ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைப் போன்று நடித்துக்கொண்டு நான் வழிநெடுகப் பிரயாணம் செய்தேன். மட்ராசெக் என்ற புனைபெயருடன் லெனின் பிரேக் நகரத்தில் வசிப்பதாக எண்ணி, அவரைத் தேடிக்கொண்டு அந்த ஊருக்கு நான் சென்றேன்.

புறப்பட்டு வருவதாகத் தந்தி யடித்துவிட்டுப் பிரேக் நகரத்தை அடைந்தேன். ஆனால் என்னைச் சந்திக்க யாரும் வரவில்லை. நீண்ட நேரம் அங்கு காத்திருந்தேன். ஒருவருமே வரவில்லை. மிகவும் மனம் நொந்து போய் ஒரு வண்டிக்காரனைக் கூப்பிட்டு வண்டியில் சாமான் தட்டுமுட்டுகளை எல்லாம் அள்ளிப் போட்டுக்கொண்டு புறப்பட்டேன். தொழிலாளர் வசிக்கும் பகுதிக்குப் போய்ச் சேர்ந்து, ஒரு குறுகல் வழியாகச் சென்று ஒரு பெரிய கட்டிடத்தை அடைந்தேன். உலர்த்தும் பொருட்டு ஏராளமான பாய்கள் அந்த வீட்டு ஜன்னல்களில் தொங்கவிடப்பட்டிருந்தன.

நான் நான்காவது மாடிக்குச் சென்றேன். சிறிது நரைத்த மயிருடைய செகோஸ்லோவக்கியப் பெண்ணொருத்தி வந்து கதவைத் திறந்தாள். "மட்ராசெக் இருக்கிறாரா? ஹெர் மட்ராசெக் இருக்கிறாரா?" என்று நான் அவளைப் பன்முறை கேட்டேன்.

"நான்தான் மட்ராசெக்" என்று சொல்லிக்கொண்டு ஒரு தொழிலாளி வெளியே வந்தார்.

திக்பிரமை கொண்டவளாய் நான் தயங்கி, "அவர் என்னுடைய கணவராச்சே" என்று கூறினேன்.

கடைசியாக நிகழ்ந்தவற்றை மட்ராசெக் என்னிடம் கூறினார். "ஓஹோ! நீங்கள் ஹெர் ரிட்டிமேருடைய மனைவியாக இருக்கக் கூடு மென்று எண்ணுகிறேன். அவர் மூனிக்கில் வசிக்கிறார். யூபாவிற்கு என் மூலம் புத்தகங்களையும் கடிதங்களையும் அனுப்பிவைக்கிறார்" என்று அவர் தெரிவித்தார்.

அன்று முழுதும் என் கூடவே மட்ராசெக் சுற்றினார். ரஷ்ய இயக்கத்தைப் பற்றி நான் அவருக்குச் சொன்னேன். ஆஸ்ட்ரியாவின் இயக்கத்தைப்பற்றி அவர் எனக்குச் சொன்னார். அவருடைய மனைவி, தான் பின்னிய "லேஸ்களை" எனக்குக் காட்டினார். செக்கோஸ்லோவோக்கிய உணவாகிய "குளோலோ" தயாரித்து எனக்கு உணவளித்தார்கள்.

மூனிக்குக்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். மூனிக்வாசிகள் கம்பளிக் கோட்டுகள் அணியாமல் சாதாரண உடைகளைத்தான் அணிந்திருந்தார்கள். ஆனால் நானே ஒரு கம்பளிக் கோட்டை அணிந்துகொண்டு நடந்து சென்றேன். மூட்டை முடிச்சுகளை ஸ்டேஷனிலேயே போட்டுவிட்டுச் செல்வதுதான் நல்லது என்பதை நான் அனுபவத்தில் அறிந்திருந்தபடியால்

எனது மூட்டை முடிச்சுகளை ரயில்வே ரூமில் போட்டுவிட்டு, ட்ராம் ஏறி ரிட்டிமேரைத் தேடிச் சென்றேன். வீட்டைக் கண்டுபிடித்தேன். முதல் எண் உள்ள அறையில் பீர் ஷாப் இருந்தது. ஏதோ மீண்டும் தவறு நேரப்போகிறது என்ற எண்ணத்துடன் மானேஜரிடம் சென்று "ஹெர் ரிட்டிமேர் இருக்கிறாரா?" என்று நான் தயக்கத்துடன் கேட்டேன்.

அந்தக் கடைக்காரர் கொழுத்துத் தடித்த ஜெர்மன்காரர். அவர் "நான் தான் ரிட்டிமேர்" என்று கூறினர்.

முற்றுமே மனங்குழம்பியவளாய் "தாங்க ளன்று; அவர் என் கணவ ராச்சே" என்று நான் தயங்கினேன்.

இரண்டு முட்டாள்கள் ஒருவரை ஒருவர் வெறிக்கப் பார்த்துக்கொள்வது போல் நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றோம். அந்தச் சமயத்தில் ரிட்டிமேரினுடைய மனைவி அங்கே வந்து சேர்ந்தாள். என்னை ஒரு முறை கூர்ந்து கவனித்ததும் விஷயம் என்னவென்பதை அவள் அறிந்துகொண்டாள். "தாங்கள் ஹெர் மேருடைய மனைவியாக இருக்கக் கூடு மென்று எண்ணுகிறேன். சைபீரியாவிலிருந்து தம் மனைவி வருவதை அவர் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறார். அவரிடம் தங்களை அழைத்துச் செல்கிறேன்; வாருங்கள்" என்று கூறி, அவள் என்னை அழைத்துச் சென்றாள்.

ப்ரா ரிட்டிமேரை நான் பின்தொடர்ந்தேன். புழக்கடையின் வழியாக அவள் என்னை வெளியே அழைத்துச் சென்றாள். ஒரு பெரிய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு யாருமே வசிப்பதுபோலத் தோன்றாத ஒரு அறைக்கு ப்ரா ரிட்டிமேர் என்னை அழைத்துச் சென்றாள். கதவு திறந்ததும் மேஜைக்கு அருகில் லெனினும், அவருடைய சகோதரி அன்னா இலிச்சினவும், மார்டோவும் இருப்பதை நான் கண்டேன். என்னை அழைத்து வந்த வீட்டுச் சொந்தக்காரிக்கு வணக்கம் செய்வதைக்கூட மறந்தவளாய், "எங்கே உங்களைக் கண்டு பிடிக்கக் கூடு மென்பதை நீங்கள் எழுதி இருக்கக் கூடாதா? எழுதினல் என்ன மோசம் வந்துவிடும்" என்று இரைச்சல் போட்டுக் கேட்டேன்.

"எழுதவில்லையா!" என்று ஆச்சரியத்தோடு கேட்டார். லெனின் "நீ எங்கிருந்து இப்படி வந்து சேர்ந்தாய்?" என்று என்னை வினவினர்.

மூனிக்கில் தான் இருக்கிற இடத்தையும் விலாசத்தையும் ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டு அதை என்னிடம் தரும்படி ஒரு நண்பருக்கு லெனின் அனுப்பி வைத்திருந்தாராம். படிப்பதற்காக அந்தப் புத்தகத்தை நண்பர் வைத்துக் கொண்டாரென்பது பின்னர் தெரிய வந்தது.

என்னைப் போலவே எங்களில் பலர் இவ்வாறு அவதிப்பட நேர்ந்தது. ஜினீவாவுக்குச் செல்வதற்குப் பதிலாக, சிலிப்பிங்காவ் ஜினேவா சென்று திரும்பினர். லண்டனுக்குச் செல்ல வேண்டியதற்குப் பதிலாக பாபுஷ்கின் அமெரிக்க செல்லத் தயாரானர்.

மூனிக்

(1901—1902)

லெனின், மார்டோவ், பாட்ரஸ்ஸாவ் ஆகியோர் சட்டரீதியான பாஸ் போர்ட்டுகளுடன் வெளிநாட்டுக்குச் சென்றனர், எனினும், மாறு பெயரில் மூனிக்கில் வாழ முடிவு செய்தனர்; ரஷ்யக் காலனியைவிட்டு விலகி வாழவும் முடிவு செய்தனர். ஏனெனில் ரஷ்யாவிலிருந்து வரும் தோழர்களை ஆபத்திற்கு உட்படுத்த நாங்கள் விரும்பவில்லை. ரஷ்யாவுக்குப் பெட்டிகளில் சட்டவிரோதமான பிரசுரங்களும் கடிதங்களும் அனுப்புவது இதனால் எளிதாக இருந்தது.

நான் மூனிக்குக்குச் சென்றபொழுது, தம்மைப் பதிவுசெய்துகொள்ளாமல், மேர் என்ற பெயரில் ரிட்டிமேர் என்பவர் வீட்டில் லெனின் வசித்து வந்தார். ரிட்டிமேர் பீர்க்கடை வைத்திருந்தார். என்றாலும், அவர் சமதர்ம - ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். தமது வீட்டில் லெனின் தங்க இடம் அளித்தார். லெனின் வசித்த அறை சிறிது; மேஜை குறிச்சிகள் எதுவும் அதிகம் இல்லை. பிரம்மச்சாரியைப் போன்று அவர் வாழ்க்கை நடத்திக்கொண் டிருந்தார்; ஒரு ஜெர்மானியப் பெண்ணின் வீட்டில் உணவு அருந்தினார். காலையிலும் மாலையிலும் அவர் ஒரு தகரக் கோப்பையில் தேநீர் அருந்தினார். அந்தத் தேநீர்க் கோப்பையை அவரே சுத்தமாகக் கழுவி, ஓர் ஆணியில் மாட்டிவைத்திருந்தார்.

அவர் முகத்தில் கவலைக் குறிகள் தென்பட்டன. ஏனெனில், அவர் நினைத்தபடி காரியங்கள் நடக்கவில்லை. அந்தக் காலத்தில் மார்டோவும், பாட்ரஸ்ஸாவும், வீரா ஸாஸுலிச்சும் மூனிக்கில் வசித்தனர். ஸ்விட்ஜர்லாந்திலிருந்து பத்திரிகையை வெளியிட வேண்டுமென்றும் தங்கள் மேற்பார்வையின் கீழ் அது நடைபெற வேண்டும் என்றும் பிளக்கானவும் ஆக்ஸெல்ராடும் விரும்பினார். அவர்களும், ஆரம்பத்தில் ஸாஸுலிச்சும்கூட, தீப்பொறி வெளியிடுவதில் சிரத்தை கொள்ளவில்லை. அதனால் ஏற்படவிருக்கும் பலாபலன்களை அவர்கள் முற்றும் குறைவாகவே மதிப்பிட்டனர். எனவே, வைகறை என்ற தங்கள் பத்திரிகையில் அவர்கள் கவனம் செலுத்தினர்.

"நீங்கள் தீப்பொறி நடத்த விரும்புவது அசட்டுத்தனமானது" என்று ஆரம்பத்தில் விளையாட்டாகக் கூறினாள் வீரா இவாவ்னோவ்னா. இது வேடிக்கையாகச் சொல்லப்பட்டது என்பது உண்மைதான்; ஆனால், இந்த முயற்சியை அவர்கள் குறைவாகவே மதிப்பிட்டுவிட்டார்கள் என்பதை இது காட்டுகிறது. வெளிநாடுகளில் வசிக்கும் ரஷ்யர்களோடு தீப்பொறி தொடர்பற்றதாக

இருக்க வேண்டும் என்று லெனின் கருதினர். ஏனெனில் ரகசியமாக நடத்தினல் தான், ரஷ்யாவுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவும் கடிதப் போக்குவரத்துகள் நடத்தவும் ரஷ்யாவிலிருந்து தோழர்கள் பலர் வந்து போகவும் எளிதாக இருக்கும் என்றும் அவர் கருதினர். ஆனல், 'கிழவர்களோ' இதை வேறுவிதமாகக் கருதிவிட்டார்கள். ஸ்விட்ஜர்லாந்துக்குப் பத்திரிகையை மாற்ற விருப்பம் இல்லாமையை இது குறிக்கிறதென்றும் தங்கள் தலைமையை ஏற்றுக்கொள்ள மறுத்து எங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்ய விரும்புவதை இது குறிக்கிறதென்றும் 'கிழவர்கள்' இதற்கு வியாக்கியானம் செய்தனர். அதனல் உதவி புரிவதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. இப்படி அவர்கள் எண்ணுகிறர்கள் என்பதற்காக லெனின் சிறிது கவலைப்பட்டார். தொழிலாளர் விடுதலை வட்டாரத்தினரிடம் லெனினுக்கு என்றும் ஒரு தனி மதிப்பு இருந்தது. பிளக்கானவ், ஆக்ஸெல்ராடு, வீரா ஸாஸுலிச் ஆகியோரை அவர் பெரிதும் நேசித்தார். "வீரா இவாவ்னேவ்னவைச் சந்திக்கும்வரையில் பொறுத்திரு" என்று நான் மூனிக்குக்குச் சென்ற அன்று மாலை லெனின் என்னிடம் கூறினர். "பளிங்கு போன்று அப்பழுக்கு இல்லாதவர் அவர்" என்று வீரா ஸாஸுலிச்சைப் பற்றி அவர் கூறியது முற்றும் உண்மை.

தொழிலாளர் விடுதலை வட்டாரத்தைச் சேர்ந்தவர்களில் வீரா இவாவ்னேவ்ன மாத்திரம்தான் தீப்பொறியை நடத்துவதில் பங்கெடுத்துக் கொண்டாள். மூனிக்கிலும், லண்டனிலும் அவர்களுடன் சேர்ந்து வசித்தாள். தீப்பொறி ஆசிரியர் குழாத்தில் வேலை செய்தாள்; அதற்கு உகந்த முறையில் வாழ்ந்தாள்; அதன் இன்ப துன்பங்களை அனுபவித்தாள்; ரஷ்யாவிலிருந்து வரும் செய்திகளை அறிந்துகொள்வதிலேயே அவள் தமது காலத்தையும் பொழுதையும் கழித்தாள்.

"இப்பொழுது தீப்பொறி முக்கியத்வம் பெற்று வருகிறது" என்று, பத்திரிகையின் செல்வாக்கு வளர்ந்து பரவ ஆரம்பித்ததும் அவள் சொன்னள். வெளி நாடுகளில் நீண்ட காலம் வசிக்க நேர்ந்தது, அதனல் தாம் அனுபவித்த துன்பங்களை எல்லாம்பற்றி, அவள் அடிக்கடி எங்களிடம் கூறுவாள். தொழிலாளர் விடுதலை வட்டாரத்தார் வெளிநாடுகளில் அனுபவித்த துன்பம் தொல்லைகளை எங்கள் அயல் நாட்டு வாழ்க்கையில் நாங்கள் ஒருபோதும் அனுபவிக்கவில்லை. ரஷ்யாவுடன் எங்களுக்கு எப்பொழுதுமே நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது; அங்கிருந்து தோழர்கள் பலர் தொடர்ச்சியாக எங்களிடம் வந்துகொண்டிருந்தனர். என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது சம்பந்தப்பட்டவரையில், உள்நாட்டில் வசித்தபொழுது எவ்வளவு தகவல் கிடைத்ததோ அதைவிட அதிகமான செய்திகள் எங்களுக்கு ரஷ்யாவைப்பற்றி அயல்நாடுகளில் கிடைத்தது. ரஷ்யாவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளில் நாங்கள் விசேஷக் கவனம் செலுத்தினேம். அங்கே வேலைகள் யாவும் செம்மையாக நடந்தன. தொழிலாளர் இயக்கம் வளர்ந்துகொண்டு வந்தது. ரஷ்ய வாழ்க்கையோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளாமல் தொழிலாளர் விடுதலை வட்டாரத்தினர் விலகி வாழ்ந்தனர். ரஷ்யாவில் பிற்போக்கு தலைவிரித்தாடின காலத்தில் அவர்கள் வெளிநாட்டில் வசித்தனர். ரஷ்யாவிலிருந்து

ஒரு மாணவர் அயல் நாட்டுக்குச் சென்றால், மிகப் பெரிய விஷயமாகக் கருதிய காலம் அது. அதனால் வெளிநாடு செல்ல ஜனங்கள் உண்மையாகவே பயந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கிளாஸனும், கோரப்கோவும் தங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களைச் சந்திப்பதற்காக வெளிநாடு சென்றனர். ரஷ்யாவுக்குத் திரும்பினதும் போலீஸாரிடமிருந்து அவர்களுக்குச் சமன் வந்தது. பிளக்கானுவைச் சந்தித்ததற்குரிய காரணங்களை விளக்குமாறு போலீஸார் அவர்களைக் கேட்டனர். நிழல் பின்தொடர்வதைப் போன்று, அப்பொழுது போலீஸார் அனைவரையும் பின்தொடர்ந்தனர். தொழிலாளர் விடுதலை வட்டாரத்தைச் சேர்ந்தவர்களில் வீரா இவாவ்னேவ்னு தனிமையால் வாடினுள். பிளக்கானுவும் ஆக்ஸெல்ராடும் குடும்ப சகிதமாக வசித்தனர். தான் தனிமையால் வாடுவதைப்பற்றி வீரா இவாவ்னேவ்னு என்னிடம் பன்முறை சொல்லி வருந்தினுள். "எனக்கு நெருங்கிய உறவினர்கள் யாரும் இல்லை" என்றாள். உடனே, தனது உணர்ச்சியின் வேகத்தை மறைப்பதற்காக, "நீ என்னை நேசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். நான் இறந்ததும், நமது குடும்பம் ஒருவரை இழந்துவிட்டது என்று கூறுவாய் என்பதை நான் அறிவேன்" என்றாள்.

ஆம், அவள் குடும்ப வாழ்க்கையைப் பெரிதும் விரும்பினுள்; அவள் வேறு குடும்பத்தில் வளர்ந்தது இதற்குக் காரணமாக இருக்கலாம். டிம்காவின் வெளிறின சிறிய பையனை அவள் எவ்வளவு நேசித்தாள் என்பதை அவளை அறிந்தவர்களுக்கே புரிய முடியும். வீரா இவாவ்னேவ்னு வீட்டு வேலைகளைத் திறமையாகச் செய்வாள். "கூட்டுக் குடும்பமாக" லண்டனில் வீர இவாவ்னேவ்னு, மார்டோவ், அலெக்ஸியெவ் ஆகியோர் ஒன்றாக வசித்தனர். அவள் சமைக்கும் முறை வந்ததும், கவனத்துடன் சாமான்கள் வாங்குவாள். குடும்பப் பெண் என்ற முறையில் வீரா இவாவ்னேவ்னுவிடம் சிறந்து விளங்கிய குணங்கள் எவை என்பதைச் சிலரால் மட்டுமே அறிய முடியும். அவள் 'நிரீஸ்வர பாணி'யில் அஜாக்கிரதையாக உடை அணிந்துகொள்வாள்; இடைவிடாது புகை பிடிப்பாள்; அறையில் சாமான்கள் தாறுமாறுகக் கிடக்கும்; தான் வசிக்கும் அறையைச் சுத்தம் செய்ய அவள் யாரையும் அனுமதிப்பதில்லை. அசாதாரண முறையில் உணவு அருந்துவாள். ஒரு நாள் அவள் மாமிசம் தயார் செய்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. கத்திரிக்கோலால் குத்தித் தின்ன வேண்டும் என்பதற்காக மாமிசத்தை அவள் துண்டு துண்டாக வெட்டி, தயார் செய்தாள்.

"நான் இங்கிலாந்தில் வாழ்ந்த காலத்தில், ஆங்கிலப் பெண்கள் என்னைப் பேச்சுக்கு இழுக்க முயன்றனர்" என்றாள் அவள். "நீங்கள் எவ்வளவு நேரம் மாமிசத்தை வேக வைப்பீர்கள்?" என்று அவர்கள் என்னைக் கேட்டனர்.

"அது நிலைமையைப் பொறுத்தது" என்றேன் நான். "பசித்தால் பத்து நிமிஷங்கள் நான் மாமிசத்தை வேக வைப்பேன்; பசிக்கவில்லை என்றால் மூன்று மணி நேரம் வேகவைப்பேன்" என்றேன் நான்.

அத்துடன் அவர்கள் பேச்சை நிறுத்திவிட்டனர்.

வீரா இவாவ்னேவ்னு அறைக் கதவைத் தாளிட்டுவிட்டு, பால் இல்லாத காப்பியை மட்டும் குடித்துக்கொண்டு, எழுத உட்கார்ந்துவிடுவாள்.

வீரா இவாவ்னேவ்ன ரஷ்யாவைக் காணப் பெரிதும் ஆசைப்பட்டாள். 1899-ம் வருடம் அவள் ரகசியமாக ரஷ்யாவுக்குச் சென்று திரும்பி வந்தாள். வேலை செய்யும் பொருட்டு அவள் ரஷ்யாவுக்குச் செல்லவில்லை; ஆனல், ரஷ்யாவைப் பார்த்துவிட்டுவரும் பொருட்டே அவள் சென்ருள். 'நான் ரஷ்யக் குடியானவனைக் கண்டு, அவன் எப்படி இருக்கிருன் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று அவள் கூறினுள். தீப்பொறி வெளிவர ஆரம்பித்ததும், இது உண்மையான தேச சேவை என்றும், ரஷ்யருக்கு ஏற்ற சேவை என்றும் அவள் கருதினுள். எனவே, இந்த வேலையில் ஆர்வத்துடன் ஈடுபட்டாள். தீப்பொறியில் வேலை செய்யாமல் இருப்பது ரஷ்யாவுடன் மீண்டும் தொடர்பே இல்லாது இருப்பதை ஒக்கும் என்றும், தேசப் பிரஷ்டம் என்னும் படுகுழியில் விழுந்து ஜீவனற்ற வாழ்க்கை வாழ நேருவதை ஒக்கும் என்றும் அவள் கருதினுள்.

இதனுல்தான் இரண்டாவது காங்கிரஸில் தீப்பொறியின் ஆசிரியர் குழாம் சம்பந்தமான பிரசினை விவாதத்திற்கு வந்தபொழுது அவள் கிளர்ந்து எழுந்தாள். அவளைப் பொறுத்தவரை, அந்தப் பிரசினை சுய அன்பைப் பற்றியதாக இருக்கவில்லை; வாழ்வா அல்லது சாவா என்னும் நிலையில் அந்தப் பிரசினை அவளுக்கு இருந்தது.

1905-ம் வருடம் அவள் ரஷ்யாவுக்குச் சென்ருள்; பிறகு அவள் அங்கேயே தங்கிவிட்டாள்.

வீரா இவாவ்னேவ்ன முதன் முதலாகத் தன் வாழ்க்கையில் இரண்டாவது காங்கிரஸில்தான் பிளக்கானுவை எதிர்க்கத் தொடங்கினுள். அவளும் பிளக்கானுவும் நீண்ட காலமாகச் சேர்ந்தே போராட்டங்களை நடத்தியவர்களாதலால், பிளக்கானுவிடம் அவளுக்கு அன்பு அதிகம். நேரான பாதையில் புரட்சி இயக்கத்தை ஒழுங்காக நடத்திச் செல்வதில் அவர் எடுத்துக்கொண்ட பெரும் பிரயாசையை அவள் நன்கு அறிவாள். ரஷ்ய சமதர்ம-ஜனநாயகத்தின் தந்தையாக அவரை அவள் மதித்தாள். அவருடைய அறிவையும் திறமையையும் பெரிதும் போற்றினுள். பிளக்கானுவுடன் அபிப்பிராய பேதம் சிறிய அளவில் ஏற்பட்டுவிட்டால்கூட அதற்காக அவள் பெரிதும் வேதனைப்படுவது வழக்கம்; இருந்தும் தீப்பொறி விஷயத்தில் பிளக்கானுவையும் எதிர்க்க அவள் துணிந்தாள்.

பிளக்கானுவின் போக்கு துக்ககரமானது. தத்துவத் துறையில் தொழிலாளர் இயக்கத்திற்கு அவர் செய்திருக்கும் சேவை மகத்தானது. ஆனல், நீண்டகால அன்னிய நாட்டு வாழ்க்கை அவரையும் பாதித்தது. உண்மையான ரஷ்ய வாழ்க்கையிலிருந்து இது அவரைத் தனியே ஒதுக்கிவிட்டது. அவர் வெளி நாட்டுக்குச் சென்ற பிறகுதான் ரஷ்யாவில் தொழிலாளர் இயக்கம் பொதுஜன இயக்கமாக மாறிற்று. அவர் பல கட்சிகளின் பிரதிநிதிகளையும், எழுத்தாளர்களையும், மாணவர்களையும் சந்தித்தாரே தவிர, ரஷ்யத் தொழிலாளர் இயக்கம் முழுமைக்குமே உரிய கண்ணேட்டத்தோடு சேவை செய்யவுமில்லை; அவர்களைக் கண்டு பேசவுமில்லை. இயக்கத்தின் புதிய வடிவங்களைப் படம் பிடித்துக் காட்டும் கடிதங்கள் ரஷ்யாவிலிருந்து வந்தால், புதிய வடிவங்களின் தன்மையை அந்தக் கடிதங்கள் தெளிவாக அறிவுறுத்தினுல் லெனினும்,

மார்டோவும், வீரா இவாவ்னேவ்னுவும் அந்தக் கடிதங்களை மீண்டும் மீண்டும் படிப்பார்கள். லெனின் நீண்ட நேரம் முன்னும் பின்னும் நடப்பார்; வெகு நேரம்வரை தூங்கவே மாட்டார். நாங்கள் ஜினீவாவுக்குச் சென்றதும், இத்தகைய கடிதங்களை நான் பிளக்கானுவுக்குக் காட்ட முயன்றேன். அந்தக் கடிதங்களை அவர் படித்ததும் உண்டான பலாபலனைக் கண்டு நான் வியந்தேன். தான் ஏதோ அந்தரத்திலிருப்பவர் போன்றும், அவநம்பிக்கை உடையவர் போன்றும் அவர் காணப்பட்டார். பிற்பாடு அந்தக் கடிதங்களைப்பற்றி அவர் எதுவுமே பேசவில்லை.

இரண்டாவது காங்கிரஸுக்குப் பிறகு ரஷ்யாவிலிருந்து வந்த கடிதங்களைப் பிளக்கானுவ் மேலும் மேலும் நம்ப மறுத்தார்.

முதலில் இது என் மனதைப் புண்படுத்திற்று; பிறகு, இதற்குக் காரணம் என்ன என்பதை நான் அறிய முயன்றேன். அவர் ரஷ்யாவைவிட்டு வந்து நீண்ட காலமாயிற்று. அதனுல் அங்கிருந்து வந்த கடிதங்களில் பொதிந்துள்ள விஷயங்களின் தராதரத்தையோ அல்லது அதில் பொங்கித் ததும்பும் உணர்ச்சிப் பிரவாகத்தையோ அனுபவரீதியாக அவரால் அறிய முடியவில்லை.

தீப்பொறி காரியாலயத்திற்குத் தொழிலாளர்கள் அடிக்கடி வந்தார்கள். அவர்கள் எல்லோரும் பிளக்கானுவைக் காண விரும்பினர். எங்களையோ, மார்டோவையோ காணுவதைவிடப் பிளக்கானுவைக் காணுவது கடினம். அப்படி அவரைக் கண்டு பேசினுலும் பேச வந்தவருடைய மனநிலையில் ஒரு தெளிவு ஏற்படாது. குழப்பமே மிஞ்சி நிற்கும். பிளக்கானுவின் மேதையும் ஞானமும் நகைச்சுவையும் தொழிலாளியைப் பிரமிக்கச் செய்யும். ஆனுல், அவரிடம் விடை பெற்றதும், தமக்கும் மிகச் சிறந்த இந்தத் தத்துவ ஞானிக்கும் இடையே எவ்விதத் தொடர்பும் இல்லாததுபோல ஒரு எண்ணம் தோன்றும்; இதனுல் அவரிடம் பேச விரும்பிய விஷயங்களைப்பற்றியோ, அல்லது அவரிடம் பெற வேண்டிய யோசனைகளைப்பற்றியோ தொழிலாளி ஒரு வார்த்தைகூடப் பேசாது திரும்பிவிடுவதும் உண்டு.

பிளக்கானுவின் கருத்துக்களைத் தொழிலாளி அங்கீகரியாது, தமது கருத்தை அவரிடம் வெளியிட முயன்ருல், சீறிவிழுந்து அவர், "உன் தாயும் தந்தையும் குழந்தைகளாக இருந்த காலத்திலிருந்தே நான்..." என்று ஆத்திரத்தோடு கூற ஆரம்பித்துவிடுவார்.

வெளிநாட்டில் நாங்கள் வசிக்கத் தொடங்கிய சமயத்தில் நிலைமை இவ்வாறு இருக்கவில்லை என்று நான் துணிந்து சொல்ல முடியும். ஆனுல், இந்த நூற்ருண்டின் ஆரம்பத்திலேயே ரஷ்யாவைப்பற்றி நேரடியாகத் தெரிந்துகொள்ளும் சக்தியை பிளக்கானுவ் இழந்துவிட்டார். 1905-ம் வருடம் அவர் ரஷ்யாவுக்குச் செல்லவில்லை.

பிளக்கானுவையோ அல்லது வீரா ஸாஸுலிச்சையோவிட ஆக்ஸெல்ராடு சிறந்த நிர்மாணகர்; புதிதாக வந்தவர்களைக் கண்டு பேசி, விஷயங்களைச் சேகரிப்பது அவருடைய வேலை. புதிதாக வருபவர்களுக்குத் தமது வீட்டிலேயே ஆக்ஸெல்ராடு உணவு அளித்ததால் பெரும்பாலான நேரத்தை அவர்கள் அங்கேயே கழித்தனர். சகல விஷயங்களையும் ஆக்ஸெல்ராடு அவர்களிடம் விசாரித்துத் தெரிந்துகொண்டார்.

ரஷ்யாவுடன் அவர் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டார். ரகசியமாகப் போக்குவரத்து நடத்தும் முறை அவருக்கு நன்கு தெரியும். ஸ்விட்ஜர்லாந்தில் பல வருடங்கள் வசித்திருந்தவர்களுக்குத்தான், புரட்சி நிர்மாணகராக ரஷ்யாவில் வேலை செய்வது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை எளிதில் உணர முடியும்! உழைத்து உழைத்து அவருடைய சக்தியில் முக்கால் பாகம் குறைந்து விட்டது. பல இரவுகள் அவர் தூங்கவே மாட்டார்; தொடர்ச்சியாக மாதக் கணக்காக அவர் எழுதுவார். எனினும் எழுத ஆரம்பித்த கட்டுரையை அவரால் பூர்த்தி செய்ய முடிவதில்லை. நரம்புத் தளர்ச்சி காரணமாக, கை நடுக்கத்துடனேதான் அவரால் எழுத முடியும். ஆதலால் அவர் எழுதியவற்றை யாருமே எளிதில் புரிந்துகொள்ள முடியாது.

ஆக்ஸெல்ராடின் கையெழுத்தில் லெனினுக்கு அளவுகடந்த வெறுப்பு; "ஆக்ஸெல்ராடைப்போன்று, நீங்களும் எழுதத் தொடங்கிவிட்டால், அது மிகவும் மோசமான நிலை" என்று அவர் அடிக்கடி கூறுவார். அவர் நோய்வாய்ப் பட்ட காலத்தில் அவருக்குச் சிகிச்சை செய்த டாக்டர் கிராமரிடம் பன்முறை ஆக்ஸெல்ராடின் கையெழுத்தைப்பற்றி லெனின் பிரஸ்தாபித்தார். லெனின் 1895-ல் முதன் முறையாக வெளி நாடு சென்றிருந்த காலத்து, ஸ்தாபன அமைப்பு விஷயங்களைப்பற்றியே அவர் ஆக்ஸெல்ராடிடம் அதிகமாக விவாதித்தார். நான் முதன் முறை மூனிக்குக்குச் சென்றபொழுது அவர் ஆக்ஸெல்ராடைப்பற்றியே அதிகம் பேசினார். லெனின் 1923-ல் எழுதுவதற்கும் பேசுவதற்கும் இயலாதிருந்த காலத்தில்கூட ஆக்ஸெல்ராடின் பெயர் பத்திரிகைகளில் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி அவர் என்ன செய்துகொண் டிருக்கிறார் என்று கேட்டார்.

ஸ்விட்ஜர்லாந்திலிருந்து தீப்பொறி வெளிவராமல் போனதைக் குறித்து ஆக்ஸெல்ராடு பெரிதும் வருந்தினார். ரஷ்யாவுடன் நடந்த கடிதப்போக்குவரத்துகள் தம் மூலம் நடைபெறாததை எண்ணியும் அவர் வருந்தினார். அதனால்தான் இரண்டாவது காங்கிரஸ் நடைபெற்ற காலத்தில், மூவர் அடங்கிய ஆசிரியர் குழாம்பற்றிய விஷயம் ஆலோசனைக்கு வந்தபோது, மிகவும் ஆத்திரத்துடன் அவர் பேசினார். ரஷ்யாவின் இதயத் துடிப்பை அறிவதற்கு மற்ற காலங்களைக் காட்டிலும் இரண்டாவது காங்கிரஸ் நடைபெற்ற காலத்தில்தான் நல்ல வாய்ப்பு இருந்தது. தீப்பொறியும் கேந்திர ஸ்தானமாக விளங்கக் கூடிய நிலை இருந்தது. இந்தச் சமயத்தில், ஆசிரியர் குழாத்தில் தாம் இல்லாமல் இருப்பதை அவர் பொறுப்பாரா என்ன!

நான் மூனிக்கை அடைந்தபொழுது தொழிலாளர் விடுதலை வட்டாரத்தைச் சேர்ந்தவர்களில் ஸாஸூலிச் மாத்திரமே அங்கே இருந்தாள்; அவளிடம் பல்கேரிய பாஸ்போர்ட் இருந்தது. வெலிகா டிமிட்ரீயெவ்னு என்ற பெயரோடு அவள் அங்கே வசித்து வந்தாள்.

மற்றவர்களும் பல்கேரிய பாஸ்போர்ட் வைத்துக்கொண்டுதான் வசிக்க வேண்டியதாயிற்று. நான் வரும்வரையில் லெனின் பாஸ்போர்டின்றியே வசித்தார். நான் வந்ததும் எங்களுக்கும் பல்கேரிய பாஸ்போர்ட் ஒன்று வாங்கிக்கொண்டோம். ஜோர்தனேவ் என்னும் டாக்டர் பெயராலும் அவர் மனைவி மாரிட்ஸா பெயராலும் எங்களுக்கு அந்தப் பாஸ்போர்ட் கிடைத்தது. விளம்

பரம் செய்து அதன் மூலம் ஒரு தொழிலாளியின் வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டோம். நான் வருமுன் இன்னு ஹெர்மோனி கோவ்னு ஸ்மிடோவிச் லிமான் தீப்பொறியின் காரியதரிசியாக இருந்தாள். அவளிடம் பல்கேரிய பாஸ்போர்ட் ஒன்று இருந்தது. அவளுடைய புனை பெயர் "டிம்கா." நான் சென்றதும் தீப்பொறியின் செயலாளர் பொறுப்பை நான் ஏற்று நடத்த வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்திருப்பதாகவும் லெனின் என்னிடம் கூறினர். லெனினின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இனி ரஷ்யாவுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொள்ளப்படும் என்பது இதன் பொருள். மார்டோவும் பாட்ரஸ்ஸாவும் இதை அப்பொழுது எதிர்க்கவில்லை. தொழிலாளர் விடுதலை வட்டாரத்தார் தங்கள் அபேட்சகர்களை நிறுத்தவும் இல்லை. அன்று தீப்பொறி பத்திரிகையை அவர்கள் அவ்வளவாகப் பொருட்படுத்த இல்லை. இவ்விதம் ஏற்பாடு செய்வது தமக்கு மிகவும் சங்கடமாக இருந்தது என்றும் கொள்கை நிறைவேற இது அவசியம் என்று தாம் கருதியபடியால்தான் இந்த ஏற்பாட்டைத் தான் செய்ததாகவும் லெனின் என்னிடம் கூறினர். உடனே இந்த வேலையில் நான் ஈடுபடத் தொடங்கினேன். ரஷ்யாவிலிருந்து வரும் கடிதங்கள் அனைத்தும் ஜெர்மனியில் உள்ள பல்வேறு நகரங்களுக்குப் பல தோழர்களின் விலாசங்களுக்கு வந்தன. தங்கள் பெயருக்கு வந்த கடிதங்களை யெல்லாம் அந்தத் தோழர்கள் டாக்டர் லிமான் அவர்களுக்கு அனுப்பிவிடுவார்கள். அந்தக் கடிதங்கள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து டாக்டர் லிமான் எங்களுக்கு அனுப்பி வைப்பார். இதுதான் நாங்கள் செய்த வேலை முறை.

விரைவில் பெரிய தகராறு ஏற்பட்டது. துண்டுப் பிரசுரங்களை அச்சிடுவதற்காக கிஷ்னெவ்வில் ஓர் அச்சாபீஸை ஸ்தாபிக்கும் முயற்சியில் நாங்கள் வெற்றி பெற்றோம். அதன் அதிபர் அக்கீம் லீபர் லியோன் கோல்ட்—லிமானின் சகோதரர்—லிமானின் விலாசத்திற்கு ஒரு 'குஷன்' அனுப்பினர். ரஷ்யாவில் பிரசுரமான பிரசுரங்களைச் சேர்த்துத் தைத்து, அதை 'குஷனில்' அடக்கம் செய்திருந்தார். கலக்கம் அடைந்த டாக்டர் லிமான் அந்தக் 'குஷனை' தபாலாபீஸிலிருந்து வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார். நம்மைச் சேர்ந்தவர்கள் விஷயத்தை அவரிடம் விளக்கிச் சொன்னவுடன் தபாலாபீஸுக்குச் சென்று 'குஷனை' வாங்கிக்கொண்டு வந்தார். இனி, தமது பெயருக்கு எது வந்தாலும் சரி, ஒரு ரயில் வண்டி நிறையச் சாமான்கள் வந்தபோதிலும் சரி, அவற்றையெல்லாம் தாம் வாங்கித் தரத் தயார் என்று அவர் தெரிவித்தார்.

தீப்பொறியை ரஷ்யாவுக்கு அனுப்ப அதுவரை எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. ஞாயிற்றுக்கிழமை யன்று பிரயாணம் செய்பவர்களிடம் இரண்டு அடுக்கு உள்ள உடுப்புப் பெட்டிகளில் தீப்பொறியை வைத்து அனுப்பினேம். முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பெற்ற இடங்களுக்கு இந்தப் பெட்டிகளை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில்—பாகோவ், கீவ் ஆகிய இடங்களில்—பத்திரிகைகளைப் பெட்டியிலிருந்து எடுத்து அவற்றை ஸ்தாபனத்திற்குத் தோழர்கள் வழங்கினர்கள். லெட்ஸ், ரோலா, ஷுபிக் ஆகிய இடங்களுக்கு வண்டிகள் மூலமாக அனுப்பவும் ஏற்பாடு செய்தார்கள்.

இவைகளைச் செய்ய நீண்ட காலம் பிடித்தது. பேச்சு வார்த்தைகள் நடத்து வதிலும் கால தாமதமாயிற்று. ஆயினும், இதனால் பலன் எதுவும் ஏற்படவில்லை.'

ஓர் ஆசாமியோடு ஒரு வாரம் பேச்சு வார்த்தை நடத்தினோம். போட்டோ பிடிக்கும் கருவிகளுடன் எல்லை தாண்டிவரும் கள்ள வியாபாரிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள அவர் விரும்பினார். அதற்காகத் தனக்கு ஒரு காமிரா—போட்டோ பிடிக்கும் கருவி—வாங்கித் தர வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்.

பெர்லின், பாரீஸ், ஸ்விட்ஜர்லாந்து, பெல்ஜியம் ஆகிய இடங்களில் இருந்த தீப்பொறியின் ஏஜண்டுகளுடன் நாங்கள் கடிதப் போக்கு வரத்து நடத்தினோம். தங்களால் கூடுமான வழிகளில் எல்லாம் அவர்கள் உதவி செய்ய முன்வந்தனர். பெட்டிகளை எடுத்துச் செல்ல இசைகிறவர்களைக் கண்டுபிடித்தனர்; பணம் கொடுத்தனர்; தொடர்புகளை ஏற்படுத்தித் தந்தனர்; விலாசங்கள் தந்தனர்.

1901-ம் வருடம் அக்டோபர் மாதம் வெளிநாட்டில் வாழும் ரஷ்ய சம தர்ம ஜனநாயகவாதிகளின் ' குழு ' ஒன்று நிறுவப் பெற்றது.

விரைவில் ரஷ்யாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படலாயிற்று. தீப்பொறி பத்திரிகை நிருபர்களில் குறிப்பிடத் தகுந்தவர் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கைச் சேர்ந்த தொழிலாளி பாபுஷ்கின் ஆவர். தாம் அயல்நாடு செல்லு முன், கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வது சம்பந்தமாக லெனின் அவரைப் பேட்டி கண்டார். ஒரெக்கோவோ—ஸியுவோ, கஸ்—க்ரூஸ்டாலனி, இவானோவோ—வோஷ்னேஸென்ஸ்க், கோக்மா, கினேஷ்மா ஆகிய இடங்களிலிருந்து எல்லாம் பாபுஷ்கின் ஏராளமான கடிதங்களை வாங்கி அனுப்பிவைத்தார்.

அவர் அடிக்கடி இந்த இடங்களுக்கு எல்லாம் சென்று வந்தார். சென்று அங்குள்ள தொடர்புகளை எல்லாம் பலப்படுத்திக்கொண்டார். பீட்டர்ஸ் பர்க், மாஸ்கோ, ஊரல்ஸ் முதலிய ஊர்களிலிருந்தும் தென் பகுதியில் இருந்தும் கடிதங்கள் வந்தன. வடபகுதி லீகுடனும் நாங்கள் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டோம். இந்த லீகின் பிரதிநிதி நோஸ்கோவ் சில நாட்களுக் குப் பிறகு, இவானோவோ—வோஷ்னேஸென்ஸ்கிலிருந்து வந்து எங்களோடு கலந்துகொண்டார். இவரைவிடச் சிறந்த ரஷ்யரைக் காண்பது அரிது. நீலக் கண்கள்; பரந்த முகம்; உருண்டையான தோள்கள்; தம் மாகாணத்தாரைப் போன்று அவர் நீட்டி நீட்டிப் பேசுவார். எங்களுடன் கலந்து ஆலோசிக்கும் நோக் கத்தோடு சிறு மூட்டையுடன் எல்லைப் புறத்தைத் தாண்டி அவர் இங்கு வந்து சேர்ந்தார். இவானோவோ—வோஷ்னேஸென்ஸ்கில் இவர் வசித்தார். இவரு டைய மாமா ஒரு சிறிய முதலாளி. தம் மருமகன் நோஸ்கோவ் ஊர் சுற்றிக் கொண்டிருந்தான். அல்லது போலீஸார் அவனைத் தேடிய வண்ணம் இருந் தனர். இந்தத் தொல்லைகளிலிருந்து விடுபட எண்ணி,—தன் மருமகனைத் தன் னிடமிருந்து அப்புறப்படுத்த எண்ணி—அவனுக்குச் சிறிது பணம் கொடுத்து அயல்நாடுகளுக்கு அனுப்பிவிடத் தீர்மானித்தார். '' போரிஸ் நிக்கோலாவிச் '' (இது அவருடைய உண்மையான பெயர்; '' விளாதிமிர் அலெக்ஸாண்ட் ரோவிச் '' என்பது அவருடைய உண்மையான புனை பெயர்.) மிகச் சிறந்த ஊழியர். எகாட்ரின்பர்க்குச் செல்லும் வழியில் யூபாவில் அவரை நான்

முன்பே சந்தித்திருக்கிறேன். "தொடர்புக்காக" அவர் வெளிநாட்டுக்கு வந்தார். தொடர்புகளைச் சேகரிப்பது அவர் வேலை. எங்கள் சிறிய மூனிக் அடுக்களையில் அடுப்பின் அருகில் உட்கார்ந்துகொண்டு ஒளி பொருந்திய கண்களுடன் அவர் வடபகுதி லீகின் வேலையை விவரித்தார். வர்ணனை அவரை உற்சாக மூட்டிற்று. லெனின் கேட்ட கேள்விகள் அவருடைய உற்சாகத்தை இன்னும் அதிகப்படுத்தின. வெளிநாட்டில் வசித்தபொழுது தமது தொடர்புகளையெல்லாம் போரிஸ் ஒரு நோட் புத்தகத்தில் குறித்து வைத்திருந்தார். அவர்கள் எங்கெங்கே வசிக்கிறார்கள்? என்ன என்ன செய்கிறார்கள்? எந்தெந்த விதத்தில் பயன்படுவார்கள்? என்பன போன்ற விவரங்களை அதில் காணலாம். பிறகு இந்தத் தகவல்களை அவர் எங்களிடம் தெரிவித்தார். ஆனால், அவர் புலமைத் தன்மை படைத்த நிர்மாணகர். ஆதலால் மக்களையும் அவர்களுடைய நடவடிக்கைகளையும் மிகைப்படுத்தி அவர் வர்ணித்துவிடுவார். அச்சமின்றி உண்மையை நேருக்கு நேரே காண்பதற்கு அவருக்குத் தைரியமிருப்பதில்லை. இரண்டாவது காங்கிரஸுக்குப் பிறகு சமரசவாதியாக அவர் மாறிவிட்டார். பிறகு அரசியல் அரங்கத்திலிருந்தே மறைந்துவிட்டார். பிற்போக்கு தலைவிரித்தாடின காலத்தில் அவர் இறந்துபோனார்.

மற்றவர்களும் மூனிக்குக்கு வந்தார்கள். நான் வருவதற்கு முன்பே ஸ்ட்ருவ் மூனிக்குக்கு வந்துவிட்டார். அப்பொழுதே தகராறுக்கான அறிகுறிகள் தென்படலாயின. சமதர்ம—ஜனநாயகக் கட்சியிலிருந்து விலகி மெல்ல மெல்ல மிதவாதக் கும்பலின் கட்சிக்குள் அவர் சென்றுகொண்டிருந்த காலம் அது. ஏற்கனவே ஒரு தடவை இவ்விதம் தகராறு ஏற்பட்டிருக்கிறது. வீரா இவாவ்னேவ்னா, "கன்றுக்குட்டி" என்னும் பட்டத்தை அவருக்குச் சூட்டினாள். அவருடைய அரசியல் வாழ்க்கை முடிந்துவிட்டதாக லெனினும், பிளக்கானவும் கருதினார்கள். ஆனால் அவர் மீள இன்னும் வழி இருக்கிறது என்று இவாவ்னேவ்னா கருதினாள். அதனால், அவளையும் பாட்ரஸ்ஸாவையும் "ஸ்ட்ருவ் கட்சியின் நண்பர்கள்" என நாங்கள் வேடிக்கையாக அழைக்கத் தலைப்பட்டோம்.

நான் மூனிக்கில் இருந்தபொழுது ஸ்ட்ருவ் மீண்டும் ஒரு முறை மூனிக்குக்கு வந்தார். அவரைக் கண்டு பேச லெனின் மறுத்துவிட்டார். வீரா இவாவ்னேவ்னாவின் வீட்டுக்கு நான் அவரைச் சந்தித்துப் பேசச் சென்றேன். அந்தப் பேட்டி வேதனை அளித்தது. தாம் அவமதிக்கப்பட்டதாக ஸ்ட்ருவ் கருதினார். தோஸ்தவோஸ்கியின் கதையில் வரும் காட்சியைப் போன்று, நிலைமை நெருக்கடியாக இருந்தது. தன்னைத் துரோகி என்று பிறர் கருதுவதாகவும், உணர்ச்சி வயப்பட்டுத் தம்மைத் தாமே முட்டாளாக்கிக்கொண்டும் அவர் நடித்தார். அவர் என்ன சொன்னார் என்பது இப்பொழுது எனக்கு நினைவு இல்லை. ஆனால், அந்தச் சந்திப்பின்போது ஏற்பட்ட வேதனையின் நினைவு மட்டும் என் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை. அவர் எங்களைச் சேர்ந்தவரல்ல என்பதும், கட்சிக்கு விரோதமானவர் என்பதும் தெளிவாயிற்று. லெனின் நினைத்தது சரிதான். பிறகு ஸ்ட்ருவின் மனைவி நீனா அலெக்ஸாண்ட்ரோவ்னா தின்பண்டங்களோடு வாழ்த்துச் செய்தியும் அனுப்பி இருந்தாள். அவற்றை

யார் கொண்டுவந்தார்கள் என்பது எனக்கு நினைவில்லை. அவள் நோய்வாய்ப் பட்டுப் பலவீனமாக இருந்தாள். அதனால் ஸ்ட்ருவ் எந்தப் போக்கில் போய்க் கொண்டிருக்கிறார் என்பதை அவளால் அறிய முடியவில்லை போலும். ஒருகால் அவருக்கு மட்டுமே தன்னுடைய போக்குத் தெரிந்திருக்கக் கூடும்.

நான் போய்ச்சேர்ந்த பிறகு நாங்கள் ஜெர்மன் தொழிலாளி ஒருவர் வீட்டில் குடியேறினோம். அது பெரிய குடும்பம். அறுவர் அந்தக் குடும்பத்தில் இருந்தனர். அடுக்களையிலும், ஒரு சிறிய அறையிலும் அவர்கள் வசித்தனர். ஆனால், வீடு ரொம்பச் சுத்தமாக இருந்தது. குழந்தைகள் சுத்தமாகவும் அடக்கமாகவும் இருந்தார்கள். எனினும் லெனினுக்கு நானே உணவு தயார்செய்து கொடுக்க விரும்பினேன். எனவே சமையலுக்கு வேண்டிய ஏற்பாடுகளை நானே செய்தேன். சமையலை மட்டும் வீட்டுக்காரியின் அடுக்களையில் செய்தேன். கூடுமானவரை சந்தடி இன்றி இருக்க முயன்றேன். ஏனெனில் அந்தச் சமயத்தில்தான் இனி என்ன செய்ய வேண்டும்? எனும் நூலை லெனின் எழுதத் தொடங்கியிருந்தார். ஏதாவது எழுதும்பொழுது அறையின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு அவர் வேகமாக நடப்பது வழக்கம். அப்படி நடக்கும்பொழுது தாம் எழுதப்போவதைத் தம் வாய்க்குள்ளேயே அவர் முணுமுணுத்துக்கொள்வார். அவர் செய்கிற காரியங்களுக்கு ஏற்ப நடந்துகொள்ள நானும் பழகிக்கொண்டுவிட்டேன். எழுத ஆரம்பித்துவிட்டால் எதைப் பற்றியும் அவரிடம் நான் பேச மாட்டேன்; எதையும் அவரிடம் கேட்க மாட்டேன். வெளியில் உலாவச் செல்லும்பொழுது, தாம் எழுதிக்கொண்டிருந்த விஷயங்களைப்பற்றியும் சிந்தித்துக்கொண்டிருந்த விஷயங்களைப்பற்றியும் லெனின் என்னிடம் சொல்லுவார். எழுதப்போகும் விஷயத்தைப்பற்றித் தம் வாய்க்குள்ளேயே முணுமுணுத்துக்கொள்வது அவருக்கு ஒரு அவசியம்போல ஏற்பட்டுவிட்டது. மூனிக்கின் சுற்றுப்புறங்களுக்கு நாங்கள் உலாவச் செல்வது வழக்கம். ஜனங்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத இடமாகப் பார்த்தே நாங்கள் பெரும்பாலும் உலாவச் செல்வதுண்டு.

ஒரு மாதத்திற்குப் பிறகு, மூனிக்குக்கு அடுத்திருந்த ஷுவாபிஸ் பகுதியில் நாங்கள் குடியேறினோம். புதிதாகக் கட்டப்பட்டிருந்த பல வீடுகளில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தினோம். முன்பு நாங்கள் வைத்திருந்த மேஜை நாற்காலிகளைப் பன்னிரண்டு மார்க்குக்கு விற்றுவிட்டபடியால் சொந்தத்திலேயே மேஜை நாற்காலிகள் வாங்கிக்கொண்டோம். எங்கள் சம்பிரதாயத்தையொட்டி நாங்கள் வாழ்க்கை நடத்தத் தலைப்பட்டோம்.

புது வீட்டிற்குக் குடிவந்த பிறகு, மத்தியானச் சாப்பாடு முடிந்ததும், மார்டோவ்தான் முதன் முதலாக எங்கள் வீட்டுக்கு வந்தார். அவரைத் தொடர்ந்து, மற்றவர்கள் வந்தார்கள். அதன் பிறகு "ஆசிரியர்கள்" கூட்டம் நடந்தது. மார்டோவ் ஓய்வு ஒழிச்சல் இன்றிப் பேசினார். பேசும்பொழுது ஒரு விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத்திற்கு அவர் தாவிவிடுவார். அவர் நிறையப் படித்திருந்தார். எங்கெல்லாமிருந்தோ ஏராளமான தகவல்களைச் சேகரித்துவைத்து இருந்தார். அவருக்கு எல்லோரையும் தெரியும்; எல்லா விஷயங்களைப்பற்றியும் தெரியும். "சிறந்த பத்திரிகைக்காரர்" என்று லெனின்

அடிக்கடி மார்டோவைக் கூறுவார். அவர் அபாரத் திறமைசாலி; எல்லாவற்றையும் கிரகிக்கும்தன்மை வாய்ந்தவர்; யாரையும் கவரும் சக்தி படைத்தவர்; ஆனல் அவருடைய போக்குகள் யாவும் மேலெழுந்தவாரியாகத்தான் இருக்கும். தீப்பொறி பத்திரிகைக்கு மார்டோவ் மிகவும் இன்றியமையாத ஒரு உறுப்பாக விளங்கினர். நாள்தோறும் லெனின் ஐந்தாறு மணி நேரங்கள் இடைவிடாது பேசிப் பேசிக் களைப்படைந்துவிடுவார். அவரால் வேலை எதுவுமே செய்ய முடியாது போகும். இப்படி வந்து பேசிக்கொண் டிருப்பதால் வேலை செய்வது கெட்டுவிடுகிற தென்றும், ஆகவே எங்கள் வீட்டுக்கு வருவதைச் சிறிது நிறுத்திக்கொண்டால் நல்ல தென்றும் கூறிவரும்படி மார்டோவிடம் ஒரு நாள் என்னை லெனின் அனுப்பிவைத்தார். எங்களுக்கு வரும் கடிதங்களைப்பற்றி நான் அவருடைய வீட்டுக்குச் சென்று அவரிடம் தெரிவிப்ப தென்றும், செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி அவர் என்னிடம் தெரிவிப்ப தென்றும் நாங்கள் ஒரு ஏற்பாடு செய்துகொண்டோம். ஆனல் பேசாமல் மார்டோவால் கொஞ்ச நேரங்கூட இருக்க முடியாது. இந்த ஏற்பாட்டுக்குப் பிறகு அவர் வீரா இவாவ்னேவ்ன, டிம்கா, புளுமென்பீல்டு, ஆகியவர்களுடன் ஹோட்டலுக்குச் சென்று மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருப்பார்.

பிறகு, மனைவியுடனும், குழந்தைகளுடனும் டான் வந்துசேர்ந்தார். பின்னர் அவர்கள் வீட்டுக்குச் சென்று நாள் முழுதும் அங்கேயே பொழுதைப் போக்க மார்டோவ் ஆரம்பித்தார்.

தொழிலாளர் நலன் என்ற பத்திரிகையுடன் ஒத்துழைக்க எண்ணி, அக்டோபர் மாதத்தில் நாங்கள் மூனிக்கிலிருந்து ஸூரிச்சுக்குச் சென்றேம். முயன்றும் ஒற்றுமை ஏற்படவில்லை. அக்கிமோவும், கரிசெவ்ஸ்கியும் பிறரும் ஆத்திரம் மேலிட்டு விவாதித்தனர். தொழிலாளர் நலன் வாதிகளை மார்டோவ் மிகவும் வன்மையாகத் தாக்கினர். ஆத்திரத்தில், தமது "டை"யைக்கூட அவர் கிழித்து எறிந்துகொண்டார். அந்த நிலையில் அன்றுதான் நான் அவரை முதன்முதலில் கண்டேன். பிளக்கானவ் நகைச்சுவையோடு பேசினர். ஒற்றுமை ஏற்படுவது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம். எனவே, ஒரு தீர்மானத்தைத் தயார்செய்து மகாநாட்டில் டான் படித்தார். அவர் குரல் ஜீவனற்று இருந்தது. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் "பாப்பல் நன்ஷியோ" என்று கூக்குரலிட்டனர்.

இந்தப் பிளவு எங்களுக்கு வேதனை தரவில்லை. தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும், லெனினும் ஒத்துழைத்ததில்லை. எனவே, இப்பொழுது ஏற்பட்ட பிளவை ஒரு பிளவாக அவர் கருதவில்லை. பிளக்கானவ் உற்சாகத்துடன் இருந்தார். ஏனெனில், அவர் வெகுகாலமாகப் போராடிவந்த எதிரியை முடிவாக வீழ்த்தக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தபடியால், மகிழ்ந்து தாராளமாகப் பேசி உறவுகொள்ள ஆரம்பித்தார்.

நாங்கள் ஒரே ஹோட்டலில் தங்கினேம்; ஒன்ருக உணவு அருந்தினேம். சில பிரசினைகளைப் பரிசீலனை செய்யும்பொழுது மட்டுமே எங்களிடையே கொஞ்சம் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது.

ஒரு சம்பாஷணை என் நினைவில் இருக்கிறது. நாங்கள் இருந்த ஹோட்ட

லுக்கு அருகில் உடற்பயிற்சி நிலையம் ஒன்று இருந்தது. அங்கே சிலர் உடற் பயிற்சி செய்துகொண் டிருந்தார்கள். தலையில் தொப்பி அணிந்து, கையில் மரவாளைப் பிடித்துக்கொண்டு, போர்புரியும் தோரணையில் அவர்கள் பயிற்சி செய்து பழகினர். இதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே பிளக்கானுவ், சொன்னார்: "புதிய அமைப்பின்கீழ் நாமும் இவ்வாறுதான் போர் புரியும்படி நேரும்" என்று, வீடு திரும்பும்பொழுது நானும் ஆக்ஸெல்ராடுமாக வந்து கொண்டிருந்தோம். அப்பொழுது "புதிய சமூகத்தில் போராட்டமே இராது—சலிப்பு மாத்திரம்தான் இருக்கும்" என்று பிளக்கானுவ் கூறியதற்குப் பொருள் செய்ய வேண்டும் என்பதாக எனக்கு விரிவுபடுத்தி விளக்கினார் ஆக்ஸெல்ராடு.

அந்தக் காலத்தில் எனக்குச் சங்கோசம் அதிகம். எனவே, நான் அதற்குப் பதில் எதுவும் சொல்லாது மௌனமாக இருந்தேன். ஆனால் பிளக்கானுவ் கூறிய தற்கு உரிய பொருள் இது என்பதை அறிந்ததும், எனக்கு ஒரே பிரமிப்பாய் இருந்தது மாத்திரம் என் நினைவில் இருக்கிறது.

நாங்கள் ஸூரிச்சிலிருந்து திரும்பியதும், இனி என்ன செய்ய வேண்டும்? என்னும் புத்தகத்தைப் பூர்த்தி செய்யும் வேலையில் லெனின் ஈடுபட்டார். "மென்ஷ்விக்குகள்" இந்த நூலை கடுமையாகத் தாக்கினர். ஆனால், அந்தச் சமயத்தில் அந்த நூலை எல்லோரும் விரும்பிப் படித்தனர். குறிப்பாக, ரஷ்ய வேலையுடன் நெருங்கின தொடர்புடையவர்கள் அந்த நூலைப் பெரிதும் விரும் பினர். ஸ்தாபனம் அமைக்க வேண்டிய அவசியத்தை இதயபூர்வமாக விளக்கி, அந்த நூலில் லெனின் வலியுறுத்தி இருந்தார்; ஸ்தாபனத்தை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதற்குரிய திட்டத்தை அதில் சமர்ப்பித்து இருந்தார். அந்தத் திட்டத்தில் எல்லோருக்கும் இடம் இருந்தது. புரட்சி யந்திரத்தில் எல்லோரும் பங்குகொள்ள வேண்டும். உருவத்தில் சிறியதாய் இருப்பினும் யந்திரம் சுழல்வதற்கு அதிலுள்ள பல்வரிசைகள் எவ்வளவு முக்கியமோ, அதே போல, புரட்சி வெற்றியுடன் நடைபெறுவதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம் என்று அதில் விளக்கி இருந்தார். உறுதியாக முன்னேறும்படியும், அன்று இருந்த நிலையில் கட்சியை இயக்குவதற்கு, சொல்லில் மாத்திரமன்றி—செயலில் இறங்குவதற்கு—இன்றியமையாத அஸ்திவாரத்தை அமைக்கச் சோர் வின்றி வேலை செய்யும்படியும் இந்த நூலில் எல்லோரையும் ஈடுபடும்படி வற் புறுத்தி வேண்டிக்கொண்டார்.

> "நீண்ட காலம் வேலை செய்ய வேண்டியதிருக்கிறதே என்று சமதர்ம ஜனநாயகவாதி அஞ்சுதல் கூடாது. அவர் வேலை செய்ய வேண்டும். இடை விடாது வேலை செய்ய வேண்டும். அவர் எது செய்யவும், புரட்சி நிலையிலே மிகப் பெரிய சோர்வு ஏற்பட்டிருக்கும்பொழுது கட்சியின் பெருமையையும், மதிப்பையும், மேன்மையையும் நிலைநிறுத்தவும், அல்லது தேசம் பூராவும் ஆயுதந்தாங்கின புரட்சிக்குத் தயார்ப்படுத்தவும், திட்டமிடவும், நடத்த வும் எப்பொழுதுமே தயாராக இருக்க வேண்டும்."

இப்படி இனி என்ன செய்ய வேண்டும்? என்னும் நூலில் லெனின் விளக்கி இருக்கிறார்.

இந்த நூல் எழுதப்பட்டு இருபத்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. அப்பொழுது இந்த நூல் கட்சியின் வேலைத் திட்டத்தைத் தலைகீழாக மாற்றி அமைத்தது என்று கூறினால் அது மிகையாகாது. தொழிலாளர் இயக்கத்தை இன்று வேறுவிதமான கடமைகள் எதிர்நோக்கி நிற்கின்றன. எனினும், இன்றும்கூட—இத்தகைய புதிய சூழ்நிலையிலுங்கூட—அந்த நூலில் புரட்சி வேகம் குமுறிக்கொண் டிருப்பதை நாம் காணலாம். சொல் அளவில் மாத்திர மின்றிச் செயலிலும் லெனின்வாதியாக விளங்க விரும்புகிறவர்கள் இந்த நூலைப் படிப்பது இன்றும் அவசியமாகும்.

புரட்சி இயக்கம் மேற்கொள்ள வேண்டிய வழியை நிர்ணயிக்க, ஜனங் களின் நண்பர்கள் என்ற நூல் பேருதவி புரிந்தது. அதேபோல, விரிவான புரட்சி வேலைக்கு இன்றியமையாத திட்டத்தை இனி என்ன செய்ய வேண்டும்? என்னும் நூல் வகுத்துக் கொடுத்துச் சுட்டிக்காட்டிற்று. திட்டமாக இன் னின்ன காரியங்களை நாம் செய்தாக வேண்டும் என்பதை அந்த நூல் வரையறை செய்து விளக்கிற்று.

கட்சிக் காங்கிரஸைக் கூட்டுவதற்கு அப்பொழுதும் நிலைமை பக்குவம் அடைய வில்லை என்பது தெளிவாயிற்று. முதலாவது காங்கிரஸைப் போன்று இந்த இரண்டாவது காங்கிரஸும் பயனற்றுப் போனாலும் போகலாமல்லவா? எனவே, தகுந்த அளவில் தொடர்ந்து ஆரம்ப வேலைகள் செய்வது அவசியமாய் இருந்தது. பெலோஸ்டோக்கில் நடக்க விருக்கும் காங்கிரஸுக்கு வரும்படி பண்டு கட்சி அனுப்பின அழைப்பை அதனால் யாரும் பொருட்படுத்தவில்லை. தீப்பொறி சார்பில் டான் சென்று வந்தார். ஒரு பெட்டி நிறைய இனி என்ன செய்ய வேண்டும்? என்னும் புத்தகத்தின் பிரதிகளையும் அவர் எடுத்துச் சென்றார். பெலோஸ்டோக் காங்கிரஸ் மகாநாடாக மாற்றப்பட்டது.

தீப்பொறி தீவிரமாக வேலை செய்தது. அதன் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்தது. கட்சித் திட்டம் தயார் செய்யப்பட்டு வந்தது. கட்சித் திட்டத்தை விவாதிப்பதற்காக பிளக்கானுவும் ஆக்ஸெல்ராடும் மூனிக்குக்கு வந்தனர். லெனின் வகுத்த நகல் திட்டத்தின் சில பகுதிகளை பிளக்கானுவ் குறைகூறினார். லெனின் சமர்ப்பித்த திட்டத்தின் ஷரத்துகள் அனைத்தையும் வீரா இவாவ்னேவ்னுவும் ஒப்புக்கொள்ளவில்லை. பிளக்கானுவின் வாதத்தையும் அவள் அங்கீகரிக்கவில்லை. சில விஷயங்களில் ஆக்ஸெல்ராடு லெனினை ஆதரித் தார். அந்தக் கூட்டம் நடைபெற்ற காலத்தில் வேதனை எல்லோர் மனதையும் துன்புறுத்திற்று. பிளக்கானுவுக்குப் பதில் கூற விரும்பினாள் வீரா இவாவ்னேவ்னு. ஆனால், கைகளைக் கட்டிக்கொண்டு அவளைத் தீவிரமாக ஒரு பார்வை பார்த்தார் பிளக்கானுவ்; அந்தப் பார்வையைக் கண்டதும் வீரா இவாவ்னேவ்னு நிலை குலைந்துபோனாள்.

லெனின் பெரிதும் கிளர்ச்சி அடைந்தார். அப்படி வேலை செய்வது அசாத் தியம். அந்த விவாதம் பேரம் பேசி வியாபாரம் செய்வதைப் போன்று இருந்தது.

உறுதியான அடிப்படையில் வேலை செய்ய வேண்டுமானால், தனிப்பட்டவர் களின் செல்வாக்குக்கோ அடிக்கடி மாறுகிற மன இயல்புக்கோ, சென்ற காலத்

தில் நடைபெற்ற தனிப்பட்டவர்களின் அபிலாஷைகளுக்கோ இடம் கொடாமல் திட்டத்தை வகுப்பது மிகவும் அவசியமாக இருந்தது.

பிளக்கானுவுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை லெனினுக்கு வேதனை அளித்தது. அவர் மிகவும் கிளர்ச்சி அடைந்தார்; பல இரவுகள் தூக்கமின்றிக் கஷ்டப்பட்டார். பிளக்கானுவ் கோபத்தால் துடித்தார்; திருப்தி அடையாதவர் போல வருந்தினர்.

வைகறை நான்காவது இதழுக்கு லெனின் எழுதின கட்டுரையைப் படித்துவிட்டு, பிளக்கானுவ் அதை வீரா இவாவ்னேவ்னுவிடம் திருப்பிக்கொடுத்தார். அதன் மார்ஜினில் அவர் குறிப்புகள் சில எழுதி இருந்தார். அவருக்கு இருந்த ஆத்திரம் அந்தக் குறிப்புகளில் பிரதிபலித்தது. அதைப் படித்தபொழுது லெனின் மிகவும் கிளர்ச்சி அடைந்தார். அவர் முன்னும் பின்னுமாகப் பலமுறைகள் நடந்தார்.

அச்சுக்கூடச் சொந்தக்காரர் ஆபத்திற்குள்ளாக விரும்பாததால், மூனிக்கில் தீப்பொறியைத் தொடர்ந்து அச்சிட இயலவில்லை. புதிதாக வேறு இடத்தில் நாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டியதிருந்தது; எங்கு என்பதைப் பற்றியும் முடிவு செய்யவேண்டிய தாயிற்று. பிளக்கானுவும் ஆக்ஸெல்ராடும் ஸ்விட்ஜர்லாந்தில் அச்சிடுவதை ஆதரித்தனர். மற்றவர்கள்—திட்டத்தின்மீது நடந்த விவாதத்தின்பொழுது நிலைமையை ஓரளவு உணர்ந்தவர்கள்—லண்டனில் அச்சிடுவதை ஆதரித்தனர்.

மூனிக் வாழ்க்கை சிறந்த ஒரு வாழ்க்கையாக எங்கள் ஞாபகத்தில் பதிந்தது. தேசப்பிரஷ்டர்களாக நாங்கள் வாழ்ந்த பிற்காலம் இதைவிட அதிக வேதனை அளித்தது. மூனிக் காலத்தில், லெனின், மார்டோவ், பாட்ரஸ்ஸாவ், ஸாஸுலிச் ஆகியவர்களின் தனிப்பட்ட உறவில் அவ்வளவு பெரிய அகழி இருக்கவில்லை. எல்லோரும், ஒரு விஷயத்தில்—அகில ரஷ்யப் பத்திரிகை ஸ்தாபிக்கும் விஷயத்தில்—கவனம் செலுத்தினர். தீப்பொறியைச் சுற்றி எல்லா சக்திகளும் திரண்டு நின்றன. ஸ்தாபனத்தின் வளர்ச்சியையும் கட்சியை ஸ்தாபிப்பதற்குச் சரியான அஸ்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டது என்பதையும் எல்லோரும் உணர்ந்தனர். இதனால் இந்தக் காலம் மகிழ்ச்சி அளிக்கும் காலம்.

உள்ளூர் வாழ்க்கை எங்கள் கவனத்தை அவ்வளவாக ஈர்க்கவில்லை. சாதாரணமான கண்ணோட்டத்தோடுதான் நாங்கள் அதைக் கவனித்து வந்தோம். சில கூட்டங்களுக்கு நாங்கள் சென்றோம். ஆனால் அவை அவ்வளவாக எங்களை ஈர்க்கவில்லை. மே தின விழா என் நினைவில் இருக்கிறது. அந்த வருடம் ஊர்வலம் நடத்த ஜெர்மன் சமதர்ம-ஜனநாயகவாதிகளுக்கு முதன் முதலாக ஜெர்மன் சர்க்கார் அனுமதி அளித்தார்கள். நகரத்தில் கூட்டத்தை நடத்தக் கூடாது; கிராமங்களிலேதான் கூட்டங்களை நடத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் சர்க்கார் அனுமதி கொடுத்தார்கள். தங்கள் மனைவி மக்களுடன் ஏராளமான ஜெர்மன் சமதர்ம-ஜனநாயகவாதிகள் வரிசை வரிசையாகச் செல்வதை நாங்கள் கண்டோம். அவர்கள் பைகள் முள்ளங்கிகளால் நிறைந்திருந்தன. மௌனமாக அவர்கள் நகரத்தில் நிமிர்ந்து நடந்தனர். பீர் குடிக்க, கிராமப் பீர் தோட்டத்திற்கு அவர்கள் சென்றனர். உலகம் முழுதும் வெற்றிபெற்ற தொழிலாளி வர்க்கத்தின் ஆர்ப்பாட்டமாக இந்த மே தின விழா விளங்கவில்லை.

நாங்கள் ரகசிய வாழ்க்கை நடத்தியதால் ஜெர்மன் தோழர்களை நாங்கள் சந்தித்துப் பேச விரும்பவில்லை. ஷுவாபிஸில் எங்களுக்குச் சமீபத்தில் தம் மனைவியுடனும் புதல்வனுடனும் வசித்த பார்வஸை மட்டுமே நாங்கள் சந்தித்தோம். ஒரு நாள் ரோஸா லக்ஸம்பர்க் அவரைக் காண வந்திருந்தார். அவளைச் சந்திக்க லெனின் அங்கே சென்ருர். பார்வஸ் அன்று அதிதீவிர இடதுசாரியாக விளங்கினுர். தீப்பொறிக்கு அவர் கட்டுரை எழுதினுர். ரஷ்ய விவகாரங்களில் அவர் சிரத்தை காட்டினுர்.

லீகே வழியாக நாங்கள் லண்டனுக்குச் சென்ருேம். அந்தக் காலத்தில் நிக்கோலாஸ் லியோனிடோவிச் மெஷ்செர்யாகோவும் அவர் மனைவியும்—எனது பழைய ஞாயிறு பள்ளிக்கூட நண்பர்கள்—அங்கே வசித்தனர். அவர் முதன் முதலில் எனக்கு அறிமுகமானபொழுது அவர் நிரீஸ்ரவாதியாக இருந்தார். ஆனுல், அவர்தான் என்னைச் சட்ட விரோதமான வேலையில் முதன் முதலாக ஈடுபடுத்தினுர்; ரகசிய வேலையின் நியதிகளை எனக்குக் கற்றுக்கொடுத்தார்; தொழிலாளர் விடுதலை வட்டாரத்தின் அந்நிய நாட்டுப் பிரசுரங்களை எனக்கு ஆர்வத்துடன் தந்து, என்னைச் சமதர்ம ஜனநாயகவாதியாக்க எனக்கு உதவி புரிந்தார்.

இப்பொழுது அவரும் சமதர்ம ஜனநாய்கவாதியாக மாறிவிட்டார். நீண்ட காலமாக அவர் பெல்ஜியத்தில் வசித்து வந்தார். உள்ளூர் இயக்கத்தின் சகல விவரங்களும் அவருக்குத் தெரியும். வழியில் அவர்களைச் சந்திக்க நாங்கள் முடிவு செய்தோம்.

அப்பொழுது லீகேயில் பெரிய பரபரப்புக் குடிகொண் டிருந்தது. சில தினங்களுக்கு முன் சிப்பாய்கள் வேலைநிறுத்தக்காரர்களைச் சுட்டனர். தொழிலாளர் வட்டாரத்தில் இந்தப் பரபரப்பு தெளிவாகத் தெரிந்தது. தொழிலாளர் முகங்களிலும் அங்குமிங்கும் நின்றவர்களின் முகங்களிலும் பரபரப்புக் குறி தென்பட்டது. "ஜனங்கள் வீட்டை" நாங்கள் காணச் சென்ருேம். பொருத்தமற்ற இடத்தில் இருந்தது அந்த வீடு. வலையில் சிக்கவைப்பதைப் போன்று, வீட்டுக்கு எதிரிலிருந்த சதுக்கத்திற்குக் கூட்டத்தைத் தள்ளிவிட முடியும். தொழிலாளர்கள் "ஜனங்களின் வீட்டிற்கு"க் கூட்டமாகச் சென்றனர். அதிகமானவர்கள் அங்கே கூடக் கூடாது என்பதற்காகக் கட்சித் தலைவர்கள் தொழிலாளர் வட்டாரங்களில் எல்லாம் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தனர். பெல்ஜிய சமதர்ம ஜனநாயகத் தலைவர்கள்மீது ஓரளவு அவநம்பிக்கை இருந்ததாகக் காணப்பட்டது. தொழில் பிரிவினை இருந்ததாகவும் காணப்பட்டது. சிப்பாய்கள் கூட்டத்தை நோக்கிச் சுட்டனர். தொழிலாளர் தலைவர்கள் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றனர்.

லண்டன் வாழ்க்கை

(1902--1903)

லண்டன் நகரின் பிரமாண்டமான அமைப்பைக் கண்டு ஒரேபடியாய் நாங்கள் திகைத்துப் போனோம். நாங்கள் அங்குச் சென்றபொழுது காலநிலை திருப்திகரமாக இல்லை. என்றாலும் லெனின் முகம் உடனே மலர்ந்தது. பிளக்கானுவைப்பற்றியும் ஆசிரியர் குழாம் சம்பந்தமான சர்ச்சைகளைப்பற்றியும் சிறிது நேரம் மறந்துவிட்டு, முதலாளித்வத்தின் கோட்டையாக விளங்கிய லண்டன் மாநகரத்தை அவர் வியப்போடு பார்த்தார்.

ஸ்டேஷனில் எங்களை நிக்கோலாய் அலெக்ஸாண்ட்ரோவிச் அலெக்ஸியெவ் சந்தித்தார். அவர் லண்டனில் குடியேறி வசித்து வந்தார். ஆங்கிலம் அவருக்கு நன்றாகத் தெரியும். திக்குத்திசை தெரியாமல் சிரமப்பட்டுக்கொண்டிருந்த எங்களுக்கு எல்லா வழிகளிலுமே வழிகாட்டியாக இருந்து அவர் உதவினார். சைபீரியாவில் வசித்தபொழுது வெப் தம்பதிகள் எழுதிய நூல் ஒன்றை நாங்கள் ரஷ்ய பாஷையில் மொழிபெயர்த்தோம். ஆகவே எங்களுக்கு ஆங்கிலம் தெரியும் என்பதாக நாங்கள் நினைத்துக்கொண்டோம். சிறையிலிருந்தபொழுது சுயபோதினியின் உதவிகொண்டு நான் ஆங்கிலம் படித்தேன். ஆனால் பேச்சு வழக்கோடு ஒட்டிய ஒரு ஆங்கில வார்த்தையைக்கூட இதுவரை நான் செவிமடுத்தது இல்லை. சுஷன்ஸ்கோயில் நாங்கள் வெப் தம்பதிகள் நூலை மொழிபெயர்க்க ஆரம்பித்ததும் என் உச்சரிப்பைக் கேட்டு லெனின் திகைப்படைந்தார். "என் சகோதரிக்கு ஒருவர் ஆங்கிலம் கற்றுக்கொடுத்தார். அவர் உச்சரித்த முறை நீ உச்சரிப்பதைப்போன்று இல்லை" என்று அவர் சொன்னார். நான் விவாதிக்கவில்லை. ஆனால் மீண்டும் படிக்க ஆரம்பித்தேன். நாங்கள் லண்டனை அடைந்ததும் ஒருவார்த்தைகூட எங்களுக்குப் புரியவில்லை என்பதையும் நாங்கள் சொன்னதை யாரும் புரிந்துகொள்ளவில்லை என்பதையும் நாங்கள் உணர்ந்தோம். முதலில் இது வேடிக்கையாக இருந்தது. இதைப்பற்றி லெனின் வேடிக்கையாகப் பேசினார் என்றாலும், விரைவில் ஆங்கில மொழியைக் கற்கும் வேலையில் ஈடுபட்டார். பல்வேறு கூட்டங்களுக்கெல்லாம் நாங்கள் செல்ல ஆரம்பித்தோம். முதல் வரிசையில் நின்றுகொண்டு பேச்சாளர் எந்த முறையில் சொற்களை உச்சரிக்கிறார் என்பதைக் கவனித்துக்கொண்டே இருந்தோம். அடிக்கடி நாங்கள் ஹைட் பார்க்குக்குச் சென்றோம். பல்வேறு விஷயங்களைப்பற்றி அங்கே பலர் பேசினர். ஒரு கூட்டத்திற்கு மத்தியில் நின்றுகொண்டு ஒரு நாஸ்திகர் கடவுள் இல்லை என்பதை மெய்ப்பித்துக்கொண் டிருந்தார். இத்தகைய விஷயங்களைப் பற்றிப்

பேசும் பேச்சாளரின் பேச்சைக் கேட்க நாங்கள் பெரிதும் விரும்பினோம். அவர் அயர்லாந்து உச்சரிப்போடு பேசினர்; புரிந்துகொள்வது எளிதாக இருந்தது. அருகில் இரட்சண்ய சேனை அதிகாரி ஒருவர் சர்வவல்லமை படைத்த கடவுளை வெறிகொண்ட குரலில் வேண்டினர். அதற்குக் கொஞ்ச தூரம் தள்ளி ஒரு கடைச்சிப்பந்தி பெரிய கடைகளில் வேலை செய்யும் சிப்பந்திகள் மாடுபோல் உழைத்து நீண்ட நேரம் வேலை செய்வதைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தார். பேச்சு வழக்கோடு ஒட்டிய ஆங்கிலத்தைக் கேட்டுக் கேட்டு நாங்கள் பாஷையை விரைவில் கற்றுக்கொண்டோம். பிறகு, ஒரு விளம்பரத்தின்மூலம் லெனினுக்கு இரண்டு ஆங்கிலேயர்களின் உதவி கிடைத்தது. அவர்கள் லெனினுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுத்தார்கள்; லெனின் அவர்களுக்கு ரஷ்ய மொழி கற்றுக் கொடுத்தார். இதன் மூலம் லெனின் ஆர்வத்துடன் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டார்; நன்ருக் கற்றுக்கொண்டார்.

லண்டனின் நிலைமையையும் லெனின் பரிசீலனை செய்தார். பிரிட்டிஷ் கண் காட்சிசாலையைத் தவிர்த்து அங்குள்ள மற்ற கண்காட்சிசாலைகளுக்கு அவர் அதிகம் செல்லவில்லை. தமது நேரத்தில் பாதி நேரத்தை அவர் பிரிட்டிஷ் கண் காட்சிசாலையிலே செலவிட்டு ஆராய்ச்சிகள் நடத்தினர். எனினும் கண்காட்சி சாலை அவரை ஆகர்ஷிக்கவில்லை. உலகிலேயே மிகச் சிறந்த வாசகசாலையும், விஞ்ஞானரீதியில் ஆராய்ச்சிக்குரிய சகல வசதிகளும் அங்கு இருந்தமையால்தான் பிரிட்டிஷ் கண்கரட்சிசாலையை அவர் பெரிதும் விரும்பினர். சாதாரணக் கண் காட்சிசாலைகள் லெனினுக்குச் சலிப்பை அளித்தன. பூர்வீக சரித்திரக் கண் காட்சிசாலையில் பத்து நிமிடங்கள் செலவு செய்வாரோ இல்லையோ, அதற்குள் அவர் களைப்படைந்துவிடுவார். மத்திய கால ஆயுதங்களும், புராதன காலப் பாத் திரங்களும், எகிப்தியப் பாத்திரங்களும் நிறைந்த முடிவற்ற பகுதிகளை நாங்கள் விரைவில் கடந்துவிடுவோம். ஆனல், லெனினின் கவனத்தை ஈர்த்த ஒரு சிறு பகுதி இன்னும் என் நினைவில் இருக்கிறது. 1848-ஆம் வருடம் பாரீஸில் நடந்த புரட்சியைச் சித்தரிப்பது அது. அங்கே இருந்த ஒவ்வொரு சின்னஞ் சிறு அம்சங்களையும் சித்திரங்களையும் அளவுகடந்த சிரத்தையுடன் அவர் பரிசீலனை செய்தார். ஜீவன் நிறைந்த போராட்டத்தின் சிறிய பிரதிபிம்பம் என அதை அவர் கருதினர். எங்கள் புரட்சியைத் சித்தரிக்கும் மாஸ்கோ கண்காட்சி சாலைக்கு நான் செல்ல நேர்ந்த சமயத்தில் அங்குள்ள சின்னஞ் சிறு விஷயங்களைக் கூட லெனின் கவனமாகப் பரிசீலனை செய்துகொண் டிருக்கிருர் என்பதாக ஒரு எண்ணம் என் மனதில் உதித்தது.

லண்டனின் ஜனங்களைப்பற்றியும் லெனின் பரிசீலனை செய்தார். பஸ்ஸின் மேல்தளத்தில் இருந்துகொண்டு நீண்டதூரம் நகரைச் சுற்றிப்பார்ப்பதையும் இந்தப் பெரிய வர்த்தக நகரின் வர்த்தக மளமளப்பையும் காண அவர் பெரிதும் விரும்பினர். அமைதியான சதுக்கம், பளபளப்பான ஜன்னல்கள், பசுமை நிறைந்த பூந்தோட்டங்கள், இன்னும் சகல வசதிகளும் கூடிய வீடுகள், அடிக்கடி வீதியில் செல்லும் அழகான சாரட்டு வண்டிகள்—இத்தகைய காட்சி ஒரு புறம். தொழிலாளர் வசிக்கும் பகுதியோ கேவலமான சிறிய வீதி. அங்கு வீடுகள்தோறும் தோரணம்போல் துணிமணிகள் தொங்கும். குழந்தைகளோ வெளிறிய முகத்

தோடு சாக்கடையில் விளையாடும்—இத்தகைய காட்சி மற்றொரு புறம். இந்தக் காட்சிகளை மோட்டாரின் மேல்தளத்திலிருந்து பிரயாணம் செய்தால் காண இயலாது. இத்தகைய பகுதிகளை நாங்கள் கால்நடையாகவே சென்று பார்த்தோம். செல்வத்துக்கும் வறுமைக்கும் மத்தியில் காணப்படும் கொடுமையான இந்தப் பெரிய வித்தியாசத்தைக் கண்டு, ''இரண்டு சமுதாயங்கள், இரண்டு சமுதாயங்கள்'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு லெனின் ஆங்கிலத்தில் முணுமுணுப்பார்.

மோட்டாரின் மேல்தளத்திலிருந்து பிரயாணம் செய்தாலுமே ஜனங்களின் வாழ்க்கைத் தாரதம்மியங்களையும் உடனே கண்டுகொண்டுவிடலாம். இதை நடந்து பார்க்க வேண்டு மென்கிற அவசியமில்லை. உருக்குலைந்த, ஒட்டிய வயிறு படைத்த, சறுக்கிவிழுந்த ஏழைகளை ஹோட்டல்களுக்கு முன்னர் காணலாம். அவர்களுக்கு மத்தியில் குடித்த பெண்ணையும் காணலாம். அவள் கண்கள் கறுத்திருக்கும்; அதே நிறம் படைத்த அவளுடைய ஆடை கிழிந்திருக்கும்; ஒரு நாள் மோட்டாரின்மீது நின்றுகொண்டு நாங்கள் பிரயாணம் செய்தபொழுது வலிமை படைத்த போலீஸ்காரன் ஒருவன்—இரும்புத் தொப்பியும் தோல் பட்டையும் அவன் அணிந்திருந்தான்—ஒரு சிறுவனை அழுத்திப் பிடித்திருந்தான். அந்தச் சிறுவன் எதையோ திருடும்பொழுது பிடிபட்டிருக்க வேண்டும். ஒரு பெரிய கூட்டம் கூவிக்கொண்டும், சீட்டி அடித்துக்கொண்டும் அவனைப் பின் தொடர்ந்தது. மோட்டாரின்மீது இருந்த சிலர்கூட எழுந்து நின்று அந்தச் சின்னத் திருடனைப் பார்த்து வாயில் வந்தவாறு திட்டினர்.

''பூ....இதற்குத்தானா இவ்வளவு தடபுடல்'' என்று லெனின் முணுமுணுத்தார்.

சம்பள நாள் மாலையில் நாங்கள் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ தொழிலாளர் வசிக்கும் பகுதியில் மோட்டாரில் பிரயாணம் செய்வதுண்டு. அகலமான வீதியின் ஓரத்தில் வரிசை வரிசையாகக் கடைகள் இருந்தன. அந்தக் கடைகளில் பந்தங்கள் எரிந்தன. வீதியின் ஓரங்களில் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் ஏராளமாக நின்றுகொண்டிருந்தனர். சத்தம் போட்டுக்கொண்டு அவர்கள் கிடைத்ததை வாங்கி அங்கேயே தங்கள் பசியை ஆற்றிக்கொண்டனர். தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களைக் கூட்டமாகக் கண்டாலே லெனினுக்கு ஓர் அலாதியான ஆனந்தம் எப்பொழுதுமே பிறந்துவிடும். தொழிலாளர்கள் எங்கு எல்லாம் இருந்தனரோ அங்கு எல்லாம் அவர் சென்றார். களைத்த தொழிலாளர்கள் பல மணி நேரம் நகருக்கு வெளியில் உள்ள மைதானத்தில் இளைப்பாறினர். நகரை விட்டு வெளியேறினதில் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி. லெனின் இத்தகைய இடங்களுக்குச் சென்றார். அவர் பொது விடுதிகளுக்கும், வாசகசாலைகளுக்கும் போய் வந்தார். லண்டன் வாசகசாலைகளுக்கு வீதி ஓரத்தில் கதவுகள் இருந்தன. வீதியிலிருந்து நேராக உள்ளே செல்லலாம். உட்கார அங்கே வசதி இல்லை. அங்கே இருந்த ''ஸ்டாண்டுகள்''மீது பத்திரிகைகள் அடுக்கப்பட்டிருந்தன. சோவியத் ரஷ்யா முழுவதும் இத்தகைய வாசகசாலைகள் ஸ்தாபிக்கப்படுவதைக் காணத் தாம் விரும்புவதாகப் பிற்காலத்தில் லெனின் கூறினார். ஒரு சிறிய ஹோட்டலுக்கும் மாதாகோயில்களுக்கும் நாங்கள் சென்று வந்தோம்.

ஆங்கில மாதாகோயில்களில் பிரார்த்தனையை அடுத்து உபதேசம் நடை பெறும். சமதர்ம மாதாகோயில்களில் சொற்பொழிவும் விவாதமும் நடக்கும்; இந்த விவாதத்தைக் கேட்க லெனின் பெரிதும் விரும்பினர். ஏனெனில், சாதாரணத் தொழிலாளர்கள் இந்த விவாதத்தில் கலந்துகொண்டனர். ஊருக்கு வெளியில் எங்காவது கூட்டம் நடக்கிறதா என்று அவர் பத்திரிகையைத் துருவித் துருவிப் பார்ப்பார். அங்கே பாசாங்கு இராது; தலைவர்கள் இருக்க மாட்டார்கள்; ஆனல் சாதாரணத் தொழிலாளர் மாத்திரம்தான் இருப்பார்கள். தோட்டமயநகரத் திட்டம் என்பதைப் போன்ற பிரசினை, கூட்டங்களில் பெரும் பாலும் விவாதிக்கப்படும். லெனின் சிரத்தையுடன் விவாதத்தைக் கேட்பார். அப்படிக் கேட்டுக்கொண் டிருக்கும்போதே "சமதர்மம் அவர்களிடமிருந்து பெருகி ஓடுகிறது. பேச்சாளர் சாரமற்ற பேச்சைப் பேசுகிறார். உடனே ஒரு தொழிலாளி எழுந்திருந்து முதலாளித்வ சமூகத்தின் உயிர்நாடியைப் பிடித்துக் கொண்டு புட்டுக் காட்டுகிறார்" என்று லெனின் கூவுவார். சாதாரண பிரிட் டிஷ் தொழிலாளியின்மீது லெனின் எப்பொழுதும் நம்பிக்கை வைத்திருந்தார். பாதகமான நிலையிலும்கூட அவர்கள் வர்க்க உணர்ச்சியைப் பாதுகாத்தனர். முதலாளிகளால் கறைப்படுத்தப்பட்டுத் தாங்களும் ஒரு சிறு முதலாளியாக மாறித் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபடுபவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும் தொழிலாளர்களையே இங்கிலாந்துக்குச் செல்பவர்கள் சாதாரணமாகக் காண்பது உண்டு. இத்தகைய தொழிலாளர் தலைவர்களையும் முதலாளிவர்க்கத் தார் செய்த முயற்சியினல் அவர்களிடையே காணப்படும் பலாபலன்களையும் லெனின் மிகவும் தெளிவாக ஆராய்ந்தார். இந்த உண்மையை ஒரு நிமிடம்கூட மறக்காமல் இங்கிலாந்தின் எதிர்காலப் புரட்சியைத் தூண்டும் சக்திகளின் நாடியைப் பரிசீலனை செய்யவும் அவர் முயன்றார்.

நாங்கள் சென்ற பல்வேறு கூட்டங்களின் தன்மையை வருணிப்பது சிரமம். ஒரு நாள் நாங்கள் ஒரு சமதர்ம ஜனநாயக மாதாகோயிலுக்குச் சென்றோம். தம் மூக்கைப் பைபிளில் புதைத்துக்கொண்டு, ஒருவர் உரத்த குரலில் அதைப் படித்தார். பிறகு அவர் உபதேசம் செய்தார். அதன் சாரம் வருமாறு: "எகிப்திலிருந்து யூதர்கள் வெளியேறினது, முதலாளித்துவ வல்லரசுப் பிடிப்பி லிருந்து விடுபட்டு, சமதர்மத்துக்குள் பிரவேசிப்பதைப் பிரதிபலிக்கிறது." சமதர்மக் கீர்த்தனையைப் பிறகு எல்லோரும் எழுந்து நின்று பாடினர். "முதலா ளித்துவ வல்லரசுப் பிடிப்பிலிருந்து, ஏ தெய்வமே! எங்களைச் சமதர்ம சாம்ராஜ் யத்திற்கு அழைத்துச் செல்லுக."

இன்னொரு முறை, ஒரு வாலிபருடன் பேசுவதற்காக, அதே ஏழு சகோதரி கள் மாதாகோயிலுக்கு நாங்கள் சென்றோம். ஒரு வாலிபர் முனிசிபல் சமதர்மத் தைப்பற்றிப் பேசினர். புரட்சி அவசியமே இல்லை என்பது அவருடைய வாதம். முதன் முறை நாங்கள் ஏழு சகோதரிகள் மாதாகோயிலுக்குச் சென்றிருந்த போது, பாதிரியாக இருந்த ஒரு சமதர்மவாதி, தாம் பன்னிரண்டு வருடங்களாகக் கட்சியில் அங்கம் வகிப்பதாகவும் பன்னிரண்டு வருடங்கள் தாம் சந்தர்ப்ப வாதத்தை—முனிசிபல் சமதர்மவாதம் முழு சந்தர்ப்பவாதம்—எதிர்த்துப் போராடி வருவதாகவும் கூறினர்.

ஆங்கில சமதர்மவாதிகளின் குடும்ப வாழ்க்கையைப் பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாது. ஆங்கிலேயர்கள் ஒதுங்கி வாழும் சுபாவம் உடையவர்கள்; அதிகம் பேச மாட்டார்கள். ரஷ்ய தேசப் பிரஷ்டர்களின் ஊர்சுற்றி வாழ்க்கையைக் கண்டு அவர்களுக்கு ஒரே திகைப்பு. தாக்கத்தீரிவ் குடும்பத்தினர் வசித்த வீட்டில், ஆங்கில சமதர்ம ஜனநாயகவாதி ஒருவரை நாங்கள் சந்திக்க நேர்ந்தது. அவர் கேட்ட கேள்வி எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. ''நீங்கள் சிறை சென்றிருக்கிறீர்களா ? என் மனைவியைச் சிறையில் அடைத்தால் நான் என்ன செய்வேன் என்பது எனக்குத் தெரியாது. என் மனைவி சிறையில் அடைபட்டுக் கிடப்பதாகக் கற்பனை செய்து பாருங்களேன்!'' என்று அவர் கூறினர். மத்திய வகுப்பு மனப்பான்மை எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருக்கிறது! நாங்கள் குடியிருந்த குடும்பத்தார்கள் இடையிலும் எங்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்த இரு ஆங்கிலேயர் இடையிலும் இந்த மனப்பான்மை நன்கு வேரூன்றிப் போயிருப்பதை நாங்கள் கண்டோம். ஆங்கில மத்திய வகுப்பு வாழ்க்கையின் அர்த்தமற்றதன்மையை நாங்கள் தெளிவாகக் கண்டோம். எங்களுக்கு ஆங்கிலம் போதித்த ஆங்கிலேயர்களில் ஒருவர் பெரிய புத்தகக் கடை ஒன்றில் மானேஜராக வேலைபார்த்து வந்தார். எதையும் சரியாக ஆராய்ந்து முடிவு கட்டும் ஆற்றல் சமதர்மம் ஒன்றில்தான் பொதிந்து கிடக்கிறது என்று அவர் கூறினர்- ''சமதர்மத்தில் எனக்கு அளவில்லாத பற்றுதல் உண்டு. ஒரு காலத்தில் நான் சமதர்மம் பற்றிக்கூடச் சொற்பொழிவுகள் செய்திருக்கிறேன்; பிறகு என் முதலாளி என்னைக் கூப்பிட்டு, சமதர்மவாதிகள் தமக்குத் தேவையில்லை யென்றும், உத்தியோகத்தில் நான் நீடித்து இருக்க விரும்பினல், சமதர்மப் பிரசாரம் செய்யாமல் வாயை மூடிக்கொண்டு நான் சும்மா இருக்க வேண்டும் என்றும் கூறினர். இதை நான் பரிசீலனை செய்தேன். நான் சமதர்மத்தைப் பற்றிப் பிரசாரம் செய்தாலும் சரி அல்லது செய்யாவிட்டாலும் சரி, சமதர்மம் என்பது கட்டாயம் வந்தே தீரும். எனக்கோ மனைவி மக்கள் இருக்கிறர்கள். இப்பொழுது நான் சமதர்மவாதி என்று யாரிடமும் சொல்லிக்கொள்வதில்லை. ஆனல் உங்களிடம் மட்டும் சொல்லலாம்'' என்று அவர் தெரிவித்தார்.

இவர் பெயர் மிஸ்டர் ரேமாண்டு. அனேகமாக ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் ஆஸ்திரேலியாவிலும் பிற நாடுகளிலும் இவர் வசித்திருக்கிறர். பல வருடங்கள் லண்டனில் வசித்திருக்கிறர். எனினும் ஒரு வருட காலத்தில் விளாதிமிர் இலிச்சுக்கு இருந்த அனுபவத்தில் பாதி அனுபவம்கூட இவருக்கு இல்லை. வைட் சேப்பலில் நடந்த கூட்டத்திற்கு ஒரு நாள் விளாதிமிர் இலிச் இவரை அழைத்துச் சென்றர். லண்டன்வாசிகளில் பெரும்பான்மையோரைப் போன்று, ரேமாண்டும் இந்தப் பகுதிக்குச் சென்றதில்லை. லண்டனில் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களைப் போலல்லாது, ரஷ்ய யூதர்கள், தங்கள் போக்குக்கு இயைந்தவாறு அங்கு வாழ்க்கை நடத்தி வந்தனர். இது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

நகரை அடுத்துள்ள இடங்களுக்கும் நாங்கள் அடிக்கடி சென்று வருவது வழக்கம். பிரைம்ரோஸ் குன்றுக்கு நாங்கள் அடிக்கடி சென்று வந்தோம்; ஏனெனில் அங்கு போய்வர ஆறு பென்ஸ்கள்தான் செலவாகும். குன்றின்மீது

நின்ருல் லண்டன் மாநகரம் முழுதும் அப்படியே தெரியும். புகைமூடின நகரமாக அது காட்சி அளிப்பதோடு, போகப் போக அது வளர்ச்சியடைந்து கொண்டே போவதுபோலவும் தோன்றும். அங்கே இயற்கையின் எழிலை நாங்கள் கண்டு களித்தோம். தோட்டங்களையும் புல் மூடின பாதைகளையும் நாங்கள் ஊடுருவிப் பார்த்தோம். பிரைம்ரோஸ் குன்றுக்கு நாங்கள் அடிக்கடி சென்று வந்ததற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. கார்ல் மார்க்ஸின் கல்லறை அதற்கு அண்மையில்தான் இருந்தது. அதற்கு நாங்கள் அடிக்கடி சென்று வந்தோம்.

பீட்டர்ஸ்பர்க் வட்டாரத்தில் உறுப்பினர்களாக விளங்கிய அப்போலிநாரியா அலெக்சாண்ட்ரோவ்னு யாகுப்போவாவை நாங்கள் லண்டனில் சந்தித்தோம். பீட்டர்ஸ்பர்க்கில் வசித்த காலத்தில் அவள் தீவிரமாக வேலை செய்தவள்; எல்லோரும் அவளைப் போற்றினர்; நேசித்தனர். நெவ்ஸ்கைக்கு அப்பால் இருந்த வயது வந்தோர் பள்ளிக்கூடத்தில் நாங்கள் இருவரும் ஒன்ருக வேலை பார்த்தவர்கள். ஆதலால் அவள் எனக்கு நெருங்கிய சினேகிதை. லிடியா மிக்கலோவ்னு நிப்போவிச்சு எங்கள் இருவருடனும் நேசமாக இருந்தாள். சைபீரியாவிலிருந்து தப்பிச் சென்ற பிறகு, தாக்கத்தீரிவ் அப்போலிநாரியா மணந்துகொண்டாள். இவர் தொழிலாளர் சிந்தனை என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தவர். தேசப் பிரஷ்டர்களாக இந்தத் தம்பதிகள் லண்டனில் வசித்து வந்தனர். கட்சி நடபடிக்கைகளில் கலந்துகொள்ளாமல் அவர்கள் ஒதுங்கி வாழ்ந்தனர். நாங்கள் வந்ததை அறிந்து அப்போலிநாரியா பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள். தாக்கத்தீரிவ் தம்பதிகள் எங்களுக்குப் பேருதவி புரிந்தனர். குறைந்த வாடகையில் சௌகரியமான வீட்டை எங்களுக்கு அமர்த்திக்கொடுத்தனர். நாங்கள் அடிக்கடி இந்தத் தம்பதிகளைச் சந்தித்தோம். தொழிலாளர் சிந்தனையின் போக்கைப் பற்றி நாங்கள் அவர்களிடம் எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை. எனினும் எங்கள் உறவு சுமுகமானதாக இருக்கவில்லை. ஓரிரண்டு முறை சிறிது பூசல் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் மீண்டும் ஒன்று கூடினேம். இறுதியில்—1903-ம் வருடம் ஜனவரி மாதம் என்று நினைக்கிறேன்—தீப்பொறியின் போக்கைத் தாங்கள் ஆதரிப்பதாகத் தாக்கத்தீரிவ் தம்பதிகள் அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

விரைவில் என் அன்னையும் இங்கு வந்துவிடுவாள். எனவே, நாங்கள் குடும்ப ரீதியில் வாழ்க்கை நடத்த—அதாவது இரண்டு அறைகளை வாடகைக்கு அமர்த்தி, வீட்டிலேயே உணவு தயாரித்து வாழ்க்கை நடத்த—முடிவு செய்தோம். ஏனெனில் ஆங்கில உணவு எங்களுக்கு அவ்வளவு ஒத்துக்கொள்ளவில்லை. எல்லாவற்றும் மேலாக இன்னெரு விஷயமும் இருந்தது. அப்பொழுது நாங்கள் ஸ்தாபனத்திலிருந்து ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்தியபடியால், எவ்வொரு தம்படியையும் ஜாக்கிரதையாகச் செலவு செய்ய வேண்டுமெனவும், கூடுமானவரை சிக்கனமாக வாழ்க்கை நடத்த வேண்டுமெனவும் முடிவு செய்தோம்.

ரகசிய வேலை செய்வது என்னும் திருஷ்டியுடன் பார்த்தால், நிலைமை இதைவிட நன்ருக இருந்திருக்க முடியாது. லண்டனில் வசிப்பர்களுக்கு அன்று எத்

தகைய பாஸ்போர்டுகளும் தேவை இல்லை. எந்தப் பெயரில், யார் வேண்டுமானுலும் தம்மைப் பதிவுசெய்துகொள்ளலாம். ரீச்டர் எனும் பெயரில் நாங்கள் எங்களைப் பதிவு பெய்துகொண்டோம். இன்னெரு சாதகமும் இருந்தது. ஆங்கிலேயர்கள் அன்னிய நாட்டார் அனைவரையும் ஒரேவிதமாக மதிப்பார்கள். நாங்கள் குடியிருந்த வீட்டுக்காரி எங்களைக் கடைசிவரை ஜெர்மானியர்களாகவே மதித்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு மார்டோவும் வீரா ஸாஸுலிச்சும் வந்து சேர்ந்தார்கள்; எங்கள் வீட்டிற்கு அருகில் இருந்த ஒரு பெரிய வீட்டில், அவர்களும் அலெக்ஸியெவ்வும் கூட்டுக் குடும்பமாக வாழ்க்கை நடத்தினர்.

விரைவில் பிரிட்டிஷ் கண்காட்சிசாலையை இலிச் முழுக்க முழுக்கப் பயன் படுத்திக்கொண்டார்.

பொதுவாக, காலை நேரங்களில் அவர் அங்கு சென்றுவிடுவார். அவர் சென்றதும் மார்டோவ் வந்து சேர்வார். அவரும் நானும் கடிதங்களைப் படித்து விட்டு விவாதிப்போம். களைப்பைத் தரும் தினசரி வேலையிலிருந்து இலிச் விடுபடும் பொருட்டு, நாங்கள் அவருக்கு இவ்வாறு உதவிபுரிந்தோம்.

பிளக்கானுவுடன் ஏற்பட்ட தகராறு ஒருவாறு முடிவடைந்ததும், தம் அன்னையையும் அன்னு இலிச்சினுவையும் பார்ப்பதற்காகவும் அவர்களுடன் கடற்கரையில் சிறிது காலம் வசிக்கும்பொருட்டும் விளாதிமிர் இலிச் பிரிட்டானிக்குச் சென்ருர் ; தொடர்பான இயக்கமும் முடிவற்ற தோற்றமும் படைத்த கடலை அவர் பெரிதும் விரும்பினுர். உண்மையான ஓய்வு பெறுவதற்குத் தகுதியான இடம் அதுதான்.

லண்டனில் பலர் எங்களைச் சந்தித்தனர். இன்னு மிக்டோவிச் எங்கள் வீட்டுக்கு வந்தாள். விரைவில் அவள் ரஷ்யாவுக்குத் திரும்பிவிட்டாள். பின்னர் அவள் சகோதரர் பீட்டர் ஹெர்மோகினுவிச்சும் எங்கள் வீட்டுக்கு வந்தார். விளாதிமிர் இலிச்சின் யோசனைப்படி, "மேட்ரன்" என்ற பெயரை நாங்கள் அவருக்குச் சூட்டினேம். நீண்ட காலம் சிறைவாசம் செய்துவிட்டு, சமீபத்தில் தான் அவர் விடுதலை அடைந்தார். விடுதலை அடைந்ததும் அவர் தீவிர தீப்பொறி வாதியாக மாறினுர். பொய் பாஸ்போர்ட்டுகள் தயாரிப்பதில், தம்மை ஒரு நிபுணர் என்பதாக அவர் கருதிக்கொண்டார். வியர்வை தோயும்படி அவைகளைச் செய்வதுதான் சிறந்த முறை என்று அவர் கூறினுர். ஒரு நாள் எங்கள் "கம்யூனில்" இருந்த மேஜைகள் எல்லாம் தலைகீழாகக் கவிழ்ந்துகிடந்தன. பொய் பாஸ்போர்டுகள் தயாரிப்பதற்காக அவற்றை யெல்லாம் "பிரஸ்களாக" உபயோகித்துக்கொண்டார்கள். இத்தகைய முறைகள் யாவும் பூர்வகாலத்து முறைகள் என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் அந்தக் காலத்தில் மேற்கொண்ட ரகசிய முறைகள் யாவும் இத்தகைய முறையைப் பின்பற்றியே நடைபெற்று வந்தன. அந்தக் காலத்தில் நாங்கள் ரஷ்யாவுக்கு எழுதியுள்ள கடிதங்களைப் படித்துப் பார்த்தால், எங்களுடைய ரகசிய வேலைகள் எவ்வளவு சிறுபிள்ளைத் தனமானவை என்பது தெரியவரும். பாஸ்போர்டுகளுக்கு "கைக்குட்டைகள்" என்றும், சட்டவிரோதமான பிரசுரங்களுக்கு, "சாராயம் வடித்தல்" என்றும், "கம்பளிச்சட்டை" என்றும் அந்தக் கடிதங்களில் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறேம். நகரங்களின் பெயர்களையும் நாங்கள் மாற்றி அமைத்துக்கொண்டோம். நகரங்

கள் பெயர்களை நாங்கள் இவ்வாறு மாற்றினேம். ஒடஸாவை ஓசிம் என்றும் டிவெரை டிரெண்டி என்றும் போல்டா நகரைப் பெட்டியா என்றும் பாக்கோ வைப் பாஷா என்றும் ஊர்களின் பெயர்களை மாற்றி எழுதினேம். பெண்கள் பெயரை ஆண்களுக்கும் ஆண்கள் பெண்களுக்குமாக மாற்றிப் ரகசியப் பெயர்கள் வைத்துக்கொண்டோம். இந்த பெயர்கள் பிறருக்கு எளிதில் புரியக்கூடிய வகை யில் அமைந்திருந்தன. இவை எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான காரியம் என்று அன்று எங்களுக்குப் புலப்படவில்லை. ஓரளவு இது பலனும் அளித்தது. பிற் காலத்தில் இருந்ததைப் போன்று, போலீஸின் கையாட்கள் அன்று கட்சியில் அதிகமாக இருக்கவில்லை. எங்களைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்; ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்கள்.

தீப்பொறி ஏஜண்டுகள் ரஷ்யாவில் இயக்க வேலைகளைச் செய்துகொண்டு வந்தனர். வெளி நாட்டிலிருந்துகொண்டு, பிரசுரங்களையும், தீப்பொறி வைகறை ஆகிய பத்திரிகைகளையும் நாங்கள் அவர்களுக்கு அனுப்பிவந்தோம். இந்த ஏஜண்டுகள் ரகசிய அச்சகத்தில், தீப்பொறியை மீண்டும் அச்சிடவும் பல்வேறு கமிட்டிகளிடையே அதைப் பரப்பவும் ஏற்பாடுகள் செய்தனர். தீப்பொறிக்கு அவர்கள் செய்திக் கடிதங்கள் அனுப்பினர்; ரஷ்யாவில் நடக்கும் ரகசிய வேலை கள்பற்றிய சகல விவரங்களையும் எங்களுக்கு அறிவித்தனர். பத்திரிகைக்கு அவர் கள் நிதியும் வசூல் செய்தனர்.

சாம்ராவில் கிரிஷானேவ்ஸ்கி தம்பதிகளும் மாக்ஸி மிலியானேவிச், ஸினெய்தா பாவ்லோவ்னு ஆகியோர் வசித்தனர்; மரியா இல்லிச்சினுவும் அங்கே வசித்தாள். விரைவில் சாம்ரா கேந்திரமாயிற்று. கிரிஷானேவ்ஸ்கி தம்பதி களுக்கு ஜனங்களை ஆகர்ஷிக்கும் சக்தி உண்டு. லெங்க்னிக் போல்டாவுக்குச் சென் ருர். லிடியா மிக்கலோவ்னு நீப்போவிச் அஷ்ட்ராகானில் வசித்தார். பாக்கோ வில் லெபிஷின்ஸ்கி லியுபோவ் நிகோலாவ்னுவும் ராடாசென்கோ ஆகியோரும் வசித்தனர். அப்பொழுது ஸ்டீபன் இவானேவிச் ராடாசென்கோ பெரிதும் களைப் புற்று இருந்தார்; எனவே ரகசிய வேலைகளில் ஈடுபடுவதை அவர் விட்டு விட்டார், ஆனுல் அவருடைய சகோதரர் ஐவான் ஐவானேவிச் தீப்பொறிக்காக இடைவிடாது வேலை செய்தார். அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்தார். ரஷ்யா முழுதும் தீப்பொறியை பரப்பின ஏஜண்டுகளில் ஸில்வினும் ஒருவர். பாமான் மாஸ்கோவில் வேலை செய்தார். ஐவான் வாசிலியோவிச் பாபுஷ்கின் அவருடன் ஒத்துழைத்தார். பீட்டர்ஸ்பர்க் ஸ்தாபனத்துடன் எலினு டிமிட்ரியெவ்னு ஸ்டாஸோவாவுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது; இந்த ஏஜண்டுகளுடன் எல்லோருடனும் தீப்பொறி சுறுசுறுப்புடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொண்டிருந்தது. எல்லாக் கடிதங்களையும் விளாதிமிர் இலிச் கவனத்துடன் படித்தார். ஏஜண்டுகள் என்னென்ன செய்கிருர்கள் என்பதை நாங்கள் நன்கு அறிந்துகொண்டோம். அவர்கள் செய்து வரும் வேலைகளைப் பற்றி நாங்கள் அவர்களுடன் விவாதித்தோம். அவர்களுக்கிடையே தொடர்பு கள் ஏதாவது அற்றுப்போயிருந்தால், அதை நாங்கள் மீண்டும் சரிப்படுத்தி, தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தோம்; இதுபோன்று அனேக காரியங்களை நாங்கள் அந்தக் காலத்தில் செய்துவந்தோம்.

பாக்குவில் இருந்த அச்சகத்தில் தீப்பொறியை அச்சிட்டார்கள். மிகவும் ரகசியமாக வேலைகள் நடந்தன. எனுகிட்ஸே சகோதரர்கள் அங்கே வேலை செய்தனர். கிராஸின் தொழிலை நிர்வகித்தார். அச்சகத்தின் பெயர் "நிஸ்ஸா"

பிறகு வடக்கே ஒரு அச்சகம் நடத்த முயன்றோம். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. கிஷினெவ்வில் அக்கிம் நடத்தி வந்த ரகசிய அச்சகம் நாங்கள் லண்டனில் வசித்த காலத்தில் சிதைந்துவிட்டது.

வில்னு மூலம் போக்கு வரத்துக்கு ஏற்பாடு செய்தோம். பீட்டர்ஸ்பர்க்கு தோழர்கள் ஸ்டாக்ஹோம் மூலம் போக்கு வரத்துக்கு ஏற்பாடு செய்ய முயன்றனர். "சாராயம்" என்னும் ரகசியப் பெயருடன் நடைபெற்ற இந்தக் கடிதப் போக்குவரத்தில், ஏராளமான கடிதங்கள் வந்துபோய் கொண்டிருந்தன. நாங்கள் ஸ்டாக்ஹோமுக்குப் பிரசுரங்களை அனுப்பி வைப்போம். "சாராயம்" வந்து சேர்ந்துவிட்டது என அவர்கள் எங்களுக்கு அறிவிப்பார்கள். தடங்கல்கள் எதுவுமின்றி அவை பீட்டர்ஸ்பர்க்குக்குப் போய்விடுகின்றன என்பதை அறிந்தும் நாங்கள் ஸ்டாக்ஹோமுக்குத் தொடர்ச்சியாகப் பிரசுரங்களை அனுப்பி வந்தோம். ஆனால் ஸ்வீடன் வழியாக நாங்கள் 1905-ம் ஆண்டு ரஷ்யாவுக்குத் திரும்பினபோது அப்பொழுதுகூடத் தொழிற்சாலையிலேயே "சாராயம்" இருப்பதை—இதை வேறுவிதமாகச் சொன்னால், ஸ்டாக்ஹோமிலுள்ள பீப்பிள்ஸ் ஹோமில் எங்கள் பிரசுரங்கள் இருப்பதை—நாங்கள் தெரிந்துகொண்டோம்.

"சிறிய பீப்பாய்களை" வார்டோ வழியாக அனுப்பினோம். ஒரே ஒரு முறைதான் இந்த வழியில் பார்சல் அனுப்பியதாக எனக்கு ஞாபகம்; அதற்குள் போக்குவரத்துகள் தடைப்பட்டுவிட்டன. மார்சேல்ஸ்லிருந்த "மேட்ரனுக்கும்" நாங்கள் பிரசுரங்கள் அனுப்பினோம். பாடுமுக்குச் செல்லும் கப்பல்களில் வேலை செய்துவந்த சமையற்காரர்கள் மூலம் பிரசுரங்கள் அனுப்பும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்து இருந்தோம். பிரசுரங்களைப் பெறுவதற்குப் பாடும் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்; மெழுகுத் துணியில் பிரசுரங்களைச் சுற்றி, ஒரு குறிப்பிட்ட இடத்தில் தோழர்கள் கடலில் தூக்கி எறிய, மற்ற தோழர்கள் அவற்றைத் தேடி எடுத்துக்கொண்டனர். பீட்டர்ஸ்பர்க் பாக்டரியில் வேலை செய்துகொண்டிருந்த மைக்கேல் இவாவ்னேவிச் காலினின்—எங்கள் ஸ்தாபனத்தில் அப்பொழுது அங்கம் வகித்தார்—ஸ்டாஸோவா மூலம் தூலோனிலுள்ள ஒரு மாலுமியின் விலாசத்தை எங்களுக்குக் கொடுத்தார். அலெக்ஸாண்டிரியாவுக்கு (எகிப்து) அனுப்பப்பட்ட பிரசுரங்கள் பெர்ஷியா வழியாக ரஷ்யாவுக்குச் சென்றன. பிறகு காமெனெட்ஸ்—போடாவஸ்க் வழியாகவும் போக்குவரத்துக்கு நாங்கள் ஏற்பாடு செய்தோம். ஏராளமான பணமும் சக்தியும் காலமும் இந்தத் துறையில் விரையமாயின என்றாலும், இதில் பேராபத்துக்கு இடம் இருந்தது என்றாலும், நாங்கள் அனுப்பிய பிரசுரங்களில் பத்தில் ஒரு பகுதிதான், குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர்ந்தது. இரண்டு தட்டுகள் உள்ள பெட்டிகளையும் புத்தகங்களையும் நாங்கள் உபயோகித்தோம். நாங்கள் அனுப்பிய பிரசுரங்கள் குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும், அவற்றை எல்லோரும் ஆவலுடன் வாங்கிக்கொண்டனர்.

இனி என்ன செய்ய வேண்டும்? எனும் பிரசுரத்திற்குக் குறிப்பிடத்தக்க

வெற்றி கிடைத்தது. அடிப்படையான கேள்விகளையும் கொந்தளிப்பான பிரசினைகளையும், அலசி ஆராய்ந்து அந்தப் புத்தகம் பதில் கூறிற்று. இதனுல் முறையாக வேலை செய்யத்தக்க ரகசிய ஸ்தாபனம் ஒன்று தோன்ற வேண்டிய தன் அவசியத்தை அனைவருமே வெகுவாக உணரலாயினர்.

1902-ம் ஜூன் மாதம் பிலோஸ்டோக்கில் பண்டு மகாநாடு ஒன்று நடந்தது. பீட்டர்ஸ்பர்க் பிரதிநிதி ஒருவரைத் தவிர மற்ற அனைவரையும் அங்கே போலீஸார் கைது செய்தனர். இது சம்பந்தமாகத்தான் பாமானும் ஸில்வினும் பிடிபட்டனர். கட்சிக் காங்கிரஸைக் கூட்டுவதற்கு, ஸ்தாபன ரீதியில் கமிட்டி ஒன்றை அமைக்க வேண்டும் என்று இந்த மகாநாட்டில் தீர்மானிக்கப் பெற்றது. எனினும் இந்த விஷயம் காலவரையறையின்றி ஒத்திப் போய்க்கொண்டிருந்தது. ஸ்தலக் கமிட்டிகளின் பிரதிநிதிகள் இதில் இடம் பெற வேண்டுவது அவசியம். ஆனுல் ஸ்தலக் கமிட்டிகளோ ஒன்றுபட்ட தன்மையுடையனவாயும் உறுதியுடையனவாயும் இருக்கவில்லை. உதாரணமாக, பீட்டர்ஸ்பர்க்கில் ஸ்தாபனம் இரு பகுதிகளாக-தொழிலாளர் குழு அறிவாளர் குழு-எனப் பிளவுபட்டிருந்தது. தொழிலாளர் குழுவின் முக்கிய வேலை பொருளாதாரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவது ; அறிவாளர் குழுவின் முக்கிய வேலை அரசியல் போரை நடத்துவது ; உண்மையில், உயர்ந்த அரசியல் போர் பலவீனமாக இருந்தது. புரட்சி அரசியலைப் போலல்லாமல், மிதவாத அரசியலைப் போன்று இதன் போக்கு மிகமிக மந்தமாக இருந்தது. இதன் அஸ்திவாரம் பொருளாதாரவாதத்தை அடிப்படையாகக் கொண்டு நின்றது. பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்திவிட்டு, அரசியல் துறையைப் புறக்கணித்து ஒதுக்கிற இந்தப் போக்கு கொள்கையளவில் தோல்வியடைந்திருந் தாலும், பல்வேறு பகுதிகளில் இது பலமாக வேரூன்றி இருந்தது.

இந்த அமைப்பின் பலாபலத்தைத் தீப்பொறி சரியானபடி உணரலாயிற்று. சரியான ஸ்தாபன அமைப்புக்காக நடந்த போரில் விளாதிமிர் இலிச் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார். அவர் எழுதிய "ஏரெமுக்கு அல்லது தோழனுக்கு எழுதிய கடிதம்" என்பது கட்சியை ஸ்தாபிக்கும் வேலையில் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறலாம். கட்சியின் தொழிலாளி வர்க்கத்தன்மையைப் பலப்படுத்தவும் உடனடியான அரசியல் பிரசினைகள் சம்பந்தமாக நடக்கும் விவாதங்களில் தொழிலாளர்களை ஈடுபடுத்தவும் இது உதவி புரிந்தது. தொழிலாளி வர்க்கத்திற்கும் அறிவாளிகளுக்கும் மத்தியில், தொழிளாலர் நலன் கட்டியிருந்த பொருளாதீாரவாதச் சுவரை இது இடித்துத் தகர்த்தது. 1902-ம் ஆண்டு, குளிர்காலத்தில், கொள்கை சம்பந்தமான போர் உக்கிரமாக நடந்தது. தீப்பொறிவாதிகள் படிப்படியாக வெற்றி பெற்றனர். ஆனுல் அபூர்வமாக அவர்கள் தோல்வியும் அடைந்தனர்.

தீப்பொறியை ஆதரித்தவர்கள் நடத்தின போருக்கு விளாதிமிர் இலிச் தலைமை தாங்கினுர். அதே சமயத்தில் "மத்திய பொறுப்பு" சம்பந்தமாகச் சிலர் கொண்டிருந்த கருத்தையும் அவர் கண்டித்தார். தான்தோன்றித்தனமான போக்குகளை அவர் கடுமையாக எதிர்த்தார். கமிட்டியின் குணத்தை உருவகப் படுத்த விளாதிமிர் இலிச் அன்று எடுத்துக்கொண்ட முயற்சியின் அருமைகளைப்

பற்றி, இப்போதுள்ள இளம் தலைமுறையினருக்கு அதிகம் தெரிய இடமில்லை. எனினும் இதுதான் நமது கட்சியின் தன்மையை நிர்ணயித்தது; கட்சி இன்றைய நிலையை அடைய அதுதான் அஸ்திவாரமாக அமைந்தது.

தொழளாலர் நலனைச் சேர்ந்த பொருளாதாரவாதிகள் இந்தப் போரைக் கண்டு ஆத்திரம் அடைந்தனர். இதனால் தங்களின் செல்வாக்குக் குறைவதைக் கண்டு அவர்கள் மனம் புழுங்கினர். வெளிநாட்டிலிருந்து "உத்தரவுகள் பெறுவதை" அவர்கள் விரும்பவில்லை.

ஸ்தாபனப் பிரசினைகளைப்பற்றி விவாதிப்பதற்காக, பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து ஆகஸ்ட்டு மாதம் ஆறும் தேதி, தோழர் கிராஸானுக் லண்டன் வந்து சேர்ந்தார். "பிரஜையின் 47-வது இதழை நீங்கள் படித்தீர்களா?" என்பது அவருடைய வாசகம். அதிலிருந்து அவருக்கு நாங்கள் பிரஜை என்று பெயர் சூட்டினோம். பீட்டர்ஸ்பர்க்கின் ஸ்தாபனத்தைப் பற்றியும் அதன் அமைப்பைப்பற்றியும் விளாதிமிர் இலிச் அவருடன் நீண்ட நேரம் கலந்து பேசினார். இந்த விவாதத்தில் பி. எ. கிராஸிக்கோவும் போரிஸ் நிக்கோலோவிச் நோஸ்கோவும் கலந்து கொண்டனர். பிளக்கானவுடன் பேசுவதற்காகவும் தீப்பொறிவாதியாக அவரை மாற்றுவதற்காகவும் அவரை லண்டனிலிருந்து ஜினீவாவுக்கு நாங்கள் அனுப்பி வைத்தோம். சில வாரங்களுக்குப் பிறகு ஏரெம் என்று கையெழுத்திட்டு பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. குறிப்பிட்ட பிரதேசங்களில் எவ்வாறு ஸ்தாபனரீதியாக வேலை செய்ய வேண்டும் என்பதுபற்றிய விஷயங்கள் அந்தக் கடிதத்தில் அடங்கியிருந்தன. ஏரெம் என்பவர் தனிப்பட்ட பிரசாரகரா அல்லது எந்த வட்டாரத்தையும் சேர்ந்தவரா என்பதைக் கடிதத்திலிருந்து கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால், இது அவ்வளவு முக்கியமானதல்ல. இதற்கு என்ன பதில் எழுதுவது என்பதுபற்றி விளாதிமிர் இலிச் சிந்திக்க ஆரம்பித்தார். இந்தப் பதில்தான் தோழனுக்கு எழுதிய கடிதம் என்னும் சிறு நூலாக வளர்ந்தது. முதலில் இதனைக் கையெழுத்து வடிவில் நகல் செய்து எங்கும் பரப்பினார்கள். 1903-ம் வருடம் சைபீரியக் கமிட்டி இதை ரகசியமாக அச்சிட்டு நூலாக வெளியிட்டது.

எகாடெரினோஸ்லாவ் சிறையிலிருந்து தப்பின பாபுஷ்கின் 1902-ம் வருடம் செப்டம்பர் மாத ஆரம்பத்தில் லண்டனுக்கு வந்தார். சிறையிலிருந்து தப்பித்துப்போகவும் எல்லையைக் கடப்பதற்கும் மாணவர்கள் அவருக்கு உதவி புரிந்தனர். அவருடைய கூந்தலுக்கு அவர்கள் சாயம் பூசிவிட்டனர். சில தினங்களுக்குப் பிறகு அவருடைய கூந்தல் சிவப்பாக மாறியதால், அது எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. ஜெர்மனியில் அவர் கமிஷனர்களிடம் அகப்பட்டுக் கொண்டார். எப்படியோ, அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுவதின்றும் அவர் ஒருவாறு தப்பினார். அவர் தங்குவதற்குக் கம்யூனில் நாங்கள் ஏற்பாடு செய்தோம். லண்டனில் இருந்த காலம் முழுதும் அவர் அங்கேயே தங்கினார். அரசியல் அறிவு சம்பந்தப்பட்டவரை, அவர் அப்பொழுது வெகு தூரம் முன்னேறியிருந்தார். சொந்த அபிப்பிராயங்கள் படைத்த பண்பட்ட புரட்சிக்காரர் அவர். பல்வேறு தொழிலாளர் ஸ்தாபனங்களில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்; அவரே ஒரு தொழிலாளி. எனவே, தொழிலாளர்களிடம் அனுகும்

முறையைப் பிறரிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. சில வருஷங்களுக்கு முன்னர், ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக் கூடத்திற்கு வந்தபொழுது அவர் அனுபவமற்றவராகவே விளங்கினர். ஒரு சம்பவம் எனக்கு நினைவு இருக்கிறது. முதலில், அவர் லிடியா மிக்கலோவ்னு நிப்போவிச் வட்டாரத்தில் இருந்து வந்தார். அப்போது அவர்கள் ரஷ்ய இலக்கணம் படித்துக்கொண்டிருந்தனர். பல்வேறு உதாரணங்களால் இலக்கணத்தை விளங்கிக்கொண்டனர். "எங்கள் பாக்டரியில் விரைவில் ஒரு வேலைநிறுத்தம் நடக்கும்" என்று பாபுஷ்கின் கரும் பலகையில் எழுதிவிட்டார். வகுப்பு முடிந்ததும் அவரைத் தனியே அழைத்து, லிடியா திட்டினுள். "புரட்சிக் காரனுக இருக்க விரும்பினுல் உன்னை ஒரு புரட்சிக்காரனுக நீ விளம்பப்படுத்துக் கொள்ளக் கூடாது. தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும்" என்று லிடியா அவருக்கு எடுத்துரைத்தாள்.

அதன் பிறகு லிடியாவைத் தம் சிறந்த நண்பராகப் பாபுஷ்கின் மதித்தார். தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப்பற்றி அவளோடு விவாதித்தார்.

இந்தச் சமயத்தில்தான் பிளக்கானுவ் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். பாபுஷ்கினைச் சந்தித்துக் கலந்து பேச ஏற்பாடுகள் நடந்தன. அந்தக் கூட்டத்தில் ரஷ்ய பிரசினையை விவாதித்தோம். பாபுஷ்கினுக்குச் சொந்தமாகச் சில அபிப்பிராயங்கள் உண்டு. அவற்றை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு அவர் உறுதியுடன் நின்ருர். அவர் இவ்வாறு உறுதியுடன் நின்றதால், அவரைப் பிளக்கானுவ் நேசித்தார். ஜார்ஜ் வலான்டினுவிச் அவரைக் கூர்ந்து பரிசிலனை செய்தார். ஆனுல் ரஷ்யாவில் தமது எதிர்கால வேலைகளைப்பற்றி, பாபுஷ்கின் விளாதிமிர் இலிச்சுடன் மட்டுமே விவாதித்தார்; அவருடன் அந்தரங்கமாகப் பழகினர். குறிப்பிடத்தக்க சம்பவம் ஒன்று என் நினைவில் இருக்கிறது, பாபுஷ்கின் வந்த மூன்ருவது நாள் நாங்கள் கம்யூனுக்குள் பிரவேசித்தபோது. அங்கு யாவும் துப்புரவாக இருந்ததைக் கண்டு வியப்படைந்தோம். குப்பை கூழங்கள் எதுவும் தென்படவில்லை. மேஜைமீது பத்திரிகைகள் ஒழுங்காக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. பெருக்கி, தரை சுத்தமாக இருந்தது. இவற்றையெல்லாம் பாபுஷ்கினே செய்து முடித்திருக்கிருர் என்பதை நாங்கள் அறிந்தோம். 'ரஷ்ய அறிஞர்கள் எப்போதுமே அசுத்தமாய் இருக்கிருர்கள்; தாமாகவே எதையும் செய்துகொள்ள அவர்களுக்குத் தெரிவது இல்லை. வேலைக்காரர் ஒருவர் இருந்துதான் அவர்களுக்கு யாவற்றையும் சுத்தப்படுத்தி வைக்க வேண்டும்" என்ருர் பாபுஷ்கின்.

விரைவில் அவர் ரஷ்யாவுக்குப் பயணமானுர். அதன் பிறகு நாங்கள் அவரைச் சந்திக்கவில்லை. 1906-ம் வருடம் ஏனைய தோழர்களுடன் சைபீரியாவில் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டிருந்த காலத்தில் அவரைப் பிடித்துவிட்டார்கள். மற்ற தோழர்களுடன் அவரையும் அரசாங்கத்தார் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

பாபுஷ்கின் லண்டனில் இருந்தபொழுது கீவ் சிறையிலிருந்து தப்பின தீப்பொறி தோழர்கள் அத்தனை பேரும்—பாமான், குரோக்மல், புழுமென்பீல்டு வாலாச், தார்ஸிஸ்—லண்டனுக்கு வந்து சேர்ந்தனர். ஒரு பெட்டி நிறையப் பிரசுரங்களையும் விலர்சங்களையும் ரஷ்யாவுக்கு எடுத்துக்கொண்டு சென்ற

பொழுது, எல்லேப்புறத்தில் புழுமென்பில்டைக் கைது செய்தி கீவ் சிறையில் அடைத்துவிட்டார்கள்.

கீவ் சிறையிலிருந்து தப்பியோடத் தோழர்கள் ஆயத்தம் செய்துகொண்டிருக்கிருர்கள் என்பதை நாங்கள் அறியோம். அப்பொழுதுதான் டியூஷ் அரங்கத்தில் காட்சியளித்தார். சிறையிலிருந்து தப்பியோடுவது அசாத்தியமான காரியம் என்று இவர் கூறினர். எனினும் சியையிலிருந்து தோழர்கள் வெற்றிகரமாக வெளியேறிவிட்டார்கள். ஏற்பாடுகள் செய்து, கயிறுகளும் இரும்புத் துண்டுகளும் பாஸ்போர்டுகளும் சிறைக்குள் தருவித்துக்கொண்டார்கள். பயிற்சி நடக்கும்பொழுது வார்டரையும் காவற்காரர்களையும் கட்டிப் போட்டுவிட்டு, சுவர் ஏறிக் குதித்துக் கைதிகள் தப்பியோடிவிட்டார்கள். கடைசிவரை வார்டரைப் பிடித்துக்கொண்டு நின்றபடியால் ஸில்வினல் மட்டும் தப்பியோட முடியவில்லை.

அவர்கள் வந்துசேர்ந்த பிறகு, நாட்கள் வெகு வேகமாக ஓடின.

ஆகஸ்டு மாத மத்தியில் செல்வாக்குள்ள சட்ட விரோதமான பத்திரிகையான தென் தொழிலாளி ஆசிரியரிடமிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. தெற்கே அவர்கள் மேற்கொண்ட பல வேலைகள் தோல்வியடைந்தமையை விளக்கிவிட்டு, தீப்பொறி, வைகறை ஆகிய ஸ்தாபனங்களுடன் தாங்கள் நெருங்கிய தொடர்பு கொள்ள விரும்புவதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். எங்கள் கொள்கையை ஆதரிப்பதாகவும் அவர் அறிவித்து இருந்தார்; பல்வேறு சக்திகளை ஒன்றுபடுத்துவதற்கு இது அனுகூலமாக இருந்தது. ஆனல், மறு கடிதத்தில் தீப்பொறிவாதிகள், மிதவாதிகளுடன் நடத்தும் உக்கிரமான கொள்கைப் போரை அந்தப் பத்திரிகை ஏற்றுக்கொள்ளவில்லை. பிறகு அதன் இலக்கியப் பகுதினருக்கு எதிர்காலத்தில் தனிப்பட்ட முறையில் சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற யோசனையை அவர்கள் கூறத் தொடங்கினர். இதனல் முடிவான முறையில் ஒப்பந்தம் ஏற்படுவது கடினம் என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

அந்தக் காலத்தில் சைபீரியாவிலிருந்து தப்பியோடின டிராட்ஸ்கி சாம்ராவுக்கு வந்துள்ளதாக, சாம்ராத் தோழர்கள் தெரிவித்தார்கள்; அவர் தீப்பொறியை ஆதரிப்பதாகவும் எல்லோரையும் வசீகரிக்கும் தன்மை அவரிடம் அபரிமிதயாக இருப்பதாகவும் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். "உண்மையான ஒரு இளம் கழுகு" எனச் சாம்ராத் தோழர்கள் அவரை வருணித்தனர். "பேணு" என்று நாங்கள் அவருக்குப் புனைபெயர் சூட்டினேம். தென் தொழிலாளியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த, நாங்கள் அவரைப் போல்டாவாவுக்கு அனுப்பிவைத்தோம். இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக இந்த வட்டாரத்துடன் கலந்து வேலைசெய்வது சாத்தியம் என்று அவர் எழுதினர். தென் தொழிலாளி எங்தெந்த விஷயங்களில் மாறுபடுகிறது என்பதை அவர் சரியாக அறிந்துகொண்டார்.

(1) விவசாயிகளின் இயக்கத்தை அவர்கள் குறைத்து மதிக்கின்றனர்.

(2) மிதவாதிகளுடன் உக்கிரமான அரசியல் போர் நடத்துவதை அவர்கள் விரும்பவில்லை.

(3) தனி வட்டாரமாக இருந்துகொண்டு வேலைசெய்யவும் சொந்தமாகப் பத்திரிகை ஒன்று நடத்தவும் அவர்கள் விரும்புகிருர்கள்.

விரைவில் — அக்டோபரில் என்று நினைக்கிறேன் — டிராட்ஸ்கி லண்டனுக்கு வந்து சேர்ந்தார்.

ஒரு நாள் காலையில் வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அசாதாரணமான முறையில் வந்தவர் கதவைத் தட்டியபடியால், எங்களைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள் என்று நினைத்து, கதவைத் திறக்கும் பொருட்டு நான் விரைந்து சென்றேன். கதவைத் திறந்ததும் டிராட்ஸ்கி நிற்பதைக் கண்டேன். உடனே எங்கள் அறைக்கு நான் அவரை அழைத்துச் சென்றேன்; விளாதிமிர் இலிச் அப்பொழுதுதான் கண் விழித்தார் என்றாலும், அவர் படுக்கையிலேயே படுத்துக்கொண்டிருந்தார். அவர்கள் இருவரையும் அங்கேயே விட்டுவிட்டு, காப்பி தயார் செய்ய நான் சென்றேன். திரும்பிவந்தபோது, படுக்கையில் இருந்தபடியே, ஏதோ தத்துவ சம்பந்தமான விஷயங்களைப் பற்றி, உற்சாகத்துடன் விளாதிமிர் இலிச் டிராட்ஸ்கியுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"இளம் கழுகின்" மகிழ்ச்சிதரத்தக்க ஆலோசனைகளும் முதன்முதலாக நடைபெற்ற இந்தச் சம்பாஷணையும் விளாதிமிர் இலிச்சைப் பெரிதும் கவர்ந்தன. எனவே புதிதாக வந்துள்ள இவரிடம் விளாதிமிர் விசேஷ கவனம் செலுத்தினார். அவரோடு நீண்ட நேரம் சம்பாஷணைகள் நடத்தினார்; உலாவச் செல்லும் பொழுது அவரையும்கூட அழைத்துச் சென்றார்.

தென் தொழிலாளியைச் சேர்ந்தவர்களோடு, டிராட்ஸ்கி நடத்திய பேச்சு வார்த்தைகளை விளாதிமிர் இலிச் விசாரித்து அறிந்துகொண்டார். நிலைமையைத் தெளிவாக டிராட்ஸ்கி சித்தரித்தது, அவருக்குப் பெரிதும் மகிழ்ச்சி அளித்தது. வித்தியாசத்தின் சாரத்தை உடனே தெரிந்துகொள்ளும் டிராட்ஸ்கியின் திறமையையும், அழகான அறிக்கைகளுக்குள் மறைந்து கிடந்த அவர்களது ஆசையை—பொதுஜனப் பத்திரிகை எனும் பெயரில் தங்கள் வட்டாரத்தின் சுயேச்சையை நிலைநிறுத்த அவர்கள் செய்கிற முயற்சியை—உடனே காணும் திறமையையும் விளாதிமிர் இலிச் மிகவும் பாராட்டினார்.

அதற்குள் டிராட்ஸ்கியை ரஷ்யாவுக்கு அனுப்பும்படியாக ரஷ்யத் தோழர்கள் வற்புறுத்தலாயினர்; விஷயங்களை அறிந்துகொள்வதற்காகவும், தீப்பொறிக்கு உதவிபுரிவதற்காவும் அவர் வெளிநாட்டில் இருக்க வேண்டுமென்று விளாதிமிர் இலிச் விரும்பினார்.

பிளக்கானவ் டிராட்ஸ்கியைச் சந்தேகத்துடன் பார்த்தார். தீப்பொறி ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்த இளைஞர் வட்டாரத்தை (லெனின், மார்டோவ் பாட்ரஸ்ஸாவ்) ஆதரிப்பவர்களில் ஒருவராகவும், லெனினுடைய மாணவராகவும் பிளக்கானவ் டிராட்ஸ்கியைக் கருதினார். டிராட்ஸ்கியின் கட்டுரை ஒன்றைப் பிளக்கானவுக்கு விளாதிமிர் இலிச் அனுப்பியபொழுது, "உங்கள் பேனாவின் பேனாவை நான் விரும்பவில்லை" என்று பிளக்கானவ் பதில் எழுதி இருந்தார்.

"நடை என்பது பழக்கத்தைப் பொறுத்து அமைகிறது. ஆனால் விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் இவருக்கு விருப்பம் அதிகம் இருக்கிறது, ஆகையால் அவர் மிகவும் பயன்படுவார் என்று நான் கருதுகிறேன்" என்று விளாதிமிர் இலிச் பதில் எழுதினார்.

தீப்பொறி ஆசிரியர் குழாத்தில் டிராட்ஸ்கியையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று 1903-ம் வருடம் மார்ச்சு மாதம் விளாதிமிர் இலிச் பிரேரேபித்தார்.

விரைவில் டிராட்ஸ்கி பாரீஸுக்குச் சென்றார். அங்கே அவர் வெற்றிகரமாக முன்னேறினார்.

ஓடெஸ்ஸாவிலிருந்து புதிதாக எகாடெரினா மிக்கலோவ்னா அலெக்ஸாண்ட்ரோவா வந்து சேர்ந்தாள்; முன்னர் நாரோத்நாயா வாலியா கட்சியில் இவள் முக்கிய அங்கம் வகித்தவள்; அந்த அறிகுறிகள் இன்னும் அவளிடம் தென்பட்டன; ஆவேசமும் முயற்சியும் படைத்த டிம்காவைப் போன்று இவள் விளங்கவில்லை; ஆனால் அதிகத் தன்னடக்கம் வாய்ந்தவளாக விளங்கினாள். இப்பொழுது இவள் தீப்பொறியை ஆதரிப்பவளாக மாறிவிட்டாள். இவள் சொல்லுக்கு அதிக மதிப்பு இருந்தது. பழைய புரட்சிக்காரர்களை—நாரோத்நாயா வாலியா கட்சியைச் சேர்ந்தவர்களை - விளாதிமிர் இலிச் பெரிதும் மதித்தார். ஏகாடெரினா மிக்கலோவ்னா வந்து சேர்ந்ததும், நாரோத்நாயா வாலியா கட்சியில் அவள் முன்பு சேர்ந்திருந்தாள் என்பதனாலும், தற்பொழுது அவள் தீப்பொறி வட்டாரத்தில் சேர்ந்துகொண்டுவிட்டாள் என்பதனாலும், அவளைப்பற்றிய மனப்போக்கு விளாதிமிர் இலிச்சுக்கு உருவாகத் தொடங்கிற்று; என்னைப் பொறுத்தவரை, அவளைப் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் நான் அதிக நாட்டம் செலுத்தலானேன்.

உறுதியான சமதர்ம-ஜனநாயகவாதியாக நான் மாறுவதற்கு முன்னர், தொழிலாளர் அவசியல் வகுப்பு நடத்துவது சம்பந்தமாக, நான் அலெக்ஸாண்ட்ரோவ் தம்பதிகளை காணச் சென்றேன். அவர்கள் வீடு எளிய முறையில் இருந்தது. சாதாரணமான நாற்காலிகள் இருந்தன. எங்கும் புத்தகங்களும் புள்ளி விவரக் கணக்குகள் கொண்ட தஸ்தாவேஜ்களும் அடுக்கப்பட்டிருந்தன. அறையில் மைக்கேல் ஸ்டீபானோவிச் மௌனமாக வீற்றிருந்தார்; நாரோத்நாயா வாலியா கட்சியில் சேரும்படி மிக்கலோவ்னா என்னை உணர்ச்சிபூர்வமாக வேண்டிக்கொண்டாள்; இவை என்னைப் பெரிதும் கவர்ந்தன. எகாடெரினா மிக்கலோவ்னா இங்கு வந்து சேருமுன், இதை நான் விளாதிமிர் இலிச்சிடம் தெரிவித்தேன். அவளை நாங்கள் உற்சாகத்துடன் எதிர்பார்த்தோம். விளாதிமிர் இலிச் தோழர்களை எப்பொழுதுமே உற்சாகத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். யாரிடமாவது ஏதாவது ஒரு நல்ல குணத்தைக் கண்டுவிட்டால் அதை விடாப்பிடியாகப் பற்றிக்கொள்வார்; எகாடெரினா மிக்கலோவ்னா லண்டனிலிருந்து பாரீஸுக்குச் சென்றாள். தீப்பொறி வட்டாரத்தை உறுதியுடன் ஆதரிப்பவளாக அவள் விளங்கவில்லை. இரண்டாவது கட்சிக் காங்கிரஸில் லெனினுடைய "கைப்பற்றும்" தந்திரத்திற்கு எதிராகப் பின்னப்பட்ட எதிர்ப்பு வலையுடன் இவளுக்குச் சம்பந்தம் எதுவும் இல்லை யென்று சொல்லுவதற்கு இல்லை. பிறகு அவள் சமரஸ மத்திய கமிட்டியில் அங்கம் வகித்தாள்; அதன் பிறகு அரசியல் அரங்கத்திலிருந்தே மறைந்துவிட்டாள்.

ரஷ்யாவிலிருந்து லண்டனுக்கு வந்த தோழர்களில் போரிஸ் கோல்டுமானையும் டோலிவோ டோப்ரோவோல்ஸ்கியையும் எனக்கு நினைவு இருக்கிறது. நீண்ட காலத்துக்கு முன் பீட்டர்ஸ்பர்க்கிலிருக்கும்போது, போரிஸ் கோல்டுமானை நான் அறிவேன். "போராட்ட சங்கப்" பிரசுரங்களை அச்சிடும் வேலை

யில் அவர் அப்பொழுது ஈடுபட்டிருந்தார். அவர் மாறும்தன்மை படைத்தவர்; அப்பொழுது அவர் தீப்பொறியை பின்பற்றினர். டோலிவோ டோப்ரோ வோல்ஸ்கி மௌமாக இருப்பதில் கைதேர்ந்தவர்; சுண்டெலியைப் போன்று, பெரும்பாலும் இவர் மௌனமாகவே இருப்பார்; இவர் பீட்டர்ஸ்பர்க்குத் திரும்பிச் சென்றூர்; சில தினங்களுக்குப் பிறகு இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. சிறிது குணமடைந்ததும், இவர் தற்கொலை செய்துகொண்டுவிட்டார். அந்தக் காலத்தில், "தலைமறைவாக" வாழ்வது மிகவும் கடினம். இதைச் சகிக்கும் ஆற்றல் எல்லோருக்கும் இருக்காது.

காங்கிரஸுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதில் குளிர்காலம் முழுவதையும் செலவிட்டோம்; காங்கிரஸுக்கு ஏற்பாடு செய்வதற்காக 1902-ம் வருடம் நவம்பர் மாதம் நிர்மாணக் கமிட்டி யொன்றை நிறுவிக்கொண்டோம். நிர்மாணக் கமிட்டியில் தென் தொழிலாளியின் பிரதிநிதிகளும் வடக்கு லீகின் பிரதிநிதிகளும், கிரானுஷ்க்கும், ஐ. ஐ. ராடாசென்கோவும் கிராஸிக்கோவும் லெங்க்னிக்கும் கிரிஷிஞேவஸ்கியும் அங்கம் வகித்தனர். ஆரம்பத்தில் பண்டுப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர்.

"நிர்மாணக் கமிட்டி" மிகப் பொருத்தமான பெயர். இத்தகைய கமிட்டியின் உதவியின்றி, காங்கிரஸை நடத்த முடியாது. ஸ்தாபனரீதியாகவும் தத்துவரீதியாகவும் புதிதாக நிறுவப்பெற்ற அல்லது உருவாகிக் கொண்டுவந்த வட்டாரங்களை இணைக்கும் சிக்கலான வேலையை போலீஸாரின் கடுமையான அடக்குமுறைக்கு மத்தியில் சாதிப்பது மிகவும் கடினமான காரியம். எல்லாவற்றுக்கும் மேலாக வெளிநாட்டிலுள்ள மத்திய ஸ்தாபன அமைப்பைப் போன்று, ரஷ்யாவிலும் மத்திய ஸ்தாபனத்துக்கு அமைப்புக் கொடுக்க வேண்டியிருந்தது. நிர்மாணக் கமிட்டியுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளும் பொறுப்பையும், காங்கிரஸுக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பையும் விளாதிமிர் இலிச் ஏற்றுக்கொண்டு பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பாட்ரஸ்ஸாவ் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார்; லண்டன் குளிர் அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. வேறு ஒரு இடத்தில் தங்கி அவர் சிகிச்சை பெற்றுவந்தார். லண்டனும் அதில் ஒதுங்கி இருந்து வாழ்வதும் மார்டோவுக்குச் சலிப்பை உண்டாக்கின. எனவே பாரீஸுக்குச் சென்றூர். ஆனல் திரும்பிவர அவருக்குப் பணம் கிடைக்கவில்லை. சைபீரியச் சிறையிலிருந்து தப்பின தொழிலாளர் விடுதலை வட்டாரத்தின் பழைய அங்கத்தினர் டியூஷ் லண்டனுக்கு வந்திருக்க வேண்டும். அவர் பெரிய நிர்மாணகர் என்று அந்த ஸ்தாபனம் கருதி அவர்மீது அபார நம்பிக்கை வைத்திருந்தது. "டியூஷ் வரும் வரையில் பொறுத்திருங்கள் எல்லோரையும்விட ரஷ்யாவுடன் அவர் செய்திப் போக்கு வரத்து நன்கு நடத்துவார்" என்ருள் வீரா இவாவ்னேவ்ன. அவர்மீது பிளக்காஞவும் ஆக்ஸெல்ராடும் அபார நம்பிக்கை வைத்திருந்தனர். தீப்பொறி ஆசிரியர் குழாத்தில் தங்கள் பிரதிநிதியாக அவர் விளங்குவார் என்றும், எல்லாவற்றையும் அவர் நன்கு கவனித்துக்கொள்வார் என்றும் அவர்கள் கருதினர். எனினும் டியூஷ் வந்ததும், ரஷ்ய நிலைகளிலிருந்து அவர் நீண்ட காலம் பிரிந்திருக்க நேர்ந்ததால், அதற்குத் தகுந்த ஆற்றல் அவரிடம் போதிய அளவு இல்லை

யென்பது நன்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ரஷ்யாவுடன் செய்திப் போக்குவரத்து வைத்துக்கொள்ள அவர் தகுதியற்றவராக விளங்கினர். மனித சமூகத்துடன் தொடர்புகொள்ள அவர் துடிதுடித்தார். எனவே வெளி நாட்டு ரஷ்ய சமதர்ம—ஜனநாயக லீகில் அவர் அங்கத்தினராகச் சேர்ந்தார். ரஷ்யக் காலனிகளுடன் அவர் விரிவான தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். விரைவில் அவர் பாரீஸுக்குச் சென்றுவிட்டார்.

வீரா இவாவ்னேவ்னு ஸாஸுலிச் நிரந்தரமாக லண்டனில் வசிக்கத் தொடங்கினுள். இங்கேயும் ரஷ்யாவில் நடக்கும் வேலைகள் பற்றிய தகவல்களை அவள் கவனத்துடன் செவிமடுத்து வந்தாள். என்றாலும் செய்திப் போக்கு வரத்து வேலையைக் கவனிக்கும் ஆற்றல் அவளிடம் இல்லை. எல்லா வேலைகளை யும் விளாதிமிர் இலிச் கவனிக்க நேர்ந்தது. ரஷ்யாவுடன் நடைபெற்ற கடிதப் போக்குவரத்தின் காரணமாக, அவர் மிகவும் சோர்வுற்று அலுத்துப் போனுர். கடிதங்களுக்குப் பதில் கிடைக்க, வாரக் கணக்காக, மாதக் கணக்காக காத்துக் கொண்டிருப்பதும், மேற்கொண்ட முயற்சி வெற்றி யடைந்துள்ளதா அல்லது தோல்வி யடைந்துவிட்டதா என்று ஓயாமல் எதிர்பார்த்துக்கொண் டிருப்ப தும், வேலைகளின் வளர்ச்சி எவ்வாறு போய்க்கொண் டிருக்கிறது என்பதை அறிய முடியாமல் இருப்பதும் விளாதிமிர் இலிச்சின் குணத்துக்கு முற்றும் நேர் மாருனவை. சரியான தகவல் கொடுக்கும்படி அவர் ரஷ்ய தோழர்களை மன்ருடி வேண்டிக்கொண்டார். "அடிக்கடி கடிதம் எழுதும்படியும் மீண்டும் நாங்கள் உங்களை மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்; வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளு கிறோம். குறிப்பாக, உடனே இந்தக் கடிதம் கிடைத்த அன்றே தவருது பதில் எழுதுங்கள். ஒருசில வரிகள் எழுதினுலும் போதும்; கடிதம் உங்களுக்குக் கிடைத்தது எங்களுக்குத் தெரியட்டும்" என்று கடிதங்களில் குறிப்பிட்டு எழுதியிருந்தார். விரைவாகச் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் உருக்கமாக வேண்டிக்கொண்டார். "ஸோனியா பிணத்தைப் போன்று மௌனமாக இருக் கிருள்" என்றோ அல்லது "ஸோரின் கமிட்டிக் கூட்டற்கு வரவில்லை" யென்றோ அல்லது "கிழவியுடன்" எத்தகைய தொடர்பும் ஏற்படவில்லை யென்றோ செய்தி கிடைத்தால், அவருக்குப் பல இரவுகள் தூக்கமே வராது.

என் மனதில் தூக்கமற்ற அந்த இரவுகள் இன்னும் நன்ருக நினைவு இருக் கின்றன. உறுதி வாய்ந்த ஒன்றுபட்ட கட்சி ஒன்றை ஸ்தாபிக்க வேண் டும் என்றும் இப்பொழுது இருந்து வருவதைப் போன்று தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடாமல், அத்தகைய அஸ்திவாரத்தின்மீது கட்டப்பெருமல், வட்டாரங்களில் உள்ளவர்கள் அனைவரும் கட்சியில் இணைந்து ஒன்றுபட்டுவிட வேண்டும் என்றும் விளாதிமிர் இலிச் பெரிதும் விரும்பினர். செயற்கைச் சுவர்கள் இல்லாத ஒரு கட்சியை அவர் விரும்பினர். இதனல்தான் பண்டுடன் போராட நேர்ந்தது. அந்தக் காலத்தில் பண்டு அங்கத்தினர்களில் பெரும்பாலோர் தொழிலாளர் நலன் கொள்கையை ஆதரித்தனர். தேசிய விஷயங் களில் மாத்திரம், தனது சுயேச்சையை நிலைநிறுத்திக்கொள்ளலாம் என்ருலும், இறுதியில் அவர்கள் கட்சியில் சேர்ந்ததாக வேண்டும் என்று விளாதிமிர் கருதி னர். ஆனல் எல்லா பிரசினைகளையும் முடிவு செய்யும் முழுப் பொறுப்பும் தங்க

ளுக்கே இருக்க வேண்டும் என்று பண்டு கூறிற்று. அவர்கள், தங்கள் சொந்த அரசியல் கட்சியைப் பற்றிப் பேசினுர்களே தவிர, ரஷ்ய—சமதர்ம ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஒரு பகுதியினர் என்ற முறையில் அவர்கள் பேசவே இல்லை. சமஷ்டி அடிப்படையில் இணைந்துகொள்ள மாத்திரம் அவர்கள் இசைந் தனர். யூதப் பாட்டாளி மக்கள் சம்பந்தப்பட்டவரையில் இது தற்கொலைக்கு ஒப்பான ஒரு போக்கு ஆகும்; தன்னந்தனியே நின்று யூதத் தொழிலாளர்களால் வெற்றிபெறவே முடியாது. தங்கள் சக்திகளை ரஷ்யப் பாட்டாளி மக்களுடன் இணைப்பதன் மூலமே அவர்கள் வலிமை பெற முடியும். ஆனுல் பண்டுவாதிகள் இதை உணரவில்லை. இதனுல்தான் பண்டுடன் தீப்பொறி ஆசிரியர் குழாம் கடுமையாகப் போர் புரிய நேர்ந்தது; ஒற்றுமைக்காக நடந்த போர் அது. ஆசிரியர் குழாம் முழுதும் இந்தப் போரில் பங்கு எடுத்துக்கொண்டது. ஆனுல் ஒற்றுமைக்காகத் தீவிரமாகப் போராடுகிறவர் விளாதிமிர் இலிச் ஒருவர்தான்; பண்டு வாதிகளுக்கு இது நன்கு தெரியும்.

ஜினீவாவுக்குச் செல்ல வேண்டும் என்ற பிரசினையை, தொழிலாளர் விடுதலை வட்டாரத்தினர் மீண்டும் எழுப்பினர். இதற்கு எதிராக விளாதிமிர் இலிச் மாத்திரம்தான் ஓட் செய்தார். எனவே பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றன. விளாதிமிர் இலிச் பெரிதும் களைப்புடன் காணப் பட்டார்; நரம்புத் தளர்ச்சி காரணமாக அவர் வருந்தினுர். முதுகு, நெஞ்சு முதலிய இடங்களில் உள்ள நரம்புகள் வீங்கிவிட்டன. தேகமெல்லாம் வெடிப் புகள் தோன்றத் தொடங்கியதும், நான் ஒரு வைத்திய நூலை படித்தேன். வெடிப்பின் தோற்றத்திலிருந்து "ஹீரோஸ் ராஷ்" என்பது தெரிய வந்தது. வைத்தியக் கலாசாலையில் நான்கு அல்லது ஐந்தாவது வகுப்பில் படித்த தாக்த் தீரிவ் என் ஊகத்தைச் சரியென்று ஒப்புக்கொண்டார். நான் இலிச்சின் மீது "அயோடின்" தடவினேன்; வேதனை தாங்க முடியாது அவர் துடித்தார். டாக்டரிடம் சென்ருல் அவருக்கு ஒரு கினியாவது பீஸ் கொடுக்க வேண்டும். எனவே நாங்கள் டாக்டரிடம் செல்லவில்லை. இங்கிலாந்தில் டாக்டர்கள் அதிகமாகப் பீஸ் வாங்குவார்களாதலால் ஆங்கிலத் தொழிலாளர்கள் வீட்டு வைத்தியமே செய்துகொண்டனர். ஜினீவாவுக்குச் செல்லும் வழியில் விளா திமிர் இலிச் மிகவும் வேதனைப்பட்டார். ஜினீவாவுக்குப் போய்ச் சேர்ந்ததும், அவர் உடல்நிலை சீர்கேடு அடைந்தது. இரண்டு வாரங்கள்வரை அவர் படுத்த படுக்கையாய்க் கிடந்தார்.

லண்டனில் இருந்தபொழுது தனக்குச் சலிப்பை அளிக்காத வேலை ஒன்றை விளாதிமிர் இலிச் செய்து முடித்தார். கிராம ஏழைகளுக்கு என்னும் ஒரு புத்தகத்தை அவர் எழுதி முடித்தார். இந்த வேலை அவருக்குத் திருப்தி அளித் தது. விவசாயிகளுக்கு என ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்ற எண்ணத்தை 1902-ம் நடந்த விவசாயிகளின் எழுச்சி, அவரிடம் உண்டாக்கிற்று. தொழி லாளர் கட்சி எதை நோக்கமாகக் கொண்டு வேலை செய்து வருகிறது என்பதை யும் தொழிலாளர்களுடன் விவசாயிகள் ஏன் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்ப தையும் அந்தப் புத்தகம் தெளிவாக விளக்கிற்று.

1903-ம் வருடம் ஏப்பிரல் மாதம் நாங்கள் ஜினீவா சென்ருேம்.

ஜினீவா

(1903)

ஜினீவாவில், நகரத்திற்கு வெளியே யிருந்த தொழிலாளர் பகுதியில்—செக்கேரோன் பகுதியில்—நாங்கள் வசித்தோம். ஒரு சிறிய வீட்டில் குடியிருந்தோம். கீழே பெரிய அடுக்களை இருந்தது; மேலே மூன்று சிறிய அறைகள் இருந்தன. நாற்காலிகள் எங்களிடம் அதிகமாக இல்லாததால், புத்தகங்களையும் தட்டுமுட்டு சாமான்களையும் வைப்பதற்காக உபயோகப்படுத்திய பெட்டிகளை, நாற்காலிகளாக நாங்கள் உபயோகித்துக்கொண்டோம். "ஓடி ஒளிகிறவர்களுக்கு ஏற்ற குகை" என்பதாக எங்கள் அடுக்களையை வருணித்து கிராஸிகோவ் கேலி செய்வார். விரைவில், எங்கள் வீட்டில் நகருவதற்குக்கூட, இடம் இல்லாது போயிற்று. அந்தரங்கமாக யாருடனும் பேசவேண்டுமானால், அண்மையிலுள்ள பூங்காவுக்கோ அல்லது ஏரிக்கரைக்கோதான் நாங்கள் போக வேண்டியதாக இருந்தது.

பிரதிநிதிகள் வர ஆரம்பித்தார்கள். முதலில் டெமென்டியெவ் தம்பதிகள் வந்தார்கள். போக்குவரத்து சம்பந்தமாக கோஷ்டியாவுக்கு இருக்கும் ஞானத்தைக் கண்டு விளாதிமிர் இலிச்சுக்கு ஒரே வியப்பு. "போக்குவரத்து நடத்துவதில் உண்மையாகவே அவள் ஒரு திறமைசாலி" என்று விளாதிமிர் இலிச் மீண்டும் கூறினர். "அவள் வம்பளப்பவள் அல்லள்; ஆனால் செயலாற்றுபவள்" என்றார். எங்களுடன் நெருங்கிப் பழகிய லியூபோவ் நிகாலோயெவ்னா ராடாசென்கோவும் அங்கு வந்து சேர்ந்தார். மணிக்கணக்கில் நாங்கள் பேசிக்கொண் டிருந்தோம். பிறகு ராஸ்டாவ் பிரதிநிதிகள்—குஸியெவ், லோக்கர்மான், ஸெம்லியாச்கா, ஷாட்மான், லிட்டில் அங்கிள், டிமிட்ரி இலிச்—ஆகியோர் வந்து சேர்ந்தனர். நாள்தோறும் யாராவது வந்துகொண்டே இருந்தனர். திட்டம், பண்டு ஆகிய பிரசினைகள்பற்றி நாங்கள் பிரதிநிதிகளிடம் விவாதித்தோம். இவைபற்றி அவர்கள் கூறிய அபிப்பிராயங்களை நாங்கள் கவனத்துடன் செவிமடுத்தோம்; மார்டோவ் தொடர்ந்து எங்கள் வீட்டிலேயே தங்கத் தொடங்கினர். பிரதிநிதிகளோடு பேச அவர் சலிக்கவே இல்லை. பிறகு டிராட்ஸ்கி வந்து சேர்ந்தார். திரும்பி வருவதற்குக்கூட, அவருக்கு அவர்கள் அனுமதி அளித்தனர். "பயிற்சி பெறும்பொருட்டு" பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து புதிதாக வந்திருந்த பிரதிநிதி ஷாட்மனை நாங்கள் டிராட்ஸ்கியுடன் அனுப்பி வைத்தோம்.

பொதுஜனப் பத்திரிகை எனும் போர்வையில் தனித்து இயங்கும் உரிமை தங்களுக்கு வேண்டும் என்று தென் தொழிலாளி வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் செய்யும் கிளர்ச்சியின் தன்மையை நாங்கள் பிரதிநிதிகளிடம் விளக்கிச்

சொன்னோம். சட்ட விரோதமான நிலையில் செல்வாக்குள்ள பத்திரிகை என்பது பொதுஜனப் பத்திரிகையாக விளங்க முடியாது என்பதையும் பகிரங்கமாக அதை விற்க முடியாது என்பதையும் எடுத்து உரைத்தோம். இது சம்பந்தமாக விளாதிமிர் இலிச், மார்டோவ் ஆகியோர் கூறிய கருத்துக்களை டிராட்ஸ்கி ஆதரித்தார். ஆனால், பிளக்கானவ் இதை எதிர்த்தார். லான்ஹோல்ட் கபேயில் பிரதிநிதிகள் கூட்டம் நடந்தது. பிளக்கானவுக்கும் டிராட்ஸ்கிக்கும் விவாதம் நடந்தது. தென் தொழிலாளியுடன் நேரடியான தொடர்புள்ள பிரதிநிதிகளில் பெரும்பாலோர் டிராட்ஸ்கியின் முடிபே சரியானது என்று கருதினர். பிளக்கானவ் மட்டும் இதை ஒப்புக்கொள்ளவில்லை; தனித்தே நின்றார்.

தீப்பொறி ஆசிரியர் குழாத்தில் அபிப்பிராய பேதம் தலைதூக்கிற்று. நிலைமை சகிக்க முடியாததாயிற்று. ஆசிரியர் குழாம் இரண்டு பிரிவுகளாக—ஒரு புறம் பிளக்கானவ், ஆக்ஸெல்ராடு, ஸாஸூலிச் ஆகியோரும், மறு புறம் லெனின், மார்டோவ், பாட்ரஸ்ஸாவ் ஆகியோருமாகப் பிரிந்து நின்றது. மார்ச்சு மாதத்திலேயே கூறின யோசனையை—ஏழாவது அங்கத்தினராக டிராட்ஸ்கியை ஆசிரியர் குழாத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற யோசனையை—விளாதிமிர் இலிச் மீண்டும் கிளப்பினர். இதைப் பிளக்கானவ் பலமாக எதிர்த்ததால், இந்த யோசனை அமலாகவில்லை. ஒரு நாள் ஆசிரியர் குழாம் கூட்டத்திலிருந்து மிகுந்த கோபத்துடன் விளாதிமிர் இலிச் திரும்பி வந்தார். "மிகக் கேவலமான நிலைமை" என்று கூறினர். "பிளக்கானவுக்குப் பதில் சொல்ல யாருக்கும் தைரியம் இல்லை. வீரா இவாவ்னோவாவைப் பார்! பிளக்கானவ் டிராட்ஸ்கியைத் தாக்குகிறார். ஜார்ஜ் எப்பொழுதும் இப்படித்தான் நடந்து கொள்வார். அவர் சத்தம் மாத்திரம்தான் போடுவார் என்று வீரா சொல்லுகிறாள். இந்த நிலையை என்னால் சகிக்க முடியாது" என்று கூறினர். காங்கிரஸுக்குச் சிறிது காலம் முன்னர் கிராஸ்கிகோவை ஆசிரியர் குழாத்தில் சேர்த்துக் கொண்டனர். ஏனெனில் ஏழாவது அங்கத்தினர் ஒருவர் இருந்துதான் தீர வேண்டும். அதே சமயத்தில் மூன்று பேரை மட்டும் வைத்து நடத்துவதைப் பற்றியும் விளாதிமிர் யோசித்துக்கொண் டிருந்தார். இது வேதனை அளிக்கும் விஷயம். எனவே இதைப்பற்றிப் பிரதிநிதிகளிடம் பிரஸ்தாபிக்கவில்லை. ஏற்கனவே அமைந்துள்ள ஆசிரியர் குழாத்தைக் கொண்டு, கடமையைச் சரிவரத் தொடர்ந்து நடத்த முடியாது என்பது மிக மிக வேதனை தரும் விஷயம். எனவே அது சாதாரணமாகப் பேசக் கூடிய விஷயமல்ல.

'நிர்மாணக் கமிட்டி' அங்கத்தினர்களைப்பற்றிப் பிரதிநிதிகளில் சிலர் குறை கூற ஆரம்பித்தனர். ஒருவர் அவசர அவசரமாகக் காரியங்களைச் செய்வதாகவும் இன்னொருவர் தவறாக நடந்துகொள்வதாகவும், மற்றொருவர் மந்தமாக இருப்பதாகவும் அவர்கள் குறைகூறினர். கட்டளை பிறப்பிப்பதிலேயே தீப்பொறி அதிக நாட்டம் செலுத்துவதாகவும் சிலர் குறை கூறினர். ஆனால் உண்மையான அபிப்பிராய பேதம் எதுவும் இல்லை என்றும் காங்கிரஸுக்குப் பிறகு எல்லாம் முறையாக நடக்கும் என்றும் பொதுவாக எல்லோரும் கருதினர்.

கிரிஷினோவஸ்கை, லெங்க்னிக் ஆகியோரைத் தவிர்த்து, ஏனைய பிரதிநிதிகள் அனைவரும் வந்துவிட்டனர்.

இரண்டாவது காங்கிரஸ்

(ஜுலை—ஆகஸ்டு—1903)

புருஸெல்ஸில் நடத்துவது என முன்பே முடிவு செய்திருந்தபடி, காங்கிரஸின் ஆரம்பக் கூட்டங்கள் அந்த நகரிலேயே நடைபெற்றன. அப்பொழுது புருஸெல்ஸில் வசித்த பழைய பிளக்கானுவ்வாதி கோல்ஸாவ், கூட்டத்துக்கான சகல ஏற்பாடுகளையும் தாமே செய்வதாக ஒப்புக்கொண்டார். எனினும் கூட்டத்துக்கு ஆன ஏற்பாடுகளைச் செய்வது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை. கோல்ஸாவைச் சந்திக்கும்படி நாங்கள் பிரதிநிதிகளிடம் கூறியனுப்பினோம். அதன்படி நான்கு ரஷ்யர்கள் அவரைச் சந்திக்கச் சென்றதும், இனி மேல் யாரும் வரக் கூடாது என்றும் மீறி யாராவது அப்படி வந்தால், அவர்கள் வீட்டைவிட்டு வேறு இடத்துக்குக் குடித்தனம் போய்விட வேண்டும் என்றும் வீட்டுக்குச் சொந்தக்காரி, கோல்ஸாவ் தம்பதிகளிடம் கண்டிப்பாகக் கூறிவிட்டாள். எனவே நாள் முழுதும் தெருக்கோடியில் நின்றுகொண்டு காங்கிரஸுக்கு வரும் பிரதிநிதிகளை எல்லாம் 'கோக்டி ஓர்' என்ற சமதர்ம ஒட்டலுக்குச் செல்லும்படி ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று; இதற்காக, கோல்ஸாவின் மனைவி நெடு நேரம் தெருக்கோடியில் நிற்கவேண்டியதும் ஆயிற்று.

கூச்சலிட்டுக்கொண்டு கூட்டம் கூட்டமாக, பிரதிநிதிகள் அங்கும் இங்குமாக ஒட்டலில் திரிந்தனர்; தன் கையில் சாராயக் கிண்ணத்தைப் பிடித்துக்கொண்டு, நாள்தோறும் மாலையில் குஸெவ் உரத்த குரலில் பாடியதால், அதைக் கேட்பதற்கு ஜனங்கள் ஜன்னல் அருகே வந்து கூடிவிடுவர்; குஸெவ் பாடுவதைக் கேட்பதில், குறிப்பாக, 'மாதாகோயிலிலிருந்து நாங்கள் வெளியேறினோம்' என்ற பாடலைக் கேட்பதில் விளாதிமிர் இலிச்சுக்குப் பிரியம் அதிகம்.

கடைசி நிமிடத்தில் காங்கிரஸை ரகசியமான ஓர் இடத்துக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு அதை அங்கே நடத்தினோம். நடபடிக்கைகள் ரகசியமாக இருக்க வேண்டும் என்பதை முன்னிட்டு, காங்கிரஸை ஒரு பெரிய பண்டகசாலையில் நடத்துவது நலம் என்று பெல்ஜியக் கட்சியார் கருதினர். எங்கள் விஜயம் நிலைதடுமாறியவர்களை மட்டும் அன்றி, போலீஸாரையும் நிலைகலங்கச் செய்தது. ஏதோ ஒரு ரகசிய வேலைக்காக ரஷ்யப் புரட்சிக்காரர்கள் ஒன்று கூடுகின்றனர் என்ற செய்தி எங்கும் பரவியது.

பூரண அதிகாரம் பெற்ற நாற்பத்து மூன்று பிரதிநிதிகளும் ஆலோசனை கூறும் அதிகாரம் பெற்ற பதினான்கு பிரதிநிதிகளும் காங்கிரஸில் கலந்துகொண்டனர். ஆயிரக்கணக்கான கட்சி அங்கத்தினர்களுக்குப் பிரதிநிதிகளாக ஏராள

மானவர்கள் கலந்துகொள்கிற இன்றையக் காங்கிரஸோடு அந்தக் காங்கிரஸை ஒப்புநோக்கினுல், அது ஒரு சிறிய காங்கிரஸாகவே தோன்றச் செய்யும். ஆனுல் அப்போது அந்தக் காங்கிரஸ்தான் எங்களுக்குப் பெரிய காங்கிரஸாகத் தோன்றியது. 1898-ல் நடைபெற்ற முதல் காங்கிரஸில் எட்டுப் பேர் மட்டுமே பங்கு எடுத்துக்கொண்டனர்; ஆனுல் இந்தக் காங்கிரஸிலோ அதிகம் பேர் கலந்து கொண்டிருப்பதால், ஐந்து வருடங்களுக்கு இடையில் குறிப்பிடத்தக்க அபி விருத்தி ஏற்பட்டிருக்கிறது என்று எங்களுக்குத் தோன்றியது. இந்தப் பிரதிநிதிகளை அனுப்பினவர்கள் மானஸிக உணர்ச்சியுடன் அவர்களை அனுப்பவில்லை என்பதும், விரிவாகப் பரவிவரும் தொழிலாளர் இயக்கத்துடன் நேரடியான தொடர்புள்ள, உருப்பெற்று ஓங்கி வளர்ந்து வருகிற ஸ்தாபனங்களே இவர்களை அனுப்பி இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம்.

இந்தக் காங்கிரஸ் நடக்க வேண்டும் என்று விளாதிமிர் இலிச்சுக்கு இருந்த ஆசைதான் எவ்வளவு! தம் வாழ் நாள் முழுதும், கடைசி நிமிடம்வரைகூட கட்சிக் காங்கிரஸ்களில் அதிக அக்கரைகொண்டு, விசேஷ கவனம் செலுத்தி வந்தார் இலிச். முடிவான அதிகாரம் கட்சிக் காங்கிரஸுக்குத்தான் இருக்க வேண்டும் என்றும் அவர் கருதினுர். காங்கிரஸில் தனி மனிதனின் செல்வாக்கு இடம் இருக்கக் கூடாது என்றும் ஒளிவு மறைவாகப் பேசாமல், எதையும் பகிரங்கமாகப் பேச வேண்டும் என்றும் அவர் விரும்பினுர். கட்சிக் காங்கிரஸ்கள் எப்பொழுது நடந்தாலும் முழுக் கவனத்தையும் செலுத்தி, அதற்குத் தன்னை இலிச் தயார்ப்படுத்திக்கொள்வார்; ஆற அமர யோசித்து, தமது சொற்பொழிவுகளைத் தயார் செய்துகொள்வார்; கட்சிக் கொள்கை, வேலை முறை ஆகிய அவசரமான பிரசினைகளைப்பற்றிக் கட்சியுடன் கூட்டு முறையில் விவாதிக்க வருடக் கணக்கில் காத்திருக்க நேரும் என்பதையும் அத்தகைய சட்டவிரோதமான காங்கிரஸைக் கூட்டுவதற்கு எவ்வளவு சிரமங்கள் உண்டு என்பதையும் இன்றைய வாலிபர்களுக்குப் புரிய வைப்பது மிகச் சிரமமான காரியம். கட்சிக் காங்கிரஸ்களில் விளாதிமிர் இலிச் ஏன் இவ்வளவு கவனம் செலுத்தினுர் என்பதையும் அவர்களால் முற்றுமே அறிந்துகொள்ள முடியாது.

இலிச்சைப் போலவே, பிளக்கானுவும் காங்கிரஸ் கூடுவதை எதிர்பார்த்து ஆர்வத்துடன் காத்திருந்தார். காங்கிரஸை அவர்தான் தொடங்கி வைத்தார். உடனடியாக அந்தச் சமயத்துக்கு எனத் தயார் செய்துகொண்ட ஒரு மேடை அருகே இருந்த பெரிய பண்டகசாலை ஜன்னலில், சிவப்புப் படுதா தொங்கியது. உணர்ச்சி பெருக்கெடுத்து, எல்லோர் நெஞ்சிலும் ஒரே பரபரப்பு. பிளக்கானுவின் பேச்சு உருக்கமாகவும் ஒளிவு மறைவின்றி உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தி எதிரொலிப்பதாகவும் இருந்தது. வேறு எவ்விதமாக அவருடைய பேச்சு இருக்க முடியும்? நீண்ட கால் வெளிநாட்டு வாசம் அவருக்கு மங்கி மறைந்துவிடுவதுபோல் தோன்றியது. ரஷ்ய சமதர்ம ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸில் அவரே வந்து கலந்துகொள்ளுகிருர்; அவரே அதைத் திறந்து வைக்கிருர்.

உண்மையில் இரண்டாவது காங்கிரஸை ஆரம்பக் காங்கிரஸ் என்றே கூற வேண்டும். ஏனெனில் இந்தக் காங்கிரஸில்தான், கட்சியின் அடிப்படைத் தத்துவத்தைப்பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தனர்; கட்சிக் கொள்கைகளுக்கு

அஸ்திவாரம் அமைத்தனர். கட்சியின் பெயர், கட்சியின் ஸ்தாபித சம்பந்த மான அறிக்கை ஆகிய இரண்டையும் அங்கீகரித்துத் தீர்மானம் செய்ததைத் தவிர, வேறு எந்தக் காரியத்தையும் முதல் காங்கிரஸ் செய்யவில்லை. இரண்டா வது காங்கிரஸ் கூடுவதற்கு முன்னர், கட்சிக்கு என ஒரு வேலைத் திட்டம் வகுக் கப்படாமலே இருந்துவந்தது. தீப்பொறி ஆசிரியர் குழாம் வகுத்த கட்சித் திட் டத்தை எல்லோரும் விரிவாக விவாதித்தனர்; ஒவ்வொரு வார்த்தையும் சொற் ரெடரையும் நிறுத்து நிதானித்து உபயோகப்படுத்தினர்; இது பற்றிக் கார சாரமான விவாதம் நடத்தினர்; மூனிக் பகுதி, ஸ்விஸ் பகுதி ஆசிரியர் குழாம் களுக்கிடையே, இந்த வேலைத் திட்டம் சம்பந்தமாக மாதக்கணக்கில் கடிதப் போக்குவரத்துகள் நடந்தன; இந்தத் தகராறுகள் எல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் வாதந்தான் என்றும் கட்சி வேலைத்திட்டத்தில் "ஏறக்குறைய" என்ற சொற்றொடர் இருந்தாலும் இல்லை என்ருலும் பாதகமில்லை என்றும் அனுபவவாதிகள் கருதினர்.

இந்தத் தருணத்தில் எனக்கும் விளாதிமீர் இலிச்சுக்கும் எங்கேயோ ஓர் இடத்தில் லியோ டால்ஸ்டாய் உபயோகப்படுத்தி இருக்கும் ஓர் உதாரணம் நினைவுக்கு வந்தது. ஒரு நாள் அவர் உலாவச் சென்றபொழுது, சிறிது தொலைவில் ஒரு மனிதன் முழங்கால்கள் படிய அமர்ந்து தன் கைகளை விகாரமாக அசைத்து கொண்டிருப்பதை அவர் கண்டாராம். 'ஏதோ பைத்தியக்காரன் போலும்' என எண்ணிவிட்டு அவர் அருகே சென்று பார்த்தாராம். வீதியிலுள்ள கல் ஒன்றில் தனது கத்தியை அவன் தீட்டிக் கூர்மையாக்கிக்கொண்டு இருந்தானும்; தத்துவ ரீதியான விவகாரங்களும் இத்தகையதுதான்; விலகி இருந்து கவனித்தால் விவகா ரத்துக்கு இடமில்லாதவைபோல் அந்தத் தத்துவங்கள் தோன்றும். ஆனல், அவற்றின் சாராம்சம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால், பிறகு அவை மிகமிக முக்கியமானவையாகத் தோன்றிவிடும். இதைப் போலத்தான் வேலைத் திட்டம் பற்றிய விவாதமும்.

பிரதிநிதிகள் ஜினீவாவுக்கு வரத் தொடங்கியதும், மற்றவற்றைக் காட்டி லும் வேலைத்திட்டம் பற்றி மட்டுமே நாங்கள் விரிவாக அவர்களுடன் விவாதித் தோம். ஆகவே மற்றவற்றைக் காட்டிலும் காங்கிரஸ் இதை வெகு எளிதாக அங்கீகரித்தது.

காங்கிரஸ் விவாதித்த இன்னொரு முக்கிய விஷயம் பண்டு. சுய இயக்க உரிமை இருந்தபோதிலும், கட்சியில் ஒரு பகுதியாகவே பண்டு இருந்து இயங்க வேண்டும் என்று முதலாவது காங்கிரஸ் தீர்மானித்து இருந்தது. என்ரு லும் கடந்த ஐந்து வருடங்களில்—முதலாவது காங்கிரஸுக்குப் பிறகு—கட்சி, ஒன்றுபட்ட ஒரு முழுக் கட்சியாக இயங்கவில்லை. பண்டு தனித்து நின்று இயங்கி வந்தது. ஆகவே முன்னைப்போல, ரஷ்ய சமதர்ம ஜனநாயகக் கட்சியுடன் சமஷ்டி உறவை மட்டும் வைத்துக்கொண்டு, முன்போலவே தனித்து இயங்கி, தன் நிலையைப் பலப்படுத்திக்கொள்ளப் பண்டு இப்போது விரும்பியது. பண்டின் இந்த மனப்போக்குக்குக் காரணம் என்ன? யூத மாகாண நகரங்களில் வாழும் கைத்தொழிலாளர்களின் மனோநிலையைப் பிரதிபலித்து, அரசியல் போராட்டத் தைக் காட்டிலும் பொருளாதாரப் போராட்டத்திலே தனது முழுக் கவனத்தை

யும் பண்டு செலுத்த விரும்பியது; அதனால் தீப்பொறிவாதிகளின் சார்புபற்றி நில்லாமல் பொருளாதாரவாதிகளின் சார்புபற்றி நிற்பதையே அது அதிகம் விரும்பியது. ரஷ்யாவில் வாழும் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த, தொழிலாளர்கள் அனைவரையும் தன்னுட்கொண்ட, பலமான ஒன்றுபட்ட தொழிலாளர் கட்சி தோன்ற வேண்டுமா? அல்லது தேசீய இனவாரியாகப் பிரிந்து நிற்கும் பல்வேறு தொழிலாளர் கட்சிகள் இருக்க வேண்டுமா? இதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி. கட்சிக்குள்ளே சர்வதேச ஒற்றுமையை நிலை நிறுத்தும் முக்கிய பிரசினை இது. தொழிலாளர் வர்க்கத்தைச் சர்வதேச ரீதியில் ஒன்றுபடுத்துவது தீப்பொறியின் நோக்கம். தேசிய இன சுயஇயக்க உரிமையை நிலைநிறுத்துவதும் ரஷ்யாவில் இயங்கும் பல்வேறு தேசீய இனத் தொழிலாளர் களிடையே, நட்பை அடிப்படையாகக்கொண்ட ஒப்பந்த உறவுகளை மாத்திரம் நிலைநிறுத்துவதும் பண்டின் நோக்கம்.

பிரதிநிதிகள் வந்து சேரச் சேர நாங்கள் பண்டின் போக்கை அவர்க ளிடம் விரிவாக விவாதித்தோம். பெரும்பாலோர் தீப்பொறியின் போக்கை ஆதரித்தனர்.

இரண்டாவது காங்கிரஸில் விவாதத்துக்கு வந்து அது எடுத்த அனேக முக்கியமான முடிவுகள், விவரங்கள் தெரிந்துகொள்ள முடியாதபடி, பிளவு ஏற் பட்ட பின்னர், மறைந்துவிட்டன. இந்தப் பிரசினைகள் பற்றிய விவாதம் நடை பெற்ற காலத்தில், தனது போக்கை அனுசரித்த வகையில் பிளக்கானுவின் போக்கு இருப்பதை விளாதிமிர் இலிச் உணர்ந்தார். "புரட்சியின் நலமே முதன்மையான நியதி" என்பதை அடிப்படையாகக்கொண்டு ஜனநாயகக் கொள்கைகள் மலர வேண்டும் என்றும் சர்வஜன வாக்குரிமை என்பதையும் இந்தக் கண்ணோட்டத்தோடுதான் பார்க்க வேண்டும் என்றும் பிளக்கானுவ் தன் பேச்சில் குறிப்பிட்டார். இந்தக் கருத்துக்கள் விளாதிமிரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. பதினன்கு ஆண்டுகளுச்குப் பின்னர், அரசியல் நிர்ணய சபையை கலைக்க வேண்டிய நிர்பந்தம் போல்ஷ்விக்குகளுக்கு ஏற்பட்டபொழுது, பிளக்கானுவின் இந்தப் பேச்சு விளாதிமிர் இலிச்சின் நினைவுக்கு வந்தது.

பிளக்கானுவின் இன்னொரு பேச்சும் விளாதிமிர் இலிச்சின் கருத்துக்கு இயைய அமைந்திருந்தது. "பாட்டாளி மக்களின் உரிமைகளுக்கு உத்திர வாதம் என்ற அடிப்படையில் பொதுஜனக் கல்வி அமைந்திருக்க வேண்டும்" என்று பிளக்கானுவ் கூறினர். இது லெனினுக்கு மிகவும் பிடித்திருந்தது. தன் கருத்துக்கு இயைய லெனின் கருத்துக்கள் இருப்பதையும் பிளக்கானுவ் இந்தக் காங்கிரஸில் அறிந்துகொண்டார்.

பிளக்கானுவுக்கும் லெனினுக்கும் இடையே மனக்கசப்பை வளர்க்க தொழிலாளர் நலன் சார்பானவரான அக்கிமோவ் பெரிதும் முயன்றார். அவருக்குப் பதில் சொல்லும்பொழுது பிளக்கானுவ் இவ்வாறு வேடிக்கையாகச் சொன்னர்: "தம்முடைய மார்ஷல்களை விவாகரத்துச் செய்துகொள்ளும்படியாக நெப்போலியன் தூண்டினர். சில மார்ஷல்கள் தங்கள் மனைவியரைக் காதலித் தனர்; எனினும் நெப்போலியன் விருப்பத்துக்கு அடிபணிந்து அவர்கள் தங்கள் மனைவியரை விவாகரத்துச் செய்துவிட்டனர். இந்த அம்சத்தில் தோழர்

அக்கிமோவை நெப்போலியனுடன் ஒப்பிடலாம். எப்படியாவது லெனினிடமிருந்து என்னைப் பிரித்துவிட அவர் விரும்புகிறார். ஆனால், நெப்போலியனுடைய மார்ஷல்களைவிட நான் அதிக மனோவலிமை படைத்தவன். லெனினைப் பிரிய நான் விரும்பவில்லை; என்னைப் பிரிய லெனினும் விரும்பவில்லை'' என்று கூறினார்.

இதற்கு 'ஆம்' என்பதுபோலத் தன் தலையை விளாதிமிர் இலிச் அசைத்துப் புன்னகை புரிந்தார்.

நிகழ்ச்சிக் குறிப்பிலுள்ள முதல் விஷயத்தை—அதாவது காங்கிரஸின் அமைப்புப் பற்றிய விஷயத்தை—விவாதத்துக்கு எடுத்துக்கொண்டனர். ''போராட்டம்'' குழுவினரிலிருந்து (ரியாஸானுவ், நெவ்ஸோராவ், குருவிச்) ஒரு பிரதிநிதியை அமைப்பது பற்றி எதிர்பாராத முறையில் விவாதம் ஒன்று எழுந்துவிட்டது. தனது சொந்த அபிப்பிராயத்தைக் காங்கிரஸின் முன்னர் மட்டுமே சமர்ப்பிக்க நிர்மாணக் கமிட்டி விரும்பியது. விவாதத்துக்கு உரிய விஷயம் ''போராட்டம்'' குழுவினர் அல்ல என்பதும், நிர்மாணக் கமிட்டி தனது அங்கத்தினர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடக்கி, காங்கிரஸிலிருந்து தனித்து நின்று இயங்க விரும்பியுள்ளது என்பதும் தெரிய வந்தது. எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பதைத் தங்களுக்குள்ளே முன்னதாகவே முடிவு செய்துகொண்டு—ஓட்டுப் போடுவதும் காங்கிரஸில் பேசுவதும் இன்னபடி தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்துகொண்டு—காங்கிரஸின் ஒரு பகுதியாகச் செயலாற்ற வேண்டும் என்பதே நிர்மாணக் கமிட்டியின் நோக்கம். இந்த அடிப்படையில் இயங்கினால், முழு அதிகாரமும் காங்கிரஸுக்கு இல்லாது போய், அதன் ஒரு பகுதியாளர் கைக்குள் சிக்கிவிடும் என்பதை அறிய வந்ததும் விளாதிமிர் இலிச்சுக்கு அபாரமான கோபம் வந்துவிட்டது. இந்தச் சூழ்ச்சியை எதிர்க்க எழுந்த கிராஸ்காவை லெனின் மட்டும் அல்லாமல், மார்டோவ் முதலியவர்களும் ஆதரித்தார்கள். நிர்மாணக் கமிட்டியைக் காங்கிரஸ் கலைத்துவிட்டது என்றாலும், இனி வரவிருக்கும் பலவித சிக்கல்களுக்கு எல்லாம் மூலதாரமாக இருந்து அதை முன் அறிவிக்கும் ஒரு நிகழ்ச்சியாக அது அமைந்து போயிற்று. கட்சியில் பண்டின் ஸ்தானம் என்ன, காங்கிரஸின் வேலைத் திட்டம் என்ன என்பது போன்ற மிக மிக முக்கியமான விஷயங்கள் விவாவதத்துக்கு வந்துவிடவே, இந்தச் சிறு நிகழ்ச்சி பின்னணிக்குச் சென்று மறைந்து போயிற்று. தீப்பொறி ஆசிரியர் குழாம், நிர்மாணக் கமிட்டி, உள்ளூர் பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் பண்டு விஷயத்தில் ஒன்றுபட்டுச் செயலாற்றினர். தென் தொழிலாளி பிரதிநிதியும் நிர்மாணக் கமிட்டி உறுப்பினரான எக்ரோவும் பண்டின் போக்கை வன்மையாகக் கண்டித்துப் பேசினர். இடைவேளைக்குக் காங்கிரஸ் கலைந்தபோது, ''எங்கும் முழங்க வேண்டிய பேச்சு இது'' என்று எக்ரோவைப் பிளக்கானுவ் பாராட்டினார்.

காங்கிரஸின் ஆரம்பத்தில் டிராட்ஸ்கி வெகு திறமையாகப் பேசினார்; லெனினைத் தீவிரமாக ஆதரிப்பவனென்று அப்போது எல்லோரும் அவரைக் கருதினர்; ''லெனினுடைய கொறடா'' என்ற பட்டப் பெயரைக்கூட யாரோ ஒருவர் அவருக்குச் சூட்டினார். டிராட்ஸ்கி இப்படி உறுதியற்றவராய் இருப்பார் என்று லெனின் அப்பொழுது கருத இடமில்லாமல் இருந்தது. பண்டின்

போக்கைக் காங்கிரஸ் அங்கீகரிக்கவில்லை. ஒன்றுபட்ட கட்சியின் வேலைத் திட்டத்துக்கும் சமதர்ம - ஜனநாயக இயக்கத்தின் ஐக்கியத்துக்கும் குறுக்கே நிற்கும் தடைக் கற்களாகத் தேசிய இன வேற்றுமைகள் இருக்கக் கூடாது என்று காங்கிரஸில் உறுதியாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சமயத்தில் காங்கிரஸை லண்டனுக்கு மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்துவிட்டது; புருஸெல்ஸ் நகரப் போலீஸார் பிரநிதிகளுக்குத் தொந்திரவு கொடுக்க ஆரம்பித்தனர். ஸெமிலியாஸ்காவ் என்பவரையும் இன்னும் ஒருவரையும் நாடுகடத்திவிட்டனர். ஆகவே நாங்கள் எல்லோரும் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு லண்டன் போய்ச் சேர்ந்தோம். தாக்கத்திரிவ் தம்பதிகள், காங்கிரஸ் நடப்பதற்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்து தந்தனர்; லண்டன் போலீஸார் குறுக்கிட்டு எவ்விதத் தடங்கலும் செய்யவில்லை.

பண்டு சம்பந்தமான விவாதத்தை நாங்கள் தொடர்ந்து நடத்தினோம். வேலைத் திட்டம் சம்பந்தமான விஷயம் தனியாக ஒரு கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டு, நடந்து வந்தது. ஆகவே நிகழ்ச்சி நிரலில் இருந்த நான்காவது விஷயத்தை விவாதத்துக்கு நாங்கள் எடுத்துக்கொண்டோம். மத்திய பத்திரிகையின் போக்கை ஆதரிக்கும் விஷயம் அது. தொழிலாளர் நலன் சார்பினரைத் தவிர்த்து, ஏனைய பிரதிநிதிகள் தீப்பொறியின் போக்கை ஏகமனதாக அங்கீகரித்தனர்; இதயபூர்வமாகப் பாராட்டினர். "இங்கே இந்தக் காங்கிரஸில், தீப்பொறியின் நடபடிக்கையால் சிருஷ்டிக்கப்பட்ட, ஒன்றுபட்ட ஒரு கட்சியை நாம் காண்கிறோம்" என்று நிர்மாணக் கமிட்டி பிரதிநிதியான ரோஸானுவ் அதைப் பாராட்டினர்.

"தீப்பொறி ஆசிரியர் குழாத்தை நாங்கள் ஆதரிக்கவில்லையென்றால், அதன் போக்கை ஆதரிக்காமல், அதன் பெயரை மட்டுமே நாங்கள் அங்கீகரிப்பதாகக் கொள்ள வேண்டும்" என்று அக்கிமோவ் முணுமுணுத்தார்.

"தோழர் அக்கிமோவ்! நாம் ஒரு பெயரை மட்டும் அங்கீகரிக்கவில்லை; ஆனால் ஒரு தன்மையை—நமது கட்சி செயலாற்ற வேண்டிய தன்மையை—அங்கீகரிக்கிறோம் என்றே பொருள்படும்" என்று டிராட்ஸ்கி இதற்குப் பதில் சொன்னர்.

அப்போது நடந்தது பத்தாவது கூட்டம். மொத்தம் காங்கிரஸில் முப்பத்து ஏழு கூட்டங்கள் நடந்தன.

படிப்படியாகக் காங்கிரஸில் கருத்து வேற்றுமைகள் தோன்றத் தொடங்கின. மத்திய கமிட்டிக்கு மூன்று பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டம் வந்தது. கட்சியின் உயிர்நாடியான மத்திய கமிட்டிக்கு யார் யார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது தெளிவுபடவில்லை. க்ளீபோ ஒருவர்தான் விவாதத்துக்கு இடமில்லாத அபேட்சகராகத் திகழ்ந்தார்; 'களைக்கரீத நிர்மாணகர்' என்று தம்மைத் தாமே அவர் வருணித்துக்கொண்டார். காங்கிரஸுக்கு வந்திருப்பாரேயானால், கிருஷினுவஸ்கை என்பவர் போட்டியில்லாத அபேட்சகராக இருந்திருக்க முடியும்; ஆனால் அவர் காங்கிரஸுக்கு வரவில்லை. நம்பிக்கையின் பேரில் பிராக்ஸிமூலம் ஓட்டு எடுத்து அவரையும் கர்ஸ் என்பவரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். இது தகுதியான முறையாகத் தோன்றவில்லை.

மத்திய கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கத்தக்க தகுதிவாய்ந்த பல "ஜெனரல்கள்" காங்கிரஸுக்கு விஜயம் செய்திருந்தார்கள். "ஜாக்ருயீஸ்" "போமின்" "ஸ்டெர்ன்" "போப்பாவ்" "கெக்ரேவ்" ஆகியவர்கள் வந்திருந்தனர். மூன்று பேர்கள் கொண்ட மத்திய கமிட்டியில் காலியான இரண்டு ஸ்தானங்களுக்கு இவர்கள் எல்லோரும் அபேட்சகர்களாய் நின்றனர். கட்சி ஊழியர்கள் என்ற முறையில் மட்டுமல்லாமல், தனிப்பட்ட வாழ்க்கை முறையிலும்கூட ஒருவரை ஒருவர் நன்ருக அறிந்தவர்கள். தனிப்பட்டவர்கள்மீது விருப்புவெறுப்புகள் ஒன்றுகலந்து வேலை செய்ய ஆரம்பித்தன. ஓட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டம் வந்ததும் நிலைமை அதிக நெருக்கடியாகிவிட்டது. மத்திய ஸ்தாபனம் வெளிநாட்டிலிருந்து ஆதிக்கம் செலுத்துகிறது என்றும் உத்தரவு பிறப்பிக்கிறது என்றும் பண்டைச் சேர்ந்தவர்களும் தொழிலாளர் நலனைச் சார்ந்தவர்களும் குற்றம் சாட்டினர். இந்தக் குற்றச்சாட்டை ஆரம்பத்தில் பிரதிநிதிகள் காதில் போட்டுக்கொள்ளவில்லை என்ருலும், இப்பொழுது அது ஓரளவு வேலைசெய்ய ஆரம்பித்தது. தம்மை யறியாமலே உறுதி குலைந்திருப்பவர்களிடத்தும், மத்திய கமிட்டியிலும் இவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. யார் யாருக்கு ஆதிக்கம் வரப்போவதைக் கண்டு அவர்கள் அஞ்சினுர்கள்? மார்டோவ், ஸாஸுலிச், ஸ்டார் ஓவர், ஆக்ஸெல்ராடு ஆகியவர்களின் தலைமைக்கு அவர்கள் அஞ்சவில்லை. லெனினுக்கும் பிளக்கானுவுக்கும் ஆதிக்கம் வந்துவிடக் கூடாது என்றுதான் அவர்கள் அஞ்சினுர்கள். ரஷ்யாவில் செய்ய வேண்டிய வேலைகள், சட்டதிட்டங்கள் ஆகியவை சம்பந்தப்பட்டவரை லெனின் ஒருவர்தான் விஷயங்களை முடிவு செய்யக் கூடியவர் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் நடைமுறை வேலைகளில் ஈடுபடாமல் பிளக்கானுவ் விலகி இருந்து வந்தார்.

தீப்பொறியின் நடைமுறைப் போக்கைக் காங்கிரஸ் அங்கீகரித்தபோதிலும், அதற்கு ஆசிரியர் குழாத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய வேலை இன்னும் பாக்கி இருந்தது.

ஆசிரியர் குழாத்துக்கு மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விளாதிமிர் இலிச் பிரேரேபணை செய்தார்; முன்கூட்டியே இந்த யோசனையை அவர் மார்டோவுக்கும் பாட்ரஸ்ஸாவுக்கும் தெரிவித்து இருந்தார். ஆசிரியர் குழாத்தில் மூவர் இருந்தால்தான் அது திறம்படச் செயலாற்ற முடியும் என்று கூறி, பிரதிநிதிகளிடையே ஆதரவு பெற மார்டோவ் வேலை செய்தார். ஆசிரியர் குழாத்தில் யார் யார் இருக்கலாம் என்ற தன் அபிப்பிராயத்தை ஒரு துண்டு காகிதத்தில் குறித்து, அதைப் பிளக்கானுவிடம் விளாதிமிர் இலிச் கொடுத்தார்; ஒன்றும் சொல்லாமல் அதை வாங்கிப் பிளக்கானுவ் தன் பையில் வைத்துக் கொண்டார். நடக்கப் போவதை அறிந்த அவர், அதற்கு இசைய இருந்து கொண்டார். கட்சி என்பது ஒன்று இருக்குமாயின், அதற்கு என ஒரு வேலைத் திட்டம் இல்லாமல் முடியாது.

தீப்பொறியைச் சேர்ந்த மற்ற அங்கத்தினர்களைவிட மார்டோவ்தான், நிர்மாணக் கமிட்டி உறுப்பினர்களுடன் அதிகமாகக் கலந்து பழகினுர். ஆசிரியர் குழாத்தில் அங்கம் வகிக்க விருக்கும் மூவர் அவருக்கு விரோதமாக இருப்பார்கள்

என்றும் அந்தக் குழாத்தில் சேர்ந்து அவர் பணியாற்றுவாராயின், அது ஸாஸுலிச், பாட்ரஸ்ஸாவ், ஆக்ஸெல்ராடு ஆகிய மூவரையும் அவர் கைவிட்டது போல் ஆகும் என்றும் பலர் அவருக்கு உபதேசம் செய்தனர்; இது சம்பந்தமாக ஆக்ஸெல்ராடும் ஸாஸுலிச்சும் பெரிதும் கவலைப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் சட்ட திட்டங்களின் முதல் பாரா விவாதத்திற்கு வந்தது. விவாதத்தின் போக்கு உக்கிரமாகிவிட்டது. கட்சிச் சட்ட திட்டங்களின் முதல் பாரா சம்பந்தப்பட்டவரை அரசியல்ரீதியிலும் ஸ்தாபனரீதியிலும் மார்டோவுக்கும் லெனினுக்கும் அபிப்பிராய பேதம் இருந்தது; இதற்கு முன்னும் அவர்களுக்கு இடையே அபிப்பிராய பேதம் தோன்றியது உண்டு; அதிர்ஷ்டவசமாக சிறிய அளவிலே தோன்றியபடியால், அது உடனே மறைந்துவிடுவது உண்டு. ஆனால் இப்பொழுதோ காங்கிரஸிலேயே அபிப்பிராய பேதம் நுழைந்து தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தது. தீப்பொறி மீதும் பிளக்கானவ், லெனின் ஆகியவர்கள்மீது கோபமும் வெறுப்பும் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு, இந்த அபிப்பிராய பேதங்களை மிகைப்படுத்திப் பெரிதாக்கி அவை கொள்கை சம்பந்தமான அபிப்பிராய பேதங்கள் என்று கூறத் தலைப்பட்டனர். எதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்? என்ற கட்டுரைக்காகவும், இனி என்ன செய்ய வேண்டும் என்னும் புத்தகத்தை எழுதியதற்காகவும் அவர்கள் லெனினைத் தாக்கத் தொடங்கினர்; சுயநலமி என்றும் இன்னும் வேறு பலவும் கூறி அவரை அவர்கள் பழித்து உரைத்தனர்.

விளாதிமிர் இலிச்சும் இந்தக் காங்கிரஸில் கடுமையாகப் பேசினர். ஒரு அடி முன்னே, இரண்டடி பின்னே என்னும் புத்தகத்தில் இந்தக் காங்கிரஸைப் பற்றி அவர் எழுதி இருப்பதாவது:

> அந்தக் காங்கிரஸில் 'மத்திய' கமிட்டிப் பிரதிநிதி ஒருவருடன் நான் பேசிய பேச்சை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. 'நமது காங்கிரஸில் மனத்தைச் சோர்வில் ஆழ்த்தும் சூழ்நிலை தலைவிரித்து ஆடுகிறதே' என்று அவர் அங்கலாய்த்துக்கொண்டார். பயங்கரமான சண்டை, ஒருவருக்கு எதிராக மற்றவர் செய்யும் கிளர்ச்சி, உக்கிரமான வாக்குவாதம், தோழமையற்ற போக்கு இவை எல்லாம் எதற்கு?' என்று அவர் சலித்துக்கொண்டார். 'நமது காங்கிரஸ் எவ்வளவு சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வளவு சிறப்பாக நடைபெறுகிற காங்கிரஸும் வேறு உண்டா? பகிரங்கமாகப் போர்புரியச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அபிப்பிராயங்கள் வெளிப்படுகின்றன. மனப்போக்கும் தெரிந்துவிடுகின்றன; கைகள் உயர்த்தப்படுகின்றன: முடிவு எடுக்கப்படுகிறது; ஒரு நிலையை நாம் கடந்துவிட்டோம். இனி முன்னேற்றம் தான்! நான் விரும்புவது இதுதான். வாழ்க்கை என்பது இதுதான். சலிப்பைத் தரும் முடிவற்ற அறிவுபூர்வமான விவாதத்துக்கும் இந்த நடைமுறைப் போக்குக்கும் எவ்வளவோ மாறுபாடுகள் உண்டு. ஓயாது சளசளவென்று பேசி விவாதம் செய்பவர்கள், தாங்கள் விவாதம் செய்த பிரசினைக்கு ஒரு தீர்வு கண்டுவிட்டதனால் ஓய்வடைவது இல்லை; பேசிப் பேசி அவர்களுக்கே ஒருவித அலுப்பும் சலிப்பும் தட்டிவிடுவ

தால்தான் அவர்கள் அந்தப் பேச்சை நிறுத்திக்கொள்கிருர்கள்' என்று நான் பதில் சொன்னேன். அந்த மத்திய கமிட்டித் தோழர் என் பேச்சைக் கேட்டுத் திகைப்படைந்தவர் போன்று, தன் தோள்களைக் குலுக்கிக்கொண்டார். அவருடைய பேச்சும் எனது பேச்சும் வெகு தூரம் மாறுபட்டு நின்றன.''

இந்த மேற்கோள் இலிச்சின் போக்கை நமக்குத் தெற்றெனப் படம் பிடித்துக் காட்டுகிறது.

காங்கிரஸ் தொடங்கியதிலிருந்தே இலிச் உணர்ச்சி வயப்பட்டுச் சுறு சுறுப்புடன் காணப்பட்டார். பெல்ஜியப் பெண் தொழிலாளி ஒருத்தி வீட்டில் நாங்கள் ஜாகை வைத்திருந்தோம். அவள் எங்களுக்காக காலையில் சுவையான முள்ளங்கிக்கறியும் டச்சு வெண்ணெய்யும் தயார்ப்படுத்தி வைத்திருந்தாள். உணர்ச்சி வயப்பட்டிருந்த லெனினுக்குப் பசி எடுக்கவில்லை யாதலால், அந்த உணவுகளை அவர் கையால் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. இதைக் கண்ட அந்த வீட்டுக்காரி மிகவும் வருத்தப்பட்டாள்; லண்டனிலோ நிலைமை மேலும் அதிகச் சிக்கலாகிவிட்டதால், லெனினுக்குச் சரியானபடி தூக்கம்கூட வரவில்லை. அதிக பரபரப்புடன் அவர் காணப்பட்டார்.

பிளவு ஏற்படும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. டிராட்ஸ்கியுடன் நடந்த ஒரு சம்பாஷணை இன்னும் என் நினைவில் இருக்கிறது. விவாதங்கள் நடைபெறும் காலங்களில் எவ்வளவோ காரசாரமாக லெனின் பேசினுர் என்ருலும், கூட்டத்துக்குத் தலைவன் என்ற முறையில் அவர் பாரபட்சமின்றி நடந்துகொண்டார். தன் எதிரிகளுக்கு அநீதி இழைக்கும் வகையில் அவர் கடுகு அளவும் பிசகாக நடந்துகொள்ளவில்லை. ஆனுல் பிளக்கானுவின் போக்கோ இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. தான் தலைமை தாங்கும் காலங்களில், நகைச்சுவையுடன் பேசுவதிலும் எதிரிகளைக் கிண்டல் செய்வதிலும் அவருக்குப் பிரியம் அதிகம். ஒரு முறை அவர் தலைமை தாங்கிப் பேசும் பொழுது ''குதிரைகளுக்குப் பேசத் தெரியாது; ஆனுல் துரதிருஷ்டவசமாக இப்பொழுது கழுதைகள்கூடப் பேசுகின்றன'' என்று சொல்லித் தனது நகைச்சுவையை அள்ளிக் கொட்டிவிட்டார்.

இதைச் செவிமடுத்த டிராட்ஸ்கி என்னிடம் ''கூட்டத்துக்குத் தலைமை தாங்கும்படி விளாதிமிர் இலிச்சிடம் கூறுங்கள்; இல்லையேல் காங்கிரஸில் பிளக்கானுவ் பிளவை உண்டாக்கிவிடுவார்போல் தோன்றுகிறது'' என்ருர்.

எனினும் விஷயம் சபாநாயகரை மட்டும் பொறுத்ததாக இல்லை. கட்சியில் பண்டின் ஸ்தானம், கட்சியின் ''முன்னேடியாக'' தீப்பொறியின் போக்கை அங்கீகரித்தல், வேலைத்திட்டத்தை அங்கீகரித்தல் ஆகியவைபற்றி பெரும்பாலான பிரதிநிதிகளுக்கு இடையே அபிப்பிராய பேதம் இருக்கவில்லை. இருந்தாலும் காங்கிரஸ் நடந்துகொண்டிருந்த தருணத்தில், எங்களுக்கு இடையிலே பெரிய மடு ஒன்று இருப்பதாகத் தோன்றியது; காங்கிரஸின் முடிவில் அந்த மடுவின் ஆழம் அதிகரித்துவிட்டது. சேர்ந்து வேலை செய்வதைத் தடுக்கக்கூடிய பெருத்த அபிப்பிராய பேதமோ அல்லது அதை அசாத்தியமாக்கும் நிலையோ, திட்டவட்டமாகச் சொன்னுல் இரண்டாவது காங்கிரஸில் ஏற்படவில்லை

எனலாம். இருந்தாலும் அதன் சொரூபம் மறைமுகமாகக் காங்கிரஸுக்குள் பலமாக வேலை செய்துவந்தது. இதன் பயனாய்க் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டு, அது இரண்டு அணிகளாகப் பிரிய ஆரம்பித்தது. பிளக்கானாவின் சாமர்த்திய மின்மை, லெனினுடைய ஆவலும் "தீவிரப் போக்கும்" பாவ்லோவிச்சின் தொல்லைகள், ஸாஸுலிச், ஆக்ஸெல்ராடு ஆகியோர்மீது எடுத்துக்கொண்ட அநீதியான நடவடிக்கை இவைதான் தகராறுகளுக்கு எல்லாம் காரணம் ஆகும் என்று பலர் கருதினர். இந்தக் கருத்துடைய பிரதிநிதிகள் "புண்பட்டவர்களை" ஆதரித்தனர்; இவர்களின் நாட்டம் தனிப்பட்ட நபர்கள்மீது சென்றதே யல்லாமல், விவாதத்தின் முக்கிய சாராம்சத்தில் செல்லவில்லை. டிராட்ஸ்கியும் விவாதத்தின் சாரத்தைக் கிரகிக்கத் தவறிவிட்டார். லெனினைச் சுற்றி நின்ற தோழர்கள் கொள்கைமீது அதிக கவனம் செலுத்தினர். எந்த விலை கொடுத்தாவது கொள்கையை நிலைநிறுத்தி, அதை அனுஷ்டானத்தில் கொணர அவர்கள் தீவிரமாக முயன்றனர். இன்னொரு பிரிவினர் வெளிப் பகட்டில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். அபிப்பிராய பேதங்களைச் சரிப்படுத்துவது கொள்கைகளை விட்டுக்கொடுப்பது போன்ற காரியங்களில் இறங்கி, தனி மனிதர்களின் மீதே அவர்களின் நாட்டம் முழுதும் சென்றது. இதுதான் நிலைமை.

தேர்தல் நடந்தபொழுது இந்த வேற்றுமை அதி தீவிரமாகி வேலை செய்யத் தொடங்கியது; தேர்தலுக்கு முன் நடந்த இரு சிறு நிகழ்ச்சிகள் இன்னும் என் நினைவில் இருக்கின்றன. பாச்மான் என்பவருக்குத் தார்மீக உணர்வு குறைவு என்று சொல்லி, அஞ்ஞாதவாச காலத்தில் நடந்த வேதனை தரும் சில சம்பாஷணைகளை நினைவுபடுத்தி அவரை ஆக்ஸெல்ராடு கடிந்து உரைத்தார். இதைக் கேட்டு பாச்மான் மௌனமாக இருந்தார்; அவருடைய கண்களில் நீர் மல்கிவிட்டது.

இன்னொரு நிகழ்ச்சி: எதற்காகவோ டீயூஷ் என்பவர் கிளீபோ என்பவரை ஆத்திரத்துடன் கண்டித்தார். இதைக் கேட்டதும் தன் கண்கள், சிவக்க, தலையை உயர்த்தி "கிழட்டுப் பிணமே! உமது வாயை மூடிக்கொண்டு சும்மா கிடந்து தொலையும்" என்று கிளீபோ ஆத்திரத்துடன் பதில் சொன்னார்.

காங்கிரஸ் முடிவுற்றது; கிளீபோ, கிளேர், கர்ஸ் ஆகிய மூவரும் மத்திய கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிகாரம் பெற்ற நாற்பத்து நான்கு ஓட்டுகளில், இருபது பேர்கள் தங்கள் ஓட்டுகளைப் பதிவு செய்யாமல் விலகி இருந்துவிட்டனர். பிளக்கானாவ், லெனின், மார்டோவ் ஆகிய மூவரும் மத்திய கமிட்டிப் பத்திரிகைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; ஆசிரியர் குழாத்தில் பங்குகொள்ள முடியாது என்று மார்டோவ் மறுத்துவிட்டார். பிளவும் ஏற்பட்டுவிட்டது.

இரண்டாவது

காங்கிரஸுக்குப் பின்

(1903—1904)

காங்கிரஸ் முடிந்து. நாங்கள் ஜினீவாவுக்குத் திரும்பியதுதான் தாமதம் எங்கள்மீது பழிசுமத்தும் போர் ஆரம்பமாயிற்று. மற்ற நகரங்களில் வசித்த ரஷ்யர்களைக் காட்டிலும் ஜினீவாவில் வசித்த ரஷ்யக் காலனி வாசிகள்தான், இந்தப் போரில் மும்முரமாகக் கலந்துகொண்டனர். வெளிநாடுகளில் இருந்த ரஷ்ய சமதர்ம ஜனநாயகக் கட்சி அங்கத்தினர்கள் வந்து "காங்கிரஸில் என்ன நடந்தது ? எதற்காக இந்தச் சண்டை எல்லாம் ? நீங்கள் ஏன் பிளவை விரும்பினீர்கள் ?" என்று கேட்டார்கள்.

இந்த விதமான விசாரணைகளால் மிகவும் அலுத்துச் சலித்துப் போன பிளக்கானவ் ஒரு சம்பவத்தை இப்படி வருணித்துள்ளார் : "என்—என் என்பவர் வந்தார். கேள்விகள் கேட்டு நச்சரித்துக்கொண்டே இருந்துவிட்டு "புருடினவைப் போல நானும் ஒரு கழுதைதான்" என்று ஓயாமல் சொல்லிக் கொண்டே இருந்தார். 'புருடினவைப் பற்றி மட்டும் ஏன் இவ்வளவு குறிப்பாக நீங்கள் கூறுகிறீர்கள் ?' என்று நான் அவரைக் கேட்டேன்."

ரஷ்யாவிலிருந்தும் பலர் வர ஆரம்பித்தனர். தற்செயலாக, பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து ஏரெம் வந்து சேர்ந்தார். ஒரு வருஷத்துக்கு முன் பீட்டர்ஸ்பர்க் ஸ்தாபனத்துக்கு எழுதின கடிதத்தை விளாதிமிர் இலிச் இவர் பெயருக்குத் தான் எழுதி அனுப்பினர். இவர் உடனே மென்ஷ்விக்குகளுடன் சேர்ந்து கொண்டார். எங்களைக் காண வந்த அவர் நாடக பாணியில் விளாதிமிர் இலிச்சைப் பார்த்து "நான்தான் ஏரெம்" என்று கூறினர். பிறகு "மென்ஷ்விக்குகள் செய்ததுதான் சரி" என்ற பாவனையில் சரமாரியாகப் பொழிந்தார். காங்கிரஸில் பிளவை உண்டாக்கிய "உலோகாயத மாற்றங்கள்" யாவை என்பதை அறிந்து போக கீவ் கமிட்டி அங்கத்தினர் ஒருவர் வந்திருந்ததும் என் நினைவில் இருக்கிறது. நான் ஆச்சரியத்துடன் அவரைக் கவனித்தேன். "அடிப்படைக்கும் கட்டுக்கோப்புக்கும்" உள்ள உறவு சம்பந்தமாக இப்படி ஒரு குறுகிய வியாக்கியானம் செய்த ஒருவரை இதுவரை நான் பார்த்ததே இல்லை. இப்படி ஒரு உறவு இருக்கும் என்பதை என்னல் சிந்திக்கக்கூட முடியவில்லை.

இதுவரை எங்களுக்கு நன்கொடை அளித்து உதவி புரிந்தவர்களும் பிறரைச் சந்திக்க இடம் தந்து உதவினர்களும் மென்ஷ்விக்குகளின் தூண்டுதலால் எங்களுக்கு உதவி புரிவதை நிறுத்திக்கொண்டனர். என் பழைய சிநேகிதை

ஒருத்தி, தன் தாயுடன், ஜினீவாவில் வசிக்கும் தன் சகோதரியைக் காண வந்திருந்தாள். குழந்தைப் பருவத்தில் நானும் அவளும், பிரயாணிகள் விளையாட்டு, மரங்களில் காட்டுமிராண்டிகள் வசிக்கும் விளையாட்டு போன்ற அற்புதமான விளையாட்டுக்களைச் சேர்ந்து விளையாடி இருக்கிறோம். எனவே அவள் வந்திருப்பதைக் கேட்டதும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். இப்பொழுது அவள் சிறுமி அல்லள்; வளர்ந்து முற்றும் வேறு விதமானவளாக மாறிவிட்டாள். நானும் அவளும் அளவளாவிக்கொண் டிருந்தபொழுது, சமதர்ம ஜன நாயகவாதிகளுக்கு அவள் குடும்பத்தார் இதுவரை உதவிசெய்து வந்திருப்பதைச் சாடையாக நான் நினைவுபடுத்தினேன். "சந்திப்புக்கு இனி எங்கள் வீட்டில் உனக்கு நாங்கள் இடம் தர முடியாது. போல்ஷ்விக்குகளுக்கும் மென்ஷ்விக்குகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிளவை நாங்கள் ஆதரிக்கவில்லை. தனிப்பட்ட நபர்களைப் பழிப்பதும் பழிசுமத்துவதும் நிச்சயம் நமது லட்சியங்களுக்குக் குந்தகம் விளைவிக்கும்" என்று அவள் சொன்னாள். இவள் போன்ற போக்குடையவர்களை நானும் இலிச்சும் பெரிதாகக் கருதவில்லை. ஏதோ கொஞ்சம் நன்கொடையும் சந்திக்க இடமும் தந்து உதவுவதற்காக, பாட்டாளி கட்சியின்மீது தங்கள் ஆதிக்கத்தை இவர்கள் செலுத்த விரும்புகிறார்கள்! எந்த ஸ்தாபனத்திலும் சேர்ந்துகொள்ளாமல் இப்படி இருந்துவருகிற "அனுதாபிகள்" நாசமாய்ப் போகட்டும் என்ற எண்ணந்தான் எனக்கும் விளாதிமிருக்கும் இருந்தது.

ரஷ்யாவில் இருக்கும் கிளேர், கர்ஸ் ஆகிய இருவருக்கும் விளாதிமிர் இலிச், நடந்தவற்றை விவரித்துக் கடிதம் ஒன்று உடனே எழுதிப் போட்டார். ரஷ்யாவில் அவர்கள் என்னென்னவோ செய்தனர். ஆனால் பிரயோஜனகரமான யோசனை ஒன்றும் அவர்களால் கூற முடியவில்லை. உதாரணமாக, அவர்கள், மார்டோவை ரஷ்யாவுக்குத் திரும்ப அனுப்ப வேண்டும் என்றும் எங்கேயாவது ஒரு பொந்தில் அவரை ஒளிந்திருக்கச் செய்து, ஜனரஞ்சகமான துண்டுப் பிரசுரங்களை எழுதச் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறினர். கர்ஸை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

காங்கிரஸ் முடிந்த பிறகு, பழைய அங்கத்தினர்களை மீண்டும் ஆசிரியர் குழாத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று ஹேபோ கூறின யோசனையை விளாதிமிர் இலிச் ஆட்சேபிக்கவில்லை. பிளவைவிடப் பழைய நிலையில் இழுத்துக்கொண்டு போவது நல்லது என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் மென்ஷ்விக்குகள் இணங்கிப் போகச் சம்மதிக்கவில்லை. மார்டோவுடன் ஒத்துப் போக, ஜினீவாவில் விளாதிமிர் இலிச் முயன்றார். பிளவுக்கு உண்மையான காரணம் எதுவும் இல்லை என்று பாட்ரஸ்ஸாவுக்கு கடிதம் எழுதிப் போட்டு அவர் மனதை இலிச் திருத்த முயன்றார். பிளவு ஏற்பட்டிருப்பதைப் பற்றிக் கால்மிக்கோவா என்பவருக்கும் கடிதம் ஒன்று எழுதிப் போட்டு, விஷயம் எந்த நிலையில் நிற்கிறது என்பதை விளக்கினார். பிளவைத் தடுக்க ஒரு வழியும் இல்லை என்று அவர் அப்பொழுது கருதவில்லை. காங்கிரஸ் செய்த முடிவுகளைக் காற்றில் பறக்கவிடுவதும் ரஷ்யாவில் நடக்கும் வேலையைத் தடுப்பதும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கட்சியின் வேலைத் திறமையை உருக்குலைப்பதும் பைத்தியக்காரத்தனம் என்று விளாதிமிர் கருதினார்; இவை நம்பமுடியாத விஷயங்களாக

அவருக்குத் தோன்றியன. பிளவு தவிர்க்கமுடியாதது என்பதை அவர் சில சமயங்களில் தெளிவாக உணர்ந்தார். கிளேருக்கு அவர் எழுதத் தொடங்கிய கடிதம் ஒன்றில், உண்மை நிலை என்ன என்பதைக் கிளேர் பரிபூரணமாக உணரவில்லை என்றும் பழைய உறவுகள் தலைகீழாக மாறிவிட்டன என்பதை உணர வேண்டும் என்றும் மார்டோவுடன் இருந்த பழைய உறவு முறிந்துவிட்டது என்றும் பழைய நட்பை மறந்துவிட வேண்டும் என்றும் போர் ஆரம்பம் ஆகிவிட்டது என்றும் அந்தக் கடிதத்தில் விளாதிமிர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்தக் கடிதம் பூர்த்தி செய்யப் பெறவில்லை. அதை விளாதிமிர் இலிச் அனுப்பவும் இல்லை. மார்டோவுடன் இருந்த உறவை முறித்துக்கொள்வது விளாதிமிருக்கு அதிக சிரமத்தைத் தந்தது. பீட்டர்ஸ்பர்க்கில் அவர்கள் கலந்து வேலை செய்ததும் பழைய தீப்பொறியில் ஒன்ருக வேலை செய்ததும் அவர்களை நெருக்கமாகப் பிணைத்துவிட்டன. பிறரைக் கவரும் ஆற்றல் படைத்த மார்டோவ் அந்தக் காலத்தில் இலிச்சின் கொள்கைகளைச் சரிவரத் தெரிந்துகொள்ளவும் அவற்றைத் திறம்பட வளர்க்கவும் பெரு முயற்சி செய்தார். பிற்காலத்தில் மென்ஷ்விக்குகளை விளாதிமிர் கடுமையாக எதிர்த்தார். ஆனல் நேரான வழியை மார்டோவ் ஓரளவாவது பின்பற்றி ஒழுகினுல், அந்த அளவுக்கு இலிச்சும் மனம் மாறி அவருடன் இணங்கிப் போனுர். உதாரணமாக, 1910—ம் வருடம் பாரிஸில் நடைபெற்ற சமதர்ம ஜனநாயகவாதி என்னும் பத்திரிகையின் ஆசிரியர் குழாத்தில் இருவரும் ஒன்ருக அமர்ந்து வேலை செய்தனர். காரியாலயத்திலிருந்து வீடு திரும்பியதும் மார்டோவ் நேரான வழியைப் பின்பற்றுகிருர் என்றும் டானைக்கூட அவர் எதிர்க்கிருர் என்றும் இலிச் மகிழ்ச்சியோடு சொல்லி வந்தார். பிறகு ரஷ்யாவில் ஜுலை நாட்களில் (1917) மார்டோவின் போக்கு விளாதிமிர் இலிச்சுக்கு பெரிதும் திருப்தி அளிப்பதாய் இருந்தது; போல்ஷ்விக்குகளுக்கு இதனுல் நன்மை ஏற்பட்டுவிடும் என்பதனுல் அல்ல; ஆனல் மார்டோவ் மெச்சத்தக்க முறையில்—புரட்சிக்காரனுக்கு உகந்த முறையில்—நடந்துகொள்கிருர் என்பதனுல்தான்.

விளாதிமிர் இலிச் ஒரு முறை கடுமையாக நோய் வாய்ப்பட்டுக் கிடந்தார்; அப்போது அவர் வருத்தத்துடன் என்னை நோக்கி, "மார்டோவும் இறந்துகொண்டிருக்கிருராம். இப்படி நான் கேள்விப்படுகிறேன்" என்று சொன்னுர்.

காங்கிரஸுக்கு வந்திருந்த பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் (போல்ஷ்விக்குகள்) வேலை செய்வதற்காக ரஷ்யாவுக்குத் திரும்பினர். மென்ஷ்விக்குகள் எல்லோருமே திரும்பிச் செல்லவில்லை. அவர்கள் எல்லோரும் டானுடன் சேர்ந்துகொண்டனர். வெளிநாட்டில் அவர்களை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வந்தது.

ஜினீவாவில் தங்கிவிட்ட போல்ஷ்விக்குகள் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை கலந்து பேசக் கூடினர். 'இந்தக் கூட்டங்களில் பிளக்கானுவும் வந்து கலந்துகொண்டார்; பழைய பந்தாவிலேயே நடந்துகொண்டார்; ஒருவர் பாக்கி இல்லாமல் வந்தவர்கள் எல்லாரையும் அவர் கேலி செய்தார்.

மத்திய கமிட்டி உறுப்பினர் வாஸிலாவ் என்ற பெயரை உடைய கர்ஸ் கடைசியாக வந்து சேர்ந்தார். ஜினீவாவில் ஒருவரை ஒருவர் குறைகூறும் சூழ்

நிலை இருப்பதைக் கண்டு, அவர் மனம் ஒடிந்து போனார். எவ்வளவோ வேலைகளைக் கவனித்து அவர் சமாளிக்க வேண்டியதாயிற்று. விவகாரங்கள் சம்பந்தமாக விசாரணை நடத்தல், ஜனங்களை ரஷ்யாவுக்கு அனுப்புதல் போன்ற காரியங்களை அவர் செய்ய வேண்டியதாயிற்று.

அஞ்ஞாதவாசம் செய்தவர்களுக்கு மத்தியில் மென்ஷ்விக்குகளுக்கு ஓரளவு வெற்றி கிடைத்தது. ஆகவே போல்ஷ்விக்குகளை எதிர்த்துப் போர்புரிய அவர்கள் முடிவு செய்தனர். வெளிநாட்டில் வசிக்கும் ரஷ்ய சமதர்ம ஜனநாயக லீக் அங்கத்தினர்கள் மகாநாடு ஒன்றுகூட்டி, தங்கள் பிரதிநிதியாக இரண்டாவது காங்கிரஸுக்கு அனுப்பிய லெனினிடமிருந்து அறிக்கை ஒன்று கேட்கவிரும்பினர். லீக்கின் நிர்வாகக் கமிட்டியில் நான், லித்வினவ், டியூஷ் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தோம். காங்கிரஸைக் கூட்டி அறிக்கையைக் கேட்க வேண்டும் என்று டியூஷ் வற்புறுத்தினர். அன்றைய நிலையில் காங்கிரஸைக் கூட்டினால் அது பெரிய அபவாதமாக முடியும் என்பதைத் தெளிவாக உணர்ந்த நானும் லிட்வினவும் அதை எதிர்த்தோம். பெர்லினில் வசித்த வெக்கஸ்லோவும் பாரிஸில் வசித்த லீட்சினும் லீக் நிர்வாகக் கமிட்டியில் உறுப்பினர்களாக இருந்தும், அவர்கள் நீண்ட காலமாக, கமிட்டிக் காரியங்களில் நேரடியான பங்கு எடுத்துக்கொள்ளாமல் இருந்து வந்தனர்; இருப்பினும் தங்கள் பதவியை அவர்கள் அதிகாரபூர்வமாக ராஜிநாமாச் செய்யவில்லை. இந்த விஷயம் டியூஷுக்கு நினைவு வந்தது. அவர் ஓட் செய்யும்படி அவர்களைக் கேட்டார். அதன்படி, காங்கிரஸ் கூட்டுவதை ஆதரித்து அவர்கள் ஓட் செய்தனர்.

சிந்தனையில் ஆழ்ந்தவாறு லீக் காங்கிரஸுக்கு விளாதிமிர் இலிச் சைகிளில் சென்றுகொண் டிருந்தார். சைகிள் டிராமின் பின்புறத்தில் மோதியதால், அவருடைய கண்ணுக்கு அருகில் காயம்பட்டது. வெளிறின முகத்துடனும் காயக்கட்டுடனும் அவர் காங்கிரஸில் காட்சி அளித்தார். மென்ஷ்விக்குகள் உக்கிரமான வெறுப்போடு அவரைத் தாக்கினர். முரட்டுத்தனமான காட்சி ஒன்று என் நினைவில் இருக்கிறது. டான், குரோக்மல் முதலியோர் முகத்தை வெறிபிடித்தவர்கள்போல் வைத்துக்கொண்டு, எழுந்து நின்று, தங்கள் தங்கள் எதிரே இருந்த மேஜைகளைப் பலமாகத் தட்டினர்.

லீக் காங்கிரஸில் போல்ஷ்விக்குகளைக் காட்டிலும் மென்ஷ்விக்குகள் தான் பெரும்பான்மையோர். மேலும் அவர்களிடையே ''ஜெனரல்களும்'' அதிகப் பேர் இருந்தனர். மென்ஷ்விக்குகள் லீக் சட்டதிட்டம் ஒன்றை நிறைவேற்றிக் கொண்டனர். தங்கள் கோஷ்டிக்கு லீக்கை ஒரு அரண்போலவும், மத்திய கமிட்டியிலிருந்து தனித்துச் சுதந்திரமாக இயங்கத்தக்க விதத்திலும், தாங்களே பிரசுரங்களை வெளியிட்டுக்கொள்ளும் உரிமையையும் அந்தச் சட்டதிட்டங்கள் மென்ஷ்விக்குகளுக்கு அளிக்கும் வகையில் அமைந்திருந்தன. இந்தச் சட்டதிட்டங்களை உடனே வாபஸ் பெற வேண்டும் என்று மத்திய கமிட்டியின் சார்பாகத் தான் கோருவதாக மத்திய கமிட்டி உறுப்பினர் கர்ஸ் கோரினர். இதற்கு மற்றவர்கள் கீழ்ப்படிய மறுத்ததால், லீக்கைத் தான் கலைத்துவிட்டதாக மத்திய கமிட்டியின் சார்பில் கர்ஸ் அறிவித்தார்.

மென்ஷ்விக்குகள் செய்த இந்த விஷமத்தைப் பிளக்கானவினல் சகித்துக்

கொண்டிருக்க முடியவில்லை. "என்னை நானே சுட்டுக்கொள்ள முடியாது" என்று அவர் ஆத்திரத்தோடு சொன்னார்.

போல்ஷ்விக்குகளின் கூட்டத்தில், "நாம் சமரசம் செய்துகொண்டு விடவேண்டும்" என்று பிளக்கானவ் கூறினர். "கொடுங்கோன்மைகூட, சில சந்தர்ப்பங்களில் விட்டுக்கொடுத்து, சமரசம் செய்துகொள்வது உண்டு" என்று அவர் கூறினர்.

"அப்படியானல் அதன் நிலை ஆட்டங்கொண்டுவிட்டது என்று பொருள் படும்" என்று லிஸா குன்னியான்ஸ் இடித்து உரைத்தாள்.

இதைக் கேட்டதும் பிளக்கானவ் கோபத்தோடு அவளை முறைத்துப் பார்த்தார்.

கட்சியில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக, பழைய தீப்பொறி ஆசிரியர் குழாத்தை, மீண்டும் ஆசிரியர் குழாத்தில் தான் சேர்த்துக்கொள்ள முடிவு செய்திருப்பதாகப் பிளக்கானவ் சொன்னர். இதைக் கேட்டதும் விளாதிமிர் இலிச் ஆசிரியர் குழாத்திலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டார். அப்படியாயின் தான் ஆசிரியர் குழாத்தோடு ஒத்துழைக்கப்போவது இல்லை என்றும், ஆசிரியர் குழாத்திலிருந்து தான் ராஜிநாமாச் செய்ததைப் பிரசுரிக்க வேண்டும் எனத் தாம் வற்புறுத்தப்போவது இல்லை என்றும் விளாதிமிர் இலிச் கூறினர். "சமாதானத்துக்காகப் பிளக்கானவ் முயலட்டும். கட்சியில் சமாதானம் நிலவ, தான் ஒரு தடையாக நிற்கப்போவதில்லை" என்று குறிப்பிட்டார். "வேலை செய்வதினின்றும் விலகி இருந்துகொள்வதைக் காட்டிலும் மோசமான வழி வேறு ஒன்று இருக்க முடியாது" என்று, இதற்குச் சிறிது முன்னர்தான், கால்மிகோவாவுக்கு, விளாதிமிர் இலிச் கடிதம் ஒன்று எழுதி இருந்தார். ஆசிரியர் குழாத்திலிருந்து வெளியேறுவது மோசமான வழிதான் என்பதை அவர் நன்றாக அறிந்திருந்தார். மத்திய கமிட்டியில் தங்கள் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கவுன்ஸிலில் தங்களுக்கு இரண்டு ஸ்தானங்கள் தர வேண்டும் என்றும் லீக் காங்கிரஸ் செய்த தீர்மானங்களை அங்கீகரிக்க வேண்டும் என்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் கோரினர். மத்திய கமிட்டியில் இரண்டு எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ளவும் கவுன்ஸிலில் ஒரு ஸ்தானம் அளிக்கவும் படிப்படியாக லீக்கைத் திருத்தி அமைக்கவும் ஒப்புக்கொண்டனர். எனினும் சமாதானம் நிலவவில்லை. பிளக்கானவின் சமரசப்போக்கு, எதிர்க் கட்சியாருக்கு ஆக்கம் அளிப்பதாய் இருந்தது. மத்திய கமிட்டியில் இரண்டாவது பிரதிநிதியாக இருந்துவரும் கால் பெரின் என்பவர் கவுன்ஸிலிலிருந்து ராஜிநாமாச் செய்துவிடவேண்டும் என்றும் அந்த ஸ்தானத்தை மென்ஷ்விக்கு ஒருவருக்குக் கொடுக்க வேண்டும் என்றும் பிளக்கானவ் வற்புறுத்தினர். இப்படிப் புதிய சலுகை அளிப்பதற்கு விளாதிமிர் இலிச் நெடுநேரம் தயங்கினர். கொந்தளிக்கும் ஜினீவா ஏரிக்கரையில் நாங்கள் மூன்று பேர் - விளாதிமிர் இலிச், கோனியாகா, நான் - ஆகிய மூவரும் ஒரு நாள் மாலை நின்றுகொண்டிருந்தது இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது. ராஜிநாமாச் செய்யத் தனக்கு அனுமதி தரவேண்டும் என்று விளாதிமிர் இலிச்சை, கோனியாகா நயந்து வற்புறுத்தினர். இறுதியில் விளாதிமிர் இலிச் அதற்கு இசைந்தார்.

கவுன்ஸிலிலிருந்து கோனியாகா ராஜிநாமாச் செய்யப்போகும் விவரத்தைப் பிளக்கானுவிடம் அறிவிப்பதற்காக அவர் சென்றார்.

முற்றுகை என்ற பெயரில் மார்டோவ் சிறு நூல் ஒன்று எழுதினர். மற்றவர்கள்மீது கடுமையாகக் குற்றங்கள் சுமத்தி அந்த நூலை அவர் எழுதி இருந்தார். சைபீரியப் பிரதிநிதியின் அறிக்கை என்ற பெயரில் டிராட்ஸ்கியும் ஒரு சிறு நூல் எழுதினர். மார்டோவின் மனநிலையை அனுசரித்து அதில் சம்பவங்கள் வருணிக்கப்பட்டிருந்தன ; லெனினுடைய கைகளுக்குள் சிக்கிய ஒரு பாவைபோல, பிளக்கானவ் அதில் வருணிக்கப்பட்டிருந்தார்.

ஒரு அடி முன்னே இரண்டு அடி பின்னே' என்னும் தமது சிறு நூலில் விளாதிமிர் இலிச், மார்டோவுக்குப் பதில் அளித்திருக்கிறார். அதில் இரண்டாவது காங்கிரஸ் நிகழ்ச்சிகளை விரிவாகப் பரிசீலனை செய்திருக்கிறார்.

இந்தச் சமயத்தில் ரஷ்யாவில் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. காங்கிரஸ் பற்றிய அறிக்கைகளைப் போல்ஷ்விக் பிரநிதிகள் சமர்ப்பித்தனர். காங்கிரஸ் அங்கீகரித்த வேலைத் திட்டத்தையும் நிறைவேற்றின தீர்மானங்களில் பெரும்பாலானவற்றையும் ஸ்தலக் கமிட்டிகள் எல்லாம் குதூகலத்துடன் வரவேற்றன. மென்ஷ்விக்குகளின் நிலைமை அவற்றுக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. காங்கிரஸ் செய்த தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று அந்தக் கமிட்டிகள் தீர்மானங்கள் நிறைவேற்றி வற்புறுத்தின. அந்தக் காலத்தில் சுறுசுறுப்புடன் வேலைசெய்த பிரதிநிதிகளில் "லிட்டில் அங்கிள்" என்பவளைச் சொல்லலாம். பழைய புரட்சிக்காரியான அவளுக்கு, காங்கிரஸ் எடுத்த முடிவுகளை அலட்சியப்படுத்தி நடப்பது, விளங்கமுடியாத ஒரு புதிராகவே இருந்தது. அவளும் ரஷ்யாவிலிருந்த மற்ற தோழர்களும் உற்சாகம் ஊட்டும் கடிதங்கள் எங்களுக்கு எழுதினர். கமிட்டிகள் ஒன்றன் பின் ஒன்றாகப் போல்ஷ்விக்குகளை ஆதரிக்கத் தொடங்கின.

கிளாயர் வந்து சேர்ந்தார். போல்ஷ்விக்குகளுக்கும் மென்ஷ்விக்குகளுக்கும் இடையிலே ஏற்பட்டுள்ள வேற்றுமை எவ்வளவு ஆழமானது என்பதை அவரால் ஊகிக்கக்கூட முடியவில்லை. இரண்டு கோஷ்டிகளையும் சமரசப்படுத்தி ஒன்றுசேர்த்துவிட முடியும் என்ற எண்ணத்துடன், அவர் பிளக்கானுவைக் கண்டு பேசச் சென்றார். சமரசம் ஏற்படுவது சாத்தியமல்ல என்பதை அறிந்துகொண்டு, மனச்சோர்வோடு, அவர் திரும்பிவிட்டார் ; விளாதிமிர் இலிச்சும் அதிகச் சோர்வுடன் காணப்பட்டார்.

1904-ம் வருட ஆரம்பத்தில், பீட்டர்ஸ்பர்க் கமிட்டியின் பிரதிநிதி ஸெலியா ஸெலிக்சானும் தொழிலாளர் மாக்கரும் பீட்டர்ஸ்பர்க் ஸ்தானத்தின் பிரதிநிதி மாரனும் ஜினீவாவுக்கு வந்தார்கள். அவர்கள் போல்ஷ்விக்குகளை ஆதரிப்பவர்கள் ; அடிக்கடி விளாதிமிர் இலிச்சைச் சந்தித்துப் பேச வருபவர்கள். மென்ஷ்விக்குகளுடன் நடக்கும் சண்டையை மாத்திரமின்றி, ரஷ்யாவில் நடக்கும் வேலைகளைப்பற்றியும் அவர்கள் கலந்து பேசினர். ஸெலியா ஸெலிக்சான் அப்பொழுது இளைஞராக இருந்தார். பீட்டர்பர்க்கில் நடக்கும் வேலைகள்பற்றி அவர் பெருமிதமுற்று இருந்தார். "கூட்டு அஸ்திவாரத்தில் நமது ஸ்தாபனங்களை நாம் அமைத்து வருகிறோம். கோஷ்டியா'க கோஷ்டியாக வேலைகள் நடக்கின்றன. கிளர்ச்சி செய்ய

ஒரு கோஷ்டி, பிரசாரம் செய்ய ஒரு கோஷ்டி, நிர்மாண வேலைக்கு ஒரு கோஷ்டி எனப் பல கோஷ்டிகள் இருந்து வருகின்றன'' என்று அவர் சொன்னார்.

இவர் பேச்சைக் கவனத்துடன் கேட்டுவந்த விளாதிமிர் இலிச் திடீரென இவரை நோக்கி, ''பிரசாரக் கோஷ்டியில் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்?'' என்று கேட்டார்.

இதைக் கேட்டுக் குழப்பமடைந்த பாரான் ''இதுவரையில் நான் ஒருவன் தான் இருக்கிறேன்'' என்றி பதில் சொன்னார்.

''பலர் இல்லை அல்லவா?'' என்று கேட்டுவிட்டு ''கிளர்ச்சிக்காரர்கள் பகுதியில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என்று வினவினார் விளாதிமிர் இலிச்.

''நான் ஒருவன்தான் இருந்துவருகிறேன்'' என்று பாரான் நாணத்துடன் பதில் சொன்னார்.

இதைக் கேட்டதும் விளாதிமிர் இலிச் உரக்கச் சிரித்துவிட்டார்; பாரான் முகத்திலும் புன்னகை அரும்பியது.

உன்னதமான திட்டங்கள், மிகைப்படுத்தப் பெறும் அறிக்கைகள் இவற்றில் எந்த இடத்தில் பலவீனம் இருக்கிறது என்பதை இரண்டொரு கேள்விகள் கேட்பதின் மூலம் அவற்றின் தன்மைகளை விளாதிமிர் இலிச் எளிதில் தெரிந்து கொண்டுவிடுவார்.

பிறகு ஓல்மின்ஸ்கை வந்து சேர்ந்தார். இவர் போல்ஷ்விக்குகளுடன் சேர்ந்துகொண்டுவிட்டார். வெகு தொலைவில் நாடுகடத்தப்பட்டு வாழ்ந்த ''ஸ்வர்க்கா'' என்பவளும் அங்கிருந்து தப்பித்து வந்து புதிதாகச் சேர்ந்து கொண்டாள்.

''ஸ்வர்க்கா'' வினுடைய உண்மைப் பெயர் எம். எம். எஸ்ஸென் என்பது. நாடுகடத்தப்பட்ட வாழ்க்கையிலிருந்து தப்பியோடிவந்த இவள் புத்துணர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் சுறுசுறுப்பாகவும் ஊக்கமுடனும் விளங்கினாள்; இந்த உணர்ச்சிகளைத் தம்மைச் சூழ்ந்திருப்பவர்களிடையிலும் அவள் புகுத்தினாள்; சந்தேகத்தையும் நிலையற்றதன்மையையும் அவளிடம் கிஞ்சிற்றும் காண முடியாது. பிளவை நினைந்து பெருமூச்சுவிட்டவர்களையும் ஒப்பாரி வைத்தவர்களையும் அவள் கேலி செய்தாள். வெளிநாடுகளில் பரவிக்கிடந்த அவதூறுகளால் அவள் ஆத்திரப்படவில்லை. அந்தக் காலத்தில் போல்ஷ்விக்குகளுக்கு இடையே நெருங்கிய தொடர்பை உண்டுபண்ணிக்கொள்வதற்காக, வாரந்தோறும் நாங்கள் செக்ரோன் என்னும் இடத்தில் விருந்துகள் நடத்தினோம். இந்த ''விருந்துகளில்'' ''முக்கியமான'' விஷயங்கள் எதுவும் விவாதிக்கப் படவில்லை. அதற்கு மாறாக மென்ஷ்விக்குகளுடன் நடந்த சண்டை தூண்டிவிட்ட உணர்ச்சிக்கு அவை தூபம் போட்டன. இந்தச் சூழ்நிலையில், ஸ்வர்க்கா ஜானியையும் பிறரையும்பற்றிப் பாடின வேடிக்கைப் பாட்டும் வழுக்கைவிழுந்த, நெட்டைத் தொழிலாளி ஈகார் பாடின கோஷ்டிப் பாட்டும் உற்சாகமூட்டுவன வாய் இருந்தன. பிளக்கானவுடன் மனம்விட்டுப் பேசிவிட்டு அவர் இப்பொழுதுதான் திரும்பியிருந்தார். இதற்காக, மாப்போட்டுச் சலவைசெய்த கழுத்துப் பட்டையை எடுத்து அவர் அணிந்துகொண்டு உற்சாகமாகச் சென்றார். சென்றவர் ஏமாற்றத்துடனும் சோர்வுடனும் ஆயாசத்துடனும பிளக்கானவிட

யிருந்து திரும்பினர். "ஈகார்! சந்தோஷமாய் இரு. நாம் ஜானி என்ற பாட்டைப் பாடலாம். எப்படியும் நமக்கு வெற்றி கிட்டும்" என்று அவரைத் தேற்றினள் ஸ்வெர்க்கா. இலிச்சும் உற்சாகமும் சுறுசுறுப்பும் அடைந்தார். மங்கி மறைந்துகிடந்த அவருடைய நகைச்சுவை உணர்ச்சியை இந்த இன்பம் தட்டி எழுப்பியது.

இந்தச் சமயத்தில் பாக்டோனுவும் வந்து அரங்கத்தில் தோன்றினர். அந்தக் காலத்தில் அவருடைய தத்துவ நூல்களை விளாதிமிர் இலிச் அதிகம் படித்தது இல்லை. ஆகவே பாக்டோனுவை இலிச்சுக்கு நேரடியாகத் தெரியாது. இருந்தும், கட்சியில் தலைமை ஸ்தானம் வகிக்க அவர் அருகதையுள்ளவர் என்பது மட்டும் தெளிவாயிற்று. போல்ஷ்விக்குகளுடன் சேர்ந்துகொள்ள அவர் முடிவாகத் தீர்மானித்துவிட்டார். அவருக்கு ரஷ்யாவில் ஏராளமான தொடர்புகள் இருந்தபடியால், சிறிது காலம் மட்டுமே வெளிநாடுகளில் தங்கிவிட்டுப் போகும் உத்தேசத்துடன் அவர் வந்திருந்தார்.

இறுதியில் முடிவற்ற சண்டையும் முடியும் கட்டம் வந்தது; பிளக்கானுவை விட்டு இறுதியாகப் பிரிவது, விளாதிமிர் இலிச்சுக்கு அதிக வேதனையை அளித்தது.

வசந்த காலத்தில் நாரோத் நாயா வாலியா கட்சியைச் சேர்ந்த பழைய புரட்சிக்காரர் நாட்டான்சனுடனும் அவர் மனைவியுடனும் விளாதிமிர் இலிச்சுக்கு அறிமுகம் ஏற்பட்டது. பழைய பாணியில் தேர்ச்சிபெற்ற சிறந்த நிர்மாணகர் நாட்டான்சன். ஏராளமான ஜனங்கள் அவருக்கு அறிமுகமானவர்கள்; ஒவ்வொருவரையும் அவர் சரியாக மதிப்பிட்டு வைத்திருந்தார்; எந்த வேலைக்கு யார் தகுதியானவர் என்பதை அவர் நன்கு அறிவர். தமது கட்சி அங்கத்தினர்களைப் பற்றி அவர் நன்ருகத் தெரிந்துகொண்டிருப்பது மட்டுமல்லாமல், மத்திய கமிட்டி அங்கத்தினர்களைக் காட்டிலும், சமதர்ம-ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் பற்றி நாட்டான்சன் நன்ருகத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார்; அவருடைய இந்த அறிவு விளாதிமிர் இலிச்சைப் பெரிதும் கவர்ந்தது. நாட்டான்சன் சில காலம் பக்குவில் வசித்தார். கிராஸின், போஸ்டோலோவஸ்கி முதலியவர்களை அவர் நன்கு அறிந்திருந்தார். நாட்டான்சனை சமதர்ம-ஜனநாயகக் கட்சிக்கு இழுத்துவிட முடியும் என்று விளாதிமிர் இலிச் கருதினர். சமதர்ம-ஜனநாயகக் கட்சிக் கொள்கைகளைக் கிட்டத்தட்ட அனுசரிக்கும் தோரணையில் நாட்டான்சன் இருந்து வந்தார். பக்குவில் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது. தம் வாழ்நாளிலே இந்தப் பழைய புரட்சிக்காரர் கண்ட பெரிய ஆர்ப்பாட்டம் அதுதானும். இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டதும் பழைய புரட்சிக்காரரான இவர் விம்மி விம்மி அழுதுவிட்டாராம். இப்படி யாரோ ஒரு சமயம் இவரைப் பற்றி எங்களிடம் சொன்னர்கள். ஒரு விஷயத்தில் நாட்டான்சனின் முடிவை விளாதிமிர் இலிச் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் காலத்தில் விவசாயிகள் சம்பந்தமாகச் சமதர்ம-ஜனநாயகவாதிகள் கொண்டிருந்த முடிவை நாட்டான்சன் ஏற்கவில்லை. சுமார் பதினைந்து தினங்கள்வரை நாட்டான்சனுடன் எங்கள் நட்பு நீடித்தது. பிளக்கானுவின் சிறந்த நண்பர் நாட்டான்சன். பிளக்கானுவைக் குறிப்பிட நேரும்பொழுது எல்லாம், உரிமை கொண்டாடி, ஒருமை வாசகத்தில் அவர்

பெயரைக் குறிப்பிடுவார். எப்படியோ கட்சி விவகாரங்களைப் பற்றியும் மென்ஷ்விக்குகளுடன் பிளவு ஏற்பட்டிருப்பது பற்றியும் விளாதிமிர் இலிச் அவருடன் கலந்து பேசினார். பிளாக்கானுவுடன் இதைப்பற்றிப் பேச நாட்டான்சன் இசைந்தார். திரும்பி வந்தபோது அவர் சோர்வுடன் காணப்பட்டார். நாங்கள் விட்டுக்கொடுத்துப் போகவேண்டும் என்று எங்களுக்கு அவர் ஆலோசனை கூறினார்.

நாட்டான்சனுடன் எங்களுக்கு இருந்த உறவு முறிந்தது. கட்சிக்கு அறிமுகம் இல்லாத ஒருவரிடம் சமதர்ம ஜனநாயகக் கட்சி விவகாரங்களைப் பற்றிப் பேச நேர்ந்தற்காகவும் அத்தகைய ஒருவர் சமாதானத் தூதராகச் சென்று வந்ததற்காகவும் இலிச் தம்மைத் தாமே கடிந்துகொண்டார். தம்மீதும் நாட்டான்சன்மீதும் ஆத்திரப்பட்டுக்கொண்டார்.

அந்தச் சமயம் ரஷ்யாவில் இருந்த மத்திய கமிட்டி, தெளிவற்ற சமரஸக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. ஆனால் ஸ்தலக் கமிட்டிகளோ போல்ஷ்விக்குகளை உறுதியாக ஆதரித்தன. ரஷ்யாவை ஆதாரமாகக் கொண்டு புதிய காங்கிரஸைக் கூட்ட வேண்டிய அவசியம் இதனால் ஏற்பட்டது.

மத்திய கமிட்டி விடுத்த ஜூலை அறிக்கை, தமது கருத்தை வெளியிடும் உரிமையையும் ரஷ்யாவுடன் கடிதப்போக்கு வைத்துக்கொள்ளும் உரிமையையும் மறுத்த காரணத்தால், விளாதிமிர் இலிச், மத்திய கமிட்டியிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டார். இருபத்து இரண்டு அங்கத்தினர்களைக் கொண்ட போல்ஷ்விக் கோஷ்டி, மூன்றாவது காங்கிரஸைக் கூட்ட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

நானும் இலிச்சும் எங்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு மலைவாசத்துக்குச் சென்றோம். குறைந்தது ஒரு மாதமேனும் மலைவாசம் செய்வது என்ற உத்தேசத்துடன் புறப்பட்டுப் போனோம். "ஸ்வர்க்காவும்" எங்களுடன் புறப்பட்டு வந்தாள். ஆனால் விரைவில் அவளுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. "ஒரு பூனையைக்கூடக் காண முடியாத இடத்துக்கு நீங்கள் செல்ல விரும்புகிறீர்கள். ஜனங்களின் தொடர்பு இன்றி என்னால் வாழ முடியாது" என்று அவள் ஆச்சரியத்துடன் கூறினாள். உண்மையில், ஜனசஞ்சாரமற்ற அடர்ந்த கானகத்துக்குள் செல்வதை விரும்பியே நாங்கள் அங்கே சென்றோம். மலையின் மத்திய பாகத்துக்கே சென்றுவிட்டோம். இவ்வாறு ஒரு மாதம் சுற்றித் திரிந்தோம். மறு நாள் எங்கே இருப்போம் என்பதுபற்றி எங்களுக்கே தெரியாது. மாலையில் மிகவும் களைப்புற்று எங்கள் ஜாகைக்குத் திரும்புவோம். ஆகையால் படுத்ததுமே கண் அயர்ந்து தூங்கிவிடுவோம்.

எங்களிடம் ரொக்கம் சுருக்கமாகத்தான் இருந்தது. எனவே பெரும்பாலும் முட்டையையும் வெண்ணெய் போன்றவற்றையும் உணவாகக்கொண்டு வாழ்ந்தோம்; வெறும் ஜலத்தை மட்டும் குடித்தோம்; அல்லது சிறிது மது அருந்தினோம். அபூர்வமாகத்தான், சரியான உணவை நாங்கள் சாப்பிட முடிந்தது. சமதர்ம-ஜனநாயகவாதி ஒருவர் நடத்திய விடுதி ஒன்றில் நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுது, தொழிலாளி ஒருவர் எங்களைப் பார்த்து, "பிரயாணிகளுடன்கூட இருந்து சாப்பிடாதீர்கள்; வண்டிக்காரர்கள், டிரைவர்கள், தொழிலாளிகள் ஆகியோருடன் இருந்து சாப்பிடுங்கள். சாப்பாடு இரண்டு

மடங்கு மலிவாகக் கிடைக்கும்; இரு மடங்கு திருப்தியாகவும் சாப்பிடலாம்'' என்று யோசனை சொன்னார்.

அவர் சொன்ன யோசனைப்படி நாங்கள் நடந்துகொண்டோம். பூர்ஷ்வாக்களாக ஆசைப்படும் கடைகாரர்கள், சிறிய அதிகாரிகள், இன்னும் இவர்களைப் போன்றவர்கள், வெளியே போகப் பிரியப்பட்டாலும் படுவார்களேயல்லாமல், வேலைக்காரர்களுடன் சமமாக உட்கார்ந்து உணவு அருந்த அவர்களுக்கு ஒரு போதும் மனம் வராது. மத்தியதர வர்க்கத்தினரிடையே காணப்படும் இந்தப் பூர்ஷ்வா அசட்டுத்தனம் ஐரோப்பா முழுவதும் பரவிக் கிடப்பதை நாம் காணலாம். ஜனநாயகத்தைப்பற்றி இவர்கள் பிரமாதமாகப் பேசுவார்கள். ஆனால், தன் வேலைக்காரர்களுடன் சமமாக அமர்ந்து உணவு உண்ண இவர்கள் பிரியப்பட மாட்டார்கள்; தன் வீட்டில் அல்ல; நாகரிகமான ஓர் ஹோட்டலில்கூட, சமமாக இருந்து உணவு உண்ண இவர்களுக்கு மனம் வருவது இல்லை. ''சிறந்த மனிதர்களுடன்'' சேர்ந்துகொள்ள விரும்புகிற மத்தியதர வர்க்கத்தினன் எவனுக்கும் இந்த விருப்பம் இருப்பது இல்லை. விளாதிமிர் இலிச் பெருமையுடன் அந்த மேஜை அருகே சென்று அமருவார்; திருப்தியுடன் சாப்பிடுவார்; இத்தகைய உணவு சாப்பிட அவருக்கு அலாதியான ஒரு பசியே உண்டாகிவிடும். சாப்பாடு மலிவாக இருப்பதையும் அது திருப்திகரமாக அமைந்திருப்பதையும் வாயாரப் புகழ்வார். இதன் பிறகு எங்கள் மூட்டை முடிச்சுகளுடன் நாங்கள் மேலும் புறப்பட்டுச் செல்வோம். பைகள் இரண்டும் கனமாய் இருந்தன; விளாதிமிர் இலிச்சினுடைய பையில் கனமான பெரிய பிரஞ்சு அகராதி ஒன்று இருந்தது; மொழிபெயர்ப்பதற்காக வைத்திருந்த கனமான பிரஞ்சுப் புத்தகம் ஒன்று என் பையில் இருந்தது. பிரயாணம் முழுதும் அந்தப் புத்தகத்தையோ அல்லது அகராதியையோ நாங்கள் திறந்துகூடப் பார்க்கவில்லை. அகராதியைப் பார்ப்பதற்குப் பதிலாக, நாங்கள் பனியால் மூடப்பட்ட மலைச் சிகரங்களையும், நீலநிற ஏரிகளையும், பேரிரைச்சல் போட்டுக்கொண்டு வீழும் நீர்வீழ்ச்சிகளையும் கண்டோம்.

இவ்வாறு ஒரு மாதம் சுற்றியலைந்தபடியால், விளாதிமிர் இலிச்சின் மனப் போக்கு, அதன் இயற்கை நிலையை அடைந்தது. சில்லறைப் பூசல்கள் என்ற சிலந்திக் கூடுகளை எல்லாம் மலை அருவிகள் அடித்துக்கொண்டு போய்விட்டன. லாக்டிபெரிக்குப் பக்கத்தில் வழியில்லா வழியில் ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு குக்கிராமத்தில், பாக்டானவ் தம்பதிகள், பெரிக்கின்ஸ் தம்பதிகள், ஓல்மின்ஸ்கை ஆகியோருடன் ஆகஸ்டு மாதத்தைக் கழித்தோம். பாக்டானவ் தம்பதிகளுடன் வேலைத்திட்டத்தைப்பற்றி விவாதித்தோம். இலக்கிய வேலைகளுக்கு, லுனசார்ஸ்கை, ஸ்டெப்பானவ், பாஸாராவ் ஆகியோரைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று பாக்டானவ் யோசனை கூறினார். வெளிநாட்டில் எங்களுக்கு என ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கவும் காங்கிரஸைக் கூட்ட வேண்டும் என்று ரஷ்யாவில் கிளர்ச்சி நடத்தவும் நாங்கள் திட்டமிட்டு வைத்திருந்தோம்.

இலிச்சின் மனநிலை இப்பொழுது முற்றும் சரிப்பட்டு அவர் மகிழ்ச்சியுடன் இருந்தார்; பாக்டானவ் தம்பதிகளுடன் அளவளாவிக்கொண் டிருந்துவிட்டு, மாலை நேரங்களில் அவர் வீட்டுக்குத் திரும்புவார்; நாய்கள் உற்சாகத்துடன்

குரைக்கத் தொடங்கும்; சங்கிலியால் கட்டப்பெற்று, பாதையில் கிடக்கும் நாயுடன் இலிச் கொஞ்சி விளையாடுவார்.

இலையுதிர் காலத்தில் நாங்கள் ஜினீவாவுக்குத் திரும்பினோம்; நகரின் ஒரு கோடியில் வசித்த நாங்கள் இப்போது அதன் மத்திய பாகத்துக்கு அருகே குடியேறினோம். "சொஸட்டி டீ லெக்சர்" என்றும் சங்கத்தில் விளாதிமிர் இலிச் அங்கத்தினராகச் சேர்ந்தார். அங்கே சிறந்த வாசகசாலை ஒன்று இருந்தது; வேலை செய்வதற்கு இடம் வசதியாக இருந்தது. ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் ஆகிய பாஷைப் பத்திரிகைகள் அந்தச் சங்கத்தில் இருந்தன. "ரெபரென்ஸ் அறைகளில்" சௌகரியமாக வேலை செய்ய முடியும். சங்க அங்கத்தினர்களில் பெரும்பாலோர் வயதுமுதிர்ந்த பேராசிரியர்கள். வாசகசாலைப் பக்கம் பெரும்பாலும் அவர்கள் வருவதே இல்லை. ஆகவே அந்த அறையை இலிச் ஏகபோகமாக உபயோகித்துக்கொண்டார்.

சேறுபடாமல் இருக்கும் பொருட்டு, ஸ்விஸ் நாட்டவர்கள் தங்கள் கால் சட்டைகளை மேலே மடித்துவிட்டுக்கொள்வதைப் போல, மடித்துவிட்டுக் கொள்ளாமல், நாள்தோறும் அதிகாலையில் ரஷ்யப் புரட்சிக்காரர் ஒருவர் "சொஸட்டி டீ லெக்சருக்கு" வந்து போனதை ஜினீவாவிலுள்ள அந்த வாசகசாலைச் சிப்பந்திகள் சாட்சி சொல்ல முடியும். முன் தினம் படித்துப் பூர்த்தி செய்யாது தாம் விட்டுச் சென்ற புத்தகத்தை மீண்டும் எடுத்து அந்தப் புரட்சிக்காரர் படிக்கத் தொடங்குவார். வீதிச் சண்டை சம்பந்தமான புத்தகங்களாகவோ அல்லது தாக்குதல் சம்பந்தமான புத்தகங்களாகவோ அவை பெரும்பாலும் இருக்கும். வழக்கமாகத் தான் உட்காருகிற, ஜன்னல் ஓரத்தில் இருக்கிற சிறிய மேஜை அருகே சென்று அவர் அமர்ந்துகொள்வார். வழக்கமான முறைப்படி, தனது வழுக்கைத் தலைமீது கிடக்கும் மெல்லிய ரோமங்களை அவர் ஒழுங்குபடுத்திவிட்டுக்கொள்வார். பிறகு புத்தகத்தைப் படிப்பதில் அவர் அழுந்திவிடுவார். தனக்குப் புரியாத வார்த்தைகளின் பொருளைத் தெரிந்துகொள்வதற்காகவோ அல்லது, அகராதியை எடுப்பதற்காகவோதான் அவர் அபூர்வமாக எழுந்திருப்பார். பிறகு சிறிது நேரம் முன்னும் பின்னும் நடந்துவிட்டு, மீண்டும் ஆசனத்தில் போய் அமர்ந்துகொள்வார். ஒரு காகிதத் துண்டை விரைவாக எடுத்து, அதில் சில வாசகங்களை வெகு வேகமாக எழுதிக்கொள்வார்.

மென்ஷ்விக்குகள் இன்னின்ன இடத்தில் இப்படி இப்படிக் கூறினார்கள் என்று குறைசொல்லவோ, அல்லது, இன்னின்ன இடங்களில் மோசமாக நடந்துகொண்டுவிட்டார்கள் என்று குற்றம் சாட்டவோ வருவதற்கு, எந்த ரஷ்யத் தோழருக்கும் இந்த இடம் வாய்ப்பானதாக இல்லை. ஆகையால் மனத்தை ஒருநிலைப்படுத்திச் சிந்தனை செய்ய இந்த இடம் வசதியாக இருந்தது; அப்படிச் சிந்திக்க வேண்டிய விஷயங்களும் பல இருந்தன.

ரஷ்ய - ஜப்பானிய யுத்தம் தொடங்கிவிட்டது. ஸார் ஆட்சி எவ்வளவு தூரம் அழுகிப்போய் இருக்கிறது என்பதை இந்த யுத்தம் வெளிப்படுத்திவிட்டது. இந்த யுத்தத்தில் ஸார் தோற்றுப் போக வேண்டும் என்று போல்ஷ்விக்குகளும் ஏன் மிதவாதிகளும்கூட விரும்பினார்கள். அடித்தளத்திலிருந்து குமிழியிட்டுச் சீறி, ஆத்திரம் பொங்கி எழுந்தது. தொழிலாள வர்க்க

இயக்கம் ஒரு புதுக் கட்டத்துக்குள் பிரவேசித்தது. போலீஸாரின் தடையை மீறிப் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன என்றும், போலீஸாருக்கும் தொழிளாலர்களுக்கும் இடையில் கைகலப்புகள் ஏற்படுகின்றன என்றும் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன.

பொதுஜனப் புரட்சி இயக்கம் வளர ஆரம்பித்ததும், சில்லறைத் தகராறுகள் அதற்கு முன் தொல்லைப்படுத்திய அளவு இப்பொழுது அவை எங்களை அவ்வளவாகத் தொல்லைப்படுத்த வில்லை. இந்தத் தகராறுகள் சில சமயங்களில் பெருத்த கூச்சலிலும் குழப்பத்திலும் முடிந்தன. இத்தகைய ஒரு சம்பவம் என் நினைவில் இருக்கிறது; ஒரு சமயம் காகஸஸ் பிரதேசத்திலிருந்து, வாசலீவ் என்னும் பெயருடைய போல்ஷ்விக் தோழர் ஒருவர் வந்திருந்தார். அவர் ரஷ்யாவிலுள்ள நிலைமைகளை விளக்கிச் சொல்ல விரும்பினர். இதற்குக் கட்சி முறையில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பெறவில்லை; கட்சி அங்கத்தினர் எவரும் வந்து கேட்கக் கூடிய ஒரு சாதாரணக் கூட்டம்தான் அது. இதை அறிந்திருந்தும் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூட்ட ஆரம்பத்தில் மென்ஷ்விக்குகள் கூறினர். ஒவ்வொரு கூட்டத்தையும் அல்லது ஒவ்வொரு சொற்பொழிவையும் ஒருவிதத் தேர்தல் போட்டியாக மாற்றி, "ஜனநாயக வழிகளில்" போல்ஷ்விக்குகளுக்கு வாய்ப்பூட்டுப் போட, மென்ஷ்விக்குகள் முயன்று வந்தனர். நிலைமை மிகவும் சிக்கலாகிவிட்டது. குழப்பத்தில் யாரோ ஒருவர் பாக்டோனுவின் மனைவி நட்டாலியாவின் ஆடைகளைக் கிழித்துவிட்டார். யாரோ ஒருவர் காயம் அடைந்தார்; எனினும் இத்தகைய நடவடிக்கைகள்பற்றி முன்னர் நாங்கள் கவலைப்பட்டதைப் போன்று, இப்பொழுது எல்லாம் அவ்வளவாகக் கவலைப்படவில்லை.

அப்பொழுது எல்லோருடைய மனதிலும் ரஷ்யாவைப் பற்றிய எண்ணமே நிரம்பி இருந்தது. பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, ஒடெஸ்ஸா முதலிய நகரங்களில் மேலோங்கி வளர்ந்து வந்த தொழிலாளர் இயக்கத்தின் மகத்தான பொறுப்பை எல்லோரும் உணர்ந்தோம்.

சகல கட்சிகளும்-மிதவாதிகள், சமதர்மப் புரட்சிக் கட்சி ஆகிய அனைத்தும் தங்கள் தங்கள் சுய சுருபத்தை - உண்மையான சொரூபத்தைக் - காட்டத் தொடங்கின. மென்ஷ்விக்குகளும் இதற்கு விதிவிலக்கு அல்லர். போல்ஷ்விக்குகளையும் மென்ஷ்விக்குகளையும் பிரித்தது எது என்பது இப்பொழுது துலக்கமாகத் தெரிந்துவிட்டது.

பாட்டாளி மக்களின் வர்க்க உணர்ச்சியிலும் அவர்களின் ஆக்க சக்தியிலும் அவர்களின் சரித்திரரீதியான கடமையிலும் விளாதிமிர் இலிச்சுக்கு அபாரமான நம்பிக்கை இருந்தது. விளாதிமிர் இலிச்சுக்கு ஏற்பட்ட இந்த நம்பிக்கை ஒரே நாளில் ஏற்பட்ட நம்பிக்கை அன்று. மார்க்ஸின் வர்க்கப் போராட்டத் தத்துவத்தைப் படித்து, அதைப்பற்றிப் பல ஆண்டுகள் ஆழ்ந்து சிந்தித்து, அதன் பயனுய் உருப்பெற்ற நம்பிக்கை இது; ரஷ்யர்களின் உண்மையான வாழ்க்கை நிலைகளை நேரடியாக ஆராய்ந்ததின் பயனுய் ஏற்பட்ட நம்பிக்கையாகும் இது. பழைய புரட்சிக்காரர்களின் கருத்துகளை எதிர்க்கும்பொழுது, தனிப்பட்ட தீவிரவாதிகளின் தீரச் செயல்களைவிடத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆற்றலும் வீரமும்

பெரிது என்பதை அவர் சுட்டிக்காட்டினர். இனம் தெரியாத சக்தியின் மீது ஏற்பட்ட குருட்டு நம்பிக்கை அல்ல இது; ஆனல் பாட்டாளி மக்களின் சக்தியின் மீதும் உழைக்கும் வர்க்கத்தின் விமோசனத்துக்காக அவர்கள் ஆற்ற வேண்டிய மகத்தான கடமையின்மீதும் ஏற்பட்ட ஆழ்ந்த உறுதியின் பயனாய் ஏற்பட்ட நம்பிக்கை ஆகும் இது. நிலைமைகளை ஐயமற உணர்ந்துகொண்டதாலும் அவற்றை உணர்ச்சிபூர்வமாகப் பரிசீலனை செய்து அறிந்துகொண்டதாலும் ஏற்பட்ட நம்பிக்கை ஆகும் இது. பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் வர்க்கத்திடையே இருந்து அவர் நேரடியாக வேலை செய்துவந்த காலத்தில் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தின் பயனாய்ப் பிறந்த நம்பிக்கை ஆகும் இது.

டிசம்பர் மாத இறுதியில் போல்ஷ்விக்குகளின் பத்திரிகையான முன்னேற்றம் வெளிவர ஆரம்பித்தது. இலிச்சும், ஓல்மின்ஸ்கையும் ஓர்லோவஸ்கையும் ஆசிரியர் குழாத்தில் அங்கம் வகித்தனர். விரைவில் எங்களுக்கு உதவியாக லூனசார்ஸ்கையும் வந்து சேர்ந்துகொண்டார்; நெஞ்சை உருக்கும் அவருடைய கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் அப்பொழுது போல்ஷ்விக்குகளிடையே நிலவியிருந்த மனப்போக்குக்கு உகந்த வகையில் அமைந்திருந்தன.

ரஷ்யாவில் புரட்சி இயக்கம் தொடர்ந்து வளர வளர, எங்களுடைய கடிதப் போக்குவரத்துகளும் அதற்குத் தகுந்தால் போல் சேர்ந்து வளர்ந்தன. மாதம் ஒன்றுக்கு முந்நூறு கடிதங்கள் என்ற அளவில் எங்கள் கடிதங்கள் பெருகி விட்டன; அந்தக் காலத்தில் இவ்வளவு கடிதங்கள் என்பது ஒரு பெரிய எண்ணிக்கைதான்; அந்தக் கடிதங்களிலிருந்து விளாதிமிர் இலிச்சுக்கு ஏராளமான விஷயங்கள் கிடைத்தன. தொழிலாளர்கள் எழுதும் கடிதங்களை எவ்வாறு படிக்க வேண்டும் என்பதை இலிச் நன்ருக அறிவார். ஒடெஸ்ஸா கல்லுடைக்கும் தொழிலாளர் எழுதிய கடிதம் ஒன்று எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. பண்படாத பல கரங்கள் எழுதின கட்டுரை போன்று இருந்தது அந்தக் கடிதம். எழுவாய் பயனிலை இல்லாமலும் முற்றுப்புள்ளி, கமா முதலியன வைக்கப் பெருமலும் அது எழுதப் பெற்றிருந்தது; இருந்தும் அந்தக் கடிதத்தில் ஜீவசக்தி ததும்பி வழிந்தது; முடிவுவரையில் போராட-வெற்றிகிட்டும்வரையில் போராட-தாங்கள் தயார் என்பதை அந்தக் கடிதம் சுட்டிக்காட்டிற்று. அந்தக் கடிதத்தில் காணப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் - அது சிறுபிள்ளைத்தனமாகத் தோன்றிய போதிலும்கூட - அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துவதாய் இருந்தது. அந்தக் கடிதம் எதைப்பற்றியது என்பது இப்போது எனக்கு ஞாபகமில்லை எனினும், அந்தக் கடிதத்தின் தோற்றம் இன்னும் என் நினைவில் இருக்கிறது. சிவப்பு மையால் எழுதப்பட்ட கடிதம் அது. அந்தக் கடிதத்தை இலிச் பல முறை படித்தார்; பிறகு சிந்தனையில் மூழ்கி, அறையில் அங்கும் இங்கும் நடந்து கொடுத்தார். ஒடெஸ்ஸா கல்லுடைக்கும் தொழிலாளர்கள் இலிச்சுக்கு எழுதிய கடிதம் வீண்போக வில்லை. தங்கள் நிலையை சரியாகப் புரிந்து கொண்ட மனிதர் ஒருவருக்குத்தான் அவர்கள் கடிதம் எழுதி இருக்கிருர்கள்.

இந்தக் கடிதம் வந்த சில தினங்களுக்குப் பின்னர், டான்யூஷாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஒடெஸ்ஸா வட்டாரத்தில் சிறந்த பிரசாரகி என்ற முறையில் இவள் பிரபலம் அடைந்து வந்த காலம் அது. ஒடெஸ்ஸா தொழி

லாளர்களைப்பற்றி, மனப்பூர்வமாகவும் விரிவாகவும் அவள் எழுதி இருந்தாள். அந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும், உடனே, டான்யூஷாவுக்கு இலிச் பதில் கடிதம் ஒன்று போட்டார். "உங்கள் கடிதத்திற்கு வந்தனம்; அடிக்கடி கடிதம் எழுதுங்கள்; தினசரி நடவடிக்கைகள்பற்றிய விவரங்கள் கடிதங் களில் இருப்பது மிக மிக முக்கியமாகும். இத்தகைய கடிதங்கள் எங்களுக்கு அபூர்வமாகத்தான் கிடைக்கின்றன" என்று அதைப் பதில் கடிதத்தில் இலிச் குறிப்பிட்டிருந்தார்.

இன்னும் அதிகப்படியான தொடர்புகளைத் தமக்குத் தந்து உதவும்படி, ரஷ்யத் தோழர்களுக்கு எழுதின கடிதங்கள் ஒவ்வொன்றிலும் இலிச் குறிப் பிட்டிருந்தார். "தொடர்புகளின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான். புரட்சி ஸ்தாபனங்களின் பலம் இருக்கிறது" என்று குஸ்ஸெயுக்கு எழுதின கடிதத்தில் இலிச் குறிப்பிட்டிருந்தார். வெளிநாட்டில் இருக்கும் போல்ஷ்விக்கு மத்திய ஸ்தாபனத்திற்கும் வாலிபர்களுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும்படி குஸ்ஸெவை அவர் கேட்டுக்கொண்டார். "இளைஞர்களைப்பற்றி முட்டாள்தனமான, கேவலமான, கற்பனைரீதியான பயம் நமக்குள் இருந்து வருகிறது" என்று அந்தக் கடிதத்தில் இலிச் குறிப்பிட்டிருந்தார். சாம்ராவில் வசித்த காலத்தில் தமக்கு நண்பராய் இருந்தவரும் இப்பொழுது கிராமத்தில் வசித்து வருபவருமான தன் நண்பர் அலெக்ஸி ஆண்ட்ரியெராச் பிரியோ பிரான்ஸ்கை என்பவருக்கு, விவசாயிகளுடன் தமக்கு தொடர்புகள் ஏற்படுத்தித் தரும்படியாகக் கடிதங்கள் எழுதினர்; வெளிநாட்டில் இருக்கும் மத்திய ஸ்தா பனத்துக்குத் தொழிலாளர்களின் கடிதங்களை அனுப்பும்பொழுது, அவற்றின் சாரத்தையோ அல்லது குறிப்பையோ அனுப்பாமல், கடிதங்களை அப்படி அப்படியே தமக்கு அனுப்பும்படியாக, பீட்டர்ஸ்பர்க் தோழர்களைக் கேட்டுக் கொண்டார். புரட்சி நெருங்குகிறது, வளர்கிறது என்பதை, தொழிலாளர் களின் இந்தக் கடிதங்கள் இலிச்சுக்குத் தெளிவாக அறிவுறுத்தின. நாங்கள் 1905-ம் ஆண்டின் ஆரம்பத்தை அணுகிவிட்டோம்.

1905-ல் அஞ்ஞாதவாசம்

1904-ம் வருடம் நவம்பர் மாதம் எழுதிய நில இயக்கம், தீப்பொறியின் திட்டம் ஆகிய சிறு நூல்களிலும் பிறகு டிசம்பர் மாதத்தில் வெளியான முன்னேற்றம் 1—3 ஆகிய இதழ்களில் வெளியான கட்டுரைகளிலும் சுதந்திரத்துக்காகப் பொதுஜனங்கள் பகிரங்கமாகப் போராட வேண்டிய காலம் நெருங்கி வருகிறது என்பதை இலிச் எழுதி இருந்தார். புரட்சி உணர்ச்சி பொங்கி எழுவதை அவர் தெளிவாக உணர்ந்தார். ஆனால் புரட்சி நெருங்குவதை உணர்வது ஒரு விஷயம்; புரட்சி ஏற்கனவே தொடங்கிவிட்டது என்பதை அறிவது மற்றொரு விஷயம். ஆகவே ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதி பற்றிய செய்தி எங்களுக்கு ஜினீவாவில் எட்டினதும், புரட்சி எந்த சொரூபத்தில் தொடங்கி யிருக்கிறது என்பது திட்டமாகத் தெரியவந்ததும், எங்களைச் சுற்றி யிருப்பவை அனைத்தும் மாறிவிட்டதைப் போன்றும், அது வரை நடந்தவை அனைத்தும் வெகு காலத்துக்கு முன்னரே நடந்து மறைந்து போயின என்றும் எங்களுக்குத் தோன்றின. ஒரு தினத்துக்குப் பின்னர்தான் ஜனவரி ஒன்பதாம் தேதி நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய செய்திகள் ஜினீவாவிலிருந்த எங்களுக்கு எட்டின. நானும் விளாதிமிர் இலிச்சும் வாசகசாலைக்குச் சென்றுகொண் டிருந்தபொழுது, எங்களைக் காண வந்துகொண்டிருந்த லூனார்சார்ஸ்கி தம்பதிகளை நாங்கள் வழியில் சந்தித்தோம். லூனார்சார்ஸ்கியின் மனைவி, அன்னா அலெக்ஸாண்ட்ரோவ்னாவின் உருவம் இன்னும் என் கண் முன்னே நிற்கிறது. பெரிதும் கிளர்ச்சி வயப்பட்டிருந்த அவளால் பேசக் கூட முடியவில்லை; தனது கைக்குட்டையை மட்டும் அவளால் அசைக்க முடிந்தது. பீட்டர்ஸ்பர்க் செய்தியைக் கேள்வியுற்ற போல்ஷ்விக்குகள் அனைவரும் ஒரே முகமாக உணர்ச்சி வயப்பட்டு, லெப்பென்ஸ்கை தம்பதிகள் நடத்துகிற ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தனர்; நாங்களும் இயல்பாகவே ஈர்க்கப் பெற்று அங்கே போய்ச் சேர்ந்தோம்; எல்லோரும் ஒன்றாக இருக்க விரும்பினோம்; உணர்ச்சி வயப்பட்டுப் போய் இருந்தமையால் ஒருவருடன் ஒருவர் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. உறுதி தங்கள் முகத்தில் பிரதிபலிக்க, புரட்சிக் கீதம் ஒன்றை எல்லோரும் சேர்ந்து பாடினர். புரட்சி தொடங்கி விட்டது என்றும் ஸார்மீது இருந்த நம்பிக்கை என்னும் கயிறுகள் அறுந்து விட்டன என்றும் ''கொடுங்கோன்மை வீழும் காலமும் ஜனங்கள் கிளர்ந்து' எழுந்து விடுதலை பெற்றுப் பெருமையுடனும் பலத்துடனும் வாழும் காலமும்' நெருங்கிவிட்டன என்றும் கருதி, எல்லோரும் உணர்ச்சி வயப்பட்டுச் சிந்தனையில் மூழ்கி இருந்தனர்.

அன்று ஜினீவாவில் வசித்த தேசப்பிரஷ்டர்களின் நூதனமான வாழ்க்கையை நாங்களும் அனுபவித்தோம். உள்ளூர்ப் பத்திரிகையின் அடுத்த இதழ் 'எப்பொழுது வரும் எப்பொழுது வரும்' என்று ஆவலோடு காத்திருந்தோம்.

இலிச்சினினுடைய சிந்தனைகள் முழுவதும் ரஷ்யாவைப்பற்றினதாகவே இருந்தன.

விரைவில் காப்பன் ஜினீவாவுக்கு வந்து சேர்ந்தார். முதலில் அவர் சமதர்மப் புரட்சிக்காரர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். "காப்பன் தங்களுடைய மனிதர் என்றும், பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் இயக்கம் முழுதும் தங்களின் சொந்த சிருஷ்டி" என்றும் சமதர்மப் புரட்சிக்காரர்கள் சித்தரிக்க முற்பட்டனர். காப்பனை அவர்கள் வானளாவப் புகழ்ந்தனர்; அவர்மீது துதி பாடவும் செய்தனர். அன்று காப்பன் எல்லோரையும் ஆகர்ஷித்தார்; அவர் எழுதி வந்தகட்டுரைகளுக்காக, டைம்ஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகை அவருக்குப் பெருந்தொகை கொடுத்தது. காப்பன் ஜினீவாவுக்கு வந்த சில தினங்களுக்குப் பிறகு, சமதர்மப் புரட்சிக்காரப் பெண்மணி ஒருத்தி எங்களை அணுகி, விளாதிமிர் இலிச்சைக் காணக் காப்பன் விரும்புவதாகத் தெரிவித்தாள். "நடுநிலைமை" இடத்தில்—அதாவது ஒரு ஹோட்டலில்—இருவரும் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டது; சாயுங்காலம் ஆகிவிட்டது. தான் இருக்கும் அறையின் விளக்கைக்கூடப் பொருத்தாமல், அறையில் அங்கும் இங்கும் விளாதிமிர் இலிச் நடந்துகொண் டிருந்தார்.

ரஷ்யாவில் எங்கும் வியாபகமாகப் பரவிய புரட்சியின் உயிர்நாடியாக, காப்பன் விளங்கினர். பாட்டாளி மக்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது; பாட்டாளி மக்கள் பக்தியுடன் அவரை நம்பினர்; இந்தச் சந்திப்பைப்பற்றி இலிச் கிளர்ச்சி வயப்பட்டிருந்தார்.

சமீபத்தில் ஒரு தோழர் "காப்பனுடன் விளாதிமிர் இலிச் எப்படித் தொடர்புகொள்ள முடிந்தது?" என்று குழப்பத்துடன் கேட்டார்.

ஒரு பாதிரியிட மிருந்து எவ்வித நன்மையுமே ஏற்பட முடியாது என்பதை முன்னரே யூகித்து அறிந்து, யாருமே காப்பனை அசட்டை செய்திருக்க முடியும் என்பது உண்மையே. பிளக்கானுவ் இப்படித்தான் செய்தார்; காப்பனை அவர் மிகவும் அசட்டையோடுதான் வரவேற்றார். புரட்சி என்பது ஜீவ ஓட்டம் உள்ள ஒரு காரியம் என்பதாக இலிச் கருதினர்; அவருடைய இந்தக் கருத்து ஒன்றில்தான் அவருடைய பலம் இருக்கிறது என்று கூறலாம். புரட்சியின் தன்மைகளைப் பகுத்தறிந்து, அதன் பல்வேறு அம்சங்களை உணர்ந்து ஜனங்களுக்கு எது தேவை, எதை விரும்புகிறார்கள் என்பதை அறிவதில் இலிச்சைத் திறமைசாலி என்று கூறலாம். ஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதன் மூலம்தான், ஜனங்கள் சம்பந்தமான விருப்பு வெறுப்புகளை நாம் அறிந்துகொள்ள முடியும். ஜனங்களுடன் தொடர்புகொண்டு, அவர்களுடன் நெருங்கிப் பிணைந்து நின்று, அவர்களிடம் அதிக செல்வாக்கும் பெற்றிருந்த காப்பனை, இலிச்சால் புறக்கணிக்க முடியுமா என்ன?

காப்பனைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய இலிச், தன் மனநிலையை எங்களுக்குச் சொன்னர். அப்பொழுதும்கூட, புரட்சி உணர்ச்சியில் காப்பன் திளைத்-

திருந்தார் என்று விளாதிமிர் சொன்னார். 'பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களைப் பற்றிப் பேசும்பொழுது ஆவேசத்துடன் பேசினார்; ஸாரையும் அவருடைய கையாட்களையும்பற்றி அவர் பிரஸ்தாபித்தபொழுது அவர் ஆக்ரோஷத்துடன் பேசினார்.' இந்த ஆத்திர மெல்லாம் சிறுபிள்ளைத்தனமானது எனினும், நேரடியான தொடர்பினால் ஏற்பட்ட ஆத்திரமாகும் அது; தொழிலாளர்களின் ஆத்திரத்துடன் இயைந்தவாறு இந்த ஆத்திரமும் இருந்தது' என்று இலிச் வருணித்தார். "நாம் அவருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்" என்று கூறினார் விளாதிமிர் இலிச். 'புகழ்வதை கேட்டு மயங்கிவிடாதீர்கள், சிறிய பிதாவே! படியுங்கள்; இல்லையேல் உங்களுக்கு அங்குதான் இடம் கிடைக்கும்' என்று ஒரு மேஜையை அவருக்கு நான் சுட்டிக்காட்டினேன்" என்றார் இலிச்.

"அரசியல் அறிவும் உணர்வும் இல்லாத மக்கள், புரட்சி உணர்ச்சியைப் பெற்ற காலத்தை நேரில் கண்டு அதில் ஆழ்ந்த அனுபவம் பெற்றவர் ஜியார்ஜ் காப்பன்; அரசியல் தலைவருக்கு அவசியமான புரட்சி திருஷ்டியைப் பெறுவதிலும் அவர் முயன்று வெற்றி பெறுவார் என்று நாம் நம்புகிறோம்" என்பதாக, பிப்பிரவரி மாதம் எட்டாம் தேதி வெளியான முன்னேற்றம் ஏழாம் இதழில் விளாதிமிர் இலிச் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், பாதிரி காப்பனுக்கு இந்தத் தெளிவு ஏற்படவே இல்லை. உக்கேரேனிய பணக்கார விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவர், தமது குடும்பத்துடனும் கிராமத்துடனுமே கடைசிவரைத் தமது தொடர்பை நீடித்துக் கொண்டிருந்தார். விவசாயிகளின் தேவைகளை அவர் நன்றாக அறிவார்; அவர் எளிய பாஷையில் பேசுவார்; பண்படாத பாட்டாளி மக்களுக்குப் புரியும் பாஷையில் பேசுவார். அவருடைய பிறப்பும் கிராமத்துடன் அவருக்கு இருந்த தொடர்பும் அவர் பெற்ற வெற்றிக்கு உரிய காரணங்களாக இருக்கலாம். ஆனால் காப்பனைப் போன்ற பாதிரி மனப்பான்மையில் ஊறித் திளைத்த, வேறு ஒரு நபரைக் காண்பது அரிது. புரட்சிக்காரர்களுடன் அவருக்கு ஒருபோதும் தொடர்பு இருந்ததே கிடையாது; இயல்பிலேயே அவர் ஒரு புரட்சிக்காரருமல்லர். எத்தகைய சமரஸத்திற்கும் இணங்கிப்போகும் மந்தமான ஒரு பாதிரி அவர்.

ஒரு நாள் அவர் சொன்னதாவது: "ஒரு காலத்தில் அவர்கள் என்னைச் சந்தேகித்தனர். என்மீது இருந்த நம்பிக்கை ஆட்டங் கண்டது. நான் நோய்வாய்ப்பட்டேன்; எனவே கிரிமியாவுக்குச் சென்றேன். அப்பொழுது அங்கே ஒரு வயோதிகர் வசித்தார். அருள் பெற்ற பெரியவர் என்று அவரை எல்லோரும் சொன்னார்கள். எனது நம்பிக்கையை உரப்படுத்திக்கொள்ளும் பொருட்டு நானும் அவரை அணுகினேன். அவர் ஒரு ஓடை அருகே அமர்ந்திருந்தார்; ஜனங்கள் அவரைச் சுற்றிக் குழுமி நின்றார்கள். அவர் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார். ஓடையில் இருந்த ஒரு துவாரத்தின் வழியாக, வெற்றிகொண்ட ஜியார்ஜ் வெளிப்படப் போவதாக அவர் பாவனை செய்து கொண்டிருந்தார். இது முட்டாள்தனம் என்பது உண்மையே. ஆனால் விஷயம் அதுவல்ல என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. அந்த வயோதிகர் அபார நம்பிக்கை உடையவராய்க் காணப்பட்டார். பிரார்த்தனை முடிந்ததும், ஆசிர்வாதம் பெரும்பொருட்டு நான் அந்தப் பெரியாரை அணுகினேன். தமது

பாதிரி உடைகளைக் களைந்து போட்டுவிட்டு அவர் என்னை நோக்கி, 'நாங்கள் இங்கே ஒரு மெழுகுவர்த்திக் கடை வைத்திருக்கிறோம். வியாபாரம் நன்றாக நடக்கிறது' என்று சொன்னார். இதோ இருக்கிறது நம்பிக்கை. நான் பாதி உயிருடன் ஊர் திரும்பினேன். அப்பொழுது எனக்கு ஒரு நண்பர் இருந்தார்; அவர் சிறந்த தலைவர்; பெயர் வெரிஜாஜ்ஜின். அவர் என்னைப் பார்த்து 'இந்தப் பாதிரி உத்தியோகத்துக்கு ஒரு முழுக்குப் போட்டுவிடுங்களேன்' என்றார். கிராமத்தில் எனது உறவினர்களுக்கு மதிப்பு இருக்கிறது; என் தந்தை கிராமத் தலைவராய் இருக்கிறார். எல்லோரும் அவரை மதிக்கிறார்கள். பாதிரி உத்தியோகத்தை நான் உதறித் தள்ளிவிட்டால், எல்லோரும் என் தந்தையிடம் சென்று 'உம் புதல்வன் செய்த காரியத்தைப் பார்த்தீர்களா? வழி தவறி பாதிரி உத்தியோகத்தை விட்டுவிட்டாரே' என்று இடித்து உரைப்பார்கள். ஆகவே பாதிரி உத்தியோகத்தைவிட எனக்கு மனம் வரவில்லை'' என்று கூறினார்.

காப்பனுடைய மனப்போக்கை இந்தக் கதை நமக்குச் சரியாகச் சித்தரித்துக் காட்டுகிறது.

விஷயங்களை எவ்வாறு கற்கவேண்டும் என்பதை அவர் அறியார். குறியை நோக்கிச் சுடவும் குதிரைச் சவாரி செய்யவும் அவர் எவ்வளவோ நேரத்தைச் செலவிட்டார். ஆனால் புத்தகங்களைப் படிப்பதில் அவருடைய நாட்டம் செல்லவில்லை. இலிச்சின் யோசனையின் பேரில், பிளக்கானுவின் புத்தகங்களை அவர் படிக்க முற்பட்டார் என்பது உண்மைதான். இந்தப் புத்தகங்களை எல்லாம் கடமை வயப்பட்டு அவர் படித்தாரே யல்லாமல், நம்பிக்கை வயப்பட்டு அவர் படிக்கவில்லை. புத்தகங்களிலிருந்தும் அவரால் கற்றுக்கொள்ள முடியவில்லை; வாழ்க்கையிலிருந்தும் அவரால் கற்றுக்கொள்ள முடியவில்லை. பாதிரி மனப்போக்கு அவருடைய திருஷ்டியை மங்கச் செய்துவிட்டது. ரஷ்யாவுக்குத் திரும்பிய பிறகு, அவருடைய போக்கே அதள பாதாளத்தில் கொண்டுபோய் அவரைத் தள்ளிவிட்டது.

புரட்சியின் அதி ஆரம்பத்திலேயே, அதன் நிலைமைகளை விரைவில் இலிச் உணர்ந்துகொண்டுவிட்டார். இயக்கம் பனி மழையைப் போன்று வளரும் என்பதையும், புரட்சி உணர்வு படைத்த மக்கள் நடு வழியில் நின்றுவிட மாட்டார்கள் என்பதையும், எந்த சக்தியாலும் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதையும் கொடுங்கோன்மையை எதிர்த்துத் தொழிலாளர்கள் போராட்டத்தைத் துரிதப்படுத்துவார்கள் என்பதையும் இலிச் நன்றாக உணர்ந்துகொண் டிருந்தார். தொழிலாளர் வெற்றிபெறுவார்களா அல்லது அவர்களை மற்றவர்கள் வெற்றி கொள்வார்களா என்பதுதான் கேள்வி. போராட்டத்தின் பலாபலன்களைக் கொண்டுதான் இதற்கு முடிவு கூற முடியும். இதற்கிடையில், வெற்றி பெறுவதற்குப் போதிய ஆயுத பலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இலிச்சுக்கு எப்போதுமே ஒரு விசேஷத்தன்மை உண்டு; ஒரு குறிப்பிட்ட சமயத்தில் தொழிலாளர் வர்க்கம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெளிவாகக் காணும் சக்தி இயல்பாகவே அவரிடம் அமைந்து கிடந்தது.

கொடுங்கோன்மையை ஆட்டம் காணச் செய்ய விரும்பிய பூர்ஷ்வாக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, மென்ஷ்விக்குகளும் மக்களைத் தட்டி எழுப்ப விரும்பினர்; புரட்சியை "கட்டவிழ்த்துவிட வேண்டும்" என்பதைப்பற்றிப் பேசினர். தொழிலாளர்கள் கடைசிவரை போராடியே தீர்வர் என்பதை இலிச் நன்ருக உணர்ந்திருந்தார். அவர்களின் போக்கை அனுசரித்து இலிச்சின் போக்கும் இருந்தது. நடுவழியிலே நின்றுவிடுவது நல்ல நடைமுறை ஆகாது என்பதை அவர் நன்ருக அறிவார். அது தொழிலாளர் வர்க்கத்தைச் சோர்வடையச் செய்யும்; அவர்களின் போராட்ட சக்தியைக் குறைக்கும்; லட்சியத்திற்குப் பெரும் தீங்கை விளைவிக்கும். ஆகவே எந்தக் காரியத்தையும் அரைகுறையாகச் செய்யக் கூடாது என்பதை இலிச் அறிவார்.

1905-ம் வருடப் புரட்சியில் தொழிலாளர் வர்க்கம் தோல்வி அடைந்தது. என்ருலும் அதன் போராட்ட சக்தி குன்றிவிடவில்லை என்பதற்கும் அது முற்றுமே நிர்மூலமாகிவிடவில்லை என்பதற்கும் சரித்திரமே சான்று பகருகிறது. "ஒருதலைச் சார்பாக" இருக்கிருர் என்று லெனினைத் தாக்கினவர்கள் இதை உணரவில்லை. தோற்றுப்போன பிறகு "நாம் ஆயுதம் ஏந்தி இருக்கக் கூடாது" என்று கூறுவதைத் தவிர்த்து, வேறு எதுவும் அவர்களுக்குக் கூறத் தெரியவில்லை. தொழிலாளர்களுக்கு விஸ்வாசமாக இருப்பவர்களால், ஆயுதம் ஏந்துவதைத் தவிர்த்து வேறு முறையை மேற்கொள்ள முடியாது; போராட்ட வர்க்கத்தின் முன்அணிப் படையை நடுத்தெருவிலே தவிக்க விட்டுவிட்டுச் சும்மா இருப்பது சாத்தியமான காரியம் அன்று.

போராடும்படியும், ஸ்தாபனம் அமைக்கும்படியும் பொது மக்களை ஆயுதபாணிகளாக்க வேலை செய்யும்படியும் தொழிலாளர் வர்க்கத்தின் முன்அணிப் படையை—அதாவது கட்சியை—விளாதிமிர் இலிச் இடைவிடாது வேண்டினுர். இதைப்பற்றி முன்னேற்றத்திலும் ரஷ்யாவுக்கு எழுதின கடிதங்களிலும் விளாதிமிர் இலிச் இடைவிடாது குறிப்பிட்டு வந்தார்.

"1905-ம் வருடம் ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதி, புரட்சிகரமான பாட்டாளி மக்களின் அபரிமிதமான சக்தியை மட்டும் வெளிப்படுத்தவில்லை; சமதர்ம ஜனநாயக ஸ்தாபனம் அதே சமயத்தில் அதற்குத் தகுந்த பரிபக்குவத்தையும் பெறவில்லை என்பதையும் அது நமக்குக் காட்டுகிறது" என்று பெப்ரவரி மாத ஆரம்பத்தில், புரட்சிக்கு நாம் தயாராக வேண்டுமா? என்னும் தமது கட்டுரையில் விளாதிமிர் இலிச் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கட்டுரையிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், சொல்லிலிருந்து செயலுக்கு இறங்குங்கள் என மக்களை அறைகூவி அழைப்பதாக இருந்தது.

புரட்சியையும் புரட்சிப் போராட்டத்தையும் பற்றி மார்க்ஸும் ஏங்கல்ஸும் எழுதியவற்றை நன்ருகப் படிப்பதுடன் மட்டும் இலிச் திருப்தி அடைந்துவிடவில்லை. அவர்கள் அவைபற்றி எழுதினவற்றை எல்லாம் அவர் நுணுக்கமாகப் பரிசீலனை செய்தார்; அவற்றைப் பற்றித் தீர்க்கமாகச் சிந்தித்தார். யுத்தக் கலை சம்பந்தமான பல நூல்களை அவர் படித்தார். ஆயுதம் ஏந்திப் புரட்சி செய்வதைப் பல்வேறு கோணங்களிலிருந்து அவர் பரிசீலனை செய்தார். தந்திரங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவை பற்றி எல்லாம் முடிவு செய்திருந்தார். ஜனங்கள்

கருதியிருப்பதைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாக இந்தத் துறைகளில் தம் நாட்டம் முழுவதையும் செலுத்தி வைத்திருந்தார். உள்நாட்டுக் கலக காலத்தில் "திடீர்தாக்கு" வட்டாரத்தையும் ஐந்து பேர் பத்துப் பேர் வட்டாரத்தையும்பற்றி, அவர் பேசின பேச்சு, விஷயம் தெரியாத சாதாரண மனிதன் ஒருவன் பேசிய பேச்சு அன்று ; தீர்க்கமாகச் சிந்தித்து முடிவுக்கு வந்த ஒரு மனிதன் பேசின பேச்சு ஆகும் அது.

சாத்தியமான வழிகளில் எல்லாம் முயன்று போல்ஷ்விக்குகள் ஆயுதங்களை ரஷ்யாவுக்கு அனுப்பிவைத்தனர். என்றாலும் கடலில் கரைத்த காயம் மாதிரி அதனால் பயன் எதுவும் உண்டாகவில்லை. போராட்டக் கமிட்டி ஒன்று ரஷ்யாவில் பீட்டர்ஸ்பர்க் நகரில் நிறுவப்பெற்றது. ஆனால் அதன் இயக்கம் மிக மந்தமாக இருப்பதைக் கண்ட விளாதிமிர் அந்தக் கமிட்டிகளுக்கு அடியில் வருமாறு ஒரு கடிதம் எழுதினார் :

> "இதைப்போன்ற ஒரு காரியத்தை மேற்கொள்ளும்போது வழவழத்த திட்டங்கள் குறைவாக இருக்க வேண்டும் ; போராட்டக் கமிட்டியில் உப பிரிவுகள் ஏற்படுவது பற்றியும் அவற்றின் உரிமைகள் பற்றியும் இவ்வளவு விவாதமும் பேச்சும் இருத்தல் கூடாது. அபாரமானசக்தி, மென்மேலும் அதிகரிக்கக் கூடிய வெளிப்படையான சக்தி, இதுவே இப்போது தேவைப்படுவது. ஒரு வெடிகுண்டைக் கூட உற்பத்தி செய்யாமல், அதுபற்றி ஆறு மாத காலம் ஜனங்கள் வீணே பேசித் தள்ளியதைக் கண்டு நான் திடுக்கிட்டுப் போனேன். மிகவும் படித்தவர்கள்தான் இப்படி வீணே அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள் ; கனவான்களே ! நீங்கள் வாலிபர்களை அணுகுங்கள் ; அது ஒன்றுதான் விமோசனத்துக்கு வழி. இல்லையேல் தாமதித்து, உங்கள் காரியம் கெட்டுவிடும். இதை நான் தெளிவாகக் காண்கிறேன். இப்படியே நீங்கள் இயங்குவீர்களானால், புத்திசாலித்தனமான குறிப்புகள், திட்டங்கள், சித்திரங்கள், அருமையான வெடிமருந்து ஜாப்தாக்கள் இவைதான் உங்களிடம் மிஞ்சும் ; ஸ்தாபனமோ அல்லது உயிர் ஊட்டமுள்ள சுறுசுறுப்போ உங்களிடம் இருக்காது..........சம்பிரதாயங்களைப்பற்றியும் சட்டதிட்டங்களைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்....கடமைகள், உரிமைகள், சலுகைகள் ஆகியவைபற்றிய பேச்சுகள் இப்பொழுது வேண்டாம்."

ஆயுதம் தாங்கின புரட்சிப் போருக்கு ஏற்பாடு செய்யும் வேலையில் போல்ஷ்விக்குகள் முழுமூச்சுடன் ஈடுபட்டனர். தங்கள் உயிரையும் திரணமாக மதித்து அடிக்கடி அசாதாரணமான வீரதீரச் செயல்களில் அவர்கள் இறங்கினர். "ஆயுதம் தாங்கிப் புரட்சி செய்யுங்கள்" என்பதுதான் போல்ஷ்விக்குகளின் கோஷமாக இருந்தது. காப்பனும் ஆயுதம் தாங்கிக் கிளர்ச்சி செய்ய வேணும் என்று பேசிவந்தார்.

புரட்சிக் கட்சிகள் எல்லாம் ஒருமுகப்பட்டு, ஒரு முடிவுக்கு வந்து போராட்டத்தை நடத்த வேணும் என்ற கருத்தை, அவர் வந்ததும் வெளியிட்டார்.

1905-ம் வருடம் டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதி வெளியான முன்னேற்றம் இதழ் ஏழில், காப்பனின் யோசனையை இலிச் விமர்சனம் செய்திருக்கிறார். போராட்ட ஏற்பாடுகளைப் பற்றி விரிவாகவும் நுணுக்கமாகவும் அதில் அலசி ஆராய்ந்திருக்கிறார்.

பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களுக்கு ஆயுதம் அளிக்கும் பொறுப்பைக் காப்பன் ஏற்றுக்கொண்டார். தமக்குப் பல வழிகளில் இதற்காக வந்த நன்கொடைகளைக் கொண்டு, இங்கிலாந்தில் காப்பன் ஆயுதங்களை வாங்கினார். எப்படி அனுப்புவது என்பதுபற்றி முடிவு செய்யப்பெற்றது. கிராப்டன் என்னும் கப்பல் தலைவன் இந்த ஆயுதங்களை ஏற்றிச் சென்று, ரஷ்ய எல்லைக்கு அருகேயுள்ள தீவுகள் ஒன்றில் அவற்றை இறக்கித் தர இசைந்தார். சட்டவிரோதமான போக்குவரத்துகளில் கொஞ்சமும் பரிச்சயமில்லாத காப்பன், இந்த விஷயத்தை, அதன் உண்மை நிலையை அறியாது எளிதாக எண்ணிவிட்டார். எங்களிடமிருந்து சட்டவிரோதமான பாஸ்போர்ட்டையும் நண்பர்களின் விலாசங்களையும் பெற்றுக்கொண்டு, விஷயத்தை ஏற்பாடு செய்து முடிப்பதற்காக, பீட்டர்ஸ்பர்க் நகருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். இந்த முயற்சியில், சொல் செயலாக மாறுவதை இலிச் கவனித்துக்கொண் டிருந்தார். தொழிலாளர்களுக்கு எப்படியும் ஆயுதங்கள் கிடைத்தாக வேண்டும். ஆனால் இந்த முயற்சியில் பலன் எதுவும் ஏற்படவில்லை. ஆயுதங்களை இறக்க வேண்டிய தீவுக்கு அருகில் கடல் ஆழம் போதாதிருந்த காரணத்தால், கிராப்டன் என்ற கப்பல் அந்தத் தீவை அணுக முடியவில்லை. பீட்டர்ஸ்பர்க்கிலும் காப்பனால் எதுவும் செய்ய முடியவில்லை. புனைபெயர் ஒன்றை வைத்துக்கொண்டு, தொழிலாளர்களின் குடிசைகளில் அவர் ஒளிந்து வாழும்படியாயிற்று. ஜனங்களுடன் தொடர்புகொள்வதும் அதிகச் சிரமமாய் இருந்தது. கடத்தப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு, போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யவிருந்த சமதர்மப் புரட்சிக்காரர்களின் விலாசங்கள் எல்லாம் கற்பனையானவை என்பது வெளியாயிற்று. போல்ஷ்விக்குகள் மட்டும்தான் தீவுக்குத் தங்கள் ஆட்களை அனுப்பி இருந்தனர். இவற்றை எல்லாம் கண்டு காப்பன் திகைத்து மனம் ஒடிந்து போனார். சட்டவிரோதமாக வாழ்வதும், பட்டினி கிடப்பதும், அநாமதேயப் பேர்வழிபோல வாழ்க்கை நடத்துவதும், மாபெரும் கூட்டங்களில் எவ்வித ஆபத்தும் இன்றிப் பேசுவதிலிருந்து முற்றும் மாறுபட்டவை. காப்பனிலிருந்து முற்றிலும் மாறுபட்ட புரட்சிக்காரர்களால் மட்டும்தான், புகழை விரும்பாது அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பவர்களால் மட்டும்தான், ஆயுதங்களைக் கடத்திச் செல்ல ஏற்பாடு செய்ய முடியும் என்பது தெளிவாகிவிட்டது.

நிலத்திற்காக விவசாயிகள் நடத்தும் போராட்டத்தை ஆதரிக்க வேணும் என்பது இலிச் கொடுத்த மற்றொரு கோஷம். இப்படி ஒரு கோஷம் கொடுத்தால், தாங்கள் போராடும் காலங்களில் தொழிலாளர் வர்க்கத்துக்கு விவசாயிகளின் ஆதரவு கிடைக்கும். எப்பொழுதுமே விவசாயிகளின் பிரசினைகளில் விளாதிமிர் இலிச் அதிகக் கவனம் செலுத்திவந்தார். பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் முழுக்க முழுக்கப் புரட்சிகரமான வர்க்கமாக இருக்க முடியும் என்று விளாதிமிர் இலிச் நம்பினார். இரண்டாவது காங்கிரஸில் கட்சியின் வேலைத் திட்

டத்தைப்பற்றி விவாதம் நடந்தபொழுது, 1861-ல் அமலுக்கு வந்த நிலச் சீர் திருத்தம் பறிமுதல் செய்து துண்டாடிய "துண்டு நிலங்களை" விவசாயிகளுக் குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற கோஷத்தை விளாதிமிர் இலிச் கிளப்பினார்; இந்த கோஷத்தை அவர் பலமாக ஆதரித்தார்.

விவசாயிகளை ஆகர்ஷிக்க வேண்டுமானால், அவர்களின் தேவைகளைப் பிரதி பலிக்கும் உறுப்படியான கோரிக்கைகளை உருவகப்படுத்த வேண்டும் என்று இலிச் கருதினார். தேநீருக்காகவும், வேலைநேரத்தைக் குறைக்க வேண்டும் என் றும், கூலியை ஒழுங்கான காலத்தில் தந்துவிட வேண்டும் என்றும் சமதர்ம ஜன நாயகவாதிகள் தொழிலாளர்களிடையே கிளர்ச்சிகள் நடத்தியதைப் போன்று உருப்படியான கோஷங்களின் அடிப்படைமீது விவசாயிகளை ஒன்றுதிரட்ட வேணும் என்று இலிச் கருதினார்.

1905-ம் வருடம் ஏற்பட்ட நிகழ்ச்சிகள், இந்தப் பிரசினைகள்பற்றிப் புன ராலோசனை செய்யும்படியாக இலிச்சைத் தூண்டின. விவசாயி குடும்பத்தில் பிறந்து, கிராமங்களுடன் தொடர்பு வைத்துக்கொண் டிருந்த காப்பனுடன் நடத்தின சம்பாஷணைகள், டோமின்கின் என்ற கப்பலில் வேலைசெய்த மாலுமி மாடின்ஷென்கோவுடன் நடத்தின பேச்சுவார்த்தைகள், கிராமங்களில் என் னென்ன நடக்கிறது என்பதை அந்தரங்கமாக அறிந்திருந்த தொழிலாளர் பல ருடன் நடத்தின சம்பாஷணைகள், இவற்றின் மூலம் ஒரு விஷயத்தை விளாதிமிர் இலிச் திட்டமாகத் தெரிந்துகொண்டார். "துண்டு நிலம்" என்ற கோஷம் மட்டும் போதுமானதல்ல என்பதையும், மன்னருக்கும் மடாதிபதிகளுக்கும் மாதாகோயில்களுக்கும் பண்ணையார்களுக்கும் சொந்தமான நிலங்களையெல்லாம் பறிமுதல் செய்ய வேண்டும் என்ற ஒரு விரிவான கோஷத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதையும், அந்தச் சம்பாஷணைகள் மூலம், விளாதிமிர் இலிச் தெளி வாக உணர்ந்தார். ஒரு காலத்தில் புள்ளிவிவரங்கள் நிறைந்த புத்தகங்களை விளாதிமிர் இலிச் பேரார்வத்துடன் படித்தார்; நகரத்திற்கும் கிராமத்திற்கும், யந்திர உற்பத்தித் தொழிற்சாலைக்கும் வாழ்க்கைப்பண்ட உற்பத்தித் தொழிற் சாலைக்கும், விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் காணப்படும் பொருளாதாரத் தொடர்புகளை எல்லாம் அவர் விரிவுபடுத்தி விளக்கினார். இவை எல்லாம் வீண்போகவில்லை என்பது தெரிந்த விஷயம். விவசாயிகள்மீது பாட் டாளி மக்களுக்கு இருக்கும் அரசியல் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு, அஸ்தி வாரமாக இந்தப் பொருளாதார உறவு அமைய வேண்டிய காலம் வந்துவிட் டது என்பதை அவர் உணர்ந்துகொண்டார்.

ஒரு சம்பவம் என் நினைவில் இருக்கிறது; ஒரு நாள் தாம் எழுதியிருக்கும் யாதாஸ்து ஒன்றைக் கேட்கும்படி விளாதிமிர் இலிச்சைக் காப்பன் கேட்டுக் கொண்டார்; இலிச்சும் அதற்கு இசைந்தார். காப்பன் தனது யாதாஸ்தை உருக்கமான குரலில் படித்தார். அந்த யாதாஸ்தில் ஸாரை அவர் மனமாரச் சபித்திருந்தார். "எங்களுக்கு ஸார் தேவையில்லை" என்று முழங்கியது அந்த யாதாஸ்து. "பூமியில் ஒரே ஒரு எஜமான் - கடவுள் என்ற எஜமான் - இருந் தால் போதும். நாம் எல்லோரும் அவருக்கு மட்டும் குடிகளாய் இருப்போம்" என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். (நிலவரிகள் குறைய வேண்டும் என்ற

கோஷத்தை அடிப்படையாகக்கொண்டே அந்தக் காலத்து விவசாயிகள் போராடினர்.) இதைக் கேட்டதும் விளாதிமிர் இலிச் உரக்கச் சிரித்துவிட்டார். நடையின் போக்கு மிகவும் கவர்ச்சியற்றதாய் இருந்தது. இருப்பினும் பொதுஜனங்களுடன் காப்பனுக்கு எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதை அது தெள்ளத் தெளியக் காட்டிற்று. அவரே ஒரு விவசாயி; கிராமத்துடன் அப்பொழுதும் அரைகுறையாகத் தொடர்பு வைத்துக்கொண் டிருந்த காப்பன் தொழிலாளர்களின் மனதில் தலைமுறை தலைமுறையாக மறைந்து கிடந்துவந்த நில ஆசையை நன்ருகக் கிளறிவிட்டார்.

விளாதிமிர் இலிச்சின் சிரிப்பு, காப்பன் மனநிலையைக் கலைத்தது. "இதன் போக்கு உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ருல் சொல்லுங்கள்; அதன்படி திருத்தி எழுதிவிடுகிறேன்" என்று சொன்னுர் காப்பன்.

இதைக் கேட்டதும் விளாதிமிர் இலிச் தனது சிரிப்பை அடக்கிக்கொண்டார். "அதை மாற்ற வேண்டாம். நான் சிந்திக்கும் முறை தங்கள் போக்கிலிருந்து மாறுபட்டது. உங்கள் சொந்த பாஷையில், உங்கள் சொந்த நடையிலேயே அதை எழுதுங்கள்" என்று பதில் சொன்னுர் விளாதிமிர் இலிச்.

இன்னொரு காட்சி: மூன்ருவது காங்கிரஸுக்குப் பிறகும் டோமின்கின் கப்பலில் நடந்த கலகத்துக்குப் பிறகும் இது நடந்தது. ருமேனியாவில் காவலில் வைக்கப்பட்ட மாலுமிகளுக்கு அவசியமான வாழ்க்கைப் பொருள்கள் அவசரமாகத் தேவைப்பட்டன. அப்பொழுது காப்பனுக்குப் பல வழிகளிலிருந்து பணம் நிறையக் கிடைத்து வந்தது. அவர் எழுதின ஞாபகக் குறிப்புகளுக்காகவும் புரட்சி நடத்துவதற்காகப் பல துறைகளில் நன்கொடையாகவும் பணம் நிறைய வந்து குவிந்தது. டோமின்கின் மாலுமிகளுக்கு உடைகள் வாங்கும் பொருட்டு, அவர் பல நாட்கள் அலைந்து திரிந்தார். டோமின்கின் கலகத்தில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்ட மாலுமி மாடின்ஷென்கோ இந்தச் சமயம் ஜினீவா வந்து சேர்ந்தார். உடனே காப்பனும் அவரும் உற்ற நண்பர்கள் ஆனுர்கள்; இணை பிரியாத் தோழர்கள் ஆனுர்கள்.

இந்தச் சமயம் ஒரு வாலிபர் மாஸ்கோவிலிருந்து வந்திருந்தார்; அவர் பெயரை நான் மறந்துவிட்டேன். சிவந்த முகம் படைத்த அந்த வாலிபர், ஏதோ ஒரு புத்தகக் கடையில் வேலை பார்த்தவர்; சமீபத்தில்தான் சமதர்ம ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தவர்; இந்தக் கட்சியில் தான் ஏன் சேர்ந்தேன், எப்படிச் சேர்ந்தேன் என்பதைப்பற்றி முதலில் எங்களுக்கு அவர் கூறினுர். பிறகு சமதர்ம ஜனநாயகக் கட்சியின் திட்டம் ஏன் சரியானது என்பதை, புதுத் தொண்டர்களிடம் காணப்படும் ஆர்வத்துடன் ஷரத்து ஷரத்தாக விளக்க ஆரம்பித்தார். இது விளாதிமிர் இலிச்சுக்குச் சலிப்பைக் கொடுத்தது. எனவே அந்த வாலிபருக்குத் தேநீர் கொடுக்கும்படியும் அவரிடமிருந்து எவ்வளவு கிரகித்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு கிரகித்துக்கொள்ளும்படியும் என்னிடம் சொல்லிவிட்டு, அவர் எழுந்து வாசகசாலைக்குப் போய்விட்டார். வேலைத் திட்டத்தைப்பற்றி தொடர்ந்து வாலிபர் படித்துக்கொண் டிருந்தார். இந்தச் சமயத்தில் காப்பனும் மாடின்ஷென்கோவும் உள்ளே வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் நான் தேநீர் கொணர்ந்த சமயத்தில், விவசாயிகளுக்குத் "துண்டு நிலங்களை"

திருப்பிக்கொடுப்பதுபற்றிய பாராவை அந்த வாலிபர் படித்தார். இதைப் படித்துவிட்டு, துண்டு நிலத்துக்குச் சண்டை போடுவதைத் தவிர்த்து அதற்கு அப்பால் விவசாயிகளால் ஒன்றுமே செய்ய முடியாது என்று அவர் விளக்கிச் சொன்னார்.

இந்த விளக்கத்தைக் கேட்டு காப்பனும் மாடின்ஷென்கோவும் அதிக ஆத்திரம் அடைடந்தனர். "நிலம் அனைத்தும் ஜனங்களுக்குச் சொந்தமானவை!" என்று உரக்கக் கூவினர். இந்தச் சமயத்தில் விளாதிமிர் இலிச் அங்கே திரும்பி யிராவிட்டால், நிலைமை எவ்வளவு முற்றியிருக்கும் என்பதை நான் அறியேன். விவாதம் எதைப்பற்றி நடக்கிறது என்பதை உடனே தெரிந்துகொண்ட விளாதிமிர், அதில் தான் கலந்துகொள்ளாமல், காப்பனையும் மாடின்ஷென் கோவையும் தமது அறைக்கு அழைத்துப் போய்விட்டார். மாஸ்கோவிலிருந்து வந்திருந்த வாலிபரைப் பெருமுயற்சி செய்து, விரைவில் அவரை நான் வெளியே அனுப்பிவைத்தேன்.

விவசாயிகளின் நிலப்பிரசினை சம்பந்தமான இந்த ஷரத்தை வேலைத்திட்டத் திலிருந்து முற்றுமே நீக்கிவிடும்படி, டிசம்பர் மாதத்தில் டாமர்போர்ஸ் மகா நாட்டில் விளாதிமிர் இலிச் ஒரு தீர்மானம் கொணர்ந்தார். வேலைத் திட்டத்தில் இது சம்பந்தமான ஒரு பாராவை அகற்றிவிட்டு, வேறு ஒரு புதுப் பாராவைச் சேர்த்தார்கள். பண்ணையார்கள், மடாதிபதிகள், மாதா கோயில்கள், மன்னர் ஆகியவருக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் பறிமுதல் செய்ய வேண்டும் என்ற புரட்சிகரமான விவசாயிகளின் திட்டத்திக்கு அங்கீகாரம் அளித்து ஆதரவு தருவது எனத் தீர்மானிக்கப் பெற்றது.

அப்பொழுது அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்த ஜெர்மன் சமதர்ம ஜனநாயகவாதி காட்ஸ்கி, இந்தப் பிரசினையை முற்றுமே வேறு கோணத்தில் இருந்து பரிசீலனை செய்தார். பண்ணையார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடை யில் நிலவும் உறவுகள் சம்பந்தப்பட்டவரையில், ரஷ்ய நகரத்துப் புரட்சி இயக்கம் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்று நியூ ஸீட் என்னும் பத்திரிகையில் அவர் எழுதி இருந்தார்.

தொழிலாளர் இயக்கத்துக்குத் துரோகம் செய்தவர்களில் காட்ஸ்கி இன்று முதலிடம் வகிக்கிறார். ஆனால் அன்றைய நிலையில் புரட்சிகரமான சமதர்ம ஜனநாயகவாதியாக அவர் மதிக்கப்பட்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இன்னொரு ஜெர்மன் சமதர்ம ஜனநாயகவாதி பெர்ன்ஸ்டீன் என்பவர் மார்க்ஸீயத்துக்கு எதிராகக் கிளம்பினார். மார்க்ஸின் போதனைகளைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும், அவற்றில் பெரும்பாலானவை காலங்கடந்தவை யாய் இருக்கின்றன என்றும், சமதர்மம் என்கிற லட்சியம் பெரிதல்ல, இயக்கம் தான் எல்லாம் என்றும் கூறி, மார்க்ஸ் போதனைகளைப் பெர்ன்ஸ்டீன் திருத்தி அமைக்க முயன்றார். இந்தச் சமயத்தில் பெர்ன்ஸ்டீன் போக்குகளை பகிரங்க மாகக் கண்டித்து, மார்க்ஸின் போதனைகளைக் காட்ஸ்கி பாதுகாத்தார். அதனால் காட்ஸ்கியின் பெயர் பிராபல்யம் அடைந்தது ; மார்க்ஸின் உண்மையான சீடர் என்றும் தீவிரமான புரட்சிக்காரர் என்றும் எல்லோரும் அவரைப் பாராட்டி மதித்தனர். ஆகையால் காட்ஸ்கியின் இந்த முடிவு—அதாவது பாட்டாளி

மக்கள் விவசாயிகளின் பிரசினையில் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்ற முடிவு-இலிச்சை அதிக வேதனையில் ஆழ்த்தியது. மேற்கு ஐரோப்பாவில் நிலவும் நிலைகளுக்கு ஒருவேளை இந்த முடிவு பொருத்தமானதாக இருக்கலாம் என்று கூறி, விளாதிமிர் இலிச் அவரை மன்னிக்கவும் முயன்ருர். ஆனல் விவசாயிகளின் ஆதரவு கிடைத்தால் மட்டும்தான் ரஷ்யாவில் புரட்சி வெற்றி பெற முடியும் என்பதை அவர் திடமாக நம்பினர்.

காட்ஸ்கியின் இந்த முடிவு, மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியவர்களின் அபிப்பிராயங்களைச் சரியாகப் பிரதிபலிக்கிறதா என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்படி விளாதிமிர் இலிச்சை தூண்டியது. 1848-ம் வருடம் அமெரிக்காவில் நடந்த விவசாயிகளின் இயக்கம்பற்றி மார்க்ஸ் என்ன சொன்னர் என்பதையும் 1885-ம் வருடம் ஹென்றி ஜியார்ஜைப்பற்றி ஏங்கல்ஸ் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார் என்பதையும்பற்றி, விளாதிமிர் இலிச் ஆராய்ந்து பார்த்தார். ஏப்பிரல் மாதத்தில், அமெரிக்காவில் கறுப்புப் பிரிவினைபற்றி மார்க்ஸ் என்னும் தமது கட்டுரையை விளாதிமிர் இலிச் பிரசுரித்தார்.

அந்தக் கட்டுரையைக் கீழ்வரும் வாசகங்களால் விளாதிமிர் இலிச் முடித்திருக்கிருர் :

> ரஷ்ய விவசாயிகளைப்போன்று, அவ்வளவு அதிகமான துன்பத்தையும் அடக்குமுறையையும் அனுபவித்துக் கேவலமாக நடத்தப்பெற்ற விவசாயிகள் உலகில் வேறு எந்த நாட்டிலும் இருக்க மாட்டார்கள். அடக்குமுறை எவ்வளவு கடுமையாக இருந்ததோ, அந்த அளவுக்கு வலிமை உடையவர்களாக, அவர்களிடையே விழிப்பு ஏற்பட்டிருக்கிறது; அவர்களுடைய புரட்சிகரமான தாக்குதலும் அந்த அளவுக்கு வேகமானதாக இருக்கும். இந்தத் தாக்குதலை வர்க்க உணர்ச்சி படைத்த, புரட்சி மனப்பான்மை வாய்ந்த பாட்டாளி மக்கள் தங்கள் முழு ஆதரவையும் கொடுத்து, இவர்களுக்கு உதவ வேண்டும். அப்பொழுதுதான் ரஷ்யாவில் இருந்துவரும் சபிக்கப்பட்ட, பழைய, நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையை வேரோடு கல்லி எறிய முடியும். தீரமும் சுதந்திர வேட்கையும்கொண்ட புதிய தலைமுறையைச் சிருஷ்டிக்க முடியும் ; புதிய குடியரசை நிறுவ முடியும் ; சமதர்மத்துக்காகப் பாட்டாளி மக்கள் நடத்தும் போராட்டம் தங்குதடையின்றி விரிவடையப் போதிய வசதியும் சுதந்திரமும் இருக்கும்.''

ஜினீவாவில் ரஷ்யத் தேசப்பிரஷ்டர்கள் அதிகமாக வசிக்கும் பிரசித்தி பெற்ற ரூ. டி. கிரோக் (கிரவுஷ்கா) கோடியில், அர்னே நதிக்கரையில், போல்ஷ்விக் மத்திய சமிட்டியின் காரியாலயம் இருந்தது. முன்னேற்றம் ஆசிரியர் குழாம், பத்திரிகை அனுப்பும் நிலையம், லெப்பென்ஸ்கையின் போல்ஷ்விக் ஓட்டல், போன்ச் பூருவிச், லியாடாவ்ஸ், இலின்ஸ் ஆகியவர்களின் வாசஸ்தலங்கள் ஆகிய அனைத்தும் அந்த இடத்தில்தான் இருந்தன. ஓர்லோவஸ்கி, ஓல்மின்ஸ்கி முதலியவர்கள் அடிக்கடி போன்ச் பூருவிச் விடுதிக்கு வந்து போவார்கள். ரஷ்யாவிலிருந்து திரும்பிவந்திருந்த பாக்டானுவ், ஜினீவாவுக்கு வந்திருந்த

லூனசார்ஸ்கியுடன், முன்னேற்றம் ஆசிரியர் குழாத்தில் சேருவதாக ஒரு ஒப்பந்தத்திற்கு வந்திருந்தார். லூனசார்ஸ்கி சிறந்த பேச்சாளர்; போல்ஷ்விக் ஸ்தாபனத்தை உறுதிப்படுத்தப் பேருதவி புரிந்தவர்; அவரும் விளாதிமிர் இலிச்சும் நெருங்கிய நண்பர்கள் ஆயினர்; அவர் இருக்கும்பொழுது விளாதிமிர் இலிச் உற்சாகத்துடன் இருப்பார். முன்னேற்றவாதிகளுடன் அபிப்பிராய பேதம் ஏற்பட்ட சமயத்தில்கூட, அவர் சம்பந்தப்பட்டவரை, விளாதிமிர் இலிச் இவரிடம் சிறிது சலுகை காட்டினார். லூனசார்ஸ்கியும் லெனினுடன் கவனத்தோடு பழகுவார்; அவருடன் வேடிக்கை விளையாட்டாகப் பேசுவார். ஒரு சம்பவம் எனக்கு நினைவு இருக்கிறது. 1919-திலோ அல்லது 1920-திலோ அது நடந்தது என்று நினைக்கிறேன். போர்முனையிலிருந்து அப்பொழுதுதான் திரும்பியிருந்த லூனசார்ஸ்கி, தமது அபிப்பிராயங்களை விளாதிமிர் இலிச்சுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்; விளாதிமிர் இலிச் உணர்ச்சிவயப்பட்டு அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தார். லூனசார்ஸ்கி, வோரோவஸ்கி, ஓல்மின்ஸ்கி ஆகியோர் முன்னேற்றத்தின் சிறந்த அஸ்திவாரங்கள் ஆவர். நிர்வாகப் பொறுப்பு, விளாதிமிர் டிமிட்ரியெவிச்போன்ச் பூருவிச்சிடம் இருந்து வந்தது. எப்பொழுதும் அவர் உற்சாகத்தோடு இருப்பார்; மகத்தான பல திட்டங்களை அவர் வகுத்தார். அச்சு வேலை சம்பந்தமாக அங்கும் இங்கும் அவர் பாய்ந்தோடிக்கொண்டே இருப்பார்.

நாள்தோறும் மாலையில் லாண்ஹோல்டு என்ற ஓட்டலில் போல்ஷ்விக்குகள் கூடுவார்கள்; பீர் அருந்திக்கொண்டே, ரஷ்யாவில் நடக்கும் சம்பவங்களைப் பற்றி விவாதிப்பார்கள்; திட்டங்கள் வகுப்பார்கள்.

பலர் ரஷ்யாவுக்குப் போய்விட்டார்கள்; பலர் ரஷ்யாவுக்குத் திரும்ப ஏற்பாடு செய்துகொண் டிருந்தார்கள்.

மூன்றாவது காங்கிரஸைக் கூட்ட வேணும் என்று ரஷ்யாவில் கிளர்ச்சி நடைபெற்று வந்தது. இரண்டாவது காங்கிரஸுக்குப் பிறகு எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன; தினசரிப் போராட்டங்களின் பயனாய் பல புதிய பிரசினைகள் உண்டாயின; ஆகவே இன்னொரு காங்கிரஸைக் கூட்ட வேண்டுவது மிகவும் அவசியமான தேவையாக இருந்தது. கட்சிக் கமிட்டிகளில் பெரும்பாலானவை, இன்னொரு காங்கிரஸ் கூட்ட வேணும் என்பதை ஆதரித்தன. "பெரும்பான்மைக் கமிட்டிகளின் கூட்டுக் கமிட்டி" ஒன்று நிறுவப்பட்டது. ரஷ்யாவில் வேலை செய்த மத்திய கமிட்டி, மென்ஷ்விக்குகள் உள்பட அனேக புதிய அங்கத்தினர்களைக் கமிட்டியில் இணைத்துக்கொண்டு, சமரஸ மனப்பான்மையுடன் இயங்கி வந்தது. சாத்தியமான வழிகளில் எல்லாம் மூன்றாவது காங்கிரஸ் கூட்டுவதற்கு இடையூறாக அது இருந்துவந்தது.

எழுத்தாளர் லியோநிட் ஆண்டிரியீவ் இல்லத்தில் இருந்துவந்த மத்திய கமிட்டிக் காரியாலயம் சோதனையிடப்பட்ட பிறகு, சுதந்தரமாய் இருந்த மத்திய கமிட்டி அங்கத்தினர்கள், காங்கிரஸைக் கூட்டுவதற்கு இசைந்தனர். இந்தக் காங்கிரஸ் லண்டனில் கூடிற்று. இந்தக் காங்கிரஸில் போல்ஷ்விக்குகள் பெரும்பான்மையினராக இருந்தபடியால், இந்தக் காங்கிரஸுக்குப் பிரதிநிதிகளை அனுப்பிவைக்க மென்ஷ்விக்குகள் விரும்பவில்லை; அவர்கள் தனியாக ஒரு மகாநாட்டை ஜினீவாவில் கூட்டினர்.

இந்தக் காங்கிரஸில் மத்திய கமிட்டிப் பிரதிநிதிகளாக "சோமரும்" "விண்டரும்" கலந்துகொண்டனர். "சோமர்" சோர்ந்து காணப்பட்டார்; ஆனால் "விண்டரோ" எதுவும் நடவாததுபோலச் சும்மா இருந்தார். சமரஸப் போக்கை மேற்கொண்டதற்காக மத்திய கமிட்டியையப் பிரதிநிதிகள் உக்கிரமாகத் தாக்கினர். சோமர் மௌனத்தைக் கடைப்பிடித்து வருத்தத்துடன் இருந்தார்; விண்டரும் மௌனமாக இருந்தார். மோவாயைக் கையில் ஊன்றிக் கொண்டு அவர் கலங்கவில்லை. விஷத்தைக் கக்குகிற இந்த கடுமையான பேச்சுகளுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கூறுவதைப்போன்று அவர் அமர்ந்திருந்தார். தான் பேச வேண்டிய சமயம் வந்ததும், அமைதியான குரலில் தமது அறிக்கையை அவர் சமர்ப்பித்தார்; தம்மைக் குற்றம் சாட்டினவர்களுக்கு அவர் பதில் எதுவும் சொல்லவில்லை. இனி ஏதும் சொல்லக் கூடாது என்பதையும் அவரிடமிருந்த சமரஸ மனப்பான்மை இப்போது மறைந்துவிட்டது என்பதையும் இனிமேல் இறுதிவரையில் அவர் போல்ஷ்விக்குகளின் அணியில் நிற்பார் என்பதையும் எல்லோரும் தெளிவாக உணர்ந்தனர்.

1905-ஆம் வருடப் புரட்சியில் போராடின படைகளுக்கு ஆயுதம் கொடுப்பதிலும் ஆயுதங்களைப் பல்வேறு இடங்களுக்கு அனுப்பிவைப்பதிலும் இன்னும் இவை போன்ற பல விஷயங்களிலும் கிராஸின் எவ்வளவு பொறுப்பு மிகுந்த பெரிய காரியங்களைச் செய்துள்ளார் என்பதைத் தற்பொழுதுள்ள கட்சி அங்கத்தினர்கள் அறிவர். ரகசியமாகவும் சந்தடியின்றியும் இந்தக் காரியங்கள் அனைத்தும் நடைபெற்றன; அரும்பாடு பட்டு அபரிமிதமான ஆற்றலுடன் செய்யப்பட்டன; கிராஸின் செய்த இந்தக் காரியங்களை, மற்றவர்களைக் காட்டிலும் விளாதிமிர் இலிச் நன்கு அறிவார்; ஆகையால் அவரைப் எப்பொழுதுமே விளாதிமிர் இலிச் பெரிதும் மதித்தார்.

காகஸஸ் பிரதேசத்திலிருந்து நான்கு பிரதிநிதிகள் - மிஸ்கா தாஸ்காயா, அலிஷா தார்பாரிட்ஜ், லெமன், காமனீவ் ஆகிய நால்வரும் - வந்திருந்தனர். அவர்களிடம் மூன்று "மாண்டேட்டுகள்" இருந்தன. "வந்திருக்கும் நான்கு பிரதிநிதிகளில் இந்த மூன்று மாண்டேட்டுகளுக்கு உரிய பிரதிநிதி யார்? யாருக்கு அதிக ஓட்டுகள் கிடைத்தன?" என்று விளாதிமிர் இலிச் வினவினார்.

"காகஸஸ் பிரதேசத்தில் விஷயங்களை ஓட் எடுத்துத் தீர்மானிக்கிறோம் என்று நினைக்கிறீர்கள்? நாங்கள் அப்படிச் செய்வது இல்லை. எல்லா விஷயங்களையும் தோழமை யுணர்ச்சியுடனேயே நாங்கள் முடிவு செய்துவிடுகிறோம். அவர்கள் எங்கள் நால்வரையும் பிரதிநிதிகளாய் அனுப்பி இருக்கிறார்கள்; எத்தனை மாண்டேட்டுகள் இருக்கின்றன என்பது அவ்வளவு முக்கியமல்ல" என்று மிஸ்கா என்பவர் குழப்பம் அடைந்து பதில் சொன்னார். வந்திருந்த பிரதிநிதிகளில் மிஸ்காதான் வயதானவர்; ஐம்பது வயது இருக்கும். காங்கிரஸைத் திறந்துவைத்தவரும் அவர்தான்.

போலிஸியன் கமிட்டியின் பிரதிநிதியாக லியோவா விளாதிமிராவ் வந்திருந்தார்; ரஷ்யாவில் இருந்த அவருக்குக் கட்சியில் பிளவு ஏற்பட்டு இருப்பது குறித்து நாங்கள் பல கடிதங்கள் எழுதினோம். அவரிடமிருந்து எத்தகைய பதிலும் கிடைக்கவில்லை. மார்டோவைப் பின்பற்றுபவர்களின் போக்குகளைப் பற்றி

விசாரித்திருந்த கடிதங்களுக்கு மட்டும் அவர் பதில் போட்டார். எந்தெந்தப் பிரசுரங்கள் எவ்வளவு எவ்வளவு விநியோகிக்கப்பட்டது என்பதையும் போலிஸியாவில் எங்கெங்கே எத்தனை ஆர்ப்பாட்டங்கள் வேலைநிறுத்தங்கள் நடந்தன என்பதையும் விவரமாக எங்களுக்கு அவர் எழுதி இருந்தார். காங்கிரஸில், தான் ஒரு உறுதியான போல்ஷ்விக் என்பதை அவர் காட்டிக்கொண்டார்.

ரஷ்யாவிலிருந்து காங்கிரஸுக்கு வந்திருந்த ஏனைய பிரதிநிதிகள்: பாக்டானுவ், போஸ்டாலோவஸ்கி, பி. பி. ரும்யான்டிவ், ரிக்கோவ், சாமர், ஸெம்லியாச்கா, லிட்வினுவ், ஸ்க்கிப்னிக், பா, ஷாக்லோவஸ்கி, கிராமோ கிக்காவ், முதலியோர் ஆவர்.

ரஷ்யாவில் தொழிலாளர் இயக்கம் உணர்ச்சி வேகத்தின் உச்ச நிலையை அடைந்துவிட்டது என்பதைக் கொண்டு, யாவும் இந்தக் காங்கிரஸில் நடைபெறுகின்றன என்பது போன்ற உணர்ச்சி எல்லோருக்கும் ஏற்பட்டது. ஆயுதம் தாங்கிப் புரட்சி செய்வது, தற்காலிகப் புரட்சி சர்க்காரை அமைப்பது, புரட்சி நடைபெறும் காலத்தில் சர்க்கார் கடைப்பிடிக்க வேண்டிய தந்திரமுறைகள், ரஷ்ய சமதர்ம - ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் பகிரங்க நடவடிக்கை, விவசாயிகளின் இயக்கத்துடன் வைத்துக்கொள்ள வேண்டிய உறவுகள், மிதவாதிகளுடன் நடந்துகொள்ள வேண்டிய முறை, அடிமைப்பட்ட நாடுகளில் சமதர்ம-ஜனநாயக ஸ்தாபனங்கள், பிரசாரமும் கிளர்ச்சியும், கட்சியிலிருந்து பிரிந்து போன பகுதியினர், இவற்றைப்பற்றியும் இன்னும் இதர விஷயங்களைப்பற்றியும் காங்கிரஸில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பண்ணை நிலங்களைப் பறிமுதல் செய்வதுபற்றி விளாதிமிர் இலிச் ஒரு தீர்மானம் கொணர்ந்தார் என்பதை நான் முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன்; இதைத் தவிர்த்து வேறு இரு முக்கிய தீர்மானங்களையும் மூன்றுவது ·காங்கிரஸ் நிறைவேற்றிவைத்தது; ஒரு தீர்மானம் இரு தலைமை ஸ்தானங்கள் இருப்பதைப்பற்றியது; மற்றென்று தொழிலாளர்களும் அறிவாளிகளுக்கும் உள்ள உறவுபற்றியது.

ஏதாவது ஒரு விதத்தில் கட்சிக்காக அரிய தொண்டாற்றின, ஆனல் அப்பொழுதுதான் உருவாகிக்கொண்டு வந்த ரஷ்ய ஸ்தாபனங்களுடன் பலவீனமான தொடர்பு மட்டும் கொண்டிருந்த அறிவாளிகள் பலர் இரண்டாவது காங்கிரஸுக்கு வந்திருந்தார்கள் ; கட்சி வேலைகளுக்கு எனவே தங்களை அர்ப்பணித்துக்கொண்ட ஊழியர்களும் வந்திருந்தார்கள். இந்த இரு பிரிவினரின் ஆதிக்கம் தான் இரண்டாவது காங்கிரஸில் மோலோங்கி நின்றது.

ஆனல் இந்த மூன்றுவது காங்கிரஸ், முற்றிலும் மாறுபட்ட வேறு அமைப்பைக் கொண்டதாக விளங்கியது ; இந்தச் சமயம் ரஷ்யாவில் இயங்கின ஸ்தாபனங்கள், ஒரு திட்டமான வடிவத்துடன் விளங்கின. மிகுந்த சிரமத்துடன் ரகசியமாக வேலை செய்யவேண்டி யிருந்த காரணத்தால், அந்த ஸ்தாபனங்கள் எல்லாம் சட்ட விரோதமான அமைப்பு முறைகளைக் கொண்டு வேலை செய்தன. தொழிலாளர் இயக்கத்தில் கமிட்டிகளுக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது ; என்றுலும் கமிட்டிகளில் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் அங்கத்தினர்களாக இடம் பெறவில்லை. துண்டுப் பிரசுரங்களும் "போசனைகளும்" தங்களின் மனப்போக்குக்கு உகந்தனவாக இருந்த

காரணத்தால், தாங்களே தலைமை தாங்கி இயக்கத்தை நடத்துவதாகத் தொழிலாளர் கருதினர். ஆகவே கமிட்டிகளுக்கு அதிகச் செல்வாக்கும் மதிப்பும் இருந்தன; ஆயினும் கமிட்டியின் நடவடிக்கைகள், பெரும்பாலான தொழிலாளருக்குத் தெரியாமல் இரகசியமாக இருந்து வந்தன. இயக்கத்தின் அடிப்படையான பிரசினைகளைப்பற்றி விவாதிப்பதற்காக, அறிஞர்களை விட்டுப்பிரிந்து, ஊழியர்கள் தனியே அடிக்கடி கூடி விவாதித்தனர். மென்ஷ்விக்குகளுக்கும் போல்ஷ்விக்குகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டைப்பற்றி, ஒடெஸ்ஸாத் தொழிலாளர் ஐம்பது பேர், மூன்ருவது காங்கிரஸுக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பித்து இருந்தனர். இந்த விஷயங்கள் விவாதிக்கப்பட்ட கூட்டங்களில் படித்தவர்கள் ஒருவர்கூடக் கலந்துகொள்ளவில்லை, கூட்டத்துக்கு வரவும் இல்லை என்று அந்த அறிக்கை அறிவித்தது.

"கோமிடெட்சிக்"* இயல்பாகவே மிகவும் தன்னம்பிக்கை படைத்தவர்; கமிட்டிகளின் செயல்கள் ஜனங்களிடையே அதிகச் செல்வாக்குப் பெற்றிருப்பதை அவர் உணர்ந்தார். எத்தகைய உள்கட்சி ஜனநாயகத்தையும் அவர் பொதுவாக அங்கீகரிக்கவில்லை. "இந்த ஜனநாயகவாதம் நம்மை அதிகாரிகளின் கைகளில் சிக்குவதற்கு வழிகோலிவிடும்; இயக்கத்துடன் நமக்கு ஏற்கனவே போதிய தொடர்பு இருந்துதான் வருகிறது" என்று கோமிடெட்சிக்குகள் கூறுவது உண்டு. இந்தக் கமிட்டி அங்கத்தினர்கள் "வெளிநாட்டில் இருப்பவர்களைப்" பெரும்பாலும் உள்ளூர வெறுத்தார்கள்; கொழுத்துத் தடித்துப் போய் அவர்கள் சூழ்ச்சிகள் செய்து வருகிருர்கள் என்பதாக அவர்களை இவர்கள் குறைகூறி வந்தார்கள். "ரஷ்யாவுக்குத் தருவித்து அவர்களை வேலைச் செய்யச் சொல்ல வேண்டும்" என்பது இவர்களின் தீர்ப்பு. வெளிநாட்டிலிருந்து வருகிற நிர்ப்பந்தங்களைக் கோமிடெட்சிக்குகள் விரும்பவில்லை. அதே சமயத்தில் புதிய மாற்றங்களையும் அவர்கள் விரும்பவில்லை. நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கவாறு தங்களைத் திருத்தி அமைத்துக்கொள்ள அவர்களுக்குத் திறமை இல்லை; அதை அவர்கள் விரும்பவும் இல்லை.

1904—1905-ம் ஆண்டுகளில் இந்தக் கமிட்டிகளின் உறுப்பினர்கள் மிகப் பிரமாதமான பொறுப்புகளை எல்லாம் தாங்களே ஏற்றுக்கொண்டனர்; ஆனால் சட்டரீதியாக வேலைசெய்யவும் பகிரங்கப் போராட்டங்கள் நடத்தவும் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு அந்தந்த நிலைகளுக்குத் தகுந்தவாறு தங்களைத் திருத்தியமைத்துக்கொள்ளவும் வழிவகைகள் தெரியாது சிரமப்பட்டனர். மூன்ருவது காங்கிரஸுக்குத் தொழிலாளர் யாருமே வரவில்லை; முக்கியமான தொழிலாளி ஒருவர்கூடப் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை. "பாபுஷ்கின்" என்ற பெயரோடு கலந்துகொண்டவரை அத்தகைய தொழிலாளி என்று சொல்ல முடியாது; அவர் அப்பொழுது சைபீரியாவில் இருந்தார். தோழர் சாக்லொவஸ்கிதான், அந்தப் புனைபெயரோடு காங்கிரஸில் கலந்துகொண்டதாக ஞாபகம். கமிட்டி உறுப்பினர்களில் பலர் காங்கிரஸுக்கு வந்திருந்தனர். காங்கிரஸின் இந்தத்

* கோமிடெட்சிக்: ரஷ்யாவில் இயங்கின சட்ட விரோதமான கட்சிக் கமிட்டிகளின் புனைபெயர்.

தன்மையைச் சரியாகப் புரிந்துகொண்டு மனதில் நன்ருகப் பதியவைத்துக் கொள்ளாவிட்டால், காங்கிரஸ் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அது சமர்ப் பித்த அறிக்கைகளையும் நம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாதுபோகும்.

தலைமை வெளிநாட்டில் இருப்பதை, அதைக் கட்டுப்படுத்தும் பிரசினையை கோமிடெட்சிக்குகள் மாத்திரமல்லாமல், கட்சியின் முக்கியமான ஊழியர்களும் கிளப்பினர்; தலைமை ஸ்தானம் வெளிநாட்டில் இருப்பதை பாக்டானுவ்தான் தலைமை தாங்கி எதிர்த்தார்.

இந்த விஷயத்தைப்பற்றி, பலர் பலவாருகப் பேசினர். ஆனல் விளாதிமிர் இலிச் இதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை; தன் கருத்தை அவர் இதில் செலுத்தவும் இல்லை. புரட்சி அபிவிருத்தி அடைந்து வளர்ந்து வருவதால், அந்நிய நாட்டில் இருந்துவரும் தலைமை ஸ்தானத்தின் முக்கியத்துவம் மணிக்கு மணி குறைந்துகொண்டே வருவதாக அவர் கருதினர். தாம் "நிரந்தரமாக வெளிநாட்டில்" வசிக்க முடியாது என்பதையும் அவர் நன்ருக அறிவார். ரஷ்யாவில் இருக்கிற மத்திய கமிட்டி, அங்கு நடப்பவைகளை விடாமல் உடனுக்குடன் மத்திய கமிட்டியின் பத்திரிகைக்குத் தெரிவிக்க வேண்டும். இதுவே முக்கியமான பிரசினை யாகும் என்று அவர் கருதினர். இனிமேல் பாட்டாளி எனும் பெயரைத் தாங்கி, மத்திய பத்திரிகையை வெளிநாட்டில் இருந்து பிரசுரிப்பது என்றும் தீர்மானிக்கப்பெற்றது. மத்திய கமிட்டி உறுப்பினர்கள் - ரஷ்யாவில் இருப்பவர்களும் வெளிநாட்டில் இருப்பவர்களும் - குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை கட்டாயம் சந்திக்க வேண்டும். இது அவசியமாகும் என்று விளாதிமிர் இலிச் வற்புறுத்தினர்.

தொழிலாளர்களைக் கமிட்டிகளில் சேர்த்துக்கொள்வது பற்றி விவாதம் பலமாக நடந்தது. தொழிலாளர்களுக்குக் கமிட்டிகளில் பங்கு இருக்க வேண்டும் என்பதை விளாதிமிர் இலிச் பலமாக ஆதரித்தார். வெளிநாட்டில் இருப்பவர்களும் பாக்டானுவும் எழுத்தாளர்களும் இதற்குச் சார்பாக இருந்தனர். ஆனல், கோமிடெட்சிக்குகள் இதைப் பலமாக எதிர்த்தனர். இருதரப்பினரும் இதுபற்றி ஆக்ரோஷத்தோடு விவாதித்தனர். கமிட்டிகளில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் எல்லோரும் இதுபற்றித் தீர்மானம் எதுவும் செய்யக் கூடாது என்று வற்புறுத்தினர். கமிட்டிகளில் தொழிலாளர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று தீர்மானிப்பது, உண்மையில் அசாத்தியமான ஒரு காரியமாகும்!

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட விளாதிமிர் இலிச் தம் பேச்சிடையே குறிப்பிட்டதாவது:

> இந்தப் பிரசினையை இன்னும் விரிந்த கண்ணேட்டத்துடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கருதுகிறேன். தொழிலாளர்களைக் கமிட்டிகளில் சேர்த்துக்கொள்வது, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு மாத்திரமல்லாமல், ஒரு அரசியல் கடமையாகவும் அது அமைந்து இருக்கிறது. தொழிலாளர்களிடம் வர்க்க உணர்ச்சி இயல்பாகவே உண்டு; சிறிது அரசியல் அனுபவம் அவர்களுக்கு ஏற்பட்டு விடுமேயானல், அவர்கள் உறுதிபடைத்த சமதர்ம ஜனநாயகவாதிகளாக ஆகிவிடுவார்கள். இரண்டு அறிவாளிகளுக்கு எட்டுத் தொழி

லாளர் விதம், நமது கமிட்டிகளில் தொழிலாளர்கள் அங்கம் வகிக்க வேண்டும் என்று நான் பெரிதும் ஆசைப்படுகிறேன். கமிட்டிகளில் தொழிலாளர்களை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகச் சேர்த்துக் கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்பதாக நாம் யோசனை கூறுவோம். நாம் கூறும் யோசனை போதவில்லையானால், காங்கிரஸின் பெயரால் இந்த யோசனையைக் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். இப்படி ஒரு தெளிவான நிர்ணயமான ஒரு யோசனையைக் காங்கிரஸ் கூறுமேயானால், அது வாய்ப்பந்தலை எதிர்க்க வலிமைபடைத்த ஆயுதமாக அமையும். காங்கிரஸின் தெளிந்த உறுதிபாட்டையும் வெளிப்படுத்துவதாக இருக்கும்.''

இதற்கு முன்னர்க்கூட, அதிகப்படியான தொழிலாளர்களைக் கமிட்டிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டுவதின் அவசியத்தை விளாதிமிர் இலிச் வற்புறுத்தி வந்திருக்கிறார். 1903-ல் பீட்டர்ஸ்பர்க் தோழருக்கு எழுதிய கடிதம் என்னும் தமது பிரசுரத்தில் இதுபற்றி விளாதிமிர் இலிச் குறிப்பிட்டிருக்கிறார். காங்கிரஸில் இந்த விஷயத்தை அவர் ஆதரித்துப் பேசினபொழுது, மிகவும் காரசாரமாக அவர் பேசினார்; மற்றவர்கள் பேசும்பொழுது குறுக்கிடவும் செய்தார்.

'' அனுஷ்டானத்தில் அறிவாளிகளின் பங்கு சிறிது; தொழிலாளர்களின் பங்கு மிக மிகப் பெரிது '' என்று மைக்லாவ் தம் பேச்சிடையே குறிப்பிட்டார்.

'' ஆம்; இது முழுக்க முழுக்க உண்மை'' என்று கூவினார் விளாதிமிர் இலிச்.

'' உண்மையல்ல! உண்மையல்ல!!'' என்று கோமிடெட்சிக்குகள் சேர்ந்தால்போல் கோஷித்தனர்; எனவே விளாதிமிர் இலிச் கூறியது அந்தக் கோஷத்தோடு கலந்து கரைந்து போயிற்று.

''பதினைந்து வருடங்களாகத் தொடர்ந்து வேலை நடந்து வந்தும், பீட்டர்ஸ்பர்க் கமிட்டியில் ஓரே ஒரு தொழிலாளிதான் உறுப்பினராய் இருக்கிறார்'' என்று ரும்னியாண்டீவ் தெரிவித்தார்.

'' இது பெருத்த அவமானம் '' என்று இரைச்சல் போட்டார் விளாதிமிர் இலிச்.

விவாதம் ஒருவாறு முடிந்த பிறகு, இலிச் சொன்னதாவது:

> '' கமிட்டிகளில் அங்கம் வகிக்கத்தக்க தொழிலாளர்களே கிடையாது என்று அவர்கள் கூறும்பொழுது, அதைக் கேட்டுக்கொண்டு என்னால் மௌனமாக இருக்க முடியவில்லை. இந்தப் பிரசினை நீண்டு கொண்டே போகிறது. கட்சியில் ஒரு மயக்க நிலை இருந்து வருகிறது என்பதை இது காட்டுகிறது. கமிட்டிகளில் தொழிலாளர்களைச் சேர்த்தேயாக வேண்டும்.''

காங்கிரஸில் தனது இந்த அபிப்பிராயத்துக்கு உக்கிரமான எதிர்ப்பு இருப்பதைக் கண்டு, விளாதிமிர் இலிச் அதிகம் கவலைப்படவில்லை. ஏனெனில், வந்து கொண்டிருக்கிற புரட்சியானது, கமிட்டிகளில் தொழிலாளர்களுக்கு அதிக ஸ்தானம் கொடுத்து, அவற்றைத் தொழிலாளர் நிறைந்த ஸ்தாபனங்களாக ஆக்க முடியாமல் இருக்கும் நோயை முற்றுமே மாற்றிவிடும் என்று அவர் நம்பினார்.

பிரசாரம், கிளர்ச்சி ஆகியவை காங்கிரஸில் விவாதத்திற்கு வந்த இன்னொரு பெரிய பிரசினை.

நாங்கள் ஜினீவாவிலிருந்தபொழுது, ஒடெஸாவிலிருந்து இளம் பெண் ஒருத்தி எங்களைக் காண வந்திருந்தாள்; அவள் குறைகூறி அழுத்துக்கொண்டது எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. "அசாத்தியமான கோரிக்கைகளை எல்லாம் கமிட்டியினிடமிருந்து தொழிலாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்; பிரசார சாதனங்களை எல்லாம் தந்து உதவ வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இது சாத்தியமான காரியமா என்ன! எங்களால் கிளர்ச்சி மட்டும்தான் செய்ய முடியும்" என்று அவள் கூறினாள்.

ஒடெஸாச் சிறுமியின் இந்தக் கதை விளாதிமிர் இலிச்சின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. பிரசாரம் பற்றிய பெரு விவாதம் ஒன்றே இதனால் ஏற்பட்டது. ஸெம்லியாட்கா, மிஷ்கா தாஷ்காயா, டெஸ்னிட்ஸ்கை ஆகியோர், பழைய பிரசார முறை பயனற்றுப் போய்விட்டது என்பதையும் பிரசாரம் என்பது இப்பொழுது கிளர்ச்சி வடிவத்தை அடைந்திருக்கிறது என்பதையும் தங்கள் பேச்சுகளில் குறிப்பிட்டனர். தொழிலாளர் இயக்கம் அமோகமாக வளர்ந்த பிறகு, பொதுவான பிரசாரமும் கிளர்ச்சியும் இயக்கத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்து வைப்பவனவாய் இல்லை. ஜனங்களை ஆகர்ஷிக்கும் பிரசுரங்களும், பத்திரிகைகளும், விவசாயிகளுக்கான பிரசுரங்களும் பல்வேறு பாஷைகள் பேசும் பல்வேறு தேசிய இனங்களை ஆகர்ஷிக்கும் பிரசுரங்களும் இப்போது தேவையாயின.

சட்ட விரோதமான பழைய ஸ்தாபனம் என்னும் எல்லைக்கு உட்பட்டு இருந்த காரணத்தால், நாளுக்கு நாள் ஏற்பட்ட அனுபவத்தால் உண்டான நூற்றுக்கணக்கான பிரசினைகளுக்கு ஒரு தீர்வு காண முடியவில்லை. ரஷ்யாவில் தினசரிப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிப்பதின் மூலமும் சட்டரீதியான விரிவான பிரசுர வேலைகளில் ஈடுபடுவதின் மூலமும்தான், இந்தப் பிரசினைகளுக்கு எல்லாம் ஒரு தீர்வு காண முடியும். பத்திரிகைகளுக்கு இன்னும் போதிய சுதந்திரம் கிடைக்கவில்லை. சட்ட விரோதமான பத்திரிகை ஒன்றை ரஷ்யாவிலிருந்து பிரசுரிப்பது என்றும், மக்களை ஆகர்ஷிக்கும் வகையில் பிரசுரங்களை எழுதி வெளியிடும் பொருட்டு, எழுத்தாளர்களை ஸ்தாபனரீதியாக ஒன்று திரட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இவை எல்லாம் தீராத வியாதிகள் என்பது தெளிவாயின.

நடைமுறையில் இருந்துவந்த புரட்சிகரமான போராட்டங்களைப்பற்றி, காங்கிரஸ் வெகுவாக விவாதித்தது. காகஸஸிலும் போலந்திலும் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய தீர்மானங்கள் நிறைவேறின. யூரல் பிரதேசத்திலிருந்து வந்திருந்த பிரதிநிதி ஒருவர் கீழ்வருமாறு பேசினார்:

"இயக்கம் மேன்மேலும் வளர்ந்து வருகிறது. செயலாற்றத் திறன் இல்லாத, தூங்கிவழிகிற, பிற்போக்கான, எல்லைப்புறப் பகுதி யூரல் பிரதேசம் என்று கருதும் எண்ணத்திற்கு விடை கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. லிஸ்வாவில் நடந்த அரசியல் வேலைநிறுத்தம், பல தொழிற்சாலைகளில் நடந்த பெரிய பெரிய வேலைநிறுத்தங்கள், பயங்கரமான அடக்குமுறைகளுக்கு

இலக்காகும் தோரணையில் விவசாயத் துறையிலும் தொழிற்சாலைத் துறையிலும் காணப்படும் பல்வேறு விதமான புரட்சி அறிகுறிகள், யதேச்சையாகப் பற்பல வடிவங்களில் தோன்றுகிற சிறு சிறு ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை அனைத்தும் யூரல் பிரதேசம் பெரிய புரட்சியின் தலைவாயிலில் நிற்கிறது என்பதை நமக்கு அறிவிக்கின்றன. ஆயுதம் தாங்கிப் புரட்சி செய்யும் அளவுக்கு யூரல் பிரதேசம் மாற்றம் அடைந்ததுள்ளது என்பதை இந்த இயக்கம் நமக்கு அறிவிக்கிறது எனலாம். வெடிகுண்டுகளையும் பீரங்கிகளையும் முதன் முதலாக அந்தப் பிர தேசம்தான் உபயோகித்து இருக்கிறது. தோழர்களே! யூரல் பிரதேசத்தை மறந்துவிடாதிர்கள்" என்று சொன்னார்.

இந்த யூரல் பிரதேசப் பிரதிநிதியுடன் விளாதிமிர் இலிச் நீண்ட நேரம் சம்பாஷித்தார்; இது இயல்பானதுதான்.

பொதுவாகச் சொல்வதானால், போராட வேண்டிய வழிதுறைகளை மூன்ரு வது காங்கிரஸ் சரியாகவே நிர்ணயம் செய்திருக்கிறது என்று சொல்லலாம். இதே விஷயங்களைப்பற்றி மென்ஷ்விக்குகள் செய்துள்ள தீர்மானங்கள் முற்றி லும் மாறுபட்ட வகையில் அமைந்துள்ளன. ஜனநாயகப் புரட்சியில் சமதர்ம ஜனநாயகத்தின் மாறுபட்ட இரு வழிகள் என்ற தமது நூலில் மூன்ரு வது காங்கிரஸ் செய்துள்ள தீர்மானங்களுக்கும் மென்ஷ்விக்குகளின் மகாநாட் டுத் தீர்மானங்களுக்கும் கொள்கையில் உள்ள வித்தியாசங்களை விளாதிமிர் இலிச் தெளிவுபடுத்தி விளக்கி இருக்கிறார்.

நாங்கள் ஜினீவாவுக்குத் திரும்பினோம். காங்கிரஸ் நடவடிக்கைகளைத் தொகுக்கும் கமிஷனுக்கு என்னையும் காம்ஸ்கியையும் ஓர்லோவஸ்கியையும் தேர்ந்தெடுத்தார்கள். காம்ஸ்கி வெளியூர் போக வேண்டிய நிலை ஏற்பட்டது; ஓர்லோவஸ்கி இன்னொரு வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். நடவடிக் கைக் குறிப்புகளைச் சரிபார்க்கும் வேலையை ஜினீவாவில் தொடங்கினோம். காங்கிரஸ் முடிந்த பிறகு பிரதிநிதிகளில் பெரும்பாலோர் ஜினீவாவுக்கு வந்திருந் தார்கள். அன்று சுருக்கெழுத்துக்காரர்களும் விசேஷ காரியதரிசிகளும் இருக்க வில்லை. காங்கிரஸுக்கு வந்திருந்த அங்கத்தினர் இருவர், மாறி மாறி குறிப்பு கள் எடுத்து, அவற்றை என்னிடம் தந்தனர். காங்கிரஸுக்கு வந்திருந்த பிரதி நிதிகள் எல்லோரையுமே நல்ல காரியதரிசிகள் என்று சொல்வதற்கு இல்லை. காங்கிரஸ் நடைபெறும்பொழுது எடுத்த குறிப்புகளைப் படித்துப் பார்க்க அவ காசமே இராது என்பது சொல்லாமலே விளங்கும். எனவே, பிரதிநிதிகளை வைத்து, குறிப்புகளைச் சரிபார்க்கும் வேலையை, ஜினீவாவில், லெப்பென்ஸ்கி தம் பதிகளின் விடுதியில் மேற்கொண்டோம். தமது பேச்சின் குறிப்புகள் சரியாக எழுதப்படவில்லை என்றும், சில விஷயங்களைச் சேர்க்கவேணும் என்றும் பிரதிநிதி கள் ஒவ்வொருவரும், தவருமல் கூறினர். நாங்கள் இதற்கு இடம் கொடுக்கவில்லை. ஒருவர் சொல்லும் திருத்தங்களை மற்ற பிரதிநிதிகள் சரி என்று ஒப்புக்கொண்டு சம்மதம் தெரிவித்தால் மட்டுமே சேர்த்துக்கொள்ளப் பெறும் என்று நாங்கள் சொல்லிவிட்டோம். இது சிரமமான வேலை; மனக்கசப்பு இன்றி இந்த வேலை யைத் தொடர்ந்து செய்ய முடியாது என்று தோன்றியது. குறிப்புகளைத் தமது இல்லத்துக்கு எடுத்துச் சென்று சரிபார்க்க விரும்பினர் ஸ்கிரிப்பிங். இதை ஒப்புக்

கொண்டால், இந்தச் சலுகையை மற்ற பிரதிநிதிகளுக்கும் காட்ட நேரும் என்பதையும் அதனால் குறிப்புகளுக்கே அதிகக் கிராக்கி ஏற்பட்டுவிடும் என்பதையும் நாங்கள்ஸ் கிரிப்பிங்குக்கு எடுத்துக்காட்டினோம். இதைக் கேட்டு ஆத்திரமடைந்த அவர், தமது மறுப்பைக் கொட்டை எழுத்துகளில் எழுதி, மத்திய கமிட்டிக்கு அனுப்பிவைத்தார். அறிக்கை சம்பந்தமான ஆரம்ப வேலைகள் முடிந்த பிறகு, ஓர் லோவஸ்கியின் வீட்டில், அறிக்கைகளைத் தொகுத்து முடிப்பதற்காக, நீண்ட நேரத்தைச் செலவு செய்தோம்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற மத்திய கமிட்டியின் முதல் கூட்டக் குறிப்புகள் எங்களுக்கு ஜூலை மாதத்தில் கிடைத்தன. ரஷ்யாவிலுள்ள மென்ஷ்விக்குகள் தீப்பொறியுடன் உடன்படவில்லை; அதை அவர்கள் பகிஷ்கரிப்பார்கள்; விவசாயிகளின் இயக்கத்துக்கு ஆதரவு கொடுப்பது பற்றி மத்திய கமிட்டியில் விவாதித்தோம். விவசாய நிபுணர்களை அவர்கள் கலந்து ஆலோசிக்க விரும்பியபடியால் இது சம்பந்தமாக இதுவரை எதுவும் செய்யவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்புகள் இருந்தன.

அந்தக் கடிதம் விஷயங்களைத் தெளிவாக விளக்கவில்லை. மத்திய கமிட்டியின் வேலைபற்றி வந்த அடுத்த கடிதமும் அதைவிடத் தெளிவற்ற முறையில் இருந்தது. இலிச் மிகவும் கலங்கிப்போனார்; காங்கிரஸில் ரஷ்யச் சூழ்நிலைக்கு இடம் கொடுத்துவிட்ட பிறகு, அந்தச் சூழ்நிலையிலிருந்து வேலை செய்யாமல், விலகி இருப்பது விளாதிமிர் இலிச்சுக்குச் சகிக்க முடியாததாக இருந்தது.

ஆகஸ்டு மாத மத்தியில் மத்திய கமிட்டிக்கு அவர் எழுதிய கடிதத்தில், அவர்கள் ஊமையர்களாக இருக்கலாகாது என்றும், தங்களுக்குள்ளே விஷயங்களை விவாதிப்பதனால் மட்டும் திருப்தியடைந்துவிடக் கூடாது என்றும் வற்புறுத்தி எழுதினார். உள்ளூரவே மத்திய கமிட்டிக்குள் ஏதோ ஒரு கோளாறு இருப்பதாகத் தோன்றுகிறது என்று ரஷ்யாவிலுள்ள மத்திய கமிட்டி உறுப்பினர்களுக்கு அவர் கடிதங்கள் எழுதினார்.

மத்திய கமிட்டியின் பத்திரிகைக்குத் தொடர்ச்சியாகச் செய்திகளை அனுப்பித்தர வேண்டும் என்ற யோசனையை நிறைவேற்றத் தவறினதற்காக, பிறகு எழுதின கடிதங்களில் மத்திய கமிட்டியை விளாதிமிர் இலிச் கடிந்துகொண்டார்.

"ஆகஸ்டஸ்" என்பவருக்குச் செப்டம்பர் மாதம் விளாதிமிர் ஒரு கடிதம் எழுதினார். "மத்திய கமிட்டியுடனோ அல்லது அதன் ஏஜண்டுகளுடனோ பரிபூரண உடன்பாடு ஏற்படும்வரை காத்திருப்பது வெறும் அசட்டுத்தனம். அன்பார்ந்த நண்பரே! குறிப்பிட்ட ஒருசிலரின் கூட்டுறவை அல்ல நாம் விரும்புவது; ஒரு கட்சிதான் நமக்குத் தேவை" என்று குறிப்பிட்டிருந்தார்.

டிராட்ஸ்கியின் துண்டுப்பிரசுரங்களை நம்மவர்கள் அச்சிடுகிறார்கள் என்று வந்திருந்த ஒரு குற்றச்சாட்டுக்கு அதே கடிதத்தில் இலிச் அடியில் வரும் பதிலை எழுதினார்:

> "டிராட்ஸ்கியின் பிரசுரங்களையா அச்சிடுகிறார்கள்....அச்சடித்து விட்டுப் போகட்டுமே.......பிரசுரங்கள் நன்றாக எழுதப்பட்டிருப்பின், வேண்டிய திருத்தங்களை அவற்றில் செய்திருப்பின், அவற்றை அச்சிடுவதால் தவறு ஒன்றும் இல்லை" என்று எழுதி இருந்தார்.

1905-ம் அக்டோபர் 13-ம் தேதி குஸ்ஸேயுக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர்: தொழிற்சங்க இயக்கத்தை நடத்தும் அதே சமயத்தில், ஆயுதம் தாங்கி எழுச்சி செய்வதற்கான காரியங்களிலும் கவனம் செலுத்த வேண்டுவது அவசியமாகும் என்று குறிப்பிட்டிருந்தார்; அதைக் குறிப்பாகவும் எடுத்துக்காட்டியிருந்தார். மென்ஷ்விக்குகளுக்கு எதிரான முறையிலும் போல்ஷ்விக்குகளின் உணர்ச்சிகளுக்கு உகந்த முறையிலும் இந்தப் போராட்டத்தை நடத்துவது அவசியமாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.

பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என்பதை முன்னதாக அறிவிக்கும் வகையில், சிலர் ஜினீவாவுக்கு வந்தார்கள். வெளியீட்டாளர்கள் தோன்றி, இதுவரை சட்டவிரோதமாக வெளிநாடுகளில் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களை, ரஷ்யாவில் சட்டரீதியாகப் பிரசுரிக்க முன்வந்தார்கள். ஒடெஸாவைச் சேர்ந்த "புருவென்ட்னிக்கும்" "மாலிச்" பிரசுராலயமும் இன்னும் பிறரும் புத்தகங்களைப் பிரசுரிக்க முன்வந்தனர். ஒரு பிரசுராலயத்தைத் தானே தொடங்கி, அதைத் தாமே நடத்த மத்திய கமிட்டி விரும்பியதால், மற்றவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டாம் என்று எங்களை அது வேண்டிக்கொண்டது.

அக்டோபர் ஆரம்பத்தில் இலிச் பின்லாந்துக்குச் செல்ல வேண்டும் என்றும் மத்திய கமிட்டியின் கூட்டம் ஒன்றை அங்கே கூட்டுவதென்றும் யோசனை கூறப்பட்டது. ஆனல் அப்பொழுது நடந்த சில நிகழ்ச்சிகள், இந்த யோசனையைப் புனராலோசனை செய்ய வேண்டும் என்ற அவசியத்தை உண்டுபண்ணின. ஆகவே, விளாதிமிர் இலிச் ரஷ்யாவுக்குத் திரும்பத் தயாரானர். யாவற்றையும் ஒழுங்குபடுத்தும் பொருட்டு, மேலும் இரண்டு வாரங்கள் நான் ஜினீவாவிலே இருக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். தமது தஸ்தாவேஜ்களையும் கடிதங்களையும் ஒழுங்குபடுத்தி உறைகளில் போட நான் இலிச்சுக்கு உதவிபுரிந்தேன். ஒவ்வொரு உறையிலும் என்னென்ன இருக்கிறது என்ற குறிப்பை இலிச்சே தம் கையால் எழுதினர். ஒரு உடுப்புப் பெட்டியில் அவற்றை எல்லாம் ஜாக்கிரதையாக வைத்து, அதை நாங்கள் தோழர் காவ்ரன்ஸ்கையிடம் ஒப்படைத்ததாக எனக்கு ஞாபகம். இந்தப் பெட்டி ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு, இலிச்சின் மரணத்துக்குப் பின்னர், லெனின் சர்வகலாசாலையாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தக் காலத்துக் கட்சியின் சரித்திரத்தைத் தெளிவாக விளக்கும் ஏராளமான கடிதங்களும் தஸ்தாவேஜ்களும் அந்தப் பெட்டியில் இருந்தன. கீழ்வரும் கடிதத்தை மத்திய கமிட்டிக்கு இலிச் செப்டம்பர் மாதம் எழுதினர்:

> "செய்தி மட்டும் என்ற முறையில், பிளக்கானுவ் சம்பந்தமாக உலவும் உள்ளூர் வதந்தி ஒன்றை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். சர்வதேசக் குழு முன்பு, அவரை நாம் அம்பலப்படுத்தியதற்காக, நம் மீது அவர் அபாரக் கோபம் கொண்டிருக்கிருர். சமதர்ம-ஜனநாயக வாதியின் நாட்குறிப்பு இதழ் இரண்டில் கூலிக்கு மாரடிப்பவனைப் போன்று, அவர் சபிக்கிருர். அவர் சொந்தத்தில் பத்திரிகை ஆரம்பிக்கப் போவதாகச் சிலர் சொல்லுகிருர்கள். தீப்பொறிக்குத் திரும்பி விடுவார் என்று வேறு சிலர் சொல்லுகிருர்கள். நமது முடிவு என்னவென்ருல், இனி நாம் அவரை நம்பக் கூடாது என்பதே."

அக்டோபர் மாதம் எட்டாம் தேதி இதே விஷயத்தைத் தொடர்ந்து விளாதிமிர் இலிச் எழுதினர் :

"பிளக்கானுவைப்பற்றிய எண்ணத்தை முற்றுமே விட்டுவிடும் படியாக உங்களை மனப்பூர்வமாக வேண்டுகிறேன். போல்ஷ்விக்கு களிடையேயிருந்து நமக்கு ஒரு பிரதிநிதியை நியமியுங்கள்; ஓர்லோ வஸ்கியை அதற்கு நியமிக்கலாம்."

எனினும், ரஷ்யாவில் தினசரிப் பத்திரிகை ஒன்றை நடத்த முடியும் என்ற ஒரு செய்தி வந்தது; ஆகவே அவர் ரஷ்யாவுக்குத் திரும்ப வேண்டிய ஏற்பாடு களைச் செய்வதானர். அப்போது நட்புரிமையோடு பிளக்கானுவுக்கு அவர் ஒரு கடிதம் எழுதினர். பத்திரிகையுடன் ஒத்துழைக்குமாறு அவரை வேண்டினர்.

"புரட்சி ஏற்படுமாயின், தந்திர முறைகளில் நமக்குள் இருக்கும் வேறுபாடுகளை அது ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அதிவிரைவில் களைந்து எறிந்துவிடும். கடந்துபோனவற்றை எளிதில் மறக்கச் செய்யும் வகையிலும் ஜீவன் நிறைந்த லட்சியத்துக்காக ஒன்றுபட்டுப் போர்புரியும் வகையிலும், அவற்றைச் சாத்தியமாக்கும் வகையிலும் புதிய அஸ்திவாரம் ஒன்று சிருஷ்டிக்கப்பட்டு வருகிறது...."

இறுதியில் பேட்டி காண விரும்புவதாக அந்தக் கடிதத்தில் பிளக்கானுவுக்கு இலிச் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பேட்டி நடந்ததா என்பது எனக்கு நினைவு இல்லை. இது நடந்திருக்காது என்று நினைக்கிறேன். நடந்திருந்தால் இத்தகைய ஒரு சம்பவத்தை நான் மறந்திருக்க மாட்டேன்.

1905-ஆம் வருடம் பிளக்கானுவ் ரஷ்யாவுக்குத் திரும்பவில்லை.

தான் ரஷ்யாவுக்குத் திரும்பின விவரத்தை, அக்டோபர் மாதம் 26-ம் தேதி எழுதிய கடிதத்தில் இலிச் விரிவாகக் குறிப்பிட்டிருந்தார். "நமது புரட்சி அற்புத மாக நடைபெற்று வருகிறது" என்று எழுதினர். "ஆம் அது முன்னேறுகிறது" என்று உறுதியாக எழுதினர். எப்பொழுது புரட்சி நடத்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்ற கேள்விக்கு "வசந்த காலம்வரை எழுச்சியைத் தாமதப் படுத்த எண்ணியுள்ளேன்; எனினும், இவற்றைப்பற்றி நம்மை விசாரிக்கக் கூடாது" என்று பதில் எழுதி இருந்தார்.

பீட்டர்ஸ்பர்க்கில்

(1905)

ஸ்டாக்ஹோமில் ஒருவர் விளாதிமிர் இலிச்சைச் சந்திப்பது என்றும் இன்னொருவர் பெயரிலுள்ள தஸ்தாவேஜுகளை அவர் கொடுப்பார் என்றும் அந்தத் தஸ்தாவேஜுகளின் உதவிகொண்டு, விளாதிமிர் இலிச் எல்லைப்புறத்தைக் கடந்து, பீட்டர்ஸ்பர்க்குக்குப் போய்விட வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல நாட்கள் ஆகியும் செய்திருந்த ஏற்பாட்டின்படி அந்த மனிதர் வந்து சேரவில்லை. பருவநிலை மாறி, கடல் மூலம் பிரயாணம் செய்வதற்காக விளாதிமிர் காத்திருக்க வேண்டியதாயிற்று. இதற்கு இடையில் ரஷ்யாவில் புரட்சிகரமான சம்பவங்கள் பெரும் அளவில் அதிகரித்துவிட்டன.

இரண்டு வாரங்கள் ஸ்டாக்ஹோமில் காத்திருந்துவிட்டு, நவம்பர் மாத ஆரம்பத்தில், விளாதிமிர் இலிச் ரஷ்யாவுக்குப் போய்ச்சேர்ந்தார். முதலில் ஜினீவாவில் சகல காரியங்களையும் ஒழுங்குபடுத்திய பின்னர், அவர் சென்ற பத்து தினங்களுக்குப் பிறகு, நானும் ரஷ்யா போய்ச்சேர்ந்தேன்.

போலீஸ் ஒற்றன் ஒருவன் ஸ்டாக்ஹோமில் என்னைப் பின்தொடர்ந்தான். என்னுடன் சேர்ந்து அவனும் கப்பல் ஏறினன். அதன் பிறகு ஹான்கோவிலிருந்து ஹெலிசிங்போர்ஸுக்குச் சென்ற ரயிலிலும் ஏறிக்கொண்டான்.

பின்லாந்தில் ஏற்கனவே புரட்சி தொடங்கி முழு வேகத்தில் நடந்தது. நான் பீட்டர்ஸ்பர்க்குக்கு ஒரு தந்தி அனுப்ப விரும்பினேன்; "தபால் தந்தி வேலைநிறுத்தம் நடைபெறுவதால் தந்திகளைத் தான் ஏற்க முடியாது" என்று தந்தி ஆபீஸில் வேலைபார்த்த உல்லாசமான புன்னகை தவழும் பின்னிஷ் சிறுமி சொல்லிவிட்டாள்.

ரயில் வண்டிகளில் இருந்தவர்கள் எல்லோரும் இரைந்து இரைந்து பேசினர். பின்னிஷ் கட்சி ஊழியர் ஒருவருடன் நான் பேச்சுக்கொடுத்தேன். ஏக் காரணத்தாலோ அவர் ஜெர்மன் பாஷையிலேயே பேசினர். புரட்சி வெற்றி பெற்று வருவதைக் குறித்து அவர் வருணித்துக்கொண் டிருந்தார். "ஒற்றர்களா? அவர்களை எல்லாம் பிடித்துச் சிறையில் தள்ளிவிட்டோமே?" என்று அவர் சொன்னர்.

என்னைத் தொடர்ந்துவந்த ஒற்றன்மீது எனது பார்வை திரும்பியது. "ஆனல் புதிய ஒற்றர்களுக்கு இடம் உண்டுபோலும்" என்று சொல்லிவிட்டு, சிரித்துக்கொண்டே அர்த்தபுஷ்டியுடன் என்னைத் தொடர்ந்துவந்த ஒற்றனை நான் கவனித்தேன்.

பின்னிஷ் ஊழியர் நிலைமையைப் புரிந்துகொண்டார். "அப்படியா செய்தி; அப்படி ஒரு ஒற்றன் திரிவதை நீங்கள் கவனித்தால், தகவல் தெரிவிக்க வேண்டியதுதான் தாமதம், அவனை நாங்கள் உடனே கைது செய்துவிடுகிறோம்" என்று அவர் இரைந்து கூவினார்.

நாங்கள் ஒரு சிறிய ஸ்டேஷனை அடைந்தோம். அங்கே ரயில் ஒரு நிமிடம் தான் நின்றது. அதன் பிறகு அந்த ஒற்றனை நான் பார்க்கவே இல்லை.

சுமார் நான்கு ஆண்டுகள் வெளிநாடுகளில் வசித்த எனக்கு, பீட்டர்ஸ்பர்க்கை அடைந்துவிட வேண்டும் என்ற ஆவல் அதி தீவிரமாக இருந்தது. நகரம் முழுதும் ஒரே கொந்தளிப்பில் கிடக்கும் என்பதை நான் அறிவேன். நான் ரயிலைவிட்டு இறங்கின பின்லாந்து ஸ்டேஷனில் அமைதி நிலவியது. பீட்டர்ஸ்பர்க்கைப்பற்றியும் புரட்சியைப்பற்றியும் நான் கொண்டிருந்த கருத்துகளுக்கு மாறாக நிலைமை இருந்தது. ஆகவே பீட்டர்ஸ்பர்க்கில் இறங்குவதற்குப் பதிலாக பார்கோலொவோ ஸ்டேஷனில் இறங்கிவிட்டதைப்போன்ற ஓர்வித உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

அருகில் நின்ற ஒரு வண்டிக்காரரைப் பார்த்து, குழப்பத்துடன், "இது எந்த ஸ்டேஷன் ?" என்று கேட்டேன்.

அந்த வண்டிக்காரர் சிறிது பின்னடைந்து, என்னை ஏளனமாக முறைத்துப் பார்த்துவிட்டு, "இது ஸ்டேஷன் அல்ல; செயிண்டு பீட்டர்ஸ்பர்க் நகரம்" என்று பதில் சொன்னார்.

ஸ்டேஷனுக்கு வெளியே, பீட்டர் பெட்ரோவிச் ரூம்யாண்டிஸிவ் என்னைச் சந்தித்தார். தங்களுடன் விளாதிமிர் இலிச் தங்கியிருக்கிறார் என்று அவர் சொல்லவே, பெஸ்கியை நோக்கி, அவருடன் ஏதோ ஒரு இடத்துக்கு நான் சென்றேன்.

ஷெல்குனோவின் பிரேத அடக்க சமயத்தில்தான் முதன் முதலாகப் பீட்டர் பெட்ரோவிச் ரூம்யாண்டியாஸிவை நான் சந்தித்தேன். அன்று அவர் சிறுவனாக இருந்தார்; சுருண்ட கேசமுள்ள அந்த வாலிபர், ஊர்வலத்தின் முன் வரிசையில் பாடிக்கொண்டு சென்றார். பிறகு 1896-ம் வருஷம் அப்பொழுது தான் சிறையிலிருந்து விடுதலை அடைந்த அவரை நான் போல்டாவாவில் சந்தித்தேன்; முகம் வெளிறியும் தளர்ந்தும் அவர் காணப்பட்டார். போல்டாவாவில் சமதர்ம-ஜனநாயகவாதிகளிடையே அவர் தலைவராக விளங்கினார். இவர் மிகுந்த திறமைசாலி; அதிக செல்வாக்குடையவர்; நல்ல தோழர். பிறகு இவரைக் கைது செய்து "சிலுவைகள்" என்னும் சிறைச்சாலையில் அடைத்துவிட்டார்கள்; அங்கிருந்துகொண்டே யோசனைகளை அவர் அனுப்பிவந்தார்.

சாம்ராவிலிருந்து வந்திருந்த அவரை நான் உபாவில் 1900-ல் சந்தித்தேன். ஏதோ ஒரு ஏமாற்றச் சூழ்நிலையில் சிக்குண்டு தவிப்பவர்போல அவர் தென்பட்டார்.

1905-ல் மீண்டும் ஒருமுறை அவர் அரங்கத்தில் தோன்றினார்; இந்தச் சமயம் இவர் சிறந்த படிப்பாளியாகத் தென்பட்டார்; அந்தஸ்தும் இருந்தது; கார்ப்பரேஷனில் அங்கத்தினராகவும் இருந்தார். பல்வேறு திறமைகள் பெற்றவராக அவர் திகழ்ந்தார்; தந்திரமாகவும் திறமையாகவும் பேசும் ஆற்றல்

அவருக்கு இருந்தது; உறுதிபடைத்த போல்ஷ்விக்காக இருந்து, ஷிட்லோவஸ்கி கமிஷனை அவர் சிறந்த முறையில் பகிஷ்கரித்தார்; இது சம்பந்தமான இயக்கத்தை அற்புதமாக நடத்தினார். மூன்றாவது காங்கிரஸ் நடைபெற்று முடிந்ததும், மத்திய கமிட்டியில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

அழகும் வசதியுமுள்ள ஒரு வீட்டில் அவர் வசித்துவந்தார்; தன் பெயரைப் பதிவுசெய்துகொள்ளாமல் விளாதிமிர் இலிச் முதலில் அங்கே வசித்துவந்தார்.

பிறர் வீட்டில் வசிக்க நேரும் காலங்களில் விளாதிமிர் இலிச் பெரிதும் சங்கடப்பட்டுக்கொள்வார்; மற்றவர்களின் வீட்டில் வசித்தால் அவருடைய காரியங்கள் குந்தகப்பட்டுப்போகும். நான் போய்ச் சேர்ந்ததும், நாங்கள் இருவரும் சேர்ந்து வசிப்பதற்கான இடத்தைத் தேடுவதில் முனைந்தார். நெவ்ஸ்கையில் வசதியான ஓர் இடம் கிடைத்தபடியால் நாங்கள் அங்கே குடித்தனம் போய் விட்டோம்; எங்கள் பெயரை நாங்கள் பதிவுசெய்து கொள்ளவில்லை. அங்கே வேலை செய்துவந்த பெண்களுடன் நான் கலந்து பேசினது இன்னும் என் நினைவில் இருக்கிறது. பீட்டர்ஸ்பர்க்கில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் எனக்குத் தெரிவித்தவண்ணம் இருந்தார்கள்; விவரமாகவும் உண்மையாகவும் அனேக விஷயங்களை அவர்கள் என்னிடம் சொன்னார்கள். கேள்விப்பட்ட தகவல்களை எல்லாம் உடனே நான் விளாதிமிர் இலிச்சிடம் கூறிவிடுவேன். விசாரணை செய்து செய்திகள் சேகரிக்கும் ஆற்றல் என்னிடம் இருப்பதைக் கண்டு இலிச் என்னைப் பாராட்டினார்; அந்தக் கணம் முதல் அவருக்குச் செய்திகள் சேகரித்துக் கொடுக்கும் ஒரு நிருபராக நான் ஆனேன். ரஷ்யாவில் நாங்கள் இருந்த காலத்தில் இலிச்சைக் காட்டிலும் என்னால் அதிகத் தாராளமாக நடமாட முடிந்தது; அதிகம் பேருடன் கலந்து பழக முடிந்தது. அவர் கேட்கும் இரண்டு மூன்று கேள்விகளிலிருந்து, அவருக்குத் தெரிய வேண்டுவது எது என்பதை நான் தெரிந்துகொண்டுவிடுவேன்; பிறகு ஒவ்வொன்றையும் ஜாக்கிரதையாகக் கவனிப்பேன்; நான் தெரிந்துகொண்ட விஷயங்களை விளாதிமிர் இலிச்சுக்கு வரிசைப்படுத்தி, அவர் மனத்தில் பதியும்படியாகச் சொல்லிவந்த வழக்கம் இன்னும் என்னைவிட்டு அகன்றுவிடவில்லை.

மறு நாளே இந்தத் துறையில் நான் மிகப் பெரிய வெற்றி ஒன்று பெற்றேன். குடித்தனம் போவதற்காக வீடு ஒன்று தேடி அலைந்து திரிந்த நான், டிராட்ஸ்கை தெருவில் ஒரு காலி வீடு இருப்பதாகக் கேள்விப்பட்டு, அங்கே சென்று, வீட்டைக் கண்காணிப்பவரைச் சந்தித்து அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். கிராமங்களைப்பற்றியும் பண்ணையார்களைப்பற்றியும் பண்ணையார்களிடமிருந்து நிலங்களை விவசாயிகளுக்கு மாற்ற வேண்டியதன் அவசியத்தைப்பற்றியும் அவர் என்னுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

சட்டரீதியான முறையில் இனி வசிக்கவேண்டும் என நாங்கள் தீர்மானித்து இருந்த சமயம் அது. கிரசெஸ்கி பிராஸ்பெக்கிட்டில், நாங்கள் வசிக்க, மரியா இலிச்னா சில நண்பர்களுடன் ஏற்பாடு செய்தாள். எங்களை நாங்கள் பதிவு செய்துகொண்டதும், போலீஸ் ஒற்றர்கள் எங்கள் வீட்டைச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தனர். வீட்டுக்காரர் பீதியடைந்துபோனார்; இரவு முழுதும் அவர் தூங்கவே இல்லை. சட்டைப் பையில் கைத்துப்பாக்கியை வைத்துக்கொண்டு,

அங்கும் இங்கும் நடந்துகொடுத்தார்; ஆயுதபாணிகளாகப் போலீஸார் வந்தால், அவர்களைச் சந்திப்பது என்ற முடிவுக்கே அவர் வந்துவிட்டார். "இவர் பேசாமல் இருந்து தொலையட்டும்; இவருடைய முன் எச்சரிக்கைகள் எல்லாம் நமக்கு அனுவசியமான தொந்தரவுகளை உண்டுபண்ணும்போல் இருக்கிறதே" என்று இலிச் கவலைப்பட்டார். ஆகவே, நாங்கள் சட்டவிரோதமாக வாழ்வது என முடிவு செய்தோம்; தனித் தனியாக வாழ்வது எனவும் முடிவு செய்தோம். யாரோ பிராஸ்கோலியா யூஜீவேனு ஒனிஜீனு என்ற பெயரில் ஒரு பாஸ்ப் போர்டை வைத்துக்கொண்டு நான் வாழ்ந்துவந்தேன்; விளாதிமிர் இலிச்சோ தமது பாஸ்போர்டைப் பல முறைகள் மாற்றி, வெவ்வேறு பாஸ்போர்டை வைத்துக்கொண்டார்.

விளாதிமிர் இலிச் ரஷ்யாவுக்கு வந்த சமயம் சட்டரீதியான தினசரிப் பத்திரிகை புது வாழ்வு வெளிவந்துகொண் டிருந்தது. அதை வெளியிட்டவர் மரியா பெடரோவ்னு ஆண்டிரியெவ்வா என்பவர். கார்க்கியின் மனைவி இவர். புலவர் மென்ஸ்கி இதன் ஆசிரியராய் இருந்தார். கார்க்கி, லியோனிட் ஆண்டிரிவீவ், சிரிக்காவ், பால்மாண்டு, டெப்பி முதலியோர் இதில் கட்டுரைகள் எழுதிவந்தனர். பாக்டானுவ், ரூம்யாண்டிஸிவ், ரோஸாக்காவ், கோல்டன்பர்க், லூனுசார்ஸ்கை, பாஸாராவ், காமனீவ் ஆகிய போல்ஷ்விக்குகள் இந்தப் பேப்பருக்கு உதவியாய் இருந்துவந்தனர். அலெக்கும் அதைத் தொடர்ந்து அந்தக் காலத்தில் வெளி வந்த இதர போல்ஷ்விக் பத்திரிகைகளுக்கும் டிமிட்ரி இலீச் லெஷ்என்கோ காரியதரிசியாக இருந்துவந்தார். இவர் செய்திகளைப் பதிப்பிப்பவராயும் டூமா என்ற சட்டசபைக் கூட்டங்களுக்கு நிருபராயும் இருந்து வேலை செய்தார்; அச்சுக்கூட வேலைகளையும் அவரே கவனித்துக்கொண்டார். விளாதிமிர் இலிச்சின் முதல் கட்டுரை நவம்பர் மாதம் பத்தாம் தேதி வெளிவந்தது. "நமது கட்சி, வேலை செய்ய வேண்டிய துறைகளில், அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கூட்டம் கூடும் உரிமை, தொழிற்சங்க உரிமை, பத்திரிகைச் சுதந்திரம் ஆகிய துறைகளில் வெற்றி கிட்டியிருக்கிறது" என்ற வாக்கியங்களால் அந்தக் கட்டுரையை இலிச் ஆரம்பித்து இருந்தார். இந்தப் புதிய நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு, "புதிய துறைகளில்" முக்கியமான சில அம்சங்களை வகுக்க விரைந்தார் இலிச். கட்சியின் இரகசிய யந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும். இந்த ரகசிய யந்திரத்துக்கு அண்மையிலேயே, பகிரங்கமான கட்சி ஸ்தாபனங்களையும் அரைகுறை நிலையில் சட்டரீதியாக இயங்கும் கட்சி ஸ்தாபனங்களையும்—கட்சிக்கு உதவிச் சங்கங்களாக அமையும் வகையில்—அமைத்துத்தான் ஆக வேண்டும். கட்சி அணியில் தொழிலாளர்களை அதிக அளவில் அங்கத்தினர்களாகச் சேர்க்க வேண்டும். உணர்ச்சிரீதியாகவும் இயல்பாகவும் தொழிலாளர் வர்க்கத்துக்குச் சமதர்மத்தையே விரும்பும் தன்மைஉண்டு; பத்து ஆண்டுகளுக்கு அதிகமாக வேலைசெய்து வந்திருந்தும் சமதர்ம-ஜனநாயகக் கட்சி, இயல்பான இந்தப் பற்றுதலுக்கு உணர்ச்சி உருவம் கொடுக்க அதிகம் முயலாமல் இருந்துவிட்டது. "இரண்டு அறிவாளிகளுக்கு எட்டுத் தொழிலாளர் வீதம் கட்சிக் கமிட்டியில் இருக்க வேண்டும் என்று எனது விருப்பத்தை நான் மூன்ருவது காங்கிரஸில் அழுத்தமாகச் சொன்னேன். அந்த விருப்பம் இப்பொழுது

எவ்வளவோ மாறுதல் பெற்றுத் திகழ்கிறது. இப்பொழுதுள்ள புதிய கட்சி ஸ்தாபனத்தில், ஒரு அறிவாளிக்குப் பல நூறு தொழிலாளர்கள் வீதம் அங்கம் பெற வேண்டும் என்ற ஆசை ஏற்படும் நிலையில் நாம் வளர்ந்திருக்கிறோம்" என்று மேலே குறிப்பிட்ட கட்டுரையில் விளாதிமிர் இலிச் எழுதி இருக்கிறார்.

கட்சி, பொதுஜனங்களுக்குள் கரைந்து போகுமோ என்று அஞ்சிய கோமிடெட்சிக்குகளைப் பார்த்து, "தோழர்களே! கற்பனைரீதியான, பயங்கர நிலைகளைச் சிருஷ்டித்துக்கொள்ளாதீர்கள்" என்று விளாதிமிர் இலிச் எழுதினார்.

சமதர்ம-ஜனநாயக அறிவாளிகள் இப்பொழுது, தங்கள் திருஷ்டியை "மக்களின்பால்" செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. "நேற்றுவரை வேலை செய்துவந்த ரகசிய வேலைக்காரர்களும் குருஸ்நோவிக்குகளும்* கனவில் கூடக் காணத் துணியாத அனேக காரியங்களைத் தொழிலாளர்கள் தாங்களே துணிந்து செய்ய முன் வருவார்கள்." புதிய அடிப்படையில் ஸ்தாபனத்தை அமைக்க வழிகோலுவதைவிட, இன்று நாம் மேற்கொள்ள வேண்டிய பெரிய வேலை, நமது நடவடிக்கைகளைத் துணிச்சலான முறையிலும் விரிவான முறையிலும் அபிவிருத்தி செய்வதுதான்.

புதிய அடிப்படையில் கட்சியை அமைப்பதானால், அதற்குப் புதிய காங்கிரஸ் ஒன்றைக் கூட்டுவது அவசியமாகும்.

கட்சியைப் புதிய முறையில் திருத்தி அமைப்பதுபற்றி, விளாதிமிர் இலிச் எழுதின "சட்டரீதியான" முதல் கட்டுரையின் சாரம் இதுதான்.

எல்லாத் துறைகளிலும் பழைய "வட்டார" முறை அமைப்பிலேயே வேலைகள் நடந்து வந்தன; இந்த முறையை எதிர்த்து அகற்றியாக வேண்டும்.

நான் ரஷ்யாவுக்குப் போன பின், ஆரம்ப நாட்களில், நெவ்ஸ்கை கேட்டு வழியாக, பழைய ஸ்மாலன்ஸ்கை, ஞாயிற்றுக்கிழமை மாலை வகுப்புகளுக்குப் போய் வந்தேன். அங்கே இப்பொழுது, பூகோளமும் இயற்கை சரித்திரமும் போதிக்கப் படவில்லை. ஆண்களும் பெண்களும் நிறைந்திருந்த வகுப்புகளில் பிரசாரகர்கள் இப்பொழுது அங்கே பிரசாரங்கள் செய்து வந்தார்கள். கட்சிப் பிரசாரகர்கள் தங்கள் சொற்பொழிவுகளைப் படித்தனர். ஒருவர் செய்த பிரசாரம் எனக்கு நினைவு இருக்கிறது. கற்பனைரீதியான சமதர்மமும் விஞ்ஞானரீதியான சமதர்மமும் என்னும் ஏங்கல்ஸ் எழுதிய நூலைப்பற்றி ஒரு இளம் பேச்சாளர் பேசினார்.

அங்கேயிருந்த தொழிலாளர்கள் இமைகொட்டாமல் அவர் பேச்சைக் கேட்டனர்; சொற்பொழிவாளர் என்ன சொல்லுகிறார் என்பதைப் புரிந்து கொள்ளப் பெருமுயற்சி செய்தனர். யாரும் கேள்விகள் கேட்கவில்லை. நமது கட்சியைச் சேர்ந்த பெண்கள் கீழே, தொழிலாளர்களுக்கு விருந்து அளிக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர்; நகரிலிருந்து கொணர்ந்திருந்த கோப்பைகளை எல்லாம் எடுத்துவைத்து ஏற்பாடுகள் செய்தனர்.

வகுப்புகளைப்பற்றி எனக்கு ஏற்பட்ட அபிப்பிராயங்களை நான் இலிச்சிடம் கூறியபொழுது, அவர் மௌனமாக இருந்தார். இதைக் காட்டிலும் வேறு வகையான விஷயத்தை அவர் தெரிந்துகொள்ள விரும்பினார்; தொழிலாளர்கள்

* குருஸ்நோவிக்குகள்: சின்னஞ் சிறு இலக்கியக் குழுக்கள்.

தாங்களாகவே என்ன செய்கிறுர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள அவர் பிரியப் பட்டார். தொழிலாளர்களே செய்யக் கூடிய காரியங்கள் நிகழாமல் இல்லை. ஆனல், கட்சிக் கூட்டங்களில் இத்தகைய காரியங்கள் பிரதான்யமாகத் துலங்க வில்லை. கட்சியினுடைய காரியங்களும் தொழிலாளர்களின் சுய நடவடிக்கை யும் என்ன காரணத்தாலோ கலந்து உறவாடாமல் இருந்துவந்தன.

இந்த ஆண்டுகளுக்கிடையே தொழிலாளர்கள் அபரிமிதமான முறையில் முன்னேற்றம் அடைந்து இருந்தனர். என்னிடம் கல்விகற்ற ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூட மாணவர்களிடம் இந்த அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதை நான் கண்டேன். ஒரு நாள் ரொட்டிக்கடைத் தொழிலாளி ஒருவர் என்னை வீதியில் சந்தித்தார்; அவர் முன்பு என்னிடம் படித்த மாணவர்; அவர் பெயர் "சோஷ லிஸ்டு பாகின்" என்பது. மாக்ஸ்வெல் தொழிற்சாலையில் அவர் வேலை செய்து வந்த காலத்தில், இரண்டு கோவேறு கழுதைப் பளுவை மூன்று கோவேறு கழுதைப் பளுவுக்கு மாற்றினல் "வேலைப் பளு" அதிகரிக்கும் என்று தொழிற் சாலை மானேஜரை எதிர்த்து அவர் வாதாடினர். இதற்காக, பத்து வருஷங் களுக்கு முன்பு தமது கிராமத்துக்குத் தக்க பாதுகாவலுடன் நாடு கடத்தப் பட்டார். இப்பொழுது அவர் வளர்ந்து உணர்ச்சி நிறைந்த சமதர்ம-ஜனநாயக வாதியாக ஆகிவிட்டார். அபிவிருத்தியடைந்து வருகிற புரட்சியைப்பற்றியும் தொழிலாளர்களை ஸ்தாபனரீதியாக ஒன்று திரட்டுவதுபற்றியும் நானும் அவரும் நீண்ட நேரம் சம்பாஷித்தோம். ரொட்டிக் கிடங்கில் வேலை செய்வோர் செய்த வேலைநிறுத்தங்களைப்பற்றி எல்லாம் அவர் என்னிடம் கூறினர்.

கட்சிக் காங்கிரஸைப்பற்றியும் கட்சியின் ரகசிய யந்திரத்தைப்பற்றியும் தமது கட்டுரையில் இலிச் பகிரங்கமாக எழுதியபடியால், அதுமுதல் புதுவாழ்வு பகிரங்கமான கட்சிப் பத்திரிகையாக மாறியது. இதனல் மின்ஸ்கை, பான் மான்ஸைப் போன்றவர்களும் பிறரும் தொடர்ந்து பத்திரிகையில் இருப்பது இயலாத காரியம். எனவே, ஆசிரியர் குழாத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன. பத்திரிகை, போல்ஷ்விக்குகளின் கைக்குள் முற்றுமே வந்துவிட்டது. ஸ்தாபன ரீதியிலும் அது கட்சிப் பத்திரிகையாக ஆகிவிட்டது. கட்சியின் மேற்பார்வை யிலும் ஆலோசனைப்படியும் பத்திரிகை நடந்துவந்தது.

புதுவாழ்வில் எழுதின தமது இரண்டாவது கட்டுரையில், ரஷ்யப் புரட்சியின் மூலாதாரப் பிரசினையான விவசாயி-பாட்டாளி உறவு முறைகளைப் பற்றி இலிச் விரிவாக ஆராய்ந்தார். இந்தப் பிரசினையை மென்ஷ்விக்குகள் மட்டும் தவருக வியாக்கியானம் செய்யவில்லை; போல்ஷ்விக்குத் தோழர்கள் சிலரும் "துண்டு நிலச் சரிவு" என்னும் நோயால் பீடிக்கப்பட்டுத் தவருக வியாக்கி யானம் செய்தனர். "துண்டு நிலம்" என்ற கோஷத்தை, கிளர்ச்சியின் ஆரம்ப சாதனமாகக் கருதாமல், அதுவே லட்சியத்தின் முடிவு என்பதாக அவர்கள் கருதிவிட்டார்கள். யதார்த்த வாழ்க்கையின் அனுபவம், வேறு வகையில் கிளர்ச்சி செய்ய வேணும் போராட வேணும் என்பதை அறிவுறுத்தியும்கூட, "துண்டு நிலம்" என்னும் கோஷத்தை அவர்கள் கைவிடவில்லை.

பாட்டாளி மக்களும் விவசாயிகளும் என்னும் கட்டுரை அறிவூட்டும் ஒரு கட்டுரை. கட்சிக்குத் தெளிவான ஒரு கோஷத்தை அது வரையறுத்துக் கொடுத்

தது. ரஷ்யப் பாட்டாளி மக்கள், விவசாயிகளின் பக்கபலத்துடன் நிலத்துக்காகவும் சுதந்திரத்துக்காகவும் போராடி வருகிறது. சர்வதேசப் பாட்டாளி மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் பக்கபலத்தைக் கொண்டு, சமதர்மத்துக்காக அது போராடி வருகிறது.

போல்ஷ்விக் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்தில், இந்தக் கொள்கையை அமல்படுத்தத் தொடங்கினர். விளாதிமிர் இலிச் வெளிநாட்டில் வசித்தபொழுது, அக்டோபர் மாதம் பதின்மூன்றும் தேதி, சோவியத்து என்னும் சபை உருவாயிற்று. கஷ்டப்படும் பாட்டாளி மக்களின் போராட்ட ஸ்தாபனமாக அது பிறந்தது. தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்தில் விளாதிமிர் இலிச் பேசினதாக எனக்கு நினைவு இல்லை. சுயேச்சைப் பொருளாதார சங்கத்தில் நடந்த ஒரு கூட்டம் எனக்கு நினைவு இருக்கிறது. விளாதிமிர் இலிச் அங்கே பேசப் போகிறுர் என்பதை அறிந்து கட்சித் தோழர்கள் ஏராளமாக வந்து அங்கே குழுமினர். விவசாயப் பிரசினைபற்றி அவர் அங்கே ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினுர். அங்கேதான் முதன் முதலாக விளாதிமிர் இலிச் அலெக்ஸின்ஸ்கியைச் சந்தித்தார். அந்தக் கூட்டத்தைப் பற்றிய விவரங்கள் எதுவும் எனக்கு நினைவு இல்லை. ஏதோ ஒரு சாம்பல்நிறக் கதவும் வெளியே செல்வதற்காகக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு விளாதிமிர் இலிச் அந்தக் கதவை நோக்கிச் சென்றதும் ஏதோ கொஞ்சம் நினைவு இருக்கிறது. இந்தக் கூட்டம் நவம்பரில் நடந்தது என்பதும் விளாதிமிர் இவாஞேவிச் நெவ்ஸ்கை கூட்டத்துக்கு வந்திருந்தார் என்பதும் எனக்கு நினைவில் இருக்கின்றன.

கிளர்ந்து எழுகின்ற மக்களின் போராட்ட ஸ்தாபனங்கள் ஆகும் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் என்பதைக் கண்டு, உடனே நவம்பர் மாதம் எழுதிய கட்டுரைகளில் விளாதிமிர் இலிச் விளக்கி இருக்கிறுர். புரட்சிப் போராட்டம் என்னும் உலைக்களத்தில்தான் தற்காலிகப் புரட்சி சர்க்காரை வார்த்து எடுக்க முடியும் என்பதையும் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகளில் தமது செல்வாக்கை வளர்த்துக்கொள்ள, சமதர்ம ஜனநாயகக் கட்சி சகல வழிகளிலும் முயல வேண்டும் என்பதையும் அவர் உருவகப்படுத்தினுர்.

ரகசிய வேலை உண்டுபண்ணின சுற்றுச்சார்பின் நிர்ப்பந்தத்தால், நான் இலிச்சைப் பிரிந்து வாழ நேர்ந்தது. ஆசிரியர் குழாத்தில் அவர் நாள் முழுவதும் வேலை செய்தார். புது வாழ்வு காரியாலயத்தில் மாத்திர மல்லாமல், ரகசிய விடுதிகளிலும் கிளாவ்லாவஸ்கி வீதியில் இருந்த டி. ஐ. லெஷெங்கோவின் வீட்டிலும் ஆசிரியர் குழாத்தின் கூட்டங்கள் நடைபெற்றன. ரகசியக் கூட்டங்களாக இருந்த காரணத்தால் அந்த இடங்களுக்கு எல்லாம் போக எனக்குச் சௌகரியப்படவில்லை. எனவே அடிக்கடி நாங்கள் புது வாழ்வு காரியாலயத்தில்தான் சந்தித்தோம். இங்கேயும் இலிச் ஓயர்மல் வேலைபார்த்துக்கொண்டே இருந்தார். சரியான அனுமதிச்சீட்டுக் கிடைத்த பின்னர்தான், பாஸெநாயாவிலும் நாடேஸ்கினிகாயாவிலும் வீடு எடுத்துக்கொண்டு வசிக்கத் தொடங்கினுர். அப்பொழுதும் மாத்திரம்தான் அவரை நான் சந்திக்க நேர்ந்தது; அடுக்களை வழியாகப் பிரவேசித்து, மெதுவாக நான் அவருடன் பேசிவந்தேன். எனினும் எல்லா விஷயங்களையும்பற்றி எங்களால் அங்கே விவாதிக்க முடிந்தது.

பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து விளாதிமிர் இலிச் மாஸ்கோ போய்வந்தார். திரும்பி வந்தவுடன் அவரைக் காண்பதற்காக நான் சென்றேன். மூலை முடுக்குகள் எல்லாம் ஏராளமான ஒற்றர்கள் நிற்பதைக் கண்டு நான் திடுக்கிட்டேன். "இவர்கள் ஏன் உங்களை இப்படி விரட்டித் திரிந்து வேட்டையாடுகிறார்கள்?" என்று நான் விளாதிமிர் இலிச்சைக் கேட்டேன். வீட்டைவிட்டு வெளிக் கிளம்பாமல் இருந்த அவருக்கு இப்படி ஒரு விஷயம் நடக்கிறது என்பதை அறிய முடியாமல் இருந்தது. நான் அவர் கொணர்ந்திருந்த பெட்டியைப் பிரித்தேன். அப்பொழுது, எதிர்பாராத விதமாக ஒரு ஜதை நீலநிற மூக்குக் கண்ணாடிகள் இருப்பதைக் கண்டு, "இவை எப்படி இதற்குள் வந்தன?" என்று கேட்டேன். மாறுவேடம் புனைந்துகொள்வதற்காக இந்த மூக்குக் கண்ணாடிகளை விளாதிமிர் இலிச்சை அணிந்துகொள்ளச் செய்து, பின்லாந்து தேச மஞ்சள் பெட்டி ஒன்றை அவரிடம் கொடுத்து, ஓடும் ரயிலில் அவசர அவசரமாக மாஸ்கோத் தோழர்கள் அவரை ஏற்றி அனுப்பி இருப்பார்கள் என்று யூகித்துக்கொண்டேன். அதன் பயனாய் விளாதிமிர் இலிச்சை ஒரு கொள்ளைக்காரன் என்பதாக எண்ணி, ஏராளமான ஒற்றர்கள் பின்தொடரத் தலைப்பட்டார்கள்.

சீக்கிரம் அங்கிருந்து வெளியேறிவிட வேணும் என்ற எண்ணம் எங்களுக்கு உண்டாயிற்று. வழக்கத்துக்கு மாறாகக் கைகோத்துக்கொண்டு, வீட்டைவிட்டு வெளிப்பட்டு, நாங்கள் செல்லவிருந்த இலக்குக்கு எதிர்மாறாக நானும் இலிச்சும் நடந்தோம். மாறி மாறி மூன்று குதிரைவண்டிகளில் ஏறினோம். அப்படியும் இப்படியும் சில முற்றங்களுக்குள் நுழைந்து, எங்களைப் பின்தொடர்ந்தவர்களை ஏமாற்றிவிட்டு, ரூம்யாண்டிஸிவ் வீட்டை அடைந்தோம். என் பழைய நண்பர் விட்மேயர் தம்பதிகளுடன் அந்த இரவைக் கழித்தோம். பிறகு, ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு, விளாதிமிர் இலிச் வசித்த வீட்டுப் பக்கமாகப் போய்வந்தோம். வீட்டுக்கு வெளியில் அப்பொழுதும்கூட ஒற்றர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பிறகு அந்த வீட்டுக்கு நாங்கள் திரும்பிச் செல்லவில்லை. வீட்டுக்காரிக்குக் கொடுக்கவேண்டிய வாடகைப்பணத்தைக் கொடுத்துவிட்டு, இலிச்சினுடைய சாமான்களை எல்லாம் ஒரு பெண்ணை அனுப்பி எடுத்துவர ஏற்பாடு செய்தோம்.

அப்பொழுது நான் மத்திய கமிட்டியின் காரியதரிசியாக இருந்துவந்தேன். ஆகவே இந்த வேலையில் நான் அதி மும்முரமாக ஈடுபட்டேன். இன்னொரு காரியதரிசி மைக்கோப் ஸெர்ஜியெவிச் வீன்ஸ்டீன். எனக்கு உதவிபுரிபவளாக வெரா ரூடல்ப்நோவா மென்ஸின்காயா இருந்தாள். இதுதான் எங்கள் காரியாலயம். மைக்கேல் ஸெர்ஜியேவிச் ராணுவ வேலைகளில் தம் கவனத்தை அதிகமாகச் செலுத்திவந்தார்; ஸிக்கிடினின் யோஜனைகளை நிறைவேற்றுவதில் அவர் தீவிரமாக ஈடுபட்டார். கமிட்டிகளுடனும் தனிப்பட்டவர்களுடனும் தொடர்பு வைத்துக்கொள்வதிலும் அவர்களுக்குப் 'போட்டிகள் ஏற்பாடு செய்து கொடுப்பதிலும் அவர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வதிலும் நான் கவனம் செலுத்தி வந்தேன். அன்று மத்திய கமிட்டி எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான முறையில் வேலை செய்து வந்தது என்பதைச் சித்தரிப்பது கஷ்டம். மத்திய கமிட்டிக் கூட்டங்களுக்கு நாங்கள் போகவே இல்லை; எங்களைக் கட்டுப்படுத்துவதற்கு யாரும் இல்லை. கூட்ட நடவடிக்கைகளைக் குறிப்புகள் எடுப்பதும் இல்லை.

தீப்பெட்டிகளிலும் பைண்டு செய்த புத்தகங்களிலும் இன்னும் இதர இடங்களிலும் ரகசிய விலாசங்களை நாங்கள் வைத்துக்கொண்டோம்.

எதையும் நினைவுபடுத்தித்தான் செய்ய வேண்டியது இருந்தது. ஏராளமானவர்கள் வந்து எங்களைச் சூழ்ந்துகொள்வார்கள். அவர்களுக்குத் தேவையானவற்றை எல்லாம்—புத்தகங்கள், அனுமதிச்சீட்டுகள், யோசனைகள், போதனைகள்—ஆகிய அனைத்தையும் நாங்களே செய்தாக வேண்டும். எங்களை யாரும் கட்டுப்படுத்தாத நிலையில், 'எங்கள் இஷ்டம்போல்' எங்கள் காரியங்களை நாங்கள் செய்துவந்த நிலையில், இந்த வேலைகளை எல்லாம் நாங்கள் எவ்வாறு சமாளித்தோம் யாவற்றையும் எவ்வாறு ஒழுங்காக வைத்திருந்தோம் என்பதைத் தற்பொழுது கற்பனை செய்வதுகூடச் சிரமம். வழக்கமாக விளாதிமிர் இலிச்சைச் சந்திக்கும் சமயங்களில் யாவற்றையும் அவரிடம் நான் விவரமாகக் கூறிவிடுவேன். மிக மிக முக்கியமான காரியங்களுக்காக வருகிற முக்கியமான தோழர்களை நாங்கள் நேரடியாக மத்திய கமிட்டி அங்கத்தினர்களிடம் அனுப்பிவிடுவோம்.

சர்க்காருடன் மோதவேண்டிய நாள் நெருங்கி வந்தது. ராணுவம் நடுநிலைமை வகிக்காது, வகிக்கக் கூடாது என்று புதுவாழ்வில் விளாதிமிர் இலிச் பகிரங்கமாக எழுதினர். நாடு முற்றிலும் ஜனங்கள் ஆயுதபாணிகளாக வேண்டும் என்றும் எழுதினர். நவம்பர் மாதம் 26-ம் தேதியன்று குருஸ்டாலிவ் நோஸார் கைது செய்யப்பட்டார். தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை டிராட்ஸ்கி ஏற்றுக்கொண்டார். டிசம்பர் மாதம் இரண்டாம் தேதியன்று, சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரிப்பாக்கிகளைக் கொடுக்க வேண்டாம் என்று சோவியத்து ஒரு அறிக்கை வெளியிட்டது. இந்த அறிக்கைகளைப் பிரசுரித்ததற்காக, புதுவாழ்வு உள்பட எட்டுப் பத்திரிகைகளை டிசம்பர் மாதம் மூன்றும் தேதி வெளியிடக் கூடாது என்று தடுத்துவிட்டனர். டிசம்பர் மாதம் மூன்றும் தேதி வழக்கம்போல ஆசிரியர் குழாத்தில் ஒருவரைச் சந்திக்கச் சென்றேன். சட்டவிரோதமான புத்தகங்களையும் தஸ்தாவேஜுகளையும் கொண்டு சென்றிருந்தேன். பத்திரிகை விற்பவர் ஒருவர் வாயிற்படியில் என்னைத் தடுத்து நிறுத்தினர். பிற்போக்குப் பத்திரிகையின் பெயரான நோவே ரெரிமியா என்பதை உரக்கக் கூவினர். இப்படி உரக்கச் சத்தம் போட்டுக்கொண்டே இருந்த அவர் மெதுவாக, "காரியாலயத்தில் சோதனை நடக்கிறது" என்று என்னிடம் சொன்னர்; இந்த நிகழ்ச்சியை நான் விளாதிமிர் இலிச்சிடம் கூறினபொழுது, "ஜனங்கள் நம்மை ஆதரிக்கிருர்கள்" என்று இதற்கு அவர் பதில் சொன்னர்.

டிசம்பர் மாத ஆரம்பத்தில் தாமர்பொர்ஸில் மகாநாடு நடந்தது. இந்த மகாநாட்டின் குறிப்புகள், அந்தோ! பாதுகாக்கப்படாமல் போயின! புரட்சி அதன் உச்சநிலையை அடையப்போகிறது. ஒவ்வொரு தோழரும் உற்சாகவயப்பட்டு, போராடத் தயாராக இருந்தனர். இடைவேளை நேரங்களில் நீங்கள் சுடப் பழகிக் கொண்டோம். தீப்பந்த வெளிச்சத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஒரு நாள் மாலை நாங்கள் சென்றேம். அந்தக் கூட்டத்தில் காணப்பட்ட வெற்றி மனேபாவம், பிரதிநிதிகளின் மனேபாவத்தை முற்றுமே பிரதிபலிப்பதாக இருந்தது. எந்தப் பிரதிநிதியும் அந்த மகாநாட்டை மறக்க முடியாது. லோஸோவஸ்கி, பரான்ஸ்கி, யாரோஸ்லாவஸ்கி ஆகியோர் அந்த மகாநாட்டுக்கு வந்திருந்

தார்கள். மகாநாட்டில் அந்தத் தோழர்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் உணர்ச்சியூட்டுவனவாய் இருந்த காரணத்தால்தான் அந்தத் தோழர்களைப்பற்றிய நினைவு எனக்கு இருக்கிறது.

போல்ஷ்விக்குகள் மட்டுமே தாமர்பொர்ஸ் மகாநாட்டில் கலந்துகொண்டனர். ஆயுதம் தாங்கிப் புரட்சியை உடனே நடத்த வேணும் என்று அந்த மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆயுதம் தாங்கின புரட்சி மாஸ்கோவில் அந்தச் சமயம் வெகு மும்முரமாக நடைபெற்றுக்கொண் டிருந்தது. ஆகவே, காங்கிரஸை வெகு குறுகிய காலத்துக்குள் முடிக்க வேண்டியதாயிற்று. ஸெமினுவ் படை மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்ட சமயத்தில்தான் நாங்களும் மாஸ்கோ திரும்பியதாக ஞாபகம். ஒரு விஷயம் மட்டும் என் நினைவில் இருக்கிறது. முகத்தில் கவலை தேங்கி நிற்க, ஸெமினுவ் படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவன் டிரினிட்டி மாதாகோவிலுக்குப் பக்கத்தில் நடந்து கொடுத்துக்கொண் டிருந்தான். அவனுக்கு அருகில் இளம் தொழிலாளி ஒருவன் கையில் தொப்பியை எடுத்து வைத்துக்கொண்டு, எதையோ செய்யும்படி உணர்ச்சிபூர்வமாக அவனை வேண்டினுன். தொழிலாளர்களை எதுவும் செய்யாதீர்கள் என்று சிப்பாயியைத் தொழிலாளி வேண்டுகிறுன் என்பதையும் சிப்பாய் அதற்கு இணங்காமல் இருக்கிறுன் என்பதையும் அவர்களின் முகங்கள் அறிவித்தன.

மாஸ்கோ தொழிலாளர் நடத்தும் இந்தப் போராட்டத்தைப் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் ஆதரிக்க வேண்டும் என்று மத்திய கமிட்டி வேண்டியது. ஆனுல் ஒன்றுபட்ட செயல் சாத்தியப்படவில்லை. உதாரணமாக, பண்படாத மாஸ்கோவஸ்கி ஜில்லா செயல் ஆற்றிற்று; ஆனுல் வளர்ச்சியடைந்த நெவ்ஸ்கை ஜில்லா ஒன்றுமே செயல்படவில்லை. கிளர்ச்சியைத் தூண்டிவிட்ட ஸ்டானிஸ்லோவ்வஸ்கி இதை எண்ணி ஆத்திரத்துடன் சபித்தது, எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. இதனுல் பெரிதும் சோர்வடைந்த அவர் தொழிலாளரின் புரட்சி சக்தியையே சந்தேகிக்க ஆரம்பித்தார். அதற்கு முன் நடந்த வேலைநிறுத்தங்களால் அந்தத் தொழிலாளர்கள் எவ்வளவு தளர்ந்திருந்தார்கள் என்பதை அவர் அசட்டைசெய்தார். ஸாரிஸத்துடன் முடிவான போர் நடத்த ஸ்தாபனரீதியாக போதிய அளவு அவர்கள் ஒன்றுபடவில்லை என்பதையும் தங்களிடம் ஆயுதபலம் இல்லை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். இது முக்கியமான விஷயம் என்பதை அவர் மறந்துவிட்டார். ஜீவ-மரணப் போர் என்பதை மாஸ்கோச் சம்பவங்களிலிருந்து அவர்கள் நன்ருகத் தெரிந்துகொண்டார்கள்.

பீட்டர்ஸ்பர்க்கிலும்

பின்லாந்திலும்

(1906—1907)

டிசம்பர் எழுச்சியை அடக்கிவிட்டனர். கிளர்ச்சிக்காரர்களை நசுக்கச் சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டனர்.

தொழிலாளர் வர்க்கமும் இன்றைய நிலையில் அதன் கடமையும் என்று விளாதிமிர் இலிச் 1906-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி ஒரு கட்டுரை எழுதினர்; அதில் அன்று காணப்படும் நிலைமையைக் கீழ்வருவமாறு வருணித்து இருக்கிறர்:

"உள்நாட்டுக் கலகம் குமுறுகிறது; அரசியல் வேலைநிறுத்தம் தளர்ந்து பின்னடைந்துவிட்டது; அதனுடைய போக்கு பழைய காலப் போக்காக ஆகிவிட்டது. உதாரணமாக, தளர்ந்த, வலிமை இழந்த பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களால் டிசம்பர் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. அதற்கு மாருக, பொதுவாக இயக்கம் தற்காலிகமாகப் பிற்போக்குவாதிகளால் நசுக்கப்பட்டது என்ருலும், நிச்சயமாக இயக்கத்தின் நிலை சிறிது உயர்ந்திருக்கிறது. துபாஸாவின் துப்பாக்கி ரவைகள் இதுவரை இல்லாத அளவு ஜனங்களைப் புரட்சிகரமாக மாற்றியிருக்கிறது. அடுத்தது என்ன? யதார்த்த நிலையை நாம் நேருக்கு நேரே காண்போம். சமீபத்தில் போராட்டத்தினல் ஏற்பட்ட அனுபவங்களையும் சொரூபங்களையும் கிரகித்து, அதன் அடிப்படையில் நமது வேலைகளுக்குப் புது உருவம் கொடுக்கும் பணியைத் தற்பொழுது நாம் மேற்கொள்ள வேண்டும். இயக்கத்தின் மிக முக்கியமான கேந்திரங்களில் நமது சக்திகளைத் தயார்ப்படுத்தும் வேலையையும் நாம் மேற்கொள்ள வேண்டும்."

மாஸ்கோத் தோல்வி இலிச்சுக்குப் பெரிய அனுபவமாக அமைந்தது. தொழிலாளர்களுக்குப் போதிய ஆயுதம் இல்லை என்பதும், ஸ்தாபனம் பலவீனமுற்று இருந்தது என்பதும் பீட்டர்ஸ்பர்க்கும் மாஸ்கோவுக்கும் இடையில் இருந்த தொடர்பு மிகமிகச் சொற்பம் என்பதும் இந்தப் போராட்டத்தினல் தெளிவுபட்டன. தன் மூத்த சகோதரி இலிச்சின சொன்ன கதையை இலிச் மிகவும் கவனமாகக் கேட்டார் என்பது எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. மாஸ்கோ ரயில்வே ஸ்டேஷனில் அவர் ஒரு பெண் தொழிலாளியைச் சந்தித்தாராம்.

"பீட்டர்ஸ்பர்க்வாசிகளே! நீங்கள் காட்டிய ஆதரவுக்காக வந்தனம்! ஸெமினுவ் படையை அனுப்பிவைத்தீர்களே அதற்காக வந்தனம்!" என்று பீட்டர்ஸ்பர்க்வாசிகளை அந்தப் பெண் இடித்து உரைத்தாளாம்.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல விரும்புவதைப் போன்று விளாதிமிர் இலிச் கீழ்வருமாறு எழுதினர்:

> "பாட்டாளிமக்களின் தனிப்பட்ட செயல்களை முன்போலவே, சர்க்கார் எளிதில் அடக்கிவிடுவர்; தங்களுக்கு மிகச் சாதகமான நிலை இருப்பதால் உடனே பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களையும் போருக்கு அறைகூவி அழைக்கச் சர்க்கார் விரும்புவர்; இந்த ஆத்திரமூட்டுதலுக்குத் தொழிலாளர்கள் இரையாகிவிடக் கூடாது. அடுத்து, அகில ரஷ்ய ரீதியில் நடவடிக்கை எடுக்க, சுயேச்சையான முன் ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்."

1906-ம் வருடம் வசந்த காலத்தில் விவசாயிகள் புரட்சி செய்வார்கள் என்றும் இதன் எதிரொலி ராணுவத்திலும் இருக்கும் என்றும் இலிச் கருதினர். இதுபற்றி அவர் எழுதியதாவது:

> "புதிய, செயல் நிறைந்த, இயக்கத்தை உண்டுபண்ண நாம் உறுதியுடனும் அனுஷ்டானரீதியாகவும் வேலை செய்ய வேண்டும். அதிக சிரத்தையுடனும் விடாமுயற்சியுடனும் முறையாகவும் அந்த வேலையில் ஈடுபட வேண்டும். வேலைநிறுத்தப் போராட்டத்தால் தளர்ந்து கிடக்கும் பாட்டாளி மக்களின் சக்திகளைக் கூடுமான அளவு தொந்தரவு செய்யக் கூடாது."
>
> "தமது கடமைகள் எவை என்பதைக் கட்சி தெளிவாகத் தெரிந்து கொள்ளட்டும். பாட்டாளி மக்களுடன் இணங்கி இணைந்துகொள்ள விரும்புகிற புதிய சக்திகள் அனைத்தையும் நாம் ஒன்று திரட்ட வேண்டும்; நவம்பர் டிசம்பர் ஆகிய இரு மாதங்களிலும் நமக்குக் கிடைத்துள்ள மகோன்னதமான அனுபவங்களை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மீண்டும் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ள, கொடுங்கோன்மை உண்டுபண்ணி இருக்கும் நிலைகளுக்குத் தகுந்தவாறு நம்மை நாம் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும். அவசியமான இடங்களில் மீண்டும் நாம் தலைமறைவாக இருந்து வேலை செய்யவேண்டும்."

நாங்கள் தலைமறைவாக வேலைசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது; ரகசிய ஸ்தாபனங்களைப் புனர்நிர்மாணம் செய்து, ஒன்றுபடுத்தி அமைத்தோம். வேலைகளைப் பற்றியும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றியும் ரஷ்யாவின் மூலை முடுக்குகளிலிருந்து எல்லாம் வந்திருந்த தோழர்களிடம் நாங்கள் விவாதித்தோம். முதலில் குறிப்பிட்ட இடத்துக்குத் தோழர்கள் வந்தார்கள்; அங்கே நானும் வீரா ரூடால்போல்னுவும் அவர்களைச் சந்தித்தோம்; அல்லது மைக்கேல் ஸெர்கேயாவிச் அவர்களைச் சந்தித்தார். நெருங்கின, மதிப்புவாய்ந்த தோழர்களை அழைத்துச் சென்று இலிச்சைச் சந்திக்க ஏற்பாடு செய்தேன். ராணுவ விஷயங்களாய் இருப்பின் நிக்கிடினைச் சந்திக்க மைக்கேல் ஸெர்கேயாவிச்

ஏற்பாடு செய்தார். தோழர்களைச் சந்தித்துப் பேசப் பல இடங்கள் இருந்தன டேராடொவாய்ரெஸினின் பல் வைத்தியசாலையில் சில சமயங்கள், லாரெண்டிவா என்ற பல்வைத்தியர் வீட்டில் சில சமயங்கள், முன்னேற்றம் புத்தகசாலையில் சில சமயங்கள், இல்லையேல் அனுதாபிகளின் வீடுகளில் நாங்கள் சந்தித்தோம்.

இரண்டு சம்பவங்கள் மட்டும் என் நினைவில் இருக்கின்றன. ஒரு நாள் புதிதாக வரும் தோழர்களைச் சந்திக்க நானும் வீரா ரூடால்போல்னு மென்ஷின்ஸ் கயாவும் ஏற்பாடு செய்தோம். முன்னேற்றம் புத்தகசாலையில் சந்திப்பது என ஏற்பாடு. இதற்காக அங்கே ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டிருந்தது. ஜில்லாக் கமிட்டியின் ஊழியரோ அல்லது அவரைப் போன்ற வேறு ஒருவரோ ஏராள மான அறிக்கைகளை அள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தார். இன்னொருவர் தமது முறை வருவதை எதிர்பார்த்துக் காத்து இருந்தார். திடீரெனக் கதவைத் திறந்துகொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உள்ளே எட்டிப் பார்த்தார்; "ஆஹா" என்று சொல்லிக்கொண்டே எங்கள் அனைவரையும் உள்ளே வைத் துக் கதவைச் சாத்தி அவர் பூட்டிவிட்டார். இனி என் செய்வது? ஜன்னல் வழியாகக் கீழே இறங்கிவிடுவது அவ்வளவு நல்லதல்ல; ஆகவே ஒன்றும் செய்யத் தோன்றாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நாங்கள் இருந்தோம். அறிக்கைகளையும் ஏனைய சட்டவிரோதமான பிரசுரங்களையும் எரிக்க முடிவு செய்து அவற்றை நாங்கள் எரித்தோம். கிராமங்களுக்கு ஜனரஞ்சகமான புத்த கங்களை வாங்கிச் செல்லும் பொருட்டு வந்திருப்பதாக அவர்களிடம் சொல்லு வது என நாங்கள் முடிவுசெய்துகொண்டோம். அவர்கள் வந்ததும் இதே தகவலைத்தான் அவர்களிடம் சொன்னோம். இன்ஸ்பெக்டர் எங்களை ஏளனமாக ஒரு முறை பார்த்தார்; ஆயினும் எங்களை அவர் கைது செய்யவில்லை. எங்க ளுடைய பெயர்களையும் விலாசங்களையும் அவர் குறித்துக்கொண்டு சென்றார். நாங்கள் கொடுத்த பெயர்களும் விலாசங்களும் பொய்யானவை.

இன்னொரு இடத்திலும் பிடிபடாமல் நான் தப்பித்துக்கொண்டேன். முதன் முதலாக லாவ்ரெண்டிவோ வீட்டுக்கு ஒருவரைச் சந்திப்பதற்காக நான் சென்றேன். நம்பர் 32 என்பதை அவர்கள் தவறுதலாக 33 என்று என்னிடம் சொல்லி அனுப்பினார்கள். நான் கதவை அணுகினேன்; பெயர் பொறித்த பலகை கதவிலிருந்து அகற்றப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்; ஏதோ நூதனமான சதி வேலையாக இருக்கும் போலும் என்ற எண்ணத்துடன் நான் அங்கேயே நின்றேன்; யாரோ ஒரு அதிகாரியின் வேலைக்காரன் ஒருவன் வந்து கதவைத் திறந்தான். ஏராளமான ரகசிய விலாசங்களுடனும் பிரசுரங் களுடனும் சென்றிருந்த நான் அவனை எதுவுமே விசாரியாமல் தாழ்வாரத்தில் நடந்தேன். பேய்போல் வெளுத்துப்போயும் பயந்து நடுங்கியவாறும் சென்ற என்னைக் காவல்காரன் இடைமறித்தான்.

அங்கேயே நின்றுகொண்டு "இன்று வைத்தியர் யாரையும் பார்க்க மாட் டாரா? எனக்குத் தாங்க முடியாத பல் வலி" என்று நான் சொன்னேன்.

இதைக் கேட்டதும் தயங்கியவாறே அந்தக் காவல்காரன் "இப்பொழுது கர்னல் வீட்டில் இல்லை" என்றான்.

"எந்தக் கர்னல்?" என்று நான் அவனைப் பதிலுக்கு வினவினேன்.

" கர்னல் ரிமான் "

மாஸ்கோ எழுச்சியை அடக்கினவரும் மாஸ்கோ காஸான் ரயில்வேத் தொழிலாளர்களைப் பழிவாங்கினவரும் ஸெமினுவ் படையைச் சேர்ந்தவருமான கர்னல் ரிமானுடைய பங்களாவுக்குள் நான் தவறுதலாக நுழைந்துவிட்டேன்.

இதன் காரணமாகத் தன் உயிருக்கு ஆபத்து நேரும் என்று பயந்த கர்னல் ரிமான், தன் பெயர் பொறித்திருந்த பலகையைக் கதவிலிருந்து அகற்றச் செய்துவிட்டார். நான் தவறுதலாக இவருடைய பங்களாவுக்குள் நுழைந்தது மல்லாமல், அனுமதியில்லாமல் தாழ்வாரம்வரைகூடச் சென்றுவிட்டேன்.

" அப்படியானுல் நான் தவறுதலாக இந்த இடத்துக்கு வந்துவிட்டேன். பல் வைத்தியரைப் பார்க்கும் பொருட்டு அல்லவா நான் வந்தேன்?" என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து நழுவினேன்.

மிகவும் சஞ்சலமுற்று இரவில் தூக்கம் வராமல் இலிச் பல இரவுகள் தவித்தார்; அதனுல் அவர் அதிகம் சோர்ந்து போனுர். பொதுவாக அவர் மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டார். எங்களுக்கு அபயம் அளித்த வீட்டுக்காரர்களின் மரியாதை நிறைந்த பணிவிடை அவரைக் கவலைக்கு உள்ளாக்கிற்று. வீட்டிலிருந்தோ அல்லது வாசகசாலையிலிருந்தோ வேலை செய்வதையே அவர் பெரிதும் விரும்பினுர். ஆகவே இங்கே அடிக்கடி சூழ்நிலைக்குத் தக்கவாறு தன்னைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

வியன்னு ரெஸ்டாரண்டில் அவரை நான் சந்திப்பது வழக்கம். மற்றவர்கள் முன்னிலையில் பேசுவது சௌகரியமாக இராதாகையால், சிறிது நேரம் மட்டுமே அங்கே இருப்போம். அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்போம். பிறகு அங்கிருந்து ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு ஹோட்டலுக்குப் போவோம்; பெரும்பாலும் நிக்கலாயெவ் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள ஹோட்டலுக்குத்தான் சொல்வோம்; அங்கே ஒரு தனி அறையை அமர்த்திக்கொண்டு சாப்பாடு கொண்டுவரச் சொல்வோம். ஒரு நாள் யூசுப் என்பவரை வீதியில் சந்தித்தோம், வண்டியை நிறுத்தி அவரையும் வண்டியில் ஏறிக்கொள்ளும்படி சொன்னேம். வண்டிக்காரருக்குப் பக்கத்தில் அவர் உட்கார்ந்துகொண்டார். அந்த இடம் வசதியாக இருக்கிறதோ இல்லையோ என்று இலிச் பெரிதும் கவலைப்பட்டார்; யூசுப்போ தான் கிராமத்தில் வளர்ந்தவர் என்றும் இதைவிடச் சிறு வண்டியிற்கூட வண்டிக்காரருக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டு தன்னுல் வசதியாகப் பிரயாணம் செய்ய முடியும் என்றும் சிரித்துக்கொண்டே பதில் சொன்னுர்.

ஓய்வும் மனஅமைதியும் இல்லாத இந்த வாழ்க்கை இலிச்சுக்கு அலுப்பைக் கொடுத்தது. ஆகவே இருவரும் ஒன்ருக வசிப்பது என முடிவு செய்தோம். ஒரு மாதாகோவிலுக்கு எதிரே இருந்த வீட்டில், பண்டாலி மானுவோஸ்கயா தெருவில் வசித்தோம். அந்த வீட்டுக்காரி "பிளாக் ஹண்ரட்" என்னும் பிற்போக்குக் கும்பலின் அனுதாபி.

அந்தக் காலத்தில் இலிச் நிகழ்த்தின சொற்பொழிவுகளில் நிப்போவிச்சின் வீட்டில், ஜில்லா பிரசாரர்களிடையே அவர் நிகழ்த்தின சொற்பொழிவு எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. கிராமப் பிரசினைகளைப்பற்றி அன்று அவர் பேசினுர். வெளி நெவ்ஸ்கை ஜில்லாவிலிருந்து வந்திருந்த நிக்கோலாய் என்பவர்

அவரைச் சில கேள்விகள் கேட்டதும் எனக்கு நினைவு இருக்கிறது. அந்தச் சமயம் நிக்கோலாய் கேள்வி கேட்ட முறையும் அவர் பேசின தோரணையும் எனக்குப் பிடிக்கவில்லை. கூட்டம் முடிந்த பிறகு நிக்கோலாய் எப்படிப்பட்ட ஊழியர் என்று நெவ்ஸ்கை கேட் ஜில்லா நிர்மாணகர் "சின்ன மாமாவை" நான் கேட்டேன். அவர் சாமர்த்தியசாலி என்றும் கிராமங்களுடன் நல்ல தொடர்பு உடையவர் என்றும் ஆனால் முறையாகப் பொதுஜன சேவை செய்ய அவரால் முடியாது என்றும் சிறிய தொழிலாளர் கூட்டங்களில் பரபரப்பை உண்டுபண்ண ஆற்றல் பெற்றவர் என்றும் அவர் என்னிடம் சொன்னார்.

1906-ம் வருடம் நிக்கோலாய், சுறுசுறுப்புள்ள கட்சி ஊழியராக விளங்கினார். பிற்போக்கு வீறுகொண்டு எழுந்த காலங்களில் அவர் சர்க்காரின் ஏஜண்டாக மாறிவிட்டார்; எனினும் அதைச் சகிக்க முடியாமல் தற்கொலைசெய்து கொண்டு இறந்துபோனார். ஏழை மக்களின் சகல பகுதிகளுக்கும் ஊடுருவிச் செல்லும் தோழர்கள் இனத்தைச் சேர்ந்தவர் நிக்கோலாய். கிளர்ச்சி செய்வதற்காக மலிவான ஹோட்டல் ஒன்றுக்கு அவர் சென்றது இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது.

அந்தக் காலத்தில் துணிச்சல் நிறைந்த இளைஞனாக இருந்த தோழர் கிரிலென்கோ பாப்டிஸ்டுகளின் கூட்டத்துக்குச் சென்றார். அவர் அடிபடாமல் ஒருவாறு அங்கிருந்து தப்பினார். ஜெர்ஜி வோட்டின்ஸ்கையும் அடிக்கடி பலவிதமான காரியங்களில் ஈடுபட்டுத் தொல்லையில் சிக்கிக்கொள்வார்.

இவர்கள் எல்லோரும் இலிச்சைத் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். லாயர் செர்குலகுஷ் வீட்டில் நடந்த கூட்டத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பதற்காக ஒரு முறை இலிச் சென்றார். தன்னை அவர்கள் தொடர்ந்து வருவதைக் கண்ட இலிச் அன்று இரவு வீடு திரும்பக் கூடாது என்று முடிவு செய்தார். நானோ ஜன்னல் அருகே அமர்ந்து அவர் திரும்புவதை எதிர்பார்த்து இரவு முழுதும் காத்திருந்தேன். பொழுது புலர்ந்தும் அவர் திரும்பாத காரணத்தால், அவரைக் கைது செய்துவிட்டார்கள் போலும் என்று முடிவு செய்தேன். கூட்டுறவு இயக்கத்தில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு பிரபலமாய் இருந்த பாக் என்பவரின் உதவியால் தன்னைப் பின்பற்றிவந்த ஒற்றர்களின் பிடியிலிருந்து இலிச் தப்பித்துக்கொண்டு, பின்லாந்துக்குப் போய்விட்டார்; ஸ்டாக்ஹோம் காங்கிரஸ்வரை அவர் அங்கேதான் இருந்துவந்தார்.

அங்கே இருந்தபொழுது, ஏப்ரல் மாதத்தில் காடெட்டுகளின் வெற்றியும் தொழிலாளர் கட்சியின் கடமைகளும் என்னும் பிரசுரத்தை எழுதினார். ஐக்கிய காங்கிரஸுக்கான தீர்மானங்களைத் தயார் செய்தார்; அதைப்பற்றி விவாதிப்பதற்காக அவர் பீட்டர்ஸ்பர்க்குக்கு வந்தார். விட்டிமேர் வீட்டிலிருந்த தேகாப்பியாசசாலையில் இது நடைபெற்றது. வகுப்புகள் ஒன்றிலே கூட்டம் நடைபெற்றது.

இரண்டாவது காங்கிரஸுக்குப் பிறகு போல்ஷ்விக்குகளும் மென்ஷ்விக்குகளும் இந்தக் காங்கிரஸில்தான் ஒன்றாகக் கூடப் போகின்றனர். சில மாதங்களாக தங்களின் போக்கை மென்ஷ்விக்குகள் தெளிவாகப் புலப்படுத்தி வந்திருக்கிறார்களாயினும், புரட்சியின் புதிய அலை கொந்தளித்துவரும் இந்தச் சமயத்தில்,

மென்ஷ்விக்குகளைச் சரிப்படுத்தி, போல்ஷ்விக்குகளின் போக்குக்கு இணக்கிவிட லாம் என்று இலிச் கருதினர்.

இந்தக் காங்கிரஸுக்கு நான் தாமதித்தே செல்ல நேர்ந்தது. முதலாவது காங்கிரஸுக்கு முன் ஏற்பாடுகள் செய்த காலத்தில் எனக்கு அறிமுகமான துஸ்ஸாப்ஸ்கையுடனும் கிளாடியா திமோபியீவ்ன ஸ்வர்டலோவுடனும் நான் இந்தக் காங்கிரஸுக்குச் சென்றேன். ஸ்வர்டலோவும் இந்தக் காங்கிரஸுக்கு வருவதாக இருந்தார். ஆனல் யூரல் பிரதேசத்தில் அவருக்கு இருந்த அமோக மான செல்வாக்கின் காரணமாக அவரை அங்குள்ள தொழிலாளர்கள் போக விடவில்லை. காஸானிலிருந்து எனக்கு ஒரு மாண்டேட் இருந்தது. எனினும் ஒருசில ஓட்டுகள் குறைவாக இருந்தன. ஆகவே, அத்தாட்சிக் கமிஷன் எனக்கு ஆலோசனை கூறும் உரிமையை மட்டுமே வழங்கியது. அத்தாட்சிக் கமிஷனில் ஏற்பட்ட சிறிய அனுபவம் ஒன்று காங்கிரஸின் உண்மையான கட்டுக் கோப்பை வெளிப்படுத்திக் காட்டிவிட்டது; அதற்குள் பிளவுகள் இருக்கின்றன என்பது தெளிவாயிற்று.

போல்ஷ்விக்குகள் உறுதியான அணியின்கீழ் நின்றனர். புரட்சி தற்காலிக மாகவே தோல்வியடைந்துள்ளது என்ருலும், அது முன்னேறிச் செல்கிறது என்ற நம்பிக்கையால் அவர்கள் பிணைக்கப்பட்டு இருந்தனர்.

"சின்ன மாமா" எவ்வளவு சுறுசுறுப்புடன் இருந்தாள் என்பது எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. அவளுக்கு ஸ்வீடிஷ் பாஷை நன்ருகப் பேசத் தெரியும். ஆகவே, பிரதிநிதிகள் எல்லோருக்கும் வசதிகள் செய்துகொடுக்கும் பொறுப்பு அவள்மீது விழுந்தது. ஐவான் ஐவாஞேவிச் ஸ்க்வோர்ட்ஸோவும் விளாதிமிர் அலெக்ஸாண்ட்ரோவிச் பாஸாராவும் தத்தம் கண்கள் பிரகாசிக்க, போராட்ட மனேநிலையில் இருந்ததும் எனக்கு நினைவு இருக்கிறது. பாஸா ராவிடம் அரசியல் உணர்ச்சி வலுவாக இருக்கிறது என்றும் போராட்ட உணர்வில் அவர் மூழ்கிவிடுகிருர் என்றும் அவரைப்பற்றி விளாதிமிர் இலிச் குறிப்பிட்டுள்ளார். தொழிலாளர்களின் மனேநிலையைப்பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருந்தபொழுது, ரிக்கோவ், ஸ்டரோயெவ், அலெக்ஸின்ஸ்கை ஆகி யோருக்கிடையே நடந்த தகராறும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. வோரோ ஸிலாவும் கே. ஸமோய்லோவாவும் காங்கிரஸுக்கு வந்திருந்ததும் எனக்கு நினைவு இருக்கிறது. இளமை மணம் கமழும் பின்கூறப்பட்ட இரு புனைபெயர்களும் ஐக்கிய காங்கிரஸுக்கு வந்திருந்த போல்ஷ்விக்குப் பிரதிநிதிகளின் நகைச் சுவையை எடுத்துக்காட்டுகின்றன. முன்னைக் காட்டிலும் அதிக ஐக்கிய பாவத் துடன், போல்ஷ்விக்குப் பிரதிநிதிகள் காங்கிரஸிலிருந்து திரும்பினர்.

முதலாவது டூமாவின் ஆரம்பக் கூட்டத்தன்று-ஏப்ரல் மாதம் 27ம் தேதி யன்று-வேலையற்ருேர் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது. வாய்டின்ஸ்கை இவர் களுக்கு மத்தியில் வேலை செய்தார். மே மாதம் முதல் தேதியன்று உற்சாக வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஏப்ரல் மாத இறுதியில் புதுவாழ்வுக்குப் பதிலாக அலை என்ற புதிய பத்திரிகை வெளிவந்தது. வாழ்க்கை முரசு என்ற போல்ஷ்விக் மாசிகையும் வெளிவர ஆரம்பித்தது. மீண்டும் இயக்கம் வளர ஆரம்பித்தது.

ஸ்டாக்ஹோம் காங்கிரஸிலிருந்து திரும்பின பிறகு நாங்கள் ஸபாவ்கான்ஸ் கைக்குச் சென்று குடியேறி வசித்தோம்; நான் பிராஸ்கோவியா ஓனேஜின் என்ற பாஸ்போர்டிலும் இலிச் செக்கியோட்ஸே என்ற பாஸ்போர்டிலும் வசித்தோம். அந்த வீட்டுக்குப் பெரிய முற்றம் ஒன்று இருந்தது; வசிப்பதும் சௌகரியமாக இருந்தது; ஆனால் ஒரே ஒரு தொல்லை மட்டும் இருந்துகொண்டே இருந்தது. எங்களுக்குப் பக்கத்து வீட்டில் யாரோ ஒரு சிப்பாய் வசித்தார். அவர், அடிக்கடி தன் மனைவியோடு உக்கிரமாகப் போராடினார்; அவளை அடித்தார்; கூந்தலைப் பற்றி, முன்னும் பின்னுமாகத் தாழ்வாரத்தில் இழுத்து அவளை இம்சித்தார்.

இதைத் தவிர்த்து இன்னொரு தொல்லையும் இருந்தது; வீட்டுக்குச் சொந்தக் காரி நல்லவள்தான்; இருந்தாலும் சதா கேள்விகள் கேட்டு அவள் நச்சரித்துக் கொண்டே இருந்தாள். ஓயாது இலிச்சின் சொந்தக்காரர்களைப்பற்றி விசாரித்த வண்ணம் இருந்தாள். அவர் நான்கு வயதுக் குழந்தையாக இருந்தபொழுதி லிருந்தே அவரைத் தமக்குத் தெரியும் என்றும் அப்பொழுது அவருடைய கூந்தல் கருமையாகவும் செழுமையாகவும் இருந்தது என்றும் கூறினாள்.

பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களுக்காக, ஐக்கிய காங்கிரஸைப்பற்றி இலிச் அறிக்கை ஒன்று தயார் செய்தார்; மிக முக்கியமான பிரசினைகள்மீது எழுந்த அபிப்பிராய பேதங்களை அவர் அதில் தெளிவாக்கி இருந்தார்.

> "விவாதச் சுதந்திரம் மாத்திர மல்ல நாம் வேண்டுவது; நாம் ஒற்றுமைப்பட்டுச் செயலாற்றுவதான் இப்போது வேண்டுவது" என்று அந்த அறிக்கையில் இலிச் எழுதி இருந்தார். "விவசாயிகளின் புரட்சிகரமான நட்வடிக்கைகளை ஆதரிப்பதிலும் குட்டி பூர்ஷ்வாக் களின் கற்பனைரீதியான திட்டங்களைக் குறைகூறுவதிலும் சமதர்ம ஜனநாயகவாதிகளிடையே அபிப்பிராய பேதமே கிடையாது. டூமா தேர்தல் சம்பந்தப்பட்டவரை ஒற்றுமைப்பட்ட செயல் அவசியமா கும். எங்கெங்கு தேர்தல் நடக்கிறதோ அங்கு எல்லாம் நாம் ஓட் போட வேண்டும் என்று காங்கிரஸ் தீர்மானித்து இருக்கிறது. தேர்தல் நடக்கும்பொழுது தேர்தலில் கலந்துகொள்வதைப்பற்றிக் கண்டித்து விமரிசனம் செய்யக் கூடாது. பாட்டாளி மக்கள் ஒன்றுபட்டுச் செய லாற்ற வேண்டும்."

மே மாதம் வெளிவந்த முன்னேற்றத்தில் இந்த அறிக்கை வெளிவந் திருக்கிறது.

மே மாதம் ஒன்பதாம் தேதி பனின அவுஸில் நடந்த பெரிய பொதுக் கூட்டத்தில், கார்போவ் என்னும் பெயரில் விளாதிமிர் இலிச் பேசினார்; ரஷ்யா வில் பகிரங்கமாகப் பேசின முதல் பொதுக் கூட்டம் இதுதான். சகல ஜில்லாக் களிலிருந்தும் தொழிலாளர்கள் வந்து மண்டபம் முழுதும் நிறைந்திருந்தனர். போலீஸார் அங்கே விஜயம் செய்யாதது குறிப்பிடத்தக்க விஷயம். கூட்டம் ஆரம்பமாகும் முன் அங்கே நடமாடின இரண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் எங்கேயோ சென்று மறைந்துகொண்டனர். "யாராவது அவர்கள்மீது விஷக் கிருமித் தூளைத் தூவி இருக்கக் கூடும்" என்று கூறினர் ஒரு வாயாடி.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கின காடெட் ஒகோரோஷனிக்காவ், கார்போவ் என்பவரைப் பேசுமாறு அழைத்தார். கூட்டத்தின் மத்தியில் நான் நின்றுகொண் டிருந்தேன்; இலிச் மிகுந்த பரபரப்புடன் காணப்பட்டார். வெளிறின முகத்துடன் ஒரு நிமிடம் மௌனமாக நின்றார்; குருதியோட்டம் முழுதும் இதயத்திலே இடம் பெற்றுவிட்டதாக அவருக்குத் தோன்றியது. பேச்சாளரிடையே காணப்பட்ட இந்தப் பரபரப்பு கூட்டம் முழுதும் பரவியது. உடனே பலமான கரகோஷம் ஆரம்பமாயிற்று; கட்சி அங்கத்தினர்கள் இலிச்சை அடையாளம் தெரிந்துகொண்டனர். எனக்குப் பக்கத்தில் நின்ற தொழிலாளி ஒருவர் கிளர்ச்சி வயப்பட்டு நின்றார்; பேச்சாளர் யார் என்பது அவருக்குச் சரியாகத் தெரியவில்லை. "பேசப்போகிறவர் யார்? பேசப்போகிறவர் யார்?" என்று உரத்த குரலில் அவர் கேட்டார். ஒருவரும் அவருக்குப் பதில் சொல்லவில்லை. கரகோஷம் நின்றது. இலிச்சின் பேச்சு முடிந்த பிறகு, அங்கே இருந்தவர்கள் உற்சாகக் கடலில் மூழ்கினர். இனி வருவது இறுதிப் போராட்டமே என்ற எண்ணம் அங்கே இருந்தவர்கள் அனைவர் உள்ளத்திலும் அந்தச் சமயம் நிரம்பி வழிந்தது.

தாங்கள் அணிந்திருந்த சிவப்புச் சட்டைகளைக் கிழித்து அவர்கள் கொடிகளாக உபயோகித்தனர். புரட்சிப் பாடல்களைப் பாடிக்கொண்டு தத்தம் ஜில்லாக்களுக்கு அவர்கள் திரும்பிச் சென்றனர்.

அது மே மாதம்; இரவு பிரகாசமாக இருந்தது; பீட்டர்ஸ்பர்க்கில் அந்த இரவு உற்சாகம் அளிப்பதாய் இருந்தது. போலீஸார் வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்தோம்; அவர்கள் வரவில்லை. கூட்டம் முடிந்த பிறகு, அன்று இரவை, இலிச், திமித்திரி இலிச் லெஷென்கோ வீட்டில் கழித்தார்.

அந்தப் புரட்சி நடைபெற்ற காலத்தில் வேறு பெரிய பொதுக்கூட்டங்களில் இலிச்சால் பேச முடியவில்லை.

மே மாதம் 24-ம் தேதியன்று அவர்கள் அலை காரியாலயத்தை மூடினர்; மே மாதம் 26-ம் தேதி நாங்கள் மீண்டும் முன்னேற்றம் பத்திரிகையைத் தொடங்கினோம்; ஜுன் மாதம் பதினோன்காம் தேதிவரை அந்தப் பத்திரிகை நடந்தது.

பிறகு, ஜுன் மாதம் 22-ம் தேதி எதிரொலி என்னும் ஒரு போல்ஷ்விக் பத்திரிகையை நாங்கள் தொடங்கினோம். ஜுலை மாதம் ஏழாம் தேதிவரை அந்தப் பத்திரிகை நடந்தது. ஜுலை மாதம் எட்டாம் தேதியன்று ஸ்டேட் டூமா கலைக்கப்பட்டது.

வார்ஸா சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின், ஜுன் மாத இறுதியில் ரோஸா லக்ஸம்பர்க் பீட்டர்பர்க்குக்கு வந்தாள். விளாதிமிர் இலிச்சும் பிரபல போல்ஷ்விக்குகளும் அவளைச் சந்தித்துப் பேசினர். "பாப்பா ரோத்" என்ற வயது முதிர்ந்த வீட்டுக்காரர் ஒருவர், தமது வீட்டை இந்தக் கூட்டம் நடத்தத் தந்து உதவினர். அவருடைய புதல்வி நெவ்ஸ்கை கேட் ஜில்லாவில் என்னுடன் சக-ஆசிரியையாக இருந்தவள். பிற்காலத்தில் நானும் அவளும் ஒரே சிறையில் இருந்தோம். தம்மால் இயன்ற வழிகளில் எல்லாம் இந்த வயோதிகர் எங்களுக்கு உதவியாக இருந்தார். காலியாக இருந்த ஒரு பெரிய

அறையைக் கூட்டம் நடத்த ஒதுக்கித் தந்தார்; கூட்டம் அதிக ரகசியமாக நடை பெற வேண்டும் என்பதற்காக, ஜன்னல்களுக்கு எல்லாம் வெள்ளை அடிக்க உத்தரவிட்டார். காவல்காரர்களின் கவனத்தை இது ஆகர்ஷித்துவிட்டது. உண்மையான நிலைகளையும் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகளையும் நாங்கள் கூட்டத்தில் விவாதித்தோம். கூட்டம் முடிந்த பிறகு ரோஸா லக்ஸம்பர்க் பின்லாந்துக்குத் திரும்பினாள். பிறகு அங்கிருந்து வெளிநாடுகளுக்குப் போய் விட்டாள்.

மே மாதத்தில் இயக்கம் வளர ஆரம்பித்தது; டூமா சட்டசபை விவசாயி களின் மனோநிலையைப் பிரதிபலிப்பதாய் இருந்தது. இலிச் இதுபற்றி அதிகக் கவனம் செலுத்தி ஆராய்ந்தார். இந்தக் காலத்தில் கீழ்வரும் கட்டுரைகளை அவர் எழுதினார் :

1. ஸ்டேட் டூமாவில் தொழிலாளர் பகுதி.
2. ரஷ்ய சமதர்ம-ஜனநாயக-தொழிலாளர் கட்சியும் விவசாயிகள் அல்லது தொழிலாளர்கள் பகுதியும்.
3. டூமாவில் நிலப் பிரசினை.
4. நிலமும் இல்லை, சுதந்திரமும் இல்லை.
5. சர்க்கார், டூமா, ஜனங்கள்.
6. ஜனங்களுக்கு வேண்டுகோள் விடுக்க ஒட்டாமல் காடெட்டுகள் தடுக் கிறார்கள்.
7. பரிதாபகரமான அக்டோபர்வாதிகளும் காடெட்டுகளும்.
8. மோசமான கௌன்சில்கள்.
9. காடெட்டுகள், ட்ருட்டுவிக்குகள், தொழிலாளர் கட்சி.

தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒன்றுபடுவது; நிலத்துக்காகவும், சுதந் திரத்திற்காகவும் போராட விவசாயிகளைத் தட்டி எழுப்ப வேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்துவது; சர்க்காருடன் சமரஸம் செய்துகொள்ளும் சந்தர்ப்பத் தைக் காடெட்டுகளிடமிருந்து பறிப்பது ஆகிய விஷயங்களை நோக்கமாகக் கொண்டு, இந்தக் கட்டுரைகளை எல்லாம் இலிச் எழுதினார்.

அந்தக் காலத்தில் இந்தப் பிரசினைபற்றி இலிச் பல தடவைகள் பேசினார்.

உதாரணமாக, வைபோர்க் ஜில்லாப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் அவர் பேசினார்; ஸாபால்கான்ஸ்கியிலுள்ள இஞ்சினீயர் யூனியனில் இந்தக் கூட்டம் நடந்தது. அங்கே நாங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஒரு அறையில் வேலையில்லாதோர் இருந்தனர்; இன்னொரு அறையில் துறைமுகத் தொழிலாளர்கள் இருந்தனர். இவர்களின் தலைவராக ஸெர்ஜி மாலிஷேவ் இருந் தார். கடைசியாக அவர்கள் முதலாளிகளுடன் ஒப்பந்தத்துக்கு வரத் தயாராக இருந்தனர். ஆனால், ஒப்பந்தம் ஏற்படாது போயிற்று; இவர்கள் போன பிறகு தான் இலிச் தன் பேச்சை ஆரம்பிக்க முடிந்தது.

உபாத்தியாயர்களின் கூட்டம் ஒன்றில் இலிச் பேசினது எனக்கு நினைவு இருக்கிறது. அன்று உபாத்தியாயர்களிடையே சமதர்மப் புரட்சிக்காரர்களுக்குச் செல்வாக்கு அதிகம் இருந்தது: உபாத்தியாயர்கள் காங்கிரஸில் போல்ஷ்விக்கு

கள் அனுமதிக்கப்படவில்லை. எனினும் ஒருசில உபாத்தியாயர்களை மட்டும் கொண்ட கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் இந்தக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் பிரசன்னமாய் இருந்தவர்களில், மெலிந்த, கூன்விழுந்த ஆசிரியை ஒருத்தியின் முகம் எனக்கு நினைவு இருக்கிறது. அவர் சமதர்மப் புரட்சிக் கட்சியைச் சேர்ந்தவள்; பெயர் கொண்டார்ட்டீவா. அந்தக் கூட்டத்தில் தோழர் ரியாஸனேவ் தொழிற் சங்கங்களைப்பற்றிப் பேசினர்; விவசாயிகளின் பிரசினைகளைப்பற்றி விளாதிமிர் இலிச் பேசினர். இலிச் முன்னுக்குப் பின் முரணுகப் பேசுவதாகக் கூறி, அவரைத் தாக்கினர் சமதர்மப் புரட்சிக் கட்சியைச் சேர்ந்த புனுக்கோவ். இலிச்சுக்கு எதிராக, இலின் என்ற புனைபெயரில் இலிச் எழுதியவற்றிலிருந்தே மேற்கோள்கள் எடுத்துக்காட்டி புனுக்கோவ் பேசினர். இவருடைய பேச்சை விளாதிமிர் இலிச் கவனத்தோடு கேட்டுக் குறிப்புகள் எடுத்துக்கொண்டார்; பிறகு அவருக்குக் கோபத்துடன் இலிச் தன் பதிலைக் கூறினர்.

நிலப் பிரசினை முக்கியத்துவம் அடைந்து தீவிரமாகிவிட்டது; "விவசாயிகளுக்கு எதிராக அதிகாரிகளும் மிதவாதிகளும் ஒன்றுபடுவார்கள்" என்று இலிச் கூறியபடி நடந்துவிட்டது. அசைந்தாடிக்கொண்டிருந்த "பாடுபடும் பகுதியினர்" தொழிலாளர்களுடன் சேர்ந்துகொண்டனர். இதனுல் இனிமேல் டூமாவை நம்ப முடியாது என்று உணர்ந்த சர்க்கார் தன் தாக்குதலை ஆரம்பித்தது. சமாதான ரீதியான ஊர்வலங்கள் கலைக்கப்பட்டன; பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதற்கு உபயோகப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தீக்கிரையாயின; யூதர்களைச் சித்திரவதை செய்யும் படலம் ஆரம்பமாயிற்று; ஸ்டேட் டூமாவை வன்மையாகக் கண்டித்து, நிலப் பிரசினை சம்பந்தமான ஒரு அறிக்கையைச் சர்க்கார் வெளியிட்டது.

இறுதியில் ஜூலை மாதம் எட்டாம் தேதி டூமா கலைக்கப்பட்டது; சமதர்ம-ஜனநாயகப் பத்திரிகைகள் நசுக்கப்பட்டன; பயங்கரமான அடக்குமுறைகளும் கைதுகளும் ஆரம்பமாயின; கிரோன்ஸ்டாடிலும் ஸ்வீபோர்கிலும் கலகம் ஆரம்பமாயிற்று. அதில் கட்சி ஊழியர்கள் தீவிரமான பங்கு எடுத்துக்கொண்டனர். பெரிய குடிகாரனைப்போல் நடித்து, போலீஸ்காரர்களிடம் பிடிபடாமல் கிரோன்ஸ்டாடிலிருந்து தப்பினர் இன்னேகென்டி. விரைவில் எங்கள் ராணுவக் கமிட்டி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர்; அவர்களுக்கு மத்தியில் ஒற்றன் ஒருவன் நடமாடி யிருக்கிறுன் என்பது தெரியவந்தது. ஸ்வீபோர்க் கலகம் மூண்ட சமயம் இது நடந்தது. கலகத்தின் போக்கைப்பற்றித் தந்தி வரும் என்று அன்று முழுதும் நாங்கள் வீணே காத்திருந்தோம்.

நாங்கள் மென்ஸின்ஸிகியின் வீட்டில் இருந்தோம். அந்தக் காலத்தில் வீரா ருடோல் போவ்னுவுக்கும், லுட்மிலா ருடோல் போவ்னு மென்ஸின்ஸிகிக்கும் வசதியான ஜாகை இருந்தது. தோழர்கள் அடிக்கடி அங்கே வந்துபோனுர்கள். தோழர்கள் ரோஸ்காவ், யூசுப், கோல்டன்பர்க் ஆகியோர் எப்பொழுதும் இவர்களின் ஜாகையிலேயே தங்கினர். இலிச் உள்பட அனேக தோழர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கே சந்தித்தனர். ஸ்வீபோர்க்குக்குத் தான் உடனே கிளம்பப் போவதாக வீரா ருடோல்போவ்னு மூலம் இலிச், சிலிஸ்டர் என்பவருக்குச் செய்தி

அனுப்பினர்; காடெட் பத்திரிகையான ரெக்கில் காரிக் என்னும் தோழர் "புரூவ்ரீடராக" வேலை பார்ப்பதாக ஒரு தோழர் சொன்னார். அங்கு ஏதாவது தந்தி வந்திருக்கிறதா என்பதை அறிந்துவரும் பொருட்டு நான் அங்கே சென்றேன். நான் சென்றபொழுது அவர் காரியாலயத்தில் இல்லை. ஆனால், இன்னொரு "புரூவ்ரீடர்" வந்த தந்திகளை எல்லாம் என்னிடம் தந்தார். அருகிலுள்ள குஸெஸ்விஸ்கித் தெருவில் காரிக் வசிப்பதாகவும் அவருடன் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும்படியும் அவர் எனக்கு யோசனை கூறினர். தந்திகளின் புரூவில் காரிக்கின் விலாசத்தைக்கூட அவர் எழுதித் தந்தார். நான் குஸெஸ்விஸ்கித் தெருவுக்குப் போனேன். வீட்டுக்கு வெளியே தம் கைகளைக் கோத்துக்கொண்டு இரண்டு பெண்கள் நடந்தனர். அவர்கள் என்னை நிறுத்தி "நீங்கள் இன்ன இலக்கமுள்ள வீட்டுக்குப் போவதாய் இருந்தால், அங்கே போக வேண்டாம்; அந்த வீட்டில் சோதனை நடைபெறுகிறது; அங்கே இருப்பவர்களை எல்லாம் கைது செய்துகொண் டிருக்கிறார்கள்" என்று தெரிவித்தார்கள்.

கட்சித் தோழர்களை எச்சரிப்பதற்காக நான் விரைந்து திரும்பினேன். வியாச்சிலாவ் ரூடோல்போவிச் மென்ஸின்ஸ்கை உள்பட எங்கள் ராணுவக் கமிட்டி அங்கத்தினர்கள் அங்குதான் கைது செய்யப்பட்டார்கள் என்பது பின்னர் தெரியவந்தது. கலகம் நசுக்கப்பட்டது; பிற்போக்காளர்கள் வெட்கமின்றிச் செயலில் இறங்கினர். பாட்டாளி என்னும் சட்டவிரோதமான தங்கள் பத்திரிகையைப் போல்ஷ்விக்குகள் மீண்டும் வெளியிடத் தொடங்கினர்; தலைமறைவாக இருந்து அதை நடத்திவந்தனர். மென்ஷ்விக்குகள் பின்வாங்கிக் கொண்டனர்; பூர்ஷ்வாக்களின் பத்திரிகைகளில் அவர்கள் எழுதத் தொடங்கினர்; கட்சிச்சார்பற்ற தொழிலாளர் காங்கிரஸைக் கூட்ட வேணும் என்னும் ஏமாற்றும் கோஷத்தை அவர்கள் முழங்கத் தொடங்கினர். அன்றைய நிலையில் கட்சியைச் சிதறடிப்பதற்கு உரிய கோஷமாகும் இது; போல்ஷ்விக்குகளோ விசேஷ காங்கிரஸ் கூட்ட வேணும் என்று கூறினர்.

அருகில் இருந்த பின்லாந்துக்குச் சென்று இலிச் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். ஸ்டேஷனுக்குச் சமீபமாக இருந்த காக்கோலா என்னும் இடத்தில், லேட்டேஸன் தம்பதிகளுடன் அவர் தங்கி இருந்தார். "வாஸா" என்னும் பெயரைக்கொண்ட வசதியற்ற பெரிய அந்தக் கிராமிய வீடு, நீண்டகாலம் புரட்சிக்காரர்களுக்கு அபய ஸ்தலமாக விளங்கியது. முன்பு இந்த வீட்டில் சமதர்மப் புரட்சிக்காரர்கள் தங்கி, வெடிகுண்டுகள் தயாரித்து இருக்கிறார்கள். பிறகு போல்ஷ்விக் லேட்டேஸன் தன் குடும்பத்தாருடன் அங்கே வசித்துவந்தார். வீட்டின் ஒரு பக்கத்தில் இருந்த அறை ஒன்றை அவர்கள் இலிச்சுக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள். அங்கே தங்கி, இலிச் அனேக கட்டுரைகளும் பிரசுரங்களும் எழுதினர். மத்திய கமிட்டி அங்கத்தினர்களையும், பீட்டர்ஸ்பர்க் கமிட்டி அங்கத்தினர்களையும் மாகாணத்திலிருந்துவந்த மற்றவர்களையும் அவர் பேட்டி கண்டார். காக்கோலாவில் இருந்துகொண்டே, போல்ஷ்விக்குகளுக்கு வழிகாட்டி அவர்களை இலிச் நேரிய வழியில் செலுத்தினர். சிறிது காலத்துக்குப் பிறகு நானும் அங்கே வசிக்கச் சென்றேன். அதிகாலையில் அங்கிருந்து பீட்டர்ஸ்பர்க்குக்குச் சென்றுவிட்டு, இரவில் அதிக நேரம் கழித்துத்தான் நான் காக்கோலாவுக்குத் திரும்பு

வேன். லேட்டேஸன் தம்பதிகள் பிறகு போய்விட்டனர். அவர்கள் போனபிறகு கீழ்ப் பாகம் முழுவதையும் நாங்கள் எங்கள் புழக்கத்தில் வைத்துக்கொண்டோம். என் அன்னை வந்து எங்களுடன் வசித்தாள்; பிறகு மரியா இலிச்சினுவும் வந்து எங்களுடன் சிறிது காலம் வசித்தாள். பாக்டானுவ் தம்பதிகள் மாடியில் வசித்தனர். 1907-ல் இன்னேகென்டியும் அங்கே வந்துசேர்ந்தார். அந்தக் காலத்தில் பின்லாந்து விஷயத்தில் தலையிட வேண்டாம் என்று ரஷ்ய போலீஸார் முடிவுசெய்திருந்தபடியால், குறிப்பிடத்தக்க அளவு சுதந்திரத்துடன் நாங்கள் அங்கே வசித்தோம். கதவுக்கு ஒருபோதும் தாழ்ப்பாள் போடுவதே கிடையாது; இரவு நேரங்களில், சாப்பிடும் அறையில் ஒரு ஜாடியில் தண்ணீரும் ஒரு துண்டு ரொட்டியும் எப்பொழுதும் வைக்கப்பட்டிருக்கும். ஏனெனில் இரவு வண்டியில் யாராவது வந்தால் வந்தவர்கள் சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதற்காக இப்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இப்படி இரவில் வந்து தங்கிய தோழர்களை நாங்கள் அடிக்கடி காலையில் சாப்பாட்டு அறையில் சந்திப்போம்.

செய்திகள், பத்திரிகைகள், கடிதங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, ஒருவர் நாள்தோறும் இலிச்சைக் காண வருவார். அவர் கொணர்ந்துள்ளவற்றை எல்லாம் கவனித்துப் படித்து பார்த்துவிட்டு, ஓர் இடத்தில் அமர்ந்து இலிச் கட்டுரை ஒன்றை எழுதி முடிப்பார். அதை அந்த மனிதரிடமே கொடுத்து அனுப்புவார். திமித்திரி இலிச் லெஷ்ஷென்சோ தவருமல் நாள்தோறும் ''வாஸாவுக்கு'' வந்து போவார். ஆக வேண்டிய காரியங்களைப் பீட்டர்ஸ்பர்க்கில் செய்து முடித்துக் கொண்டு, செய்திகளையும் சேகரித்துக்கொண்டு, மாலை நேரங்களில் நான் வீட்டுக்குத் திரும்புவேன்.

பீட்டர்ஸ்பர்க்குக்குத் திரும்பிவிட வேண்டும் என்று இலிச் இயல்பாகவே விரும்பினுர்; அவர்களும் இலிச்சுடன் நிரந்தரமான தொடர்புவைத்துக்கொள்ள எவ்வளவோ முயன்றுர்கள். இருந்தாலும், சில சமயங்களில் வேறு விதமான வாழ்க்கை வேண்டும் என்னும் எண்ணம் அவர் மனதில் இருந்தது. ஆகவே ''வாஸா'' வாசிகள் ''டன்ஸ்'' என்னும் சூதாட்டத்தை விளையாடினர்; பாக்டானுவ் நிதானமாக விளையாடினுர்; இலிச் நிதானமாகவும் சூதாட்ட உணர்ச்சியுடனும் விளையாடினுர்; லேட்டேஸனே உற்சாகமாக அதில் மூழ்கித் திளைத்தார். இத்தகைய சமயங்களில் ஏதாவது ஒரு வேலையாக ஜில்லாக் கமிட்டியிலிருந்து யாராவது வந்தால், மெதுவாக ஆத்திரமும் திகைப்பும் கொண்டு லேட்டேஸன் காணப்படுவார். மத்திய கமிட்டி அங்கத்தினர்கள் பணம் வைத்துச் சூதாடினதைக் கற்பனை செய்து பாருங்கள்; அது ஒரு கால கட்டம்.

அந்தக் காலத்தில் பகல் முழுதும் நான் பீட்டர்ஸ்பர்க்கில் இருந்து விடுவேன். ஆகையால் பகல் நேரங்களில் இலிச்சை நான் சந்திக்க முடிவதே இல்லை; வெகு நேரம் சென்று நான் வீடு திரும்பும் காலத்தில், இலிச் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார். ஆகவே அவரிடம் எதுவும் கேளாமல் நான் ஒதுங்கி இருந்துகொள்வேன்; அதற்குப் பதிலாக நான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அவரிடம் கூறுவேன்.

குளிர்காலத்தில் நானும் வீரா ரூடோல்போவ்னுவும் டெக்னுலாஜிக்கல் இன்ஸ்ட்டியூட் சாப்பாட்டு அறையை நிரந்தரமாகச் சந்தித்துப் பேசும் இடமாக

ஏற்பாடு செய்தோம். பகலில் அங்கே சாப்பிடுவதற்கு ஏராளமான ஜனங்கள் வந்துபோன காரணத்தால், அந்த இடம் மிகவும் வசதியாக இருந்தது. பகலில் ஏறக்குறையப் பன்னிரண்டு தோழர்களையாவது நாங்கள் சந்தித்துவிடுவோம். எங்களை எவருமே கவனிக்கவில்லை. ஆனால், ஒரு நாள் காமோ என்பவர் எங்களைச் சந்திக்க வந்து சேர்ந்தார். துப்பாக்கித் தோட்டாக்கள் வரிசையாக வெள்ளைத் துணியில் அலங்கரிக்க, காகஷிய உடையை அணிந்துகொண்டு அவர் வந்து சேர்ந்தார்; மேஜைத் துணியில் சுற்றின ஏதோ ஒரு உருண்டைச் சாமானைத் தன் கையில் அவர் வைத்திருந்தார். ஹோட்டலில் இருந்தவர்கள் எல்லோரும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, விபரீதம்வாய்ந்த இந்த கோலத்துடன் வந்திருக்கும் அவரை உற்று நோக்கினர். "கையில் இவர் வெடிகுண்டு வைத்திருக்கிறார்" என்ற எண்ணம் அங்கிருந்தவர்கள் பெரும்பாலோரின் மனதில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது வெடிகுண்டு அல்ல; அவர் கையில் இருந்தது முலாம் பழம் ஆகும். எனக்கும் இலிச்சுக்கும் வெகுமதியாக அளிக்கும் பொருட்டு காமோ ஒரு முலாம்பழமும் மிட்டாயில் தினித்த வித்துகள் கொஞ்சமும் அவர் கொணர்ந்திருந்தார். "என் அத்தை இவற்றை அனுப்பினார்" என்று நாணத்துடன் அவர் சொன்னார். அசாதாரணத் துணிச்சலும் நிலைகுலையாத மனோவலிமையும் வீரமும் படைத்த, அந்தப் போர்வீரன் கள்ளங்கபடமற்ற, எளிமையும் மென்மையும் படைத்த தோழராகவும் விளங்கினார். இலிச், கிராஸின், பாக்டானவ் ஆகியோரிடம் அவருக்கு அளவுகடந்த பக்தி. எங்களைக் காண்பதற்காக, காக்கோலாவுக்கு அவர் அடிக்கடி வருவார். என் அன்னையும் அவரும் சிறந்த நண்பர்கள் ஆகிவிட்டனர். தம் அத்தையைப்பற்றியும் சகோதரிகளைப்பற்றியும் என் தாயாரிடம் அவர் யாவற்றையும் சொல்வார். காமோ அடிக்கடி பின்லாந்துக்கும் பீஸ்டர்ஸ்பர்க்குக்கும் வந்துபோய்க்கொண்டிருந்தார். எப்பொழுதும் அவர் ஆயுதபாணியாகவே இருப்பார். அவர் முதுகில் கைத் துப்பாக்கி ரவைகளை என் அன்னை அதி ஜாக்கிரதையாகக் கட்டிவிடுவாள்.

சரத் காலத்தில் சட்டவிரோதமான பத்திரிகை பாட்டாளி வைபோர்க்கிலிருந்து வெளிவர ஆரம்பித்தது. இதில் இலிச் அதிக கவனம் செலுத்தினார்; நேரத்தையும் செலுத்தினார். தோழர் ஷிலீச்சர் மூலம் தொடர்பு இருந்து வந்தது. சட்டவிரோதமான பாட்டாளி பத்திரிகையை பீட்டர்ஸ்பர்க்குக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து ஜில்லாக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்தக் காரியத்தைத் தோழர் இலினா கவனித்தார். சட்டரீதியாக நடந்த போல்ஷ்விக் பத்திரிகை "நலன்" மூலம் இந்த விநியோகம் நடந்தது; என்றாலும் பிரசுரங்களை அனுப்பக்கூடிய விலாசங்கள் தேவையாயின. வீரா ரூடோல்போவ்னாவுக்கும் எனக்கும் உதவிபுரியத் தேவைப்பட்டனர். ஜில்லாக் கமிட்டி அங்கத்தினர் கோமிஸாரோவ் இந்த வேலைக்குத் தன் மனைவி காட்டியா பொருத்தமானவள் என்று கூறினர். அடக்க ஒடுக்கமும் குட்டையான கூந்தலும் உடைய பெண் ஒருத்தி எங்கள் முன்னர் தோன்றினாள். அவளை முதலில் பார்த்ததும் விநோதமான ஒரு அவநம்பிக்கை உணர்ச்சி எனக்கு எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை; விரைவில் அந்த உணர்ச்சி என்னிடமிருந்து நீங்கிவிட்டது. காட்டியா முறையாகவும் சுறுசுறுப்பாகவும் வேலைகளைச் செய்தாள்; ஒழுங்காகவும் ரகசியமாகவும்

செய்தாள். விஷயங்களை ஊடுருவி அறிய அவளால் முடியவில்லை; கேள்விகள் கேட்கவும் இல்லை. எனினும் வேனிற்காலத்தில் ஒரு நாள் எங்கே போகிருய் என்று அவளை நான் கேட்டபொழுது அவளுடைய முகக்குறிகள் மாற்ற மடைந்தன; ஆத்திரத்துடன் அவள் என்னை முறைத்துப் பார்த்தாள். காட்டி யாவும் அவள் கணவனும் போலீஸ் ஒற்றர்கள் என்பது பின்னர் ருசுவாகிவிட் டது. ஆயுதங்களை முதலில் பீட்டர்ஸ்பர்க்குக் கடத்திச் சென்று, பின்னர் அவற்றை யூரல் பிரதேசத்துக்குக் காட்டியா எடுத்துப் போனுள். ஆயுதங்களை அவள் எடுத்துச் சென்றவுடன் அவள் சென்ற இடத்தில் போலீஸார் வந்து சோதனை போட்டனர்; காட்டியா எடுத்துச் சென்ற ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். எல்லோரையும் கைது செய்துவிட்டனர். வெகு நாட்களுக்குப் பிறகுதான் இந்த விவரங்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியவந்தன.

இதற்கு மத்தியில் இவளுடைய கணவன் ஸாகோரோடனி பிராஸ்பெக்டு 9-ம் நம்பர் வீட்டுக்குச் சொந்தக்காரர் ஸிமானுவ் என்பவரிடம் வேலைக்கு அமர்ந் தார். சமதர்ம ஜனநாயகவாதிகளுக்கு ஸிமானுவ் உதவி ஒத்தாசைகள் புரிந்து வந்தார். விளாதிமிர் ஒரு காலத்தில் அவருடைய வீட்டில் தங்கி இருந்தார். பிறகு அந்த வீடு போல்ஷ்விக்குக் கிளப்புக்காக உபயோகப்படுத்தப்பட்டது. அலெக்ஸின்ஸ்கையும் அங்கேதான் வசித்தார். சில காலத்துக்குப் பிறகு - பிற் போக்கு தலைவிரித்தாடின காலங்களில் - தலைமறைவாக வாழ்ந்த ஏராளமான தோழர்கள் அங்கே தங்க கோமிஸாரோவ் ஏற்பாடு செய்தார். அவர்களுக்குப் பாஸ்போர்டுகளும் தயார் செய்து கொடுத்தார். அதற்குப் பிறகு தலைமறைவாக இருந்த அந்தத் தோழர்கள் "தற்செயலாக" எல்லைப்புறத்தில் தொல்லையில் சிக் கிக்கொண்டனர். உதாரணமாக ரஷ்யாவில் வேலை செய்வதற்காக வெளி நாட்டி லிருந்து திரும்பிவந்த இன்னேகென்டி, இந்த வலையில் சிக்கிக்கொண்டார். கோமிஸரோவும் அவருடைய மனைவியும் எப்பொழுது இருந்து போலீஸ் ஒற்றர் களாக மாறினர்கள் என்பதைத் தெரிந்துகொள்வது சிரமம். எது எப்படியாணு லும் போலீஸாரால் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இலிச் இருக்கும் இடத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. 1905-ம் வருடத் திலும் 1906 ம் வருடம் முழுவதிலும் போலீஸ் யந்திரம் வெகுவாகச் சீர்குலைந்து இருந்தது.

1907-ம் வருடம் பெப்ருவரி மாதம் 20-ம் தேதி இரண்டாவது ஸ்டேட் டூமா கூட ஏற்பாடு நடைபெற்று வந்தது.

நவம்பரில் கட்சி மகாநாடு நடந்தபொழுதே இலிச் தலைமை தாங்கப் பதி னன்கு பிரதிநிதிகள் - போலந்து லித்துவேனியா பிரதிநிதிகள் உள்பட-ஸ்டேட் டூமாத் தேர்தலில் கட்சி கலந்துகொள்வதை ஆதரித்தனர். எனினும் காடெட்டு களுடன் ஒன்றுபட்டு நிற்பதை அவர்கள் எதிர்த்தார்கள். ஆனல் மென்ஷ்விக்கு களோ இதை ஆதரித்தனர். இந்தக் கோஷத்துடன்தான் போல்ஷ்விக்குகள் டூமாத் தேர்தலை நடத்தினர்; காடெட்டுகள் தேர்தலில் தோல்வி அடைந்தனர். முதல் டூமாவில் இருந்த அங்கத்தினர்களில் பாதிப் பேர்தான் இரண்டாவது டூமாவில் இருந்தனர். காலம்கடந்து தேர்தல்கள் நடந்தன. புதிய புரட்சி அலை கொந்தளித்து எழும்புகிறது என்பது தெரியவந்தது. 1907-ம் வருட

ஆரம்பத்தில் இலிச் எழுதினர். "பீறிட்டுக்கொண்டு உதயமாகும் புரட்சி சூரியனின் ஒளிவீசும் கிரணங்களால் அழகுபடுத்தப்படும்பொழுது, நமது சமீப காலத் தத்துவத் தகராறுகள் அசட்டுத்தனமானவை என்பது வெட்டவெளிச்ச மாகிவிடும்.''

இலிச்சுடன் கலந்து பேசுவதற்காக இரண்டாவது டூமாப் பிரதிநிதிகள் அடிக்கடி காகோலாவுக்கு வந்துபோயினர்; ஏ. ஏ. பாக்டானுவின் தலைமையில் போல்ஷ்விக்குப் பிரதிநிதிகள் தங்கள் காரியங்களைச் செய்துவந்தனர்; ஆனுல் காகோலாவில் நாங்கள் வசித்த அதே வீட்டில் - வாஸாவில்-அவரும் வசித்தபடி யால், யாவற்றையும் அவர் இலிச்சுடன் விவாதித்தார்.

பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து ஒரு நாள் இரவு வெகு நேரத்திற்குப் பின்னர், நான் காகோலாவுக்குத் திரும்பினேன். அந்த ரயிலில் பேவல் போரிஸொவிச் ஆக்ஸெல் ராடை நான் சந்தித்தேன். போல்ஷ்விக்குப் பிரதிநிதிகள் - குறிப்பாக அலெக் ஸின்ஸ்கை - டூமாவில் அற்புதமாக வேலை செய்வதாக அவர் சொன்னுர். பிறகு தொழிலாளர் காங்கிரஸைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். விரிவான அஸ்திவாரத் தின்மீது அமைக்கப்படும் காங்கிரஸ் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் போல்ஷ் விக்குகளின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்தும் என்ற நம்பிக்கையுடன் தொழி லாளர் காங்கிரஸை ஸ்தாபிக்க வேண்டும் என்று மென்ஷ்விக்குகள் கிளர்ச்சி செய்து வந்தனர். கட்சிக் காங்கிரஸை விரைந்து கூட்ட வேண்டும் என்று போல்ஷ்விக்குகள் வற்புறுத்தினர். முடிவாக ஏப்ரலில் கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதிகமான பிரதிநிதிகள் காங்கிரஸுக்கு வந்திருந்தனர். கூட்டங் கூட்டமாக வந்து பிரதிநிதிகள் அத்தாட்சிப்பத்திரம் அளிக்கும் கமிஷன் முன்னர் வரிசையாக நின்றனர். கமிஷனுக்குப் போல்ஷ்விக்குகள் சார்பில் நானும் மைக்கேல் ஸெர்கெயாவிச்சும் மென்ஷ்விக்குகள் சார்பில் கிரோமாலும் எம். எம். ஷிசிகரும் அங்கம் வகித்தோம். போலீஸார் வலை வீசினர்; பின்லாந்து ரயில்வே ஸ்டேஷனில் மாராட்டும் வேறு பல தோழர்களும் கைது செய்யப்பட்டனர். விரிவான முறையில் தற்காப்பு ஏற்பாடுகளை நாங்கள் செய்தோம். இலிச்சும் பாக்டானுவும் முன்கூட்டியே காங்கிரஸுக்குச் சென்றுவிட்டனர். நான் காகோலாவுக்கு அவசரப்பட்டுத் திரும்பவில்லை. ஞாயிற்றுக்கிழமை மாலைவரை நான் வீடு திரும்பவில்லை. ஆனுல் வீடு திரும்பியதும் நான் கண்டது என்ன? குளிரில் நடுங்கிக்கொண்டும் பசியுடனும் பதினேழு பிரதிநிதிகள் அங்கே இருந்தனர். சாப்பிடுவதற்கோ பருகுவதற்கோ அவர்களுக்கு எதுவும் கிடைக்க வில்லை. எங்கள் வீட்டில், வீட்டு வேலைகளைப் பின்னிஷ் சமதர்ம - ஜனநாயகப் பெண்மணி ஒருத்தி பார்த்துவந்தாள்; ஞாயிற்றுக்கிழமைகளில் அவள் வேலைக்கு வர மாட்டாள். ஓய்வு நேரங்களில் "பீப்பிள்ஸ் ஹோமில்'' அவள் நாடகங்கள் நடத்துவாள். எனவே பிரதிநிதிகளுக்கு நான் உணவு தயாரித்து அளிக்க வெகு நேரமாயிற்று. நான் காங்கிரஸில் கலந்துகொள்ளவில்லை. காரியதரிசி காரியாலய வேலைகளை வேறு யாரிடமும் ஒப்படைக்க முடியவில்லை. அந்தக் காலம் மிகவும் கஷ்டமாக இருந்தது. போலீஸாரின் நச்சரிப்பு வரவர அதிகமாயிற்று. இரவில் தங்கள் வீடுகளில் தங்கப் போல்ஷ்விக்குகளுக்கு இடம் அளிக்கவோ, அல்லது சந்தித்துப் பேச இடம் கொடுக்கவோ, ஜனங்கள் பயந்தனர். சில சமயங்களில்

வெஸ்டினிக் ஷிஷினி காரியாலயத்தில் நான் சந்திப்பது வழக்கம். வெஸ்டினிக் ஷிஷினி காரியாலயத்தில் சந்தித்துப் பேச ஏற்பாடுகள் செய்யக்கூடாது என்று என்னிடம் நேரில் சொல்லத் தயங்கின பீட்டர்ஸ் பீட்ரோவிச் ரூம்யாண்டிஸிவ்-பத்திரிகை ஆசிரியர்-இதைச் சொல்லுவதற்காக தமது வேலைக்காரரை என்னிடம் அனுப்பிச் சொல்லச் செய்தார். இந்தத் தொழிலாளரிடம் நான் அடிக்கடி பேசி இருக்கிறேன். ரூமியாண்டிஸிவ் இதை என்னிடம் நேரில் சொல்லாததற்காக அவர்மீது எனக்குக் கோபம்.

. காங்கிரஸிலிருந்து மற்றவர்கள் திரும்பின பிறகுதான் இலிச் திரும்பினர். அவருடைய தோற்றம் மிகமிக அசாதாரணமாக இருந்தது. ஒட்ட வெட்டப் பட்ட மீசை, தாடியற்ற முகம், பெரிய வைக்கோல் தொப்பி.

ஜூன் மாதம் மூன்றும் தேதி இரண்டாவது ஸ்டேட் டூமா கலைக்கலைப்பட்டது. மாலையில், போல்ஷ்விக்குப் பகுதியைச் சேர்ந்த அனைவரும் காகோலாவுக்கு வந்தனர். புதிதாக எழுந்துள்ள நிலைமைகளைப்பற்றி அன்று இரவு முழுதும் அவர்கள் விவாதித்தனர். காங்கிரஸுக்குப் பிறகு இலிச் பெரிதும் களைத்திருந் தார். அவரால் சாப்பிட முடியவில்லை. அவருடைய சாமான்களை மூட்டை கட்டி, பின்லாந்தின் மத்திய பாகத்தில் இருந்த ஸ்டிர்சூடா ன்என்ற இடத்துக்கு நான் அனுப்பிவைத்தேன். "சின்ன மாமா" குடும்பத்தினர் அங்கே தான் வசித்தனர். நான் காகோலாவில் தங்கி இருந்து சகல காரியங்களையும் அவசர அவசரமாகச் செய்து முடித்தேன். நான் ஸ்டிர்சூடானுக்குச் சென்ற பொழுது இலிச் ஓரளவு குணம் அடைந்து இருந்தார். வந்த அவர் சில தினங்கள்வரை ஓயாது தூங்கினர் என்று அவர்கள் என்னிடம் சொன்னர்கள். அவர் பிர் மரத் தடியில் உட்காருவாராம்; உடனே தூங்கிப் போவாராம். "தூங்கி வழியும் கிழவர்" என்று குழந்தைகள் அவரை அழைத்தன. ஸ்டிர்சூடானில் நாங்கள் இன்பகரமாகப் பொழுது போக்கினேம். காடுகள், கடல்கள், இயற்கைக் காட்சிகள் ஆகியவை எங்களுக்கு இன்பமூட்டின. இந்த இன்பத்தைக் குலைத்தது அண்டையிலிருந்த இஞ்சினீயர் ஸியாபிட்சிக்கை வீடு. அந்த வீட்டில் லெஷ் ஷென்கோவும் அவர் மனைவியும் அலெக்ஸென்ஸ்கையும் வசித்தனர். தான் ஓய் வுடன் இருக்க விரும்பியதால், அலெக்ஸின்ஸ்கையுடன் இலிச் பேசாமல் இருந்து வந்தார். இது அலெக்ஸின்ஸ்கைக்கு வருத்தம் அளித்தது. சில சமயங்களில் சங்கீதம் கேட்பதற்காக நாங்கள் லெஷ்ஷென்கோ வீட்டுக்குச் சென்று வருவது உண்டு. நிப்போனுவிச்சின் உறவினள் ஜினியா ஐவனேவின் குரல் மதுரமாக இருந்தது; பாடுவதையே தொழிலாகக் கொண்டவர் அவர்; அவர் பாடுவதை இலிச்சு விருப்பத்துடன் கேட்டார். பகலில் பெரும் பொழுதை நாங்கள் கடல் ஓரத்தில் கழித்தோம் அல்லது சைகிளில் சவாரி செய்து வந்தோம். சைக்கிள்கள் மிகப் பழையனவாக இருந்தபடியால் அடிக்கடி சைக்கிள்களைப் பழுது பார்க்க வேண்டியதிருந்தது. சில சமயங்களில் லெஷ்ஷெங்கோ தம்பதிகள் எங்களுக்கு உதவி புரிந்தார்; சில சமயங்களில் அவருடைய உதவியின்றியே சைக்கிள்களை நாங்கள் பழுது பார்த்துக்கொண்டோம். ஒட்டைகளை ஒட்டினேம். சைக்கிள் பிர யாணம் செய்ததைக் காட்டிலும் அதைப் பழுதுப்பார்க்க அதிகமான நேரத்தை நாங்கள் செலவிட்டோம். ஆனல் பிரயாணம் செய்யத் தொடங்கிவிட்டாலோ

அந்தப் பிரயாணம் எங்களுக்கு இன்பகரமாய் இருந்தது. "மான் ஹாமும் ஆப்லெட்டும்" இலிச்சுக்கு "சின்ன மாமா" ஏராளமாகக் கொடுத்தார். விரைவில் இலிச் குணம் அடைந்தார். அவர் மீண்டும் பழைய நிலையை அடைந்தார்.

தெரியோக்கியில் நடந்த மகாநாட்டுக்கு நாங்கள் ஸ்டிர்சுடானிலிருந்து சென்றோம். ஓய்வு பெற்ற காலத்தில் நிலைமையைத் தெளிவாகப் பரிசீலனை செய்ததால், மூன்றாவது டூமாவைப் பகிஷ்கரிக்கக் கூடாது என்று இலிச் மகாநாட்டில் கூறினர்.

இன்னொரு முகாமில் போராட்டம் ஆரம்பம் ஆயிற்று. பகிஷ்கார இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிரான போராட்டம் இது. யதார்த்த நிலையை நேருக்கு நேர் காண அவர்கள் விரும்பவில்லை. ஆனால் வாய்ப்பந்தல் வீசி அதிலேயே அவர்கள் மயங்கி நின்றனர். சிறிய கிராம வீடு ஒன்றில் மகாநாடு நடைபெற்றது. தமது கருத்தைத் தாங்கி இலிச் அழகாகப் பேசினர். சைக்கிளில் புறப்பட்டு வந்து, ஜன்னல் அருகே நின்று கொண்டு, இலிச்சின் பேச்சைக் கிராஸின் செவிமடுத்தார். அதன் பிறகு அவர் வீடு திரும்பவில்லை. ஆழ்ந்த சிந்தனையில் தோய்ந்து அவர் நடந்துகொண்டே இருந்தார்........ஆம். ஆலோசிப்பதற்கு அனேக விஷயங்கள் இருந்தன.

இதன் பிறகு ஸ்டட்கார்டு என்னும் இடத்தில் காங்கிரஸ் நடந்தது. அந்தக் காங்கிரஸ் இலிச்சுக்கு அதிக திருப்தி அளிப்பதாய் இருந்தது. தொழிற் சங்கங்களைப் பற்றிய தீர்மானங்களையும் யுத்தம்பற்றிய தீர்மானங்களையும் அவர் ஆதரித்தார்.

மீண்டும் வெளிநாடுகளில்

(1907-ம் ஆண்டு இறுதியில்)

இலிச் மேலும் பின்லாந்தின் மத்திய பாகத்திற்குச் செல்ல வேண்டிய தாயிற்று. பாக்டானுவ் தம்பதிகள், இன்னுகென்டி, நான் ஆகியவர்கள் காகோலாவிலுள்ள வாஸாவில் வசித்தோம். தெரியோக்கியில் ஏற்கனவே சோதனைகள் நடந்துவிட்டபடியால் காகோலாவிலும் நடக்கக் கூடும் என எதிர் பார்த்தோம். நானும் நடாலியா பாக்டானுவும் தஸ்தாவேஜ்களை எல்லாம் பிரித்துச் "சுத்தி" செய்தோம். முக்கியமானவற்றை எல்லாம் தனியாக எடுத்து, மறைத்து வைக்கும்பொருட்டு, பின்னிஷ் தோழர் ஒருவரிடம் கொடுத் தோம். ஏனையவற்றை எரித்துச் சாம்பலாக்கிவிட்டோம். உற்சாகவயப்பட்டு அவற்றை நாங்கள் எரித்த காரணத்தால் மறு நாள் காலையில், வாஸாவைச்சுற்றி யுள்ள பனி உரைப்புகள் எல்லாம் சாம்பல் மயமாக இருப்பதைக் கண்டேன். இந்தச் சமயத்தில் தற்செயலாகப் போலீஸார் அங்கே தலைகாட்டி யிருப்பார் களாயின், பயன்படத்தக்க தஸ்தாவேஜ்கள் அவர்களுக்கு ஏராளமாகக் கிடைத் திருக்கும். ஏனெனில் அந்த வீட்டில் இன்னும் ஏராளமான காகிதக் கட்டுகள் மீதம் இருந்தன. முன்னெச்சரிக்கையாக நாங்கள் சில காரியங்களைச் செய்ய நேர்ந்தது. ஒரு நாள் காலையில் வீட்டுக்காரி எங்களிடம் ஓடோடியும் வந்து காகோலாவுக்குப் போலீஸார்கள் வந்திருப்பதாகச் சொன்னுள். தன்னுல் சுமக்கக்கூடிய அளவு சட்டவிரோதமான பிரசுரங்களைச் சுமந்து சென்று, தான் இருக்கும் வீட்டில் ஒளித்துவைத்துக்கொண்டாள். ஏ. ஏ. பாக்டானுவையும் இன்னுகென்டியையும் காட்டுக்குள் அனுப்பிவிட்டு, சோதனை நடக்கப்போவதை எதிர்பார்த்து நாங்கள் மட்டும் காத்திருந்தோம். அன்று அவர்கள் 'வாஸா'வில் சோதனை போடவில்லை. ராணுவக் கமிட்டி அங்கத்தினர்களை மட்டும் அவர்கள் தேடியலைந்தனர்.

பின்லாந்தின் மத்திய பாகத்தில் ஹெலிஸிங்போர்ஸுக்கு அருகேயிருந்த சிறிய ஸ்டேஷனுன ஒகுல்பு எனும் சிறிய குக்கிராமத்தில், பின்னிஷ் சகோதரிகள் இருவருடன் இலிச் வசித்துவந்தார். மிகமிகச் சுத்தமாகவும் குளிர்ச்சியாகவும் இருந்த அந்த அறை இலிச்சுக்குப் பிடிக்கவில்லை; பின்னிஷ் பாணியில் அந்த அறை அழகாகவும் சுத்தமாகவும் இருந்தது. பட்டுப் படுதாக்கள் தொங்கின; யாவும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. அடுத்த அறையிலிருந்து ஓயாத சிரிப்பும் பியானுேவின் ஓசையும் பின்னிஷ் மொழிப் பேச்சும் கேட்டவண்ணம் இருந்தன. விவசாயிகள் பிரசினைப்பற்றி ஒரு புத்தகம் எழுதுவதில் இலிச் பெரும்

பொழுதைக் கழித்தார். அப்பொழுதுதான் நடைபெற்ற புரட்சியின் அனுபவங்களை எல்லாம் ஜாக்கிரதையாகச் சீர்தூக்கிப் பார்த்தார். வீட்டுக்காரிக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்துடன், காலை ஊன்றி ஊன்றி மெதுவாக அறையில் மணிக்கணக்கில் உலவிக்கொடுத்தார். அவரைச் சந்திக்கும் பொருட்டு ஒகுல்புக்கு நான் சென்றதாக எனக்கு ஞாபகம்.

பின்லாந்து முழுதும் போலீஸார் இலிச்சைத் தேடினர். எனவே வெளிநாடு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிற்போக்கு சக்தி பல வருடங்கள் தலைவிரித்துத் தாண்டவமாடும் என்பது தெளிவாயிற்று. மீண்டும் ஸ்விட்ஸர்லாந்துக்குச் சென்று ஒய்வுபெற வேண்டிய கட்டாய நிலை எங்களுக்கு ஏற்பட்டது. வேறு வகையில்லாதபடியால், விருப்பத்துக்கு முற்றும்மாறாக மனம் கசந்துபோய் நாங்கள் ஸ்விட்ஸர்லாந்துப் போய்ச் சேர்ந்தோம். பின்லாந்தில் இருந்துகொண்டே பாட்டாளியை வெளியிடுவது அசாத்தியமானதாக இருந்தபடியால், அதை வெளிநாட்டிலிருந்து வெளியிடுவது அவசியமாயிற்று. முதலில் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இலிச் ஸ்டாக்ஹோம் சென்றுவிடுவது என்றும் எனக்காக அவர் அங்கே காத்திருப்பது என்றும் ஏற்பாடு. நோய்வாய்ப்பட்டுக் கிடந்த என் வயோதிக அன்னைக்குப் பீட்டர்ஸ்பர்க்கில் ஏற்பாடுகள் செய்துகொடுப்பது, போக்குவரத்து சம்பந்தமான விஷயங்கள்பற்றிக் கண்டு பேசி ஒரு ஏற்பாடு செய்வது, ஆகிய காரியங்களையும் மற்ற காரியங்களையும் செவ்வனே சீர்ப்படுத்திவிட்டு, இலிச்சு இருக்கும் இடத்துக்கு நான் செல்ல வேண்டும்.

பீட்டர்ஸ்பர்க்கில் சுற்றியலைந்து நான் அவசர அவசரமாகக் காரியங்களைக் கவனித்துக்கொண் டிருந்தபொழுது, ஸ்டாக்ஹோமுக்குச் செல்லும் வழியில் இலிச் ஆபத்தில் சிக்கிக்கொண்டார்; உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. போலீஸார் அவரை விடாப்பிடியாகத் தேடி யலைந்துகொண்டே இருந்தபடியால், வழக்கமான வழியில் சென்றால் - அதாவது அபோவில் கப்பல் ஏறினால் - அவர் கைது செய்யப்படுவது திண்ணம். இதற்கு முன் கப்பல் ஏறும் பொழுது பலர் அங்கே கைது செய்யப்பட்டனர். பக்கத்திலுள்ள ஒரு தீவில் கப்பல் ஏறிக்கொள்ளும்படியாக, பின்னிஷ் தோழர் ஒருவர் இலிச்சுக்கு யோசனை கூறினார். ரஷ்யப் போலீஸார் அங்கே சென்று யாரையும் கைதுசெய்ய முடியாதாகையால், அந்த வழி ஆபத்தற்றதுதான். அந்தத் தீவுக்குச் செல்ல வேண்டுமானால் உரைந்துகிடக்கும் பனிக்கட்டிமீது மூன்று மைல்கள் நடக்க வேண்டும். அது டிசம்பர் மாதம்தான் என்றாலும் சில இடங்களில் பனிக்கட்டிகள்மீது நடப்பது ஆபத்தானது. உயிரைப் பணயம்வைத்து உதவிசெய்ய யாரும் தயாராக இல்லாதபடியால், வழிகாட்டிகள் கிடைக்கவில்லை. அந்தக் கடற்கரையிலேயே பிறந்து வளர்ந்த குடிகாரப் பின்னிஷ் விவசாயிகள் இருவர் இலிச்சுக்கு வழிகாட்ட இசைந்தார்கள். இரவில் அவர்களும் இலிச்சும் பனிக்கட்டிமீது நடந்துசென்றபொழுது பேராபத்தாய்ப் போயிற்று. ஒரு இடத்தில் பனிக்கட்டி நகர ஆரம்பித்தது. இருந்தாலும் எவ்வாறோ அவர்கள் அந்த ஆபத்திலிருந்து தப்பிவிட்டார்கள்.

புரட்சிக்கு எதிரானவர்களால் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்ட போற்கோ என்ற பெயருடைய பின்னிஷ் தோழர் ஒருவர், அவர்கள் எவ்வளவு ஆபத்தான

பாதையில் பிரயாணம் செய்தார்கள் என்பதையும் தற்செயலாக இலிச் எவ்வாறு உயிர் தப்பினுர் என்பதையும் எனக்கு விவரித்துச் சொன்ஞர். எனக்கு உதவி செய்து என்னை ஸ்டாக்ஹோமுக்கு அனுப்பிவைத்தவர் இவர்தான். பனிக்கட்டி நகர ஆரம்பித்ததும் "எவ்வளவு அசட்டுத்தனமான மரணம்" என்று இலிச்சு தனக்குத் தானே சொல்லிக்கொண்டாராம். இந்த விவரத்தை இலிச்சே என்னிடம் கூறினுர்.

மீண்டும் ரஷ்யர்கள் தங்கள் தாய்நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் படலம் ஆரம்பமாயிற்று. போல்ஷ்விக்குகள், மென்ஷ்விக்குகள், சமதர்மப் புரட்சிக்காரர்கள் எல்லோரும் வெளிநாட்டுக்குப் புறப்பட்டனர். நான் பிரயாணம் செய்த அதே கப்பலில், டானும், லிடியா ஓசிப்போவ்ஞ ஸீடர்பாமும், இன்னும் இரண்டு சமதர்மப் புரட்சிக்காரர்களும் ஸ்வீடனுக்கு பயணப்பட்டார்கள்.

ஸ்டாக்ஹோமில் சில நாட்கள் அலைந்து திரிந்துவிட்டு, பெர்லின் வழியாக நானும் இலிச்சும் ஜினீவா போய்ச் சேர்ந்தோம். நாங்கள் சென்றதற்கு முன் தினம் பெர்லினிலிருந்த ரஷ்யர்கள் சோதனை செய்யப்பட்டார்கள்; கைது செய்யப்பட்டார்கள். இதனுல் எங்களைச் சந்திக்கவந்த பெர்லின் பகுதி அங்கத்தினர் தோழர் அப்ராமோவ், யாரையும் வீட்டில் சந்திக்கக் கூடாது என்று சொன்ஞர். நாள் முழுதும் ஒரு ஹோட்டலிலிருந்து இன்னெரு ஹோட்டலுக்கு எங்களை அவர் அழைத்துச் சென்ருர். அன்று மாலை நேரத்தை நாங்கள் ரோஸா லக்ஸம்பர்க்குடன் கழித்தோம். யுத்தம் பற்றிய பிரசினை சம்பந்தமாக, ஸ்டட்கார்டு காங்கிரஸில் விளாதிமிர் இலிச்சும் ரோஸா லக்ஸம்பர்க்கும் ஒரே மனநிலையில் பேசியதால், ஒருவருடன் ஒருவர் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் வாய்த்தது, இது 1907-ல் நடந்தது. யுத்தத்துக்கு எதிராக நடத்தும் போர், சமாதானத்தை நிலை நிறுத்துவதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டதாக இருக்கக்கூடாது என்றும் முதலாளித்துவத்தை வீழ்த்திவிட்டு சமதர்மத்தை ஸ்தாபிக்கும் நோக்கமும் உடையதாக இருக்க வேண்டும் என்னும் அவர்கள் இருவரும் அந்தக் காங்கிரஸில் பேசினுர்கள். யுத்தத்தால் ஏற்படும் நெருக்கடியை முதலாளித்துவத்தை வீழ்த்துவதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தக் காங்கிரஸில் நிறைவேறின தீர்மானங்களைக் குறித்து இலிச் கீழ்வருமாறு வருணித்து இருக்கிருர்:

> மிக முக்கியமான பல பிரசினைகள் சம்பந்தப்பட்டவரையில் சர்வ தேச ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதப் பகுதியையும் புரட்சிப் பகுதியையும் ஸடட்கார்டு காங்கிரஸ் தெளிவுபடுத்தி இருக்கிறது. புரட்சிகரமான மார்க்ஸீய உணர்ச்சியுடன் இந்தப் பிரசினைகளுக்கு அந்தக் காங்கிரஸ் முடிவு கூறி இருக்கிறது.

ஸடட்கார்டு காங்கிரஸில் ரோஸா லக்ஸம்பர்க்கும் இலிச்சும் ஒரே மாதிரியாக நடந்துகொண்டனர். எனவே, அன்று மாலை நடந்த சம்பாஷணை மிகவும் நட்புறவு முறையில் இருந்தது.

மாலையில் நாங்கள் ஹோட்டலுக்குத் திரும்பின சமயம், நோய்வாய்ப்பட்டிருப்பது போன்ற ஒரு நிலை எங்களுக்கு ஏற்பட்டது. ஒருவிதமான சோர்வு எங்கள் இருவரையும் பிடித்தது. சாப்பாட்டு விடுதியிலிருந்து இன்னெரு சாப்

பாட்டு விடுதிக்குச் சென்ற காலத்தில், எங்கேயோ விஷமுள்ள மீனைச் சாப்பிட்டிருக்கக் கூடும் என்று தெரியவந்தது. இரவில் ஒரு டாக்டரை அழைத்து வந்து பரிசோதித்துக்கொண்டோம். பின்னிஷ் சமையல்காரராக இலிச் தம்மைப் பதிவு செய்துகொண்டார்; அமெரிக்கப் பிரஜையாக என்னை நான் பதிவு செய்துகொண்டேன். ஹோட்டல் வேலைக்காரி அமெரிக்க டாக்டர் ஒருவரை அழைத்து வந்தாள். முதலில் இலிச்சைப் பரிசோதனை செய்த அவர், நிலைமை மோசமாக இருக்கிறது என்று கூறினர். பிறகு அவர் என்னைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு ''நீங்கள் பிழைத்துக்கொள்வீர்கள்'' என்று சொன்னர். வாங்கிச் சாப்பிட ஏராளமான மருந்துகளை எழுதித் தந்தார்; எங்கள் நிலையில் ஏதோ மர்மம் இருப்பதாக யூகித்துக்கொண்ட அவர், அடாபிடித்தனமாய் அதிகமாகப் பீஸ் போட்டுவிட்டார். இரண்டொரு தினங்கள் அங்கே வசித்தோம். பிறகு எப்படியோ சிரமப்பட்டுக்கொண்டு, அரைகுறையான நோயுடன், 1908-ம் வருடம் ஜனவரி மாதம் இருபதாம் தேதி ஜினீவா போய்ச் சேர்ந்தோம். வழியில் எங்களுக்கு ''ஜலதோஷம்'' வந்து சிரமப்பட்டதாக இலிச், கார்க்கிக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டார்.

ஜினீவா சோபை இழந்து கிடந்தது. பனி மழை பெய்யவில்லை; சில் என்று கொடுமையான ஊதல் காற்று வீசிக்கொண்டிருந்தது. பனி மழையைச் சித்தரிக்கும் படங்கள் ஜினீவா தடாகக் கரையில் விலைக்குக் கிடைத்தன. ஜீவகளை இன்றியும் சூனியமாகவும் ஜினீவா நகரம் காட்சி அளித்தது. அந்தக் காலத்தில் மிஷ்கா தாஷ்காயா, வி. பி. கார்ப்பின்ஸ்கி, ஓல்கா ராவிச் முதலிய தோழர்கள் ஜினீவாவில் வசித்தனர். மிஷ்கா தாஷ்காயா ஒரு சிறிய அறையில் வசித்தார். நாங்கள் அங்கே சென்றதும் மிகுந்த சிரமத்துடன் அவர் படுக்கையிலிருந்து எழுந்திருந்தார். நாங்கள் அங்கே எதுவுமே பேசவில்லை. அப்பொழுது கார்ப்பின்ஸ்கி தம்பதிகள் ரஷ்ய வாசகசாலை ஒன்றில் வசித்தனர். காலம் சென்ற குக்லின் ஸ்தாபித்த அந்த வாசகசாலையை, கார்ப்பின்ஸ்கி நடத்தி வந்தார். நாங்கள் அங்கே சென்ற சமயம் கடுமையான தலைவலியால் வருந்திக்கொண்டிருந்த அவர் எங்களைக் கண்டதும் பேந்தப் பேந்த விழித்தார். வெளிச்சம் அவருக்கு அதிகத் தொந்திரவைக் கொடுத்தபடியால், ஜன்னல் கதவுகளை எல்லாம் அவர் மூடிவிட்டார். கார்ப்பின்ஸ்கியின் வீட்டிலிருந்து கிளம்பிய நாங்கள் ஜினீவாத் தெருக்களிடையே நண்பர்கள் அற்றுப் பரிதவித்தவாறு வீதிகளில் அலைந்தோம். ''புதைந்து போவதற்காகத்தான் இங்கே நான் வந்துவிட்டேன் போலும்'' என்று இலிச் முணுமுணுத்துக்கொண்டார்.

அந்நிய நாட்டு வாழ்க்கையின் இரண்டாவது கட்டம் எங்களுக்கு ஆரம்பமாயிற்று. முதல் கட்டத்தைக் காட்டிலும் இந்தக் கட்டம் எங்களுக்கு அதிகக் கஷ்டத்தைக் கொடுப்பதாய் இருந்தது.

லெனின் வாழ்க்கைக் குறிப்புகள்

இரண்டாம் பாகம்

SHANTI PRESS,

134/135, Coral Merchant Street, Madras, 1 Sep.

Memorandum of Books, etc., printed during the month ~~Madras~~ 1956.

The title of the book and the contents of the title page	The Languages in which the book is written	The name of (a) the author (b) the translater and (c) the editor of the book or any part thereof	The Subject	The place of Printing and (b) the place of publication	(a) The Name or Firm of the printer and (b) the name or Firm of the publisher	The date of delivery from the Press and of the Publication	The number of leaves, Sheets or Pages	The Size	The First, Second or other number of edition	The number of Copies of which the edition consists	Whether the book is printed or lithographed	The price at which the book is sold to the public (Rs. A. P.)	The name and residence of Proprietor of the copyright or or any portion of such copyright
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
[illegible]	Tamil	(b) Nambi	"Biography" Memoirs of Lenin	(a) 135 Coral Merchant St, (b) Karaikudi	(a) Shanti Press (b) Pudumai Padippakam Private Ltd	20-9-'56	386 Pages	24 x 18	First	1600 Copies	Printed	5/-	M/s. Pudumai Padippakam Private Ltd KARAIKUDI

For BOOKS (INDIA) PRIVATE LTD.

For SHANTI PRESS


I declare that the above entries are correct and true to my knowledge.

Madras Station

30/9/1956

Publisher. Manager.

Printer (Proprietor of the Press.)



BY COURTESY: Mezdunarodnaya Kniga, *Moscow*.

தன் வாழ்க்கைத் துணைவி குருப்ஸ்கயாவுடன் தலைவர் லெனின்

தோற்றுவாய்

இரண்டாவது அஞ்ஞாதவாசத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:

முதல் பகுதி

(1908—11)

பிற்போக்கு சக்திகள் கொடூரமான முறையில் ஆதிக்கம் செலுத்தின காலம் இது. இந்தக் காலத்தில் ஸார் சர்க்கார் புரட்சிக்காரர்களைக் குரூரமாகப் பழி வாங்கியது. சிறைச்சாலைகள் நிறைந்துவிட்டன; வாழ்க்கை நிலைகள் அங்கு மிருகத்தனமானவையாக இருந்தன. சவுக்கடி போன்ற கொடிய தண்டனைகள் சர்வ சாதாரணமாக நடந்தன. ஒருவர் பின் ஒருவராகத் தொடர்ந்து தூக்கில் இடப்பட்டனர். சட்டவிரோதமான ஸ்தாபனங்கள், தலைமறைவாக இருந்து, மிக மிக ரகசியமாகக் காரியங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. ஸ்தாபனங்கள் தலைமறைவாக இருந்து இயங்குவது அவ்வளவு எளிதாக இல்லை. புரட்சி நடந்த சமயம் கட்சியின் உறுப்பினர்கள் தொகுப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. புரட்சிக்கு முன் செய்ய வேண்டிய காரியங்களில் பழக்க மில்லாதவர்களும், ரகசிய வேலைகள் செய்து அனுபவ மில்லாதவர்களும் அதிகம் பேர் கட்சியில் உறுப்பினர்களாகச் சேர்ந்துவிட்டனர். அடுத்துக் கெடுக்கும் ஸ்தாபனங்களையும் ஒற்றர் ஸ்தாபனங்களையும் உருவாக்கி இயங்கச் செய்வதில் ஸார் சர்க்கார் தயக்கம் இன்றி ஏராளமான பணத்தை வாரியிறைத்து வந்தது. மிகவும் சிறந்த முறையில் திட்டம் போட்டு, ஒற்றர் ஸ்தாபனங்கள் திறமையாக இயங்கிவந்தன; கட்சியின் மத்தியக் கமிட்டிவரை ஊடுருவிப் பாயும் அளவுக்கு அதன் வேலை விரிந்து வியாபகமாக இருந்தது. சர்க்காரின் ரகசிய இலாகா திறம்பட இயங்கிவந்தது.

சட்டரீதியான தொழிற்சங்கங்கள், பத்திரிகைகள் ஆகியவையும் இடையீடு இன்றி அடக்குமுறைக்கு இலக்கு ஆயின. புரட்சி காலத்தில் தொழிலாளர் பெற்ற உரிமைகளை மீண்டும் அவர்களுக்கு வழங்காமல் தடைப்படுத்த, சர்க்கார் சகல வழிகளிலும் தளராமல் முயன்றுகொண்டிருந்தது. ஆனால், பழைய நிலைகளுக்குத் திரும்புவது என்பது சாத்தியமாக இல்லை. புரட்சியின் அனுபவத்தால் பொது ஜனங்கள் நிறைய விஷயங்களைத் தெரிந்துகொண்டு இருந்தனர். மீண்டும் மீண்டும் போலீஸ் வியூகத்தைப் பிளந்துகொண்டு, தன்னிச்சையாகவே தொழிலாளர் செயல்பட்டு வந்தனர்.

அந்தக் காலத்தில் சமதர்ம ஜனநாயகவாதிகளிடையே மிகப் பெரிய கொள்கைக் குழப்பம் நிலவிவந்தது. மார்க்ஸின் அடிப்படைத் தத்துவங்களையே

திருத்திவிட முயற்சிகள் நடைபெற்றன; எந்த லோகாயத தத்துவத்தின் அடிப் படையில் மார்க்ஸின் தத்துவம் எழுந்ததோ, அந்த அடிப்படையையே தகர்த்து எறிய முயற்சிகள் நடந்தன. கொள்கைக் குழப்பம் தீவிரமடைந்து, எங்கும் அந்தகாரம் நிலவியது. புதிய, கச்சிதமான மதத்தைச் சிருஷ்டி செய்து, அதற்குத் தத்துவ அஸ்திவாரம் அமைத்து, இந்தச் சங்கடங்களிலிருந்து விடுபட முயற்சி கள் நடந்தன. "கடவுளைத் தேடி அலைபவர்களுக்கும்" "கடவுளைச் சிருஷ்டி செய்பவர்களுக்கும்" கதவுகளைத் திறந்துவிட்ட இந்தத் தத்துவத்துக்கு, பாக்டா னுவ், லூனசார்ஸ்கி, பாஸாராவ் முதலியோர் தலைமை தாங்கினர். தத்துவப் பாதையின் மூலமும் மானசிகவாதத்தை எதிர்த்துப் போராடியதன் மூலமும் மார்க்ஸ், மார்க்ஸீயத்தை உருவகப்படுத்தினர். தமது காலத்தில் லோகாயத தத்துவத்தை விளக்கவும் பரப்பவும் பிளக்கானுவ் அரும்பாடு பட்டார். அஞ் ஞாத வாச காலத்தில், மேற்கூறியவர்களின் தத்துவங்களையும் நூல்களையும் லெனின் கவனமாகவும் அக்கரையோடும் படித்தார். மார்க்ஸீயத்தின் தத்துவ அடிப்படையைத் திருத்த மேற்கொள்ளும் முயற்சியில் ஏற்படும் பலாபலன் களையும் பிற்போக்குவாதம் தலைதூக்கி நிற்கும் காலத்தில் இதனால் விளைகிற தீமைகளையும் எதிர்க்காமல் லெனினால் சும்மா இருக்க முடியவில்லை. ஆகையால் பாக்டானுவையும் அவருடைய வாதத்தையும் லெனின் உக்கிரமாக எதிர்த்தார்.

தத்துவத் துறையில் மாத்திரம் பாக்டானுவ் எதிரியாக இருக்கவில்லை; *ஒட்ஸோவிஸ்டுகளையும் †அல்டிமேட்டமிஸ்டுகளையும் தனக்குப் பக்கபலமாக அவர் ஒன்று திரட்டி வந்தார்.

ஸ்டேட் டூமா மிகவும் பிற்போக்கான ஸ்தாபனமாக மாறிவிட்டது என்றும், ஆகவே, டூமாவில் அங்கம் வகிக்கும் சமதர்ம ஜனநாயகவாதிகளைத் திரும்ப அழைத்துவிட வேண்டும் என்றும் ஒட்ஸோவிஸ்டுகள் கூறிவந்தனர்.

தாங்கள் பேசும் பேச்சுகளை டூமா சபை நிராகரிக்கும் வகையில், சமதர்ம ஜனநாயக அங்கத்தினர்கள் காரசாரமாகப் பேச வேண்டும் என்றும் அப்படிப் பேசுமாறு நாம் இறுதி எச்சரிக்கை விடுக்க வேண்டும் என்றும் அல்டிமேட்ட மிஸ்டுகள் கூறினர்.

ஒட்ஸோவிஸ்டுகளுக்கும் அல்டிமேட்டமிஸ்டுகளுக்கும் அடிப்படையில் எத்தகைய வித்தியாசமும் இல்லை. இந்த அல்டிமேட்டமிஸ்டுகளுக்கு அலெக் ஸின்ஸ்கை ‡மாராட் முதலியோர் தலைமை தாங்கி நடத்தினர். சட்டரீதியான ஸ்தாபனங்களிலும் தொழிற்சங்கங்களிலும் போல்ஷ்விக்குகள் பணிபுரிவதை

---

* ஒட்ஸோவிஸ்டுகள்: ஒட்ஸோவாஸ்டு என்னும் ரஷ்யச் சொல்லிலிருந்து பிறந்த வார்த்தை இது; திரும்ப அழைத்தல் என்பது இதன் பொருள்.

† அல்டிமேட்டமிஸ்டு: இறுதி எச்சரிக்கை செய்பவர்கள் என்பது இதன் பொருள்.

‡ இவர் 1917-ம் பெப்ருவரிப் புரட்சிக்குப் பின்னர், துரோகியாக மாறி விட்டார்; லெனினை ஜெர்மனியர்களின் கையாள் என்னும் அவர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு உழைப்பவர் என்றும் பொய் வதந்திகளைப் பரப்பிப் பிரசாரம் செய்வதில் முனைந்திருந்தார்.

ஓட்ஸோவிஸ்டுகளும் அல்டிமேட்டமிஸ்டுகளும் எதிர்த்தனர். போல்ஷ்விக்குகள் விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும் அவர்கள் உறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் கூறிவந்தனர்.

இந்தக் கொள்கையை லெனின் எதிர்த்தார். இந்தக் கூற்றை அங்கீகரித்தால், அனுஷ்டானரீதியான வேலைகளில் பங்குபெற முடியாது போகும் என்றும், ஜனங்கள் மத்தியிலிருந்து போல்ஷ்விக்குகள் ஒதுக்கப்படுவர் என்றும் தங்கள் ஜீவாதாரமான உரிமைகளுக்காகப் போராடுவதில் ஆரம்பித்து, சிறுகச் சிறுக அவர்களைப் போராட்டத்தில் பயிற்றுவித்து, ஆயுதம் தாங்கிப் புரட்சி செய்யும் அளவுக்கு அவர்களைப் புரட்சிப் பாதையில் போல்ஷ்விக்குகள் நடத்திச் சென்றனர். மிக மிகச் சிக்கலான நிலையிலும்கூட வேலை செய்யத் தன்னைத் தயார் படுத்திக்கொள்வதும், அதே சமயத்தில் புரட்சிக் கொள்கைகளை விட்டுவிடாமல் நிலைநிறுத்திக்கொள்வதும் லெனினீஸத்தின் பரம்பரையும் சம்பிரதாயமும் ஆகும்: போல்ஷ்விக்குகளின் இந்தச் சம்பிரதாயங்களிலிருந்து, ஓட்ஸோவிஸ்டுகள் விலகிக்கொண்டனர். எனவே "ஓட்ஸோவிஸத்தை" எதிர்த்துப் போர்புரிவது என்றால், சோதனையில் வெற்றிபெற்ற போல்ஷ்விக் லெனினிஸ வழியில் போர் புரிவது என்று பொருள்படும்.

முடிவாக, கட்சிக்காகவும் கட்சியின் ரகசிய ஸ்தாபனத்துக்காகவும் உக்கிரமாகப் போர் நடந்த காலம் அது (1908-11)

பிற்போக்குவாதம் தலைவிரித்தாடின காலத்தில் தோல்வி மனப்பான்மைக்கு முதலில் பலியானவர்கள் மென்ஷ்விக்குகளே. இது இயல்பாக நிகழக் கூடியது தான்; ஏனெனில் இந்தக் காலத்துக்கு முன்னரே, பொதுப் போக்கை அனுசரித்து நடக்கவும் புரட்சிக் கோஷங்களின் வேகத்தைக் குறைத்துக்கொள்ளவும் அவர்கள் முனைந்துவிட்டனர். மிதவாதப் பூர்ஷ்வாக்குகளுடன் அவர்கள் பின்னிப் பிணைந்துகொண்டனர். கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று மென்ஷ்விக்குகளில் பெரும்பான்மையோர் முயன்று வந்தது, அவர்களிடம் காணப்பட்ட தோல்விமனப்பான்மையைத் தெற்றென நமக்கு எடுத்துக்காட்டிவிட்டது. கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று சொன்ன இவர்களுக்கு, "கலைப்புவாதிகள்" என்ற பெயர் சூட்டப்பட்டது. போலீஸ் சோதனைகளுக்கும் கைது செய்யப்படுவதற்கும் சட்டவிரோதமான கட்சி வழிகோலுகிறது என்றும் தொழிற்-சங்க இயக்கத்தின் போக்கை இது தடைப்படுத்திவிடுகிறது என்றும் இவர்கள் கூறிவந்தனர். ஆனால், சட்ட விரோதமான கட்சியைக் கலைக்க வேண்டும் என்பது, உண்மையில் பாட்டாளி மக்களின் சுயேச்சையான கொள்கையை வெறுத்து ஒதுக்குவதுபோல் ஆகிவிடும்; இவர்களின் போராட்டப் புரட்சி உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் ஆகும்; அவர்களுடைய செயலையும் ஸ்தாபனத்தையும் ஒற்றுமையையும் பலவீனப்படுத்துவதும் ஆகும்; கட்சியைக் கலைப்பது என்பது மார்க்ஸின் தத்துவங்களையும் முறைகளையும் கைவிடுவதும் ஆகும்.

மார்க்ஸீயத்தைப் பரப்பவும் சந்தர்ப்பவாதத்தை வேரறுக்கவும் அரும்பாடு பட்ட பிளக்கானவ் போன்ற மென்ஷ்விக்குகள், கட்சியைக் கலைப்பது பிற்போக்குச் செயல் ஆகும் என்பதை உணரத் தவறவில்லை. கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்கிற பிரசாரம், மார்க்ஸீயத்தின் அடிப்படைத் தத்துவங்களையே

மறுக்கும் பிரசாரமாக வளரத் தொடங்கியதும், "கலைப்புவாதிகளிடம்" தனக்கு இருந்த தொடர்பைப் பிளக்கானவ் அறுத்துக்கொண்டுவிட்டார். "கட்சி மென்ஷ்விக்குகள்" என்ற பெயரில் தனித்த ஒரு கூட்டத்தையே அவர் அமைத்துக் கொண்டார்.

கட்சிக்காக நடந்த போர் ஸ்தாபனப் பிரசினைகள் பலவற்றைத் தெளிவு படுத்திக்கொள்ள உதவி புரிந்தது. கட்சியின் ஸ்தானத்தையும் கட்சி உறுப்பினர்களுக்கு உள்ள கடமைகளையும் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களும் தலைவர்களும் தெளிவாக உணர்ந்துகொண்டனர்.

உலோகாயதவாத தத்துவத்திற்காகவும், ஜனங்களுடன் நெருங்கித் தொடர்புகொள்வதற்காகவும் லெனின் வகுத்த வழிமுறைகளுக்காகவும் கட்சிக் காகவும் நடந்த போர், அஞ்ஞாதவாசச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் நடைபெற்று வந்தது.

பிற்போக்குவாதம் தலைவிரித்தாடின காலத்தில் ரஷ்ய அஞ்ஞாதவாசிகளின் எண்ணிக்கை பெரும் அளவுக்கு அதிகரித்துவிட்டது. ஸாரின் கொடிய அடக்கு முறையிலிருந்து தப்பிவந்த அவர்கள் உடல் தளர்ந்தும் நம்பிக்கையை அறவே இழந்தும் இருந்தனர். கையில் காசு இல்லாமலும், எதிர்கால வாழ்க்கை எப்படியிருக்குமோ என்பது தெரிய முடியாமலும் ரஷ்யாவிலிருந்து உதவி கிடைக்காமலும் கஷ்டப்பட்டு வருந்தினர். அரசியல் போராட்டத்துக்கு அசாதாரணமான உத்வேகத்தைக் கொடுக்க இவை அனைத்தும் உதவியாக இருந்தன. சில்லரைச் சண்டைகளும் வீண்விவாதங்களும் குறைவில்லாமல் நடந்துவந்தன.

பல வருடங்களுக்குப் பிறகு, அந்தக் காலத்தில் நடந்தவற்றைச் சிந்தித்துப் பார்த்தால், எந்தப் பிரசினையை மையமாகக் கொண்டு, அன்று போர் நடந்ததோ அந்தப் பிரசினை இப்பொழுது துலக்கமாகத் தெரிகிறது. லெனினுடைய கொள்கையும் போக்கும்தான் மிக மிகச் சரியானவை என்பதை அனுபவம் என்பது நமக்கு நிதர்சனமாக நிரூபித்துவிட்டது. ஆனாலும் அந்தப் போராட்டம் அனேகருக்குச் சுவைக்கவில்லை; ஆனால் அத்தகைய போராட்டம் நடந்திராவிட்டால், இயக்கம் மீண்டும் துளிர்த்து எழுந்த காலத்தில், கட்சி தனது கடமையைத் துரிதமாகவும் சரியாகவும் செய்திருக்க முடியாது. அதன் வெற்றிப் பாதை அதிக சிரமமானதாக இருந்திருக்கும். மேற்கூறின போக்குகள் தலை தூக்கின சமயம் இந்தப் போர் நடந்தது. அதுவரை ஒன்றாக நின்று போராடினவர்களுக்குள்ளேயே இந்தப் போர் நடந்தது. இதற்கு லெனின்தான் காரணம் என்று பலர் கருதினர்; அவருடைய சண்டைபோடும் மனப்பான்மை, கச்சிதமான போக்கு, பொறுமையின்மை இவைதான் காரணம் என்று அவர்கள் கருதினர். உண்மையில் கட்சியின் இயக்கத்திற்காகவும் உறுதியான கட்சிக் கொள்கைக்காகவும் சரியான சுதந்திரத்திற்காகவும் நடந்த போராட்டம் அது. விவாதத்துக்கு உரிய பிரசினை மிகச் சிக்கலான பிரசினையாக இருந்த காரணத்தால்தான், விவாதத்தின் போக்கு கடுமையாகிவிட்டது. இந்தப் பிரசினைகளைப் பற்றி, அடிக்கடி அதனதன் சுயரூபத்தை இலிச் இடைவிடாமல் எடுத்துக்காட்டி வந்தார். அப்படிச் செய்திராவிட்டால், அடிப்படையான அம்சங்களே மங்கி மறைந்து போயிருக்கும்.

அந்த வருடங்கள் (1908-11) அன்னிய நாடுகளில் அலைந்து திரிந்த வருடங்கள் மாத்திரமல்ல, மிக முக்கியமான அணியில் - தத்துவ அணியில் - உக்கிரமான போர் நடந்த வருடங்கள் ஆகும் அவை.

இரண்டாம் பகுதி

(1911—14)

ரஷ்யாவில் இயக்கம் புத்துயிர்பெற்ற காலம் இது. வேலைநிறுத்த இயக்கத்தின் வளர்ச்சியும் தொழிலாளர் வர்க்கத்தின் ஏகோபித்த கண்டனத்தைத் தூண்டிவிட்ட லீனா தங்கச் சுரங்கத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகமும் தொழிலாளர் இயக்கப் பத்திரிகையின் வளர்ச்சியும் டூமா சபைக்கு நடந்த தேர்தலும் டூமாவில் சமதர்ம ஜனநாயகக் கட்சி அங்கத்தினர்கள் செய்த வேலையும்—இவை அனைத்தும் கட்சியின் வேலைக்குப் புதிய உருவங்களைக் கொடுத்தன; கட்சி வேலையை விரிவுபடுத்தின. கட்சியில் தொழிலாளர் அங்கத்தினர்கள் அதிகப் பங்குபற்றி, அதில் அதிகமாகச் சேரும்படி செய்து, கட்சிக்கு ஜனங்களுடன் நெருங்கிய தொடர்பை உண்டுபண்ணிக் கொடுத்தன.

ரஷ்யாவுடன் இருந்த தொடர்பு விரைவில் அபிவிருத்தி அடைந்தது. ரஷ்யாவில் நடக்கும் வேலைகளில் கட்சியின் செல்வாக்கு அதிகரித்தது. 1912-ம் வருடம் ஜனவரி மாதம் பிரேக்கில் நடந்த கட்சி மகாநாடு "கலைப்புவாதிகளைக்" கட்சியிலிருந்து விலக்கிற்று. சட்டவிரோதமான கட்சிக்கு அமைந்த வகையில் ஸ்தாபன விதிகளை வகுத்துக் கொடுத்தது; பிளக்கானுவ் போல்ஷ்விக்குகளுடன் சேரவில்லை.

1912-ம் வருடம் நாங்கள் கிராக்கோவுக்குச் சென்றோம். கட்சிக்காகவும் அதன் அமைப்பின் உறுதிக்காகவும் அப்பொழுது வெளிநாடுகளில் வசித்த சிறிய பகுதிகளுக்கு இடையே போராட்டம் நடக்கவில்லை. நாங்கள் கிராக்கோவில் வசித்த காலத்தில், லெனின் வகுத்த வழிகள் ரஷ்யாவில் அனுஷ்டிக்கப்பட்டன; அவை சரியானவை என்பது நடைமுறையில் நிரூபணமாயிற்று. அனுஷ்டான ரீதியான காரியங்களிலும் பிரசினைகளிலும் லெனின் தன் முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

தொழிற்சங்க இயக்கம் ரஷ்யாவில் வளர்ந்தோங்கிவந்த அதே சமயத்தில், சர்வதேச அணியிலும் புயல் வீசத் தொடங்கியது. யுத்த மேகம் மேன்மேலும் அதிகரித்தது. வரவிருக்கும் யுத்தம் உள்நாட்டுப் போராக மாறுமானால், அப்போது பல்வேறு நாடுகளிடையே இருக்கப்போகும் உறவுகளைப்பற்றி இலிச் சிந்திக்க ஆரம்பித்தார். கிராக்கோவில் வசித்தபொழுது போலிஷ் சமதர்ம ஜனநாயகவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளவும், தேசியப் பிரசினைகள் சம்பந்தமாக அவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவும் இலிச்சுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தப் பிரசினைகள் சம்பந்தமாக அவர்கள் செய்கிற தவறுகளை விடாமுயற்சியோடு இலிச் எதிர்த்தார். இது சம்பந்தமாகத் தமது கருத்துகளைத் தெளிவாகவும் நிர்ணயமாகவும் அவர் உருவகப்படுத்தினார். கிராக்கோவில் வசித்த காலத்தில், போல்ஷ்விக்குகள் தேசியப் பிரசினை சம்பந்த

மாகச் சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றினர். அதிக முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் ஆகும் அவை.

மூன்றும் பகுதி

(1914—17)

யுத்தம் நடந்த காலம் இது. எங்கள் வெளிநாட்டு வாழ்க்கையில் தலைகீழ் மாற்றங்கள் உண்டான காலம் இது. சர்வதேசப் பிரசினைகள் முடிவான முக்கியத்துவம் பெற்ற காலம் இது. சர்வதேச இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ரஷ்யப் பிரசினைகளை வியாக்கியானம் செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்ட காலம் இது.

இன்னொரு அஸ்திவாரத்தை மிக விரிவாகவும் சர்வதேசரீதியிலும் அமைத்து, இயக்கத்தை நடத்த வேண்டிய அவசியமும் இப்பொழுது ஏற்பட்டது. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராகவும், இந்த யுத்தத்தை உள்நாட்டுப் போராக மாற்றவும் புதிய இன்டர்நேஷனலுக்கு அஸ்திவாரம் அமைக்கவும் நடுநிலைமை வகிக்கவும் ஒரு நாட்டில் இருந்துகொண்டு, எவ்வளவு பிரசாரம் செய்ய முடியுமோ, அவ்வளவு பிரசாரம் நடைபெற்று வந்தது. யுத்தத்தின் ஆரம்ப வருடங்களில் - 1914-ம் வருடம் இறுதியிலும் 1915-ம் வருடம் முழுவதும்-இந்த வேலைக்காகத் தமது சக்தி முழுவதையும் இலிச் செலவு செய்தார்.

தம்மைச் சுற்றி நடக்கும் சம்பவங்களின் தாக்குதல்களால், லெனினுடைய உள்ளத்தில் புதிய புதிய எண்ணங்கள் உருவாயின; ஏகாதிபத்தியப் பிரசினைகளையும் யுத்தத்தின் தன்மையையும், பாட்டாளி மக்களின் வெற்றிக்குப் பிறகு தோன்றவிருக்கும் புதிய சர்க்காரின் அமைப்பு முறைகளையும் தொழிலாளர் வர்க்கக் கொள்கை, நடைமுறை ஆகியவற்றை வகுக்க, தர்க்கவியல் முறையை எப்படி அனுஷ்டிப்பது என்பது பற்றியும் லெனின் நுணுக்கமாக அலசி ஆராய்ந்தார். நாங்கள் பெர்னிலிருந்து ஸூரிச்சுக்குச் சென்றோம். அங்கே படிப்பதற்கு வசதி அதிகமாக இருந்தது. தமது நேரம் முழுவதையும் எழுதுவதில் லெனின் கழித்தார். பெப்ருவரிப் புரட்சி சம்பந்தமான செய்தி கிடைக்கும்வரை, தமது பொழுது முழுவதையும் லெனின் வாசகசாலைகளிலேதான் போக்கினர். செய்தி கிடைத்ததோ இல்லையோ உடனே ரஷ்யாவுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்தோம்.

பிற்போக்கின் அட்டகாசம்

(ஜினீவா—1908)

நாங்கள் ஜினீவாவுக்கு வந்த அன்று மாலை இரண்டாவது டூமா போல்ஷ்விக் அங்கத்தினர் அலெக்ஸின்ஸ்கை என்பவருக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர். தன் பெர்லின் விலாசத்துக்கு அலெக்ஸின்ஸ்கை எழுதிய கடிதத்துக்கு இலிச் எழுதின பதில் கடிதம் இது. அலெக்ஸின்ஸ்கையும் ஏனைய போல்ஷ்விக் டூமா சபை அங்கத்தினர்களும் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்; ஆனால் அலெக்ஸின்ஸ்கை ரஷ்யாவிலிருந்து தப்பிச்சென்று அப்பொழுது ஆஸ்திரியாவில் வசித்து வந்தார். சில தினங்களுக்குப் பின்னர் மாக்ஸிம் கார்க்கிக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர். இத்தாலிக்கு வந்து காப்ரித் தீவில் தம்முடன் தங்கும்படியாக இலிச்சை, கார்க்கி வற்புறுத்தி வந்தார்.

கட்சி மத்திய கமிட்டியின் சட்டவிரோதப் பத்திரிகை பாட்டாளியைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்ய வேண்டியதிருந்தபடியால், எங்களால் காப்ரிக்குச் செல்ல முடியவில்லை. பிற்போக்குத் தலைவிரித்தாடின, சோதனையான அந்தக் காலத்தில் மத்திய கமிட்டியின் பத்திரிகை மூலம் ரஷ்ய இயக்கத்துக்கு முறையான தலைமையை எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுத்தாக வேண்டும். ஆகவே, காப்ரிக்குச் செல்வது முடியாத காரியமாகும். ஆனல், தமது கடிதத்தில் காப்ரிக்குச் செல்வதாக இலிச் கனவுகண்டார். "காப்ரிக்கு வந்து போவது அவசியமான காரியம்தான்" என்று எழுதிவிட்டு அவர் மேலும் தொடர்ந்து எழுதினர்: "உங்களுக்கு அதிக வேலை இல்லாத சமயத்தில் நான் அங்கே வருவது நலம் என்று நினைக்கிறேன். அப்பொழுதுதான் நாம் ஓய்வுடன் இருந்து தாராளமாகப் பேச முடியும்." கடந்த சில வருஷங்களில் இலிச் அனேக நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ருர்; அனேக விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தார். எனவே, கார்க்கியுடன் மனம்விட்டுப் பேச அவர் பெரிதும் விரும்பினர். ஆனல் பிரயாணத்தை ஒத்திப் போட வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது.

பாட்டாளியை ஜினீவாவிலிருந்து பிரசுரிப்பதா அல்லது வேறு இடத்திலிருந்து பிரசுரிப்பதா என்பதுபற்றி அப்பொழுது முடிவு செய்யவில்லை. ஆஸ்திரியாவில் வசித்த ஆஸ்திரிய சமதர்ம-ஜனநாயகவாதி ஆல்டலருக்கும் அப்பொழுது ஆஸ்திரியாவில் வசித்த ஸோசப்புக்கும்* நாங்கள் கடிதங்கள் எழுதினேம். ரஷ்ய

---

* ஸோசப்பு: பிரபலமான போலந்து சமதர்ம - ஜனநாயகவாதி; போல்ஷ்விக்கு அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, "ஒக்பு"வின் தலைவராக இருந்தவர்; பிறகு தேசியப் பொருளாதார சுப்ரீம் கவுன்ஸின் தலைவராக இருந்தவர்.

எல்லைப்புறத்தை ஒட்டி ஆஸ்திரியா இருந்தது. பத்திரிகையை அச்சிடுவதும் அங்கிருந்து ரஷ்யாவுக்கு அதை அனுப்புவதும் வெகு சுலபம். ஆனால், ஜினீவாவைத் தவிர்த்து வேறு இடங்களில் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட முடியும் என்ற நம்பிக்கை இலிச்சுக்கு இல்லை. எனவே, பத்திரிகையை ஜினீவாவில் அச்சிட ஏற்பாடுகள் செய்தார். முன்பு நாங்கள் இங்கே வசித்தபோது, நாங்கள் விட்டுச் சென்ற, எங்களுக்குச் சொந்தமான அச்சுக்கூடம் அப்படியே இருப்பதைக் கண்டு நாங்கள் ஆச்சரியம் அடைந்தோம். இதனால் சிலவு குறைந்ததுடன் அல்லாமல், சிக்கலும் குறைந்து போயிற்று.

1905-ம் ஆண்டு புரட்சிக்கு முன்னர், ஜினீவாவிலிருந்து முன்னேற்றம் என்ற போல்ஷ்விக் பத்திரிகை வெளிவந்துகொண் டிருந்தது அல்லவா? அதன் கம்பாஸிட்டராக இருந்த தோழர் விளாதிமிராவ் ஜினீவாவுக்கு வந்துசேர்ந்தார். பொது நிர்வாகம் தோழர் டி. எம் கோட்டியா ரெங்கோவின் பொறுப்பில் இருந்து வந்தது. பத்திரிகையை வெளியிடுவதற்கு என ரஷ்யாவிலிருந்து அனுப்பப்பெற்ற தோழர்கள் எல்லோரும் லெனின், பாக்டானவ், இன்னேகென்டி ஆகியோர் பெப்ருவரி மாதத்தில் ஜினீவா வந்து சேர்ந்தனர்.

பெப்ருவரி மாதம் இரண்டாம் தேதி மாக்ஸிம் கார்க்கிக்கு, விளாதிமிர் இலிச் ஒரு கடிதம் எழுதினர். "எல்லாம் தயாராகிவிட்டன; இன்னும் சில தினங்களில் பத்திரிகை வெளிவந்துவிடும். கட்டுரையாளர்களில் தாங்களும் ஒருவராக இருக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். முதல் இதழுக்குத் தாங்கள் ஒரு கட்டுரை எழுதி அனுப்ப முடியுமா என்பதைத் தெரிவியுங்கள். புதுவாழ்வில் வெளிவந்த போலிப் பண்பாடு பற்றிய சில குறிப்புகள் என்பதைப் போன்றோ அல்லது நீங்கள் எழுதிக்கொண்டிருக்கும் நாவலில் ஒரு பகுதியையோ தாங்கள் எழுதி அனுப்பலாம். 1894-ம் வருடத்திலேயே ஜனங்களின் நண்பர்கள் யார்? சமதர்ம-ஜனநாயகவாதிகளுக்கு எதிராக அவர்கள் எவ்வாறு போர் புரிகிறார்கள்? என்னும் தமது புத்தகத்தில் முதலாளித்துவக் கலைகளையும் மத்திய தர வர்க்கத்தின் பாசாங்குத்தனத்தையும் லெனின் விமர்சனம் செய்து இருக்கிறார். இவற்றை அவர் கட்டோடு வெறுத்தார்; இகழ்ந்தும் உரைத்தார். ஆகவே, பாசாங்கு என்பதுபற்றி, மாக்ஸிம் கார்க்கி எழுதின குறிப்புகளை அவர் விரும்பினர்.

கார்க்கியுடன் காப்ரியில் வசித்த லூனசார்ஸ்கைக்கு இலிச் எழுதினர்: "நீங்கள் சௌகரியமாக இருக்கிறீர்களா என்பதுபற்றியும் மீண்டும் வேலையில் ஈடுபட உங்கள் உடல்நிலை இடம் கொடுக்குமா என்பதுபற்றியும் சில வரிகள் எழுதுங்கள்."

பத்திரிகைக்குக் கட்டுரை எழுதியனுப்பும்படி ஆசிரியர் குழாம் (லெனின், பாக்டானவ், இன்னேகென்டி) வியன்னவில் அப்பொழுது இருந்த டிராட்ஸ்கிக்கு ஒரு கடிதம் எழுதிற்று. ஆனல், கட்டுரை எழுதி அனுப்ப டிராட்ஸ்கி மறுத்து விட்டார். போல்ஷ்விக்குகளுடன் ஒத்துழைக்க அவர் உண்மையாகவே விரும்பவில்லை. இதை வெளிப்படையாக அவர் தெரிவிக்கவில்லை; தனக்கு மற்ற வேலைகள் இருப்பதாகக் காரணம் சொல்லி இதை அவர் தட்டிக்கழித்துவிட்டார்.

ரஷ்யாவுக்குப் பத்திரிகையை அனுப்புவதுபற்றிய கவலைகள் தோன்றின. பழைய தொடர்புகளை நாங்கள் புதுப்பிக்க முயன்றோம். முன்பு எல்லாம்

மார்சேல்ஸ் வழியாகக் கப்பல்மூலம் பிரசுரங்களை நாங்கள் ரஷ்யாவுக்கு அனுப்பி வந்தோம். இப்பொழுது காப்ரியில் கார்க்கி வசித்துவருவதால், காப்ரி வழியாகப் பத்திரிகையை அனுப்ப ஏற்பாடு செய்யலாம் என்று இலிச் கருதினர். கப்பல் மூலம் பிரசுரங்களை ஒடெஸ்ஸாவுக்கு அனுப்பவேண்டிய ஏற்பாடுகளை,-கப்பலில் வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்களையும் தொழிலாளர்களையும் கண்டுபேசி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கார்க்கியின் மனைவி மரியா பெட்ரோவ்னு அன்டிரீவாவை வேண்டிக்கொண்டு, விளாதிமிர் இலிச் ஒரு கடிதம் எழுதினர். வியன்னு மூலம் பிரசுரங்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியாக அலெக்ஸின்ஸ்கைக்கும் அவர் ஒரு கடிதம் எழுதினர். இந்தத் துறையில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இலிச்சுக்கு இல்லை. இத்தகைய வேலைகளுக்கு அலெக்ஸின்ஸ்கைக்குத் திறமை போதாது ; ஆகவே "போக்குவரத்து" நிபுணர் பியாட் னிட்ஸ்கைக்கும் நாங்கள் எழுதினேம்......ஜெர்மன் எல்லைப்புற வழியாகப் பிரசுரங்களைக் கடத்திச்செல்லும் காரியத்தை முன்பு அவர் திறமையாக நிர்வகித்தார். பியாட் னிட்ஸ்கி இப்பொழுது ரஷ்யாவில் இருந்தார். போலீஸாரை ஏமாற்றி, கைதியாகாமல் தப்பி, எல்லைப்புறத்தைத் தாண்டி, அவர் எங்களை அடைய எட்டு மாதங்கள் ஆயின ; வரும் வழியில் லாவ் வழியாகப் பத்திரிகையை அனுப்புவதற்கு அவர் ஏற்பாடுகள் செய்துபார்த்தார் ; ஆனல் அந்த முயற்சியில் அவருக்கு வெற்றி கிட்டவில்லை.

1908-ம் வருடம் சரத் காலத்தில் அவர் ஜினீவாவுக்கு வந்தார். அவர் லீப்ஸிக்குக்குச் செல்ல வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம். முன்னர் அவர் அங்கே வசித்திருக்கிறர் ; பழைய தொடர்புகளைப் புதுப்பித்துக்கொண்டு, கடந்த காலத்தில் செய்ததைப் போன்று ஜெர்மன் எல்லைப்புற வழியாகப் பிரசுரங்களை அனுப்ப ஏற்பாடு செய்யும்படி நாங்கள் அவருக்கு யோசனை கூறினேம்; அலெக்ஸின்ஸ்கை ஜினீவாவுக்கு வர முடிவு செய்தார். ரஷ்யாவுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வதில் அவர் மனைவி மிட்டியானு ஐவனேவா எனக்கு உதவியாக இருப்பது என்று தீர்மானித்து இருந்தோம். ஆனல், இவை அனைத்தும் வெறும் திட்டங்கள்தான். ஏனெனில் எங்களுக்கு வந்த கடிதங்களைக்காட்டிலும் நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த கடிதங்கள் தான் அதிகம்.

ஜினீவாவை அடைந்த சில தினங்களுக்குப் பின் பணம் மாற்றுவது சம்பந்தமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது. 1907-ம் வருடம் ஜூலை மாதம் டிப்ளிஸிலுள்ள எரிவான் சதுக்கத்தில் இருந்த சர்க்கார் கஜானுவில் கொள்ளை ஒன்று நடந்தது. புரட்சி இயக்கம் உச்சநிலையில் இருக்கும் காலங்களிலும் கொடுங்கோன்மையை எதிர்த்து விரிவாகப் போர் நடைபெற்றுவரும் காலங்களிலும், சர்க்கார் கஜானுவைக் கொள்ளை அடிப்பது தவறு அல்ல என்பதைப் போல்ஷ்விக்குகள் ஒப்புக் கொண்டனர்; கொள்ளை அடிப்பதற்கு, மாற்றுப் பெயர்தான் பறிமுதல் செய்தல் என்பது. இத்தகைய கொள்ளை ஒன்று டிப்ளிஸில் நடந்தது. இந்தக் கொள்ளையில் கிடைத்த பணம், புரட்சி வேலைகளுக்காக, போல்ஷ்விக்குகள் கைக்கு வந்து விட்டது. ஆனல், அந்தப் பணத்தை உபயோகிக்க முடியவில்லை. ஏனெனில் அவை அனைத்தும் 500 ரூபிள் நோட்டுகளாக இருந்தன; அவற்றை மாற்றியாக

வேண்டும்; ரஷ்யாவில் அவற்றை மாற்ற முடியாது; ஏனெனில் அந்த நோட்டு களின் இலக்கங்கள் எல்லாம் பாங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டு, கண்காணிப்பு இருந்துவந்தது. பிற்போக்கின் அட்டகாசம் தலைவிரித்தாடிற்று; சித்திர வதைக்கு இலக்காகிச் சிறையில் கிடந்து தவிக்கும் புரட்சிக்காரர்கள் சிறையி லிருந்து தப்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டும். செத்து மடிந்து போய்விடாதபடி இயக்கத்தைப் பாதுகாப்பதற்கு, பிரசுரங்கள் அச்சிட ரகசிய அச்சாபீஸ்களை நிறுவ வேண்டும். இவற்றுக்கு எல்லாம் பணம் உடனடியாகத் தேவைப்பட்டது. ஆகவே, பல நகரங்களில் ஏக காலத்தில் இந்த 500 ரூபிள் நோட்டுகளை மாற்று வதற்குப் பல தோழர்கள் முயன்றனர். நாங்கள் ஜினீவாவுக்கு வந்த சில தினங் களில் இத்தகைய முயற்சி ஒன்று ஜினீவாவில் நடந்தது.

போலீஸ் ஒற்றன் ஒருவர்-ஸீட்டோமிர்ஸ்கி என்பவர்-விஷயம் தெரியவந்து இதில் கலந்துகொண்டார். இவர் போலீஸ் ஒற்றன் என்பது அந்தக் காலத்தில் யாருக்கும் தெரியாது. எல்லோரும் அவரைப் பரிபூரணமாக நம்பினர்; ஏற் கனவே பெர்லினில் அவர் காமோவைக் காட்டிக்கொடுத்து இருக்கிறார் என்பதும் தெரியாமல் போயிற்று. ஸீட்டோமிர்ஸ்கி துரோகம் செய்து "டைனமிட்" இருந்த உடுப்புப் பெட்டியுடன் தோழர் காமோவைக் காட்டிக் கொடுத்து விட்டார்; ஜெர்மன் போலீஸ் அவரைக் கைதுசெய்து, நீண்ட காலச் சிறைத் தண்டனையை அவருக்கு விதித்தது. பிறகு ரஷ்ய அதிகாரிகளிடம் ஜெர்மன் போலீஸார் அவரை ஒப்படைத்தனர். நோட்டுகள் மாற்றுவதற்கு நடைபெற்று வருகிற முயற்சியை ஸீட்டோமிர்ஸ்கி, போலீஸாருக்குத் தெரிவித்து அவர்களை எச்சரிக்கை செய்துவிட்டார். எனவே இந்த முயற்சியில் பங்கு எடுத்துக்கொண்ட வர்கள் கைது செய்யப்பட்டனர். ஸூரிச் பகுதியைச் சேர்ந்த லெட்டிஷ் தோழர் ஒருவர் ஸ்டாக்ஹோமில் கைது செய்யப்பட்டார். ரஷ்யாவிலிருந்து சமீபத்தில் வந்த எங்கள் கட்சியின் ஜினீவாப் பகுதியைச் சேர்ந்த ஓல்காராவிச்சும் போக்டாசாரியானும் என். கோட்ஸாமிரியானும் மூனிக்கில் கைது செய்யப் பட்டனர். ஜினீவாவில் ஷீமாஷ்கோ* கைது செய்யப்பட்டார். அவருடைய வீட்டு விலாசமிட்டு, கைதான ஒருவருக்கு போஸ்டுக்கார்டு ஒன்று வந்தது.

இந்தச் சம்பவத்தைக் கண்டு, ஸ்விஸ்நகரவாசிகள் அச்சத்தால் வெலவெலத் துப் போயினர். ரஷ்ய "பறிமுதல்காரர்களைப்பற்றித்தான்" எங்கும் ஒரே பேச்சாக இருந்தது; நானும் இலிச்சும் வழக்கமாகச் சாப்பிடுகிற ஹோட்டலில் ஜனங்கள் இதைப்பற்றிப் பீதியுடன் பேசினர். மூன்றுவது கட்சிக் காங்கிரஸுக் குத் தலைமை வகித்தவரும் காகாஷியத் தோழருமான மிஷ்கா தாஷ்காயா அப்பொழுது ஜினீவாவில் வசித்தார். முதன் முதலாக எங்களைக் காணவந்த பொழுது, காகாஷிய உடையுடன் அவர் வந்தார். அவருடைய தோற்றத்தைக் கண்டு நாங்கள் வசித்த வீட்டுக்காரி பயத்தால் நடுங்கிப்போனுள். அவருடைய தோற்றம் ஒரு கொள்ளைக்காரனைப்போல் இருக்கிறது என்று கருதிய அவள், அலறிப் புடைத்துக்கொண்டு கதவைச் சாத்திவிட்டாள்.

---

* அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, இவர் பொது சுகாதாரக் கமிஷராக நியமிக்கப்பட்டார்.

அன்று ஸ்விட்ஸர்லாந்து சமதர்ம ஜனநாயகக் கட்சியில் தீவிர சந்தர்ப்ப வாதம் தலைவிரித்து ஆடியது. என். ஏ. ஷீமாஷ்கோ கைது செய்யப்பட்ட பொழுது, தங்கள் நாடுதான் உலகிலேயே மிகச் சிறந்த ஜனநாயக நாடு என்றும் நீதி வழங்குவதில் தங்கள் நாடு இணையற்றது என்றும் எனவே தங்கள் தேசத்தில் தனி உடைமைக்கு எதிராகப் பலாத்காரச் செயல்கள் நடைபெறுவதைத் தாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்றும் ஸ்விட்ஸர்லாந்து சமதர்ம ஜனநாயகவாதிகள் கூறினர்.

கைதிகளைத் தாய்நாட்டுக்கு அனுப்பிவிட வேணும் என்று ரஷ்ய சர்க்கார் கோரியது; ஒரு நிபந்தனையின்மீது இந்த விஷயத்தில் தலையிட, ஸ்விஸ் சமதர்ம ஜனநாயகவாதிகள் இசைந்தனர். கைது செய்யப்பட்ட தோழர்களில் ஒருவர் ஸூரிச் பகுதியைச் சேர்ந்தவர். ஸ்டாக்ஹோமில் கைது செய்து செய்யப்பட்ட சிறுவன் சமதர்ம ஜனநாயகவாதி என்பதற்கும் ஸூரிச்சிலேயே அவன் நிரந்தரமாக வசிப்பவன் என்பதற்கும் ஸூரிச் பகுதியினர் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று அவர்கள் கோரினர். மென்ஷ்விக்குகளின் ஆதிக்கத்தில் இருந்துவந்த ஸூரிச் பகுதி இதற்கு உடன்படவில்லை. ஷீமாஷ்கோவுக்கும் தங்களுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்றும் ஷீமாஷ்கோ சமதர்ம ஜனநாயகவாதி அல்ல என்றும் ஸ்டட்கார்டு காங்கிரஸில் அவர் ஜினீவாப் பகுதியின் பிரதிநிதியாக இருக்கவில்லை என்றும் மென்ஷ்விக்குகள் அவசரப்பட்டுப் பெரீனி பத்திரிகைகளில் எழுதிவிட்டனர்.

1905-ம் வருடம் நடந்த மாஸ்கோப் புரட்சியை மென்ஷ்விக்குகள் கண்டித்தனர். மிதவாதப் பூர்ஷ்வாக்களை அச்சுறுத்தும் அனைத்தையும் அவர்கள் எதிர்த்தனர். புரட்சி தோல்வியடையவிருந்த சமயம், முதலாளித்வ அறிவாளிகள் அதை ஆதரிக்காமல் இருந்ததற்குக் காரணம் அவர்களுடைய வர்க்கத் தன்மை அல்ல என்றும் போல்ஷ்விக்குகள் மேற்கொண்ட போர் முறைகள்தான் காரணம் என்றும் மென்ஷ்விக்குகள் கூறினர். புரட்சிப் போர் உச்சநிலையில் இருக்கும்பொழுது புரட்சி வேலைகளுக்காகக் கொள்ளையடிப்பது நியாயமானது என்னும் போல்ஷ்விக்குகளின் வாதத்தை அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்; மிதவாத முதலாளிகளைப் பயமுறுத்தி, போல்ஷ்விக்குகள் அவர்களைத் துரத்திவிட்டனர் என்று மென்ஷ்விக்குகள் கருதினர். எனவே நியாயமாகவோ அநியாயமாகவோ அவர்கள் போல்ஷ்விக்குகளை எதிர்த்தனர்.

1908-ம் வருடம் பெப்ருவரி மாதம் 26-ம் தேதி பி. பி. ஆக்ஸெல்ராட், பிளெக்கானுவுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில், அந்நியநாட்டார் முன், போல்ஷ்விக்குகளை எவ்வாறு அவமதிப்பது என்பதை விளக்கி எழுதி இருந்தார். பணம் மாற்றின விஷயத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் யோசனை கூறினர். இது சம்பந்தமாக ஒரு அறிக்கை தயார் செய்ய வேண்டும் என்றும் அந்த அறிக்கையை ஜெர்மன் பாஷையிலும் பிரெஞ்சுப் பாஷையிலும் மொழிபெயர்க்க வேண்டும் என்றும், அவற்றை நிர்வாகக் கமிட்டிக்கும் ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சிக்கும் காட்ஸ்கி, ஆட்லர் ஆகியோருக்கும் லண்டனில் இருக்கும் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோவுக்கும் அனுப்ப வேண்டும் என்றும் யோசனை கூறினர். பிற்காலத்தில் 1926-ல் பிரசுரிக்கப்பட்ட

ஆக்ஸெல்ராடின் கடிதம், அன்றே போலஷ்விக்குகளின் வழியும் மென்ஷ்விக்கு களின் வழியும் எவ்வளவு தூரம் மாறுபட்டு இருக்கின்றன என்பதைத் தெளிவு படுத்துகிறது.

ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழில் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில், என்.ஏ.ஷீமாஷ்கோ கைது செய்யப்பட்டது சம்பந்தமாக, சர்வதேச சோஷலிஸ்டுப் பூரோவுக்கு விளாதிமிர் இலிச் அதிகாரபூர்வமாக அறிக்கை ஒன்று அனுப்பினர். ஜீஷினியில் இருந்த காலத்தில் ஷீமாஷ்கோவைக் கார்க்கிக்கு நேரடியாகத் தெரியும் என்றால் அவரை ஆதரித்து, ஸ்விஸ் பத்திரிகைகளில் கார்க்கி கட்டுரை எழுத வேண்டும் என்று கார்க்கிக்கு லெனின் ஒரு கடிதம் எழுதினர். விரைவில் ஷீமாஷ்கோ விடுதலை அடைந்தார்.

புரட்சிக்குப் பிறகு அஞ்ஞாதவாசம் நடத்துவது எங்களுக்குச் சிரமமாக இருந்தது. தமது பகல் பொழுதை எல்லாம் விளாதிமிர் இலிச் வாசகசாலையிலேயே கழித்தார்; ஆனால் மாலை நேரத்தை எப்படிக் கழிப்பது என்பது எங்களுக்கு விளங்கவில்லை. மகிழ்ச்சிதராத குளிர்நடுக்கும், வாடகை அறையில் எங்களால் உட்கார்ந்துகொண் டிருக்க முடியவில்லை. ஜனங்கள் மத்தியில் இருக்க நாங்கள் விரும்பினோம். தினசரி மாலை நேரங்களில் சினிமாவுக்கோ அல்லது நாடகங்களுக்கோ நாங்கள் போய்வந்தோம்; ஆனால் இறுதிவரையில் இலிச் அங்கே இருக்க மாட்டார். பாதியில் எழுந்து வெளியே போய்விடுவார். பிறகு, எங்காவது சென்று உலாவிக்கொண் டிருப்பார்; பெரும்பாலும் ஏரிக்கரைக்குச் சென்று அங்கே உலாவுவார்.

எப்படியோ கடைசியாக, பெப்ருவரி மாதத்தில் பாட்டாளியின் முதல் இதழ் வெளியாயிற்று. அதில் விளாதிமிர் இலிச் முக்கியமான கட்டுரை ஒன்று எழுதி இருந்தார்; அதில் அவர் எழுதியிருப்பதாவது:

> "புரட்சிக்கு முன் நாம் பல வருடங்கள் வேலைசெய்து வந்திருக்கிறோம். நாம் கடினமானவர்கள்; கருங்கல்லைப்போல் உறுதிவாய்ந்தவர்கள் என்று சொன்னது வீண்வார்த்தை அல்ல; சமதர்ம ஜனநாயகவாதிகள் கட்டி வளர்த்த பாட்டாளி மக்களின் கட்சி, முதல் ராணுவத் தாக்குதலில் தனக்கு ஏற்பட்ட தோல்வியைக் கண்டு மனம் ஒடிந்துவிடாது; அறிவை இழந்துவிடாது; சாகஸச் செயல்களில் போய் சிக்கிக்கொண்டுவிடாது. இப்பொழுது ஏற்படுகிற, இனி ஏற்படப்போகிற முதலாளித்துவப் புரட்சிகளின் விளைவுகளின்மீது தனது நம்பிக்கையைப் பிணைத்துக்கொள்ளாமல், இந்தக் கட்சியானது சமதர்மத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறது. இதனால்தான் முதலாளித்துவப் புரட்சிகளைப் பீடிக்கின்ற பலவீனம் இதை வந்து பீடித்துப் பலவீனப் படுத்த முடியவில்லை. பட்டாளி மக்களின் இந்தக் கட்சி வெற்றியை நோக்கி முன்னேறுகிறது!"

அந்தக் காலத்தில் விளாதிமிரின் வாழ்க்கையில் ஊடுருவிப் பாய்ந்து நின்ற சிந்தனை யோட்டத்தை இந்த வார்த்தைகள் பிரதிபலிக்கின்றன. தோல்வி ஏற்பட்டிருந்த காலத்திலும்கூட, பாட்டாளி மக்களின் மகோன்னத வெற்றியைப்

பற்றி இலிச் கனவு கண்டுகொண் டிருந்தார்; ஜினீவா ஏரிக்கரைக்கு மாலை வேளைகளில் நாங்கள் உலாவச் சென்றபொழுது இதைப்பற்றி அவர் கூறினர்.

ரஷ்யாவிலிருந்து 1906-ம் வருடம் நாடுகடத்தப்பட்டு 1908-ம் ஆண்டு ரஷ்யாவுக்குத் திரும்பிய தோழர் அடோராட்ஸ்கி* நாங்கள் ஜினீவாவுக்குச் சென்ற சமயம் ஜினீவாவில் இருந்தார். ரஷ்யாவில் அடுத்து நடைபெற விருக்கும் புரட்சியின் தன்மையைப்பற்றி நாங்கள் இலிச்சுடன் நடத்தின சம்பாஷணையை அவர் இப்பொழுது நினைவுகூர்கிறுர். இந்தப் புரட்சியில் சந்தேகத்துக்கு இடமின்றிப் பாட்டாளி மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வர் என்று லெனின் கருதினர். மேற்கூறின கட்டுரையில் பிரதிபலித்த உணர்ச்சியும் அந்தக் காலத்தில் லெனின் கூறின இதர விஷயங்களும் தோழர் அடோராட்ஸ்கியின் வாய்மொழியை ஊர்ஜிதம் செய்கின்றன. பாட்டாளி மக்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள தோல்வி தற்காலிகமானதுதான் என்று இலிச் திடமாக நம்பினர்.

1905-ம் வருட நிகழ்ச்சிகளைப்பற்றி விரிவான ஒரு கட்டுரை எழுதும்படியும் அதில் தொழிலாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது, போராட்டப் பகுதியை நிர்மாணிப்பது, புரட்சிக்கும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் தயார் செய்வது ஆகியவற்றைப்பற்றி விரிவாக எழுதும்படியாக விளாதிமிர் இலிச் என்னிடம் சொன்னர்; 1905-ம் வருட நிகழ்ச்சிகளிலிருந்து என்னென்ன பாடங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்திக் காட்டும்படியும் இலிச் தம்மைக் கேட்டுக்கொண்டதாகத் தோழர் அடோராட்ஸ்கி கூறுகிறுர். புரட்சியால் கிடைத்த அனுபவங்களை மிக மிக ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவை எதிர்கால வேலைக்குப் பெரிதும் பயன்படும் என்றும் விளாதிமிர் இலிச் கருதினர். சமீப காலத்தில் நடந்த போராட்டத்தில் பங்கு எடுத்துக்கொண்டவர்களைக் கண்டால் இலிச் அவர்களை விட மாட்டார்; அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடிக்கொண் டிருப்பார்; ரஷ்யத் தொழிலாளர்களின் கடமை இனி என்ன? இதுபற்றி லெனின் எழுதி இருப்பதாவது:

> "அறிவாளிகளும் மத்தியதர வர்க்கத்தாரும் விரைந்து அசட்டை செய்து ஒதுக்கிவிட்ட, புரட்சிப் போராட்ட சம்பிரதாயங்களைத் தொழிலாளர்கள் பாதுகாக்க வேண்டும். இந்தச் சம்பிரதாயங்களை வளர்த்துப் பலமுடையதாக்க வேண்டும்; ஜனங்களின் மனத்தில் விரிவாகவும் ஆழமாகவும் பதியும்படி செய்ய வேண்டும்; தவிர்க்க இயலாதபடி அடுத்து வரவிருக்கும் ஜனநாயக எழுச்சிக்கு இவற்றை எல்லாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
>
> "தாங்களாகவே இந்த வழிகளை மேற்கொண்டு, தொழிலாளர்கள் கச்சிதமாக நடந்து வருகிறுர்கள். மகத்தான அக்டோபர் டிசம்பர் மாதப் போராட்டங்களில் அவர்கள் உற்சாகத்துடன் பங்கு எடுத்துக்கொண்டனர். நேரடியான இத்தகைய புரட்சிப் போராட்டத்தின் மூலமே தங்கள் நிலைமையை மாற்றிக்கொள்ள முடியும் என்பதை

* மாஸ்கோவில் இருக்கும் மார்க்ஸ்-ஏங்கல்ஸ்-லெனின் ஸ்தாபனத்தின் தலைவராக இப்போது இவர் இருந்து வருகிறுர்.

அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். 'முத லாளிகள் நாங்கள் அடைந்த லாபங்களைப் பறித்துக்கொண்டுவிட்ட னர்; முன்போலவே மேஸ்திரிகள் எங்களைத் துன்புறுத்தி வருகின்ற னர்; ஆனால் பொறுத்திருங்கள்; 1905-ல் மீண்டும் வரும்' என்று அந்தப் பஞ்சாலைத் தொழிலாளி தமது தொழிற்சங்கப் பத்திரிகைக்கு எழுதினாரே அதைத்தான் இன்று தொழிலாளர்கள் சொல்லுகின்றனர்; அல்லது நினைக்கின்றனர்.

"பொறுங்கள்; 1905 மீண்டும் வரும். இதைக் கண்ணோட்டத் துடன் தான் தொழிலாளி, நிலைமையைப் பரிசீலனை செய்கிறார். தொழி லாளர்களுக்கு போராட்டம் நடந்த வருடம், இனி என்ன செய்ய வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்குகிறது. அறிவாளிகளுக் கும் வழிதவறித் துரோகம் இழைத்த மத்தியதர வர்க்கத்தினருக்குமோ இந்த வருடம் பைத்தியக்காரத்தனமான வருடமாகத் தோன்றுகிறது; என்ன செய்யக் கூடாது என்பதற்கு அவர்கள் சம்பந்தப்பட்டவரை இந்த வருடம் உதாரண வருடமாகத் திகழ்கிறது. பாட்டாளி மக்கள் சம்பந்தப்பட்டவரை, புரட்சியின் அனுபவங்களை நுணுக்கமாகப் பரி சீலனை செய்வது என்றால், அந்தக் காலத்தில் கையாளப்பட்ட போர் முறைகளை இன்னும் வெற்றிகரமாகக் கையாள்வது என்று பொருள்; அக்டோபர் வேலைநிறுத்த இயக்கத்தையும் ஆயுதம் தாங்கின டிசம்பர் போராட்டத்தையும் விரிவாகவும் ஒன்றுபட்டதாகவும் வர்க்க உணர்ச்சி மிகுந்ததாகவும் உள்ள போராட்டமாக மாற்றுவது என்று பொருள்."

வரவிருக்கும் வருடங்களைப் புதிய தாக்குதலுக்குத் தயாராகும் வருடங்க ளாக இலிச் கருதினார்; புரட்சிப் போரினால் ஏற்பட்ட ஓய்வு நேரத்தை, புரட்சியை இன்னும் அதிகமாகவும் விரிவாகவும் நடத்துவதற்கு ஏற்ற வகையில் பயன்படுத் திக்கொள்வது அவசியமாகும்.

பிற்போக்கு தலைவிரித்தாடின காரணத்தால் எழுந்துள்ள புதிய நிலைகளுக்கு ஏற்றவாறு எத்தகைய போர் முறைகளைக் கையாள வேண்டும் என்பதை முதலில் நிர்ணயிக்க வேண்டும். ரகசியமாக இயங்கும் அதே சமயத்தில், கட்சி பகிரங்க மாக வேலை செய்யவும் டூமாவில் பேசுவதின் மூலம் தொழிலாளர்களிடமும் விவ சாயிகளிடமும் பேசுவதற்கான வகையில் வசதிகளைச் செய்துகொள்ளவும் வேண் டும். போல்ஷ்விக்குகளில் பலர்-ஓட்ஸோவிஸ்டுகள் எனப்படுவோர்-பிரசினையின் தன்மையைத் தவறாக மதிப்பிடுவதை-மதிப்பிட முயலுவதை இலிச் உணர்ந் தார். புரட்சி உச்சநிலையில் இருந்த காலத்து கையாளப்பட்ட போராட்ட முறை களை அவர்கள் விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண் டிருந்தனர். ஆனால், இவ்வாறு செய்வதன் மூலம், பிற்போக்கு அட்டகாசம் செய்கிற மிகக் கஷ்டமான காலத் தில், உண்மையாகவே அவர்கள் போராட்டத்தை நெகிழவிட்டுவிடுகின்றனர்; புதிய நிலைகளுக்குப் பொருத்தமான திட்டத்தை மேற்கொள்ள மறுக்கின்றனர். ஓட்ஸோவிஸ்டுகளை "இடதுசாரி கலைப்புவாதிகள்" என்று லெனின் வருணித் தார். ஓட்ஸோவிஸ்டுகளை ஆதரித்துப் பேசி, ஒரு தீவிர ஓட்ஸோவிஸ்டாக

அலெக்ஸின்ஸ்கை விளங்கினர். ஜினீவாவுக்கு அவர் திரும்பினதும் இலிச்சுக்கும் அவருக்கும் இருந்த உறவுகளில் நெரிசல் உண்டாயிற்று. எத்தனையோ பிரசினை கள் சம்பந்தமாக அவருடன் இலிச் வாதாடிப் போர்புரிய வேண்டியதாயிற்று. அந்த மனிதருடைய குறுகிய மனப்பான்மையை இலிச் பெரிதும் வெறுத்தார். பிற்போக்கு தலைவிரித்தாடுகிற காலத்தில்கூட, பொதுஜனங்களுடனும் விவசாயி களுடனும் தொடர்புகொள்ளும் முறையில் டூமாவைப் பயன்படுத்திக்கொள் வதைப்பற்றி, அலெக்ஸின்ஸ்கை ஒருசிறிதும் சிந்திக்கவில்லை. இரண்டாவது டூமா கலைக்கப்பட்ட பின்பு, அங்கே பேச முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. எனவே, டூமா விஷயத்தில் அவர் கவனம் செலுத்தவில்லை. அவருக்கு இருந்த மன நிலை இதுவாகும். ஜினீவாவின் சுற்றுச்சார்பில் அவருடைய தற்பெருமையும் காலித்தனமும் தெளிவாகத் தெரிந்தன; என்றாலும் இன்னும் ஒரு போல்ஷ்விக் காகவே அவரை ஜனங்கள் மதித்தனர்.

ஆனால், இந்த விஷயம் அலெக்ஸின்ஸ்கையை மட்டும் பொறுத்த விஷயமாக இருக்கவில்லை. போல்ஷ்விக் பகுதியில் நிலவின பழைய ஒற்றுமை குலைந்துவிட்டது என்பதும் பிளவு ஏற்பட்டுத்தான் தீரும் என்பதும் தெளிவாயின; இந்தப் பிளவு முதன்முதலாக பாக்டானேவுடன் ஆரம்பித்தது.

மார்க்ஸீய தத்துவ விசாரணை என்ற பெயரில் ரஷ்யாவில் ஒரு நூல் வெளிவந்தது. பாக்டானவ், லூனசார்ஸ்கி, பாஸாராவ், சுவாரோவ், பெர்மான், யூஷ்கேவிச், ஹெல்போன்ட் ஆகியோர் இந்த நூலில் கட்டுரைகள் எழுதி இருந்தார்கள். லோகாயத தத்துவத்தைத் திருத்துவதையும், மனித சமூகத்தின் வளர்ச்சி, வர்க்கப் போராட்டம் ஆகியவற்றில் மார்க்ஸ் கொண்டிருந்த லோகா யதக் கருத்துக்களைத் திருத்தி அமைப்பதையும் நோக்கமாகக்கொண்டு இந்தக் கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தன.

இந்தப் புதிய தத்துவம் பல்வகையான மாயவாதங்களுக்கு இடம் அளிப்ப தாய் இருந்தது. அறிவாளிகளிடையே தோல்விமனப்பான்மை தலைதூக்கிநின்ற பிற்போக்கு சகாப்தத்தில், திருத்தவாதம் எளிதில் பரவுவதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஆகவே பிளவு ஏற்படுவதை யாராலும் தவிர்க்க முடியாது.

தத்துவ விசாரணையில் இலிச்சுக்கு எப்பொழுது பிரியம் அதிகம். சைபீரியா வில் சிறைவாசம் செய்தபொழுது, தத்துவம் பற்றிய நூல்களை அவர் சிரத்தை யோடு படித்தார். மார்க்ஸ், ஏங்கல்ஸ், பிளக்கானவ் ஆகியவர்களின் கருத்துக் களை அவர் நன்கு அறிவார். ஹெகல், பியுயர்பாக், காண்டு ஆகியவர்களின் தத்துவ விசாரணை நூல்களையும் அவர் ஆழ்ந்து படித்திருந்தார். தாம் சைபீரி யாவில் இருந்த காலத்தில் காண்டின் தத்துவத்தில் ஈடுபாடுடைய தோழர்களுடன் அவர் காரசாரமாக விவாதம் நடத்தினர். தத்துவங்களைப்பற்றி நியூஸீட் என் னும் பத்திரிகையில் எழுதப்பட்டவற்றை அவர் ஆதரித்தார். பொதுவாகத் தத் துவ சம்பந்தமான நூல்களை எல்லாம் கற்று அவற்றில் அவர் தேர்ச்சி பெற்று உறுதியுடன் நின்றார்.

1908-ம் வருடம் பெப்ருவரி மாதம் கார்க்கிக்கு எழுதிய கடிதத்தில் தமக்கும் பாக்டானவுக்கும் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்களைப் பிரஸ்தாபித்து எழுதி இருந்தார்.

சரித்திரரீதியான, இயற்கைபற்றிய சில அடிப்படை அம்சங்கள் என்னும் பெயரில் பாக்டானுவ் எழுதியுள்ள நூலைத் தன் அஞ்ஞாதவாச வாழ்க்கையின் போது லெனின் படித்தார். ஆனல், அன்று பாக்டானுவ் கொண்டிருந்த கருத்து, அவருடைய எதிர்காலத் தத்துவக் கருத்துக்களுக்கு முன்னேடியாக இருந்தது. 1903-ல் பாக்டானுவும் இலிச்சும் ஒன்றுபட்டு வேலைசெய்தபொழுது, பாக்டானு வின் தத்துவக் கருத்துக்களைப் பிளக்கானுவ் பல முறை எதிர்த்தார். 1904-ல் எம்பீரியோ மானிஸம் என்னும் பாக்டானுவின் புத்தகம் முதல் பகுதி வெளி வந்தது. அதைப் படித்த இலிச் பாக்டானுவின் கருத்துத்தான் தவருனது என்றும் பிளாக்கானுவின் கருத்துத்தான் சரி என்று தாம் கருதுவதாகவும் தெளிவாகக் கூறினர். கார்க்கிக்கு எழுதிய கடிதத்தில் கீழ்வருமாறு இலிச் எழுதி இருந்தார்.

"1904-ம் வருட வேனிற்காலத்திலும் சரத்காலத்திலும் போல்ஷ் விக்குகள் என்ற முறையில் நானும் பாக்டானுவும் ஒரு ஒப்பந்தத்துக்கு வந்தோம். தத்துவத்தை நடுநிலை விஷயமாக மதித்து, அதுபற்றி விவாதிக்காமல் இருப்பது என்றும் நாங்கள் முடிவுக்கு வந்தோம். புரட்சி நடந்தபொழுது, இந்த முடிவுப் பிரகாரம் நாங்கள் நடந்து கொண்டோம்; இதனல் புரட்சிகரமான சமதர்ம ஜனநாயகப் போர் முறைகளை - அதாவது போல்ஷ்விஸத்தை - நாங்கள் ஒருமுகப்பட்டுக் கடைப்பிடித்து ஒழுகினேம்; இந்த முறைகள்தான் நாம் மேற்கொள்ள வேண்டிய முறைகள் என்பதுபற்றி எனக்கு அசைக்க முடியாத நம் பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

"புரட்சி உச்சநிலையில் இருந்தபொழுது, தத்துவத் துறையில் கவனம் செலுத்த எங்களுக்கு அவகாசமே கிடைக்கவில்லை. சிறை வாசத்தின்போது, 1906-ம் வருட ஆரம்பத்தில் ஏதோ ஒன்று எழுதி ஞர்; "எம்பீரியோ மானிஸத்தின்" மூன்ருவது பாகம் என்று நினைக் கிறேன். 1906-ம் வருட வேனிற்காலத்தில் அதில் ஒரு பிரதியை அவர் எனக்குத் தந்தார். அதை நான் கவனமாகப் படித்தேன். படித்து முடித்த பிறகு எனக்கு அசாதாரணமான கோபமும் ஆத்திரமும் உண் டாயின. அவர் மார்க்ஸீயத்துக்கு முற்றும் புறம்பான பாதையில் போகிருர் என்பது எனக்கு துலக்கமாகத் தெரிந்துவிட்டது. பிறகு, அவருக்கு நான் ஒரு 'காதல் கடிதம்' எழுதினேன். தத்துவ விசாரணை சம்பந்தமான அந்தக் கடிதம் மூன்று நோட் புத்தகங்கள் முழுதும் நிறைந்துவிட்டது. தத்துவத் துறையில் நான் ஒரு சாதாரண மார்க்ஸ் வாதிதான் என்பதையும் அவர் எழுதியுள்ள தெளிவான, புரியக் கூடிய, அற்புதமான நூல்களின் போக்குத்தான் தவருன போக்கு என் பதையும் பிளக்கானுவின் வழிதான் சரியானது என்பதையும், நான் தெளிவாக அறிந்துகொண்டுள்ள விவரத்தை அவருக்கு எழுதினேன். எனது நோட் புத்தகங்களை லூனசார்ஸ்கி உள்படப் பல நண்பர் களுக்கு நான் படித்துக்காட்டினேன்; தத்துவத்தைப்பற்றிச் சாதாரண மார்க்ஸ்வாதி ஒருவரின் அபிப்பிராயங்கள் என்ற மகுடத்துடன் அந்த நோட் புத்தகங்களைப் பிரசுரிக்க நினைத்திருந்தேன். ஆனல்,

அதை நான் பிரசுரிக்காமல் இருந்துவிட்டேன். உடனே அதை நான் பிரசுரியாது இருந்தற்காக இப்போது வருந்துகிறேன்.

"மார்க்ஸீய தத்துவ விசாரணை என்ற புத்தகம் வெளிவந்துவிட்டது. சுவாரோவின் கட்டுரை ஒன்றைத் தவிர, அந்தப் புத்தகத்திலுள்ள மற்ற கட்டுரைகளை எல்லாம் படித்துவிட்டேன். அதையும் இப்பொழுது படித்துக்கொண் டிருக்கிறேன். அதிலுள்ள கட்டுரை ஒவ்வொன்றும் ஆத்திரத்தைக் கிளறிவிடுகிறது. இத்தகைய கருத்துக்களைப் பிரசாரம் செய்ய வந்திருக்கும் பிரசுரம் ஒன்றுக்குக் கட்டுரை எழுதுவதைவிட, இத்தகைய கூட்டத்தில் ஒருவனுய் இருப்பதைவிட, ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடப்பதையே நான் விரும்புவேன்.

"தத்துவ விசாரணையைப்பற்றிச் சாதாரண மார்க்ஸ்வாதி ஒருவரின் கருத்துக்கள்" என்ற தலைப்பு மீண்டும் என் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆகவே நான் எழுத ஆரம்பித்து இருக்கிறேன். விசாரணை என்ற நூலை நான் படித்துவந்தபொழுது என் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை ஒளிவு மறைவு இன்றி நேரே பாக்டானுவுக்குத் தெரிவித்துவிட்டேன்."

இந்தச் சம்பவத்தை மேற்கண்டவாறு வருணித்துக் கார்க்கிக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர்.

வெளிநாட்டிலிருந்து பாட்டாளியின் முதல் இதழை 1908-ம் பெப்ருவரி 8-ம் தேதியில் வெளியிட்டபொழுது இலிச்சுக்கும் பாக்டானுவுக்கும் இடையில் இருந்த உறவில் நெரிசல் அதிகமாகிவிட்டது.

தத்துவத் தகராறுகள், போல்ஷ்விக் பகுதியின் அரசியல் பிரிவுகளுக்கு மத்தியில் இடம்பெருதபடி செய்ய முடியும் என்று மார்ச்சு மாதம் இறுதியிலும் கூட இலிச் கருதினர். போல்ஷ்விக் பகுதிக்குள்ளேயே இப்படி நடக்கிற தத்துவத் தகராறுகள், பாக்டானுவின் தத்துவத்துடன் போல்ஷ்விஸம் ஒத்துப்போக முடியாது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிவிடும் என்று இலிச் கருதினர்.

எனினும் போல்ஷ்விக் பகுதி, விரைவில் பிரிந்துகொண்டுவிடும் என்பது நாளுக்கு நாள் தெளிவாகத் தெரிந்தது.

கஷ்டமான இந்தக் காலத்தில் இன்னெகென்டியை இலிச் வெகுவாக நேசித்தார். 1905-வரை வாய்மொழி மூலமாகவே நாங்கள் இன்னேகெண்டியைத் தெரிந்துகொண்டிருந்தோம்; நேரில் அவரைப் பார்த்தது இல்லை. அஸ்டிராகான் அஞ்ஞாதவாச காலத்தில் அவரைச் சந்தித்த லிடியா மைக்கைல் நேவா ஙிப்போவிச் அவரை அளவுகடந்து புகழ்ந்தார்; கிரிஸ்னேவஸ்கை தம்பதிகள் அவரை வெகுவாகப் புகழ்ந்தனர். அவருடன் எங்களுக்கு நேரடியான பரிச்சயமோ அல்லது கடிதப் போக்குவரத்துகளோ இருந்தது இல்லை. இரண்டாவது காங்கிரஸில் மென்ஷ்விக்குகளுடன் மோதல் ஏற்பட்ட பிறகு, கட்சியில் ஒற்றுமை நிலவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அவர் எழுதிய கடிதம் ஒன்று எங்களுக்குக் கிடைத்தது. பிறகு, சமரஸ மத்தியக் கமிட்டியில் அவர் அங்கம் வகித்தார். லியோனிட் ஆண்டிரியோவான் வீட்டில் மத்தியக் கமிட்டி ஏனைய அங்கத்தினர்களுடன் அவரும் கைதானர்.

1905-ம் வருடம் இன்னேகென்டி வேலை செய்வதை இலிச் பார்த்தார். புரட்சி வேலைகளில் இன்னேகென்டி முழு மூச்சுடன் ஈடுபடுவதையும் ஆபத்தான வேலைகளையும் சிரமான வேலைகளையும் அவர் எவ்வாறு செய்து வருகிருர் என்பதையும் இலிச் கண்டார். கட்சிக் காங்கிரஸ்களில் இன்னேகென்டி கலந்து கொள்ளாததற்குக் காரணம் இதுதான். காங்கிரஸ் நடப்பதற்கு முன்னர் பெரும்பாலும் அவர் கைதாகிவிடுவார். போராட்டங்களில் எவ்வளவோ உறுதியுடன் இன்னேகென்டி ஈடுபட்டதையும் இலிச் கண்டார். மாஸ்கோவில் நடந்த போரில் அவர் பங்கு எடுத்துக்கொண்டார்; கிரான்ஸ்டாடில் போர் நடந்த பொழுது அங்கேயும் சென்று அதில் அவர் கலந்துகொண்டார்; இன்னேகென்டி நிறையப் படித்தவர் அல்லர்; பாக்டாஞவில் நடைபெறும் தொழிலாளர் கூட்டங்களில் பேசுவார்; அவருடைய பேச்சைக் கேட்டுத் தொழிலாளர்கள் உணர்ச்சி பெற்றனர்; அவர் பேசின பேச்சுகளை யாரும் குறித்துக்கொள்ளவில்லை. லட்சியத்தில் இன்னேகென்டிக்கு இருந்த பற்றுதலை இலிச் மிகவும் பாராட்டினுர். இப்படிப்பட்ட ஒருவர் ஜினீவாவுக்கு வந்தது இலிச்சுக்குப் பெரு மகிழ்ச்சி அளித்தது. இருவருடைய நடையுடைபாவனைகளும் ஒன்று போலவே இருந்த காரணத்தால், இருவரும் வெகுவாக நெருங்கிப் பழகினர். கட்சிக்கு அவர்கள் இருவரும் விசேஷ முக்கியத்துவம் அளித்தனர்; சட்ட விரோதமான கட்சி, வேலைகளுக்கு முட்டுக்கட்டை போல் இருப்பதால், அதைக் கலைத்துவிட வேண்டும் என்ற கலைப்புவாதிகளை எதிர்த்து உறுதியான போராட்டம் நடத்த வேண்டும் என்று இருவரும் ஒன்று போலவே கருதினர். இருவருக்கும் பிளக்காஞவிடம் அளவு கடந்த மதிப்பு உண்டு. கலைப்புவாதிகளுடன் அவர் சேராமல் இருப்பதைக் கண்டு இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர்; தத்துவத் துறையில் பிளக்காஞவின் முடிபுகளே சரியானவை என்று இருவரும் கருதினர்; பாக்டாஞவின் போக்கிலிருந்து பிரிந்துகொள்வது மிக மிக அவசியமானது என்னும் தத்துவத் துறையில் இப்போது நடைபெற்று வரும் போராட்டம் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்துவிட்டது என்றும் இருவரும் கருதினர். தமது கருத்துகளை இன்னேகென்டி புரிந்துகொண்டதைப் போன்று, வேறு யாரும் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்று இலிச் அபிப்பிராயப்பட்டார். இன்னேகென்டி எங்கள் வீட்டுக்கு உணவு அருந்த வருவார்; சாப்பாடு முடிந்த பின், வேலைத் திட்டத்தைப்பற்றியும் புதிதாக எழுந்துள்ள நிலைமைகளைப்பற்றியும் இருவரும் விவாதிப்பார்கள்; மாலையில் லாண்டுஹோல்டு கபேயில் இருவரும் சந்தித்து, தங்கள் விவாதத்தைத் தொடர்ந்து நடத்துவார்கள். "தத்துவ போதை" என்பதை ஊட்டி ஊட்டி லெனின் இன்னேகென்டியைக் கவர்ந்தார். "தத்துவ போதை" என்பது லெனின் கொடுத்த பெயர்; மேலே கூறியவை அனைத்தும் அவர்கள் இருவரையும் நெருங்கிப் பிணைத்தன. இந்தக் காலங்களில் எல்லாம் இன்னெகென்டியை லெனின் பெரிதும் நேசித்தார். அந்தக் காலம் மிகவும் சங்கடமான காலம்; ரஷ்யாவில் ஸ்தாபனம் சின்னுப்பின்னப்பட்டுச் சிதைந்து கொண்டிருந்த காலம்; அடுத்துக்கெடுப்பவர்களின் உதவியுடன் போலீஸார், முக்கியமான கட்சி ஊழியர்களைக் கைதுசெய்துவிட்டனர். பெரிய கூட்டங்களுக்கும் மகாநாடுகளுக்கும் ஏற்பாடு செய்வது சாத்தியப்படாமல் இருந்தது.

ஜனங்களின் கண்களில் மிகப் பெரியவர்களாகச் சமீபத்தில் தோன்றியவர்கள், உடனடியாகத் தலைமறைவாக வாழ்வது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. வசந்த காலத்தில்-அதாவது ஏப்ரல் மே மாதங்களில்-காமனிவும் வார்ஸ்க்கியும் வீதியில் கைதுசெய்யப்பட்டனர்; வார்ஸ்க்கி, போலந்திய சமதர்ம ஜனநாயகவாதி; ஸெர்ஸின்ஸ்கி, டிஸ்கோ, ரோஸா லக்ஸம்பர்க் ஆகியவர்களின் நெருங்கிய நண்பர்; சில தினங்களுக்குப் பிறகு ஸினோவியெவ்வும் என். எ. ரோஸ்கோவும் (போல்ஷ்விக், மத்திய கமிட்டி அங்கத்தினர்) கைது செய்யப்பட்டனர். இதனால் ஜனங்கள் பயந்து தங்கள் தங்கள் குடிசைக்குள் பதுங்கிக்கொண்டனர். நடந்தவற்றைப்பற்றி அவர்கள் சிந்திக்க விரும்பினர்; பொதுவான கிளர்ச்சி எல்லோருக்கும் சலிப்பை அளித்தது; யாருக்கும் திருப்தி ஏற்படவில்லை. அரசியல் வகுப்புகளில் ஜனங்கள் உற்சாகத்துடன் சேர்ந்தனர்; ஆனால், வகுப்புகளை நடத்தத்தகுந்த தலைவர்கள் கிடைக்கவில்லை; ஓட்ஸோவிஸம் வளர்வதற்கு இந்த நிலை அதிக சாதகமாக அமைந்துவிட்டது; போராடும் பகுதிகளுக்குக் கட்சி ஸ்தாபனம் தலைமை தாங்க முடியவில்லை. பொதுஜனப் போராட்டத்துடன் தொடர்பின்றி, அவை தனித்துப் போர்புரிந்து சோர்வடைந்தன. இவற்றின் பயனாய் எழுந்த சிக்கல்கள் பலப்பல; இன்னேகென்டி இவற்றை எல்லாம் சமாளித்து அனேக தடவைகள் சிக்கறுத்தார்.

பாக்டானவ், பாஸாராவ் முதலியவர்கள் அந்தச் சமயம் காப்ரியில் வசித்தார்கள்; ஆகவே, காப்ரிக்கு வரும்படியும் முயன்று ஒரு சமரஸ முடிவு எடுக்கலாம் என்றும் தெரிவித்து இலிச்சைக் காப்ரிக்கு வரும்படியாகக் கார்க்கி அழைத்தார்; ஆனால், சமரஸம் சாத்தியம் இல்லை என்று கருதியபடியால் இலிச் காப்ரிக்குச் செல்லவில்லை ஆகவே கீழ்வரும் கடிதத்தை ஏப்ரல் மாதம் 16-ம் தேதி, கார்க்கிக்கு இலிச் எழுதினர்:

> ''நான் அங்கே வருவது பிரயோஜனகரமாய் இராது; தீமைதான் அதிகரிக்கும்; விஞ்ஞான சமதர்மத்துக்கும் மதத்துக்கும் இடையில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று பிரசாரம் செய்யக் கிளம்பி இருப்பவர்களுடன் நான் எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டேன்; என்னால் வைத்துக்கொள்ளவும் முடியாது. விவாதிப்பதில் பிரயோஜனம் இல்லை; வீணே தன் நிலையைத் தானே நிலைகுலையச் செய்துகொள்வது அசட்டுத்தனமாகும்.''

எனினும், கார்க்கியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல், மே மாதம் காப்ரிக்குப் புறப்பட்டுச் சென்று அவருடன் இலிச் சில தினங்கள் தங்கினர். பாக்டானவின் தத்துவக் கருத்துக்கள் பற்றிச் சமரஸம் எதுவும் ஏற்படவில்லை. ''இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு நாம் பிரிந்திருப்போம்'' என்று பாக்டானவிடமும் பாஸாராவிடமும் தான் சொன்னதாகவும், கார்க்கியின் மனைவி மரியா பெடரோவ்னா சிரித்துக்கொண்டே தன்னைக் கட்டுப்படுத்தியதாகவும் இந்தச் சம்பவத்தைக் குறித்து இலிச் கூறினர்.

கார்க்கியின் வீட்டில் எப்பொழுதும் ஒரே கூட்டம்; சந்தடியும் கூச்சலும் அதிகம்; பலர் சதுரங்கம் ஆடினர்; மற்றவர்கள் படகோட்டி மகிழ்ந்தனர்;

இந்தப் பிரயாணத்தைக் குறித்து இலிச் அதிகம் பேசவில்லை. அங்கே தாம் கண்ட இயற்கைக் காட்சிகளையும் அந்த ஊரில் தயாரிக்கப்படும் மதுவின் மேன்மையையும் பற்றியே அவர் அதிகம் சிலாகித்துப் பேசிக்கொண் டிருந்தார். ஆனால், அங்கே நடந்த பெரிய விஷயங்களைப்பற்றி, நடந்த சர்ச்சைகளைப்பற்றி, அவர் எதுவுமே கூறவில்லை. அவர் மனதுக்கு அதிக வேதனை அளிக்கும் விஷயம் அது.

மீண்டும் தத்துவ நூல்களை இலிச் முழு மூச்சுடன் படித்தார்.

இந்தக் காலத்தில் நிலவிய தன்மையினை, விவரித்துத் தோழர் வோருவஸ்கிக்கு 1908-ம் வருடம் கோடை காலத்தில் இலிச் ஒரு கடிதம் எழுதினர். இந்தத் தோழர் முன்னேற்றத்திலும் 1905-ம் வருடப் புரட்சிக் காலத்திலும் இலிச்சோடு சேர்ந்து வேலை செய்தவர். இலிச் கடிதம் எழுதிய சமயம் வோருவஸ்கி ஒடெஸ்ஸாவில் இருந்தார்; அந்தக் கடிதத்தின் வாசகம் வருமாறு:

> அருமை நண்பரே! உங்கள் கடிதத்திற்காக வந்தனம். ஆனால், உங்கள் 'சந்தேகங்கள்' இரண்டும் தவருனவை; நான் ஆத்திரப்படவில்லை; ஆனால் நிலைமை மிகவும் கஷ்டமானது ஆகும்; பாக்டானவுடன் ஏற்பட்ட நெரிசல் தவிர்க்க முடியாதது; தமது தத்துவக் கருத்துக்களைப் பிர்சங்கங்களில் கடுமையாகக் கண்டிப்பதை அவர் விரும்பவில்லை. (ஆசிரியர் குழாம் கூட்டங்களில் கண்டிப்பதை அல்ல.) தற்பொழுது எது எதில் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கப் பாக்டானவ் பெரு முயற்சி செய்து வருகிறர். அவரும் அலெக்ஸின்ஸ்கியும் இப்பொழுது *பகிஷ்கார கோஷத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர்; அலெக்ஸின்ஸ்கி சதா சண்டைபோடும் இயல்புடையவர்; அவருக்கும் எனக்கும் இருந்த தொடர்புகளை எல்லாம் நான் துண்டித்துக்கொண்டுவிட்டேன். "எம்பிரியோ மானிஸ்டு பகிஷ்காரத்தைக் காரணமாகக் கொண்டு, அவர்கள் பிரிந்து செல்ல முயலுகின்றனர். விரைவில் விஷயம் அரங்கத்துக்கு வந்துவிடும்: அடுத்த மகாநாட்டில் இதுபற்றிய போராட்டம் ஏற்படாமல் போகாது; அப்போது பெரும்பாலும் பிளவு ஏற்படலாம். "இடது சாரி" வழியும் "பகிஷ்காரவாதமும்" உண்மையில் மேற்கொள்ளப்பட்டால், உடனே நான் பகுதியைவிட்டு விலகிக்கொள்வேன். நீங்கள் வந்தால், நிலைமையைச் சமாளிப்பது அதனல் எளிதாகலாம்; அதனல்தான், விரைவில் வருமாறு உங்களை வேண்டுகிறேன்; ஆகஸ்டு மாதம் நடைபெறப்போகும் மகாநாட்டுக்குப் பிரதிநியாக, நீங்களே வருவீர்கள் என்று நாங்கள் நம்புகிறேம்; வெளிநாட்டுக்குச் செல்லும் வகையில் உங்கள் வேலைத் திட்டத்தை நீங்கள் வகுத்துக்கொள்ளுங்கள். பிரயாணத்துக்கு அவசியமான பணத்தை எல்லாப் போல்ஷ்விக்குகளுக்கும் நாங்கள் அனுப்பித் தருகிறேம்; உண்மையான பிரதேச ஊழியர்களை மாத்திரமே பிரதிநிதிகளாய் தேர்ந்து அனுப்புங்

* டூமா சபை பகிஷ்காரம்.

கள் என்று பிரதேச ஸ்தாபனங்களுக்கு எல்லாம் யோசனை கூறுங்கள். நமது பத்திரிகைக்கு எழுதும்படி உங்களை வேண்டுகிறேன். கட்டுரைகளுக்கு முறையாகப் பணம் கொடுக்க எங்களால் முடியும். உங்கள் அன்புள்ள."

"நான் எழுதப்போகும் தத்துவ சம்பந்தமான நூலைப் பிரசுரிக்க முன்வரும் பிரசுரகர்த்தர்கள் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?"

அந்தக் காலத்தில் போல்ஷ்விக்குகளிடம் போதிய அளவு பணம் இருந்தது. மோரோஸோவின்* மருமகனும் மாஸ்கோவிலுள்ள மரத் தொழிற்சாலை ஒன்றின் சொந்தக்காரருமான வாலிபர் நிக்கோலாய் பாவ்லோவிச் ஸ்கிமிட் 1905-ம் வருடம் தொழிலாளர் இயக்கத்தில் பங்கு எடுத்துக்கொண்டார்; போல்ஷ்விக் கட்சியில் சேர்ந்தார். புது வாழ்வை ஆரம்பிக்கவும் ஆயுதங்கள் வாங்கவும் அவர் பண உதவி செய்தார்; தொழிலாளர்களுடன் நெருங்கிப் பழகினர்; அவர்களின் சிறந்த நண்பராக விளங்கினர். ஸ்கிமிட்டின் தொழிற்சாலையை "பேய்கள் தங்கும் இடம்" என்று போலீஸார் கூறினர். மாஸ்கோ எழுச்சியில் அவருடைய தொழிற்சாலை பெரும் பங்கு எடுத்துக்கொண்டது. நிக்கோலாய் பாவ்லோவிச் கைது செய்யப்பட்டார்; சகல விதமான சித்திரவதைகளுக்கும் அவர் சிறையில் இலக்கானர். அவருக்குச் சொந்தமான தொழிற்சாலையில் தாங்கள் இழைத்துள்ள அட்டூழியங்களைக் காண்பதற்காகப் போலீஸார் அவரை அங்கே அழைத்துச் சென்றனர்; கொலை செய்யப்பட்ட தொழிலாளர்களை அவருக்குக் காட்டினர்; இறுதியாக, சிறையில் அவரையும் கொன்றுவிட்டனர். சாவதற்கு முன்பு, தமது சொத்துக்கள் அனைத்தும் போல்ஷ்விக்குகளுக்கு உரியவை என்பதை வெளியில் இருக்கும் தன் நண்பர்களுக்குத் தெரிவித்து அதில் அவர் வெற்றியும் பெற்றார்.

எலிஸாவெட்டா பாவ்லோவ்ன ஸ்கிமிட் என்னும் பெண்மணிக்கு, தன் சகோதரன் நிக்கோலாய் பாவ்லோவிச் ஸ்கிமிட் சொத்துக்களிலிருந்து ஒரு பகுதி கிடைத்தது; தன் பங்குக்குக் கிடைத்த பணத்தையும் போல்ஷ்விக்குகளுக்குக் கொடுக்க அவள் முடிவு செய்தாள். ஆனல், அதற்குரிய வயது அவளுக்கு இன்னும் ஆகவில்லை. அப்படித் தன் இஷ்டம்போல் தனது சொத்தை அவள் விநியோகிக்க வேண்டுமானல், அதற்குரிய உரிமையைப் பெற வேண்டுமானல், அவள் கலியாணம் செய்துகொள்ள வேண்டும். எனவே அந்த உரிமையைப் பெறுவதற்காக அவள் "பொய்க் கலியாணம்" ஒன்று செய்துகொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. போராட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த தோழர் ஒருவர், தான் சட்டரீதியாக வாழ்வதற்கு உரிய வழிகளைச் செய்து வைத்துக்கொண்டார். அவர் பெயர் இக்னட்டியாவ். அவருக்கும் எலிஸாவெட்டா பாவ்லோவ்னவுக்கும் சட்டரீதியான முறைப்படி திருமணம் நடந்தது. இக்னட்டியாவின் அதிகாரபூர்வமான மனைவியான பிறகு, தம் கணவன் சம்மதத்துடன், தமது சொத்தைத் தமது விருப்பம்போல் செலவு செய்ய எலிஸாவெட்டா பாவ்லோவ்னவுக்கு உரிமை கிடைத்தது. ஆனல், நடந்தது உண்மையில் "பொய்க் கலியாணமே." எலிஸா

* பஞ்சாலை முதலாளி.

வொட்டா பாவ்லோவ்னு உண்மையில் இன்னெரு போல்ஷ்விக் விக்டர் பிரா ஓட்டா என்பவரின் மனைவி ஆவாள். அதிகாரபூர்வமாக நடந்த அந்தத் திருமணம், சட்டபூர்வமாகப் பாத்தியதை கொண்டாடி, தமது பங்கை உடனே பெற அவருக்கு வசதி அளித்தது. அந்தப் பணத்தை அவர் போல்ஷ்விக்குகளுக்குக் கொடுத்துவிட்டார். இதனுல்தான் பாட்டாளியில் வெளியாகும் கட்டுரைகளுக்குப் பணம் தருவதாகவும், மகாநாட்டுக்கு வரும் போல்ஷ்விக் பிரதிநிதிகளின் பிரயாணச் செலவை ஏற்பதாகவும் இலிச் திடமாக எழுதியிருந்தார்.

வேனிற்காலத்தில் விக்டர் தாராதூட்டா ஜினீவாவுக்கு வந்தார். நிர்வாக வேலைகளில் அவர் எங்களுக்கு உதவிபுரிந்தார். மத்தியக் கமிட்டியின் அயல்நாட்டுக் கிளையின் காரியதரிசி என்ற முறையில், அவர், அயல்நாடுகளில் இருந்த கட்சி ஸ்தாபனங்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தினர்.

படிப்படியாக ரஷ்யாவுடன் தொடர்புகள் ஏற்பட்டன; கடிதப் போக்குவரத்துகள் ஆரம்பமாயின; எனினும் எனக்குப் போதிய அவகாசம் இருந்தது. நீண்டகாலம் வெளிநாடுகளில் இருக்கவேண்டிய நிலை ஏற்படும்போல் எங்களுக்குத் தோன்றியது. எனவே உள்ளூர் சமதர்ம ஜனநாயகக் கட்சி வேலையில் பங்கு பெற விரும்பி, அதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு நான் பிரெஞ்சு மொழி கற்பது என முடிவு செய்தேன். ஜினீவா சர்வகலாசாலையில் அன்னியர்களுக்குப் பிரெஞ்சு மொழி பயிற்றுவிக்கும் பகுதி ஒன்று இருந்தது. அந்தப் பகுதியில் நான் சேர்ந்தேன்; அந்நியநாட்டு ஆசிரியர்களின் நடைமுறைகளைக் கவனித்து ஆராய்ந்தேன்; அங்கே நான் பிரெஞ்சு மொழியை மட்டும் கற்கவில்லை. ஸ்விஸ் நாட்டவர்களைப் போன்று முறையாகவும் உறுதியாகவும் இதயபூர்வமாகவும் வேலை செய்யவும் நான் கற்றுக்கொண்டேன்.

தத்துவ நூல் எழுதிய காரணத்தால் தளர்ந்திருந்த இலிச், எனது பிரஞ்சு இலக்கண நூலையும் பாஷையின் சரித்திர சம்பந்தமான நூல்களையும் பிரஞ்சு மொழியின் விசேஷத் தன்மைகள்பற்றிய நூல்களையும் படுக்கையில் படுத்துக் கொண்டு மணிக்கணக்கில் படித்தார்; தத்துவத் தகரார்றுகளால் தளர்ந்து போயிருந்த தமது நரம்புகள் சாந்தம் அடையும்வரையில் படித்தார்.

ஜினீவாவில் நடைமுறையில் இருந்துவந்த கல்விமுறையை நான் பரிசீலனை செய்ய ஆரம்பித்தேன். முதலாளித்துவ "ஆரம்பப்" பள்ளிகளின் நிலைமை என்ன என்பதை முதன் முதலாகத் தெரிந்துகொண்டேன். ஒளிபாயும் பெரிய பெரிய ஜன்னல்களுடன் கூடிய நேர்த்தியான கட்டிடங்களில், தொழிலாளர்களின் குழந்தைகள் பணிவுள்ள அடிமைகள் ஆவதற்காக எவ்வாறு பயிற்றுவிக்கப்படுகிருர்கள் என்பதைக் கண்டேன்; ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்களில், தொழிலாளர் குழந்தைகளின் காதுகளை உபாத்தியார்கள் திருகுவதையும் ஆனல், பணக்காரர்களின் குழந்தைகளைத் தண்டிக்காமல் இருப்பதையும் கண்டேன். குழந்தையின் சுயேச்சையான சிந்தனைப்போக்கு எவ்வாறு தடைப்படுத்தப்படுகிறது என்பதையும் குருட்டுப் பாடமாக நெட்டு உருப்போடும் முறை மேலோங்கி நிற்பதையும் செல்வத்தின் அதிகாரத்துக்கு அடிபணிந்து வணங்கச் செய்யும் போதனை குழந்தைகளின் உள்ளத்தில் எவ்வாறு பாய்ச்சப் பெறுகிறது என்பதையும் கண்டேன். ஜனநாயக தேசத்தில் இதைப்போன்ற

சம்பவங்கள் நடக்கும் என்ற எண்ணம் என் மனத்தில் உதித்ததே இல்லை. தெரிந்துகொண்டவற்றை நான் இலிச்சிடம் சொல்லுவது உண்டு. நான் கூறுவதை அவர் கவனமாகக் கேட்டுக்கொள்வார்.

அஞ்ஞாதவாசத்தின் முதல் கட்டத்தில் 1905-ம் வரை பெரும்பாலும் அயல்நாட்டுத் தொழிலாளர் இயக்கங்களில் தன் மனத்தைச் செலுத்தி இலிச் ஊன்றிக் கவனித்து வந்தார். தொழிலாளர்களின் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றிலேதான் விசேஷக் கவனம் செலுத்தினர். 1901-ல் தான் முதன் முதலாக இலிச் அயல்நாடு சென்றார்; அதுவரையில் ரஷ்யாவில் இத்தகைய கூட்டங்கள் நடக்கவே இல்லை. 1905-ம் வருடப் புரட்சிக்குப் பிறகு, ரஷ்யாவில் தொழிலாளர் இயக்கத்தின் மகத்தான எழுச்சியை அனுபவமூலம் கண்ட பிறகு, கட்சியின் போராட்டங்கள், டூமாவின் அனுபவங்கள், குறிப்பாக தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்து சபைகளின் தோற்றம், ஆகியவற்றை எல்லாம் கண்ட பிறகு, அயல்நாடுகளில் தொழிலாளர் இயக்கம் எப்படி நடைபெறுகிறது என்பதை அவர் அக்கரையோடு கவனித்தார்; அதோடு மட்டும் நின்றுவிடாது, முதலாளித்துவ நாடுகளில் ஜனநாயகக் குடியரசின் உண்மையான தன்மை என்ன என்பதையும் பரிசிலனை செய்தார்; முதலாளித்துவக் குடியரசு நாடுகளில் தொழிலாளர்களின் ஸ்தானம் என்ன என்பதையும் அதில் தொழிலாளர்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது, மற்ற கட்சிகளுக்கு எவ்வளவு செல்வாக்கு இருந்துவருகிறது என்பதையும் அவர் பரிசிலனை செய்தார்.

ஷீமாஷ்கோ கைதியானது குறித்து, ஸ்விஸ் பார்லிமெண்டு அங்கத்தினர் ஒருவர் பேசினர்; தங்கள் குடியரசு பல நூறு ஆண்டுகளாக இயங்குகிறது என்றும் சொத்து உரிமைகளுக்குக் குந்தகமான செயல்களுக்கு அது இடம் கொடுக்காது என்றும் அவர் கூறினர். இந்தப்பேச்சைப் பாதி ஆச்சரியத்துடனும் பாதி வெறுப்புடனும் இலிச் நினைவுபடுத்திக் கூறினது எனக்கு நினைவு இருக்கிறது.

எங்களுடைய வேலைத்திட்டத்தில் ஜனநாயகக் குடியரசுக்காகப் போராடுவதும் அப்பொழுது ஒரு அம்சம் ஆகும். முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசு, ஸாரிஸத்தைவிடச் சிறந்ததுதான் என்றாலும், பாட்டாளி மக்களை அடிமைப் படுத்துவதற்காகத்தான் குடியரசு என்ற இந்தக் கருவியும் பயன்படுகிறது என்பதை இலிச் தெளிவாக உணர்ந்தார். ஜனநாயகக் குடியரசில், தங்கள் அதிகாரத்தை எல்லாம் செலுத்தி அதிகாரிகளாய் இருப்பவர்கள், முதலாளித்துவ உணர்ச்சியைச் சமூக வாழ்க்கையில் திணிக்கிறார்கள்.

1905-ம் வருடப் புரட்சியை லெனின் பார்த்திருக்கவில்லை என்றால், இரண்டாவது அஞ்ஞாதவாசத்தை அவர் அனுபவித்து இருக்கவில்லை என்றால், சர்க்காரும் புரட்சியும் என்ற நூலை அவரால் எழுதி இருக்க முடியாது.

தத்துவப் பிரசினைகள் சம்பந்தமாக ஆரம்பமான விவாதம், தத்துவ சம்பந்தமாகத்தான் எழுதிக்கொண்டிருந்த புத்தகத்தை விரைவில் வெளியிட்டு விடவேண்டும் என்ற எண்ணத்தை இலிச்சிடம் உண்டுபண்ணியது. புத்தகத்தை எழுதுவதற்குத் தேவையான சில தகவல்கள் அவருக்கு ஜினீவாவில் கிடைக்கவில்லை. மேலும் அஞ்ஞாதவாச காலத்தில் சிறப்பாக நிலவிவந்த வாய்ச்சண்டையும் வம்பளப்பும் அவருடைய வேலையைத் தடைப்படுத்தின. ஆகையால் லண்ட

னுக்குச் சென்று அங்கே பிரிட்டிஷ் மியூசியத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும் புத்தகத்தை லண்டனிலேயே எழுதி முடித்துவிடவும் இலிச் முடிவுசெய்தார்.

லெனின் லண்டனுக்குச் சென்ற பிறகு, ஜினீவாவில் லூனுசார்ஸ்கி ஒரு பிரசங்கம் செய்வார் என்று அறிவிப்பு ஒன்று வந்தது. அந்தக் கூட்டத்திலும், கூட்டத்தைத் தொடர்ந்து நடந்த விவாதத்திலும் இன்னேகென்டி கலந்து கொண்டார். தமது பிரசங்கத்தின் குறிப்புகளை இன்னேகென்டிக்கு இலிச் அனுப்பியிருந்தார். இன்னேகென்டி அதில் சில மாற்றங்கள் செய்துகொண்டார். பிரசங்கம் நடப்பதற்கு முதல் நாள் அவர் கிளர்ச்சி அடைந்து காணப்பட்டார்; புத்தகங்களுக்கு நடுவே அமர்ந்துகொண்டு, சில குறிப்புகளை அவற்றிலிருந்து எடுத்துக்கொண்டார். அவருடைய பேச்சு அருமையாக அமைந்திருந்தது. பாக்டானுவின் தத்துவக் கருத்துக்களுக்கும் (எம்பீரியோ மானிஸம்) போல்ஷ்விஸத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் தாமும் லெனினும் தர்க்க இயல் லோகாயதத்தை ஆதரிப்பவர்கள் என்றும் பிளக்கானுவின் சார்பு பற்றியவர்கள் அல்ல என்றும் தன் சார்பாகவும் லெனின் சார்பாகவும் அறிவித்தார். லூனுசார்ஸ்கிதான் அன்று முக்கியமான பேச்சாளர் என்ருலும், அன்றைய பிரசங்கத்தின் முக்கிய விமர்சகராகவும் அதை ஆதரிப்பதாகவும் பிளக்கானுவ் விளங்கினர். அவர் இன்னேகென்டியை உக்கிரமாக எதிர்த்தார்.......இதைக் குறித்து இன்னேகென்டி சிறிதும் கவலைப்படவில்லை. இலிச் லண்டனிலிருந்து திரும்பியதும், அந்த விவாதத்தைக் குறித்து இலிச்சுக்கு இன்னேகென்டி விவரமாகச் சொன்னர்.

லண்டன் சென்று திரும்பியது இலிச்சுக்கு மகிழ்ச்சியை அளித்தது. தனக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துப் புத்தகத்தை அவரால் முடிக்க முடிந்தது. லண்டனிலிருந்து லெனின் திரும்பியதும்—ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி—கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில், கட்சியின் மகாநாட்டை விரைவில் கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அவசியமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக இன்னேகென்டி ரஷ்யாவுக்குச் சென்ருர். அப்பொழுது, கட்சியைக் கலைக்க வேண்டும் என்ற வாதம் மென்ஷ்விக்குகளிடையே பெரிதும் பரவி, வியாபகமாகி, உரம்பெற்று வந்தது. கட்சியும் அதன் சட்டவிரோதமான ஸ்தாபனமும் அங்கத்தினர்கள் கைதியாக மட்டும் பயன்படுகிறதே அல்லாமல், வேறு பிரயோஜனமில்லை என்று அவற்றைக் கலைத்துவிட விரும்பினர் கலைப்புவாதிகள். தொழிற்சங்கங்கள், உதவிச் சங்கங்கள் போன்ற சட்டரீதியான ஸ்தாபனங்களில் மாத்திரம்தான் கட்சி ஈடுபட வேண்டும் என்று அவர்கள் கூறினர். பிற்போக்கு தலைதூக்கிநின்ற அந்தச் சமயத்தில், இப்படியான காரியங்களை மேற்கொள்வது என்ருல், புரட்சிகரமான செயல்களையும், தலைமை ஸ்தானத்தையும் இன்னும் மற்ற காரியங்கள் அனைத்தையும் விட்டுவிடுவதாகவே பொருள்படும். போல்ஷ்விக் பகுதியில் இருந்த இறுதி எச்சரிக்கைவாதிகளும் ஒட்ஸோவிஸ்டுகளும் மறு கோடிக்குச் சென்றனர். டூமாவில் கட்சி கலந்துகொள்வதை மாத்திரம் அவர்கள் எதிர்க்கவில்லை; இலக்கிய ஸ்தாபனங்களிலும், கல்வி ஸ்தாபனங்களிலும், கிளப்புகளிலும், பள்ளிக்கூடங்களிலும் சட்டரீதியான தொழிற்சங்கங்களிலும், தொழிலாளர்

களின் இன்சூரன்ஸ் சபைகளிலும் கட்சி கலந்துகொண்டு வேலை செய்வதை அவர்கள் எதிர்த்தனர். பொது ஜனங்களிடையே கலந்து பழகி வேலைசெய்து, தலைமை தாங்கி அவர்களுக்கு வழிகாட்டுவதையும் அவர்கள் நிறுத்திக் கொண்டனர்.

கட்சித் தலைமைக்கு விரிவான பொதுஜனத் தொடர்பு இருக்க வேண்டுவது அவசியமாகும் என்பதுபற்றி இன்னேகென்டியும் இலிச்சும் அடிக்கடி விவாதித்தனர்; கட்சித் தலைமையைப் பாதுகாப்பதற்காக, எந்த விலை கொடுத்தாவது சட்டவிரோதமான ஸ்தாபனத்தைக் கலைக்காமல் இருப்பது அவசியமாகும். கட்சி மகாநாட்டுக்கு வேலைசெய்வது உடனடியான வேலை. மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பிரசாரம் செய்யும்பொழுது வலதுசாரிக் கலைப்புவாதிகளுக்கும் இடதுசாரிக் கலைப்புவாதிகளுக்கும் எதிராகப் பலத்த கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இன்னேகென்டி ரஷ்யாவுக்குச் சென்றார்; செயிண்டு பீட்டர்ஸ்பர்க்கில் இருந்துகொண்டு, அலுவல்களைக் கவனித்தார். மத்தியக் கமிட்டி அங்கத்தினர்கள் ஐந்து பேர்களை—இன்னேகென்டி, மென்ஷ்கோவஸ்கி, மென்ஷ்விக் எம். ஐ. பிராய்டோ, பண்டின் பிரதி, லெட்டிஷ் பிரதி ஆகியவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை வேலை செய்வதற்காக ஏற்படுத்தினர். செய்தி ஸ்தாபனம் ஒன்றையும் இன்னேகென்டி ஏற்படுத்தினர். கொலூப்கோவ் அதில் அங்கம் வகித்தார்; கட்சி மகாநாட்டின் மத்திய கமிட்டிப் பிரதிநிதியாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1908-ம் வருடம் டிசம்பர் மாதம் நடந்த இந்த மகாநாட்டுக்கு இன்னேகென்டியால் வர முடியவில்லை. மகாநாட்டுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், வெளிநாட்டுக்கு டிக்கட்டு வாங்கிக்கொண்டிருந்த பொழுது, வார்ஸா ரயில்வே ஸ்டேஷனில் அவர் கைது செய்யப்பட்டார்; வோலொக்டா மாகாணத்துக்கு நாடுகடத்தப்பட்டார்.

இன்னேகென்டி ரஷ்யாவுக்குத் திரும்பியுள்ளதைப் போலீஸார் நன்குக அறிவர். ஸிட்டோமோர்வஸ்கிதான் அவர்களுக்குத் தகவல் கொடுத்தான் போலும். இரண்டாவது டூமா சபை அங்கத்தினர் ஸெரோவின் மனைவி "லூஸா," இன்னேகென்டி நிர்மாணித்த மத்திய கமிட்டி தகவல் ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்காக வந்தாள்; "லூஸா" போலீஸ் உளவாளி என்பது விரைவில் தெரியவந்தது.

இன்னேகென்டி ரஷ்யாவுக்குச் சென்ற பிறகு, இலிச் தமது தத்துவ நூலை* செப்டம்பரில் எழுதி முடித்தார். அது 1909-ம் வருடம் மே மாதம் வெளி வந்தது.

நாங்கள் ஜினீவாவிலே ஸ்திர வாசம் செய்யத் தொடங்கிவிட்டோம்.

என் தாயாரும் வந்து சேர்ந்தாள்; குடித்தன வாழ்க்கையை நாங்கள் சிறிய அளவில் ஆரம்பித்தோம். சிறிய அறை ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டோம்; வெளிப்பார்வைக்கு எங்கள் வாழ்க்கை அமைதியாக ஓடியது. ரஷ்யாவிலிருந்து மரியா இலிச்சினவும் வந்து சேர்ந்தார்; ஏனைய தோழர்களும் வர ஆரம்பித்தார்கள். கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிப்

---

* மெட்டிரியலிஸம் அண்டு எம்பிரியோ கிரிட்டிஸிஸம்.

படித்துக்கொண்டிருந்த தோழர் ஸ்க்ரிப்னிக்கும் வந்து சேர்ந்தார். கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி,ஸ்விஸ் சட்டசபை அங்கத்தினர் ஷிக்கோவை (இவர் சரியான சந்தர்ப்பவாதி) தோழர் ஸ்க்ரிப்னிக் சந்திக்கச் சென்றார். அப்பொழுது மொழி பெயர்த்து உதவும் பொருட்டு நானும் அவருடன் சென்றேன். இந்தப் பேட்டியால் பயன் எதுவும் ஏற்படவில்லை. இந்தப் பிரசினையை ஷிக்கோவும் ஸ்க்ரிப்னிக்கும் வெவ்வேறு கோணங்களிலிருந்து கவனித்தார்கள்; ஸ்க்ரிப்னிக் இந்தப் பிரசினையைப் புரட்சிக் கண்ணோட்டத்துடன் கவனித்தார்; ஷிக்கோ, இதை நன்கு நிர்வகிக்கப்படும் ஒரு ''வியாபாரக் கடை''யாகக் கருதினார்.

ஷினோவிவும் லிலினாவும் ரஷ்யாவிலிருந்து வந்து சேர்ந்தார்கள்; லிலினாவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவளும் ஷினோவிவும் ஒரு சிறிய வீட்டில் குடித்தனம் செய்தனர். காமனீவும் அவருடைய குடும்பத்தாரும் வந்தனர்; செயிண்டு பீட்டர்ஸ்பர்க்கில் வசித்த எங்களுக்கு, சிறிய அமைதியான மத்தியதர வர்க்க ஜினீவா நகரம் மந்தமாகத் தோன்றியது; ஏதாவது ஒரு பெரிய நகருக்குப் போய்விட நாங்கள் விரும்பினோம். மென்ஷ்விக்குகளும் சமதர்மப் புரட்சிக்காரர்களும் பாரீஸ் நகருக்குச் சென்று இருந்தனர்; ஆகையால் அங்கே செல்ல இலிச் தயங்கினார். ஜினீவாவில் வாழ்க்கைச் செலவு குறைவு என்றும், படிக்க வசதி அதிகமாக அங்கே இருக்கிறது என்றும் இலிச் கருதினார். கடைசியாக லியாடாவும் ஸிட்டிரோமிஸ்கியும் பாரீஸிலிருந்து வந்தனர்; பாரீஸுக்கு வந்து விடும்படி எங்களை அவர் வற்புறுத்தினர். இதற்குச் சாதகமாக அவர்கள் பல காரணங்களைக் கூறினர்.

(1) பிரெஞ்சு இயக்கத்தில் கலந்துகொள்ள முடியும்.

(2) பாரீஸ் பெரிய நகரமாதலால், போலீஸ் ஒற்றர்களின் தொந்திரவு குறைவாக இருக்கும்.

இரண்டாவது கூறின காரணம் சரியான காரணம் என்று இலிச்சுக்குத் தோன்றியது. ஆகையால் இலையுதிர் கால இறுதியில் நாங்கள் பாரீஸுக்குப் போனோம்.

அஞ்ஞாதவாசத்தின் மிகக் கஷ்டமான வருடங்களை நாங்கள் பாரீஸில் கழித்தோம்; அந்த வருடங்களை வருத்தத்துடன் இலிச் ஞாபகப்படுத்திக்கொண்டார்; ''எந்தப் பேய் தூண்டி நாம் பாரீஸுக்குப் போனோமோ'' என்று அவர் அடிக்கடி கூறுவார். எந்தப் பேயும் தூண்டவில்லை; ஆனால் ரஷ்ய அஞ்ஞாதவாசத்தின் மத்தியில், மார்க்ஸீயத்துக்காகவும், லெனினிஸத்துக்காகவும், கட்சிக்காகவும் போராட வேண்டிய அவசியம் பாரீஸுக்குப் போகும்படி தூண்டியது; பிற்போக்கு ஆதிக்க காலத்தில் பாரீஸ் நடுநாயகமாக விளங்கியது.

பாரீஸ்

(1909—10)

1908-ம் வருடம் டிசம்பர் மாத மத்தியில் நாங்கள் பாரீஸுக்குப் புறப் பட்டோம்; 21-ம் தேதி கட்சி மகாநாடு நடைபெற ஏற்பாடு ஆகி இருந்தது; இதில் கலந்துகொள்ள மென்ஷ்விக்குகளும் இசைந்தனர்; மகாநாடு சம்பந்தமான வேலைகளில் இலிச் பரிபூரணமாக ஈடுபட்டார். நிலைமையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமும், கட்சி வழியை நேராக்க வேண்டிய அவசியமும், கஷ்ட காலத்திலும் சாதாரணத் தொழிலாளர்களை விட்டுப் பிரிந்துநிற்காத, கஷ்டங்களைச் சமாளிக்கவும் புதிய போராட்டங்களுக்கு அவர்களைத் தயார் படுத்தும் முன் அணிப்படையாக, வர்க்க உணர்ச்சிப் படைத்ததாகக் கட்சியை ஆக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டன. கட்சியைக் கலைத்துவிட வேணும் என்று கூறுபவர்களையும் கட்டுப்படுத்தியாக வேண்டும். ரஷ்யாவுடன் இருந்து வந்த தொடர்புகள் அவ்வளவு சரியாக இருக்கவில்லை. ரஷ்யாவிலுள்ள ஸ்தா பனங்களிடமிருந்து மகாநாட்டுக்குப் போதிய ஆதரவை எதிர்பார்க்க முடிய வில்லை. மாஸ்கோவிலிருந்து இரண்டு தோழர்களும் யூரல் பிரதேசத்திலிருந்து பால்ட்டுரினும் ஆகியவர்களே பிரதிநிதிகளாக இதுவரை வந்திருந்தார்கள். இரண் டாவது நாள் மூன்றுவது டூமா சபை அங்கத்தினர், போலிடாட்வீவ் செயின்டு பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து வந்திருந்தார். ஒட்ஸோவிஸ்டுகள் தனிப் பகுதியாகப் பிரிந்து இயங்கியதோடு, அதிகப் பரபரப்புடன் காணப்பட்டனர். கட்சி மகாநாடு ஆரம்பமாவதற்கு முன்பு வெளிநாடுகளில் வசித்த மென்ஷ்விக்குகள் பாஸ்லியில் தனியாக ஒரு மகாநாடு கூடினர்; அதில் கட்சியைப் பிளவுபடுத்தக் கூடிய பல தீர்மானங்களை நிறைவேற்றினர்; நிலைமை மிகவும் கெடுபிடியாக இருந்தது.

புதிய வீட்டை அமர்த்த நாங்கள் செய்த முயற்சியில் விளாதிமிர் இலிச் அதிகக் கவனம் செலுத்தவில்லை; அவர் யோசிக்க வேண்டிய முக்கியமான பல விஷயங்கள் இருந்தன. நகருக்கு வெளியே கோட்டைக்கு அருகில் இருந்த போனியர் தெருவில் நாங்கள் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தினோம். பார்க்மாண்ட் சௌரீஸுக்கு தொலைவில் இல்லாமலும், அவனியூடி ஆர்லீன்ஸை அடுத்தும் அந்தத் தெரு இருந்தது. வீடு விசாலமாகவும் காற்றேட்டமும் வெளிச்சமும் நிறைந்ததாகவும் இருந்தது. அடுக்களையில் முகம் பார்க்கும் கண்ணாடிகூட இருந்தது; புதிய வீடுகளில் இது ஒரு விசேஷ அம்சம். என் அன்னைக்கு ஒரு அறை; பாரீஸுக்கு வந்திருந்த மரியா இலிச்சினுவுக்கு ஒரு அறை; எனக்கும் விளாதிமிர் இலிச்சுக்கும் ஒரு அறை; எல்லோருக்கும் பொது

வான ஒரு அறை; இவ்வளவு அறைகள் அந்த வீட்டில் இருந்தன. எங்கள் வாழ்க்கைக்கு இவ்வளவு பெரிய வீடு பொருத்தமானது அன்று; ஜினீவாவிலிருந்து நாங்கள் அள்ளிக்கொண்டு வந்திருந்த தட்டுமுட்டு சாமான்களும் மேஜை நாற்காலிகளும் இந்த வீட்டுக்குப் பொருத்தமானவை அல்ல. நாங்கள் கொண்டு சென்று இருந்த வெண்மர மேஜைகள், சாதாரணமான குறிச்சிகள், முக்காலிகள் ஆகியவற்றை அங்கிருந்த காவல்காரர்கள் வெறுப்புடன் பார்த்த பார்வையை நாங்கள் மறக்கவே முடியாது. எங்கள் ''பொது அறையில்'' இரண்டு குறிச்சிகளும் சிறிய மேஜை ஒன்றும்தான் இருந்தன. சௌகரியத்துக்குப் போதுமான சாமான்கள் அல்ல இவை.

வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. ஜினீவாவில் வீட்டு வேலைகள் எளிதாக இருந்தன. ஆனால், இங்கேயோ எல்லாம் சிரமமாக இருந்தன;...... வீட்டு வேலைகளைக் கவனிக்க எனக்குப் போதிய அனுபவம் இல்லை. ஆனால் விளாதிமிரும் இன்னேகென்டியும் வேறு விதமாக நினைத்தனர். வீட்டு வேலைகளில் உண்மையான தேர்ச்சி பெற்றிருந்தவர்களோ சாதாரணமான எனது எளிய முறைகளைக் கண்டு என்னை வெகுவாகக் குறை கூறினர்.

பாரீஸில், வாழ்க்கை, சந்தடியும் சலசலப்பும் நிறைந்ததாக இருந்தது. அந்தக் காலத்தில் ரஷ்ய தேச பக்தர்கள், பல பகுதிகளிலிருந்தும் பாரீஸுக்குச் சென்றனர். அந்த ஆண்டு, இலிச் வீட்டில் அதிகம் தங்கவில்லை. எங்களைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் இரவில் நெடுநேரம் சிற்றுண்டிச்சாலைகளிலே தங்கி விடுவர். தாராதூடா சிற்றுண்டிச்சாலைகளுக்குச் செல்லப் பிரியப்பட்டு அடிக்கடி அங்கே போய்வந்தார்; இந்தப் பழக்கம் படிப்படியாக மற்றவர்களையும் பற்றிக் கொண்டது.

1908-ம் வருடம் டிசம்பர் மாதம் கட்சி மகாநாடு நடந்தது. காரசாரமான விவாதத்துக்குப் பிறகு, நாங்கள் ஒரு பொதுத் திட்டத்தை மேற்கொள்வது என முடிவுசெய்தோம். கட்சி முழுமைக்கும் சமதர்ம ஜனநாயகவாதி என்ற பத்திரிகையே கட்சிப் பத்திரிகையாக இருப்பது என முடிவு செய்தோம். மகாநாடு முடிந்த பிறகு நடந்த மத்திய கமிட்டிக் கூட்டத்தில் லெனின், ஸீனேவீவ், காமனீவ், மார்டோவ், மார்க்லெவ்ஸ்கை ஆகியவர்களைக்கொண்ட புதிய ஆசிரியர் குழாம் அமைக்கப்பட்டது. அந்த வருடத்தில் எட்டு இதழ்கள் வெளி வந்தன. ஆசிரியர் குழாத்தில் இருந்தவர்களில் மார்டோவ் ஒருவர்தான் மென்ஷ்விக் கட்சியைச் சேர்ந்தவர்; அவர் அடிக்கடி தமது மென்ஷ்விக் கொள்கையை மறந்துவிடுவார்; மார்டோவுடன் சேர்ந்து வேலைசெய்வது மகிழ்ச்சிகரமாய் இருக்கிறது என்றும் அவர் மிகவும் திறமைவாய்ந்த பத்திரிகைக்காரர் என்றும் ஒரு முறை திருப்தியோடு விளாதிமிர் இலிச் என்னிடம் சொன்னர். இந்த நிலை டான் வரும்வரைதான் நீடித்து இருந்தது.

எனினும் போல்ஷ்விக்குகளுக்குள்ளே போல்ஷ்விக்குகளுக்கும் ஒட்ஸோவிஸ்டுகளுக்கும் இருந்த உறவு அறுந்துபோகும் கட்டத்தை அடைந்தது. அவர்கள் போல்ஷ்விக் கொள்கையை உக்கிரமாக எதிர்த்தனர்; பெப்ருவரி மாத இறுதியில் அவர்களுடன் இருந்துவந்த உறவு முற்றும் அறுந்துபோயிற்று.

பிளவுக்கு மூன்று வருடங்களுக்கு முன், பாக்டானுவுடனும் அவரைச் சேர்ந்தவர்களுடனும் நாங்கள் கூடி வேலை செய்தோம்; கூடி வேலை மட்டும் செய்யவில்லை; சேர்ந்து போராடவும் செய்தோம். அருகே நின்று ஒன்றாகப் போராடுவது, மற்றெல்லாவற்றையும்விட, மனிதர்களை ஒருவரோடு ஒருவரை நெருக்கமாகப் பிணைக்கிறது. லட்சியத்தில் ஆர்வம் ஏற்படும்படி செய்வதிலும் தமது ஆர்வத்தைப் பிறருக்கு ஊட்டுவதிலும் அதே சமயத்தில் அவர்களுக்குள்ளே பொதிந்து கிடக்கும் நல்ல அம்சங்களை வெளிப்படுத்துவதிலும் விளாதிமிர் இலிச் இணையற்றவர். இலிச்சுடன் வேலைசெய்த தோழர்கள் ஒவ்வொருவரும், அவருடைய ஒரு பகுதி இயங்குவது போன்று இணைந்து ஒன்றாக வேலை செய்தனர். அவருக்கும், அவர்களுக்கும் ஏதோ ஒரு நெருங்கிய பிணைப்பு இருந்ததுபோலும். பகுதிக்குள்ளே நடந்த போராட்டம் நரம்புகளை முறித்தன. ஒட்ஸோவிஸ்டுகளுடன் காரசாரமாக விவாதம் நடத்திவிட்டு, முகவாட்டத்துடனும் சோர்ந்தும் பேச முடியாமலும் இலிச் வீடு திரும்புவார். அவரை என்னுல் அடையாளம் தெரிந்துகொள்ள முடிவது இல்லை. சந்தடியிலிருந்தும் போராட்டத்திலிருந்தும் விலகியிருந்து, நைஸ் என்ற ஊருக்குச் சென்று ஒரு வாரம் அவர் ஓய்வு எடுத்துக் கொள்வது நலம் என நாங்கள் முடிவுசெய்தோம். அங்கே சென்று சில தினங்கள் வசித்துவிட்டுத் தேக ஆரோக்கியத்துடன் அவர் திரும்பிவந்தார்.

பாரீஸிலிருந்து படிப்பது மிகவும் சிரமமாய் இருந்தது. ''பைபிளியோ தெக் நாஷனல்'' நாங்கள் வசித்த இடத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தது. விளாதிமிர் இலிச் அங்கே சைகிளில் போய்வருவார்; ஜினிவாவின் சுற்றுப்புறங்களில் சைக்கிளை ஓட்டுவதைப்போன்று, பாரீஸில் ஓட்டுவது அவ்வளவு எளிதல்ல. அதிகக் கஷ்டத்துடன்தான் பாரீஸில் சைக்கிள் ஓட்ட முடியும். சைக்கிள் சவாரி செய்து செய்து இலிச் களைத்துப்போனுர். மத்தியானம் சாப்பாட்டு நேரத்தில் வாசகசாலையை மூடிவிடுவார்கள். வாசகசாலையிலிருந்து புத்தகங்களை வாங்குவதற்கு நிரம்பச் சிரமப்பட வேண்டும். ஆகவே அந்த வாசகசாலையையும் பாரீஸையும் இலிச் சபித்தார். வேனிற் காலத்தில் ஜினீவாவில் பிரஞ்சு பாஷை கற்றுக்கொடுத்த பிரஞ்சு பேராசிரியர் ஒருவருக்கு நல்ல வாசகசாலையைச் சிபார்சு செய்யும்படி நான் கடிதம் எழுதினேன். தேவையான தகவல்களுடன் உடனே எனக்கு ஒரு பதில் கடிதம் வந்தது. பேராசிரியர் சிபார்சு செய்த வாசகசாலைகள் யாவற்றையும் இலிச் சுற்றிப்பார்த்தார்; ஒன்றும் அவருடைய தேவைக்கு ஏற்ற வாசகசாலையாக இல்லை. இறுதியாக அவருடைய சைக்கிள் களவு போய்விட்டது; ''பைப்ளியோ தெக் நாஷனலுக்கு'' அருகில் இருந்த ஒரு வீட்டின் மாடிப்படிக்குக் கீழே சைக்கிளை வைத்துவிட்டு வாசகசாலைக்கு இலிச் செல்வது வழக்கம். அதைப் பார்த்துக்கொள்வதற்காக, காவல்காரிக்கு நாள் ஒன்றுக்குப் பத்து செண்டு வீதம் இலிச் கொடுத்துவந்தார். சைக்கிள் களவு போனதும், சைக்கிளைப் பார்த்துக்கொள்ளத் தாம் இசையவில்லை என்றும் மாடிப்படிக்குக் கீழே சைக்கிளை வைத்துக்கொள்ள மாத்திரம்தான் தாம் அனுமதி அளித்ததாகவும் அந்தக் காவல்காரி கூறிவிட்டாள்.

பாரீஸிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மிகுந்த கவனத்துடன் சைக்கிள் ஓட்ட வேண்டும்; ஒரு நாள் ஜினீவாவுக்குச் செல்லும் வழியில், இலிச் சென்ற

சைக்கிளும் ஒரு மோட்டாரும் மோதிக்கொண்டன; இலிச் சைக்கிளிலிருந்து கீழே குதித்துத் தப்பித்துக்கொண்டார்; ஆனால், சைக்கிளோ தூள் தூளாக நொறுங்கிப் போயிற்று.

ஸால்விஸியோ கோட்ஸ்க்கிலிருந்து தப்பித்து இன்னேகென்டி வந்து சேர்ந்தார். தன்னுடன் வந்து வசிக்குமாறு ஸீட்டோமோர்வஸ்கை அவரை அன்புடன் அழைத்தார். இன்னேகென்டி நோயுற்று வந்திருந்தார். நாடு கடத்தி அவரை அழைத்துச் சென்றபொழுது, அவர் கால்களில் பிணைத்திருந்த விலங்குகள் அழுத்தி அழுத்திச் சதை நைந்து, கால்களில் ஆழமான காயங்கள் ஏற்பட்டு விட்டன. இன்னேகென்டியைப் பரிசோதனை செய்த டாக்டர்கள், அவருக்கு அனேக நல்லுபதேசங்களைச் செய்தார்களே யல்லாமல், அவர்களால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. பிரஞ்சுப் பேராசிரியர் டுபோஷியரைக் காணச் சென்றார் இலிச். இவர் சிறந்த சஸ்திர நிபுணர்; 1905-ம் ஆண்டு நடந்த புரட்சியின்போது ஒடெஸாவில் வேலை செய்துகொண் டிருந்தவர். இவர் ஒடெஸ்ஸாவில் வசித்தபொழுது அவருடன் அறிமுகமுள்ள நாடாஷா ஹாப்ரை இலிச்சுடன் கூடச் சென்றார். இன்னேகென்டியிடம் எங்கள் டாக்டர்கள் சொன்ன விநோதமான விஷயங்களைக் கேட்டு டுபோஷியர் உரக்கச் சிரித்தார். "உங்கள் நாட்டு டாக்டர் தோழர்கள் சிறந்த புரட்சிக்காரர்களாய் இருக்கலாம்; ஆனால் டாக்டர்கள் என்ற முறையில் அவர்கள் கழுதைகள்தாம்" என்று அவர் சொன்னார்.

இதைக் கேட்டு இலிச் விழுந்து விழுந்து சிரித்தார்; பட தடவைகளில் டாக்டர் டுபோஷியர் சொன்ன இந்தக் கூற்றைச் சொல்லிச் சொல்லி இலிச் சிரித்திருக்கிறார். எப்படியோ இன்னேகென்டி நீண்ட காலம் சிகிச்சை செய்து கொள்ள நேர்ந்தது.

இன்னேகென்டி வந்து சேர்ந்தது இலிச்சுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. கலைப்புவாதிகளுடன் தமக்கு உள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளப் பிளக்கானவ் ஆரம்பித்து இருப்பதைக் கண்டு இலிச்சும் இன்னேகென்டியும் மகிழ்ச்சி அடைந்தனர். 1908-லிருந்து கலைப்புவாதிகளால் நிர்வகிக்கப்பட்டுவந்த கோலோஸ் சோஷல் டிமாக்கிரடா என்ற பத்திரிகையின் ஆசிரியர் குழாத்திலிருந்து பிளக்கானவ் விலகிக்கொண்டார். தமது ராஜிநாமாவை அவர் வாபஸ் வாங்கிக்கொண்டார். இருந்தும் கலைப்புவாதிகளுடன் அவருக்கு இருந்துவந்த தொடர்பில் நெரிசல் காணப்பட்டது; 1909-ம் வருடம் மே மாதம் 26-ம் தேதி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷ்யாவில் சமூக இயக்கம் என்று மென்ஷ்விக்குகளின் கட்டுரைத் தொகுப்புகளின் முதல் பாகம் வெளி வந்தது. முதலாளித்வ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி மக்கள் தலைமை தாங்கக் கூடாது என்று பாட்ரஸ்ஸாவ் அதில் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதனால் கோலோஸ் சோஷல் டிமாக்கிரடா ஆசிரியர் குழாத்திலிருந்து திட்டமாக ராஜிநாமாச் செய்துவிட்டார். இலிச்சும் இன்னேகென்டியும் பிளக்கானேவுடன் சேர்ந்து காரியங்கள் செய்ய முடியும் என்று இன்னும் நம்பினர். தங்கள் காலத்தில் பிளக்கானவ் செய்த அரும் பெரும் காரியங்களைப் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அறிந்து மதித்ததைப் போன்று, இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்களால் அறிந்து மதிக்க முடியாது; மதிக்கவில்லை.

இலிச்சும் இன்னேகென்டியும் தத்துவப் போரில் சிரத்தையுடன் ஈடுபட்ட னர். ஏனெனில் தத்துவத்தை, போராட்டத்தின் சிறந்த ஓர் ஆயுதம் என்று அவர்கள் இருவரும் கருதினர். தர்க்கவியல் லோகாயத அடிப்படையில் எல்லா நிகழ்ச்சிகளையும் மதிப்பிடும் பிரசினையுடன், தத்துவம் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டுக் கிடக்கிறது என்றும் எல்லாத் துறைகளிலும் அனுஷ்டான ரீதியான போராட்டத்துடன் தத்துவம் பிணைக்கப்பட்டுக் கிடக்கிறது என்றும் இருவரும் கருதினர். தமது புத்தகத்தை விரைவில் பிரசுரிக்க ஏற்பாடு செய்யும் படி அன்ன இலிச்சினவுக்கு விளாதிமிர் எழுதினர். பாட்டாளி ஆசிரியர் குழாத் தின் விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தைக்* கூட்டுவது என்றும் ஓட்ஸோவிஸ்டு களுடன் தங்களுக்கு இருக்கும் தொடர்பைப் பரிபூரணமாக அறுத்துக்கொள் வதைப்பற்றி இந்தக் கூட்டத்தில் முடிவு செய்வது என்றும் தீர்மானிக்கப்பட் டது. தமது சகோதரி அன்ன இலிச்சினவுக்கு மே மாதம் 26-ம் தேதி இலிச் ஒரு கடிதம் எழுதினர். அதில், "இங்குள்ள நிலைமை மிக வருந்தத்தக்கதாய் இருக்கிறது; பிளவு ஏற்பட்டுவிடும் என்று தோன்றுகிறது. இன்னும் ஒன்றரை மாதத்தில் இங்குள்ள யதார்த்த நிலைமையை உனக்கு விளக்க முடியும் என்று நம்புகிறேன்."

இலிச்சின் புத்தகம் மெட்டீரியலிஸமும் எம்பீரியோ கிரிட்டிஸிஸமும் என் னும் நூல் மே மாதம் வெளி வந்தது. தத்துவ சம்பந்தமான வாக்குவாதங் களுக்கு எல்லாம் இந்தப் புத்தகத்தின் மூலம் இலிச் முற்றுப்புள்ளி வைத்துவிட் டார். மதத்தை எதிர்த்துப் போராடும் பிரசினையோடு இந்தப் பிரசினை - அதாவது தத்துவப் பிரசினை - நெருக்கமாகப் பிணைந்து இருக்கிறது என்று லெனின் கருதினர். இதனல்தான் பாட்டாளி கிளப்பில் மதமும் தொழிலாளரும் என்னும் பொருள் பற்றி அவர் பேசினர். பாட்டாளி 45-வது இதழில் மதத் தைப்பற்றித் தொழிலாளர் வர்க்கக் கட்சியின் கருத்து என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையும் சமதர்ம ஜனநாயகவாதி 6-வது இதழில் மதத்தைப்பற்றி வர்க்கங்கள் கட்சிகள் ஆகியவற்றின் கருத்து என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை யும் அவர் எழுதினர். இவற்றில், பாட்டாளியில் வந்துள்ள கட்டுரையில் அடங்கியுள்ள விஷயங்கள் இன்றைக்கும் பொருந்தும். இந்தக் கட்டுரைகளில் மதத்தின் வர்க்கத்தன்மையை இலிச் எடுத்துக்காட்டி வலியுறுத்தி இருக்கிறர். வர்க்கப் போராட்டத்திலிருந்து ஜனங்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்ப வும் அவர்களின் மனத்தைக் கெடுக்கவும் முதலாளிகள் மதத்தைப் பயன்படுத்திக் கொள்கிறர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறர். இந்தத் துறையில் நடத்த வேண்டிய போராட்டத்தை அசட்டை செய்யக் கூடாது என்றும் அதன் போக்கைக் குறைத்து மதித்துவிடக் கூடாது என்றும் அவர் விவாதித்து இருக் கிறர். இதை மிகச் சாதாரணக் கோணத்திலிருந்து அணுகக் கூடாது; மதமானது சமூகத்தில் எப்படி எப்படி வேரூன்றிக்கொண் டிருக்கிறது என்பதை விளக்கி எடுத்துக்காட்ட வேண்டும்; அதன் சகல அம்சங்களையும் எடுத்துக்கொண்டு மொத்தமாக ஆராய வேண்டும்.

---

* இதற்குக் கட்டுரையாளர்களும் பத்திரிகையுடன் வேறு விதத்தில் தொடர்புள்ளவர்களும் அழைக்கப்பட்டனர்.

பதினைந்து வயதுச் சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே மதத்தின் நச்சுத் தன்மையை இலிச் தெரிந்துகொண்டார். சிலுவை அணிந்துகொள்வதையும் மாதாகோயிலுக்குச் செல்வதையும் அப்பொழுதிருந்தே அவர் நிறுத்திக்கொண்டு விட்டார். இன்று இருப்பதைப் போன்று அன்று இவை அவ்வளவு எளிதல்ல.

அசட்டுத்தனங்களிலிருந்து விடுபட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட மதம், வெளிப்பகட்டான அடிமைப் போர்வைகளை அகற்றிவிட்ட மதம் போன்ற நுண்மையான மதங்கள் மற்றவற்றைக் காட்டிலும் அதிக நச்சுத்தன்மை வாய்ந்தவை. இத்தகைய மதங்கள் ஜனங்களிடையே அதிகச் செல்வாக்கைப் பெற முடியும் என்றும் லெனின் கருதினார். கடவுளைச் சிருஷ்டி செய்கிறவர்களை - அதாவது புதிய மதங்களையும் புதிய நம்பிக்கைகளையும் உருவகப்படுத்துகிறவர்களை - இந்த இனத்தைச் சேர்ந்தவர்களாகவே லெனின் கருதினார்.

பாட்டாளியின் ஆசிரியர் குழாத்தின் விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்துக்கு, ஜூன் மாதம் பல பிரதிநிதிகள் வர ஆரம்பித்தனர். விரிவுபடுத்தப்பட்ட இந்த ஆசிரியர் குழாம் உண்மையில் போல்ஷ்விக்குகளின் கேந்திர ஸ்தானமாக விளங்கியது; முன்னேற்றம் சம்பந்தப்பட்டவர்களும் அந்தச் சமயம் இதில் இடம்பெற்று இருந்தனர்.

லெனின், காமனீவ், ஸினோவியெவ், பாக்டானுவ் ஆகியவர்களும் ரஷ்ய போல்ஷ்விக் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளான டோமஸ்கை (பீட்டர்ஸ்பர்க்) ஸூலியாட்டிக்காவ் (மாஸ்கோ) நாக்ரோயாக்காவ் (யூரல் பிரதேசம்) ஆகியவர்களும் மத்திய கமிட்டி அங்கத்தினர்கள் இன்னுகென்டி, ரைக்காவ், கோல்டன்பர்க், தாராதுடா, மாராட் ஆகியவர்களும் கலந்துகொண்டனர். இவர்களைத் தவிர்த்து ஸ்க்ரிப்பிங், லீயோபிமர்வ், போலிட்டாயீவ் (மூன்றுவது டூமா அங்கத்தினர்) டேவிட்டாவ் குஜுப்காவ் ஆகியவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஜூலை மாதம் நாலாம் தேதியிலிருந்து பதின்மூன்றும் தேதிவரை இந்தக் கூட்டம் நடந்தது.

ஓட்ஸோவிஸ்டுகள், அல்டிமேட்டமிஸ்டுகள் ஆகியவர்களைப் பற்றியும் கட்சி ஒற்றுமையைப் பற்றியும் விசேஷ போல்ஷ்விக் காங்கிரஸ் கூட்டுவதற்கு எதிராகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காப்ரி - கொள்கையினர் பற்றியும் விசேஷமான விவாதம் நடந்தது. போல்ஷ்விக் பகுதியினரிடையே பிளவு நிச்சயம் உண்டாகும் என்பதை உணர்ந்த பாக்டானுவ், தம்மைப் பின்பற்றுபவர்களைக் கொண்ட ஒரு பகுதியை நிர்மாணிக்க ஆரம்பித்தார். காப்ரியில், சமதர்ம ஜனநாயகப் பிரசாரப் பள்ளிக்கூடம் ஒன்றை, தொழிலாளர்களுக்காக, பாக்டானுவ், அலெக்ஸின்ஸ்கி, கார்க்கி, லூனசார்ஸ்கி ஆகியோர் ஆரம்பித்தனர். இந்தப் பள்ளிக்கூடத்துக்கு, விலோனாவ் என்ற தொழிலாளி, ரஷ்யாவில் மாணவர்களைச் சேர்த்தார். "உறுதியான, நம்பிக்கைக்குப் பாத்திரமான" மாணவர்களாப் பார்த்துச் சேர்த்து அனுப்பும்படியாக அவருக்கு அறிவிப்புகள் இருந்தன. புரட்சியால் ஏற்பட்ட அனுபவங்களுக்குப் பிறகு, தத்துவப் பயிற்சியின் அவசியத்தைத் தொழிலாளர் தெளிவாக உணர்ந்தனர். மேலும் உடனடியான போராட்டத்துக்குரிய அறிகுறிகள் எதுவும் காணப்படாத காலம் அது. எனவே, இத்தகைய வேலைகளுக்கு அவகாசம் கிடைத்த

காரணத்தால் தொழிலாளர்கள் படிப்பதற்காகக் காப்ரிக்குச் சென்றனர். ஆனால், காப்ரிப் பள்ளிக்கூடம் புதிய பகுதிக்கு அஸ்திவாரம் அமைக்கும் என்பதைக் கட்சி வேலையில் தீவிர பங்கு எடுத்துக்கொண்டவர்கள் தெளிவாக உணர்ந்தனர். ஆகவே, பாட்டாளியின் விரிவுபடுத்தப்பட்ட ஆசிரியர் குழாத்தின் கூட்டம், இந்தப் பகுதி ஸ்தாபிக்கப்படுவதைக் கண்டித்து, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. கூட்டத்தின் இந்த முடிவைத் தாம் ஏற்க முடியாது என்று பாக்டானவ் சொன்னதால், கட்சியிலிருந்து அவர் விலக்கப்பட்டார்; கிராஸின் அவரை ஆதரித்தார். போல்ஷ்விக்குப் பகுதியில் பிளவு உண்டாகிவிட்டது.

வசந்த காலத்தில், பாட்டாளியின் ஆசிரியர் குழாம் கூட்டம் நடப்பதற்கு முன்னர், மரியா இலிச்சினு கடுமையாக நோய்வாய்ப்பட்டாள். இலிச் மிகவும் பயந்துபோனர்; அதிர்ஷ்ட வசமாக உரிய காலத்தில் டுபோஷியர் செய்த ஆபரேஷனல் நோய் தடுக்கப்பட்டது. மிகவும் மெதுவாகத்தான் அவள் குணம் அடைந்தாள். பாரீஸிலிருந்து கிராமத்துக்குச் சென்று அவள் ஓய்வு எடுத்துக் கொள்ள நேர்ந்தது.

மகாநாட்டு வேலைகளால் இலிச்சும் களைப்படைந்து போனர்; ஆகவே, மகாநாடு முடிந்ததும் அவரும் கிராமத்துக்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அஞ்ஞாதவாசக் குழப்பத்திலிருந்தும் சந்தடிகளிலிருந்தும் விலகி இருந்து, ஓய்வு பெறுவது அவசியமாயிற்று.

குறைந்த செலவில் சாப்பாட்டு விடுதியும் தங்கும் இடமும் கிடைக்குமா என்று, பிரெஞ்சுப் பத்திரிகைகளின் விளம்பரங்களைத் துருவித் துருவிக் கவனித்தார். சின் - லோரோ பகுதிகளில் - போன் போன் கிராமத்தில் நாள் ஒன்றுக்குப் பத்துப் பிராங் வாடகைக்கு அறை கொடுக்கும் சாப்பாட்டு விடுதி ஒன்று கிடைத்தது. நிரம்ப வசதியான இடம்; நான்கு பேர்கள் ஒரே இடத்தில் தங்க முடியும். நாங்கள் சென்று அங்கே ஒரு மாதம் வசித்தோம்.

போன்-போன் கிராமத்தில் இலிச் ஒரு வேலையும் செய்யவில்லை; கட்சி விவகாரங்களையும் நாங்கள் விவாதிக்கவில்லை. நாங்கள் நாள்தோறும் உலாவச் சென்றோம். பதினைந்து கிலோமீட்டர் தூரத்தில் இருந்த கிளாமார்ட் காடுகளுக்கு அனேகமாக நாள்தோறும் நாங்கள் சைகிளில் சென்று வந்தோம். பிரெஞ்சு வாழ்க்கை முறையை நாங்கள் மேற்கொண்டோம். நாங்கள் வசித்த ஹோட்டலில் தங்கி இருந்தவர்களில் பெரும்பாலோர் ஆபீஸ் குமாஸ்தாக்கள்; வர்த்தகக் குமாஸ்தாக்கள் முதலியோர். நாகரிகம் வாய்ந்த நவீன ஸ்டோர் ஒன்றில் விற்பனைக்காரியாக வேலை பார்த்துவரும் பெண்மணி ஒருத்தி அந்த ஹோட்டலில் இருந்தாள்; தன் கணவருடனும் புதல்வியுடனும் அவள் அங்கே வசித்தாள்; இன்னொருவர், யாரோ ஒரு பிரபு வீட்டில் வேலை செய்பவர்; உறுதியான மத்தியதர வர்க்க மனப்பான்மை படைத்த இந்த மத்தியதர வர்க்கக் கும்பலின் வாழ்க்கை வேடிக்கையாயும் விநோதமாயும் இருந்தது. ஒரு புறம் இவர்கள் நிரம்ப யதார்த்தவாதிகள்; தங்களுக்கு நல்ல உணவும் ஏனைய வசதிகளும் கிடைக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள்; மறு புறம், தங்களை உண்மையான கனவான்களாகப் பிறர் மதிக்க வேண்டும் என்று இவர்கள் விரும்புவார்கள். மாதாம் லாக்கோர்ட் (விற்பனைக்காரி) ஏனையவர்

களிலிருந்து மாறுபட்டவள். அவள் இந்த உலகத்தைச் சேர்ந்தவள்; கதைகள் சொல்வதில் கைதேர்ந்தவள்; அழுத்தம் திருத்தமாகவும் உற்சாகத்துடனும் கதைகள் சொல்லுவாள்; அவள் கூறும் கதைகள் பொருள் பொதிந்தனவாய் இருக்கும். எனினும், தன் புதல்வி மார்த்தாவை ஞானஸ்நானம் செய்துவைக்க அழைத்துச் செல்லும் புனித நாளைப்பற்றியும் அது எவ்வளவு உருக்கமான காட்சியாக இருக்கும் என்பதுபற்றியும் ஆசையுடன் வருணிக்க அவள் தயங்கவில்லை. காரியத்துக்கு உதவாத இந்தச் சளசளத்த பேச்சு எங்களுக்குச் சலிப்பை அளித்தது. ஆகவே, இவர்களை விட்டு விலகி இருந்துகொண்டு, எங்கள் விருப்பம் போல் நாங்கள் வாழ்ந்தோம். மொத்தத்தில் போன் போனில் இலிச்சுக்குப் போதிய ஓய்வு கிடைத்தது.

சரத் காலத்தில் நாங்கள் வேறு வீட்டுக்குச் சென்றோம். அதே பகுதியில் இருந்த ரியூ மேரி ரோஸில் ஒரு வீட்டில் நாங்கள் குடியேறினோம். அந்த வீட்டில் இரண்டு அறைகளும் ஒரு அடுக்களையும் இருந்தன. ஜன்னல்கள் வழியாகப் பார்த்தால் தோட்டம் ஒன்று தெரியும். "பொது அறையை" நாங்கள் அடுக்களையாக உபயோகித்தோம்; மனம் விட்டுப் பேசிய பேச்சுகள் எல்லாம் அங்கேதான் நடந்தன. வஸந்த காலம் தொடங்கியதும் வேலையில் ஈடுபட இலிச் பெரிதும் விரும்பினார். வேலைத்திட்ட அட்டவணை ஒன்றை அவர் தயாரித்துக்கொண்டார். காலை எட்டு மணிக்கு எழுந்திருந்து, "பைபிளியோதெக் நேஷனலுக்குச்" சென்று, பிற்பகல் இரண்டு மணிக்குத் திரும்புவார். வீட்டிலும் நிறைய வேலைகள் செய்வார். அவரைச் சந்திப்பதற்கு இடம் கொடாமல் நான் கவனித்துக்கொண்டேன். அந்தக் காலத்தில் பிற்போக்கின் அட்டகாசம் அதிகமாக இருந்ததாலும் வேலை செய்வது மிகவும் கஷ்டமாக இருந்ததாலும் ரஷ்யாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வந்தது. எங்கள் வீட்டுக்கு விருந்தாளிகள் நிறையப் பேர் வந்தனர்; கூட்டம் கூட்டமாக வந்தனர். ரஷ்யாவிலிருந்து வருபவர்கள் அங்கே என்ன என்ன நடக்கிறது என்பதை உற்சாகத்துடன் வருணிப்பார்கள்; ஆனால் விரைவில் அவர்களுடைய உற்சாகம் குன்றிப் போகும். ஆகவே வயிறு வளர்ப்பதற்கான முயற்சிகளிலும் வாழ்க்கையின் தொல்லைகளிலும் மூழ்கிப் போவார்கள்.

அந்தக் காலத்தில் காப்ரியில் படித்துக்கொண் டிருந்த மாணவர்கள், காப்ரிக்கு வந்து ஒரு சொற்பொழிவு ஆற்றும்படி இலிச்சை அழைத்தனர். இந்த அழைப்பை ஏற்க இலிச் மறுத்துவிட்டார். பள்ளிக்கூடம் பகுதித் தன்மை பெற்று விளங்குகிறது என்றும், ஆகையால், தான் அங்கே வர முடியாது என்றும், அவர்களைப் பாரீஸுக்கு வரும்படியும் இலிச் சொன்னார். காப்ரிப் பள்ளிக்கூடத்தில் உள் போராட்டம் வெளிப்படையாகத் தலைதூக்க ஆரம்பித்தது. நவம்பர் மாத ஆரம்பத்தில் விலோநாவ் உள்பட ஐந்து மாணவர்கள் (மொத்தம் பன்னிரண்டு மாணவர்கள் இருந்தனர்.) தாங்கள் உறுதியான லெனின்வாதிகள் என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கவே, அவர்களைப் பள்ளிக்கூடத்திலிருந்து விலக்கிவிட்டனர். பள்ளிக்கூடம் பகுதித்தன்மை பெற்று விளங்குகிறது என்று லெனின் கூறினது சரிதான் என்பதை இந்த நிகழ்ச்சி

நிரூபிக்கிறது. பள்ளிக்கூடத்திலிருந்து விலக்கப்பட்ட மாணவர்கள் பாரீஸுக்கு வந்தனர். விலோநாவை நாங்கள் முதன் முதலாகச் சந்தித்தது எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. எக்காட்டரினேஸ்லாவில் தாம் செய்த வேலைகளைப்பற்றி அவர் எங்களிடம் சொன்னார். எக்காட்டரினேஸ்லாவிலிருந்து, தொழிலாளி நிருபர் ஒருவர் அடிக்கடி எங்களுக்குக் கடிதங்கள் எழுதுவார்; "மிஷா ஸாவோட்ஸ்கி" என்ற புனைபெயரில் அவர் எழுதி வந்தார். அவருடைய கடிதங்கள் சுவையுடனும் பொருள் செறிந்தும் விளங்கின. கட்சி, தொழிற்சாலை வாழ்க்கை இவைபற்றிய முக்கியமான பிரசினைகளை அந்தக் கடிதங்களில் அவர் வருணித்திருந்தார்.

"உங்களுக்கு மிஷா ஸாவோட்ஸ்கியைத் தெரியுமா?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"ஏன், நான்தான் அவர்" என்று விலோநாவ் பதில் அளித்தார்.

இதைக் கேட்டதும் இலிச்சுக்கு அவர்மீதுள்ள பற்று அதிகரித்தது. அன்று மைக்கேலும் இலிச்சும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். அன்று மாலை கார்க்கிக்குக் கீழ்வரும் கடிதத்தை இலிச் எழுதினார்:

> "அன்புமிக்க அலெக்ஸி மாக்ஸிமிச்! புதிய உள் கட்சியைத் தாங்களும் தோழர் மைக்கேலும்தான் பெரிதும் ஆதரிக்கிறீர்கள் என்று இதுவரை கருதிவந்தேன். எனவே உங்களுடன் நட்பு முறையில் பேச முயலுவது அசட்டுத்தனம் என்று நான் கருதினேன். இன்றுதான் முதன் முதலாக, தோழர் மைக்கேலை நான் சந்தித்தேன். விவகாரங்களைப்பற்றியும் உங்களைப்பற்றியும் நானும் அவரும் மனம் விட்டுப் பேசினோம். அப்பொழுதுதான் உங்களை நான் தவருகப் புரிந்துகொண்டதை அறிந்தேன். ஆம்! தத்துவ ஞானி ஹெகல் சொன்னது உண்மைதான். முரண்பாடுகள் மூலமே வாழ்க்கையில் அபிவிருத்தி ஏற்படுகிறது; ஆனால், ஜீவசக்தி நிறைந்த முரண்பாடுகள், முதலில் மனிதனுடைய அறிவால் கிரகிக்க முடியாத அளவு பொருள் நிறைந்தனவாயும், பல்வேறு தன்மைகள் வாய்ந்தனவாயும் இருக்கின்றன. பள்ளிக்கூடம் புதிய உள் கட்சியின் பிரசார மேடை என்று நான் கருதினேன். தவறு என்பது நிருபணமாகிவிட்டது. இப்படிக் கூறுவதனால், பள்ளிக்கூடம் உள் கட்சியின் பிரசார மேடை அல்ல என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. பள்ளிக்கூடம் அத்தகைய பிரசார மேடையாக இருந்தது; இருக்கிறது. ஆனால், இவ்வாறு சொல்வது முழு உண்மை அல்ல என்பதுதான் இதன் பொருள். சிலர் பள்ளிக்கூடத்தை உள் கட்சியின் பிரசார மேடையாக்க முயன்றனர்; அது அத்தகைய மேடையாக விளங்கியது; ஆனால் அவற்றுடன் யதார்த்த தொழிலாளி வர்க்கத்திலிருந்து, உண்மையில் அபிவிருத்தியடைந்துள்ள தொழிலாளர்களை அது தன்பால் இழுத்தது."

தொழிலாளர் வர்க்கத்தின்மீது தமக்கு உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைக் கடிதத்தின் இறுதியில் இலிச் குறிப்பிட்டிருக்கிருர். பல்வேறு சக்தி

களிலிருந்தும் பகுதிகளிலிருந்தும் தனக்கு என ஒரு கட்சியைத் தொழிலாளர் வர்க்கம் சிருஷ்டி செய்யவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார் :

"என்ன நடந்தாலும் சரி, மும்முறை சபிக்கப்பட்ட அஞ்ஞாத வாசச் சுற்றுச்சார்பின் அந்தக் கோணத்திலிருந்துகொண்டு பார்க்கிற நாம் நினைப்பதைக் காட்டிலும் அதி விரைவில் அற்புதமான, புரட்சிகரமான, சமதர்ம ஜனநாயகம் ரஷ்யாவில் உருவெடுக்கும் என்பது நிச்சயம்; வெளிப்படையான சில அறிகுறிகளையும் சில சம்பவங்களையும் ஆதாரமாகக்கொண்டு நாம் கவனித்தால் இந்த உண்மை நமக்கு நிச்சயம் புலனாகாமல் போகாது. இது நடந்தே தீரும் என்பதற்கு மைக்கேலைப் போன்ற மனிதர்கள் உத்தரவாதமாக விளங்குகிறார்கள்."

மைக்கேலுடன் சேர்ந்து வேறு ஐந்து மாணவர்களும் காப்ரிப் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தனர். அவர்களில் "வானியா காஸானெட்ஸ்" (பான்காரட்வ்) என்பவர் குறிப்பிடத்தக்கவர்; இவர் சுறுசுறுப்பும் நேர்மையும் வாய்ந்தவர்; மற்றவர்களைக் காட்டிலும் காப்ரிப் பள்ளிக்கூடத்தின் போக்கை இவர் வன்மையாகக் கண்டித்தார். லூஷ்வின் (பாக்கோன்) கோஸிரெவ் (போமா) உஸ்டினுவ் (வாஸிலி) ரோமானுவ் (அலியா அலெக்ஸின்ஸ்கி) ஆகிய நால்வரும்தான் விலோநாவுடன் வந்திருந்தனர்; இலிச் அவர்களுக்காகப் பல வகுப்புகள் நடத்தினார். அவர்களுடைய கல்வியில் விசேஷ கவனம் செலுத்தினார்; பிறகு மைக்கேலைத் தவிர மற்றவர்கள் ரஷ்யாவுக்குத் திரும்பிவிட்டனர். நிக்கோலாயீவ் சிறையில் சித்திரவதை செய்யப்பட்ட காரணத்தால், மைக்கேலுக்கு க்ஷயரோகம் வந்துவிட்டது; சிகிட்சை பெறும் பொருட்டு நாங்கள் அவரை டாவொஸுக்கு அனுப்பினோம்; அங்கே அவர் நீண்ட காலம் உயிருடன் இருக்கவில்லை! 1910-ம் வருடம் மே மாதம் முதல் தேதி அவர் இறந்து போனார்.

டிசம்பர் மாத இறுதியில் காப்ரிப் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும், மற்ற மாணவர்களும் பாரிஸுக்கு வந்தனர்; இவர்களுக்கும் இலிச் வகுப்புகள் நடத்தினார்; தற்போதுள்ள விஷயங்கள் பற்றியும் வசதிபடைத்த விவசாயி வர்க்கத்தைச் சிருஷ்டி செய்வதை நோக்கமாகக்கொண்டு, ஸ்டாலிப்பின் அமலுக்குக் கொண்டுவந்த நிலச்சீர்திருத்தம் பற்றியும் பாட்டாளி மக்களின் தலைமை ஸ்தானம் பற்றியும் டூமாவிலுள்ள சமதர்ம ஜனநாயக அங்கத்தினர்களின் வேலையைப்பற்றியும் அவர் அவர்களுக்கு வகுப்புகள் நடத்தினார். இலிச்சைத் தன்து கருத்துக்கு இணங்கச் செய்யவும் ராணுவத்தில் கிளர்ச்சி செய்வதைவிட டூமா வேலைக்குத்தான் இலிச் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார் என்று தோன்றும்படி செய்யவும் ஒரு மாணவர் முன்றதாகத் தோழர் கோஸிரெவ் கூறுகிறார். இலிச் புன்னகை புரிந்துவிட்டு, டூமா வேலையின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து விவரித்தார். ராணுவ வேலையைத் தளர்த்த வேண்டும் என்று அவர் சிஞ்சிற்றும் நினைக்கவே இல்லை. இந்த வேலையை ரகசியமாகச் செய்ய வேண்டும் என்று அவர் கருதினார். "இந்த வேலையைச் செய்ய வேண்டுமே யல்லாமல் இதைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கக் கூடாது" என்று அவர் கருதினார்.

இந்தச் சமயம் தொலைவிலிருந்து ஒரு கடிதம் வந்தது; ஸ்லாவா என்னும் யுத்தக் கப்பலில் வேலை செய்த சமதர்ம ஜனநாயக மாலுமிகள் எழுதிய கடிதம் அது; தங்களுக்குப் பிரசுரங்கள் தேவை என்றும் மாலுமிகளிடையே பிரசாரம் செய்வதற்கு—புரட்சி உணர்ச்சியைப் பரப்புவதற்கு—ஒருவரை அனுப்ப வேண்டும் என்றும் அவர்கள் கோரி இருந்தனர். ரகசிய வேலைகளில் அனுபவமுள்ள தோழர் ஒருவரை இலிச் அனுப்பி வைத்தார்; அவர் தோலோனுக்குச் சென்று அங்கே வசித்து வந்தார். இதைப்பற்றிச் சாடையாகக்கூட அந்த மாணவர்களிடம் இலிச் தெரிவிக்கவில்லை.

தமது முழுக் கவனத்தையும் ரஷ்யாமீதுதான் லெனின் செலுத்தினுர் என்ருலும், பிரஞ்சுத் தொழிலாளர் இயக்கத்தையும் அவர் நுணுக்கமாகப் பரிசீலனை செய்துவந்தார். அன்று இருந்த பிரஞ்சுச் சமதர்மக் கட்சி, முழுச் சந்தர்ப்பவாதக் கட்சியாக இருந்தது. உதாரணமாக, 1909-ம் வருடம் வசந்த காலத்தில் தபால் தொழிலாளர்களின் பெரிய வேலைநிறுத்தம் ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியைக் கண்டு நகர முழுவதும் ஒரே பரபரப்பு. ஆனுல், கட்சியோ விலகி நின்றது. "இது தொழிற் சங்கத்தின் வேலை; நமது வேலை அல்ல" என்று கூறினர் கட்சித் தலைவர்கள். தொழில் பிரிவினை செய்துகொண்டு, பொருளாதாரப் போராட்டத்திலிருந்து இப்படிக் கட்சி விலகி நிற்பது, ரஷ்யர்களாகிய எங்களுக்குப் பெருந் தவருகத் தோன்றியது.

தேர்தல் பிரசாரத்தில் இலிச் விசேஷ கவனம் செலுத்தினுர். உடனடியான அரசியல் பிரசினைகளுடன் தேர்தல் பிரசாரம் சம்பந்தமுடையதாய் இல்லை. தனி மனிதர்களைத் தாக்குவதிலும் ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வதிலும் அவர்கள் கவனம் செலுத்தினர். சில கூட்டங்கள் சுவாரஸ்யமாய் இருந்தன. இந்தக் கூட்டங்கள் ஒன்றில் ஜாரஸ் என்பவரை நான் சந்தித்தேன். ஜனங்களிடையே அவருக்கு அமோகமான செல்வாக்கு இருந்தது. ஆனுல், அவர் பேசிய பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை; வேண்டும் என்றே ஒவ்வொரு வார்த்தையையும் பொறுக்கி எடுத்து அவர் பேசினுர். ஆனுல் வைலாண்டின் பேச்சு எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. பாரீஸ் கம்மியூனுக்காக அவர் சிறந்த முறையில் போராடினுர். தொழிலாளர்கள் அவரை நேசித்து மதித்தனர். தன் சட்டையின் கைகளை மேலே சுருட்டிவிட்டுக்கொண்டு, தொழிற்சாலையிலிருந்து நேரே கூட்டத்துக்கு வந்த உயரமான தொழிலாளி ஒருவரின் உருவம் என் மனக்கண் முன்னே அப்படியே நிற்கிறது. வைலாண்டின் பேச்சை அவர் கவனமாகக் கேட்டார். "இந்தக் கிழவர் சிறந்த பேச்சாளர்" என்று திடீரென்று அவர் கூறினுர். இந்தத் தொழிலாளரின் புதல்வர்கள் இருவர்—வாலிபர்கள்—அவருக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு உற்சாகத்தோடு கேட்டனர். கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றியவர்கள் எல்லாரையுமே ஜாரஸ்கள் என்றும் வைலாண்டுகளும் என்றும் கூறிவிட முடியாது; சாதாரணமான சொற்பொழிவாளர்களுமே தொழிலாளர்கள் நிறைந்த கூட்டத்தில் ஒரு விதமாகவும், அறிவாளிகள் கூட்டத்தில் வேறு விதமாகவும் பேசிவந்தனர். பிரஞ்சுத் தேர்தல் கூட்டங்களுக்குச் சென்றதன் மூலம், "ஜனநாயகக் குடியரசில்" தேர்தல் என்ருல் என்ன என்பதை நாங்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டோம். வெளியிலிருந்து கவனிப்பவர்களுக்கு இது வியப்பை

அளிக்கக்கூடிய காட்சிதான்; தேர்தல் இயக்கத்தைக் கேலிசெய்து பாட்டுப் பாடின புரட்சிப் பாடகர்களை இதனால்தான் இலிச் வெகுவாக நேசித்தார் போலும்.......

நகருக்கு வெளிப்புறங்களில் இருக்கும் நாடகமேடைகளுக்குச் செல்வதை இலிச் பெரிதும் விரும்பினார்; அங்கே கூடும் தொழிலாளர்களைக் கவனிக்க ஆசைப் பட்டார். மொராக்கோவுக்கு நாடு கடத்தப்பட்டு அங்கே சித்தரவதைக்கு ஆளா கிய வீரர்களை வருணிக்கும் நாடகம் ஒன்றைக் காண நாங்கள் சென்றது எனக்கு நினைவு இருக்கிறது. கலகத்திலும் ''இன்டர்நேஷனல்'' கீதம் பாடுவதிலும் முடிகிற அந்த நாடகத்தை நகரின் மத்தியில் நடிக்கக் கூடாது என்று தடை விதிக்கப் பட்டிருந்தது. ஆனால், நகரின் சுற்றுப்புறங்களில் உற்சாகம் மிகுந்த மக்கள் முன்னிலையில் அந்த நாடகம் நடிக்கப்பட்டது. மொராக்கோ நடவடிக் கைகளைக் கண்டிப்பதற்காக 1910-ம் வருடம் நடந்த பிரமாண்டமான ஆர்ப்பாட் டத்தில் லட்சம் ஜனங்கள் பங்கெடுத்துக்கொண்டனர்; போலீஸாரின் அனுமதி பெற்று இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. சேம்பர்ஸ் ஆப் டெபுடியின் சமதர்ம அங் கத்தினர்கள் இதற்குத் தலைமை தாங்கி நடத்தினர். தங்கள் தோள்பட்டைகளில் அவர்கள் சிவப்புத் துணிகள் அணிந்திருந்தனர். தொழிலாளர்கள் போராட்ட உணர்ச்சியுடன் காணப்பட்டனர்; பணக்காரர்கள் வசிக்கும் வீடுகளை நோக்கி, தங்கள் முஷ்டியை உயர்த்தி அவர்கள் அசைத்தனர்; அங்கும் இங்குமாக ஜனங் கள் விரைந்து ஜன்னல்களை மூடினார்; ஆனால், அந்த ஆர்ப்பாட்டம் அமைதியாக முடிந்தது; அதனுடைய போக்கு கண்டன ஆர்ப்பாட்டமாகத் தோன்றவில்லை.

பால் லவார்க்கை விளாதிமிர் இலிச்சுக்கு, சார்லஸ் ராப்போ போர்டு அறி முகப்படுத்திவைத்தார். பால் லவார்க் கார்ல் மார்க்ஸின் மருமகர்; உண்மையான இந்த வீரரிடம் இலிச்சுக்குப் பெரு மதிப்பு உண்டு. பாரீஸுக்கு இருபத்தைந்து கிலோமீட்டர் தூரத்தி லிருந்த டிராவீல் என்னும் இடத்தில் அவரும் அவ ருடைய மனைவி லாராவும் இவள்—கார்ல் மார்க்ஸின் புதல்வி–வசித்தனர். தீவிர வேலைகளிலிருந்து அவர்கள் விலகி இருந்தனர். லவார்க் தம்பதிகளைச் சந்திப்பதற்காக ஒரு நாள் நானும் இலிச்சும், சைக்கிளில் டிராவீலுக்குப் போனோம். அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். தத்துவம் சம்பந்தமாகத் தாம் எழுதியுள்ள புத்தகத்தைப்பற்றி இலிச் லவார்க்கிடம் சொன் னார். லாரா லவார்க் என்னை ஒரு பூங்காவுக்கு உலாவ அழைத்துச் சென்றாள். நான் சிறிது கிளர்ச்சி அடைந்தேன்; மார்க்ஸின் புதல்வியுடன் சேர்ந்து நடக் கிறோம் என்பதால் ஏற்பட்ட கிளர்ச்சி அது. மார்க்ஸின் தோற்றம் அவளுக்கு இருக்கிறதா என்பதை அறிய அவள் முகத்தை நான் ஆர்வத்துடன் உற்றுப் பார்த்தேன். இந்த எண்ணத்திலே மூழ்கித் திளைத்திருந்த நான், புரட்சி இயக் கத்தில் பெண்கள் எடுத்துக்கொள்ளும் பங்கைப்பற்றியும் ரஷ்யாவைப்பற்றியும் அவளிடம் ஏதேதோ உளறிக் கொட்டினேன். அவளும் ஏதோ பதில் சொல்லி வந்தாள்; ஆனால் சம்பாஷணை விறுவிறுப்பு இல்லாமல் தடைப்பட்டு நின்றது. நாங்கள் திரும்பிவந்தபொழுது லவார்க்கும் இலிச்சும் தத்துவத்தைப்பற்றி விவா தித்துக்கொண்டிருந்தனர். ''தமது தத்துவ நம்பிக்கைகள் எவ்வளவு உண்மை யானவை என்பதை அவர் நிரூபிப்பார்'' என்று தம் கணவரைப்பற்றிக் கூறி விட்டு, அர்த்த புஷ்டியுடன் தம் கணவரை லாரா பார்த்தாள்; அவரும் அவளைப்

பார்த்தார். 1911-ம் வருடம், லவார்க் தம்பதிகள் காலமான செய்தி எனக்குத் தெரியவந்தபொழுது, மேலே குறிப்பிட்ட வார்த்தைகளின் பொருளும் அர்த்த புஷ்டியுடன் அவர்கள் பார்த்துக்கொண்ட பார்வையின் பொருளும் எனக்கு விளங்கின. இருவரும் இறக்கும்பொழுது நாஸ்திகர்களாகவே இறந்தனர்; அவர்கள் தற்கொலை புரிந்துகொண்டு இறந்து போயினர்; தாங்கள் முதுமைப் பருவம் எய்திவிட்டதாலும், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குரிய சக்தியைத் தாங்கள் இழந்துவிட்டதாலும், தாங்கள் இறக்கத் தீர்மானித்து விட்டதாக அவர்கள் ஒரு குறிப்பு எழுதிவைத்துவிட்டு இறந்துபோயினர்.

1910-ம் வருடம், கட்சி மத்திய கமிட்டியின் விஸ்தரிக்கப்பட்ட கூட்டம் ஒன்று நடந்தது. விரிவுபடுத்தப்பட்ட பாட்டாளி ஆசிரியர் குழாம் கூட்டத்தில் கட்சி ஒற்றுமையை ஆதரிக்கும் தீர்மானமும் தனித்து ஒரு போல்ஷ்விக் காங்கிரஸைக் கூட்டுவதுபற்றிய எதிர்ப்புத் தீர்மானமும் நிறைவேறின. கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டத்திலும் இதே வழியை இலிச்சும் அவரைப் பின்பற்றுகிறவர்களும் மேற்கொண்டனர். கட்சி தலைமறைவாக இருந்து இயங்கி வந்தாலும், பிற்போக்கு அட்டகாசம் புரியும் காலத்தில், உண்மையைத் தைரியமாக முற்றும் வெளியிடுவது மிக மிக அவசியமாகும்; இது கட்சி செய்ய வேண்டிய முக்கியமான காரியம் ஆகும். பிற்போக்குவாதம் கட்சியைச் சிதைத்த காலம் அது; சந்தர்ப்பவாதத்தில் கட்சி மூங்கிப் போய்க்கிடந்த காலம் அது. எந்த விலை கொடுத்தாவது கட்சிக் கொடியை உயர்த்திப் பிடிக்க வேண்டிய காலம் அது. கலைப்புவாதிகளுக்கு ரஷ்யாவில் பலமான சந்தர்ப்பவாத, சட்டபூர்வமான மத்திய கேந்திரம் ஒன்று இருந்தது. இந்த மத்திய ஸ்தாபனத்தின் வேலைகளை முறியடிப்பதற்கு, கட்சியை நிலைநிறுத்தித் தீர வேண்டுவது மிக மிக அவசியமாகும். தொழிலாளர்களிடையே தோன்றும் உட் கட்சி மனப்பான்மை எதெதை எப்படி எப்படிச் சார்ந்து நிற்கும் என்பதையும் அதன் போக்கு எவ்வளவு விநோதமாய் இருக்கும் என்பதையும் காப்ரிப் பள்ளிக்கூட அனுபவம் தெளிவுபடுத்திற்று. ஆகவே, சமதர்ம-ஜனநாயகத் தொழிலாளர்கள் அணிவகுத்து நிற்பதற்கு அனுசரணையாக ஐக்கிய கட்சி ஸ்தாபனம் ஒன்று இருப்பது மிகமிக அவசியமாயிற்று. 1910-ம் வருடம் நடந்த போராட்டம் கட்சியின் இயக்கத்துக்காக நடந்த போராட்டம்; கட்சியின்மூலம் தொழிலாளர்களிடையே செல்வாக்குப் பெறுவதற்காக நடந்த போராட்டம் அது; கட்சிக்குள் போல்ஷ்விக்குகள் பெரும்பான்மையாக இருப்பார்கள் என்பதிலும் இறுதியில் கட்சி போல்ஷ்விக் வழியைப் பின்பற்றும் என்பதிலும் இலிச்சுக்கு சந்தேகமே இருக்கவில்லை; அது கட்சியாக இருக்க வேண்டுமே யல்லாமல், உள் கட்சியாக இருத்தல் கூடாது என்று அவர் கருதினார். 1911-ம் ஆண்டில்கூட இந்த அபிப்பிராயத்தை லெனின் வற்புறுத்தி வந்தார். அந்த வருடம் பாரிஸுக்கு அருகில் கட்சிப் பள்ளிக்கூடம் ஒன்று நடந்தது. முன்னேற்றத்தைச் சேர்ந்தவர்களும் கட்சி மென்ஷ்விக்குகளும்* போல்ஷ்விக்கு

* பிளக்கானுவைப் போன்ற மென்ஷ்விக்குகள்: இவர்கள் சட்டவிரோதமான கட்சி இருக்க வேண்டும் என்பதையும் கட்சியைக் கலைக்கக் கூடாது என்பதையும் ஆதரிப்பவர்கள்.

களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1912-ம் வருடம் பிரேக்கில் நடந்த கட்சி மகாநாட்டிலும் இந்த வழிதான் வற்புறுத்தப்பட்டது. போல்ஷ்விக் வழியைப் பின்பற்றும் ஒரு கட்சியை இலிச் விரும்பினரே அல்லாமல், உள் கட்சியை அவர் விரும்பவில்லை. இந்தக் கட்சியில் கட்சியைக் கலைக்க விரும்புகிற "கலைப்புவாதிகள்" இடம் பெற முடியாது. ஏனெனில் இவர்களை எதிர்ப்பதற்காகத்தான், படை திரட்டப்பட்டது. கட்சி செய்யும் முடிவுகளுக்குக் கட்டுப்பட முடியாது என்று முன்னரே முடிவு செய்துள்ளவர்களுக்கும் கட்சியில் இடம் கிடையாது. எனினும் கட்சிக்காகப் போரிடுவது என்ருல், அது கலைப்புவாதிகளுடன் சமரஸம் செய்து கொள்வதுபோல் ஆகும் என்று சில தோழர்கள் அபிப்பிராயப்பட்டனர். எதற்காக ஒற்றுமைப்படுகிருேம் என்பதைப் புரிந்து கொள்ளாமலும், எந்த நோக்கத்துடன் ஒருவர் இருந்து வருகிருர் என்பதை அறியாமலும், எல்லோரையுமே ஒற்றுமை அணியில் கொணரச் சிலர் முயன்றனர். லெனினுடைய கொள்கைகளை முற்றுமே ஆதரித்த இன்னுகென்டி கூட, பிளக்கானுவைப் பின்பற்றுகிற மென்ஷ்விக்குகளுடன் ஒன்றுபடுவதுதான் முக்கியம் என்பதை உணர்ந்து, கட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்கிற நோக்கத்தால் உந்தித் தள்ளப்பட்டு, சமரஸ மனப்பான்மை ஆதரிக்க முற்பட்டார். இலிச் அவரை நேரான பாதைக்குத் திருப்ப முயன்று அதில் வெற்றியும் பெற்ருர்.

மொததத்தில் எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேறின. சமரஸவாதிகளின் பெருன்பான்மை வோட்டுகளால் இலிச் முறியடிக்கப்பட்டார் என்றும் சமரஸவாதிகளுக்கு மெஜாரிட்டி வந்துவிட்டது என்றும் தமது கொள்கைகளை இலிச் விட்டுக்கொடுத்துவிட்டார் என்றும் நினைப்பது அசட்டுத்தனமாகும். கூட்டம் மூன்று வாரங்கள் நடந்தது. கொள்கைகளில் தமக்கு இருந்த பிடிப்பை ஒரு இம்மிகூட விட்டுக்கொடுக்காமலும், ஸ்தாபனரீதியான பிரசினைகளில் சாத்தியமான அளவு விட்டுக்கொடுப்பது அவசியம் என்றும் இலிச் கருதினர். போல்ஷ்விக் பகுதியின் பத்திரிகையாகிய பாட்டாளி நிறுத்தப்பட்டது. மாற்ருமல் வைத்திருந்த 500 ரூபிள் நோட்டுக்கள் எரிக்கப்பட்டன. "தர்மகர்த்தாக்கள்" என்று அழைக்கப்பட்ட மூன்று ஜெர்மன் தோழர்களிடம் காட்ஸ்கி, மெஹரிங், கிளாரா ஸெட்கின் ஆகியவர்களிடம் போல்ஷ்விக் நிதி ஒப்படைக்கப்பட்டது. கட்சியின் பொது உபயோகத்துக்கு மட்டும்தான் பணம் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. பிளவு ஏற்படுமாயின், மீதம் இருக்கும் பணத்தைப் போல்ஷ்விக்குகளுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. டிராட்ஸ்கியின் பத்திரிகையான பிராவ்தாவுக்கு, போல்ஷ்விக் பிரதிநிதியாக, காமனவ் வியன்னுவுக்கு அனுப்பப்பட்டார். "சமீபத்தில் இங்கே பெரும் புயல் வீசுவது போல விஷயங்கள் நடைபெற்றன" என்று தன் சகோதரி அன்ன இலிச்சினுவுக்கு விளாதிமிர் எழுதினர். "ஆனல், மென்ஷ்விக்குகளுடன் சமரஸம் செய்துகொள்ளும் முயற்சியில் அது முடிந்தது. ஆம்; ஆம் அது அசாதாரணமாகத் தோன்றினலும் போல்ஷ்விக் பத்திரிகையை நாங்கள் நிறுத்திவிட்டோம். ஒற்றுமைக்காக நாங்கள் பெரு முயற்சி செய்கிருேம்" என்று எழுதி இருந்தார்.

மத்திய கமிட்டியின் ரஷ்யக் கிளையை ஸ்தாபிப்பதற்காக இன்னேகென்டியும் நோகினும் ரஷ்யாவுக்குச் சென்றனர். நோகின் சமரஸவாதி; அவர் எல்லோரையும் ஒன்றுபடுத்த விரும்பினர்; போல்ஷ்விக்குகள் அவருடைய பிரசங்கங்களைக் கிண்டல் செய்தனர். இன்னேகென்டி வேறு வழியைப் பின் பற்றினர். சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையையும் புரிந்துகொள்வதற்கு, "வெளி நாடு" போல ரஷ்யா இல்லை. நோகின் கருத்துகளுக்கு உகந்த முறையில் இன்னேகென்டியின் பேச்சுகள் வியாக்கியானம் செய்யப்பட்டன. போல்ஷ்விக் அல்லாதவர்கள் இந்தத் தொண்டைச் செய்து வந்தார்கள். லின்டோவும் வி. பி. மிலியூட்டினும் மத்திய கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்; விரைவில் இன்னேகென்டி கைது செய்யப்பட்டார். லின்டோவ் நாகினுடைய கருத்துக்களை அங்கீகரித்தார்; தீவிரமாகவும் வேலைசெய்யவில்லை. ரஷ்ய மத்திய கமிட்டியின் நிலை 1910-ம் வருடம் மிக மிக மோசமாக இருந்தது.

வெளிநாட்டிலும் நிலைமை திருப்திகரமாய் இல்லை. மார்க்கும் (பிலியிமோவ்) லியோவாவும் (விளாதிமிரோவ்) பொதுவாக சமரஸத்தை ஆதரித்தனர். போல்ஷ்விக்குகள் வம்பர்கள் விசுவாசமற்றவர்கள் என்னும் கதைகளை அவர்கள் ஓரளவு நம்பினர். இத்தகைய கதைகளைக் குறிப்பாக, மார்க் விருப்பத்துடன் கேட்டார். ஏனெனில் பல பகுதிகளைத் தன்னுட் கொண்ட வெளிநாட்டு ஐக்கிய கமிட்டியின் ஐக்கிய குழுவில் அவர் அங்கம் வகித்தார்.

முன்னேற்றம் சார்பானவர்கள் தங்கள் சக்தியை ஒன்று திரட்டமுற்பட்டனர்; டி ஓர்லீன்ஸ் வீதியில் இருந்த ஒரு சிற்றுண்டிச் சாலையில் போல்ஷ்விக்குகளின் கூட்டம் நடந்துகொண் டிருந்தபொழுது, அலெக்ஸின்ஸ்கியைச் சேர்ந்தவர்கள், திடும்பிரவேசமாக அந்தக் கூட்டத்துக்குள் பிரவேசித்தனர். ஆணவத்துடன் அலெக்ஸின்ஸ்கி ஒரு நாற்காலியில் உட்கார்ந்து இருந்தார். கூட்டத்தில் பேசத் தன்னை அனுமதிக்க வேண்டும் என்று அதிகாரத்துடன் கேட்டார். அனுமதி கிடைக்காமல் போகவே அவர் கூட்டத்தில் குழப்பம் செய்ய ஆரம்பித்தார். அவருடன் வந்திருந்த முன்னேற்றவாதிகள் நம் தோழர்களைத் தாக்க ஆரம்பித்தனர். எங்கள் பகுதியைச் சேர்ந்த அப்ராம்ஸ் கோவனுவும் ஐசாக் கிரிவோவும் போராடத் தயாரானுர்கள். ஆனல், பலசாலியான நிக்கோலாய் வாஸிலேவிச் ஸபோஷ்காவ் (குட்னெட்ஸோவ்) அவர்களைத் தம் கைகளால் கைக்கு ஒருவராகப் பிடித்துக்கொண்டார். இத்தகைய குழப்பங்களில் பழக்கப்பட்டிருந்த அந்த ஹோட்டலில் முதலாளி விரைவாக விளக்கை அணைத்துவிட்டார். அதனல் சண்டை நின்று போயிற்று. ஆனல் இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, இரவு முழுதும் பாரீஸ் வீதிகளில் இலிச் அலைந்து திரிந்தார்; வீடு திரும்பிய பின் காலைவரையிலும் அவர் தூங்கவே இல்லை.

1910-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி, மாக்ஸிம் கார்க்கிக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர்:

"விட்டுக் கொடுப்பதுதான் ஒற்றுமையின் முக்கிய கோஷமாகத் தோன்றுகிறது. இது குறைகூறவும் கேலி செய்யவும் வழி கோலுகிறது. இந்த அவதூறுகளுக்கும் தூஷணைகளுக்கும் சமரஸத்துக்கும் மத்தியில் வாழ்க்கை நடத்துவது வேதனை அளிக்கிறது. இதைப்

பார்த்துக்கொண் டிருப்பதும் வேதனை அளிக்கிறது. ஆனால், நாம் நமது மனக்கிளர்ச்சிக்கு அடிமைப்பட்டுவிடலாகாது. புரட்சிக்கு முன் அஞ்ஞாதவாசம் எவ்வளவு கஷ்டமானதாக இருந்ததோ அதை விட நூறு மடங்கு கஷ்டமுடையதாக இப்பொழுது அது இருக்கிறது. அஞ்ஞாதவாசமும் அவதூறும் பிரிக்கமுடியாதவை. ஆனால் அவதூறு என்பது சிறிய விஷயம்; பத்தில் ஒன்பது பங்கு அவதூறு வெளிநாடு களில்தான் உற்பத்தியாகிறது; அவதூறு விசேஷ நிலைமையின் சிருஷ்டி. இன்றைய மிகக் கொடிய நிலைகளைச் சட்டை செய்யாமல், கட்சியும் சமதர்ம ஜனநாயக இயக்கமும் மேன்மேலும் அபிவிருத்தி அடைந்து வளர்கின்றன. ஆபத்தான திரிபுகளையும் கலைப்புவாதத் தையும் ஒட்ஸோவிஸத்தையும் விலக்கும் வேலை இடைவிடாது நடந்து வருகிறது. ஐக்கியம் என்னும் வளையத்துக்குள் இருந்துகொண்டு, முன் னர் அபிவிருத்தி அடைந்ததைவிட இப்பொழுது அது அதிகமாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது.''

மேலும் அவர் எழுதினர்:

''பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் சமதர்ம ஜனநாயக இயக்கம் சிரமத்துடன் முன்னேறினதைக் காணுதவர்களுக்குப் புதிய சமதர்ம ஜனநாயக இயக்கத்தின் கஷ்டமான முன்னேற்றம் வேதனை அளிக்கும் என்பதை என்னல் ஊகிக்க முடியும். அந்தக் காலத்தில் இருந்த சமதர்ம ஜனநாயகவாதிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனல், இன்று ஆயிரக்கணக்கான சமதர்ம ஜனநாயகவாதிகள் இருக் கிறுர்கள். எனவே நெருக்கடிக்கு மேல் நெருக்கடி ஏற்படுகிறது. இந்த நெருக்கடிகளைப் பகிரங்கமாகவும் கண்ணியமாகவும் சமதர்ம ஜனநாயகம் சமாளித்துச் செல்கிறது.''

அவதூறுகளைச் சகித்துக்கொள்ள முடியாமல் பல தோழர்கள் சென்று விட்டனர். உதாரணமாக, லாஸோவஸ்கி என்பவர் பிரெஞ்சுத் தொழிற் சங்க இயக்கத்துக்குத் தன்னை முழுதும் அர்ப்பணித்துக்கொண்டார். நாங்களும் பிரெஞ்சுத் தொழிற் சங்க இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள விரும்பினேம். பிரெஞ்சுக் கட்சியாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓய்வு முகாமில் சில தினங்கள் தங்குவது எங்கள் வேலைக்கு உதவியாக இருக்கக் கூடும் என நாங்கள் கருதினேம். பிரசித்திபெற்ற வெண்டி கடற் கரையில், போர்னிக் என்னும் கிராமத்துக்கு அருகில் இருந்தது அந்த ஓய்வு முகாம். முதலில் நானும் என் அன்னையும் அங்கே சென்றோம்; மனம் அவ்வளவு சந்தோஷமாக இல்லை. தங்களைப்பற்றிய நினைப்புத்தான் பிரெஞ்சு மக்களுக்கு அதிகமாக இருந்தது; ஒவ்வொரு குடும்பமும் தனித் தனியே வாழ்ந்தது. ரஷ்யர்களுடன் அவர்கள் நேசமாகப் பழகவில்லை. முக்கியமாக, முகாமின் மானேஜர் இத்தகைய மனப்போக்குடன் இருந்து வந்தார். பிரெஞ்சுப் பள்ளி ஆசிரியர் ஒருவருடன் நான் சினேகம் செய்துகொண்டேன். முகாமில் தொழிலாளர்களே கலந்துகொள்ளவில்லை. விரைவில் கோஸ்டிட்ஸின் தம்பதி களும் ஸாவுஷ்காவும்—முன்னேற்றவாதிகள்—முகாமுக்கு வந்து சேர்ந்தனர்.

உடனே அவர்கள் மானேஜருடன் சண்டை போட்டனர். பிறகு நாங்கள் எல்லோரும் போர்னிக்குச் சென்று ஒன்ருக வசிக்க முடிவு செய்தோம். கடற்கரைக் காவல்காரர் வீட்டில் இரண்டு சிறிய அறைகளை நானும் என் அன்னையும் வாடகைக்கு அமர்த்திக்கொண்டோம். விரைவில் இலிச்சும் வந்து சேர்ந்தார். அவர் அடிக்கடி சமுத்திரத்தில் குளித்தார்; சைக்கிளில் சவாரி செய்தார்; கடலையும் கடற்காற்றையும் விரும்பி அனுபவித்தார். கோஸ்டிட்ஸின் தம்பதிகளுடன் பற்பல விஷயங்களைப்பற்றி உற்சாகத்துடன் உரையாடினர்; எங்களுக்காகக் கடற்கரைக் காவல்காரர் பிடித்துத் தந்த நண்டுகளைச் சுவைத்துச் சாப்பிட்டார். உண்மையில் நாங்கள் வசித்த வீட்டுக்காரரும் அவர் மனைவியும் இலிச்சைப் பெரிதும் நேசித்தார்கள்.

பெருத்த ஆகிருதியும் தடித்த குரலும் படைத்த அந்த வீட்டுக்காரி, (இவளுக்குச் சலவைத் தொழிலும் தெரியும்) பாதிரிமார்களுடன் தனக்குநேர்ந்த சண்டைகளைப்பற்றி எல்லாம் இலிச்சிடம் சொல்லுவாள். தன் புதல்வனை—பொடியனை—மதச் சார்பற்ற பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி அவள் படிக்க வைத்தாள். பையன் கெட்டிக்காரன்; திறமைசாலி; எனவே, மதச்சார்புள்ள பள்ளிக்கூடத்துக்கு அவனை அனுப்பும்படியும், அவ்வாறு செய்தால் உபகாரச் சம்பளம் கொடுப்பதாகவும் பாதிரிகள் அவளிடம் கூறினராம். ஆனல் அவளோ ஆத்திரத்துடன் பாதிரிகளை வெளியே போகும்படி சொல்லிவிட்டாளாம். ஏசுவின் வெறுக்கத்தக்க சிஷ்யனுவதற்காகத் தான் புதல்வனைப் பெறவில்லை என்று இகழ்ந்துரைத்துப் பாதிரிகளைப் போகச் சொல்லிவிட்டாளாம். இதனல் தான் நண்டுகளைப்பற்றி இலிச் வெகுவாகப் புகழ்ந்தார் போலும். ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று இலிச் பிரோனிக்குக்கு வந்தார்; இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோ கூட்டத்திலும் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுக் காங்கிரஸிலும் கலந்துகொள்வதற்காக 26-ஆம் தேதி அவர் கோபன்ஹேகனில் இருந்தார். காங்கிரஸின் வேலைகளைப்பற்றி இலிச் கீழ்வருமாறு எழுதி இருக்கிருர்:

> "திருத்தவாதிகளுடன் அபிப்பிராய பேதங்கள் ஆரம்பித்துவிட்டன; ஆனல், தங்கள் சுயேச்சையான திட்டத்தைப் பிரகடனப்படுத்த இன்னும் திருத்தவாதிகள் துணியவில்லை. திருத்தவாதிகளுக்கு எதிரான போராட்டம் ஒத்திவைக்கப்பட் டிருக்கிறது. ஆனல், அது நடைபெருமல் போகாது."

காங்கிரஸுக்கு ருஷ்யப் பிரதிநிதிகள் அதிகமாக வந்திருந்தனர்; மொத்தம், இருபது பிரதிநிதிகள் வந்திருந்தனர்: பத்து சமதர்ம ஜனநாயகவாதிகள்; ஏழு சமதர்மப் புரட்சிக்காரர்கள்; மூன்று தொழிற் சங்கப் பிரதிநிதிகள். சமதர்ம ஜனநாயக அணியில் பல திறப்பட்டவர்கள் இருந்தனர்; லெனின் ஸினேவீயெவ், காமனீவ், பிளக்கானுவ், வார்ஸ்கி, மார்டாவ், மார்டினுவ், டிராட்ஸ்கி, லூனுசார்ஸ்கி, கொல்லோந்தாய் ஆகியவர்களும் வந்திருந்தனர். ஆனல், ஆலோசனை கூறும் உரிமை மாத்திரம் அவர்களுக்கு இருந்தது. இந்தக் காங்கிரஸ் நடந்தபொழுது, இன்னெரு மகாநாடும் நடந்தது; லெனின், பிளக்கானுவ், ஸினேவீயெவ், மூன்ருவது டூமா அங்கத்தினர்கள் போலிடாயெவ்,

ஐ. பி. போக்ரோவஸ்கி ஆகியவர்கள் அந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர். வெளிநாட்டிலிருந்து தொழிலாளர் பத்திரிகை என்னும் பெயரில் ஒரு பத்திரிகை ஆரம்பிப்பது என்று அந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. பிளக்கானவ் தந்திரமாக நடந்துகொண்டார். எனினும் நமது நிலை என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதி அவர் அனுப்பி வைத்தார்.

கோப்பன்ஹேகன் காங்கிரஸ் முடிந்த பிறகு, தம் அன்னையையும் சகோதரி மரியா இலிச்சினுவையும் காண்பதற்காக இலிச் ஸ்டாக்ஹோமுக்குச் சென்றார்; அங்கே அவர் பத்து நாட்கள் தங்கினார். தம் அன்னையை அவர் பார்த்தது இதுதான் கடைசித் தடவை; இப்படி ஒரு உணர்ச்சி அன்று அவருக்கு ஏற்பட்டது. எனவே, தன் அன்னை பிரயாணம் செய்த கப்பலைத் துக்கமும் கண்ணீரும் நிறைந்த கண்களால் இலிச் பார்த்துக்கொண்டே நின்றார். ஏழு வருடங்களுக்குப் பிறகு—அதாவது 1917-ம் வருடம்—அவர் ரஷ்யாவுக்குத் திரும்புவதற்கு முன்னர், அவருடைய அன்னை காலமாகிவிட்டார்.

காங்கிரஸுக்கு வந்திருந்த லூனசார்ஸ்கியுடன் தான் சுமுகமாக உரையாடிக்கொண்டிருந்ததாக, பாரிஸுக்கு திரும்பிய பின் இலிச் கூறினார். லூனசார்ஸ்கியை லெனின் எப்பொழுதுமே நேசித்தார்; அவருடைய திறமை இலிச்சைப் பெரிதும் கவர்ந்தது. எனினும் "நமது கட்சியின் தந்திரரீதியான போக்குகள்" என்னும் தலைப்பில் லா பீப்பிள் என்னும் பத்திரிகையில் எல்லாப் பிரசினைகளையும் அவர் ஒட்ஸோவிஸ்டு அடிப்படையில் விளக்கியிருந்தார். அந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு இலிச் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், சில தினங்களுக்குப் பிறகு இந்தக் கட்டுரைக்குப் பதில் கட்டுரை ஒன்று எழுதினார். இன்டர்நேஷனல் காங்கிரஸில் பங்கு எடுத்துக்கொண்ட ஏனைய பிரதிநிதிகளும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டனர். வோர் வார்ஸ் பத்திரிகையில் டிராட்ஸ்கி ஒரு கட்டுரை எழுதினார். தமது பெயரைக் குறிப்பிடாமல், அந்தக் கட்டுரையில் போல்ஷ்விக்குகளை அவர் கடுமையாகத் தாக்கியிருந்தார்; வியன்னுவிலிருந்து வெளிவரும் தமது பிராவ்தா பத்திரிகையைப் புகழ்ந்தார். இந்தக் கட்டுரையைப் பிரசுரித்ததைக் கண்டித்து, லெனினும் பிளக்கானவும் வார்ஸ்கியும் வோர் வார்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினர். 1903-ம் வருடம் டிராட்ஸ்கி வெளிநாடுகளுக்கு வருவதற்கு முன்னரே அவரை, பிளக்கானவ் எதிர்த்தார். இரண்டாவது கட்சிக் காங்கிரஸுக்கு முன் ஒரு பத்திரிகையை ஆரம்பிப்பது சம்பந்தமாக அவர்களுக்கிடையே கடுமையான அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. கோப்பன்ஹேகன் காங்கிரஸில் டிராட்ஸ்கியின் செயலைக் கண்டிக்கும் ஒரு கண்டன அறிக்கையில் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் பிளக்கானவ் கையெழுத்திட்டார். ஆகவே, இதற்குப் பதிலாக, போல்ஷ்விக்குகள் பிரசுரிக்க ஆரம்பித்த, தொழிலாளர் பத்திரிகைக்கு எதிராக டிராட்ஸ்கி பிரசாரம் செய்தார். குறுகிய உள் கட்சியின் பத்திரிகை என்று அவர் கூறினார்; இந்த விஷயத்தைப்பற்றி வியன்னு கிளப்பில் அவர் சொற்பொழிவு ஒன்று ஆற்றினார். இதைக் கண்டித்து டிராட்ஸ்கியின் பிராவ்தாவிலிருந்து காமனீவ் ராஜினாமா செய்தார். ஜனவரி மாதம் நடந்த கூட்டத்தில், பிராவ்தா பத்திரிகையின் ஆசிரியர் குழாத்தில் காமனீவ் நியமிக்கப்பட்டார். மார்க்கின் தலைமையில் வேலை செய்துவந்த பாரிஸ் சமரஸ

வாதிகளை, டிராட்ஸ்கியின் பிரசாரம் ஆகர்ஷித்தது. கட்சிக்குள் கட்சி ஸ்தாபிப்பதை எதிர்ப்பதன் பெயரால், அவர்களும், தொழிலாளர் பத்திரிகை எதிர்த்தனர். கொள்கையற்ற தெளிவற்ற இந்த சமரஸவாதத்தை - எதனுடனும் எல்லோருடனும் சமரஸம் செய்துகொள்ளும் போக்கை - இலிச் வெறுத்தார். போராட்டம் உச்ச நிலையில் இருக்கும் காலத்தில், தனது பிடிப்பையும் ஸ்தானத்தையும் எதிரிக்கு விட்டுக்கொடுத்துவிடுவதை ஒக்கும் இது என்று இலிச் கருதினர்.

1910-ம் வருடம் வெளிவந்த நியூஸீட் 50-வது இதழில் ரஷ்ய சமதர்ம ஜனநாயகத்தின் வளர்ச்சியின் போக்குகள் என்னும் தலைப்பில் டிராட்ஸ்கி ஒரு கட்டுரை எழுதினர். 51-வது இதழில் ரஷ்ய விவாதமும் ரஷ்ய அனுபவமும் என்னும் தலைப்பில் மார்டோவ் ஒரு கட்டுரை எழுதினர். ரஷ்யாவில் நடக்கும் கட்சிப் போரின் சரித்திரரீதியின் அர்த்தம் என்றும் கட்டுரையில், இந்தக் கட்டுரைகளுக்கு எல்லாம் விளாதிமிர் இலிச் பதில் எழுதினர்.

1911-ஆம் வருடம் தோழர் காமோ பாரீஸுக்கு வந்தார். டைனமிட் வைத்திருந்த பெட்டியுடன் 1908-ஆம் வருடம் பெர்லினில் இந்தத் தோழர் தான் கைதியானர். இவர் பதினெட்டு மாதங்கள் ஜெர்மன் சிறையில் இருந்தார்; அப்போது தனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போன்று இவர் நடித்தார். 1909-ம் வருடம் இவர் ரஷ்யாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கே டிப்ளிஸிலுள்ள மெட்டெக் கோட்டையில் அவர் பதினறு மாதங்கள் சிறையிருந்தார். குணப்படுத்த முடியாதபடி காமோவுக்குப் பைத்தியம் மூற்றிவிட்டதாகச் சிறை டாக்டர் முடிவு செய்தார்; எனவே அவரை மைக்கேலோவஸ்க் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுபிவிட்டார்கள். அவர் அந்த ஆஸ்பத்திரியில் இருந்து தப்பியோடி, பிரான்ஸுக்குப் புறப்பட்ட கப்பலில் ஒளிந்துகொண்டு, பிரான்ஸ் வந்து சேர்ந்து, கடைசியாக இலிச்சுடன் விவாதிப்பதற்காகப் பாரீஸ் வந்து சேர்ந்தார். இலிச், பாக்டானவ், கிராஸின் ஆகியவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டிருப்பதை அறிந்து, அவர் அதிக அதிர்ச்சி அடைந்து போனர். இவர்கள் மூவரையும் அவர் நேசித்தார்; அவர் சிறையில் இருந்த காலத்தில் அபிவிருத்தி அடைந்துள்ள நிலைமைகளை அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை. நடந்தவற்றை இலிச் அவருக்கு விளக்கிச் சொன்னர்.

தனக்கு வாதாம் பருப்பு வாங்கித் தரும்படி காமோ என்னிடம் சொன்னர்; தன் வீட்டில் சாப்பிடுவதுபோல அவர் எங்கள் அடுக்களையில் உட்கார்ந்துகொண்டு வாதாம் பருப்புகளைத் தின்பார்; பெர்லினில் தன்னைக் கைது செய்ததைப் பற்றியும், தான் பைத்தியமாக நடித்ததைப்பற்றியும், குருவிகளைச் சிறையில் தான் பழக்கி வளர்த்தைப்பற்றியும், அவர் எங்களிடம் வருணித்தார்; இதை இலிச் சிரத்தையுடன் கேட்டார்; மிகத் தைரியசாலியான, குழந்தை உள்ளம் படைத்த, அன்புக்கு உறைவிடமான, துணிச்சலான காரியங்கள் செய்யும் ஆற்றல் படைத்த, ஆனல் எந்த வேலையைச் செய்வது என்பதை அறியாத இந்த மனிதருக்குகாக இலிச் பெரிதும் வருந்தினர். அசட்டுத்தனமான யோசனைகளைக் காமோ கூறினர்; இலிச் அவர் கூறின யோசனைகளை எதிர்க்கவில்லை. ஆனல் ஜாக்ரதையாக அவரை யாதார்த்தமான இந்த நில உலகுக்கு அழைத்து

வந்தார்; ரஷ்யாவுக்குப் பிரசுரங்கள் அனுப்பவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டியதன் அவசியத்தைப்பற்றி அவருடன் பேசினுர். இறுதியில் கண் ஆபரேஷனுக்காக அவர் பெல்ஜியத்துக்குச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஏனெனில், அவருக்குக் கண்கள் கோணலாக இருந்தன; அதனுல் உளவாளிகள் அவரை அடையாளம் கண்டுபிடிப்பது எளிதாக இருந்தது. அதன் பிறகு தென் ரஷ்யா வழியாக அவர் காகஸஸுக்குச் செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. காமோ அணிந்திருந்த கோட்டைப் பார்த்துவிட்டு, ''உங்களிடம் கம்பளிக் கோட்டு இருக்கிறதா? கப்பலின் மேல் தளம் குளிராய் இருக்குமே'' என்று இலிச் கேட்டார். கப்பலில் பிரயாணம் செய்யும்பொழுது, இலிச், இடைவிடாது கப்பலின் மேல் தளத்தில் முன்னும் பின்னும் நடப்பார். காமோவிடம் வேறு கோட்டு இல்லை என்பது தெரிய வந்ததும், தம்மிடம் இருந்த மிருதுவான கம்பளிக் கோட்டை இலிச் அவருக்குக் கொடுத்தார். ஸ்டாக்ஹோமுக்கு அவர் சென்றிருந்தபொழுது இலிச்சின் அன்னை இலிச்சுக்கு அளித்த பரிசு அந்தக் கோட்டு; அதை இலிச் மிகவும் பிரியமாக வைத்திருந்தார். இலிச்சுடன் பேசின பேச்சும் இலிச் காட்டின அன்பும் காமோவைப் பண்படுத்தின. பல வருடங்களுக்குப் பிறகு உள் நாட்டுப் போர் குமுறிய காலத்தில் காமோ மீண்டும் ''புத்துயிர்'' பெற்றுர். மீண்டும் வியக்கத்தக்க திரச் செயல்களை எல்லாம் அவர் புரிந்தார். புதிய பொருளாதாரக் கொள்கையை நாங்கள் மேற்கொண்டதும், அவர் மீண்டும் வழி தவறினுர்; தான் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும் என்றும் அவர் கூறினுர்; சாகஸச் செயல் புரிவதுபற்றி இடைவிடாது கனவுகண்டார். இலிச் கடைசி முறையாக நோய் வாய்ப்பட்ட பொழுது, அவர் இறந்து போனுர். டிப்ளிஸிலுள்ள வெர்யெஸ்க் பள்ளத்தாக்கில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபொழுது, மோட்டார்கள் ஒன்றில் மோதி அவர் இறந்து போனுர்.

1910-ம் ஆண்டு இன்னிஸா ஆர்மாண்ட் புருஸெல்ஸிலிருந்து வந்திருந்தார்; உடனே அவள் பாரீஸ் கிளையில் சேர்ந்து தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தாள். ஷீமாஷ்கோ, பிரிட்மான் (காஸாக்கான்) ஆகியவர்களுடன் சேர்ந்துகொண்டு, அவள் வெளி நாடுகளிலுள்ள கட்சி ஸ்தாபனங்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டாள். அவளுக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் இருந்தன. அவள் ஒரு உண்மையான போல்ஷ்விக்; விரைவில் பாரீஸில் வசித்த எங்கள் நாட்டவர்களை அவள் ஆகர்ஷித்துக்கொண்டாள்.

மொத்தத்தில் எங்கள் பாரீஸ் பகுதி வளரவும் பலம் பெறவும் ஆரம்பித்தது; தத்துவரீதிலும் கொள்கையளவிலும் நாங்கள் பலம் பெற்றோம்; ஆனல் எல்லோரும் வறுமையால் கஷ்டப்பட்டோம்; எப்படியோ தொழிலாளர்கள் வாழ்க்கையை ஒருவாறு ஓட்டினர்; ஆனுல் அறிவாளிகளின் நிலை படுமோசமாக இருந்தது. எல்லோருமே தொழிலாளர்களாக மாறுவது அவ்வளவு எளிதில் நடைபெறக் கூடிய காரியம் அன்று; அஞ்ஞாதவாசிகளின் நிதியில் வாழ்வதும் அஞ்ஞாதவாசிகளின் போஜனசாலையில் சாப்பிடுவதும் அவமதிப்பானவை; பல துக்ககரமான சம்பவங்கள் என் நினைவில் இருக்கின்றன. ஒரு தோழர் பிரஞ்சு மூலாம் பூசுபவராக முயன்றுர்: ஆனுல் அந்தத் தொழிலைக் கற்பது அவ்வளவு

எளிதாக இல்லை. அடிக்கடி தொழிலை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது, ஏனைய அஞ்ஞாதவாசிகள் வசித்த பகுதிக்கு வெகு தூரத்தில் இருந்த தொழிலாளர் பகுதியில் அவர் வசித்தார். இறுதியில் போதிய உணவு இன்மையால் எழுந்து நடமாடவும் சக்தியற்றவரானர். பணம் வேண்டும் என்று எங்களுக்கு அவர் எழுதினுர். பணத்தைத் தம்மிடம் நேரில் தர வேண்டாம் என்றும் வீட்டுக்காவலாளிடம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் எழுதினுர்.

நிக்கோலாய் வாசிலியோவிச் ஸாபோஷ்கோ (குஸ்னெட்ஸோவ்) ரொம்பக் கஷ்டப்பட்டார். மட்பாண்டத் தொழிற்சாலையில் அவருக்கும் அவருடைய மனைவிக்கும் வர்ணம் பூசும் வேலை கிடைத்தது; வருவாய் மிகச் சொற்பம்; ஆஜானுபாகுவாய்இருந்த அந்த மனிதர் துரும்பாய் இளைத்துப் போனுர். பட்டினி காரணமாக அவர் முகத்தில் சுறுக்கங்கள் விழுந்திருந்தன. ஆனுல், தமது கஷ்டத்தைப்பற்றி அவர் யாரிடமும் சொல்லவில்லை.

இந்தச் சுற்றுச்சார்பில் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் அதிகமாக வசித்திருந்தால், அது பேராபத்தில் முடிந்திருக்கும். ஆனுல், பிற்போக்கின் அட்டகாசங்கள், புரட்சி இயக்கம் புத்துயிர் பெறுவதற்கும் வழிகோலின.

டால்ஸ்டாயின் மரணத்தை முன்னிட்டு ரஷ்யாவில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன: நட்சத்திரம் முதல் இதழ் வெளிவந்தது. மாஸ்கோவிலிருந்து போல்ஷ்விக்குகளின் பத்திரிகை சிந்தனை வெளிவந்தது. இலிச் உடனே புத்துயிர் பெற்ருர். 1910-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி "ஆர்ப்பாட்டங்களின் ஆரம்பம்" என்னும் தலைப்பில் இலிச் எழுதிய கட்டுரை முடிவற்ற சக்தியை வெளிப்படுத்துகிறது. "தோழர்களே! செயலில் ஈடுபடுங்கள்; எங்கும் உங்கள் ஸ்தாபனங்களை நிர்மாணிக்க முன்வாருங்கள்; சமதர்ம ஜனநாயகத் தொழிலாளர்களின் 'செல்களை' சிருஷ்டி செய்து பலப்படுத்துங்கள்; அரசியல் பொருளாதாரக் கிளர்ச்சிகளை வளர்க்க முற்படுங்கள், முதலாவது ரஷ்யப் புரட்சியில் சுதந்திரத்துக்காகப் போராட, பாட்டாளிமக்கள், ஜனங்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள்; இரண்டாவது புரட்சியில் வெற்றியை நோக்கி அவர்களைப் பாட்டாளி மக்கள் அழைத்துச் செல்லவேண்டும்."

இந்தப் போர்க் கோஷத்துடன் கட்டுரையை முடித்திருந்தார் இலிச்.

புரட்சி இயக்கம்

புத்துயிர் பெற்ற வருடங்கள்

(1911—14)

பாரீஸ் 1911—12

1911-ம் வருட இறுதியில் புரட்சி இயக்கம் புத்துயிர் பெற ஆரம்பித்தது. 1911-ம் வருடத்திலிருந்து 1914-ம் வருடம்வரையில் - 1914-ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் யுத்த ஆரம்பமானவரையில் - மாதந்தோறும் தொழிலாளர் இயக்கம் பலம்பெற்று வந்தது; 1905-ம் வருடத்துக்கு முன்னர் தொழிலாளர் இயக்கம் வளர்ந்த நிலைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலைகளில் இப்பொழுது இயக்கம் வளர்ந்துவந்தது: 1905-ம் வருடப் புரட்சியில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையைக்கொண்டு இயக்கம் வளர்ந்துவந்தது. அன்று இருந்த அதே பாட்டாளி மக்கள் அல்லர், இன்று இருக்கிற பாட்டாளி மக்கள். எத்தனையோ விதங்களில் அவர்கள் அனுபவம் பெற்றுத் திகழ்ந்தனர்; பல வேலைநிறுத்தங்கள், ஆயுதம் தாங்கி நடத்தின பல போராட்டங்கள், மகத்தான பொதுஜன இயக்கம் ஆகியவற்றுல் அனுபவம் பெற்றுத் திகழ்ந்தனர்; இவற்றுடன்கூட, தோல்வியின் பயனுய் ஏற்பட்ட பல வருட அனுபவங்களும் அவர்களுக்கு இருந்தன. அடிப்படையான இந்த வித்தியாசங்கள் எல்லாத் துறைகளிலுமே பிரதிபலித்தன.

வாழ்க்கைப் புயலில் அசாதாரணமான ஆர்வத்துடன் இலிச் குதித்துவிட்டார்; அதனுல் தொழிலாளர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் நிதானித்து, நிறுத்துப் பார்த்து, அதன் தன்மையைக் கிரகித்துக்கொண்டார். பாட்டாளி மக்களின் வளர்ச்சியை ஒவ்வொரு துறையிலும் ஊன்றிக் கவனித்தார்; அவர்களின் நிலைமைகளைத் தெளிவாக உணர்ந்தார்; பாட்டாளி மக்கள் மாத்திர மல்ல, நிலைமைகளுமே முற்றும் மாற்றம் அடைந்துள்ளன என்பதை அவர் அறிந்துகொண்டார்.

அறிவாளிகளும் மாற்றம் பெற்றுத் திகழ்ந்தனர்; 1905-ம் வருடம் பெரும்பாலான அறிவாளிகள் தொழிலாளர்களை ஆதரித்தனர். ஆனுல், இப்பொழுதோ நிலைமை முற்றிலும் வேறு விதமாக மாறி இருந்தது. பாட்டாளி மக்கள் தலைமை தாங்கி நடத்தவிருக்கும் போராட்டத்தின் போக்கு எத்தகையதாய் இருக்கும் என்பது ஒருவாறு நிர்ணயமாகிவிட்டது. போராட்டம் பயங்கரமானதாக இருக்கும்; சமரசத்துக்கு இடம் இல்லாததாக இருக்கும்; தங்கள்

போருக்குத் தடையாகக் குறுக்கே நிற்கும் அனைத்தையும் பாட்டாளி மக்கள் அழித்துப் போடுவார்கள். தங்களுக்குத் தேவையான, ஒரு எல்லைக்கு உட்பட்ட ஒரு அரசியலைப் பெறும் பொருட்டு, மிதவாத முதலாளிகள், பாட்டாளி மக்களை ஒரு கருவியாக இனிப் பயன்படுத்த முடியாது. ஒரு எல்லைக்குள் உட்பட்ட அரசியல் அமைப்பைப் பெற்று அத்துடன் பாட்டாளி மக்கள் திருப்தியடைந்து விட மாட்டார்கள். தங்கள் போராட்டத்தை மற்றவர்கள் தலைமை தாங்கி நடத்த, தொழிலாளர் வர்க்கம் இனி இடமே கொடுக்காது. அதுவே தலைமை தாங்கிப் போராட்டத்தை இனி நடத்தும்.

போராட்ட நிலைகளும் மாற்றம் அடைந்து இருந்தன; ஸார் சர்க்காரும் 1905-ம் வருடப் புரட்சியால் பல பாடங்களைக் கற்றுக்கொண் டிருந்தது; தொழிலாளர் இயக்கம் முழுவதிலும் ஒற்றர்களையும் அடுத்துக் கெடுப்போரையும் உள்ளே திணித்து, தன் வலையை அது விரித்து வைத்திருந்தது. வீதிகளின் மூலைகளில் தவம் கிடந்த பழைய காலத்து ஒற்றர்களைப் போல இந்தக் காலத்து ஒற்றர்களின் நிலை இல்லை. பழைய காலத்தில் ஒற்றர்களின் கண்ணில் படாமல் மறைந்துகொள்ள வழி இருந்தது. கட்சிக்குள் புகுந்து கட்சியில் முக்கியமான பதவிகள் வகிக்கும் மாலினோவஸ்கிகளும் ரோமோனோவ்களும், பிரன்டின்ஸ்கிகளும் செர்னோமாஸாவ்களும் இப்பொழுது இருந்தனர். துப்பறிவதும் கைது செய்வதும் முன்னைப்போல் தான்தோன்றித்தனமாய் நடைபெறவில்லை. திட்டமிடப்பட்டு, அதிக எச்சரிக்கையுடன் அவை இப்போது நடைபெற்றுவந்தன.

மிக மோசமான சந்தர்ப்பவாதம் வளர இந்த நிலைகள் இடம் அளித்தன. தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப் படையான கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று சொல்லிவந்த கலைப்புவாதிகளின் கொள்கையை அறிவாளிகள் பலர் ஆதரித்தனர். இடது பக்கமும் வலது பக்கமும் காளான்களைப் போன்று கலைப்புவாதிகள் எங்கும் தோன்றினர். சாதாரணமான காடெட்டுகள்கூட; சட்ட விரோதமான கட்சியை இயன்ற அளவு தாக்கி, அவமானப்படுத்த முயன்றனர்; அவர்களுக்கு எதிராக உக்கிரமான போராட்டத்தை நடத்தாமலும் இருக்க முடியவில்லை. போராட்டம் சமநிலையில் நடைபெற வழியில்லை. கலைப்புவாதிகளுக்கு ரஷ்யாவில் வலிமைபடைத்த சட்டரீதியான ஸ்தாபனம் இருந்தது. ஜனங்களிடையே விரிவான முறையில் தங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்ய அவர்களுக்கு வசதி இருந்தது. ஆனால், போல்ஷ்விக்குகளுக்கோ அந்த வசதிகளும் சௌகரியங்களும் இல்லை. ரகசியமான முறையில் கட்சி இயங்கின காரணத்தால், ஏற்பட்ட கஷ்டமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் அங்குலம் அங்குலமாக அவர்கள் போராட வேண்டி இருந்தது.

1911-ம் வருடம், ஒரு புறம் தணிக்கை என்கிற சுவரைத் தகர்க்கவும் மறு புறம் சட்டவிரோதமான கட்சி ஸ்தாபனத்தைப் பலப்படுத்தவும் தீவிர முயற்சிகள் நடந்தன. 1910-ம் வருடம் நடந்த மகாநாட்டில் சிருஷ்டிக்கப்பட்ட ஐக்கிய ஸ்தாபனத்துக்குள், வெளிநாடுகளில் போராட்டம் ஆரம்பம் ஆயிற்று; ஆனால், விரைவில் ஸ்தாபனத்தின் எல்லையையும் கடந்து தன் போக்கில் போராட்டம் நடைபெற்று வந்தது. பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து நட்சத்திரமும் மாஸ்கோவிலிருந்து சிந்தனையும் வெளிவருவதைக் கண்டு இலிச் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.

வெளிநாடுகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளை ரஷ்யாவுக்குக் கப்பல் மூலம் அனுப்பும் வேலை 1905-ல் நடைபெற்றதைக் காட்டிலும் மிக மோசமாக இருந்து வந்தது. ரஷ்யாவிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான ஒற்றர்கள் வியாபகமாக ஊடுருவிப் பாய்ந்திருந்தனர். யாவற்றையும் அவர்கள் தெரிந்துகொண் டிருந்தனர். இதனுல்தான் போஷ்விக்குகளின் கட்டுரைகளைத் தாங்கி, சட்டரீதியான பத்திரிகைகளும் மாசிகைகளும் ரஷ்யாவிலிருந்து வெளிவருதைக் கண்டு இலிச் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.

நட்சத்திரம் ஆசிரியர் குழாத்தில் போஞ்ச் புருவிச்சும், (போல்ஷ்விக்) என். ஜோர்டான்ஸ்கியும் (அன்று இவர் பிளக்கானுவ்வாதியாக இருந்தார்) ஐ. பி. போக்ரோவஸ்கியும் (போல்ஷ்விக் அனுதாபி ; டூமா சபை அங்கத்தினர்) அங்கம் வகித்தனர். டூமா சமதர்ம ஜனநாயகக் கட்சியின் பத்திரிகை அது. அதன் முதல் இதழில் பிளக்கானுவின் கட்டுரை ஒன்று வெளியாகி இருந்தது. அதன் முதல் இதழைப் பற்றி இலிச் திருப்தியாகச் சொல்லவில்லை. அதன் போக்கு மந்தமாக இருப்பதாக அவர் நினைத்தார். ஆனல், மாஸ்கோவிலிருந்து வெளிவந்த சிந்தனை என்ற பத்திரிகையின் முதல் இதழ் அவருக்கு அதிக திருப்தியை அளித்தது.

இந்தப் பத்திரிகையைப்பற்றி மாக்ஸிம் கார்க்கிக்கு, "இது முற்றும் நமது பத்திரிகையாகத் திகழ்கிறது; எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி" என்று இலிச் எழுதினர். நட்சத்திரத்துக்கும் சிந்தனைக்கும் இலிச் பல கட்டுரைகள் எழுதினர். சட்டரீதியான பத்திரிகைகளை வெளியிடுவதற்குக்கூட அதிகக் கஷ்டமாய் இருந்த காலம் அது. பெப்ருவரி மாதம் மாஸ்கோவில் ஸ்கோவோர்ட்ஸோவ் ஸ்டிப்பனேவும், பீட்டர்ஸ்பர்க்கில் போஞ்ச் புருவிச்சும் பொலிடாவுடன் சேர்ந்து வேலை செய்த லிடியா மிஹைலொவ்னு பிப்போவிச்சும் மற்றவர்களும் கைதுசெய்யப் பட்டனர் ; ஏப்ரல் மாதம் சிந்தனை வெளியிடுவது அடியோடு நின்றுபோயிற்று. டூமாப் பகுதியின் பத்திரிகையான நட்சத்திரமும் இருபத்தைந்து இதழ்கள் வெளிவந்த பின்னர், ஜூன் மாதம் நின்றுபோயிற்று. பிறகு நவம்பர் மாதம் 5-ம் தேதி அது மீண்டும் வெளிவரத் தொடங்கியது. அப்பொழுது அதனுடைய போக்கு முற்றும் போல்ஷ்விக் போக்காக மாறிவிட்டது. பக்குவிலிருந்து இன்னெரு போல்ஷ்விக் பத்திரிகை சமகால வாழ்க்கை என்பது வெளிவரத் தொடங்கியது.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து கல்வி என்னும் பெயருடன் சட்டரீதியான ஒரு பத்திரிகையை வெளியிடுவதற்காகத் தோழர் ஸாவெல் யெவ்வுடன் ஜூலை மாதம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தோம். ஆனல் 1911-ம் வருட இறுதியில்தான் பத்திரிகையை வெளியிட முடிந்தது.

இந்தப் பத்திரிகைகள் பிரசுரமாவதை இலிச் அக்கரையோடு கவனித்தார். அவைகளுக்கு அவர் கட்டுரைகளும் எழுதி அனுப்பினர்.

1910-ம் வருடம் நவம்பர் மாதம் ஒட்ஸோவிஸ்டுகள் இத்தாலியிலுள்ள போலோக்னுவில் அரசியல் பள்ளிக்கூடம் ஒன்று நடத்த ஏற்பாடுகள் செய்தனர். சொற்பொழிவாளர்கள் பலரைச் சொற்பொழிவாற்ற மாணவர்கள் அழைத்தனர். டான், பிளக்கானுவ், லெனின் ஆகியவர்களுக்கும் அழைப்பு வந்தது. போலோக்னுவுக்குத் தான் வர முடியாது என்றும், வேண்டுமானல் மாணவர்கள்

பாரீஸுக்கு வரட்டும் என்றும் இலிச் தெரிவித்தார். தங்களுக்குக் காப்ரிப் பள்ளிக்கூடத்தில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு, முன்னேற்றவாதிகள் சாக்குச் சொல்ல ஆரம்பித்தனர். வெளி நாட்டிலுள்ள மத்திய கமிட்டிதான் அதிகாரபூர்வமான அழைப்பை அனுப்ப வேண்டும் என்று அவர்கள் கூறினர். இந்தக் கமிட்டியில் மென்ஷ்விக்குகள் ஆதிக்கம் செலுத்தினர்; லெனினுடைய செல்வாக்கைக் குறைப்பதற்காக வந்த மாணவர்களுடன் பாரீஸுக்கு வந்த அவர்கள் சுய உரிமை கோரினர். எனினும் வகுப்புகள் நடக்கவில்லை; ஆகவே, மாணவர்களை ரஷ்யாவுக்குத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

1911-ம் வருட வசந்த காலத்தில் பாரீஸுக்கு அருகில் நமது சொந்தக் கட்சிப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கும் வேலையில் நாங்கள் வெற்றிபெற்றோம். போல்ஷ்விக்கு ஊழியர்களும் கட்சி மென்ஷ்விக்கு ஊழியர்களும் முன்னேற்றம், சார்பான ஒட்ஸோவிஸ்டு ஊழியர்களும் இந்தப் பள்ளிக்கூடத்தில் அனுமதிக்கப் பெற்றனர். பின்கூறப்பட்ட இரு பிரிவினரும் சிறு அளவில்தான் சேர்ந்தனர்; அவர்களின் எண்ணிக்கை வெகு சொற்பம்.

பள்ளிக்கூடத்துக்கு முதலில் நான்கு தோழர்கள், செயிண்டு பீட்டர்ஸ் பர்க்கைச் சேர்ந்தவர்கள்—வந்தனர். பிலோஸ்டோட்வஸ்கி (விளாதிமிர்) ஜார்ஜ் - (இருவரும் லோகத் தொழிலாளர்கள்) முன்னேற்றவாதி ஒருவர்; வீரா வாஸில்யெவா என்னும் பெண் ஊழியை ஒருத்தி ஆகிய நால்வரும் வந்தனர். இவர்கள் அறிவாளிகள் இனத்தைச் சேர்ந்தவர்கள்; வளர்ச்சியடைந்தவர்கள்; முதல் நாள், உணவு அருந்த இவர்களை இலிச் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார்; அன்று மாலை முழுதும் ஆவலோடு அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். செயிண்டு பீட்டர்ஸ்பர்க்கைப் பற்றியும், அவர்கள் அங்கே செய்து வருகிற வேலைகளைப் பற்றியும் இலிச் பல கேள்விகள் கேட்டார். ரஷ்யாவில் தொழிலாளர் இயக்கம் புத்துயிர் பெற்றுவிட்டதற்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா என்பதை அவர்கள் கூறும் பதிலிலிருந்து கண்டுபிடிக்க முயன்றார். தான் வசித்த இடத்துக்கு அண்மையில், பாரீஸ் நகரின் சுற்றுவட்டாரத்தில் - இருந்த பொன்டினே - ஆக்ஸ் - ரோஸஸ் என்னும் இடத்தில் அவர்கள் தற்காலிகமாகத் தங்க, நிக்கோலாய் அலெக்ஸாண்ட்ரோவிச் ஷீமாஷ்கோ ஏற்பாடு செய்தார். மற்ற மாணவர்கள் வரும்வரையில் அவர்கள் படிப்பதில் தங்கள் பொழுதைப் போக்கினர். பிறகு மாஸ்கோவிலிருந்து இரண்டு தோழர்கள் பிரியாஸ்கின் என்னும் தோல் பதனிடும் தொழிலாளியும் பஞ்சாலைத் தொழிலாளி ஒருவரும் (இவர் பெயர் எனக்கு நினைவு இல்லை) வந்தனர். செயிண்டு பீட்டர்ஸ் பர்க் தோழர்கள் அதி விரைவில் பிரியாஸ்கினுடன் நெருங்கிய நண்பர்கள் ஆனர் ... சாதாரணத் தொழிலாளியைவிட அவர் சிறந்த அறிவாளி. ரஷ்யாவில் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்ட சட்ட விரோதமான பத்திரிகையை நடத்தியவர் இவர்; அதன் ஆசிரியராய் இருந்தவர். இவருக்கு நன்றாக எழுதவரும்; ஆனால் அதிகக் கூச்சமுள்ளவர்; பேசும்பொழுது, அவருடைய கைகள் நடுங்கும். இதற்காக அவரை பிலோஸ்டோட்வஸ்கி இதமாகவும் நல்லெண்ணத்துடனும் கேலி செய்தார்.

அக்டோபர் புரட்சி நடந்தபொழுது, சைபீரியாவிலுள்ள பார்னுல் மாகா

ணத் தொழிற் சங்கத்தின் தலைவராகப் பிரியாஸ்கின் இருந்தார். கோல்சாக் அந்த நகரத்தைக் கைப்பற்றினபொழுது, இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பாரீஸுக்குப் பதினைந்து கிலோமீட்டர்களுக்கு அப்பால் இருந்த லாங் ஜுமே எனும் இடத்தில் நாங்கள் பள்ளிக்கூடம் நடத்த ஏற்பாடு செய்தோம். அங்கே ரஷ்யர்களும் இல்லை; கோடைக்கால வாசிகளும் இல்லை. பிரதான வீதியின் அருகில் நீண்டு கிடக்கும் கிராமம் லாங்ஜுமே. "பாரீஸின் வயிற்றை" நிரப்புவதற்காக விவசாயிகள் உற்பத்தி செய்யும் சாமான்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் இரவு முழுதும் அந்த வீதியில் சென்ற வண்ணம் இருக்கும். அந்தக் கிராமத்தின் வயலின் மத்தியில் தோல் பதனிடும் சிறிய தொழிற்சாலை ஒன்று இருந்தது. வயலைச் சுற்றிலும் பழத் தோட்டங்கள் இருந்தன. எங்கள் திட்டம் வருமாறு: கிராமத்தில் மாணவர்கள் வாடகைக்கு அறைகளை அமர்த்திக்கொள்ள வேண்டும்; இன்னிஸா அந்த வீடு முழுவதையுமே வாடகைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு அந்த வீட்டில் சாப்பாடு தயார் செய்ய வேண்டும். நாங்களும் ஸிநோவியெவ் தம்பதிகளும் லாங்கஜுமேவுக்குச் சென்றோம். துருக்கானஸ்கில் (சைபீரியா) மார்ட்டோ வுடன் சிறைவாசம் அனுபவித்தவரும் பின்னர் யூரல் பகுதியில் சட்ட விரோத மான காரியங்களில் ஈடுபட்டிருந்தவருமான ஒரு தொழிலாளியின் மனைவி காட்டியா மாஸோனோவர் வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண் டாள். வீட்டு வேலைகளை நிர்வகிப்பதில் காட்டியா திறமைசாலி; தோழமை உணர்ச்சி மிக்கவள்; எல்லாம் அற்புதமாக நடந்தன. இன்னிஸா வாடகைக்கு எடுத்த வீட்டில் ஸெர்கோவும் ஸெமியோனும் ஸாக்கரும் வசிக்க ஏற்பாடு செய்தோம்.

ஸெர்கோ சிறிது முன்னர்தான் பாரீஸுக்கு வந்தவர்; அதுவரையில் அவர் பெர்ஷியாவில் வசித்துவந்தார். பிளக்கானவ்வாதிகள், கலைப்பு வாதிகள், முன்னேற்றவாதிகள், ஆகியவர்கள் சம்பந்தமாக இலிச் மேற் கொண்ட கொள்கையை விளக்கி, நாங்கள் நீண்டதொரு கடிதம் எழுதினது எனக்கு ஞாபகம் இருக்கிறது. காகஸஸ் போல்ஷ்விக் பகுதியுடன் நாங்கள் தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டோம். வெளிநாடு களில் நடந்து வந்த போராட்டத்தை விளக்கி நாங்கள் ஸெர்கோவுக்குக் கடிதம் எழுதினோம். நீண்ட நாட்கள் அந்தக் கடிதத்துக்குப் பதிலே வரவில்லை. ஒரு நாள், காவல்காரர் என்னிடம் வந்து, "கீழே ஒருவர் வந்திருக்கிறார். அவரால் ஒரு பிரெஞ்சு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. உங்களைத் தேடித் தான் அவர் வந்திருக்கிறார் போலும்" என்று சொன்னார். நான் கீழே சென்ற பொழுது, முகத்தில் புன்னகை தவழ, காக்காஷியர் ஒருவர் ஹாலில் நிற்பதைக் கண்டேன்: அவர்தான் ஸெர்கோ. அன்று முதல் அவர் எங்களின் நெருங்கிய நண்பர் ஆனார்.

ஸெமியோனை எங்களுக்கு நீண்ட காலமாகத் தெரியும். என் அன்னை அவரைப் பெரிதும் நேசித்தார். ஏனெனில் பத்தொன்பது வயதுச் சிறுவனாக இருந்தபொழுது, முதன்முறை தான் தொழிற்சாலையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்ததை அவர் என் அன்னைக்கு வருணித்துச் சொன்னார்; நிக்கோலா

யெவ்விலிருந்து வந்த தொழிலாளி அவர்; குடிகாரனைப்போல் பாசாங்கு செய்து தாம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்ததாக அவர் சொன்னார்.

1905-ம் வருட முதலே ஸாக்கரை எங்களுக்குத் தெரியும். முதன் முதலாக நாங்கள் அவரைப் பீட்டர்ஸ்பர்க்கில் சந்தித்தோம்.

இன்னிஸாவின் வீட்டில் எங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே இருந்தார்கள்; அந்த வீடு கிராமத்தின் ஒரு கோடியில் இருந்தது. நாங்கள் பொதுச் சமையல் சமைத்துச் சாப்பிட்டோம். மாணவர்களுடன் உரையாடுவதும் பல்வேறு விஷயங்களைப்பற்றி அவர்களைக் கேள்வி கேட்பதும் மனத்திற்கு மகிழ்ச்சியை அளித்தன.

தோல் பதனிடும் தொழிற்சாலையில் வேலை செய்கிற ஒரு தொழிலாளியின் இரண்டு மெத்தைச் செங்கல் வீட்டில் நாங்கள் சில அறைகளை வாடகைக்கு அமர்த்தினோம். சிறிய தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளியின் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ள இது எங்களுக்கு வசதி அளித்தது. அவர் அதிகாலையில் எழுந்து வேலைக்குப் போவார்; மாலையில் களைப்புற்றுச் சோர்ந்து போய் வீடு திரும்புவார்; வீட்டை அடுத்துத் தோட்டம் கிடையாது. ஆகவே, சில சமயங்களில் வீதிக்கே நாற்காலி மேஜைகளை எடுத்து வந்து போட்டுக் கொண்டு, சோர்வுற்று இருக்கும் தனது முகத்தை, அலுத்துப்போய்க் கிடக்கும் தனது கைகளில் சாய்த்துக்கொண்டு மணிக்கணக்காக உட்கார்ந்து இருப்பார். அவருடன் சேர்ந்து வேலை செய்கிற தொழிலாளி எவரும் அவரைச் சந்திக்க வருவது இல்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் அவர் மாதாகோயிலுக்குச் செல்வார். கன்னிமாடப் பெண்கள் வந்து அங்கே இசைகலந்த இனிய குரலில் பாடுவார்கள்; பீத்தோவன் முதலியவர்களின் பாக்களை அவர்கள் பாடுவார்கள். சாரமற்ற வாழ்க்கை நடத்தி வந்த அந்தத் தோல் பதனிடும் தொழிலாளியைச் சங்கீதம் கவர்ந்ததில் வியப்பு இல்லை. தோல் பதனிடும் தொழிலாளியான பிரியாஸ்கினுடன் இவரை நாங்கள் ஒப்பிட்டுப் பார்த்தோம். லாங்ஜுமேத் தொழிலாளியின் வாழ்க்கையைவிட, பிரிஸ்யாகினுடைய வாழ்க்கை சிறந்தது என்று கூற முடியாது. எனினும் பிரிஸ்யாகின் வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளி; தம் தோழர்களுடன் நெருங்கிப் பழகுபவர்; பிரெஞ்சுத் தோல் பதனிடும் தொழிலாளியின் மனைவி அதிகாலையில் மரப் பூட்ஸைக் காலில் அணிந்து, துடைப்பத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, அருகில் இருக்கும் பங்களாவுக்குக் கிளம்பி விடுவாள்; அங்கே அவளுக்கு வீடு பெருக்கும் வேலை; அவளுடைய இளம் புதல்வி வீட்டைக் கண்காணித்துக்கொள்வாள்; தம் இளைய சகோதரர்களையும் சகோதரிகளையும் கண்காணித்துக்கொண்டு, அந்தச் சதுப்பு வீட்டில் நாள் முழுக்கும் மந்தமாக அவள் அடைந்து கிடப்பாள். அவளுக்குத் தோழிகள் எவரும் இல்லை. [illegible] முழுதும் வீட்டு வேலையில் அவள் மூழ்கிக் கிடப்பாள்; விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாதாகோயிலுக்குப் போவாள்; சமூக நிலையை மாற்றித் தீர வேண்டும் என்ற எண்ணமே, தோல் பதனிடும் இந்தத் தொழிலாளர் குடும்பத்தாருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஏழை என்பதும் பணக்காரன் என்பதும் கடவுளின் சிருஷ்டி ஆயிற்றே? ஆகவே, அந்த நிலைகள் அப்படித்தானே இருந்து தீரும் என்று அந்தத் தொழிலாளி நியாயவாதம் பேசினார்.

விரைவில் எல்லா மாணவர்களும் வந்து சேர்ந்தனர்; நிக்கோலாயெவ் விலிருந்து வந்த தொழிலாளி ஆண்டரியெவ், வோலோக்டாவில் சிறைவாசம் அனுபவித்தபொழுது, அரசியலை விசேஷமாக ஆராய்ந்து படித்திருந்தார். தம் சிறந்த மாணவர் என்று வேடிக்கையாக இலிச் அவரை அழைத்தார். பக்குவிலிருந்து டோகாடோவும் ஸெமாவும் வந்திருந்தனர். கீவிலிருந்து ஆன்டிரி மாலினேவஸ்கியும் சுகுரினும் வந்திருந்தனர்; இவர்கள் இருவரும் பிளக்கானுவ்வாதிகள். மாலினேவஸ்கி போலீஸ் ஒற்றன் என்பது பின்னர் தெரியவந்தது. குரல் இனிமையாக இருந்ததைத் தவிர, வேறு எந்தச் சிறந்த அம்சமும் அவரிடம் தென்படவில்லை. வாலிபரான இவர் எதையும் கவனித்துப் பார்ப்பது கிடையாது. பாரீஸுக்கு வரும் வழியில் போலீஸாரிடமிருந்து தாம் தப்பியதை அவர் என்னிடம் சொன்னார்; அவர் சொன்ன கதை நம்பத் தக்கதாக இல்லை. எனினும் அவர்மீது நான் சந்தேகப்படவில்லை.

சுகுரின் தம்மை ஒரு பிளக்கானுவ்வாதி என்று கூறிக்கொண்டார்; அவர் ஸெர்மோவாத் தொழிற்சாலையில் வேலை செய்தவர். நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்தவர் இவர், சிறந்த அறிவாளி; ஆனால் உணர்ச்சி வயப்பட்டவர்; விரைவில் அவர் போல்ஷ்விக்காக ஆனார். ஸாவா என்னும் பிளக்கானுவ்வாதியும் எக்காட்டெரினுஸ்லாவிலிருந்து வந்திருந்தார். மாணவர் களுக்காக அறைகளை வாடகைக்கு அமர்த்தினபொழுது அவர்களை ரஷ்யக் கிராம ஆசிரியர்கள் என்று சொல்லி வாடகைக்கு அமர்த்தினோம். லாங்கஜூ மேயில் வசித்தபொழுது, ஸாவாவை டைபாயிடு ஜுரம் பீடித்தது; அவரைப் பரிசோதனை செய்த பிரெஞ்சு டாக்டர் புன்னகை தன் முகத்தில் தவழ, "இவர் அசாதாரணமான ஆசிரியராக அல்லவோ இருக்கிறார்!" என்று சொன்னார். எங்கள் "ஆசிரியர்கள்" நாள் முழுதும் வெறுங் காலுடன் அலைந்தது, பிரெஞ்சுக்காரர்களுக்குப் பெரும் வியப்பை அளித்தது. அந்த வருடம் வேனில் காலம் மிகக் கடுமையாக இருந்தது; உஷ்ணம் தாங்க முடியவில்லை.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஸாவா பாரீஸ் கட்சி மகாநாட்டில் கலந்து கொண்டார். அவருக்கு அகால மரணம் ஏற்படும்வரை, பல வருடங்கள் அவர் போல்ஷ்விக் அணியில் நின்று போராடினார். 1918-ம் வருடம் வெள்ளைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இருபத்தாறு பக்கு கம்மிஸார்களில் அவரும் ஒருவர்.

வகுப்புகள் முறையாக நடந்தன; அரசியல்—பொருளாதார சாஸ்திரத் தைப்பற்றி முப்பது சொற்பொழிவுகளும் விவசாயப் பிரச்னையைப்பற்றி பத்துச் சொற்பொழிவுகளும் சமதர்ம தத்துவ அனுஷ்டானத்தைப்பற்றி ஐந்து சொற் பொழிவுகளும் இலிச் செய்தார். அரசியல் பொருளாதார ஆசிரியையாக இனிஸா தொண்டாற்றினாள். ஸினேவியெவ்வும் காமனீவும் ஆட்சியின் சரித்திரத் தைப்பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினர்; ஷீமாஷ்கோ பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்; இன்னும் பலரும் சொற்பொழிவுகள் செய்தனர். மேற்கு ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்தின் சரித்திரத்தைப்பற்றி ரியாஸனேவ் சொற்பொழிவுகள் ஆற்றினர். பிரெஞ்சுத் தொழிலாளர் இயக்கத்தைப்பற்றி சார்லஸ் ராப்போபோர்டு சொற்பொழிவு செய்தார். பொதுச் சட்டம்,

பொருளாதாரம் ஆகியவைபற்றி ஸ்டெகலோவும், பின்னர் ஏனேடாவஸ்யெவ்வஸ்கியும் சொற்பொழிவாற்றினர். இலக்கியத்தைப்பற்றி லூனசார்ஸ்கி சொற்பொழிவு ஆற்றினர். பத்திரிகைத் தொழிலைப்பற்றி ஸ்டானிஸ்லாவ்வோல்ஸ்கி சொற்பொழிவாற்றினர்.

மாணவர்கள் ஒழுங்காகப் படித்தனர். ஆனல், சில நாட்கள் மாலையில் வயலுக்குச் சென்று அவர்கள் உரக்கப் பாடினர்; அல்லது வைக்கோல் போருக்கு அருகில் படுத்துக்கொண்டு பற்பல விஷயங்களைப்பற்றி உரையாடினர். சில சமயங்களில் இலிச்சும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்.

காமனிவ் லாங்ஜூமேயில் தங்கி இருக்கவில்லை. சொற்பொழிவாற்ற மட்டும் அவர் லாங்ஜூமேக்கு வந்தார். இரண்டு கட்சிகள் என்னும் பெயரில் அவர் அப்பொழுது ஒரு புத்தகம் எழுதிக்கொண் டிருந்தார்; இதைப்பற்றி அவர் அடிக்கடி இலிச்சுடன் விவாதம் நடத்தினர். கிராமத்துக்கு வெளியில் இருந்த புல்வெளியில் படுத்துக்கொண்டு தமது கருத்துக்களைக் காமனிவுக்கு இலிச் சொன்னர். இந்த நூலுக்கு இலிச் ஒரு முகவுரை எழுதி இருக்கிருர்.

எங்களைச் சேர்ந்தவர்களைச் சந்திப்பதற்காக நான் அடிக்கடி பாரீஸூக்குச் சென்று வந்தேன். லாங்ஜூமேயிக்கு வரும் சிரமத்தை அவர்களுக்கு அளிக்காமல் இருப்பதற்காக இது அவசியமாயிற்று. மாணவர்கள் ரஷ்யா திரும்ப ஏற்பாடுகள் செய்துகொண் டிருந்தனர். எனவே, பாரீஸூக்கு அருகில் அவர்கள் வசிப்பதை ரகசியமாக வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பள்ளிக்கூடத்தில் நடந்த காரியங்கள் இலிச்சுக்குப் பரம திருப்தியை அளித்தன. ஒய்வு நேரங்களில் நாங்கள் இருவரும் சைக்கிளில் உலாவச் சென்ருேம். குன்றின் உச்சிக்கு நாங்கள் நடந்து செல்வோம். பிறகு பதினைந்து கிலோமீட்டர்களுக்கு அப்பால் இருந்த விமான நிலையத்துக்குச் சைக்கிளில் செல்வோம். இது ஒரு ஒதுப்புறமான இடம். ஜூவிஸி விமான நிலையத்துக்கு ஆட்கள் வருவதைப் போன்று இங்கு வர மாட்டார்கள். பல சமயங்களில் நாங்கள் மட்டும்தான் அங்கே இருப்போம். விமானங்கள் பறந்து சுற்றி வட்டமிடுவதைத் தன் ஆசை தீரு மட்டும் இலிச் கண்டு களிப்பார்.

ஆகஸ்டு மாத மத்தியில் நாங்கள் பாரீஸூக்குத் திரும்பினேம்.

மிகச் சிரமத்துடன் 1910-ம் வருடம் உருவகப்படுத்தப்பட்ட சர்வகட்சி ஒற்றுமை படிப்படியாகச் சிதைய ஆரம்பித்தது. ரஷ்யாவில் வேலை செய்வது சம்பந்தமாக, அனுபவரீதியான பிரசினைகள் எழ எழ, பொதுவாகச் சேர்ந்து வேலை செய்வது சாத்தியமல்ல என்பது தெளிவாயிற்று. அனுஷ்டானத்தின் தேவைகள், மென்ஷ்விக்குகளில் சிலர் அணிந்திருந்த திரையைக் கிழித்து எறிந்தன. டிராட்ஸ்கி காட்டிய "விஸ்வாதத்தின்" உண்மைத் தன்மை வெளிச்சமாயிற்று. "விஸ்வாசம்" என்னும் திரைக்குப் பின்னே இருந்துகொண்டு, அவர் கலைப்புவாதிகளையும் முன்னேற்றவாதிகளையும் ஒன்றுபடுத்த முயன்ருர். ரஷ்யாவில் இயங்கின ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது, இந்த ஒற்றுமையின் பொய்த்தன்மை வெளியாயிற்று.

1910-ம் வருடம் டிசம்பர் மாதம் இறுதியில் மத்திய கமிட்டிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி லெனினும் ஸினேவியெவ்வும் காம

னிவும் வெளிநாட்டிலுள்ள மத்தியக் கமிட்டிக் காரியாலயத்துக்குக் கடிதம் ஒன்று எழுதினர். ஒரு மாதத்திற்குப் பிறகுதான் அவர்களுக்குப் பதில் கிடைத்தது. மென்ஷ்விக்குகளின் ஆதிக்கத்தில் இருந்த மத்திய கமிட்டி இந்த யோசனையை நிராகரித்தது. 1911-ம் வருடம் மே மாத இறுதியில் இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடந்தன. பேச்சுவார்த்தைகளால் பலன் எதுவும் ஏற்படாது என்பது தெளிவாயிற்று. போல்ஷ்விக் பிரதிநிதியாக மத்திய கமிட்டிக் காரியாலயத்தில் இருந்த தோழர் ஷீமாஷ்கோ தமது பதவியை ராஜிநாமாச் செய்தார். அந்தக் காலத்தில் வெளிநாடுகளில் வசித்துவந்த மத்தியக் கமிட்டி அங்கத்தினர்களின் கூட்டத்தைப் போல்ஷ்விக்குகள் கூட்டினர். 1911-ம் வருடம் ஜூன் மாதத்தில் ஒன்பது மத்தியக் கமிட்டி அங்கத்தினர்கள் வெளிநாடுகளில் இருந்தனர். பண்டுவைச் சேர்ந்த ஐயோனுவைத் தவிர - இவர் நோயால் வருந்தினர் - மற்றவர்கள் ஜூன் மாதம் பத்தாம் தேதி கூடினர். ஆனால் மென்ஷ்விக் கோரியெவ்வும் பண்டு இயக்கத் தலைவரும் மகாநாட்டிலிருந்து வெளியேறினர். கூட்டத்தில் கலந்துகொண்டவர்களோ கட்சியை எதிர்நோக்கி நிற்கும் முக்கியமான பிரசினைகளைப்பற்றியும் கட்சி மகாநாடு கூட்டுவதைப்பற்றியும் விவாதித்தனர். ரஷ்யாவில் ஒரு ஸ்தாபனக் கமிட்டியை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. கட்சி மகாநாடு நடத்த ஏற்பாடு செய்வது இந்தக் கமிட்டியின் வேலை. ஆகஸ்டு மாதம் தோழர்கள் ரஷ்யாவுக்குச் சென்றனர். ஸாக்கர், செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கும், மாஸ்கோவுக்கும் சென்றார். ஸெமியான் யூரலுக்கும் எக்காட்டெரிஸ்லாவுக்கும் சென்றார்; ஸெர்கோ தென் பகுதிகளுக்குச் சென்றார். ரைக்கோவும் ரஷ்யாவுக்குச் சென்றார். ஆனால் ரஷ்யாவை அடைந்ததும் அவர் வீதியில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்த விலாசங்கள் பல கைப்பற்றப்பட்டன என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனால் இச் செய்தி உண்மை அல்ல. அந்தச் சமயத்தில் பல போல்ஷ்விக்குகள் கைது செய்யப்பட்டது உண்மைதான்; அவர்களில், அப்பொழுதுதான் ரஷ்யாவுக்குத் திரும்பின பிரிஸ்யாகினும் ஒருவர். ஆனால் பிறகுதான் உண்மை தெரிந்தது. அப்பொழுது ரஷ்யாவுக்குப் பிரசுரங்களை அனுப்பிவந்த பியானிட்ஸ்கி லீப்ஸிக்கில் வசித்து வந்தார். ரஷ்யாவுக்குச் செல்லும் வழியில், ரைக்கோவ் அவருடன் சில தினங்கள் தங்கினர். அப்பொழுது பிரசுரங்களை அனுப்ப, பியானிட்ஸ்கிக்கு உதவிபுரிந்த பிரென்டின்ஸ்கியும் லீப்ஸிக்கில் வசித்து வந்தார். பியானிட்ஸ்கியும் மார்க்கும் பிரென்டின்ஸ்கியைப் பரிபூரணமாக நம்பினர். இந்தப் பிரென்டின்ஸ்கி போலீஸ் ஒற்றன் என்பது பிறகு தெரிய வந்தது. அவன் ரகசிய பாஷையில் எழுதப்பட்ட விலாசங்களை ரைக்கோவுக்கு விளக்கினன். ரைக்கோவைச் சோதனை செய்தபொழுது அவரிடமிருந்து எதுவும் அகப்படவில்லை. இருந்தாலும் போலீஸாருக்கு விலாசங்கள் எப்படிக் கிடைத்தது என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

பக்குவில் ஒரு மகாநாடு நடந்தது. நடந்த இடம் தற்செயலாகச் சோதனை செய்யப்படாதது ஆச்சரியம்தான். ஏனெனில் மகாநாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவரான பிரசித்திபெற்ற பக்குத் தொழிலாளி ஸ்டிபன் ஷாமியானும் வேறு சில தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டனர். மகாநாடு டிப்ளிஸுக்கு மாற்

றப்பட்டது. அங்கே மகாநாடு வெற்றிகரமாக நடந்தது. ஐந்து ஸ்தாபனங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஷாவார்ட்ஸும், செர்கோ முதலியவர்களும் மகாநாட்டில் கலந்துகொண்டனர். போல்ஷ்விக் பிரதிநிதிகளும் பிளக்கானுவ் வாதிகளும் மகாநாட்டில் பங்கு எடுத்துக்கொண்டனர்; ஸெர்னேமாஸோவும் - இவர் போலீஸ் ஒற்றன் என்பது பிறகு தெரியவந்தது - மகாநாட்டில் கலந்து கொண்டார். எனினும் ஸ்தாபனக் கமிட்டி தனது வேலையைப் பூர்த்தி செய்தது. 1912-ம் வருடம் ஜனவரி மாதம் 12-ம் தேதி கட்சி மகாநாடு நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

1911-ம் வருடம் பாரீஸில் இருந்த போல்ஷ்விக் பகுதி வலிமை உடையதாக இருந்தது. தோழர்கள் ஷீமாஷ்கோ, விளாதிமிர்ஸ்கி, அன்டோனுவ், குஸ்நெட்ஸாவ், பெலின்கின்ஸ்கள், இன்னிஸா, ஸ்டாஹல், நடாஷ்ஹோப்னர், கோட்லியாரெங்கோ, செர்னுவ், (இவருடைய உண்மைப் பெயர் எனக்கு நினைவு இல்லை) லெனின், ஸினேவியெவ், காமனீவ், லெவினு, தாராதூடா, மார்க், லியோவா முதலியவர்கள் பாரீஸில் இருந்தனர். மொத்தம் நாற்பதுக்கு அதிகமான அங்கத்தினர்கள் இருந்தனர். இந்தப் பகுதிக்கு ரஷ்யாவுடன் அதிகத் தொடர்பும் புரட்சி அனுபவமும் இருந்தன.

கலைப்புவாதிகளுக்கும் டிராட்ஸ்கிவாதிகளுக்கும் ஏனைய எதிரிகளுக்கும் எதிராக நடத்தின போராட்டம் இந்தப் பகுதியை உறுதி படைத்ததாக ஆக்கிற்று. ரஷ்யாவில் நடக்கும் வேலைக்கு இந்தப் பகுதி பேருதவி புரிந்தது. பிரஞ்சுத் தொழிலாளர்களிடையேயும் ஓரளவு வேலை செய்தது; பாரீஸில் வசித்த ரஷ்யத் தொழிலாளர்களிடையேயும் வேலை செய்தது. பாரீஸில் இத்தகைய தொழிலாளர் ஏராளமான பேர் இருந்தனர். ஒரு காலத்தில் ஸ்டாஹலும் நானும் அந்நியநாட்டுப் பெண் தொழிலாளர்களிடையே - உடுப்புத் தைப்பவர்களிடையே - வேலைசெய்ய முயன்றோம். நாங்கள் பல கூட்டங்கள் நடத்தினோம். ஆனால், இந்த வேலையின் முக்கியத்துவத்தை நம் தோழர்கள் பரிபூரணமாக உணராதது பெரிய முட்டுக்கட்டையாக அமைந்தது. கட்சிக் கூட்டத்தில், "பெண்கள் கூட்டம் ஏன் நடத்த வேண்டும்?" என்று யாராவது கேட்பார்கள். நல்ல காரியங்கள் பல செய்திருக்கலாம் என்றாலும் இத்தகைய மனப்பான்மையால் வேலை தடைப்பட்டது. இந்த வேலை அவசியம் என்று இலிச் கருதினார்.

"இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோ" மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் செப்டம்பர் மாத இறுதியில் இலிச் ஸூரிச் சென்றார். ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சி மத்திய கமிட்டிக்கு மோல்கென்பர்க் எழுதிய கடிதம் அந்த மகாநாட்டில் விவாதிக்கப்பட்டது. வரவிருக்கும் தேர்தல்களை உத்தேசித்து, மொராக்கோ சம்பவங்கள் பற்றிய ஜெர்மன் சர்க்கார் காலனிக் கொள்கையைக் குறைகூறுவது புத்திசாலித்தனமாகாது என்று மோல்கென்பர்க் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ரோஸா லக்ஸம்பர்க் இந்தக் கடிதத்தைப் பிரசுரித்துவிட்டார். இதற்காகப் பெபல் அவர்மீது ஆத்திரப்பட்டார். விளாதிமிர் இலிச் ரோஸாவை ஆதரித்தார். ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சி மேற்கொண்ட சந்தர்ப்பவாதக் கொள்கை இந்தக் கூட்டத்தில் தெளிவாக வெளியாகிவிட்டது.

இந்தப் பிரயாணத்தின்போது ஸ்விட்ஸர்லாந்தில் இலிச் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

அக்டோபர் மாதம் லவார்க் தம்பதிகள் தற்கொலை புரிந்துகொண்டனர்; அவர்களின் மரணம் இலிச்சின் உள்ளத்தில் ஆழ்ந்த உணர்ச்சியை உண்டுபண்ணியது. நாங்கள் அவர்களைச் சந்தித்து அளவளாவியது எங்கள் நினைவுக்கு வந்தது. ''கட்சிக்காக ஒருவரால் வேலைசெய்ய முடியவில்லை என்ருல் உண்மையை நேருக்கு நேராகப் பார்த்து லவார்க் தம்பதிகளைப் போன்று ஒருவர் இறக்க வேண்டும்'' என்று இலிச் சொன்னர். அவர்கள் செய்த வேலை வீணுகவில்லை என்றும் அவர்கள் ஆரம்பித்த நோக்கம்—பால் லவார்க்குடனும் லாரா லவார்க்குடனும் நெருக்கமாகப் பிணைபட்டுக் கிடந்த மார்க்ஸின் நோக்கம்—வளர்ந்து ஆசியாவின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் பரவப்போகிறது என்றும் அவர்களை அடக்கம் செய்யும் காலத்து உறுதி கூற இலிச் விரும்பினர். அந்தக் காலத்தில் சைனுவில் புரட்சி இயக்கம் வளர்ந்துகொண் டிருந்தது. தமது பிரசங்கத்தை விளாதிமிர் இலிச் எழுதிக் கொடுத்தார்; அதை மொழிபெயர்த்து இன்னிஸா கொடுத்தாள். ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிற் கட்சியின் சார்பாக எவ்வளவோ ஆழ்ந்த அனுதாபத்துடனும் உணர்ச்சியுடனும் அவர் அந்தப் பிரசங்கத்தைப் படித்தார் என்பது எனக்கு நன்ருக நினைவு இருக்கிறது.

அந்த வருட இறுதியில் வெளிநாடுகளில் வசித்துவந்த போல்ஷ்விக்குகளின் மகாநாடு ஒன்று நடந்தது. வெளிநாட்டு வாழ்க்கையால் எல்லோரும் தளர்ந்து இருந்தனர் என்ருலும் எல்லோரும் உற்சாகத்துடன் இருந்தனர்.

1912-ம் வருட ஆரம்பத்தில்

மகாநாட்டை நடத்தத் தீவிர ஏற்பாடுகள் நடந்தன; பிரேக்கில் மகாநாட்டை நடத்த முடியுமா என்று கேட்டு இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் புரோசெக் பிரதிநிதி நெமெட்சுக்கு விளாதிமிர் இலிச் ஒரு கடிதம் எழுதினர். பிரேக்கில் ரஷ்யர்கள் குடியேறி வாழவில்லை. ஆகவே மகாநாட்டை அங்கே நடத்துவது சௌகரியமாக இருக்கும் என்று தோன்றியது. முதலாவது அஞ்ஞாதவாச காலத்தில் மட்ராசெக் வீட்டில் தங்கியிருந்தபடியால், பிரேக் இலிச்சுக்குப் பழக்கமான ஊர்; எனவே மகாநாட்டை அங்கே நடத்துவது சௌகரியமாக இருக்கும். மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்யும்பொருட்டு இலிச் முன்னதாக பிரேக்குக்குப் போயிருந்தார். மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் பிலிப்பும் பிரன்டின்ஸ்கியும் வந்திருந்தனர். பிரசுரங்களை அனுப்புகிறவர் என்ற முறையில் பிரன்டின்ஸ்கியை எனக்குப் பெயர் அளவில்தான் தெரியும். அவரும் கோலோஷ்கியோக்கினும் (பிலிப்பும்) வில்னுவில் வசித்தனர். பிரசுரங்களைக் [illegible]ச ஸ்தாபனங்களுக்கு - குறிப்பாக மாஸ்கோவுக்கு - அனுப்புவது அவர் வேலை. பொய்ப் பாஸ்போர்டில் அவர் தன்னைப் பதிவு செய்துகொண் டிருந்தார். மகாநாடு நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் பிரன்டின்ஸ்கி கைது செய்யப்பட்டதாகவும் அவர்மீது சாட்டப்பட்ட குற்றம் ருசுவாகாமல் போன காரணத்தால் பத்து நாட்களுக்குப் பிறகு அவர் விடுதலை செய்யப்பட்டார் என்றும், ஆனல் அவர்

சிறையிலிருந்தபொழுது அவரைப் பேட்டிகண்ட பலர் பின்னர் கைது செய்யப் பட்டனர் என்றும் பிலிப் சொன்னுர். யார் யார் கைது செய்யப்பட்டனர் என்ற விவரம் பிலிப்புக்குத் தெரியவில்லை. ஆகவே பிரன்டின்ஸ்கியை என்னிடம் அழைத்து வருமாறும் ஆனல் மகாநாடு நடக்கும் இடத்தை அவருக்குச் சொல்ல வேண்டாம் என்றும் நான் பிலிப்பிடம் சொன்னேன். பிரன்டின்ஸ்கியுடன் நடந்த சம்பாஷணை அசாதாரணமானது. பிரசுரங்கள் பத்திரமாக மாஸ்கோ வுக்கு அனுப்பப்பட்டு வருவதாக, பிரன்டின்ஸ்கி எங்களுக்கு எழுதினர். எனி னும் தங்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை என்று மாஸ்கோத் தோழர்கள் குறைகூறினர். பிரசுரங்கள் பிரன்டின்ஸ்கி விலாசத்துக்கு அனுப்பப்பட்டது. எனவே பிரசுரங்கள் என்ன ஆயின என்பதை விளக்க முடியுமா என்று நான் பிரன்டின்ஸ்கியைக் கேட்டேன். ஸ்தாபனத்தினிடம், தான் பிரசுரங்களைக் கொடுப்பது இல்லை என்றும் அப்படிச் செய்வது ஆபத்தானது என்று கருதி, அவற்றைத் தொழிலாளி நண்பர்களிடமே தாம் கொடுத்ததாகவும் அவர் சொன்னுர். அவர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி பிரன்டின்ஸ்கியை நான் கேட்டேன். தனக்குத் தோன்றிய பல பெயர்களை அவர் சொன்னுர்; அவர் களுடைய விலாசங்கள் தனக்குத் தெரியாது என்றும் கூறினர். ஆகவே பல நகரங்களுக்கு அவர் சென்றுவந்த விவரங்களைத் தெரிவிக்கும்படி அவரை நான் கேட்டேன். யாரோஸ்லாவ் நகரத்தைப் பற்றிச் சில விவரங்கள் கேட்டேன். முன்னர், தாம் அங்கே கைது செய்யப்பட்டதால் தம்மால் அங்கே செல்ல முடிய வில்லை என்று அவர் சொன்னுர். எதற்காக என்று நான் கேட்டதற்கு "திருட் டுக் குற்றத்திற்காக" என்று அவர் பதில் சொன்னுர். நான் வாயடைத்துப் போனேன். மேன்மேலும் அவர் குழப்பமான பதில்களையே சொன்னுர். மகா நாடு பிரிட்டனியில் நடக்கும் என்றும் இலிச்சும் ஸினேவியெவ்வும் ஏற்கனவே அங்கே சென்றுவிட்டனர் என்றும் நான் சொன்னேன். ஸினேவியெவ்வுடன் பிலிப் பிரேக்குக்குச் செல்ல வேண்டும் என்றும் தாம் பிரிட்டனிக்குச் சென்று விட்டதாகவும் பிரன்டின்ஸ்கிக்கு அவர் ஒரு கடிதம் எழுதிவைக்க வேண்டும் என்றும் நானும் பிலிப்பும் முடிவு செய்தோம்.

பிறகு பிரென்டின்ஸ்கியின் சாயம் முழுதும் வெளுத்துவிட்டது. அவர் ரஷ்யாவுக்குத் திரும்பவே இல்லை. பாரீஸுக்கு அருகில் நாற்பதாயிரம் பிராங்கு களுக்கு ஸார் சர்க்கார் அவருக்கு ஒரு மாளிகை வாங்கிக் கொடுத்தது.

போலீஸ் ஒற்றனிடமிருந்து மகாநாட்டைப் பாதுகாத்ததை எண்ணி நான் பெருமிதம் அடைந்தேன். ஆனல் பிரேக் மகாநாட்டில் மற்றும் இரண்டு போலீஸ் ஒற்றர்கள் ரோமன் மாலினேவ்வஸ்கியும் ரொமானேவும் (மாஜி காப்ரி மாண வர், அலியா அலெக்ஸின்ஸ்கி) எனக்குத் தெரியவில்லை.

1908-ம் வருடத்துக்குப் பிறகு, ரஷ்யாவிலிருந்து வந்த தொழிலாளர்கள் கலந்துகொண்ட முதல் மகாநாடு பிரேக்[1] மகாநாடுதான்; ரஷ்யாவில் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி முறையாக விவாதித்த முதல் மகாநாடும் இதுதான். இது சம்பந்தமாக நிர்ணயமான ஒரு திட்டமும் இந்த மகாநாட்டில்தான் வகுக் கப்பட்டது. தற்கால நிலையைப்பற்றியும் கட்சியின் கடமைகளைப்பற்றியும் நான் காவது டூமாத் தேர்தலைப்பற்றியும் டூமாவிலுள்ள சமதர்ம-ஜனநாயகவாதிகளின்

வேலைகளைப்பற்றியும் கட்சி வேலையின் ஸ்தாபன அமைப்புகள் அதன் போக்குகள் ஆகியவைப்பற்றியும் ரஷ்யாவில் அன்று ஜனங்களை வாட்டிவந்த பஞ்சத்தை எதிர்த்துச் சமதர்ம ஜனநாயகவாதிகள் நடத்த வேண்டிய போராட்டத்தைப் பற்றியும் டூமாவில் விவாதத்துக்கு வரவிருக்கும் தொழிலாளர் இன்சூரன்ஸ் மசோதாவைப் பற்றியும் மகஜர் இயக்கத்தைப்பற்றியும்* தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ரஷ்யாவில் வேலைசெய்வது சம்பந்தமாக நிர்ணயமான கட்சித் திட்டம், அனுஷ்டான வேலைக்கு உண்மையான தலைமை ஆகியவை பிரேக் மகாநாட்டின் சாதனைகள் எனலாம்.

இதனுல்தான் பிரேக் மகாநாடு மிக முக்கியமான மகாநாடு ஆகும். லெனின், ஸினுேவியெவ், ஓர்ஜோனிகிட்ஸே, ஷாவார்ட்ஸ்மான், கோலோஷ்சியோக்கின், ஸ்பாண்டாரியன், மாலினேவ்ஸ்கி ஆகியோரைக் கொண்ட மத்திய கமிட்டி ஒன்று மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவர்களில் யாராவது கைது செய்யப்பட்டால் கைது செய்யப்பட்டவர்களின் ஸ்தானங்களுக்குப் பதில் அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகாநாடு முடிந்ததும் ஸ்டாலினும் போலோஸ்டோட்வஸ்கியும் (லாங்ஜுமே மாணவர்) மத்திய கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். கஷ்டமான காலத்தில் வேலை நடத்த அவசியமான ஒற்றுமை இதன் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு அடி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது இந்த மகாநாட்டின் அறிகுறி. ரஷ்யாவில் வேலை தடைப்படுவதை இந்த மகாநாடு தடுத்தது. கலைப்புவாதிகளின் ஏச்சு, டிராட்ஸ்கி, பிளக்கானுவ் இவர்களின் தந்திரங்கள், பண்டிஸ்டுகள் ஆகியவை பற்றி மகாநாடு அதிகமாகக் கவனிக்கவில்லை. இவர்களைக் கடுமையாக எதிர்க்க வேண்டிய அவசியமும் இவர்களின் தன்மையை வெளிப்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டன என்ருலும், ஏனைய மகாநாடுகளில் இவர்கள்பற்றிய பிரசினைகள் முன்னுக்கு வந்ததைப் போன்று இந்த மகாநாட்டில் வரவில்லை. ரஷ்யாவில் செய்ய வேண்டிய வேலையில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. மத்திய கமிட்டியில் மாலினேவஸ்கி அங்கம் வகித்தது துரதிர்ஷ்டம்தான்; அவர் மத்திய கமிட்டியில் இருந்ததால், போலிடாயெவ், ஷுர்க்கானுவ் ஆகிய மூன்ருவது டூமா பிரதிநிதிகளுடன் பிரேக் மகாநாட்டுக்குப் பிறகு லீப்ஸிக்கில் நடத்திய கூட்டங்களின் முழு விவரங்களும் போலீஸாருக்குத் தெரியவந்தன; ஷுர்க்கானேவும் போலீஸ் ஒற்றன் என்பது வெளியாயிற்று. கட்சி ஊழியர்கள் பலரின் தலைவிதியை போலீஸ் ஒற்றர்கள் நிர்ணயித்[illegible]. [illegible]துதனுல் கட்சிக்குப் பலவீனம் ஏற்பட்டது. ஆனுலும் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியைப்

---

* தொழிலாளர் ஸ்தாபனங்களை அமைக்கும் சுதந்திரம் [illegible]டும் என்று கோரும் ஒரு மகஜரை மூன்ருவது டூமாவில் அங்க[illegible] வகிக்கும் "ஜனங்களின் பிரதிநிதிகளுக்கு" அனுப்ப வேண்[illegible] என்றும் இந்த மகஜரில் ஜனங்களைக் கைஎழுத்து இடும்படி செய்ய வேண்டும் என்றும் கலைப்புவாதிகளும் டிராட்ஸ்கியின் பத்திரிகையான பிராவ்தாவும் டிசம்பர் மாதம் 10-ம் தேதி கூறின.

போலீஸாரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. புதிதாக வகுக்கப்பெற்ற சரியான வழி, இயக்கத்தை நேரான பாதையில் நடத்திச் சென்றது; ஏராளமான புதிய சக்திகளை சிருஷ்டி செய்தது.

போலிடாயெவ், ஷுர்க்கானுவ் ஆகியவர்களுடன் பேசுவதற்காக இலிச் லீப்ஸிக்குக்குச் சென்றார். அதன் பிறகு டிரஸ்டிகளிடம் இருந்த பணத்தை வாங்குவதற்காக அவர் பெர்லினுக்குப் போனார். பணம் நிரம்பத் தேவையாக இருந்தது. அதற்கு இடையில் எங்களைச் சந்திப்பதற்காக ஷாட்மான் பாரிஸுக்கு வந்தார். அதுவரை அவர் பின்லாந்தில் வேலை செய்துகொண்டிருந்தார். பின்லாந்து சம்பந்தமாக ஸார் சர்க்காரும் மூன்றாவது டூமாவும் மேற்கொள்ளும் கொள்கையைப் பிரேக் மகாநாடு வன்மையாகக் கண்டித்தது. ஸாருக்கும் ரஷ்யப் பிற்போக்கு முதலாளிகளுக்கும் எதிராக நடக்கும் போராட்டத்தில் பின்னிஷ் தொழிலாளர்களும் ரஷ்யத் தொழிலாளர்களும் ஒன்றுபட வேண்டும் என்றும் அது வற்புறுத்தியது. அந்தக் காலத்தில் சட்ட விரோதமான எங்கள் ஸ்தாபனம் பின்லாந்தில் வேலை செய்துகொண்டிருந்தது. பால்டிக் கடற்கரை மாலுமிகள் இடையேயும் தோழர்கள் வேலை செய்தனர். கலகத்துக்குப் பின்லாந்து தயாராய் இருக்கிறது என்பதை எங்களுக்கு அறிவிக்க ஷாட்மான் வந்தார். ரஷ்யச் சிப்பாய்களிடையே வேலை செய்யும் ரகசிய ஸ்தாபனம் போட்டத்துக்குத் தயாராய் இருக்கிறது என்றும் அவர் சொன்னார். ஸ்வீபோர்க் கோட்டையையும் கிரான்ஸ்டாட் கோட்டையையும் கைப்பற்ற அவர்கள் திட்டம் வகுத்தனர். இலிச் திரும்பி வரவில்லை. அவர் திரும்பி வந்ததும் ஸ்தாபனத்தைப்பற்றி, ஷாட்மானை அவர் பல கேள்விகள் கேட்டார். அங்கே ரகசிய ஸ்தாபனம் இயங்கியது குறிப்பிடத்தக்கது; ராக்கியா, எஸ். வி. வோராபியெவ், கொக்கோ முதலிய தோழர்கள் அங்கே வேலை செய்தனர். எனினும் அப்பொழுது போராட்டத்தை ஆரம்பிப்பது தவறு என்பதை அவர் சுட்டிக் காட்டினார்; அப்பொழுது செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்கள் போராட்டத்தை ஆதரிப்பார்களா என்பது சந்தேகம் என்றும் அவர் சொன்னார். எப்படியும் போராட்டம் நடக்கும் அளவுக்குச் சம்பவங்கள் வளரவில்லை. ஸ்தாபனம் இயங்குவதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். கலகம் செய்யச் சதிசெய்ததாக 52 பேர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது. புரட்சி நடப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், ஏப்ரல் மாத மத்தியில் நடந்த லீனா தங்கச் சுரங்கத் துப்பாக்கிப் பிரயோகமும், இந்தப் படுகொலையைக் கண்டிப்பதற்காகத் தேசம் முழுதும் நடந்த வேலைநிறுத்தங்களும், அந்த வருடங்களில் பாட்டாளிமக்கள் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறார்கள் என்பதையும் தொழிலாளர்கள் எதையும் மறந்துவிடவில்லை என்பதையும் இயக்கம் மேலோங்கி வளர்ந்து வருகிறது என்பதையும் புதிய நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் அறிவித்தன.

இலிச் முற்றிலும் வேறு மனிதர் போல மாறிப் போனார்: கோபதாபங்கள் குறைந்து போயின; ரஷ்யத் தொழிலாளர் இயக்கத்தை எதிர்நோக்கி இருக்கும் பிரசினைகளில் நாட்டம் செலுத்தி அவற்றைப்பற்றியே அதிகம் சிந்திக்கலானார். மே மாதம் ஆரம்பத்தில் ஹெர்ட்ஸென் ஞாபகார்த்தமாக அவர் எழுதின

இயக்கம் சாதாரணமான தல்ல; அது புரட்சிகரமான நிலையில் புத்துயிர் பெற்றிருக்கிறது '' என்று கார்க்கிக்கு இலிச் எழுதினர். '' இறுதியில் தினசரி பிராவ்தாவை ஆரம்பிக்கும் வேலையில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம். முட்டாள்கள் குறைகூறும் ஜனவரி மகாநாடுதான் இதற்கு வழிகோலிற்று.'' பிராவ்தாவுடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. நாள் தவருமல் அந்தப் பத்திரிகைக்குக் கடிதங்களும் கட்டுரைகளும் இலிச் எழுதி வந்தார். அதன் போக்கைக் கவனமாகப் பரிசிலனை செய்தார்; அதற்குக் கட்டுரைகள் எழுதும்படியாக மற்றவர்களைத் தூண்டினர்; அந்தப் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதி அனுப்பும்படியாக மாக்ஸிம் கார்க்கியை அவர் வெகுவாகத் தூண்டினர். ஸினேவீயெவ் தொடர்ச்சியாக அந்தப் பத்திரிகைக்கு எழுதி வந்தார்; அன்னிய நாட்டு விவகாரங்கள் சம்பந்தமாக ருசிகரமான தகவல்களைச் சேகரித்தார். பாரீஸிலோ அல்லது ஸ்விட்ஜர்லாந்திலோ இருந்திருந்தால் இத்தகைய முறையான ஒத்துழைப்புக் கிடைப்பது சாத்திய மில்லாது போய் இருக்கும். கடிதப்போக்குவரத்துகளும் விரைவில் ஆரம்பமாயின. மிக ரகசியமாக எவ்வாறு காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைக் கிராக்கோத் தோழர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்தனர். கடிதங்களில் அந்நிய நாட்டுத் தபால் முத்திரைகள் இருக்கக் கூடாது; இது மிகவும் முக்கியம். அந்நிய நாட்டு முத்திரைகள் இல்லாது இருந்தால் ரஷ்யப் போலீஸார் கடிதங்களைத் தணிக்கை செய்ய மாட்டார்கள். கிராக்கோச் சந்தைக்கு ரஷ்ய விவசாயப் பெண்கள் வருவார்கள். சிறிய தொகை கொடுத்தால் கடிதங்களை அவர்கள் வாங்கிக் கொண்டுபோய் ரஷ்யாவில் தபால் பெட்டியில் போட்டுவிடுவார்கள்.

சுமார் 4000 போலிஷ் அஞ்ஞாதவாசிகள் கிராக்கோவில் வசித்தனர்.

நாங்கள் கிராக்கோவை அடைந்ததும் போலிஷ் அஞ்ஞாதவாசி தோழர் பாக்கோடஸ்கி வந்து எங்களை வரவேற்றுர். உடனே அவர் எங்களைத் தன் பொறுப்பில் அழைத்துக்கொண்டு போய், பாதுகாப்பான இடத்தில் தங்கச்செய்தார். தினசரி வேலைகளிலும் ரகசிய வேலைகளிலும் எங்களுக்கு அவர் பேருதவி புரிந்தார். '' போலுபாஸ்காவை ''* உபயோகிக்கும் முறையை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். போலுபாஸ்காவை மிகக் குறைந்த செலவில் எடுத்துவிடலாம்; ரகசிய வேலைகளில் ஈடுபட்டுள்ள தோழர்கள் ரஷ்யாவுக்குச் செல்லவும் ரஷ்யாவிலிருந்து திரும்பவும் இந்தப் போலுபாஸ்காவ் பேருதவியாய் இருந்தது; இத்தகைய அனுமதிச் சீட்டுகளின் உதவியால் பல தோழர்கள் ரஷ்யாவுக்குச் சென்றனர்.......ஒரு முறை இதன் உதவியால் ஸ்டாலின் எல்லைப்புறத்தைக் கடந்து சென்றுர். எல்லைப்புறத்தில், பெயர்களைச் சொல்லி, பிரயாணிகளை அழைப்பார்கள்; "இருக்கிறேன்'' என்று பிரயாணிகள் அதற்குப் போலிஷ் பாஷையில் பதில் சொல்ல வேண்டும். இதைத் தோழர்களுக்குக் கற்பிக்க நான் எடுத்துக்கொண்ட முயற்சி எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. விரைவில்

* போலுபாஸ்காவ்: அரைப் பாஸ்போர்டு. எல்லைப்புறத்தின் இரு பக்கங்களிலும் வசிப்பவர்களுக்கு, எல்லைப்புறத்தைக் கடக்க அளிக்கப்படும் அனுமதிச் சீட்டு.

சட்ட விரோதமான முறையில் எல்லைப்புறத்தைக் கடக்க நாங்கள் ஏற்பாடு செய்தோம். ரஷ்யாவுக்கு அப்படிச் சென்ற தோழர்களுக்கு, அவர்கள் செல்ல வேண்டிய விலாசங்களைத் தோழர் கிரிலென்கோ தந்து உதவினர். எல்லைப்புறத்துக்கு அண்மையில் இருந்த லுப்லினில் அவர் வசித்து வந்தார். இதே முறையில், சட்ட விரோதமான பிரசுரங்களையும் எல்லை கடந்து எங்களால் அனுப்ப முடிந்தது. கிராக்கோப் போலீஸார் எங்களைப் பின்தொடர்ந்து வேவு பார்க்கவில்லை; எங்கள் கடிதங்களைத் தணிக்கை செய்யவில்லை. பொதுவாக, ரஷ்யப் போலீஸாருடன் அவர்களுக்குத் தொடர்பே இருக்கவில்லை.

வேனிற் காலத்தில் நாங்கள் கிராக்கோவை அடைந்தோம். ஸ்வெஷின்ஸ்டா சுற்று வட்டாரத்தில் குடியேறி வசிக்குமாறு தோழர் போகோடஸ்கி எங்களுக்கு யோஜனை கூறினர். அங்கே நாங்களும் ஸினேவீயெவ் தம்பதிகளும் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டோம். அந்த வட்டாரத்தில் வீதிகள் செப்பனிடப்படாமல் சேறும் சகதியுமாய் இருந்தன. ஆனல் விஸ்துலா நதி அருகே இருந்தபடியால் குளிப்பதற்குச் சௌகரியமாக இருந்தது. ஐந்து கிலோமீட்டர் தூரத்தில், "வோல்ஸ்கி லியாஸ்" என்ற அழகிய காடு ஒன்று இருந்தது. நானும் இலிச்சும் அடிக்கடி அங்கே சைக்கிளில் சென்று வந்தோம். சரத் காலத்தில், புதிதாகக் கட்டப்பெற்ற நகரின் மறு பகுதிக்கு நாங்கள் குடியேறினோம். பாகோடஸ்கியும் ஸினேவீயெவ் தம்பதிகளும் எங்களோடு சேர்ந்து அந்த இடத்துக்குக் குடியேறினர்.

கிராக்கோவை இலிச் பெரிதும் நேசித்தார்; அது அவருக்கு ரஷ்யாவை நினைவூட்டிற்று. மாறிய சுற்றுச்சார்பும் அஞ்ஞாதவாசிகளின் தொணதொணப்பு இன்மையும் எங்களை மகிழ்வித்தன. கிராக்கோவாசிகள் அன்றாட வாழ்க்கையை, அவர்களை வாட்டிய வறுமை, தொழிலாளர்களின் நிலைமைகள் ஆகியவற்றை இலிச் கவனமாகப் பரிசிலனை செய்தார். எனக்கும் கிராக்கோவில் வசிப்பது பிரியமாய் இருந்தது. குழந்தையாக இருந்தபொழுது, நான் போலந்தில் வசித்திருக்கிறேன். அதன் ஞாபகம் இப்பொழுதும் என் மனதைவிட்டு அகலவில்லை. இரண்டிலிருந்து ஐந்து வயதுவரை அங்கு வசித்ததாக எனக்கு ஞாபகம். அகலமாக இருந்த முற்றங்களும் எனக்குப் பிரியத்தை உண்டு பண்ணின. ஏனெனில் குழந்தைப் பருவத்தில், இந்த முற்றங்களிலுள்ள படிகளில், போலிஷ் குழந்தைகளுடனும் யூதக் குழந்தைகளுடனும் சேர்ந்து நான் விளையாடி இருக்கிறேன். சிறிய சிறிய தோட்டங்களில் புளித்த பாலும் உருளைக் கிழங்கும் விற்பனை செய்வார்கள்; இவற்றிலும் எனக்குப் பிரியம் அதிகம். என் அன்னையின் இளமைப் பருவத்தையும் இது அவளுக்கு ஞாபகமூட்டிற்று. பா...லிருந்து தப்பித்து இங்கு வந்துவிட்டதை எண்ணி இலிச் பெருமகிழ்ச்சி அடைந்தார், அவர் உற்சாகமாக இருந்தார். புளித்த பாலையும் போலிஷ் நாட்டு "மோட்ஸ...ஸ்டார்காவை"யும் (ஒரு வகை போலிஷ் நாட்டு மது) அவர் வேடிக்கையாகப் புகழ்...ார்.

எங்கள் எல்லோரையும்விட லிலினு நன்றாகப் போலிஷ் பாஷை பேசினுள். எனக்குப் போலிஷ் பாஷை கொஞ்சம்தான் பேச வரும். குழந்தையாக இருந்த காலத்தில் கற்றுக்கொண்ட சில வார்த்தைகள் எனக்கு ஞாபகம் இருந்தன.

இயக்கம் சாதாரணமான தல்ல; அது புரட்சிகரமான நிலையில் புத்துயிர் பெற்றிருக்கிறது'' என்று கார்க்கிக்கு இலிச் எழுதினர். "இறுதியில் தினசரி பிராவ்தாவை ஆரம்பிக்கும் வேலையில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம். முட்டாள்கள் குறைகூறும் ஜனவரி மகாநாடுதான் இதற்கு வழிகோலிற்று." பிராவ்தாவுடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. நாள் தவருமல் அந்தப் பத்திரிகைக்குக் கடிதங்களும் கட்டுரைகளும் இலிச் எழுதி வந்தார். அதன் போக்கைக் கவனமாகப் பரிசீலனை செய்தார்; அதற்குக் கட்டுரைகள் எழுதும்படியாக மற்றவர்களைத் தூண்டினர்; அந்தப் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதி அனுப்பும்படியாக மாக்ஸிம் கார்க்கியை அவர் வெகுவாகத் தூண்டினர். ஸினேவீயெவ் தொடர்ச்சியாக அந்தப் பத்திரிகைக்கு எழுதி வந்தார்; அன்னிய நாட்டு விவகாரங்கள் சம்பந்தமாக ருசிகரமான தகவல்களைச் சேகரித்தார். பாரீஸிலோ அல்லது ஸ்விட்ஜர்லாந்திலோ இருந்திருந்தால் இத்தகைய முறையான ஒத்துழைப்புக் கிடைப்பது சாத்திய மில்லாது போய் இருக்கும். கடிதப்போக்குவரத்துகளும் விரைவில் ஆரம்பமாயின. மிக ரகசியமாக எவ்வாறு காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைக் கிராக்கோத் தோழர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்தனர். கடிதங்களில் அந்நிய நாட்டுத் தபால் முத்திரைகள் இருக்கக் கூடாது; இது மிகவும் முக்கியம். அந்நிய நாட்டு முத்திரைகள் இல்லாது இருந்தால் ரஷ்யப் போலீஸார் கடிதங்களைத் தணிக்கை செய்ய மாட்டார்கள். கிராக்கோச் சந்தைக்கு ரஷ்ய விவசாயப் பெண்கள் வருவார்கள். சிறிய தொகை கொடுத்தால் கடிதங்களை அவர்கள் வாங்கிக் கொண்டுபோய் ரஷ்யாவில் தபால் பெட்டியில் போட்டுவிடுவார்கள்.

சுமார் 4000 போலிஷ் அஞ்ஞாதவாசிகள் கிராக்கோவில் வசித்தனர்.

நாங்கள் கிராக்கோவை அடைந்ததும் போலிஷ் அஞ்ஞாதவாசி தோழர் பாக்கோடஸ்கி வந்து எங்களை வரவேற்ருர். உடனே அவர் எங்களைத் தன் பொறுப்பில் அழைத்துக்கொண்டு போய், பாதுகாப்பான இடத்தில் தங்கச்செய்தார். தினசரி வேலைகளிலும் ரகசிய வேலைகளிலும் எங்களுக்கு அவர் பேருதவி புரிந்தார். "போலுபாஸ்காவை"* உபயோகிக்கும் முறையை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். போலுபாஸ்காவை மிகக் குறைந்த செலவில் எடுத்து விடலாம்; ரகசிய வேலைகளில் ஈடுபட்டுள்ள தோழர்கள் ரஷ்யாவுக்குச் செல்லவும் ரஷ்யாவிலிருந்து திரும்பவும் இந்தப் போலுபாஸ்காவ் பேருதவியாய் இருந்தது; இத்தகைய அனுமதிச் சீட்டுகளின் உதவியால் பல தோழர்கள் ரஷ்யாவுக்குச் சென்றனர்......ஒரு முறை இதன் உதவியால் ஸ்டாலின் எல்லைப்புறத்தைக் கடந்து சென்ருர். எல்லைப்புறத்தில், பெயர்களைச் சொல்லி, பிரயாணிகளை அழைப்பார்கள்; "இருக்கிறேன்'' என்று பிரயாணிகள் அதற்குப் போலிஷ் பாஷையில் பதில் சொல்ல வேண்டும். இதைத் தோழர்களுக்குக் கற்பிக்க நான் எடுத்துக்கொண்ட முயற்சி எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. விரைவில்

---

* போலுபாஸ்காவ்: அரைப் பாஸ்போர்டு. எல்லைப்புறத்தின் இரு பக்கங்களிலும் வசிப்பவர்களுக்கு, எல்லைப்புறத்தைக் கடக்க அளிக்கப்படும் அனுமதிச் சீட்டு.

சட்ட விரோதமான முறையில் எல்லைப்புறத்தைக் கடக்க நாங்கள் ஏற்பாடு செய்தோம். ரஷ்யாவுக்கு அப்படிச் சென்ற தோழர்களுக்கு, அவர்கள் செல்ல வேண்டிய விலாசங்களைத் தோழர் கிரிலென்கோ தந்து உதவினர். எல்லைப்புறத்துக்கு அண்மையில் இருந்த லுப்லினில் அவர் வசித்து வந்தார். இதே முறையில், சட்ட விரோதமான பிரசுரங்களையும் எல்லை கடந்து எங்களால் அனுப்ப முடிந்தது. கிராக்கோப் போலீஸார் எங்களைப் பின்தொடர்ந்து வேவு பார்க்க வில்லை ; எங்கள் கடிதங்களைத் தணிக்கை செய்யவில்லை. பொதுவாக, ரஷ்யப் போலீஸாருடன் அவர்களுக்குத் தொடர்பே இருக்கவில்லை.

வேனிற் காலத்தில் நாங்கள் கிராக்கோவை அடைந்தோம். ஸ்வெஷின்ஸ்டா சுற்று வட்டாரத்தில் குடியேறி வசிக்குமாறு தோழர் போகோடஸ்கி எங்களுக்கு யோஜனை கூறினர். அங்கே நாங்களும் ஸினேவீயெவ் தம்பதிகளும் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டோம். அந்த வட்டாரத்தில் வீதிகள் செப்பனிடப்படாமல் சேறும் சகதியுமாய் இருந்தன. ஆனால் விஸ்துலா நதி அருகே இருந்தபடியால் குளிப்பதற்குச் சௌகரியமாக இருந்தது. ஐந்து கிலோமீட்டர் தூரத்தில், "வோல்ஸ்கி லியாஸ்" என்ற அழகிய காடு ஒன்று இருந்தது. நானும் இலிச்சும் அடிக்கடி அங்கே சைக்கிளில் சென்று வந்தோம். சரத் காலத்தில், புதிதாகக் கட்டப்பெற்ற நகரின் மறு பகுதிக்கு நாங்கள் குடியேறினோம். பாகோடஸ்கியும் ஸினேவீயெவ் தம்பதிகளும் எங்களோடு சேர்ந்து அந்த இடத்துக்குக் குடியேறினர்.

கிராக்கோவை இலிச் பெரிதும் நேசித்தார் ; அது அவருக்கு ரஷ்யாவை நினைவூட்டிற்று. மாறிய சுற்றுச்சார்பும் அஞ்ஞாதவாசிகளின் தொணதொணப்பு இன்மையும் எங்களை மகிழ்வித்தன. கிராக்கோவாசிகள் அன்றாட வாழ்க்கையை, அவர்களை வாட்டிய வறுமை, தொழிலாளர்களின் நிலைமைகள் ஆகியவற்றை இலிச் கவனமாகப் பரிசீலனை செய்தார். எனக்கும் கிராக்கோவில் வசிப்பது பிரியமாய் இருந்தது. குழந்தையாக இருந்தபொழுது, நான் போலந்தில் வசித்திருக்கிறேன். அதன் ஞாபகம் இப்பொழுதும் என் மனதைவிட்டு அகலவில்லை. இரண்டிலிருந்து ஐந்து வயதுவரை அங்கு வசித்ததாக எனக்கு ஞாபகம். அகலமாக இருந்த முற்றங்களும் எனக்குப் பிரியத்தை உண்டு பண்ணின. ஏனெனில் குழந்தைப் பருவத்தில், இந்த முற்றங்களிலுள்ள படிகளில், போலிஷ் குழந்தைகளுடனும் யூதக் குழந்தைகளுடனும் சேர்ந்து நான் விளையாடி இருக்கிறேன். சிறிய சிறிய தோட்டங்களில் புளித்த பாலும் உருளைக் கிழங்கும் விற்பனை செய்வார்கள் ; இவற்றிலும் எனக்குப் பிரியம் அதிகம். என் அன்னையின் இளமைப் பருவத்தையும் இது அவளுக்கு ஞாபகமூட்டிற்று. பாரிஸிலிருந்து தப்பித்து இங்கு வந்துவிட்டதை எண்ணி இலிச் பெருமகிழ்ச்சி அடைந்தார் ; அவர் உற்சாகமாக இருந்தார். புளித்த பாலையும் போலிஷ் நாட்டு "மோட்ஸ்லாஸ்டார்காவை"யும் (ஒரு வகை போலிஷ் நாட்டு மது) அவர் வேடிக்கையாகப் புகழ்வார்.

எங்கள் எல்லோரையும்விட லிலின நன்ருகப் போலிஷ் பாஷை பேசினள். எனக்குப் போலிஷ் பாஷை கொஞ்சம்தான் பேச வரும். குழந்தையாக இருந்த காலத்தில் கற்றுக்கொண்ட சில வார்த்தைகள் எனக்கு ஞாபகம் இருந்தன.

சைபீரியாவிலும் யூபாவிலும் கைதியாக இருந்த காலத்தில், அந்த மொழியை நான் ஓரளவு படித்திருந்தேன். வீட்டை நிர்வகிக்கும்பொழுது, நான் போலிஷ் பாஷை பேச நேர்ந்தது. பாரீஸைக் காட்டிலும் வீட்டு நிர்வாகம் இங்கே சிரமமாய் இருந்தது; "காஸ்" கிடைக்கவில்லை; ஆகையால் நாள்தோறும் "ஸ்டோவ்" அடுப்பைப் பற்றவைக்க நேர்ந்தது. பாரீஸில் கிடைப்பதைப் போன்று, எலும்பில்லாத இறைச்சி இங்கே கிடைக்குமா என்று நான் கசாப்புக் கடைக்காரரைக் கேட்டேன்.

அவர் என்னை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, "சர்வவல்லமையுள்ள ஆண்டவன் எலும்புகளுடன்தான் பசுவைப் படைத்திருக்கிறார்; எனவே எலும்புகள் இல்லாமல் நான் உங்களுக்கு எப்படி இறைச்சி விற்க முடியும்?" என்று கேட்டார்.

முன் கூட்டியே திங்கட்கிழமைக்குத் தேவைப்படும் ரொட்டியைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். "ஞாயிற்றுக்கிழமை இரவின் பிடிப்பில்" ரொட்டிக் கடைக்காரர்கள் திங்கட்கிழமையும் இருப்பார்கள். எனவே திங்கட்கிழமை அவர்கள் கடைகளைத் திறக்க மாட்டார்கள். சந்தையில் பெண்களுடன் "மல்யுத்தம்" செய்ய வேண்டும். அங்கே போலிஷ்காரர் கடைகளும் யூதர்கள் கடைகளும் இருந்தன. யூதர்கள் கடைகளில் ஏனைய கடைகளைவிட மலிவான விலைக்குச் சாமான்கள் கிடைக்கும். ஆனால் யூதர்களுடன் பேரம் பேச வேண்டும்; விலை அதிகம் என்ற பாவனையில் கடையைவிட்டு வெறுப்புடன் வெளியேற வேண்டும். இப்படிச் செய்தால் கடைக்காரர் நம்மைக் கூப்பிடுவார்.

நகரின் ஒரு தனிப் பகுதியில் யூதர்கள் ஒன்றாக வசித்தனர்; பிரத்தியேகமான முறையில் உடைகள் அணிந்துகொண்டனர். ஆஸ்பத்திரிக்குச் சென்றால் டாக்டர் வரவுக்காகக் காத்திருக்கும் நோயாளிகள், யூதக் குழந்தைகள் போலிஷ் குழந்தைகள் போன்று இருக்கின்றனவா என்னும் விஷயத்தைப்பற்றி, தீவிரமாக விவாதிப்பதைக் கேட்கலாம். ஒரு நாள் நான் இத்தகைய விவாதத்தைக் கேட்டேன். இவற்றைக் கேட்டுக்கொண்டு, ஒரு யூதச் சிறுவனும் அருகில் நின்றுகொண் டிருந்தான்.

கிராக்கோவில் கத்தோலிக்கப் பாதிரிமார்களுக்குப் பிடிப்பு அதிகமாக இருந்தது. அவர்கள் பல தர்ம கைங்கரியங்களைச் செய்து வந்தனர். வீடுகள் எரிந்து கஷ்டத்துக்கு உள்ளானவர்களுக்கு அவர்கள் உதவி புரிந்தனர். கிழவிகளுக்கும் அநாதைகளுக்கும் ஆதரவு அளித்தனர். வீட்டு வேலைக்காரர்களின் பெயரைப் பதிவு செய்துகொள்ளும் ஒரு ஸ்தாபனத்தைக் கன்னியர் மடங்கள் நடத்தின; அவர்களை எஜமானிகள் கேவலமாக நடத்தாமல் அவை கண்காணித்தும் வந்தன.

அறியாமையால் சிக்குண்டு அவதிப்பட்டவர்களுக்கும், அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவிப்பவர்களுக்கும், மாதாகோயில்கள் இன்பம் தரும் இடங்களாக விளங்கின. காலிஷியாவில் பிரபுத்துவ சம்பிரதாயங்கள் தலைதூக்கி நின்றன; இந்தச் சம்பிரதாயங்களை நிலைநிறுத்தக் கத்தோலிக்க மடாலயங்கள் பெருமுயற்சி செய்தன. உதாரணமாக, ஒரு வேலைக்காரரைக் கூலிக்கு அமர்த்துவதற்காக ஒரு சீமாட்டி சந்தைக்கு வருவாள். தங்கள் உழைப்புச் சக்தியை விற்கக்

காத்துக் கிடக்கும் பன்னிரண்டு விவசாயப் பெண்கள் அந்தச் சீமாட்டியைச் சூழ்ந்துகொண்டு அவள் கையை முத்தமிடுவார்கள். எல்லாவற்றுக்கும் லஞ்சம் கொடுக்க வேண்டும். லஞ்சம் பெறுகிற தச்சனோ அல்லது வண்டிக்காரனோ மண்டியிட்டுத் தலை வணங்கி மரியாதை செலுத்துவார். எனினும் ஜனங்கள் தங்கள் எஜமானர்களை வெறுத்தனர். தங்கள் குழந்தையைக் கவனித்துக் கொள்வதற்காக ஸினோவியெவ் தம்பதிகள் நியமித்திருந்த தாதி, நாள் தவறாமல் காலையில் மாதாகோயிலுக்குப் போவாள். பிரார்த்தனை செய்தும் உபவாசம் இருந்தும் அவள் துரும்பாய் இளைத்துப் போனாள். அவளுடன் நான் பேசின பொழுது எஜமானர்களைத் தான் வெறுப்பதாகவும் ஒரு அதிகாரியின் மனைவியிடம் தான் மூன்று வருடங்கள் வேலை செய்ததாகவும் ஏனைய சீமாட்டிகளைப் போன்று அவளும் பதினொரு மணிவரையில் தூங்குவாள் என்றும் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு காப்பி குடிப்பாள் என்றும் தனக்கு உடைகள் உடுத்தி விடும்படியும் கால் உறைகளைப் போட்டுவிடும்படியும் கட்டாயப்படுத்துவாள் என்றும் அவள் சொன்னாள். புரட்சி ஏற்பட்டால் கையில் கவர்த் தடியை எடுத்துக்கொண்டு எஜமானர்களாய் இருப்பவர்களைத் தான் முதலில் தாக்குவதாக, மதவெறி கொண்ட அந்தத் தாதி என்னிடம் சொன்னாள். விவசாயிகளின் ஏழ்மையும் பரிதாபகரமான நிலைமையும் எங்கும் வியாபகமாய் இருந்தன. போலிஷ் விவசாயிகள் ரஷ்ய விவசாயிகளைவிட மிகக் கேவலமான நிலையில் அன்று இருந்தனர்.

இரண்டாவது காங்கிரஸுக்குப் போலந்து, லிதுவேனியா ஆகிய நாடுகளின் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதியாக வந்த தோழர் கானெட்ஸ்கியை விளாதிமிர் இலிச் கிராக்கோவில் சந்தித்தார். ஸ்டாக்ஹோம் காங்கிரஸிலும் லண்டன் காங்கிரஸிலும் அந்த நாட்டு மத்திய கமிட்டிகளின் பிரதிநிதி என்ற முறையில் அவர் மேற்கூறிய காங்கிரஸுகளில் கலந்துகொண்டார். போலிஷ் சமதர்ம ஜனநாயகக் கட்சியில் ஏற்பட்ட பிளவு சம்பந்தமான தகவல்களைத் தோழர் கானெட்ஸ்கியிடமிருந்தும் ஏனைய போலிஷ் தோழர்களிடமிருந்தும் இலிச் தெரிந்துகொண்டார். வார்ஸாக் கட்சி ஸ்தாபனத்தின் முழு ஆதரவைப் பெற்ற வார்ஸாக் கமிட்டிக்கு எதிராக, மத்திய கமிட்டி பிரசாரம் நடத்தி வந்தது. மத்திய கமிட்டி உறுதியான கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்றும் ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் உள் விவகாரங்கள் சம்பந்தமாக நிர்ணயமான கொள்கையை மேற்கொள்ள வேணும் என்றும் வார்ஸாக் கமிட்டி கேட்டுக்கொண்டது. மத்திய கமிட்டி வார்ஸாக் கமிட்டியைக் கலைத்தது; ரகசியப் போலீஸுடன் அதற்குத் தொடர்பு இருக்கிறது என்றும் பிரசாரம் செய்து வந்தது. விளாதிமிர் இலிச் வார்ஸாக் கமிட்டியை ஆதரித்தார். அதன் போக்கை ஆதரித்துக் கட்டுரைகளும் எழுதினார். மத்திய கமிட்டியின் போக்கைக் கண்டித்து, இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோவுக்கும் அவர் கடிதம் எழுதினார். வார்ஸாவாசிகளுடன் வார்ஸாக் கமிட்டிக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது; மற்ற தொழிற்சாலைப் பகுதிகளிலும் அதற்குத் தொடர்பு இருந்தது. "ரோஸ்லாமோவிஸ்டுகள்"—எதிர்ப் புரட்சிக்காரர்கள் (வார்ஸாக் கமிட்டிக்கு மத்திய கமிட்டி இட்ட பெயர்கள் இவை) ஆகியோருடன் நடந்த தகராறைச் சாதா

ரணமானது என்று இலிச் கருதவில்லை. அந்தக் காலத்தில் கட்சிக்குள் உக்ரமாக நடந்துகொண்டிருந்த போராட்டத்தின் ஒரு பகுதியாக அதை மதித்தார் இலிச். ஆகவே அதை அவரால் மௌனமாகப் பார்த்துக்கொண் டிருக்க முடியவில்லை. எனினும் அவர் ரஷ்ய விவகாரங்களில்தான் அதிக கவனம் செலுத்தினர்.

தேர்தல் பிரசாரத்துக்கு ஏற்பாடு செய்வதற்காக ஸபாரோவும் இன்னிஸாவும் பாரீஸிலிருந்து செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்குக்குச் சென்றனர். மற்றவர்களுக்குச் சொந்தமான பாஸ்போர்ட்டை வைத்துக்கொண்டு அவர்கள் பிரயாணம் செய்தனர். வழியில் கிராக்கோவில் தங்கி, ஸ்வெனிட்ஸாவுக்கு வந்து எங்களுடன் இன்னிஸா இரண்டு நாட்கள் தங்கி இருந்தாள். செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி நாங்கள் அவருடன் விவாதித்தோம்; அனேக விலாசங்களையும் தொடர்புகளையும் அவளுக்கு நாங்கள் கொடுத்தோம். வேலைத்திட்டத்தைப் பற்றி அவளும் இலிச்சும் விரிவாக விவாதித்தனர். ரஷ்யாவுக்குச் செல்லும் வழியில் இன்னிஸா லூப்லினில் இருக்கும் நிக்கோலாய் வாஸிலியெவிச் கிரிலெங்கோவைச் சந்திக்க வேண்டுமென்றும் கிராக்கோவுக்கு வரும் தோழர்களை எல்லைப்புறத்திலிருந்து கடத்தி அனுப்புவதற்கான வழிகளை அவருடன் அவள் விவாதிக்க வேண்டும் என்றும் நாங்கள் தீர்மானித்தோம். லூப்லின் என்பது காலிஷியா எல்லைப்புறத்தை அடுத்து, போலந்து நாட்டில் இருந்தது. இங்குதான் கிரிலெங்கோ வசித்தார். பீட்டர்ஸ்பர்க்கில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி, இன்னிஸாவும் ஸபர்ரோவும் எங்களுக்கு ஏராளமான தகவல்களை அனுப்பினர். அங்கே தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட பிறகு, பிரேக் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைத் தோழர்களுக்கு அவர்கள் விளக்கினர்; கட்சி சமாளிக்க வேண்டிய பிரச்னைகளைப்பற்றியும் அவர்களுடன் விவாதித்தனர். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள நார்வா ஜில்லாவில் அவர்கள் ஜாகை வைத்துக்கொண்டனர். கட்சியின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் கமிட்டியை அவர்கள் புதுப்பித்தனர்; பிறகு வட பகுதிக் கமிட்டியை ஸ்தாபித்தனர். இன்னிஸா, ஸபாரோவ், ஷாட்மான், ராக்கியா, பிராவ்டின் ஆகியோர் அந்தக் கமிட்டியில் அங்கம் வகித்தனர். கலைப்புவாதிகளுக்கு எதிராக உக்ரமான போர் அங்கே நடந்தது. செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்குத் தொகுதிக்கு படாயெவ் என்பவரை நிறுத்தி, வட பகுதிக் கமிட்டியார் அவர் வெற்றிபெற மும்முரமாக வேலை செய்தனர்; படாயெவ் என்பவர் போல்ஷ்விக் கொள்கையுடையவர்; ரயில்வே தொழிலாளி. செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களிடையே கலைப்புவாதிகளுக்கு இருந்த செல்வாக்கு வரவரக் குறைந்துகொண்டே வந்தது. புரட்சிப் போரைத் தொடர்ந்து நடத்தாமல், கலைப்புவாதிகள் சீர்திருத்த வழியை மேற்கொள்வதையும் அவர்கள் மிதவாதிகளை அனுசரித்து, மிதமான தொழில் திட்டத்தை பின்பற்றுவதையும் தொழிலாளர் உணர்ந்தனர். கலைப்புவாதிகளுக்கு எதிராக உறுதியான போர் நடத்தித்தான் ஆக வேண்டும். இதனுல்தான் கலைப்புவாதிகளுக்கு எதிராகத் தாம் எழுதியதைத் தமது கட்டுரையிலிருந்து பிராவ்தா நீக்கினதைக் கண்டு இலிச் ஆத்திரப்பட்டார். இதைக் கண்டித்து ஆத்திரத்துடன் கடிதம் எழுதினர். படிப்படியாகத்தான் பிராவ்தா இந்தப் போரில் கலந்துகொண்டது. தேர்தலுக்கான எல்லா ஏற்பாடுகளையும்

போலீஸாரும் செய்தனர். பதினைன்காம் தேதியன்று இன்னிஸாவும் ஸபாரோவும் கைதுசெய்யப்பட்டனர். ஆனால் சிறையிலிருந்து தப்பி, பன்னிரண்டாம் தேதி பீட்டர்ஸ்பர்க்குக்கு வந்த ஸ்டாலினைப் போலீஸார் கண்டுபிடிக்கவில்லை. தொழிலாளர் தொகுதித் தேர்தல் வெற்றிகரமாக நடந்தது. வலதுசாரி அபேட்சகர் ஒருவர்கூட வெற்றிபெறவில்லை. எல்லாக் கூட்டங்களிலும் அரசியல் போக்குடைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அக்டோபர் மாதத்தில் கவனம் முழுதும் தேர்தலிலேயே சென்றது. அறியாமையாலும் மந்த உணர்ச்சியாலும் பீடிக்கப்பட்டுக் கிடந்த தொழிலாளர்கள் தேர்தலைப் பற்றி அசட்டையாக இருந்தனர். தேர்தலை அவர்கள் முக்கியமானதாகக் கருதவில்லை. ஆகவே அவர்களைத் தட்டி எழுப்புவதற்காகப் பலத்த கிளர்ச்சியும் பிரசாரமும் செய்ய வேண்டியதாயிற்று. எனினும் எல்லா இடங்களிலும் தொழிலாளர்கள் சமதர்ம ஜனநாயகவாதிகளைத் தேர்ந்தெடுத்தனர். ஆறு பெரிய தொழில் கேந்திரங்களில் தொழிலாளர் தொகுதிகளில் அபேட்சகர்களாக நின்ற போல்ஷ்விக்குகள் வெற்றி பெற்றனர். கட்சி அங்கத்தினர்களாகிய தொழிலாளர்கள் - சகோதரக் தொழிலாளர்களிடையே இவர்களுக்கு அமோகமான செல்வாக்கு இருந்தது - தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆறு போல்ஷ்விக்குகளும் ஏழு மென்ஷ்விக்குகளும் டூமா சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், ஆறு போல்ஷ்விக்குகளுக்குப் பத்து லட்சம் ஓட்டுகள் கிடைத்தன; ஏழு மென்ஷ்விக்குகளுக்கோ இரண்டரை லட்சம் ஓட்டுகள்தான் கிடைத்தன. மேலும் கட்டுப்பாடு, ஒற்றுமை ஆகிய அம்சங்களில் போல்ஷ்விக்குகள் சிறந்து விளங்கினர். அக்டோபர் மாதம் பதினெட்டாம் தேதி டூமா ஆரம்பமாயிற்று. அன்று தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களும் வேலைநிறுத்தங்களும் நடத்தினர். டூமாவில் மென்ஷ்விக்குகளுடன் கூட்டு முறையில் போல்ஷ்விக்குகள் வேலைசெய்ய நேர்ந்தது. இதற்கு இடையில் உள்கட்சிச் சண்டை தீவிரமாகிவிட்டது. போல்ஷ்விக் சக்திகளை ஒன்றுதிரட்டப் பிரேக்கில் ஒரு கூட்டம் நடந்தது; போல்ஷ்விக்குகளை ஒன்றுதிரட்டியதில் இந்த மகாநாட்டுக்குப் பெரும் பங்கு உண்டு.

1912-ம் வருடம் ஆகஸ்டு மாதம் டிராஸ்ட்ஸ்கியின் முயற்சியினால் கட்சி மகாநாடு என்ற பெயரால் வியன்னாவில் ஒரு மகாநாடு நடந்தது. சமதர்ம - ஜனநாயக சக்திகளை எல்லாம் ஒன்றுபடுத்துவதுதான் இந்த மகாநாட்டின் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் போல்ஷ்விக்குகளின் வழியும் கலைப்புவாதிகளின் வழியும் பெரிதும் மாறுபட்டுவிட்டன என்ற உண்மையையும் கலைப்புவாதிகளின் போக்கு கட்சி வழிக்கு முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது என்ற உண்மையையும் முற்றிலும் அசட்டை செய்துவிட்டு, சமதர்ம ஜனநாயக சக்திகளை எல்லாம் ஒன்றுதிரட்டி ஐக்கியப்படுத்த, மகாநாட்டைக் கூட்டுபவர்கள் முயன்றனர். இந்த மகாநாட்டுக்கு முன்னேற்றவாதிகளும் அழைக்கப்பட்டனர். கலைப்புவாதிகளின் போக்கைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த மகாநாடு இருக்கும் என்று ஆரம்பத்திலேயே சொல்லிவிடலாம். மத்திய கமிட்டியை ஆதரித்த போல்ஷ்விக்குகள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. பிளக்கானவை ஆதரிக்கும் மென்ஷ்விக்குகளும் பிளக்கானவால் வெளிநாட்டிலிருந்து பிரசுரிக்கப்பட்ட கட்சிக்காக என்னும் பத்திரிகையைச் சார்ந்து நின்ற போல்ஷ்விக் சமரஸவாதி

களும் மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. போலிஷ்காரர்களும் கலந்துகொள்ளவில்லை. முன்னேற்றம் சார்பில் மகாநாட்டில் கலந்துகொண்ட அலெக்ஸின்ஸ்கி மகாநாட்டின் ஒருதலைச்சார்பான போக்கைச் சுட்டிக்காட்டினார். பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் வெளிநாடுகளில் வசிப்பவர்கள். காக்காஸியப் பகுதிக் கழகச் சார்பில் இரண்டு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மொத்தத்தில் பிரதிநிதிகள் எல்லோரும் சிறிய தொகுதியினரால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டனர்; மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கலைப்புவாதிகளின் கொள்கையைப் பிரதிபலித்தன. தேர்தல் அறிக்கையிலிருந்து ஜனநாயகக் குடியரசு என்ற வார்த்தைகள் நீக்கப்பட்டன. "நிலச்சுவான்தார்களின் நிலங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும்" என்ற கோஷத்துக்குப் பதிலாக, "மூன்றுவது டூமாவின் விவசாயச் சட்டத்தைத் திருத்த வேண்டும்" என்ற கோஷம் அங்கீகரிக்கப்பட்டது.

மகாநாட்டின் முக்கிய பேச்சாளர்களில் ஒருவராகிய போரீஸ் கோல்ட்மான் பழைய கட்சி செத்துவிட்டது என்றும் இந்த மகாநாடு "ஆரம்ப" மகாநாடாக விளங்க வேண்டும் என்றும் கூறினார். அலெக்ஸின்ஸ்கிகூட இந்தப் பேச்சைக் கண்டித்தார். சமரஸவாதிகளின் இந்த இணைப்பு - ஆகஸ்டுப் பிரிவு என்று இதை அழைத்தனர் - மத்திய கமிட்டிக்கு எதிராக வேலை செய்தது; பிரேக் மகாநாட்டு முடிவுகளைச் சிறுமைப்படுத்த முயன்றது; ஒற்றுமை என்னும் போர்வையில் போல்ஷ்விக்குகளுக்கு எதிரான ஒரு ஒற்றுமையை அது ஸ்தாபித்துக் கொண்டது.

இதற்கிடையில் ரஷ்யாவில் தொழிலாளர் இயக்கம் வளர்ந்து வந்தது; இதன் உண்மையைத் தேர்தல்கள் நிரூபித்துக் காட்டின.

தேர்தலுக்குப் பின் டூமா சபை அங்கத்தினர் தோழர் முரானேவ் வந்து எங்களைச் சந்தித்தார். அவர் சட்ட விரோதமாக எல்லைப் புறத்தைக் கடந்து எங்களை வந்து சந்தித்தார். இதை அறிந்ததும் இலிச் திடுக்கிட்டுப் போனார். "நீங்கள் பிடிபட்டிருந்தால் எவ்வளவோ பெரிய அவதூறுக்கு அது வழிகோலியிருக்கும். நீங்கள் டூமா சபை அங்கத்தினர்; சட்டசபை அங்கத்தினர்களுக்கு உரிய பாதுகாப்பு உரிமைகள் உங்களுக்கும் உண்டு; நீங்கள் சட்டரீதியாக வந்திருந்தால் அதனால் உங்களுக்கு எத்தகைய தீங்கும் நேர்ந்திராது. நீங்கள் மேற்கொண்ட வழி அவதூறுக்கு அடிகோலக் கூடியது" என்று இலிச் அவரிடம் சொன்னார்.

காக்கோவில் நடந்த தேர்தலைப்பற்றியும் கட்சியில் நாம் செய்கிற வேலைகளைப்பற்றியும் தன் மனைவியைச் சந்தைக்கு அழைத்துப் போய் துண்டுப் பிரசுரங்களை வினியோகிக்கத் தான் ஏற்பாடுகள் செய்தது பற்றியும் பல ருசிகரமான சம்பவங்களை முரானேவ் வருணித்தார். சதி வேலைகள் செய்வதில் முரானேவ் கைதேர்ந்தவர்; 'சட்டசபை அங்கத்தினர்களின் பாதுகாப்பு உரிமை' என்றால் என்ன என்பது அவருக்குத் தெரியாது. டூமாவில் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி இலிச் அவருடன் விவாதித்தார். கூடுமானவரையில் விரைவில் திரும்பி விடும்படி இலிச் அவரைத் தூண்டினார். இதன் பிறகு, டூமா சபை அங்கத்தினர்கள் பகிரங்கமாக வந்து எங்களைச் சந்தித்தனர்.

டிசம்பர் மாத இறுதியிலும் ஜனவரி மாத ஆரம்பத்திலும் டூமா சபை அங்கத்தினர்களின் முதல் கூட்டம் நடந்தது.

மாலினேவஸ்கி* முதலில் வந்தார்; எதைப்பற்றியோ பெரிதும் கிளர்ச்சி அடைந்தவராக அவர் காணப்பட்டார். முதலில் அவரிடம் எனக்குப் பிரியம் உண்டாகவில்லை; அவருடைய பார்வை எனக்கு வேதனையை அளித்தது; செயற்கையாக அவர் வருவித்துக்கொண்ட உற்சாகம் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆனால் அவருடன் முதன் முறை முக்கிய விஷயங்களைப்பற்றி விவாதித்ததும் இந்த எண்ணம் எனக்கு மாறிவிட்டது. பிறகு, பீட்ரோவ்ஸ்கியும் படாயெவ்வும் வந்தனர். ஒரு மாதத்தில் தாங்கள் டூமாவில் செய்த வேலைகளை யும் ஜனங்களிடையே செய்த வேலைகளையும் பற்றி எங்களிடம் அவர்கள் விவரித் தனர். வாயில்படியில் நின்றவாறு தொப்பியை வீசிக்கொண்டு ''கடந்த சில வருஷங்களில் ஜனங்கள் பிரமாதமாக வளர்ச்சியடைந்திருக்கிறார்கள்'' என்று படாயெவ் சொன்னது இப்பொழுதுகூட நினைவில் இருக்கிறது. தாம் ஒரு சிறந்த அறிவாளி என்றும் செல்வாக்குப்படைத்த ஊழியர் என்றும் பிறர் நம்பும்படி யாக மாலினேவஸ்கி நடந்துகொண்டார். படாயெவ்வும் பீட்ரோவஸ்கியும் கூச்சமுள்ளவர்கள்; இருந்தாலும் அவர்கள் சிறந்த, நம்பத்தகுந்த பாட்டாளி மக்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. டூமாவில் எப்படிப் பேச வேண்டும் என்பதைப்பற்றியும், ஜனங்களிடையே செய்ய வேண்டிய வேலைகளின் தன்மை பற்றியும் இந்த வேலைகளைச் சட்ட விரோதமான கட்சி நடவடிக்கையுடன் நெருக்கமாக எப்படி இணைப்பது என்பது பற்றியும் இந்த மகாநாட்டில் விவா திக்கப்பட்டது. பிராவ்தாவை மேற்பார்க்கும் பொறுப்பு படாயெவ்வுக்கு அளிக்கப்பட்டது. டூமா சபை அங்கத்தினர்களுடன் தோழர் மெத்தேதெவ்வும் வந்திருந்தார். பிரசுரங்களை அச்சிடுவதுபற்றித் தாம் செய்து வருகிற காரியங் களை அவர் எங்களுக்குச் சொன்னார். இதைக் கேட்டு இலிச் பரம திருப்தி அடைந்தார். 1913-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் தேதி, கார்க்கிக்கு எழுதிய கடிதத்தில் ''இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லெண்ணங்களை யும் மாலினேவஸ்கியும், பீட்ரோவஸ்கியும், படாயெவ்வும் தங்களுக்குத் தெரி வித்துக்கொள்கிறார்கள். கிராக்கோ தளம் பிரயோஜனகரமாய் இருக்கிறது. லட்சிய அடிப்படையில் பார்க்கும்பொழுது நாங்கள் கிராக்கோவுக்கு வந்தது வீணுக்கு அல்ல என்பது தெரிகிறது.'' என்று இலிச் எழுதி இருந்தார்.

சரத் காலத்தில் ''பெரிய வல்லரசுகள்'' பால்கன் விவகாரத்தில் தலையிட ஆரம்பித்தன. இதைத் தொடர்ந்து யுத்தத்தின் அறிகுறிகள் எங்கும் தென் பட்டன. எல்லா இடங்களிலும் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோ கண்ட னக் கூட்டக்களுக்கு ஏற்பாடு செய்தது; கிராக்கோவிலும் ஒரு கூட்டம் நடந் தது. ஆனால் அதன் போக்கே இங்கு அலாதியாக இருந்தது. இந்தக் கூட்டம் ரஷ்யாவுக்கு எதிராக ஜனங்களின் வெறுப்பைத் தூண்டிவிடும் கூட்டமாக இருந்ததே தவிர, யுத்தத்தைக் கண்டிப்பதற்காக நடைபெற்ற கூட்டமாகத் தோன்றவில்லை.

* இவர் ஒற்றன் என்பது பின்னர் தெரிந்தது.

நவம்பர் மாதம் 11, 12 தேதிகளில் பாஸிலியில் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டு விசேஷ காங்கிரஸைக் கூட்ட இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோ ஏற்பாடு செய்தது. ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிற் கட்சியின் பிரதிநிதியாக காமனீவ் இந்தக் காங்கிரஸில் கலந்துகொண்டார்.

நியூஸீட் என்னும் பத்திரிகையில் காட்ஸ்கி எழுதியிருந்த கட்டுரையைப் படித்துவிட்டு, இலிச் ஆத்திரம் அடைந்தார். இந்தக் கட்டுரை முற்றும் சந்தர்ப்பவாதத்தைத் தழுவி எழுதப்பட்டிருந்தது. யுத்தத்துக்கு எதிராக ஆயுதம் தாங்கிய புரட்சிகளுக்கும் வேலைநிறுத்தங்களுக்கும் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்வது தவறு என்று காட்ஸ்கி அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். 1905-ம் வருடப் புரட்சியில் வேலைநிறுத்தங்கள் எவ்வளவு முக்கிய ஸ்தானம் வகித்தன என்பதை விளக்கி விளாதிமிர் இலிச் இதற்கு முன்பே பல கட்டுரைகள் எழுதி இருக்கிருர். காட்ஸ்கியின் கட்டுரை வெளிவந்த பிறகு இதை விரிவாக விளக்கி இலிச் பல கட்டுரைகள் எழுதினுர். வேலைநிறுத்தங்களுக்கும் ஏனைய நேரடியான நடவடிக்கைகளுக்கும் அவர் விசேஷ முக்கியத்துவம் அளித்தார்.

பாஸிலிக் காங்கிரஸுக்கு ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த ஸ்டட்கார்டு காங்கிரஸில் (1907) யுத்தப் பிரசினைபற்றி விவாதிக்கப்பட்டது. புரட்சிகரமான மார்க்ஸீயத்தை அனுசரித்துத் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கு இடையிட்ட ஐந்து வருடங்களுக்கு இடையில் சந்தர்ப்பவாதம் வெகு துரிதமாக முன்னேறிவிட்டது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, காட்ஸ்கியின் கட்டுரை விளங்குகிறது எனலாம். எனினும் யுத்த எதிர்ப்புப் பிரகடனத்தைப் பாஸிலிக் காங்கிரஸ் ஏகமனதாக அங்கீகரித்தது. பிரமாண்டமான யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இரண்டாவது இன்டர்நேஷனலில் சந்தர்ப்பவாதம் புகுந்து அதை எவ்வளவு சீர்குலைத்து இருக்கிறது என்பதை உண்மையாக 1914-ல் காண முடிந்தது.

கிராக்கோவில் வசித்தபோது, - அதாவது ஏகாதிபத்திய யுத்தம் வெடிப்பதற்கு முன்னர் - தேசியப் பிரசினைகள் விஷயத்தில் இலிச் விசேஷ கவனம் செலுத்தினுர். இளமையிலிருந்தே தேசிய அடிமைத்தனத்தை - அது எந்த வடிவத்தில் இருப்பினும் சரியே - அதை இலிச் வெறுத்தார். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை அடக்கியாளுமாயின், அடக்கியாளும் தேசத்துக்கு அதைப்போல் துரதிர்ஷ்டம் தருவது வேறு ஒன்றும் இல்லை என்ற மார்க்ஸின் கருத்து இலிச்சுக்கு நன்ருகப் புரியத் தொடங்கியது. இந்த வாக்கியத்தின் உள்ளே பொதிந்து கிடக்கும் கருத்தை அவர் நன்ருக அறிந்துகொண்டார்.

யுத்தம் நெருங்கி வந்துகொண்டிருந்தது; முதலாளிகளின் தேசிய வெறியும் அதனுடன் சேர்ந்து அதிகரிக்கலாயிற்று. சாத்தியமான வழிகளில் எல்லாம் தேசிய வெறியையும் பிற நாடுகள்மீது வெறுப்பையும் தூண்டிவிட முதலாளிகள் முயன்றனர். பலவீனமான தேசங்களை மேன்மேலும் அடக்கியாள்வதையும், அவற்றின் சுதந்திரத்தை மிதித்துத் தேய்ப்பதையும் நெருங்கி வந்துகொண்டிருக்கிற யுத்தம், உடன் அழைத்துக்கொண்டு வந்தது. ஆனுல், இந்த யுத்தம் உள்நாட்டுக் கலகமாக மாறித்தான் தீரும் என்று இலிச் திடமாக நம்பினுர். அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் தத்தம் சுதந்திரத்துக்காகக் கிளர்ந்து எழும்

என்பதையும் இலிச் திடமாக நம்பினர். இது அந்தந்த நாடுகளுக்கு உள்ள உரிமையாகும். இப்படித்தான் நடக்கும் என்பதை 1896-ல் லண்டனில் நடந்த இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுக் காங்கிரஸ் ஊர்ஜிதம் செய்திருக்கிறது. 1912-ம் வருட இறுதியிலும் 1913-ம் வருட ஆரம்பத்திலும், யுத்தம் நெருங்கி வந்துகொண் டிருக்கும் சமயத்தில் - தேசங்களின் சுயநிர்ணய உரிமையைக் குறைத்து மதிப்பிடுவதைக் கண்டு இலிச் ஆத்திரம் அடைந்தார். நிலைமைக்குத் தகுந்த முறையில் செயலாற்ற ''ஆகஸ்டுக் கூட்டம்'' தவறிவிட்டது என்பது மாத்திர மல்ல, இந்தப் பிரசினையை அது தெளிவாக முன்னணிக்குக் கொண்டு வரத் தவறிவிட்டது என்பது மாத்திர மல்ல, கலாச்சார, தேசிய சுயாட்சி என்னும் கோரிக்கை, கட்சித் திட்டத்தில் இடம் பெற்றிருக்கும் தேசங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிகைக்கு முரண்பட்டது அல்ல என்ற தீர்மானத்தை யும் அவர்கள் நிறைவேற்றினர். இந்தச் சர்ச்சை 1903-ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கட்சிக் காங்கிரஸில் இடம் பெற்று, அதை எதிர்த்து ஓட்டு அளிக்கப்பெற்று அது தோற்றுவிட்டது. தேசியப் பிரசினைக் கொள்கையை இது விட்டுக்கொடுப்பதையே ஒக்கும். போராட்டத்தைக் கலாச்சாரப் போராட் டம் என்னும் கோட்டுக்குள் அடைத்து வைப்பதையே ஒக்கும். அரசியல் அமைப்புடன் ஆயிரம் கயிறுகளால் கலாச்சாரம் என்பது பிணைபட்டுக் கிடக் கிறது என்னும் உண்மையை இவர்கள் மறந்துவிட்டனர். இந்தப் போக்கை, சந்தர்ப்பவாதத்தின் அதி தீவிர நிலை என்று இலிச் கருதினர். ஆனல் தேசங்களின் சுயநிர்ணய உரிமை சம்பந்தமாக போலிஷ்காரர்களுடன்தான், உக்கிரமமான விவாதம் நடந்தது. தேசிய சுயநிர்ணய உரிமை என்பதற்கு, தனி அரசாங்கங் களை அமைத்துக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டிய இல்லை என்று ரோஸா லக்ஸம்பர்க்கும் ''ராஸ்லாமோவிஸ்டுகளும்'' கூறினர். சுயநிர்ணய உரிமைக் கொள்கைக்காக, போலிஷ்காரர்கள் ஏன் இவ் வளவு அவதிப்படுகின்றனர் என்பதற்குரிய காரணங்களை இலிச் அறிவார். போலிஷ் பொதுஜனங்கள் ஸார் ஆட்சியைப் பெரிதும் வெறுத்தனர். அவர் களுடைய அன்றாட வாழ்க்கையில் அது எவ்வளவு தூரம் ஊடுருவிப் பாய்ந்து நிற்கிறது என்பதை நாம் நாள்தோறும் கிராக்கோவில் காணலாம். போலிஷ் புரட்சி நடந்தபொழுது, தன் தந்தைக்கு நேர்ந்ததையும் தான் தூக்குமேடையி லிருந்து மயிரிழையில் தப்பியதையும் ஒருவர் நினைத்துக்கொண்டிருப்பார்; பன்றி களை மேயவிட்டு, எவ்வாறு ஸார் சர்க்கார் தங்கள் மதிப்பிற்குரிய உற்றார் உறவி னர்களின் கல்லறைகளை அசுத்தப்படுத்தினர் என்பதை வேறு ஒருவர் நினைத்துக் கொண்டே இருப்பார். போலிஷ்காரர்களை அடக்கி ஒடுக்கி ஆண்டதுடன் திருப்தி யடைந்துவிடாமல், அவர்களை ஸார் சர்க்கார் அவமதித்துக் கேலி செய்ததை யும் போலிஷ்காரர்களால் மறக்க முடியவில்லை.

யுத்தம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. அத்துடன் ''பிளாக் ஹண்ட ரட்டுகளின்'' தேசியமும், ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கிற முதலாளிகளின் குறுகிய தேசிய வெறியும், தலைதூக்க ஆரம்பித்தன; அவற்றுடன்கூட அதே சமயத்தில் அடக்குமுறைக்கு உட்பட்டுக்கிடக்கும் தேசங்களுக்கும் கதிமோட் சம் ஏற்படும் என்ற நம்பிக்கையும் தலைதூக்கலாயிற்று. போலந்து நாட்டின்

சுதந்திரத்தைப்பற்றியே போலிஷ் சமதர்மக் கட்சியார் சதா கனவு கண்டுகொண்டிருந்தனர். போலிஷ் சமதர்மக் கட்சியின் இந்தப் பிரிவு மனப்பான்மையைக் கண்டு, போலிஷ் சமதர்ம ஜனநாயகவாதிகள் பீதி அடைந்தனர். போலிஷ் சமதர்மக் கட்சி முழுக்க முழுக்க மத்தியதர வர்க்கக் கட்சியாக விளங்கியது. ரஷ்யாவிலிருந்து போலந்து பிரிந்து நிற்பதைப் போலிஷ் சமதர்ம ஜனநாயகவாதிகள் எதிர்த்தனர். போலிஷ் சமதர்மக் கட்சி அங்கத்தினர்களை இலிச் சந்தித்தார். இவர்களிடையே சிறந்த ஊழியராக விளங்கிய ஸோத்கோவை இலிச் பலமுறை சந்தித்துப் பேசினுர்; பிஷின்ஸ்கை பேசினதையும் செவிமடுத்தார். ஆகையால்தான் போலிஷ்காரர்களின் மனதை வாட்டுவது இது என்பதை இலிச்சால் நன்ருக அறிந்துகொள்ள முடிந்தது. "தேசங்களின் சுயநிர்ணய உரிமைப் பிரசினையைப் போலிஷ்காரர்கள் பார்க்கும் கண்ணேட்டத்துடன் நாமும் பார்த்தல் கூடாது" என்று அவர் அடிக்கடி கூறிவந்தார்.

கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் கூட்டங்களிலேயே எழுந்த இந்தத் தேசியப் பிரசினை, யுத்தம் ஆரம்பமாக இருந்த கட்டத்தில் (1913—14), அதிக தீவிரமாயிற்று. ஏகாதிபத்திய யுத்தம் உச்சநிலையை அடையும்வரை (1916) இந்தப் போக்கு நீடித்து இருந்து வந்தது; இந்த விவாதத்தில் இலிச் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார். இந்த விவாதத்தினுல் பெரும் பிரயோஜனம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் சோவியத் அரசாங்கம் நிறுவப்பட்டபொழுது, எல்லாத் தேசிய இனங்களுக்கும் சம உரிமை வழங்கும் ஐக்கிய சோவியத் சமதர்மக் குடியரசுகளை நிறுவி, தேசியப் பிரசினையைத் தீர்க்க, இது கட்சிக்குப் பேருதவி புரிந்தது. முன்னர் தாங்க ஒண்ணுத அடக்குமுறைக்குப் பலியாகிக் கிடந்த தேசிய இனங்கள், இப்பொழுது நமது நாட்டில், அதி வேகமாக கலாச்சார அபிவிருத்தி அடைந்து வருவதை நாம் காண்கிருேம்; நமது ஐக்கிய சோவியத்துச் சமதர்மக் குடியரசில் அங்கம் வகிக்கும் தேசிய இனங்களிடையே நாளுக்கு நாள் ஒற்றுமை உணர்ச்சி மேன்மேலும் அதிகரித்து வருவதைக் காண்கிருேம். சமதர்ம நிர்மாணம் என்னும் பொதுப் பிணைப்பால் ஐக்கியப்பட்டு, பல்வேறு தேசிய இனங்கள், நமது ஐக்கிய சோவியத்து சமதர்மக் குடியரசுகளில் வேலை செய்து வருகின்றன.

கிராக்கோ காலத்தில் தேசியப் பிரசினை இலிச்சின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது என்பது உண்மையாயினும், அவர் முக்கியமாகக் கருதி வந்த விவசாயிகளின் பிரசினைகளை அவர் மறந்துவிட்டார் என்று நினைப்பது தவருகும். விவசாயப் பிரசினைகளைப்பற்றி, கிராக்கோவில் வசித்த காலத்தில் இலிச் நாற்பது கட்டுரைகளுக்கு மேல் எழுதி இருக்கிருர். டூமா சபை அங்கத்தினர் ஷாக்கோவ்வுக்காக இன்றைய சர்க்காரின் விவசாயக் கொள்கை என்னும் தலைப்பில் யாதாஸ்து ஒன்று இலிச் தயாரித்தார்.; டூமா சபை அங்கத்தினர் ஐ. பி. பிட்ரோவஸ்கிக்காக விவசாய இலாகா மதிப்பைப்பற்றி என்று பிரசங்கம் ஒன்று தயாரித்தார். விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் நியதிகள் சம்பந்தமான புதிய புள்ளிவிவரங்கள் என்னும் பெரிய புத்தகம் ஒன்றை அவர் கிராக்கோவில் எழுத ஆரம்பித்தார். அமெரிக்கப் புள்ளி விவரங்களைப் பரிசீலனை செய்து அந்த நூலை அவர் எழுதினுர். புள்ளி விவரக் கணக்கு

கள் சேகரிப்பதிலும் அவற்றைத் திறம்படச் செய்வதிலும் அமெரிக்கா புகழ் பெற்ற நாடு. இந்த நூலில் ஹிம்மலரின்* முடிவுகளை லெனின் கண்டித்து மறுத்து எழுதி இருக்கிறார். இவரைப்பற்றி விளாதிமிர் லெனின் எழுதி இருப்பதாவது:

"ஹிம்மலர் நமக்கு அறிமுகமில்லாத நபர் அல்லர். சாதாரணமான மாசிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதி அனுப்புகிற ஒரு சாதாரணமான நபர் என்று அவரை நாம் கூற முடியாது. ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் பரவியுள்ள சமூகவியல் சிந்தனைகளில் இவருக்கும் பெரும் பங்கு உண்டு. தீவிரமான இடதுசாரிப் போக்கும் அதிக ஜனநாயக இயல்பும் வாய்ந்த முதலாளி வர்க்கத்தின் சிந்தனையைப் பிரதிபலிக்கும் முக்கியமான பொருளாதார விற்பன்னர்களில் இவர் மிகவும் முக்கியமானவர். இதனால்தான் ஹிம்மலரின் கருத்துக்கள் விரிவாகவும் செல்வாக்குடனும் பரவி வருகின்றன; பாட்டாளி மக்கள் அல்லாதவர்களிடையே இவருடைய கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றுவிட்டன. இவை அனைத்தும் இவருடைய தனிப்பட்ட கருத்துக்களோ அல்லது தவறுகளோ அல்ல. முதலாளிகளிடையே நிலவுகிற பொதுப்படையான கருத்துக்கள் ஆகும் இவை. ஆனால், ஒரு வித்தியாசம்: ஜனநாயக முலாம் இவற்றிற்குப் பூசப்பட்டிருக்கிறது; போலியான சமதர்ம வாசகங்கள் இவற்றை அழகுபடுத்துகின்றன. முதலாளித்துவ சமூகச் சுற்றுச்சார்பில் வளர்ந்து நைந்துபோன, தோல்வி கண்ட அதே பாதையில் சென்றுகொண்டிருக்கிற அதிகார பூர்வமான பேராசிரியர்களும், புத்திசாலித்தனத்தில் ஏனைய லட்சக் கணக்கான விவசாயிகளிலிருந்து மாறுபட்டவர்களாகத் தம்மைக் கருதிக் கொண்டுள்ள சிறிய விவசாயிகளுமே தயக்கமின்றி ஹிம்மலரின் கருத்துக்களை அங்கீகரிக்கிறார்கள்.

"முதலாளித்துவ சமூகத்தில், முதலாளித்துவக் கலப்பு இல்லாத விவசாயப் பரிணாமம் என்று ஹிம்மலர் கூறும் தத்துவம் சாராம்சத்தில் புதிய தத்துவம் அன்று. முதலாளித்துவப் பேராசிரியர்கள், முதலாளித்துவ ஜனநாயகவாதிகள், உலகம் பூராவிலும் தொழிற்சங்க இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதிகள் ஆகியவர்களில் பெரும்பான்மையோர் சொல்லி வருகிற தத்துவமே யாகும் இது."

இந்தப் புத்தகம் எழுதி முடித்த எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், 1923-ல் லெனின் நோய்வாய்ப்பட்டுக் கிடந்த சமயம், புரட்சியைப்பற்றிச் சுக்கானவ் எழுதியிருந்த ஞாபகங்களை லெனின் படித்தார். அதை மனதில் வைத்துக்கொண்டு நமது புரட்சி என்னும் தலைப்பில் அந்தப் புத்தகத்தைப் பற்றி, பிராவ்தாவுக்கு லெனின் ஒரு கட்டுரை எழுதினார். "அடிப்படையான விஷயங்களில் நாம் இப்பொழுது வெற்றி பெற்றிருக்கிறோம். இதில் சந்தேகத்துக்கே இடமில்லை"

---

* 1931-ம் வருடம் நடந்த மென்ஷ்விக் நாசவேலைக்காரர்களின் சதி வழக்கு எதிரிகளில் இவரும் முக்கியமானவர்.

என்று இலிச் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதைச் சுக்கானுவ் அறிந்துகொள்ளத் தவறிவிட்டார். மேலும் அந்தக் கட்டுரையில் இலிச் தொடர்ந்து எழுதி இருப்பதாவது:

> "புரட்சியைப்பற்றிய குறிப்புகள் எனும் புத்தகத்தை நான் சமீபத்தில் படித்தேன். நமது மத்தியதரவர்க்க ஜனநாயகவாதிகளின் போலிப் பாண்டித்தியம், இரண்டாவது இண்டர்நேஷனல் வீரர்களின் போலிப் பாண்டித்தியத்தைப் போன்று, தலைதூக்கி நிற்கிறது....... அசாதாரணமான கோழைகள் இவர் என்ற உண்மையை நாம் ஒதுக்கி விட்டுப் பார்ப்போமானால், பழங்காலத்தை இவர்கள் பக்தி சிரத்தையுடன் காப்பி அடிப்பது நமக்கு உடனே புலனாகிவிடும்...இவர்கள் எல்லோரும் தங்களை மார்க்ஸீயவாதி என்று கூறிக்கொள்கின்றனர். ஆனால் மார்க்ஸீயம் சம்பந்தமாக அவர்கள் கொண்டுள்ள கருத்து, போலிப் பாண்டித்தியம் வாய்ந்தது; மார்க்ஸீயத்தின் ஜீவாதாரமான அம்சத்தை—அதன் புரட்சிகரமான தர்க்கவியலை—உணர அவர்கள் முற்றிலும் தவறிவிட்டனர்.......கீழ்த்தரமான சீர்திருத்தவாதிகளே இவர்கள் என்பதை, இவர்கள் செயல்கள் வெளிப்படுத்துகின்றன. முதலாளித்துவத்துடன் தங்களுக்குள்ள தொடர்பை இவர்கள் அறுத்துக்கொள்வது ஒருபால் இருக்கட்டும்; முதலாளித்துவமிடமிருந்து கொஞ்சதூரம் அப்பால் நகருவதற்குக்கூட இவர்கள் அஞ்சுகின்றனர்."

பிறகு, உலக ஏகாதிபத்திய யுத்தம் புதிய நிலைகளைச் சிருஷ்டித்து இருப்பதையும் தொழிலாளர் இயக்கத்துடன் விவசாயிகள் யுத்தத்தை இணைக்க நிலைமைகள் வசதி அளித்திருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

"பிரஷ்யாவைப்பற்றி எழுதும்பொழுது சாத்தியக் கூறுகளில் இதுவும் ஒன்று" என்று 1856-ம் வருடம் மார்க்ஸே சுட்டிக் காட்டி இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் பிறகு எட்டு வருடங்கள் கடந்துவிட்டன. இப்பொழுது இலிச் நம்முடன் இல்லை; சமதர்மத்தை நிர்மாணிப்பதற்கு வசதியான நிலைகளை அக்டோபர் புரட்சி சிருஷ்டி செய்து இருப்பதை இப்பொழுதுகூடச் சுக்கானுவ் உணரவில்லை. முதலாளித்துவத்தின் சின்னங்களைத் துடைக்கும் வேலையைத் தடைப்படுத்த அவர் தீவிரமாக முயன்று வருகிறார். நமது நாடு எவ்வளவு தூரம் மாற்றமடைந்து இருக்கிறது என்பதையும் அவர் உணரவில்லை. பண்படாமல் கிடந்த புது நிலங்களை எல்லாம் டிராக்டர்கள் உழுது பண்படுத்துகின்றன. அரசாங்கப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் பெருகி, அபிவிருத்தி யடைந்து வருகின்றன. சிறிய விவசாயிகளின் துண்டு நிலங்களைப் பிரித்துக் காட்டுவதற்காக அவற்றுக்கு நடுவே தரிசாகப் போடப்பட்டுக் கிடந்த எண்ணிறந்த தரிசு நிலங்களை இப்போது காண முடியாது; அவை கடந்த கால ஞாபகங்கள் ஆகிவிட்டன. மனித உழைப்பை இப்போது நவீன முறையில் பயன்படுத்துகிறார்கள். விவசாயத்தின் தன்மை முழுதுமே தலைகீழ் மாற்றம் அடைந்துள்ளது.

கிராக்கோவில் இருந்த காலத்தில் விவசாயம் சம்பந்தமாகவும் விவசாயிகள் சம்பந்தமாகவும் இலிச் அனேக கட்டுரைகள் எழுதினர்; அவற்றில் இவை பற்றின முக்கிய விஷயங்களை எல்லாம் அவர் அலசி ஆராய்ந்திருக்கிறுர். அந்தக் காலத்தில் இது சம்பந்தமாக நிலவிய விஷயங்களை எல்லாம் மனத்தில் பதியும் படியாக இலிச் எழுதி இருக்கிறுர். பல்வேறு கட்சிகளின் விவசாயத் திட்டத்தை அவர் விளக்கி இருக்கிறுர். சர்க்கார் கொள்கைகளை அவர் அம்பலப்படுத்தி இருக்கிறுர்; குடியேறும் திட்டம், விவசாயத்தில் கூலி வேலை, குழந்தைகளின் உழைப்பு, நிலத்தை விற்றலும் வாங்கலும், விவசாயிகள் நிலங்களைச் சேமித்தல், முதலிய முக்கியமான பிரசினைகளில் கவனம் செலுத்தும்படி அவர் தூண்டினர். கிராமங்களின் நிலைகளையும் விவசாயிகளின் தேவைகளையும் இலிச் நன்ருக அறிவார். தொழிலாளர்களும் விவசாயிகளும் இதை உணர்ந்திருந்தனர்.

1912-ம் வருடம் புரட்சிகரமான தொழிலாளர் இயக்கம் புத்துயிர் பெற்றதையும் பிராவ்தா இதில் எடுத்துக்கொண்ட பங்கையும் எல்லோரும்—முன்னேற்றவாதிகள் உள்பட—உணர்ந்தனர்.

பாரீஸில் வசித்து வந்த முன்னேற்றவாதிகளின் சார்பில் பிராவ்தாவுடன் ஒத்துழைக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகப் பிராவ்தா ஆசிரியர் குழாத்துக்கு, 1912-ம் வருட இறுதியில் அலெக்ஸின்ஸ்கி ஒரு கடிதம் எழுதினர். பிராவ்தா பத்திரிகையில் அலெக்ஸின்ஸ்கி அனேக கட்டுரைகள் எழுதினர். முன்னேற்றவாத மாசிகை தற்காலச் செய்திகள் மூன்றும் இதழில் அலெக்ஸின்ஸ்கி ஒரு கட்டுரை எழுதி இருந்தார். போல்ஷ்விக்குகளுக்கிடையே நிலவி வருகிற உள் சண்டையை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கலைப்புவாதிகளை எதிர்த்துப் போர் புரிவதற்காக எல்லாப் போல்ஷ்விக்குகளையும் தன்னுட் கொண்ட ஒரு போல்ஷ்விக் பகுதியைச் சிருஷ்டி செய்ய வேண்டும் என்றும் அவர் யோசனை கூறினர். கட்டுரையாளர்கள் ஜாபிதாவில் அலெக்ஸின்ஸ்கி போன்ற பாரீஸ் பகுதி அங்கத்தினர்களைப் பிராவ்தா ஆசிரியர் குழாம் சேர்த்துக்கொண்டதுடன் நிற்கவில்லை; அது பாக்டானுவையும் கட்டுரைகள் எழுதுபவராகச் சேர்த்துக் கொண்டது. பத்திரிகை மூலம்தான் இலிச் இதைத் தெரிந்துகொண்டார். கொள்கை சம்பந்தமான தகராறுகளையும் தனி நபர் சம்பந்தமான தகராறுகளையும் பிரித்தறியும் சக்தி இலிச்சுக்கு இருந்தது. ஏனையவற்றைக் காட்டிலும் லட்சியத்தின் நன்மையையே கருத்தூன்றிக் கவனிக்கும் ஆற்றல் இலிச்சுக்கு உண்டு. பிளக்கானுவ் அவர்மீது வசைமாரி பொழிந்தார்; என்றுலும் லட்சியத்தின் நன்மைக்காக அவருடன் ஒன்றுபட வேண்டிய அவசியம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள இலிச் தயங்கவே இல்லை.... எதிரி, தம்மைத் தாக்கினுல் இலிச் எழுந்து எதிரியைத் தாக்குவார்; தமது கொள்கையை வலியுறுத்திக் கூறுவார். ஆனுல் புதிய கடமைகள் எழும்பொழுது, அவற்றுக்கு எதிரியுடன் ஒத்துழைப்பது சாத்தியம் என்று தோன்றுமாயின், நேற்றுவரை எதிராக இருந்தவரைத் தோழமை உணர்வுடன் அணுக இலிச்சால் முடியும். சிரமப்பட்டு, அவர் இதைச் செய்ய வேண்டும் என்பது இல்லை; தாமாகவே இயல்பாகவே இதைச் செய்யும் ஆற்றல் அவருக்கு இருந்தது. இலிச்சுக்கு இருந்த பிரமாதமான சக்திகளில் இதுவும் ஒன்று; கொள்கை சம்பந்தப்

பட்ட விஷயங்களில் அவர் விட்டுக்கொடுக்க மாட்டார் என்ருலும், தனி நபர்கள் விஷயத்திலும் அவர் அபாரமான நம்பிக்கை யுடையவராய் இருந்தார். சில சமயங்களில் அவர்கள் தவறுகளும் செய்வார்; ஆனல் மொத்தத்தில் அவருக்கு இருந்த நம்பிக்கைவாதம் லட்சியம் முன்னேறுவதற்குப் பேருதவி புரிந்தது. ஆனல், கொள்கை சம்பந்தப்பட்ட அளவில் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்ருல் பிறகு சமரசத்துக்கே இடமில்லை.

கார்க்கிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இலிச் குறிப்பிட்டிருப்பதாவது:

"முன்னேற்றவாதிகள் திரும்பி வந்திருப்பதைக் குறித்துத் தாங்கள் அடையும் மகிழ்ச்சியில் நானும் இதயபூர்வமாகப் பங்குகொள்ளச் சித்தமாய் இருக்கிறேன். ஆனல் மாக்கிஸமும் கடவுள் சிருஷ்டியும் இவற்றைப் போன்ற இன்னும் பிறவும், தாங்கள் கூறுவதைப் போன்று உண்மையில் கடந்தகால நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. உண்மையில் இதை முன்னேற்றவாதிகள் உணர்ந்துவிட்டார்களானல், அல்லது இப்பொழுதாவது இதை அவர்கள் உணர்வார்களானல், அவர்கள் திரும்பி வந்திருப்பதைக் குறித்துத் தாங்கள் அடையும் மகிழ்ச்சியில் நானும் இதயபூர்வமாகப் பங்குகொள்ளச் சித்தமாய் இருக்கிறேன். ஆனல் என்பதை நான் ஏன் வலியுறுத்துகிறேன் என்ருல், இதுவரை இந்த நிகழ்ச்சி ஒரு விருப்பமாக இருந்து வருகிறதே யல்லாமல், நடைமுறையில் இன்னும் உண்மையாகிவிட வில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.......1908—11 வருட அனுபவங்கள் கற்பித்த பாடங்களைக் கற்கும் திறமை பாக்டானவ், பஸாராவ், வோல்ஸ்கி (பாதி அராஜகவாதி) லூனசார்ஸ்கி, ஆகியர்களுக்கு இருக்கிறதோ என்னவோ என்பதை அறிய முடியவில்லை. தாங்கள் நினைப்பதைக் காட்டிலும் மார்க்ஸீஸம் உயர்ந்தது, உன்னதமானது ஆழமானது என்பதை அவர்கள் தெரிந்துகொண்டார்களோ என்னவோ; அலெக்ஸின்ஸ்கி அதைக் கேலி செய்வதைப் போன்று வேறு யாரும் அதைக் கேலிசெய்ய முடியாது என்பதையோ அல்லது அதைச் செத்த பொருளாக மதித்து இகழ்ந்து ஒதுக்கக் கூடாது என்பதையோ அவர்கள் அறிந்துகொண்டார்களோ என்னவோ; இதை அவர்கள் உணர்ந்திருந்தால் அவர்களுக்கு ஆயிரம் வாழ்த்துக்கள்; தனிப்பட்டவர்களைப் பற்றிய விஷயங்கள் (உக்ரமான போராட்ட காலங்களில் இவை கட்டாயம் எழவே செய்யும்) நொடிப்பொழுதில் மறைந்துவிடும். எனினும் இதை அவர்கள் உணரவில்லை என்ருல், அனுபவம் கற்பித்த பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை என்ருல், அதற்காக என்னைக் குறைகூருதீர்கள். நட்பு நட்புதான்; கடமை கடமைதான். மார்க்ஸீயத்தின்மீது சேற்றை அள்ளிவீசச் செய்யப்படும் எந்த முயற்சியையும் அல்லது தொழிலாளர் கட்சியின் நடைமுறைப் போக்கில் குழப்பத்தை உண்டுபண்ண மேற்கொள்ளும் எந்த முயற்சியையும் மரணம் நேரினும் அஞ்சாது எதிர்ப்போம்."

"முன்னேற்றவாதிகளை நேரடியாக எதிர்க்காத பிராவ்தாவின் தொடர்பால் படிப்படியாக அவர்கள் திரும்பிவிடுவதற்கு ஒரு வழி ஏற்பட்டிருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்; மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். நட்பு நீடித்து இருக்க வேண்டுவதை உத்தேசித்து, நாம் மெதுவாகவும் கவனமாகவும் அணுக வேண்டும். பிராவ்தாவில் இதைத்தான் நான் எழுதி இருக்கிறேன். முன்னேற்ற வாதிகளையும் நம்மையும் ஒன்று சேர்த்துவைக்க விரும்பும் நண்பர்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி முயற்சி எடுக்க வேண்டும்; அனுபவம், மாக்கிஸம், ஓட்ஸோவிஸம், கடவுளைச் சிருஷ்டித்தல் ஆகிய சோதனைகளைக் கடந்து முன்னேற்றவாதிகள் திரும்பி வருவார் களாயின், அதனால் எவ்வளவோ நன்மைகள் ஏற்படலாம். சிறிய அஜாக்ரதைகூட மாக்கிஸம் ஓட்ஸோவிஸம் போன்றவற்றுக்கு மீண் டும் அவர்களை இழுத்துச் சென்றுவிடுதல் கூடும். இதனால் இதுவரை நடந்ததைவிட அதி உக்கிரமான போர் ஆரம்பமாகக் கூடும். வாழ்க்கை அனுபவம் என்ற தத்துவம் என்னும் பாக்டானுவின் நூலை நான் இன்னும் படிக்கவில்லை. பழைய, யந்திரப்போக்கான தத்துவ ஞானி இப்பொழுது புதிய உடையில் காட்சி அளிப்பதாகத்தான் அது இருக்கக் கூடும் என்று தோன்றுகிறது."

இந்த வரிகளை இப்பொழுது படித்தால்கூட, போராட்டப் பாதையும் 1908-11-ம் ஆண்டுகளுக்கு இடையில் சீர்குலைவு ஏற்பட்டிருந்த காலமும் நமக்கு நினைவுக்கு வந்துவிடுகின்றன. அந்தக் காலம் கடந்துபோன பின்பு, இலிச் தன் முழுக் கவனத்தையும் ரஷ்ய வேலைகளில் ஈடுபடுத்திய காலத்தில், இயக்கம் புத்துயிர் பெற்று வளர்ந்து அவரையும் இழுத்துச் சென்ற காலத்தில், முன்னேற்ற வாதிகளைப்பற்றி அவர் சாந்தமாகப் பேசினார். ஆனால் அனுபவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளும் திறமை அலெக்ஸின்ஸ்கிக்கு இருக்கிறது என்றோ அல்லது மாக்கிஸத்தைப் பாக்டோனுவ் விட்டுவிடுவார் என்றோ இலிச் கிஞ்சிற்றும் நம்பவே இல்லை. இலிச் எதிர்பார்த்தபடிதான் விஷயங்கள் அப்படியே நடந்தன; பாக்டோனுவுடன் பகிரங்கமான மோதல் வெகு விரைவிலேயே ஏற்படலாயிற்று. "கொள்கை" என்னும் வார்த்தையைப் பிரலபப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, தமது தத்துவத்தை, பிராவ்தா மூலம் அவர் பிரசாரம் செய்ய முயன் றார். இதனால் பிராவ்தாவுக்குக் கட்டுரைகள் அனுப்பும் கட்டுரையாளர்களின் ஜாப்தாவிலிருந்து பாக்டோனுவின் பெயரை இறுதியில் நீக்கவேண்டியதாயிற்று.

கிராக்கோவில் வசித்த காலத்திலேயே விளாதிமிர் இலிச், சமதர்மத்தை நிர்மாணிப்பது பற்றிய சிந்தனைகளில் தமது கவனத்தைச் செலுத்தினார். சம்பிர தாய ரீதியில்தான் இதை நான் இப்படிச் சொல்லுகிறேன். ஏனெனில் ரஷ்யா வில் சமதர்மப் புரட்சி எந்தப் பாதையில் செல்லும் என்பது அன்று தெளிவாகத் தெரியவில்லை. எனினும் டுமா பகுதியின் அரசியல் போராட்டத்தின் தலைமை, பொருளாதார சம்பந்தமான கலை வாழ்க்கை சம்பந்தமான அம்சங்களை உருப்படி யான முறையில் கையாள வேண்டியிருந்த அந்தச் சந்தர்ப்பத்தில், கிராக்கோ பாதி - அஞ்ஞாதவாச வாழ்க்கையை நாங்கள் பெற்றிருக்கவில்லை என்றால்,

அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து எழுந்த சமதர்ம அம்சங்களை எல்லாம் சமாளிப்பது சிரமமாய் இருந்திருக்கும். சமதர்ம நிர்மாணத்தின் ஒருவிதமான ஆரம்ப வகுப்பு என்று இதைச் சொல்லலாம். முதலில் இவற்றால் எழும் சிக்கல்களை மட்டும்தான் இலிச் மொத்தமாக நிர்ணயித்தார். என்றாலும் அவற்றை அவர் தெளிவாக வர்ணித்து இருப்பதால் இன்றுகூட அவை பொருத்தமுடையனவாய் இருக்கின்றன.

பண்பாடு விஷயத்தில் அந்தக் காலத்தில் இலிச் பெரிதும் கவனம் செலுத்தினார். செயிண்டு பீட்டர்ஸ்பர்க்கில் விட்டிமேயர் பள்ளிக்கூடத்தில், மாணவர்கள் பலர் டிசம்பர்மாத இறுதியில் கைது செய்யப்பட்டனர்; சோதனையிடப்பட்டனர். ஏனைய பள்ளிக்கூடங்களுக்கும் விட்டிமேயர் பள்ளிக்கூடத்துக்கும் வித்தியாசம் உண்டு. 1890-ல் நடந்த மார்க்ஸீய வகுப்புக்களில் அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயனியும் அவர் கணவரும் கலந்து தீவிர பங்கெடுத்துக்கொண்டனர். 1905–7-ம் வருடங்களில் போல்ஷ்விக்குகளுக்கு அவர்கள் பேருதவி புரிந்தனர். அரசியல் வாழ்க்கையில் கலந்துகொள்ளவும், அரசியல் கட்சிகளில் கலந்து அதன்படி குழு அமைத்துக்கொள்ளவும் விட்டிமேர் பள்ளிக்கூட மாணவர் அனுமதிக்கப்பட்டனர். எனவே போலீஸார் அந்தப் பள்ளிக்கூடத்தைச் சோதனையிட்டனர். மாணவர்கள் இப்படிக் கைதுசெய்யப்பட்டதைப்பற்றி, டூமா சபையில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. கல்வி மந்திரி காஸோ ஏதோ சமாதானம் சொன்னார். அவர் சொன்ன சமாதானம் பெரும்பாலோருக்குத் திருப்தியளிக்கவில்லை. அதிகரித்துவரும் தகராறுகள் என்னும் தலைப்பில் கல்வி மாசிகை 3 - 4 இதழ்களில் 1913-ம் வருடம் இலிச் கட்டுரைகள் எழுதினார். விட்டிமேர் பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதுபற்றியும் கல்வி மந்திரி காஸோ மீது டூமா நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி இருப்பது குறித்தும் இந்தக் கட்டுரைகளில் அவர் பிரஸ்தாபித்துள்ளார். ஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் இவை மாத்திரம் அன்று என்று அவர் சொல்லியிருக்கிறார்.

> "அரசியலில் அசாதாரணமானவை ஏன் ஏற்படுகின்றன என்பதற்குரிய காரணங்களைத் தெரிந்துகொள்ளவும் அவற்றைச் சாதாரண நிலைக்குக் கொண்டுவர வழி கண்டுபிடிக்கவும் நம்பிக்கைக் குறைவுக்குக் காரணங்கள் எவை என்பதை ஜனங்களும் ஜனநாயகமும் தெரிந்துகொள்ள வேண்டும்."

டூமாவிலுள்ள பல்வேறு கட்சிகள் ஒத்திவைப்புப் பிரரேபணையை எவ்வாறு பிரரேபித்தன என்பதையும் அவர் ஆராய்ந்திருக்கிறார். தங்கள் பிரரேபணையைச் சமதர்ம ஜனநாயகவாதிகள் எவ்வாறு பிரரேபித்தார்கள் என்பதைப் பரிசீலனை செய்துவிட்டு, அவர் கூறுகிறார்.

> "இந்தப் பிரரேபணையைக்கூட, பிழையற்ற பிரரேபணை என்று சொல்லிவிட முடியாது. கவர்ச்சிகரமான, தெளிவான நடையில் அதை எழுதியிருக்க வேண்டும் என்பதை நாம் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. அரசியலில் தலையிடுவது சட்டரீதியானது என்பதை அது சுட்டிக்காட்டத் தவறிவிட்டதை எண்ணி நாம் வருந்தாமல் இருக்க முடியாது. ஆனால் தீர்மானங்கள் எந்த முறையில் எழுதப்பட்

டிருக்கிறது என்பதைக் குறித்து நாம் விமர்சனம் செய்யவில்லை. தீர்மானங்களை எழுதியவர்களின் அரசியல் கொள்கைகளைத்தான் நாம் விமர்சனம் செய்கிறோம். ஜனநாயகவாதி சொல்ல வேண்டிய முக்கிய விஷயம் இதுதான். கட்சிகளும் விவாதமும் இயற்கையானவை; அவற்றை எல்லோரும் வரவேற்க வேண்டும். இதுதான் விஷயம். 'இளமையில்' அரசியலில் கலப்பது கூடாது என்று கண்டிப்பது எல்லாம், அயோக்கியத்தனமும் குறுகிய மனப்பான்மையும் கொண்டதாகும். 'ஐக்கிய மந்திரி சபை' என்ற பிரசினைக்குப் பதிலாக அரசியல் ஆட்சி எனும் பிரசினையை ஜனநாயகவாதி எழுப்பி இருக்க வேண்டும். பொருளாதார வாழ்க்கையில் முதலில் ரகசியப் போலீஸின் ஆதிக்கமும், இரண்டாவதாக, பிரபுத்துவ அம்சம் படைத்த பெரிய நிலச்சுவான்தார் வர்க்கத்தின் ஆதிக்கமும் 'பிரிக்க முடியாதபடி பிணைந்து கிடப்பதை' ஜனநாயகவாதி சுட்டிக்காட்டி இருக்க வேண்டும்.''

பண்பாடு சம்பந்தமான பிரசினைகளை முக்கியமான அரசியல் பிரசினைகளுடன் எவ்வாறு இணைப்பது என்பதை இதன் மூலம் இலிச் போதித்திருக்கிறார்.

பண்பாட்டைப்பற்றிப் பேசும்பொழுது, பண்பாட்டுக்கும் பொதுவான அரசியல் பொருளதார அமைப்பு முறைக்கும் உள்ள உறவை இலிச் எப்பொழுதுமே வலியுறுத்தி வந்தார். பண்பாடு – தேசிய சுயாட்சி என்னும் கோஷத்தை அவர் வன்மையாகக் கண்டித்து எழுதியிருப்பதாவது:

''பல்வேறு தேசிய இனங்கள் ஒரு சர்க்காரின்கீழ் இருந்துவரும் காலத்தில், லட்சக்கணக்கான வகையில் - சட்டம், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் - பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இந்தப் பந்தங்களிலிருந்து நாம் கல்வியை எப்படிப் பிரிக்க முடியும்? பண்டைச் சேர்ந்தவர்கள் சொல்வதைப் போன்று, - முழு அசட்டுத்தனத்திற்கு முதல் பரிசு பெறத்தகுந்தது ஆகும் இது. சர்க்காரின் நிர்வாகத்திலிருந்து கல்வியை விடுவித்துவிட முடியுமா? ஒரே சர்க்காரின்கீழ் வாழும் தேசங்களைப் பொருளாதாரம் இணைக்கிறது என்றால், பண்பாடு சம்பந்தப்பட்டவரையில் - குறிப்பாகக் கல்வி சம்பந்தப்பட்டவரையில் அவற்றை நிரந்தரமாகப் பிரித்துவிட முடியும் என்று நினைப்பது அசட்டுத்தனமும் பிற்போக்குத்தன்மையும் யுடையதாகும். அதற்கு மாறாகப் பள்ளிக்கூடங்கள், வாழ்க்கை என்கிற பிரயாணத்திற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தவேண்டும் என்பதற்காக, கல்வித்துறையில் தேசிய இனங்களை ஒன்றுபடுத்த நாம் முயலுகிறோம். தற்பொழுது தேசங்களிடையே அசமத்துவ நிலை நிலவுவதையும் அதனால் வளர்ச்சியும் அசமத்வமாக இருப்பதையும் நாம் காண்கிறோம். இந்த நிலையில் தேசவாரியாகக் கல்வியைப் பிரிப்பது, அபிவிருத்தியற்ற நாடுகளுக்குத் தீங்கு விளைவிக்கும்; முன்பு அமெரிக்காவில் அடிமை மாகாணங்களாக இருந்த தெற்கு மாகாணங்களில், இன்றும் நீக்ரோக் குழந்தைகளைத் தனியான பள்ளிக்கூடங்களில் வைத்துக் கல்விபோதித்து வருகிறார்

கள். ஆனல் வடக்கு மாகாணங்களிலோ நீக்ரோக் குழந்தைகளுக்கும் வெள்ளையர் குழந்தைகளுக்கும் ஒரே பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்கிறார்கள்.''

1913-ம் வருடம் பெப்ருவரி மாதம் 13-ம் தேதி ரஷ்யர்களும் நீக்ரோவர்களும் எனும் தலைப்பில் இலிச் ஒரு கட்டுரை எழுதினர். ஒரு வர்க்கத்தின் அறியாமையும் அதனுடைய பின்தங்கிய கலைவளர்ச்சியும், தமது முத்திரைகளைத் தேசத்தின் முழுவதிலுமே பதித்துவிடுகின்றன என்பதை இலிச் அதில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

கல்வித் துறையில் பாட்டாளி மக்களின் கொள்கை என்ன என்பதை இலிச் எழுதி இருக்கிறார்; அது விஷயச் செறிவு நிறைந்ததாக இருக்கிறது. கலைக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதையும் சர்க்காரின் நிர்வாகத்திலிருந்து கல்வியைப் பிரித்துவிட வேண்டும் என்பதையும் எதிர்த்து இலிச் இப்படி எழுதி இருக்கிறார்:

''பொதுவாக, ஜனநாயகத்தினுடைய தேவைகளும் குறிப்பாகப் பாட்டாளி மக்களின் தேவைகளும் முற்றிலும் நேர்மாறான போக்கை அனுசரிக்கவேண்டி இருக்கிறது. ஒரு பிரதேசத்தில் வாழும் பல்வேறு தேசிய இனங்களைச்சேர்ந்த குழந்தைகள் அனைவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்கும் உரிமையைப் பெற நாம் பாடுபட வேண்டும். டூமாவில் ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் பெயரால், விளாதிமிர் தொழிலாளரின் பிரதிநிதி சாமோய்லாய் உருவகப்படுத்தின பாட்டாளி மக்களின் கல்விக் கொள்கையை, பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் கூட்டு முறையில் அமலுக்குக் கொண்டு வரவேண்டும். சர்க்காரிலிருந்து சர்ச்சைப் பிரித்துவிட வேண்டும் என்றும், சர்ச்சிலிருந்து பள்ளிக்கூடத்தைப் பிரித்துவிட வேண்டும் என்றும் சமோய்லாவ் கோரினர். பள்ளிக்கூடங்களில் மதக் கல்வி போதிக்கக் கூடாது என்றும் அவர் கோரினர்; அதிகார வர்க்கமும் பெரிடினேவிஸமும்* பள்ளிக்கூடங்களிலிருந்து அகற்றப்பட்டு, உண்மையான ஜனநாயகம் அமலுக்கு வரும்பொழுது, சிறுபான்மையோரின் குழந்தைகள், தங்கள் சொந்தப் பண்பாட்டையும் கலையையும் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்வது எளிதாக இருக்கும்.''

கல்வி மந்திரியின் கொள்கை என்னும் பொருள்பற்றி, டூமாவில் பேசுவதற்காகப் படாயெவ்வுக்கு 1913-ம் வருடம் கோடை காலத்தில், பிரசங்கத்தின் குறிப்புகளை இலிச் எழுதிக் கொடுத்தார். அந்தப் பேச்சை டூமாவில் படாயெவ்

* பெரிடினேவ்: உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்; ஸோலோகூப் [illegible]ழுதி இருக்கும் சிறு பேய் என்பதில் ஒரு பாத்திரம். மேல் அதிகாரி[illegible]டம் அடிமைகள் போல் பயந்து கேவலமாக நடந்துகொள்வார் இவர். [illegible]க்குக் கீழ் இருப்பவர்களைக் கீழ்த்தரமாகவும் மிருகத்தனமாகவும் ந[illegible]துவார். இப்படி ஒரு கீழ்த்தரமான அதிகாரியாக அந்தப் பாத்திரத்தை ஸோலோகூப் சித்தரித்து இருக்கிறார்.

பேசிக்கொண் டிருந்தபொழுது சபைத் தலைவர் அடிக்கடி குறுக்கிட்டார்; கடைசியாகப் பேச்சை முடிப்பதற்கே அவர் படாயெவ்வை அனுமதிக்க வில்லை. கலை சம்பந்தமாக நாடு எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்பதையும் கல்விக்காகச் சர்க்கார் எவ்வளவு சிறு தொகை செலவு செய்கிறது என்பதையும் புள்ளி விவரங்களுடன் இலிச் எடுத்துக்காட்டி இருக்கிறார். பத்தில் ஒன்பது பகுதி ஜனங்களுக்குக் கல்விப் பாதையை ஸார் சர்க்கார் எப்படி அடைத்து இருக்கிறது என்பதை அவர் எடுத்துக் காட்டி இருக்கிறார்; "கொடுமையாகவும் கேவலமாகவும் மிருகத்தனமாகவும் அவமரியாதையாகவும்" ஆசிரியர்களை ஸார் சர்க்கார் நடத்துவதையும் அவர் வருணித்து இருக்கிறார். இதில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நிலவும் வித்தியாசங்களை ஒப்பிட்டுக் காட்டி இருக்கிறார். அமெரிக்காவில் மொத்த ஜனத் தொகையில் 11 சத விகித மக்களே படியாதவர்கள் என்றும், ஆனால் நீக்ரோவர்களிடையே 44 சத விகிதம் படியாதவர்கள் என்றும் எடுத்துக்காட்டி இருக்கிறார். "இருந்தாலும் ரஷ்ய விவசாயிகளைக் காட்டிலும் அமெரிக்க நீக்ரோவர்களிடையே படித்தவர்களின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகம்" என்று எடுத்துக்காட்டி இருக்கிறார். 1900-ம் வருடம் ரஷ்ய விவசாயிகளைவிட, நீக்ரோவர்களிடையே படித்தவர் அதிகம் இருந்தனர். ஏனெனில் அதற்கு அரை நூற்றாண்டுக்கு முன், அமெரிக்க மக்கள், அமெரிக்க அடிமை முதலாளிகளை முறியடித்தனர். படிப்பும் பண்பாடும் படைத்த மக்கள் நிறைந்த தேசமாகத் தங்கள் தேசத்தை மாற்றுவதற்காக ரஷ்ய மக்கள் தங்கள் சர்க்காரைக் கவிழ்த்துயிருக்க வேண்டும்.

தோழர் ஷாக்கோவின் பேச்சுக்கு இலிச்சுதான் குறிப்புகள் எழுதிக் கொடுத்தார். கல்விகற்றவர்கள் நிறைந்த தேசமாக ரஷ்யா விளங்க வேண்டுமானால், நிலச்சுவான் தார்களிடம் இருக்கும் நிலத்தைப் பறிமுதல் செய்து அதை விவசாயிகளிடம் கொடுக்க வேண்டும் என்று இலிச் அதில் குறிப்பிட்டிருந்தார். கல்வியைப் பரப்ப என்ன செய்ய வேண்டும்? என்னும் தலைப்பில் இலிச் ஒரு கட்டுரை எழுதினார். வாசகசாலைகள் அமெரிக்காவில் எவ்வாறு அமைக்கப் பட்டன என்பதை விரிவாக விளக்கி, அந்த முறையையே ரஷ்யாவிலும் கடைப் பிடிக்க வேண்டும் என்று இலிச் வற்புறுத்தினார். தொழிலாளர் வர்க்கமும் புதிய மால்த்தூஸிய வாதமும் என்னும் தலைப்பில் ஜூன் மாதம் இலிச் ஒரு கட்டுரை எழுதினார். அதில் அவர் எழுதியிருப்பதாவது:

> "நம் தந்தையர்கள் போராடினதைவிட நாம் நன்றாகப் போராடுகிறோம்; நாம் போராடுகிறதைவிட நம் குழந்தைகள் நன்றாகப் போராடுவார்கள்; அதில் அவர்கள் வெற்றியும் பெறுவார்கள். தொழிலாளி வர்க்கம் அழிந்து போகக் கூடிய வர்க்கம் அல்ல. அது வர வர வளர்ந்து வருவதுடனல்லாமல் வலிமையும் பெற்று வருகிறது. அறிவும் ஒற்றுமையும் உறுதிப்பாடும் அதனிடம் மிகுந்து கொண்டே வருகின்றன. பிரபுத்துவம், முதலாளித்துவம், சிறிய தொழில் ஆகியவை சம்பந்தப்பட்டவரையில், நாம் சந்தேகமுடையவர்கள்; ஆனால் தொழிலாளர் இயக்கம் சம்பந்தப்பட்டவரை நாம் நம்பிக்கைவாதிகள். புதிய மாளிகை ஒன்றை நிர்மாணிப்பதற்கு இப்

போது நாம் அஸ்திவாரம் அமைக்கிறோம்; குழந்தைகள் இந்த மாளிகையைப் பூர்த்தி செய்து முடிப்பார்கள்."

சமதர்ம நிர்மாணம் சம்பந்தமான அனுஷ்டானரீதியான முக்கியத்துவம் வாய்ந்த பல பிரசினைகளில் இலிச் கவனம் செலுத்தினார். கிராக்கோ காலத்தில் அவர் எழுதின கட்டுரைகளில் யந்திரக் கலையின் மகத்தான வெற்றி என்பது போன்ற கட்டுரைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. முதலாளித்துவ அமைப்பிலும் சமதர்ம அமைப்பிலும் யந்திரங்கள் கண்டுபிடிக்கப்படும் தன்மையை அவர் ஒப்பிட்டுக் காட்டி இருக்கிறார்.

"முதலாளித்துவ அமைப்பில் யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அதனால் ஒருசில பிரபுக்களே நன்மை அடைகிறார்கள்; ஆனால் தொழிலாளர்களின் வாழ்க்கையோ பொதுவாக மோசமாகி, வேலையில்லாத் திண்டாட்டம் அதனால் அதிகரித்துவிடுகிறது. ராம்சேயின் முறையை அனுஷ்டிப்பதன் மூலம் உழைப்பிலிருந்து லட்சக்கணக்கான சுரங்கத் தொழிலாளர்களை விடுவிக்க வசதி உண்டு. அதை அனுஷ்டிப்பதன் மூலம் சமதர்ம சமுதாயம் எட்டு மணி நேர வேலையை ஏழு மணி நேர வேலையாகவோ, அதற்குக் குறைவாகவோ குறைத்துவிட முடியும். எல்லாத் தொழிற்சாலைகளையும் ரயில்வேக்களையும் மின்சார மயமாக்குவதன் மூலம் சுகாதார வசதிகளைத் தொழிலாளர்களுக்குச் செய்து கொடுக்க முடியும்; லட்சக்கணக்கான தொழிலாளர்களைப் புகையிலிருந்தும் தூசியிலிருந்து அழுக்கிலிருந்தும் விடுவிக்க முடியும். அழுக்குப்படிந்த வெறுப்பைத் தரும் தொழிற்சாலைகளை மனிதன் வேலை செய்யத் தகுதி பெற்ற சுத்தமான ஒளிவீசும் தொழிற்சாலைகளாக விரைவில் மாற்ற முடியும். எல்லா வீடுகளிலும் மின்சார விளக்கை அமைப்பதன் மூலம், தங்கள் வாழ்நாளில் முக்கால் பாகத்தை, துர்நாற்றம் வீசும் அடுக்களைகளில் கழிக்கும் லட்சக் கணக்கான வீட்டு அடிமைகளை விடுவிக்க முடியும்; கூலி அடிமைத்தனம் என்னும் படுகுழியில் உழைப்பவர்களைத் தள்ளும் சமூக நிலைகளை முதலாளித்துவ யந்திரக் கலை நாள்தோறும் கடந்து முன்னேறுகிறது."

பதினேழு வருடங்களுக்கு முன்பே மின்சார மயமாக்குவதைப்பற்றியும் ஏழு மணி நேர வேலையைப்பற்றியும் தொழிற்சாலை அடுக்களையைப்பற்றியும் பெண்கள் விடுதலையைப்பற்றியும் இலிச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்.

தொழில் ஒரு நாகரிகமான பகுதி என்னும் தலைப்பில் இலிச் இன்னொரு கட்டுரை எழுதி இருக்கிறார். சமதர்மத்தின்கீழ் மோட்டார் தொழில் எவ்வளவு முக்கியமானது என்பதைப்பற்றி பதினேழு வருடங்களுக்கு முன்பே அவர் சிந்திக்கத் தொடங்கி யிருக்கிறார். விவசாயத்தில் இரும்பு என்னும் கட்டுரையில் "தேசத்தின் கலை அஸ்திவாரம் இரும்புதான்" என்பதை விவரித்து இருக்கிறார்.

"கலைகளைப்பற்றியும் உற்பத்தி சக்திகளை அபிவிருத்தி செய்வது பற்றியும் விவசாயிகளின் பொருளாதார நிலை உயர்வதைப்பற்றியும் நாம் பிரமாதமாகப் பேச விரும்புகிறோம். ஆனால் வறுமையால்

நலிந்து, ஆதிக்க வெறியால் நசுக்கப்பட்டு, பசியால் வாடி காலுக்குச் செருப்பின்றித் தவிக்கும் நாகரிகமடையாத லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கையை உயர்த்துவதற்குத் தடைகளாகக் குறுக்கே நிற்கும் முட்டுக்கட்டையை அகற்றும் பிரசினை எழும்பொழுது நமது பணக்காரர்களின் வாய் அப்படியே அடைத்துப் போகிறது....மத்திய கால உரிமைகளைப் புரிஸ்கைவிச்சுகளுடன்* பகிர்ந்துகொள்ளவும் மத்தியகால அநாகரிகத்திலிருந்து "பிதா நாடு" விடுதலை பெறுவது குறித்துப் பெருமூச்சுவிடவும் நமது தொழிற்சாலை முதலாளிகள் விரும்புகிறார்கள்."

முற்போக்கான மூலதனத்தின் கொள்கைகள் என்று இலிச் சிறந்த கட்டுரை ஒன்று எழுதி இருக்கிறார். அமெரிக்கா லட்சாதிபதி பிலேனேயின் கொள்கைகளை இந்தக் கட்டுரையில் இலிச் விளக்கி இருக்கிறார். முதலாளிகளைத் தங்கள் தலைவர்களாக அங்கீகரிக்கும்படி தொழிலாளர்களின் மனத்தை மாற்ற முயற்சி எடுத்துக்கொண்டவர் இவர். தொழிலாளர்களின் நன்மைகள் எவை என்பதை முதலாளிகள் மேன்மேலும் உணர ஆரம்பித்துவிட்டார்கள் என்றும் முதலாளிகளின் நன்மைகளும் ஜனங்களின் நன்மைகளும் பொதுவானவை என்றும் பிலேனே கூறி இருக்கிறார். ஜனநாயகம் வளர்கிறது என்றும் ஜனங்களின் சக்தி அதிகரிக்கின்றது என்றும் வாழ்க்கைச் செலவு உயர்கிறது என்றும் இந்தக் கட்டுரையில் இலிச் எழுதி இருக்கிறார். சட்டசபையும் ஏராளமான பிரதிகளை வெளியிடுகிற பத்திரிகைகளும் தினசரிகளும் ஜனங்களின் விஷய ஞானத்தை வளர்க்கின்றன. எனவே ஜனங்களை ஏய்க்கவும் தொழிலாளி—முதலாளி நன்மைகளுக்கு இடையே விரோதம் இல்லை என்பதை ஜனங்கள் நம்பும்படி செய்யவும் தங்கள் நோக்கம் நிறைவேறுவதற்காகத் தங்கள் லாபத்தில் ஒரு பகுதியைப் பகிர்ந்து கொடுக்கவும் (குமாஸ்தாக்களுக்கும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கும் லாபத்தில் பங்கு கொடுக்கவும்) முற்போக்கான முதலாளிகள் முயலுகிறார்கள். இத்தகைய முற்போக்கான முதலாளிகளை ஆராய்ந்துவிட்டு இலிச் கேட்கிறார் :

> "மதிப்புக்கு உரிய பிலேனே அவர்களே! உலகத் தொழிலாளர்கள் இத்தகைய முட்டாள்கள்தான் என்று தாங்கள் திடமாக நம்புகிறீர்களா ?"

பதினேழு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இந்தக் கட்டுரைகள், நிர்மாண வேலை சம்பந்தமான பிரசினைகளில் அந்தக் காலத்திலேயே இலிச் எவ்வளவு கவனம் செலுத்தி வந்திருக்கிறார் என்பதைக் காட்டுகின்றன. சோவியத் அரசாங்கம் நிறுவப்பட்டதும் இந்தப் பிரசினைகள், இதனால் அவருக்குப் புதிய பிரசினைகளாகத் தோன்றவில்லை. ஏற்கனவே யோசித்து அவர் முடிவு

* புரிஸ்கெவிச் : பெஸ்ஸேராபியாவில் பெரிய நிலச்சுவான்தார் ; பழுத்த பிற்போக்குவாதி ; பிளாக் ஹண்ரட் என்னும் பிற்போக்கு ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் ; புரட்சிக்காரர்களையும் யூதர்களையும் மிருகத்தனமாகத் தாக்குவது இந்த ஸ்தாபனத்தின் வேலைத் திட்டம்.

செய்திருந்த பரிகாரங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர நேர்ந்தது; அவ்வளவுதான்.

1912-ம் வருடம் சரத் காலத்தில், எங்களுக்கு நிக்கோலாய் இவானேவிச் புக்காரினுடன் அறிமுகம் ஏற்பட்டது. பாக்கோட்ஸ்கியை அடிக்கடி நாங்கள் சந்தித்ததோடு, கிராக்கோ பத்திரிகை "நாப்ஷட்" (முன்னேற்றம்) காரியாலயத்தில் வேலை செய்த போலிஷ்காரர் காஸிமிர் சாபின்ஸ்கியும் எங்களைச் சந்தித்தார். கிராக்கோவிலுள்ள சுக வாசஸ்தலமான ஸாக்கோபேனைப்பற்றி, அவர் எவ்வளவோ புகழ்ந்து உரைத்தார். ஸ்கோபேனைச் சுற்றியிருக்கும் பிரமாதமான மலைகளையும் இயற்கைக் காட்சிகளின் அழகையும் அவர் வருணித்துச் சொன்னார். ஸாக்கோபேன் அழகிய மலைகளைச் சித்தரித்துவருகிற ஓவியர் ஓர்லோவ் (சமதர்ம ஜனநாயகவாதி) அங்கே வசிப்பதாகவும் பேச்சுக்கு மத்தியில் அவர் சொன்னார். ஸ்வெஷின்ஸாவிலிருந்து நாங்கள் நகருக்குக் குடிபெயர்ந்த பிறகு, ஒரு நாள் ஜன்னல் அருகே அமர்ந்து தெருவைக் கவனித்துக்கொண் டிருந்தோம். கான்வாஸ் பையைத் தன் தோளில் சுமந்துகொண்டு, இளைஞர் ஒருவர் எங்கள் வீட்டை நாடி வருவதை நாங்கள் கண்டோம். அவர்தான் ஓர்லோவ்—அல்லது புக்காரின். அன்று அவரும் இலிச்சும் நீண்ட நேரம் பேசிக்கொண் டிருந்தனர். புக்காரின் வியன்னாவில் வசித்து வந்தார். அன்று முதல் வியன்னாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுவிட்டது. டிராயானேவ்ஸ்கி தம்பதிகளும், அங்கே வசித்தனர். அவர் வரைந்த சித்திரங்களைப்பற்றி நாங்கள் நிக்கோலாய் இவானேவிச்சை (புக்காரினை) கேட்டோம். தான் வைத்திருந்த பையிலிருந்து ஜெர்மன் சைத்ரிகர்கள் வரைந்த அழகிய சித்திரங்களை அவர் வெளியில் எடுத்தார். அவற்றை நாங்கள் சிரத்தையுடன் பரிசீலனை செய்தோம். போக்லிங்கும் ஏனைய பிரசித்திபெற்ற சைத்திரிகர்களும் தீட்டிய ஓவியங்கள் அவரிடம் இருந்தன. அந்த ஓவியங்களை இலிச் பெரிதும் விரும்பினார். ஒரு நாள் மாலையில் நாங்கள் வோராவஸ்கியைச் சந்திக்கச் சென்றபொழுது அங்கே பல சைத்ரிகர்கள் தீட்டிய ஓவியங்கள் ஒரு இடத்தில் குவிக்கப்பட் டிருப்பதை இலிச் கண்டார். இவற்றைப் பற்றிய வருணனைகளை எல்லாம் படித்து ஆராய்ந்துகொண்டே அன்று மாலை முழுவதும் இலிச் அங்கே தங்கியது எனக்கு அதிக ஆச்சரியத்தை விளைவித்தது.

அந்தக் காலத்தில் எங்களைப் பலர் கிராக்கோவில் சந்தித்தனர். ரஷ்யாவுக்குச் சென்ற தோழர்கள் தங்கள் வேலைகளைப்பற்றி விவாதிப்பதற்காக அங்கே சில தினங்கள் தங்கினர். ஒரு நாள் வார்வாரா நிக்கோலாயெவ்வினாவின் சகோதரர் நிக்கோலாய் நிக்கோலாவிச் யாக்கோவ்லீவ் வந்தார்; அவர் எங்கள் இல்லத்தில் இரண்டு வாரங்கள் தங்கினார். அவர் மாஸ்கோவுக்குச் சென்று நமது வழி எனும் பெயரில் ஒரு போல்ஷ்விக் பத்திரிகையை ஆரம்பிக்க முடிவு செய்திருந்தார்; நம்பிக்கைக்குப் பாத்திரமான உறுதிபடைத்த போல்ஷ்விக் அவர். இலிச் அவருடன் நீண்ட நேரம் விவாதங்கள் நடத்தினார். யாக்கோவ்லீவ் அந்தப் பத்திரிகையை ஆரம்பித்தார்; உடனே அவரைக் கைது செய்துவிட்டார்கள். பத்திரிகையையும் நிறுத்திவிட்டார்கள். மாஸ்கோ பிரதிநிதி மாலினேவஸ்கி, அந்தப் பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு "உதவி புரிந்தது"பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை. மாஸ்கோ மாகாணத்தில் தாம் செய்த பிரயாணங்களைப்

பற்றியும் தாம் நடத்திய தொழிலாளர் கூட்டங்களைப்பற்றியும், எங்களுடன் வசித்த காலத்தில் மாலினோவஸ்கி எங்களுக்குப் பல விஷயங்களைச் சொன்னார். ஒரு கூட்டத்தில் போலீஸ்காரன் ஒருவன் இருந்ததாகவும் தான் கூறின விஷயங்களை அவன் கவனத்துடன் செவிமடுத்ததாகவும் தங்களுக்கு உதவிபுரிய அவன் முயன்றதாகவும் அவர் எங்களிடம் சொன்னார். இந்தச் சம்பவத்தை வருணித்த போது மாலினோவஸ்கி தானே சிரித்துக்கொண்டார்; பொதுவாக, தன்னைப் பற்றியே அதிகம் பேசிக்கொண் டிருப்பதை அவர் பெரிதும் விரும்பினார்; ரஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில் தான் பங்கு பற்றியதற்குக் காரணம் யாது என்பதை மாலினோவஸ்கி எங்களுக்கு விளக்கினார். கட்டாய ராணுவ சேவை செய்ய வருமாறு தனக்கு வந்திருந்த உத்திரவுக்குப் பதில் சொல்லும் பொருட்டு யுத்தத்திற்கு ஆள் சேர்க்கும் காரியாலயத்திற்குத் தான் சென்றதாகவும் அப்பொழுது அந்த வழியாகப் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று சென்றதாகவும் எங்களிடம் சொன்னார். தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளத் தம்மால் முடியவில்லை என்றும் ஜன்னலில் நின்றுகொண்டு தாம் பேசியதாகவும் எங்களிடம் சொன்னார். இதற்காகத் தாம் கைது செய்யப்பட்டதாகவும் தான் இசைந்து யுத்தத்தில் சேர்ந்தால், தன்னை ராணுவச் சிறைக்கு அனுப்பாமல் தான் கவனித்துக் கொள்வதாகவும் தம்மிடம் வந்து ஒரு கர்னல் சொன்னார் என்றும் மாலினோவஸ்கி கூறினார். இதனாலேதான், தான் போர்முனைக்குச் செல்ல நேர்ந்தது என்று தெரிவித்தார். தன் மனைவி மதநம்பிக்கை உடையவள் என்றும் தான் நாஸ்தீகன் என்பதைத் தெரிந்துகொண்டதும் அவள் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும் அதற்குப் பிறகு அடிக்கடி வலிப்புநோய் வந்து அவள் கஷ்டப்படுவதாகவும் அவர் கூறினார். மாலினோவஸ்கி அவிழ்த்துவிட்ட கதைகள் எங்களுக்கு வியப்பை ஊட்டின. அவர் கூறின கதைகளில் உண்மையின் கலப்பு சிறிது இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. வாஸ்தவத்தில் தாம் பெற்ற அனுபவங்களை அவர் விவரித்தார். ஆனால் முழு உண்மையையும் அவர் எங்களிடம் சொல்லவில்லை; முக்கியமான பல விஷயங்களை அவர் சொல்லவே இல்லை. அதற்குப் பதிலாக விஷயங்களுக்குப் பொய் மெருகு கொடுத்து அவற்றை அவர் மாற்றிச் சொன்னார். ராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் காரியாலயத்தில் நடந்ததாக அவர் சொன்ன சம்பவம் உண்மையாக இருக்கலாம் என்றும் யுத்தத்திலிருந்து திரும்பிய பிறகு போலீஸ் ஒற்றனாக மாறும்படியோ அல்லது சிறை செல்லும்படியோ போலீஸார் அவரை நிர்ப்பந்தித்து இருக்கலாம் என்றும் பிறகு நான் நினைத்தேன். ஒரு வேளை அவருடைய மனைவி பயபக்தி நிறைந்தவளாக இருந்திருக்கலாம்; உண்மையாகவே தற்கொலை செய்துகொள்ள அவள் முயன்றிருக்கலாம். ஆனால் அதற்குக் காரணம் மாலினோவஸ்கி சொன்னதாக இராமல் வேறு ஏதாவது காரணமாக இருக்கலாம். ஒருக்கால் தம் கணவர் போலீஸ் ஒற்றனாக மாறியிருக்கிறார் என்று அவள் சந்தேகப்பட் டிருக்கலாம். எது எப்படியானாலும் மாலினோவஸ்கியின் கூற்றுகளில் உண்மையும் கலந்திருந்தபடியால், அவர் சொன்ன கதைகள் நம்பத்தக்கனவாய் இருந்தன. அவர் போலீஸ் ஒற்றன் என்ற எண்ணம் யாருக்கும் அப்பொழுது ஏற்படவே இல்லை.

மாலினோவஸ்கியைத் தவிர்த்து இன்னும் ஒரு ஒற்றனைப் பிராவ்தாவுக்குள்

புகுத்திவிடப் போலீஸார் முயன்றனர். அவர்தான் ஸெர்னேமாஸோவ். இவர் பாரீஸில் வசித்து வந்தார்; ரஷ்யாவுக்குச் செல்லும் வழியில் அவரும் கிராக்கோவுக்கு வந்தார். பியான்டி நிட்ஸ்கியிடமிருந்து எங்களுக்கு ஒரு கடிதமும் அவர் வாங்கி வந்திருந்தார். பிராவ்தாவில் வேலை செய்வதற்காக அவர் ரஷ்யாவுக்குப் போகிறார். ஸெர்னேமாஸோவை எங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் எங்கள் வீட்டில் தங்கும்படி அவரை நான் அழைத்து உபசரிக்கவில்லை. ஆகவே இரவு முழுதும் கிராக்கோ வீதிகளில் அவர் அலைந்து திரிந்தார்.

பிராவ்தாவை இலிச் மிக முக்கியமான பத்திரிகையாகக் கருதினர். நாள்தோறும் அதற்கு அவர் கட்டுரைகள் எழுதி வந்தார். இந்தப் பத்திரிகைக்காக எங்கெங்கு பணம் வசூலாயிற்று, எவ்வளவு வசூலாயிற்று என்பதை எல்லாம் அவர் கவனமாகக் குறித்து வைத்து இருந்தார். எத்தனை கட்டுரைகள் எழுதப்பட்டன, எந்தெந்த விஷயங்களைப்பற்றி எழுதப்பட்டன என்பதை எல்லாம் குறித்துவைத்திருந்தார். அந்தப் பத்திரிகை நல்ல நல்ல கட்டுரைகளைப் பிரசுரித்ததையும் சரியான கொள்கைகளை மேற்கொண்டதையும் கண்டு அவர் மகிழ்ச்சி அடைந்தார். 1913-ம் வருட இறுதியில் சந்தாதார் ஜாப்தாவை அனுப்பும்படி அவர் பிராவ்தாவுக்கு எழுதினர்; இரண்டு வாரங்கள் நானும் என் அன்னையும் நகரவாரியாக, சந்தாதார் ஜாப்தாவைத் தயாரித்தோம். சந்தாதார்களில் பத்தில் ஒன்பது பேர் தொழிலாளர்கள். ஒரு நகரத்தில் அனேக சந்தாதார் இருப்பது எங்கள் கண்ணில் படும். அந்த நகரத்தைப்பற்றி நாங்கள் ஆராயும்போது, அங்கே எங்களுக்குத் தெரியாத பெரிய தொழிற்சாலை ஒன்று இருப்பது தெரியவரும். பிராவ்தா விநியோகம் சம்பந்தமாக நாங்கள் தயாரித்த "சார்ட்" மிக்க கவர்ச்சிகரமாக இருந்தது. இலிச் அதைக் கண்டு நிரம்பத் திருப்தி அடைந்தார். அதை எங்களால் அச்சிட முடியவில்லை. ஸெர்னேமாஸோவ் அதைக் குப்பைக் கூடைக்குள் எறிந்திருக்க வேண்டும்; ஆனல் இதைவிட மோசமான சம்பவங்களும் நிகழ்ந்தன. சில சமயங்களில் - ஆனல் அபூர்வமாக - இலிச்சின் கட்டுரைகள் காணமல் போய்விடும். சில சமயங்களில் அவருடைய கட்டுரைகள் காலங்கடந்து பிரசுரிக்கப்படும். இவற்றை எல்லாம் கண்டு இலிச் அதிக ஆத்திரம் அடைந்தார். கோபமாக அனேக கடிதங்கள் பிராவ்தாவுக்கு எழுதினர். ஆனல் அதனல் அதிகமான பலன் எதுவும் ஏற்படவும் இல்லை. நிலைமையும் திருந்த இல்லை.

1913-ம் வருடம் பெப்ருவரி மாதம் மத்திய கமிட்டி அங்கத்தினர்களின் கூட்டம் ஒன்று கிராக்கோவில் நடந்தது. டூமா சபை அங்கத்தினர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தனர்; ஸ்டாலினும் வந்திருந்தார். டாமர்போர்ஸில் நடந்த மகாநாட்டிலும் லண்டனிலும் ஸ்டாக்ஹோமிலும் நடந்த காங்கிரஸ்களிலும் ஸ்டாலினை இலிச் சந்தித்திருக்கிறார். தேசியப் பிரசினைகள் சம்பந்தமாக ஸ்டாலினுடன் இலிச் நீண்ட நேரம் விவாதித்து இருக்கிறார். இந்தப் பிரசினையில் விசேஷ கவனம் செலுத்தியுள்ள, இது விஷயமாகப் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டுள்ள ஒருவரைச் சந்தித்ததில் இலிச்சுக்குப் பரம திருப்தி. கிராக்கோவுக்கு வரும் முன்பு இரண்டு மாதங்கள் வியன்னவில் தங்கி, தேசிய பிரசினைகள்பற்றி ஸ்டாலின் நன்ருக ஆராய்ந்தார். அங்கே புக்காரின் டிராயா

னேவ்ஸ்கி ஆகியவர்களுடன் அவருக்கு நட்பு ஏற்பட்டது. மகாநாடு முடிந்த பிறகு ஸ்டாலினைப் பற்றி, கார்க்குக்கு இலிச் பின்வருவாறு எழுதி இருக்கிறார். "கல்விக்காக நீண்ட கட்டுரை ஒன்று எழுதிக்கொண்டு அற்புதமான ஜியார்ஜியர் ஒருவர் எங்களுடன் இருக்கிறார். ஆஸ்திரியத் தகவல்களையும் ஏனைய தகவல்களையும் அவர் சேகரித்து இருக்கிறார்.'' அந்தக் காலத்தில் பிராவ்தாவைப்பற்றி இலிச் கவலைப்பட்டார்; ஸ்டாலினும் கவலைப்பட்டார். விஷயங்களைச் சீர்படுத்துவதைப்பற்றி அவர்கள் விவாதித்தனர். இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும்படி டிராய்னேவ்ஸ்கியும் அழைக்கப்பட்டார் என்று கருதுகிறேன். டிராய்னேவஸ்கி தம்பதிகள்மீது இலிச்சுக்கு அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. அவர்களிடமிருந்து பெரிய பெரிய காரியங்களை அவர் எதிர்பார்த்தார். எலினு பெடோரோவ்னு டிரானேவஸ்கயா ரஷ்யாவுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். இந்த மகாநாட்டில் கல்வியின் நிலை விவாதிக்கப்பட்டது; பிராவ்தா சிறு சிறு பிரசுரங்கள் வெளியிடுவது பற்றிய விவாதமும் நடந்தது. விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

இதற்குச் சில தினங்களுக்கு முன் ஊரிலிருந்து சாலமன், காவியார், ஸ்டர்ஜியின் ஆகிய மீன்களில் தயாரித்த உணவுப் பண்டங்கள் பார்சல் மூலமாக வந்தன. என் அன்னையிடமிருந்து சமையல் புத்தகம் ஒன்று வாங்கி, அதில் இருந்தபடி உணவுகள் தயாரித்து நான் விருந்து ஒன்று நடத்தினேன். தன்னிடம் இருப்பவற்றைக் கொண்டு, தோழர்களைச் செவ்வனே உபசரிப்பதில் விருப்பமுள்ள இலிச்சுக்கு அன்று நடந்த விருந்து அதிக திருப்தியை அளித்தது.

ரஷ்யாவுக்குத் திரும்பினதும், பெப்ருவரி மாதம் 22-ம் தேதி, செயிண்டு பீட்டர்ஸ்பர்க்கில் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார்.

விருந்தினர்கள் வராத நாட்களில், கிராக்கோ வாழ்க்கை எங்களுக்குச் சலிப்பைத் தந்தது. ''சுஷென்ஸ்கோயில்* இருந்ததைப் போன்றே எங்கள் வாழ்க்கையும் இங்கே ஓடிக்கொண்டிருக்கிறது'' என்று இலிச்சின் அன்னைக்கு நான் கடிதம் எழுதினேன் "தபால்காரர் வருகைதான் இங்கே மிகப் பெரிய சம்பவம். பதினெரு மணி வரையில் நாங்கள் எப்படியோ பொழுதைக் கழிப்போம். பதினெரு மணிக்குத் தபால்காரர் வந்துவிடுவார்; மீண்டும் ஆறு மணிக்குத்தான் வருவார். அவ்வளவு நேரம் காத்திருப்பது சிரமமாக இருக்கும்.''

வேனிற் காலத்தைக் கழிப்பதற்காக ஸாகோபேனுக்கு ஏழு கிலோமீட்டர்களுக்கு அப்பால் இருந்த போரோனினேவுக்கு நாங்கள் சென்றோம்† ஸாகோபேனில் கூட்டம் அதிகமாக இருந்தது. அங்கே செலவும் அதிகம்; போரோனினேவில் கூட்டம் குறைவு; செலவும் குறைவு; நாங்கள், ஸினேவியெவ் தம்பதிகள், பாகோட்ஸ்கி தம்பதிகள், அவர்களுடைய பிரசித்திபெற்ற நாய் ஸுலிக் - ஆகி

---

* சுஷென்ஸ்கோய் என்னும் ஒரு குக்கிராமத்தில் குரூப்ஸ்கயாவும் லெனினும் சிறைவாழ்க்கை நடத்தினர்.

† 1913-ம் வருடம் குளிர்காலத்தில் குருப்ஸ்கயா நோய்வாய்ப்பட்டார். அவருடைய இதயம் பலவீனமாக இருந்தது. ஸாகோபேனில் மலைவாசம் செய்யும்படி டாக்டர்கள் சிபார்சு செய்தனர்.

யோர் பெரிய பங்களாவில் ஒன்ருக வசித்தோம். தாத்ரா மலையின் அடிவாரத்தில் - கடல் மட்டத்துக்கு 700 மீட்டர்கள் உயரத்தில் அந்தப் பங்களா இருந்தது - அடிக்கடி பனி உதிர்ந்தது என்ருலும் மழை பெய்தது என்ருலும் தெளிவான இடை நேரத்தில் மலைகளின் தோற்றம் அழகாக இருந்தது. எங்கள் பங்களாவுக்கு அருகில் இருந்த மேட்டில் ஏறி, தாத்ரா மலைகளின் பனி மூடிய சிகரங்களைப் பார்த்தோம்; காற்று அதிகமாக வீசியது. விக்கிளீவைச் சந்திப்பதற்காக இலிச்சும் பாகோட்ஸ்கியும் ஸாகோபேனுக்குச் சென்று, அவருடன் சேர்ந்து மலையில் நீண்ட நேரம் நடந்தார்கள். நடப்பதில் இலிச்சுக்கு அளவு கடந்த பிரியம். மலைக்காற்ருல் எனது உடல்நிலை குணப்படவில்லை. எனது தேகநிலை மோசமாயிற்று; நரம்பு நிபுணர் பாகோட்ஸ்கியைக் கலந்துகொண்டு, பெர்னினுக்குச் சென்று கோக்கரிடம் நான் ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும் என்று இலிச் என்னை வற்புறுத்தினுர். ஜூன் மாதத்தில் நாங்கள் அங்கே சென்ருேம். வழியில் வியன்னுவில் தங்கி, புக்காரின் தம்பதிகளைச் சந்தித்தோம். புக்காரின் மனைவி நாடேஷா மிக்கைலோவ்னு நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய் கிடந்தபடியால் வீட்டு வேலைகளைப் புக்காரின் கவனித்துக்கொண்டு வந்தார்; சூப்பில் உப்பைப் போடுவதற்குப் பதிலாகச் சர்க்கரையைப் போட்டுவிட்டு இலிச்சின் மனதுக்கு உகந்த பல பிரசினைகளைப்பற்றி அவருடன் உற்சாகமாக விவாதித்துக்கொண் டிருந்தார் புக்காரின். வியன்னுவில் வசித்துவந்த எங்களைச் சேர்ந்தவர்களைப்பற்றியும் பேசினுர். நாங்கள் வியன்னுவில் சில தோழர்களைச் சந்தித்தோம்; அவர்களுடன் சேர்ந்து நகரத்தைச் சுற்றிப் பார்த்தோம். வியன்னு அழகுமிக்க பெரிய தலைநகரம். கிராக்கோவுடன் மாறுபட்ட நிலையில் இருந்த இந்த நகரம் எங்களை அதிகம் கவர்ந்தது. பெர்னியில் ஷாவோஸ்க்கி தம்பதிகள் எங்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்; எங்களுக்காகப் பரபரப்புடன் காரியங்களை எல்லாம் கவனித்தனர். ஒரு தோட்டத்தின் நடுவே இருந்த ஒரு சிறு குகையில் அவர்கள் வாழ்ந்தனர். அங்கே சிறுமிகளுடன் இலிச் விளையாடிப் பொழுது போக்கினுர். ஜெனுர்காவை அவர் கேலியும் கிண்டலும் செய்தார். மூன்று வாரங்கள் நான் ஆஸ்பத்திரியில் இருந்தேன்; பாதி நாள் இலிச் என்னுடன் இருந்தார்; மீதி நேரத்தை அவர் வாசகசாலைகளில் கழித்தார். அவர் நிறையப் படித்தார். என்னைப் பிடித்திருந்த நோய் பற்றிய சம்பந்தமான பல வைத்திய புத்தகங்களைப் படித்தார்; தன் மனத்துக்கு நல்ல தென்று பட்ட குறிப்புகளை எல்லாம் விரிவாக எடுத்துக்கொண்டார். நான் ஆஸ்பத்திரியில் இருந்த காலத்தில் தேசியப் பிரசினையைப்பற்றிப் பிரசங்கங்கள் புரிவதற்காக ஸூரிச், ஜினீவா, லாசேனி முதலிய இடங்களுக்குச் சென்ருர். இதைப்பற்றி அவர் பெர்னியிலும் பேசினுர். நான் ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவந்த பிறகு, வெளிநாட்டிலிருந்த பகுதிகளின் மகாநாடு ஒன்று பெர்னியில் நடந்தது; அந்த மகாநாட்டில் கட்சி விவகாரங்கள் பற்றிய விவாதங்கள் நடந்தன. ஆப்பரேஷனுக்குப் பிறகு, தேகாரோக்கியம் பெறுவதற்காக, குட்டென்பர்க் மலைகளுக்குச் சென்று நான் தங்க வேண்டும் என்று கோக்கர் யோஜனை கூறினுர். நான் அங்கே இரண்டு வீரங்கள் தங்கி இருந்தேன். பல அவசரமான விஷயங்கள் முடிவு செய்யவேண்டியதிருக்கின்றன என்று போரோனினேவிலிருந்து எங்களுக்குத்

தகவல் கிடைத்தது ; ஸீனேவியெவ்விடமிருந்து தந்தி ஒன்று வந்ததும் நாங்கள் உடனே போரோனினேவுக்குத் திரும்பிச் சென்றோம்.

வழியில் நாங்கள் மூனிக்கில் தங்கினோம். லிடியா மைக்கேல்வ்னுவின் மரு மகன் போரிஸ் நிப்போவிச் அங்கே வசித்துவந்தார். குழந்தையாக இருந்த காலத் திலேயே அவரை எனக்குத் தெரியும். அப்பொழுது அவருக்கு நான் கதைகள் சொல்லுவது வழக்கம் ; நீலநிறக் கண்கள் படைத்த நான்கு வயதுச் சிறுவனுக இருந்தபொழுது, சின்னஞ் சிறுவனுயிருந்த அந்தப் போரிஸ், என் முழங்கால்கள் மீது உட்கார்ந்துகொண்டு என் கழுத்தைக் கட்டிக்கொள்வான். "கிருபா! சிறிய தகரச் சிப்பாயியின் கதையைச் சொல்லு" என்று அவன் என்னைக் கெஞ்சுவான். 1905 - 7-ம் வருடங்களில் கலாசாலை மாணவர்களிடையே ஸ்தா பனங்களை அமைக்கும் தீவிர சமதர்ம ஜனநாயக ஊழியராக அவர் விளங்கினுர். லண்டன் காங்கிரஸ் முடிந்த பிறகு, 1907-ம் வருடம் வேனிற் காலத்தில், பின் லாந்திலுள்ள ஸ்டிர்சுடான் என்னும் கிராமத்தில் நிப்போவிச் வீட்டில் இலிச் சில தினங்கள் தங்கினுர். அந்தக் காலத்தில் போரிஸ் கலாசாலையில் படித்துக்கொண் டிருந்தார். ஆனுல் அப்பொழுதே அவருக்கு மார்க்ஸீயத்தில் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. இலிச் கூறும் விஷயங்களை அவர் அக்கரையோடு கேட்பார். இலிச்சை யும் டியாடெங்காவையும் அவர் அன்புடன் நேசித்தார்; அவர்கள் இருவரிடமும் பயபக்தியுடன் நடந்துகொண்டார். 1911-ல் இவரைக் கைதுசெய்து, பிறகு நாடுகடத்திவிட்டார்கள். அவர் மூனிக்குக்குச் சென்று மூனிக் சர்வகலா சாலையில் படித்தார். 1912-ம் வருடம் அவர் எழுதிய முதல் புத்தகம் ரஷ்ய விவசாயிகளிடையே பாகுபாடு என்பது வெளிவந்தது. அதில் ஒரு பிரதியை அவர் இலிச்சுக்கு அனுப்பினுர். அவருக்கு இலிச் ஒரு பதில் கடிதம் போட்டார். இளம் ஆசிரியர் ஒருவர்மீது தமக்கு இருந்த சிரத்தையையும் ஈடுபாட்டையும் அந்தக் கடிதத்தில் இலிச் எழுதி இருக்கிறுர் :

> "உனது புத்தகத்தைச் சிரத்தையுடன் படித்தேன். பெரிய, முக் கியமான புத்தகம் ஒன்று எழுதும் வேலையை நீ மேற்கொண்டதைக் குறித்து நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய வேலையை. மேற்கொண்டதன் மூலம் மார்க்ஸீயத்தின்மீது உனக்குள்ள நம்பிக் கையைச் சோதித்துக்கொள்ளவும் வளர்த்துக்கொள்ளவும் உறுதிப் படுத்திக்கொள்ளவும் உனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்."

பிறகு, அதில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களை இலிச் ஜாக்கிரதையாக அவருக்கு யோஜனை கூறினுர் ; அத்துடன் புத்தகம் எழுதும்பொழுது கையாள வேண்டிய முறைகளையும் அதில் எழுதி இருந்தார்.

இந்தக் கடிதத்தை நான் திரும்பப் படித்தபொழுது, அனுபவமற்ற ஆசிரி யர்கள் விஷயமாக இலிச் கையாண்ட முறை என் நினைவுக்கு வந்தது. அவர்கள் எழுதியுள்ள புத்தகங்களைப் பற்றி அவர்களுடன் விவாதிக்கும்பொழுது, நேரடி யாகவே இலிச் விஷயத்துக்குச் சென்றுவிடுவார் ; அவற்றின் அடிப்படையான அம்சங்களை விவரிப்பார்; பிறகு அவற்றை அபிவிருத்தி செய்வதற்குரிய யோஜனை களைக் கூறுவார். ஆனுல் தங்களைத் திருத்துகிறுர் என்ற எண்ணம் நூல் எழுது

கிறவர்களுக்கு ஏற்பட்டுவிடாதபடி ஜாக்ரதையாக அந்தக் காரியத்தை இலிச் நாசூக்காகச் செய்வார். பிறர் செய்கிற வேலைகளில் அவர்களுக்கு உதவி புரிவதில் இலிச் கைதேர்ந்தவர். உதாரணமாக, ஒருவரை ஒரு கட்டுரை எழுதச் செய்ய வேண்டும் என இலிச் விரும்புகிறார் என வைத்துக்கொள்வோம். அதை அவர் சரியாக எழுதுவாரா என்பது அவருக்குச் சந்தேகமாக இருந்தால், அவருடன் இலிச் விவாதத்தை ஆரம்பித்து, தமது கொள்கையை அவருக்கு விளக்கி, அவருக்கு அந்த விஷயத்தில் சிரத்தை ஏற்படும்படி செய்துவிடுவார். போதிய அளவு அந்த விஷயத்தைப் பற்றி அவருடன் விவாதித்த பிறகு, "இந்த விஷயத்தைப் பற்றி நீங்கள் ஒரு கட்டுரை எழுத விரும்புகிறீர்களா?" என்று கேட்பார். இலிச்சுடன் நடத்திய விவாதம் தமக்கு உதவி புரிந்திருக்கிறது என்பதையும் கட்டுரை எழுதும்பொழுது இலிச்சின் அபிப்பிராயத்தையும் பதங்களையும் தாம் உபயோகித்திருப்பதையும் கட்டுரையாளர் கவனித்திருக்கவே மாட்டார்.

1902-ம் வருடம் நாங்கள் அங்கே வசித்த காலத்திலிருந்த நிலையிலிருந்து இப்பொழுது அங்கே என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காணும் பொருட்டு நாங்கள் மூனிக்கில் பல நாட்கள் தங்க விரும்பினோம். ஆனால் நாங்கள் சீக்கிரமே திரும்பிச் செல்ல நேர்ந்ததால், சில மணி நேரங்கள்தான் எங்களால் அங்கே தங்க முடிந்தது. ரயிலுக்காக நாங்கள் பல மணி நேரங்கள் காத்திருந்தோம். எங்களை வரவேற்கப் போரிஸும் அவர் மனைவியும் வந்திருந்தனர். ஹோப்ரா பீருக்குப் பெயர்போன ஒரு ஹோட்டலில் நாங்கள் பொழுதைக் கழித்தோம். சுவர்களிலும் பீர்க்கோப்பைகளிலும் எச். பி. என்னும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன; அவை என். வி. என்ற ரஷ்ய எழுத்துகளை ஒத்திருந்தன. "இது நாரோத்நாயா வாலியா பீர்க் கடை" என்று நான் வேடிக்கையாகச் சொன்னேன். சித்திரத்தை விமர்சனம் செய்யும் ஒரு சைத்ரீகரைப் போன்று, இலிச் மூனிக் பீரைப் புகழ்ந்தார். விவசாயிகளிடையே காணப்படும் வர்க்க வித்தியாசங்களைப்பற்றி, போரிஸும் இலிச்சும் உரையாடினர்; அப்பொழுது நோயுற்றுக் கிடந்த டியாடெங்காவைப் பற்றி, நானும் போரிஸின் மனைவியும் பேசிக்கொண்டிருந்தோம். இலிச் நாலைந்து வரிகளில் அவளுக்கு ஒரு யோஜனை கூறினார். வெளிநாட்டுக்குச் சென்றுவிடும்படியும் கோக்கரிடம் ஆபரேஷன் செய்துகொள்ளும்படியும் இலிச் அவளுக்கு யோஜனை கூறி இருந்தார். ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் - ஆறும் தேதி என்று நினைக்கிறேன் - நாங்கள் போரோனினோவை அடைந்தோம். வழக்கம்போல் பெய்கிற மழையும் லெவ் போரிஸோவிச் காமனீவும் ரஷ்யா சம்பந்தமான ஏராளமான செய்திகளும் எங்களை வரவேற்றன.

ஒன்பதாம் தேதி மத்திய கமிட்டியின் அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பிராவ்தா நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக ராப்போச்சாயா பிராவ்தா வெளிவந்துகொண்டிருந்தது. ஆனால் அனேகமாக எங்கும்-செயிண்டு பீட்டர்ஸ்பர்க், ரீகா, நிக்கோலாயெவ், பக்கு ஆகிய இடங்களில் வேலைநிறுத்தங்கள் நடந்தன. கூட்டத்தில் பங்கு எடுத்துக்கொண்ட டூமா சபை அங்கத்தினர்களில் மாலினோவஸ்கியை மட்டும்தான் எனக்கு நினைவு இருக்கிறது. ராப்போச்சாயா பிராவ்தா பற்றியும் மாஸ்கோ கல்வி பற்றியும்

பிரிபாய் பிரசுரலாயம் பற்றியும் நடைபெற விருக்கும் கூட்டுறவு மகாநாட்டிலும் வர்த்தகர் மகாநாட்டிலும் மேற்கொள்ள வேண்டிய கொள்கைபற்றியும் ஏனைய அவசரமான பிரசினைகள்பற்றியும் அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

எங்கள் வீட்டு மாடியில் காமனீவ் தங்கினர். இரவுச் சாப்பாடு முடிந்ததும் இலிச்சும் அவரும் எங்கள் வீட்டுப் பெரிய அடுக்களையில் உட்கார்ந்துகொண்டு நாள்தோறும் ரஷ்யச் செய்திகளைப்பற்றி விவாதித்தார்கள்.

கட்சி மகாநாடு ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்தன; "வேனிற் கால மகாநாடு" என்று இதற்கு இப்போது பெயர் விளங்குகிறது. செப்டம்பர் மாதம் 21-ந் தேதி தொடங்கி அக்டோபர் மாதம் முதல் தேதிவரை, இந்த மகாநாடு பொரோனினேவில் நடந்தது. ஸாமோய்லாவைத் தவிர்த்து மற்ற டூமா சபை அங்கத்தினர்கள் அனைவரும் மகாநாட்டுக்கு வந்திருந்தனர். மாஸ்கோவி லிருந்து நோவோஷிலோவும் பலாஷோவும் வந்திருந்தனர். கீவிலிருந்து ரோஸ் மிரோவிச் வந்திருந்தார். யூரல் பிரதேசத்திலிருந்து ஸிமாடெர்பியானு வந்திருந் தார். செயிண்டு பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து ஷாட்மான் வந்திருந்தார். கல்வி சார்பில் டிராயானேவஸ்கி வந்திருந்தார். போலிஷ்க்காரர்கள் சார்பில் கானெட்ஸ்கியும் டோம்ஸ்கியும் ரோஸ்லாமோவிஸ்டுகளின் இரு பிரதிநிதிகளும் (அந்தக் காலத்தில் போலந்திலுள்ள மிகப் பெரிய தொழிற்சாலை ஜில்லாக்களில் - வார்ஸா. லோட்ஸா - டோம்ப்ரோ, காலிஷ் இவர்களின் செல்வாக்கு அதிகரித்து இருந்தது.) வந்திருந்தனர். மகாநாடு நடந்துகொண் டிருந்தபொழுது இன்னிஸா வந்து சேர்ந்தாள்; பொய்ப் பாஸ்போர்ட்டுடன் பிரயாணம் செய்த சமயம், 1912-ம் வருடம் அவள் கைது செய்யப்பட்டாள். சிறை வாழ்க்கை படுமோச மாய் இருந்தபடியால், அவளுடைய தேகாரோக்கியம் கெட்டுவிட்டது. க்ஷய ரோக அறிகுறிகள் தென்பட்டன. எனினும் அவள் உணர்ச்சி குன்ருது இருந் தாள். வழக்கம்போல் அளவுகடந்த ஆர்வத்துடன் கட்சி வேலைகளில் அவள் ஈடுபட்டாள். அவள் வரவு எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. மகாநாட்டில் மொத்தம் இருபத்து நான்கு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கட்சிக் காங்கிரஸைக் கூட்டுவது சம்பந்தமான விஷயம் மகாநாட்டில் விவா தத்துக்கு வந்தது. லண்டனில் நடைபெற்ற ஐந்தாவது காங்கிரஸ் முடிந்து இப் போது ஆறு ஆண்டுகள் ஓடிவிட்டன; லண்டன் காங்கிரஸுக்குப் பிறகு எவ் வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மகாநாட்டில் விவாதிக்க எடுத்துக் கொண்ட விஷயங்கள் வருவாறு: வேலைநிறுத்த இயக்கம், அரசியல் பொது வேலைநிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்வது, கிளர்ச்சி வேலைகள், ஜனரஞ்சகமான பல துண்டுப் பிரசுரங்களைப் பிரசுரிப்பது, ஜனநாயகக் குடியரசு, நிலச்சுவான்தார் களின் நிலங்களைப் பறிமுதல் செய்வது, எட்டு மணி நேர வேலை ஆகிய கோஷங் களைக் கிளர்ச்சி செய்யும் காலத்து மாற்ருமல் இருப்பது, ஆகிய விஷயங்களை மகா நாடு விவாதத்துக்கு எடுத்துக்கொண்டது. சட்டவிரோதமான ஸ்தல ஸ்தா பனங்களில் எவ்வாறு வேலை செய்வது, டூமாவில் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் திட்டத்தை எவ்வாறு அமலுக்குக் கொண்டுவருவது போன்ற பிரசினைகளும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. டூமா சமதர்ம ஜனநாயகப் பகுதி யில் போல்ஷ்விக்குகளுக்குச் சம உரிமை பெறும் பிரசினையும் ஒரு மெஜாரிட்டி ஓட்

டால் போல்ஷ்விக்குகளைத் தோல்விக்கு உள்ளாக்கும் பிரசினையும் மிக முக்கியமானவை. மெஜாரிட்டி "எழுவர்"* சிறுபான்மைத் தொழிலாளர்களின் ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இன்னொரு முக்கியமான தீர்மானம் விளாதிமிர் இலிச்சின் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்ட தேசிய பிரசினை சம்பந்தமான தீர்மானம். இந்தப் பிரசினை சம்பந்தமாக எங்கள் அடுக்களையில் நடந்த விவாதங்கள் எனக்கு இன்னும் நினைவு இருக்கின்றன; இந்தப் பிரசினையால் ஏற்பட்ட உணர்ச்சியும் இதன் பயனாய் ஏற்பட்ட ஆர்வமிக்க விவாதங்களும் எனக்கு நினைவு இருக்கின்றன.

அந்தச் சமயம் மாலினேவஸ்கி பெரிதும் கிளர்ச்சி அடைந்து காணப்பட்டார்; நாள்தோறும் தவறாமல் இரவில் அவர் அதிகமாகக் குடித்துவிடுவார்; தம்மை யாரும் நம்பவில்லை என்று அடிக்கடி குறைகூறுவார்; அவர் நடத்தையைக் கண்டு மாஸ்கோ பிரதிநிதிகள் பலாஷோவும் நோவோஷிலோவும், ஆத்திரம் அடைந்தனர். மாலினேவஸ்கியின் கதைகளையும் நடத்தையையும் அவர்கள் சந்தேகப்பட்டனர்.

மகாநாடு முடிந்த பிறகு மேலும் இரண்டு வாரங்கள் நாங்கள் போரோனினேவில் தங்கினேம். நாங்கள் அதிகமாக நடந்தோம்; அசாதாரண அழகு படைத்த செர்னிடாவ் மலை ஏரிக்கும் ஏனைய மலைகளுக்கும் நாங்கள் சென்று வந்தோம்.

எல்லோரும் இன்னிஸாவை இதயபூர்வமாக நேசித்தோம். எப்பொழுதும் அவள் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருந்தாள். பாரீஸிலேயே அவளை எங்களுக்குத் தெரியும். ஆனால் அங்கே கூட்டம் அதிகம். கிராக்கோவில் எங்களைச் சேர்ந்தவர்கள் குறைவாக இருந்தனர். ஆகையால் தோழமை உணர்ச்சியோடு பழகி எங்களால் அங்கே வாழ முடிந்தது. காமனீவ் வசித்த அதே மாடியில் இன்னிஸாவும் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டாள். என் அன்னை அவளை மிகவும் நேசித்தாள். அடிக்கடி பேசிக்கொண்டிருக்கவும் புகை பிடிக்கவும் என் அன்னை அவளுடைய அறைக்குச் செல்வார். இன்னிஸா இருக்கும் இடங்களில் ஜீவசக்தி பொங்கித் ததும்பும்.

கட்சி வேலைகளில் நாங்கள் முழுக்க முழுக்க ஈடுபட்டோம். எனவே எங்கள் வாழ்க்கை மாணவர்கள் வாழ்க்கையைப் போன்று இருந்ததே தவிர, குடும்ப வாழ்க்கையாக இருக்கவில்லை. இன்னிஸா எங்களுடன் வசிப்பதில் எங்களுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. தமது வாழ்க்கையைப்பற்றியும் தம் குழந்தைகளைப் பற்றியும் அவள் அடிக்கடி கூறுவாள். குழந்தைகளின் கடிதங்களை எனக்குக் காட்டினுள். குழந்தைகளைப்பற்றிப் பேசும்பொழுது அன்பால் அவள் முகம் புத்தொளி பெற்றுத் திகழும். இலிச்சும் இன்னிஸாவும் நானும் அடிக்கடி உலவச்

* டூமாவில் மொத்தம் பதின்மூன்று அங்கத்தினர்கள் இருந்தனர்; அவர்களில் ஏழு பேர் மென்ஷ்விக்குகள்; ஆறு பேர் போல்ஷ்விக்குகள். மென்ஷ்விக்குகள் சிறுபான்மையோரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எனினும் மெஜாரிட்டி ஓட்டைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்கள் தங்கள் கட்சிக் கொள்கையைக் கட்சிப் பகுதிமீது திணித்தனர்.

சென்றோம். ''நாடோடிக் கூட்டம்'' என்று கூறி, காமனீவும் ஸினோவியெவ்வும் எங்களைக் கேலி செய்தனர். நகருக்கு வெளியில் இருந்த மைதானங்களிடையே நாங்கள் நடப்பது வழக்கம். போலிஷ் பாஷையில் மைதானத்தைப் ''பிலோன்'' என்று சொல்லுவார்கள். இதிலிருந்துதான் ''பிலோனின்'' என்னும் புனைபெயர் இன்னிஸாவுக்கு ஏற்பட்டது. இன்னிஸாவுக்குச் சங்கீதத்தில் பிரியம் அதிகம்; பீத்தோவனின் பாடல்கள் பாடும் சங்கீதக் கச்சேரிக்கு அவள் எங்களை அழைத்துச் செல்வாள்; அவளுக்குச் சங்கீதத்தில் போதிய பயிற்சி உண்டு. பீத்தோவன் பாடல்களை அவள் மிக நன்றாக வாசிப்பாள். ''ஸோனெட் பாதெட்டிக்'' என்னும் பாடலை இலிச் மிகவும் ரசித்தார். அடிக்கடி அதை வாசிக்கும்படி இன்னிஸாவை இலிச் வேண்டுவார். இலிச்சுக்கும் சங்கீதத்தில் பிரியம் அதிகம். சோவியத்து காலத்தில், பிரசித்தி பெற்ற பாடகர்கள் அந்தப் பாடலை வாசிப்பதைக் கேட்பதற்காக, தோழர் சொரூபா வீட்டுக்குச் சென்று வந்தார். புனைகதைகளைப்பற்றியும் நாங்கள் பேசினோம். ''கதைகளுக்கு இங்கே பஞ்சமாய் இருக்கிறது'' என்று இலிச்சின் அன்னைக்கு நான் எழுதினேன். ''நாட்ஸன், நெக்ரோஸோவ் ஆகியவர்களின் புத்தகங்களை வலோதியா* மனப்பாடம் செய்துவிட்டார். எங்களிடம் இருக்கும் அன்னா கரினாவை நாங்கள் நூறு தரம் திரும்பத் திரும்பப் படித்துவிட்டோம். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வசித்தபொழுது எங்களிடம் இருந்த ஒருசில கதைப் புத்தகங்களை நாங்கள் பாரீஸில் போட்டுவிட்டோம். இங்கே ரஷ்ய மொழிப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. பழைய புத்தக வியாபாரிகளின் விளம்பரங்களை—உஸ்பென்ஸ்கியின் இருபத்தெட்டுப் பகுதிகளும் புஷ்கினின் பத்துப் பகுதிகளும் கிடைக்கும் என்று அவர்கள் விளம்பரம் செய்கிறார்கள்—நாங்கள் ஆசையுடன் படிக்கிறோம். சிறந்த இலக்கியங்களிலும் இலக்கிய விமர்சனங்களிலும் இலிச்சுக்கு ஆசை பிறந்துவிட்டது. நிலைமை மோசமாகிவிட்டது. அவர் தீவிரமான தேசியவாதியாக மாறிப்போனார்! போலிஷ் சைத்ரீகர்கள் தீட்டிய சித்திரங்களைப் பார்க்க அவர் செல்வது இல்லை. ஆனால், ஒரு நாள் ஒரு நண்பரின் வீட்டில் டிரட்டியாகோவ் சித்திரசாலையின் ஜாப்தா அவர் கண்ணில் பட்டது. அதை அவர் அடிக்கடி பரிசீலனை செய்கிறார்.''

இன்னிஸா கிராக்கோவில் தங்குவாள் என்றும் ரஷ்யாவிலிருந்து தம் குழந்தைகளைத் தருவித்துக்கொள்வாள் என்றும் முதலில் நாங்கள் நினைத்தோம். அவளுக்கு ஒரு வீடு தேடிக் கொடுக்க நான் உதவி புரிந்தேன். ஆனால் கிராக்கோவில் நாங்கள் ஒதுங்கி வாழ்ந்ததால், அது அஞ்ஞாதவாசத்தை எங்களுக்கு ஞாபகமூட்டிக்கொண்டே இருந்தது. இன்னிஸாவிடம் இருக்கும் அபாரமான சக்திகளை வெளியிடுவதற்கு உரிய வாய்ப்புகள் கிராக்கோவில் மிகவும் குறைவாய் இருந்தன. வெளிநாடுகளில் வசிக்கும் எங்கள் கட்சி அங்கத்தினர்களைச் சந்திக்கவும் அவர்களிடையே சொற்பொழிவுகள் ஆற்றவும் பிறகு வெளிநாட்டுக் கமிட்டியைத் திறம்பட இயக்குவிப்பதற்காகப் பாரீஸில் வசிக்கவும் அவள் முடிவு செய்தாள். அவள் புறப்படுவதற்கு முன்பு அவளுடன் பெண்கள் வேலையைப் பற்றி நான் நீண்ட நேரம் விவர்த்தித்தேன். பெண் - தொழிலாளர்களிடையே

* இலிச்சின் செல்லப் பெயர்.

பிரசாரம் செய்ய வேண்டிய அவசியத்தையும் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கி லிருந்து பெண் - தொழிலாளர்களுக்கு என ஒரு தனிப் பத்திரிகை வெளியிட வேண்டிய அவசியத்தையும் அவள் வற்புறுத்தினள். அத்தகைய பத்திரிகை ஒன்று பிரசுரிப்பதைப்பற்றி அன்று இலிச்சினுவுக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர். விரைவில் அத்தகைய பத்திரிகை ஒன்று வெளி வந்தது. பிற் காலத்தில் பெண் தொழிலாளர்களிடையே இன்னிஸா பெரும் தொண்டு ஆற்றினள்.

1914-ம் வருடம் ஜனவரி மாதம் மாலினேவ்ஸ்கி கிராக்கோவுக்கு வந்தார்; அவரும் இலிச்சும் பாரீஸுக்குச் சென்றனர். ஜனவரி மாதம் 13-ம் தேதி புருஸெல்ஸில் ஆரம்பமான லெத்திய சமதர்ம ஜனநாயக மகாநாட்டில் கலந்து கொள்ள அங்கிருந்து அவர்கள் புருஸெல்ஸுக்குச் சென்றனர்.

டூமாவில் சமதர்ம ஜனநாயகவாதிகள் செய்து வருகிற வேலைகளைப்பற்றி மாலினேவ்ஸ்கி பாரீஸில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்; இதை மிகச் சிறந்த அறிக்கை என்பதாக இலிச் கருதினர். தேசியப் பிரசினைகள் பற்றி இலிச் நீண்டதொரு பிரசங்கம் புரிந்தார். ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதி* ஞாப கார்த்தக் கூட்டத்திலும் அவர் பேசினர். ரஷ்ய விவகாரங்களில் இன்டர் நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோ தலையிடுவதைப்பற்றியும் ரஷ்யாவில் சமதர்ம ஜனநாயகக் கட்சி மடிந்துவிட்டது என்னும் கருத்துப்பட இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோவின் கூட்டத்தில் காட்ஸ்கி பேசிய பேச்சைப்பற்றியும் பாரீஸ் போல்ஷ்விக்குகளின் கூட்டத்தில் இலிச் பேசினர். ரஷ்ய விவகாரங் களில் தலையிட இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோ முடிவு செய்திருப்பதைக் கண்டு, இலிச் அதிகக் கவலைப்பட்டார். ஏனெனில் ரஷ்யாவில் போல்ஷ்விக்கு களுக்கு அதிகரித்து வரும் செல்வாக்கைத் தடுக்க இது உதவி புரியக் கூடும் என்று இலிச் கருதினர். இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோவின் காரிய தரிசி ஹூயூஸ்மானுக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர். கட்சியில் நிலவும் நிலைமைகளைப்பற்றி அந்தக் கடிதத்தில் இலிச் விளக்கினர். லெத்திய சமதர்ம ஜனநாயகக் கட்சியின் நான்காவது காங்கிரஸில் போல்ஷ்விக்குகள் வெற்றி பெற்றனர். அந்தக் காங்கிரஸில் தோழர்கள் பெர்ஸின், லாட்ஸிஸ், ஹெர்மான் இன்னும் இதர லெத்திய போல்ஷ்விக்குகளும் பங்கு எடுத்துக்கொண்டனர். அந்தக் காங்கிரஸில் இலிச் பேசினர். மத்திய கமிட்டியுடன் அவர்களின் கட்சியை இணைத்துவிடுமாறு, லெத்தியர்களை அவர் வேண்டிக்கொண்டார். பாரீஸ் விஜயம் தமக்குப் புத்துயிர் அளித்ததாகத் தம் அன்னைக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர். "சாதாரண வசதி படைத்தவர்களுக்குத் தகுதியான இடம் அல்ல பாரீஸ். அது சலிப்பைத் தருகிறது; ஆனல் சில தினங்கள் தங்க, அதைவிட வசதியான ஜீவசக்தி நிறைந்த நகரம் வேறு கிடையாது; . எனக்கு அந்த நகரம் அதிக உற்சாகத்தை அளித்தது" என அவர் எழுதி இருந்தார்.

குளிர்காலத்தில் இலிச் பாரீஸிலிருந்து திரும்பி வந்தார். உடனே காமனீவ்

---

* புரட்சிக்கு வழிகோலிய ரத்த வெள்ளம் பெருகி ஓடிய (1905) ரத்த ஞாயிற்றுக்கிழமையின் நினைவு நாள்.

ரஷ்யாவுக்குச் சென்று பிராவ்தாவை நடத்தும் பொறுப்பையும் டூமா பகுதியின் வேலையை மேற்பார்வையிடும் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. பத்திரிகைக்கும் டூமா பகுதிக்கும் உதவி தேவையாக இருந்தது. அதற்கு மத்தியில், காமனீவ் மனைவியும் அவர்கள் புதல்வனும் வந்து சேர்ந்தனர். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் ஒரு நகரம்தானா என்பதுபற்றி காமனீவ்வின் புதல்வனும் ஸ்டீபா ஸினோவீயெவ்வும் காரசாரமாக விவாதம் நடத்தினர். ரஷ்யாவுக்குப் புறப்படும் வேலை ஆரம்பமாயிற்று. அவர்களை வழியனுப்ப நாங்கள் எல்லோரும் ஸ்டேஷனுக்குச் சென்றோம். மாலை நேரம்; குளிர் அதிகமாக இருந்தது. நாங்கள் யாரும் அதிகமாகப் பேசவில்லை. காமனீவின் இளம் புதல்வன் மட்டும் இடைவிடாது பேசியபடி இருந்தான். எல்லோரும் சிந்தனை வயப்பட்டு இருந்தோம். எவ்வளவு நாட்கள் காமனீவ் கைதியாகாமல் இருப்பார்? எப்பொழுது நாங்கள் மீண்டும் சந்திப்போம்? மற்றவர்கள் எப்பொழுது ரஷ்யாவுக்குத் திரும்ப முடியும்? இந்த எண்ணங்கள் ஒவ்வொருவர் மனத்திலும் இருந்தன. எங்கள் அனைவருடைய மனதிலும் ரகசியமாக ரஷ்யாவைப்பற்றிய எண்ணமே மிகுந்து நின்றது. எல்லோரும் ரஷ்யாவுக்குச் செல்ல ஆசைப்பட்டோம். இரவு தவறாமல் நான் நோவாஸ்கயா ஸாவாஸ்தாவைக் கனவு காண்பேன். (செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இது ஒரு பகுதி). இந்த விஷயங்களைப்பற்றி எல்லாம் நாங்கள் பேசவில்லை என்றாலும், ரகசியமாக இந்த எண்ணங்கள் ஒவ்வொருவர் மனத்திலும் இல்லாமல் இல்லை.

1914-ம் வருடம் மார்ச்சு மாதம் 8-ம் தேதி (சர்வதேசப் பெண்கள் தினம்) செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து பெண் தொழிலாளி என்னும் பத்திரிகை வெளி வந்தது. தனிப் பிரதியின் விலை நான்கு காப்பெக்குகள். பெண்கள் தினத்தில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் கட்சிக் கமிட்டி துண்டுப்பிரசுரம் வெளியிட்டது. அந்தப் பத்திரிகைக்கு இன்னிஸாவும் ஸ்டாஹலும் பாரீஸிலிருந்து கட்டுரைகள் எழுதி அனுப்பினர். லிலினாவும் நானும் கிராக்கோவிருந்து எழுதி அனுப்பினோம். இந்த மாசிகையின் ஏழு இதழ்கள் மட்டும் வெளிவந்தன. வியன்னாவில் நடைபெறவிருந்த சமதர்மப் பெண்கள் காங்கிரஸைப்பற்றி எட்டாவது இதழில் கட்டுரைகள் எழுத நாங்கள் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் அந்த இதழ் வெளிவரவில்லை; அதற்குள் யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

வியன்னாவில் இண்டர்நேஷனல் சோஷலிஸ்டுக் காங்கிரஸ் நடைபெறவிருந்த அதே சமயத்தில், அந்த இடத்தில் கட்சிக் காங்கிரஸைக் கூட்டுவதற்கு நாங்கள் முயன்றோம். சில பிரதிநிதிகளாவது சட்டரீதியாக வர முடியும் என்று நாங்கள் நம்பினோம். உல்லாசப் பிரயாணிகள் என்ற பெயரில் எல்லோரும் ஒன்றாக எல்லைப்புறத்தைக் கடக்க வேண்டும் என்றும் நாங்கள் திட்டமிட்டு இருந்தோம். கிராக்கோ அச்சுத் தொழிலாளர்கள் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மே மாதம் நாங்கள் மீண்டும் போரோனினோவுக்குத் திரும்பினோம்.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெறவிருக்கும் காங்கிரஸுக்கு ஏற்பாடுகள் செய்யும் பொறுப்பைத் தோழர்கள் ஸினிலெவ், கிளிபோ - அவிலோவ், அன்னா நிக்கிபோராவா ஆகியோரிடம் விடப்பட்டது. செய்ய வேண்டிய வேலை

களைப் பற்றி இலிச்சிடம் விவாதிப்பதற்காக அவர்கள் போரோனினேவுக்கு வந்தனர். அவர்கள் வந்த அன்று எங்கள் பங்களாவுக்கு அருகில் இருந்த குன்றின் உச்சியில் உட்கார்ந்துகொண்டு, நாங்கள் நீண்ட நேரம் உரையாடினேம். ரஷ்யாவில் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மூவரும் வாலிபர்கள் ; உற்சாகம் நிறைந்தவர்கள் ; இலிச்சின் மனதை அவர்கள் கவர்ந்தனர். கிளிபோ அவிலோவ் பொலொக்னோ பள்ளிக்கூட மாணவராக இருந்தார். ஆனால் அவர் அப்பொழுது முன்னேற்றம் சார்பினரிடமிருந்து பிரிந்திருந்தார்.

காங்கிரஸில், மேற்கொள்ள வேண்டிய கிளர்ச்சி முறைபற்றி, கடைசியாக முடிவு செய்யப்பட்டது. தேவையான தகவல்களுடன் கிஸிலெவ் பால்டிக் பகுதிக்கும், கிளிபோ - அவிலோவும் அன்னவும் உக்ரேனுக்கும் சென்றனர்.

மாஸ்கோவிலிருந்து வந்தவர்களில் ஆல்யாவும் ஒருவர். அவர் காப்ரியில் மாணவராக இருந்தவர். அவர் போலீஸ் ஒற்றன் என்பது பிறகுதான் தெரிய வந்தது. எந்தச் சாக்கின்மீது அவர் வந்தார் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. விரைவில் நடைபெறவிருந்த காங்கிரஸ் சம்பந்தமான தகவல்களைத் தெரிந்து கொள்ள அவர் விரும்பினர். காங்கிரஸ் சம்பந்தமாக ரகசியப் போலீஸாருக்கு அதிகாரபூர்வமான தகவல்கள் தேவையாக இருந்ததால், அவர்கள் ஆல்யாவை அனுப்பி இருந்தனர்.

ரஷ்யாவில் இருந்த தம் குழந்தைகளை இன்னிஸா வேனிற்காலத்தில் அழைத்து வந்து, டிரியெஸ்டியில் கடற்கரை ஓரத்தில் வசித்து வந்தாள். வியன்னவில் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுக் காங்கிரஸ் நடக்கும்பொழுது, சர்வதேசப் பெண்கள் காங்கிரஸ் நடத்த முடிவு செய்யப்பட்டது. சர்வதேசப் பெண்கள் காங்கிரஸைப்பற்றி இன்னிஸா ஒரு அறிக்கை தயாரித்துக்கொண் டிருந்தாள். வேறு துறைகளிலும் வேலைகள் செய்து வந்தாள். ரஷ்ய சமதர்ம ஜனநாயகக் கட்சிக்குள் இயங்கின பதினெரு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாடு ஜூன் மாத மத்தியில் கூட்ட இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் புரோ முடிவு செய்தது. அன்று கட்சிக்குள் குடிகொண்டிருந்த அபிப்பிராய பேதங்களை விவாதித்து ஒற்றுமையை உண்டுபண்ணுவது மகாநாட்டின் நோக்கம்; எனினும் மகாநாடு இந்தத் துறையில் கவனம் செலுத்துவதுடன் நின்றுவிடாது என்பதும் கலைப்புவாதிகளும், டிராஸ்கியவாதிகளும், பண்டுவாதிகளும் மற்றவர்களும் போல்ஷ்விக்குகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் பல முடிவுகளால் அவர்களைப் பிணைக்கவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதும் தெளிவாகத் தெரிந்தது. ரஷ்யாவில் போல்ஷ்விக்குகளின் செல்வாக்கு அதிகரித்து வந்தது. தோழர் படாயெவ் ஸார் டூமாவில் போஷ்விக்குகள் என்னும் தமது நூலில் சுட்டிக்காட்டுவதைப் போன்று, 1914-ம் வருடம் வேனிற்காலத்தில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த பதினெட்டுத் தொழிற் சங்கங்களில் பதினன்கு சங்கங்களின் நிர்வாகக் கமிட்டிகளில் போல்ஷ்விக்குகளுக்கு மெஜாரிட்டி இருந்தது. செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலேயே பெரிய, வலிமைபடைத்த தொழிற் சங்கமாகிய உலோகத் தொழிலாளர் யூனியன் உள்பட பெரிய தொழிற் சங்கங்கள் போல்ஷ்விக்குகளை ஆதரித்தன. இன்ஷ்யூரன்ஸ் தொழிலாளர்களும்

போல்ஷ்விக்குகளை ஆதரித்தனர். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலும் மாஸ்கோவிலும் இன்ஷ்யூரன்ஸ் நிதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் முப்பத்தேழு பேர் போல்ஷ்விக்குகள்; ஏழு பேர் தான் மென்ஷ்விக்குகள். அகில ரஷ்ய இன்ஷ்யூரன்ஸ் நிதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 47 பேர் போல்ஷ்விக்குகள்; பத்துப் பேர்கள்தான் மென்ஷ்விக்குகள். இன்டர்நேஷனல் காங்கிரஸ் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தேர்தலுக்கு வியன்னுவில் போதிய ஏற்பாடுகள் நன்ருகச் செய்யப்பட்டன. தொழிலாளர் ஸ்தாபனங்களில் பெரும்பான்மை போல்ஷ்விக்குகளைத் தேர்ந்தெடுத்தன.

கட்சிக் காங்கிரஸுக்கு வேண்டிய ஏற்பாடுகளும் வெற்றிகரமாக நடைபெற்று வந்தன. "நம்மை எதிர்நோக்கி நிற்கும் கடமை - அதாவது காங்கிரஸுக்கு முன் கட்சியின் பிரதேச 'செல்'களைப் பலப்படுத்துவதும் விரிவுபடுத்துவதும்–பெரும்பாலும் பூர்த்தியாகிவிட்டது. கடந்த சில மாதங்களில் புரட்சி இயக்கத்தில் ஏற்பட்ட மகத்தான விழிப்பில் தொழிலாளர்கள் கட்சியில் அதிகமாகச் சேர்ந்தனர். புரட்சி மனப்பான்மை படைத்த தொழிலாளர்கள் கட்சி ஸ்தாபனங்களில் சேர்ந்தனர். கட்சிப் பகுதிகளுக்குத் தலைமை தாங்கும் வேலை அபிவிருத்தி அடைந்து வந்தது. இதனுல் வரப்போகும் காங்கிரஸும் காங்கிரஸில் விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்களும் ஜனங்களைக் கவர்ந்தன" என்று படாயெவ் ஸார் டுமாவில் போல்ஷ்விக்குகள் என்ற தமது புத்தகத்தில் எழுதி இருக்கிருர்.

காங்கிரஸ் செலவுகளுக்காகப் படாயெவ் பெரும் தொகை வசூல் செய்தார். காங்கிரஸில் பிரரேபிப்பதற்காக அவருக்குப் பல தீர்மானங்கள் வந்தன. சட்டவிரோதமான வேலை சட்டரீதியான நடவடிக்கைகளுடன் எவ்வாறு பிணைந்து கிடக்கிறது என்பதை அவர் அழகாக வர்ணிக்கிருர்.

> "வேனிற் காலத்தில் நகருக்கு வெளியே காட்டில் சட்டவிரோதமான கூட்டங்கள் நடத்த எங்களுக்கு வசதி இருந்தது. அங்கே போலீஸாரின் தாக்குதல்கள் மிகமிக அபூர்வமாகத்தான் ஏற்படும். பொதுக் கூட்டம் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஏதாவது கல்வி ஸ்தாபனத்தின் பெயரில் கிராமத்துக்கு உல்லாசப் பிரயாணம் செல்லும் பிரயாணிகள் வேடத்தில் அதற்கு ஏற்பாடு செய்வோம். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து கொஞ்ச தூரச் சென்றதும், காட்டுக்குள் நாங்கள் நடக்கச் செல்வோம். அங்கே காவல்காரர்கள் இருப்பார்கள். முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட ரகசிய வார்த்தையைச் சொன்னுல்தான் அவர்கள் வழிகாட்டுவார்கள். பிறகு நாங்கள் கூட்டம் நடத்துவோம். ஏராளமான ஒற்றர்கள் தொழிலாளர் ஸ்தாபனங்களை வட்டமிட்டார்கள். கட்சி வேலை செய்துவந்த பிரசித்தி பெற்ற ஸ்தாபனங்களை - பிராவ்தா காரியாலயம், டுமா பகுதி அறை—ஆகியவற்றை அவர்கள் இமைகொட்டாது கண்காணித்தனர். ஆனல் ரகசியப் போலீஸின் நடவடிக்கை அதிகரித்த அதே சமயத்தில், ரகசிய வேலை செய்யும் எங்கள் திறமையும் அதிகரித்தது. தனிப்பட்ட தோழர்கள் கைதானுர்கள் என்பது உண்மைதான். ஆனுல் கூட்டமாகத் தோழர்கள் கைதாகவில்லை."

சட்டரீதியான பிரசுரங்கள் வெளியிடுவதை அபிவிருத்தி செய்வது, அவற்றுக்கு நிர்ணயமான வழியைக் காட்டுவது, டூமாவுக்குள்ளும் வெளியிலும் டூமாப் பகுதியின் வேலையை அபிவிருத்தி செய்வது, எல்லாப் பிரசினைகளையும் தெளிவாக உருவகப்படுத்துவது, சட்டரீதியான வேலையைச் சட்டவிரோதமான பகுதியுடன் இணைப்பது ஆகியவை சம்பந்தமாக மத்திய கமிட்டி மேற்கொண்ட வழி முற்றிலும் சரியானது என்பது நிரூபணமாயிற்று.

இந்த வழியை மேற்கொள்வதைத் தடுக்கவும் இந்த வேலையைத் தடைப்படுத்தவும் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோ செய்த முயற்சி இலிச்சை ஆத்திரமூட்டியது. புருஸெல்ஸ் ஒற்றுமை மகாநாட்டுக்குப் போகக் கூடாது என்று அவர் முடிவுசெய்தார். இன்னிஸா போக வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பெற்றது. பிரெஞ்சுக்காரரைப் போன்று அவள் பிரெஞ்சு மொழி பேசுவாள்; மனக்குழப்பம் அடையாது எப்பொழுதும் உறுதியோடு நிற்பாள்; கொள்கையை விட்டுக்கொடுத்துவிட மாட்டாள் என்று அவளை நம்பலாம். இன்னிஸா டிரியெஸ்டியில் வசித்துவந்தாள். தாம் தயாரித்த மத்தியக் கமிட்டி அறிக்கையை இலிச் அவளுக்கு அனுப்பினர். ஒரு குறிப்பிட்ட நிலையில் அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் இலிச் யோஜனைகள் கூறியனுப்பினர். மத்திய கமிட்டியின் பிரதிநிதிகளாக இன்னிஸா, எம். எப். விளாதிமிர்ஸ்கி, என். எப். போப்போவ் ஆகியோர் சென்றனர். மத்தியக் கமிட்டி அறிக்கையை இன்னிஸா பிரெஞ்சு மொழியில் சமர்ப்பிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. நாங்கள் எதிர்பார்த்ததைப்போன்று அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொள்வதுடன் மகாநாடு திருப்தி அடைந்துவிடவில்லை. பிளவைக் கண்டித்தும் பல்வேறு பகுதிகளிடையே அடிப்படையான அபிப்பிராய பேதம் எதுவும் இல்லை என்றும் கூறும் தீர்மானம் ஒன்றைப் பூரோவின் பெயரால் காட்ஸ்கி பிரரேபித்தார். மத்திய கமிட்டியின் பிரதிநிதிகளும் லெட்டிஷ் தோழர்களும் தவிர, மற்றவர்கள் தீர்மானத்தை ஆதரித்தனர். ஒற்றுமையை உண்டுபண்ணச் செய்யப்படும் முயற்சியைக் குலைப்பவர்கள் ஆவார்கள் ஓட்டுப் போடாதவர்கள் என்று ஹூயூஸ்மான் அச்சுறுத்தியும்கூட, இதைப்பற்றித் தாம் வியன்னு காங்கிரஸுக்கு அனுப்ப நேரும் என்று அவர் பயமுறுத்தியும்கூட, லெட்டிஷ் தோழர்கள் ஓட்டுப் போடவில்லை.

புருஸெல்ஸில் நடந்த ஒரு ரகசிய மகாநாட்டில் கலைப்புவாதிகளும் டிராட்ஸ்கியேவாதிகளும், முன்னேற்றவாதிகளும், பிளக்கானுவ்வாதிகளும் காக்காஷியன் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் போல்ஷ்விக்குகளுக்கு எதிராக ஒரு முன்னணி அமைத்தனர். போல்ஷ்விக்குகளை நிர்ப்பந்தப்படுத்துவதற்காகப் புதிதாக எழுந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் முடிவு செய்தனர்.

புருஸெல்ஸ் ஒற்றுமை மகாநாட்டில் கவனம் செலுத்தியதுடன் 1914-ம் வருடம் வேனிற் காலத்தில் இலிச் இன்னொரு முக்கியமான பிரசினையிலும்—மாலினேவ்ஸ்கி பிரசினையில்—கவனம் செலுத்தினர்.

உள்நாட்டு உப மந்திரியாக ஜெனரல் ஜுங்கோவஸ்கி நியமிக்கப்பட்டார்; மாலினேவஸ்கி ரகசியப் போலீஸில் ஒற்றனுக இருந்துவருவதை அவர் கண்டு பிடித்தார். இந்த அவர் டூமா தலைவர் ரோட்ஸியான்கோவுக்கு தெரிவித்

தார். மாலினேவஸ்கி டூமாவில் அங்கம் வகிப்பதால், இந்த உண்மை வெளியானல் இது பெரிய அவமதிப்புக்கு இடம் அளிக்கும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினர். மே மாதம் எட்டாம் தேதி டூமா தலைவர் ரோட்ஸியான்கோவுக்குத் தமது ராஜிநாமாக் கடிதத்தை அனுப்பினர் மாலினேவஸ்கி. தமது பதவியைத் தாம் ராஜிநாமா செய்துவிட்டதாக அவர் சமதர்ம ஜனநாயகக் கட்சி டூமா பகுதி அங்கத்தினர்களுக்கும் அறிவித்தார். "சொந்த விவகாரங்கள்தான்" ராஜிநாமாவுக்குக் காரணம் என்று அவர் எழுதி இருந்தார். ஆனல் அதை அவர் விளக்கமாக எழுதவில்லை. ராஜிநாமாச் செய்த பிறகு, அவர் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார். பிரதேசக் கட்சிக் கமிட்டியும் மத்திய கமிட்டியும் மாலினே வஸ்கியின் செயலை வன்மையாகக் கண்டித்து அவரைக் கட்சியிலிருந்து நீக்கின. மாலினேவஸ்கி போலீஸ் ஒற்றன் என்னும் குற்றச்சாட்டு மிகப் பயங்கரமான தாகத் தோன்றியதால், இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்வதற்காக, டோனெட்ஸ்கி தலைமையில் லெனின், ஸினேவியெவ் முதலியவர்களைக் கொண்ட ஒரு விசேஷ கமிஷனை மத்திய கமிட்டி நியமித்தது. மாலினேவஸ்கி போலீஸ் ஒற்றன் என்ற வதந்தி நீண்ட காலமாக நிலவிவந்தது. மென்ஷ்விக்கு வட்டாரங் களிலிருந்து இது ஆரம்பமாயிற்று. தம்மைக் கைது செய்தது சம்பந்தமாக எலினு பெடோரோவ்னு ரோஸ்மிரோவிச்சுக்குப் பலத்த சந்தேகம் இருந்தது. அவள் டூமா பகுதியில் வேலை செய்துவந்தாள். அவளைக் கேள்விகள் கேட்ட போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்த தகவல்கள் கட்சிக்குள்ளே இடம் பெற்றிருக்கும் துப்பறிபவர்களிடமிருந்துதான் அவர்கள் பெற்றிருக்க முடியும் என்று அவள் சந்தேகப்பட்டாள். மாலினேவஸ்கியின் நடத்தை சம்பந்தமாக புக்காரினுக்கும் சில தகவல்கள் தெரியும். மாலினேவஸ்கி போலீஸ் ஒற்றனுக இருக்க முடியாது என்று இலிச் கருதினர். ஒரு தரம் மாத்திரம் அவர் மனதில் சந்தேகம் தோன்றி மறைந்தது. நாங்கள் போரோனினேவில் வசித்த காலத்தில் ஸினேவியெவ் வீட்டிலிருந்து நாங்கள் திரும்பிக்கொண் டிருந்தபொழுது, அந்த வதந்திகளைப்பற்றி நாங்கள் பேசினேம். அப்பொழுது நாங்கள் கடந்துகொண் டிருந்த சிறிய பாலத்தில் திடீரென நின்று இலிச், "இது உண்மையாக இருக்க லாம்" என்று ஆச்சரியத்துடன் சொன்னர். அவர் முகத்தில் கவலைக் குறிகள் தென்பட்டன.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? இது முட்டாள்த்தனம்" என்று நான் கண்டித்துக் கூறினேன்.

இலிச் சாந்தம் அடைந்தார். போல்ஷ்விக்குகளுக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் அவர்கள் எத்தகைய கீழ்த்தரமான முறைகளைக் கையாளவும் தயங்காதவர்கள் என்று கூறி, மென்ஷ்விக்குகளை அவர் ஏச ஆரம்பித்தார்.

மாலினேவஸ்கி சம்பந்தமான சகல வதந்திகளையும் கமிஷன் விசாரணை செய்தது. குற்றச்சாட்டு தவருனது என்று பர்ட்ஸெவின் அபிப்பிராயத்தை அது தாக்கல் செய்தது. புக்காரினையும் ரோஸ்மிரோவிச்சையும் அது குறுக்கு விசாரணை செய்தது. ஆனல் குற்றத்தை நிரூபிக்க எத்தகைய முடிவான ஆதார மும் கிடைக்கவில்லை.

செயலற்று மந்தமாக மாலினேவஸ்கி போரோனினேவில் அலைந்து திரிந்தார்.

இந்தக் காலத்தில் இவர் எப்படி வாழ்க்கை நடத்தினுர் என்பது யாருக்கும் தெரியாது. பிறகு அவர் காணுமல் போய்விட்டார். அவர் எங்கு சென்ருர் என்பதும் யாருக்கும் தெரியாது. பெப்ருவரி புரட்சிக்குப் பிறகு அவருடைய உண்மையான சொரூபம் தெரிந்தது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு அவர் தாமாகவே ரஷ்யாவுக்குத் திரும்பி, சோவியத் சர்க்காரிடம் சரண் அடைந்தார். புரட்சி நீதிமன்றம் அவரை விசாரணை செய்து, அவருக்கு மரண தண்டனை விதித்தது.

இதற்கு இடையில் ரஷ்யாவில் போராட்டம் தீவிரமாயிற்று. வேலைநிறுத்த இயக்கம் எங்கும் வியாபகமாகிப் பரவியது. பக்குவில் வேலைநிறுத்த இயக்கம் உச்சநிலையை அடைந்தது. பக்குவில் வேலைநிறுத்தம் செய்தவர்களைத் தொழிலாளர்கள் ஆதரித்தனர். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 12000 புட்டிலோவ் தொழிலாளர்கள்மீது போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். போலீஸாருடன் நடந்த சண்டைகள் உக்கிரமாயின. கிளர்ந்து எழுந்த பாட்டாளி மக்களுக்குத் தலைமை தாங்கினுர்கள் டூமா சபை அங்கத்தினர்கள். வேலைநிறுத்தங்கள் தினசரி சம்பவங்களாயின; செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் ஜூலை மாதம் ஏழாம் தேதி 130000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். போராட்டத்துக்குப் பாட்டாளி மக்கள் தயார்செய்துகொண் டிருந்தனர். வேலைநிறுத்தங்கள் குறையவில்லை. அதற்கு மாருக அவை அதிகரித்தன; சிவப்பு செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் வீதிகளில், வீதி அடைப்புகள் வைக்கப்பட்டன.

யுத்தம் ஆரம்பமாயிற்று.

ஆகஸ்டு மாதம் முதல் தேதி ஜெர்மனிமீது ரஷ்யா யுத்தப் பிரகடனம் செய்தது. ஆகஸ்டு மூன்ரும் தேதி பிரான்ஸ்மீது ஜெர்மனி யுத்தப் பிரகடனம் செய்தது. நாலாம் தேதி பெல்ஜியம்மீதும், இங்கிலாந்துமீதும் யுத்தப் பிரகடனம் செய்தது. ஆகஸ்டு மாதம் ஆரும் தேதி ஆஸ்திரியா ரஷ்யாமீது யுத்தப் பிரகடனம் செய்தது. ஆகஸ்டு மாதம் பதினேராம் தேதி பிரான்ஸும், இங்கிலாந்தும் ஆஸ்திரியாமீது யுத்தப் பிரகடனம் செய்தன.

உலக யுத்தம் ஆரம்பமாயிற்று. ரஷ்யாவில் வளர்ந்துவந்த புரட்சி இயக்கத்தை அது சில காலம் தடுத்தது. உலகத்தையே நிலைகுலைத்துப் பல நெருக்கடிகளை உண்டுபண்ணியது; புரட்சிப் போரரட்டத்தின் மிக முக்கியமான பிரசினைகளைப் புதிய வடிவத்தில், தீவிரமான வடிவத்தில் எழுப்பிற்று. உழைப்பவர்களின் தலைவர்களாகப் பாட்டாளி மக்களை அது உயர்த்திற்று; சமூகத்தின் புதிய பகுதிகளை அது போராடும்படி தூண்டிற்று. ரஷ்யா சம்பந்தப்பட்டவரையில் பாட்டாளி மக்களின் வெற்றியை அது ஜீவ-மரணப் பிரசினையாக்கிற்று.

யுத்தத்திலிருந்து பெப்ருவரிப் புரட்சிவரை

(1914—17)

கிராக்கோ—1914

யுத்தம் வரும் என்ற பேச்சு நீண்ட காலமாக இருந்துவந்தது. எனினும், யுத்தம் ஆரம்பமானதைக் கேட்டு நாங்கள் திடுக்கிட்டோம். போரோனினேவை விட்டு நாங்கள் வெளியேற நேர்ந்தது; ஆனால் எங்கே செல்வது என்று எங்களுக்கு விளங்கவில்லை. அந்தச் சமயம் லிலினு கடுமையான நோயால் வருந்திக் கொண்டிருந்தாள்; ஆகையால் ஸினேவியெவ்வால் எங்குமே செல்ல முடியவில்லை. அப்பொழுது அவர்கள் ஸாக்கோபேனில் வசித்தனர்; அங்கே வைத்தியர்களுக்குக் குறைவில்லை. எனவே நாங்களும் சில காலம் போரோனினேவிலேயே வசிக்க முடிவுசெய்தோம். விஷயங்களைத் தெரிந்துகொள்ளும்படியும் ஸ்டாக்ஹோமுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும்படியும் கோப்பன்ஹேகனில் வசித்துவந்த கோப்பெட்ஸ்க்கிக்கு இலிச் ஒரு கடிதம் எழுதினர். போருக்கு ஆள் சேர்க்கும் முறை அமுலுக்கு வந்ததும் மலைச் சாதியார் சோர்வடைந்து போயினர். யாருக்கு எதிராக இந்த யுத்தம் நடக்கிறது, எதற்காக நடக்கிறது என்ற விவரங்கள் ஒருவருக்கும் துலக்கமாகத் தெரியவில்லை. உற்சாகமே தென்படவில்லை. பலி பீடத்துக்குச் செல்வதைப்போன்று உற்சாகம் குன்றி ஆடவர்கள் போருக்குச் சென்றனர். நாங்கள் குடியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரி ஒரு விவசாயப் பெண்; அவள் துக்கத்தால் நிலைகுலைந்து போனுள்; அவளுடைய கணவன் போருக்குச் செல்ல வேண்டும் என்று உத்தரவு பிறந்துவிட்டது. உபதேச மேடைகளில் நின்றுகொண்டு கத்தோலிக்கக் குருமார்கள் தேசிய வெறியைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்தனர். பல்வகையான வதந்திகள் பரவின. எங்கள் வீட்டுக்குச் சதா வந்துபோய்க்கொண்டிருக்கும் ஆறு வயது ஏழைச் சிறுவன், ரஷ்யர்கள் கிணறுகளில் விஷத்தைக் கலப்பதாக ரகசியமாகச் சொன்னுன்; இப்படி ஒரு பாதிரி சொன்னதாக அவன் கூறினுன்.

ஆகஸ்டு மாதம் ஏழாம் தேதி உள்ளூர்ப் போலீஸ் அதிகாரி, துப்பாக்கி ஏந்திய உள்ளூர் விவசாயியுடன் சோதனை செய்வதற்காக எங்கள் வீட்டுக்கு வந்தார். எதைத் தேட வேண்டும் என்று அதிகாரிக்குத் தெரியவில்லை. எனவே புத்தகப் புரோவை அவர் துளாவினர்; தோட்டா இல்லாத பிரௌனிங் கைத் துப்பாக்கி ஒன்று இருந்ததைக் கண்டுபிடித்து எடுத்துக்கொண்டார். விவசாயப்

பிரசினை சம்பந்தமான புள்ளி விவரங்கள் அடங்கிய பல நோட் புத்தகங்களை எடுத்துக்கொண்டார். அர்த்தமற்ற சில கேள்விகளைக் கேட்டார். கலக்கம் அடைந்த சாட்சி, நாற்காலியின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு பீதியுடன் சுற்று முற்றும் பார்த்தார். போலீஸ் அதிகாரி அவரைக் கேலி செய்தார்; அங்கிருந்த பசை ஜாடி ஒன்றை அவருக்குக் காட்டி 'அதோ இருக்கிறது வெடிகுண்டு' என்று அவர் சொன்னார். விளாதிமிர் இலிச்மீது சம்பிரதாயமான குற்றச்சாட்டு ஒன்று இருந்து வருகிறது என்றும் அவரை உண்மையில் தான் கைது செய்ய வேண்டும் என்றும் அந்த அதிகாரி சொன்னார். நாங்கள் வசித்த ஊருக்கு அருகில் இருக்கும் நோவிடார்க் என்னும் நகரத்தில் ராணுவ அதிகாரிகள் முகாம் போட்டு இருந்தனர்; கைதியை மறு நாள் காலையில் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். காலை ஆறு மணி ரயிலுக்கு இவர் புறப்படத் தயாராக இருந்தால் போதும் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார். இலிச் எப்பொழுதும் கைதாகக் கூடும் என்ற பயம் இருந்துவந்தது; யுத்த காலமாய் இருப்பதால் இலிச்சை அவர்கள் எளிதில் அப்புறப்படுத்தக் கூடும். அப்பொழுது போரோனினோவில் வசித்துவந்த கானெட்ஸ்கியைச் சந்தித்து நடந்தவற்றை இலிச் அவருக்குச் சொன்னார். உடனே கானெட்ஸ்கி, சமதர்ம ஜனநாயகக் கட்சி சட்டசபை அங்கத்தினர் மாரெக்குக்கு ஒரு தந்தி அடித்தார். தான் ஒரு அரசியல் அஞ்ஞாதவாசி என்பது கிராக்கோப் போலீஸாருக்குத் தெரியுமாதலால், அவர்களுக்கு இலிச் ஒரு தந்தி அடித்தார். போரோனினோவிலுள்ள அந்தப் பெரிய வீட்டில் நானும் என் அன்னையும் எவ்வாறு தனியாக வசிக்கப் போகிறோம் என்பதைப் பற்றி இலிச் கவலைப்பட்டார். மாடி அறையில் எங்கள் தோழர் டிக்கோமிர்னேவ் வசிக்க அவர் ஏற்பாடு செய்தார். ஒலோனெட்ஸ்க் சிறையிலிருந்து சமீபத்தில்தான் டிக்கோமிர்னவ் வெளிவந்தார். சிறைவாசத்தால் தகர்ந்து போயிருந்த அவர் தேகாரோக்கியம் பெறுவதற்காகப் பிராவ்தா ஆசிரியர் குழாம் அவரைப் போரோனினோவுக்கு அனுப்பி வைத்தது. அத்துடன் பிராவ்தாவில் பிரசுரிக்கப்பட்ட விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு, தொழிலாளர் பத்திரிகைகளுக்குப் பிரசாரக் கட்டுரைகள் எழுத, அவசியமான புள்ளி விவரங்கள் சேகரிக்க, அவர் இலிச்சுக்கு உதவிபுரிய வேண்டும் என்றும் முடிவு செய்து அனுப்பி இருந்தனர்.

இலிச்சும் நானும் இரவு முழுதும் விழித்திருந்தோம்; எங்களுக்குத் தூக்கமே வரவில்லை; நிலைமை மிகவும் பயங்கரமாக இருந்தது. காலையில் அவரை நான் வழி அனுப்பிவிட்டு, காலியாகக் கிடந்த அறைக்குத் திரும்பினேன். அன்றே அவரை நோவி டார்க்குக்கு அழைத்துச் செல்வதற்காக கானெட்ஸ்கி ஒரு கட்டை வண்டியை அமர்த்தினார். அங்கே அவர் பிரதேசக் கமாண்டரைச் சந்தித்தார்; ஆனால் பிரதேசக் கமாண்டரோ மிகுந்த இரைச்சல் போட்டார். இலிச் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் புரோ அங்கத்தினர் என்றும் அவருக்காக வாதாடப் பலர் முன்வருவார்கள் என்றும் அவருடைய உயிருக்குக் கமாண்டர் தான் ஜவாப்தாரியாக நேரும் என்றும் கானெட்ஸ்கி அந்தக் கமாண்டருக்கு எடுத்துச் சொன்னார். பப்ளிக் பிராசிக்கூட்டரையும் கானெட்ஸ்கி சந்தித்து, இலிச் யார் என்பதை அவருக்குச் சொன்னார். மறு தினமே நான் இலிச்சைச் சந்திக்க எனக்கு அனுமதியும் வாங்கித் தந்தார். நோவி டார்க்கிலிருந்து

காமெனட்ஸ்கி திரும்பி வந்ததும் இன்டர்நேஷனல் புரோ அங்கத்தினரும் ஆஸ்திரிய பார்லிமெண்டு சமதர்ம ஜனநாயக அங்கத்தினருமாகிய விக்டர் ஆட்லருக்கு நாங்கள் ஒரு கடிதம் எழுதினேம். நோவி டார்க்கில் இலிச்சைக் காண எனக்கு அனுமதி கிடைத்தது. நானும் அவரும் தனியாக இருந்தும்கூட இலிச் அதிகமாகப் பேசவில்லை. நிலைமை அப்பொழுதும் ஒரே குழப்பமாக இருந்தது. அன்னிய நாட்டுக்காக வேவுபார்க்கும் வேலை சம்பந்தமாக உலியானேவ்மீது சந்தேகப்பட எத்தகைய ஆதாரமும் இல்லை என்று கிராக்கோப் போலீஸார் தந்தி மூலம் தெரிவித்தனர். ஸாகேபேனிலிருந்து மாரெக்கும் இத்தகைய தந்தி ஒன்றை அனுப்பி இருந்தார். இலிச் விஷயத்தில் தலையிட்டு வேண்டுவன செய்வதற்காகப் பிரசித்தி பெற்ற போலிஷ் எழுத்தாளர் ஒருவரும் நோவி டார்க்குக்கு வந்திருந்தார். இலிச் கைதியானதைக் கேள்விப்பட்டதும், ஸாகோபேனில் வசித்துவந்த ஸினேவியெவ் கொட்டுகிற மழையில், ஸாகோபேனுக்குப் பத்து மைல் தூரத்தில் வசித்துவந்த நாரோத்நாயா வாலியாக் கட்சி அங்கத்தினர் போலிஷ் டாக்டர் துலிஸ்கியைக் காண்பதற்காகச் சைகிளில் சென்றார். உடனே துலிஸ்கி, வாடைகைக்கு வண்டி அமர்த்திக்கொண்டு ஸாகோபேனுக்குச் சென்று பல தந்திகளும் கடிதங்களும் அனுப்பினர். இதுபற்றிய பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காகப் பிறகு எங்கேயோ சென்றுவிட்டார். நாள்தோறும் இலிச்சைச் சந்திக்க எனக்கு அனுமதி கிடைத்தது.

தினசரி காலை ஆறு மணி வண்டியில் நான் நோவி டார்குக்குச் செல்வேன். ஏழு மணிக்கு நோவி டார்க்கை அடைவேன். பதினெரு மணிவரை, ரயில்வே ஸ்டேஷன், தபால் ஆபீஸ், மார்க்கெட் முதலிய இடங்களில் அலைந்து திரிவேன். பிறகு ஒரு மணி நேரம் இலிச்சைப் பேட்டி காண்பேன். தன்னுடன் வசிக்கும் சிறைச் சகபாடிகளைப்பற்றி என்னிடம் சொன்னர். உள்ளூர் விவசாயிகள் பலர் சிறையில் இருந்தனர். தேதி முடிந்த பிறகும், கூட வரி கொடுக்காததற்காக வேறு சிலரும் உள்ளூர் அதிகாரிகளின் அப்பிரீதிக்கு ஆளானதற்காக மற்றும் சிலரும் சிறையில் தள்ளப்பட்டனர். பிரஞ்சுக்காரர் ஒருவரும், சிக்கனத்தை உத்தேசித்து மற்றொருவரின் மலிவு டிக்கட்டில் பிரயாணம் செய்த சாதாரண போலிஷ் அதிகாரி ஒருவரும், குறித்த நேரத்தில் தம்மைக் காணும் பொருட்டு வந்து நிற்கும் தம் மனைவியைக் கூவியழைத்ததற்காக நாடோடி ஒருவரும் அந்தக் கைதிகளிடையே இருந்தனர். சுஷென்ஸ்கோர்யியில் சிறைவாசம் செய்த காலத்தில் விவசாயிகளுக்குச் சட்ட சம்பந்தமான யோஜனைகள் கூறி, அவர்களின் கஷ்டங்களைத் தாம் போக்கியதை இலிச் நினைவுபடுத்திக்கொண்டார். மனு எழுதவும் வேறு வேலைகள் செய்யவும் சட்ட ஆலோசனைக் காரியாலயம் ஒன்றை அவர் ஸ்தாபித்தார். சிறைச் சகபாடிகள் அவருக்குத் 'பிட்சி கிளோப்' (பலசாலியான விவசாயி) என்ற பட்டத்தைச் சூட்டினர். நோவி டார்க் சிறை நிலைக்கு பிட்சி கிளோப் தம்மைத் தயார் செய்துகொண்டார்; நான் சந்திக்கச் சென்றபொழுது எல்லாம் சாந்தமாகவும் சுறுசுறுப்புடனும் இருந்து வந்தார். கிரிமினல் குற்றவாளிகளை அடைக்கும் அந்தச் சிறையில், இரவு நேரத்தில் சிறைவாசிகள் எல்லோரும் தூங்கின பிறகு கட்சி எதிர்காலத்தில் எந்த வழியை பின்பற்ற வேண்டும் என்பதைப்பற்றியும் உலக யுத்தத்தைப் பாட்டாளி மக்களுக்கும்

முதலாளிகளுக்கும் இடையில் நடக்கும் யுத்தமாக மாற்ற என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றியும் இலிச் திட்டம் வகுத்தார். எனக்குக் கிடைத்த யுத்தச் செய்திகளை நான் இலிச்சுக்குச் சொன்னேன்.

கீழ்க்கண்ட விஷயத்தை அவருக்கு நான் சொல்லவில்லை; ஒரு நாள் நான் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து திரும்பியபொழுது கத்தோலிக்கச் சர்ச்சிலிருந்து வெளிவந்துகொண் டிருந்த விவசாயப் பெண்கள் சிலர், அன்னிய நாட்டு ஒற்றர் களை எப்படித் தாங்கள் நடத்த வேண்டும் என்பதைப்பற்றி இறைந்து பேசிக் கொண்டு வந்தார்கள்; இது என் நன்மைக்கானதாக இருந்தது. அன்னியநாட்டு ஒற்றர்களை அதிகாரிகள் விடுதலை செய்தால்கூட, விவசாயிகள் அவர்களைச் சும்மாவிட மாட்டார்கள்; அவர்களின் கண்களைக் குத்திக் குருடாக்குவார்கள்; நாக்கை அறுத்துப் போடுவார்கள் என்று பேசிக்கொண்டார்கள். இலிச்சுக்கு விடுதலை கிடைத்த பிறகு நாங்கள் மேலும் போரோனினோவில் இருக்க முடியாது என்பது இதனால் தெளிவாயிற்று. நான் மூட்டை முடிச்சுகளைக் கட்ட ஆரம் பித்தேன். நாங்கள் எடுத்துச் செல்ல வேண்டிய புத்தகங்களையும் போரோனி னோவில் விட்டுச் செல்ல வேண்டிய புத்தகங்களையும் பிரித்து எடுத்து வைத்தேன்.

எங்கள் குடும்ப நிலை சிதறிவிட்டது. என் அன்னை நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்ததால், வேனிற் காலத்தில் நாங்கள் ஒரு வேலைக்காரியை அமர்த் திக்கொண்டோம். அவள் எங்களைப்பற்றி அண்டை அயலாரிடம் பல கட்டுக் கதைகளை அவிழ்த்துவிட்டாள்; ரஷ்யர்வுடன் எங்களுக்கு இருக்கும் தொடர்பு கள் பற்றியும் சொல்லலானாள், எனவே அவளை எப்படியாவது வீட்டைவிட்டு அனுப்பிவிட நான் தீர்மானித்தேன்; அவள் கிராக்கோவுக்குச் செல்லப் பிரியப் பட்டாள். ஆகவே அவளுக்கு ஒரு மாத முன் சம்பளமும் போகச் செலவுக்கும் கொடுத்து அவளை நான் கிராக்கோவுக்கு அனுப்பிவைத்தேன். அடுப்பைப் பற்ற வைக்கவும் கடைகளிலிருந்து சாமன்கள் வாங்கவும் அண்டை வீட்டுச் சிறுமி எங்களுக்கு உதவி புரிந்தாள். என் அன்னை - அப்பொழுது அவருக்கு வயது 72- நிரம்ப நோயாகப் படுத்திருந்தாள். என்னவோ தகராறு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர் அறிந்துகொண்டார்; ஆனால் அது என்ன என்பதை அவரால் தெரிந்துகொள்ள முடியவில்லை, விளாதிமிர் இலிச் கைதாகிவிட்டார் என்று நான் அவருக்குச் சொன்னேன். என்றாலும் அவரை யுத்தத்திற்கு அழைத்துப் போய்விட்டார்கள் என்று அவள் சில சமயங்கள் சொல்லி வந்தாள். நான் வீட்டைவிட்டு வெளியே சென்றபொழுது எல்லாம் அவள் சஞ்சலப்பட்டாள்; விளாதிமிர் இலிச் மறைந்து போனதைப் போன்று நானும் மறைந்து போவேனோ என்று கவலைப்பட்டார்.

எங்களுடன் வசித்துவந்த டிக்கோமிர்னவ் ஓயாது புகைபிடித்துக் கொண்டு, கவலையோடு புத்தகங்களை மூட்டை கட்டினர். எங்கள் வீட்டைச் சோதனை செய்தபொழுது, போலீஸ் அதிகாரி கேலிசெய்த அதே விவசாயியிடம் ஒரு நற்சாட்சிப் பத்திரம் வாங்குவதற்காக ஒரு நாள் நான் அவர் வீட்டுக்குப் போனேன். அவருடைய வீடு கிராமத்தின் ஒரு கோடியில் இருந்தது; ஏழை விவசாயி ஒருவரின் வீட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அது அமைந்திருந்தது; யுத்தத்தைப்பற்றியும் யுத்தத்தில் கலந்துகொண்டு போரிடும் ஆட்களைப்பற்றி

யும் அதில் சிரத்தைகொண்டுள்ளவர்களைப்பற்றியும் நாங்கள் நீண்ட நேரம் பேசிக்கொண் டிருந்தோம். பிறகு நட்புமுறையில் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு நான் வீடு திரும்பினேன்; அவரும் என் வீடுவரை வந்து விடை பெற்றுக்கொண்டு திரும்பினர்.

விளாதிமிர் இலிச்சுக்கு வியன்ன சட்ட சபை அங்கத்தினர் விக்டர் ஆட்லரும் லோவ் பகுதிப் பிரதிநிதி டைமண்டும் ஜாமீன் கொடுத்தனர். இறுதியில் இவர்கள் இருவரின் முயற்சி பலன் அளித்தது. ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி இலிச் விடுதலை அடைந்தார். வழக்கம்போலக் காலையில் நான் நோவி டார்க்குக்குப் போனேன். அன்று மூட்டை கட்ட இலிச்சுக்கு உதவிபுரிவதற்காகச் சிறைக்குள் என்னையும் அனுமதித்தனர். நாங்கள் ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு போரோனினுக்குப் போய்ச் சேர்ந்தோம். கிராக்கோவுக்குச் செல்ல அனுமதி கிடைக்க ஒரு வாரமானதால், அதுவரை நாங்கள் போரோனினிலே கட்டாயமாகத் தங்க நேர்ந்தது. காமனீவும் இன்னிஸாவும் வசித்த அதே வீட்டுக்கு நாங்கள் சென்றோம். பாதி வீடு ராணுவ ஆஸ்பத்திரியாக மாற்றப்பட்டிருந்தது. எனினும் வீட்டுக்காரி எங்களுக்கு அங்கே கொஞ்சம் இடம் கொடுத்தாள். எங்களுடன் பேச அவளுக்கு நேரம் கிடைக்கவில்லை. சமீபத்தில் கிராஸ்நிக்கில் நடந்த யுத்தத்தில் அவளுடைய இரண்டு புதல்வர்கள் பங்கு எடுத்துக் கொண்டனர். அவர்களைப்பற்றிய தகவல் எதுவும் அவளுக்குக் கிடைக்கவில்லை.

மறுநாள் எங்கள் அறையின் ஜன்னல் வழியாக நாங்கள் பயங்கரமான ஒரு காட்சியைக் கண்டோம். இறந்துபோன சிப்பாய்களையும் காயமடைந்த சிப்பாய்களையும் ஏற்றிக்கொண்டு, கிராஸ்நிக்கிலிருந்து ஒரு ரயில் வந்தது. அந்த யுத்தத்தில் பங்கு எடுத்துக்கொண்டவர்களின் உறவினர்கள் டோலிகளை நோக்கி ஓடி இறந்தவர்களின் முகங்களையும் இறந்துகொண் டிருப்பவர்களின் முகங்களையும் ஆவலோடு பார்த்தனர். ஆனால், தங்கள் தங்கள் உறவினர்களை அடையாளம் கண்டுபிடிக்க அவர்கள் அஞ்சினர். பலத்த காயம் அடைந்தவர்கள் தலையிலும் கைகளிலும் கட்டுப்போட்டுக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மெதுவாக நடந்துவந்தனர். ஸ்டேஷனுக்குச் சென்றவர்கள் மூட்டைகளைச் சுமக்க அவர்களுக்கு உதவினர். அருகிலிருந்த ஹோட்டலிலிருந்து வாங்கிவந்த உணவையும் பீரையும் கொடுத்தனர். "யுத்தம் என்பது இதுதான் போலும்" என்று எண்ணாமல் ஒருவராலும் இருக்க முடியவில்லை.

நடுநிலைமை நாடான ஸ்விட்ஸர்லாந்துக்குச் செல்ல அனுமதி கிடைக்க நாங்கள் கிராக்கோவில் அதிக நாட்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் நேரவில்லை. நாங்கள் சில வேலைகளைச் செய்ய வேண்டியதிருந்தது. சமீபத்தில் என் அன்னை ஒரு "முதலாளியாக" மாறினர். பள்ளிக்கூட ஆசிரியையாக இருந்த அவருடைய சகோதரி நோவோசெர்காஸ்சிர்கில் இறந்து போனர். தமது சொத்துகள் முழுவதையும்—வெள்ளிக் கரண்டிகள், மூர்த்திகளின் பிம்பங்கள், உடைகள், முப்பது வருஷங்கள் ஆசிரியை வேலை பார்த்ததனல் சேமித்துவைத்த நாலாயிரம் ரூபிள்கள் ஆகியவற்றை—என் அன்னைக்கு அவர் விட்டுச் சென்றார். பணம் கிராக்கோ பாங்கியில் இருந்தது. பாங்கிலிருந்து பணத்தை வாங்குவதற்காக வியன்னவில் ஒரு பாங்கரின் உதவியை நாங்கள் நாடினேம். பணத்தை

வாங்கி, அதில் சரி பாதியைத் தமது சேவைக்காக அந்தப் பாங்கர் எடுத்துக் கொண்டார். யுத்த காலம் பூராவும் இந்தத் தொகையைக் கொண்டுதான் நாங்கள் சிக்கனமாக வாழ்ந்தோம். மிகச் செட்டாக வாழ்ந்த காரணத்தால், 1917-ம் வருடம் நாங்கள் ரஷ்யாவுக்குத் திரும்பினபொழுது, எங்களிடம் கொஞ்சம் பணமே மீதம் இருந்தது. 1917-ம் வருடம் ஜூலை மாதம் செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கில் எங்கள் வீட்டைப் போலீஸார் சோதனை யிட்டபோது, இந்தத் தொகையை எங்களிடமிருந்து பற்றிக்கொண்டனர்; வேவு வேலை பார்த்ததற்காக ஜெர்மன் சர்க்காரிடமிருந்து விளாதிமிர் இலிச் பணம் வாங்கி இருக்கிறார் என்று கூறி, இதைச் சாட்சியாக எடுத்துக்காட்டினர்.

கிராக்கோவிலிருந்து ஸ்விஸ் எல்லைப்புறத்துக்குச் செல்ல ஒரு வாரம் ஆயிற்று. ராணுவ ரயிலுக்கு வழிவிடுவதற்காக ரயில்வே ஸ்டேஷன்களில் நாங்கள் நீண்ட நேரம் காத்துக்கிடந்தோம். ராணுவ ரயில்களைச் சுற்றி வட்ட மிட்டுக்கொண்டு, கன்னிகா மாடப் பெண்களும் மற்ற பெண்களும் போர்வீரர் களின் தேசியவெறியைத் தூண்டிக் கிளர்ச்சி செய்துகொண் டிருப்பதை நாங்கள் கண்டோம். ரயில்வே ஸ்டேஷன்களில் சிறிய மூர்த்திகளின் பிம்பங்களையும் பிரார்த்தனைப் புத்தகங்களையும் இவைபோன்ற இதர பொருள்களையும் சிப்பாய் களுக்கு அவர்கள் வழங்கினர். அழகிய ராணுவ உடைகள் அணிந்த ராணுவ அதிகாரிகள் எல்லா ரயில்வே ஸ்டேஷன்களிலும் தென்பட்டனர். பிரெஞ்சுக் காரர்களையும் ஆங்கிலேயர்களையும் ரஷ்யர்களையும் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கும் பல சுலோகங்கள் வண்டிகளை அலங்கரித்தன: "ஒவ்வொரு ரஷ்யனுக்கும் ஒவ்வொரு சூடு!" ஒரு ஓரத்தில் விஷப்பூச்சிப் பொடிகள் கொண்ட அனேக வண்டிகள் நின்றன. போர்முனைக்குச் செல்லும் வண்டிகள் அவை.

அவசியமான தஸ்தாவேஸ்களை வாங்கிக்கொள்ளவும், பண விஷயத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ளவும் தொல்லையின்றி ஸ்விட்ஸர்லாந்துக்குள் பிரவேசிக்க, எங்களுக்கு ஜாமீன் கொடுத்து ஏற்பாடு செய்யும்படியாக அந்த நாட்டுக்குத் தந்தி கொடுக்கவும் நாங்கள் ஒரு நாள் வியன்னாவில் தங்கினோம். ஸ்விஸ் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் பழம் பெரும் அங்கத்தினரான குருலிக் எங்களுக்கு ஜாமீன் கொடுத்தார். இலிச்சை விடுவிக்க ஏற்பாடு செய்த விக்டர் ஆட்லரைச் சந்திக்க ரியாஸனோவ் விளாதிமிர் இலிச்சை அவரிடம் அழைத்துச் சென்றார். மந்திரி யுடன் தாம் நடத்திய சம்பாஷணையை ஆட்லர் எங்களுக்கு வருணித்துச் சொன்னார். "உலியானோவ் ஸார் சர்க்காரின் எதிரி என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என்று கேட்டாராம் மந்திரி.

"ஆம். தெரியும். மாட்சிமைதங்கிய தங்களைவிட அவர் மாற்ற முடியாத எதிரி" என்று ஆட்லர் பதில் சொன்னாராம்.

நாங்கள் வியன்னாவிலிருந்து அமைதியாகவும் துரிதமாகவும் ஸ்விட்ஸர்லாந்தின் எல்லைப்புறத்தை அணுகினோம்.

பெர்னி 1914—1915

செப்டம்பர் மாதம் ஐந்தாம் தேதி ஸ்விட்ஸர்லாந்துக்குள் பிரவேசித்து, நாங்கள் பெர்னினுக்குச் சென்றோம்.

ஜினீவாவில் வசிப்பதா அல்லது பெரினியில் வசிப்பதா என்பதை நாங்கள் அப்பொழுது முடிவு செய்யவில்லை. நாங்கள் முன்பு ஜினீவாவில் இருந்த வீடு சௌகரியமானது; வேலை செய்வதற்கு வசதியான இடம் ஜினீவா; நல்ல ரஷ்யப் புத்தகங்களுள்ள "சொஸட்டி தி லெக்சர்" அங்கே இருந்தது. ஆகையால் இலிச் ஜினீவாவுக்குச் சென்று அங்கே தங்க விரும்பினார். ஆனால் பெரினியிலிருந்த நண்பர்கள், ஜினீவாவின் நிலை பெரும் அளவுக்கு மாறி இருக்கிறது என்றும், பிரான்ஸிலிருந்தும் இன்னும் வேறு பல நகரங்களிலிருந்தும் அங்கே தேசப் பிரஷ்டர்கள் குடிபுகுந்து இருப்பதாகவும் வழக்கம்போன்ற தேசப் பிரஷ்டர்களின் சூழ்நிலை அங்கே நிலவி வருவதாகவும் எங்களிடம் கூறினர். இது விஷயமாக நிச்சயமான முடிவு எதுவும் செய்யாமல், தற்காலிகமாகப் பெரினியில் ஒரு அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு நாங்கள் அங்கே தங்கினோம்.

ரஷ்யாவுக்கு யாராவது போகிறார்களா என்பதை அறிய ஜினீவாவுடன் இலிச் கடிதப் போக்குவரத்துகள் வைத்துக்கொண்டார். ரஷ்யாவுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதற்காக அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் அவர் என்று கருதினார். ஜினீவாவில் இன்னும் ரஷ்ய மொழி அச்சாபீஸ் இருக்கிறதா என்றும் ரஷ்யப் பிரசுரங்களை அச்சிட முடியுமா என்றும் அவர் விசாரித்தார்.

காலிஷியாவிலிருந்து நாங்கள் வந்த மறு நாள் அன்று, பெரினியிலிருந்த போல்ஷ்விக்குகளின் மகாநாடு ஒன்று நடந்தது; ஸ்கோவலோவஸ்கி, ஸபாரோவ் தம்பதிகள், டூமா சபை அங்கத்தினர் ஸாமோய்லோவ், மோக்கோவும் இன்னும் பிறரும் மகாநாட்டில் கலந்துகொண்டனர். மகாநாடு ஒரு காட்டில் நடந்தது. அதில், தற்காலப் பிரசினைகள் சம்பந்தமான தமது கருத்துகளை இலிச் விளக்கினார். இந்த யுத்தத்தை ஏகாதிபத்திய கொள்ளைக்கார யுத்தமாக வருணித்தும், யுத்தக் கடனுக்குச் சாதகமாக ஓட் செய்த இரண்டாவது இன்டர்நேஷனல் தலைவர்களின் நடத்தையைப் பாட்டாளி மக்களின் லட்சியத்துக்குத் துரோகம் செய்யும் செயலாக வருணித்தும் அந்த மகாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளர் வர்க்கம் ரஷ்ய உழைப்பாளிகள் ஆகியோர் சம்பந்தப்பட்டவரை, போலந்தையும் உக்ரேனையும் ரஷ்யாவில் வாழும் பல தேசிய இனங்களையும் நசுக்கி வந்த ஸார் ஆட்சியும் அதன் ராணுவமும் தோல்வி அடைவதுதான் குறைவான தீமை என்றது அந்தத் தீர்மானம். சமதர்மப் புரட்சிக்காகவும் உள்நாட்டுக் கலகத்துக்காகவும் எல்லா நாடுகளிலும் பிரசாரம் செய்ய வேண்டும் என்றும் விதிவிலக்கு இன்றிக் குறுகிய தேசியவெறியையும் தேசபக்தியையும் எதிர்த்து உறுதியுடன் போராட வேண்டும் என்றும் அந்தத் தீர்மானம் கோஷித்தது. அதே சமயத்தில் ரஷ்யாவில் மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டத்தையும் தீர்மானம் வகுத்தது. முடியாட்சிக்கு எதிரான போராட்டம், புரட்சிக்காகப் பிரசாரம், குடியரசுக்காகப் போராட்டம், "பெரிய ரஷ்யர்களால்" அடக்கி ஆளப்படும் தேசிய இனங்களின் விடுதலைக்காகப் போராட்டம், பிரபுக்களின் பண்ணைகளைப் பறிமுதல் செய்வதற்காகவும் எட்டு மணி நேர வேலைக்காகவும் போராட்டம் ஆகிய செயல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தத் தீர்மானம் கூறியது.

உண்மையில் பெர்னி தீர்மானம் முதலாளித்துவ உலகமுழுவதையும் அறை கூவி அழைத்தது எனலாம். ஒத்திப்போடும் கருத்துடன் பெர்னி தீர்மானம் தயாரிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் வசித்துவந்த போல்ஷ்விக்குகளுக்கு முதலில் அந்தத் தீர்மானம் அனுப்பப் பெற்றது. மத்திய கமிட்டியின் ரஷ்யப் பகுதியுடனும் டூமாப் பகுதியுடன் விவாதிப்பதற்காக ஸாமோய்லோவ் அந்தத் தீர்மானத்தை எடுத்துச் சென்றூர். அவர்கள் எந்த வழியைப் பின்பற்ற விரும்புகிறுர்கள் என்பது அப்பொழுது தெளிவாகத் தெரியவில்லை. ரஷ்யாவுடன் இருந்த தொடர்பு தடைப்பட்டுப் போயிற்று. மத்திய கமிட்டியின் ரஷ்யப் பகுதியும் டூமாவிலுள்ள போல்ஷ்விக் பகுதியும் ஆரம்பத்திலிருந்தே சரியான வழியைப் பின்பற்றியுள்ளன என்பது பிறகுதான் தெரியவந்தது. எங்கள் நாட்டைச் சேர்ந்த அபிவிருத்தி அடைந்துள்ள தொழிலாளர்களுக்கும் எங்கள் கட்சி ஸ்தாபனத்துக்கும், யுத்தம் சம்பந்தமாகச் சர்வதேசக் காங்கிரஸ்கள் நிறைவேற்றின இந்தத் தீர்மானங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இருக்கவில்லை. செயலுக்கு வழிகாட்டியாக அவை எங்களுக்கு இருந்தன.

படை திரட்டும் உத்தரவு யுத்தத்தின் ஆரம்பத்தில் பிறந்ததும் "யுத்தம் ஒழிக! யுத்தத்திற்கு எதிராக யுத்தம்!" என்னும் கோஷங்களைக் கொண்ட பிரசுரத்தை செயின்ட் பீட்டர்ஸ்பர்க் கமிட்டி வெளியிட்டது. யுத்தத்துக்கு ஆட்சேர்க்கும் தினத்தில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பல தொழிற்சாலைகள் வேலைநிறுத்தம் செய்தன; அன்று ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குக்கூட முயற்சிகள் நடந்தன. ஆனல் யுத்தம் பொது ஜனங்களின் தேசபக்தியைத் தட்டி எழுப்பியதாலும் ராணுவம் பலப்படுத்தப்பட் டிருந்தபடியாலும் ஆர்ப்பாட்டம் எதுவும் நடத்த முடியவில்லை. யுத்தத்துக்கு எதிராகப் போராடும் திட்டத்தையும் ஸார் ஆட்சியை எதிர்த்துத் தொடர்ந்து போராடும் திட்டத்தையும் டூமா பகுதி உறுதியுடன் மேற்கொண்டது. இந்த உறுதி மென்ஷ்விக்குகளைக்கூட ஈர்த்தது. சமதர்ம ஜனநாயகப் பகுதி ஏகமனதாக அங்கீகரித்த தீர்மானம் டூமாவில் படிக்கப்பட்டது. தீர்மானம் ஜாக்கிரதையான பாஷையில் எழுதப்பட்டிருந்தது. அனேக விஷயங்களை அதில் சொல்லவில்லை. எனினும் அது ஒரு கண்டனத் தீர்மானம் போல விளங்கியதால் ஏனைய டூமா அங்கத்தினர்களின் ஆத்திரத்தை அது தூண்டிவிட்டது. யுத்தக் கடனுக்கு ஓட் செய்யாமல், கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில் சமதர்ம ஜனநாயக அங்கத்தினர்கள் அத்தனை பேரும் டூமாவை விட்டு வெளியேறினதும் அவர்களின் ஆத்திரம் மேலும் அதிகரித்தது. உடனே போல்ஷ்விக்கு ஸ்தாபனம் தலைமறைவாக வேலைசெய்ய ஆரம்பித்தது. புரட்சிப் போராட்டத்தை வளர்க்கவும் தீவிரமாக்கவும் எப்படி யுத்தத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை விளக்கித் துண்டுப் பிரசுரங்களை அது வெளியிட ஆரம்பித்தது. மாகாணங்களிலும் யுத்த எதிர்ப்புப் பிரசாரம் ஆரம்பமாயிற்று. இந்தப் பிரசாரத்தைப் புரட்சி மனப்பான்மை படைத்த தொழிலாளர்கள் ஆதரிப்பதாக மாகாணங்களிலிருந்து செய்திகள் வந்தன. வெளிநாட்டில் வசித்த எங்களுக்கு இந்தச் செய்திகள் பின்னர்தான் எட்டின.

வெளிநாடுகளில் வசித்துவந்தபடியாலும் முன் மாதங்களில் ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியின் உத்வேகத்தை நாங்கள் அனுபவிக்க முடியாது இருந்தபடியா

லும் சலிப்பைத் தருகிற இந்த அகதி வாழ்க்கையிலிருந்து எப்படியாவது தப்ப வேண்டும் என்று விரும்பியபடியாலும், ரோமா சபை அங்கத்தினர்களுக்கும் ரஷ்யப் போல்ஷ் ஸ்தாபனங்களுக்கும் இருந்த உறுதி எங்களுக்கு இல்லாது போயிற்று.

பாரீஸிலிருந்த போல்ஷ்விக் பகுதி உறுதியுடன் இருக்கவில்லை. பெரும்பான்மையோர் யுத்தத்தையும் தொண்டர்களாகச் சேருவதையும் எதிர்த்தார்கள் என்றாலும், சில தோழர்கள், லொபோஷ்கோவ், காஸாக்கோவ், மிஷா எடிஷெரோவ், மோய்ஸியெவ் முதலியவர்கள் பிரஞ்சு ராணுவத்தில் தொண்டர்களாச் சேர்ந்தனர். "ரஷ்யக் குடியரசுவாதிகளின்" என்ற பெயரில் போல்ஷ்விக், மென்ஷ்விக், சமதர்மப் புரட்சித் தொண்டர்கள் மொத்தம் எண்பது பேர்கள் அங்கீகரித்த அறிக்கை ஒன்று பிரஞ்சுப் பத்திரிகைகளில் வெளிவந்தது. தொண்டர்கள் பாரீஸிலிருந்து பிரயாணமாகு முன், பிளக்கானவ் அவர்களைப் பாராட்டிப் பேசிக் கௌரவித்து வழி அனுப்பினார்.

பாரீஸ் பகுதிகளில் பெரும்பான்மையோர் தொண்டர்களாகச் சேருவதைக் கண்டித்தனர். ஆனால், வேறு பகுதிகள் எதுவும் இதுபற்றித் தெளிவான அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. இத்தகைய நெருக்கடியான கட்டத்தில் ஒவ்வொரு போல்ஷ்விக்கும் நிகழும் நிகழ்ச்சிகளின் தன்மையைப்பற்றி யோஜிக்க வேண்டும் என்பதை இலிச் உணர்ந்தார். தோழமை உணர்ச்சியுடன் அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொள்வது அவசியம் என்பதை உணர்ந்தார். ஆரம்பத்திலேயே உடனடியாகப் பல்வேறு அபிப்பிராயங்களை நிர்ணயிப்பது விரும்பத்தக்கதல்ல என்பதை உணர்ந்தார். பரிபூரணமான விஷயத் தெளிவு ஏற்பட்டுத்தான் தீர வேண்டும். ஜினீவாப் பகுதியின் கொள்கையை விளக்கிக் கார்ப்பின்ஸ்கி எழுதிய கடிதத்துக்கு, இதனால்தான் இலிச் பதில் எழுதும்படியாக நேர்ந்தது. "இந்த விமர்சனத்தையும் அதற்கு என் எதிர்ப்பையும் விவாதத்துக்கு உரிய விஷயமாக்குவது நல்லதல்லவா?" என்று இலிச் எழுதி இருந்தார்.

கடிதங்கள் மூலம் தெளிவு ஏற்படுவதைவிட, தோழமை உணர்ச்சியுடன் நடத்தும் விவாதத்தின் மூலம் தெளிவு எளிதில் ஏற்பட்டுவிடும் என்பதை இலிச் அறிவார். ஆனால், போல்ஷ்விக்குகள் என்னும் சிறிய வட்டாரத்துக்குள் தோழமை உணர்ச்சியுடன் விவாதங்களை நடத்துவது அன்றைய நிலைக்குப் பொருந்தி வராது.

பாரீஸிலிருந்து திரும்பிய பிளக்கானவ் ஜினீவாவில் ஒரு சொற்பொழிவு ஆற்றியதாகவும், லாஸானியில் இன்னொரு சொற்பொழிவு ஆற்ற ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகவும் கேள்விப்பட்டோம்.

பிளக்கானவின் போக்கைக் கண்டு விளாதிமிர் இலிச் பெரிதும் கவலைப்பட்டார். பிளக்கானவ் "ஒபோரோனெட்ஸாக* மாறிவிட்டார் என்பதை இலிச்சினால் நம்ப முடியவில்லை; நம்பாமலும் இருக்க முடியவில்லை; இதை என்னால்

---

* ஒபோரோனெட்ஸ்: யுத்தத்தை ஆதரிப்பவர் என்று பொருள்; "தாய் நாட்டைப் பாதுகாப்பது" என்ற போர்வையில் ஏகாதிபத்திய யுத்தத்தை ஆதரித்தவர்கள் இந்தப் பெயரால் அழைக்கப்பட்டனர்.

நம்பவே முடியாது'' என்று ஒரு முறை சொல்வார்; பிறகு "இது பிளாக்கானுவின் கடந்த கால ராணுவ வாழ்க்கையின் விளைவாக இருக்குமோ'' என்று வருத்தத் துடன் சொல்வார். அக்டோபர் மாதம் 11-ம் தேதி, பிளக்கானுவ் பேசப் போகிறார் என்று பத்தாம் தேதி எங்களுக்கு லாஸானியிலிருந்து ஒரு தந்தி கிடைத் தது. எனவே அங்கே செல்வதற்கான ஏற்பாடுகளை இலிச் அவசர அவசரமாகச் செய்தார். மற்ற காரியங்களிலிருந்து அவரை விடுவிக்கவும் பெர்னிலிருந்து யார் யார் போக விரும்புகிறார்கள் என்பதை முடிவு செய்யவும் நான் முயன்றேன்.......

சொற்பொழிவைக் கேட்க நான் போக முடியவில்லை. ஆனால் பேச்சின் முழு விவரமும் பின்னர் எனக்குத் தெரியவந்தது. ஆனால் பிரசங்கத்தைப்பற்றி எப். இலினுடைய ஞாபகங்களை "லெனின் இன்ஸ்டிட்யூட் குறிப்புகளில்'' படித்த பிறகு, அந்தக் காலத்தை இலிச் எவ்வாறு மதித்தார் என்பதை அறிந்த பிறகு, என்ன நடந்தது என்பதை என்னால் சித்தரிக்க முடிந்தது. என்ன நடந்த தென் பதை இன்னிஸாவும் பிறகு எனக்குச் சொன்னாள். ஸ்விட்ஜர்லாந்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் எங்களைச் சேர்ந்தவர்கள் பேச்சைக் கேட்க வந்திருந்தனர்!... உள்ளே செல்ல முடியாது என்று இலிச் பயந்தார். சொல்ல வேண்டியவற்றைத் தான் சொல்ல முடியாது என்று அஞ்சினார். அத்தனை போல்ஷ்விக்குகளை உள்ளே அனுமதிக்க மென்ஷ்விக்குகள் மறுக்கலாம்....ஒரு நாள் மாலை மாஸ்ஸோவிஷ் போஜன அறையில் சாப்பாடு தடபுடலாக நடந்துகொண் டிருந்தது. இலிச்சால் ஒரு வாய் உணவுகூட உண்ண முடியவில்லை; மனச் சஞ்சலமுற்று ஏதோ ஒரு சிந் தனையில் இலிச் மூழ்கிக் கிடந்தார்...இவைக ளெல்லாம் இப்போது என் நினை வுக்கு வருகின்றன.

ஜெர்மனியர்களைத் தாக்கி, பிளக்கானுவ் பேசிய சொற்பொழிவின் முதல் பகுதியை இலிச் ஆதரித்தார்; கரகோஷம் செய்தார்; பேச்சின் இரண்டாவது பகுதியில் தந்தை நாட்டைக் காக்க வேணும் என்னும் கொள்கையைப் பிளக்கா னுவ் விவரித்துப் பேசினார். பிளக்கானுவின் போக்கு எதைச் சார்ந்து நிற்கிறது என்பதை நிரூபிக்க இதைவிட வேறு சான்று தேவையில்லை. தான் பேச விரும்பு வதாக இலிச் சொன்னார்; மற்றவர்கள் யாரும் பேச முன்வரவில்லை. கையில் ஒரு கிளாஸ் பீரை எடுத்துக்கொண்டு, அவர் பிரசங்க மேடையை அணுகினார். அவர் சாந்தமாகப் பேசினார். அவர் கிளர்ச்சி அடைந்திருக்கிறார் என்பதை அவரது முகக் குறிப்புக்கள் அறிவித்தன. யுத்தம் என்பது தற்செயலாக நிகழ்வது அல்ல என்றும், முதலாளித்துவத்தின் வளர்ச்சிதான் யுத்தத்துக்கு அடிகோலி இருக்கி றது என்றும் அவர் கூறினார். வரவிருக்கும் யுத்தத்தைப்பற்றிச் சோஷலிசத்தின் அபிப்பிராயம் என்ன என்பதை ஸ்டட்கார்ட், கோபன்ஹேகன், பாஸ்லி ஆகிய இடங்களில் நடந்த சர்வதேசச் சோஷலிஸ்டுக் காங்கிரஸ்கள் முடிவு செய்து இருக் கின்றன. தத்தம் நாடுகளில் தலைதூக்கும் குறுகிய தேசியவெறியை எதிர்த்துப் போராடுவதன் மூலம் மாத்திரம்தான் சமதர்ம ஜனநாயகவாதிகள் தங்கள் கடமைகளைப் பூர்த்தி செய்ய முடியும். ஆரம்பித்துள்ள யுத்தத்தைப் பாட்டாளி மக்களுக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் மத்தியில் நடக்கும் போராக வேண்டும் என்று சொல்லி இலிச் தம் பேச்சை முடித்தார்.

பத்து நிமிடம் மட்டுமே அனுமதிக்கப்பட்டதால், அடிப்படையான கருத்

துக்களை மட்டுமே இலிச்சால் வெளியிட முடிந்தது. வழக்கமான நகைச்சுவையுடன் பிளக்கானுவ் பதில் கூறினர். பெரும்பான்மையோராக வந்திருந்த மென்ஷ்விக்குகள் பலத்த கரகோஷம் செய்தனர். பிளக்கானுவ் வெற்றிபெற்று விட்டார் என்ற எண்ணம் மேலோங்கி நின்றது.

மூன்று நாட்களுக்குப் பிறகு அதாவது அக்டோபர் 24-ம் தேதி, பிளக்கானுவ் பேசிய அதே இடத்தில்-மெஸ்சன் டி பீப்பிள் என்னும் இடத்தில்-லெனின் பேசினர். மண்டபம் நிறையக் கூட்டம் இருந்தது. சொற்பொழிவு வெற்றிகரமாக முடிந்தது; இலிச் உற்சாகத்துடன் எதிர்ப்புணர்ச்சியுடன் காணப்பட்டார். இந்த யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தமாக அவர் அடிக்கடி நன்ருக சித்தரித்துக் காட்டினர். ரஷ்யாவில் யுத்தத்துக்கு எதிராக மத்திய கமிட்டி ஒரே துண்டுப் பிரசுரம் வெளியிட்டு இருக்கிறது என்றும் அதைப்போன்ற துண்டுப்பிரசுரத்தைக் காக்காஷியன் கமிட்டியும் ஏனைய பகுதிகளும் வெளியிட்டு இருக்கின்றன என்றும் அவர் கூறினர். அப்பொழுது ஐரோப்பாவிலிருந்து வெளியான சமதர்மப் பத்திரிகை கோலோஸ்தான் (குரல்) என்பதுதான் சிறந்தது என்று அவர் கூறினர். இதில் மார்டோவ் கட்டுரைகள் எழுதிவந்தார். "மார்டோவுடன் எனக்கு அடிக்கடி பலத்த அபிப்பிராயபேதம் ஏற்படுவது உண்டு. இருந்தாலும் இவர் இப்பொழுது சமதர்ம ஜனநாயகவாதி செய்யாத காரியத்தைச் செய்து வருகிறுர். இதை நான் அவசியம் சொல்லித்தான் ஆக வேண்டும். தமது சொந்த சர்க்காரை இவர் கண்டிக்கிறுர். தமது நாட்டு முதலாளிகளை அம்பலப்படுத்துகிறுர். தமது மந்திரிகளைத் தாக்குகிறுர்" என்று இலிச் கூறினர்.

நம் பக்கத்துக்கு மார்டோவ் வந்துவிட்டால் எவ்வளவு நன்ருக இருக்கும் என்று தனியே பேசிக்கொண் டிருக்கும்பொழுது அடிக்கடி கூறினர். ஆனல் இந்த உறுதியோடு இதே நிலையில் மார்டோவ் நீண்ட காலம் இருப்பார் என்று இலிச் நம்பவில்லை. மற்றவர்களின் வலைக்குள் மார்டோவ் எவ்வளவு எளிதில் விழுந்துவிடுகிறுர் என்பதை இலிச் அறிந்திருந்தார். "தனியாக இருக்கும் காலத்தில் மட்டும்தான் அவரால் இப்படி எழுத முடிகிறது" என்று இலிச் கூறினர். இலிச்சின் சொற்பொழிவுக்கு அபாரமான வெற்றி கிட்டியது என்று சொல்ல வேண்டும். பாட்டாளி மக்களும் யுத்தமும் என்னும் இந்தப் பிரசங்கத்தை அவர் மீண்டும் ஜினீவாவில் நிகழ்த்தினர்.

இந்தப் பிரசங்கத்தை நிகழ்த்திவிட்டு அவர் திரும்பிவந்த சமயம், ரஷ்யாவில் நடக்கும் வேலையைப்பற்றி ஸ்டாக்ஹோமிலிருந்து ஷில்யாப்நிக்கோவ் எழுதிய கடிதமும் டூமாவின் சமதர்ம ஜனநாயகப் பகுதிக்கு வான்டர்வெல்டி அனுப்பிய தந்தியும் மென்ஷ்விக்குப் பிரதிநிதிகளும் போல்ஷ்விக்குப் பிரதிநிதிகளும் அனுப்பிய பதிலும் இலிச்சிக்குக் கிடைத்தன. யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டதும் இன்டர்நேஷனல் சோஷலிஸ்டுப் பூரோவில் அங்கம் வகித்த பெல்ஜியப் பிரதிநிதி எமிலி வான்டர்வெல்டி பெல்ஜிய சர்க்காரில் மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டார். யுத்தத்துக்குச் சிறிது காலத்துக்கு முன்பு அவர் ரஷ்யா சென்றிருந்தார். ஜார் சர்வாதிகாரத்தை எதிர்த்து ரஷ்யத் தொழிலாளர்கள் போராடுவதை அவர் நேரில் கண்டார்; எனினும் அதன் ஆழத்தை அவர் தெரிந்துகொள்ளவில்லை. ஜெர்மனிக்கு எதிராக உறுதியாகப் போர்புரிய ரஷ்ய சர்க்காருக்கு உதவி புரியும்

படி டூமாவில் இருந்த சமதர்ம-ஜனநாயகவாதி பிரதிநிதிகளின் இரண்டு பகுதிகளுக்கும் தந்தி மூலம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

முதலில் மென்ஷ்விக் பிரதிநிதிகள் யுத்தக் கடனுக்குச் சாதகமாக ஓட் செய்ய மறுத்தனர். ஆனால் சமதர்ம ஜனநாயகக் கட்சிகளில் பெரும்பான்மையானவற்றின் நிலை அவர்களுக்குத் தெரிய வந்ததும் அவர்கள் உறுதி குலைய ஆரம்பித்தது. எனவே அவர்கள் வான்டர்வெல்டிக்கு அனுப்பிய பதிலில் முற்றிலும் மாறுபட்ட கருத்தை வெளியிட்டனர். யுத்தத்தைத் தாங்கள் எதிர்க்கப் போவது இல்லை என்று அவர்கள் அறிவித்தனர். போல்ஷ்விக்குகளோ யுத்தத்தை ஆதரிக்கும் யோஜனையையும் ஸார் சர்க்காருக்கு எதிரான போரைக் கைவிடும் யோஜனையையும் அவர்கள் பலமாக எதிர்த்தனர்; அதைப் போல்ஷ்விக் பிரதிநிதிகள் அறிவித்தனர். இந்தப் பதிலில் பல விஷயங்கள் சொல்லவில்லை. எனினும் அடிப்படையான கருத்து சரியாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ரஷ்யாவுடன் தொடர்பு வைத்துக்கொள்வதின் முக்கியத்துவமும் தெளிவாயிற்று. எனவே ஷில்யாப்னிக்கோவ் ஸ்டாக்ஹோமில் தங்க வேண்டும் என்றும் பொதுவாக ரஷ்யாவுடனும் குறிப்பாக டூமா பகுதியுடனும் இருக்கும் தொடர்பை அவர் பலப்படுத்த வேண்டும் என்றும் இலிச் வற்புறுத்தினர். ஸ்டாக்ஹோம் வழியாகத்தான் இதைச் செய்ய முடியும்.

கிராக்கோவிலிருந்து இலிச் பெர்னினுக்குப் வந்ததும் ஜினீவாவில் ஒரு பிரசுரத்தை அச்சிட முடியுமா என்று கேட்டு, கார்பின்ஸிக்குக்கு ஒரு கடிதம் எழுதினர்: நாங்கள் பெர்னினுக்கு வந்தபிறகு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தைத் திருத்தி ஒரு அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று ஒரு மாதத்திற்குப் பிறகு முடிவு செய்யப்பட்டது. இதைப் பிரசுரிப்பதைப்பற்றி இலிச், கார்பின்ஸிக்குக்கு இலிச் தொடர்ந்து கடிதங்கள் எழுதினர். சந்தர்ப்பம் கிடைத்தபொழுது நம்பிக்கையான தூதர்கள் மூலம் கடிதங்கள் அனுப்பினர். இந்த விஷயத்தை அவர் ரகசியமாக வைத்திருந்தார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரம் சம்பந்தமாக ஸ்விஸ் சர்க்காரின் கருத்து என்ன என்பது அன்று தெளிவாகத் தெரியவில்லை.

மறு நாள் ஷில்யாப்னிக்கோவின் கடிதம் கிடைத்த பிறகு, கார்ப்பின்ஸிக்குக்கு இலிச் கீழ்வரும் கடிதத்தை எழுதினர்:

> அன்புமிக்க, கா! நான் ஜினீவாவில் இருந்தபொழுது மகிழ்ச்சி அளிக்கும் செய்தி ரஷ்யாவிலிருந்து கிடைத்தது. வான்டர்வெல்டிக்குச் சமதர்ம ஜனநாயகவாதிகள் அனுப்பிய பதிலும் கிடைத்தது. தனி அறிக்கை வெளியிடுவதற்குப் பதிலாக சமதர்ம ஜனநாயகவாதி எனும் பெயரில் மத்திய கமிட்டியின் சார்பில் ஒரு பத்திரிகைக்கு பிரசுரிக்க முடிவு செய்தோம்....திங்கட்கிழமை அறிக்கைக்குச் சில சிறு திருத்தங்கள் அனுப்புவதுடன், வேறு கையெழுத்துடனும் அனுப்புகிறோம். (ரஷ்யாவுடன் கடிதப் போக்குவரத்து ஏற்பட்ட பிறகு, அதிகாரபூர்வமாகவே நாம் வெளிப்படலாம்.)

அக்டோபர் மாத இறுதியில் இலிச் மீண்டும் பிரசங்கங்கள் செய்ய வெளியூர்களுக்குச் சென்றார். முதலில் மான்ட்ரீக்கும் பிறகு ஸூரிச்சுக்கும் சென்றார்.

ஸூரிச் கூட்டத்தில் டிராட்ஸ்கியும் பேசினுர். காட்ஸ்கியைத் "துரோகி" என்று இலிச் வருணித்தபடியால், டிராட்ஸ்கி ஆத்திரம் அடைந்தார். ஆனல், எல்லோருடைய நிலைகளையும் தெளிவுபடுத்திவிட வேணும் என்பதற்காக எல்லாப் பிரசினைகளையும் இலிச் வேண்டும் என்றே மிகைப்படுத்திக் கூறிவந்தார். யுத்தத்தை ஆதரிப்பவர்களுக்கு எதிரான போராட்டம் உக்கிரமாக நடந்து வந்தது.

இந்தப் போராட்டம் கட்சிக்குள் நடக்கும் உள் போராட்டம் மட்டும் அல்ல; ரஷ்ய பிரசினைகளை மட்டும் தொடும் போராட்டம் மாத்திர மல்ல; சர்வ தேசத்தன்மை வாய்ந்த போராட்டம் இது.

> "இரண்டாவது இன்டர்நேஷனல் மடிந்துபோயிற்று; சந்தர்ப்ப வாதத்துக்குப் பலியாகி அது மறைந்துவிட்டது" என்ருர் இலிச்.

சந்தர்ப்பவாதத்துக்குச் சிறிதும் இடம்கொடாத மூன்ருவது இன்டர் நேஷனலை ஸ்தாபிப்பது அவசியம் ஆகும்.

ஆனல் இதற்கு எந்தெந்த சக்திகளை நம்பி நாம் காரியத்தில் இறங்கலாம்?

ரஷ்யர்களைத் தவிர்த்து, யுத்தக் கடனை ஆதரித்து ஓட் செய்ய செர்பிய சமதர்ம ஜனநாயகச் சட்டசபை அங்கத்தினர்கள் மாத்திரம்தான் மறுத்தனர். செர்பியப் பார்லிமெண்டில் சமதர்ம ஜனநாயக அங்கத்தினர்கள் இருவர்தான் இருந்தனர். ஜெர்மனியில் யுத்தம் ஆரம்பமானதும் ரீஷ்ஸ்டாக் சமதர்ம ஜனநாயக அங்கத்தினர்கள் அத்தனை பேரும் யுத்தக் கடனை ஆதரித்து ஓட் செய்தனர். ஆனல் செப்டம்பர் மாதம் பத்தாம் தேதி ஜெர்மன் சமதர்ம ஜனநாயகவாதிகளில் பெரும்பான்மையோர் மேற்கொண்ட வழியைக் கண்டித்து, கார்ல் லீப்னெட், பிரான்ஸ் மெஹரிங், ரோஸா லக்ஸம்பர்க், கிளாரா ஸெட்கின் ஆகியோர் ஒரு அறிக்கை வெளியிட்டனர். அக்டோபர் மாத இறுதியில்தான் இது ஸ்விஸ் பத்திரிகைகளில் வெளிவந்தது. இந்தக் கண்டன அறிக்கையை ஜெர்மன் பத்திரிகைகளில் அவர்களால் வெளியிட முடியவில்லை; ஆகவே பெரும் முயற்சி செய்து, கடைசியாக ஸ்விஸ் பத்திரிகைகளில் வெளியிட்டனர். ஜெர்மனியிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளில் பிரிமென் பர்கர் ஸீட்டங் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து இடதுசாரிக் கொள்கைக்கு அப்பாற் சென்று விட்டது. "பாட்டாளி மக்களின் இன்டர்நேஷனல்" அழிந்துபோயிற்று என்று ஆகஸ்டு மாதம் இருபத்து மூன்ரும் தேதி அது எழுதிற்று. குஸ்தே, வெய்லாண்டு ஆகியவர்களைத் தலைவர்களாகக் கொண்ட பிரஞ்சு சமதர்ம ஜனநாயகக் கட்சி, குறுகிய தேசியவெறி என்னும் சேற்றில் விழுந்துவிட்டது. ஆனல் கட்சியின் சாதாரண அங்கத்தினர்களிடையே யுத்த எதிர்ப்பு உணர்ச்சி வியாபகமாகப் பரவி இருந்தது. பெல்ஜியக் கட்சியின் நடத்தைக்கு வான்டர்வெல்டின் நடத்தை எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இங்கிலாந்தில் ஹிண்டமான், பிரிட்டிஷ் சமதர்மக் கட்சி ஆகியவற்றின் குறுகிய தேசியவெறியை, சந்தர்ப்பவாதச் சுயேச்சை தொழிற் கட்சியைச் சேர்ந்த மாக்டோனல்டும் கியர்ஹார்டியும் எதிர்த்தனர். நடுநிலைமை நாடுகளில் யுத்த எதிர்ப்பு உணர்ச்சி இருந்து வந்தது; எனினும், அது சமாதான நாட்டத்தினல் ஏற்பட்ட யுத்த உணர்ச்சியாகும். இத்தாலிய சமதர்ம கட்சி மிகவும் புரட்சிகரமான முறையில் இயங்கிவந்தது. கட்சியின் பத்திரிகை அவந்தி இதைத் தலைமைதாங்கி நடத்திற்று. அது குறுகிய தேசியவெறியை

எதிர்த்தது; யுத்தத்துக்கு உதவிகோரும் வேண்டுகோள்களுக்குப் பின்னே மறைந்திருக்கிற கீழ்த்தரமான கொள்ளைக்கார நோக்கங்களை அது அம்பலப் படுத்தியது. அபிவிருத்தியடைந்த தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் அதை ஆதரித்தனர். செப்டம்பர் மாதம் 27-ந் தேதி லுக்கானே என்ற இடத்தில் இத்தாலிய ஸ்விஸ் சமதர்மவாதிகளின் மகாநாடு ஒன்று நடந்தது. யுத்தம் பற்றி நாங்கள் தயாரித்திருந்த அறிக்கையை இந்த மகாநாட்டுக்கு அனுப்பிவைத் தோம். இப்போது நடக்கும் யுத்தமானது ஏகாதிபத்திய யுத்தமாகும் என்றும், ஆகவே சர்வதேசப் பாட்டாளி மக்கள் சமாதானத்துக்காகப் பாடுபட வேண் டும் என்று அது வேண்டிக்கொண்டது.

பொதுவாக, குறுகிய தேசியவெறிக்கு எதிராக எழுந்த குரல்கள்—சர்வ தேசக் குரல்கள் - பலவீனமாகவும் தொடர்பின்றியும் உறுதியற்றும் ஒலித்தன. ஆனால் அதன் பலமும் தொனியும் மேன்மேலும் அதிகரிக்கும் என்பதில் இலிச் சுக்குச் சந்தேகமே இல்லை. சரத் காலத்தில், எதிர்ப்பு உணர்ச்சிமிக்கவராய் அவர் உற்சாகத்துடன் காணப்பட்டார்.

அந்த சரத் காலத்தின் ஞாபகம் பெரீனி காடுகளின் சரத் காலக் காட்சி யுடன் என் மனதில் பிணைந்து பின்னிக் கிடக்கிறது. அந்த வருஷம் சரத் காலம் மிகவும் ரமணீயகரமாக விளங்கியது. பெரீனியில் நாங்கள் டிஸ்டெல்வெக் தெரு வில் வசித்தோம். சிறிய, சுத்தமான அமைதி நிலவும் அந்தத் தெரு, பல மைல்கள் நீண்டு கிடந்த கானகத்தை அடுத்து இருந்தது. வீதியின் குறுக்கே ஓர் இடத்தில் இன்னிஸா வசித்தாள். ஐந்து நிமிடங்கள் நடந்தால் அவள் வசிக்கும் வீட்டை அடைந்துவிடலாம். பத்து நிமிடங்கள் நடந்தால் ஸினேவியெவ் வீட்டை அடைந்துவிடலாம்; ஸ்கோலோஸ்கி தம்பதிகளும் அங்கேதான் வசித்தனர். மஞ்சள் இலைகள் உதிர்ந்து எங்கும் வியாபித்துக்கிடக்கிற கானகப் பாதைகளில் நாங்கள் மூவரும் சேர்ந்தே - இலிச், இன்னிஸா, நான் - நடக்கச் செல்வோம். சர்வ தேசப் போராட்ட சம்பந்தமான திட்டங்களை அபிவிருத்தி செய்வதுபற்றி இலிச் யோசிப்பார்; அவற்றை எங்களுக்குக் கூறுவார்; இன்னிஸா அவற்றை எல்லாம் சிரத்தையுடன் கேட்பாள். விரிந்து பரவிவரும் இந்தப் போராட்டத் தில் நேரடியாகவே பங்குகொள்ள அவள் முனைந்துவிட்டாள். அவள் கடிதங்கள் எழுதினாள்; எங்கள் அறிக்கைகளை ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் மொழிபெயர்த் துத் தந்தாள்; தகவல்கள் சேகரித்தாள்; ஜனங்களுடன் பேசினாள். சூரிய ஒளி பாயும் மலைக்காட்டு மரநிழலில் சில சமயங்கள் நாங்கள் மணிக் கணக்கில் உட் கார்ந்து இருப்போம். அப்பொழுது கட்டுரைக் குறிப்புகளையும் பிரசங்கக் குறிப்பு களையும் இலிச் எழுதிக்கொள்வார்; தம் மனத்தில் உருவெடுத்த கருத்துக்களை மெருகுபடுத்திக்கொள்வார். தௌசெயின் பாடப் புத்தகத்தின் உதவிகொண்டு, நான் இத்தாலிய மொழியைக் கற்றேன். சரத் கால சூரிய ஒளியில் காய்ந்து கொண்டு பாவாடை ஒன்று தைத்துக்கொண் டிருந்தாள் இன்னிஸா! சிறை வாழ்க்கையின் பலாபலன்களிலிருந்து அவள் இன்னும் பரிபூரணமாகத் தேற வில்லை. மாலையில் நாங்கள் எல்லோரும் கிரக்கெரியின் சிறிய அறையில் கூடு வோம். கிரக்கெரியும் லிலினாவும் அவர்களின் சிறு புதல்வன் ஸ்டியோபாவும் ஒரு அறையில் வசித்தனர். சிறுவன் தூங்குமுன் அவனுடன் சிறிது நேரம் விளையாடு

வோம். அதன் பிறகு திட்டவட்டமான அபிப்பிராயங்களை இலிச் தொடர்ந்து கூறுவார்.

போராட்டத்தின் முக்கியமான அம்சங்களை அக்டோபர் 17-ஆம் தேதி ஷில்யாப்நிக்கோவுக்கு எழுதிய கடிதத்தில் சுருக்கமாக, ஆனால் தெளிவாக விளக்கினார் இலிச்:

"மற்றவர்களைக் காட்டிலும் அதிக தீங்கு விளைவிக்கக்கூடியவராக, காட்ஸ்கி இப்பொழுது ஆகிவிட்டார். மென்மையான அழகான பதப் பிரயோகங்களால் (நீயூ ஸீட்) சந்தர்ப்பவாதிகளின் கேவலமான நிலையை மூடிமறைக்கிற அவருடைய பாசாங்குத்தனம் எவ்வளவு கீழ்த் தரமும் ஆபத்தும் ஆனது என்பதை வார்த்தைகளால் வருணிக்க முடியாது. சந்தர்ப்பவாதிகளைப் பகிரங்கமான ஒரு தீமை என்று சொல்லலாம்; ஆனால் காட்ஸ்கியைத் தலைவராகக்கொண்ட ஜெர்மன் ஸ்தாபனமோ, ராஜதந்திர நோக்கங்களுக்காகவும், தொழிலாளர்களின் அறிவு, உணர்வு, பார்வை ஆகியவற்றை மங்கவைப்பதற்காகவும் அழகாக மெருகுபடுத்தப்பட்ட மறைமுகமான தீமையாக விளங்குகிறது. ஆகையால் மற்றவற்றைக் காட்டிலும் இது அதிகத் தீமை பயக்கவல்லது; நமது இன்றைய வேலை சர்வதேச சந்தர்ப்பவாதத்துக்கும் அதைத் தாங்குகிறவர்களுக்கும் (காட்ஸ்கி) எதிராக நின்று, உறுதியுடனும் பகிரங்கமாகவும் போர்புரிவதுதான். விரைவில் நாங்கள் ஆரம்பிக்கப்போகும் மத்திய கமிட்டிப் பத்திரிகையில் (அனேகமாக இரண்டு பக்கங்கள்) இதைத்தான் நாங்கள் செய்யப்போகிறோம். ஜெர்மனியர்களின் கேவலமான நடத்தைமீது வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களுக்கு இருக்கும் நியாயமான வெறுப்பை நீடிக்கச் செய்ய நம்மால் கூடுமான வழிகளில் எல்லாம் நாம் முயல வேண்டும். சந்தர்ப்பவாதத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்குச் சலுகை காட்டுவதற்கும் எதிரான அரசியல் போதத்தை இந்த வெறுப்பிலிருந்து நாம் உருவாக்க முயல வேண்டும். இது சர்வதேசக் கடமையாகும். இந்தப் பொறுப்பு நம்மீது இருக்கிறது. இதைச் செய்யக் கூடியவர்கள் இப்போது வேறு யாரும் இல்லை; இதை நாம் தட்டிக் கழிக்கக் கூடாது; தட்டிக்கழிக்கவும் முடியாது. ஏனெனில் காட்ஸ்கி, வான்டர்வெல்டி ஆகியவர்களின் வழியில் முதுகெலும்பற்ற சமரசத் தீர்மானம் நிறைவேற்றப்படும் ஆபத்து மிக மிக அதிகம்! சமாதானம் என்னும் சுலோகமும் தவறானது. ஏனெனில் தேசிய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்ற வேண்டும் என்பதுதான் சரியான சுலோகம். இந்த மாற்றம் ஏற்பட நீண்ட காலமாகலாம். பல ஆரம்ப நிலைகள் இதற்குத் தேவையாகலாம்; ஆனால், எல்லா வேலைகளும் இந்த மாற்றத்தை நோக்கமாகக் கொண்டதாக, இந்த உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாக, இந்த வழியில் செல்வதாக இருக்க வேண்டும். யுத்தத்தைச் சீர்குலைப்பதையோ இதற்காகத் தனிப்பட்ட முறையில் அங்கும் இங்கும் செயலாற்றுவதையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல

இது; ஆனல் யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றுவதற்காக ஜனங்களுக்கு மத்தியில் (போரில் சம்பந்தப்படாத ஜனங்களுக்கு மாத்திரமல்ல) பிரசாரம் செய்வது. அப்பாவி பிரான்ஸ், துரதிர்ஷ்டம் பிடித்த பெல்ஜியம் (உக்ரேன் முதலிய பகுதிகளின் கதி என்ன) ஆகிய பதப் பிரயோகங்களுக்குப் பின்னே ரஷ்யாவில், குறுகிய தேசியவெறி மறைந்து நிற்கிறது. அல்லது ஜெர்மனிமீதுள்ள பொது வெறுப்பில் (கெய்ஸரிஸம் மீது) ஒளிந்துகொள்கிறது. இவற்றை எதிர்த்துப் போர் புரிவது நமது தவிர்க்க முடியாத கடமையாகும். போராட்டம் நிர்ணய மான தெளிவான பாதையில் செல்ல வேண்டுமானல், இதைச் சுருக்க மாகப் பிரதிபலிக்கும் கோஷத்தை, வகுக்க வேண்டும். இந்தக் கோஷம் வருமாறு: ரஷ்யர்கள் சம்பந்தப்பட்டவரையில், ரஷ்ய உழைப்பாளிகளின் நன்மையையும் தொழிலாளிகளின் நன்மையையும் உத்தேசித்து, இந்த யுத்தத்தில் ஜாரிஸம் உடனடியாகத் தோல்வி யடைய வேண்டும். ஏனெனில் கெய்ஸரிஸத்தைவிட ஜாரிஸம் நூறு மடங்கு தீமையானது; இதனல் தீமை குறையும் என்பதைப்பற்றி யாரும் சந்தேகிக்கவே தேவையில்லை. நாம் யுத்தத்தைக் கெடுக்க விரும்பவில்லை; ஆனல் குறுகிய தேசியவெறியை எதிர்த்து நாம் போர் புரிகிறோம். உள்நாட்டு யுத்தத்தின் நன்மையை உத்தேசித்து சர்வதேச ரீதியில் பாட்டாளி மக்களை ஒன்றுதிரட்டுவதை (ஒன்றுசேர்ப்பது, ஒற்றுமையை வெளியிடுவது, நிலைக்குத் தகுந்தவாறு ஒப்பந்தங்கள் செய்துகொள்வது) நோக்கமாகக் கொண்டு நாம் பிரசாரமும் கிளர்ச்சியும் செய்ய வேண்டும். அதிகாரிகளைச் சுடும்படி தனிப்பட்டவர் களைத் தூண்டுவதும், கெய்ஸரிஸத்துக்கு உதவிபுரிய நாங்கள் விரும்ப வில்லை என்பது போன்ற வாதங்களை அனுமதிப்பதும் தவருகும். முன்னது நம்மை அராஜகத்துக்கு இழுத்துச் செல்லும்; பின்னது சந்தர்ப்பவாதத்தை வளர்க்கும். நம்மைப் பொறுத்தவரை ஒரு தேசத் தில் மாத்திர மல்லாமல், நாம் பொதுச் செயலுக்கு, கூட்டு முறையிலா வது ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தத் துறையில் பிரசாரத்தையும் கிளர்ச்சியையும் திருப்ப வேண்டும். தேசிய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றுவதற்காக வேலை செய்வது; (உறுதியாக, முறையாக நீண்ட காலம் வேலை செய்ய நேரலாம்) இதுதான் பிரசினை. இத் தகைய மாற்றம் எப்பொழுது ஏற்படும் என்ற பிரசினை வேறு; இன்று இது துலக்கமாகத் தெரியவில்லை. அந்தக் காலம் பக்குவம் பெற நாம் அனுமதிக்க வேண்டும். இது 'பக்குவம் பெற' நாம் முறையாக நிர்பந் தப்படுத்த வேண்டும். இப்பொழுது சமாதான கோஷம் தவருனது என்பது என் கருத்து. இது பாசாங்குக்காரர்களின், உபதேசகர்களின் கோஷம்; உள்நாட்டு யுத்தம் என்பதுதான் பாட்டாளி மக்களின் கோஷம்.

"வெளி நிலையை, ஐரோப்பிய நிலையில் ஏற்பட்டிருக்கும் மாற் றத்தை அடிப்படையாக கொண்டு பார்த்தால், பொதுஜனப் போர்

சகாப்தத்தில் இத்தகைய கோஷம் பிறக்கிறது. பாஸலித் தீர்மானத்தின் தொடர்ச்சி இந்த கோஷம்.

''உள்நாட்டுக் கலகத்துக்கு நாம் வாக்களிக்க முடியாது; அல்லது அது ஏற்படும்படி உத்தரவு இடவும் முடியாது. ஆனால் இந்தத் துறையில் வேலை செய்வது - அவசியமானால் நீண்ட காலம் வேலை செய்வது- நமது கடமை. மத்திய கமிட்டியின் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரையில் நீங்கள் விவரங்களைக் காணலாம்.''

யுத்தம் ஆரம்பமான இரண்டரை மாதங்களுக்குப் பிறகு போராட்டம் சம்பந்தமாக இலிச் மிகத் தெளிவான திட்டத்தை உருவகப்படுத்தினர். இந்தத் திட்டம் அவருடைய பிற்கால நடபடிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது. சர்வதேசத் துறையில் அவர் செய்த காரியங்கள், ரஷ்யாவில் அவர் செய்த காரியங்களுக்குப் புதிய சக்தியை அளித்தன; அவருக்குப் புதிய திருஷ்டியையும் அளித்தன. கட்சியை நிர்மாணிக்கவும் ரஷ்யத் தொழிலாளர்களை ஸ்தாபனரீதியாக ஒன்றுதிரட்டவும் அவர் பல வருடங்கள் கடுமையாக உழைத்திருக்கவில்லை என்றால், ஏகாதிபத்திய யுத்தம் எழுப்பிய புதிய பிரசினைகளைப்பற்றி, அவ்வளவு துரிதமாகவும் அவ்வளவு உறுதியாகவும் அவர் சரியான வழியை மேற்கொண்டிருக்க முடியாது. சர்வதேசப் போராட்டத்தில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருக்கவில்லை என்றால் அக்டோபர் வெற்றியை நோக்கி, ரஷ்யப் பாட்டாளி மக்களை அவ்வளவு உறுதியுடன் அவர் அழைத்துச் சென்றிருக்க முடியாது.

சமதர்ம ஜனநாயகவாதி 33-வது இதழ் 1914-ம் வருடம் நவம்பர் மாதம் முதல் தேதி வெளிவந்தது. முதலில் 500 பிரதிகள்தான் அச்சிடப்பட்டன. ஆனால் மேலும் 1000 பிரதிகள் இன்றும் தேவை என்பது விரைவில் தெரிந்தது. எல்லைப்புறத்துக்கு அருகிலுள்ள ஓர் இடத்தில் பத்திரிகை பட்டுவாடா செய்தாகிவிட்டது என்றும் விரைவில் அது அங்கிருந்து அனுப்பிவைக்கப்பெறும் என்றும் நவம்பர் மாதம் 14-ம் தேதி கார்பின்ஸ்கிக்கு இலிச் மகிழ்ச்சியுடன் எழுதினர்.

நானி, கிராப்பர் ஆகியவர்களின் உதவியுடன் ஸ்விஸ் பத்திரிகை ''லா ஸென்டினலில்'' நவம்பர் மாதம் 13-ம் தேதி அறிக்கை ஒன்று பிரசுரிக்கப்பட்டது. தொழிலாளர் கேந்திரமாகிய சாக்ஸ்-தே-பான்ட்ஸ் என்னும் இடத்தில் அது பிரெஞ்சு மொழியில் பிரசுரிக்கப்பட்டது. இலிச் மகிழ்ச்சி அடைந்தார். அறிக்கையின் மொழிபெயர்ப்பை நாங்கள் ஆங்கில, ஜெர்மானிய, பிரெஞ்சுப் பத்திரிகைகளுக்கு அனுப்பினேம்.

பிரெஞ்சுக்காரர்களிடையே பிரசாரத்தை ஆரம்பிப்பதற்காக, பிரெஞ்சு மொழியில் இன்னிஸா பேச ஜினீவாவில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யும்படி இலிச் கார்பின்ஸ்கிக்கு எழுதினர். ஸ்வீடிஷ் காங்கிரஸில் பேசுவது சம்பந்தமாக அவர் ஷில்யாப்னிக்கோவுக்கு எழுதினர்; ஷில்யாப்னிக்கோவ் அதில் வெற்றிகரமாகப் பேசினர். இங்ஙனம் படிப்படியாகப் போல்ஷ்விக்குகளின் ''சர்வதேசச் செயல்'' ஆரம்பமாயிற்று.

ரஷ்யாவுடன் தொடர்பு சம்பந்தப்பட்டவரை நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. பத்திரிகையின் 34-வது இதழுக்கு, செண்ட் பீட்டர்ஸ்பார்க்கி

லிருந்து ஷில்யாப்னிக்கோவ் சில ருசிகரமான தகவல்களை அனுப்பினர். அந்தச் செய்தியுடன் போல்ஷ்விக்குப் பிரதிநிதிகள் ஐந்து பேர் கைது செய்யப்பட்ட செய்தியையும் நாங்கள் பிரசுரிக்க நேர்ந்தது; ரஷ்யாவுடன் இருந்த தொடர்பு மீண்டும் பலவீனமடைந்துவிட்டது.

இரண்டாவது இன்டர்நேஷனல் பாட்டாளி மக்களின் நோக்கத்துக்குத் துரோகம் செய்ததை எதிர்த்து ஆவேசத்துடன் போராடிய அதே சமயத்தில், அவர் பெர்னினுக்கு வந்ததும், கிராஜட்டின் என்சைக்கிளோபீடியா அகராதிக்கு, கார்ல் மார்க்ஸைப்பற்றி ஒரு கட்டுரை தயாரிக்க ஆரம்பித்தார். அதில் மார்க்ஸின் போதனைகளை விளக்குவதுடன், மார்க்ஸின் தத்துவத்தையும் விளக்குகிறார். இதை இரு பகுதிகளாக்கி விளக்கி இருக்கிறார். தத்துவரீதியான லோகாயதவகதம், தர்க்கவியல், என இரு பகுதிகளாகப் பிரிக்கிறார்; மார்க்ஸ் எவ்வாறு சமதர்மம் என்னும் பிரசினையை அணுகினர் என்பதையும் பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்ட தந்திரத்தையும் இறுதியில் விளக்குகிறார்.

மார்க்ஸின் உபதேசங்களை விளக்கும் வழக்கமான முறை அல்ல இது. தத்துவரீதியான லோகாயதத்தையும் தர்க்கவியலையும் எழுது முன், இலிச், ஹெகலையும் ஏனைய தத்துவஞானிகளின் நூல்களையும் மீண்டும் சிரத்தையுடன் படித்தார். கட்டுரையை முடித்த பிறகுகூட அவர் இந்தப் படிப்பை நிறுத்தவில்லை. தத்துவத்தைச் செயலுக்கு வழிகாட்டியாக மாற்றுவதுதான் தத்துவத் துறையில் அவர் செய்த வேலையின் நோக்கம். எல்லாப் பிரசினைகளையும் எவ்வாறு தர்க்கவியல் திருஷ்டியுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதைப்பற்றி 1921-ம் வருடம் டிராட்ஸ்கியுடனும் புக்காரினுடனும் அவர் தொழிற் கலைச் சம்பந்தமாக நடத்திய விவாதம், பெர்னினுக்கு அவர் வந்த பிறகு அவர் நடத்திய தத்துவ ஆராய்ச்சியிலிருந்தும் மார்க்ஸீயவாதிகளை அவர் எதிர்த்துப் போராடிய காலத்தில் (1908-9) அவர் நடத்திய தத்துவ ஆராய்ச்சியிலிருந்தும் அவர் எவ்வளவு பயன் அடைந்துள்ளார் என்பதைக் காட்டுகின்றன.

போராட்டமும் ஆராய்ச்சியும் விஞ்ஞானரீதியான வேலைகளும் இலிச் சம்பந்தப்பட்டவரையில் பலமாகப் பின்னிப் பிணைந்து கிடந்தன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது இரண்டும் தொடர்பற்றதாகக் காணப்பட்டாலும் இவற்றுக்கிடையே மிக நெருங்கிய ஆழமான தொடர்பு உண்டு.

1915-ம் வருட ஆரம்பத்தில் வெளிநாடுகளில் வசித்த போல்ஷ்விக்குகளை ஒன்றுதிரட்டும் சிரமமான வேலை ஆரம்பமாயிற்று; இவர்களுக்கு இடையே உறுதியான உடன்பாடு ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது என்றாலும், உருக்குப் போன்ற உறுதியான உடன்பாடு தேவைப்படும் காலம் அது. யுத்தத்துக்கு முன் போல்ஷ்விக்குகளின் கேந்திரம், வெளிநாட்டு ஸ்தாபனங்களின் கமிட்டி, பாரீஸில் இருந்தது. அப்பொழுது ஸ்விட்ஜர்லாந்துக்கு நடுநிலைமை வகிக்கும் நாட்டுக்கு அதை மாற்ற நேர்ந்தது. பெர்னியில் அதன் ஆசிரியர் குழாம் இருந்த இடத்துக்கு மாற்ற வேண்டியதாயிற்று. எல்லா விஷயங்கள்பற்றியும் ஒருவித உடன்பாடு ஏற்பட்டாக வேண்டும்; யுத்தத்தைப் பரிசீலனை செய்தல், கட்சியை எதிர்நோக்கி நிற்கும் புதிய கடமைகள், இவற்றைச் சமாளிக்க வழி, பகுதிகளின் வேலையையும் சரியாக நிர்ணயித்தாக வேண்டும். உதாரணமாக போஜியோப் பகுதி (கிரி

லெங்கோ, புக்காரின், ரோஸ்மிரோவிச்) சொந்தப் பத்திரிகை நட்சத்திரத்தை' (ஸ்வெஸ்டாவைப்) பிரசுரிக்க முடிவுசெய்தனர். இந்த வேலையை அவர்கள் அவசர அவசரமாக முடிக்க முயன்றதால், மத்திய கமிட்டியுடன் இதைப்பற்றி அவர்கள் விவாதிக்கக்கூட இல்லை. இன்னிஸாவிடமிருந்து இதை நாங்கள் தெரிந்துகொண்டோம். இத்தகைய பிரசுரம் அதிக பலன் அளிக்காது. மத்திய கமிட்டியின் பத்திரிகையைப் பிரசுரிப்பதற்குக்கூடப் பணம் இல்லை. மேலும் அதுவரை அபிப்பிராய பேதங்களும் இருக்கவில்லை. என்றாலும் அது எளிதில் எழலாம். அஜாக்ரதையாக உபயோகிக்கப்பட்ட பதத்தைச் சந்தர்ப்பவாதிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்; ஜாக்ரதையாக அடி எடுத்துவைக்க வேண்டிய காலம் அது. பெப்ருவரி மாத இறுதியில் வெளிநாடுகளில் வாழ்பவர்களின் மகாநாடு ஒன்று பெர்னியில் நடைபெற்றது. ஸ்விஸ் பகுதிகளைத் தவிர்த்து, பாரீஸில் ஒரு பகுதி இருந்தது. அது கிரிஷாபெலென்ஸ்கியை அனுப்பிற்று. யுத்த ஆரம்பத்தில் பாரீஸ் பகுதியில் யுத்த ஆதரிப்பு உணர்ச்சி குடிகொண்டிருந்ததை அவர் விவரமாகக் கூறினர். லண்டன் பகுதி வரமுடியவில்லை; எனவே அவர்கள் "பிராக்ஸி" அளித்தனர். கூட்டத்துக்கு வர முதலில் தயங்கிய போஜியோப் பகுதி, கூட்டத்தின் இறுதியில் வந்தது. அவர்களுடன் "ஜப்பானிய பகுதியாரும்—கீவ் பகுதினருக்கு நாங்கள் வைத்த புனை பெயர்—தோழர்கள் பியாட்கோவும் சைபீரியாவிலிருந்து தப்பிய ஜப்பான், அமெரிக்கா வழியாக ஐரோப்பாவுக்கு வந்த போஜேயும் (இ. எப். ரோஸிமிரோவிச்சின் சகோதரி) கூட வந்திருந்தார்கள். எங்கள் போக்கை அனுசரித்து நடந்துகொண்ட ஒவ்வொரு புதிய நபரையும் ஆர்வத்துடன் நாங்கள் அரவணைத்துக்கொண்ட காலம் அது. "ஜப்பானியர்கள்" எங்களைப் பெரிதும் கவர்ந்தனர். அவர்களுடைய வரவு வெளிநாட்டிலிருந்த எங்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்தது.

யுத்தத்தைப்பற்றி மகாநாட்டில் மிகத் தெளிவான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஐரோப்பிய ஐக்கிய அரசாங்கங்கள் என்னும் கோஷத்தைப் பற்றி விவாதம் நடந்தது. இதை இன்னிஸா உக்கிரமாக எதிர்த்தாள்; வெளிநாடுகளில் வசிக்கும் பகுதிகளின் வேலைத்தன்மை நிர்ணயிக்கப் பெற்றது. போஜியோவிலிருந்து பத்திரிகை வெளியிடக் கூடாது என்றும் தீர்மானிக்கப்பெற்றது. வெளிநாடுகளிலுள்ள ஸ்தாபனங்களின் புதிய கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் ஷாலோவ்வஸ்கி, கப்பாரோவ், இன்னிஸா, லினை, குருப்ஸ்கயா ஆகியவர்களைக் கொண்டது இக் கமிட்டி.

எங்கள் சக்திகளைச் சர்வதேச ரீதியில் திரட்டுவது அன்றைய வேலை. 1915-ம் பெப்ருவரி மாதம் 14-ம் தேதி லண்டனில் நடந்த—இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளின் சமதர்மக் கட்சி பிரதிநிதிகளின் நேசநாட்டு சமதர்ம மகாநாடு, இந்த வேலையைச் சிரமமாக்கிற்று. இந்த மகாநாட்டை வான்டர்வெல்டி கூட்டினர். ஆனல் கியர்ஹார்டியையும் மாக்டோனல்டையும் தலைவர்களாகக் கொண்ட ஆங்கில சுயேச்சைத் தொழிற் கட்சி, இந்த மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்தது. மகாநாட்டுக்கு முன் அவர்கள் யுத்தத்தை ஆதரித்தனர். சர்வதேச ஒற்றுமையை ஆதரித்தனர்; ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகளை அழைக்க முதலில் சுயேச்சைத் தொழிற்கட்சி நினைத்

தது. ஆனால் இது நடந்தால் தாங்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள முடியா தென்று பிரெஞ்சுக்காரர்கள் சொல்லிவிட்டனர். இங்கிலாந்தின் சார்பில் 11 பிரதிநிதிகளும் பிரான்ஸின் சார்பில் 16 பிரதிநிதிகளும் பெல்ஜியத்தின் சார்பில் மூன்று பிரதிநிதிகளும் மகாநாட்டில் கலந்துகொண்டனர். ரஷ்யாவிலிருந்து மூன்று சமதர்மப் புரட்சிக்காரர்கள் வந்தனர். மென்ஷ்விக் ஸ்தாபனக் கமிட்டியின் சார்பில் ஒரு பிரதிநிதி வந்தார். எங்கள் சார்பில் லிட்வினுவ் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. இது எத்தகைய மகாநாடு என்பதும், எத்தகைய பலனை இது உண்டுபண்ணும் என்பதும் தெளிவாகத் தெரிந்ததால், லிட்வினுவ், மகாநாட்டில் மத்திய கமிட்டியின் அறிக்கையைப் படித்தால் போதும் எனத் தீர் மானிக்கப் பெற்றது. லிட்வினுவுக்காக இந்த அறிக்கையின் குறிப்புகளை இலிச் எழுதினார். முதலாளித்துவப் பெல்ஜியம், பிரான்ஸ் மந்திரி சபைகளிலிருந்து வாண்டர்வெல்டியும் குஸ்தே, செம்பாட் ஆகியோரும் உடனே ராஜிநாமா செய்ய வேண்டும் என்றும் ஸாரிஸத்துக்கு எதிராக ரஷ்யத் தொழிலாளர்கள் நடத்தும் போராட்டத்தைச் சகல சமதர்மக் கட்சிகளும் ஆதரிக்க வேண்டும் என்றும் அது கோரிற்று. யுத்தக் கடனை ஆதரித்து ஓட் செய்ததின் மூலமும் 'ஜங்கர்கள்' பாதிரிகள், முதலாளிகள் ஆகியவர்களுடன் "உள்நாட்டு"ச் சமாதான உடன் படிக்கை செய்துகொண்டதன் மூலமும் சர்வதேச சமதர்மத்துக்கு ஜெர்மன் சமதர்ம ஜனநாயகவாதிகள் மிகப் பெரிய தீங்கு இழைத்துவிட்டனர் என்றும் பெல்ஜிய, பிரெஞ்சு சமதர்மவாதிகள் பெருமைப்படத்தக்க முறையில் நடந்து கொள்ளவில்லை என்றும் அந்த அறிக்கை கூறிற்று:

> "கார்ல் லீப்னெட்டைப் போன்றும் ஸெர்பிய, இத்தாலிய சமதர்மவாதிகளைப் போன்றும், சுயேச்சை தொழிற் கட்சியைச் சேர்ந்த பிரிட்டிஷ் தோழர்களைப் போன்றும் சில பிரிட்டிஷ் சமதர்மக் கட்சி அங்கத்தினர்களைப் போன்றும் கைது செய்யப்பட்ட ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிற்கட்சியின் அங்கத்தினர்களைப் போன்றும் செயலாற்றும் சமதர்மவாதிகளுக்கு ரஷ்யத் தொழிலாளர்கள் தோழமை உணர்வுடன் தங்கள் கரத்தை நீட்டுகிறார்கள்.
>
> "இந்த வழியை-சமதர்ம வழியை-மேற்கொள்ளும்படி நாங்கள் உங்களை வேண்டுகிறோம். பாட்டாளிமக்களின் நோக்கத்தைப் பாழ்படுத்தும் குறுகியதேசிய வெறி வீழ்க! சர்வதேச சமதர்மம் நீடூழி வாழ்க!"

அறிக்கையின் முடிவுரை இது. மத்திய கமிட்டி இதில் கையெழுத்திட்டது. லெத்திய சமதர்ம-ஜனநாயகவாதிகளின் சார்பில் பெர்ஸின் இதில் கையெழுத்திட்டார். இறுதி வரையில் இந்த அறிக்கையைப் படிக்க மகாநாட்டுத் தலைவர் லிட்வினுவை அனுமதிக்கவில்லை. எனவே தலைவரிடம் இந்த அறிக்கையைக் கொடுத்துவிட்டு, ரஷ்ய சமதர்ம-ஜனநாயகத் தொழிற் கட்சி இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளாது என்று கூறிவிட்டு, மகாநாட்டிலிருந்து அவர் வெளியேறினார். லிட்வினுவ் வெளியேறிய பிறகு, வெற்றி பெறும்வரையில் "விடுதலை யுத்தத்தைத்" தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் தீர்மானம் மகாநாட்டில் நிறைவேறியது. கியர்ஹார்டியும் மாக்டொனல்டும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஓட் செய்தனர்.

சர்வதேசப் பெண்கள் மகாநாட்டுக்கு அப்பொழுது ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இத்தகைய மகாநாடு நடைபெறுவது மிகவும் முக்கியமானது. ஆனால் இது சமாதானத்தன்மை படைத்ததாக இருக்கக் கூடாது என்பதும், இது நிர்ணயமான புரட்சி நிலையை மேற்கொள்ள வேண்டும் என்பதும் முக்கிய மானது. இதற்கு அதிக ஆரம்ப வேலைகள் செய்தாக வேண்டும். இந்தப் பொறுப்பு இன்னிஸாமீது விழுந்தது. பல தஸ்தாவேஜ்களை மொழிபெயர்த்து மத்திய கமிட்டிப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு அவள் உதவிபுரிந்ததாலும் ஆரம் பத்திலிருந்தே "யுத்த ஆதரிப்பு"க் கொள்கைக்கு எதிராக வளர்ந்த போரில் அவள் பங்கு எடுத்துக்கொண்டதாலும் அவள்தான் இந்த வேலையைச் செய்ய மிகவும் தகுதி வாய்ந்தவள். மேலும் அவளுக்குப் பல பாஷைகள் தெரியும். கிளாரா ஸெட்கினுடனும் பலாபனோவாவுடனும் கொல்லொந்தாயுடனும் ஆங்கி லப் பெண்களுடனும் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டு, அவள் சர்வ தேசப் பிணைப்பை உறுதிபடுத்தி யிருக்கிறாள். இந்தத் தொடர்பு மிக மென்மை வாய்ந்தது; அதனால் தொடர்பு அடிக்கடி குன்றிக்கொண்டே இருந்தது. எனி னும் தமது வேலையில் இன்னிஸா கண்ணுங்கருத்துமாக இருந்தாள். பாரீஸில் வசித்துவந்த ஸ்டாஹல் மூலம் அவர் பிரெஞ்சுத் தோழர்களுடன் கடிதப்போக்கு வரத்து வைத்துக்கொண்டாள். பலாபனோவாவுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வது மிக எளிது. அவள் இத்தாலியில் வேலைசெய்தவள்; அவந்தியை வெளியிட உதவிபுரிந்தவள்; இத்தாலிய சமதர்மக் கட்சியின் புரட்சி உணர்ச்சி உச்ச நிலையில் இருந்து வந்த காலம் அது. ஜெர்மனியில் யுத்த ஆதரிப் புக்கு எதிரான உணர்ச்சி பரவிவந்தது. டிசம்பர் மாதம் 2-ம் தேதி யுத்தக் கடனுக்கு எதிர்த்துக் கார்ல் லீப்னெட் ஓட் செய்தார்; கிளாரா ஸெட்கின் சர்வ தேசப் பெண்கள் மகாநாட்டைக் கூட்டினர்; சோஷலிஸ்டுப் பெண்கள் சர்வதேசப் பூரோவின் காரியதரிசி அவள்; கார்ல் லீப்னெட்டுனுடனும் ரோஸா லக்ஸம்பர்க் குடனும் பிரான்ஸ் மெஹரிங்குடனும் சேர்ந்துகொண்டு ஜெர்மன் சமதர்ம ஜன நாயகக் கட்சியிலிருந்த குறுகி தேசியவெறி பிடித்த பெரும்பான்மையோரை அவள் எதிர்த்தாள். இவளுடன் இன்னிஸா கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண் டாள். அப்போது கொல்லொந்தாய் மென்ஷ்விக்குக் கட்சியிலிருந்து விலகிக் கொண்டாள். ஜனவரியில் எனக்கும் விளாதிமிர் இலிச்சுக்கும் அவள் கடிதம் எழுதினாள். அதில் ஒரு துண்டுப் பிரசுரத்தையும் அடக்கம் செய்து இருந்தாள்; அதற்கு இலிச் ஒரு பதில் போட்டார்:

"எனது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய தோழரே! துண்டுப் பிரசுரத்தை அனுப்பியதற்காக எனது நன்றி. தற்பொழுது அதை, பெண் தொழிலாளி ஆசிரியர் குழாத்தின் உள்ளூர் அங்கத்தினர்க ளிடம் கொடுக்கத்தான் என்னால் முடியும். உங்கள் கருத்தைப் போன்று இதே கருத்தைக்கொண்ட ஒரு கடிதத்தை அவர்கள் ஏற் கனவே ஸெட்கினுக்கு அனுப்பிவிட்டார்கள்."

பிறகு இலிச் போல்ஷ்விக்குகளின் நிலையை விளக்கினார்:

"உள்நாட்டு யுத்தம் என்னும் கோஷத்தை நீங்கள் முழுதும் அங்கீகரிக்கவில்லை என்று தெரிகிறது. சமாதான கோஷத்துக்கு

அடுத்த ஸ்தானத்தைத்தான் நீங்கள் அழிக்கிறீர்கள். எல்லோரையும் ஒன்றுபடுத்தும் கோஷத்தை நாம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். தற்பொழுது நான் அதிகமாகப் பயப்படுவது எந்தவிதத்திலும் ஒற்றுமை என்னும் கோஷத்தைப்பற்றித்தான் என்பதை நான் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லிவிடுகிறேன். பாட்டாளி மக்களுக்கு இது அதிக ஆபத்தும் தீமையும் விளைவிப்பதாகும் என்று நான் திடமாக நம்புகிறேன்."

மகாநாடு சம்பந்தமாக இலிச்சின் மேற்கண்ட கருத்தை அடிப்படையாகத்தான் கொல்லொந்தாயுடன் இன்னிஸா கடிதப் போக்குவரத்து நடத்தினுள். ஆனுல், மகாநாட்டுக்குக் கொல்லொந்தாயால் வர முடியவில்லை.

மார்ச் மாதம் 26-ம் தேதியிலிருந்து 28-ம் தேதிவரையில் பெர்னியில் சர்வதேச மகாநாடு நடந்தது; கிளாரா ஸெட்கின் தலைமையில் ஜெர்மனியிலிருந்து அதிகப் பிரதிநிதிகள் வந்திருந்தனர்; அதுதான் ஒன்றுபட்ட பிரதிநிதி கோஷ்டியாக இருந்தது. ஆர்மாண்ட், லிலின, ராவிச், குருப்ஸ்கயா, ரோஸ்மிரோவிச் ஆகியவர்கள் ரஷ்ய மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிகளாகச் சென்றிருந்தனர். "ரோஸ்லாமோவிஸ்டுகள்" சார்பில் காமென்ஸ்கயா (டோம்ஸ்கயா) வந்தாள். இவ்ள் மத்திய கமிட்டிப் பிரதிநிதிகளை ஆதரித்தாள். ஸ்தாபனக் கமிட்டியின் சார்பில் மற்றும் இரண்டு ரஷ்யப் பிரதிநிதிகள் மகாநாட்டுக்கு வந்தனர். பலாபனேவா இத்தாலியிலிருந்து வந்தாள். பிரெஞ்சுப் பிரதிநிதி லூயி ஸிமானேட் பலாபனேவாவை ஆதரித்தாள். டச்சுக்காரர்கள் சமாதான மனப்பான்மையுடன் மாத்திரம்தான் இருந்தனர். அப்பொழுது இடதுசாரியில் இருந்த ரோலாண்டு, ஹோல்ஸ்ட் மகாநாட்டுக்கு வர முடியவில்லை. குறுகிய தேசியவெறி படைத்த டிரோயெல்ஸ்டிராக் கட்சியைச்* சேர்ந்த பிரதிநிதி ஒருவர் வந்திருந்தார். ஆங்கிலப் பிரதிநிதிகள் சந்தர்ப்பவாத சுயேச்சைத் தொழிற்கட்சியைச் சேர்ந்தவர்கள்; ஸ்விஸ் பிரதிநிதிகளும் சமாதான நோக்கம் படைத்தவர்களாக இருந்தனர். உண்மையில் சமாதான மனப்பான்மை வியாபகமாக இருந்தது; ஆனுல் ஒன்றரை மாதங்களுக்கு முன் நடந்த லண்டன் மகாநாட்டை நாம் மனத்தில் கொண்டால்-இந்த மகாநாடு ஒரு படி முன்னேறி இருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். ஒன்றை ஒன்று எதிர்த்துப் போராடும் நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்து மகாநாட்டில் கலந்துகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெர்மன் பெண்களில் பெரும்பான்மையோர் கார்ல் லீப்னெட், ரோஸா லக்ஸம்பர்க் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். குறுகிய தேசியவாதிகளுடன் தங்களுக்கு இருந்த தொடர்பை அறுத்துக்கொள்ளவும் தமது சர்க்காரை எதிர்க்கவும் இவர்கள் முற்பட்டனர். ரோஸா லக்ஸம்பர்க் முன்னரே கைது செய்யப்பட்டாள். இது ஜெர்மனியில் நடந்தது. ஆனுல் சர்வதேச மகாநாட்டில் தாங்கள் கூடுமான அளவு சமரஸ மனப்பான்மையை வெளியிட வேண்டும் என்று அவர்கள் கருதினர்; ஏனெனில் போர்முனையில் அப்பொழுது வெற்றிபெற்றுவந்த தேசத்தின் பிரதிநிதிகள் அவர்கள். பெரு முயற்சிக்குப் பிறகு கூடிய மகாநாடு

* ஹாலந்தின் சமதர்மக் கட்சியின் தலைவர் டிரோயெல்ஸ்டிரா.

உடைந்தால், எல்லாக் குற்றங்களும் தங்கள்மீது சுமத்தப்படும் என்று அவர்கள் அஞ்சினர். எல்லா நாடுகளிலும் உள்ள குறுகிய தேசியவாதிகள் குறிப்பாக ஜெர்மன் "சமதர்ம தேசபக்தர்கள்" மகாநாடு முறிந்ததைக் கண்டு மகிழ்வார்கள். எனவே சமாதானவாதிகளுக்குச் சலுகைகாட்ட கிளாரா ஸெட்கின் தயாராக இருந்தாள். தீர்மானங்களின் புரட்சிகரமான அடிப்படையைக் குறைப்பது என்பது இதன் பொருள். எங்கள் பிரதிநிதிகள்—ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிற் கட்சியின் மத்திய கமிட்டியின் பிரதிநிதிகள்—கொல்லொந்தாய்க்கு இலிச் எழுதிய கடிதத்தில் வெளியிட்ட கருத்தை மேற்கொண்டனர். எந்த விலை கொடுத்தாவது ஒற்றுமையை நிலைநிறுத்துவது அல்ல எங்கள் நோக்கம். குறுகிய தேசிய வெறிக்கு எதிராகப் புரட்சிகரமாகப் போராடவும், ஆளும் வர்க்கத்துக்கு எதிராக இரக்கமின்றிப் பாட்டாளி மக்கள் புரட்சிகரமாகப் போராடவும் ஒற்றுமை ஏற்பட வேண்டும். ஜெர்மனியர், ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள் ஆகிய வர்களைக்கொண்ட கமிஷன் தயாரித்த தீர்மானம் குறுகிய தேசியவெறியைக் கண்டிக்கவில்லை. நாங்கள் எங்கள் அறிக்கையைச் சமர்ப்பித்தோம். இன்னிஸா இதை ஆதரித்தாள். போலிஷ் பிரதிநிதி காமென்ஸ்கயாவும் இதை ஆதரித்துப் பேசினுள்; நாங்கள் தனித்து நின்றோம். எல்லோரும் "பிளவுபடுத்தும்" எங்கள் கொள்கையைக் கண்டித்தனர். ஆனால், எங்கள் வழி சரியானது என்பதைச் சம்பவங்கள் விரைவில் நிரூபித்தன. ஆங்கில, டச்சுப் பிரதிநிதிகளின் போக்கு—எல்லோரையுமே திருப்திசெய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் நல்லபிள்ளைத் தனமாய் அவர்கள் நடந்துகொள்ள முயன்றமை—சர்வதேசச் செயலை ஒரு படி முன்னேற்றமடையச் செய்யவில்லை. யுத்தத்தை விரைவாக முடிவுக்குக் கொண்டுவரும் கடமையைப் புரட்சிகரமான போராட்டமும் குறுகிய தேசிய வாதிகளுடன் நடந்த தகராறும் பூர்த்திசெய்தன.

சர்வதேச அரங்கத்திலே போராட்டத்தை நடத்தச் சக்திகளை ஒன்றுதிரட்டு வதில் இலிச் விசேஷ கவனம் செலுத்தினர்.

> "இப்பொழுது நம்மிடையே ஒரு சிலர்தான் இருக்கிறார்கள் என்பதை எண்ணிக் கவலைப்படாதீர்கள். லட்சக்கணக்கானவர்கள் இனி நம்முடன் இருப்பார்கள்"

என்று இலிச் ஒரு நாள் கூறினர். பெர்னியில் பெண்கள் மகாநாட்டுக்கு அவர் எங்கள் தீர்மானத்தைத் தயாரித்தார். அதன் வேலைகளைக் கவனித்தார். அந்தப் பிரதேசத்தில் நடக்கும் முக்கியமான நிகழ்ச்சி ஒன்றில் நேரடியாகக் கலந்துகொள்ள முடியாமல்,—அதில் கலந்துகொள்ள அவர் பெரிதும் விரும் பினர்—திரைக்குப் பின்னே இருந்துகொண்டு தலைவர் ஸ்தானத்தில் செயலாற்று வது இலிச்சுக்குச் சிரமமாக இருந்தது.

ஏப்ரல் மாதம் 17-ம் தேதி பெர்னியில் இன்னொரு மகாநாடு—சர்வதேச சமதர்ம வாலிபர் மகாநாடு ஒன்று நடந்தது. அந்தக் காலத்தில் போர்முனைக்குச் சென்று ஏகாதிபத்திய யுத்தத்தில் கலந்துகொள்ள விரும்பாத, போராடும் நாடு களைச் சேர்ந்த வாலிபர்கள் ஸ்விட்ஜர்லாந்தில் இருந்தனர். நடுநிலைமை வகிக்கும் நாடான ஸ்விட்ஜர்லாந்துக்கு வந்து அவர்கள் குடியேறினர். இந்த வாலிபர் களின் உள்ளத்தில் புரட்சி உணர்ச்சி சுடர்விட்டுப் பிரகாசித்தது. சர்வதேசப்

பெண்கள் மகாநாட்டைத் தொடர்ந்து, சமதர்ம வாலிபர்களின் மகாநாடு நடந்தது தற்செயலினுல் அல்ல.

மார்ச்சு மாதம் என் அன்னை இறந்துபோனுள். அவள் எங்களுடன் அருமையோடும் தோழமை உணர்ச்சியோடும் பழகினுள்; நாங்கள் மேற்கொண்ட காரியங்கள் அனைத்திலும் உதவிபுரிந்தாள். ரஷ்யாவில் சோதனை நடந்த காலங்களில் சட்டவிரோதமான தஸ்தாவேஜ்களை ஒளித்துவைத்துக்கொண்டாள்; சிறையில் இருக்கும் தோழர்களைச் சந்தித்து அவர்களுக்குக் கடிதங்கள் கொண்டுபோய்க் கொடுத்தாள். சைபீரியாவிலும் வெளிநாடுகளிலும் எங்களுடன் வசித்தாள். வீட்டை நிர்வகித்தாள். எங்களைத் தேடிவருகிற அல்லது எங்களிடம் விடைபெற்றுக்கொள்கிற தோழர்களின் நலன்களைக் கவனித்துக்கொண்டாள். விசேஷப் பாவாடைகளிலும் வெயிஸ்டுக் கோட்டுகளிலும் சட்டவிரோதமான பிரசுரங்களை மறைத்துவைத்துக் கொள்வதற்காக, "ஆயுத சாலைகள்" தைத்தாள். சாதாரணக் கடிதங்களை எழுதினுள்; அந்தக் கடிதங்களில் ஒரு வரிக்கும் இன்னெரு வரிக்கும் இடையில் கண்ணுக்குத் தெரியாத மையில் நாங்கள் செய்திகளை எழுதுவோம். தோழர்கள் அவளை நேசித்தனர். கடந்த குளிர்காலத்தில் அவள் பெரிதும் கஷ்டப்பட்டாள்; உடல் பலவீனமடைந்தது; ரஷ்யாவுக்குச் சென்று அங்கே வாழ ஆசைப்பட்டாள்; ஆனுல் அங்கே அவளைக் கவனித்துக் கொள்ளத்தக்கவர்கள் யாரும் இல்லை. அவள் அடிக்கடி இலிச்சுடன் விவாதித்தாள். ஆயினும் இலிச்சை அவள் நேசித்தாள். ஒரு நாள் அம்மாவின் உற்சாகம் குன்றி இருந்தது. அவள் அதிகமாகப் புகை குடிப்பாள்; அன்று சிகரெட் வாங்க மறந்துவிட்டார். அன்று விடுமுறை நாள். எனவே எங்கும் சிகரெட் கிடைக்கவில்லை.

"கவலைப்படாதீர்கள்; நான் சென்று உடனே சில சிகரெட்டுகள் வாங்கி வருகிறேன்" என்று கூறிவிட்டு, ஹோட்டலுக்குச் சென்று சில சிகரெட்டுகள் வாங்கிவந்து அம்மாவிடம் கொடுத்தார் இலிச்.

"ரஷ்யாவுக்கு நான் தனியாகப் போக மாட்டேன். நீங்கள் இருவரும் வரும்வரை நான் பொறுத்திருப்பேன்" என்று இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன் அம்மா என்னிடம் சொன்னுள்.

வேறு ஒரு சமயம் அவர் மதத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தாள். தமக்கு மதத்தில் நம்பிக்கை இருப்பதாக அவள் கருதினுள். ஆயினும் பல வருடங்களாக அவள் சர்ச்சுக்குப் போகவில்லை; விரதங்கள் அனுஷ்டிக்கவில்லை; பிரார்த்தனைகள் செய்யவில்லை. பொதுவாக, மதம் அவளுடைய வாழ்க்கையில் எத்தகைய ஸ்தானத்தையும் பெறவில்லை. ஆனுலும் இந்த விஷயத்தைப்பற்றி அவள் விவாதிக்க விரும்பவில்லை.

ஒரு நாள் அவள் திடீரென்று "சிறு வயதில் நான் மதநம்பிக்கையுடையவளாக இருந்தேன். ஆனுல் காலம் செல்லச் செல்ல வாழ்க்கை என்ன என்பதைத் தெரிந்துகொண்டதும், மதநம்பிக்கை எவ்வளவு முட்டாள்தனமானது என்பது எனக்கு விளங்கிவிட்டது" என்று சொன்னுள்.

தாம் இறந்ததும் தம்மைத் தகனம் செய்ய வேண்டும் என்று அவள் பன்முறை சொன்னுள். நாங்கள் வசித்த சிறிய வீடு பெர்னிக் கானகத்துக்கு அருகில்

இருந்தது. வெப்பத்தை அள்ளிவீசும் வசந்த காலச் சூரியன் பிரகாசிக்க ஆரம்பித்தது; என் அன்னை கானகத்துக்குச் செல்லப் பிரியப்பட்டாள். நானும் அவளுடன் சேர்ந்து சென்றேன். அரை மணி நேரம் பெஞ்சில் உட்கார்ந்து இருப்போம். அதன் பிறகு வீடு திரும்ப அவள் சிரமப்படுவாள். மறு நாள் அவள் மரண வேதனையால் வருந்தினாள். அவள் இறந்ததும் அவள் விருப்பப்படி அவளை நாங்கள் பெரினி மயானத்தில் தகனம் செய்தோம்.

நானும் இலிச்சும் மயானத்தில் காத்திருந்தோம். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, காவல்காரர் சூடாக இருந்த சாம்பலை ஒரு தகர டப்பாவில் அள்ளித் தந்து, அதைப் புதைக்க வேண்டிய இடத்தை எங்களுக்குக் காட்டினார்.

எங்கள் குடும்ப வாழ்க்கை மேலும் மாணவர் வாழ்க்கையை நிகர்த்ததாக ஆகிவிட்டது. நாங்கள் குடியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரி, மதநம்பிக்கையுள்ளவள்; சலவைக் கம்பெனி வைத்து நடத்திவந்தாள். அவளுக்கு எங்கள் போக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, வீட்டைக் காலி செய்யும்படியும், மதநம்பிக்கையுள்ளவர்களுக்குத் தன் வீட்டை வாடகைக்குவிட விரும்புவதாகவும் அவள் கூறினாள். அதன்பேரில் நாங்கள் வேறு ஒரு வீட்டுக்குக் குடிபோய்விட்டோம்.

பெப்ருவரி மாதம் 10-ம் தேதி ஐந்து டூமாப் பிரதிநிதிகளின் விசாரணை நடந்தது. போல்ஷ்விக் பிரதிநிதிகள் ஐவருக்கும்—பீட்ரோவஸ்கி, முரானேவ், படாயெவ், ஸாமோய்லோவ், ஷாக்கோவ்—ஆகியோருக்குத் தீவாந்திர சிட்சை விதிக்கப்பட்டது; எல். பி. காமனீவுக்கும் தீவாந்திர சிட்சை விதிக்கப்பட்டது.

ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிற் கட்சிப் பகுதியின் விசாரணை எதை நிரூபிக்கிறது ? என்னும் தலைப்பில் 1915-ம் வருடம் மார்ச்சு மாதம் 24-ம் தேதி இலிச் ஒரு கட்டுரை எழுதினார். அதில் அவர் எழுதி இருப்பதாவது :

"யுத்தம் ஆரம்பமான முதல் வருடங்களில் ரஷ்யத் தொழிலாளர்களின் வர்க்கபோதம் படைத்த முன்னணிப் படையானது அனுஷ்டானத்தில் மத்தியக் கமிட்டியையும் அதன் பத்திரிகையையும் ஆதரிக்கிறது என்பதை உண்மைகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. இந்த உண்மை, நமது 'பகுதிகளில்' ஒன்றுக்கோ அல்லது மற்றொன்றுக்கோ கசப்பை அளிக்கலாம். எனினும் இதை மறுக்க முடியாது. குற்றப் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்த குற்றச்சாட்டு வருமாறு: "ராணுவத்தை நமது சகோதரர்களுக்கு-ஏனைய நாட்டுக் கூலி அடிமைகளுக்கு-எதிராகத் திருப்பக் கூடாது. ஆனால், பிற்போக்கான முதலாளித்துவ சர்க்கார்களுக்கும், அவர்கள் கட்சிகளுக்கும் எதிராகத் திருப்ப வேண்டும். விசாரணையின் மூலம் இந்த வார்த்தைகள் பரவச் செய்யும்; பாட்டாளி மக்களின் சர்வ தேசியத்திற்காக, பாட்டாளி மக்களின் புரட்சிக்காக விடுக்கப்பட்ட வேண்டுகோளாக இவை ரஷ்யாவில் ஏற்கனவே பரவிவிட்டன. ரஷ்யத் தொழிலாளர்களின் முன்னணிப் படையின் வர்க்க சுலோகம் விசாரணையின் மூலம் தொழிலாளர்களிடையே விரிவாகப் பரவிவிட்டது.

"முதலாளிக்கு இடையிலும் மத்திய வர்க்கத்தின் ஒரு பகுதிக்கு மத்தியிலும் குறுகிய தேசியவெறி தொத்துநோய்போல் பரவி இருக்

கிறது; வேறு ஒரு பகுதி அசைந்தாடுகிறது. தொழிலாளர் வர்க்கம் இத்தகைய வேண்டுகோள் விடுக்கிறது. இதுவே நமது அரசியல் பிரிவுகளின் உண்மையான சித்திரம். இந்த உண்மையான சித்திரத்துக்கு—அறிவாளிகளின், சிறிய பகுதி ஸ்தாபர்களின் அனுதாபம் நிறைந்த ஆசைகளுக்கு அல்ல—பொருத்தமான முறையில் நாம் 'சந்தர்ப்பவாதங்களேயும்' நம்பிக்கைகளேயும் சுலோகங்களேயும் வகுக்க வேண்டும்.

"பிராவ்தா போன்ற பத்திரிகைகளும் முராஞேவ் போன்றவர்களின் வேலே முறையும் ரஷ்யாவிலுள்ள வர்க்கபோதம் படைத்த தொழிலாளர்களில் ஐந்தில் நான்கு பகுதிகளே ஒன்றுபடுத்திவிட்டன; சுமார் நாற்பதாயிரம் தொழிலாளர்கள் பிராவ்தாவை வாங்குகின்றனர். இதைவிட அதிகப் பேர் அதைப் படிக்கின்றனர். யுத்தம், சிறை, சைபீரியா, கடுங்காவல் ஆகியவை ஐந்து மடங்கு அல்லது பத்து மடங்கு அதிகமாகட்டும். எனினும் இந்தத் தொழிலாளர் பகுதியை அழித்துவிட முடியாது. அது ஜீவன் நிறைந்தது. புரட்சி உணர்ச்சியால் ஆட்கொள்ளப்பட்டது அது; குறுகிய தேசியவெறியை எதிர்ப்பது அது; சிரமப்படுகிற, சுரண்டப்படுகிற, நசுக்கப்படுகிற மக்களின் சர்வதேசியத்தைத் தாங்கும் சக்தியாக ஜனங்களுக்கு மத்தியில் இது மாத்திரம்தான் நிற்கிறது. ஜனங்களுக்கு மத்தியில் இதுதான் வேரூன்றி நிற்கிறது. பொதுக் குழப்பத்தில் இது மாத்திரம்தான் உறுதியாக நிற்கிறது. காடெட்டுகள், ட்ரூடோவிக்குகள், பிளக்காஞவ், நாஷாஸார்யா ஆகியவர்களின் சமதர்ம-தேசிய வெறியிலிருந்து அரை—பாட்டாளி மக்களேப் பாதுகாத்து அவர்களேச் சமதர்மத்தை நோக்கி இது மாத்திரம்தான் அழைத்துச் செல்கிறது. ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிற் பகுதியின் விசாரணையின் மூலம் இதன் இயக்கம், இதன் நோக்கங்கள், இதன் வேலேகள், எல்லா நாடுகளிலுமுள்ள கூலி அடிமை சகோதரத்துவத்துக்கு இதன் வேண்டுகோள் ஆகியவை ரஷ்யா முழுதும் பரவிவிட்டன.

"இந்தப் பகுதியுடன்தான் நாம் வேலே செய்ய வேண்டும். சமதர்ம-தேசியவெறிக்கு எதிராக இந்தப் பகுதியின் ஒற்றுமையை நாம் பாதுகாக்க வேண்டும். இந்தப் பாதையின் மூலமாகத்தான் ரஷ்யத் தொழிலாளர் இயக்கம் சமதர்மப் புரட்சியை வளர்க்க முடியும்; ஐரோப்பிய பாணியில், தேசிய மிதவாதத்தை வளர்ப்பது அல்ல சரியான பாதை."

லெனின் சொன்னவை எவ்வளவு சரியானவை என்பதை விரைவில் சம்பவங்கள் நிரூபித்தன; சர்வ தேசியத்தைப் பரப்புவதற்காகவும் சமதர்ம தேசிய வெறியை அதன் பல்வேறு வடிவங்களில் அம்பலப்படுத்துவதற்காகவும் இலிச் இடைவிடாது பிரசாரம் செய்துவந்தார்.

அம்மா இறந்த பிறகு நான் நோய்வாய்ப்பட்டேன்; நான் மலேவாசம் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் சொன்ஞர்கள். ஸோயரென்பர்க்கில் ரோதோர்ன்

மலை அடிவாரத்தில் ஆடம்பரமற்ற பகுதியில் மலிவான விடுதியைப்பற்றி, விளம்பரம் இருக்கிறதா என்று பத்திரிகைகளை இலிச் அலசிப் பார்த்தார்; மேரியென்தால் ஹோட்டலில் தங்க நாங்கள் முடிவு செய்தோம். வேனிற் காலம் முழுதும் நாங்கள் அங்கேயே தங்கினோம்.

நாங்கள் புறப்படு முன் வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமான ஒரு மாசிகையை வெளியிடும் திட்டத்துடன் "ஜப்பானியர்" (போஷேயும் பியாட்டாகோவும்) பெர்னினுக்கு வந்தனர். முக்கியமான பிரசினைகளை எல்லாம் அதில் தெளிவாக விவாதிக்க முடியும். மத்திய ஸ்தாபனத்தின் மேற்பார்வையில் தி கம்யூனிஸ்டை பிரசுரிக்கவேண்டும். பி. என்பவரும் என் நீயெவ்ஸ்கியும் (போஷேயும் பியாட்டாகோவும்) உதவிபுரிய வேண்டும். இந்த யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது. "இரண்டாவது இண்டர்நேஷலின் வீழ்ச்சி" என்னும் தலைப்பில் தி கம்யூனிஸ்டுக்கு இலிச் நீண்ட ஒரு கட்டுரை எழுதினர். அதே வேனிற் காலத்தில் ஸினேவியெவ்வின் உதவியுடன் சர்வதேசவாதிகளின் மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்யும் முறையில் சமதர்மமும் யுத்தமும் என்னும் நூல் ஒன்றையும் இலிச் எழுதினர்.

ஸோயரென்பர்க் வாசம் சுகமாக இருந்தது. சுற்றிலும் காடுகள்; உயர்ந்த மலைகள். ரோதோர்ன் சிகரத்தைப் பனி மூடி இருந்தது. ஸ்விஸ் முறைப்படி குறிப்பிட்ட நேரத்தில் தபால்கள் வந்தன. ஸோயரென்பர்க் போன்ற இக்கிராமத்தில் இருந்துகொண்டு, இலவசமாக பெர்னி அல்லது ஸூரிச் வாசக சாலையிலிருந்து புத்தகங்களைப் பெற முடியும் என்பதை நாங்கள் கண்டுபிடித்தோம். விலாசமும் தேவையான புத்தகத்தின் பெயரையும் குறித்தனுப்பினல் போதும். ஏமாற்றுமல் புத்தகங்கள் திருப்பித் தரப்படும் என்பதற்குரிய உத்தரவாதமோ, நற்சாட்சிப் பத்திரமோ கேளாமலும் கேள்விகள் கேட்டு நச்சரிக்காமலும் உடனே புத்தகம் கிடைத்துவிடும். அதிகாரத் திமிர் தலைவிரித்தாடிய பிரான்ஸுக்கு முற்றும் நேர்மாருக இருந்தது இந்த நடைமுறை. இரண்டு தினங்களுக்குப் பிறகு அட்டையில் பாக் செய்யப்பட்ட புத்தகங்கள் கிடைத்துவிடும். அதில் ஒரு டிக்கட்டு இருக்கும். அதன் ஒரு பக்கத்தில் புத்தகம் வேண்டுபவரின் விலாசம் குறிக்கப்பெற்று இருக்கும்; மற்ருெரு பக்கத்தில் புத்தகத்தை அனுப்பிய வாசகசாலையின் பெயர் குறிக்கப்பெற்று இருக்கும். குக்கிராமத்தில் இருந்து கொண்டு வேலைசெய்ய இது இலிச்சுக்கு வசதி அளித்தது. இத்தகைய ஸ்விஸ் பண்பாட்டை இலிச் மிகவும் பாராட்டிப் பேசினர். ஸோயரென்பர்க்கிலிருந்து கொண்டு வேலை செய்வது சுகமாக இருந்தது. சில தினங்களுக்குப் பிறகு இன்னிஸா வந்து எங்களுடன் வசித்தாள். நாங்கள் எல்லோரும் அதிகாலையில் எழுந்து விடுவோம். உணவுக்கு முன்—ஸ்விட்ஜர்லாந்தில் 12 மணிக்குத்தான் சாப்பிடுவார்கள். தோட்டத்தின் மூலைகளில் தனித் தனியாக அமர்ந்து வேலை செய்வோம். அந்த நேரத்தில் இன்னிஸா பியானே வாசிப்பாள்; சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டே வேலை செய்வது மகிழ்ச்சிகரமாய் இருந்தது. உணவுக்குப் பிறகு பகல் பொழுதை நாங்கள் மலையில் கழிப்போம். இலிச் மலைகளை நேசித்தார். மாலையில் ரோதோர்ன் சிகரத்தை அடைய அவர் விரும்புவார்; மேலே அற்புதமான காட்சி; கீழே பனித்திரை இளஞ் சிவப்பு நிறமாக மாறும். "ஷ்ராட்டன்புசே

வில்'' அலைந்து திரிவதையும் அவர் விரும்பினார். இரண்டு கிலோமீட்டர்களுக்கு அப்பால் இத்தகைய பெயருடன் ஒரு மலை இருந்தது. ''சபிப்பிக்கப்பட்ட படிகள்'' இதன் பெயரை நாங்கள் மொழிபெயர்த்தோம். ஏனெனில் இதனுடைய பரந்த உச்சிக்கு ஏறுவது சிரமமாக இருந்தது. வசந்த கால ஓடைகள் ஓடி ஓடி, அதன் பாதை முழுதும் ஒருவிதமான கரடுமுரடான கற்களால் நிறைந்திருந்தது; ரோத்தோர்ன் சிகரத்துக்கு நாங்கள் போகவே இல்லை. அங்கிருந்து தெரிகிற ஆல்ப்ஸ் சிகரத்தின் தோற்றம் அற்புதமாய் இருக்கும். ஆனால் நாங்கள் வீட்டுக்குத் திரும்பும்போது கூடை நிறைய ரோஜா மலர்களையும், பெரிக் கனிகளையும் சேகரித்துக்கொண்டு திரும்புவோம்; நாங்கள் எல்லோரும் ஆர்வத்துடன் காளான்களைச் சேகரித்தோம்; வெள்ளைக் காளான்கள் அங்கே ஏராளமாகக் கிடைத்தன; தினுசு தினுசான காளான்களும் இருந்தன; இவற்றைப் பாகுபடுத்துவதைப்பற்றி நாங்கள் தீவிரமாக விவாதித்தோம்; இதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள், முக்கியமான தத்துவங்களை அடிப்படையாகக்கொண்ட ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருப்பதாக நினைப்பார்கள்.

ஜெர்மனியில் போராட்டம் குமுற ஆரம்பித்தது. ஏப்பிரல் மாதம் ரோஸா லக்ஸம்பர்க்கும் பிரான்ஸ் மெஹரிங்கும் நிறுவிய இன்டர்நேஷனல் வெளிவந்தது. உடனே இது நசுக்கப்பட்டது. ஜெர்மன் சமதர்ம-ஜனநாயகத்தின் நெருக்கடி என்னும் ஜூனியஸின் (ரோஸா லக்ஸம்பர்க்கின்) பிரசுரம் வெளிவந்தது. முக்கியமான எதிரி உங்கள் நாட்டில்தான் இருக்கிறார் என்னும் தலைப்பில் கார்ல் லீப்னெட் எழுதிய பிரசுரம் வெளிவந்தது. ஜெர்மன் இடதுசாரி சமதர்ம ஜனநாயகவாதிகளின் வேண்டுகோள் இது. ஜூன் மாத ஆரம்பத்தில் கார்ல் லீப்னெட்டும் டங்கரும், சமதர்ம ஜனநாயகக் கட்சியின் மத்திய கமிட்டிக்கும் ரீஷ்ஸ்டாக் பகுதிக்கும் வேண்டுகோள் என்னும் தலைப்பில் ஒரு அறிக்கை தயாரித்தனர். யுத்தம் சம்பந்தமாக சமதர்ம ஜனநாயகவாதிகள் பெரும்பான்மையோரின் போக்கை இவர்கள் கண்டித்தனர். இந்தப் பகிரங்கக் கடிதத்தில் ஆயிரம் பேர் கட்சி உத்தியோகஸ்தர்கள் கையெழுத்திட்டனர்.

இடதுசாரி சமதர்ம ஜனநாயகவாதிகளுக்குச் செல்வாக்கு அதிகரிப்பதைக் கண்ட ஜெர்மன் சமதர்ம-ஜனநாயகக் கட்சியின் மத்திய கமிட்டி அதைத் த்டுக்க முடிவு செய்தது. இணைப்பை எதிர்த்தும் கட்சி ஒற்றுமையை நிலைநிறுத்தும்படி வேண்டியும் காட்ஸ்கியும் ஹாஸீயும் பெர்ன்ஸ்டீனும் ஒரு அறிக்கை விடுத்தனர். அதே சமயத்தில் இடதுசாரி எதிர்ப்பை எதிர்த்துத் தன் பெயரிலும் ரீஷ்ஸ்டாக் பகுதியின் பெயரிலும் அது வேறு ஒரு அறிக்கையை விடுத்தது.

இடதுசாரிகளின் சர்வதேச மகாநாடு கூட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வததைப்பற்றி விவாதிப்பதற்காக பெர்னியில் ஜூன் மாதம் 11-ம் தேதி ஒரு மகாநாடு கூட்ட ஸ்விட்ஜர்லாந்தைச் சேர்ந்த ராபர்ட் கிரீம் ஏற்பாடு செய்திருந்தார். அந்த மகாநாட்டில் ஏழு பேர்கள் (கிரீம், ஸினோவியெவ், பி. பி. ஆக்ஸெல்ராட், வார்ஸ்கி, வாலெட்ஸ்கி, பலாபனோவா, மார்கரி) ஆகியவர்கள் பிரசன்னமாய் இருந்தனர். அந்த ஆரம்ப மகாநாட்டில் கலந்துகொண்டவர்களில், ஸினோவியெவ் மாத்திரம்தான் உண்மையான இடதுசாரி; இந்த மகாநாட்டில்

கலந்துகொண்டவர்களில் யாருமே இந்த மகாநாட்டைக் கூட்ட விரும்பவில்லை என்பது அவர்கள் பேசிய பேச்சிலிருந்து தெரியவந்தது.

விளாதிமிர் இலிச் பெரிதும் கிளர்ச்சி அடைந்தார். அவர் பல திசைகளுக்கும் தந்திரமாகக் கடிதங்கள் எழுதினர்; ஸினேவியெவ், ராடெக், பெர்ஸின், கொல்லொந்தாய், லாஸானிலிருந்த தோழர்கள் ஆகியோருக்கு அவர் கடிதங்கள் எழுதினர்; நடக்கவிருக்கும் மகாநாட்டில் உண்மையான இடதுசாரிக்கு இடம் கிடைக்க வேண்டும் என்றும் சாத்தியமான அளவு இடதுசாரிகளிடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்றும் அவர் விரும்பினர். ஏப்ரல் மாத மத்தியில் போல்ஷ்விக்குகள் கீழ்க்கண்டவற்றைத் தயார்செய்தனர்.

1. ஒரு அறிக்கை.
2. தீர்மானங்கள்.
3. நகல் அறிக்கை.

பரிசீலனைக்காகவும் விவாதத்திற்காகவும் இவை பிரசித்திபெற்ற இடதுசாரித் தோழர்களுக்கு அனுப்பப்பட்டன. அக்டோபரில் லெனினும் ஸினேவியெவ்வும் எழுதிய சமதர்மமும் யுத்தமும் என்னும் சிறு நூல் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

செப்டம்பர் 5-ம் தேதியிலிருந்து எட்டாம் தேதி வரையில் ஸிம்மர்வால்டில் ஒரு மகாநாடு நடந்தது. பதினொரு நாடுகளிலிருந்து மொத்தம் 38 பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொண்டனர். இந்த ஸிம்மர்வால்டு மகாநாட்டில் இடதுசாரிகள் ஒன்பது பேர்கள்தான் இருந்தனர்; லெனின், ஸினேவியெவ், பெர்ஸின், ஹோக்லாண்டு, நேர்மென், ராடெக், போர்கார்டு, பிளாட்டன்; மகாநாட்டுக்குப் பிறகு ரோலாண்டு ஹொல்ஸ்ட் இதில் சேர்ந்தார். டிராட்ஸ்கி, ஆக்ஸெல்ராடு, மார்டோவ், நாட்டான்ஸென், செர்னவ், ஒரு பண்டுவாதி ஆகிய ரஷ்யர்களும், இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர். இடதுசாரி ஸிம்மர்வால்டிஸ்டுகளுடன் டிராட்ஸ்கி சேரவில்லை.

மகாநாடு ஆரம்பமாவதற்குச் சில தினங்களுக்கு முன் இலிச் மகாநாட்டுக்காகச் சென்றர். செப்டம்பர் மாதம் 4-ம் தேதி நடந்த ஒரு பிரத்தியேகக் கூட்டத்தில் யுத்தத்தின் தன்மையைப்பற்றியும் சர்வதேச மகாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய தந்திரங்களைப்பற்றியும் இலிச் பேசினர். அறிக்கையை மையமாகக்கொண்ட விவாதம் நடந்தது. யுத்தத்தைப்பற்றியும் சமதர்ம-ஜனநாயகவாதிகளின் கடமைகளைப்பற்றியும் தாங்கள் தயாரித்திருந்த அறிக்கையையும் தீர்மானத்தையும் இடதுசாரிகள் சமர்ப்பித்தினர். பெரும்பான்மையோர் இடதுசாரிகளின் நகலை நிராகரித்தனர். அதற்குப் பதிலாக, தெளிவற்ற மிதமான ஒரு அறிக்கையை அங்கீகரித்தனர். முதல் படி என்னும் கட்டுரையில் ஸிம்மர்வால்டு மகாநாட்டைப்பற்றி இலிச் மதிப்பிட்டிருக்கிறர். மகாநாடு அங்கீகரித்த அறிக்கையில் இடதுசாரிகள் கையெழுத்திட்டனர். மேற்கண்ட கட்டுரையில் இலிச் கேட்கிறர்: "தெளிவின்றியும் மிதமான போக்கிலும் இருந்த அறிக்கையில் நமது மத்திய கமிட்டி கையெழுத்து இட்டது சரிதான ?" இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டு இதற்கு அவரே பதிலும் கூறி இருக்கிறர்:

"நாம் அப்படித்தான் நினைக்கிறோம். நாம் மாறுபடுகிறோம். நமது மத்திய கமிட்டி மாத்திர மல்ல; புரட்சிகரமான மார்க்ஸீயத்தைப் பின்பற்றும் சர்வதேச இடதுசாரிகளும் மாறுபடுகிறார்கள். இந்த மாறுபாட்டைத் தனித் தீர்மானத்திலும் தனி நகல் அறிக்கையிலும் சமரஸ அறிக்கையை ஆதரித்ததற்குக் காரணம் காட்டி வெளியிடும் தனி அறிக்கையிலும் இதை நாம் வெளியிடுகிறோம். எங்கள் அபிப்பிராயங்களையும் கோஷங்களையும் தந்திரங்களையும் நாங்கள் சிறிதும் மறைக்கவில்லை. சமதர்மமும் யுத்தமும் என்னும் நமது சிறு நூலின் ஜெர்மன் மொழிபெயர்ப்பு மகாநாட்டில் விநியோகிக்கப்பட்டது. எங்கள் அபிப்பிராயத்தை நாங்கள் பரப்பினோம்; பரப்பிக் கொண்டிருக்கிறோம்; இனியும் பரப்புவோம். சந்தர்ப்பவாதத்தை எதிர்த்தும் சந்தர்ப்பவாதத்துடன் தொடர்பை அறுத்துக்கொள்ளவும் நடக்கும் உண்மையான போராட்டத்தை நோக்கி, முதல் அடி எடுத்துவைப்பதைக் குறிக்கிறது இந்த அறிக்கை. இது உண்மை. தெளிவற்ற நிலையைக் கூறவும் தெளிவான நிலையை உண்டுபண்ணிப் போராடவும் பரிபூரணமான சுதந்திரத்தை நாம் நிலைநிறுத்தும் பொழுது, ஜெர்மன், பிரஞ்சு, ஸ்வீடிஷ், நார்வேஜிய, ஸ்விஸ், சமதர்மவாதச் சிறுபான்மையோருடன் இந்த நடவடிக்கையை எடுக்க மறுப்பது விலகியிருப்பதாகும்."

ஸிம்மர்வால்டு மகாநாட்டில் இடதுசாரிகள் தங்கள் ஸ்தாபனத்தை நிறுவினர். பொதுவாக அவர்கள் ஒரு விசேஷப் பகுதியாக அமைந்தனர்.

ஸிம்மர்வால்டு மகாநாட்டுக்குமுன் எங்கள் நகல் தீர்மானத்தைக் காட்ஸ்கிய வாதிகளுக்குச் சமர்ப்பிக்க வேணும் என்று இலிச் எழுதினர். "டச்சுக்காரரும் நாமும் இடதுசாரி ஜெர்மனியரும்-வேறு யாரும் இல்லை எனினும் பாதகமில்லை-பின்னர் எல்லோரும் நம்மை ஆதரிப்பார்கள்" என்று அவர் எழுதினார் என்றாலும் முன்னேற்றம் மெதுவாகத்தான் இருந்தது. இலிச்சால் இதைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. முதல் படி என்னும் கட்டுரை புரட்சி இயக்கத்தின் மெதுவான வளர்ச்சியை வலியுறுத்துவதுடன் ஆரம்பமாகிறது. "யுத்தம் சிருஷ்டித்துள்ள மிகப் பெரிய நெருக்கடி சகாப்தத்தில் சர்வதேச சமதர்ம இயக்கத்தின் வளர்ச்சி மெதுவாகத்தான் இருக்கும்." ஆத்திரத்துடன் ஸிம்மர்வால்டு மகாநாட்டிலிருந்து திரும்பிவந்தார் இலிச்.

மலைகளில் பல தினங்கள் அலைந்து திரிந்த பிறகுதான்,—ஸோயரென்பர்க் சூழ்நிலையில் சில தினங்கள் வசித்தோம்.—இதன் பிறகுதான் இலிச் பழைய இலிச் ஆனர். கொல்லொந்தாய் அமெரிக்காவுக்குப் போகிறாள். இடதுசாரி சர்வதேசவாதிகளை ஒன்றுபடுத்தத் தம்மால் கூடுமானதை எல்லாம் செய்யும்படி அவர் கொல்லொந்தாயை வேண்டினர். அக்டோபர் மாத ஆரம்பத்தில் நாங்கள் பேர்னினுக்குத் திரும்பினோம். ஸிம்மர்வால்டு மகாநாட்டைப்பற்றிப் பேசுவதற்காக இலிச் ஜினீவாவுக்குச் சென்றார். அமெரிக்கர்களைப்பற்றிக் கொல்லொந்தாய்க்கு அவர் தொடர்ந்து கடிதங்கள் எழுதினர்.

1945-ம் வருட சரத் காலத்தில் நாங்கள் சுகமாக வாசகசாலைகளில் உட்

கார்ந்தோம்; வழக்கம்போல் நாங்கள் உலாவினோம். ஆனால் இவைகள் எல்லாம் அந்த ஜனநாயகக் கூண்டில் நாங்கள் அடைப்பட்டுக் கிடைக்கிறோம் என்ற உணர்ச்சியை எங்களிடமிருந்து நீக்கவில்லை. அதற்கு அப்பால் புரட்சிப் போர் மூமுறுகிறது. ஜீவசக்தி துள்ளி விளையாடுகிறது; ஆனால் அவைகள் தொலைவில் நடந்தன.

இடதுசாரிகளுடன் நேரடியான தொடர்பு வைத்துக்கொள்வது சம்பந்தமாக பெரினியில் இருந்துகொண்டு, ஒன்றும் செய்ய முடியவில்லை. ஸ்விஸ் இடதுசாரிகளாகிய நானியுடனும் கிராபருடனும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதற்காக, இன்னிஸா பிரஞ்சு ஸ்விட் ஜர்லாந்துக்குச் சென்றது எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆனால் அவர்களை அவளால் காண முடியவில்லை. நானி மீன் பிடித்துக் கொண்டிருந்தார்; கிராபர் வீட்டு வேலைகளில் ஈடுபட்டு இருந்தார். "அப்பாவுக்கு ரொம்ப வேலை இருக்கிறது. இன்று நாங்கள் துணி தோய்க்கும் நாள். அப்பா துணிகளை உலரவைத்துக்கொண்டிருக்கிறார்." இவ்வாறு கிராபரின் சிறிய மகள் இன்னிஸாவுக்குப் பதில் கூறினாள். மீன் பிடிப்பதும் துணிகளை உலர வைப்பதும் மோசமான வேலைகள் அல்ல; பால் பொங்கி வழியாமல் இலிச் பல நாட்கள் காவல் புரிந்திருக்கிறார். ஆனால் இடதுசாரிகளை ஒன்றுபடுத்துவது சம்பந்தமான முக்கியமான விஷயங்களைப்பற்றி விவாதிக்க வேண்டிய சமயத்தில், சலவை வேலையையும் மீன்பிடிக்கும் வேலையையும் பார்த்துக்கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல; வேறு ஒருவர் அனுமதிச் சீட்டுடன் இன்னிஸா பாரீஸுக்குச் சென்றாள். ஸிம்மர்வால்டிலிருந்து திரும்பிய பிறகு, மெர்ஹீமும் போர்த்ரோனும் சர்வதேசத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்துவதற்காகப் பாரீஸில் ஒரு கமிட்டியை அமைத்தனர். போல்ஷ்விக்குகள் சார்பில் கமிட்டியில் அங்கம் வகிக்க இன்னிஸா பாரீஸுக்குச் சென்றாள். இடதுசாரிப் போக்குக்காக அங்கே அவள் கடுமையாகப் போராடினாள். இறுதியில் அவள் வெற்றிபெற்றாள். தமது வேலையைப்பற்றி இலிச்சுக்கு அவள் விரிவாக எழுதினாள். எங்கள் பாரீஸ் பகுதியிலும் அவள் நல்ல வேலை செய்தாள். அந்த அங்கத்தினர்களில் ஒருவராகிய ஸாபோஷ்கோவை அவள் சந்தித்தாள். ஸாபோஷ்கோவ் கடற்படையில் சேர முன்வந்தார்; ஆனால் பிறகு அவர் போல்ஷ்விக் கொள்கைகளை அங்கீகரித்தார். அப்பொழுது பிரஞ்சுச் சிப்பாய்களுக்கு இடையே அவர் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

தோழர் ஷாக்லொவஸ்கி "சிறிய ரசாயன லாபரட்டரி" ஒன்று ஆரம்பித்தார்; கொஞ்சம் பணம் சம்பாதிப்பதற்காக எங்களைச் சேர்ந்தவர்கள்—காஸ்பரோவும் ஸினோவியெவ்வும் அங்கே வேலை செய்தனர். ஒவ்வொருவருடைய அறையிலும் சாட்சி அளித்த சோதனைக் குழாய்களையும் "பல்புகளையும்" ஸினோவியெவ் உற்று உற்றுப் பார்த்தார்.

பெரினியில் தத்துவ வேலை மாத்திரம்தான் செய்ய முடிந்தது; யுத்தம் ஆரம்பமான முதல் வருடத்தில் பல விஷயங்கள் தெளிவாயின; இந்த விஷயங்களில், ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் முக்கியமானவை. 1914-ம் வருடம் நவம்பர் முதல் தேதி வெளியான மத்தியக் கமிட்டி பத்திரிகையில் மத்தியக் கமிட்டியின் அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் கீழ்க்கண்டவற்றை நாங்கள் படித்தோம்; "ஐரோப்பிய சதமர்ம ஜனநாயகவாதிகளின் உடனடியான அரசி

கோஷம் ஐக்கிய குடியரசு ஐரோப்பிய நாடுகளை ஸ்தாபிப்பதாக இருக்க வேண்டும். ஆனால் குறுகிய தேசியவெறி என்னும் பொதுப் பிரவாகத்தில் பாட்டாளி மக்களை இழுப்பதற்காக, எதையும் வாக்களிக்கத் தயாராக இருக்கும் முதலாளிகளுக்கு நேர்மாறான முறையில் ஜெர்மானிய, ஆஸ்திரிய, ரஷ்ய முடியாட்சிகளைப் புரட்சிகரமாகத் தகர்த்து எறியவில்லை என்றால் இந்தக் கோஷம் பலனற்றது, அர்த்தமற்றது என்பதை சமதர்ம-ஜனநாயகவாதிகள் விளக்க வேண்டும்.''

மார்ச்சில் நடந்த, வெளிநாடுகளில் வசிக்கும் பகுதிகளின் மகாநாட்டில் இந்தக் கோஷம் பெருத்த விவாதத்தைத் தூண்டிவிட்டது. மகாநாட்டின் அறிக்கையில் கீழ்க்கண்ட குறிப்பு காணப்பட்டது: ''ஐக்கிய ஐரோப்பிய அரசுகள் என்றும் கோஷத்தின்மீது எழுந்த விவாதம் ஒருதலைச் சார்பான அரசியல் வடிவம் எடுத்ததால், அதன் பொருளாதார அம்சத்தைப் பத்திரிகைகளில் விவாதிக்கும் வரையில், இந்தப் பிரசினையை ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டது.''

ஏகாதிபத்தியம், அதன் பொருளாதார அடிப்படை, பலவீன நாடுகளைப் பலம் பொருந்திய ஏகாதிபத்திய நாடுகள் சுரண்டுவது, காலனிகளைச் சுரண்டுவது, ஆகிய விஷயங்கள் அவற்றின் முழு வடிவத்தில் எழுந்தன. எனவே மத்திய ஸ்தாபனம் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்தது. ''ஏகாதிபத்தியத்தின் பொருளாதார நிலைகளை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்பொழுது, அதாவது மூலதன ஏற்றுமதி, உலகத்தை முன்னேற்றம் அடைந்த வல்லரசுகளுக்கிடையே பங்கு போடுவது - ஐக்கிய ஐரோப்பிய அரசுகள் என்றும் கோஷம் முதலாளித்துவத்தின்கீழ் அசாத்தியம்; அல்லது பிற்போக்கானது......முதலாளித்துவத்தின் கீழ் ஐக்கிய ஐரோப்பிய அரசுகள் காலனிகளைப் பங்குபோட இசைவதையே ஒக்கும்.''

ஆனால், இன்னொரு கோஷத்தை - ஐக்கிய உலக அரசுகள் என்னும் கோஷத்தைக் கோஷிக்க முடியுமா? இது சம்பந்தமாக இலிச் கீழ்வருமாறு எழுதி இருக்கிறார்:

> ''ஐக்கிய உலக அரசுகள் (ஐரோப்பா மாத்திரம் அல்ல) என்னும் கோஷம் தேசிய சமஷ்டியின் தேசிய சுதந்திரத்தின் சர்க்கார் வடிவம்; இதை நாம் சமதர்மத்துடன் இணைக்கிறோம். கம்யூனிஸத்தின் வெற்றி, ஜனநாயக சர்க்கார் உள்பட, சகல சர்க்கார்களுமே இல்லாது மறையச் செய்துவிடும் நிலையை உண்டுபண்ணும்பொழுதுதான் இது சாத்தியமாகலாம். எனினும் தனிக் கோஷம் என்ற முறையில், ஐக்கிய உலக அரசுகள் என்ற கோஷம் சரியானதல்ல என்று நாம் கருதுகிறோம். ஏனெனில் ஒரு நாட்டில் மாத்திரம் சமதர்மம் வெற்றி பெறுவது அசாத்தியம் என்னும் தவறான வியாக்கியானத்துக்கு இது வழிகோலலாம். அத்தகைய நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் ஏற்படும் உறவு சம்பந்தமாகவும் தவறான கருத்தை இது உண்டுபண்ணலாம்.''

1915-ம் வருடம் இலிச்சின் சிந்தனை எந்த வழியில் சென்றது என்பதை இந்தக் கட்டுரை தெளிவுபடுத்துகிறது. உலக யுத்தத்தின் பொருளாதார வேர்களை-ஏகாதிபத்தியத்தை நுணுக்கமாகப் பரிசீலனை செய்யவும் சமதர்மத்துக்காக

நடக்கும் உலகப் போர் எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதை நிர்ண யிக்கவும் அவர் விரும்பினர் என்பது தெளிவாகத் தெரிந்தது.

1915-ம் வருட இறுதியிலும் 1916-ம் வருடத்திலும் இலிச் இந்த வேலையில் ஈடுபட்டார். ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் கடைசி நிலை என்னும் நூலுக்கு அவர் விஷயங்கள் சேகரித்தார். சமதர்மப் புரட்சி சகாப்தத்தைப் பற்றி, ஒரு தெளிவான சித்திரத்தைக் காணவும் அதன் போக்குகளையும் உணர்ச்சி களையும் தெரிந்துகொள்ளவும் அவர் மார்க்ஸ் ஏங்கல்ஸ் நூல்களை மீண்டும் படித்தார்.

ஸூரிச்—1916

"பாருஸ்" பிரசுராலயத்துக்காக 1916-ம் வருடம் ஜனவரி மாதம் ஏகாதி பத்தியம் என்னும் நூலை இலிச் எழுத ஆரம்பித்தார். இந்தப் பிரசினைக்கு இலிச் மிகப் பெரிய முக்கியத்துவம் அளித்தார். ஏகாதிபத்தியத்தின் சாரத்தை அதன் பொருளாதார அரசியல் வடிவங்களில் - தெளிவாக விளக்காமல் யுத்தத் தைச் சரியாக மதிப்பிட முடியாது என்று இலிச் கருதினர். எனவே விருப்பத் துடன் அவர் இந்த வேலையை மேற்கொண்டார். ஸூரிச் வாசகசாலையில் இலிச்சுக்கு வேலை இருந்ததால் நாங்கள் பெப்ருவரி மாத மத்தியில் ஸூரிக்குச் சென்றோம். அங்கே சில வாரங்கள் தங்கினோம். திரும்பச் செல்வதை ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தோம். இறுதியில் ஸூரிச்சிலேயே வசிக்க முடிவு செய்தோம். பெர்னினைவிட ஸூரிச் ஜீவசக்தி நிறைந்ததாக இருந்தது. புரட்சி உணர்ச்சி படைத்த அந்நியநாட்டு வாலிபர்கள் பலர் ஸூரிச்சில் இருந்தனர். அங்கே பல தொழிலாளர்கள் இருந்தனர். அங்கு இருந்த சமதர்ம ஜனநாயகக் கட்சி, இடதுசாரியாக மாறிவந்தது. அங்கே மத்திய வகுப்பு சூழ்நிலை குறை வாக இருந்தது.

ஒரு வீட்டைத் தேடி நாங்கள் அலைந்தோம்; ஸ்ரீமதி பிராபிரிலோக்கை நாங் கள் சந்தித்தோம். அவள் தோற்றம் ஸ்விஸ்காரி போன்று இல்லை; ஆனல் வியன்னக்காரியைப் போன்று அவள் காட்சி அளித்தாள். நீண்ட காலம் வியன்ன ஹோட்டல் ஒன்றில் அவள் வேலை செய்ததுதான் இதற்குக் காரணம். நாங்கள் அவள் வீட்டுக்குச் சென்று அங்கே குடியிருந்தோம். ஆனல், மறு நாள் பழைய குடித்தனக்காரர் திரும்பி வருவதாகத் தெரிந்தது. யாரோ அவருடைய தலையைப் பிளந்துவிட்டார்கள். அவர் ஆஸ்பத்திரியில் இருந்தார்; இப்பொழுது அவர் குணமடைந்து இருந்தார். வேறு ஒரு வீட்டுக்குச் செல்லும்படி பிரா பிரிலோக் எங்களிடம் கூறினள். ஆயினும் மலிவான செலவில் எங்களுக்கு உணவு அளிக்க அவள் இசைந்தாள். சுமார் இரண்டு மாதங்கள் நாங்கள் அங்கே உணவு அருந்தினோம். சாதாரணமான உணவு, ஆனல் தேவையான அளவு அவள் எங்களுக்கு அளித்தாள். பிடியில்லாத கோப்பையில் அவள் காப்பி கொடுத்தாள். அடுக்களையில் நாங்கள் சாப்பிட்டோம். சம்பாஷணை சாதாரண மானது. உணவைப்பற்றி அல்ல. குறிப்பிட்ட சூப்புக்கு எவ்வளவு உருளைக் கிழங்கு உபயோகிக்க வேண்டும் என்பதைப்பற்றியும் அல்ல. ஆனல்குடியிருப்ப வர்களுக்குச் சிரத்தை அளிக்கும் விஷயங்கள். இந்த எளிமையை இலிச் விரும்பி

னர். அங்கே பலர் இருக்கவில்லை என்பதும் அடிக்கடி ஆள்கள் மாறினர்கள் என்பதும் உண்மைதான்; நூதன சூழ்நிலையில்.-ஸூரிச்சின் கீழ்த்தட்டில் நாங்கள் வசிப்பதை விரைவில் உணர்ந்தோம். சில தினங்கள் அங்கே ஒரு விபசாரி உணவு அருந்தினள். தனது தொழிலைப்பற்றி அவள் பகிரங்கமாகப் பேசினள். ஆனல் தனது தொழிலைப்பற்றி அவள் அதிகம் கவலைப்படவில்லை. தனது உடல் நிலையைப்பற்றியும் தனது சகோதரிக்கு எப்படிப்பட்ட வேலை கிடைக்கும் என்பதைப்பற்றியும் அவள் கவலைப்பட்டாள். பல தினங்கள் இரவில் வேலை பார்க்கும் ஒரு நர்ஸும் அங்கே உணவு அருந்தினள். பிறகு மற்றவர்கள் தோன்ற ஆரம்பித்தனர். அதிகம் பேசாத ஒருவர் அங்கே வசித்தார். ஆனல் அவர் பேசிய ஒன்றிரண்டு வார்த்தைகளிலிருந்து அவர் திருட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவாயிற்று. நாங்கள் இருப்பதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. வசதிபடைத்தவர்களால் ஆதரிக்கப்படும் கண்ணியமான ஹோட்டல் போஜன அறையில் கேட்கும் பேச்சைவிட இவர்கள் பேச்சு அதிக "மனிதத்தன்மை" வாய்ந்ததாகவும் ஜீவசக்தி நிறைந்ததாகவும் இருந்தது என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

தனிப்பட்ட உணவு விடுதிக்குச் செல்லும்படி இலிச்சை நான் வற்புறுத்தினேன். ஏனெனில் இந்தக் கூட்டத்தில் இருந்தால் விரும்பத்தகாத ஏதாவது விவகாரத்தில் நாங்கள் மாட்டிக்கொள்ள நேரலாம் என்று பயந்தேன். எனினும் ஸூரிச்சின் "கீழ்த்தட்டில்" உள்ளவர்களின் சில நடபடிக்கைகள் கவர்ச்சி அளிக்காமல் இல்லை.

பிறகு ஜான் ரீட் எழுதிய புரட்சியின் புதல்வி என்னும் நூலை நான் படித்தேன். விபசாரிகளை ரீட் சித்தரித்து இருக்கும் பகுதியை நான் மிகவும் ரசித்தேன். விபசாரிகளின் நிலையை, அவர்களின் தொழிலையோ அல்லது காதலையோ அடிப்படையாகக்கொண்டு அவர் சித்தரிக்கவில்லை. ஆனல் அவர்களுடைய முற்ற தேவைகளை அடிப்படையாகக்கொண்டு அவர் சித்தரித்து இருந்தார். வழக்கமாக, "கீழ்த்தட்டில்" உள்ளவர்களைச் சித்தரிக்கும்பொழுது, அவர்களின் சமூக நிலையைப் பெரும்பாலோர் கவனியாது புறக்கணித்துவிடுகின்றனர்.

நாங்கள் ரஷ்யாவிலிருந்தபொழுது, ஒரு நாள் கார்க்கி எழுதிய அதல பாதாளம் என்னும் நாடகத்தைக் காண ஆர்ட் தியேட்டருக்கு நானும் இலிச்சும் சென்றோம். இதைக் காண இலிச் பெரிதும் விரும்பினர். ஆனல் அமிதமான "நாடகச் சூழ்நிலையும்" சூழ்நிலையை முழு உருவத்தில் சித்தரித்துக் காட்டும் சமூக வாழ்க்கையின் விவரங்கள் அதில் காணப்படாமல் இருப்பதையும் கண்டு அதை அவர் அவ்வளவாக ரசிக்கவில்லை.

பிறகு பிரா பிரிலோக்கை வீதியில் கண்டபொழுது எல்லாம் இலிச் அவளை நட்பு முறையில் வரவேற்றர். அவளை நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். ஏனெனில் நாங்கள் அருகே இருந்த சந்தில் காமெரர் என்னும் சக்கிலியர் ஒருவர் வீட்டில் குடியேறி வசித்து வந்தோம். அந்த வீடு அவ்வளவு வசதியான வீடு அன்று; மிகப் பழைய, பதினேராம் நூற்றூண்டில் கட்டப்பட்ட வீடு அது; அங்கே துர்நாற்றம் சகிக்க முடியவில்லை. அந்த வாடகைக்கு இதைவிட நல்ல வீடு கிடைத்திருக்கும். ஆனல் நாங்கள் வீட்டுக்காரரைப் பெரிதும் மதித்தோம்; அது

தொழிலாளியின் குடும்பம்; அவர்கள் புரட்சிகரமான நோக்கமுடையவர்கள். ஏகாதிபத்திய யுத்தத்தை அவர்கள் கண்டித்தனர். அந்த இடத்தில் உண்மையான சர்வதேசியம் நிலவியது. இரண்டு அறைகளில் வீட்டுக்காரர் வசித்தார். ஒரு அறையில் ஜெர்மன் சிப்பாய் ஒருவரின் மனைவியும் அவருடைய குழந்தைகளும் வசித்தனர்; சிப்பாய் ரொட்டிக் கிடங்கில் வேலை செய்பவர். இன்னொரு அறையில் ஒரு இத்தாலியர் வசித்தார். வேறு ஒரு அறையில் ஆஸ்திரிய நடிகர்கள் வசித்தனர். இவர்களிடம் அழகிய பூனை ஒன்று இருந்தது. நான்காவது அறையில் ரஷ்யர்களாகிய நாங்கள் வசித்தோம். அங்கே குறுகிய தேசியவெறி இடம் பெறவில்லை. ஒரு நாள் சர்வதேசப் பெண்கள் அத்தனை பேரும் அடுப்பைச் சுற்றி கூடி நின்றபொழுது, பிரா கிராமரர் ஆத்திரத்துடன் கூவி, "சிப்பாய்கள் தங்கள் சர்க்காருக்கு எதிராகத் தங்கள் ஆயுதங்களைத் திருப்ப வேண்டும்" என்று கூவினாள். இதன் பிறகு வீட்டை விட்டு வேறு ஒரு வீட்டுக்குக் குடி போகும் யோசனையைக் காது கொடுத்துக் கேட்கவும் இலிச் விருப்பம் இல்லை.

பிரா கிராமரரிடமிருந்து நான் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். குறைந்த செலவில் துரிதமாக எவ்வாறு திருப்தி அளிக்கும் உணவு தயாரிப்பது என்பதை அவள் எனக்குக் கற்றுத் தந்தாள். நான் வேறு விஷயங்களையும் அவளிடமிருந்து கற்றுக்கொண்டேன். மாமிசத்தை இறக்குமதி செய்ய ஸ்விட்ஜர்லாந்து சிரமப்படுகிறது என்றும் வாரத்துக்கு இரு முறை மாமிசம் உபயோகிக்காமல் இருக்கும்படி பிரஜைகளைச் சர்க்கார் வேண்டுவதாகவும் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. "மாமிசம் உபயோகிக்கக் கூடாது" என்று அறிவிக்கப்பட்ட கிழமைகளிலும் கசாப்புக்கடைகாரர்கள் வழக்கம்போல் மாமிசம் விற்றனர். வழக்கம்போல் அன்றும் நான் மாமிசம் வாங்கினேன். அடுப்புக்கு அருகில் நின்றுகொண்டு, மாமிசம் உபயோகிக்கக் கூடாது என்னும் வேண்டுகோளைப் பிரஜைகள் நிறைவேற்றுகிறார்களா என்பதைக் கண்டுபிடிக்க என்ன நடபடிக்கை எடுக்கப்படுகிறது என்று பிரா கிராமரரை நான் கேட்டேன். "இன்ஸ்பெக்டர்கள், வீடுகளுக்குச் சென்று சோதனை போடுவது உண்டா?" என்று வினவினேன்.

"எதற்காகக் கண்டுபிடிக்க வேண்டும்?" என்று ஆச்சரியத்துடன் பிரா கிராமரர் கேட்டாள். "பத்திரிகையில் செய்தி வெளிவந்த பிறகு, மாமிசம் உபயோகிக்கக்கூடாத கிழமைகளில் எந்தத் தொழிலாளி மாமிசம் தின்னுவான்?" முதலாளிகளாய் இருப்பவர்கள்தான் மீறிச் செய்வார்கள்" என்று சொன்னாள். திகைப்படைந்து நின்ற என்னை நோக்கி "அந்நியர்களுக்கு இது அமல் ஆகாது?" என்று அவள் கூறினாள். அறிவுபூர்வமான இந்தப் பாட்டாளி மனப்பாங்கு இலிச்சைப் பெரிதும் கவர்ந்தது.

இலிச் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டதைப் போன்று, ஸூரிச்சில் நாங்கள் "அமைதியாக" வசித்தோம். உள்ளூர் காலனிகளிலிருந்து ஓரளவு ஒதுங்கி வாழ்ந்தோம். நாங்கள் தொடர்ச்சியாக வாசகசாலைகளில் வேலை செய்தோம். சாப்பாட்டுக்குப் பிறகு நாள்தோறும் இளம் தோழர் கிரிஷா உஸிவிச்-அவர் 1919-ம் வருடம் உள்நாட்டு யுத்தத்தில் இறந்து போனார்—அகதிகளின் போஜன விடுதியிலிருந்து வரும் வழியில் அரை மணி நேரம் எங்களுடன் இருந்து பேசிக்கொண்டிருப்பான். சிறிது காலம் எங்கள் மருமகன் ஸெம்லியாட்ஸ்கா காலையில் வந்து

போய்க்கொண்டிருந்தான். பிறகு பட்டினியால் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. அவனுடைய உடை கந்தலாகவும் சேறு படிந்தும் இருந்ததால் ஸ்விஸ் வாசகசாலையில் அவனை அனுமதிக்க மறுத்தனர். வாசகசாலைக்குப் புறப்படு முன் கொள்கை சம்பந்தமான சில விஷயங்களை அவருடன் இலிச் விவாதிக்க வேண்டும் என்று கூறி இலிச்சை அவர் காண முயன்றார்.

ஏரிக்கரையில் சிறிது உலவுவதற்காகவும் சிறிது நேரம் பேசிக்கொண்டிப்ப தற்காகவும் வாசகசாலை நேரத்துக்கு முன்னரே நாங்கள் வீட்டிலிருந்து புறப் பட்டுவிடுவோம். தாம் எழுதிக்கொண் டிருந்த புத்தகத்தைப்பற்றியும் வேறு பல விஷயங்களைப்பற்றியும் இலிச் பேசினார்.

ஸூரிச் பகுதியைச் சேர்ந்த ஊஸிவிச்சையும் காரிடோனுவையும் நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். "வானியா மாமா"வையும் எனக்கு ஞாபகம் இருக் கிறது. லோகத் தொழிலாளி அவ்யெவ்வும் யூரல் பிரதேசத்திலிருந்து வந்திருந்த டர்கினும் பிற்காலத்தில் அரசியல் கல்வி மத்திய காரியாலயத்தில் வேலை செய்த பாய்சோவையும் நாங்கள் சந்தித்தோம். பல்கேரியத் தொழிலாளி ஒருவரை யும் எனக்கு நினைவு இருக்கிறது. ஆனால் அவர் பெயர் எனக்கு மறந்து போய் விட்டது. எங்கள் ஸூரிச் பகுதியைச் சேர்ந்த தோழர்களில் பெரும்பான்மை யோர் பாக்டரிகளில் வேலை செய்தனர். அவர்களுக்கு வேலை அதிகம் இருந்த தால், கூட்டங்கள் அதிகம் நடைபெறவில்லை. இதற்கு நஷ்ட ஈடாக அவர்கள் ஸூரிச் பகுதி தொழிலாளர்களுடன் நல்ல தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருந் தனர். ஸ்விஸ் நகரங்களில் இருந்த பகுதியைவிட இவர்களுக்கு உள்ளூர் தொழி லாளர்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. (சாக்ஸ் தேபாண்ட் இதற்கு விதிவிலக்கு. அங்கே எங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது.)

ஸ்விஸ் இயக்கத்துக்குப் பிரிட்ஜ் பிளாட்டன் தலைமை தாங்கினார்; அவர் கட்சிக் காரியதரிசி. ஸிம்மர்வால்டு பகுதியை அவர் ஆதரித்தார். அவர் ஒரு தொழிலாளியின் புதல்வர். அவர் எளிமையானவர், உண்மையானவர்; ஜனங் களுக்கு இடையே அவருக்கு அதிக செல்வாக்கு இருந்தது. "வோல்ஸ் கிரச்" ஆசிரியர் நோப்ஸூம் ஸிம்மர்வால்டு இடதுசாரிகளுடன் சேர்ந்தார்; இளம் அகதித் தொழிலாளர்கள் - ஸூரிச்சில் பலர் இருந்தனர்; வில்லி முவரென்பேர்க் தலைமையில் தீவிரமாக வேலை செய்தனர். இடதுசாரிகளை ஆதரித்தனர். இவை எல்லாம் ஸ்விஸ் தொழிலாளர் இயக்கத்துடன் எங்களை நெருக்கமாக இணைத்தன; அகதிகளுடன் என்றும் வாழ்க்கை நடத்தாத சில தோழர்கள் ஸ்விஸ் இயக்கத்தில் இலிச்சுக்கு அதிக நம்பிக்கை இருந்தது என்றும், வரவிருக்கும் சமதர்மப் புரட் சியின் மையமாக ஸ்விட்ஜர்லாந்து விளங்கும் என்று அவர் கருதியதாகவும் ப்பொழுது கூறுகின்றனர்.

இது உண்மையல்ல. ஸ்விட்ஜர்லாந்தில் பலமான தொழிலாளி வர்க்கம் ருக்கவில்லை. ஆரோக்கிய வாசஸ்தலம் அது. பலமான முதலாளித்வ நாடுகள் அளிக்கும் துண்டுகளில் வாழ்க்கை நடத்தும் சிறிய தேசம் அது. மொத்தத்தில், ஸ்விஸ் தொழிலாளர்கள் தீவிரப் புரட்சிக்காரர்கள் அல்லர். ஜனநாயகமும், பிரசினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதும், ஸ்விட்ஜர்லாந்தைச் சமதர்ம புரட்சி

யின் மையமாக்கப் போதியவை அல்ல. ஸ்விட்ஜர்லாந்தில் சர்வதேசப் பிரசாரம் இயக்கம் நடத்தவேண்டியதில்லை என்பதும், ஸ்விஸ் தொழிற்சங்க இயக்கத்தையும் கட்சியையும் புரட்சிகரமாக்க உதவி புரியவேண்டியதில்லை என்பதும் இதன் பொருள் அல்ல. ஏனெனில் ஸ்விட்ஜர்லாந்து யுத்தத்தில் இழுக்கப்பட்டிருந்தால், நிலைமை வேகமாக மாறி இருக்கும்.

ஸ்விஸ் தொழிலாளர் கூட்டத்தில் இலிச் பேசினர். பிளாட்டன், நாப்ஸ், முயென்ஸன்பெர்க், ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டார். எங்கள் ஸூரிச் பகுதியும் போலிஷ் தோழர்களும் (தோழர் பிரோன்ஸ்கி அப்பொழுது ஸூரிச்சில் இருந்தார்) ஸூரிச்சில் ஸ்விஸ் ஸ்தாபனங்களுடன் கூட்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய இசைந்தனர். எங்கள் வீட்டிற்கு அருகில் இருந்த "ஸம் அட்டர்" ஹோட்டலில் அவர்கள் கூட ஆரம்பித்தனர். முதல் கூட்டத்தில் சுமார் நாற்பது பேர் கலந்துகொண்டனர். தற்காலப் பிரசினைகளைப் பற்றி இலிச் பேசினர். பிரசினைகளை அவர் கூர்மையாகச் சித்திரித்தார். கூட்டத்தில் இருந்தவர்கள் சர்வதேசவாதிகள் என்றாலும், இலிச் தமது கருத்துக்களை அவ்வளவு கூர்மையாகச் சித்திரித்ததைக் கண்டு அவர்கள் திகைத்தனர். தலையால் கற்சுவரைப் பிளக்க முடியாது என்று ஸ்விஸ் வாலிபர்களின் பிரதிநிதி பேசியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. எங்கள் கூட்டத்தின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. நான்காவது கூட்டத்திற்கு ரஷ்யர்களும் போலிஷ்காரர்களும் மாத்திரம்தான் வந்தனர். சிறிது நேரம் பேசிவிட்டு அவர்கள் வீடு திரும்பினர்.

நாங்கள் ஸூரிச்சில் வசித்த முதல் மாதங்களில் ஏகாதிபத்யம் என்னும் நூலை எழுதும் வேலையில்தான் இலிச் அதிகமாக ஈடுபட்டார். இந்த வேலையில் அவர் லயித்துவிட்டார். தாம் படித்த பல புத்தகங்களிலிருந்து அவர் பல பகுதிகளைக் குறித்துக்கொண்டார். காலனிகளில் அவர் விசேஷக் கவனம் செலுத்தினர். அவர் பல தகவல்கள் சேகரித்திருந்தார். ஆப்பிரிக்கா காலனிகளைப்பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்திருந்ததை மொழிபெயர்க்கும் வேலையை அவர் எனக்கு அளித்தது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. பல ருசிகரமான விஷயங்களை அவர் சொல்லுவது வழக்கம். பிறகு, அவர் எழுதிய ஏகாதிபத்தியத்தை நான் திரும்பப் படித்தபொழுது அவர் சொன்ன கதைகளைப் போன்று அது அவ்வளவு ருசிகரமாக இருக்கவில்லை. ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய நாடுகளின் பொருளாதார வாழ்க்கையை அவர் நுணுக்கமாக பரிசீலனை செய்தார். பொருளாதார முறையைப் பரிசீலனை செய்ததுடன் அவர் நின்றுவிடவில்லை, அந்த முறைக்கு ஒத்து இயங்கின இதர அரசியல் வடிவங்களையும், ஜனங்கள்மீது அவற்றுக்கு இருந்த செல்வாக்கையும் அவர் பரிசீலனை செய்தார். ஜூன் மாதம் புத்தகம் பூர்த்தியாயிற்று.

இரண்டாவது ஸிம்மர்வால்டு மகாநாடு (கியென்தால் மகாநாடு என்று இது அழைக்கப்படுகிறது.) 1916-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதி வரையில் நடந்தது. முதலாவது மகாநாடு முடிந்து எட்டு மாதங்கள்—ஏகாதிபத்திய யுத்தம் அதிக விரிவடைந்த எட்டு மாதங்கள்—மறைந்துவிட்டன. எனினும், ஸிம்மர்வால்டு மகாநாட்டிலிருந்து யென்கி

தால் மகாநாடு அதிகம் மாறுபட்டிருக்கவில்லை. எட்டுப் பிரதிநிதிகளுக்குப் பதிலாக பன்னிரண்டு பிரதிநிதிகள் ஸிம்மர்வால்டு இடதுசாரியில் இருந்தனர். மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் ஒரு முன்னேற்றப் படியைக் குறித்தன. மகாநாடு சர்வதேச சோஷலிஸ்டுப் பூரோவை அழுத்தமாகக் கண்டித்தது. சமாதானத் தீர்மானம் கூறிற்று :

"முதலாளித்வ சமுதாயத்தை அடிப்படையாகக்கொண்டு உறுதியான சமாதானத்தை நிலைநிறுத்த முடியாது. இந்த நோக்கம் நிறைவேற அவசிய நிலைகளைச் சமதர்மம் சிருஷ்டி செய்யும். முதலாளித்துவ தனிச்சொத்து உரிமையை ரத்து செய்வதன் மூலம் சொத்து படைத்த வர்க்கம் ஜனங்களைச் சுரண்டுவதையும் தேசிய இனங்களை நசுக்குவதையும் ரத்து செய்து. யுத்தத்தின் காரணங்களையும் சமதர்மம் ரத்து செய்யும். எனவே, நிரந்தர சமாதானத்திற்காக நடக்கும் போர், சமதர்மத்திற்காக நடக்கும் போராகத்தான் இருக்க முடியும்."

இந்த அறிக்கையைப் போர்க்களத்தில் விநியோகித்ததற்காக மே மாதம் மூன்று ஜெர்மன் அதிகாரிகளும் முப்பத்திரண்டு சிப்பாய்களும் தூக்கிலிடப் பட்டனர். மற்ற எல்லாவற்றையும்விட ஜனங்களைப் புரட்சிக்காரர்களாக்குவதை ஜெர்மன் சர்க்கார் அதிகமாகப் பயந்தது. ஜனங்களைப் புரட்சிக்காரர்களாக்க வேண்டிய அவசியத்தை கியென்தால் மகாநாட்டில் ரஷ்ய சமதர்ம-ஜனநாயகத் தொழில் கட்சியின் மத்தியக் கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையில் வற்புறுத்திற்று. அந்த அறிக்கையின் சாரம் வருமாறு :

"தங்கள் நோக்கம் நிறைவேறுவதற்காகத் தொழிலாளர்கள் தியாகம் செய்ய வேண்டுமே தவிர மற்றவர் நோக்கம் நிறைவேறுவதற்காக அல்ல என்று சூசமாகப் புரட்சியை ஸிம்மர்வால்டு அறிக்கை சுட்டிக்காட்டுவது போதுமானதல்ல. ஜனங்கள் செல்ல வேண்டிய பாதையை ஜனங்களுக்குத் தெளிவாகவும் நிர்ணயமாகவும் சுட்டிக்காட்ட வேண்டும். எங்கே போக வேண்டும், எதற்காக அங்கே போக வேண்டும் என்பது ஜனங்களுக்குத் தெரிய வேண்டும். யுத்த காலத்தில் பொதுஜனப் புரட்சிக் கோஷத்தை வெற்றிகரமாக வளர்த்தால், அது ஏகாதிபத்திய யுத்தத்தை சமதர்மத்திற்காக நடக்கும் உள்நாட்டு யுத்தமாகத்தான் மாற்றும். இந்த உண்மையை ஜனங்களிடமிருந்து மறைப்பது ஆபத்தானது. அதற்கு மாறாக இந்த நோக்கத்தைத் தெளிவாக வெளியிட வேண்டும். இந்தப் பாதையின் ஆரம்பத்தில் நாம் இருக்கும் இந்தக் காலத்தில் "இந்த நோக்கத்தை அடைவது எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், இந்த யுத்தத்தில் 'பிதா நாட்டைப் பாதுகாப்பதைப்பற்றி முதலாளிகள் பேசும்பொழுது அவர்கள் பொய் சொல்லுகிறார்கள்' என்றோ, புரட்சிப் போரில் தங்கள் நாட்டின் ராணுவ நிலையைத் தொழிலாளர்கள் கவனிக்கக் கூடாது என்றோ ஸிம்மர்வால்ட் அறிக்கை கூறுவதைப்போன்று கூறினால் போதாது. 'இங்கே சூசகமாகச் சொல்லி இருப்பதை அதாவது முத

லாளிகள் மாத்திரமல்ல, 'பிதாநாட்டைப் பாதுகாப்பது, என்னும் கோஷத்தை அனுமதிப்பதன் மூலம் காட்ஸ்கீயவாதிகளும், ஏனைய குறுகிய தேசியவாதிகளும் பொய் சொல்லுகிருர்கள். என்ற உண்மையை தெளிவாகச் சொல்ல வேண்டும்; 'தனது சொந்த' சர்க்காரின் தோல்விக்கு அவசியமான நிலையை உண்டுபண்ணுமல், யுத்த காலத்தில் புரட்சிச் செயல் சாத்திய மல்ல என்பதையும் தெளிவாகச் சொல்ல வேண்டும்; பிற்போக்கான யுத்தத்தில் சர்க்கார் தோல்வி அடைவது புரட்சியைச் சாத்தியமாக்கும் என்பதையும், இது மாத்திரம்தான் நிரந்தரமான, ஜனநாயக சமாதானத்தை உண்டுபண்ணும் என்பதையும் தெளிவாகச் சொல்ல வேண்டும். முடிவாக, ரகசிய ஸ்தாபனங்களையும் ராணுவத் தணிக்கைக்கு உட்படாத ரகசியப் பத்திரிகையையும் ஜனங்கள் சிருஷ்டி செய்யவில்லை என்ருல், ஆரம்ப வடிவத்தில் இருக்கும் புரட்சிப் போருக்குத் தீவிர ஆதரவு காட்ட முடியாது என்பதையும், அதை வளர்க்க முடியாது என்பதையும், அது எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் விமர்சனம் செய்ய முடியாது என்பதையும், அதன் தவறுகளைத் திருத்த முடியாது என்பதையும், முறையாக அதை வளர்த்துக் கூர்மையாக்க முடியாது என்பதையும், ஜனங்களுக்குச் சொல்ல வேண்டும்.''

ஜனங்கள் சம்பந்தமாகப் போல்ஷ்விக்குகளின் கருத்தும், இலிச்சின் கருத்தும் என்ன என்பது மத்தியக் கமிட்டியின் இந்த யோசனையில் தெளிவாகத் தெரிகிறது. உண்மையைச் சொன்னுல் ஜனங்கள் பயந்து ஓடிவிடுவார்கள் என்று பயப்படாமல், ஜனங்களிடம் உண்மையை, கலப்பற்ற உண்மையை எப்பொழுதும் சொல்ல வேண்டும். போல்ஷ்விக்குகள் தங்கள் நம்பிக்கைகள் முழுதையும் ஜனங்கள்மீது வைத்தனர். ஜனங்களால் மாத்திரம்தான் சமதர்மத்தை நிறுவ முடியும்.

ஜூன் மாதம் முதல் தேதி ஷில்யாப்நிக்கோவுக்கு நான் கீழ்க்கண்ட கடிதம் எழுதினேன் :

> ''கியென்தாலைப்பற்றி கிரிகோரி உற்சாகத்துடன் இருக்கிருர். அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டுதான் என்னுல் நிலைமையை முடிவு செய்ய முடியும். ஆனுல், வாய்ப்பந்தல் அதிகமாக இருப்பதாகவும் உள் ஒற்றுமை—ஒரு விஷயத்திற்கு உறுதி அளிக்கும் ஒற்றுமை—இல்லை என்றும் தோன்றுகிறது. ஜெர்மானியர்களைத் தவிர—ஓரளவு—மற்றவர்கள் இன்னும் முன்னேறவில்லை.''

ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தன்மையைப் பரிசீலனை செய்ததன் மூலம், இந்த யந்திரத்தின் பல்வேறு பகுதிகளை ஆராய்ந்ததன் மூலம், ஏகாதிபத்தியத்தின் உலக சித்திரத்தை—அழிவை நோக்கிச் செல்லும் முதலாளித்துவத்தின் கடைசி வடிவத்தை—உணர்ந்ததன் மூலம் பல அரசியல் பிரசினைகளைப் புதிய வழியில் வியாக்கியானம் செய்ய இலிச்சால் முடிந்தது. சமதர்மத்துக்கு நடக்கும் போராட்டம் பொதுவாக எந்த வடிவங்கள் எடுக்கும், குறிப்பாக

ரஷ்யாவில் அது எந்த வடிவங்கள் எடுக்கும் என்னும் பிரசினையை மிக விரிவாக அணுக முடிந்தது.

தமது எண்ணங்களை இறுதிவரையில் பரிசீலனை செய்யவும், அவை பக்குவம் அடைய அவகாசம் அளிக்கவும் இலிச் பெரிதும் விரும்பினர். எனவே, நாங்கள் மலைக்குச் செல்ல முடிவுசெய்தோம். மேலும், என்னைப் பீடித்திருந்த நோயை என்னால் உதறித்தள்ள முடியாததால், மலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. குணம் பெற ஒரு வழிதான் இருந்தது. அதுதான் மலைவாசம். ஆறு வாரங்கள் நாங்கள் ஸூரிச்சுக்கு அருகில் இருந்த ஸென்ட் காலனிக்குச் சென்றோம். அங்கே மலைகளுக்கு மத்தியில் இருந்த சூடிவைஸ் விடுதியில் வசித்தோம். பனிமூடிய சிகரங்களுக்கு அருகில் இருந்தது அந்த விடுதி.

எங்களைக் காண யாரும் வரவில்லை. அங்கே ரஷ்யர்கள் வசிக்கவில்லை. எனவே, எல்லா விவகாரங்களிலிருந்தும் நாங்கள் ஒதுங்கி இருந்தோம். பல தினங்கள் நாங்கள் மலைகளில் அலைந்து திரிந்தோம். சூடிவைஸில் வசித்தபொழுது இலிச் ஒரு வேலையும் செய்யவில்லை. மலைகளில் அலைந்து திரிந்தபொழுது தனது மனதைக் கவர்ந்த விஷயங்களைப்பற்றி நிறையப் பேசினர். ஜனநாயகத்தின் நல்ல தன்மைகள் தீய தன்மைகள் ஆகியவற்றைப்பற்றிப் பேசினர். ஆனல், எப்பொழுதும் ஒரே முடிவை பல்வேறு வடிவங்களில் சித்திரித்தார்.

ஜுலை பிற்பகுதியிலும், ஆகஸ்டு மாதமும் நாங்கள் மலைகளில் வசித்தோம். செப்டம்பர் மாத ஆரம்பத்தில் நாங்கள் ஸூரிச்சுக்குப் புறப்பட்டோம். நாங்கள் கீழே இறங்கிக்கொண்டிருந்தபொழுது இலிச் வெண் காளான்களைக் கண்டார். அப்பொழுது மழை பெய்துகொண்டிருந்தாலும், ஸிம்மர்வால்டு இடதுசாரிகளைப் பொறுக்குவதைப் போன்று அவர் ஆர்வத்துடன் அவைகளைப் பொறுக்கினர். நாங்கள் சொட்டச் சொட்ட நனைந்துவிட்டோம். எனினும், ஒரு சாக்கு நிறைய காளான்கள் பொறுக்கினோம். எங்களுக்கு ரயில் தவறிவிட்டது. அடுத்த ரயிலுக்காக இரண்டு மணி நேரம் காத்திருந்தோம்.

ஸூரிச்சில் முன்னர் நாங்கள் வசித்த அதே இடத்தில்—ஸ்பீகின்ஸ்ட்ராஸ்—மீண்டும் குடியேறினோம்.

உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நாங்கள் சூடிவைஸில் இருந்தபொழுது இலிச் தீர்க்கமாகச் சிந்தித்தார். அந்தக் காலத்தில் அதிக முக்கியத்வம் வாய்ந்தவை. தத்துவ விஷயங்களிலே உடன்பாடும், தெளிவான தத்துவ வழியை ஸ்தாபிப்பதும்தான் ரோஸா லக்ஸம்பர்க், ராடெக், டச், புக்காரின், பியாட்டகோவ், ஆகியோருடன் அவருக்கு அபிப்பிராய வித்தியாசம் இருந்தது. கொல்லோந்தாயுடனும் சிறிது அபிப்பிராய பேதம் இருந்தது. பியாட்டகோவுடன் அவருக்கு பலத்த அபிப்பிராய பேதம் இருந்தது. பாட்டாளி மக்களும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும் என்னும் தலைப்பில் ஆகஸ்டு மாதம் அவர் ஒரு கட்டுரை எழுதினர். கையெழுத்துப் பிரதியைப் படித்துவிட்டு, உடனே அதற்குப்பதில்—ஒரு சிறு நூல்—எழுதினர். மார்க்ஸீயத்தின் வடிவமும் ஏகாதிபத்திய பொருளாதார வாதமும் என்று அதற்குத் தலைப்புக் கொடுத்தார். கோபத் தொனியில் எழுதப்பட்ட சிறு நூல் அது ஏனெனில், அந்தக் காலத்தில் இலிச் ஒரு தெளிவான வழியை வகுத்திருந்தார்.

சமதர்மத்துக்காகப் போர் நடக்கும் சகாப்தத்தில் பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் இடையே எத்தகைய உறவு நிலவ வேண்டும் என்பதைப்பற்றி மிகத் தெளிவான முடிவுக்கு வந்திருந்தார். அந்தச் சகாப்தத்தின் அரசியல் போராட்டத்தை ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் என்று அவர் வர்ணித்தார். தமது நூலில் இலிச் எழுதியிருக்கிறார்:

"முதலாளித்துவம் வெற்றி பெற்றுவிட்டது; எனவே, அரசியல் பிரசினைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. 1894–1901 காலத்திய பழம் பொருளாதாரவாதிகளின் வாதம் இது. ரஷ்யாவில் நடந்த அரசியல் போராட்டத்தை இவர்கள் கண்டித்தனர். ஏகாதிபத்தியம் வெற்றி பெற்றுவிட்டது; எனவே, அரசியல் ஜனநாயகத்தைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. இது நவீன ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளின் வாதம்."

சமதர்மத்துக்காக நடக்கும் போராட்டத்தில் ஜனநாயகத்தின் ஸ்தானத்தை அசட்டை செய்ய முடியாது. "இரண்டு அம்சங்களில் ஜனநாயகம் இல்லாமல் சமதர்மம் சாத்திய மல்ல" என்று மேற்கூறிய நூலில் எழுதியிருக்கிறார் இலிச்.

1. ஜனநாயகத்திற்காகப் போராடிப் பயிற்சி பெறுமல் சமதர்மப் புரட்சியில் பாட்டாளி மக்கள் வெற்றிபெற முடியாது.
2. பரிபூரண ஜனநாயகத்தை அடையாமல் வெற்றிபெற்ற சமதர்மம் தனது வெற்றியை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது; பரிபூரண ஜனநாயகத்தை அடையாமல், சர்க்கார் கவிழப்போகின்ற காலத்தில், மனித சமூகத்தை அந்தக் காலத்துக்கு ஏற்ப அழைத்துச் செல்ல முடியாது.

ரஷ்யாவில் நடந்த சம்பவங்கள் அதிவிரைவில் இந்த வார்த்தைகள் உண்மை என்பதைப் மெய்ப்பித்தன. பெப்ருவரிப் புரட்சியும், ஜனநாயகத்திற்காக அதன் பிறகு நடந்த போராட்டமும், அக்டோபர் புரட்சிக்கு வழிகோலின. இடைவிடாது சோவியத்துகளை விரிவுபடுத்துவதும், பலப்படுத்துவதும், சோவியத் முறையை வளர்ப்பதும் ஜனநாயகத்தையே உருவாக்குகிறது; இடைவிடாது இந்தத் தத்துவத்தை வளர்க்கிறது.

சமதர்ம நிர்மாணம் என்னும் அஸ்திவாரத்தில் நின்றுகொண்டு 1915-16-ல் ஜனநாயகப் பிரசினையைப்பற்றி இலிச் தீர்க்கமாகச் சிந்தித்துவிட்டார்; 1915-ஆம் வருடம் நவம்பர் மாதம் ராடெக்குக்குப் (பராபெலம்) பதில் கூறும் முறையில் இலிச் எழுதினர். இது 1915 அக்டோபரில் பேர்னர் டாஜீவா என்னும் பத்திரிகையில் அச்சிடப்பட்டது.

"ஜனநாயகத் துறையில் உறுதியான புரட்சித் திட்டத்தைச் சமதர்மப் புரட்சியின் பெயரால் இகழ்ச்சியுடன் நிராகரிக்கிறார், தோழர் பராபெலம். இது தவறு. ஜனநாயகத்தின் மூலம் அல்லாமல் பாட்டாளி மக்கள் வெற்றி பெற முடியாது. அதாவது பரிபூரண ஜனநாயகத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதன் மூலமும்

அந்த இயக்கத்தின் ஒவ்வொரு படியுடனும் மிகத் தீவிரமாக, மிக உறுதியாக வகுக்கப்பட்ட ஜனநாயகக் கோரிக்கைகளை இணைப்பதன் மூலமும்தான் பாட்டாளி மக்கள் வெற்றி பெற முடியும். சமதர்மப் புரட்சியையும் முதலாளித்துவத்துக்கு எதிராக நடக்கும் புரட்சிப் போரையும் ஜனநாயகத்தின் பிரசினைகளில் ஒன்ருக, இங்கே தேசியப் பிரசினையுடன் ஒப்பிடுவது அசட்டுத்தனமாகும். இதற்கு மாருக முதலாளித்துவத்துக்கு எதிராக நடக்கும் புரட்சிப் போருடன் எல்லா ஜனநாயகக் கோரிக்கைகளுடனும் தொடர்புடைய புரட்சித் திட்டத்தையும் இணைக்க வேண்டும்: ஒரு குடியரசு, ஒரு மக்கள் ராணுவம், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், பெண்களுக்குச் சம உரிமை, தேசங்களுக்குச் சுயநிர்ணய உரிமை முதலியன ஆகும் அவை. முதலாளித்துவம் இயங்கும்வரையில் இந்தக் கோரிக்கைகளை எல்லாம் பெறுவது சாத்தியமெனினும், பூரணமற்ற, உருக்குலைந்த வடிவங்களில் தான் இவற்றை நாம் பெற முடியும். அனுஷ்டானத்தில் இருக்கும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவத்தின்கீழ் அதன் பூரணமற்றதன்மையை அம்பலப்படுத்தி, முதலாளித்துவத்தை வீழ்த்தும்படி நாம் பிரசாரம் செய்கிறோம். ஜனங்களின் வறுமையை நீக்குவதற்கும் ஜனநாயகச் சீர்திருத்தங்களை எல்லாம் பரிபூரணமாகப் பெறுவதற்கும் முதலாளித்துவத்தை வீழ்த்தி முதலாளிகளின் சொத்துகளைப் பறிமுதல் செய்வது அவசியமாகும் என்று பிரசாரம் செய்கிறோம். முதலாளித்துவத்தை வீழ்த்து முன் சில சீர்திருத்தங்கள் ஆரம்பமாகும். அது வீழ்ந்துகொண்டிருக்கும்பொழுது சில ஆரம்பமாகும்; மற்றும் சில அதை வீழ்த்தின பிறகு ஆரம்பமாகும். சமதர்மப் புரட்சி என்பது ஒற்றைப் போராட்டமே அல்ல. அதற்கு மாருக, பொருளாதார ஜனநாயகச் சீர்த்திருத்தங்களை எல்லாம் சுற்றி நடக்கிற பல போராட்டங்களின் சகாப்தம் அது. முதலாளிகளின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதன் மூலம் மாத்திரம்தான் அது பூர்த்தியாகும். இந்த முடிவான நோக்கத்தைப் பெறுவதற்காக நமது ஜனநாயகக் கோரிக்கைகள் அனைத்தையும் நாம் உறுதியான புரட்சி வழியில் வகுக்க வேண்டும். ஒரு ஜனநாயகச் சீர்திருத்தம்கூடப் பரிபூரணமாகப் பூர்த்தியாகு முன் ஒரு குறிப்பிட்ட தேசத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் முதலாளிகளை வீழ்த்தலாம் என்று கருத முடியும். எனினும் சரித்திரரீதியான வர்க்கம் என்ற முறையில் இடைவிடாதும் உறுதியுடனும் புரட்சிகரமான ஜனநாயக உணர்ச்சியின் அடிப்படையில் பாட்டாளி மக்களுக்கு விஷயத்தை விளக்கி அவர்களைத் தயார்ப்படுத்தாமல் முதலாளிகளைத் தோல்வியுறச் செய்ய முடியும் என்று நாம் கருதவே முடியாது.''

அவருடைய எதிர்காலக் கொள்கைகளின் முத்திரை குத்திய எண்ணங்களை மேற்கண்டவை தெளிவாக வெளியிடுவதால், நீண்ட பகுதிகளை மேலே தந்

தேன். சமதர்மத்துக்காக நடக்கும் போராட்டத்தில் ஜனநாயகத்தின் ஸ்தானம் என்ன என்பதைப் பரிசீலனை செய்யும் அவர் கட்டுரைகளில் பெரும்பாலானவை வெகு காலத்துக்குப் பிறகு வெளிவந்தன. பராபெலத்துக்கு எதிரான கட்டுரை 1927-லும் ''மார்க்ஸீயத்தின் வடிவம்'' என்னும் கட்டுரை 1924-லும் வெளி வந்தன. அதிகப் பிரதிகள் வெளிவராத மாசிகைகளில் வெளிவந்த காரணத்தால், அவை அதிகம் பிரசாரமாகவில்லை. எனினும் இந்தக் கட்டுரைகளைப் படிக்கவில்லை என்ருல், சுயநிர்ணய உரிமை பெறத் தேசங்களுக்கு இருக்கும் உரிமையைப்பற்றி இலிச் ஏன் இவ்வளவு வேகத்துடன் வாதித்தார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாது. ஜனநாயகத்தைப்பற்றி இலிச்சின் பொது மதிப்பு என்ன என்னும் திருஷ்டியில் இதைப் பரிசீலனை செய்தால்தான் இலிச்சின் வேகத்திற்குக் காரணம் விளங்கும்.

பொதுவான ஜனநாயகக் கோரிக்கைகளைச் சரியாக அணுக ஒருவருக்கு இருக்கும் திறமை, சுயநிர்ணய உரிமை சம்பந்தமாக அவருக்கு இருக்கும் கருத்தைச் சார்ந்து நிற்கிறது என்று இலிச் கருதினுர் என்பதை மறந்துவிடலாகாது. இது சம்பந்தமாக ரோஸா லக்ஸம்பர்க், ராடெக், டச், கிவஸ்கி, மற்ற தோழர்கள் ஆகியோருடன் இலிச் நடத்திய விவாதம் இந்த அடிப்படையில்தான் நடத்தப்பட்டது. கிவஸ்கிக்கு எதிரான சிறு நூலில் அவர் எழுதி இருப்பதாவது:

> ''எல்லா நாடுகளும் சமதர்மத்தை அடையும்; இது தவிர்க்க முடியாதது. ஆனுல், ஒரே விதமான வழியில் அவை இதை அடையாது; ஒவ்வொரு நாடும் ஜனநாயகத்தின் இந்த வடிவத்தில், அல்லது அந்த வடிவத்தில் சில புதிய அம்சங்களைப் புகுத்தும்; இந்த, அல்லது அந்த விதமான பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்; இந்த அல்லது அந்த விதமான சமதர்ம மாற்றத்தைச் சமூக வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் புகுத்தும்; ''சரித்திரவியல் லோகாயதத்தின் பெயரால்'' இந்த அம்சத்தின் எதிர்காலத்தை ஒரே விதமான வர்ணத்தில் தீட்டுவதைவிட,தத்துவரீதியாக முட்டாள்தனமானதும், அனுஷ்டானரீதியாக அசட்டுத்தனமானதும் வேறில்லை.''

சமதர்ம நிர்மாணம் என்பது பொருளாதார நிர்மாணம் மாத்திர மல்ல. சமதர்ம நிர்மாணத்தின் வெறும் அடித்தளம், அஸ்திவாரம், மாத்திரம்தான் பொருளாதாரம். முழு சமூக அமைப்பையும் புனர்நிர்மாணம் செய்வது-சமதர்மப் புரட்சிகர ஜனநாயகத்தின் அடிப்படையில் புனர்நிர்மாணம் செய்வதுதான் - சமதர்ம நிர்மாணத்தின் அடிப்படை அம்சம் ஆகும்.

இதுதான் ஒருகால், லெனினேயும் டிராட்ஸ்கியையும் அதிகமாகப் பிரித்திருக்கலாம். ஜனநாயக உணர்ச்சியை, சமதர்ம நிர்மாணத்தின் ஜனநாயக தத்துவங்களை, ஜனங்களின் வாழ்க்கையின் போக்கு முழுதையும் புனர்நிர்மாணம் செய்யும் வேலையை டிராட்ஸ்கி உணரவே இல்லை. இலிச்சுக்கும் புக்காரினுக்கும் பின்னர் தோன்றிய வித்தியாசங்கள் அந்தக் காலத்தில் - 1916-ல் ஆரம்ப வடிவத்தில் இயங்கின. ஆகஸ்ட் மாத இறுதியில் ஜுகென்ட்-இன்டர்நேஷனல் பத்திரி

கையின் ஆருவது இதழில் நோட்டா - பினு என்னும் பெயரில் புக்காரின் ஒரு கட்டுரை எழுதினர். அதில் அவர் சர்க்காரின் ஸ்தானத்தைக் குறைவாக மதிப்பிட்டார்; பாட்டாளி மக்களின் ஸ்தானத்தையும் குறைவாக மதிப்பிட்டார். ஜூகென்ட் - இன்டர்நேஷனலுக்கு அனுப்பிய ஒரு குறிப்பில் புக்காரினுடைய இந்தத் தவறுகளை இலிச் சுட்டிக்காட்டினர். முழு சமூக அமைப்பையும் புனர் நிர்மாணம் செய்வதில் பாட்டாளி மக்களுக்குத் தலைமை ஸ்தானம் அளிக்கும் ஆற்றல் பெற்றது பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்வம் ; 1916-ஆம் வருடப் பிற்பகுதியில் இலிச்சை அதிகமாகக் கவர்ந்த விஷயம் இதுதான்.

ஜனநாயகக் கோரிக்கைகள் குறைந்தபட்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. சூடிவைஸிலிருந்து திரும்பிய பிறகு, ஷில்யாப் நிக்கோவுக்கு எழுதிய முதல் கடிதத்தில், லிட்டோபிஸி என்னும் பத்திரிகையில் எழுதிய கட்டுரைக்காகப் பாஸாரோவை இலிச் திட்டினர். குறைந்தபட்சக் கோரிக்கையை ரத்து செய்துவிட வேண்டும் என்று அந்தக் கட்டுரையில் பாஸாராவ் எழுதினர். சர்க்காரின் ஸ்தானத்தையும், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்வம் முதலியவைகளையும் குறைவாக மதிப்பிட்ட புக்காரினுடன் அவர் வாதாடினர். பாட்டாளி மக்களின் தலைமை ஸ்தானத்தை உணரத் தவறியதற்காக, கிவஸ்கிமீது அவர் ஆத்திரப்பட்டார். "தத்துவ அபிப்பிராயத்தின் சூமக நிலைமையை வெறுப்புடன் பார்க்காதீர்கள். நெருக்கடியான இந்தக்காலத்திய வேலைகளுக்கு உண்மையில் இது தேவையாகும்."

சர்க்கார் சம்பந்தமாக மார்க்ஸும் ஏங்கல்ஸும் எழுதியவைகளை எல்லாம் இலிச் கவனமாக மீண்டும் படித்தார். அவர்கள் எழுதியவற்றிலிருந்து குறிப்புகள் எடுத்துக்கொண்டார். வரவிருக்கும் புரட்சியின் தன்மையைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள இது அவருக்கு உதவிபுரிந்தது. அந்தப் புரட்சியின் கடமைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளவும் இது அவருக்கு உதவி புரிந்தது.

யுத்தம் சம்பந்தமாக எந்தக் கொள்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்வதற்காக ஸ்விஸ் இடதுசாரிகளின் மகாநாடு நவம்பர் மாதம் முப்பதாம் தேதி நடந்தது. ஸ்விட்ஜர்லாந்தில் அனுஷ்டானத்தில் இருக்கும் ஜனநாயக முறைகளை ராணுவத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தைப்பற்றி வின்டர்தரிலிருந்து எ. ஷிமிட் பேசினர். இந்த விஷயத்தைப்பற்றி ஓட் எடுக்க வேண்டும் என்று யோசனை கூறி ஷிமிட்டுக்கு மறு நாள் லெனின் எழுதினர். பிரசினையைக் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் லெனின் கூறினர்: "ராணுவ அதிகாரத்தைப் பரிபூரணமாக அழிப்பதற்கு இருக்கும் ஒரே வழி, தொழிலிலும், விவசாயத்திலும் பெரும்பாலான முதலாளித்வ ஸ்தாபனங்களைப் பறிமுதல் செய்வதுதான், அல்லது பறிமுதலை எதிர்ப்பதுதான் என்ற அடிப்படையில் ஓட் எடுக்க வேண்டும்.

"இந்த விஷயத்தில் அனுபவரீதியான அரசியல் அடிப்படையில் அதே விஷயத்தை நாம் சொல்லுவோம். முதலாளித்துவத்தை அழிப்பதுடன் ராணுவத்தைப் பரிபூரணமாக அழிக்கும் பிரசினையையும் இணைத்துப் பார்க்க வேண்டும் என்பதை நாம் தத்துவரீதியில் அங்கீகரிக்கிறோம்" என்று ஷிமிட்டுக்கு இலிச் எழுதினர்.

1916-ஆம் வருடம் டிசம்பர் மாதம் எழுதிய கடிதத்தில் - இது பதினைந்து வருடங்களுக்குப் பிறகுதான் பிரசுரிக்கப்பட்டது - லெனின் இந்தப் பிரசினையைப் பற்றி எழுதினர் :

"இத்தகைய பிரசினைகளை - சமதர்மப் புரட்சி சம்பந்தமான பிரசினையைக்கூட - வேண்டுகோளின் மூலம் தீர்த்துவிட முடியும் என்று நம்பும் அளவுக்கு நான் சிறுபிள்ளைத்தனமானவன் என்று நீங்கள் கருதுகிறீர்களா என்ன? இல்லை. ஒரு உதாரணத்தைக் கொடுக்க மாத்திரம்தான்—அதுவும் ஒரு பகுதியின் சித்திரத்தை மாத்திரம்தான், அதாவது பிதா நாட்டைப் பாதுகாக்கும் கோஷத்தை நிராகரிப்பது சம்பந்தமாகத் தீவிரமான கொள்கையை மேற்கொள்வதற்குக் கட்சியின் பிரசாரத்தில் எத்தகைய மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை மட்டும்தான்—நான் தெரிவிக்க விரும்புகிறேன். பிரசினையின் ஒரு பகுதிக்கு மாத்திரம்தான் இது உதாரணம். இதைவிட வேறு எதையும் நான் கோரவில்லை."

அந்தக் காலத்தில் நடந்த சம்பவங்களை எவ்வாறு தர்க்கவியல் திருஷ்டியுடன் பார்க்க வேண்டும் என்கிற பிரசினையும் இலிச் கவனத்தைக் கவர்ந்தது. "எர்பர்ட் திட்டத்தை" விமர்சனம் செய்தபொழுது ஏங்கல்ஸ் எழுதிய கீழ்க்கண்ட வாசகத்தை அவர் பிடித்துக்கொண்டார்.

"இத்தகைய கொள்கை, இறுதியில் கட்சியைத் தவருன பாதைக்குத்தான் இழுத்துச் செல்லும். பொதுவான அரசியல் பிரசினைகளை முன்னணியில் வைத்ததன் மூலம் பெரிய சம்பவங்கள் வெடிக்கும் முதல் நாளிலேயே, முதல் அரசியல் நெருக்கடியிலேயே முன்னுக்கு வரும் உடனடியான பிரசினைகள் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன."

இந்தப் பகுதியை இலிச் குறித்துக்கொண்டார். பிறகு கொட்டை எழுத்துக்களில் அவர் எழுதினர்:

பொதுவான பிரசினைகளை முன்னுக்குத் தள்ளி உடனடியான பிரசினைகள் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன! குறித்துக்கொள்ளுங்கள்! அற்புதமானது! இதுதான் முக்கியமானது! குறித்துக் கொள்ளுங்கள்.

"குறிப்பிட்ட சரித்திர நிலைகள் அனைத்தையும் குறிப்பாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மார்க்ஸீய தர்க்கவியல் கோருகிறது" என்று ஜூனியஸின் சிறு நூலை விமர்சனம் செய்தபொழுது இலிச் எழுதினர். எல்லா விஷயங்களையும் அவைகளின் எல்லாத் தொடர்புகளிலும் உள் தொடர்புகளிலும் காண அந்தக் காலத்தில் அவர் பெரு முயற்சி செய்தார். இந்த அடிப்படையில் ஜனநாயகப் பிரசினையையும், தேசங்களின் சுயநிர்ணய உரிமையையும் அவர் அணுகினர்.

1916-ஆம் வருடம் சரத் காலத்திலும், 1917-ஆம் வருட ஆரம்பத்திலும் அவர் தத்துவ வேலையில் முழுக்க முழுக்க ஈடுபட்டார். வாசகசாலை திறந்திருந்த

நேரத்தை எல்லாம் அவர் பயன்படுத்திக்கொண்டார். ஒன்பது மணிக்கு வாசக சாலைக்குச் சென்று பன்னிரண்டு மணிக்குத் திரும்புவார்; பத்து நிமிடங்களில் வீட்டுக்கு வருவார்; சாப்பிட்ட பிறகு (வாசகசாலை பன்னிரண்டு மணியிலிருந்து ஒரு மணிவரையில் மூடப்படும்.) மீண்டும் வாசகசாலைக்குச் சென்று ஆறு மணிக்கு வீடு திரும்புவார். வீட்டில் வேலை செய்ய வசதி இருக்கவில்லை. எங்கள் அறையில் வெளிச்ச வசதி இருந்தது. என்றாலும், ஜன்னலுக்கு எதிரில் ஒரு பாக்டரி இருந்தது. அங்கிருந்து துர்நாற்றம் வீசும். இரவு வெகுநேரமான பிறகு தான் நாங்கள் ஜன்னலைத் திறப்போம். வியாழக்கிழமை வாசகசாலை மூடப் படும். அன்று சாப்பிட்ட பிறகு நாங்கள் ஸூரிச்பெர்க் மலைக்குச் செல்வோம். வாசகசாலையிலிருந்து திரும்பும்பொழுது நீலக் காகிதத்தில் சுற்றப்பட்ட இரண்டு சாக்லெட் கட்டிகளை இலிச் வாங்குவார். ஒரு கட்டியின் விலை 15 சென்ட். சாப் பிட்ட பிறகு, சாக்லெட்டுடனும் புத்தகங்களுடனும், நாங்கள் மலைக்குச் செல் வோம். அடர்ந்த புதர் எங்களுக்குப் பிடித்த இடம். அங்கே ஜனக் கூட்டம் இராது. புல்லில் படுத்துக்கொண்டு இலிச் கவனமாகப் படிப்பார்.

எங்கள் சொந்த வாழ்க்கையில், அந்தக் காலத்தில் தீவிர சிக்கனத்தை நாங் கள் மேற்கொண்டோம். பணம் சம்பாதிப்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று இலிச் எங்கும் தேடினார். இதைப்பற்றி அவர் கிரானெட்டுக்கும் கார்க்கிக் கும் உறவினர்களுக்கும் எழுதினார். ஒரு தரம் ஒரு நிகண்டு தயாரிக்க வேண்டும் என்னும் பைத்தியக்காரத்தனமான திட்டத்தைக்கூட அவர் உருவகப்படுத்தினார். அதில் நான் வேலை செய்ய வேண்டும் என்பது திட்டம். இந்தப் பிரசினைகளை ஆராய்வதில் நான் ஈடுபட்டேன். ஸூரிச்சிலுள்ள பள்ளிக்கூடங்கள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வதிலும் நான் கவனம் செலுத்தினேன். இந்தப் பைத்தியக்காரத்தனமான திட்டம், இலிச்சைப் பெரி தும் உற்சாக மூட்டிற்று. இந்த எண்ணத்தை யாரும் திருடாமல் இருக்கும்படி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றுகூட அவர் எழுதினார்.

எழுதுவதன் மூலம் ஏதாவது சம்பாதிக்கலாம் என்ற நம்பிக்கைக்கு இடம் இருக்கவில்லை. எனவே, ஸூரிச்சில் ஒரு வேலை தேட நான் முடிவு செய்தேன். அரசியல் அகதிகள் நிவாரண சங்கங்களின் காரியாலயம் ஒன்று ஸூரிச்சில் இருந் தது. பெலிக்ஸ் யாகோவ் லெவிக் கோன் என்பவர் அதன் தலைவர். காரியாலயத் தின் காரியதரிசியாக நான் நியமிக்கப்பட்டேன்.

பெலிக்ஸ் யாகோவ் லெவிக்கோனுக்கு நான் உதவி புரிந்தேன். இதன் மூலம் கிடைத்த வருவாய் பெயர் அளவில்தான். எனினும் இந்த வேலையைச் செய்ய வேண்டிய திருந்தது. தோழர்களுக்கு வேலை தேடிக்கொடுக்க உதவி புரிய வேண்டிய திருந்தது; வைத்திய உதவிக்கும் ஏற்பாடு செய்யவேண்டியதிருந்தது. அப்பொழுது நிதி மிகக் குறைவாகத்தான் இருந்தது. உண்மையான உதவி கிடைப்பதைவிட, திட்டமிடுவதுதான் அதிகமாக இருந்தது. சுய உதவியுடன் இயங்கும் அடிப்படையில் ஒரு தேகாரோக்கிய விடுதி அமைக்கத் திட்டம் வகுக் கப்பட்டது எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஸ்விஸ்காரர்கள் அத்தகைய தேக ஆரோக்கிய விடுதி அமைத்திருக்கவில்லை. தோட்ட வேலையிலோ, அல்லது திறந்த வெளியில் உட்கார்ந்துகொண்டு பிரம்பு நாற்காலிகள் பின்னும் வேலையிலோ,

நோயாளிகள் நாள்தோறும் பல மணி நேரங்கள் ஈடுபட்டால் அவர்களைப் பராமரிக்கும் செலவை இது குறைக்கும். அரசியல் அகதிகளிடையே காச நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

நிலைமை அதிகப் புரட்சிகரமானதாகும்வரையில் அவசரமின்றியும், அமைதியாகவும், நாங்கள் ஸூரிச்சில் வசித்தோம். தத்துவத் துறையிலே வேலை செய்ததுடன் சரியான ராஜ தந்திர வழியையும் உருவகப்படுத்துவது மிக முக்கியமானது என்று இலிச் கருதினர். சர்வதேச அளவில் பிளவு ஏற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் இரண்டாவது இன்டர்நேஷனலுடனும் சோஷலிஸ்டுக் காரியாலயத்துடனும் உள்ள தொடர்பை அறுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்றும், காட்ஸ்கி அன்ட் கம்பெனியுடன் உள்ள தொடர்பை என்றென்றைக்கும் அறுத்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும், ஸிம்மர்வால்ட் இடதுசாரி சக்திகளுடன் மூன்ருவது இன்டர்நேஷனலை நிர்மாணிக்கும் வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கருதினர். ரஷ்யாவில் கீட்ஸேயுடனும், ஸ்போவிலெவ்வுடனும், நிர்மாணக் கமிட்டியைப் (மென்ஷ்விக்குகளின் தலைமை ஸ்தானம்) பின்பற்றுகிறவர்களுடனும் இருக்கிற தொடர்பையும், டிராட்ஸ்கியைப் போன்று, சமரசத்திற்கும் ஒற்றுமையைப்பற்றிப் பேசுவதற்கும் இது கால மல்ல என்பதையும் உணரத் தவறுகிறவர்களுடனும் இருக்கிற தொடர்பையும் அறுத்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் அவர் கருதினர். சமதர்மத்துக்காகப் புரட்சிகரமான போராட்டம் நடத்த வேண்டும்; சொல்லுடன் செயல் ஒத்துப்போகாத சந்தர்ப்பவாதிகளை, உண்மையில் முதலாளிகளுக்குச் சேவை செய்து பாட்டாளி மக்களின் லட்சியத்தைக் காட்டிக்கொடுக்கும் சந்தர்ப்பவாதிகளை, அம்பலப்படுத்த வேண்டும். 1916-ஆம் வருட இறுதியிலும், 1917-ஆம் வருட ஆரம்ப மாதங்களிலும் சமரசத்தை இலிச் வெறுத்ததைப் போன்று வேறு எந்தக் காலங்களிலும் சமரசமாகப் போவதை அவர் வெறுத்ததில்லை என்று கூறலாம். புரட்சி வருகிறது என்று அவர் திடமாக நம்பினர்.

அக்டோபர் புரட்சிக்கு முன்பு

(1917)

ஸூரிச் பீப்பிள்ஸ் அவுஸில் நடந்த வாலிபர் கூட்டத்தில் 1905-ம் வருடத்துப் புரட்சியைப்பற்றி 1917-ம் வருடம் ஜனவரி மாதம் 22-ம் தேதி விளாதிமிர் இலிச் பேசினர். அந்தக் காலத்தில் புரட்சி மனப்பான்மை படைத்த ஜெர்மானிய, இத்தாலிய நாட்டு வாலிபர்கள்—ஏகாதிபத்திய யுத்தத்தில் பங்குகொள்ள இவர்கள் விரும்பவில்லை—ஸூரிச்சில் இருந்தனர். தொழிலாளர்களின் புரட்சி அனுபவத்தை எவ்வளவு தெளிவாக உணர்த்த முடியுமோ அவ்வளவு தெளிவாக இந்த வாலிபர்களுக்கு உணர்த்த விளாதிமிர் இலிச் விரும்பினர். மாஸ்கோ எழுச்சியின் தன்மையை அவர்களுக்கு எடுத்துக்காட்ட அவர் ஆசைப்பட்டார். வரவிருக்கும் ஐரோப்பிய புரட்சியின் முன்னேடி 1905-ம் வருடத்துப் புரட்சி என்று லெனின் கருதினர்.

> "வரவிருக்கும் இந்தப் புரட்சி பாட்டாளி மக்களின் புரட்சியாகத்தான் இருக்க முடியும் என்பது திண்ணம்; அது பாட்டாளி மக்களின் புரட்சியாக, சமதர்மப் புரட்சியாக இருக்கும். உறுதியான போராட்டங்கள்தான், உள்நாட்டுப் போர்கள் மாத்திரம்தான் முதலாளித்துவம் என்னும் நுகத்தடியிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிக்கும் என்பதை வரவிருக்கும் புரட்சி ஒரு புறம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டும்; மறு புறம் சுரண்டப்பட்ட மக்களின் தலைவர்களாக வர்க்கபோதம் படைத்த பாட்டாளி மக்கள் மாத்திரம்தான் வர முடியும்; வருவார்கள் என்பதை எடுத்துக் காட்டும்" என்றார் அவர்.

இதுதான் நடக்கப் போகிறது என்று இலிச் திடமாக நம்பினர். ஆனல், வரவிருக்கும் புரட்சி இவ்வளவு விரைவில் வரும் என்பது அவருக்குத் தெரிய முடியாதது இயற்கைதானே.

> "முதிய தலைமுறையைச் சேர்ந்த நாங்கள் வரவிருக்கும் புரட்சியின் முடிவான போராட்டங்களைக் காண உயிருடன் இராமல் போகலாம்" என்று துக்கத்துடன் கூறி, தமது பிரசங்கத்தை முடித்தார் இலிச்.*

---

* 1905-ம் வருடப் புரட்சி என்ற நூல்.

எனினும், வரவிருக்கும் புரட்சியைப்பற்றி மாத்திரம்தான் இலிச் நினைத்தார்; அதற்காக வேலை செய்தார். ஒரு நாள் சாப்பாட்டுக்குப் பிறகு, வாசகசாலைக்கு இலிச் புறப்பட்டுக்கொண் டிருந்தபொழுது, பாத்திரங்களை நான் கழுவி முடித்த சமயம், பிரான்ஸ்கி ஓடிவந்தார். "நீங்கள் செய்திகளைக் கேட்க வில்லையா? ரஷ்யாவில் புரட்சி நடக்கிறது!" என்றார். விசேஷ அனுபந்தங்களில் வெளி வந்த செய்தியை அவர் சொன்னார். பிரான்ஸ்கி போன பிறகு, எல்லாப் பத்திரிகை களும் தொங்கவிடப்பட்டிருக்கும், தடாகக் கரைக்கு நாங்கள் சென்றோம்.

தந்திகளை எல்லாம் நாங்கள் பல முறை படித்தோம். ரஷ்யாவில் புரட்சி நடக் கிறது. இலிச்சின் மனம் வேகமாக வேலை செய்தது; பகல் பொழுது எப்படிக் கழிந்தது என்பது எனக்கு ஞாபகம் இல்லை. மறு நாள் சர்க்கார் அனுப்பிய பெப்ருவரிப் புரட்சியைப்பற்றிய தந்திகள் பல பிரசுரிக்கப்பட்டன. ஸ்டாக் ஹோமிலிருந்த கொல்லொந்தாய்க்கு அப்பொழுது இலிச் கடிதம் எழுதிக்கொண் டிருந்தார்.

> "இரண்டாவது இண்டர்நேஷனல் வழியில் மீண்டும் செல்லவே கூடாது! காட்ஸ்கி வழியில் மீண்டும் செல்லவே கூடாது; மிகப் புரட்சிகரமான திட்டத்தையும், மிகப் புரட்சிகரமான முறைகளையும் மேற்கொள்ள வேண்டும்."

மேலும் அவர் எழுதினார்:

> "இதுவரையில் செய்யாத அளவு புரட்சிகரமான பிரசாரம் இனிச் செய்ய வேண்டும்; சர்வதேசப் பாட்டாளி மக்களின் புரட்சிக் காகவும், தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் (காடெட் பக்கீர்கள் அல்ல) அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும் கிளர்ச்சி செய்ய வேண்டும்; போராட வேண்டும்."

சமரசத்திற்கு இட மில்லாத தெளிவான வழியை இலிச் உடனே மேற் கொண்டார். ஆனால் புரட்சி அளித்த சந்தர்ப்பத்தின் தன்மையை அவர் உணர வில்லை. 1905-ம் வருடப் புரட்சியை அளவு கோலாகக்கொண்டு அவர் சொன் னார்: "சட்டரீதியான வேலையையும் சட்ட விரோதமான வேலையையும் இணைப் பதுதான் மிக முக்கியமான வேலை" என்று.

என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு மறு நாள் கொல்லாந்தாயிட மிருந்து தந்தி வந்தபொழுது அவர் வேறு விதமாக எழுதினார்; குறிப்பாக எழுதி னார். உடனே தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் அதிகாரத்தைக் கைப் பற்ற வேண்டும் என்று அவர் எழுதவில்லை. ஆனால் அதிகாரத்தைக் கைப்பற்ற வும், ஜனங்கள் ஆயுதம் ஏந்தும்படி செய்யவும், உணவு, சமாதானம், சுதந்திரம், ஆகியவற்றுக்காகப் போராடவும் ஜனங்களைத் தயார்ப்படுத்த உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கும்படி அவர் எழுதினார்:

> "விரிவாகப் பரவுங்கள்! புதிய பகுதிகளைத் தட்டி எழுப்புங்கள்! தூண்டும் புதிய சக்தியைத் தட்டி எழுப்புங்கள்; எல்லா அமைப்பு களிலும் புதிய ஸ்தாபனங்களை அமையுங்கள்; ஆயுதம் ஏந்திய தொழி

லாளர் பிரதிநிதிகளின் சோவியத் அதிகாரத்திற்கு வந்தால்தான் சமாதானம் ஏற்படும் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும்.''

ஸினோவியெவ்வுடன் சேர்ந்து அவர் பெப்ருவரிப் புரட்சியைப்பற்றி ஒரு அறிக்கை தயாரிக்க ஆரம்பித்தார்.

பெப்ருவரிப் புரட்சி சம்பந்தமான செய்தி கிடைத்ததும் ரஷ்யாவுக்குச் செல்ல அவர் துடித்தார்.

என்ன நேர்ந்தாலும் போல்ஷ்விக்குகள் ரஷ்யாவுக்குச் செல்ல இங்கிலாந்தும் பிரான்ஸும் அனுமதிக்காது. இது இலிச்சுக்குத் தெளிவாகத் தெரிந்தது. ''சில காலம் சபிக்கப்பட்ட இந்த ஸ்விட்ஜர்லாந்தைவிட்டு நாங்கள் வெளியேற முடியாதோ என்று அஞ்சுகிறேன்'' என்று அவர் கொல்லொந்தாய்க்கு எழுதினர். இதை மனதில் கொண்டு பீட்ரோக்ராடுடன் மீண்டும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதைப்பற்றிக் கொல்லொந்தாய்க்கு மார்ச்சு மாதம் 16, 17-ம் தேதிகளில் எழுதிய கடிதங்களில் விவரித்தார்.

சட்டரீதியாகப் பிரயாணம் செய்ய முடியாது போகவே சட்டவிரோதமாகப் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனல் புரட்சியைப்பற்றிய செய்தி கிடைத்த பிறகு இலிச் தூங்கவே இல்லை. இரவு நேரத்தில் அவர் பல திட்டங்களை வகுத்தார். விமானம் மூலம் நாங்கள் பிரயாணம் செய்யலாம். ஆனல் இரவு மயக்கத்தில் மாத்திரம்தான் இத்தகைய விஷயங்களைப்பற்றிச் சிந்திக்க முடியும். இதைப்பற்றி அனுஷ்டானரீதியாகச் சிந்தித்தால், அனுஷ்டானத்திற்கு ஒத்துவராத திட்டம் இது என்பது தெளிவாக விளங்கும். நடுநிலைமை வகிக்கும் தேசத்தைச் சேர்ந்த ஒருவருடைய பாஸ்போர்ட் வேண்டும். ஸ்வீடிஷ்காரரின் பாஸ்போர்ட் விரும்பத்தக்கது; ஏனெனில் ஸ்வீடிஷ்காரர் சந்தேகத்தைக் கிளப்ப மாட்டார். ஸ்வீடிஷ் தோழர்களின் உதவியுடன் ஸ்வீடிஷ் பாஸ்போர்ட் வாங்கிவிட முடியும். எங்களுக்கு ஸ்வீடிஷ் பாஷை தெரிந்தால் போதுமோ என்னமோ; ''ஆனல், இந்த நாடகம் எளிதில் வெளிப்படலாம்; நீங்கள் தூங்கலாம்; கனவில் நீங்கள் மென்ஷ்விக்குகளைக் காணலாம்; உடனே நீங்கள் சப்தம் செய்வீர்கள்; 'அயோக்கியர்கள் அயோக்கியர்கள்' என்று கூச்சலிடுவீர்கள்! சதி முழுதும் வெளிப்பட்டுவிடும்'' என்று கூறி அவரை நான் கேலி செய்தேன்.

எனினும் ஜெர்மனி வழியாகத் தம்மைக் கடத்திச் செல்ல ஏதாவது வழி இருக்கிறதா என்று கானெட்ஸ்கியை அவர் கேட்டார்.

மார்ச்சு மாதம் பதினெட்டாம் தேதி, பாரீஸ் கம்யூன் வருடாந்திர விழா, ஸ்விஸ் தொழிலாளர் வசிக்கும் சாஸ்—தெ—பானட்ஸ் பகுதியில் நடைபெற்றது. அதற்கு இலிச் மகிழ்ச்சியுடன் சென்ருர். தொழிற்சாலையில் வேலைசெய்த, ஸ்விஸ் தொழிலாளர் இயக்கத்தில் தீவிர பங்கு எடுத்துக்கொண்ட இளம் தோழர் அப்ராமோவிச் அங்கே வசித்தார். பாரீஸ் கம்யூனைப்பற்றி இலிச் சிந்தித்துக்கொண்டிருந்தார். ரஷ்யப் புரட்சி இயக்கத்திற்கு அதன் அனுபவத்தை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது, அது செய்த தவறுகளை எவ்வாறு விலக்குவது என்பதைப்பற்றி அவர் சிந்தித்துக்கொண்டிருந்தார். எனவே, அவர் செய்த பிரசங்கம் மிகமிக நன்ருக இருந்தது. அது அவருக்குப் பரம திருப்தியை அளித்

தது. அந்தப் பிரசங்கம் எங்கள் தோழர்களைப் பெரிதும் கவர்ந்தது; ஆனால் கற்பனாரீதியானது என்று ஸ்விஸ்காரர்கள் அதைக் கருதினர். ஸ்விஸ் தொழிற் சங்க இயக்கத்தின் கேந்திரங்களில்கூட ரஷ்யாவில் நடக்கும் சம்பவங்களின் தன்மை தெளிவாக உணரப்படவில்லை.

சர்வதேசத்தன்மையை அங்கீகரிக்கும் ரஷ்ய அரசியல் கைதிகளின் கூட்டம் மார்ச்சு மாதம் 19-ம் தேதி நடந்தது. ரஷ்யாவுக்குத் திரும்பிச் செல்லத் திட்டம் வகுப்பதற்காக நடந்தது. அந்தக் கூட்டம் ஜெர்மனி வழியாகச் செல்ல அனுமதி பெற வேண்டும் என்றும் அதற்குக் கைமாருக ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன், ஆஸ்திரிய யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய இசைய வேண்டும் என்று மார்டோவ் யோசனை கூறினர். லெனினைத் தவிர மற்றவர்கள் ஜெர்மனி வழியாக ரஷ்யாவுக்குத் திரும்புவதை விரும்பவில்லை. இந்தத் திட்டத்தை அவர் அங்கீகரித்தார்; திட்டத்தை ஜாக்கிரதையாக நிறைவேற்ற வேண்டும். இந்தப் பிரசினையை ஸ்விஸ் சர்க்கார் எழுப்புவது நலம் என்று முடிவு செய்யப்பட்டது. ஸ்விஸ் சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்த கிரிமுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், அதனால் எத்தகைய பலனும் ஏற்படவில்லை. ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்ட தந்திகளுக்குப் பதிலே வரவில்லை; இலிச் வேதனை அடைந்தார். "இத்தகைய சமயத்தில் நாங்கள் இங்கே உட்கார்ந்திருப்பது எவ்வளவு வேதனை அளிக்கிறது" என்று ஸ்டாக்ஹோமிலிருந்த கானெட்ஸ்கிக்கு அவர் எழுதினர்.

மார்ச்சு மாதம் 19-ம் தேதி பீட்ரோக்ராடிலிருந்து பிராவ்தா வெளிவந்தது. இருபதாம் தேதி தொலையிலிருந்து கடிதங்கள் என்ற தொடரில் எழுத ஆரம்பித்து இலிச் ஐந்து கடிதங்கள் எழுதினர்:

1. முதல் புரட்சியின் முதல் நிலை.
2. புதிய சர்க்காரும் பாட்டாளி மக்களும்.
3. பாட்டாளி மக்களின் ராணுவத்தைப்பற்றி.
4. சமாதானத்தை எவ்வாறு பெறுவது ?
5. பாட்டாளி மக்களின் புரட்சிகரமான சர்க்காரை ஸ்தாபிப்பது சம்பந்தமான பிரசினைகள்.

லெனின் பீட்ரோக்ராடை அடைந்தபொழுது முதல் கடிதம் மாத்திரம் தான் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மூன்று கடிதங்கள் ஆசிரியரின் மேஜையில் கிடந்தன ; ஐந்தாவது கடிதம் பிராவ்தாவுக்கு அனுப்பப்படவில்லை. ஏனெனில், அதை எழுத ஆரம்பித்தபொழுது லெனின் ரஷ்யாவுக்குப் புறப்பட்டுவிட்டார்.

அவர் புறப்படு முன் அவர் மனோநிலை எவ்வாறு இருந்தது என்பதை இந்தக் கடிதங்கள் தெளிவுபடுத்துகின்றன. ராணுவத்தைப்பற்றி அவர் என்ன சொன்னார் என்பது எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. பாட்டாளி மக்களின் ராணுவத்தைப்பற்றி என்னும் கடிதத்தில் இந்த விஷயத்தை அவர் தெளிவுபடுத்தினர். 1924-ம் வருஷம் லெனின் இறந்த பிறகுதான் அந்தக் கடிதம் வெளிவந்தது. அந்தக் கடிதத்தில் பாட்டாளி மக்கள் சர்க்கார் சம்பந்தமான தம்து கருத்தை

லெனின் வெளியிட்டார். லெனின் எழுதிய சர்க்காரும் புரட்சியும் என்னும் புத்தகத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் இந்தக் கடிதத்தைப் படிக்க வேண்டும். விஷயத்தை அந்தக் கட்டுரை மிகத் தெளிவாகப் பரிசீலனை செய்கிறது. வயதுவந்த ஆண்களையும் பெண்களையும் கொண்ட பிரஜைகளின் புதிய ராணுவத்தைச் சிருஷ்டி செய்ய வேண்டிய அவசியத்தை லெனின் எடுத்துக் காட்டுகிறார். ராணுவக் கடமைகளை நிறைவேற்றுவதுடன், ரொட்டி முதலிய உணவுப் பொருள்களை முறையாகவும் துரிதமாகவும் விநியோகம் செய்யும் பொறுப்பையும், சுகாதார இன்ஸ்பெக்டர்களாகத் தொண்டாற்றும் பொறுப்பையும், எல்லாக் குடும்பங்களுக்கும் ரொட்டி கிடைக்கும்படி செய்யும் பொறுப்பையும் எல்லாக் குழைந்தைகளுக்கும் ஒரு போத்தல் நல்ல பால் கிடைக்கும்படி செய்யும் பொறுப்பையும் எல்லாக் குழந்தைகளுக்கும் பால் சப்ளை செய்யு முன் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த வயதுவந்தவர்கள் அதிகமான பாலைக் குடித்துவிடாமல் தடுக்கும் பொறுப்பையும் அரண்மனைகளும் பணக்காரர்களின் வீடுகளும் காலியாக இராமல் வீடற்றவர்களும் அகதிகளும் அவைகளில் குடியேறும்படி செய்யும் பொறுப்பையும் இந்த ராணுவம் ஏற்க வேண்டும்.

> "ஆண்களையும் ஆண்களுடன் சரிசமமாக நிற்கும் பெண்களையும் கொண்ட சர்வவியாபகமான இந்த மக்கள் ராணுவத்தைத் தவிர வேறு எந்த ஸ்தாபனத்தால் இவைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டு வர முடியும்" என்கிறார் இலிச்.
>
> "இத்தகைய நடவடிக்கைகள் சமதர்மமாகாது. அவை தேவைப் பொருள்களை விநியோகிக்கின்றன. ஆனால், உற்பத்தியைத் திருத்தி அமைக்கவில்லை. இப்பொழுது தத்துவரீதியான வகுப்பு நிர்ணயத்தைப் பற்றிக் கவலை இல்லை. புரட்சி எழுப்பி இருக்கும் பலதன்மைபடைத்த, அவசரமான, துரிதமாகத் தோன்றும், அனுஷ்டானரீதியான வேலைகளைக் குறுகிய திருஷ்டியுடன் பார்க்கும் தத்துவத்துடன் இணைத்து, இப்பொழுது முயன்றால், நாம் மிகப் பெரிய தவறு செய்தவர்களாவோம்.
>
> "தத்துவத்தை செயலுக்கு வழிகாட்டியாக மதிக்கத் தவறினால், நாம் மிகப் பெரிய தவறு செய்தவர்களாவோம்."

சர்க்காரின் எல்லா விவகாரங்களிலும் பங்கு எடுத்து ஜனங்களின் ராணுவம் மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.

> "இத்தகைய ராணுவம் இளைஞர்களை அரசியல் வாழ்க்கைக்கு இழுக்கும்; சொல்லால் மாத்திர மல்ல, செயலாலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும். நமது உடனடியான பிரசினை சாதாரணமான ஒரு ஸ்தாபனத்தைச் சாதாரணமான முறையில் அமைப்பதைப்பற்றியது மட்டும் அன்று. அடக்கப்பட்ட மக்களைக் கணக்கின்றி ஒன்றுதிரட்டும் ஸ்தாபனத்தைப்பற்றி-ராணுவம், சர்க்கார், தேசியப் பொருளாதாரம் ஆகிய பிரசினைகளைத் தன்னுட்கொண்ட ஸ்தாபனத்தைப்பற்றி-நாம் இங்கே பிரஸ்தாபிக்கிறோம்."

பல வருடங்களுக்குப் பிறகு இந்தக் கடிதத்தை நான் மீண்டும் படிக்கும் பொழுது அவர் என் முன்னே நிற்பதைப் போன்று அவரை என்னுல் சித்திரிக்க முடிகிறது. ஒரு புறம் அசாதாரணமான நிதான புத்தி; சமரசப்படுத்த முடியாத ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் அவசியத்தைப்பற்றி அவருக்கு இருந்த தெளிவு, சலுகை காட்டுவதையோ, அல்லது அசைந்தாடுவதையோ அனுமதிக்க முடியாது என்னும் உறுதி; மறு புறம் பொதுஜன இயக்கத்தில் அவர் காட்டிய விசேஷ சிரத்தை; புதிய வழியில் ஜனங்களை ஒன்றுதிரட்டுவதில் அவர் செலுத்திய கவனம், அவர்களுடைய தேவைகளில் அவர் காட்டிய சிரத்தை, அவர்கள் நிலையை உடனடியாக உயர்த்த அவர் செய்த முயற்சி, 1916-17 குளிர் காலத்தில்—குறிப்பாக பெப்ருவரிப் புரட்சி நடைபெற விருக்கும் தருணத்தில்—இலிச் இந்த விஷயங்களைப்பற்றிப் பேசினுர்.

பேச்சுவார்த்தை நீண்டு இழுத்துக்கொண்டே இருந்தது. சர்வதேசவாதிகள் ரஷ்யாவுக்குத் திரும்புவதைத் தற்காலிக சர்க்கார் விரும்பவில்லை என்பது தெளிவாயிற்று. தோழர்கள் அசைந்தாடுவதாக ரஷ்யாவிலிருந்து செய்தி வந்தது. நாங்கள் உடனே ரஷ்யாவுக்குச் செல்ல வேண்டும் என்ற நிலையை அவை உண்டு பண்ணின. அவர் கானெட்ஸ்கிக்கு ஒரு தந்தி அனுப்பினுர். (அது மார்ச்சு மாதம் 25-ம் தேதிதான் அவருக்குக் கிடைத்தது.) அதில் அவர் சொன்னுர் :

> "தாமதத்திற்கு காரணம் நமக்குத் தெரியவில்லை. தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்தின் அத்தாட்சி வேண்டும் என்று மென்ஷ்விக்குகள் சொல்லுகிறுர்கள். செக்கீட்ஸேயுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்காக யாரையாவது பின்லாந்துக்கோ, அல்லது பீட்ரோக்ராடுக்கோ உடனே அனுப்புங்கள். பெலெனின் அபிப்பிராயம் விரும்பத்தக்கது."

பெலெனின் அபிப்பிராயம் என்பது மத்தியக் கமிட்டியின் அபிப்பிராயத்தைக் குறிக்கிறது. மார்ச்சு மாதம் 18-ம் தேதி கொல்லொந்தாய் ரஷ்யாவை அடைந்ததும், இலிச் திரும்பிவருவது சம்பந்தமாக நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை விளக்கினுர். அதன் பிறகு கானெட்ஸ்கியிடமிருந்து கடிதம் வந்தது. கானெட்ஸ்கி மூலம் மத்தியக் கமிட்டி செய்தி அனுப்பிற்று. "உலியானேவ் உடனே வர வேண்டும்" என்பதுதான் செய்தி; இந்தச் செய்தியை கானெட்ஸ்கி லெனினுக்கு அனுப்பினுர். ஸ்விஸ் சர்வதேச-சோஷலிஸ்ட் பிரிட்ஜ் பிளாட்டன் மூலம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவேண்டும் என்று இலிச் வற்புறுத்தினுர். ஸ்விட்ஸர்லாந்திலிருந்த ஜெர்மானிய ஸ்தானிகருடன் பிளாட்டன் எழுத்து மூலம் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். அந்த ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்துக்கள் வருமாறு :

1. யுத்தம் சம்பந்தமாக் அகதிகளின் அபிப்பிராயம் என்ன என்பதைப் பாராமல் எல்லா அகதிகளையும் திரும்பிச் செல்ல அனுமதிக்க வேண்டும்.
2. பிளாட்டன் அனுமதியின்றி அகதிகள் பிரயாணம் செய்யும் ரயிலில் யாரையும் அனுமதிக்கக் கூடாது. பாஸ்போர்ட்டுகளையோ, சாமான்களையோ சோதனை செய்யக் கூடாது.

3. இந்த ஒப்பந்தப்படி பிரயாணம் செய்ய எத்தனை பேர் அனுமதிக்கப் பட்டார்களோ, அத்தனை ஆஸ்ட்ரோ-ஜெர்மன் யுத்தக் கைதிகளைவிடுதலைசெய்ய இந்தப் பிரயாணிகள் ரஷ்யாவில் கிளர்ச்சிசெய்யவேண்டும்.

பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உற்சாகத்துடன் செய்ய ஆரம்பித்தார் இலிச். பெர்னி, ஜினீவா ஆகிய இடங்களுக்கும், பல தோழர்களுக்கும் அவர் கடிதங்கள் எழுதினர். முன்னேற்றவாதிகளுடன் இலிச் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், அவர்கள் போக மறுத்துவிட்டனர். நெருங்கிய தோழர்களாகிய காரியும், காஸ்பரோவும் பின்னே தங்க நேர்ந்தது. அவர்கள் நோயால் தாவோஸில் இறந்துகொண் டிருந்தனர். அவர்களுக்கு வாழ்த்துக்கள் அனுப்பினர் இலிச்.

ரஷ்யப் புரட்சியில் ரஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் கடமைகள் என்னும் தலைப்பில் வோலக்ரெஷ் என்னும் ஸூரிச் பத்திரிகைக்கு இலிச் ஒரு கட்டுரை எழுதினர்; ஸ்விஸ் தொழிலாளர்களுக்கு வாழ்த்தும் அனுப்பினர். ''ஐரோப்பாவில் ஆரம்பமாகும் பாட்டாளி மக்கள் புரட்சி நீடூழி வாழ்க!'' என்னும் கோஷத்துடன் முடிகிறது அந்தச் செய்தி. ரஷ்ய யுத்தக் கைதிகளுக்கு, சிறையிலே வாடும் தோழர்களுக்கு என்னும் தலைப்பில் ஒரு கடிதம் எழுதினர். அதில் புரட்சியைப்பற்றியும், வரவிருக்கும் போராட்டத்தைப் பற்றியும் பிரஸ்தாபித்தார். அவர்களுக்கு நாங்கள் எழுத நேர்ந்தது. ஜெர்மன் முகாம்களில் வாடும் யுத்தக் கைதிகளுக்கு பெர்னியிலிருந்த நாங்கள் பல கடிதங்கள் எழுதினேம். வாழ்க்கைத் தேவை சம்பந்தப்பட்ட வரையில் எங்களால் அவர்களுக்கு அதிக உதவிபுரிய முடியவில்லை. ஆனல், கடிதங்கள் எழுதியும் பிரசுரங்கள் அனுப்பியும் நாங்கள் அவர்களுக்கு உதவிபுரிந்தோம். பலருடன் எங்களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. பெர்னியிலிருந்து நாங்கள் புறப்பட்ட பிறகு ஸவாரோவ் தம்பதிகள் இந்த வேலையைத் தொடர்ந்து செய்தனர். இந்த யுத்தக் கைதிகளுக்கு நாங்கள் சட்டவிரோதமான பிரசுரங்கள் அனுப்பினேம். யுத்தத்தைப்பற்றிக் கொல்லொந்தாய் எழுதிய சக்திவாய்ந்த புத்தகத்தையும் வேறு பல பிரசுரங்களையும் அனுப்பினேம்.

பிளாட்டனின் சமரச முயற்சி வெற்றிகரமாக முடிந்துவிட்டது என்றும், அத்தாட்சிப் பத்திரம் மாத்திரம்தான் கை எழுத்தாக வேண்டும் என்றும், நாங்கள் ரஷ்யாவுக்குச் செல்லலாம் என்றும் பெர்னியிலிருந்து தகவல் வந்ததும் இலிச் குதித்து எழுந்து சொன்னர்: ''நாம் முதல் ரயிலில் புறப்படுவோம்; இரண்டு மணி நேரத்தில் ரயில் புறப்படும்'' என்று.

வீட்டுச் சாமான்களை விற்கவும் வீட்டுக்காரியின் கணக்கை நேர்செய்யவும், புத்தகசாலைக்குப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்கவும், மூட்டை கட்டவும் இரண்டு மணி நேர அவகாசம்தான் இருந்தது.

''நீங்கள் போங்கள்; நான் நாளையத்தினம் புறப்படுகிறேன்'' என்றேன் நான்.

''முடியாது; நாம் சேர்ந்தே போவோம்'' என்று இலிச் வற்புறுத்தினர்.

இரண்டு மணி நேரத்தில் எல்லா வேலைகளும் முடிந்தன; புத்தகங்களை மூட்டைகட்டினேம்; கடிதங்களை எரித்தோம்; அவசியமான துணிகளையும்

ஏனைய சாமான்களையும் தேர்ந்தெடுத்தோம்; எல்லா விவகாரங்களையும் தீர்த்தோம். முதல் ரயிலில் பெர்னினுக்குப் புறப்பட்டோம். நாங்கள் அவசரப்பட்டிருக்க வேண்டியதில்லை. ஏனெனில், அன்று ஈஸ்டராதலால் ரயில் தாமதித்துத்தான் புறப்பட்டது.

ரஷ்யாவுக்குச் செல்லும் தோழர்கள் எல்லோரும்-ஸினோவியெவ் தம்பதிகள், உஸியெவிச், இன்னிஸா, ஆர்மான்ட், ஸவாரோவ் தம்பதிகள், ஒல்கா ராவிச், அப்ராமோராவிச், கரிபெல்ஸ்கயா, ஹரிடோனேவ், லின்டே, ரொஸென்புளும், பாய்ட்ஸோவ், மிக்கா டாஷக்கை, மரியன் ஹோப் தம்பதிகள், ஸொகோல்னிக்கோவ், ரஷ்யர் வேஷத்தில் ராடெக் முதலியோர்-பெர்னி பீப்பிள்ஸ் ஹௌஸில் சந்தித்தனர். முப்பது பேர் பிரயாணம் செய்தனர். பண்டு அங்கத்தினரின் சுருட்டை மயிர்படைத்த நான்கு வயதுப் புதல்வன் இந்தக் கணக்கில் உட்படவில்லை.

பிரிட்ஜ் பிளாட்டன் எங்களுடன் பிரயாணம் செய்தார்.

போல்ஷ்விக்குகள் ஜெர்மனி வழியாகப் பிரயாணம் செய்வதைப்பற்றிக் கூச்சலிட்டனர், யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று சொன்னவர்கள். புரட்சி தேசத்தை அழிக்கும் என்றும், சர்வதேசவாதிகளாகிய அகதிகளை ரஷ்யாவுக்குச் செல்ல அனுமதிப்பதன் மூலம் அழிவைத் துரிதப்படுத்த முடியும் என்றும் எங்களுக்குப் பிரயாணம் செய்ய அனுமதி அளித்த ஜெர்மானிய சர்க்கார் நினைத்தது. முதலாளித்துவ ஜெர்மானிய சர்க்கார் என்ன நினைத்தது என்பதைப்பற்றிப் போல்ஷ்விக்குகள் கவலைப்படவே இல்லை. புரட்சிப் பிரசாரத்தை ரஷ்யாவில் பரப்புவது தங்கள் கடமை என்றும் பாட்டாளி மக்களின் புரட்சி வெற்றி பெறுவது தங்கள் நோக்கம் என்றும் போல்ஷ்விக்குகள் கருதினர். யுத்தத்தை ஆதரிப்பவர்கள் தங்கள்மீது சேற்றை எறிவார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும். மார்ச்சு மாதம் 27-ம் தேதி போல்ஷ்விக்குகள் மாத்திரம்தான் ஜெர்மனி வழியாகப் பிரயாணம் செய்யத் துணிந்தனர். ஆனால், ஒரு மாதத்திற்குப் பிறகு இரு நூறு அகதிகள் மார்டோவ் முதலிய மென்ஷ்விக்குகள் உள்பட இதே மாதிரி பிரயாணம் செய்தனர்.

வண்டியில் ஏறியபொழுது சாமான்கள் பாஸ்போர்ட்கள் ஆகியவைகளைப் பற்றி, எத்தகைய கேள்விகளும் கேட்கப்படவில்லை. இலிச் தனியே இருந்தார். அவர் ரஷ்யாவைப்பற்றிச் சிந்தித்தார். வழியில் சாதாரண விஷயங்களைப்பற்றித்தான் பேசினோம். ராபர்ட்டின் மகிழ்ச்சி அளிக்கும் குரல் வண்டி முழுதும் கேட்டது. அவன் ஸொக்கோல் நிக்கோவைப் பெரிதும் நேசித்தான். பெண்களுடன் பேச அவன் விரும்பவில்லை. தங்களிடம் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன என்று எங்களுக்குக் காட்ட ஜெர்மானியர் முயன்றனர். சமையல்காரர்கள் சுவை மிகுந்த தடபுடலான உணவு சமைத்தனர்; அகதிகள் சமுதாயம் இத்தகைய உணவுக்குப் பழகவில்லை. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபொழுது வயதுவந்த ஆண்கள் எங்கள் கண்களுக்குத் தென்படவில்லை. சில பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும், குழந்தைகளும் ஸ்டேஷன்களிலும் வயல்களிலும் நகர வீதிகளிலும் காணப்பட்டனர். பீட்ரோட்க்ராடில் வசித்த ஆரம்ப கால ஞாபகங்களை இந்தக் காட்சி என் மனத்தில் தூண்டிவிட்டது. வண்டிகளில் அந்தக் காலத்தில் ஏராளமான சிப்பாய்கள் காணப்படுவதைக் கண்டு அன்று நான் வியந்தேன்.

பெர்லினை அடைந்ததும் எங்கள் வண்டி தனியாக ஒரு இடத்தில் ஒதுக்கி நிறுத்தப்பட்டது. பெர்லினுக்கு அருகில் ஜெர்மானிய சமதர்ம-ஜனநாயகவாதிகள் பலர் அந்த வண்டியில் ஏறினர். ராபர்ட்டைத் தவிர எங்களைச் சேர்ந்தவர்களில் யாரும் அவர்களுடன் பேசவில்லை. அவர்கள் இருந்த வண்டியை எட்டிப் பார்த்து விட்டு, "கண்டக்டர் என்ன செய்கிறார்?" என்று பிரெஞ்சு பாஷையில் ராபர்ட் கேட்டான்.

ராபர்ட்டின் கேள்விக்கு ஜெர்மானியர் பதில் சொன்னார்களா வென்பது எனக்குத் தெரியாது; ஆனால், போல்ஷ்விக்குகளிடம் அவர்கள் கேட்க நினைத்த கேள்விகளை அவர்களால் கேட்க முடியவில்லை என்பது எனக்குத் தெரியும்; மார்ச்சு மாதம் 31-ம் தேதி நாங்கள் ஸ்வீடனை அடைந்தோம்; ஸ்டாக்ஹோமில் ஸின்ட்ஹேகன், கார்லஸன், ஸட்ராம், டூரை நெர்மான் முதலிய சட்டசபை அங்கத்தினர்களும் மற்றவர்களும் எங்களைச் சந்தித்தனர்.

வெயிட்டிங் ரூமில் செங்கொடி பறந்தது. அங்கே ஒரு கூட்டமும் நடந்தது. ஸ்டாக்ஹோமைப்பற்றி எனக்கு எதுவும் ஞாபகமில்லை. எங்கள் சிந்தனை ரஷ்யாவுக்குச் சென்றது. ரஷ்யாவுக்குள் நுழைய பிரிட்ஜ் பிளாட்டனையும் ராடெக்கையும் ரஷ்ய தற்காலிக சர்க்கார் அனுமதிக்கவில்லை. ஆனால் போல்ஷ்விக்குகளைத் தடுக்க அவர்கள் துணியவில்லை. ஸ்வீடனிலிருந்து நாங்கள் சிறிய பின்னிஷ் படகுகளில் பின்லாந்துக்குச் சென்றோம். அங்கே எல்லாம் எங்களுக்குப் பழக்கமானவைகளாகவும் அருமையானவைகளாகவும் இருந்தன; கீழ்த்தரமான மூன்றாம் வகுப்பு வண்டிகளும் ரஷ்ய சிப்பாய்களும் தென்பட்டனர். நிலைமை மிகத் திருப்திகரமாயிருந்தது. விரைவில் ராபர்ட் ஒரு வயதுமுதிர்ந்த சிப்பாயின் கரங்களில் இருந்தான். தன் சிறிய கரங்களால் அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டான் ராபர்ட்; அவருடன் பிரஞ்சு பாஷையில் பேசினான். சிப்பாய்கள் கொடுத்த ஈஸ்டர் வெண்ணெயைத் தின்றான். எங்களைச் சேர்ந்தவர்கள் ஜன்னல்களை ஒட்டிக் கொண்டு கூட்டமாக நின்றனர். கடந்து சென்ற ஸ்டேஷன்களில் சிப்பாய்களும் கூட்டம் கூட்டமாக நின்றனர். ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக்கொண்டு "உலகப் புரட்சி நீடூழி வாழ்க!" என்று உஸ்யேவிச் கோஷித்தார். குழப்பத்துடன் சிப்பாய்கள் அவரைப் பார்த்தனர். வெற்றிமுகம் படைத்த ஒரு லெப்டினன்ட் எங்களைக் கடந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தார். நானும் இலிச்சு அருகில் இருந்த காலி வண்டிக்குச் சென்றபொழுது அவர் இலிச்சுக்கு அருகில் உட்கார்ந்து அவருடன் பேசினார். லெப்டினன்ட் யுத்தத்தை ஆதரிப்பவர். அவர் விவாதிக்க ஆரம்பித்தார்; இலிச் தமது கருத்தைச் சொன்னார். அவர் பயங்கரமாக இருந்தார்; சிப்பாய்கள் அங்கே கூடினர். வண்டியில் நகருவதற்குக் கூட இடம் இல்லை. கொள்ளைக்காரர் யுத்தத்தைப்பற்றி அவ்வளவு தெளிவாகப் பேசுகிறவரை நன்றாகப் பார்ப்பதற்காகவும் சிப்பாய்கள் பெஞ்சின்மீது நின்றனர். நிமிடங்கள் செல்லச் செல்ல அவர்களின் கவனம் அதிகரித்தது. அவர்கள் முகங்கள் உணர்ச்சியைக் காட்டின.

பைபேலா - ஓஸட்ரோவில், மரியா இலிஷ்னினா, ஷியால்யாப்நிகோவ், ஸ்டாஹல் ஆகிய தோழர்களும் பெண் தொழிலாளர்களும் எங்களைச் சந்தித்தனர். பெண் தொழிலாளர்களை வாழ்த்திச் சில வார்த்தைகள் பேசும்படி ஸ்டாஹல்

என்னை வற்புறுத்தினர். பேச்சு என்னிடம் விடைபெற்றுவிட்டது. என்னால் ஒன்றும் பேச முடியவில்லை. ரஷ்யாவை அடைந்ததும் நாங்கள் கைது செய்யப்படுவோமா என்று எங்களுடன் உட்கார்ந்திருந்த தோழர்களை இலிச் கேட்டார். அவர்கள் புன்னகை புரிந்தனர். விரைவில் நாங்கள் பீட்ரோக்ராடை அடைந்தோம்.

பீட்ரோக்ராட் ஜனங்கள்,— தொழிலாளர்கள், சிப்பாய்கள், மாலுமிகள்— முதலியோர் தங்கள் தலைவரைக் காண வந்திருந்தனர். அங்கே வந்திருந்த தோழர்களில் சுகூரினும் ஒருவர். லாங்ஜூமே பள்ளிக்கூடத்தில் மாணவராக இருந்தவர் அவர்; ஆனந்தக் கண்ணீரால் அவர் முகம் நிறைந்திருந்தது. தமது தோள்களில் அவர் பெரிய சிவப்புத் துணி ஒன்றை அணிந்திருந்தார். அங்கே ஒரு ஜன சமுத்திரமே இருந்தது.

புரட்சி காலத்தில் வாழாதவர்களால் அதன் மகத்தான, புனிதமான அழகை எண்ணிப் பார்க்க முடியாது. சிவப்புக் கொடிகள், கிரான்ஸ்டாட் மாலுமிகளின் ராணுவ மரியாதை, பின்லாந்து ஸ்டேஷனிலிருந்து ஷிஸின்ஸ்கி அரண்மனைக்குச்* செல்லும் பாதையை, பீட்டர் அண்ட் பால் கோட்டையிலுள்ள விளக்குகள் ஒளிமயமாக்கியது. கவச மோட்டார்களும் ஆண் பெண் தொழிலாளர்களும் வீதியில் வரிசையாக நின்று பாதுகாத்தனர்.

பீட்ரோக்ராட் தொழிலாளர்—சிப்பாய்கள் சோவியத்தின் பிரதிநிதிகள் என்ற முறையில் செக்கீட்ஸேயும் ஸ்கோபோலீவும் எங்களைப் பின்லாந்து ஸ்டேஷனில் சந்தித்தனர். செக்கீட்ஸேயும் ஸ்கோபோலீவும் இருந்த ஸாரின் ஓய்வுபெறும் அறைக்கு இலிச்சைத் தோழர்கள் அழைத்துச் சென்றனர். இலிச் பிளாட்பாரத்திற்கு வந்ததும் ஒரு காப்டன் அவரை அணுகி, ராணுவரீதியில் அவரிடம் என்னமோ சொன்னார். ஆச்சரியத்தால் தயங்கிய இலிச் சலாம் செய்தார்.

இலிச்சும் அகதிகள் சமுதாயத்தைச் சேர்ந்த ஏனையவர்களும் ராணுவ மரியாதை அணிவகுப்பைக் கடந்து சென்றனர். இலிச் கவச மோட்டாரில் நின்றார்; மற்றவர்கள் மோட்டார்களில் உட்கார்ந்திருந்தனர். இங்ஙனம் நாங்கள் ஷிஸின்ஸ்கி அரண்மனையை அடைந்தோம். எங்களைச் சுற்றி நின்ற ஆயிரக்கணக்கான ஜனங்களைப் பார்த்து இலிச் கோஷித்தார். “உலக சோஷலிஸ்ட் புரட்சி நீடூழி வாழ்க!” என்று.

புரட்சி ஆரம்பமாகிவிட்டதை இலிச் தமது தேகத்திலுள்ள நாடிநரம்புகளில் ஒவ்வொன்றிலும் உணர்ந்தார்.

நாங்கள் ஷிஸின்ஸ்கி அரண்மனையை அடைந்தோம். கட்சியின் மத்தியக் கமிட்டிக் காரியாலயமும், பீட்ரோக்ராட் கமிட்டிக் காரியாலயமும் அங்கேதான் இருந்தன. பீட்ரோக்ராட் தோழர்கள் தோழமை முறையில் ஒரு தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். வரவேற்புப் பிரசங்கங்களுக்கும் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், தமக்கு மிகவும் பிடித்த துறையில்—கட்சி மேற்கொள்ள

* ஜாரின் வைப்பாட்டி, நடனமாது ஷிஸின்ஸ்காயாவின் வீடு; புரட்சிக்குப் பிறகு, அது, போல்ஷ்விக் கட்சியின் தலைமைக் காரியாலயமாயிற்று.

வேண்டிய ராஜ தந்திரம் பற்றிய துறையில்—இலிச் தன் பேச்சைத் திருப்பினர். வீட்டை ஏராளமான தொழிலாளர்களும், சிப்பாய்களும் சூழ்ந்துகொண்டனர். தாழ்வாரத்திற்குச் சென்று இலிச் பிரசங்கம் செய்ய நேர்ந்தது. கூட்டம் உண்டு பண்ணின குதூகலமும் புரட்சி சக்திகளின் எழுச்சியும் மற்றவைகளைப் பின்னுக்குத் தள்ளி மறைத்தன.

பிறகு நாங்கள், எங்களைச் சேர்ந்தவர்கள்—அன்னு இலிஷ்னினுவும், மார்க் திமோபையோவிக்கும்—வசிக்கிற வீட்டிற்குச் சென்றோம்; பீட்ரோக்ராட் பகுதியில் இருந்த ஷிரோகாயா வீதியில் அவர்கள் வசித்தனர். மரியா இலிஷ்னினு அவர்களுடன் வசித்து வந்தாள். எங்களுக்கு ஒரு தனி அறை கொடுத்தனர். எங்கள் வருகையைக் கௌரவிப்பதற்காக எங்கள் மெத்தைக்கு மேலே "உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்" என்னும் சுலோகம் பொறிக்கப்பட்ட அட்டையைத் தொங்கவிட்டிருந்தான், அன்னு இலிஷ்னினுவின் ஸ்வீகாரப் புதல்வன் கோரா. அன்று இலிச்சுடன் நான் பேசவே இல்லை; அனுபவத்தை வெளியிட வார்த்தைகள் அகப்படவில்லை.

பேசாமலே யாவற்றையும் நாங்கள் புரிந்துகொண்டோம்.

ஒரு நிமிடத்தைக்கூட வீணுக்க முடியாத காலம் அது. இலிச் எழுந்திருக்கு முன் அவரைத் தேடி ஒரு தோழர் வந்தார்; ஜெர்மனி வழியாகப் பிரயாணம் செய்ததை விளக்குவதற்காக ஸினேவியெவ்வுடன் அவர் பீட்ரோக்ராட் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி கூட்டத்திற்குச் சென்றார். அங்கிருந்து அவர் போல்ஷ்விக்குகள் மகாநாட்டிற்குச் சென்றார். தாரிடா அரண்மனை மேன் மாடியில் அகில ரஷ்யத் தொழிலாளர்—சிப்பாய்கள் சோவியத் மகாநாட்டு அங்கத்தினர்களின் கூட்டம் நடந்துகொண் டிருந்தது. அதில் என்ன செய்ய வேண்டும் என்ற தமது கருத்தைப் பத்து கோட்பாடுகளில் லெனின் வெளியிட்டார். அந்தக் கோட்பாடுகளில் *தமது அபிப்பிராயத்தில் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை லெனின் விளக்கினர். எந்த நோக்கங்களுக்காகப் பாடுபட வேண்டும் என்பதைத் தெளிவாகவும் நிர்ணயமாகவும் வரையறுத்தார். இவைகளை அடைய எந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தினர். இதைக் கேட்டு ஜனங்கள் சில நிமிடங்கள் திகைப்படைந்து இருந்தனர். பிரசினையைப் பச்சையாக லெனின் சித்தரிப்பதாகவும் சோஷலிஸ்ட் புரட்சியைப்பற்றிப் பேசும் காலம் இன்னும் வரவில்லை என்றும் பலர் கருதினர்.

கீழ்மாடியில் மென்ஷ்விக்குகளின் கூட்டம் நடந்துகொண் டிருந்தது. அங்கிருந்து ஒரு தோழர் வந்து அந்த அறிக்கையை மென்ஷ்விக்—போல்ஷ்விக் பிரதிநிதிகளின் கூட்டுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். சமதர்ம ஜனநாயகவாதிகளின் கூட்டத்தில் இந்த அறிக்கையை இலிச் சமர்ப்பிக்க வேண்டும் என்று போல்ஷ்விக்குகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இலிச் இதைச் செய்தார். தாரிடா அரண்மனையிலுள்ள பெரிய மண்டபத்தில் கூட்டுக் கூட்டம் நடந்தது. கோல்டன்பர்க் தலைமை ஸ்தானத்தில் வீற்றிருப்பதை நான் முதலில் கண்டேன். 1905-ம் வருடம் புரட்சி நடந்தபொழுது

* ஏப்பிரல் கோட்பாடுகள்.

அவர் போல்ஷ்விக்காக இருந்தார். போராட்டத்தில் தீவிரமான பங்கு எடுத்துக் கொண்டார். இப்பொழுது அவர் பிளக்கானுவைப் பின்பற்றினர். யுத்தத்தை ஆதரித்தார்; லெனின். சுமார் இரண்டு மணி நேரம் பேசினர். கோல்டென்பர்க் அவரை எதிர்த்தார். அவர் லெனினை வன்மையாகக் கண்டித்தார். புரட்சிகர மான ஜனநாயகத்திற்கு மத்தியில் லெனின் கலகக் கொடியை உயர்த்துவதாக அவர் குறைகூறினர். நாங்கள் எவ்வளவு தூரம் அகன்றுவிட்டோம் என்பது தெளிவாயிற்று. லெனின் கோட்பாடுகளை ஆதரித்துக் கொல்லொந்தாய் நிகழ்த்திய உணர்ச்சி மிகுந்த பேச்சு இப்பொழுதுகூட எனக்கு ஞாபகம் இருக்கிறது.

ஒற்றுமை என்னும் தமது பத்திரிகையில் லெனின் கோட்பாடுகளை ஜன்னிப் பிதற்றல் என்று வர்ணித்தார் பிளக்கானுவ்.

மூன்று நாட்களுக்குப் பிறகு, ஏப்பிரல் மாதம் 7-ம் தேதி, லெனினுடைய கோட்பாடுகள் பிராவ்தாவில் பிரசுரிக்கப்பட்டது. மறு நாள் எங்கள் வேறுபாடுகள் என்னும் தலைப்பில் காமனீவின் கட்டுரை பிராவ்தாவில் வெளிவந்தது. லெனினுடைய கோட்பாடுகளுக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்றும், அவை லெனினுடைய தனிப்பட்ட அபிப்பிராயங்கள் என்றும், பிராவ்தாவோ மத்தியக் கமிட்டியோ அதைப் பிரசுரம் செய்யவில்லை என்றும் அந்தக் கட்டுரையில் காமனீவ் குறிப்பிட்டு இருந்தார். இந்தக் கோட்பாடுகளை லெனின் சமர்ப்பித்த பொழுது கூட்டத்தில் இருந்த போல்ஷ்விக் பிரதிநிதிகள் இதை அங்கீகரிக்க வில்லை. ஆனல், மத்தியக் கமிட்டியின் திட்டத்தை அங்கீகரித்தனர். பிராவ்தா தன் பழைய கொள்கையையே பின்பற்றும் என்று காமனீவ் கூறினர்.

போல்ஷ்விக் கட்சிக்குள் போராட்டம் ஆரம்பமாயிற்று. ஆனல் அது நீண்ட காலம் நீடித்து நிற்கவில்லை. ஒரு வாரத்தில் பீட்ரோக்ராட் போல்ஷ்விக்குகளின் பொதுக் கூட்டம் நடந்தது. அதில் லெனின் திட்டம் வெற்றி பெற்றது. கூட்டம் எட்டு நாட்கள் (ஏப்பிரல் 14—22) நடந்தது. அந்தக் காலத்தில் நடந்த பல முக்கியமான சம்பவங்கள் லெனின் வழிதான் சரியானது என்பதை நிரூபித்தன.

ஏப்பிரல் மாதம் 7-ம் தேதி லெனின் கோட்பாடுகள் அச்சிடப்பட்டு வெளி வந்தன. அன்று, பீட்ரோக்ராட் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி சுதந்திரக் கடன் பத்திரம் வெளியிட அனுமதி அளித்தது.

பூர்ஷ்வாப் பத்திரிகைகளும் யுத்தத்தை ஆதரிக்கிற பத்திரிகைகளும் லெனினையும் போல்ஷ்விக்குகளையும் எதிர்த்து உக்ரமாகப் பிரசாரம் செய்தன. காமனீவின் அறிக்கை அசட்டை செய்யப்பட்டது. போல்ஷ்விக் கட்சியில் லெனின் கருத்து ஆதிக்கம் செலுத்தும் என்பது எல்லோருக்கும் தெரியும். லெனினுக்கு எதிரான பிரசாரம் அதன் கோட்பாடுகளைப் பரப்ப உதவி புரிந்தது. யுத்தத்தை ஏகாதிபத்தியக் கொள்ளைக்கார யுத்தம் என்று லெனின் சொன்னர். சமாதானத்தை அவர் இதயபூர்வமாக விரும்புகிறர் என்பதை எல்லோரும் கண்டனர் இது சிப்பாய்களையும் மாலுமிகளையும் தட்டி எழுப்பிற்று. யுத்தம் யாருக்கு ஜீவ மரணப் பிரச்சினையாக இருந்ததோ அவர்களை இது தட்டி எழுப்பிற்று. ஏப்பிரல் மாதம் 10-ம் தேதி இஸ்மெய்லோவ்கி பட்டாளத்தைச் சேர்ந்தவர்களின் கூட்டத்தில் லெனின் பேசினர். 15-ம் தேதி ஸோல்தாஸ்கயா பிராவ்தா வெளிவந்தது லெனினுக்கும் போல்ஷ்விக்குகளுக்கும் எதிராகச் செய்யப்படும் பிரசாரத்தை

கண்டிப்பதற்காகப் பீட்ரோக்ராட் சிப்பாய்களும் மாலுமிகளும் 16-ம் தேதி ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அதுவரையில் கண்டிராத அவ்வளவு சிறப்பாக 18-ம் தேதி (மே மாதம் முதல் தேதி) மே தினம் ரஷ்யா முழுதும் கொண்டாடப்பட்டது.

வெற்றிகரமாக முடிவுறும்வரையில் யுத்தத்தைத் தற்காலிக சர்க்கார் தொடர்ந்து நடத்தும் என்றும் நேச நாடுகளுக்குக் காட்டக் கூடிய சலுகைகள் சம்பந்தமாக விசுவாசமாக நடந்துகொள்ளும் என்றும் தற்காலிக சர்க்காரின் பெயரால் அந்நிய நாட்டு மந்திரி மில்யுகோவ் ஏப்பிரல் மாதம் 18-ம் தேதி ஒரு அறிக்கை விடுத்தார். போல்ஷ்விக்குகள் என்ன செய்தனர், அந்தச் சலுகைகள் என்ன என்பதைத் தங்கள் பத்திரிகைகளில் அவர்கள் பிரசுரித்தனர்; இரண்டாவது நிக்கோலஸின் சர்க்காரும் ஜாரின் காலிகளும் அளித்த சலுகைகளை நிலைநிறுத்தத் தற்காலிக சர்க்கார் சபதம் செய்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினர். முதலாளிகளின் நன்மைகளைப் பாதுகாக்கும் சலுகைகள் அவை என்பதையும் அவர்கள் எடுத்துக்காட்டினர்.

விஷயம் ஜனங்களுக்குத் தெரிந்ததும் அவர்கள் பகிரங்கமாக ஆர்ப்பாட்டம் செய்தனர். ஏப்பிரல் மாதம் 21-ம் தேதி ஜனங்கள் நெவ்ஸ்கியில் ஒரு ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். தற்காலிக சர்க்காரை ஆதரிப்பவர்களும் நெவ்ஸ்கியில் ஒரு ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

இந்தச் சம்பவங்கள் போல்ஷ்விக்குகளை ஒன்றுபடுத்தின. லெனின் கொள்கைகளை ஆதரித்துப் பீட்ரோக்ராட் போல்ஷ்விக் ஸ்தாபனங்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றின.

தற்காலிக சர்க்காரின் சாயத்தை வெளுக்கவைக்க வேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டியும், பீட்ரோக்ராட் சோவியத்தின் சமரசப் போக்கைக் கண்டித்தும், தொழிலாளர் சிப்பாய்கள் பிரதிநிதிகள் சோவியத்துக்கு மறு தேர்தல் நடத்த விரிவான முறையில் விளக்கப் பிரசாரம் நடத்தும்படியாக வேண்டியும் அதே சமயத்தில் உடனே தற்காலிக சர்க்காரைக் கவிழ்க்க முயற்சி செய்வது அகாலத்தில் செய்யும் செயலாகும் என்பதைச் சுட்டிக்காட்டியும் மத்தியக் கமிட்டி ஏப்பிரல் 21, 22, தேதிகளில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

லெனினுடைய கோட்பாடுகள் பிரபலம் அடைந்த மூன்று வாரங்களுக்குப் பிறகு, போல்ஷ்விக்குகளினிடையே ஒற்றுமை ஏற்பட்ட பிறகு, ஏப்பிரல் மாதம் 24-ம் தேதி அகில ரஷ்ய மகாநாடு நடந்தது.

பீட்ரோக்ராடுக்கு வந்த பிறகு நான் இலிச்சை அதிகம் சந்திக்கவில்லை. மத்தியக் கமிட்டியிலும், பிராவ்தாவிலும் அவர் வேலை செய்தார். கூட்டங்களுக்குச் சென்றார்; க்ஷின்ஸ்கி அரண்மனையில் இருந்த மத்தியக் கமிட்டி காரியாலயத்தில் நான் வேலை செய்தேன். வெளி நாட்டு மத்தியக் கமிட்டிக் காரியாலய வேலையுடனே இலிச்சின் மேற்பார்வையில் 1905–07-ம் வருடங்களில் சுயேச்சையாகச் செய்த முக்யமான வேலைகளுடன் அதை ஒப்பிட முடியாது. ஸ்டாஸோவா காரியதரிசியாக இருந்தாள்; தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் அவளுக்கு உதவி புரிந்தனர். அங்கு வந்த தொழிலாளர்களிடம் நான் பேசினேன். எனினும், ஸ்தல வேலையைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. மத்தியக் கமிட்டி அங்கத்தினர்

கள் அடிக்கடி அங்கே வந்தனர்; குறிப்பாக ஸ்வெர்ட்லோவ் அடிக்கடி வந்தார். குறிப்பான வேலை எதுவும் எனக்கு அளிக்கப்படவில்லை. குறிப்பான வேலை இல்லாதது எனக்குச் சலிப்பை அளித்தது. ஆசையுடன் என்னைச் சுற்றி இருக்கும் வாழ்க்கையை நான் பற்றினேன். அந்தக் காலத்தில் வீதிகள் கவர்ச்சியாகக் காட்சி அளித்தன. எங்கும் ஜனங்கள் கூட்டமாக நின்றனர்; அரசியல் நிலையையும் நிகழும் நிகழ்ச்சிகளைகளையும் அவர்கள் காரசாரமாக விவாதித்தனர். ஜனங்களுக்கு மத்தியில் சென்று அவர்கள் பேசுவதை நான் கேட்பது வழக்கம். ஒரு நாள் ஷிரோகாயா வீதியிலிருந்து க்ஷிஸின்ஸ்கி அரண்மனையை அடைய மூன்று மணி நேரம் நடந்தேன். ஜனக்கூட்டம் அவ்வளவு கவர்ச்சி அளித்தது. எங்கள் வீட்டிற்கு எதிரில் ஒரு தோட்டம் இருந்தது. இரவு ஜன்னலைத் திறந்து அங்கே நின்றுகொண்டு ஆத்திரத்துடன் ஜனங்கள் விவாதிப்பது எங்களுக்குக் கேட்கும். அங்கே ஒரு சிப்பாய் எப்பொழுதும் யாருடனாவது—சமையல்காரர் அல்லது அண்டை வீடுகளில் வேலைசெய்யும் வேலைக்காரிகள், அல்லது வாலிபர்கள்—பேசிக்கொண்டிருப்பார். இரவு ஒரு மணிக்கு, போல்ஷ்விக்குகள்—மென்ஷ்விக்குகள் போன்ற தொடர்பற்ற வார்த்தைகள் கேட்கும்; ஐந்து மணிக்கு அதே சொற்கள் கேட்கும்; அரசியல், பொதுக் கூட்டங்கள், பீட்ரோக்ராடின் பால் பொழியும் இரவுகள், இரவில் நடந்த இந்தக் கூட்டங்களுடன் சேர்ந்துதான் என் மனதில் அந்த நிலவுபொழிந்த இரவுகள் எப்பொழுதும் காட்சி அளிக்கும்.

மத்தியக் கமிட்டிக் காரியாலயத்தில் நான் பலரைச் சந்திக்க நேர்ந்தது. பீட்ரோக்ராட் கமிட்டி, ராணுவ ஸ்தாபனம், ஸோல்தாஸ்கயா பிராவ்தா ஆகியவை க்ஷிஸின்ஸ்கி அரண்மனையில் இருந்தன. சில சமயங்களில் நான் பீட்ரோக்ராட் கமிட்டிக் கூட்டத்தில் பங்கு எடுத்துக்கொண்டேன். ஏனெனில் ஜனங்களை நன்ருகத் தெரிந்துகொள்ளவும் கமிட்டியின் வேலைகளைக் கவனிக்கவும் நான் கூட்டத்தில் கலந்துகொண்டேன். குழந்தைகளும் இளம் தொழிலாளர்களும் என்னை ஆகர்ஷித்தனர். குழந்தைகளை இயக்கம் கவர்ந்தது. பல்வேறு கருத்துக்களை ஆதரிப்பவர்கள்—போல்ஷ்விக்குகள், மென்ஷ்விக்குகள், சோஷலிஸ்ட் புரட்சிக்காரர்கள், அனர்க்கிஸ்டுகள் ஆகியோர்—அவர்களினிடையே இருந்தனர். முதலில் சங்கத்தில் ஐம்பதாயிரம் வாலிபர்கள் அங்கம் வகித்தனர். ஆனல், அப்பொழுது இயக்கம் ஏறக்குறைய அசட்டை செய்யப்பட்டது. அவர்களுக்கிடையே நான் ஓரளவு வேலைசெய்தேன். மத்தியதரப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் வயதான மாணவர்களுக்கும் இளம் தொழிலாளர்களுக்கும் தலைகீழ் வித்தியாசம் இருந்தது. முன் கூறப்பட்டவர்கள் கூட்டமாக க்ஷிஸின்ஸ்கி அரண்மனைக்கு வந்து, போல்ஷ்விக்குகளை ஏசினர்; அவர்களை யாரோ தூண்டிவிட்டிருக்கிருர்கள் என்பதில் சந்தேகமில்லை.

நாங்கள் வந்த சில தினங்களுக்குப் பிறகு - தேதி எனக்கு ஞாபகம் இல்லை - உபாத்தியாயர்களின் காங்கிரசில் நான் கலந்துகொண்டேன். பெரிய கூட்டம் கூடியிருந்தது. சோஷலிஸ்ட் - புரட்சிக்காரர்களின் செல்வாக்கில் உபாத்தியாயர்கள் இருந்தனர். நான் சென்ற அன்று காலை பிரசித்திப்பெற்ற யுத்த ஆதரிப்பாளர்கள் பேசினர். ஆனல், நான் செல்லு முன் அலெக்ஸின்கி அந்தக் கூட்டத்தில் பேசிவிட்டார். போல்ஷ்விக் - மென்ஷ்விக் சர்வதேசவாதிகள் உள்பட

உபாத்தியாயர்களுக்கு மத்தியில் இருபது சமதர்ம ஜனநாயகவாதிகள் இருந்தனர். எத்தகைய பள்ளிக்கூடத்தை அமைப்பதற்காகப் போராட வேண்டும் என்பதை முடிவு செய்வதற்காக அவர்கள் தனியே ஒரு அறையில் கூடினர். அந்தக் கூட்டத்தில் இருந்த நபர்களில் பலர், பிற்காலத்தில் ஜில்லா சபைகளில் (முனிசிபாலிட்டிகளில்) கலந்துகொண்டனர். உபாத்தியாயர்களைத் தேசிய வெறி பிடித்திருந்தது.

ஏப்பிரல் மாதம் 4-ம் தேதி இலிச் நிகழ்த்திய சொற்பொழிவையும் பீட்ரோக்ராட் மகாநாட்டில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவையும் நான் கேட்டேன்.

ஏப்பிரல் மாதம் 18-ம் தேதி (மே முதல் தேதி) மேதின விழாவில் இலிச் கலந்துகொண்டார். ஒகிதாவில் நடந்த கூட்டத்திலும், பீல்டு ஆப் மார்ஷில் நடந்த கூட்டத்திலும், அவர் பேசினர். அன்று என்னல் எழுந்திருக்கக்கூட முடியாததால் அவர் பேச்சை நான் கேட்கவில்லை. இலிச் திரும்பி வந்ததும் அவருடைய கிளர்ச்சி அடைந்த தோற்றத்தைக் கண்டு நான் வியந்தேன். வெளிநாடுகளில் நாங்கள் வசித்த காலத்தில் நாங்கள் மேதின ஊர்வலத்தில் கலந்துகொள்வது வழக்கம். ஆனல், போலீஸ் அனுமதியுடன் மேதினம் கொண்டாடும் நாள் அது; புரட்சிகரமான ஜனங்கள் நடத்தும் மேதினம், ஜாரிஸத்தை வென்ற ஜனங்கள் நடத்தும் மேதினம் வேறுவிதமானது.

டானிஸ்காய் தம்பதிகள் வீட்டில் ஏப்பிரல் மாதம் 21-ம் நாள் இலிச்சைச் சந்திக்க நேர்ந்தது. என்னிடம் இருந்த; ஸ்டாரோ-நெவ்ஸ்க்கி 3 என்ற விலாசத்துடன் நான் நெவ்ஸ்க்கி முழுதும் நடந்து சென்றேன். நெவ்ஸ்க்கி கேட்டிலிருந்து பெரிய தொழிலாளர் ஊர்வலம் வந்தது. வீதி ஓரத்தில் கூட்டமாக நின்ற தொழிலாளர்கள் ஊர்வலத்தை வாழ்த்தினர். நாமும் போவோம் என்று ஒரு பெண் தொழிலாளி இன்னெரு பெண் தொழிலாளியை அழைத்தாள். நாமும் போவோம்; இரவு முழுவதும் நாமும் நடப்போம். தொழிலாளர் ஊர்வலத்தை நோக்கித் தொப்பிகள் அணிந்தவர்களைக் கொண்ட ஒரு ஊர்வலம் வந்தது. தலைப்பாகை அணிந்தவர்கள் அந்த ஊர்வலத்தை வாழ்த்தினர்; நெவ்ஸ்க்கி கேட்டுக்கு அருகில் தொழிலாளர்கள் அதிகமாக இருந்தனர். ஆனல், போர்ஸ்கயா வீதிக்கும் பாய்ஸேட்ஸ்கி பாலத்துக்கும் அருகில் தொப்பி அணிந்தவர்கள் அதிகமாக இருந்தனர். ஜெர்மனியின் தங்கத்தை லஞ்சம் கொடுத்து லெனின் தொழிலாளர்களை வாங்கியதாகவும் இப்பொழுது அவரை எல்லோரும் பின்பற்றுகின்றனர் என்றும் பேசினர் பலர். "லெனினை நாம் அடிக்க வேண்டும்" என்று அழகாக உடை அணிந்திருந்த ஒரு சிறுமி கூவினள்.

"இந்த அயோக்கியர்களைக் கொல்லுங்கள்" என்று கர்ஜித்தார் தொப்பி அணிந்திருந்த ஒருவர்.

வர்க்கத்திற்கு எதிராக வர்க்கம்; தொழிலாளி வர்க்கம் லெனினை ஆதரித்தது.

போல்ஷ்விக்குகளை ஐக்கியப்படுத்திய ஏப்பிரல் மகாநாடு—ஏப்பிரல் மாதம் 24-ம் தேதியிலிருந்து 28-ம் தேதி வரையில்—நடந்தது. 151 பிரதிநிதிகள் அதில் கலந்துகொண்டனர்.

புதிய மத்தியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் மிக முக்கியமானவை: அரசியல் நிலை, யுத்தம்,

மூன்ருவது இன்டர்நேஷனலை ஸ்தாபிப்பதற்கு முன்ஏற்பாடுகள், தேசியப் பிரசினை, விவசாயிகள் பிரசினை, கட்சித் திட்டம் ஆகியவை விவாதிக்கப்பட்டன.

அரசியல் நிலையைப்பற்றி இலிச் நிகழ்த்திய சொற்பொழிவு எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது.

ஜனங்களைப்பற்றி இலிச்சின் கருத்து என்ன என்பதையும் ஜனங்கள் எப்படி வாழ்க்கை நடத்திஞர்கள் என்பதையும் எவ்வளவு நுணுக்கமாக இலிச் பரிசீலனை செய்தார் என்பதையும் அவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதையும் அவர் பிரசங்கம் தெளிவுபடுத்திற்று.

> ''ஒரு வர்க்கம் என்ற ரீதியில், யுத்தத்தில், பாட்டாளி மக்களுக்கும் அரைகுறையான பாட்டாளி மக்களுக்கும் எத்தகைய லோகாயத சிரத்தையும் இல்லை என்பது சந்தேகத்துக்கு இடமற்ற விஷயம்; சம்பிரதாயம், ஏமாற்று ஆகியவைகளின் பிடிப்பில் அவர்கள் இருக்கிருர்கள். இவர்களுக்கு இன்னும் அரசியல் அனுபவம் ஏற்படவில்லை. எனவே, நீண்ட விளக்கப் பிரசாரம் நமது வேலை. கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் நாம் சிறிதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். ஆனல், குறுகிய தேசிய வெறியர்களை அணுகுவதைப் போன்று அவர்களை நாம் அணுகக் கூடாது. இவர்கள் என்றும் சோஷலிஸ்டுகளாக இருந்ததில்லை; சோஷலிஸம் என்ருல் என்ன என்பதே இவர்களுக்குத் தெரியாது; அரசியல் விழிப்பு இப்பொழுதுதான் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனல், இவர்களிடையே வர்க்கபோதம் வளர்கிறது. மிக வேகமாக விரிவடைகிறது. விளக்கப் பிரசாரத்தை இவர்களுக்குப் புரியக் கூடிய முறையில் நடத்த வேண்டும். இது மிகச் சிரமமானது; குறிப்பாக, நேற்றுவரையில் ரகசியமாக வேலை செய்துவந்த கட்சிக்கு இது மிகச் சிரமமானது.
>
> ''நான் உள்பட நம்மில் பலருக்கு ஜனங்கள் கூட்டத்தில், குறிப்பாக, சிப்பாய்கள் கூட்டத்தில், பேசச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. வர்க்க நன்மை என்னும் அடிப்படையில் அவர்களுக்கு எல்லா விஷயங்களையும் விளக்கினுலும்கூட நம் திட்டங்களில் ஒன்றை - அதாவது யுத்தத்தை நாம் எப்படி முடிக்கப் போகிருேம். யுத்தத்தை எப்படி முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று நாம் நினைக்கிருேம் என்பதை-அவர்களால் பரிபூரணமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. பயம் என்னும் பனித் திரையால் ஜனங்கள் மூடப்பட்டிருக்கிருர்கள்; நமது திட்டத்தை அவர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளவில்லை. எனவே, இந்த விஷயத்தில் நாம் மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.
>
> ''ஜனங்களின் கூட்டத்தில் நாம் பேசும்பொழுது எல்லாப் பிரசினைகளுக்கும் நாம் தெளிவான பதில் கூற வேண்டும்.''

> "பாட்டாளி மக்களுக்கு மத்தியில் மாத்திர மல்ல, மத்தியதர வர்க்கத்திற்கு மத்தியிலும் விரிவான முறையில் நாம் விளக்கப் பிரசாரம் செய்ய வேண்டும்."

நிர்வாகத்தைப்பற்றிப் பேசும்பொழுது விளாதிமிர் இலிச் கூறினர் :

> "நிர்வகிக்க வேண்டுமானல் அதிகாரம் வேண்டும். மத்தியதர வர்க்கத்தார் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்ருல், அதை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல நமக்குப் பொறுமை வேண்டும். ஆனல், எக் காரணத்தைக் கொண்டும் நாம் அவர்களிடம் பொய் சொல்லக் கூடாது."

இலிச் வாய்ப்பந்தல் போடவில்லை. அவரிடம் பேசின சிப்பாய்களும் விவசாயிகளும் இதை உணர்ந்தனர். ஆனல், நம்பிக்கையைத் திடீரென்று பெற்றுவிட முடியாது. எழுச்சி மிக்க காலத்தில்கூட இலிச் நிதானத்தை இழந்துவிடவில்லை.

> "இன்னும் நாம் சிறுபான்மையோராகவே இருக்கிறோம். ஜனங்கள் இன்னும் நம்மை நம்பவில்லை. நாம் காத்திருப்போம்; தனது உண்மையான சொருபத்தைச் சர்க்கார் காட்டும்பொழுது அவர்கள் நம்மை ஆதரிப்பார்கள்."

சிப்பாய்களுடனும் விவசாயிகளுடனும் இலிச் பல முறை பேசினர். அந்தக் காலத்தில்கூட அவர்கள் நம்புகிருர்களென்பதற்கான அறிகுறிகளை அவர் காணவில்லை. ஆனல், அவர் மயங்கிவிடவில்லை.

> "ஸ்தாபனம் அவசியமான இடத்தில் சொந்த விருப்பங்களை அடிப்படையாகக்கொண்டு பாட்டாளி மக்களின் கட்சி தனது திட்டத்தை உருவகப்படுத்தினல், துன்பகரமான தவறு செய்த குற்றம் அதைச் சாரும். பெரும்பான்மையோர் நம்முடன் இருக்கிருர்கள் என்று நாம் கூற முடியாது. அப்படியானல், ஜாக்கிரதை, ஜாக்கிரதை, இதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும். அதிக நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு பாட்டாளி மக்களுக்கு எனத் திட்டத்தை வகுப்பது தோல்வி அடையும்படி பாட்டாளிகளின் கட்சியைச் சபிப்பதாகும்."

முடிவுரையாக இலிச் கூறினர் :

> "ரஷ்யப் புரட்சி சோவியத்தைச் சிருஷ்டி செய்தது. உலகிலுள்ள எந்த முதலாளித்துவ நாடும் இத்தகைய சர்க்கார் ஸ்தாபனத்தைச் சிருஷ்டி செய்யவில்லை. சிருஷ்டி செய்யவும் முடியாது. வேறு எந்தவிதமான சர்க்கார் அதிகாரத்தைக் கொண்டும் சோஷலிஸ்ட் புரட்சி என்பது இயங்க முடியாது. சாதாரண முதலாளித்வ குடியரசைச் சிருஷ்டி செய்வதற்காகவோ, அல்லது உடனே சோஷலிஸத்தைப் புகுத்துவதற்காகவோ தொழிலாளர்-சிப்பாய்களின் சோவியத் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடாது ; அதனல் பின் கூறப்பட்டதை அடைய முடி

யாது போகும். அப்படியானால், நமது நோக்கம்தான் என்ன? சோஷலிஸத்தைப் புகுத்துவதற்காக உருப்படியான ஆரம்ப நடவடிக்கைகள் எடுப்பதற்காகவே நாம் அதிகாரத்தை முதலில் கைப்பற்ற வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இங்கே பயம்தான் மிகப் பெரிய எதிரி. இந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால், தொழிலாளர்-சிப்பாய்கள் பிரதிநிதிகளின் சோவியத் அர்த்த மற்றது என்பதையும், ஜனங்களுக்கு இந்த ஸ்தாபனத்தால் எதையும் செய்ய முடியாது என்பதையும் ஜனங்கள் தெளிவாக உணரவேண்டும்.''

சோவியத்துகளுக்கு முன் இருக்கும் உடனடியான வேலைகளைப்பற்றியும் இலிச் பேசினார்:

''தனிப்பட்ட நில உடைமையை ரத்து செய்ய வேண்டும். இது நமது முதல் வேலை. ஏனெனில், ஜனங்களில் பெரும்பான்மையோர் இதை ஆதரிக்கிறார்கள். இதைச் செய்ய நமக்குச் சோவியத்துக்கள் வேண்டும். பழைய சர்க்கார் யந்திரத்தின் உதவியுடன் இந்த வேலையை நாம் செய்ய முடியாது.''

அதிகாரத்திற்காக நடக்கும் போராட்டத்தின் பொருள் என்ன என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கினார்.

''என்னைக் கவர்ந்த ஒரு பிரசங்கத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்து விட்டு என் பேச்சை முடித்துவிடுகிறேன். புத்தகப் பதங்கள் ஒன்றைக்கூட உபயோகியாமல், தாங்கள் புரட்சி செய்ததை ஒரு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி அழகாக விளக்கினார். தங்களுக்கு ஒரு தலைவர் வேண்டுமா, வேண்டாமா என்னும் பிரசினையில் அந்த நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் கவனம் செலுத்தவே இல்லையாம். சுரங்கத்தை அவர்கள் கைப்பற்றினதும், உற்பத்தி தடைப்படாமல் இருப்பதற்காகக் கம்பிகளை எவ்வாறு பாதுகாப்பது என்னும் பிரசினைதான் அவர்களைக் கவர்ந்ததாம். அதே பிரசினைதான் ரொட்டியும். அவர்களிடம் போதிய ரொட்டி இருக்கவில்லை. ரொட்டியை எப்படிப் பெறுவது என்பதையும் அவர்கள் முடிவு செய்தனர். புரட்சியின் உண்மையான திட்டம் இதுவே; இது புத்தகங்களிலிருந்து பெறப்பட்டதல்ல. இதுதான் உண்மையான ஸ்தல அதிகாரத்தைக் கைப்பற்றல் ஆகும்.''

இந்தச் சுரங்கத் தொழிலாளியின் பேச்சைப்பற்றி நான் ஒரு நாள் சொன்னதை ஸினைதாபாவ்லோவ்னா கிராவிஷிலினோவ்ஸ்காயா எனக்கு ஞாபக மூட்டினாள். அவள் சொன்னாள்: ''இப்பொழுது இந்தச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு இஞ்சினீயர்கள் தேவை; கிளெப் அங்கே போனால் நல்லது என்று விளாதிமீர் இலிச் நினைக்கிறார்''.என்றாள்.

மகாநாட்டில் நாங்கள் பல நண்பர்களைச் சந்தித்தோம்.

லாங்ஜூமே பள்ளிக்கூட மாணவர் பிரிஸ்யாகினைச் சந்தித்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. இலிச்சின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது அவர் கண்கள் பிரகாசித்தன. இப்பொழுது அவர் உயிருடன் இல்லை. 1918-ம் வருடம் யூரலில் எதிர்ப் புரட்சிக்காரர்கள் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டனர்.

1917-ம் வருடம் மே மாதம் கட்சித் திட்டங்களில் திருத்தங்கள் செய்தார் இலிச். ஏகாதிபத்திய யுத்தமும் புரட்சியும் சமூக வாழ்க்கையில் அடிப்படையான மாற்றங்களை உண்டுபண்ணின. எனவே, பழைய திட்டம், காலம் கடந்ததாயிற்று; புதிய திட்டமும் புதிய திருஷ்டியும் அவசியமாயின.

இலிச் வகுத்த புதிய குறைந்த பட்சத் திட்டம் ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வதையும் உயர்த்துவதையும் தங்கள் சக்தியை வெளியிட மக்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதையும் அடிப்படையாகக்கொண்டதாக இருந்தது.

காரியாலய வேலை எனக்கு மேலும் மேலும் சலிப்பை அளித்தது. உண்மையான பொதுஜன வேலையில் ஈடுபட நான் விரும்பினேன்; இலிச்சைக் குறித்து என் கவலை அதிகரித்ததால் நான் அவரை அடிக்கடி காணவும் விரும்பினேன்; அவருக்கு எதிரான பிரசாரத்தின் வேகம் அதிகரித்தது. பீட்டர்ஸ்பர்க் பகுதிக்குச் சென்றால், "ஜெர்மனியிலிருந்து வந்த இந்த லெனினை என்ன செய்வது? அவரைக் கிணற்றில் தள்ளலாமா? அல்லது, வேறு ஏதாவது செய்யலாமா?" என்று வீட்டுக்காரிகள் ஏளனமாகப் பேசுவது கேட்கும். லஞ்சம், துரோகம் ஆகிய வதந்தி எங்கிருந்து பிறந்தது என்பது பகிரங்க விஷயம். எனினும், அதைக் கேட்பது மகிழ்ச்சி அளிக்கும் விஷயமல்ல. அத்தகைய பேச்சை முதலாளிகள் பேசுவது ஒன்று; ஆனால், பொது ஜனங்கள் அதைப்பற்றி பேசுவது வேறொன்று. லெனினைப்பற்றி "கட்சியின் சரித்திரத்திலிருந்து ஒரு ஏடு" என்னும் தலைப்பில் சோல்தாஸ்கயா பிராவ்தாவுக்கு நான் ஒரு கட்டுரை எழுதினேன். கையெழுத்துப் பிரதியில் லெனின் சில திருத்தங்கள் செய்தார். 1917-ம் வருடம் மே மாதம் 13-ம் தேதி 21-வது இதழில் அது பிரசுரிக்கப்பட்டது.

இலிச் களைத்து வீடு திரும்புவது வழக்கம். எனவே, நிலைமையைப்பற்றி அவரிடம் விவாதிக்க எனக்கு மனம் துணிவது இல்லை. முன் காலத்தில் உலாவும் பொழுது பேசுவதைப்போன்று, இப்பொழுதும் விஷயங்களை விவாதிக்க நாங்கள் இருவரும் விரும்பினோம். அபூர்வமாக, நாங்கள் பீட்ரோக்ராடு பகுதியில் இருந்த அமைதியான வீதிகளில் உலாவினோம்.

வாஸிலெவ்ஸ்கி தீவு முதல் வீதியில் இருந்த ராணுவப் பள்ளிக்கூடத்தில் நடந்த முதலாவது அகில ருஷ்யத் தொழிலாளர்களின்–சிப்பாய்களின் பிரதிநிதிகள் சோவியத் மகாநாட்டில் இலிச் நிகழ்த்திய சொற்பொழிவு எனக்கு ஞாபகம் இருக்கிறது. நாங்கள் நீண்ட தாழ்வாரத்தைக் கடந்து சென்றோம். வகுப்பு அறைகள் பிரதிநிதிகளின் ஜாகைகளாக மாற்றப்பட்டிருந்தன. மண்டபம் நிறைந்திருந்தது. மண்டபத்தின் பின் பகுதியில் சிறு கூட்டமாகப் போல்ஷ்விக்குகள் உட்கார்ந்திருந்தனர். போல்ஷ்விக்குகள் மாத்திரமீதான் லெனின் பேச்சைக் கைகொட்டி ஆதரித்தார்கள் என்றாலும், அது எல்லோரையும் ஆகர்ஷித்தது என்பதில் சந்தேகம் இல்லை. அவர் பேச்சைக் கேட்டுவிட்டு மூன்று மணி நேரம் கெரன்ஸ்கி மயங்கிக்கிடந்தார் என்று நான் பிறகு கேள்விப்பட்டேன். இது எவ்வளவு தூரம் உண்மை என்பது எனக்குத் தெரியாது.

ஜூன் மாதம் ஜில்லா டூமாவுக்குத் தேர்தல் நடந்தது. தேர்தல் பிரசாரம் எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்க நான் வாஸிலெவ்ஸ்கித் தீவுக்குச் சென்

றேன்; வீதிகளில் தொழிலாளர்கள் நிறைந்திருந்தனர். டியூப் பாக்டரியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அங்கே ஆதிக்கம் செலுத்தினர். சோஷலிஸ்டுப் புரட்சிக்காரர்களுக்கு வோட் அளித்த லாபேர்ன் பாக்டரி பெண் தொழிலாளர்கள் பலர் அங்கே காணப்பட்டனர். எங்கும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நின்று காரசாரமாக விவாதித்தனர். ஆனால், பிரதிநிதிகளைப்பற்றியோ தலைவர்களைப்பற்றியோ அவர்கள் விவாதிக்கவில்லை. ஆனால், கட்சிகள் என்ன செய்கின்றன என்பதைப்பற்றியும் கட்சிகளின் நோக்கம் என்ன என்பதைப்பற்றியும் விவாதித்தனர். பாரீஸ் முனிசிபாலிடி தேர்தல் என் நினைவிற்கு வந்தது. அங்கே அரசியல் பிரசினைபற்றி விவாதிக்கப்படாததையும், தனிப்பட்டவர்கள் பற்றி விவாதிக்கப்பட்டதையும் கண்டு நாங்கள் வியந்தோம். இங்கேநிலைமை நேர்மாறாக இருந்தது. 1905—07-ம் வருடங்களுக்குப் பிறகு ஜனங்கள் அடைந்த வளர்ச்சி தெளிவாகத் தெரிந்தது. பல அரசியல் கருத்துக்களை வெளியிடும் பத்திரிகைகளை எல்லோரும் படித்தார்கள் என்பது தெளிவாயிற்று. போனபார்ட்டிஸம் தலைதூக்குவதைப்பற்றி ஒரு கூட்டம் விவாதித்தது. கடந்த சில வருடங்களில் வெகுதூரம் வளர்ந்திருந்த தொழிலாளர் கூட்டத்தில் அங்கும் இங்கும் ஓடி ஆடித் திரிந்த சிறிய, துப்பறிபவன் போன்ற தோற்றம் படைத்த உருவம் ஒன்று பொருத்தமற்றதாகக் காணப்பட்டது; ஜனங்களின் புரட்சி வளர்ந்தது.

ஜூன் மாதம் 10-ம் தேதி ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தப் போல்ஷ்விக்குகள் முடிவுசெய்தனர். அந்த ஆர்ப்பாட்டத்தைக் காங்கிரஸ் தடை செய்தது. மூன்று நாட்கள் எத்தகைய ஆர்ப்பாட்டமும் நடத்தக் கூடாது என்று ஒரு தீர்மானமும் நிறைவேற்றியது. பீட்ரோக்ராட் கமிட்டி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட வேண்டும் என்று இலிச் வற்புறுத்தினர். சோவியத் அதிகாரத்தை நாம் அங்கீகரித்தால் காங்கிரஸின் முடிவுக்கு நாம் கட்டுப்பட வேண்டும் என்றும், இதைச் செய்யவில்லை என்ருல் நாம் எதிரிகளின் வலையில் விழுந்துவிடுவோம் என்றும் இலிச் கூறினர். ஆனால், ஜனங்களின் மனப்போக்கை உணர்ந்த, காங்கிரஸ், ஜூன் மாதம் 18-ம் தேதி ஒரு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவுசெய்தது. காங்கிரஸ் எதிர்பார்த்ததைவிட அதிக பலன் கிடைத்தது. ஆர்ப்பாட்டத்தில் சுமார் நான்கு லட்சம் தொழிலாளர்களும் சிப்பாய்களும் கலந்துகொண்டனர். "எல்லா அதிகாரங்களும் சோவியத்து சபைகளுக்கே!" "முதலாளித்துவ மந்திரிகள் பதினமரும் வீழ்க!" ஆகிய போல்ஷ்விக் மத்தியக் கமிட்டியின் சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகள், கூட்டத்தில் காணப்பட்ட அட்டைகளில் தொண்ணூறு சத விகிதம்; மூன்று அட்டைகள்தான் தற்காலிக சர்க்காரை ஆதரித்தன. ஒன்று பண்டைச் சேர்ந்தது; மற்ருென்று பிளக்கானுவ் குழுவைச் சேர்ந்தது; பிறிதொன்று கோஸாக் பட்டாளத்தைச் சேர்ந்தது. ஜூன் 18-ம் தேதியை முடிவுகண்ட நாட்களில் ஒன்று என்று இலிச் வர்ணித்தார்.

"ஜூன் 18 ஆர்ப்பாட்டம் புரட்சிக்கு வழிகாட்டும் புரட்சிகரமான பாட்டாளி மக்களின் சக்தியையும் திடத்தையும் வெளிப்படுத்திற்று; இருளிலிருந்து ஒளிக்கு வழிகாட்டிற்று. ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தின் சரித்திரரீதியான முக்கியத்துவம் இதில் பொதிந்து

கிடக்கிறது; புரட்சியில் வீழ்ந்தவர்களின் பிரேத ஊர்வலத்தன்று நடந்த ஆர்ப்பாட்டத்திலிருந்தும் மே முதல் தேதி நடந்த ஆர்ப்பாட்டத்திலிருந்தும் அடிப்படையில் இந்த அம்சத்தில் இது மாறுபட்டிருக்கிறது. புரட்சியின் முதல் வெற்றிக்கும், அதன் வீரர்களுக்கும் செலுத்தப்பட்ட சர்வவியாபகமான மரியாதை அது; சுதந்திரப் பாதையின் முதல் கட்டத்தைத் துரிதமாகவும், வெற்றிகரமாகவும் கடந்த ஜனங்கள் பின்னே எட்டிப்பார்த்த பாதை அது. உலகத் தொழிற்சங்க இயக்கத்துடனும், அதன் லட்சியங்களாகிய சமாதானம், சோஷலிஸம் ஆகியவைகளுடனும் பின்னிப் பிணைந்துகிடக்கும் மே தினத்தையும் நல்லெண்ணத்தையும்,நம்பிக்கையையும் வெளியிடும் விடுமுறை நாள் அது.

"புரட்சியின் முன்னேற்றப் பிரயாணத்தை மேற்கூறிய இரண்டு ஆர்ப்பாட்டங்களும் சுட்டிக்காட்டவில்லை; அந்த இரண்டு ஆர்ப்பாட்டங்களாலும் இதைச் சுட்டிக்காட்ட முடியவில்லை. ஜனங்களுக்கு முன்னே, ஜனங்களின் பெயரால், உருப்படியானநிர்ணயமான பிரசினைகளை—புரட்சி எப்படி முன்னேற வேண்டும் என்கிற பிரசினைகளை—மேற்கண்ட இரண்டு ஆர்ப்பாட்டங்களும் சமர்ப்பிக்கவில்லை.

"இந்த அர்த்தத்தில் ஜூன் 18-தேதி நடந்த ஆர்ப்பாட்டம் தான், செயலைத் தூண்டும் முதல் அரசியல் ஆர்ப்பாட்டம். பிரசினையை புத்தகத்தில் அல்ல, பத்திரிகையிலும் அல்ல, ஆனுல் தெருவில் விளக்கிய ஆர்ப்பாட்டம் அது. புரட்சியை வளர்க்கப் பல்வேறு வர்க்கங்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன, எவ்வளவு செயலாற்ற விரும்புகின்றன, எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டிற்று; முதலாளித்துவம் ஒளிந்துகொண்டது."

ஜில்லா டூமாக்களின் தேர்தல்கள் முடிந்தன. வைபோர்க் ஜில்லா கௌன்சிலுக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். போல்ஷ்விக்குகளும் சில மென்ஷ்விக் சர்வதேசவாதிகளும்தான் தேர்தலில் வெற்றிபெற்றனர். பின்கூறப்பட்டவர்கள் கௌன்சிலில் ஒரு வேலையும் செய்யவில்லை. எல். எம். மிக்கேலோவ், குச்மென்கா, சுகூரின், இன்னொரு தோழர், நான் ஆகிய போல்ஷ்விக்குகள் மாத்திரம்தான் வேலை செய்தோம். ஜில்லாக் கட்சிக் கமிட்டிக் காரியாலயம் இருந்த அதே கட்டிடத்தில்தான் முதலில் எங்கள் கௌன்சில் கூட்டமும் நடந்தது. ஜில்லாக் கமிட்டியின் காரியதரிசி ஸென்யா எகாரோவா; தோழர் லாட்ஸிஸும் அங்கே வேலை செய்தார். எங்கள் கௌன்சிலுக்கும் கட்சிக் கமிட்டிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

வைபோர்க் ஜில்லாவில் வேலை செய்த காலத்தில் நான் பல விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொண்டேன். கட்சி வேலைக்கும், சோவியத் வேலைக்கும் அது சிறந்த பள்ளிக்கூடம்; அரசியல் அகதியாக வெளிநாடுகளில் பல வருடங்கள் நான் வசித்த காலத்தில், சிறிய கூட்டத்தில் பேசுவதற்குக்கூட எனக்குத் துணிச்சல் ஏற்படவில்லை. அதுவரையில் பிராவ்தாவில் நான் ஒரு வரிகூட எழுதியதில்லை. இத்தகைய பயிற்சி எனக்கு மிகத் தேவையாக இருந்தது.

தொழிலாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தீவிர போல்ஷ்விக்குகள் வைபோர்க் ஜில்லாவில் இருந்தனர். நான் கௌன்ஸிலில் வேலை செய்ய ஆரம்பித்த உடனே சிப்பாய்களின் மனைவிகள் நிவாரணக் கமிட்டியின் வைபோர்க் ஜில்லாக் கிளையை நிர்வாகிக்கும் பொறுப்பை ஏற்றேன். ஸ்ட்ருவின் மனைவி நீனு அலெக்ஸாண்ட்ரோவ்னு கெர்ட். அதற்கு முன் இந்தப் பொறுப்பை நிர்வகித்து வந்தாள். என் பழைய சினேகிதை அவள்; பள்ளிக்கூடத்தில் நாங்கள் ஒன்ருகப் படித்தோம். ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூடத்தில் நாங்கள் பாடம் சொன்னேம்; தொழிலாளர் இயக்கம் வளர்ந்த ஆரம்ப வருடங்களில் அவள் சமதர்ம ஜனநாயக வாதியாக இருந்தாள். இப்பொழுது நாங்கள் முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளைப் பின்பற்றினேம். "சிப்பாய்களின் மனைவிகள் எங்களை நம்பவில்லை; நாங்கள் எதைச் செய்தாலும் அவர்கள் அதிருப்தி அடைகிருர்கள். போல்ஷ்விக்குகள்மீது மாத்திரம்தான் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. நல்லது, நீ இந்த வேலையை ஒப்புக்கொள்; ஒருக்கால், எங்களைவிட இந்த வேலையை நீ நன்ருகச் செய்யலாம்" என்று பொறுப்பை என்னிடம் ஒப்படைக்கும்பொழுது நீனு கூறினள். அந்த வேலையை ஒப்புக்கொள்ள நான் பயப்படவில்லை. தொழிலாளிகளின் உதவியுடன்—அவர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது—இந்த வேலையை விரிவுபடுத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது.

அரசியல் வேலைகளில் தீவிர பங்கு எடுத்துக்கொண்டதுடன் தொழிலாளர்கள் நின்றுவிடவில்லை; அவர்கள் கல்வியைப் பரப்புவதிலும் பங்கு எடுத்துக் கொண்டனர். விரைவில் நாங்கள் ஒரு கல்விக் கௌன்சிலை நிறுவினேம். அதில் வைபோர்க் ஜில்லாவில் இருந்த எல்லா பாக்டரிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். புரிஷெவ், கயுரோவ், யூர்கின், கோர்டியென்கோ ஆகிய தொழிலாளர்களின் பெயர்கள் எனக்கு ஞாபகம் இருக்கின்றன. வாரத்திற்கு ஒரு முறை நாங்கள் கூடி அனுஷ்டானரீதியான முறைகளை விவாதித்தோம்.

எல்லோருக்கும் கல்வி அறிவூட்டும் பிரசினை எழுந்தபொழுது, பாக்டரிகளில் வேலை செய்யும் எழுத்து வாசனையற்ற தொழிலாளர்களின் பெயர்களைத் தொழிலாளர்கள் உடனே பதிவு செய்தனர். எழுத்து வாசனை அற்றவர்களுக்கு எழுத்து அறிவிப்பதற்காகப் பாக்டரியில் வகுப்பு நடத்த ஒரு இடத்தை ஒதுக்கும்படி பாக்டரி சொந்தக்காரர்களைக் கேட்டோம். ஒருவர் இதற்கு இணங்க மறுத்தபொழுது, பெண் தொழிலாளர்கள் கூச்சலிட்டனர்; பாக்டரி அறைகளில் ஒன்றில் ஷாக் ட்ரூப்ஸ் (குறுகிய தேசிய வெறி படைத்த பாட்டாலியன்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சிப்பாய்களைக் கொண்டது இது.) இருக்கும் உண்மையை அவர்கள் வெளிப்படுத்தினர். இறுதியில், வகுப்பு நடத்துவதற்காகப் பாக்டரிக்கு வெளியில் ஒரு இடத்தை வாடகைக்கு அமர்த்தினுர் முதலாளி. பள்ளிக்கூடத்திற்கு வருகிறவர்களையும், உபாத்தியாயர்களின் வேலையையும் மேற்பார்வை யிடுவதற்காக தொழிலாளர்களைக்கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. ஜில்லாக் கவுன்சிலுக்கு அருகில் ஒரு பீரங்கிப் படை நிறுத்தப்பட்டது. முதலில் அது நம்பிக்கைக்குப் பாத்திரமானதாகக் கருதப்பட்டது. ஆனல், "நம்பிக்கை" விரைவில் மறைந்தது. வைபோர்க் பகுதியில் இது நிறுத்தப்பட்டதும் சிப்பாய்களுக்கு மத்தியில் கிளர்ச்சி செய்யப்பட்டது. சிப்பாய்

களுக்கு மத்தியில் முதலில் போல்ஷ்விக் கிளர்ச்சி செய்தவர்கள், புஷ்ப விதைகள் விற்றவர்கள். இவர்களில் பலர் சிப்பாய்களின் மனைவிகள். வைபோர்க் ஜில்லாவில் இருந்த பெண் தொழிலாளர்கள், பத்தொன்பதாம் நூற்றுண்டில் எனக்குத் தெரிந்த பெண் தொழிலாளர்களையோ 1905-ம் வருஷப் புரட்சி காலத்தில் எனக்குத் தெரிந்த பெண் தொழிலாளர்களையோ போன்று இவர்கள் இல்லை. அவர்கள் நல்ல ஆடைகள் அணிந்திருந்தனர்; கூட்டங்களில் தீவிர வேலை செய்தனர்; அரசியல் அறிவு படைத்திருந்தனர். ஒரு பெண் தொழிலாளி என்னிடம் சொன்னுள்: "என் கணவர் போர் முனையில் இருக்கிறுர். நாங்கள் நன்றுக வாழ்ந்தோம். ஆனுல், அவர் திரும்பிவந்த பிறகு நிலைமை எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியாது. இப்பொழுது நான் போல்ஷ்விக்குகளை ஆதரிக்கிறேன்; நான் அவர்களுடன் இருப்பேன். ஆனுல், போர்முனையில் இருக்கும் அவரைப்பற்றி எனக்குத் தெரியாது. நாம் போல்ஷ்விக்குகளைப் பின்பற்ற வேண்டும் என்பது அவருக்குத் தெரியுமா? இதை அவர் உணர்கிறுரா? ஒருகால் இதை அவர் இன்னும் உணராமல் இருக்கலாம் என்று அடிக்கடி இரவில் நான் நினைக்கிறேன், மீண்டும் அவரை நான் காண்பேனு என்பது எனக்குத் தெரியாது. ஒருகால் அவர் கொல்லப்படலாம். ஆம், நான் ரத்தம் துப்புகிறேன்; நான் ஆஸ்பத்திரிக்குப் போகிறேன்."

அந்தப் பெண் தொழிலாளியின் மெலிந்த முகம் தன் கணவருடன் அபிப்பிராய வித்தியாசம் ஏற்படலாம் என்னும் எண்ணம், என் மனதில் மாறுத சித்திரத்தைப் பதியவைத்தது.

ஆனுல், அந்தக் காலத்தில் கல்வி வேலையில் அதிக அபிவிருத்தி அடைந்திருந்தவர்கள் பெண் தொழிலாளிகள் அல்ல, ஆண் தொழிலாளிகள். ஆண்கள் எல்லாவற்றையும் பார்த்தனர். உதாரணமாக, தோழர் கோர்டியென்கோ கிண்டர்கார்டன் வேலையில் விசேஷக் கவனம் செலுத்தினுர்; தோழர் குக்ளின் வாலிபர்கள் விஷயத்தில் விசேஷக் கவனம் செலுத்தினுர்.

நானும் வாலிபர்களினிடையே வேலை செய்தேன். ஒளியும் அறிவும் என்னும் பெயரில் ஒரு வாலிபர் ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு ஒரு திட்டமும் இருந்தது. போல்ஷ்விக்குகள், மென்ஷ்விக்குகள், அனுர்க்கிஸ்டுகள் ஆகியவர்களைப் பின்பற்றுகிறவர்களும், கட்சித் தொடர்பற்றவர்களும் அதில் அங்கம் வகித்தனர். திட்டம் சிறுபிள்ளைத்தனமானது; ஆரம்ப காலத்தைப் பிரதிபலிப்பது. எனினும், அதன்மீது எழுந்த விவர்தம் கவர்ச்சி அளித்தது. உதாரணமாக, எல்லா அங்கத்தினர்களும் தைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது திட்டங்களில் ஒன்று; ஒரு சிறுவன்—அவன் ஒரு போல்ஷ்விக்—கேட்டான்: "எல்லோரும் எதற்காகத் தைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்? நிச்சயமாக, பெண்கள் தைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; இல்லையெனில், தங்கள் கணவர்களின் கால் சட்டைகளுக்குப் பொத்தான் தைக்க அவர்களால் முடியாது. ஆனுல், எல்லோரும் எதற்காகத் தைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்?" என்று.

இந்த வார்த்தைகள் ஆத்திரப் புயலை எழுப்பின. சிறுமிகள் மாத்திரமல்ல, எல்லோரும் ஆத்திரத்துடன் தங்கள் ஆசனங்களிலிருந்து எழுந்தனர்.

"கால் சட்டையில் மனைவிதான் பொத்தான் தைக்க வேண்டுமா? இதன்

பொருள் என்ன? பழைய பெண்ணடிமையை நிலைநிறுத்த நீ விரும்புகிருயா? மனைவி என்பவள் கணவனின் தோழி, அவள் வேலைக்காரி அல்ல.''

பெண்கள் மாத்திரம்தான் தைக்கக் கற்க வேண்டும் என்று சொன்ன சிறுவன் சரணுகதி அடைய நேர்ந்தது.

போல்ஷ்விக்குகளை இதயபூர்வமாக ஆதரித்த இன்னெரு சிறுவனுடன்—இவன் பெயர் முராஷெவ்—நடத்திய சம்பாஷணை எனக்கு ஞாபகம் இருக்கிறது.

''நீ ஏன் போல்ஷ்விக் கட்சியில் சேராமல் இருக்கிருய்?'' என்று அவனை நான் கேட்டேன்.

அவன் சொன்னுன்: ''இளைஞர்களாகிய பலர் கட்சியில் சேர்ந்தனர். நாங்கள் ஏன் சேர்ந்தோம்? போல்ஷ்விக்குகள் செல்லுவதுதான் சரி என்பதை தெரிந்துகொண்டதால்தான் நாங்கள் கட்சியில் சோந்தோம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இதற்காக நாங்கள் சேரவில்லை; ஆனுல், போல்ஷ்விக்குகள் கைத்துப்பாக்கிகள் வினியோகித்ததால் நாங்கள் சேர்ந்தோம்! இது நல்லதல்ல. ஒருவர் ஒரு கட்சியில் சேரும்பொழுது அதன் கொள்கை என்ன என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். இதைத் தெளிவாக உணராததால்தான் நான் கார்டைத் திருப்பிக் கொடுத்தேன்.''

புரட்சி மனப்பான்மைபடைத்த இளைஞர்களும் பெண்களும்தான் ஒளியும் அறிவும் லீகில் சேர்ந்தனர். பழைய கருத்துக்களை வெளியிடுகிறவர்கள் தங்களுக்கு மத்தியில் இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அங்கத்தினர்கள் தீவிரமாக வேலை செய்தனர். பாக்டரிகளில் நடந்த கூட்டங்களிலும், தங்கள் கூட்டங்களிலும் அவர்கள் பேசினர். ஆனுல், அவர்கள் எளிதில் நம்பினர். அதை எதிர்த்துப் போர் புரிய வேண்டி இருந்தது.

பெண்களுக்கு மத்தியில் நான் பல வேலைகள் செய்ய நேர்ந்தது. பழைய சபைக் கூச்சத்தை நான் வென்றுவிட்டேன்; அவசியமான இடங்களில் நான் பேசினேன்.

நான் வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட்டேன். சமூக வேலையில் பொது ஜனங்களை ஈடுபடுத்த நான் விரும்பினேன். லெனின் கூறிய மக்கள் ராணுவத்தை ஸ்தாபிப்பதைச் சாத்தியமாக்க என்னுல் கூடுமானதை எல்லாம் செய்ய நான் விரும்பினேன்.

வைபோர்க் ஜில்லாவில் நான் வேலை செய்ய ஆரம்பித்த பிறகு இலிச்சை நான் அபூர்வமாகத்தான் சந்தித்தேன். ஆனுல், காலம் நெருக்கடியாக இருந்தது. போராட்டம் பற்றி எரிந்தது. ஜுன் 18 குறிப்பிடத்தக்க நாள்; போல்ஷ்விக் கோஷங்களைக் கோஷித்துக்கொண்டு நான்கு லட்சம் தொழிலாளர்களும் சிப்பாய்களும் ஆர்ப்பாட்டம் செய்ததால் மாத்திரம் அது குறிப்பிடத்தக்க நாளாய் விடவில்லை. பல மாதங்கள் அசைந்தாடிவிட்டு அன்றுதான் நேசநாடுகளின் நிர்ப்பந்தத்திற்கு இணங்கி, போர்முனையில் தற்காலிக சர்க்கார் தாக்குதலை ஆரம்பித்தது. பத்திரிகைகளின் மூலமும், கூட்டங்களின் மூலமும் போல்ஷ்விக்குகள் கிளர்ச்சி செய்ய ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர். தன் பிடிப்புத் தளர்வதைத் தற்காலிக சர்க்கார் உணர்ந்தது. போர்முனையில் ரஷ்ய ராணுவ்ம் அடைந்த

முதல் தோல்வி சம்பந்தமான செய்தி ஜூன் 21-ம் தேதி கிடைத்தது. இது சிப்பாய்களை ரொம்பக் கிளர்ச்சி அடையச் செய்தது.

ஜூன் மாத இறுதியில் முஸ்டாமியாகிக்கு அருகில் இருந்த நெவோலா என்னும் கிராமத்தில் வசித்து வந்த போரிஞ்ச்-ப்ருவீச் வீட்டிற்கு சில தினங்கள் ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக மரியா இலிஷ்னிஞவுடன் இலிச் சென்ருர். அவர்கள் இல்லாத காலத்தில் பீட்ரோக்ராட்டில் கீழ்க்கண்ட சம்பவம் நடந்தது. வைபோர்க் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பீரங்கிப் படை ஆயுதம் தாங்கிய புரட்சி செய்ய முடிவு செய்தது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன் கல்வி சம்பந்தமான சில பிரசினைகளை விவாதிப்பதற்காக பட்டாளக் கல்விக் கமிட்டியும் திங்கட்கிழமை கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பட்டாளத்திலிருந்து யாரும் வரவில்லை. பட்டாளம் போய்விட்டது. க்ஷிஸின்ஸிகி அரண்மனைக்குச் செல்லும் வழியில் ஸாம்ஸோனிவஸ்கி அவென்யூவில் பீரங்கிப்படை ஒழுங்காக நடந்து செல்வதை நான் கண்டேன். கீழ்க்கண்ட சித்திரம் என் மனதில் ஆழமாகப் பதிந்தது. நடைபாதையில் நின்றுகொண்டிருந்த ஒரு வயோதிகத் தொழிலாளி கீழே இரங்கி அவர்களை நோக்கி நடந்தார். அவர்களைத் தாழ்ந்து வணங்கிவிட்டு உரத்த குரலில் அவர் சொன்ஞர்: "சகோதரர்களே இப்பொழுது தொழிலாளர்களை ஆதரியுங்கள்!"

அப்பொழுது க்ஷிஸின்ஸிகி அரண்மனையிலிருந்த மத்தியக் கமிட்டிக் காரியாலயத்தில் ஸ்டாலின் லாஷ்விக் ஆகிய மத்தியக் கமிட்டி அங்கத்தினர்கள் இருந்தனர். பீரங்கிப் பட்டாளம் அரண்மனைக்குச் சென்றது. முகப்புக்கு அருகில் நின்று சலாம் செய்துவிட்டு, அவர்கள் அப்பால் சென்றனர். பிறகு மேலும் இரண்டு பட்டாளங்கள் மத்தியக் கமிட்டிக் காரியாலயத்திற்கு வந்தன. அதன் பிறகு தொழிலாளர் ஊர்வலம் வந்தது. இலிச்சை அழைத்துவர மாலையில் முஸ்டாமியாகிக்கு ஒரு தோழர் அனுப்பப்பட்டார். ஆர்ப்பாட்டத்தை அமைதியாக நடத்தும்படி மத்தியக் கமிட்டி வேண்டுகோள் விடுத்தது. ஆனால், பீரங்கிப்படையோ வீதிஅடைப்பு அமைத்துக்கொண் டிருந்தது.

அந்தப் பட்டாளத்தில் வேலை செய்து வந்த தோழர் லாஷ்விக் வைபோர்க் கௌன்சில் காரியாலய அறையில் உத்திரத்தைப் பார்த்துக்கொண்டு ஒரு கட்டிலில் நீண்ட நேரம் படுத்திருந்தது எனக்கு இப்பொழுதும் ஞாபகம் இருக்கிறது. பீரங்கிப் படையினரைத் தடுத்து நிறுத்துவதற்காக அவர்களிடம் செல்ல அவருக்கு மனமில்லை. போவது மிகச் சிரமமானது. எனினும், இது மத்தியக் கமிட்டியின் முடிவு. பாக்டரிகளில் வேலைநிறுத்தம் நடந்தது. கிரான்ஸ்டாட்டிலிருந்து மாலுமிகள் வந்துவிட்டனர். ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களையும் மாலுமிகளையும் கொண்ட பெரிய ஊர்வலம் தாரிடா அரண்மனையை நோக்கிச் சென்றுகொண் டிருந்தது. க்ஷிஸின்ஸிகி அரண்மனையின் முகப்பிலிருந்து இலிச் பேசினர். ஆர்ப்பாட்டத்தை நிறுத்தும்படி மத்தியக் கமிட்டி வேண்டுகோள் விடுத்தது, ஜங்கர்களையும் (ராணுவப் பள்ளிக்கூட மாணவர்கள்) கோஸாக்குகளையும் தற்காலிக சர்க்கார் அழைத்தது. ஸாதோவாயா தெருவில் அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது சுட்டனர். பீட்டர்ஸ்பர்க் பகுதியிலிருந்த ஸுலிமோவ் வீட்டில் இலிச் இரவைக் கழிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், வைபோர்க் பகுதியில் அவர் ஒளிந்துகொள்வது நலமெனவும், கயுரோவ் என்னும் தொழிலாளியின் வீட்டில் அவர் வசிக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டைப்பற்றி இலிச்சிடம் சொல்லுவதற்காக நான் ஸுலிமோவ் வீட்டிற்குச் சென்றேன். பிறகு நாங்கள் இருவரும் வைபோர்க் பகுதிக்குச் சென்றோம். வீதி நெடுகிலும் மாஸ்கோப் பட்டாளம் சொல்லுவதை நாங்கள் கண்டோம். அங்கே கயுரோவ் உட்கார்ந்துதா னிருந்தார். எங்களைக் கண்டதும் அவர் எங்களுக்கு முன்னே நடந்தார். நான் திரும்பினேன். ஜங்கர்கள் பிராவ்தா காரியாலயத்தை நாசப்படுத்தினர். பகலில் பீட்ரோக்ராட் கமிட்டியின் கூட்டம் ரினோ பாக்டரி காவற்காரர் அறையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் இலிச் கலந்துகொண்டார். பொது வேலைநிறுத்தத்தைப்பற்றி விவாதிக்கப்பட்டது. பொது வேலைநிறுத்தம் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. அங்கிருந்து லெஸனுய் ஜில்லாவில் இருந்த தோழர் பெபானோவின் வீட்டிற்கு இலிச் சென்றார். அங்கே மத்தியக் கமிட்டி அங்கத்தினர்கள் பலரை அவர் சந்தித்தார். அன்று தொழிலாளர் இயக்கம் நசுக்கப்பட்டது. இரண்டாவது டூமாவில் பீட்ரோக்ராட் தொழிலாளர்களின் பிரதிநிதியாக எங்களுடன் ஒரு காலத்தில் நெருங்கி வேலை செய்த முன்னேற்றம் குழுவைச் சேர்ந்த அலெக்ஸின்ஸ்கியும் சோஷலிஸ்ட்-புரட்சிக் கட்சி அங்கத்தினரும் ஷுலெஸ்பர்க் கைதியாக இருந்தவருமான பானக்ராடோவும் லெனின் ஜெர்மன் ஒற்றர் என்பதை நிரூபிக்கத் தங்களிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாகக் கூறி அவதூறு நிறைந்த அறிக்கை ஒன்றை விடுத்தனர். இந்த அவதூறு லெனின் செல்வாக்கைக் குறைத்துவிடும் என்று அவர்கள் நம்பினர். லெனினையும், ஸினோவியெவ்வையும், காமனீவையும் கைது செய்ய ஜுலை 6-ம் தேதி தற்காலிக சர்க்கார் வாரண்டு பிறப்பித்தது. க்ஷிஸின்ஸ்கி அரண்மனையைச் சர்க்கார் துருப்புக்கள் கைப்பற்றின. கயுரோவின் புதல்வர் ஒரு அனார்ச்சிஸ்ட்; வாலிபர்கள் வெடிகுண்டுகளை எறிந்து விளையாடத் தொடங்கியிருந்தபடியால் அந்த இடம் பாதுகாப்புக் குறைவாக இருந்தது. எனவே ஸினோவியெவ் ஒளிந்துகொண்டிருந்த அல்லிலுயேவ் வீட்டிற்கு லெனின் சென்றார்.

இலிச்சைப் பார்ப்பதற்காக ஏழாம் தேதி நானும் மரியா இலிஷ்னினாவும் அல்லிலுயேவ் தம்பதிகள் வீட்டிற்குச் சென்றோம். இலிச் அசைந்தாடிக்கொண்டிருந்த நேரம் அது. அதிகாரிகளிடம் சரணாகதி அடைந்துவிட்டு, கோர்ட்டில் ஆஜராக வேண்டுமென்று அவர் வாதாடினார். இதை மரியா இலிஷ்னினா உக்கிரமாக எதிர்த்தாள். "கிரிகோரியும் நானும் ஆஜராக முடிவு செய்துவிட்டோம். இதைக் காமனீவிடம் சொல்" என்று அவர் என்னிடம் சொன்னார்.

அப்பொழுது காமனீவ் அருகிலிருந்த ஒரு வீட்டில் வசித்து வந்தார். நான் அவசரமாகப் போகப் புறப்பட்டேன். என்னை நிறுத்திவிட்டு, "நாம் விடைபெற்றுக்கொள்வோம்" என்றார் இலிச். மீண்டும் நாம் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் போகலாம்; நாங்கள் ஆலிங்கனம் செய்துகொண்டோம்.

காமனீவிடம் சென்று இலிச்சின் செய்தியை அவருக்குத் தெரிவித்தேன். மாலையில் இலிச் கோர்ட்டுக்கு போகக்கூடாதென்று தோழர் ஸ்டாலினும் மற்றவர்களும் வற்புறுத்தினர். இறுதியில் அவர்கள் இலிச்சின் மனத்தை மாற்றிவிட்டனர். இதன்மூலம் அவருடைய உயிரை அவர்கள் காப்பாற்றினர். அன்று

மாலே ஷிரோகாயா வீதியில் இருந்த எங்கள் வீட்டை ராணுவம் சோதனை செய்தது. ஒரு கர்னலும், வெள்ளைப் பட்டைகள் தைக்கப்பட்ட சாம்பல் நிறக் கோட்டு அணிந்த ஒரு ராணுவ அதிகாரியும் தோன்றினர். எங்கள் அறையை மாத்திரம்தான் அவர்கள் சோதனை செய்தனர். மேஜையிலிருந்து சில குறிப்புகளையும் அவர்கள் கைப்பற்றினர். இலிச் எங்கே இருக்கிறார் என்பது எனக்குத் தெரியுமா என்று அவர்கள் என்னைக் கேட்டனர். இலிச் சரணாகதி அடையவில்லை என்பதை இதிலிருந்து நான் தெரிந்துகொண்டேன்.

ஷிரோகாயா வீதியில் வசித்துவந்த தோழர் ஸ்மிலிகா வீட்டிற்கு நான் காலையில் சென்றேன். ஸ்டாலினும், மாலடோவும் அவருடன் வசித்து வந்தனர். இலிச்சும் ஸினோவியெவ்வும் ஒளிந்திருக்க முடிவு செய்திருப்பதை அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொண்டேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு - ஒன்பதாம் தேதி - பல ஜங்கர்கள் எங்கள் வீட்டைச் சோதனையிட்டுச் சூறையாடினர். அன்று இலிஷ்னிஷவின் கணவர் மார்க் திமோபையோவிச் எலிஸரோவ் வீட்டில் இருந்தார். அவர்தான் இலிச் என்று அவர்கள் நினைத்தனர். இலிச்சைப்பற்றி அவர்கள் என்னைக் கேட்டனர். அப்பொழுது அன்னூஷ்கா என்னும் வேலைக்காரி எலிஸரோவ் வீட்டில் இருந்தாள். குக்கிராமத்திலிருந்து வந்தவள் அவள்; என்ன நடக்கிறது என்பது அவளுக்குத் தெரியாது; எழுதவும் படிக்கவும் தெரிந்துகொள்ள அவளுக்கு அளவு கடந்த ஆசை; ஓய்வு நேரங்களில் அவள் பாலர் பாடம் படித்தாள்; எனினும் "அவள் மோசமான பண்டிதை; நான் கிராமத்து முட்டாள்" என்று வருத்தத்துடன் அவள் சொல்லுவாள். எழுதவும் படிக்கவும் அவளுக்குக் கற்றுக்கொடுக்கவும் பல்வேறு கட்சிகளைப்பற்றியும் யுத்தத்தைப்பற்றியும் அவளுக்கு விளக்கவும் நான் முயன்றேன். லெனின் யார் என்பது அவளுக்குத் தெரியாது. எட்டாம் தேதி நான் வீட்டில் இருக்கவில்லை. அன்று வீட்டுக்கு ஒரு மோட்டார் வந்ததாகவும், எதிரிகள் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் என்னிடம் சொன்னார்கள். திடீரென்று அன்னுஷ்கா வெளியே ஓடி "ஒருவிதமான ஒலின்ஸ் வந்திருக்கிறார்கள்" என்று கூவினாள். சோதனை நடந்தபொழுது மார்க் திமோபையோவிச்சை சுட்டிக் காட்டி, அவர் பெயர் என்று அன்னுஷ்காவைக் கேட்டனர் ஜங்கர்கள்; அவளுக்கு இது தெரியாது. இதைச் சொல்ல அவள் விரும்பவில்லை என்று அவர்கள் முடிவு செய்தனர். பிறகு அவர்கள் அடுக்களையைச் சோதனைச் செய்தனர்; அவளுடைய கட்டிலுக்குக் கீழே பார்த்தனர். ஆத்திரத்துடன் அன்னுஷ்கா சொன்னாள்:

"அடுப்பில் பாருங்கள்! யாராவது அங்கே உட்கார்ந்திருக்கலாம்" என்று.

"எங்கள் மூவரையும்-மார்க்திமோபையோவிச்சையும், அன்னுஷ்காவையும், என்னையும் - அவர்கள் ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றனர். எங்கள் மூவரையும் தனித் தனியே நிறுத்தினர். எங்களுக்கு இரண்டு பக்கங்களிலும் ஆயுதம் ஏந்திய சிப்பாய்கள் நின்றனர். சிறிது நேரத்திற்குப் பிறகு கோபத்துடன் சில அதிகாரிகள் உள்ளே பாய்ந்தனர். எங்கள்மீது பாய அவர்கள் தயாராயிருந்தனர். ஆனால், முதல் சோதனை நடத்திய கர்னல் உள்ளே வந்து, எங்களைப் பார்த்துவிட்டுச் சொன்னார்: "நமக்குத் தேவையானவர்கள் இவர்கள் அல்ல" என்று.

இலிச் அங்கே இருந்திருந்தால் அவரை அவர்கள் சுக்குநூருகக் கிழித்திருப்பார்கள். எங்களை அவர்கள் அனுப்பிவிட்டார்கள். வீடு திரும்ப எங்களுக்கு மோட்டார் தர வேண்டும் என்று மார்க் திமோபையோவிச் வற்புறுத்தினர். மோட்டார் தர இசைந்துவிட்டு கர்னல் அப்பால் சென்ருர். ஆனல், அவர் மோட்டார் தரவில்லை. நாங்கள் வாடகை மோட்டார் அமர்த்தினேம். பாலங்களை மூடிவிட்டார்கள். எனவே, காலையில்தான் நாங்கள் வீடு திரும்பினேம். நீண்ட நேரம் நாங்கள் கதவைத் தட்டினேம். எங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஏதாவது நேர்ந்திருக்குமோ என்று நாங்கள் பயந்தோம். இறுதியில் கதவு திறக்கப்பட்டது.

ஜில்லா கௌன்சிலில் நான் இருந்தபொழுது மூன்ருவது முறையாக எங்கள் வீடு சோதனையிடப்பட்டது. நான் வீடு திரும்பியபொழுது கதவைச் சிப்பாய்கள் காவல்புரிவதையும் வீதியில் ஜனங்கள் நிறைந்திருப்பதையும் கண்டேன். சிறிது நேரம் வீதியில் நின்றுவிட்டு, உள்ளே போகாமல் ஜில்லா கௌன்சிலுக்குத் திரும்பிச் சென்றேன். உள்ளே இருப்பவர்களுக்கு என்னுல் ஒரு உதவியும் புரிய முடியவில்லை. நான் ஜில்லா கௌன்சிலை அடைந்தபொழுது அகாலமாய்விட்டதால் காவற்காரரைத் தவிர வேறு யாரும் அங்கே இருக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பின்னர் சமீபத்தில் அமெரிக்காவி லிருந்துவந்த ஸ்லுட்ஸ்கி, வெர்லோடார்ஸ்கி, மெல்னியாசான்ஸ்கி முதலியவர்களுடன் அங்கு வந்தார். பிறகு தெற்கு முனையில் ஸ்லுட்ஸ்கி கொல்லப்பட்டார். சிறிது நேரத்திற்கு முன் தாம் கைதியாக இருந்ததாகவும், நான் வீடு திரும்பக் கூடா தென்றும், என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ளக் காலையில் யாரையாவது அனுப்பும்படியும் அவர் கூறினர். இரவைக் கழிக்க நாங்கள் இடம் தேடினேம். ஆனுல், தோழர்களின் விலாசங்கள் எங்களுக்குத் தெரியவில்லை. பேட்டையில் நாங்கள் நீண்ட நேரம் அலைந்து திரிந்தோம்; இறுதியில் பேட்டையில் வேலைசெய்த தோழர் பொபானேவைச் சந்தித்தோம். அவர் இரவைக் கழிக்க எங்களுக்கு இடம் அளித்தார். எங்களைச் சேர்ந்தவர்களில் அவர் கைது செய்யப்பட்டதையும், முந்தின சோதனைகளைப் போன்று அந்தச் சோதனை அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை என்பதையும் நாங்கள் காலையில் தெரிந்துகொண்டோம்.

சட்டவிரோதமாக வேலைசெய்த கட்சியின் பழைய அங்கத்தினர் வீட்டில் இலிச்சும் ஸினேவியெவ்வும் ஒளிந்திருந்தனர். அவர் பெயர் எமில்யானேவ். ஸெஸ்ட்ரோரெஸ்க் பாக்டரியில் அவர் வேலை செய்தார். அவர் வீடு ஸெஸ்ட்ரோரெஸ்க்குக்கு அருகில் ரோஸ்லிவில் இருந்தது. எமில்யானேவையும் அவர் குடும்பத்தையும் இலிச் நேசித்தார்.

நான் பொழுதை யெல்லாம் வைபோர்க் ஜில்லாவில் கழித்தேன். ஜுலை நாட்களில் தொழிலாளர்களின் உணர்ச்சிக்கும், மத்திய வர்க்கத்தின் உணர்ச்சிக்கும் இடையே உள்ள வேற்றுமை என்னை ஆகர்ஷித்தது. டிராம்களிலும், வீதிகளிலும், மூலைமுடுக்குகளிலும் அதிருப்தியின் முணுமுணுப்பு கேட்டது. ஆனல், மரப்பாலத்திற்கு அப்பால் வைபோர்க் பகுதியில் நான் முற்றிலும் மாறுபட்ட உலகத்தைக் கண்டேன். பல வேலைகளைச் செய்யவேண்டி இருந்தது. தோழர் எமில்யானேவுடன் தொடர்புடைய தோழர் ஸாப்ட் மூலமும் மற்றவர்கள்

மூலமும் இலிச்சிடமிருந்து பல செய்திகள் எனக்குக் கிடைத்தன. தாக்குதலின் வேகம் அதிகரித்தது. ஜூலை மாதம் 9-ம் தேதி நடந்த அகில ரஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளர்—சிப்பாய்கள் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி ஆகியவைகளின் கூட்டுக் கூட்டத்தில் தற்காலிக சர்க்கார்தான் புரட்சிக்கு விமோசனத்தைத் தேடித் தர முடியும் என்று தீர்மானிக்கப்படடது. அன்றே விமோசனம் ஆரம்பமாயிற்று. அன்று காமனீவ் கைது செய்யப்பட்டார். போர் முனையில் மரண தண்டனையை அமுலபடுத்த ஜூலை 12-ம் தேதி உத்தரவு பிறந்தது. ஜூலை 15-ம் தேதி பிராவ்தாவும், ஓகோப்னுயா பிராவ்தாவும் நசுக்கப்பட்டன; அன்று போர்முனையில் கூட்டங்களைத் தடுக்கும் உத்திரவும் பிறந்தது. ஹெலிஸிங்போர்ஸில் போல்ஷ்விக்குகள் கைது செய்யப்பட்டனர்; அங்கிருந்து வெளிவந்த வோல்னு என்னும் போல்ஷ்விக் பத்திரிகை நசுக்கப் பட்டது. ஜூலை 18-ம் தேதி பின்னிஷ் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது; ஜெனரல் கார்னிலாவ் கமாண்டர்-இன்-சீப்பாக நியமிக்கப்பட்டார். ஜூலை 22-ம் தேதி டிராட்ஸ்கியும் லூனசார்ஸ்கியும் கைது செய்யப்பட்டனர்.

ஜூலை நாட்களுக்குப் பிறகு ராணுவக் கட்டுப்பாடை உயர்த்தும் எண்ணத் துடன் கெரன்ஸ்கி ஒரு திட்டம் வகுத்தார். ஜூலை நாட்களில் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்த பீரங்கிப் படையினரை நிராயுதபாணிகளாக்கி, பொதுச் சதுக்கத் திற்கு அவர்களை நடத்திச் சென்று, அவர்களை அங்கே அவமதிக்க அவர் முடிவு செய்தார். நிராயுதபாணிகளாக்கப்பட்ட சிப்பாய்கள் சதுக்கத்திற்குச் செல்வதை நான் கண்டேன். குதிரைகளை அவர்கள் நடத்திச் சென்றபொழுது, அவர்கள் கண்களிலும் அவர்களுடைய மெதுவான நடையிலும் அளவுகடந்த வெறுப்பு பிரதிபலித்தது; இதைவிட முட்டாள்தனமான முறையைக் கண்டுபிடித்திருக்க முடியாது என்பதை அவை தெளிவுபடுத்தின. உண்மையில் அக்டோபரில் பீரங்கிப் படையைச் சேர்ந்த அத்தனை பேரும் போல்ஷ்விக்குகளைப் பின்பற்றினர்; பீரங்கிப்படையைச் சேர்ந்தவர்கள் ஸ்மாலினியில் இலிச்சைப் பாதுகாத்தனர்.

போல்ஷ்விக் கட்சி அரை-சட்டரீதியான நிலைக்குத் தாழ்த்தப்பட்டது. எனினும் எண்ணிக்கையிலும் சக்தியிலும் அது வளர்ந்தது. ஜூலை மாதம் 26-ம் தேதி ஆருவது கட்சிக் காங்கிரஸ் ஆரம்பமானபொழுது கட்சியில் ஒரு லட்சத்து எழுபத்தையாயிரம் அங்கத்தினர்கள் இருந்தனர். மூன்று மாதங் களுக்கு முன் அகில ரஷ்ய போல்ஷ்விக் மகாநாடு நடந்தபொழுது இருந்ததைவிட இரு மடங்கு அதிகம். போல்ஷ்விக்குகளின் செல்வாக்கு வளருவதைப்பற்றி —குறிப்பாக ராணுவத்தில் அதிகரிப்பதைப்பற்றி—சந்தேகமே இல்லை. போல்ஷ் விக்குகளின் சக்திகளை மேலும் ஒன்றுதிரட்ட ஆருவது காங்கிரஸ் உதவிபுரிந்தது. தற்காலிக சர்க்கார் எதிர்ப் புரட்சிக் கொள்கையைப் பின்பற்றுவதைச் சுட்டிக் காட்டி, காங்கிரஸ் ஒரு அறிக்கை விடுத்தது.

"உலகப் புரட்சியும், வர்க்கப் போராட்டங்களும் விரைவில் வெடிக்கும். கொடியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு இந்தப் போரில் நமது கட்சி ஈடுபடுகிறது. இந்தக் கொடியை அது உறுதி யாகத் தூக்கிப் பிடித்திருக்கிறது. ஒப்பந்தத்தை மீறுகிறவர்களுக்கும்

அவதூருகப் பிரசாரம் செய்கிறவர்களுக்கும், புரட்சியின் துரோகிகளுக்கும், முதலாளிகளின் கூலிகளுக்கும் முன்னே அது கொடியைப் போட்டுவிடவில்லை. சோஷலிஸத்துக்காகவும், தேசங்களுக்கிடையே சகோதரத்துவம் நிலவுவதற்காகவும் நடக்கும் போரில் அது கொடியை உயர்த்திப் பிடிக்கும். ஏனெனில், புதிய உலகம் பிறக்கிறது என்பதும், பழைய உலகத்தின் மரண நேரம் நெருங்குகிறது என்பதும் அதற்குத் தெரியும்.''

ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி தமது படைகளுடன் பீட்ரோக்ராடை நோக்கி நடக்க ஆரம்பித்தார் கார்னிலோவ். பீட்ரோக்ராடைப் பாதுகாக்கப் பீட்ரோக்ராட் தொழிலாளர்களும் வைபோர்க் தொழிலாளர்களும் முதலில் விரைந்து சென்றனர். கார்னிலோவ் படையின் முதல் பகுதியைச் சந்திப்பதற்காக—இது வெறிகொண்ட பகுதி என்று அழைக்கப்பட்டது—எங்களைச் சார்ந்த கிளர்ச்சிக்காரர்கள் அனுப்பப்பட்டனர். விரைவில் கார்னிலோவின் படை சிதைக்கப்பட்டது. உண்மையான போராட்டம் நடக்கவே இல்லை. பீட்ரோக்ராடைத் தாக்க வேண்டிய படையின் தலைவர் ஜெனரல் க்ரிமோவ் தற்கொலை புரிந்துகொண்டார். எங்கள் கல்விக் கமிட்டியில் வேலைசெய்த ஒரு இளம் வைபோர்க் தொழிலாளி தோளில் துப்பாக்கியுடன் ஜில்லா டூமாவுக்கு ஓடிவந்த காட்சி இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. போர்முனைக்கு முதலில் சென்றவர்களில் அவனும் ஒருவன். அப்பொழுதுதான் அவன் போர்முனையிலிருந்து திரும்பியிருந்தான்.

அவன் உள்ளே வந்தபொழுது போர் உணர்ச்சியால் அவன் முகம் சிவந்திருந்தது. என்றாலும், துப்பாக்கியை ஒரு மூலையில் எறிந்துவிட்டு பள்ளிக்கூடத்தில் அப்போது குறைவாக இருந்த கரும்பலகையையும் சாக்பீஸ்களையும் பற்றி அவன் பேச ஆரம்பித்தான். வைபோர்க் ஜில்லாவிலிருந்த தொழிலாளர்கள் புரட்சிப் போரையும் அறிவும் கலையும் பெற நடக்கும் போரையும் எவ்வாறு பிணைத்தார்கள் என்பதை நெருக்கமாகப் பரிசீலனை செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ரோஸ்லீவுக்கு அருகில் இருந்த ஒரு குடிசையில் ஒளிந்துகொண்டிருந்த இலிச்சால் அங்கே தொடர்ந்து வசிக்க முடியவில்லை. சரத் காலம் வந்தது. இலிச் பின்லாந்துக்குச் செல்ல முடிவு செய்தார். சர்க்காரும் புரட்சியும் என்னும் நூலைப் பூர்த்தி செய்ய அவர் விரும்பினார். அதற்கு அவர் ஏராளமான தகவல் சேகரித்திருந்தார்; அதற்குத் திட்டமும் போட்டிருந்தார். பின்லாந்தில் பத்திரிகைகளைப் பெறுவதும் எளிது.

ஸெஸ்ட்ரோரெட்ஸ்க் தொழிலாளியின் பெயரால் இருந்த ஒரு அனுமதிச் சீட்டை என். எ. எமிலியோனேவ் பெற்ருர். அந்தத் தொழிலாளியின் தோற்றத்தைப் பெறுவதற்காக இலிச் பொய்த் தாடி வைத்துக்கொண்டார். டிமிட்ரா இலிச் லெஷ் சென்கோ-இவர் வீட்டில் இலிச் பலமுறை படுத்துறங்கி இருக்கிருர். அனுமதிச்சீட்டில் ஒட்டுவதற்காக இலிச்சைப் போட்டோப் பிடிக்க ரோஸ்லீவுக்குச் சென்ருர். 1905-07 வருடங்களில் கட்சியில் அங்கம் வகித்த பழைய தோழர் லெஷ்சென்கோ-முன்னர் அவர் போல்ஷ்விக் பத்திரிகையின் கூட்டு ஆசிரியராக

இருந்தார். அப்பொழுது வைபோர்க்கு ஜில்லாவில் நடந்த கல்வி வேலையில் இவர் எனக்கு உதவிபுரிந்துகொண் டிருந்தார். பின்னிஷ் ரயில்வேயில் இஞ்சின் டிரைவராக இருந்த யலாவா என்னும் பின்னிஷ் தோழர்—இவரைத் தோழர்கள் ஷிட்மான், ரக்யா ஆகியவர்களுக்கு நன்ருகத் தெரியும்.—பயர்மான் வேஷத்தில் இலிச்சைப் பின்லாந்துக்கு அழைத்துச் செல்ல இசைந்தார். அந்தத் திட்டம் வெற்றிபெற்றது. தோழர் யலாவா மூலம் இலிச்சுடன் தொடர்பு வைத்துக் கொள்ளப்பட்டது. சில முறை வைபோர்க் ஜில்லாவில் வசித்துவந்த யலாவா வீட்டிற்கு நான் சென்றேன். இலிச்சிடமிருந்து வந்த கடிதங்களைப் பெறுவதற் காக ஹெல்ஸிங்போர்ஸில் இலிச் குடியேறின பிறகு என்னை வரும்படி கண் ணுக்குத் தெரியாத மையில் ஒரு கடிதம் எழுதினர். தமது விலாசத்தை அனுப் பினர்; யாரையும் கேட்காமல் அந்த இடத்தை அடைவதற்காக அவர் தமது இடத்தின் படத்தையும் எழுதினர். ஆனல், காகிதத்தைச் சூடாக்கினபொழுது அதன் ஓரத்தை நான் எரித்துவிட்டேன். ஸெஸ்ட்ரோரெட்ஸ்கில் வேலை செய்து வந்த ஒரு கிழவியின் அனுமதிச் சீட்டை எமிலியானேவ் எனக்கு வாங்கிக் கொடுத் தார். தலையை ஒரு போர்வையால் மூடிக்கொண்டு அவர்களைச் சந்திக்க நான் ரோஸ்லீவுக்குச் சென்றேன். எல்லைப்புறம்வரையில் அவர்கள் என்னுடன் வந் தனர். அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் அனுமதிச் சீட்டு இருந்தால் எளிதில் எல்லைப்புறத்தைக் கடந்துவிடலாம். ஒரு அதிகாரி என் அனுமதிச் சீட்டைப் பார்த்தார். எல்லையிலிருந்து ஐந்து மைல் தூரம் கானகத்தில் நடந்து ஓலிலிலா என்னும் சிறிய ரயில்வே ஸ்டேஷனை அடைந்தேன்; அங்கிருந்து சிப்பாய்கள் ரயிலில் புறப்பட்டேன். எல்லாம் ஒழுங்காக முடிந்தது. நான் எரித்த பகுதியில் அந்த இடத்திற்குச் செல்லும் பாதை இருந்ததால் அந்த இடத்தை அடையச் சிறிது தாமதமாயிற்று. வீதியைக் கண்டுபிடிக்க நான் நீண்ட நேரம் வீதிகளில் அலைந்து திரிந்தேன். என்னைக் கண்டதும் இலிச் பெரிதும் மகிழ்ச்சி அடைந் தார். போராட்டத்திற்கு ஏற்பாடுகள் நடக்கும் இடத்தில் இருக்க நேர்ந்ததால் ஏற்பட்ட வேதனை தெளிவாகத் தெரிந்தது. ஹெல்ஸிங்போர்ஸில் நான் சில தினங்கள் தங்கினேன். எல்லா விஷயங்களையும் அவருக்குச் சொன்னேன். நான் விடைபெற்றபொழுது வீதியின் கடைசித் திருப்பம்வரையில் இலிச் என்னுடன் வந்தார். ஸ்டேஷன்வரையில் வர அவர் பெரிதும் விரும்பினர். நாங்கள் மீண்டும் சந்திக்க முடிவு செய்தோம்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு நான் மீண்டும் இலிச்சைச் சந்தித்தேன். ஏதோ காரணத்தால் நான் தாமதித்துவிட்டேன். எனவே, எமிலியானேவ் வீட்டிற்குப் போகாமல் நேரே ஓலிலிலாவுக்குச் செல்ல முடிவு செய்தேன். கான கத்தை நான் அடைந்தபொழுது இருட்டிவிட்டது. அது மத்திய சரத் காலம். சந்திரன் உதித்தது. என் கால்கள் மணலில் புதைந்தன. பாதை தவறிவிட்டது என்று எனக்குத் தோன்றிற்று. நான் வேகமாக நடந்தேன். இறுதியில், நான் ஓலிலிலாவை அடைந்தேன். ஆனல், ரயிலுக்கோ அரை மணி நேரம் காத்திருக்க நேர்ந்தது. ரயிலில் சிப்பாய்களும் மாலுமிகளும் நிறைந்திருந்தனர். கூட்டம் அதிக மாக இருந்ததால் நான் நின்றுகொண்டு பிரயாணம் செய்தேன்; சிப்பாய்கள் புரட் சியைப்பற்றிப் பகிரங்கமாகப் பேசினர். அரசியலைப்பற்றி மாத்திரம்தான் அவர்

கள் பேசினர். மிகப் பரபரப்பான கூட்டத்தைப்போன்று இருந்தது ரயிலின் தோற்றம். சிப்பாய்களையும் மாலுமிகளையும் தவிர ரயிலில் வேறு யாரும் இருக்க வில்லை. முதலில் ஒரு சிவிலியன் வந்து வண்டியில் ஏறினர். அதிகாரிகளைத் தாங்கள் நதியில் எறிந்ததைச் சிப்பாய்கள் வர்ணித்ததைக் கேட்டதும் அவசர அவசரமாக அடுத்த ஸ்டேஷனில் அவர் கீழே இறங்கிவிட்டார். என்னை யாரும் பொருட்படுத்த வில்லை. அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதை நான் இலிச்சிடம் சொன்னபொழுது அவர் முகம் சிந்தனைக் குறியை வெளிப்படுத்திற்று. அவர் எதைப் பேசினாலும், அவர் முகத் தோற்றம் மாருமல் அப்படியே இருந்தது. தாம் சொல்லுவதில் அவர் மனம் லயித்திருக்கவில்லை என்பதும், புரட்சிக்கு எப் படிச் சிறப்பாக ஏற்பாடு செய்யலாம் என்பதைப்பற்றி அவர் மனம் சிந்தித்தது என்பதும் தெளிவாகத் தெரிந்தது.

செப்டம்பர் மாதம் 13-14 தேதிகளில் மார்க்ஸீயமும் புரட்சியும் என்னும் பொருள்பற்றி இலிச் மத்திய கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதினர். பீட்ரோக்ராடுக்கு அருகில் இருக்க வேண்டும் என்பதற்காகச் செப்டம்பர் மாத இறுதியில் அவர் ஹெலிஸிங்போர்ஸிலிருந்து வைபோர்க்குச் சென்றார். கெரன்ஸ்கியை வீழ்த்தும் போருக்குப் பின்னிஷ் ராணுவத்தையும், கடற்படையையும், தயார்படுத்துவதில் முழுக் கவனத்தையும் செலுத்தும்படி அவர் வைபோர்க்கிலிருந்து ஹெலிஸிங் போர்ஸில் வசித்துவந்த ஸிமிலிகாவுக்கு—அப்பொழுது இவர் கடற்படைத் தொழிலாளர் பிரதேசக் கமிட்டியின் தலைவராயிருந்தார்—எழுதினர். சர்க்கார் யந்திரத்தை எவ்வாறு திருத்தி அமைப்பது? ஜனங்களை எவ்வாறு திருத்தி அமைப்பது? சமூக வேலையை எவ்வாறு திரும்பத் தொடர்புடையதாக்குவது என்பதுப்பற்றி எல்லாம் அவர் மனம் இடைவிடாது சிந்தித்தது. போல்ஷ்விக்கு களால் சர்க்கார் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ள முடியுமா? என்னும் கட்டுரையில் அவர் இவைகளைப்பற்றி எழுதினர். சிப்பாய்களுக்கும் விவசாயி களுக்கும் விடுத்த அறிக்கையிலும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக உருப் படியான நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி யோசிப்பதற்காக நடைபெற்ற பீட் ரோக்ராட் நகரக் கமிட்டியின் ரகசியக் கூட்டத்தில் படிப்பதற்காக அவர் அனுப் பிய கடிதத்திலும் இதைப்பற்றி எழுதினர். மத்தியக் கமிட்டி அங்கத்தினர்களுக் கும், பீட்ரோக்ராட் கமிட்டிக்கும், மாஸ்கோக் கமிட்டிக்கும் பீட்ரோக்ராட், மாஸ்கோ ஸோவியத்துக்களில் அங்கம் வகித்த போல்ஷ்விக்குகளுக்கும் இதைப் பற்றி எழுதினர்.

அக்டோபர் மாதம் 7-ம் தேதி வைபோர்க்கிலிருந்து பீட்ரோக்ராடுக்குச் சென்றார் இலிச். அவர் இருக்கும் இடத்தை ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்றும், மத்தியக் கமிட்டிக்குகூடக் இதைத் தெரிவிக்கக் கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது. வைபோர்க் பகுதியில் மார்க்ரிட்டா வாஸிலியெவ்னு போபாஃனேவா வீட்டில் அவர் தங்கினர். லெஸ்னுய் அவென்யூ மூலையில் இருந்தது அவள் வீடு. அதில் ஏராளமான தொழிலாளர்கள் வசித்து வந்தனர். எங்களுக்கு மிகப் பொருத்தமான விடு அது. வேனிற் காலத்தில் குடும்பங்களில் பல வெளி யேறிவிட்டன. வேலைக்காரர்கள்கூட இன்னும் திரும்பி வரவில்லை; மார்க் ரிட்டா வாஸிலியெவ்னு தீவிர போல்ஷ்விக்; இலிச்சின் வேலைகளை அவள் செய்

தாள். மூன்று நாட்களுக்குப் பிறகு—அக்டோபர் மாதம் 10-ம் தேதி—ஸூச்சானேவ் வீட்டில் நடந்த மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் இலிச் கலந்துகொண்டார். ஆயுதம் தாங்கிய புரட்சியை ஆதரித்து அதில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. தீர்மானத்தை ஆதரித்துப் பல அங்கத்தினர்கள் ஓட் செய்தனர். லெனின் ஸ்வொர்டோலாவ், ஸ்டாலின் ஸெர்ஸின்ஸ்கி, டிராட்ஸ்கி, உரிட்ஸ்கி, கொல்லொந்தாய், புப்னேவ், சோக்கோலினிக்காவ், லோமோவ் முதலியோர் தீர்மானத்தை ஆதரித்து ஓட் அளித்தனர்; ஸினேவியெவ்வும் காமனீவும் தீர்மானத்தை எதிர்த்து ஓட் செய்தனர்.

அக்டோபர் மாதம் 15-ம் தேதி பீட்ரோக்ராட் ஸ்தாபனத்தின் கூட்டம் ஸ்மாலனி இன்ஸ்டியூட்டில் நடந்தது. இது முக்கியமான விஷயம். ஜில்லா பிரதிநிதிகள், வைபோர்க் ஜில்லாவிலிருந்து எட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஆயுதம் தாங்கிய புரட்சியை ஆதரித்து ஸெர்ஸின்ஸ்கி பேசியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. சுடானேவஸ்கி இதை எதிர்த்துப் பேசினர். சுடானேவஸ்கியின் கை கட்டப்பட்டிருந்தது. போர்முனையில் அவர் காயம் அடைந்தார். தோல்வி விலக்க முடியாத தென்றும் நாம் அவசரப்படக் கூடாது என்றும் அவர் கிளர்ச்சியுடன் சுட்டிக்காட்டினர். புரட்சிக்காக இறப்பதைவிட எளிதானது வேறு இல்லை. ஆனல், நம்மைச் சுட நாம் அனுமதித்தால் புரட்சியை நாம் ஆபத்திற்கு உட்படுத்தியவர்களாவோம்; "சுடானேவஸ்கி புரட்சிக்காக இறந்தார்; உள்நாட்டுக் கலகத்தில் அவர் கொல்லப்பட்டார். அவர் வாய்ப்பந்தல் போடுகிறவர் அல்ல; ஆனல், அவர் கருத்து தவருனது; மற்ற பிரசங்கங்கள் எனக்கு ஞாபகம் இல்லை. ஓட் எடுக்கப்பட்டபொழுது, மிகப் பெரும்பான்மையோர் ஆயுதம் தாங்கிய புரட்சியை ஆதரித்து ஓட் செய்தனர். வைபோர்க் பிரதிநிதிகள் அத்தனை பேரும் புரட்சியை ஆதரித்து ஓட் கொடுத்தனர்.

மறு நாள் 16-ம் தேதி லெஸ்னுய் அவென்யூவில் இருந்த லெஸ்னுய் உப-ஜில்லா டூமா காரியாலயத்தில் மத்தியக் கமிட்டியின் விரிவுபடுத்தப்பட்ட கூட்டம் நடந்தது. மத்தியக் கமிட்டி அங்கத்தினர்களைத் தவிர, பீட்ரோக்ராட் கமிட்டியின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களும் ராணுவக் கமிட்டி அங்கத்தினர்களும் தொழிற்சங்கங்களின் பீட்ரோக்ராட் கௌன்சில் அங்கத்தினர்களும், பாக்டரி கமிட்டி அங்கத்தினர்களும், ரயில்வேத் தொழிலாளர்களின் பீட்ரோக்ராட் ஜில்லாக் கமிட்டி அங்கத்தினர்களும் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர். இந்தக் கூட்டத்தில் இரண்டு கட்சிகள் இருந்தன. உடனே புரட்சியை ஆரம்பிப்பதை ஆதரிக்கும் பெரும்பான்மையோர் கட்சி, இதை எதிர்க்கும் சிறுபான்மையோர் கட்சி. லெனினுடைய தீர்மானத்தைப் பெரும்பான்மையோர் ஆதரித்தனர்: 19 பேர் இதை ஆதரித்தனர்; இருவர் எதிர்த்தனர். நால்வர் ஓட் செய்யவில்லை. விஷயம் முடிவு செய்யப்பட்டுவிட்டது. மத்தியக் கமிட்டியின் ரகசியக் கூட்டத்தில் ராணுவப் புரட்சிக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. லெனினைக் காண ஒரு சிலர்-நான், மரியா இலிஷ்னின, சில சமயங்களில் தோழர் ராக்யாதான்-வந்தனர். கீழ்க்கண்ட சித்திரம் என் ஞாபகத்தில் இருக்கிறது; யாருக்காகவும் அவர் கதவைத் திறக்கக் கூடாது என்றும், யாராவது மணியை அடித்தால் பதில் சொல்லக் கூடாது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு குறிப்பிட்ட விதத்தில்

நான் கதவைத் தட்ட வேண்டும் என்றும் ஏற்பாடு செய்துவிட்டது. பொப்போனுவை ஒரு வேலையாக இலிச் எங்கேயோ அனுப்பி இருந்தார். ராணுவப் பள்ளிக்கூடத்தில் படித்துவந்த மருமகன் ஒருவன் பொப்போனுவுக்கு இருந்தான்; மாலையில் நான் உள்ளே சென்றேன். அந்த வாலிபன் மாடிப்படியில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். அவன் குழப்பம் அடைந்தவனுகக் காணப்பட்டான். என்னைக் கண்டதும் அவன் சொன்னுன். "மார்க்ரிட்டாவின் அறையில் யாரோ திருட்டுத்தனமாக பிரவேசித்திருக்கிருர்" என்று

"நீ என்ன சொல்லுகிருய்! யார் திருட்டுத்தனமாக பிரவேசித்திருக்கிருர்?"

"ஆம். நான் உள்ளே வந்தேன். மணி அடித்தேன். ஆண்குரல் பதில் சொல்லிற்று. பிறகு நான் மீண்டும் மீண்டும் மணி அடித்தேன். ஆனுல், யாரும் பதில் சொல்லவில்லை."

மார்க்ரிட்டா ஒரு கூட்டத்திற்கு போயிருப்பதாகவும், அவன் செவிமடுத்த குரல் கற்பனையாக இருக்கக் கூடும் என்றும் நான் கதை கட்டினேன், அவன் வெளியே சென்று டிராமில் ஏறின பிறகுதான் என் மனம் சாந்தி அடைந்தது.

பிறகு நான் குறிப்பிட்ட விதத்தில் கதவைத் தட்டினேன். இலிச் கதவைத் திறந்ததும் நான் அவரைத் திட்ட ஆரம்பித்தேன். "அந்தப் பையன் மற்றவர்களைக் கூப்பிட்டிருந்தால் என் செய்வது ?" என்றேன்.

"நான் அவசரமான காரிய மென்று நினைத்தேன்" என்று மன்னிப்புக் கோரும் முறையில் கூறினுர் இலிச். அவரிடம் செய்திகளை நானும் அடிக்கடி எடுத்துச் சென்றேன்; அக்டோபர் மாதம் 24-ம் தேதி அவர் மத்தியக் கமிட்டிக்கு எழுதிய கடிதத்தில் அன்றே அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினுர். இந்தச் செய்தியுடன் அவர் மார்க்கரிட்டாவை அனுப்பினுர். ஆனுல் அவள் திரும்பிவரும்வரையில் காத்திராமல் பொய்த்தாடியும் மீசையும் அணிந்துகொண்டு அவர் ஸ்மாலினி இன்ஸ்டியூட்டுக்குப் புறப்பட்டார். ஒரு நிமிடத்தைக்கூட வீணுக்க முடியாது; வழியில் அவர் மார்க்கரிட்டாவைச் சந்தித்தார். ஸ்மாலினி இன்ஸ்டியூட்டுக்குப் போவதாகவும், தமக்காக அவள் காத்திருக்க வேண்டாம் என்றும் அவர் சொன்னுர்.

புரட்சிக்கு வைபோர்க் ஜில்லா தயார் செய்துகொண் டிருந்தது. இரவு முழுதும் வைபோர்க் கௌன்சில் கட்டிடத்தில் ஐம்பது பெண் தொழிலாளர்கள் இருந்தனர். ஆரம்ப சிகிச்சையைப்பற்றி ஒரு பெண் டாக்டர் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்தாள். ஜில்லாக் கமிட்டி அறையில் தொழிலாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. கூட்டம் கூட்டமாகக் கமிட்டிக்கு வந்து தொழிலாளர்கள் ஆயுதங்களைப் பெற்றனர். ஆனுல், வைபோர்க் ஜில்லாவில் நசுக்கப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லை. தேநீர் அருந்துவதற்காகத் தொழிலாளர் கிளப்புக்கு வந்த பிறகு கர்னல் ஒருவரையும் ஒருசில ஜங்கர்களையும் அவர்கள் கைது செய்தனர். காரியங்கள் எப்படிநடக்கின்றன என்பதைப் பார்ப்பதற்காக மாலையில் நானும் ஸென்யா எகொரோவாவும் ஸ்மாலினிக்கு ஒரு மோட்டாரில் சென்றோம்.

1917-ம் வருடம் அக்டோபர் மாதம் 25-ம் தேதி (நவம்பர் மாதம் ஏழாம்

தேதி, தற்காலிக சர்க்கார் வீழ்த்தப்பட்டது. அரசியல் அதிகாரம் ராணுவ புரட்சிக் கமிட்டியின் கைக்கு மாறிற்று. பீட்ரோக்ராட் பாட்டாளி மக்களுக்கும் ராணுவத்திற்கும் தலைமை தாங்கிய பீட்ரோக்ராட் ஸோவியத்தின் கமிட்டி கூடியது. அன்றே ராணுவப் புரட்சிக் கமிட்டி அகில ரஷ்ய தொழிலாளர் சிப்பாய்கள் பிரதிநிதிகளின் சோவியத்தின் இரண்டாவது காங்கிரஸிடம் அதிகாரத்தை ஒப்படைத்தது. தொழிலாளர்—விவசாயிகளின் சர்க்கார் ஸ்தாபிக்கப் பட்டது. மக்களின் கமிஸார்களின் கௌன்சிலும் நிறுவப்பட்டது. இதன் தலைவர் லெனின்.

லெனின் வாழக்கைக் குறிப்புகள் முற்றும்.

அனுபந்தம்

லெனின் வேலை செய்யும் முறை

எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும், அந்தக் காரியத்தைக் கருத்தூன்றி விளாதிமிர் இலிச் திருத்தமாகச் செய்து முடிப்பார். சாதாரண நடைமுறைக் காரியங்களைக்கூட அக்கரையோடு அவர் செய்து முடிப்பார்; நிறையவும் செய்வார்; எந்த ஒரு குறிப்பிட்ட காரியத்தை அவர் முக்கியம் எனக் கருதுகிறாரோ, அந்தக் காரியத்தின் சின்னஞ் சிறு அம்சங்களை எல்லாம் துருவித் துருவி யாராய்ந்து அவர் கவனிப்பார்.

சட்ட விரோதமான பத்திரிகை ஒன்றை ரஷ்யாவில் தொடர்ந்து நடத்துவது எவ்வளவு சிரமமாய் இருக்கும் என்பதை 1890-ம் வருஷ முடிவில் அவர் தெரிந்துகொண்டார். இருந்தும் இத்தகைய பத்திரிகை ஒன்று அவசியம் என்பதை அவர் செவ்வனே உணர்ந்தார். விரிந்து வியாபகமாகப் பரவிவரும் தொழிலாளர் இயக்கத்துக்கு, மார்க்ஸீயக் கண்ணோட்டத்துடன், ரஷ்ய வாழ்க்கையில் காணப்படும் நிலைகளை எடுத்து விளக்கிக்காட்ட, அகில ரஷ்ய ரீதியில் பத்திரிகை ஒன்று தொடங்க வேண்டும் என்றும், ஸ்தாபனரீதியாகவும் கிளர்ச்சிரீதியாகவும் இது அவசியமாகும் என்றும் இலிச் கருதினார். ஆகவே, குறிப்பிட்ட சில தோழர்களை அழைத்துக்கொண்டு வெளிநாடு சென்று, அங்கிருந்து அந்தப் பத்திரிகையை நடத்தத் தீர்மானித்தார். தீப்பொறி என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் அவரே செய்தார். ஒவ்வொரு இதழையும் கருத்தூன்றிக் கவனித்தார். ஒவ்வொரு வார்த்தையையும் நிதானித்து நிறுத்து உபயோகித்தார். சின்னஞ் சிறு அம்சத்தில்கூடப் பிழை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அந்தப் பத்திரிகையின் புரூப்கள் முழுவதையும் தாமே கவனித்தார். உதவி செய்வதற்கு ஆட்கள் இல்லாமல் இல்லை; இருந்தும் (புரூப் திருத்தும் வேலையை விரைவில் நானும் கற்றுக்கொண்டேன்.) முதலில் புரூப்களை எல்லாம் தாமே திருத்தினார்; பிறகு அவற்றை என்னிடம் தந்து என்னைப் பார்க்கச் செய்தார்; பிறகு மீண்டும் ஒரு முறை அவற்றைத் தாமே கவனித்தார்.

இது போலவே எல்லாக் காரியங்களையும் அவர் கவனிப்பார்; விவசாயம் சம்பந்தமான புள்ளிவிவரங்கள் சேகரிப்பதிலும் அவற்றைப்பற்றி ஆராய்ந்து சிந்திப்பதிலும் அதிகக் கவனம் செலுத்திக் காரியங்கள் செய்தார். அவருடைய நோட் புத்தகங்களில் கவனத்துடன் தயாரிக்கப் பெற்ற புள்ளிவிவரங்கள் ஏராளமாக இருக்கின்றன. மிக முக்கியமான புள்ளிவிவரங்களைப்பற்றி அவர்

பரிசீலனை செய்யும் காலத்தில், அச்சடிக்கப்பட்ட புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டு யாவற்றையும் சரிபார்த்துக்கொள்வார். புள்ளிவிவரங்களையும் உண்மை நிலையையும் கருத்தூன்றி ஆராய்ந்து பார்ப்பார்; உண்மை நிலைகளையும் புள்ளி விவரங்களையும் கொண்டே எதுபற்றியும் ஒரு முடிவுக்கு வருவார்.

உண்மை நிலைகளைக் கொண்டே எதுபற்றியும் முடிவு எடுக்க வேண்டும் என்ற கருத்துடையவர் அவர் என்பதை, ஆரம்பத்தில் அவர் எழுதியுள்ள பிரசாரத் துண்டுப்பிரசுரங்களில் நாம் தெளிவாகக் காணலாம். அபராதம்பற்றிய சட்டம், வேலைநிறுத்தம்பற்றி, புதிய தொழிற்சாலைச் சட்டம் ஆகிய துண்டுப் பிரசுரங்களில் இதை நாம் காணலாம். தொழிலாளர்களிடம் எந்த விஷயத்தையும் திரித்துக் கூறித் திணிக்க மாட்டார்; தக்க ஆதாரங்கள் எடுத்துக் காட்டித் தமது முடிவுகளைத் தெரிவிப்பார். இந்தத் துண்டுப் பிரசுரங்கள் நீளமாகவும் வழவழ வென்றும் இருப்பதாகச் சிலர் கருதினார்கள். ஆனால் தொழிலாளர்களோ அவற்றை விருப்புடன் வாங்கிப் படித்தார்கள். ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி என்ற பெரிய நூல் ஒன்றை விளாதிமிர் இலிச் சிறையில் இருந்த காலத்தில் எழுதி முடித்தார். அதில் புள்ளிவிவரங்கள் ஏராளமாக இருக்கின்றன; லெனினுடைய வாழ்க்கையில் மார்க்ஸ் எழுதிய மூலதனம் எனும் நூல் மகத்தான காரியங்களைச் செய்யத் தூண்டியிருக்கிறது. ஏராளமான புள்ளிவிவரங்களை வைத்து மார்க்ஸ் அந்த நூலை எழுதி இருக்கிறார். இதை அடிக்கடி லெனின் நினைவுகூர்ந்துகொள்வார்.

சிறந்த ஞாபகசக்தி படைத்தவராய் இருந்தும், அதைத் துணையாகக் கொண்டு எந்தக் காரியத்தையும் விளாதிமிர் இலிச் செய்ய மாட்டார்; ஞாபசக்தியின் உதவியால் "அனேகமாக" என்று கூறி ஆதாரங்களை எடுத்துக்காட்ட மாட்டார்; எப்பொழுதும் கச்சிதமான புள்ளிவிவரங்களை எடுத்துச் சொல்லி ஆதாரங்கள் காட்டுவார். எழுதிக்கொண் டிருக்கும்போதே வெகு வேகமாகப் பைல்களைப் புரட்டி, விஷயங்களைக் கவனித்துவிடுவார்; எதையாவது நினைவில் இறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கருதினால் அதை நோட் புத்தகத்தில் குறித்துக் கொள்வார். இப்படி இலிச் எழுதின ஏராளமான நோட் புத்தகங்கள் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. சுயமாகக் கல்வி கற்கும் முறை என்ற எனது சிறு புத்தகத்தை அவர் படித்துப் பார்த்தார்; அதில், மிகவும் முக்கியமான விஷயங்களுக்கு மட்டும் குறிப்புகள் எடுத்துக்கொண்டால் போதும் என நான் குறிப்பிட்டிருந்தேன். இப்படி நான் எழுதியிருப்பது தவறு என்றும் தமது அனுபவம் இதிலிருந்து மாறுபட்டது என்றும் என்னிடம் இலிச் கூறினார். தாம் எடுத்து வைத்துக்கொண்டுள்ள குறிப்புகளை அவர் பல முறைகள் திரும்பத் திரும்பப் படிப்பார்; கீழே கோடுகள் கிழித்து இருப்பதிலிருந்தும் பலவிதமான குறிப்புகள் எழுதி இருப்பதிலிருந்தும் இது தெரிய வருகிறது.

புத்தகம் தமது சொந்தப் புத்தகமாக இருக்குமானால், சில சமயங்களில் தமது குறிப்புகளையும் கோடுகளையும் அதில் குறித்து வைத்திருப்பார். புத்தகத்தின் அட்டையில், தான் அடையாள மிட்டுள்ள பக்கங்களின் இலக்கங்களைக் குறித்து வைத்திருப்பார். அடையாளமிட்டுள்ள பக்கங்களின் முக்கியத்துவத்துக்குத் தக்கவாறு ஒரு கோடோ அல்லது பல கோடுகளோ அடியில் கிழித்து

வைத்திருப்பார். தாம் எழுதியுள்ள கட்டுரைகளைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்ப்பார்; தேவையான இடங்களில் அவற்றுக்குக் குறிப்புகளும் எழுதிவைப்பார். படிக்கும்போது ஏதாவது புதுக் கருத்துகள் தோன்றுமாயின், அவற்றைக் குறித்து, கோடு கிழித்து, அந்தப் பக்கத்தின் இலக்கத்தை அட்டைமீது குறித்து வைப்பார்; தமது ஞாபகசக்தியை இவ்வாறுதான் இலிச் வழிப்படுத்திக்கொண்டார். விவாதித்தபொழுது, யாருடன், எந்த இடத்தில், எந்தெந்த விஷயங்களைச் சொன்னோம் என்பதுபற்றி எல்லாம் எப்பொழுதும் சரியாக நினைவில் வைத்துக் கொள்வார். அவருடைய புத்தகங்கள், சொற்பொழிவுகள், கட்டுரைகள் ஆகியவற்றில் கூறியது கூறலை நாம் பெரும்பாலும் காணவே முடியாது. இலிச்சினுடைய கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் அடிப்படையான அதே கருத்துக்கள் பல ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் சொல்லப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம் என்பது உண்மைதான். அவருடைய வார்த்தைகளில் தெளிவான ஒரு சிந்தனையோட்டமும் ஐக்கிய உணர்ச்சியும் நிலவுவதே இதற்குக் காரணம் எனலாம். ஆனால், சாதாரண விஷயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருப்பதை அவரிடம் நாம் காண முடியாது. அடிப்படையான அதே கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கும் காலங்களில், புதிய நிலைகளுக்குத் தக்கவாறு, ஒழுங்குபடுத்தி, புதிய முறையில் அவற்றை விளக்கிச் சொல்வது அவசியமாகிறது. இலிச் நோய்வாய்ப்பட்டுக் கிடந்த சமயத்தில், அவருடன் உரையாடிய நிகழ்ச்சி ஒன்று எனக்கு நினைவு இருக்கிறது. அப்பொழுதுதான் வெளிவந்த அவருடைய நூல் தொகுப்புகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அந்தத் தொகுப்புகள் ரஷ்யப் புரட்சி அனுபவத்தை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதுபற்றியும், வெளிநாட்டுத் தோழர்களுக்கு இந்த அனுபவத்தின் தன்மை தெரியும்படியாகச் செய்வது எவ்வளவு அவசியம் என்பதைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். அடிப்படையான கருத்தை எவ்வாறு பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்க வேண்டும் என்பது பற்றியும் சரித்திரச் சுற்றுச்சார்புக்கு ஏற்றவாறு அது எவ்வாறு மாறிக் கொள்கிறது என்பது பற்றியும் இவற்றை எல்லாம் விளக்கத்தக்க வகையில் இந்தத் தொகுப்புகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதுபற்றியும் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்தோம். இத்தகைய காரியத்தைச் செய்யக் கூடிய தோழர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை இலிச் என்னிடம் ஒப்படைத்தார். எப்படியோ இந்தக் காரியம் நடைபெறுமலே போய்விட்டது.

உலகத்துப் பாட்டாளி மக்களின் புரட்சிப் போராட்ட அனுபவங்களை விளாதிமிர் கருத்தூன்றி ஆராய்ந்தார். மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியவர்கள் எழுதியுள்ள நூல்களில் இந்த அனுபவங்கள் கச்சிதமாக விளக்கப்பட்டுள்ளன. இவர்களுடைய இந்த நூல்களை எத்தனையோ முறை லெனின் திரும்பத் திரும்பப் படித்திருக்கிறார். மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோருடைய நூல்கள் லெனினிடம் எவ்வளவு மகத்தான ஆதிக்கம் செலுத்தியுள்ளன என்பதை அனைவருமே அறிவர். தற்போதைய நிலைமைகளை மதிப்பிட்டு அறிவதற்கு அவர்களுடைய நூல்கள் லெனினுக்கு எவ்வாறு, எப்படிப் பயன்பட்டிருக்கின்றன என்பதையும், நமது புரட்சி ஏற்பட்டபோது ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்பட்ட அபிவிருத்திக்கு அவை எவ்வாறு பயன்பட்டிருக்கின்றன என்பதையும் பற்றி ஆராய்ந்து பார்த்து

ஒரு புத்தகம் எழுனுதில் அது மிகவும் பயனுடையதாக இருக்கும். அத்தகைய ஆராய்ச்சி நூலே இதுவரை யாரும் இன்னும் எழுதவில்லே. அப்படி ஒன்று எழுதிஞல், தீர்க்கதரிசன முள்ள லெனினுக்கு, உலகத்துப் புரட்சி இயக்க அனுபவம் எவ்வளவு தூரம் உதவியாய்.இருந்திருக்கிறது என்பதை நமக்குத் தெற்றெனப் படம் பிடித்துக்காட்டும்; லெனின் எவ்வாறு வேலே செய்தார், மார்க்ஸ், ஏங்கல்ஸ் நூல்களே எவ்வாறு படித்தார், நமது போராட்டத்தை நடத்துவதற்கு அவை நமக்கு எவ்வளவு தூரம் வழிகாட்டி இருக்கின்றன என்பதை எல்லாம் அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு இந்த நூல் மிகுந்த உதவியாய் இருக்கும். பொருள் உற்பத்தி முறையில் மிகவும் முற்போக்கு அடைந்துள்ள நாடுகளேச் சேர்ந்த புரட்சி மனப்பான்மை கொண்ட தொழிலாளர்களின் போராட்ட அனுபவங்கள், நமது புரட்சி இயக்கம் முழுமைக்கும் எவ்வளவு உத்வேகத்தைக் கொடுத்திருக்கின்றன என்பது தெரியவரும். ரஷ்யப் புரட்சியை எளிதில் தெரிந்து கொள்வதற்கு இந்த நூல் உதவிபுரியும். நமது நிர்மாண வேலேயும் நமது போராட்டமும் உலகத்துப் பாட்டாளி மக்களின் போராட்டத்தில் ஒரு பகுதி என்பதைத் தெரியும்படி செய்யும். சர்வதேசத் தொழிலாளர் வர்க்கம் அடைந்துள்ள அனுபவங்களே லெனின் எப்பொழுது பயன்படுத்திக்கொண்டார் என்பதையும் எதை எதைப் பயன்படுத்திக்கொண்டார் என்பதையும் எப்படி எப்படிப் பயன்படுத்திக்கொண்டார் என்பதையும் நமக்குத் தெற்றென எடுத்துக் காட்டும். லெனினிடமிருந்து இதுபற்றி நாம் தெரிந்துகொள்வது மிக மிக அவசியமாகும்.

சர்வதேசப் பாட்டாளி மக்கள் போராட்டத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி இலிச் பல தடவைகள் எழுதி இருக்கிருர். இது சம்பந்தமாகக் காட்ஸ்கி எழுதின துண்டுபிரசுரம் ஒன்றைப்பற்றி அவர் என்ன கூறினுர் என்பது எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. ரஷ்யப் புரட்சியைத் தூண்டிவிட்ட முக்கிய சக்திகளும அதன் போக்குகளும் என்று, 1905-ல் நடந்த ரஷ்யப் புரட்சியைப்பற்றி, காட்ஸ்கி துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதி இருக்கிருர். இந்தத் துண்டுப்பிரசுரத்தைப் பார்த்ததும் இலிச் அதிக மகிழ்ச்சி அடைந்தார். உடனே அதை மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தார்; தாமே அந்த மொழிபெயர்ப்பை ஒவ்வொரு கட்டத்திலும் சரிபார்த்துத் திருத்திஞர். வாஞ்சை ததும்பி வழிய அதற்கு ஒரு முன்னுரை எழுதினுர். தாமதமின்றி அதை அச்சிடக் கொடுக்கும்படியும் புரூப்புகளேத் தாமே திருத்தி அச்சிட வேண்டும் என்றும் சொன்னுர். சட்டப்பூர்வமாக இயங்கிய ஒரு பெரிய அச்சுக்கூடத்தில் இந்தத் துண்டுப்பிரசுரத்தை அச்சிடக் கொடுத்தேன். மூன்று தினங்களாகியும் சிறிய இந்தத் துண்டுப்பிரசுரத்தை அச்சுக் கோத்து முடிக்க அவர்களால் முடியவில்லே. புரூப்புக்காக மணிக்கணக்கில் அச்சுக்கூடத்தில் காத்திருந்ததைத் தவிர அந்த மூன்று தினங்களும் வேறு காரியம் எதையும் பார்க்க முடியாமல் போயிற்று. தன்னேச் சுற்றி இருந்தவர்கள் அனேவருக்கும் உற்சாகம் ஏற்படும்படி இலிச் செய்துகொண் டிருந்தார். ஒரு முறை, காட்ஸ்கியின் இந்தத் துண்டுப்பிரசுரத்தைப்பற்றித் தம் மனத்தில் தோன்றிய எண்ணங்களே அவர் சொன்னுர்; பிறகு அதற்கு முகவுரையே எழுதி முடித்துவிட்டார்; ஆகவே வேறு எந்த

வேலையையும் கவனியாமல், அச்சுக்கூடத்திலேயே மூன்று தினங்கள் காத்திருந்து இந்தத் துண்டுப்பிரசுரத்தை வெளியிடுவதில் நான் வெற்றிபெற்றேன். ரஷ்யாவில் யந்திர சாதன வசதிகள் மிகவும் குறைவாய் இருந்த காலத்தில், எவ்வளவோ சிரமப்பட்டு இந்தப் பிரசுரத்தை வெளிக்கொணர்ந்தோம். இதனுடைய சாம்பல் நிற அட்டை, அச்சு எழுத்துகள், அச்சுப் பிழைகள் ஆகியவற்றைக் குறித்து இலிச் எவ்வளவு உணர்ச்சிபூர்மாகப் பேசினுர் என்பது, இருபது வருஷத்துக்குப் பின்னரும் இப்பொழுது எனக்கு நன்ருக நினைவு இருக்கிறது. இந்தத் துண்டுப் பிரசுரத்தின் முகவுரையை இலிச் எப்படி முடித்திருந்தார் என்பதும் எனக்கு நினைவு இருக்கிறது. அதில் அவர் எழுதி இருப்பதாவது:

"முடிவுரையாக அதிகாரிகளைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். 'அதிகாரிகளே கூடாது' என்பதாக, அதுவே தங்கள் புரட்சியின் லட்சியம் என்பதாகத் தீவிர மனப்போக்குள்ள சாதாரண அறிவாளி ஒருவர் கூறுவதை, மார்க்ஸீயவாதிகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. இது முடியாத காரியம். விடுதலை பெற்றுப் பூரண சுதந்திரத்துடன் வாழ்வதற்கு, உறுதியோடும் சிரமத்தோடும் உலகம் எங்கும் தொழிலாளர் வர்க்கம் போராடி வருகிறது. அத்தகைய வர்க்கத்துக்கு அதிகாரிகளின் தேவை அவசியமாகும். அறிவுபூர்வமாகத்தான் தொழிலாளி வர்க்கம் அதிகாரிகளை நாடுகிறது. சுரண்டலையும் அடக்குமுறையையும் எதிர்த்து, முன்பு போராடிய வீரர்களின் அனுபவங்கள், வாலிபத் தொழிலாளி ஒவ்வொருவனுக்கும் அவசியம் தேவைப்படுகின்றன. இதனுல்தான் தொழிலாளர் வர்க்கத்துக்கு அதிகாரிகள் தேவைப்படுகின்றனர். பலவிதமான வேலைநிறுத்தங்களை நடத்திப் பங்குகொண்டவர்களின் அனுபவங்கள், புரட்சி நடத்தியவர்களோடு உடன் உழைத்தவர்களின் அனுபவங்கள், விரிந்த அரசியல் திருஷ்டியோடு புரட்சி ரீதியான சம்பிரதாயங்களை அறிந்துகொண்டவர்களின் அனுபவங்கள் ஆகிய அனைத்தும் வாலிபத் தொழிலாளிக்குத் தேவைப்படுகின்றன. நமது கட்சியின் தந்திர முறைகளையும் திட்டங்களையும் உருவாக்கித் தெளிவுபடுத்திக்கொள்வதற்கு, உலக முழுதிலுமுள்ள பாட்டாளி மக்கள் நடத்திய போராட்டங்களின் அதிகாரம் நமக்குத் தேவைப்படுகிறது. முதலாளி வர்க்கத்தில் இருக்கும் அதிகாரபூர்வமான சயன்ஸ் அதிகாரிகளுக்கும் போலீஸ் நடைமுறை அதிகாரிகளுக்கும் இந்த அதிகாரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. உலக முழுவதிலுமுள்ள சமதர்மப் படையைச் சேர்ந்தவர்கள் பலதிறப்பட்ட வழிகளில் போராடிப் பெற்ற அதிகாரம் ஆகும் இது."

ரஷ்யப் புரட்சியைத் தூண்டிவிட்ட முக்கிய சக்திகளும் அவற்றின் போக்குகளும் என்னும் நூலில் காட்ஸ்கி ரஷ்யப் புரட்சியைச் சரியாக மதிப்பிட்டிருர் என்று இலிச் தமது முன்னுரையில் எழுதி இருக்கிருர்.

''பழைய கோஷங்கள் எதுவுமே பயன்படாதவகையில், இப்போது முற்றுமே புதிய நிலைமைகளும் பிரசினைகளும் எழுதுள்ளன; இவற்றை நாம் அறிந்து பயன் படுத்திக்கொண்டால் அதனுல் நன்மை உண்டு.'' என்று காட்ஸ்கி எழுதி இருக்கிருர். இந்த நூலுக்குத் தாம் எழுதிய முன்னுரையில், நிலைமைகளுக்குத் தக்கவாறு புதிய கோஷங்களை லெனின் ஆர்வத்துடன் உபயோகித்து இருக்கிருர். இருந்தும் 1917-ல் ஏற்பட்ட புரட்சியை மதிப்பிடுவதில், புதிய நிலைமைகளையும் புதிய சிக்கல்களையும் அறிந்துகொள்ளக் காட்ஸ்கி தவறிவிட்டார்; அதனுல்தான் அவர் துரோகியாக மாறிவிட்டார்.

உலகத்துப் பாட்டாளி மக்களின் புரட்சிப் போரா்ட்ட அனுபவத்தின் வாயிலாக, புதிய நிலைமைகளையும் சிக்கல்களையும் ஆராய்ந்து அறிவதும், அப்படி அறிந்து தெரிந்த புதிய நிலைமைகளுக்குத் தக்கவாறு மார்க்ஸீய முறைகளைக் கடைப்பிடிப்பதுமே லெனினிஸத்தின் சாராம்சம் எனலாம். இந்த விஷயத்தைப் பற்றி ஏராளமான நூல்கள் வெளிவந்திருந்தபோதிலும், போதுமான விளக்கங்களுடன் இந்த விஷயம் இன்னும் தெளிவுபடுத்தப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமாகும்.

புரட்சி நிகழ்ச்சிகளை லெனின் எவ்வாறு மதிப்பிட்டு அறிந்தார் என்பதைப் பற்றிய விளக்கங்களும் பத்திரிகைகளில் போதிய அளவு இன்னும்வெளிவரவில்லை. உண்மை நிலையை அறிவதற்கு அவருக்கு இருந்த ஆற்றல், போராடும்போது ஜனங்களின் ஒருமித்த அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளுதல் ஆகியவற்றை லெனின் எப்படி அறிந்துகொண்டார் என்பதற்குரிய விளக்கங்கள் இன்னும் நன்ருக வெளிவரவில்லை. அனுபவரீதியான திட்டமான விஷயங்களைப் பொறுத்தவரை இதுதான் முடிவானதாக இருக்கப் போகிறது என்று லெனின் கருதினுர்.

பொதுஜனங்களுக்கு எழுதும் முறைபற்றி லெனின்

''தொழிலாளர்களுக்கு எழுதுவதற்கான சந்தர்ப்பத்தை நான் விரும்பியதைப்போல் வேறு எதையும் நான் விரும்பியது இல்லை; இதனுல் பலன் உண்டு என்று நம்பியதைப்போல் வேறு எதையும் நான் நம்பியது இல்லை'' என்று தாம் சைபீரியாவிலிருந்த காலத்தில் 1897-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் தேதி ஆக்ஸெல்ராடுக்கு லெனின் ஒரு கடிதம் எழுதினுர்.

1897-க்கு முன்பாகவே தொழிலாளர்களுக்காக விளாதிமிர் இலிச் எழுதி இருக்கிருர். அபராதங்களைப்பற்றிய சட்டம் என்ற தலைப்பில் 1895-ல் தொழிலாளர்களுக்காக அவர் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதி இருக்கிருர். லாத்தின்ஸ்கி பிரஸில், 1896-ல் சட்டவிரோதமாக இந்தத் துண்டுப்பிரசுரம் அச்சாகி இருக்கிறது.

பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த சமதர்ம ஜனநாயகவாதிகளில் ஒருசிலர் ஒன்று சேர்ந்து 1895-ல் ''தொழிலாளர் விடுதலை லீட்டாரம்'' என்ற பெயரில் இயங்கி வந்தனர். இதில்லெனின், கிரிஹாநோவஸ்கை, ஸ்டார்க்காவ், ராடாஷெங்கோ,

வானியீவ், ஸில்வின், யாக்குபோவா முதலியோரும் வேறு பலரும் இருந்தனர். ''தொழிலாளர் நலன்'' என்ற பெயரில், தொழிலாளர் பத்திரிகை ஒன்றை நடத்த இவர்கள் திட்டமிட்டு இருந்தனர். முதல் இதழ் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்திருந்த சமயத்தில், கைது செய்வது ஆரம்பமாயிற்று. கையெழுத்துப் பிரதிகளுடன் வானியீவ் கைது செய்யப்பட்டார்; ஆகையால் அந்த இதழ் வெளிவரவே இல்லை. நமது மந்திரிகள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? என்று இலிச் இதில் ஒரு கட்டுரை எழுதி இருந்தார்.

தாம் சிறையிலிருந்த காலத்தில், ரசாயன மை தோய்த்து, ஒரு புத்தகத்துள்ளே, தொழிலாளர்களுக்காக இரண்டு அறிக்கைகள் இலிச் தயார்செய்து அனுப்பினார்: மே முதல் தேதி - இது ஒரு தொழிலாளர் திரு நாள்; ஸார் சர்க்காருக்கு; இந்த இரண்டும் சிறையிலிருந்து எழுதி அனுப்பப்படவை ஆகும்.

அபராதங்களைப்பற்றிய சட்டம் என்னும் துண்டுப்பிரசுரத்தை ஆக்ஸெல்ராடும் பிளக்கானுவும் சிலாகித்துப் பேசி இருக்கிறார்கள்.

''தொழிலாளர்களுக்காக எழுதும் முயற்சியில் நான் ஈடுபட்டிருப்பதைத் தாங்களும் பிளக்கானுவும் பாராட்டி இருப்பது எனக்கு அமோகமான உற்சாகத்தை உண்டாக்கி இருக்கிறது'' என்று மேலே குறிப்பிட்ட கடிதத்தில் ஆக்ஸெல்ராடுக்கு இலிச் எழுதி இருக்கிறார்.

பெரும்பான்மையான தொழிலாளருக்குப் புரியும் வகையில் எழுத விருப்புமுள்ள வாலிபத் தொழிலாளர்கள், இலிச் எழுதி இருக்கும் இந்த நூல்களை எல்லாம் கருத்தூன்றிக் கற்க வேண்டுவது அவசியமாகும்.

அபராதங்களைப்பற்றிய சட்டம் என்னும் பிரசுரத்தை நாம் படித்துப் பார்த்தோமேயானால், மிக மிக எளிய நடையில் அது எழுதப்பெற்று இருப்பது தெரியவரும்; மேலும், மேலெழுந்தவாரியாக ஏராளமாக இன்று வெளியிடப் பெறும் பிரசாரத் துண்டுப்பிரசுரங்களிலிருந்து அது முற்றுமே மாறுபட்ட தன்மையில் அமைந்திருக்கிறது. கிளர்ச்சி சம்பந்தமான வாசகங்களோ அல்லது வேண்டுகோள்களோ எதுவும் அந்தத் துண்டுப்பிரசுரத்தில் இல்லை. அதை எழுதியிருக்கும் முறையும் போக்குமே அலாதியானவை என்று கூறலாம். இந்த முறையும் போக்கும் அந்தக் காலத்தில் தொழிலாளர்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்து பலன் அளித்தன என்று கூறலாம்; தொழிலாளர்களுக்குத் தெரிந்த விஷயங்களை வைத்தே அது எழுதப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்குத் தெரிந்த விஷயங்களை ஆதாரமாகக்கொண்டு அந்தத் துண்டுப்பிரசுரம் தொடங்குகிறது. பிறகு பல வழிகளிலும் இருந்து சேகரித்த விஷயங்களைத் தொகுத்து, யாவற்றையும் அது தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகிறது. இந்தத் துண்டுப்பிரசுரத்திலுள்ள வார்த்தைகள் பேசவில்லை; அதில் பொதிந்துகிடக்கும் உண்மைகள் தாம் பேசி, தொழிலாளர் மனத்தைத் திருத்தி விளக்கிக்காட்டுகிறது. உண்மைகளை எடுத்து விளக்கித் தங்கள் மனத்தைக் கவரும் பாணியில் அந்தத் துண்டுப் பிரசுரம் அமைந்திருப்பதால்தான், அவற்றைப் படித்த பின் விஷயத்தைப் புரிந்துகொண்டு தொழிலாளர்களே ஒரு முடிவுக்கு வருகிறார்கள். இந்தத் துண்டுப் பிரசுரத்தைப் படித்தால், திட்டமிட்டுக் கவனமாக எழுதப்பட்டது என்பது தெரியவரும். அதைத் திட்டம் போட்ட விதம் வருமாறு:

1. அபராதம் என்பது என்ன?
2. முன்பு எல்லாம் எப்படி அபராதம் போட்டார்கள்? அபராதம்பற்றிப் புதுச் சட்டம் இயற்ற இப்போது என்ன அவசியம்?
3. என்ன என்ன சாக்குப்போக்குகள் சொல்லித் தொழிற்சாலை முதலாளிகள் அபராதம் விதிக்க முடியும்?
4. எவ்வளவு பெருந் தொகையை அபராதமாகப் போடலாம்?
5. அபராதங்களை வசூல் செய்யும் முறைகள்.
6. அபராதம் போட்ட பணம் சட்டப்படி யாரைச் சேர வேண்டும்?
7. அபராதம்பற்றிய சட்டம் எல்லாத் தொழிலாளர்களுக்கும் செல்லுபடியாகுமா?
8. முடிவுரை.

முடிவுரையில் சில அனுமானங்களை எழுதி இருக்கிறார்; மேலே குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் உண்மைகளைப் படித்தறிந்துகொண்டாலே, தொழிலாளர்களும் தாமே இந்த அனுமானங்களைச் சொல்லிவிடுவார்கள்; இவை தொழிலாளர்களுக்கு உதவிபுரிந்து பொதுப்படையாக அவர்களே முடிவு எடுத்துக்கொள்ள உதவுகின்றன. இந்த முடிவுகள் சாதாரணமானவையாக இருக்கலாம்; இருந்தாலும் தொழிலாளர் இயக்கத்துக்கு இவை பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும்.

நமது மந்திரிகள் என்ன நினைத்துக்கொண் டிருக்கிறார்கள்? என்ற சிறிய கட்டுரையையும், அபராதம்பற்றிய சட்டம எனும் கட்டுரை போலவே எழுதியிருக்கிறார் என்பதை வாசகர்கள் கவனிக்கலாம். உள்நாட்டு மந்திரி துர்னோவோவிடமும் புனித சைனாடின் தலைவர் போப்போடோனோஸோட்டிவ்விடமும் கடிதத்தை எடுத்துப்போகும் பாவனையில் அதை எழுதியிருக்கிறார். விரிவாகவும் நுணுக்கமாகவும் அவற்றின் பொருளை ஆராய்ந்து இருக்கிறார்; தொழிலாளர்களைத் தாங்களே முடிவு எடுக்கும் அளவுக்குக் கொண்டுவந்துவிடுகிறார்.

> "தொழிலாளர்களே! தொழிலாளர்களின் அறிவு மலர்ச்சி அடைவதைக் கண்டு, நமது மந்திரிகள் எவ்வளவு கதிகலங்குகிறார்கள் என்பதை நீங்களே பாருங்கள். தொழிலாளர்கள் அறிவு விளக்கம் பெறுவதை யாராலுமே தடுக்க முடியாது என்பதை ஒவ்வொருவரும் மெய்ப்பியுங்கள்; அறிவு விளக்கம் பெறுவிட்டால் தொழிலாளர்களால் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது; அறிவு விளக்கம் பெற்றுவிட்டாலோ அவர்கள் ஒரு சக்தியாக ஆகிவிடுவார்கள்."

மே முதல் தேதி: இது ஒரு தொழிலாளர் திரு நாள் என்ற அறிக்கையும் சிறையில் 1896-ல் எழுதப்பட்டதாகும். அது எந்த ஆண்டு எழுதப்பட்டது என்பதை நம்மால் திட்டமாக வரையறுத்துச் சொல்ல முடியவில்லை; எனினும் அதில் அடங்கியுள்ள விஷயங்களால் அதையும் அந்த வருஷத்திலேயே எழுதியிருக்கக் கூடும் என்று நம்பலாம். சர்வதேசத் தொழிலாளர்களின் போராட்டம் பற்றியும் சர்வதேசத் தொழிலாளர்களின் திரு நாள்பற்றியும் அதில் விவரித்து

இருக்கிறார். ஆனால் முக்கிய பெரிய கேந்திரங்களில் தொழிலாளர்களின் போராட்டமும் அதனுடைய உண்மை நிலையையும் விளக்கி அந்த அறிக்கையைத் தொடங்கி இருக்கிறார். போராட்டத்தினால் விளையக் கூடிய பலாபலன்களை விளக்கி இருப்பதோடு, நேரடியாக அந்த அறிக்கையில் வேலைநிறுத்தங்கள் செய்யும்படியும் வேண்டுகோள் விடுத்துஇருக்கிறார்.

1896-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதியன்று இந்த அறிக்கை வெளிவந்தது. பிட்டர்ஸ்பர்க்கில் ஜூன் மாதவாக்கில் 30,000 பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள்.

ஸார் ஸர்க்காருக்கு என்ற இரண்டாவது அறிக்கை, வேலைநிறுத்தம் பயனாய் ஏற்பட்ட பலாபலன்களைத் தொகுத்துக் கூறியதுடன், மேலும் தீவிரமாகப் போராடும்படி வேண்டுகோள் விடுத்தது. அந்த அறிக்கையைக் கீழ்வரும் வார்த்தைகளால் முடித்திருந்தார்:

> "1895-லும் 1896-லும் நடந்த வேலைநிறுத்தங்கள் வீண்போகவில்லை. அவற்றால் ரஷ்யத் தொழிலாளர்கள் அபரிமிதமான நன்மை அடைந்திருக்கிறார்கள். தங்கள் நலன்களுக்காகச் சரியான பாதைகளில் போராடி அவற்றின் மூலமாக அவர்கள் தெரிந்துகொண் டிருக்கிறார்கள். அரசியலில் தங்களுக்குள்ள நிலைமைகளையும் தங்களுக்குள்ள தேவைகளையும் அவற்றின் மூலம் தொழிலாளர் வர்க்கம் கற்றுக் கொண் டிருக்கிறது."

1897 இலையுதிர் காலத்தில், முதலில் எழுதிய துண்டுப்பிரசுரத்தை அனுசரித்து, தமது இரண்டாவது துண்டுப்பிரசுரத்தை எழுதினார். புதிய தொழிற்சாலைச் சட்டம் என்பது அதன் பெயர். 1899-ல் தொழிற்சாலை நீதிமன்றங்கள் பற்றி, வேலைநிறுத்தங்கள்பற்றி என்ற துண்டுப்பிரசுரங்களையும் எழுதினார்.

இந்தத் துண்டுப்பிரசுரங்களை எழுதியதன் பயனாய், பொதுமக்களுக்குப் புரியும் வகையில் எப்படி எழுத வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதை எல்லாம் லெனின் நன்றாகக் கற்றுக்கொண்டார்; குறிப்பாக அவர்களுடன் நெருங்கிய நட்புரிமையோடு பழகிக் கட்டுரைகள் எழுதினார்; சொற்பொழிவுகள் ஆற்றினார்.

ஜனரஞ்சகமான முறையில் எழுதவும் பேசவும் லெனின் யாரிடமிருந்து கற்றுக்கொண்டார்? பிஸாரோவிடமிருந்தும் செர்னிஷெவ்ஸ்கியிடமிருந்தும் கற்றுக்கொண்டார் எனலாம்; ஒரு காலத்தில் பிஸாரோவின் நூல்களை அவர் அதிகம் படித்தார். ஆனால் அனேக விஷயங்களைத் தொழிலாளர்களுடன் நெருங்கிப் பழகியே, நேரடியாக அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார். மணிக் கணக்காகத் தொழிலாளர்களுடன் அவர் பேசிக்கொண் டிருப்பார்; தொழிற்சாலை வாழ்க்கையில் நடைபெறும் சிறுசிறு விஷயங்களைப்பற்றி எல்லாம் துருவித் துருவி அவர்களைக் கேட்டு விவரங்களை அக்கரையோடு தெரிந்துகொள்வார்; இடையிடையே கேட்கும் அவர்கள் கேள்விகளையும் அவர்கள் சொல்லும் குறிப்புகளையும் கவனமாகக் கேட்டுக்கொள்வார். அவர்களுடைய அறிவு நிலைகளுக்குத் தக்கவாறு தமது நிலையைச் சரிப்படுத்திக்கொண்டு, குறிப்பிட்ட ஒரு விஷயம்

அவர்களுக்கு ஏன் விளங்கவில்லை; எதனால் விளங்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்வார்; இந்தச் சந்திப்புகளைப்பற்றி எல்லாம், தங்களது லெனின் நினைவுக் குறிப்புகளில் தொழிலாளர்கள் எழுதி இருக்கிறார்கள்.

தெளிவாகவும் சிறந்த முறையிலும் தமது கருத்துகளைத் தொழிலாளர் களுக்குத் தெரிவிக்க லெனின் அதிக பிரயாசை எடுத்துக்கொண்டார். எனினும், தொழிலாளர்களுக்காக விஷயங்களின் தரத்தைக் குறைத்து எழுதுவதையும், மிதமிஞ்சி அவற்றை எளிதாக்கிக் கூறுவதையும் லெனின் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டார்.

1901—1902-ல் எழுதிய இனி என்ன செய்ய வேண்டும்? என்னும் நூலில் லெனின் இவ்வாறு எழுதி இருக்கிறார்:

> "முக்கியமாகத் தொழிலாளர்களைப் புரட்சிக்காரர்களின் நிலைக்கு உயர்த்தும் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்படிச் செய்யும்போது தொழிலாள வர்க்கப் பாமர ஜனங்கள் நிலைக்கு நமது நிலையை நாம் தாழ்த்திக்கொண்டுவிடக் கூடாது. பொருளாதாரவாதி கள் விரும்புவதுபோல், அந்த நிலைக்கு நாம் இறங்கிவிடுதல் கூடாது. ஸ்வபோதா விரும்புவதைப்போல சராசரித் தொழிலாளி நிலைக்கு நாம் இறங்கிவிடுதலும் கூடாது. (இது நம்மை சிறிது உயர்ந்தபட்சப் பொரு ளாதார 'ஆசிரியப் புலமையில்' கொண்டு தள்ளிவிடும்.) ஜனரஞ்சக மான இலக்கியங்கள் தொழிலாளர்களுக்குத் தேவை என்பதை நான் மறுக்கவில்லை. கீழ்க்கடையான நிலைக்கு இறங்கிப்போகாத, சிறந்த, ஜனரஞ்சகமான இலக்கியங்கள் பிற்போக்கடைந்துள்ள தொழிலாளர் களுக்கு மிகமிக அவசியமாகும். ஆசிரியப் புலமை வாய்ந்தவர்கள் அரசியலையும் ஸ்தாபனத்தையும் சேர்த்துக் குளறுபடி செய்துவிடுவார் களோ என்ற அச்சம் என்னை வாட்டுகிறது. 'சராசரித் தொழிலாளர் களுக்கு' எனப் பேசும் கனவான்களே! தொழிலாளர் நிலைக்கு இறங்கி வந்து நீங்கள் பேசுவதாகக் கூறுவதும், அரசியலையும் ஸ்தாபனங்களை யும்பற்றி அவர்களிடம் பேசும்போது அவர்கள் நிலைக்கு நீங்கள் இறங் கிக்கொண்டுவிட்டதாகக் கூறுவதும் தொழிலாளர்களையே அவமதிக் கிற காரியங்கள் ஆகும். முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை அததற் குத் தகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் பேசுங்கள்; ஆசிரியப் புலமைத் தன்மையை ஆசிரியர்களிடம் விட்டுவிடுங்கள். அதை அரசியல்வாதி களிடமும் நிர்மாணகர்களிடமும் கொண்டுவந்து புகுத்தாதீர்கள்."

"குழந்தைகளுக்குப் பேசுவதுபோல்" தொழிலாளர்களிடம் பேச வேண்டும் என்பதையும் திறமையோடு விஷயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துப் பேசாமல், அலங்காரச் சொற்களாலும் அடுக்குச் சொற்களாலும் பழமொழிக ளாலும் தொழிலாளர்களுக்கு எடுத்து விளக்க வேண்டும் என்பதையும் இலிச் வெறுத்தார்.

தொழிலாளி ஒருவர் குறிப்பிட்டிருப்பதுபோல, லெனினுடைய கட்டுரை களிலும் பேச்சுகளிலும் "முக்கியத்துவம்" இருக்கவே செய்யும்.

1905 ஜூன் மாதம், அதாவது மூன்று வருஷங்களுக்குப் பிறகு, இனி என்ன செய்ய வேண்டும்? எனும் நூலில் கிளப்பிய பிரசினையைப் பின்வருமாறு மீண்டும் ஆராய்ந்து இருக்கிறார்:

"சமதர்ம-ஜனநாயகக் கட்சியின் அரசியல் நடைமுறைகளில் எப்பொழுதும் போதிக்க வேண்டிய சில கட்டங்கள் இருக்கவே செய்யும். அடக்குமுறையிலிருந்து மனித சமுதாயம் முழுவதுமே விடுதலை பெறுவதற்காகப் போராடும் போர்வீரர்களாக, தொழிலாளர் வர்க்க முழுமைக்குமே பயிற்சி கொடுப்பது அவசியமாகும். இந்த வர்க்கத்திலுள்ள புதிய புதிய தொகுதிகளுக்கும் தொடர்ந்து பயிற்சி கொடுப்பது அவசியமாகும். நமது விஞ்ஞானத் தொடர்பும் விஞ்ஞான வாழ்க்கையும் இல்லாத, இந்த வர்க்கத்தைச் சேர்ந்த, அபிவிருத்தியடையாமல் இருக்கிற புத்தம் புதிய, ஒவ்வொரு நபரையும் அணுகி, அவர்களுக்கு நாம் போதனை செய்ய வேண்டும். பொறுமையுடனும் கட்டுப்பாடுடனும் இருந்து, சமதர்ம-ஜனநாயக உணர்வு அவர்களுக்கு ஏற்படும் வகையில் அவர்களுக்கு நாம் பயிற்சி கொடுக்க வேண்டும். புத்தகங்களை மட்டும் கொண்டு, வரட்டுத்தனமான முறையில் அவர்களுக்கு நாம் போதித்தல் கூடாது. நாள்தோறும் நடைபெறும் போராட்டத்தில் நாமும் கலந்துகொண்டு, அபிவிருத்தியடையாத, புதிய, பாட்டாளி வர்க்கப் பகுதியினருக்கு நாம் போதிக்க வேண்டும். இப்படி நாள்தோறும் கலந்து பழகிவந்தால்தான், அவர்களுக்கு அறிவுபோதம் ஏற்படும் என்பதை நாம் மீண்டும் சொல்ல விரும்புகிறோம். இந்தக் காரியத்தைச் செய்ய மறந்துபோகிற சமதர்ம-ஜனநாயகவாதியை, நாம் சமதர்ம-ஜனநாயகவாதி என்று சொல்ல முடியாது. இது முற்றும் உண்மை. வேறு காரியத்துக்காயினும் சரியே, அரசியல் விஷயங்களைப் போதனை அளவில் மட்டும் நின்று ஆசிரியராக மாறிவிடும் சமதர்ம-ஜனநாயகவாதியும், சமதர்ம-ஜனநாயகவாதியாக முடியாது என்பதை இன்றும் நம்மில் பலர் மறந்துவிடுகிறோம். 'அரசியலுக்கு' எதிராகப் 'போதனை முறையை' விசேஷ கோஷமாக யாராவது மாற்ற விரும்புவார்களானல், சமதர்ம-ஜனநாயக அரசியலுக்கு விரோதமான இந்தக் கோஷத்தை எடுத்துப்போய் பாமர ஜனங்களிடம் பரப்பி வருவார்களானல், அதற்காகப் பரிந்து பேசுவார்களானல், உடனே அவர் போலி ஜனநாயகவாதிகளின் நிலைக்குத் தாழ்ந்துவிடுகிறார் என்றுதான் நாம் கொள்ள வேண்டும்."

இதற்கு முன்பு அவர் கூறியதையே இது விரித்துக் கூறுகிறது. ஜனரஞ்சகமான இலக்கியம் எப்படி இருக்க வேண்டும் என்று இலிச் விரும்பினர் என்பதை இது வரையறுத்து நமக்குக் காட்டுகிறது.

1903-ல் தாமாகவே விவசாயிகளின் கலகங்கள் மூண்டபொழுது, கிராம ஏழைகளுக்கு என்னும் பெயரில் ஜனரஞ்சகமான துண்டுப்பிரசுரம் ஒன்றை இலிச் எழுதினர். 'அதில் தொழிலாளர்கள் எதற்காகப் போராடுகிறார்கள்

என்பதைப்பற்றியும், ஏன் விவசாயிகள் அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்பதைப்பற்றியும், ஏழை விவசாயிகளுக்கு அவர் விளக்கி எழுதி இருக்கிறார்.

மூன்று அரசியல் சட்டங்கள் அல்லது மூன்று விதமான அரசியல் அமைப்பு முறைகள் என்னும் பெயரில் யாவருக்கும் தெரிந்த துண்டுப்பிரசுரம் ஒன்றை 1905-ம் வருடம் ஜூலை மாதம் இலிச் எழுதினார். சுயேச்சையான அரசு, சட்ட வரம்புக்குட்பட்ட அரசு ஆகியவற்றை ஜனநாயகக் குடியரசுடன் ஒப்பிட்டுக் காட்டி, சாரத்திலும் உருவத்திலும் லட்சியத்திலும் இரண்டும் ஒன்றே என்பதை ஒப்பிட்டுக் காட்டி இருக்கிறார். ஜனரஞ்சகமான தெளிந்த நடைக்கு இந்தத் துண்டுப்பிரசுரத்தை ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்; அதே சமயத்தில் விஷயத்தை மனப்பூர்வமாகவும் முக்கியத்துவத்தோடும் விவரித்து இருப்பதையும் இதில் நாம் காணலாம்.

ஏதாவது ஒரு நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டாலும், நிலைமை தீவிரமாக ஆகிவிட்டாலும் ஜனரஞ்சகமான முறையில் எழுதுவதும் பேசுவதும் விசேஷ கடமையாகும் என்று இலிச் கருதினார். 1917-ல் நடைபெற்ற ஏப்பிரல் மகா நாட்டில் விளாதிமிர் இலிச் சொன்னதாவது:

> "என்னையும் சேர்த்து நம்மில் அனேகர் போர்வீரர்கள் முன்னிலையில் பேச வேண்டியதிருக்கிறது. யாவற்றையும் நாம் வர்க்க நோக்கத்துடன் எடுத்து விளக்க வேண்டுமானால், யுத்தத்தை எவ்வாறு நாம் முடிக்க விரும்புகிறோம்; அதை முடிப்பதற்கு என்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று கூறுவோமானால், இந்த நடைமுறை அவர்களுக்குச் சரியாகப் புரியவே மாட்டாது. நமது நிலையை முற்றுமே அறிந்து கொள்ள முடியாத தன்மையும், நம்மைப்பற்றிப் புரிந்துகொள்ளாத தன்மையும் பொதுஜனங்களிடையே பெரும்பாலோருக்குத் தெரியாமல் இருக்கிறது. ஆகவே, இயன்றவரை அவர்களுக்கு விஷயங்கள் புரியும்படி தெளிவாகப் பேச வேண்டும்."

இதே பேச்சில் மேலும் லெனின் சொல்லி இருப்பதாவது:

> "பொது ஜனங்கள் முன்னிலையில் பேசும்போது, துலக்கமாகவும் சரியாகவும் நாம் பேசவேண்டும். அரசியல் விஷயங்களைத் தெளிவுபடச் சொல்ல வேண்டும். 'சகோதரத்துவம்' என்ற கோஷத்தில், அரசியல் பொருள் இல்லாமல் போகிறது."

முதலாளிகளின் ஆட்சியைத் தகர்த்து எறியாமல், நாம் சொல்லுகிற சமாதான நிபந்தனைகள் பயன் அளிக்க மாட்டா; இதை ஜனங்கள் மனத்தில் பதியும்படியாக நாம் எடுத்துரைக்க வேண்டும் லெனின் வலியுறுத்தினார்.

> "மீண்டும் இதை நான் சொல்ல விரும்புகிறேன். அபிவிருத்தியடையாத—பக்குவமடையாத ஜனங்களுக்கு இந்த உண்மையைப் பொதுவான வழிகளில் நின்று விளக்கிக் காட்ட வேண்டும். அவற்றின் மூலமாக விஷயம் விளங்கும்படி செய்ய வேண்டும். தப்பும் தவறும் பொய்மையும் கலந்த ஜனரஞ்சகமான யுத்த இலக்கியங்கள், இந்த விஷயத்தை மூடிமறைத்துவிடுகின்றன. வர்க்கப் போராட்டம்

என்கிற விஷயமே இல்லை என்பது போலவும் இரண்டு தேசங்களும் அன்னியோன்யமாகவே வாழ்ந்துவந்தன என்றும், திடீரென ஒரு நாடு மற்றொரு நாட்டைத் தாக்க ஆரம்பிக்கவே, தாக்கப்பட்ட நாடு பாது காத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் எவ்வித நோக்கமும் இல்லாததுபோல் விஷயத்தை இப்படிக் கேவலமான முறையில் திரித்துக் கூறுகின்றன. படித்தவர்கள், வேண்டும் என்றே இப்படிப் பாமரர்களை ஏமாற்றுகிறார்கள்.''

இவற்றிலிருந்து நாம் செய்யத்தக்க முடிவுகள் யாவை? ஜனரஞ்சகமாக எழுதுவதற்கும் பேசுவதற்கும் லெனின் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்; கம்யூனிஸம் என்பது தங்கள் நலனுக்கு உகந்தது என்ற முறையில் தொழிலாளர் களுக்கு விளங்கும் வகையில் எடுத்துச்சொல்வது அவசியமாகும். ஒரு திட்ட மான விஷயத்தை எடுத்துச் சொல்லி, அவர்களைக் காரியத்தில் திட்டமாக இறங்குவதற்கு உரிய வகையில், ஜனரஞ்சகமான பேச்சுகளும், ஜனரஞ்சகமான இலக்கியங்களும் அமைந்திருக்க வேண்டும். தெளிவாகவும் சுருக்கமாகவும் ஜனங் களுக்கு விளங்கும் முறையிலும், அரசியல் கருத்தை அபிவிருத்திசெய்து ஜனங்க ளிடம் சொல்ல வேண்டும். விஷயத்தைக் கீழ்க்கடையாக்கியோ, மிதமிஞ்சிய அளவுக்கு எளிமைப்படுத்தியோ, நோக்கத்துக்கு அப்பாற் சென்றோ விஷயங் களைச் சொல்லுதல் கூடவேகூடாது. விஷயத்தைச் சொல்லும்போது திட்டமான முறையில் தெளிவாகச் சொல்ல வேண்டும்; கேட்பவர் புரிந்துகொண்டு தானே முடிவு எடுப்பதற்கு உதவுவதாய் இருக்க வேண்டும். தொகுத்து முடிவு எடுத்துக் கொள்ளும் வகையில் அமைந்திருந்தால் போதும்.

வரட்டு விவாதங்களை அடிப்படையாகக்கொண்டு விளக்கங்கள் தருதல் கூடாது; கேட்பவருக்கோ படிப்பவருக்கோ நெருங்கிய தொடர்புள்ள உண்மை நிலைகளை எடுத்துக்காட்டி விளக்க வேண்டும். விஷயங்களைச் சங்கிலித் தொடர் போல வரிசைப்படுத்திப் படிப்படியாகச் சொல்ல வேண்டும். வர்க்கப் போராட் டத்தின் மிக முக்கியமான பிரசினைகளையும் சமதர்ம நிர்மாணத்தில் மிகமிக முக்கிய பிரசினைகளையும் பொருத்திக்காட்டும் முறையில் அமைந்திருக்க வேண்டும்.

இவ்வாறுதான் ஜனரஞ்சகமாக எழுத வேண்டும், ஜனரஞ்சகமாகப் பேச வேண்டும் என லெனின் நமக்குப் போதித்து இருக்கிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனரஞ்சகமான இலக்கியங்கள் மிகமிக முக்கிய மானவையாகும். தீவிரமான வர்க்கப் போராட்டமானது, நிலைமையைத் தெளி வாக உணர்ந்துகொள்வது அவசியம் என்பதைப் பொது ஜனங்களுக்கு உணர்த்தி விடுகிறது. சமதர்மத்துக்காகப் போராடும் ஜீவாதாரமான பிரசினைகளுடன் நாளுக்கு நாள் ஏற்படும் நிலைமைகளையும் பொருத்திப் பார்த்து அறிந்துகொள்ள அவை உதவுகின்றன. இத்தகைய இலக்கியங்கள் நம்மிடையே மிகவும் குறை வாக இருப்பதால் இவற்றைச் சிருஷ்டிசெய்வது அவசியமாகும். லெனினிட மிருந்தும் பொதுஜனங்களிடமிருந்தும், ஜனரஞ்சகமான முறையில் எழுது வதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்; இத்தகைய முறையில் எழுதுவதைச் சேர்ந்து அபிவிருத்தி செய்ய வேண்டும். நாம் செய்துள்ள காரியங்கள் வெற்றி பெற்றுள்ளதா என்பதை நடைமுறையில் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

லெனினும் செர்னிஷெவ்ஸ்கியும்

செர்னிஷெவ்ஸ்கியின் பிரபாவம் லெனினிடம் எவ்வளவு தூரம் பரவி இருந்தது என்பதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்; தாம் எழுதியுள்ள புத்தகங்களிலோ அல்லது கட்டுரைகளிலோ, இந்தப் பிரபாவத்தைப்பற்றி, விளாதிமிர் இலிச் நேரடியாக ஒன்றும் குறிப்பிடவில்லை; இருந்தும் செர்னிஷெவ்ஸ்கியைப்பற்றிப் பேசியபொழுதெல்லாம், அவர் மிகுந்த உற்சாகத்துடன்தான் பேசி வந்திருக்கிறார். செர்னிஷெவ்ஸ்கியைப்பற்றித் தாம் பேச நேர்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் மிகுந்த பிரியத்தோடு விளாதிமிர் இலிச் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார் என்பதை விளாதிமிர் இலிச்சின் நூல்களைப் படிப்பவர்கள் தெரிந்துகொள்ளலாம்; இனி என்ன செய்ய வேண்டும்? என்னும் லெனினுடைய சிறு நூலில் மறைமுகமாக செர்னிஷெவ்ஸ்கியின் பிரபாவம் இருக்கிறது என்று சொல்லலாம். கட்சி நிறுவப்படுவதற்கு முந்திய இந்தக் கால கட்டத்தைக் குறிப்பிடும்பொழுது—அதாவது 1894-லிருந்து 1898 வரையிலுள்ள கால கட்டத்தைக் குறிப்பிடும்பொழுது—தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியடையத் தொடங்கிப் பொதுஜன இயக்கமாக மாறியபொழுது, இந்த இயக்கத்தில் பங்கு பற்றியுள்ள வாலிபர்கள், பழைய காலத்துப் புரட்சிக்காரர்களின் புரட்சிகரமான செயல்களைப் பின்பற்றி, பயிற்சி கொடுக்கப் பெறுகிறார்கள் என்று லெனின் குறிப்பிட்டுச் சொன்னார். இருந்தாலும் தங்களுக்கு முந்திய புரட்சிக்காரர்களின் அறிவு போதமற்ற பிரபாவத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, மார்க்ஸீயம் என்ற புதிய பாதையில் செல்வதற்கு, அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு பெரும் போராட்டம் நடத்தித் தீர வேண்டியதிருந்தது. இப்படி அவர் கூறியதில் சுய சரித்திரக் குறிப்பும் இருக்கிறது என்று சொல்லலாம்.

பிடிவாதம், உறுதி, தமக்கு நேர்ந்த துன்பத்தை, இதற்கு முன் கம்பீரமாகவும் பெருமையுடனும் இப்படி யாருமே சகித்துக்கொண்டது கிடையாது என்னும் விதத்தில் செர்னிஷெவ்ஸ்கி நடந்துகொண்டமை, ஆகிய நற்பண்புகள் இலிச்சைப் பெரிதும் கவர்ந்தன. ஆகவே செர்னிஷெவ்ஸ்கியைப்பற்றி விளாதிமிர் சொல்லி இருப்பதில் எல்லாம், அவருக்கு அவரிடம் இருந்த மரியாதை விசேஷமாகத் தொனிப்பதை நாம் காணலாம். நமது கட்சி அலுவல்கள் பயங்கரமான நிலைகளுக்கு இலக்காகிச் சிரமம் அனுபவித்த காலங்களில் எல்லாம் "புரட்சிப் போராட்டம் என்பது நெவ்ஸ்கி பிராஸ்பெக்டில் நடந்து கொடுப்பது அல்ல" என்று செர்னிஷெவ்ஸ்கி சொல்லியிருப்பதை விளாதிமிர் இலிச் அடிக்கடி நினைவுபடுத்திச் சொல்லிக்கொள்வார். 1917-ல் பிற்போக்கின் அட்டகாசம் தலைவிரித்தாடிய காலத்தில் விளாதிமிர் இலிச் இந்த மேற்கோளை எடுத்துச் சொன்னார். இந்தச் சமயத்தில் கட்சி பின்னடைய வேண்டிய நிலையில் இருந்தது. 1918 சோவியத்து சர்க்காருக்கு ஆபத்து நேர்ந்த சமயத்தில், பிரஸ்ட் லிஸ்டாவக்கில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு உள்நாட்டுப் போரை நடத்த வேண்டியிருந்த தருணத்தில், செர்னிஷெவ்ஸ்கியின் இந்த வார்த்தைகளை விளாதிமிர் இலிச் நினைவுபடுத்திக்கொண்டார். செர்னிஷெவ்ஸ்கியின் மேற்கோளை

எடுத்துக்காட்டிப் பலம் தேடிக்கொண்டார்; புரட்சிக்கார மார்க்ஸீயவாதி எதற்கும் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் என்று அடிக்கடி அவர் சொல்லி வந்தார்.

சிறந்த பண்பினர் என்ற முறையில் மட்டும் செர்னிஷெவ்ஸ்கியின் பிரபாவம் லெனினிடம் ஏற்படவில்லை. முதன் முதலாகச் சட்டவிரோத முறையில் விளாதிமிர் இலிச் எழுதிய ஜனங்களின் நண்பர்கள் யார்? என்பதை நாம் கவனித்தோமானால், இந்தத் துறையிலும் செர்னிஷெவ்ஸ்கியின் பிரபாவம் லெனினிடம் இருப்பதை நாம் தெளிவாகக் காணலாம். விவசாயச் சீர்திருத்தம் ஏற்பட்டபொழுது வாயளவில் நின்று தொண்டுசெய்த—இந்த மனப்பான்மையையே இலக்கியத்திலும் இதர துறைகளிலும் வளர்ந்த சூழ்நிலையில் வாழ்ந்த, இதையே எதிரொலித்த 1894-ல் இருந்த புரட்சிகர சமதர்ம ஜனநாயக வாலிபர்களுக்கு—இலிச் பேசி இருக்கிறார். இதைச் சரியாகச் செர்னிஷெவ்ஸ்கி மதிப்பிட்டிருக்கிறார் என்று பேராசிரியர் போக்ரோவெஸ்கி கூறுகிறார்: இதைப்பற்றி விளாதிமிர் இலிச்சும் கூறியிருக்கிறார்: விவசாயச் சீர்திருத்தம் நடைபெற்ற காலத்தில், மிதவாதிகளின் தன்மையை செர்னிஷெவ்ஸ்கி சரியாக மதிப்பிட்டு அறிந்திருக்கிறார்; அவர்களுடைய வர்க்க நிலைமையையும் அவர்களின் நயவஞ்சகத்தன்மையையும் அம்பலப்படுத்தி இருக்கிறார்.

லெனினுடைய செயல்முறைகளை நாம் தொடர்ந்து கவனித்தோமானால், மிதவாதிகளுக்கு இணங்கிப் போகாமல் செர்னிஷெவ்ஸ்கி நடந்துகொண்டதைப் போலவே, லெனினும் நடந்துகொண்டிருக்கிறார் என்பது தெரியவரும். மிதவாதிகள் கூறும் வார்த்தைகளில் அவநம்பிக்கை கொள்ளுதலும், அவர்களுடைய நிலையிலும் அவநம்பிக்கை கொள்ளுதலும், லெனினுடைய காரியங்கள் முழுவதிலும் ஒரு சரடுபோல் ஊடுருவி ஓடிக்கொண் டிருப்பதை நாம் காணலாம். சைபீரியச் சிறைவாழ்க்கை, கிரீடோவுக்கு எதிர்ப்பு, ஸ்ட்ரூவுடன் ஏற்பட்ட முறிவு, பிறகு காடெட்டுகளுக்கு விட்டுக்கொடுக்காமல் நடந்துகொண்டமை, காடெட்டுகளுடன் இணங்கிப் போகத் தயாராக இருந்த மென்ஷ்விக் கலைப்புவாதிகளுடன் நடந்துகொண்டமை, அனைத்திலும் விட்டுக்கொடுக்காமல் லெனின் எப்படி விடாப்பிடியாக உறுதியுடன் இருந்து வந்தார் என்பதை நாம் காணலாம். 1861ல் நடந்த சீர்திருத்தத்தில், விவசாயிகளை மிதவாதிகள் ஏமாற்றிய சமயத்தில், அவர்களுடன் செர்னிஷெவ்ஸ்கி எப்படி நடந்துகொண்டாரோ, அப்படியே லெனினும் இவர்களுடன் நடந்துகொண் டிருப்பதைக் காணலாம். விட்டுக்கொடுக்காத பிடிவாத மனப்பான்மை லெனினிடமிருந்ததை இப்பொழுதும் நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், கட்சியிலும் அந்த நிலைமை தொடர்ந்து நிலவி வந்திருப்பதையும் அதுதான் கட்சிக்கு வெற்றிதேடித் தந்திருக்கிறது என்பதையும் காணலாம். மிதவாதிகளுடன் நாம் நடந்துகொள்ள வேண்டிய பிரசினையும் ஜனநாயகம் என்ற பிரசினையும் ஒன்றுக்கு ஒன்று நெருங்கிய தொடர்புடையனவாய் இருக்கின்றன. ஜனங்களின் நண்பர்கள் யார்? என்ற நூலில் லெனின் எழுதி இருக்கிறார்:

> 'செர்னிஷெவ்ஸ்கி காலத்தில் ஜனநாயகத்துக்காக நடந்த போராட்டமும் சமதர்மத்துக்காக நடந்த போராட்டமும் பிரிக்க முடியாதபடி ஒன்றாகவே நடந்துவந்திருக்கின்றன."

பூர்ஷ்வா மிதவாத ஜனநாயகத்தையும், பூர்ஷ்வாக்களின் வலையில் சிக்கி, ஸார் சர்க்காருடன் சமரஸப்பட்டுப்போன 1880ம் வருடத்திய நரோதினிக்கு களின் ஜனநாயகத்தையும் மதிப்பிட்டு, இவை இரண்டையும் லெனின் எதிர்த்தார்; அதற்குப் பதிலாக புரட்சிகரமான மார்க்ஸீய ஜனநாயகத்தை வைத்தார். ஆதிக்கத்திலிருக்கும் அதிகாரத்துடன் இணங்கிப் போகாமல் போராட வேணும் என்று கூறி, செர்னிஷெவ்ஸ்கி அதன்படி நடந்து வழிகாட்டினர். ஜனநாயகத்துக்காகப் போராடுவதும் சமதர்மத்துக்காகப் போராடுவதும் நெருங்கிய சம்பந்தமுள்ளவை என்று சொன்னர்.

செர்னிஷெவ்ஸ்கியின் செயல்முறைகளையும் அவருடைய உண்மையான ஜனநாயகத்தையும் லெனின் பெரிதும் மதித்தார்; பொது ஜனங்களுடன் மார்க்ஸீயவாதி கொண்டுள்ள போக்கை அனுசரித்து ஜனநாயகம் இருப்பதை லெனின் கண்டார். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கு மிடையில் நடைபெறப் போகும், பொருளாதாரப் போராட்டங்களைப்பற்றி மட்டும் மார்க்ஸீய போதனைகள் வழிகாட்ட வில்லை. விஷயம் முழுவதையுமே எடுத்து அது அலசி ஆராய்கிறது. அமைப்பு முழுவதையும் எடுத்து விளக்கி, விரிவாக அதை ஆராய்ந்து காட்டி, சமதர்மத்துக்காகப் போராடுவதையும் ஜனநாயகத்துக்காகப் போராடுவதையும் எப்படி ஒரு போராட்டமாக நடத்துவது என்பதை அது நமக்குக் காட்டுகிறது. லாஸல்லெயை மார்க்ஸ் ஏன் எதிர்த்தார் என்பதையும், என்ன காரணத்துக்காக அவர்கள் போராடிக்கொண்டார்கள் என்பதையும் பொது ஜனங்களின் புரட்சி இயல்பின் சிறப்பை - தாமே கிளர்ந்தெழும் ஆற்றல் அவர்களுக்கு இருப்பதை - லாஸல்லே உணராததைக் கண்டு மார்க்ஸ் அவர்மீது எவ்வளவு ஆத்திரப்பட்டார் என்பதையும் ஆராய்ந்து பார்த்தோமானல், புரட்சிகரமான மார்க்ஸீயத்திலுள்ள சமதர்ம அமைப்பு நமக்குத் தெரிந்துவிடும். தொழிலாளர் வர்க்கத்தினிடமும் பொது ஜனங்களிடமும் பரிசீலனை செய்து மார்க்ஸ் நிலையானதாகக் கூறியிருக்கும் விளக்கங்களைப் பார்க்க முடியாமல் "சட்ட மார்க்ஸீயவாதிகள்" தங்கள் கண்களை மூடிக்கொள்கிருர்கள். விஷயத்தை அறிந்து கொள்ளாததற்குச் சமமாகும் இது. மார்க்ஸீயத்தில், சமதர்மத்துக்கும் ஜனநாயகத்துக்கும் போராடுவது இடைவிடாத சங்கிலித் தொடர்போல பின்னிப் பிணைந்து கிடக்கிறது. ஆகவே, ஜனநாயகத்தைப்பற்றிச் சொல்ல நேர்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம், விளாதிமிர் இலிச் தற்செயலாக அவற்றைக் கூறவில்லை. சமதர்மப் போராட்டத்தையும் ஜனநாயகப் போராட்டத்தையும் இணைத்தே நடத்த வேண்டும் என்ற கருத்தை செர்னிஷெவ்ஸ்கியிடமிருந்து முதலில் கற்றுக் கொண்டு, அவரை நினைவில் இறுத்திக்கொண்டே இந்த விஷயத்தை இலிச் எப்பொழுதும் சொல்லிவந்தார். சோவியத்துகளைப்பற்றியும் சோவியத்து ஆட்சி முறையைப்பற்றியும் உள்ள போதனைகளை நாம் ஆராய்ந்து பார்த்தோமானல், சோவியத்து அமைப்பு முறையில் சமதர்மத்துக்கும் ஜனநாயகத்துக்கும் சேர்ந்தாற்போல் போராட்டம் நடத்த வேண்டும் என்ற அம்சம் பலமாக வற்புறுத்திப் போதிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். 1918-ம் ஆண்டில் சோவியத்துகளைப்பற்றியும் சோவியத்து ஆட்சியைப்பற்றியும் ஜனரஞ்சகமான துண்டுப் பிரசுரம் ஒன்று எழுத நான் ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன். லா ஹுமானிட்டி

என்ற பிரஞ்சுப் பத்திரிகையில் வெளிவந்திருந்த ஒரு கட்டுரையை உடனே என்னிடம் எடுத்துவந்து தந்தார். அந்தக் கட்டுரையை எழுதிய பிரஞ்சுத் தோழருடைய பெயர் இப்போது எனக்கு நினைவு இல்லை. அதில் சோவியத்து அமைப்பு முறைதான் நியாயமான மிகவும் ஜனநாயகமான ஸ்தாபனம் என்று அவர் எழுதி இருந்தார். அந்தக் கட்டுரையை விளாதிமிர் இலிச் என்னிடம் தந்து, இந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்துக்கு மட்டுமே அதிக அழுத்தம் கொடுத்து எழுத வேண்டும் என்று என்னிடம் சொன்னார். பரிபூர்ணமான, உண்மையான ஜனநாயகம் சோவியத்து அமைப்பு முறையிலே அமைந்து இருக்கிறது என்றும், அதிலிருந்து பாட்டாளி மக்கள் விரிவான புதிய ஜனநாயகத்தை அனுபவித்துக்கொண் டிருக்கிறார்கள் என்றும் எடுத்துக்காட்டுவது அவசியமாகும்.

1860- லே மார்க்ஸின் நூல்கள் ரஷ்ய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன; ஆனால் ரஷ்ய நிலைமைக்கு ஏற்றவாறு மார்க்ஸீய நூல்கள் ரஷ்ய பாஷையில் எழுதப்பெறவில்லை. ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி என்னும் நூலை எழுதி, இந்தக் காரியத்தை லெனின் பூர்த்தி செய்தார். செர்னிஷெவ்ஸ்கியின் பிரபாவம் இருந்தபடியால்தான் லெனினால் இந்தக் காரியத்தைச் செய்ய முடிந்தது. உண்மையான ரஷ்ய வாழ்க்கையைச் செர்னிஷெவ்ஸ்கி எவ்வளவு நன்றாக அறிந்திருக்கிறார் என்பதை விளாதிமிர் இலிச் பல முறை நினைவுகூர்ந்து இருக்கிறார்; விவசாயிகள் எவ்வாறு பற்பல சந்தர்ப்பங்களில் ஏமாந்து போனார்கள் என்பதைப் பற்றிச் செர்னிஷெவ்ஸ்கி அறிந்துள்ள உண்மைகளை அவர் நமக்கு நினைவுபடுத்தி இருக்கிறார்.

புரட்சிக் காரியங்களில் தாம் ஈடுபட்டிருந்த முதல் கால கட்டத்தில், செர்னிஷெவ்ஸ்கியின் தத்துவ சம்பந்தமான அபிப்பிராயங்களில் விளாதிமிர் இலிச் அதிக கவனம் செலுத்திப் படிக்கவில்லை. செர்னிஷெவ்ஸ்கியைப்பற்றி என்று பிளக்கானவ் எழுதி இருக்கும் சிறு நூலில் இந்தத் தத்துவத்தைப்பற்றி விசேஷமாக எழுதி இருப்பதை அறிந்திருந்தும் விளாதிமிர் இலிச் இந்தத் துறையில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. இந்த விஷயத்தில் அவருக்கு அப்போது அவ்வளவு விருப்பம் இல்லாமல் இருந்தது. 1908-ல் தத்துவத் துறையில் பெரிய போர் ஒன்று வெடித்தது; இதன் பிறகுதான் செர்னிஷெவ்ஸ்கியை லெனின் மீண்டும் மீண்டும் படிக்க ஆரம்பித்தார்; ரஷ்ய நாட்டு ஹெகல் என்றும் ரஷ்யாவில் தோன்றிய சிறந்த பொருள்முதல்வாதி என்றும் அவரைப் பாராட்டிப் பேசலானார். 1914-ல் யுத்தம் தொடங்க விருந்த சமயத்தில் தேசியப் பிரசினை முக்கியத்துவம் வாய்ந்த பெரும் பிரசினையாக அப்பொழுது அடிபட்டு வந்தது. அப்போது விளாதிமிர் இலிச், தேசிய சுயநிர்ணய உரிமை என்னும் தமது நூலில், மார்க்ஸைப் போலவே, போலந்திய எழுச்சியின் பொருளை செர்னிஷெவ்ஸ்கியும் அறிந்துகொண்டிருக்கிறார் என்று அழுத்தம் கொடுத்து எழுதி இருக்கிறார்.

இந்த விஷயங்களை எல்லாம் மனத்தில் கொண்டு பார்த்தோமானால், லெனினுடைய புரட்சிகரமான வாழ்க்கை முழுதும் செர்னிஷெவ்ஸ்கியும் பிரபாவம் எவ்வளவு ஆழமாக வேரூன்றிப் போய் இருந்திருக்கிறது என்பது தெரியவரும். அதன்மூலம் லெனின் அவரை எப்படி மதித்தார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. தனக்குப் பிடித்தமான எழுத்தாளர்களின் போட்டோப்

படங்களை எல்லாம் ஒரு ஆல்பத்தில் தொகுத்து, சைபீரியாவில் இருக்கும்போது லெனின் வைத்திருந்தார். மார்க்ஸ், ஏங்கல்ஸ் படங்களுக்கு அடுத்தாற்போல, ஹெர்ட்ஸன், பிஸாரோவ் ஆகியவர்களின் படங்களை வைத்திருந்தார்; அவற்றை அடுத்து செர்னிஷெவ்ஸ்கியின் இரு படங்களையும், இவர் விடுதலை பெறும் பொருட்டு பாடுபட்ட மிஷிக்கின் படம் ஒன்றையும் வைத்திருந்தார். சமீப காலத்தில், கிரமிளினிலுள்ள தமது படிப்பு அறையில், தமக்குப் பிடித்தமான எழுத்தாளர்களின் நூல்களை எல்லாம் அருகில் வைத்துக்கொள்ள விரும்பினர். அவருடைய நூல் அலமாரியில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், பிளக்காளுவ் ஆகியவர்களின் நூல்களுடன் செர்னிஷெவ்ஸ்கியின் நூல்கள் முழுவதும் இருந்தன. தாம் ஓய்வாக இருக்கும் நேரங்களில் இந்த நூல்களை எல்லாம் விளாதிமிர் மீண்டும் மீண்டும் படித்தார்.

ஜனங்களின் நண்பர்கள் யார்? என்னும் அதே புத்தகத்தில், செர்னிஷெவ்ஸ்கி காலத்தில் ஒவ்வொரு புலவரும் சமதர்மவாதியாக இருந்திருக்கிருர்கள், ஒவ்வொரு சமதர்மவாதியும் புலவராகத் திகழ்ந்திருக்கிருர்கள் என்று காட்ஸ்கி கூறியிருப்பதை, சரி என்று அங்கீகரித்து அதை அந்த நூலில் விளாதிமிர் இலிச் எடுத்துக்காட்டி இருக்கிருர். நாவல்கள் படிப்பதை இலிச் விரும்பினர்; படிக்கவும் செய்தார்; இந்தத் துறையில் ஆராய்ந்தும் படித்தார். நாவல் படிக்கும் பொழுது ஒரு விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டு இலிச் படிப்பார். வாழ்க்கையைக் கலையுணர்வோடு சித்திரித்து இருப்பதையும் சமூகத்தில் உள்ள உண்மை நிலைகளையும் ஒன்றுசேர்த்து அவர் பொருத்திப் பார்ப்பார். இந்த இரண்டு அம்சங்களையும் தனித் தனியாகப் பிரித்து அவர் பார்க்கவே மாட்டார். தாம் எழுதிய நாவல்களில் செர்னிஷெவ்ஸ்கி சமூகக் கருத்தோட்டங்களை நிறையப் புகுத்தி எழுதி இருந்தபடியால், நாவல்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அத்தகைய நாவல்களையே இலிச் விரும்பித் தேர்ந்தெடுத்துப் படித்தார். அவர் தேர்ந்தெடுத்துப் படிக்கும் நாவல்கள் பல்வகையான சமூகக் கருத்தோட்டங்கள் நிறைந்த நாவல்களாக இருக்கும்.

இதுபற்றி அவரும் நானும் எவ்வளவோ விஷயங்கள் பேசி இருப்போம்; ஆனல் அவற்றில் எதுவும் இப்போது எனக்கு நினைவு இல்லை. வருஷங்கள் உருண்டு ஓட ஓட, அனேக விஷயங்கள் மறந்து போயின; நாள்தோறும் புதிய புதிய சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டே இருப்பதால், உரையாடலில் வந்த குறிப்பிட்ட வார்த்தைகள் நமக்கு மறந்து போகின்றன; அதனுடைய சாராம்சம் மட்டும்தான் நினைவில் எஞ்சி நிற்கிறது. இருந்தும் விளாதிமிர் இலிச் எழுதிய நூல்கள், கட்டுரைகள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றில் செர்னிஷெவ்ஸ்கியின் பிரபாவம் நிறைய இருந்திருக்கிறது என்பது மட்டும் நிச்சயம்.

இலிச் விரும்பிய நாவல் வகைகள்

சிறந்த கல்விமான் என்று சொல்லி முதன் முதலாக ஒரு தோழர் இலிச்சை எனக்கு அறிமுகப்படுத்திவைத்தார். அறிவுபோதமான நூல்களை மட்டுமே இவர் படிப்பார் என்றும், தம் வாழ்நாளிலே நாவல்களையோ அல்லது கவிதைகளையோ

இவர் படித்ததே கிடையாது என்றும் கூறி அவரை எனக்கு அறிமுகப்படுத்தினர். இதைக் கேட்டதும் நான் திடுக்கிட்டேன். எனது இளமைப் பருவ காலத்தில் சிறந்த இலக்கியங்களை எல்லாம் நான் படித்தவள்; லெர்மெண்டாவ் எழுதிய வற்றையும் மற்றவர்களின் நூல்களையும் நான் மனப்பாடமே செய்து வைத்திருந் தேன். செர்னிஷெவ்ஸ்கி, லியோ. டால்ஸ்டாய், உஸ்பென்ஸ்கை போன்றவர் களின் நூல்கள், நமது வாழ்க்கையில் தேவைப்படும் சிறப்பான அம்சங்கள் ஆகும் என்பதாகக் கருதியவள் நான். இத்தகைய மனப்போக்குடைய என்னிடம் இவற் றில் எல்லாம் பிரியம் இல்லாத மனிதர் ஒருவர் இதோ இருக்கிறார் என்று கூறிய போது அதை என்னால் நம்பவே முடியவில்லை.

பிற்காலத்தில்—அதாவது நானும் இலிச்சும் ஒன்றாக வேலை செய்த காலத் தில்—இலிச்சுடன் நான் நெருங்கிப் பழகிய சமயத்தில், வாழ்க்கை முறைகளை அவர் ஆராய்ந்திருப்பதையும் மனித சமுதாயத்தையும் ஜனங்களையும் மதிப்பிட்டு அறிந்துகொண் டிருப்பதையும் கண்டேன். ஜீவனுடன் வாழும் மனிதனை ஆராய் வதற்கு, அவர் புத்தகத்தைத் தேடியலையாமல், நேருக்கு நேரே விஷயங்களைக் கிரகித்துக்கொண்டார்; மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அவர் ஒருபோதும் புத்தகத்திலிருந்து தெரிந்துகொள்ள முயன்றது கிடையாது.

ஆனால் அன்று இருந்த வாழ்க்கை நிலையில், இதுபற்றிய விஷயங்களைப் பேச எங்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. பிறகு, சைபீரியாவில் வாழ நேர்ந்த காலத்தில், சிறந்த இலக்கியங்களைப் படிப்பதில் இலிச்சுக்கு என்னைப் போலவே ஆர்வம் இருப்பதை நான் கண்டேன். உதாரணமாக, அவர் துர்க்கானேவின் நூல்களை எல்லாம் படித்தார்; அவற்றை மீண்டும் மீண்டும் படித்தார். நெக்ர ஸாவையும் செர்னிஷெவ்ஸ்கியையும் அவர் ஆழ்ந்து படித்திருந்தார்; புஷ்கின் நெக்ரஸாவ், லெர்மெண்டாவ் ஆகியவர்களின் நூல்களை சைபீரியாவுக்குச் செல்ல நேர்ந்தபொழுது, நான் எடுத்துச் சென்றேன். இந்த நூல்களை ஹெக்கலுடைய நூல்களோடு சேர்த்து, தமது படுக்கைக்கு அருகே இலிச் வைத்துக் கொண்டார். மாலை நேரங்களில் அவற்றை எடுத்து அவர் படித்தார்; மீண்டும் மீண்டும் படித் தார். மற்றவர்களைக் காட்டிலும் புஷ்கினை அவர் அதிகம் விரும்பினார்; அவரிடம் காணப்படும் சிறந்த நடைப்போக்கை இலிச் பெரிதும் மதித்தார். இலக்கிய நடைக்கு உதாரணமாக எடுத்துக்காட்டத்தக்க சிறப்பு இல்லாதிருந்தும், அத னுடைய அமைப்பு முறைக்காக செர்னிஷெவ்ஸ்கியின் நாவலான இனி என்ன செய்ய வேண்டும்? என்பதை இலிச் படித்தார். நாவல்களை அவர் கருத் தூன்றிப் படிப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்; அவர் நாவல் களைப் படிப்பார்; மிகச் சிறந்த பகுதிகளை எல்லாம் தவறாது குறிப்பெடுத்துக் கொள்வார். ஒரு முறை பீஸாரோவின் நூல்களை நிறையப் படித்தார். அவ ருடைய நடைப்போக்கை இலிச் பெரிதும் விரும்பினார். சைபீரியாவில் இருந்த காலத் தில் கத்தே என்பவர் எழுதிய பாஸ்டு என்பதை ஜெர்மானிய மொழியில் படித் தோம். ஹீனுடைய சிறிய கவிதைத் தொகுதிகளையும் படித்தோம்.

சைபீரியாவிலிருந்து மாஸ்கோவுக்குத் திரும்பியதும் ஹென்ஸல் தி ஸ்வோஸ் திக் என்ற நாடகம் பார்ப்பதற்காக இலிச் சென்றார். அந்த நாடகம் மிக நன்றாக இருந்தது என்று பின்னர் என்னிடம் சொன்னார்.

மூனிக்கில் இருந்த காலத்தில் ஜெர்ரார்டு எழுதிய பை மாமா என்பதையும் போலன்ஸ் எழுதிய புட்டனர்பார் (விவசாயி) என்பதையும் இலிச் விரும்பிப் படித்தார்.

இரண்டாம் முறை அந்நிய நாடுகளில் வாழ்ந்தபொழுது, பாரீஸில் இருந்த காலத்தில், 1848-ம் வருஷப் புரட்சி சம்பந்தமாக சாட்டிமென்ஸ் எனும் பெயரில் விக்தர் யூகோ எழுதியுள்ள கவிதைகளை இலிச் ஆவலோடு படித்தார். திருட்டுக் குற்றவாளிபோல் தேடி யலையப்பட்டு ரகசியமாக பிரான்ஸில் ஒளிந்து கொண்டிருந்த காலத்தில் இந்தக் கவிதையை விக்தர் யூகோ எழுதினார். இந்தக் கவிதைகளில் ஆடம்பரமான அலங்காரச் சொற்கள் நிறைய இருக்கின்றன. எனினும் இவற்றில் புரட்சி என்ற மந்தமாருதம் வீசிக்கொண் டிருப்பதை நாம் காணலாம். புரட்சிப் பாடல்களைச் செவிமடுப்பதற்காக இலிச் சிற்றுண்டிச்சாலைகளுக்கும் சுற்று வட்டாரங்களிலிருந்த நாடக மேடைகளுக்கும் அடிக்கடி போய் வந்தார். குடிபோதையில் தள்ளாடியபடியே சட்டசபையில் கூச்சல் போடும் கிளர்ச்சிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விவசாயிகளைப்பற்றியும், குழந்தைக் கல்வியைப்பற்றியும்,வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றியும் இன்னும் எதை எதை எல்லாமோ பற்றியும் தொழிலாளர் வாழும் பகுதிகளில் புரட்சிப் பாடகர்கள் பாட்டுகள் பாடுவார்கள். மாண்டிக்யூ வினுடைய பாடலை இலிச் பெரிதும் விரும்பினர். மாண்டிக்யூவினுடைய புதல்வன் பாடின பாடல்கள் தொழிலாளர் வட்டாரங்களில் பிரசித்தமாய் இருந்தன. இவருடைய பாடல்கள் சாதாரணமானவை என்பது உண்மைதான். அவற்றில் அன்றுட விஷயங்கள் கண்முன் நிற்கும் பாவனையில் சித்தரிக்கப்பட்டன: அவற்றில் வரையறையான கொள்கைகள் எதுவுமே இல்லையாயினும், உண்மையான உணர்ச்சிப் பிரவாகம் நிறைய இருந்தது. பதினேழாவது படைக்கு வாழ்த்து என்ற பாடலை இலிச் அடிக்கடி பாடுவார். இந்தப் படையினர் வேலைநிறுத்தக்காரர்கள்மீது சுட மறுத்து விட்டனர்; ''பதினேழாம் படையைச் சேர்ந்த படைவிரர்களே! உங்களுக்கு எங்கள் வணக்கம்; உங்களுக்கு எங்கள் வணக்கம்'' என்பது அந்தப் பாடல். ஒரு முறை ரஷ்யர்கள் கூடியிருந்த ஒரு மாலை நேரக் கூட்டத்தில் மாண்டிக்யூ என்பவரை இலிச் சந்தித்துப் பேசினர். நேர்மாறான இரு கோணத்தில் இருப்பவர்கள் சந்தித்துப் பேசியது பார்ப்பதற்கு விசித்திரமாய் இருந்தது. இவர்கள் இருவரும் உலகப் புரட்சியைப்பற்றிய தங்கள் தங்கள் கனவுகளை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக்கொண்டனர். பிறகு யுத்தம் வந்த பின்னர் மாண்டிக்யூ தேசிய வெறியர்கள் சார்பில் சேர்ந்துகொண்டுவிட்டார். இத்தகைய நிகழ்ச்சிகள், சில சமயங்களில் நிகழத்தான் செய்கின்றன. அறிமுகமில்லாதவர்கள் ஒருவரை ஒருவர் ரயிலடியில் சந்திக்கிருர்கள்; ரயில்வே பிரயாணத்தின்போது சந்திக்கிருர்கள்; தங்களுக்குப் பிடித்தமான விஷயங்களைப்பற்றி அங்கே அவர்கள் பேசிக் கொள்கிருர்கள்; மற்ற நேரங்களில் பேசமுடியாத விஷயங்களைப்பற்றியும் அங்கே பேசிக்கொள்கிருர்கள். பிறகு பிரிந்து போய்விடுகிருர்கள்; மீண்டும் அவர்கள் ஒருபோதும் சந்திப்பதே இல்லை. அதே போலத்தான் அன்று மாலை நடந்த சந்திப்பும். மேலும் விசித்திரமான செய்தி என்ன என்ருல் அவர்கள் இருவரும் பிரஞ்சு மொழியில் உரையாடினர். தான் காணும் புகழ்க்கனவுகளைத் தங்கள்

சொந்த மொழியில் பேசுவதைக் காட்டிலும் அன்னிய மொழியில் வெகு எளிதாகப் பேசிவிடலாம். வீடு பெருக்கும் பிரஞ்சுப் பெண் ஒருத்தி எங்கள் வீட்டுக்கு வந்து தினந்தோறும் இரண்டு மணி நேரம் வேலைபார்த்துவிட்டுப் போவாள். அவள் பாடிய பாடல் ஒன்றை இலிச் செவிமடுத்தார்; அது அல்சேஷியத் தேசியப் பாடல் ஆகும்.

"அல்சேஷனையும் லோரனையும் நீங்கள் எடுத்துக்கொண்டு விட்டீர்கள்; அப்படியிருந்தும் நாங்கள் பிரஞ்சுக்காரர்களாய் இருப்பது மாறிப்போய்விடாது; எங்கள் பிரதேசங்களை உங்களால் ஜெர்மானிய மயமாக்கிவிட முடியும்; ஆனால், எங்கள் இதயங்களை உங்களால் ஒரு போதும் மாற்றவே முடியாது."

பிற்போக்கின் அட்டகாச காலமான 1909-ம் வருஷம் நடந்தது இது. நமது கட்சி சிதறுண்டுபோய் இருந்தது; ஆனால் புரட்சி உணர்ச்சி குன்றிப் போய் விடவில்லை. இந்தப் பாடலின் உணர்ச்சி இலிச்சின் மனதில் நிலவிக்கொண்டே இருந்தது. "எங்கள் இதயங்களை உங்களால் ஒருபோதும் மாற்றவே முடியாது" என்ற வார்த்தைகளை அவருடைய வாய் வெற்றிகரமாக உச்சரித்துக்கொண்டே இருந்தது.

பிற்போக்குவாதம் தலைவிரித்தாடி அதிக சிரமம் தந்த காலங்களில், அதைப் பற்றி மிக வருத்தத்துடன் இலிச் எப்பொழுதுமே பேசிக்கொண்டிருந்த வருஷங்களில், நாங்கள் ரஷ்யாவுக்குத் திரும்பியிருந்தும்கூட, மனவேதனையாக இருந்த காலங்களில் கனவு கண்டுகொண்டே தன்னை இலிச் சாந்தப்படுத்திக்கொண்டு வாழ்ந்தார்; மாண்டிக்யூவுடன் உரையாடியதைப்பற்றிக் கனவுகண்டார்; அல்சேஷிய தேசியப் பாடலை வெற்றிகரமாகச் சொல்லிக்கொண்டே கனவுகண்டார்; தூக்கம் வராதஇரவுகளில் வெர்ஹாஹிரன்என்பவருடைய நூல்களைப்படித்தார்.

பிறகு யுத்தம் நடந்துகொண்டிருந்த சமயத்தில், பார்பூஷினுடைய விமியூ என்பது இலிச்சைப் பெரிதும் கவர்ந்தது; அது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இலிச் கருதினார். அந்தச் சமயத்தில் அவருக்கு இருந்த உணர்ச்சியை அந்த நூல் அப்படியே பிரதிபலிப்பதாக இருந்தது.

நாங்கள் நாடகமேடைகளுக்கு அபூர்வமாகத்தான் சென்றோம். ஆனால் நாடகத்தின் பைத்தியகாரத்தனமான அமைப்பு முறையையோ, செயற்கை முறையான நடிப்பையோ பார்த்ததும் இலிச்சுக்கு அலுப்புத்தட்டிவிடும். ஆகையால் முதல் கட்டத்திலேயே பொதுவாக நாங்கள் அங்கேயிருந்து எழுந்து போய்விடுவோம். கொடுத்த பணத்துக்கு ஏற்றவாறு பார்க்காமல் நாங்கள் சென்றுவிடுவதைக் கண்ட தோழர்கள் எங்களைக் கேலி செய்வார்கள்.

ஒரே ஒரு முறை பட்டும் கடைசிவரை இருந்து ஒரு நாடகத்தைப் பார்த்து இலிச் ரசித்தார். 1915-ம் வருட இறுதியில் இந்த நாடகம் பெர்னியில் நடந்தது; லியோ டால்ஸ்டாய் எழுதிய நடைப்பிணம் என்ற நாடகம் அது. அந்த நாடகம் ஜெர்மன் பாஷையில் நடந்தது; எனினும் அதில் இளவரசனாக நடித்தவர் ஒரு ரஷ்யர்; அவர் டால்ஸ்டாயின் கருத்துக்கள் நன்றாக வெளிப்படும் வகையில் நடித்தார். இந்த நாடகத்தை உணர்ச்சியோடும் கருத்தூன்றியும் இலிச் ரசித்தார்.

கடைசியாக ரஷ்யாவில் நடந்தது; புதிய கலையைச் சுவைத்து இலிச்சால் ரசிக்க முடியவில்லை; ஏதோ வேறுப்பட்ட ஒரு கலைபோல அது அவருக்குத் தோன்றியது. செம்படை வீரர்கள் கிரம்ளினில் ஒரு கலா நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்கள்; அதற்கு எங்களை அழைத்திருந்தார்கள். இலிச் முதல் வரிசையில் அமர்ந்திருந்தார். ஸோவிஸ்காயா என்ற நடிகை மாயாகோவஸ்கியின் கவிதை ஒன்றைப் பாடினாள்.

முன்னேற்றம் - எங்கள் கடவுள் ;
பேரிகை - எங்கள் இதயம்

என்று பாடி, அவள் இலிச்சை அணுகிச் சுட்டிக்காட்டினாள்; எதிர்பாராத இந்த நடிப்பைக் கண்டு இலிச் குழப்பமடைந்து, துணுக்குற்றவாறு அமர்ந்திருந்தார்; இவளை அடுத்து யாரோ ஒரு நடிகர் 'தீமை செய்பவன்' எனும் செக்காவின் நூலைப் படித்தபோதுதான், 'அப்பாடா' என்று இலிச் பெருமூச்சு விட்டார்.

கம்யூனில் வாலிபர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைக் காணும் பொருட்டு ஒரு நாள் மாலை இலிச் சென்றார். இளம் சைத்ரீக மாணவர் விரியர் அர்மாந்தையும் நாங்கள் சந்திக்கத் தீர்மானித்தோம். 1921-ம் ஆண்டு கொரபாட்கினின் சவ அடக்க தினம் என்று நினைக்கிறேன். அந்த வருஷம் பஞ்சம் நிலவிய வருஷம். இருந்தும் வாலிபர்கள் உற்சாகத்துடன் இருந்தார்கள். வெறும் மரப் பலகைகளில் கம்யூனில் படுத்துத் தூங்கினார்கள்; ரொட்டி கிடையாது. அன்று முறை வேலை பார்த்துக்கொண்டிருந்த சைத்ரீக மாணவன் ஒருவன் முகத்தில் உற்சாகம் பிரதிபலிக்க வந்து, "எங்களிடம் கொஞ்சம் தானியம் இருக்கிறது" என்று சொன்னான். அந்தத் தானியத்தைக் கொண்டு "காஷா" என்ற கஞ்சியைத் தயார் செய்து இலிச்சுக்கு அவர்கள் கொடுத்தார்கள். கஞ்சிக்குப் போட உப்பு இல்லை. தன்னைச் சூழ்ந்துகொண்டு ஆண்களும் பெண்களுமாக வாலிபக் கலைஞர்கள் உற்சாகத்துடன் நிற்பதை இலிச் கண்டார்; அவர்களுடைய உற்சாகம் அவருடைய முகத்திலும் பிரதிபலித்தது. தாங்கள் வரைந்த ஓவியங்களை அவர்கள் இலிச்சுக்குக் காட்டினார்கள். அவற்றின் பொருளை விளக்கிச் சொல்லி அனேக கேள்விகள் கேட்டார்கள். அவர் பதில் சொல்லாமலே புன்சிரிப்புச் சிரித்துவிட்டு, பதில் கேள்விகளை அவர் அடுக்கு அடுக்காகக் கேட்க ஆரம்பித்தார். "நீங்கள் என்ன படிக்கிறீர்கள்?" புஷ்கினைப் படிப்பது உண்டா?" என்று கேட்டார்.

"இல்லை. இல்லை. நாங்கள் அவரைப் படிப்பது இல்லை. அவர் ஒரு பூர்ஷ்வா. நாங்கள் மாயாகோவஸ்கியைத்தான் படிப்பது உண்டு" என ஒருவன் பதில் சொன்னான்.

"இருவரிலும் புஷ்கின்தான் எனக்குச் சிறந்தவராகத் தோன்றுகிறது" என்று இலிச் சிரித்துக்கொண்டே இதற்குப் பதில் உரைத்தார்.

இதன் பின்னர் மாயாகோவஸ்கியை இலிச் படிக்கத் தொடங்கினார். இந்தப் பெயர் அவர் காதில் விழும்பொழுது எல்லாம் அவருக்கு அந்த மாணவர்களின் ஞாபகம் வந்துவிடும். மகிழ்ச்சியோடும் உற்சாகமாகவும் இருந்த அவர்கள்,

தங்கள் எண்ணத்தை வெளியிடப் போதிய சொற்கள் கிடைக்காமல் மாயாகோவஸ்கியின் மழுப்பலான பாடல்களைச் சொல்லுகிறார்கள் என்று எண்ணிக்கொள்வார்; இந்த வாலிபர்கள் சோவியத்துக்காக உயிரையும்விடத் தயராக இருந்தார்கள். சோவியத்து அதிகார வர்க்கத்தைக் கண்டித்து மாயாகோவஸ்கி பாடியிருந்த பாடல்களை இலிச் ஒரு முறை பாராட்டினார். நவீன கால எழுத்தாளர்களில் யுத்தத்தை வருணிக்கும் நாவலான ஈரன்பர்க்கினுடைய நாவலை இலிச் விரும்பிப் படித்தது எனக்கு நினைவு இருக்கிறது. "இலியா லோக்மாட்டியை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் நன்றாக எழுதுகிறார்" என்று உற்சாகத்துடன் சொன்னார்.

மாஸ்கோ கலை நாடகமேடைக்கு நாங்கள் அபூர்வமாகத்தான் செல்வது உண்டு. ஒரு முறை வெள்ளம் என்ற நாடகத்தைப் பார்க்கச் சென்றோம். அந்த நாடகத்தை இலிச் பெரிதும் ரசித்தார். மீண்டும் மறு நாள் நாடக மேடைக்குப் போக விரும்பினோம். அன்று கார்க்கியின் அதல பாதாளம் நடந்தது. வெகு காலத்துக்கு முன்னர் லண்டனில் நடந்த காங்கிரஸிலிருந்தே கார்க்கியை இலிச் நன்றாக அறிவார்; அப்பொழுது மனிதன் என்ற முறையில் அவருடன் பழகினார்; கலைஞர் என்ற முறையிலும் இலிச், கார்க்கியைப் பெரிதும் விரும்பினார். சொற்செட்டாக விஷயங்களை விளக்கும் கலைஞன் என்று அவரைப் பாராட்டினார். கார்க்கியுடன் மனம்விட்டு யாவற்றையும் இலிச் பேசுவார். ஆகவே, கார்க்கியின் நாடகத்தை விமர்சன மனப்பான்மையுடன் இலிச் கவனித்தார் என்பது சொல்லாமலே விளங்கும். அந்த நாடகத்தில் நாடகபாணிதான் மிகுதியாக இருந்தது. ஆகையால் அது அவர் மனத்தில் எரிச்சலை உண்டாக்கியது. அதல பாதாளத்தைப் பார்த்த பிறகு நாங்கள் நீண்ட காலம் நாடகம் பார்க்கச் செல்லவில்லை. பிறகு ஒரு முறை செக்காவின் மாமா வானியா என்ற நாடகம் பார்க்கச் சென்றது நினைவு இருக்கிறது. இலிச் அதைப் பெரிதும் ரசித்தார். கடைசியாக 1922-ல் நாங்கள் நாடக மேடைக்குச் சென்றோம். அடுக்களையில் சிள்வண்டு என்ற டிக்கன்ஸ் நாடகம் நடந்தது. முதல் கட்டமே இலிச்சுக்குப் பிடிக்கவில்லை. அதில் காணப்படும் நடுத்தர வர்க்க மனப்பாங்கைக் கண்டு இலிச் மிகவும் சலித்துக்கொண்டார். கண் இழந்த தன் பெண்ணுக்கும் கதை சொல்லும் கிழவனுக்கும் இடையில் சம்பாஷணை தொடங்கியது. மேலும் இலிச்சால் அங்கே இருக்க முடியவில்லை. நடிப்பின் இடையே நாங்கள் எழுந்து சென்றுவிட்டோம்.

அவருடைய வாழ்வின் கடைசிக் காலங்களில் அவர் பொறுக்கி எடுத்த தந்த இலக்கியங்களை மாலை நேரங்களில் அவருக்கு நான் படித்துக் காட்டு உண்டு. ஷீடிரான் எழுதிய நூல்களைப் படித்துக் காட்டினேன்; கார்க்கி நூல்களைப் படித்தேன். கவிதைகளைக் கேட்பதில் சிறப்பாக டெமியான் பெ யின் கவிதைகளைக் கேட்பதில் அவர் அதிகப் பிரியம்கொண்டார். கின் செய்யும் கவிதைகளைக் காட்டிலும் உள்ளத்து உணர்ச்சிகளைச் சித்தரித்துக் டும் டெமியானினுடைய கவிதைகளையே அவர் அதிகம் விரும்பினார்.

கவிதைகளை அவருக்கு நான் படித்துக் காட்டும் சமயங்களில், அ [illegible] இமைகொட்டாமல் அவர் பார்த்துக்கொண் டி

"கம்யூனிஸ்டுகள் ஒருபோதும் அடிமைகள் ஆகமாட்டார்கள்" என்ற வார்த்தைக ளுடன் முடிவடையும் கவிதை ஒன்று எனக்கு நினைவு இருக்கிறது.

இதை நான் பாடிக் காட்டியபோது இலிச் முன்னர் ஏதோ ஒரு சபதம் எடுத்துக்கொண்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. "புரட்சியில் ஏற்பட்ட வெற்றி களில் ஒரு பகுதியைக்கூட நாங்கள் விட்டுக்கொடோம். ஒருக்காலும் விட்டுக் கொடோம்" என்ற உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று.

அவர் இறப்பதற்கு இரு தினங்களுக்கு முன்பு, அன்று மாலே, ஜாக் லண்டன் எழுதிய வாழ்வாசை என்ற கதையை நான் இலிச்சுக்குப் படித்துக் காட்டினேன். அந்த நூல் அவருடைய அறையில் மேஜைமீது இன்றும் அப் படியே கிடக்கிறது. அது ஒரு அருமையான கதை. மனிதர்களே கால் வைக்க முடியாத முரட்டுத்தனமான பனி உறைப்புகளில் பசியால் மெலிந்த [illegible]ாளி ஒருவன் பெரிய ஆற்றில் இருக்கும் துறைமுகத்தை நாடிப்போய்க்கொண்டிருக் கிறான். பலம் குன்றிவிட்டது; தொடர்ந்து நடக்க முடியாமல் தடுமாறித் தடுமாறி அவன் கீழே விழுகிறான்; அவனே அடியொற்றிக்கொண்டு ஒரு ஓநாயும் கூடச் செல்கிறது; அதுவும் பசியால் கஷ்டப்பட்டுக்கொண்டு செல்கிறது. இருவருக்கு மிடையில் ஒரு போர் நடக்கிறது. கடைசியில் மனிதன் வெற்றி பெறுகிறான். அறிவு கலங்கியும் சோர்ந்தும் போன அவன் தன் லட்சியத்தை அடைவதில் சித்தி பெறுகிறான்.

இந்தக் கதையை இலிச் பெரிதும் ரசித்தார். மறு நாள் ஜாக் லண்டன் எழுதியுள்ள மற்ற கதைகளையும் படிக்கச் சொன்னார். ஜாக் லண்டன் சிறந்த கதைகளையும் மிக மிகச் சாதாரணமான கதைகளையும் கலந்து எழுதி இருக்கிறார். நான் படித்த அடுத்த கதை வேறு வகையைச் சேர்ந்தது. அதில் பூர்ஷ்வா முறை நீதிகள் பொங்கி வழிந்தன; சரக்கு நிறைய ஏற்றியிருந்த கப்பல் ஒன்றின் சொந்தக்காரரிடம் அந்தச் சரக்கைத் தகுந்த லாபத்துக்கு விற்றுத் தருவதாக [illegible]லுமி வாக்களிக்கிறார். தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகத் [illegible]னது உயிரையே அவர் அர்ப்பணித்துவிடுகிறார். இதைக் கேட்டதும் முறுவல் [illegible]ன் முகத்தில் தோன்ற, அந்தக் கதையை மேலும் படிக்க வேண்டாம் என்று கையால் சாடைசெய்து தடுத்துவிட்டார் இலிச்.

இதைத்தான் நான் அவருக்குக் கடைசியாகப் படித்தேன்.

முற்றும்